நமது பொருளாதாரப் பிரச்சினை-I

(OUR ECONOMIC PROBLEM-I)

ஆசிரியர்கள்:

P. A. வாடியா, M.A.,
முன்னாள் பேராசிரியர், அரசியல் பொருளாதாரத்துறை,
வில்சன் கல்லூரி, பம்பாய்.

K. T. மெர்ச்சண்ட்,
M.A., LL.B. (BOM.), B.Sc. (ECON.), (LOND.),
பொருளாதாரப் பேராசிரியர், சைடென்ஹாம் கல்லூரி, பம்பாய்.

தமிழாக்கம்:

பேராசிரியர் இ. சுந்தரராஜன், M.A., M.Litt.,
பொருளாதாரத்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடு - 41

நமது பொருளாதாரப் பிரச்சினை-I

(OUR ECONOMIC PROBLEM-I)

ஆசிரியர்கள் :

P. A. வாடியா, M.A.,

முன்னாள் பேராசிரியர், அரசியல் பொருளாதாரத்துறை,
வில்சன் கல்லூரி, பம்பாய்.

K. T. மெர்ச்சன்ட்,

M.A., LL.B. (BOM.), B.Sc., (ECON.), (LOND.),
பொருளாதாரப் பேராசிரியர், எல்பின்ஸ்டன் கல்லூரி, பம்பாய்.

தமிழாக்கம் :

பேராசிரியர் சீ. சுந்தரராஜன், M.A., M.Litt.,
பொருளாதாரத்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

முதற் பதிப்பு — ஜனவரி, 1964

விலை ரூ. 10–75

விற்பனை உரிமை :

மெஸர்ஸ் ஹிக்கின்பாதம்ஸ் (பி) லிமிடெட்.

சென்னை – 2

குமரன் அச்சகம்

298, தங்கசாலைத் தெரு

சென்னை – 1

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பீ. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், ‘தமிழிலேயே கற்பிப்போம்’ என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான நமது பொருளாதாரப் பிரச்சினை—I என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 41-வது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 76 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள் எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. ‘உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை’ ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

முகவுரை

இந்நூல், ஆங்கிலத்தில் பேராசிரியர் வாடியாவும் முதல்வர் மெர்ச்சன்டும் எழுதி, வோரா அண்டு கம்பெனியாரால் வெளியிடப் பட்ட 'நமது பொருளாதாரப் பிரச்சினை' (Our Economic Problem) என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும். சென்னை அரசாங்கத்தின் கட்டளைக்கிணங்கத் 'தமிழ் நூல் வெளியீட்டுக் கழக'த்தினால் இது வெளியிடப்படுகிறது. மேற்கூறிய ஆங்கில மூலநூல் 1943 முதல் 1959-க்குள் ஆறாவது முறையாக வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஆறாவது பதிப்பின் மொழிபெயர்ப்பே இந்நூல். ஆங்கில மூல நூல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதோடு, முதன் முறையாக வெளி நாடுகளிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றால் இந் நூலின் சிறப்பும் பெருமையும் விளங்கும். இத்தகைய உயர்ந்த நூலைச் சென்னை அரசாங்கம் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட முன் வந்தது பாராட்டுதற்குரிய செயலாகும்.

இம் மொழிபெயர்ப்பு, பொருளாதார பீ. ஏ. பட்டப் படிப்பு மாணவர்கள் தங்கள் வகுப்பில் படிப்பதற்கும் தேர்வு எழுதுவதற்கும் பயன்பட வேண்டுமென்னும் நோக்கத்துடன் மேற்கொள்ளப் பட்டது. தமிழ் மொழி வாயிலாகவே பல்கலைக் கழகப் பாடங்களைப் போதிக்கவும் தேர்வெழுதவும் வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான கருவியாக இது உதவும். பல்கலைக் கழகங் களில் தாய் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்றால், தாய் மொழியில் மாணவர்கள் படிப்பதற்கேற்ற நூல்கள் மிகுதியாக இருக்க வேண்டும். அப்படி இல்லாதது ஒரு தடையாக இருந்து வருகிறது. அத்தடை இத்தகைய நூல்களால் ஓரளவு நீக்கப்படும்.

இந் நூலை மொழிபெயர்ப்பதில் மூல நூலின் கருத்தும் பொருளும் சிறிதும் வழுவாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. மூல நூல் ஆசிரியர்களின் உணர்ச்சிகளும் உருக்குலைவின்றித் தரப்பட்டுள்ளன. கலைச் சொற்களை மொழிபெயர்ப்பதில் 'கல்லூரித் தமிழ்க் குழு' தொகுத்துள்ள கலைச்சொல் அகராதிகளே பயன்படுத்தப் பட்டுள்ளன. அகராதிகளில் இல்லாத கலைச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. இந் நூலில் வந்துள்ள கலைச் சொற்களுக்குக் 'கலைச்சொல் அகராதி' ஒன்று பின்னால் இணைக்கப்பட்டுள்ளது.

மிகவும் கருத்துடனும் சிரத்தையுடனும் மொழிபெயர்க்கப்பட்ட இந் நூல் பீ. ஏ. பொருளாதார மாணவர்களுக்கு உற்ற துணையாக இருக்கும் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கையாகும். பொருளாதாரத்தைப்பற்றி எங்கும் விழிப்பு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் பொதுமக்களுக்கும் இது பயன்படும் என்பதில் ஐயமில்லை. இம் மொழிபெயர்ப்பைச் செய்யுமாறு என்னைப் பணித்த தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டவனுவேன்.

மொழிபெயர்ப்பாளர்.

ஆரும் பதிப்பின் முன்னுரை

ஐந்தாவது பதிப்பிற்கு மக்கள் அளித்த ஆதரவே இரண்டாண்டுகளுக்குள் ஆருவது பதிப்பினை வெளியிட உறுதுணையாயிற்று. இயன்ற இடமெல்லாம் இந் நாள்வரை கிடைத்த புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தியுள்ளோம். சில இணைப்புகளையும் மாற்றங்களையும் செய்துள்ளோம்.

கூட்டுறவு என்னும் பகுதியைப் படித்துப் புதிய கருத்துகளைக் கூறி இணைப்பதற்கு உதவி புரிந்த திரு. சின்முல்கந்து (Shri P. J. Chinmul Gund, I.C.S., அரசுச் செயலர், கல்வித்துறை, பம்பாய்) அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். அச்சுப் படிகளைத் திருத்துவதற்குத் துணை செய்த திரு. இரெய்ரிகர் (Shri B. R. Rairikar, பொருளியல் விரிவுரையாளர், எல்பின்ஸ்டன் கல்லூரி, பம்பாய்) அவர்களுக்கும் எம் நன்றி.

நம்பிக்கை, நம்பிக்கையின்மை என்பனவற்றிற்கிடையே உழலும் உலக நிலைமையில் கடந்த பதினெட்டு மாதங்களில் பெருமாற்றங்கள் நிகழவில்லை. விரைந்த அறிவியல், தொழிலியல் முன்னேற்றத் திற்தும், சூழ்நிலைக்கேற்ப மனிதனை மாற்றி வாழச் செய்யும் நிறுவன அமைம்பிற்கும் இடையே தேக்க நிலை உள்ளது. இயற்கையை வென்றது கண்டு நாம் பெருமையுற்றாலும், வெள்ளத்தாலும் நில நடுக்கத்தாலும் இயற்கை நம் முயற்சிகளைப் பாழாக்க முடியும் என்பதை மறத்தல் கூடாது. மனித உழைப்பையும், பெரு மூலதனத்தையும் கொண்டு பல ஆண்டுகளில் அமைக்கப்பட்டவற்றை வெள்ளம் ஒருசில நாட்களில் அழித்துவிடுவதை அடிக்கடி நமது நாட்டில் காண்கிறோம்.

சாதாரண மனிதனின் கண்ணிற்கு எவ்வித முன்னேற்றமும் புலனாகா வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கி மூன்றாண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆனாலும், உணவுச் சிக்கல் தீர்ந்துவிடவில்லை. விலைகளும் வாழ்க்கைச் செலவினங்களும் உயர்ந்துகொண்டிருக்கின்றன. சரியான புள்ளி விவரங்கள் கிடைக்காத நிலையில், செலவழிக்கப் பெற்ற தொகைக்கு ஏற்ற வெற்றியைப் பெற்றுள்ளோமா, வளர்ச்சியைக் கண்டு நம்மை நாமே பாராட்டிக்கொள்ள இயலுமா என்பவற்றை அறிவது அரிதாக உள்ளது. உயர்ந்த வாழ்க்கை நிலையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் மேற்கு நாடுகளின் வெற்றியைக் கண்டு நாமும் பெருந் தொழில் மயமாக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். ஆனால், மேற்கு நாடுகள் தொழில் பெருக்கத்தில் ஈடுபட்டபோது இருந்த நிலைக்கும், இன்று இந்தியாவில் இருக்கும் நிலைக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாட்டை நாம் பொருட்படுத்தவில்லை. மேற்கு நாடுகள் மக்கள் பெருக்கத்தை எதிர்த்துப் போரிடவேண்டிய நிலையிலிருக்கவில்லை. மேலும், மேற்கு நாடுகளில்

தொழிற்பெருக்கம் தொழிலாளர் பற்ருக்குறையால் தோன்றிய ஒன்று. இந்தியாவிலோ பேரளவுத் தொழிலால் உண்டாகும் வேலையில்லாத் திண்டாட்டத்தை மனத்தில் கொண்டே நாம் செயலாற்ற வேண்டியுள்ளது.

ஒழுங்காகத் திட்டம் வரையறுக்கப்படாத நிலையில் நம்முடைய குடிசைத் தொழில் வளர்ச்சிக்கும் நாம் பங்கீடு செய்யவேண்டியுள்ளது. கிராமத்தின் நிறைவினையே எண்ணி எண்ணித் தமது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உருவாக்கிய காந்தியடிகளுக்கு நாம் உதட்டளவிலேயே ஆதரவு அளிக்கிறோம். மேட்டை நோக்கியும், பள்ளத்தை நோக்கியும் தனித்தனியே இழுக்கும் இரு குதிரைகளைக் கொண்ட வண்டியாகவே நமது பொருளியல் நிலை உள்ளது.

இன்று நம் முன் உள்ள நிலை என்ன? பிரிட்டிஷ் ஆட்சியினின்று விடுதலை பெற்ற பின்னர், நமது தலைவர்கள் சமூக நீதி என்னும் புதிய காலத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவு பெறப் பெருந் தியாகம் செய்யுமாறு மக்களை வேண்டியுள்ளோம். துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் மக்களைப் பாராட்டுகிறோம். ஆயினும், மக்கள் செல்வர்களின் நுகர்வினையும், வாழ்க்கைத் தேவைகளின் பற்றுக்குறைவினையும், விலை உயர்வினையும் நன்கு தெரிந்தே இருக்கிறார்கள். நாட்டுப்பற்றுக் கொண்ட (!) நமது வணிகர்களின் கள்ளச் சந்தையையும், பதுக்கலையும், கையூட்டையும், தனிச் சலுகையையும் மக்கள் காணுமலில்லை. சமூக நீதிக்குத் தேவையானது இஃதல்ல. நல்லனவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதே இன்றுள்ள தேவை. இல்லையேல், மக்கள் வல, இடச் சாரிகளின் வல்லாட்சி முறையின் திறமையான செயல்களுக்கு அடிபணிந்து ஏமாற்றத்திற்குள்ளாவார்கள். ஒருமை உணர்விலும் தொண்டு மனப்பான்மையிலும் நாம் தளர்வோமாயின் ஒழுங்காக அமைந்த பொருளியல் திட்டங்களும், நன்கு வகுக்கப்பட்ட அரசு செயல் முறைகளும் தம் பயனை இழக்கும். நாம் நல்ல மனிதர்களைப் போலவும், தெய்வங்களைப் போலவும் அழகாகப் பேசினாலும் நம்மிடம் அறப் பண்பு இல்லாவிட்டால், நாம் மட்டமான பித்தளை போலவும், சலசலக்கும் தாளம் போலவும் இழிவாக மதிக்கப் படுவோம்.

பம்பாய்,
ஜூலை, 1959

P. A. வாடியா
K. T. மெர்ச்சன்ட்

முன்னுரை

நம்முடைய நாட்டுப் பொருளியல் வளர்ச்சியைப்பற்றிப் பலர் பேசியும் எழுதியும் வந்த உண்மைகளை வற்புறுத்திக் கூறுவதே இந் நூலின் குறிக்கோள். இந் நூலில் நமது பொருளாதாரப் பிரச்சினையை—நமது வறுமைச் சிக்கலை—மட்டுமே ஆராய்ந்துள்ளோம். எளிதில் தீர்வு காணக்கூடிய பொருளியல் பிரிவுகளை ஆராய முற்படவில்லை. நன்முறையில் செயற்படும் பொருளியல் நிறுவனங்களால் மட்டுமன்றி நல்வளர்ச்சியுற்ற சமூக, அரசியல், பண்பாட்டு நிறுவனங்களாலும் நாட்டு நலம் கணிக்கப்படுகிறது என்ற உண்மையை நாங்கள் வலியுறுத்தி உள்ளோம். இந்தியாவின் பல்வேறு பொருளியல் சிக்கல்கள் அடிப்படைச் சிக்கலுடன் இணைந்தேயுள்ளன. அச் சிக்கலை ஆய்ந்து, தெளிந்து, வறுமையின் காரணங்களை அறிந்து, அகற்றி வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி காண்பதே எங்கள் நோக்கம். அதனைக் கண்டு தெளிந்து செயற்படுத்தினால், உரிமையும் ஓய்வுங்கொண்ட மக்கள், மன்பதையின் பண்பாட்டிற்குத் தங்கள் நாகரிகத்தை நல்குவார்கள்.

இந் நூலில் நம்முடைய பொருள் பெருக்கம், பங்கீடு, நுகர்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய சிக்கல்களை மட்டுமே விளக்கியுள்ளோம். வருங்காலத்தில் நமது வணிகம், பாங்க், நாணயச் செலாவணி, போக்குவரவு ஆகியவற்றுடன் தொடர்புடைய சிக்கல்களை ஆராய எண்ணியுள்ளோம்.

நாங்கள் எடுத்துக்கொண்ட பணிக்குத் தேவையான புள்ளிக் கணக்கீடுகளை இந்திய அரசு, மாநில அரசுகள் ஆகியவை வெளியிட்ட பல்வேறு வெளியீடுகளிலிருந்தும் அறிக்கைகளிலிருந்தும் எடுத்துக் கையாண்டுள்ளோம். ஒப்பியல் முறையில் கணக்கிட்டறிதற்கு 'அனைத்து நாட்டமைப்பு' (League of Nations) வெளியீடுகளைப் பயன்படுத்தியுள்ளோம். இந் நூல் உருவாவதற்கு உறுதுணையாயிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஆசிரியர்கள் அனைவருக்கும் எம் நன்றி உரியது. எனினும், குறிப்பிடத்தக்க முறையில் எம் நன்றிக்கு உரியோர் சிலர். அறிஞர்கள், புக்சனன், இராதாகமல் முகர்ஜி, கியான்சந்து, பேராசிரியர் ஆதர்கர், திரு. தாசு (Dr. Buchanan, Radhakamal Mukarjee, Gyanchand, Prof. B. R. Adarkar, Mr. N. Das.) ஆகியோருக்கு நாங்கள் பெரிதும் கடப்பாடுடையோம். எங்களுக்கு உதவி செய்த எல்லோர்க்கும் எம் நன்றி.

தமது பல பணிகளுக்கிடையேயும் எங்களது கையெழுத்துப் படிகளைப் படித்துத் திருத்திக் கருத்து நல்கிய பேராசிரியர் அஞ்சாரியா (Professor J. J. Anjaria) அவர்களுக்குப் பெரு நன்றி அறிதலுடையோம். எனினும், இந் நூலில் கண்டுள்ள கருத்து களுக்கும் முடிவுகளுக்கும் அவர் பொறுப்பல்ல. சில பகுதிகளைப் படித்துக் கருத்து வெளியிட்ட வழக்கறிஞர் திரு. ஜோஷி (Mr. G. N. Joshi, Advocate) அவர்களுக்கு நன்றி.

பம்பாய் பல்கலைக் கழக நூலகர் அறிஞர் ஜோஷி (Dr. P. M Joshi), அவர்தம் துணைவர்கள், குறிப்பாக, திரு. நார்வேகர் (Mr. A. M. Narvaker), பேராசிரியர் வக்கீல் (Prof. C. N. Vakil), திரு. மேதா (Mr. J. K. Metha) ஆகியோர்க்கும் எம் நன்றி.

முடிவாக, எவ்விதத் தப்பெண்ணத்திற்கும், முன்னதாகவே முடிவு செய்துகொண்ட கருத்திற்கும் இடம் கொடுக்காத முறையில் எம் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி உண்மை காண முயன்றுள்ளோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். சிந்தனையைத் தூண்டிக் குறுகிய மனப்பான்மையையும், குழு நலங்களையும் நீக்கி ஆக்கத் திற்கு ஊக்கம் அளிப்பதாக இந் நூல் அமையும் என்ற நம்பிக்கையில் இதனை வெளியிடுகிறோம்.

பம்பாய்
செப்டம்பர், 1943

வாடியா
மெர்ச்சன்ட்

மூன்ரும் பதிப்பின் முன்னுரை

1945-ல் வெளியான இரண்டாம் பதிப்பிற்குப் பின் இடையருத வேண்டுதலினுல் இம் மூன்ரும் பதிப்பு இன்றியமையாததாயிற்று. இரண்டாம் பதிப்பின் நூல்கள் சிறிதும் இல்லாமையாலும், தேவையை முன்னிட்டும் இப் புதிய பதிப்பை வெளியிட முடிவு செய்தோம். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நூலின் பொது அமைப்புச் சிதையாவண்ணம் தேவையான திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்துள்ளோம். இயன்றவரை இற்றைநாள் வரையுள்ள கணக்கீடுகளை அளித்துள்ளோம். இந்திய ஒன்றிப்பு (Indian Union), பாகிஸ்தான் ஆகியவற்றின் தனித்தனியான கணக்கீடு இன்னும் கிடைக்கவில்லை. இரு குடியாட்சி நாடுகளுக்கும் இடையிலுள்ள அடிப்படைச் சிக்கல்களில் எவ்வித மாற்றமுமில்லை. எனவே, 'நமது பொருளாதாரப் பிரச்சினை' என்ற தலைப்பையே அளித்துள்ளோம். பயன்தரத் தக்கதாகவும், படிக்கத் தூண்டுவதாகவும் இந் நூல் அமைந்துள்ளதென ஆங்கில நண்பர்கள் கூறியதைக் கருத்தில் கொண்டு, இதன் வெளிநாட்டுப் பதிப்பை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் வெளியிட முடிவு செய்தோம். அந்தோ! இந்தியாவில் வெளியான ஒரு நூலின் மறு பதிப்பை வெளியிட வெளிநாட்டு வணிக நிலையங்கள் விரும்பாமையாலும், இந்திய வெளியீட்டார் இதனை வெறுத்தமையாலும் எம் வேட்கை வெற்றிபெறவில்லை. ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தற்போது நீங்கியுள்ளமையால் இந்தியாவிலிருந்து பல படிகளை வருவித்து வெளிநாட்டு வாசகர்கள் அவற்றைக் கற்று, நமது பிரச்சினைகளை அறிவதற்கும், நமது பணிகளைப் பாராட்டுவதற்கும் இந் நூல் துணைபுரியுமென நம்புகிறோம்.

கடந்த மூன்ருண்டுகளில் இந்தியாவிலும் உலகிலும் எண்ணற்ற செயல்கள் நிகழ்ந்துள்ளன. அணுக்குண்டின் கண்டுபிடிப்பும், ஜப்பானிய நகரங்களை அழித்த அதன் கொடுமையும், ஐரோப்பாவில் போர் முடிந்த சில மாதங்களில் கிழக்குப் பகுதியில் இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தன.

போர் முடிவுற்று மூன்ருண்டுகள் முடிவுற்ற பின்னும் உலகம் நாடும் அமைதியை நாம் இன்னும் உணரவில்லை. மாருகப் போர்க் காலங்களில் மறைந்திருந்த போட்டி உணர்ச்சிகளும் பொருமை உணர்ச்சிகளும் மீண்டும் தலைதூக்கியுள்ளன. உலகம், ஆங்கில—அமெரிக்கர்கள் எனவும், சோவியத்து எனவும் இரு கூடாரங்களாக, இரு பகுதிகளாக, இரு கோட்பாடுகளைக் கொண்டனவாகப் பிரிந்துள்ளதை நாம் காண்கிரும். இடச்சாரிகள் மிகுந்த வலிமை

பெற்றிருந்தபோதிலும், வெண்டல் வில்கியின் ‘ஓர் உலகம்’ (Wendell Wilkie's ‘One World’) என்ற புதிய உலக முறைக் கனவு தகர்த்தெறியப்பட்டுள்ளது. இங்கிலாந்தோ ஆற்றல் வாய்ந்த தொழிற் கட்சி அரசினைப் பெற்றுள்ளது. இத்தாலியிலும், பிரான்சிலும் இடச்சாரிகளே பெரும்பான்மை வெற்றி பெற்றுள்ளனர். எங்கெங்கு நோக்கினும் இடச்சாரிகளுக்கே செல்வாக்கு! ஐ. நா. அமைப்பும், அதன் கிளைகளும் அனைத்துலக அமைப்பினை உருவாக்க முயற்சி செய்த போதிலும் அதன் வெற்றிகள் உறுதி பயப்பனவாக இல்லை. ஐ. நா. அமைப்பில் சேர்ந்துள்ள பல அரசுகளின் ஒத்துழையாமையால், உணவு, வேளாண்மை அமைப்பு (Food and Agricultural Organisation) செய்யும் முயற்சிகள் ஏமாற்றத்தையே அளிக்கின்றன. பற்ருக்குறையினல் சில நாடுகள் துன்புற, பல நாடுகள் விளைவினைப் பெருக்கி மிகுந்த ஊதியத்தை அடைகின்றன. பிரெஞ்சு அரசோ அனைத்துநாட்டு நிதி நிறுவனப் பொறுப்பாளரைப் (I. M. F. Authority) புறக்கணிக்கின்றது. தேவையின் அடிப்படையிலன்றி அரசியல் அடிப்படையிலேயே அனைத்துநாட்டுப் புத்தாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் உரிய பாங்க் (I. B. R. D.) கடனுதவி வழங்குகிறது. அனைத்து நாட்டமைப்புக்கு (League of Nations) அடுத்துத் தோன்றிய ஐ. நா.வின் துயர் நிறைந்த துன்பமான தோல்விகளை நாம் காணவேண்டி உள்ளது. பழைய கொடிய பேரரசுத்தன்மை கைவிடப்படாமையும், அனைத்துலகத் தொடர்புகளை ஆற்றல் மிக்க அரசுகள் மட்டுமே ஆட்சிசெய்கின்றமையும் இதற்கான காரணங்கள் எனலாம்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் மாநிலங்கள் பொருளியல் வளர்ச்சியில் மிகுந்த பொறுப்பேற்று வளர்ச்சியுற்றுள்ளன. தனி உரிமை உணர்வே மேலோங்கியதென்ருலும், இந்திய முதலாளிகள் இரங்கத்தக்க நிலையிலேயேயுள்ளனர். அரசியல் கட்டுப்பாடற்ற வணிகக் கோட்பாட்டின் (Laissez-faire) காலம் முடியும் நிலையிலுள்ளது; இதனை ஒவ்வொரு நாடும் கைவிட்டு வருகின்றது. புதிய முறையிலமைந்த, கட்டுப்பாடான, வரையறுத்த முதலாளித்துவத்தை உலகம் உணரத் தொடங்கியுள்ளது. இப் புதிய முறை முதலாளித்துவத்திற்கு எவ்வித வாழ்க்கையை அளிக்குமென்பதை எதிர்காலமே எடுத்துரைக்க இயலும். எல்லாவிதமான பொருளியல் கட்டுப்பாடுகளும் வளர்ந்து வருகின்றன. அனைத்து நாட்டு வணிக அமைப்பின் (I. T. O.) பெரு முயற்சிகளுக்கிடையே தனி உரிமை வணிக முறை எய்த முடியாததாக உள்ளது. குடியேற்ற நாடுகள் உட்பட எல்லா ஆசிய நாடுகளும் தேசீயத் தன்மையை உணரத் தொடங்கியுள்ளன. அத் தேசீய உணர்வே பொருளியல் தேசீயத்தை உருவாக்கும்.

போர் அழிவுகளினல் ஐரோப்பியப் பொருளமைப்புப் பெரிதும் சீர்கேடுற்றுள்ளது. முதலீடு செய்யப்பட்ட 5,000 மிலியன் டாலர்கள் பயன்படாமல் கழியவே, தனது வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதற்காக இங்கிலாந்து கடுமையான வழிகளைக் கையாளத் தொடங்கிற்று. போருக்கு முன்னுள்ள, 50-லிருந்து 75 வரையான சதவிகிதத்தில் பொருள் பெருக்கத்தைப் பணபலம் படைத்த நாடு என்ற முறையில் போர்க்காலத்திலும் அமெரிக்கா பெற்றுத் திகழ்ந்தது. போர்க்காலக் கட்டுப்பாடுகளின் மிகுதியாலும் விலை உயர்வாலும் பணவீக்கம்பற்றிய அச்சம் அமெரிக்காவில் தலைதூக்கிற்று. முதலாளித்துவத்தைக் காப்பாற்றும் வகையில் 1939-ல் ஏற்பட்டதைப் போலல்லாத ஒரு புது வகையான பொருளியல் நெருக்கடி அங்குத் தோன்றியது.

இந்தியாவிலும் மாற்றங்கள் நிகழாமலில்லை. நாட்டை இரு கூறாக்கி 1947 ஆகஸ்டு 15-ல் நாம் விடுதலை அடைந்தோம். திட்டமிட்ட கொலை, கொள்ளை, தீ வைத்தல் போன்ற பல அழிவுகளை நமது நாட்டு வரலாற்றில் இடம்பெறச் செய்தது பிரிவினை. காஷ்மீரப் போரால் இந்தியாவின் மூலப் பொருள்கள் அழிந்துகொண்டிருந்த நிலையில், ஏற்கெனவே மக்கள் பெருக்கம் மிகுந்துள்ள இந்தியாவுக்கு இலட்சக்கணக்கான அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க வேண்டிய பொறுப்பேற்பட்டுள்ளது. இதனல், நமது தேசீய அரசு பொருளியல் வளர்ச்சிக்கான உடனடித் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதில் காலத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. இவ்விடையூறுகளுக்கிடையேயும் கடந்த ஆண்டுகளில் இந்திய அரசு திட்டவட்டமான வெற்றிகளுக்கு வேண்டியவற்றைச் செய்துள்ளது.

அனைத்திந்தியக் காங்கிரசுக் கழகத்தால் (A. I. C. C.) ஏற்படுத்தப்பட்ட பொருளியல் முன்னேற்றக் குழுவின் அறிக்கை, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்குரிய தொழிலியற் கொள்கைகளைக் கூறியதுடன் சராசரி அமைப்புக் கொண்ட ஒரு குடும்பத்தின் மாத வருவாய் ரூபாய் நூறுக்கும் குறையாத நிலையில் தேசீயக் கீழ்வரம்பு வாழ்க்கைத்தரம் அமைதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது. ஒவ்வொருவருக்கும் வேலையளித்து, ஒவ்வொருவரின் முழுத் திறமையும் மன்பதையின் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் உயர்ந்ததொரு தொழிலியற் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்றும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு வருவாயையும் செல்வத்தையும் ஒத்த நிலையில் பங்கீடு செய்ய வேண்டுமென்றும் அக் குழு கருதிற்று. ரூபாய் 4,000-க்குக் கூடாத மாத வருவாயுள்ளவருக்கு ஓர் உச்ச வரம்பு ஏற்படுத்தவும், அதனைப் படிப்படியே ரூபாய் 2,000-க்குக் கொண்டுவருவதற்குரிய வழிகளைச் செயல்படுத்

தவும், அக்குழு கருத்துத் தெரிவித்தது. புதிய வேலைத் திட்டங்களை குறிப்பாக, அடிப்படைத் தொழிற்சாலைகளையும், மக்களுக்கு மிகு பயன் நல்கக்கூடிய நிறுவனங்களையும் அரசே ஏற்று நடத்த வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இவை போன்றவை தனியார் துறையிலிருந்து முற்றிலும் எடுக்கப்பட்டுவிடும். தனியார் தொழிற்சாலைகளில் இருந்த செயலாட்சி முறை (Managing Agency System) நீக்கப்படும். முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் 5 சத விகிதத்திற்கு மேல் பங்கு வீதம் அளிக்கப்படாதது. எஞ்சிய மிகுதித் தொகை அரசு வரையறுத்த முறையில், பாட்டாளிகளுக்கும் பங்கு தாரர்களுக்குமிடையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். எஞ்சிய தொகையில் ஒரு பகுதி சமூக நலத்திற்கோ, தொழில் முன்னேற்றத் திற்கோ உரிய திட்டங்களுக்காக அரசால் ஒதுக்கப்பட வேண்டும். பேரளவைத் தொழிலுக்கும் குடிசைத் தொழிலுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்த வேண்டும். வட்டாரத்தின் நிறைவளிப்பதே அனைத்துத் தொழிற்கூடங்களின் அடிப்படை நோக்கமாயிருத்தல் வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் யாவும் ஒழுங்கான திட்டமிட்ட கொள்கை களின் துணைகொண்டு நிறைவேற்றப்படுமானல் ஒத்த மன்பதையை (Socialist Society) நோக்கி நாம் செல்வோம் என்பதில் ஐயமில்லை.

இந்த அறிக்கையைக் கண்ணுற்றதும் ஒன்பது முன்னணித் தொழிலதிபர்கள், இப்பரிந்துரைகள் ஐயுறத்தக்க நிலையிலுள்ளதாகத் தலைமை அமைச்சருக்குச் செய்தி அனுப்பினுர்கள்; நாட்டின் தொழிற் பெருக்கத்திற்குத் தீங்கேற்படும் வகையில் அரசு எப்போக்கையும் மேற்கொள்ளாது என்று அன்னுருக்கு உறுதி அளிக்கப்பட்டது. சிறிது காலம் கழித்து மத்திய சட்டமன்றத்தில் திரு. காசி சையத்து கருமுதீன் (Kazi Syed Karimuddin) ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். 'இந் நாட்டின் பொருளியற் கொள்கையானது அடிப்படைத் தொழில்களைத் தேசீய மயமாக்குதல், கூட்டுறவுப் பண்ணைகளையும் கூட்டுப் பண்ணைகளையும் அமைத்தல், தொழிலியல் மூலப் பொருள்களைத் தேசீயமாக்கல் ஆகியவற்றின் மேல் எழுப்பப்பட வேண்டும். இம் முறையில் ஒத்தயியல் பொருளமைப்பு (Socialist Economy) ஏற்பட முடியும். இந்திய அரசு இவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்', என அவரது தீர்மானம் கூறிற்று. மிகுந்த பொருள்களைப் பெருக்குதல் இன்றைய உடனடிச் சிக்கல் எனக் கருதிய பிரதம மந்திரி இதனை மறுத்தார். பொருளியல் அமைப்பை மாற்றியமைக்க ஒரு புது வகைத் கருவிதனைக் காண விழைந்த அவர் 'பொருள் பெருக்கத் திற்காக நமதாற்றல் பயன்படுத்தப்படும். இவ்வேளையில் இப் போதுள்ள அமைப்பைச் சீர்குலைப்பது விரும்பத்தக்கதல்ல' என்ருர்.

1948 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆறும் நாள் இந்திய அரசு தனது தொழிலியற் கொள்கைதனை வெளியிட்டது. ஒத்த இயல் முறைக்கும், முதலாளித்துவத்திற்குட்பட்ட தனியுடைமை அமைப் புக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு அரசின் அறிக்கை துணை புரிந்தது. போர்க் கருவிகளும், போர்க் கலங்களும், புகைவண்டிப் போக்குவரத்து உரிமையும் தேசீய மயமாக்கப்பட் டிருக்கும்போது, வானூர்தித் தொழிற்கூடங்களும் கப்பல் தளங்களும் தனியார் கரங்களிலிருப்பது விந்தையாக உள்ளது. அன்னாருக்குப் பத்தாண்டளவுக் குத்தகை உரிமை வழங்கப்பட் டுள்ளது. ஏனைய யாவற்றினும் மிகுந்த ஊதியமளித்த நெசவுத் தொழிற்சாலை அரசின் கட்டுப்பாட்டிலிருந்தது. எனவே, அரசு தனது கட்டுப்பாட்டு விதிகளை வெளியிட்டும் நீக்கியும், மீண்டும் விதித்தும் செயற்படுத்தியது. 1948, ஏப்ரல் 25 ஆம் நாள் அனைத்திந்தியக் காங்கிரசில் பேசிய பிரதமர் நேரு கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிட்டார்.

'உற்பத்தித் தொழில் நுணுக்கமும், உற்பத்திக் கருவிகளும் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கின்றன. இன்றைய வகைகளும் முறைகளும் விரைவாக மாறி வருகின்றன. இந் நிலையில் முன்னேற்றத்தை நாடும் எந்த அரசும் அழிந்துபடும் தொழில் களுக்குப் பொருள் செலவு செய்ய முடியாது. மாறாகப் புதிய முறையி லமைந்த தொழிற் பெருக்கத்திற்குத் துணை செய்ய முடியும். தொழிற் சாலைகள் அனைத்தையும் தேசீய மயமாக்குதல் அழிவிற்கே வழி கோலும். அவையும் சிலவாண்டுகளில் பழையனவாகிவிடும்.' மற்றொரு சந்தர்ப்பத்தில் நம் பிரதமர் திட்டமிடும் 'பாட்டை' விட்டுக் கொடுக்கும் கொள்கை என்னும் 'செயலை'க் கைக்கொள்ள வேண்டுமென்கிறார். 'செல்வர்களுக்கு வாய்ப்பையும், வசதியையும், ஊதியத்தையும் அளிப்போம். அவற்றைப் பயன்படுத்தாவிடிலோ, அவர்கள் அச்சமுற்றாலோ, வேறு எவரேனும் அவற்றைப் பயன் படுத்திக்கொள்ளட்டும். பயன்படுத்துவாரின்றி அவை வறிதாக இருத்தல் கூடாது.'

இறுதியாக, 1947 ஆகஸ்டு 15 லிருந்து நமது பொருளியல் கண்ணோட்டம் பெரிதும் மாறுபாடு அடைந்துள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். நமது பொருளியல் கொள்கையை இப்போது நாமே உருவாக்க வேண்டியவர்கள்; இனி தவறுகளுக் காகவும், விடுபட்டவற்றிற்காகவும் அயல் ஆட்சியாளரைக் குறைகூற இயலாது. கடந்த சில ஆண்டுகளில் முதலாளித்துவ நெறி நம் நாட்டில் பல்கியுள்ளது. பணத் தேக்கமும் ஆட்சிக் கட்டுப்பாடும் ஒருசிலரின் கரங்களில் தேங்கியுள்ளன. இந்தியப் பொருளியலைக் கட்டுப்படுத்தும் ஆட்சிக் குழுக்கள் அயல் நாட்டவரைப் பங்குதார

ராகச் சேர்த்துத் தமது பண பலத்தைப் பெருக்கியுள்ளன. மேலும், நமது நற்றெழிற்சாலைகளில் குறிப்பிடத்தக்க அளவு சூதாடிகளின் கையிலிருப்பதும் ஒருவகை இடர்ப்பாடாகும். மொத்தமாக வாங்கி விற்கும் காப்பீட்டுக் கழகங்களையும் அண்மைக் காலத்தில் கண்டுள்ளோம்.

வருவதை முன்னறிவிக்கும் இத் தன்மைகளுக்கு மேலாகப் பண வீக்கமெனும் மேகம் சூழ்ந்து வருகின்றது. அரசும் தனது கட்டுப் பாடற்ற கொள்கை தவறுடையது என ஒப்புக்கொண்ட இந் நிலைக்கு வணிகர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் பேராசை, மக்களின் ஒத்துழையாமை ஆகிய இன்னோன்னவை காரணங்கள் எனலாம்.

எதிர்காலம் எவ்வாறிருக்கும்? விலையுயர்வும், வேலைக் கூலி உயர்வும் ஆகியவற்றினிடையே உள்ள வட்டம் எங்கேனும் ஓரிடத்தில் முறிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லையானல் 1920 வாக்கில் ஆஸ்டிரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளிலும், நம் காலத்தில் சீனுவிலும் இருந்த நிலை இங்கும் ஏற்படும். இந்த இக்கட்டான நிலையைச் சமாளித்தாகவேண்டும். தீமைகளை எதிர்த்து நமது அரசு போராடுகிறது. முதலாளிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து முழு மன ஒற்றுமை ஆற்றல் கிடைத்தாலன்றி வெற்றிபெற இயலாது. இன்று நம்மை நாமே ஆள்வதனுல் ஒற்றுமை யின்மை என்ற பேச்சுக்கே இடமில்லை. உரோமியப் பேரரசு ஒரு நாளில் எழுப்பப்பட்டதன்று என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். முன்னேறிச் செல்லும் ஆர்வத்தால் தேவை யானவற்றைக் கணக்கிடுவதில் தவறக்கூடாது. நமது கடமையை உணராமையே நம்மிடமுள்ள குறைபாடு. நாட்டுக்கு அடுத்த நிலையிலேயே நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்தல் வேண்டும். அனைத்து இந்திய ஒற்றுமைக் கொள்கை களையும் திட்டங்களையும் நாம் உருவாக்க வேண்டும். பண்பாட்டு அடிப்படையிலோ, மொழியடிப்படையிலோ, வட்டார அடிப்படை யிலோ உருவாகும் மாநில மனப்பான்மைக்கும், பிரிவினை உணர் விற்கும் நாம் இடமளித்தல் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று இல்லாத, இன்றியமையாத, நல்லாற்றல் வாய்ந்த தேசீயப் பண்புகளை உருவாக்க வேண்டும். இவையன்றி எதிர்காலத்தில் என்ன இருக்கின்றது?

பம்பாய்,
செப். 1948.

வாடியா
மெர்ச்சன்ட்

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
	முகவுரை	... iv
	முன்னுரை	... vi
	பொருளடக்கம்	... xvi
1.	தோற்றுவாய்	... 1
2.	இந்தியாவிற்குப் பொருளாதாரத் திட்டமிடுதல்	... 17
	பிற்சேர்க்கை (இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் சுருக்கம்)	... 30
3.	இந்தியாவின் இயற்கைச் சாதனங்கள்	... 70
4.	சமூகச் சூழ்நிலையும் பொருளாதார வாழ்க்கையும்	... 107
5.	மனித அமிசம்	... 138
6.	மனித அமிசம் (தொடர்ச்சி)	... 189
7.	மனித அமிசம் (தொடர்ச்சி)	... 217
8.	விவசாயம்	... 245
9.	நமது விவசாயப் பிரச்சினை	... 289
10.	நமது விவசாயப் பிரச்சினை (தொடர்ச்சி)	... 325
11.	நிலங்களின் உட்பிரிவுகளும் துண்டாக்கப்படுதலும்	... 351
12.	கிராமக் கடனும் கடன் சட்டங்களும்	... 381
13.	நிறுவனங்கள்மூலம் விவசாயக் கடன்	... 409
14.	நிறுவனங்கள்மூலம் விவசாயக் கடன் (தொடர்ச்சி)	... 431
15.	நில உரிமை முறைகளும் நில வரியும்	... 463
16.	விவசாய உழைப்பாளர்கள்	... 502
17.	நீண்டகால விவசாய சாத்தியக் கூறுகள்	... 532
	பிற்சேர்க்கை (அரசும் வேளாண்மையும்)	... 556

1. தோற்றுவாய்

'திட்டமிடுதல்' என்ற தொடரைப் போல, வேறு எந்தத் தொடரும் கடந்த முப்பதாண்டுகளாகப் பொருளாதார நூலில் மிகுதியாக வழங்கப்பட்டதில்லை. நம் காலப் பிரச்சினைகளுக் கெல்லாம் 'திட்டமிடுதல்'தான், ஒரே தீர்வாகக் கருதப்படுகிறது. எவ்விதமான பொருளாதாரச் செயற்பாட்டிலும் ஓரளவு திட்ட மிடுதல் என்பது அடங்கியுள்ளது. அது ஒரு குறிப்பிட்ட நோக்கம் அல்லது குறிக்கோளைக் கொண்டு செயற்படுவதே. குறிக்கோளைக் கொண்ட ஒவ்வொரு செயற்பாடும் திட்டமிட்ட செயற்பாடேயாகும். போல்ஷவிக் ஆட்சியின் ஐந்தாண்டுத் திட்டத்தினால் உலகத்திற்கு முதல்முதலாகத் தேசீயத் திட்டம் என்பது அறிமுகமாயிற்று. (நீண்ட காலமாக நகரத் திட்டம் என்ற தொடரை நாம் அறிந் திருப்பினும், அதில் புதுமை ஒன்றுமில்லை.) தேசீயத் திட்டம் என்பது நகரத் திட்டத்தின் விரிவே யாகும். தன் செயற்பாட்டின் விரிவினால் மட்டுமன்றிச் செயற்பாடுகளில் பல வகைகளைத் தழுவி யிருப்பதாலும், அது நகரத் திட்டத்தை மிஞ்சியுள்ளது. அது 'தலையிடாமை' (laissez-faire) என்ற கொள்கைக்கு நேர்மாறான அரசியல் கொள்கையாகும். ஒரு கட்டுக்கோப்பிற்குள்ளடங்கிய எவ்வகைச் சமுதாயத்திலும் திட்டமிடுதல் என்பது உண்டு. அதில் தனிப்பட்டவர்களுடைய செயற்பாடுகள் ஓரளவு இணைக்கப்பட்டும், சுயேச்சை ஓரளவு வரையறுக்கப்பட்டும் இருக்கும். முதலாவதாக, இக் காலத் திட்டத்தில் உற்பத்தியின்மீது அரசாங்கக் கட்டுப்பாடு உள்ளது. ஆனால், உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதோடு அது முடிந்து விடுவதில்லை என்பதை நாம் உணரவேண்டும். அத்தகைய திட்டம் நம் தேசீயப் பொருளாதாரத்தின் மற்ற அமிசங்களையும் பாதிக்காமல் இருக்க முடியாது. அது இறுதியாக நம் சமூக வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் பாதிக்கும். இவை மீண்டும் நம் பொருளாதாரச் செயற்பாட்டினைத் திட்டமிடத் துணை புரிகின்றன. இப் புத்தகத்தில் நம் தேசீய வாழ்விற்கான

திட்டத்தைப்பற்றி நாம் கூறினும், ஒரு நாடு வெற்றிகரமாகத் திட்டமிடுவது என்பது, எல்லா நாடுகளின் நல்லெண்ணத்தையும், அவை இணைப்பாகத் திட்டமிடுதலையும் பொறுத்தே இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம்.

தலையிடாக் கொள்கையின் தோல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தாராளக் கொள்கை (liberalism) யாளர்கள் அரசாங்கத்தின் தலையீடற்ற பொருளாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்க முயன்றனர். அறிவு படைத்த சுயநலவாதிகள் கட்டுப்பாடற்ற போட்டியின்மூலம் எல்லோருக்கும் எல்லாப் பொருள்களையும் அளிக்க முடியும் என்றும், விலைகளைக் குறைத்து நுகர்வோருக்கு நன்மை செய்ய முடியும் என்றும், சிக்கனமான பொருள்களாலும் சேவைகளாலும் நிறைவு செய்யக் கூடிய எல்லாத் தேவைகளையும் மேலும் மேலும் நிறைவு செய்ய முடியும் என்றும் கருதினர். அரசாங்கக் கட்டுப்பாடு தீமையற்றதென்றாலும், தேவையற்றதென்று எண்ணினர். ஆயினும், தாராளக் கொள்கையாளர் ஒரு திருப்திகரமான அமைப்பை நிறுவுவதில் வெற்றி பெறவில்லை. நவீன தொழில் சமுதாயத்தினால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பகுதி சர்வாதீனமுள்ள நிலையங்கள் (quasi - monopolistic institutions) தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நிலத்தை ஓரளவு சரிசமமாகப் பங்கீடு செய்ய முடியும். ஆனால், மிக்க நிலைமுதல் பொருள்களை (fixed capitals) உடைய தொழில் நிறுவனங்கள், அவ்வாறன்றி ஒரு நாட்டின் அல்லது பல நாடுகளின் சர்வாதீனத் தொழில் (monopolistic) நிறுவனங்களாக மாறும் போக்குடையவை. நிறைவுப் போட்டியினால் (perfect competition) விளையக்கூடிய நன்மைகளைக் கருதித் தலையிடாமை ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆகவே, எங்கெங்கெல்லாம் சர்வாதீன முதலாளித்துவம் (monopolistic capitalism) இருந்ததோ, அங்கங்கெல்லாம் அரசாங்கம் தலையிடுவது தவிர்க்க முடியாததாயிற்று. ஏதாவதொரு விதத்தில் விலையைக் கட்டுப்படுத்துதல், ரெயில் போன்ற போக்குவரத்துச் சாதனங்களான சர்வாதீனத் தொழில்களை அரசாங்கம் மேற்கொள்ளுதல், பொது வசதித் தொழில்களில் (public utility services) லாபத்தை வரையறுத்தல், சுங்கத் தீர்வை விதித்துத் தொழில்களைப் பாதுகாத்தல் போன்றவை இக் காலத் தொழில் சமுதாய நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றன. அரசாங்க ஒழுங்குபாடும் (state regulation) நிருவாகமும் தலையிடாக் கொள்கைக்கு மாறாக, மேலும் மேலும் பரவி வருகின்றன.

1914ஆம் ஆண்டின் உலகப் பெரும் போரும், அதன் விளைவாகப் பெரும்பாலான நாடுகளில் சமுதாய, பொருளாதார அமைப்பு முழுவதும் குலைந்து போனதும், அந் நாடுகளில் அரசாங்க ஒழுங்குபாட்டுக் கொள்கைக்கு ஓரளவு அவசியத்தை உண்டாக்கின. இந்தக் காலம் முழுவதிலும் பண்டங்களின் பற்றுக்குறை உண்டானதாலும், குலைந்துபோன பொருளாதார அமைப்பைச் சீர்திருத்தவேண்டி யிருந்ததாலும், சில அரசாங்கங்கள் கட்டாய மாகத் திட்டமிடுதலை மேற்கொண்டு, விலைக் கட்டுப்பாடு, உணவு, உடைப் பங்கீடு, இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் கட்டாய ஆள் சேர்ப்பு, குறிப்பிட்ட நோக்கத்தில் வெற்றி பெறுவதற்காக எல்லா உற்பத்திச் சாதனங்களையும் திரட்டுதல் போன்ற காரியங் களைச் செய்தன.

1919—39

போருக்குப் பின்னர் பலவகையான பொருளாதாரப் பரி சோதனைகள் நடைபெற்றன. பெரும்பாலும் கட்சிகளினுடைய மாறுபட்ட பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக, ஜன நாயக அடிப்படையில் அமைந்த பாராளுமன்ற ஆட்சி தன் செல்வாக்கை இழந்தது. ஏனெனின், அக் கட்சிகள், தம் குறுகிய நோக்கிற் கிணங்கிய தேசீய நலன்களைக் கருதித் தகாதவர்களோடு நட்புகொண்டன. போருக்குப் பின் உண்டான குழப்பத்தி னாலும் சீர்குலைவினாலும் நாடுகளுக்கிடையே பொருளாதாரப் போட்டி அதிகமாயிற்று. சோஷலிச ருஷியா தோன்றி, பாசிஸம் (Fascism) என்ற உருவத்தில் புது முறையான அரசாங்கத்தை அமைக்கும் பரிசோதனையில் மற்ற நாடுகளை ஈடுபடச் செய்தது. இது பெரும்பாலும் நெருக்கடியான காலங்களுக்கேற்ற சர்வாதீன முதலாளித்துவத்தின் அரசியல் தோற்றமாகும். போருக்குப் பிந்திய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் 'சுய உரிமை' (autarky) அளிக்கப்படும் என்று ஆசை வார்த்தை களைக் காட்டி மக்கள் பாசிஸத்தை ஆதரிக்கும்படி கவரப் பட்டார்கள். ஜர்மனியிலும், மற்ற இடங்களிலும் தேசீயப் பொதுவுடைமை என்ற பெயரால், போரை நோக்கமாகக் கொண்டு, ஒரு திட்டமிட்ட பொருளாதாரம் அமைக்கப்பட்டது. சோவியத் ருஷியாவில் ஒரு சக்திவாய்ந்த மத்திய அரசாங்கமானது தனிப் பட்டோர் சொத்துரிமையை ஒழித்தும், குடிமக்களைச் சமூகத்தின் ஆர்வமிக்க தொண்டர்களாக மாற்றியும் ஏற்படுத்திய ஒரு புதிய அமைப்பில், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்தை எவ்வளவு தூரம் உண்டாக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியது. அமெரிக்காவில் போல, வேறு சில இடங்களில் சிறிது

சிறிதான விலைக் கட்டுப்பாடும், பாங்குச் செலாவணிக் கட்டுப்பாடும் (credit control) புகுத்தப்பட்டன. பொருளாதார விஷயங்களில் அரசாங்கம் தலையிடுவது பொருளாதார விதிகளுக்கு முரணானது என்ற கருத்துக்கு மாறாக, இப் புதிய யுகத்தின் போக்குகள் பொருளாதாரச் செழிப்பை அதிகரிக்கச் செய்வதற்கும், வேலையின்மையைக் குறைப்பதற்கும் நாடுகள் செல்வம் பெற்றுத் திருப்தியடைவதற்கும் இன்றியமையாத வழியாக்க் கருதப்பட்டன.

1929 ல் தோன்றிய பொருளாதார மந்தம்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார அமைப்பிற்கு ஓர் அறைகூவலை விடுத்தது. அது அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையைக் கைவிடும்படியும், நியூ டீல் (New Deal) என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை மேற்கொள்ளும்படியும் வற்புறுத்தியது. அதன்படி அரசாங்கம் கடன்களை வாங்கித் தைரியமாகப் பொதுநலப் பணிகளைத் தொடங்கி, மக்களுக்கு வேலையளித்து, புதிதாக வாங்குந் திறனை (purchasing power) உண்டாக்கி, வேலையின்மையால் மக்கள் கெட்டொழியும் நிலையிலிருந்து அவர்களைப் பாதுகாத்தது. சில சமயங்களில், அமெரிக்காவிலுள்ள போட்டி முறைக்குட்பட்ட அரசாங்க ஒழுங்குபாட்டினால், விலைகள் விழுந்து விடாமல் இருப்பதற்காகப் பொருள்களையும் சேவைகளையும் வேண்டுமென்றே அழித்துவிடும் பழக்கம் இருந்து வருகிறது என்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. பருத்தி, கோதுமை, சர்க்கரை, ரப்பர் ஆகியவற்றின் உற்பத்தியைக் குறைப்பதற்கு நாடுகளிடையே கையாளப்படும் பலவகையான கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அரசாங்கத்தின் அரைகுறையான ஒழுங்குபாட்டுக் கொள்கையையே காட்டுகின்றன. இவற்றின் விளைவுகள் சமூக விரோதமானவை என்றே கூறத்தகும். ஏனெனில், லட்சக்கணக்கான மக்கள் உணவும் உடையும் இன்றி இருந்தபோது கோதுமை, காப்பி, பருத்தி முதலியவை அழிக்கப்பட்டன. இவ்வாறு விரைவாக மாறும் சூழ்நிலையில் – போருக்குப் பிந்திய காலத்தில் இருந்த பொருளாதார வாழ்வில் – நிலையங்கள் மாறாமலிருக்க முடியாது. உலகம் முழுவதிலுமுள்ள நாடுகள், தனியார் தொழில் துணிவு (private enterprise), தலையிடாக் கொள்கை ஆகியவற்றோடு, அரசாங்கமே பொருள்களைத் தன் உடைமையாக்கிக்கொண்டு உற்பத்திச் சாதனங்களையும் பங்கீட்டையும் (distribution) கட்டுப்படுத்துவதிலுள்ள உறுதியான பலனை ஒத்திட்டுப் பார்த்து உணர்ந்துள்ளன. அதுபோலவே, 1929-ல் உண்டான மந்தநிலை (depression) பிரிட்டன் போன்ற பெரிய நாட்டைக்கூடத் தன் தடையிலா வாணிப முறையைக் (free trade) கைவிட்டு, ஏகாதிபத்தியச் சலுகையைக் (Imperial

Preference) கடைப்பிடிக்கும்படி செய்தது. இதனால், அந் நாடு முதல் முறையாகத் தன் சாம்ராச்சியத்தின் எல்லைக்குள் தேசியத் துறையில் மட்டும் பழைய மெர்க்கண்டலிசம் (Mercantalism) சாதிக்க எண்ணி யதைத் தான் சாதிக்க நினைத்தது. 1931-க்குப் பிறகு இந்தக் கொள்கை படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, விருப்பமில்லாதிருந்த இந்தியாவையும், ஒட்டாவா மாநாட்டு ஏற்பாடுகளால், இதன் வரம்பிற்குள் வரும்படி செய்தது.

சுருங்கக் கூறின், முதல் உலகப் பெரும்போரின் இறுதிக் காலம் தொடங்கி, குறிப்பாக மந்த காலமும், அதற்குப் பிற்பட்ட காலமும் தொடங்கி, கூட்டு ஒழுங்குபாடு (collective regulation) அல்லது அரசாங்க ஒழுங்குபாடு (state regulation) அல்லது பொருளாதாரக் செயற்பாடுகளின்மீது கட்டுப்பாடு தோன்றியது. முதலில் தொழிலை வளர்ப்பதற்கும், விவசாயத்தைப் பேணுவதற்கும், ஏற்றுமதிகளுக்கு உதவிக் கொடை (subsidy) அளிப்பதற்கும் பாதுகாப்புச் சுங்கவரிகள் (protective tariffs) விதிக்கப் பட்டன. பிறகு, சிறிது சிறிதாக, உள்நாட்டு உற்பத்தி எல்லா வற்றின்மீதும் கட்டுப்பாடும், சில குறிப்பிட்ட இனங்களை இறக்குமதி செய்வதற்குத் தடையும், கோட்டா (quota) ஏற்பாட்டின் மூலம் இறக்குமதி செய்வதற்கு வரையறையும், உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் முதலீடு (investment) செய்வதைக் கட்டுப் படுத்தி, மூலதன (capital) மார்க்கெட்டைத் திட்டம் செய்தலும், பணத்தின் வாங்கும் திறனையும், அயல்நாட்டுச் செலாவணியையும் ஒழுங்குபடுத்துதலும், குடியேற்றத்தைத் (migration) தடுத்தலும் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1939-ல் போர் தொடங்கியதும், பேரழிவைத் தரும் அப் போரில் வெற்றிபெற வேண்டுமென்னும் ஒரே நோக்கத்தோடு சண்டையிடும் நாடுகளில் உள்ள கச்சாப் பொருள்கள் (raw materials), தொழிலாளர், மூலதனம், பாங்குச் செலாவணி, வெளி நாட்டு வாணிபம் ஆகிய எல்லாச் சாதனங்களையும் அரசாங்கம் காலந் தாழ்த்தேனும் கட்டுப்படுத்தியது. இக் கட்டுப்பாடு ஒவ் வொரு நாட்டிலும் தனித்தனியாக அன்றிப் பல நாடுகளுக்கிடையே கூட்டுறவு முறையில் கையாளப்பட்டது. அதுகாறும் பொருளா தாரத் தன்நிறைவையே (self - sufficiency) கருதியிருந்த நாடு களைத் தம் விருப்பத்திற்கு மாறாக, இப் போரானது தமக்குள் நட்புக் கொண்ட நாடுகள் அடங்கிய ஒரு பெரிய உலகத்தைப்பற்றி நினைக்கவும் செயலாற்றவும் வற்புறுத்தியது. அவ் உலகத்தில் அந் நாடுகளின் பொருளாதாரச் செயற்பாடுகள் ஒரு மத்திய அமைப் பினால் இணைக்கப்பட்டன.

தனியார் சுவாதீனக் கொள்கையுடைய இந் நாடுகளில் காலப் போக்கில் இக் கட்டாய மாறுதல் ஏற்பட்டிருப்பினும், தனிப்பட்டவர்கள் கொள்ளை இலாபம் அடித்ததால், போர்வன்மை குறைந்து விட்டதென்றும், கூட்டுறவு முயற்சிகள் குலைக்கப்பட்டுவிட்டன என்றும் சிலர் முணுமுணுத்துக்கொண்டும் எதிர்த்துக்கொண்டும் இருந்தார்கள். போர்க்காலத்தில் கட்டாயத்தினால் தயங்கித் தயங்கி மேற்கொள்ளப்பட்ட திட்ட முறைகளை அமைதிக் காலத்திலும் நிலைபெறச் செய்து, சீர்திருத்தி, ஒழுங்குபடுத்தினால்தான் எதிர்காலத்தில் மக்களுக்குக் கதிமோட்சம் உண்டு.

குறைந்த செலவில் உற்பத்தி செய்வது என்னும் பொருளாதார விதியை அடிப்படையாகக் கொண்டு தடையிலா வாணிபக் கொள்கை அமைந்தது. இவ் விதி உலக நாடுகளிடையே தொழில் முறைப் பகுப்பை (division of labour) உண்டாக்கக் கூடிய பொருளாதாரப் போட்டியின் விளைவென்று கருதப்பட்டது. ஆனால், பொருளாதாரப் போட்டியானது, இலாப வெறி நோக்குடன் கூடி மார்க்கெட்டுகளையும் குடியேற்ற நாடுகளையும் பிடிப்பதில் அடிதடியையும், பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகள் மீது முன்னேற்றமடைந்த நாடுகளின் அரசியல் ஆதிக்கத்தையும் (political domination) உண்டாக்கியது. போரிடைக் காலத்தில் ஏற்பட்ட 'சுய உரிமை' முயற்சி, தன் நாட்டு மக்களுக்கு இன்றியமையாத தேவைப் பொருள்களை அளித்துத் தேசீயத் தன்னிறைவு உண்டாக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் ஏற்படவில்லை. போர்க் காலத்தில் நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக் கூடிய முறையில் உணவுப் பொருள்களையும், மற்ற முக்கியமான பொருள்களையும் பெறுவதற்குப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கக் கூடாது என்னும் விருப்பத்தினால் ஏற்பட்டதே. அன்றியும், போட்டித் திறமையை வளர்த்து, முதலாளித்துவ அமைப்பிற் குட்பட்டு மார்க்கெட்டுகளைப் பிடிப்பதிலும், உலகின் முன்னேற்றமில்லாத பகுதிகளிலும், முன்னேற்றம் குன்றியுள்ள பகுதிகளிலும் அரசியல் ஆதிக்கம் பெறுவதிலும் ஆசை இருந்தது. சோவியத் யூனியன் ஒன்றுதான் இதற்கு விதிவிலக்காக இருந்தது.

தடையிலா வாணிபத்திலிருந்து விலகிய (1919—39) காலப் பொருளாதார அமைப்பானது உலகத்தில் மீண்டும் புதிய போர்கள் தோன்றுவதற்கான அபாய நிலையை உண்டாக்குவதற்கு ஓரளவு காரணமாயிருந்தது என்பதைக் கருதும்போது, கச்சாப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைப் பிடிப்பதற்கும், உற்பத்தி செய் பொருள் (manufactured goods) களுக்குரிய மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்கும் போட்டியிடும் கொள்கையை அடிப்படையாகக்

கொண்டு அமைந்த தடையிலா வாணிப முறை ஆட்சியை நாம் அனுமதிக்க முடியாது. தடையிலா வாணிபம் என்பது எப்போதும் ஒரு சார்பானதாகவே இருந்து வந்திருக்கிறது. அதனுல், தொழில் முறைப் பகுப்பின் சமநிலை குலைந்து, பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகள் என்றென்றும் பணிவிடைபுரியும் நாடுகளாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.[1]

இந்தியாவிற்கு ஓரளவு தன்னிறைவு வேண்டுமென்று நாம் கேட்பதன் நோக்கம், பிற நாடுகளைப் போலப் பொருளாதார, அரசியல் போர்களுக்கு நம்மைத் தயார் செய்துகொள்வதற்கல்ல; நம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்பதுதான். நம் காலத்தில் செல்வப் பண்டங்கள் (economic goods), முக்கியமாக உணவு, அரசியல் ஆயுதமாக மாறிவிட்டதால், நம் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உணவில் தன்னிறைவு இன்றியமையாதது.

பிரிட்டிஷ் ஆட்சியில் பொருளாதாரக் கொள்கை

உலகத்தின் மற்றப் பகுதிகளில் உள்ள பொருளாதாரக் கொள்கையின் போக்கை விடுத்து, இந்தியாவில் உள்ள நிகழ்ச்சிகளின் போக்கை நாம் நோக்கினுல், கடந்த நூறு ஆண்டுகளாக அரசாங்கமானது சென்ற நூற்ருண்டின் 'தலையிடாக்' கொள்கையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு முக்கியமான தன்மையை நம் பொருளாதார வாழ்க்கையில் காணலாம். உதாரணமாக, விவசாயத் துறையில் குடியேற்ற நாடுகள் எல்லாம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட விவசாய முன்னேற்றக் கொள்கையைக் கடைப்பிடித்து, ஊர்தி (transport) வசதிகள், தாராளமான நிலக் கொள்கை, பயன்மிகு கடன் நிலையங்கள், மக்கள் கல்வி பெறுவதற்கான நல்ல திட்டம், ஏற்றுமதிக்கான மார்க்கெட்டிங் திட்டங்களுக்கு (marketing schemes) அரசாங்க உதவி போன்றவற்ருல் விவசாயத் துறையில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆனுல், மக்கள் தொகையில் முக்கால் பங்குள்ளவர் விவசாயத்தை நம்பியிருக்கும் நம் இந்தியாவில் பழங்கால வேளாண்மை முறைகளே

[1] ஒப்பு நோக்குக : 'சிலியில் உள்ள வேலை செய்யும் மக்களில் 50%, சுரங்கங்களில் வேலை செய்கின்றனர். சீனுவில் வேலை செய்யும் மக்களில் 80% விவசாயிகள், தாய்லாந்தில் 80%, நெதர்லாந்தின் ஈஸ்டு இண்டீஸில் 70%, பர்மாவில் 70%, இந்தோசீனுவில் 80%, ஆப்பிரிக்காவில் விகிதம் இன்னும் அதிகமாக இருக்கிறது. ('Make This The Last War' by M. Straight, 1943, பக். 31.)

கையாளப்பட்டு வந்தன. மார்க்கெட்டிங் வசதிகளையும் நிதி வசதிகளையும் செய்து தருவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. மக்களுக்குக் கல்வி அதிகமாக அளிக்கப்படவில்லை. விவசாயக் கல்வி அதைவிடக் குறைவே. இந்தியாவில் நிச்சயமற்ற விளைச்சல் முன்போலவே தொடர்ந்து இருந்தது. பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட தேசியக் குறிக்கோள் (national objective) இல்லாமல் இருந்தது.

விவசாயமல்லாத உற்பத்தியைப் (non-agricultural production) பொறுத்தமட்டில், நூறு ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியின் பின்னரும், பொறித் தொழிலும் (industry), பெருவாரி உற்பத்தியும் (large-scale production) இந்தியர் வாழ்க்கையின் எல்லையை நெருங்கினதோடு நின்றுவிட்டன என்றுதான் கூறலாம். மேற்கில் ருஷியப் பரிசோதனையின் முக்கியத்துவம் யாதெனின், முன்பில்லாத வேகத்துடன் அரசாங்கம் நாட்டைத் தொழில்மய மாக்கியதன்று. நுகர்வுக்கு ஏற்ப உற்பத்தியை அமைக்கும் நோக்கத்தோடு அது செய்யப்பட்டதுதான். சென்ற நூற்றாண்டில், மற்ற நாடுகளில் தொழில் வளர்ச்சியை முதலாளித்துவம் முக்கியப் பங்குகொண்டு நடத்தியபோது, தனியார் இலாபம், தனியார் தொழில் துணிவு ஆகிய தூண்டுகோல்கள் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவின. இதன் இயற்கையான விளைவு தலையிடாக் கொள்கையே. அது தான் எல்லாத் துன்பங்களுக்கும் தீர்வு என்றும், செழிப்புக்கெல்லாம் அடிப்படை என்றும் பெருமைப்படுத்தப்பட்டது. ஆனால், கடந்த ஐம்பது ஆண்டுகளாக நடந்த தொழில் முறையில், உற்பத்திக் கட்டுப்பாடும், பண்டங்களை வேண்டுமென்றே அழித்தலும், செழிப்பிற்கிடையே வறுமை தாண்டவமாடும் முரண்பாடும் காணப்படுவதால், தலையிடாக் கொள்கை தொடர்ந்து இருப்பது என்பது முடியாது. தொழில் முறையில் அதிக உற்பத்திக்கும் நியாயமான பங்கீட்டுக்கும் (equitable distribution) முறையாகத் திட்டமிடுதலும் மத்தியக் கட்டுப்பாடும் (centralised control) அவசியம் என்னும் நிலை இப்போது உண்டாகிவிட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியில் தொழில் வளர்ச்சி

நம்முடைய தொழில் வளர்ச்சியைப்பற்றிய செய்தி யாது? பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டனுடைய வளத்திற்குக் காரணமான 'தலையிடாக்' கொள்கையே நம் நாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் திட்டமிடுதல் என்ற பெயருடன் ஏதோ சில அடையாளங்கள் காணப்பட்டன. நம் தொழில்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்

என்ற கோரிக்கையே அத் திட்டத்தினுடைய முதல் அறிகுறி எனலாம். பாங்குச் செலாவணியும் பாங்குத் தொழிலும் பத்தாம் பசலி முறையிலேயே இருந்தன. மத்திய பாங்கு ஒன்று மட்டும் தான் நிறுவப்பட்டிருந்தது. அதன் நிர்வாகமும் நாட்டின் நலன் கருதி நடைபெறவில்லை. டிசம்பர் 1942-ல், யுத்த காலத்தில் இந்தியத் தொழில்களின் முன்னேற்றம்பற்றி சர். எம். விஸ்வேஸ்வரையா கூறியதாவது: 'அரசாங்கத்திடம் திட்டமோ கொள்கையோ இல்லை; 40 கோடி மக்களுடைய வாங்கும் திறனை மிகவும் பாதிக்கக்கூடிய விஷயத்தில் அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது, என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றி அதற்கே தெரியாது.' கடந்த 40, 50 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம்பற்றி நாம் சரியாக ஒன்றும் சொல்ல முடியாது. ஒரு நிதானமான கொள்கை என்பது அறவே இல்லாதிருந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரிக் குழு (Fiscal Commission) யோசனை கூறியபடி இந்தியத் தொழில்களுக்குச் சாதகமான பாதுகாப்புக் கொள்கை ஒரே நிதானமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. தடையிலா வாணிபம் உள்ள உலகத்திற்கே மேற்படி வரிக் குழு தன் யோசனைகளைக் கூறியிருந்தது. ஆரம்பத் தொழில்களுக்காக, அத் தொழில்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குப் பின்னர் பாதுகாப்பு வேண்டாம் என்பது கருதி அதன் சிபாரிசுகள் அமைந்திருந்தன. 1919-க்குப் பின்னர், பொருளாதாரத் தேசீயத்தை உருவாக்கிய சக்திகளைப் பற்றி அச் சிபாரிசுகள் யாதும் கருதவில்லை. ஐரோப்பிய நாடுகளின் செலாவணிகளுக்கு உயிரளிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட கடன்கள் தேசீயத் தொழில்களுக்குத் தொடர்ந்து உதவிக் கொடை (subsidy) அளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன. 1919-க்குப் பின்னர் உண்டான பொருளாதாரச் சீரமைப்புக்குக் காரணமான சில சக்திகள், யுத்த காலத்திற்கு முன்பிருந்த தடையிலா வாணிப உலகுக்கு மீண்டும் அடிகோலும் என்று சிலர் நம்பினார்கள். ஆனால், அச் சக்திகள், மந்த காலத்தினாலும், மற்றொரு யுத்தத்திற்காகச் செய்யப்பட்ட ஆர்வமான ஆயத்தங்களாலும் அவசியமாக்கப்பட்ட பொருளாதாரத் தன்னிறைவு ஆசையினால் அடியோடு அழிக்கப் பட்டுவிட்டன.'

முதல் உலகப் பெரும் போரானது இந்தியாவில் தொழில் வளர்ச்சி உண்டாவதற்கு நிறைய வாய்ப்பளித்தது. இந்தியத் தொழில்களில் உள்ள சாத்தியக் கூறுகளையும் குறைகளையும் அது எடுத்துக்காட்டியது. இருப்பினும், யுத்தத்தினால் அளிக்கப்பட்ட தற்காலிகமான பாதுகாப்பை, இந்தியா முற்றிலும் தன் நன்மைக்குப் பயன்படுத்திக்கொள்வது கடினமாக இருந்தது.

ஏனெனின், அது இயந்திர சாதனங்களை அயல்நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. போருக்கு ஆயத்தம் செய்து கொண்டும், தன்னிறைவுக்காக ஆசைகொண்டும் இருந்த உலகத்தில், இந்தியா அடைந்த வளர்ச்சி யெல்லாம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் காரணமாக, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில பொருள்கள் நிறுத்தப்பட்டதேயாகும். வாழ்க்கைத் தரம் (standard of living) உயர்ந்து, நம் மக்கள் நிறைவான செழித்த வாழ்க்கை வாழ வேண்டும் என்னும் நோக்கத்தோடு, பொருளாதார வளர்ச்சியில் இணைப்பை உண்டாக்குவதற்கு முயற்சி நடைபெறவில்லை. இயந்திரங்கள், ரசாயனப் பொருள்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களை உண்டாக்கும் சாத்தியக் கூறுகளைப்பற்றி எண்ணவே இல்லை. நம் விவசாய சக்தியைப் பெருக்குவதற்கு இவ் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதைப்பற்றியும் நினைக்கவில்லை.

ஆகையால், இரண்டாவது உலகப் பெரும் போர் உண்டான போது, அப் போரினால் நம் தொழில்களை வளர்ப்பதற்குக் கிடைத்த விரிவான வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள நாம் தயாராக இல்லாது போனோம். 1919-ல் தொழில் குழு (Industrial Commission) வினால் குறிப்பிடப்பட்ட முக்கியத் தொழில்களும் அடிப் படைத் தொழில்களும் (ரசாயனப் பொருள்கள், உலோகத் தொழில் போன்றவை) இல்லாமலிருந்ததால் நம் முன்னேற்றம் மீண்டும் தடைபட்டது.. 1942-ல் இந்தியாவுக்கு வந்த கிராடி தூதுக் குழு (Grady Mission) இந்தியாவினுடைய மிகுந்த உலோக சாதனங்கள் உபயோகிக்கப்படவில்லை என்றும், முன்னேறியிருந்த இந்தியத் தொழில்கள் வழக்கமான தொழில் அடிப்படையிலேயே பெரும்பாலும் வேலை செய்து கொண்டிருந்தன என்றும், யுத்த வேலைகளுக்கு அவைகளை மாற்றுவதற்கான அரசாங்க அமைப்பு ஒன்றுமில்லை என்றும் கண்டது.[1] யுத்தத்தினால் அளிக்கப்பட்ட வாய்ப்புக்களை ஆஸ்திரேலியாவும் கனடாவும் முற்றிலும் பயன்படுத்திக்கொண்டு பல புதிய தொழில்களை நிறுவின. ஆனால், நாம் வழக்கமான கொள்கையையே நெடுகக் கடைப்பிடித்து வந்தோம். ஏனெனின், நமக்கு நன்கு சிந்தித்து அமைக்கப்பட்ட ஒரு திட்டமோ, குறிப்பிட்ட தேசீயக் குறிக் கோளோ இல்லாதிருந்தது. அதுமட்டுமன்றி, யுத்தத் தேவை களின் நெருக்கடியினால் அன்றன்றைக்கு உருவாக்கப்பட்ட ஒரு குறுகிய கொள்கையைக் கடைப்பிடித்ததனால், எதிர் காலத்தில் பெறக்கூடிய மிக்க நன்மைகளையும் இழந்தோம்.

[1] மேற்கூறிய W. M. Straight, பக். 32.

யுத்தப் பிற்காலத் திட்டம்

இரண்டாவது உலக யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது 1941 செப்டம்பரில், விஞ்ஞான முன்னேற்றத்திற்கான பிரிட்டிஷ் சங்கமானது லண்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டியது. இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாவது, உலகத்தை எதிர்நோக்கி யிருக்கும் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதும், அதற்கு மேலாகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும்தான். கேம்பிரிட்ஜைச் சேர்ந்த மாரிஸ் டாப் (Maurice Dobb) என்னும் பொருளாதார நிபுணர் இம் மாநாட்டில் தனியார் சுவாதீனப் பொருளாதாரத்தின் முக்கிய அமிசங்களையும், நிச்சயமற்ற தன்மைகளையும், ஏற்ற இறக்கங் களையும் (fluctuations) ஒழிப்பதற்கு திட்டமிடுதலே ஏற்ற வழியாகும் என்று விளக்கிக் கூறினர். திட்டமிடுதலின் சாத்தியக் கூறுகளையும் நோக்கங்களையும்பற்றிப் பல விளக்கங்கள் கூறப் படினும், மக்களினம் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சச்சரவிட்டுக்கொண்டு குழப்பமாகவும் திட்டமின்றியும் இருக்கும் இவ்வுலகத்தில், பொருளாதார நலத்தின் முன்னேற்றத் திற்காக விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதில் வெற்றிபெற முடியாது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது. திட்ட மிடுதல் என்பது அமைப்புப்பற்றிய தொழில் நுட்பப் பிரச்சினை யன்று என்பதும், மக்களினத்திற்கு நன்மை பயப்பது என்ன என்பதைப்பற்றி முதலில் முடிவு செய்ய வேண்டுமென்பதும், மக்கள் தங்கள் நன்மைக்கன்றி மக்களினம் முழுவதின் நன்மைக் காகவும் அக்கறை கொள்ளாமல் இருக்கும் நிலையை மாற்றி யமைக்க வேண்டுமென்பதும் எடுத்துக் காட்டப்பட்டன.

இன்று உலகில் இந்தியாவைப் போல வேறு எந்த நாட்டிலும் திட்டமிடுதல் அவ்வளவு அவசரமாகத் தேவையில்லை என்று கூறலாம். கடந்த 150 ஆண்டுகளாகப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அதிகார பீடத்தில் இருந்த ஓர் அரசின்கீழ் இந் நாடு அடிமையாக ஆளப்பட்டுவந்தது. ஆளும் நாட்டிற்கு நன்மை தரக்கூடிய நிலையங்களும் வழிகளும், ஆளப்படும் நாட்டிற்கும் நன்மை தரும் என்ற நம்பிக்கையானது, இந்தியாவில் பொரு ளாதாரச் சீர்குலைவை உண்டாக்கிவிட்டது. ஏன்? முழுக் குழப்பத்தையே உண்டாக்கிவிட்டது என்றும் கூறலாம். நம் நாடு தொழில்மய மாக்கப்பட்ட போதிலும், தேசிய வாழ்வில் ஒரு சீர்கேடு காணப்பட்டது. யுத்தம் வந்ததால் இச் சீர்கேடு இன்னும் அதிக வேகமாக உண்டாயிற்று. யுத்தப் பிற்காலச் சிரமைப்புப் பிரச்சினைகள், சிந்தனையும் கருத்தும் கொண்ட தலைவர்களால் மிக

உன்னிப்பாகவும் ஆர்வத்துடனும் விவாதிக்கப்பட்டன. இந்திய அரசாங்கம் ஒரு பொருளாதாரச் சீரமைப்புக் குழுவை நியமித்தது. யுத்தத்திற்கு முன்பே இந்திய தேசீய காங்கிரசின் ஆதரவில் ஒரு பொருளாதாரத் திட்டக் குழு வேலை செய்துகொண்டிருந்தது. ஆனால், மேனுடுகளில் யுத்தப் பிற்காலச் சீரமைப்பிற்காகச் செய்யப் பட்ட ஆலோசனைகளில் இந்தியாவோ மற்ற ஆசிய நாடுகளோ சம்பந்தப்படாமல் இருந்தன. போரிடும் நாடுகளுக்கெல்லாம் அட்லான்டிக் சாசனத்தின் அடிப்படையான நான்கு உரிமைகளை ஜனுதிபதி ரூஸ்வெல்ட் உறுதி கூறினுர். ஆனுல், யுத்தம் முடிந்த பிறகும் பிரிட்டனின் சாம்ராச்சியத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று கருதிய சர்ச்சிலின் ஆசைக்கு இவை மாருயிருந்தன. பத்தொன்பதாம் நூற்ருண்டின் தடையிலா வாணிபத்திற்கும், தடையிலாப் பரிவர்த்தனைக்கும் (exchange), தடையிலா மார்க் கெட்டில் உலகத்தில் கிடைக்கக்கூடிய உணவையும் கச்சாப் பொருள்களையும் எல்லோரும் சரிசமமாகப் பெறுவதற்கும் முயல வேண்டுமென்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் கூறிவந்தார்கள். வளர்ச்சி யடையாத நாடுகளில் தொழில்மய மாக்கப்பட்ட நாடுகள் மார்க்கெட்டுகளைத் தேடவேண்டும் என்ற பழைய பொருளாதார நிலைமையை நீடிக்கவே இவ்வாறு கூறப்பட்டது.

சோவியத் தூதராகிய மெய்ஸ்கி, லண்டனில் நடந்த விஞ்ஞான, உலக ஒழுங்கு மகாநாடு ஒன்றில் தலைமை தாங்கிப் பின்வருமாறு கூறினுர்: 'உலகம் முழுவதையும் தழுவிய பொருளாதார, சமூக, அரசியல்பற்றிய விரிவான திட்டம் ஒன்றை அமைக்கக்கூடிய நாள் எப்போதாவது வரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை'. அந்த நாள் சமீபத்தில் இல்லாமல் இருக்கலாம்; ஆனுல், இந்த அறைகூவலை ஏற்கக்கூடிய வாய்ப்புக் களையும் வசதிகளையும் உடையவர்கள், தம் நாட்டின் எதிர்காலத் திற்குத் திட்ட அடிப்படையில் நன்கு சிந்திக்க வேண்டும் என்பது மிக அவசரமும் அவசியமும் ஆகும்.

இரண்டாவது உலகப் போரினுல் நம் ஸ்டார்லிங் கடன் தீர்க்கப் பட்டு, அதிக ஸ்டார்லிங் கொடுப்பல் நிலை (balance) உண்டாகி, நம் பொருளாதார நிலை வலிமையடைந்தது. இது இந்திய மக்களின் வியர்வையாலும், உழைப்பாலும், இரத்தத்தினுலும், கண்ணீரினுலும் ஏற்பட்ட ஒரு நிலையாகும். மேலான பொரு ளாதார நோக்கு ஏற்படக்கூடிய ஏதுக்களை இது உண்டாக்கியது. ஏனெனின், ஸ்டார்லிங் கொடுப்பல் நிலை உருவத்தில் இருந்த நம் பொருளாதார வாங்கும் திறனைத் தக்க முறையில் பயன்

படுத்துவதாலும், யுத்தப் பொருளாதாரத்தை அமைப்பதில் நமக்கிருந்த அனுபவத்தினுலும், அரசாங்க அலுவல்களின் வளர்ச்சியாலும், பொதுத்துறைக் கட்டுப்பாட்டினுலும், பொருளாதார நடவடிக்கைகளின் ஒழுங்குபாட்டினுலும் நாம் நம் பொருளாதாரத்தை மிக உன்னதமான தொழில் அடிப்படையில் சீர்திருத்தி அமைக்க முடியும். ஆனல், போருக்குப் பிறகு ஏற்பட்ட பணவீக்க (Inflation) வளர்ச்சியும், பிரிவினைப் (Partition) பேராபத்தும், அதனுல் உண்டான அகதிகள் பிரச்சினையும், உணவுப் பற்ருக்குறையும், வாணிபக் குழப்பமும், பருவமழை தவறியதும் நம் பொருளாதாரத்தை விரைவாக மாற்றியமைக்க முடியாமல் தடுத்துவிட்டன. அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை (balance of payments) யில் பற்ருக்குறை (deficit) உண்டாகும் போது அதைச் சரிசெய்வதற்கு நம் ஸ்டர்லிங் இருப்பில் பெரும் பகுதி செலவழிக்கப்பட்டது. இந்த இருண்ட நிலையில், ஒரே ஒரு நம்பிக்கை தரக்கூடிய நிகழ்ச்சி யாதெனின், அன்னிய ஆட்சி முடிவடைந்து நாம் சுதந்திரம் அடைந்ததுதான். இதனுல், நாமே நம் பொருளாதார வாழ்க்கைக்கு அதிகாரிகளானேம். நம் எதிர்கால நோக்கமும் முற்றிலும் மாறிவிட்டது. 1950-ல் நம் தேசிய அரசாங்கம் நம் எதிர்காலப் பொருளாதாரத்தைத் திட்டமிடுவதற்கு ஒரு திட்டக் குழுவை (Planning Commission) நியமித்தது. நாம் நீண்ட நோக்கோடு நம்முடைய தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய ஒரு புதிய சமூகப் பொருளாதார அமைப்பை உண்டாக்குவோமாக.

இந்தியப் பொருளாதாரம்—இந் நூலின் நோக்கம்

'இந்தியப் பொருளாதாரம்' என்பது ஒரு தவருன பெயர் என்று கூறப்படுகிறது. இப் பெயருடைய விஞ்ஞானத் துறை எதுவுமே இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஒரு விஞ்ஞானத் துறை என்ற முறையில் பொருளாதாரத்தின் தத்துவங்கள் பொது விதிகளின் தன்மையுடையனவாய் எல்லா இடங்களுக்கும் காலங்களுக்கும் பொருந்துபவை. அவை அப்படிப் பொருந்தாமலிருந்தால், அத் துறை ஒரு விஞ்ஞானத் துறையாகவே கருதப்படமாட்டாது. இவ்வாறு தடைகள் கூறுபவர்கள் சில முக்கியமான விஞ்ஞானக் கருத்துக்களை மறந்துவிடுகிருர்கள். தொழில்முறைப் பகுப்பும் (division of labour), விசேஷத் தொழில் திறமையடைதலும் விஞ்ஞான ஆராய்ச்சியில் போலவே மக்களுடைய மற்றச் செயல்துறைகளிலும் பயன்படுகின்றன. கடந்த நூற்றுண்டிலிருந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ள

சமூக விஞ்ஞானத் துறைகள் அந்தந்தத் துறைக்குரிய அடிப்படையான சமூக நடவடிக்கைகளின் வேறுபாடுகளைப் பொறுத்தே இருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு சமூக விஞ்ஞானத் துறையும் தனக்குச் சம்பந்தமில்லாத பிற செயல்துறைகளை ஒதுக்கிவிட வேண்டும். அதுபோலவே, எந்த ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் இந்த விஞ்ஞானத் துறைகளில் ஏதாவது ஒன்றின் விதிகளைத் துணையாகக் கொண்டு சரியாக விளக்க முடியாது என்பதும் உண்மையே. ஒரு தனிப்பட்டவனுடைய வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும், ஒரு கூட்டத்தினுடைய வாழ்க்கையை எடுத்துக்கொண்டாலும் மனித வாழ்க்கை என்பது உயிர்முறைக்கொத்த ஒற்றுமையுடையது; ஒன்றாகவே இயங்குவது. ஆகையால், ஏதாவது ஒரு நாட்டின் வாழ்க்கைக்குப் பொருளாதார விதிகளைப் பொருத்திப் பார்க்கும்போது, அதன் சரித்திரச் சூழ்நிலையையும், அம் மக்களின் வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும், அவர்களின் சமூக நிலையங்களையும், சமய நிலையங்களையும் நாம் கருத்தில் கொண்டு, இவை அவர்களுடைய பொருளாதார வாழ்வை எவ்வளவுதூரம் மாற்றும் அல்லது பாதிக்கும் என்று அறியவேண்டும். தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு (classical economic theory) என்பது, கிரேட் பிரிட்டன் போன்ற நாடுகளில் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் நிலவியிருந்த சூழ்நிலைகளைப் பகுத்தாய்ந்து செய்யப்பட்ட ஆராய்ச்சியாகும். ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ, மில் ஆகியோர் கூறிய பொருளாதார விதிகள் போட்டியையும் தலையிடாக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமூகத்தைப்பற்றிய விளக்கமேயாகும். பொருளாதார விதிகள் என்று கருதப்பட்ட இவற்றைக் கடந்த 40 ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பொய்யாக்கி விட்டன. 1917-க்குப் பிறகு உருவாக்கப்பட்ட புதிய பொருளாதார அமைப்பின் வழிமுறைகளை விளக்கக்கூடிய பொருளாதாரக் கோட்பாடு ஒன்றைச் சோவியத் யூனியன் உருவாக்கியுள்ளது. இதற்கு முன்பு, லிஸ்ட் என்ற ஜெர்மன் பொருளாதார நிபுணர், தன்காலத்து ஜெர்மனியின் நிலைக்குப் பொருந்தக்கூடிய பொருளாதாரக் கோட்பாடு ஒன்றை விளக்கிக் கூறினார். ஆகையால், நம் கடந்த கால வரலாற்றையும், சமூக நிலையங்களையும், சமய நிலையங்களையும், பௌதிகச் சூழ்நிலையையும், சக்திகளையும், நாம் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் அரசியலில் பரிணாமம் அடைந்ததையும் கருதி, இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையையும் பிரச்சினைகளையும் குறிக்கும் ஆராய்ச்சியின் பெயராக 'இந்தியப் பொருளாதாரம்' என்னும் தொடரைத் தைரியமாகப் பயன்படுத்தலாம் என்று கருதுகிறோம்.

இந் நூல் இந்தப் பொருளில் இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். பல்கலைக் கழகங்களில் இந்தியப் பொருளாதாரத்தைப் பயிலும் இளைஞர்களுக்குப் பயன்படும் பொருட்டு, இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளையெல்லாம் கட்டுக்கோப்பான முறையில் இதன் ஆசிரியர்கள் இதில் கூற முயன்றிருக்கிறார்கள். நம்முடைய பொருளாதார வாழ்க்கையையும் தலைவிதியையும் பொதுவாகத் தெரிந்துகொள்ள விரும்பும் கல்வி ஆர்வமுடைய பொதுமக்களுக்கும் இது பயன்படும். இதில் நம் நாடு ஒரு வளமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய நிலைமைகளையும், இந்த நிலைமைகளைக் கொண்டுவருவதற்கு நம் சுதந்திர நாட்டுத் தலைவர்கள் திட்டமிட்டு வேலைசெய்தால் வெற்றி பெற முடியும் என்பதையும் ஆசிரியர்கள் எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறார்கள். இந் நூலை எழுதியதில் ஆசிரியர்களுக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. முதலாவது நோக்கம், நம்மை இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார வாழ்வையும் பிரச்சினை களையும்பற்றி வரலாற்று முறையில் எடுத்துகூறி ஆராய்வது. இரண்டாவது நோக்கம், பொருளாதாரச் சீரமைப்புக்கான ஒரு திட்டத்தை ஆராய்ந்து கடைப்பிடிப்பதால், சுதந்திர இந்தியா உடனடியாக என்ன சாதிக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுவது. பொருளாதாரம் என்பது ஒரு விஞ்ஞானத் துறை மட்டுமன்றி, ஒரு கலையும் ஆகும் என்று உலக நாடுகள் இன்று நன்கு உணர்ந்துவருகின்றன. 19ஆம் நூற்றாண்டிற்குத் தேவையானதும் தக்கதுமான ஒரு பொருளாதார அமைப்பின் தவறுகளுங் குறைபாடுகளும், மேலும் ஒரு நல்ல அமைப்புக்குத் திட்டமிடும்படி மக்கள் மனத்தில் ஒரு விருப்பத்தை ஏற்படுத்தி விட்டன. இந்த அடிப்படையில் தொடங்கி, இந்தியா இப் பொழுது தன்னுடைய பொருளாதார வாழ்க்கையை நிர்ணயித்துத் திட்டமிட முடியும் என்ற உண்மையை உட்கொண்டு நம் நாடு இப்பொழுது உற்பத்தி (production), பங்கீடு (distribution) நுகர்வு (consumption) ஆகியவற்றில் என்ன குறைபாடுகளை உடையது என்பதையும், அக் குறைபாடுகளை நீக்கும் வழிமுறை களையும் ஆசிரியர்கள் இந் நூலில் கூறுகிறார்கள். இதுதான் அவர் களுடைய முக்கிய நோக்கம். எனினும், போதாத செய்திகள், நம்ப முடியாத புள்ளியியல் (statistics), பொதுமக்கள் பரி சீலனைக்கு அகப்படாத மூலச் செய்திகளைப்பற்றிய விஷயஞான மின்மை ஆகியவற்றால் அவர்களுக்குண்டான குறைபாடுகளையும் அவர்கள் அறிவார்கள்.

பொருளாதாரத் துறையில் சில சந்தர்ப்பவாதிகள் இருக் கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பொருளாதாரப் பிரச்சினை

தோன்றும்போதும், அதை ஒரு மாற்ற முடியாத அமைப்பில் வைத்துப் பரிசீலனை செய்யப் பார்ப்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து கூறும்படி நியமிக்கப்பட்ட குழுக்கள் பெரும்பாலும் இத்தகையவையே. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுமாறு வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களும் இப்படிப்பட்டவர்களே. ஒவ்வொரு குறையும் தோன்றிய காலத்தில் அதற்குப் பரிகாரம் தேடுவதற்காகவும், அணை உடைபட்டு வெள்ளம் புரண்டுவந்து அழிவை உண்டாக்காமலிருப்பதற்கு அணையில் உள்ள உடைப்பை அடைப்பதற்காகவும் இவ்வாறு முயற்சிகள் செய்யப்பட்டன. அரசியல் துறையில் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை மட்டும் கருதாமல், கொள்கைகளைப்பற்றியே நினைத்து எதிர் காலத்தை நோக்கும் ராஜதந்திரி போல, ஒரு புதிய பொருளாதார அமைப்பை உண்டாக்கும் நோக்கமுடையவர்கள் இங்கொரு தொழிலை வளர்ப்பதும், அங்கொரு விரும்பத் தகாத வரியை ஒழிப்பதுமாக இராமல், நிகழ்காலத்தைக் கடந்து எதிர்காலத்தை நோக்கக்கூடிய பரந்த திருஷ்டியுடன் சிந்திக்க வேண்டும்.[1] இந் நூலின் ஆசிரியர்கள் இத்தகைய பரந்த திருஷ்டி தங்களுக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளவில்லை. ஒரு நாட்டின் வாழ்க்கை என்பது உயிர்முறைக்கொத்த ஒற்றுமையுடையது என்பதையும், பொருளாதாரத் திட்டம் என்பது சமூக, அரசியல் திட்டங்களை உள்ளடக்கியது என்பதையும், இத் துறைகளில் வெற்றிகரமாகத் திட்டமிடுவதற்குத் தகுந்த பண்பாடும் அறவுணர்ச்சியும் அடிப் படையாக அமையவேண்டும் என்பதையும் மனத்தில் கொண்டு, இந் நாட்டின் பிரச்சினைகளையும், அவைகளுக்கிடையே உள்ள தொடர்புகளையும் உட்கொண்டு அவர்கள் ஆராய முற்பட்டிருக் கிறார்கள் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறார்கள்.

[1] அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நாம் இந்த நூலில் மற்றோர் இடத்தில் கூறுவோம்.

2. இந்தியாவிற்குப் பொருளாதாரத் திட்டமிடுதல்

போருக்குப் பிந்திய காலத்தைத் திட்ட காலம் என்றே கூறுவது பொருந்தும். பொருளாதார முறைகள் நன்கு திட்டமிடப் பட்டவையோ அல்லது முற்றிலும் திட்டமே அற்றவையோ ஆகிய இவ்விரண்டில் ஒன்ருகத்தான் இருக்கவேண்டு மென்று நாம் நினைக்கக்கூடும். ஆனல், உண்மையில், எந்த முறையும் இவ் விரண்டில் ஒன்ரேடொன்று முற்றிலும் இணங்கியிருக்க முடியாது. சோவியத் யூனியன் முற்றிலும் திட்டமிடப்பட்ட பொருளாதார முடையதாகக் கருதப்படுகிறது. ஆனல், அங்கும் குறிப்பிட்ட திட்டமில்லாமலே ஓரளவு பொருளாதார உற்பத்தி நடை பெறுகிறது. நிலத்தில் உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான பகுதிகளில் பயிரிடவும், மகசூலைத் தங்கள் விருப்பம்போல் விற்று விடவும் அனுமதிக்கப்படுகிருர்கள். இதற்கு மாருக, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற மிகக் குறைவான திட்டமுள்ள நாடுகளில் அன்னியப் பொறியாக்கப் பொருள்கள் (manufactures) மீது கடுமையான வரிகளை விதிக்கும் சுங்கவரித் திட்டமும், பொது வசதித் தொழில்களும் (public utility services), கட்டுப்படுத்தப் பட்ட பாங்கித் தொழில் அமைப்பும் உள்ளன. நியூ டீல் (New Deal) எனப்படுவதில் விவசாய உற்பத்தியும் மார்க்கெட்டிங்கும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. டென்னெஸ்ஸி பள்ளத்தாக்குத் திட்டம் (Tennessee Valley Authority) தேசீயத் திட்டத்தில் ஒரு பெரிய பரிசோதனையாகும்.

இரண்டாவதாகத் திட்டமிடுதல் என்பது உற்பத்திச் சாதனங் களையும், பங்கீட்டையும், பரிவர்த்தனையை (exchange) யும் பொதுவுடைமையாக்க வேண்டுமென்பதாகாது. செயல்முறையில் அது நூற்றுக்கு நூறு பொதுவுடைமையாக்குதல் என்றிருக்கலாம்,

அல்லது அது இறுதியாக அவ்வாறு போய் முடியலாம். ஆனால், திட்டமிடுதல் என்பது முக்கியமாக எதைக் குறிக்கின்றதென்றால், தேவை (demand) யைப் பொதுவுடைமையாக்குதல், அரசாங்க அதிகாரிகள் எதை, எங்கு, எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிர்ணயித்தல் ஆகிய இரண்டையும்தான். திட்டமிடுதலினால், தாங்கள் தொழிலாளர்களையும் நுகர்வோரையும் வஞ்சித்து இலாபம் சம்பாதிப்பதற்குரிய வாய்ப்பையெல்லாம் இழந்துவிடவேண்டிவருமே என்ற அச்சத்தினால் முதலாளிகளும் தொழிலதிபர்களும் தங்களுடைய சொந்தப் பாணியில் 'பொருளாதாரத் திட்டமிடத் திடீரென்று ஆவல்கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் ஆதரவில் பல நிபுணர்கள் வெளியிட்ட அறிக்கைகள் உள்பட, இக் காலத்தில் இதைப்பற்றி ஏராளமான இலக்கியம் வெளியாகியுள்ளது. செயல் முறையில் இக் காலத்தில் அகில உலக ரீதியில் திட்டமிட வேண்டுமென்பதற்குச் சான்றாக, 1949 ஜனவரியில் ஜனாதிபதி ட்ரூமன் தமது தொடக்கப் பேருரையில் கூறிய 'நான்கு குறிப்புக்கள்' (Points Four) மார்ஷல் உதவித் திட்டத்தின்கீழ் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி, போதிய முன்னேற்றமற்ற நாடுகளுக்குக் கொழும்புத் திட்டம், உலக பாங்கியின் நடவடிக்கைகள், பன்னாட்டுப் பணவாக்க நிதி (International Monetary Fund) ஆகியவற்றைக் கூறலாம்.

நம் காலத்தில் ஒரு புதிய கட்டத்தையடைந்துள்ள வரலாற்றின் வளர்ச்சியில் பொருளாதாரத் திட்டமிடுதல் என்பது அளவை நூலுக்கொத்த ஒரு விளைவே. இக் கட்டம் யாதெனின், முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்துதல் அல்லது திட்டமிடுதல். கடந்த முப்பது ஆண்டுகளாக முதலாளித்துவம் அடைந்த கஷ்ட நஷ்டங்களின் இயற்கையான விளைவே இது. 'தலையிடாக் கொள்கையையுடைய முதலாளித்துவமானது தன்னிடத்துள்ள ஓர் இயற்கையான வளர்ச்சியால் சர்வாதீன முதலாளித்துவமாக மாறிவிட்டது'.[1] இது, பொருளாதார அமைப்பில் அரசாங்கமானது ஒரு விழிப்புள்ள வழிகாட்டும் சக்தியாகத் தலையிட வேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது. இந்த முறைதான் இப்பொழுது 'திட்டமிடுதல்' என்ற பெயரோடு நம்மிடையே வழங்கிவருகிறது. இவ்விதமான பொருளாதாரத் திட்டத்தை, முதலாளித்துவத்திற்குட்பட்ட சார்புத் திட்டம் (functional planning) என்று கூறலாம். இது நம் வாழ்க்கையில் அதிக மாறுதல்களை உண்டாக்கக்கூடிய புதிய அமைப்புக்குத்

[1] 'ஐந்தாண்டுத் திட்டத்தின் விமரிசனம்'—வாடியாவும் மர்ச்செண்டும் (1951) என்ற நூலையும், 'புதிய சமூகம்' (The New Society), கார், 2ஆம் அத்தியாயத்தையும் காண்க.

திட்டமிடும் அமைப்புந் நிட்டத்நினின்றும் (structural planning) வேறானது. ' முதலாளித்துவம் விரிவடைந்துகொண்டுவந்த காலத்தில், அதில் இயல்பாக இருந்த குறைபாடுகளும் முரண்பாடுகளும் புறக்கணித்துவிடத்தக்கவையாய் இருந்தன. ஆனால், ஒருசிலரது ஆட்சிக்குட்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையில் அரசியல் ஜனநாயகமானது அரசாங்கத் தலையீட்டை அதிகப்படுத்தி, தலையிடாக் கொள்கையை உடைத்தெறிய வேண்டியதாயிற்று '.[1]

' படிப்படியான வரி விதிப்பினாலும், பொதுநல ஈட்டுறுதி (social insurance) யினாலும் மட்டும் பொருளாதார சமத்துவத்தை உண்டாக்கவேண்டுமென்ற விருப்பம் நிறைவேறாது என்பதை எளிதில் உணரலாம். அரசாங்கத் தலையீடு அதிகமாகவேண்டுமென்ற பொதுவான போக்கை வலியுறுத்தக் கூடிய சக்திகளாலும், பெரும்பாலோர் வறுமையில் ஆழ்ந்திருக்கும் ஒரு நாட்டில் வருமானப் பங்கீடு அடியிலிருந்து மேல்நோக்கிக் குறைவதாலும் (pyramidal distribution of income) சர்வ ஜன வாக்குரிமையால் தலையிடாக் கொள்கை சிறிது சிறிதாக, ஆனால், நிச்சயமாகக் கைவிடப்படும் என்பதில் வியப்பேது? தேக்கத்தை (stagnation) யும், பெருவாரி வேலையின்மையையும், மற்றும் பல தீங்குகளையும், மாறிமாறி வரும் நெருக்கடி காலங்களில் உண்டாகிவரும் முதலாளித்துவப் பொருளாதாரமானது இவற்றால் மனம் முறிந்துவிடுவதும் இப் போக்கை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு நாடும் தன் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்திச் சர்வதேச சக்திகளின் தீய விளைவுகளினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு முயற்சி செய்வதால், அது பாதுகாப்பை (protection) நாடும்போதும், சுயவுரிமைப் போக்கைக் காட்டும் போதும் இத் துன்பங்கள் அதிகமாகின்றன. இரண்டாவது உலகப் பெரும்போரும், அதன் பிறகு அது உண்டாக்கிய விளைவுகளும் இனி எப்பொழுதும் மந்தநிலை (depression) உண்டாகலாம் என்ற அச்சமும், மக்கள் விரும்பாவிட்டாலும் பொருளாதாரத் திட்டமிடுதலை மேலும் மேலும் தவிர்க்க முடியாததாக்கிவிட்டன '.[2]

[1] முதலில் கூறிய நூலைக் காண்க. (பக். 11 - 12).

[2] முதலாளித்துவமோ, சோஷலிஸமோ, சமூகத்தின் பொருளாதார அமைப்பில் சமத்துவமோ, மக்களிடையே சமத்துவமின்மையோ இலட்சியங்களாக இருக்க முடியாதென்பதைக் கூற வேண்டுமா? இவையும், சமூக வாழ்வின் எல்லா வகைளும், நிலையங்களும், அவற்றில் வாழும் தனிப்பட்டவர்களின் நல்வாழ்க்கைக்கு எப்படி உதவுகின்றன என்பதைப் பொறுத்தே மதிப்பிடப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனின் உயிரும் ஒரே மாதிரி மதிப்புடையது என்பதால் எல்லாரும் ஒரே மாதிரி ஆற்றல் உடையவர்கள் என்று பொருளாகாது. அவர்கள் வெவ்வேறளவு ஆற்றல் உடையவர்கள் என்பதால், அவர்கள் சம மதிப்புடையவர்கள் என்ற உண்மையும் மாறிவிடாது

யுத்தப் பிற்காலப் பொருளாதாரக் கோட்பாடானது திட்ட அடிப்படையில் அமையவேண்டுமென்பது ஓர் அடிப்படை உண்மையாகிவிட்டது.

பின்தங்கிய அல்லது வளர்ச்சியடையாத மற்ற நாடுகளில் போலவே நம் நாட்டிலும் திட்டமிடுவதின் அவசியம் அதிகமாக உள்ளது. ஏனெனின், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும், நம்முடைய கோடிக்கணக்கான மக்களுக்குப் போதிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை அளிப்பதற்காகவும், நம் சாதனங்களையெல்லாம் பெருக்கவேண்டிய நிலை உண்டாகியிருக்கிறது. அரசாங்கம் எப்படிப்பட்டதாயினும், இவ் விஷயத்தில் தன் பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.[1] நாம் சுதந்திரம் பெற்றவுடன் பண்டித நேரு அவர்கள் திட்டமிடுதல் என்ற 'பாட்டைக்' கைவிட்டுக் 'கொள்கை' என்ற காரியத்தில் இறங்க வேண்டும் என்று கூறியபோதிலும், ஒரு திட்டக் குழுவை நியமிக்க வேண்டிய நிலைக்கு அவரைச் சந்தர்ப்பங்கள் வற்புறுத்தின. அக் குழு தயாரித்த முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951—56), மார்ச் 1956-ல் முடிவடைந்தது. இப்பொழுது நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

முதலாளித்துவம்

மேற்கு ஐரோப்பாவில் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் படிப்படியாக வளர்ந்து உருவாகிய சமூக, பொருளாதார முறையே முதலாளித்துவம் என்று சுருக்கமாகவும் சகஜமாகவும் கூறப்படுகிறது. தனிப்பட்டவர்கள் வெகுமதியும் தண்டனையும் அடைவதுபற்றி மக்கள் கொண்ட கருத்துக்களாலும், பிசியோகிராட்ஸ் (Physiocrats), ஆடம் ஸ்மித் (Adam Smith) என்பவர்களுடைய அறிவுரைகளாலும் இது உருவாயிற்று. பிற்கூறியவருடைய

[1] 'தன்னைவிட அதிகப் பணக்காரர்கள் இல்லாத உலகில் கிராமவாசி வாழ்ந்துகொண்டிருந்தபோது, யாரும் தனக்கு இன்னும் அதிகமாக வேண்டும் என்று கேட்கவில்லை. இப்பொழுது மேனாடுகளில் முதலாளித்துவத்தினால் உண்டாகிய அதிகச் செலவும், உயர்ந்த வாழ்க்கைத்தரமும் இந்த மனநிறைவை அடியோடு மாற்றிவிட்டன. ஏனெனின், இப்போது விவசாயி விரும்பும் வாழ்க்கைத்தர உயர்வை யடைவதற்கு விரைவான வழி இல்லை. ஆகையால், அவனுடைய மன முறிவு, அவனைப் பிறர்மீது பொருமை கொள்ளும்படி செய்கிறது. இது எந்த அமைதியான அரசாங்கத்திற்கும் தொல்லை கொடுப்பதாகும்' (ஆசியாவும் மேனாடுகளும், 1953, பக்கம் 32 - 33. மாரிஸ் ஸிங்கின் எழுதியது). 'எந்த மனிதனையும் ஒரு குறிப்பிட்ட அளவு உடல் நலமும், மன நலமும், முன்னேற்றமும் இன்றி விட்டுவைப்பது அறமாகாது என்று இப்பொழுது நினைக்க வேண்டும்' (ஜூலியன் ஹக்ஸ்லி எழுதிய 'புதிய பரிணாமம்'—'நமது வெளித்தோன்றிய நாகரிகம்' என்னும் நூலிலிருந்து, பக்கம் 260. 1947-ல், நியூயார்க்கில் ரூத் ஆன்ஷம் பதிப்பித்தது).

கோட்பாடுகள், நகராண்மைக் கழகங்கள் அல்லது கில்டுகளின் கட்டுப்பாடும் அரசாங்கத்தின் தலையீடும் தோற்றுப்போகும் என்பதை நிரூபிக்கவே தோன்றின. சென்ற நூற்றாண்டின் முதல் 75 ஆண்டுகளில் முதலாளித்துவம் மேனாடுகளின் செல்வத்தை மிகுதியாகப் பெருக்கிற்று என்பதிலும், கீழை நாடுகளைப் பலியிட்டு, வேகமாகப் பெருகிவரும் தங்கள் மக்கள் தொகையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திற்று என்பதிலும் ஐயமில்லை. பொருளாதார அமிசத்தைப் பொறுத்தவரையில், முதலாளித்துவம் என்பது ஒரு கடிகாரத்தையோ குடையையோ தன் உடைமையாக வைத்திருப்பவனுக்கு அதில் எந்த அளவுக்குப் பொறுப்பு உண்டோ, அதே போல, நிலத்தையும் மற்ற உற்பத்தி சாதனங்களையும் ஒரு சிறு கூட்டத்தார் தம் உடைமையாக்கிக் கொண்டுள்ள தொழில் வளர்ச்சி நிலையைக் குறிக்கும். அன்றியும், அந்த நிலையில் அவற்றைத் தம் உடைமையாக்கிக் கொண்டிருப்பவர்கள், தேசத்தின் உயிர் போன்ற பண்டங்களின் உற்பத்தியையும் பங்கீட்டையும் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொண்டிருப்பது மட்டுமன்றி, சமூகத்திலுள்ள மற்றவர்களின் பிழைப்பையே கட்டுப்படுத்துகிறார்கள். முதலாளித்துவம் ஒரு பொருளாதார முறை மட்டும் அன்று. அரசியல் துறையில் அது 'தலையிடாக்' கோட்பாட்டை ஆதரிக்கிறது. சமூகத்தில் பண்டங்களின் பயன்பாட்டிற்கு அது இலாபத்தையே அளவுகோலாகக் கொண்டிருக்கிறது. (அதாவது சமூகத்திற்குப் பயன்படும் பண்டங்கள் தனக்கு இலாபம் தருமானால் அவற்றை உற்பத்தி செய்யும்; இல்லாவிட்டால் செய்யாது). முதலாளித்துவத்தில் அடங்கியுள்ள மக்கள் வாழ்க்கைத் தத்துவத்தைப்பற்றிப் பின்வரும் உதாரணத்தால் அறியலாம். ஒரு மாணவனைப் பார்த்து, 'ஒரு துணி ஆலையின் பயன் என்ன ?' என்று கேட்டபோது, அவன் 'பங்குதார்களுக்கு இலாபம் பெற்றுத் தருவது' என்று கூறினான்.

19ஆம் நூற்றாண்டின் முக்கிய தத்துவம், ஒவ்வொரு மனிதனும் தனக்கு நன்மை எது என்பதைத் தானே உணரவல்லவன் என்றும், பரந்த போட்டிக்குட்பட்ட தனியார் சுவாதீன முறையில் உள்ள தடைகளால் அவன் பிறருக்கு அதிகத் தீங்கு செய்ய முடியாதென்றும் கருதியது. போட்டியினால் ஏற்படும் தடைகள் மறைந்து, போட்டியிடுபவர்களுக்குப் பதிலாகக் குழு அமைப்புக்கள் (group organisation) தோன்றிப் பெருவாரி உற்பத்திசெய்யும் இந்தக் காலத்தில்கூட இத்தகைய பொறுப்பற்ற சுயநல மனப்பான்மை அழியாமல் இருக்கிறது.

150 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்தியாவிலிருந்த நாம் முதலாளித்துவப் பொருளாதார முறையை

வாரிசுரிமையாகப் பெற்றிருக்கிறோம். அதனோடு, அதில் காணப்படும் மிகக் கடுமையான குறைகளையும் பெற்றிருக்கிறோம். அக் குறைகள் என்னவென்றால், சமூக வருமானத்தில் மிகப் பெரும்பகுதி பணக்காரர்களுக்கே பங்கீடு செய்யப்படுவது, சிலருடைய கையிலேயே பணம் குவிந்து கிடப்பது, படிப்படியாக உயர்ந்துவரும் விலைகளுக்கேற்பக் கூலி உயராமலிருப்பது ஆகியவையே. முதலாளித்துவ உலகத்தின் மற்றப் பகுதிகளைப் பிடித்துக் கொண்டுள்ள நோய் நம்மையும் பிடித்துக்கொண்டிருக்கின்றது. சென்ற ஐம்பது ஆண்டுகளின், அதிலும் குறிப்பாகக் கடந்த பத்து ஆண்டுகளின் வரலாற்றுச் சான்றுகொண்டு பார்க்கும்போது, முதலாளித்துவ அமைப்பில் உள்ள பொறுப்பற்ற சுயநல மனப் பான்மை இன்னும் தலைதூக்கி நிற்பதால், நாம் திட்டமிடுதலில் காணப்படும் கட்டாயத் தன்மையை ஏற்கவேண்டும் அல்லது குழப்பத்தை வரவேற்கவேண்டும்.

யுத்தப் பிற்கால உலகமானது திட்டமிடும் உலகமாக உள்ளது. தொழில் தொகுப்பின் (industrial combination) வளர்ச்சியும், பங்கு தார்களுக்கும் நுகர்வோருக்கும் தலைவர்களாக உள்ள ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் பொருளாதார டைரக்டர்கள் என்னும் ஒரு ஜாதியின் வளர்ச்சியும், ஒரு சிலருடைய ஆட்சியில் அதிகாரத்தை எல்லாம் குவித்துவைத்துவிட்டன. இந்தச் சிலர் இலாபம் என்னும் தெய்வத்திற்கன்றி வேறு யாருக்கும் கட்டுப்படாதவர்கள். இவை யாவரும் அறிந்த உண்மைகள். முதலாளித்துவ அமைப்பானது மக்கள் இனத்தின் மதிப்பைத் தாழ்த்திவிட்டது. அது தொழிலாளர் மார்க்கெட்டில் மக்களைப் பண்டங்களாக மாற்றி, மத்திய காலக் கைவினைஞர்களை மார்க்கெட்டில் விற்கப்படும் இயந்திர மனிதர்களாகச் செய்து, அவர்கள் தங்களுடைய உழைப்பை விற்று, என்றும் பாதுகாப்பற்ற நிலையில் வேலை செய்யுமாறு வற்புறுத்தி விட்டது. இதுவும் யாவரும் அறிந்த உண்மையே. ஆகையால், என்ன செய்வதென்று அறியாத மக்கள் சர்வாதிகாரப் பொருளா தாரத்தினிடம் நிவாரணம் பெறலாயினர். அதில் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றை அரசாங்கம் கட்டுப்படுத்தி, எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும்; உற்பத்திப் பொருள்களை எப்படிப் பங்கீடு செய்யவேண்டும்; விலைத்திட்டம் எப்படி அமையவேண்டும்; எவ்வளவு கூலி கொடுக்கவேண்டும்; எந்த இடத்தில் வேலை செய்யவேண்டும்; வேலையாள் எந்தவிதமான வேலை செய்ய வேண்டும் என்னும் விஷயங்களையெல்லாம் ஒரு மத்திய அதிகாரக் குழுவினிடம் ஒப்படைத்திருக்கும்.[1]

[1] 'ஐந்தாண்டுத் திட்டத்தின் விமரிசனம்' என்னும் நூலிலிருந்து இவை எடுக்கப்பட்டன (பக்கம். 1 - 4).

இந்தியாவில் திட்டமிடுதல்

கடந்த முப்பது ஆண்டுகளில் மேனுடுகளின் வரலாற்றில் வெவ்வேறு விதமான பொருளாதாரத் திட்டங்கள் வகுப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பாசிசம் (Fascism), நாசிசம் (Nazism), கம்யூனிசம் (Communism), அமெரிக்காவின் நியூ டீல் (New Deal), இங்கிலாந்திலுள்ள ஜனநாயகத் திட்டம் எனப்படும் மிகச் சிக்கலான பொருளாதாரச் சட்டம் முதலியன காணப்படுகின்றன. சர் எம். விஸ்வேஸ்வரையா தான் முதன் முதலில் 'இந்தியாவிற்குத் திட்டமிட்ட பொருளாதாரம்' என்னும் தமது நூலில் (1934), திட்ட அடிப்படையில் இந்தியாவின் பொருளாதாரம் அமையவேண்டும் என்று கூறினர். அது உண்மையில் அப்பொழுதிருந்த பொருளாதார அமைப்பிற்குள் திட்டமிடுதலைப் பற்றியே கூறியது எனினும், அதுதான் முதன் முதலில் திட்டமிடுவதற்கு உருப்படியான யோசனையாகையால் அதில் கவனம் செலுத்துவது தகும். பிறகு 1938-ல் இந்தியத் தேசியக் காங்கிரசின் தலைவராகிய சுபாஸ் சந்திரபோஸ், பண்டித ஜவஹர்லால் நேருவைத் தலைவராகவும், பேராசிரியர் கே. டி. ஷாவைப் பொதுச் செயலாளராகவும் கொண்ட ஒரு தேசீயத் திட்டக் குழுவை அமைத்தார். அக் குழுவின் வேலை, இந்தியாவிற்கு ஒரு விரிவான பொருளாதாரத் திட்டத்தை அமைப்பதே. அக் குழுவில் பல துறைகளைச் சார்ந்தவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார்கள். அதில் பதினைந்து அங்கத்தினர்கள் இருந்தனர். அது தவிர, மாகாண அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். பூர்வாங்க வேலை செய்வதற்காக, விசேஷத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன. அரசியல் கிளர்ச்சியினுல் அதன் வேலை தடைபட்டது. 1940-45-ல் அதன் வேலை அநேகமாக நின்றுவிட்டது. பேராசிரியர் கே. டி. ஷாவின் யோசனைப்படி அக் குழுக்களின் அறிக்கைகள் தயார்செய்யப்பட்டன. இவற்றைப் பரிசீலித்து ஒப்புக்கொள்வதற்குத் தேசீயத் திட்டக் குழுவினுல் இயலவில்லை. கே. டி. ஷாவே இவ்வறிக்கைகளை வெளியிட்டார். இவை மிகவும் பயனுள்ள குறிப்புக்களைக் கொண்டிருந்ததால் இராச்சிய அரசாங்கங்கள் தங்கள் விரிவான திட்டங்களுக்கு இவற்றை அடிப்படையாகக் கொண்டன.

ஜூன் 1941-ல் இந்திய அரசாங்கமானது வர்த்தக அமைச்சரின் தலைமையில் ஓர் அதிகாரமிக்க குழுவை நியமித்தது. முன்னேற்றத் திட்டங்கள் தயாரித்து உதவுவதற்காக, உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் அடங்கிய பல துணைக் குழுக்கள் இதற்கு உதவியாக நியமிக்கப்பட்டன. பிறகு, இதற்குப்

பதிலாக ஒரு புனரமைப்புக் (Reconstruction) குழு அமைக்கப் பட்டது. அதற்கு வைஸ்ராயே தலைவராகவும், இந்திய அரசாங்க அமைச்சர்களே உறுப்பினர்களாகவும் இருந்தனர். இதை அடுத்து 1944 ஜூன் 1-ல் திட்டத்திற்கும் முன்னேற்றத்திற்குமான ஓர் இலாகா (Planning and Development Department) ஏற்படுத்தப் பட்டது. அது சர். அர்தேஷிர் டலால் என்னும் அமைச்சருடைய பொறுப்பில் இருந்தது. இவர், இந்தியாவின் எட்டுப் பெரிய முதலாளிகளும் தொழிலதிபர்களும் சேர்ந்து தயாரித்த பம்பாய்த் திட்டம் (Bombay Plan) என்பதில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவர். பிறகு மாகாண அரசாங்கங்கள் தங்களுக்குரிய திட்ட அமைப்புக்களையும் ஐந்தாண்டுத் திட்டங்களையும் தயாரிக்கும்படி தூண்டப் பட்டன. இந்தத் திட்டங்களும், மத்திய அரசாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவினுலும் தயாரிக்கப்பட்ட திட்டங்களும், திட்டத்திற்கும் முன்னேற்றத்திற்குமான இலாகாவிலுள்ள நிபுணர்களால் இணைக் கப்படும். மாகாண அரசாங்கங்களைப் பொறுத்தவரையில் அவை கிராமப் புனரமைப்புச் செய்வதையும், இராணுவ ஆள் சேர்ப்புக்குத் தாராளமாக முன்வந்த கிராமங்களுக்கு உதவுவதையும் நோக்க மாகக்கொண்டிருந்தன. இவ்வாறுதான் பம்பாய் அரசாங்கமானது, 'பம்பாயின் கிராமப்புறங்களினுடைய எதிர்காலத் திட்டம்' என்ற சிறு நூலை வெளியிட்டது. இதில் அறுபது கோடி ரூபாய் செலவிடு வதற்குரிய யோசனை கூறப்பட்டிருந்தது. 'யுத்தப் பிற்காலப் புனரமைப்பு' என்ற பெயரில் வெளியிடப்பட்ட மற்றொரு சிறு நூலில் இத் திட்டத்தின் விவரங்கள் எல்லாம் கூறப்பட்டிருந்தன. இதுவே மற்ற மாகாணங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. இவை அரசாங்கத் துறைக்கும் சமூகப் பணிகளுக்கும் செலவிடப்பட வேண்டிய மதிப்பீட்டுத் தொகைகளை மட்டும் குறிப்பிட்டிருந்தன. இவை குறிக்கோள்களைத் தெளிவாகக் கூருமலும், இணைப்பாக வேலைசெய்வதற்கு வழி கூருமலும் விட்டுவிட்டன. இவை பெரும் பாலும், யுத்தப் பிற்காலத்தில் உடனடியாகத் தோன்றக்கூடிய பணவாட்டத்திற்கு (deflation) மாற்ருகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களே. ஊன்றிய நலமிகளே (vested interests) இந்தக் கூக் குரலைக் கிளப்பினுர்கள். ஆகையால், இந்த அரைகுறைத் திட்டங்கள் எல்லாம் திட்டங்கள் என்று அழைக்கப்படுவதற்கே தகுதியற்றவை.

நிபுணர்களின் உதவிகொண்டு தன்னுடைய இலாகாக்களின் மூலமாக அரசாங்கம் பல அறிக்கைகளைத் தயாரித்தது. இவற்றுள் முக்கியமானவை, டாக்டர் ஹோவார்டு தயாரித்த 'இந்தியாவின் காடுகள்பற்றிய யுத்தப் பிற்காலக் கொள்கை', டாக்டர் பர்ன்ஸ் தயாரித்த 'இந்தியாவில் விவசாய முன்னேற்றத்திற்கான தொழில் நுண்ணியல் சாத்தியக் கூறுகள்', B. P. அதர்க்கார்

தயாரித்த 'தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களுக்கு உடல்நல இன்ஷூரன்சுபற்றிய அறிக்கை' என்பவையும், 'இந்திய மீன் நிலையங்களின் யுத்தப் பிற்கால முன்னேற்றம்', 'யுத்தப் பிற் காலத்தில் இந்தியப் பணக் கொள்கை', 'யுத்தப் பிற்கால வியா பாரக் கொள்கை', 'தொழில்களைத் தலவரையறை செய்தல்' என்ற தலைப்புக்களில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகராகிய டாக்டர் கிரிகரி தயாரித்த குறிப்புக்களும், விவசாய முன்னேற்றம்பற்றியும், நீர்ப்பாசனத் திட்டங்கள்பற்றியும் கரேகாட் தயாரித்த அறிக்கைகளும் ஆகும். இவையன்றி நிபுணர் குழுக்கள் தயாரித்த அறிக்கைகளும் இருந்தன. அவை, 'விவசாயக் கடன்' பற்றிய காட்கில் அறிக்கை, 'கூட்டுறவு' பற்றிய சாரயியாக் குழு (Sarayia Committee) அறிக்கை, 'விவசாயப் பொருள்களின் விலைகளை நிலைபேருக்கல்' (Stabilisation) பற்றிய கிருஷ்ண மாச்சாரி குழு அறிக்கையும் ஆகும். மற்றும், புனரமைப்புக் குழுவும் புனரமைப்புத் திட்டத்தைப்பற்றிய அதன் முதல் அறிக்கையையும், இரண்டாம் அறிக்கையையும் வெளியிட்டிருந்தது. இறுதியாக இப் பட்டியலை, சார்ஜின்டு கல்வித் திட்டம், பொதுச் சுகாதாரத்தைப் பற்றிய போர் (Bhor) குழு அறிக்கை, தொழிலாளர்பற்றிய ரீஜ் (Rege) குழு அறிக்கை, போக்குவரத்தும் ரெயில்வே புனரமைப்பும் பற்றிய திட்டங்கள் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம்.

திட்டத்திற்கும் முன்னேற்றத்திற்குமான இலாகா, இராச்சிய அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்துத் தனிப்பட்ட அல்லது தொகுதியான தொழில்களை வளர்ப்பதற்குத் திட்டமிடுவதற்காக, அந்தந்தத் தொழில்களில் பழக்கமுள்ள உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களல்லாதவர்களும் அடங்கிய 31 குழுக்களை நிறுவியது. தொழில்களின் முன்னேற்றம், அவற்றை நிறுவுமிடம், அமைப்பு முறை, அரசாங்கக் கட்டுப்பாடு, ஒழுங்குபாடு ஆகிய வற்றைப்பற்றி அவை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்ய வேண்டும். 1945 ஏப்ரல் 23-ல் அந்த இலாகாவானது அரசாங்கத் தின் தொழிற் கொள்கைபற்றி ஓர் அறிக்கை விடுத்தது. அது பொதுநலத்தைக் கருதித் தொழில் முன்னேற்றத்தைக் கட்டுப் படுத்தித் திட்டமிடவேண்டியதின் அவசியத்தையும், அதற்காக ஆதரவும் உதவியும் அதிக அளவில் கொடுக்கப்படவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தியது. போதிய அளவு தனியார் மூல தனம் கிடைக்காமலிருந்தாலோ, தேசீய நலன் கருதி முன்னேற்றம் அவசியம் என்று கருதப்பட்டாலோ, அடிப்படைத் தொழில்கள் தேசீயமய மாக்கப்படும் என்று அது கூறியது. இந்தத் திட்டங்கள் எல்லாம் யுத்தப் பிற்காலப் புனரமைப்பு சம்பந்தமானவை. எனி னும், இவை துண்டு துண்டாகவும் தனித்தும் இருந்தாலும்,

முழுமையாகத் திட்டமிடவேண்டிய நோக்கற்றிருந்ததாலும் நம்முடைய அடிப்படைப் பிரச்சினைக்குச் சரியான தீர்வாகக் கொள்ள முடியாது.[1]

பதினைந்து ஆண்டுகளுக்குள், இப்பொழுதுள்ளதைப்போன்ற தலா வருமானத்தை (per capita income) இரண்டு மடங்காக்கு வதையும், ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ஜனத்தொகை அதிகரிப்பதாகக் கொண்டு, மொத்த நாட்டு வருமானத்தை (national income) மும்மடங்காக்குவதையும் நோக்கமாகக் கொண்டு நம் நாட்டில் உள்ள பெருந் தொழிலதிபர்கள் மேனுடுகளில் உள்ள தங்கள் தோழர்களைப்போல, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பத்தாயிரம் கோடி ரூபாய்த் திட்டமொன்றைக் கொண்டு வந்தார்கள். இத் திட்டம் 'பொருளாதாரக் கணிதத்தில் ஒரு பயிற்சி' என்றும், 'வெறும் நோக்கங்களை மட்டும் கூறுவது' என்றும் விமரிசனம் செய்யப்பட்டுள்ளது.[2] M. N. ராய் அவர்களின் அடிப்படை ஜனநாயகக் கட்சியானது 'மக்கள் திட்டம்' ஒன்றை வெளியிட்டது. அதில் உணவு, உடை, உறையுள், உடல்நலம், கல்வி ஆகிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தோடு பத்தாண்டுகளில் ரூ. 15,000 கோடி முதலீடு செய்யப்படவேண்டுமென்று யோசனை கூறப்பட்டது. இந்தத் திட்ட உற்பத்தி காலத்தில் திரு. அகர்வாலின் 'காந்தீயத் திட்டம்', சர். எம். விஸ்வேஸ்வரையாவின் 'யுத்தப் பிற்கால இந்தியாவின் புனரமைப்பு', G. D. பிர்லாவின் 'ஐந்தாண்டுகளின் திட்டம்' முதலியவை தோன்றியதையும் குறிப்பிடலாம். இவை பம்பாய்த் திட்டத்தைவிடக் குறைவான குறிக்கோள்களையுடையவை.

1946ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சர் அர்தேஷிர் டலால் ராஜினமா செய்தவுடன் திட்டத்திற்கும் முன்னேற்றத்திற்குமான இலாகா ஒழிக்கப்பட்டுவிட்டது. 1946-ல் பண்டித ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாகி மத்திய அரசாங்கம் மாற்றியமைக்கப்பட்ட போது, அக்டோபர் 1946-ல் K. C. நியோகி தலைமையில் ஒரு

[1] N. V. சொவாணி எழுதிய இந்தியாவில் யுத்தப் பிற்காலப் பொருளாதார முன்னேற்றம்' (1951) என்ற நூலுக்கு D R. காட்கில் எழுதிய முன்னுரையில், 'இராச்சிய, மத்திய அரசாங்கங்களின் மொத்தச் செலவிற்கான ஒரு இணைப்பான திட்டத்தைத் தயாரித்தும், பொதுச் சாதன வசதி நிலைக்குத் தக்கவாறு அமைத்தும் மத்திய அரசாங்கத்தார் ஒரு முழு முயற்சியைச் செய்து, இந்த இராச்சியத் திட்டங்களின் திட்டமற்ற தன்மையைப் போக்கியிருக்கலாம்' என்கிருர் (பக்கம் 9).

[2] முற்கூறிய புத்தகத்தில் ஹாரிஸ் கூறியது [பக். 230]. 'பம்பாய்த் திட்டம் பற்றிய விமரிசனம்' என்ற நூலில் (1946) நம் கருத்துக்களைக் காண்க.

ஆலோசனைத் திட்டக் குழு அமைக்கப்பட்டது. இதன் வேலை, அராங்கம் அதுவரையில் செய்திருந்த திட்டங்களைப் பரிசீலனை செய்வதும், காங்கிரஸ் அமைத்திருந்த தேசியத் திட்டக் குழுவின் வேலையைப் பரிசீலனை செய்வதும், மற்றத் திட்டங்களை ஆராய்வதும், குறிக்கோள்களையும் வரிசைக் கிரமங்களையும் பற்றி (priorities) ஆலோசனை கூறுவதும், எதிர் காலத்தில் திட்டமிடுவதற்கான அமைப்பைப்பற்றி ஆலோசனை கூறுவதும் ஆகும்.

இந்த ஆலோசனைத் திட்டக் குழு (Advisory Planning Board) 1946 இறுதியில் வெளியிட்ட அறிக்கையில், பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், எல்லோருக்கும் பயன் தரும் வேலை கிடைக்கும்படி செய்வதையும் குறிக்கோள்களாகக் கூறியது. நாட்டின் சாதனங்களை முடிந்த அளவுக்கு முன்னேற்றவேண்டுமென்றும், இப்படி உற்பத்தி செய்யப்பட்ட செல்வத்தை நியாயமாகப் பங்கீடு செய்யவேண்டுமென்றும் அது கூறியது. ஆனால், அக் குழு குறிக்கோள்களைக் (targets) கூற மறுத்துவிட்டது. 'முன்கூட்டி நிர்ணயம் செய்யப்பட்ட அளவுக்குத் தலா வருமானத்தை அதிகரிக்கக் கூடிய முறையில் திட்டங்களிடுவதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும் இந்தியாவில் நமக்கு இப்பொழுது போதிய விஷய ஞானமோ, புள்ளியியல் (statistical) தகவல்களோ இல்லை; அன்றியும், பொருளாதார நடவடிக்கைகள்மீது நமக்குப் போதிய விரிவான அதிகாரமும் இல்லை. இந்த உண்மையை நாம் ஒளிமறைவின்றி ஒத்துக்கொள்ளவேண்டியதுதான்.[1] வரிசைக் கிரமங்களைப் பொறுத்தவரையில், பாதுகாப்புத் தொழில்களுக்கும், முதன்மையான தேவைகளாகிய உணவு, உடை, குடியிருப்பு, நிலக்கரி, போக்குவரத்து ஆகியவைகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படும்.[2] நீர்ப்பாசனம், நீர்மின்சார சக்தி, இரும்பு-எஃகு, ரசாயனப் பொருள்கள் ஆகியவையும் முதன்மையானவையே. மத்திய அரசாங்க ஆதரவில் ஒரு முழு நேர நிபுணர்களடங்கிய திட்டக் குழு அமைக்கப் படவேண்டுமென்று அக் குழு யோசனை கூறியது. மேலும், அதற்கு ஆலோசனை கூறுவதற்கு ஒரு குழுவும், ஒரு மத்தியப் புள்ளியியல் அலுவலகமும், ஒரு நிலையான சுங்கவரிக் குழுவும், ஒரு வரிசைக்

[1] ஆலோசனைத் திட்டக் குழுவின் அறிக்கை (ஜூன் 1947, பக். 4).

[2] வாழ்க்கைத் தேவைகளைப் போதிய அளவு அளித்து வாழ்க்கை வசதியை முன்னேற்றுவதும், பாதுகாப்புக்குச் செலவிடுவதும் ஆகிய முரண்பட்ட இவ்விரண்டினுள் எதற்கு முதன்மையளிப்பது என்ற பிரச்சினைமீது பல தரப்பட்ட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இங்கிலாந்தும் நேட்டோ (NATO) நாடுகளும் (ஐரோப்பாவில்) பட்ட கஷ்டங்கள் நமக்கு இவ் விஷயத்தில் ஒரு பாடமாகும்.

கிரமங்கள் குழுவும் அமைக்கப்பட வேண்டுமென்றும் அது சிபாரிசு செய்தது.

ஆகஸ்டு 1947 ல் நம் நாடு பிரிக்கப்பட்டதால், திட்டமிடுவதை மீண்டும் முதலிலிருந்து தொடங்கவேண்டியதாயிற்று. 1935ஆம் ஆண்டின் சட்டப்படி மத்திய அரசாங்கத்திற்கும் இராச்சிய அரசாங்கங்களுக்கும் இடையே அதிகாரங்கள் பிரிக்கப்படவேண்டியது பற்றி இந்தியக் குடியரசின் புதிய அரசியல் அமைப்புக் கூறியது. அதன்படி, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு மத்தியப் பட்டியலில் மேலும் சில விஷயங்கள் சேர்க்கப்பட்டன.

1944-ல் அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கு வெகுகாலம் முன்பே, மத்திய அரசாங்கத்தின் கட்டளைப்படி, மாகாணங்கள் திட்டங்களைத் தயார் செய்திருந்தன. அவற்றிலிருந்த சில அமிசங்கள் ஓரளவு நிறைவேற்றப்பட்டிருந்தன. இவ்வாறே, மத்திய அரசாங்கமும் தன் திட்டங்களின் வேலையையும் தொடங்கி விட்டிருந்தது. இவ்வாறு, ஏற்கெனவே வேலை தொடங்கப்பட்ட முக்கியமான திட்டங்கள், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம், துங்கபத்திரா திட்டம், பக்ரா அணைத் திட்டம் ஆகியவை.[1]

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியால் நியமிக்கப்பட்ட பொருளாதாரத் திட்டக் குழுவின் (Economic Programme Committee) ஜனவரி 1948 தேதியிட்ட அறிக்கை ஒரு முக்கியமான பத்திரமாகும். இது காங்கிரசிலுள்ள முற்போக்கும் தீவிரத் தன்மையும் பொருந்திய ஒரு பிரிவின் கருத்துக்களைக் கூறுவது. அதனுடைய சிபாரிசுகளை ஒரு விரிவான திட்டத்தின்மூலம் நிறைவேற்றி யிருந்தால் ஒரு சோஷலிச அமைப்புப் பாதையில் நாம் சென்றிருப்போம் என்பதில் ஐயமில்லை.

1948 ஏப்ரலில் இந்திய அரசாங்கம் தன் தொழிற் கொள்கையைப் பற்றிய தீர்மானம் ஒன்றை வெளியிட்டது. அரசாங்கத்தின் நோக்கமாவது, 'எல்லா மக்களுக்கும் நியாயமும், சரி சமமான

[1] இத் திட்டங்களின் விவரங்களை யறிவதற்குக் கீழ்க்கண்ட நூல்களைக் காண்க: 'தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளில் பொருளாதார முன்னேற்றம்', ஐக்கிய நாடுகள், 1947; 'மாகாண முன்னேற்றத் திட்டங்கள்', இந்திய அரசாங்கம், 1950; டாக்டர் கியான்சந்த் அறிக்கை; 'இந்தியாவில் யுத்தப் பிற்காலப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல்', N. V. சொவானி; 'ஆலோசனைத் திட்டக் குழுவின் அறிக்கை', 1947; 'இந்தியாவின் பொருளாதாரத் திட்டங்களைப்பற்றிய ஆராய்ச்சி', D. S. நாக், 1949 (இது எல்லாத் திட்டங்களையும்பற்றிச் சுருக்கமாகக் கூறும் ஒரு சிறு நூல்).

வாய்ப்புக்களும் கிடைக்கக்கூடிய ஒரு சோஷலிச அமைப்பை நிறுவுவதும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதும் ஆகும். உற்பத்திப் பெருக்கத்திற்காக ஓர் இயக்கநிலையுள்ள (dynamic) கொள்கை நடத்தி வைக்கப்படும். சிறிது காலம் வரையில் அரசாங்கமானது இப்போதுள்ள தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியும், மற்றத் துறைகளில் புதிய உற்பத்திப் பகுதிகள் (units) மீது கருத்தை நிறுத்தியும், நாட்டின் செல்வத்தை அதிகரிப்பதற்கு விரைவாக உதவ முடியும்; அரசாங்கம் ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும், அணுசக்தி உற்பத்தியையும், கட்டுப்பாட்டையும், ரெயில்வேக்களைச் சொந்தமாக்கி நிர்வகிப்பதையும் தம் சர்வாதீனத்திற்குள் வைத்துக்கொண்டிருக்கும். நிலக்கரி, இரும்பு, எஃகு, விமான உற்பத்தி, கப்பல் கட்டுதல், டெலிபோன், தந்தி, கம்பியில்லாத் தந்தி உற்பத்தி ஆகியவைகளில் புதிய தொழிலீடுபாடுகளுக்கு (undertakings) அரசாங்கமே முழுவதும் பொறுப்புடையதாகும். மற்றத் தொழில் துறைகள் தனியார் தொழில் துணிவுக்கு (private enterprise) விடப்படும். மோட்டார்கள், டிராக்டர்கள், மின்சாரப் பொறியியல், இயந்திரக் கருவிகள், கன ரசாயனப் பொருள்கள், பருத்தி, ரோம ஆலைகள், சிமெண்டு, சர்க்கரை முதலியவை ஒழுங்குபாடும் கட்டுப்பாடும் செய்யப்படும். குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் பெருந் தொழில்களோடு இணைக்கப்பட்டுவிடும். நம் நாட்டை விரைவாகத் தொழில்மயமாக்குவதற்கு அன்னிய மூலதனம் பயன்படுமாயினும், அது இந்தியத் தொழில்களில் பங்கு பெறுவதற்குரிய நிபந்தனைகள் ஜாக்கிரதையாக வரையறுக்கப்படவேண்டும். அத்தகைய தொழில்களில் பெரும் பகுதி உரிமையும் கட்டுப்பாடும் இந்தியர் கையில்தான் இருக்கும். இந்திய அரசாங்கத்தின் தொழிற் கொள்கையின் சுருக்கம் இதுதான். இது தனியார் தொழில் துணிவையும், அரசாங்கத் தொழில் துணிவையும் இணைக்கும் ஒரு முயற்சியாகும்.[1]

இராச்சிய அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் தீட்டிய திட்டங்கள் இணைக்கப்படாமலிருந்ததை உணர்ந்தும், ஏப்ரல் 1948-ன் தொழிற் கொள்கைத் தீர்மானத்தைத் தொடர்ந்தும், இந்திய அரசாங்கம் மார்ச் 1950-ல் பிரதம மந்திரியின் தலைமையில் ஒரு திட்டக் குழுவை நியமித்தது. இதன் வேலை, 'நம் நாட்டின் தொழில் சாதனங்கள், மூலதன சாதனங்கள், மனித சாதனங்கள் ஆகியவற்றை மதிப்பிடுவதும்', 'இந்த சாதனங்களைப் பயன் படுத்துவதற்கான மிக்க பயனுள்ள ஒரு திட்டத்தை உருவாக்கு

[1] முற்கூறிய 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விமரிசனம்' என்னும் நூல் (பக்கம். 7-8).

வதும்', வரிசைக் கிரமங்களைத் தீர்மானிப்பதும், திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கான நிலைமைகளைத் தீர்மானிப்பதும், முன்னேற்றத்தைக் கவனித்துக் கொள்கையில் சிறு மாறுதல்களைச் சிபாரிசு செய்வதும் ஆகும்.

இந்தக் குழு, நடைபெற்றுக்கொண்டிருந்த திட்டங்களையும் புதிய திட்டங்களையும் பரிசீலனை செய்து, 1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சுருக்கமான நகலை வெளியிட்டு, அதைப் பொது ஜன அபிப்பிராயத்திற்காக அனுப்பியது.[1] இதைப்பற்றி உண்டான விமரிசனத்தை நன்ருக ஆராய்ந்த பிறகு, 1953-ல் வெளியிடப்பட்ட இறுதியான முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் திட்டக் குழு தயாரித்தது. 1956 உடன் முடிவடையும் ஐந்தாண்டுக் காலத்திற்கு இத் திட்டம் உரியது. இதற்கிடையில், திட்டக் குழுவின் பொருளாதாரப் பிரிவு கூறிய ஒரு பரீட்சார்த்தமான அடிப்படைமீது நிறைய விவாதங்கள் நடத்திய பிறகு, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் சுருக்கம் அடுத்துள்ள பிற்சேர்க்கையில் காணப்படும்.[2]

பிற்சேர்க்கை

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் சுருக்கம்

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் பொதுக் கொள்கை யாதெனின், விரைவாகவும் சமன்செய்யப்பட்ட முறையிலும் பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதே. முதல் ஐந்தாண்டுத் திட்டமானது எதிர் காலத்தில் விரைவான முன்னேற்றத்தை உண்டாக்குவதற்காக மாறுதல்களைத் தொடங்குவதும், அடிப்படையில் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும் நோக்கமாகக்

[1] இந்த நகல் திட்டத்தைப்பற்றி நம் கருத்தையறிய, மேற்கூறிய நூலைப் பார்க்கவும்.

[2] 1950-ல் கொழும்பில் பிரிட்டிஷ் காமன்வெல்த் அரசாங்கங்களின் அயல் நாட்டு மந்திரிகள் அடங்கிய மகாநாடு ஒன்று கூடிக் கொழும்புத் திட்டம் எனப்படும் ஒரு திட்டத்தை உருவாக்கியது. இத் திட்டம் ஜூலை 1951-லிருந்து ஆருண்டுக் காலத்திற் குரியது. இதன் மொத்தச் செலவு 1,868,000,000 ஸ்டர்லிங்குகள். இதில் விவசாயம் அதிகமாக வற்புறுத்தப்பட்டது. இது இந்தியாவிற்கு ரூ. 1,840 கோடி அளிக்கும். முதல் மூன்று வருடங்களில் காமன்வெல்த் நாடுகள் 8,000,000 ஸ்டர்லிங்குகள் கொடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளே பெரும்பகுதி நிதியை ஏற்பாடு செய்யவேண்டும். இந்தக் கொழும்புத் திட்டத்தின் ஒரு முக்கியமான அமிசம் என்னவென்ருல், ஒரு காமன்வெல்த் தகவல் நிலைய (Bureau) மும், நுட்பத் தொழில் (technical) கூட்டுறவிற்கான ஒரு சபையும் நிறுவப்பட்டதுதான்.

கொண்டது. அத் திட்டத்தின் மூன்ருவது வருடத்திலிருந்து செலவு அதிகரிக்கப்பட்டது. பொதுத் துறையில் ரூ. 2,000 கோடி செலவிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக இந்த ஐந்தாண்டுகளில் உண்மையான தேசீய வருமானம் 18 சதவீதம் அதிகமாகும். இது தலா வருமானத்தில் 11 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கும். அறுபது இலட்சம் ஏக்கர் அதிகப்படியான நிலம் நீர்ப்பாசனம் பெற்றுள்ளது. ஒரு கோடி ஏக்கர் சிறிய நீர்ப்பாசனங்களால் நன்மையடைந்திருக்கிறது. பொதுத் துறையில் முக்கியமான தொழில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்படவேண்டிய தொழில் முன்னேற்றங்களுக்கு அடிப்படை போடப்பட்டுள்ளது. முதல் திட்ட காலத்தில் 1952-53-ல் இருந்த விலைகளின்படி சுமார் ரூ. 3,100 கோடி பணமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது தேசீய வருமானத்தில் சராசரி 6 சதவீத முதலீடு ஆகிறது.

உலகத்திலேயே இந்தியாவின் வாழ்க்கைத்தரம்தான் மிகவும் குறைந்தது. அவசியமான சத்துணவுக்குக் குறைவாகவே சராசரி உணவு உட்கொள்ளப்படுகிறது. குடியிருப்பு வசதி போதாது. ஜனத்தொகையில் பாதிப்பேர் நுகர் பொருள்களுக்காக (consumer goods) மாதம் சராசரி ரூ. 13 தான் செலவிட முடிகிறது. இப்போதுள்ள வாழ்க்கைத்தரம் குறையாமலிருப்பதற்குக்கூட, தேவையான சாதனங்களைக் கணக்கிடும்போது, ஆண்டுதோறும் ஜனத்தொகை 45 இலட்சம் முதல் 50 இலட்சம் வரையில் அதிகரித்துக்கொண்டு போவது ஒரு பெரும் பிரச்சினைதான். தொழிலாளர் தொகை அதிகரிப்பதற்கேற்ப வேலை வாய்ப்புக்கள் மிகுதியாக இல்லை.

ஜனத்தொகை வளர்ந்து வரும் வேகத்திற்கேற்பப் பொருளாதார முன்னேற்றம் இருக்கும் என்று கொண்டு (இது பத்தாண்டுகளுக்கு $12\frac{1}{2}$ சதவீதமாகும்) வருமானத்திற்கும் முதலீட்டுக்கும் உள்ள விகிதம் 1950–51 ல் இருந்த 5 சதவீதத்திலிருந்து 1968–69-ல் 20 சதவீதமாக உயருமென்றும் கொண்டு, 1977–78-க்குள் தலா வருமானம் இரண்டு மடங்காகுமென்றும், 1950–51 உடன் ஒப்பிடும்போது நுகர்வுத்தரம் (consumption standard) 70 சதவீதம் உயருமென்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஜனத்தொகை வளர்ச்சி விகிதம் அதிகமானுல் முன்னேற்ற முயற்சிகளின் விளைவு பாதகமாக இருக்கும். ஆகையால், ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது அவசியம். பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் வரப்போகும் ஆண்டுகளின் ஜனத்தொகை நெருக்கம் மிகவும்

கடுமையாகும் என்று தோன்றுகிறது. மூலதனத்திற்கும் உற்பத்திக்கும் உள்ள விகிதம் 1951–56-ல் இருந்த 1·8 : 1 என்பதிலிருந்து இரண்டாம் திட்ட காலத்தில் 2·3 : 1 என்றும், ஐந்தாம் திட்ட காலத்தில் 3·7 : 1 என்றும் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஐந்து திட்ட காலங்களில் உண்டாகும் முன்னேற்ற வேகத்தை 33ஆம் பக்கத்திலுள்ள அட்டவணை சுருக்கமாகக் காட்டுகிறது.

தேசீய வருமானம், முதலீடு, நுகர்வு ஆகியவற்றில் இந்த மாறுதல்கள் உண்டாவதற்குப் பின்னணியாகப் பொருளாதார நடவடிக்கையில் மிகப் பெரிய மாறுதல் ஏற்படும். தொழில் அமைப்பிலும் பெரிய மாறுதல் ஏற்படும். உழைக்கும் மக்களில் 70 சதவீதத்தினர் உழவும், அதன் சம்பந்தமான தொழில்களிலும் ஈடுபடுவர். முன்னேற்றத்தினுல், உழைப்பவர்களில் ஒரு பகுதி விவசாயத்திலிருந்து இரண்டாம்படி (secondary), மூன்ரும்படி (tertiary) வேலைகளுக்குச் செல்லவேண்டியிருக்கும். வேலையில் அமர்த்தப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏற்ப அதிக முதலீட்டை இதில் போட வேண்டும். நீண்ட கால நோக்கத்திற்கிணங்க, விவசாய உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகமாகாமல், குறைந்தபட்சம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சிறு தொழில்களில் அதிகமான பேர்களே வேலையில் அமர்த்துவதற்கு இடமில்லை. ஆகையால், புதிய வேலை வாய்ப்புக்களில் பெரும்பகுதி, சுரங்கத் தொழில், நவீனத் தொழில், கட்டட வேலை ஆகியவற்றில்தான் மூன்ரும்படி வேலை இருக்கும். 1975–76-க்குள்ளாக விவசாயத்தில் உள்ள மொத்தத் தொழிலாளர் விகிதம் சுமார் 60 சதவீதமாகக் குறையவேண்டும். இந்தத் தேவைகளுக்கேற்ப, அடுத்து வரும் திட்டங்களில் முதலீட்டின் அளவு சரிசெய்யப்படவேண்டும். இரண்டாம்படித் துறையில் முன்னேற்றங்கள் உண்டானுல் மூன்ரும்படித் தொழில்களில் அதிகத்தேவைகள் ஏற்படும்.

உண்மையான சாதனத்தேவைகளாகிய இயந்திரங்கள், தொழிலாளர் (திறம்பெற்ற தொழிலாளரும் நிர்வாகிகளும்), அமைப்புச் சாதனங்கள் (equipments) ஆகியவையும் போதுமான அளவு கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். உண்மையாகவும், நிதி முறையில் சமன்செய்யப்பட்டதுமான பொருளாதாரம் ஏற்பட வேண்டும். உற்பத்தி முறையில் உண்டாகும் பண வருவாயானது, நுகர்வுப் பண்டங்களுக்கு உள்ள தேவையும், அளிப்பும் (supply), சேமிப்பும், முதலீடும், வெளி நாடுகளின் வரவும், கொடுக்கப்பட்டவைகளும் (payments) சமன் செய்யப்படும் முறையில் இயங்கவேண்டும்.

1951—76-க்கு வருமானம், முதலீடு ஆகியவற்றின் வளர்ச்சி

(1952—53 விலைகள்படி)

	முதல் திட்டம் 1951—56	2 ஆம் திட்டம் 1956—61	3 ஆம் திட்டம 1961—66	4 ஆம் திட்டம் 1966—71	5 ஆம் திட்டம் 1971—76
1. கால இறுதியில் தேசீய வருமானம் ... (கோடி ரூபாயில்)	10,800	13,480	17,260	21,680	27,270
2. மொத்த நிகர முதலீடு ... (கோடி ரூபாயில்)	3,700	6,200	9,900	14,800	20,700
3. கால இறுதியில் தேசீய வருமானத்தின் சதவீதமான முதலீடு	7·3	10·7	13·7	16·0	17·0
4. கால இறுதியில் ஜனத்தொகை ... (கோடியில்)	38·4	40·8	43·4	46·5	50
5. அதிகமாகும் மூலதன உற்பத்தி விகிதம் ...	1·8 : 1	2·3 : 1	2·6 : 1	3·4 : 1	3·7 : 1
6. கால இறுதியில் தலா வருமானம் ... (ரூபாயில்)	281	331	396	466	545

ஆகையால், இன்னும் அதிகமான காலத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றங்களுக்கான திட்டத்தை மனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொரு ஐந்தாண்டுக் காலத்திலும் உண்டாகும் முன்னேற்றங்களும் முற்றிலும் சமன்செய்யப்பட வேண்டுமென்பதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மேலும் வேகமாகச் சமன்செய்யப்பட்ட முன்னேற்றம் வேண்டுமாயின், அதற்கு ஐந்தாண்டுக் கால முன்னேற்றங்கள் சமன்செய்யப்படாமலிருப்பது நல்லதுதான்.

ஆண்டுதோறும் திட்டங்கள் இடுவதற்கு ஏற்ற முறையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் விரிவான அமைப்போடு உள்ளது. இத் திட்டம் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடையது. புதிய தேவைகளுக்கு ஏற்பக் காலப் போக்கையும், திட்ட அமிசங்களைச் சரிசெய்ய வேண்டியதையும் கவனிக்க வேண்டும்.

அணுகும் முறை

இந்தியாவிற்கு ஒரு முற்போக்கான பொருளாதாரத்தின் அடிப்படையை இடுவதே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான நோக்கம். எதிர்காலத்தில் மிக விரைவான முன்னேற்றத்திற்கு அது ஒரு முன்னேற்பாடு. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், அதிக உற்பத்தியை மட்டுமன்றி, உற்பத்தி செய்வதற்கு அதிக சக்தியை உண்டாக்கி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது. அதன் குறிக்கோள்களாவன: (1) நாட்டு வருமானத்தில் கணிசமான அதிகரிப்பு; (2) விரைவாகத் தொழில் மயமாக்குதல்; (3) வேலை வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்; (4) வருமானத்திலும் செல்வத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்.

இந்தக் குறிக்கோள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இதற்கு இரும்பு, எஃகு, நிலக்கரி, சிமெண்டு, கன ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை மிக வேகமாகப் பெருக்க வேண்டும். அடிப்படைத் தொழில்களில் முதலீடு செய்வது நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யாது. நுகர்வில் சிறிது காலத்திற்கு நாம் தியாகம் செய்ய வேண்டியது அதற்கு இன்றியமையாதது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், வேலை வாய்ப்புக்களை உண்டாக்கி, விவசாயத்திலும் கிராமத் தொழில்களிலும் வேலைக் குறைவைப் (under employment) போக்கும்.

நம் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகிய சோஷலிச பாணி (socialist pattern) சமூகத்தை உண்டாக்குவதற்குப் பொதுத் துறை வேகமாக விரிவடைய வேண்டும். அதற்கு உற்பத்தி, பங்கீடு, நுகர்வு, முதலீடு ஆகியவை சமூக நோக்குடையவர்களால் செய்யப்படவேண்டும். தொழில் நுண்ணியல் காரணமாகப் பொருளாதாரச் சக்தியும் செல்வமும் ஒருசிலர் கையிலேயே திரளக் கூடிய போக்கைக் கொண்ட துறைகளில் பொதுவுடைமையும் பொதுக் கட்டுப்பாடும் முக்கியமாக வேண்டும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்தாண்டுகளுக்கு மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் மொத்தம் ரூ. 4,800 கோடி செலவிட உத்தேசித்துள்ளன. இதில் நீர்ப் பாசனமும் மின்சாரமும் 19 சதவீதமும், விவசாயம் 12 சதவீதமும், தொழில்களும் தாதுப் பொருள்களும் 19 சதவீதமும், போக்கு வரத்தும் தொடர்பு வசதிகளும் (communications) 29 சதவீதமும், குடியிருப்பு வசதியும் (housing) இடம் பெயர்ந்த மக்களை வாழ வைப்பதும் உட்படச் சமூகப் பணிகள் 20 சதவீதமும் பெறும். இந்தச் சதவீதங்கள் மாறுதல்களுக்கு உட்பட்டிருப்பினும், வரிசைக் கிரமத்தையும் பங்கீட்டு முறையையும் குறிக்கும். இந்தத் திட்டங் களின் விளைவாக நாட்டு வருமானம் 25 சதவீதம் உயரும். இந்த முன்னேற்றங்களுக்குப் பொதுத் துறையும் தனியார் துறையும் ஒத்துழைக்க வேண்டும்.

தொழில், பொருளாதாரக் கொள்கை

1948 ஆம் ஆண்டின் தொழில் கொள்கைத் தீர்மானம், அனுபவத்தின் பயனாகத் திருத்தப்படவேண்டியிருக்கிறது. தாதுப் பொருள்களின்மீது உரிமையும், அவற்றைப் பயன்படுத்தும் உரிமை யும் அரசாங்கத்தினிடம் இருக்கவேண்டும். தொழில் துறையில் அடிப்படையான மூலதனப் பொருள்களையும், கனமான இயந்திரங் களையும் உற்பத்தி செய்யும் புதிய பகுதிகள் (units) அரசாங்க உடைமையாக, அரசாங்கத்தின் நிருவாகத்தில் இருக்கவேண்டும். அரசாங்க உதவி பெறும் மற்றத் தொழில்களில் மாறாத வட்டி விகிதத்திற்குக் கடன் கொடுப்பதைவிட, அரசாங்கமானது அவை களுடன் சரி சமமான கூட்டாளியாக இருக்க முன்வர வேண்டும். குடிசைத் தொழில்களிலும் சிறு தொழில்களிலும் நவீன நுட்பவினை முறைகளும் (modern techniques) சமூகப் பட்டறைகளும் (community workshops) நிறுவப்பட வேண்டும். இந்தத் துறையைக் கூட்டுறவு முறையில் அமைப்பது அவசியம். அதனால் சிறு உற்பத்தியாளர்கள் கச்சாப் பொருள்களை அதிக அளவில்

வாங்கியும், உற்பத்திப் பொருள்களை அதிக அளவில் விற்றும் நன்மையடையலாம். அன்றியும், திருந்திய வழிகளையும், நுட்பவினை முறைகளையும் கடைப்பிடிக்கலாம். புது உற்பத்தி வழிகளும், புது நுட்பவினை முறைகளும் தொழில் பரவலாக்கப்பட்ட பகுதிகளில் (decentralised units) மேற்கொள்ளப்பட்டால், புதிய தேவைகள் (demands) ஏற்படுவதோடன்றித் தொழில் வியாபகம் அடைவதற்கும் முடியும். இதனால், சேரிகளில் ஏற்படும் சமூகச் செலவுகளும், பெரிய நகரங்களில் உள்ள சுகக்கேடும் தவிர்க்கப்படும்.

இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாதனங்களைத் திரட்டுவதற்கு வரிக் கொள்கைகளை உருவாக்குதலும், அதிகப்படி வரி விதித்தலும், கடன் வாங்கும் திட்டங்களை அதிகப்படுத்துதலும், பற்றுக்குறை நிதியாக்கமும் தேவைப்படும். முதல் திட்ட காலத்தில் கிராமங்களில் கடன் வசதியைப் பெருக்குவதற்காக இந்திய இம்பீரியல் பாங்கு அரசாங்க பாங்காக மாற்றப்பட்டது. நிருவாகப் பதிலாளி முறையைக் (managing agency system) குறைத்துவிட்டதால் உண்டாகும் இடத்தை நிரப்புவதற்குத் தொழில் நிதிக் கார்ப்பொரேஷனும் (Industrial Finance Corporation) தொழில்கடன் முதலீட்டுக் கார்ப்பொரேஷனும் (Industrial Credit and Investment Corporation) ஒரு புதிய வெளியீட்டு மார்க்கெட்டை (issue market) உருவாக்குவதில் பயன்படும். வரி அல்லது விலைக்கான தூண்டுகோல்களும் (incentives), அனுமதி வழங்கும் நடைமுறைகளும், அன்னியச் செலாவணிப் பங்கீடுகளும், மூலதன வெளியீட்டு அனுமதிகளும், லாப வரையறைகளும் உட்படப் பொருளாதாரக் கொள்கைகளையும் சமூகக் கொள்கைகளையும் இணைப்பது திட்ட முறையில் பிரச்சினைகளை அணுகுவதற்கு அவசியமாகும்.

பொருளாதார வளர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும், வருமானம், செல்வம் ஆகியவற்றில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது ஒரு முக்கிய அமிசமாகும். வரி விதிப்பு முறைகள் இதில் உதவக்கூடும். ஆனால், கீழ் நிலையில் உள்ளவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கும், பயிற்சி வசதிகளை யளிப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இறுதியாக, முன்னேற்றத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதனங்களைக் கொண்டே, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் சமன்செய்யப்பட்ட வளர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதாவது, பரவலாக்கப்பட்ட தொழில் உற்பத்தி, அதிக இடப்பெயர்ச்சி (mobility), அதிக ஜன நெருக்கமுள்ள இடங்களிலிருந்து குறைந்த ஜன நெருக்கமுள்ள இடங்களில் குடி பெயர்தல் ஆகியவற்றை உண்டாக்க வேண்டும்.

திட்டத்தின் மேற்போக்கான விவரம்

மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் மொத்த முன்னேற்றத் தொகையாகிய ரூ. 4,800 கோடி கீழ்வருமாறு அமையும் :

	முதல் திட்டத்தின் மொத்தத் தொகை	சதவீதம்	இரண்டாம் திட்டத்தின் மொத்தத் தொகை	சதவீதம்
1. விவசாயமும் சமூக முன்னேற்றமும் ...	357	15	568	12
2. நீர்ப் பாசனமும் வெள்ளக் கட்டுப்பாடும் ...	401	17	486	10
3. சக்தி ...	260	11	427	9
4. தொழில்களும் தாதுப் பொருள்களும் ...	179	7	890	18
5. போக்குவரத்தும் தொடர்பு வசதிகளும் ...	557	24	1385	29
6. சமூகப் பணிகள், குடியிருப்பு வசதி, இடம் பெயர்ந்தவர்களை வாழவைத்தல் ...	533	23	945	20
7. பலவகை ...	69	3	99	2
மொத்தம் ...	2,356	100	4,800	100

இந்தியப் பொருளாதாரம் பல கிளைகளாப் பிரிக்கப்பட்டு, அடிப்படைத் தொழில்கள், மூலதனப் பொருள் தொழில்கள் ஆகியவை முக்கியமாகக் கருதப்படவேண்டும். இருப்பினும், விவசாய உற்பத்தித்திறனை அதிகமாக்கும் முயற்சியைத் தளர்த்தலாகாது. ஏனெனின், ஒவ்வொரு வருடமும் ஜனத்தொகையில் 50 இலட்சம் அதிகமாகிறது. கிராமப் புனரமைப்பில் தேசீய விஸ்தரிப்பும் சமூக முன்னேற்றமும் முக்கிய இடம்பெறும். இரண்டாம் திட்டத்தில் இவற்றிற்கு உரிய முதலிடம் கொடுக்கப்படும்.

மொத்தம் ரூ. 4,800 கோடி செலவில், ரூ. 1,000 கோடி நடப்பு முன்னேற்றச் செலவைக் குறிக்கும். மீதி உற்பத்திச் சொத்துக்களை உருவாக்குவதற்கான செலவைக் குறிக்கும். இரண்டாம் திட்ட காலத்தில், தனியார் துறையில் சுமார் ரூ. 2,400 கோடி முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 575 கோடி நன்கு அமைக்கப்பட்ட தொழில்களிலும் சுரங்கத் தொழிலிலும் முதலீடு செய்யப்படும். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் வீடு கட்டுதல், கடைகள், பள்ளிக்கூடங்கள் முதலியவை கட்டுதல் ஆகிய இனத்தில் ரூ. 1,000 கோடி முதலீடு செய்யப்படும். பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொண்டால், இரண்டாம் திட்ட காலத்தில் முதலீடு ரூ. 6,200 கோடியாகும். (பொதுத் துறையில் ரூ. 3,800 கோடியும், தனியார் துறையில் ரூ. 2,400 கோடியும்.) ஆனால், முதல் திட்டத்திலோ, மொத்தம் ரூ. 3,100 கோடிதான் முதலீடு செய்யப்பட்டது. இரண்டாம் திட்டத்தில் தனியார் துறையில் முதலீடு 50 சதவீதம் அதிகமாகும். ரூ. 6,200 கோடி முதலீடு செய்யப்பட்டால், திட்ட முடிவிற்குள் தேசிய வருமானத்தில் இப்போதுள்ள 7 சதவீத முதலீடானது 10 சதவீத முதலீடாக உயரும். இதில் வெளியிலிருந்து கிடைக்கும் சாதனங்களும் அடங்கும்.

உற்பத்தியிலும் முன்னேற்றத்திலும் இரண்டாம் திட்ட காலத்தில் அடையவேண்டிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

	1955-56	1960-61
விவசாயம்		
உணவுத் தானியங்கள் (10 இலட்சம் டன்களில்)	65	75
பருத்தி (10 இலட்சம் பேல்களில்) ...	4·2	5·5
சணல் (10 இலட்சம் பேல்களில்) ...	4	5
நீர்ப்பாசனமும் சக்தியும்		
நீர்ப்பாசனம் பெற்ற பரப்பு (10 இலட்சம் ஏக்கரில்)	67	88
மின்சாரம் (10 இலட்சம் கிலோவாட்டுகளில்)	3·4	6·9
தாதுப் பொருள்கள்		
இரும்புத்தாது (10 இலட்சம் டன்களில்) ...	4·3	12·5
நிலக்கரி (10 இலட்சம் டன்களில்) ...	38	60

நாட்டு வருமானமானது 1955-56-ல் இருந்த ரூ. 10,800 கோடியிலிருந்து ரூ. 13,480 கோடியாக (25%) உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதிலிருந்து, 1960-61-ல் 18% தலா வருமானம் அதிகரிக்கும் என்றறியலாம். முதல் திட்ட காலத்தில் 11% தான் ஆதிகமாயிற்று; அதாவது ரூ. 251 .லிருந்து ரூ. 281-க்கு உயர்ந்தது. இரண்டாம் திட்ட காலத்தில் இது ரூ. 281-லிருந்து ரூ. 331 ஆகும்.

ரூ. 4,800 கோடிக்கான நிதி வசதிச் சாதனங்களின் மதிப்பீடு தாற்காலிகமாகக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

		கோடி ரூ.
1.	நடப்பு வருவாயிலிருந்து மீதம் ...	800
	(அ) 1955-56-ல் உள்ள வீதப்படி வரி விதிப்பு...	350
	(ஆ) அதிக வரி விதிப்பு ...	450
2.	பொது மக்களிடமிருந்து கடன் வாங்குதல் ...	1,200
	(அ) மார்க்கெட்டுக் கடன்கள் ...	700
	(ஆ) சிறு சேமிப்புக்கள் ...	500
3.	இதர பட்ஜட் மூலங்களிலிருந்து ...	400
	(அ) ரெயில்வே அளிக்கும் தொகை ...	150
	(ஆ) பிராவிடென்டு பண்டும், மற்ற டெபாசிட்டுக்களும் ...	250
4.	வெளி உதவி ...	800
5.	பற்றுக்குறை நிதியாக்கம் ...	1,200
6.	ஏற்பாடு செய்யப்படாத தொகை ...	400
	மொத்தம் ...	4,800

ஏற்பாடு செய்யப்படாத தொகையாகிய ரூ. 400 கோடி உள் நாட்டுச் சேமிப்பினுல் கிடைக்கவேண்டும். இத் திட்டத்தினுல் ஏற்படக்கூடிய நிதி சாதனக் கஷ்டம் நன்கு புலப்படும். உள்நாட்டுச் சாதனங்களை அதிகப்படுத்துவது மட்டும் அன்றி, வெளிநாட்டு உதவி கிடைக்காவிட்டால், அதைச் சரிக்கட்டுவதற்கும் தயாராய் இருக்கவேண்டும். முன்னேற்றத் திட்டங்களுக்கு வரிவருவாய் உருவத்தில் நாட்டு வருமானம் மீண்டும் அரசாங்கப் பொக்கிஷத்திற்கு அதிக விகிதத்தில் வரவேண்டியது அவசியம். இந்தியாவில் இந்த விகிதம் மிகக் குறைவாக உள்ளது. அதாவது 7%-க்குச் சிறிது அதிகம்.

நம் தேவைகளையும், உத்தேச சம்பாத்தியங்களையும் பூர்வாங்கமாக நோக்கும்போது, நடப்புக் கணக்கில் அயல்நாட்டுக் கொடுத்தல் நிலையில் அடுத்த திட்ட காலத்தைவிட ரூ. 1,100 கோடி அதிகம் பற்ருக்குறை உண்டாகுமென்று தெரிகிறது. இந்தப் பற்ருக்குறை வெளிநாட்டுச் சாதனங்களால்தான் சரிக்கட்டப்படவேண்டும். இதில் நிகரத் தனியார் அந்நிய முதலீடும், நம் நாட்டின் அந்நியச் செலாவணிக் காப்பு நிதியில் (Foreign exchange reserves) சேர்ந்துள்ள தொகையிலிருந்து எடுக்கப்படும் தொகையும் அடங்கும்.

பொதுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டுக்குமாகச் சேர்ந்து, இயந்திரங்கள், உலோகங்கள், அமைப்புச் சாதனங்கள் ஆகியவற்றின் உத்தேச இறக்குமதி ரூ. 2,150 கோடியாகும். சணல், தேயிலை, பருத்தித் துணிகள் ஆகியவற்றின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். திட்ட காலத்தில் ரூ. 100 கோடிக்குத் தனியார் மூலதனம் நிகரமாக வந்துசேரும் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். ரூ. 200 கோடி ஸ்டர்லிங் நிதி சேமிப்பிலிருந்து எடுக்கப்படும். அந்நியச் செலாவணியில் துண்டுவிழும் ரூ. 800 கோடியானது, வெளி உதவியாலும் நட்பு நாடுகளிலிருந்தும்தான் ஈடு செய்யப்பட வேண்டும். இந்த நிலையில், பணவீக்க நெருக்கடியைத் தலையெடுக்க வொட்டாமல் செய்வது மிகவும் முக்கியம்.

திட்டத்தின் வேலையளிப்பு அமிசம்

முதல் திட்ட காலத்தில் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உண்டான அதிகப்படி நடவடிக்கைகளின் காரணமாக, நேரடியாக 45 இலட்சம் மக்களுக்கு வேலை கிடைத்தது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நகரங்களில் செய்த மதிப்பீட்டின்படி, 1955-ன் இறுதியில், 25 இலட்சம் பேர் வேலை தேடிப் பெறுவார்கள் என்று தைரியமாகக் கூறலாம். அடுத்த ஐந்தாண்டுகளில் இது 38 இலட்சம் மேலும் அதிகரிக்கும்.

இரண்டாம் திட்ட காலத்தில் ஏற்படக்கூடிய வேலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(பத்து இலட்சத்தில்)

	நகரங்களில்	கிராமங்களில்	மொத்தம்
தொழிலாளர் தொகையில் புதிதாகச் சேருவோருக்கு ...	3·8	6·2	10
வேலையில்லாதோர் பற்றுக் குறைக்கு ...	2·5	2·8	5·3
மொத்தம் ...	6·3	9·0	15·3

திட்டத்தினல் ஏற்படக்கூடிய அதிக வேலையளிப்புப் பின்வருமாறு :

		மதிப்பிடப்பட்ட அதிகவேலை (இலட்சத்தில்)
கட்டட வேலை	...	21·00
நீர்ப்பாசனம், சக்தி	...	0·51
போக்குவரத்து, தொடர்பு வசதி	...	4·33
தொழில்கள்	...	7·50
குடிசைத் தொழில், சிறு தொழில்	...	4·50
காடுகள், மீன் தொழில் முதலியன	...	4·13
கல்வி, சுகாதாரம்	...	4·26
மற்றச் சமூகப் பணிகள்	...	1·42
அரசாங்க வேலைகள்	...	4·34
மொத்தம்	...	51·99
இதோடு வாணிகம், வியாபாரம் முதலிய மற்றவற்றைக் கூட்ட	...	27·04
இறுதி மொத்தம்	...	79·03

(அதாவது சுமார் 80)

பொது வேலையில்லாப் பிரச்சினை ஒருபுறமிருக்க, பள்ளியிறுதி வரையிலும், அதற்கு மேலும் படித்தவர்களுக்குள் இருக்கும் வேலையின்மையையும் கவனிக்க வேண்டும். இவர்களுடைய தொகை 5·5 இலட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. 1956–61 காலத்தில் மேலும் 14·5 இலட்சம் பேர் தொழில் மார்க்கெட்டிற்குள் நுழைவார்கள். இரண்டாம் திட்ட காலத்தில் 20 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தினல்தான் படித்தவர்களின் வேலையின்மை முற்றிலும் நீங்கும். சிற்றளவுத் தொழில்களும் (small scale industries), கூட்டுறவுப் பண்டப் போக்குவரத்தும் (co-operative goods transport) அமைப்பதற்கு ரூ. 130 கோடி செலவழிக்கலாம் என்று ஓர் ஆய்வுக் குழு (study group) சிபாரிசு செய்திருக்கிறது. இதனல் 2·4 இலட்சம் படித்தவர்களுக்கு அதிகப்படியாக வேலை கிடைக்கும். இதன்படி ஒரு முன்னேடித் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது.

இரண்டாம் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் அதிக முயற்சிகளால்கூட, அத் திட்ட காலத்தின் இறுதியில் வேலையின்மையின் மொத்த அளவு இப்பொழுதுள்ளதைப் போலவே இருக்கும் என்று வேலையின்மைப் பிரச்சினையைப்பற்றி இவ்வறிக்கை கூறி முடிக்கிறது.

நிருவாக வேலைகளும் அமைப்பும்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ளும் பொறுப்பிற்கு அவற்றின் நிருவாகத்தின் அளவும் தரமும் ஈடு கொடுக்க முடியுமா என்று சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது. விரிவான பொருளில், ‘நிருவாகம்’ என்பது பணியாட்களைத் தயார்செய்வது, மக்களுக்குப் பயிற்சியளிப்பது, நிருவாக இயந்திரத்தை நடத்துவது, மக்களின் ஒத்துழைப்பை நாடுவது, மக்களுக்குக் கல்வியூட்டுவது ஆகியவற்றைக் குறிக்கும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்யப்படவேண்டிய முக்கிய நிருவாக வேலைகளான: (1) நிருவாகத்தில் யோக்கியப் பொறுப்பை உறுதி செய்வது, (2) தொழில் நுட்பமுள்ள பணியாட்களைத் தயார்செய்வது, (3) எல்லாத் துறைகளிலும் பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்திக் கிடைக்கக்கூடிய பயிற்சிச் சாதனைகளைத் திரட்டுதல், (4) வேகமாகவும் திறமையாகவும் வேலைசெய்வதற்கு வழிசெய்து, மேற்பார்வைக்கும் ஏற்பாடு செய்தல், (5) பொதுத் தொழில் துணிவுகளுக்குத் (public enterprises) திறமையான நிருவாகத்தை ஏற்பாடு செய்தல்.

தேவையான பணியாட்கள் இன்றி எந்தப் பெரிய திட்டத்தையும் வெற்றியுடன் நிறைவேற்ற முடியாது. தாற்காலிகமாகப் புதிய பணியாட்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வருடமாக அவர்களின் வேலையை நீட்டித்து, அவர்களுக்கு வேலையில் பாதுகாப்பளிக்காமல் இருப்பது மனித சக்தி சாதனத்தை வீணாக்குவதாகும். நீண்டகாலத் தேவைகளை மனத்தில்கொண்டு நிருவாகப் பணியாட்கள் பிரச்சினையைக் கவனிக்கவேண்டும். வெவ்வேறு நிலைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும் அதிக ஆட்கள் நீண்டகால அல்லது நிலையான அடிப்படையில் இருக்கவேண்டும். நிருவாகப் பணியாட்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். தொழில்களிலும், பாங்குத் தொழில், இன்ஷூரன்ஸுத் தொழில், அரசாங்க வாணிகம் ஆகியவற்றிலும் பொதுத் துறை பெருகுவதை உத்தேசித்து, மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் நேரடித் தேவைகளுக்காகப் பணியாட்களை ஏற்பாடு செய்வதற்குத் தொழில் நிருவாகப் பணித்துறை (industrial management service) ஒன்று நிறுவப்பட இருக்கிறது. விவசாயம், காடுகள், மிருக வைத்தியம், கூட்டுறவு, சுகாதாரம் ஆகிய துறைகளுக்கும் பணியாட்களைப் பயிற்றுவிப்பதற்கான வசதிகளைப் பெருக்கி, இப்போதுள்ள நிலையங்களில் பட்டதாரிகளையும் மற்றவர்களையும் பயிற்றுவிப்பதற்கான இட வசதியையும் அதிகரிக்கவேண்டும்.

சமன் செய்யப்பட்ட முன்னேற்றத்தைப் பெறுவதற்கு நீண்டகாலத் திட்டமிடுதல் மிகவும் முக்கியமானது. ஐந்தாண்டுக் காலத் திட்டங்கள், நன்கு வரையறுக்கப்பட்ட வேலைகளைக் கவனிப்பதற்கு உதவும். ஆனால், அமைப்புச் சாதன இறக்குமதி, எஃகு, அந்நியச் செலாவணி ஆகியவற்றில் இயல்பாய் உள்ள நிச்சயமற்ற நிலைமையின் காரணமாக, அத் திட்டங்கள் நெகிழ்ச்சியுள்ளவையாய்க் கருதப்பட்டு நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட விரிவான திட்டங்களைக் கடைப்பிடித்தால், அவற்றை நடத்துவதில் அனுவசியமான பிகுத்தன்மையிராது. புதிய நுட்பத் தொழில் விருத்திகளை (technological developments) மேற்கொள்வதற்கான மாறுதல்களைச் செய்யவும் அது அனுமதிக்கும்.

இராச்சியத் திட்டங்களுக்கும் மாவட்டத் திட்டங்களுக்கும் வேற்றுமை காட்டப்படவேண்டும். இவ்விரண்டையும் மக்கள் உணரும்படி செய்யவேண்டும். இவை ஒவ்வொரு சிறிய எல்லையிலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்; அவ்வெல்லையில் உள்ள மக்களை இவற்றில் பங்குகொள்ளும்படி செய்யவும் உதவும். தல மக்கள் முனைப்பிற்கும் (initiative) தலைமைக்கும் இவை அதிக

வாய்ப்பளிக்கும். மாவட்டத் திட்டத்தில் சமூக முன்னேற்றம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமூகநலப் பணிகள், கூட்டுறவு, கிராமப் பஞ்சாயத்துக்கள், கல்வி, சிறு சேமிப்பு, மதுவிலக்கு ஆகியவை அடங்கும். முன்னேற்றத் திட்டங்களுக்கு மாவட்ட முன்னேற்றக் குழுக்கள் தலமக்கள் ஆதரவைத் திரட்டித் தரலாம்.

நிலச் சீர்திருத்தம்

ஜனத்தொகையும், தொழில் நிலையங்களும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்தால், உணவிலும் கச்சாப் பொருள்களிலும் உபரி உண்டாகுமாறு இந்திய விவசாயம் பெருக வேண்டும். நிலச் சீர்திருத்தத்தின் நோக்கங்கள் இரண்டு. ஒன்று, விவசாய அமைப்பிலுள்ள தடைகளை நீக்குவது; மற்றொன்று, மிகத் திறமையும் அதிக உற்பத்தியும் உள்ள விவசாயப் பொருளாதாரத்தை உண்டாக்குவது. இடையாட்கள் (intermediaries) அநேகமாக நீக்கப்பட்டுவிட்டார்கள். இப்பொழுதுள்ள நில உரிமை முறைகள் (tenures) இரண்டு வகைப்படும். அரசாங்கத்தின் நிலத்தை நேரடியாகப் பெற்றிருப்பவர்கள், நிலத்திற்கு உரிமை உடையவர்களிடமிருந்து குத்தகைக்குப் பெற்றிருப்பவர்கள் என்று அவை இரண்டாகும். நிலத்திற்கு உரிமை பெற்றிருப்பவர்கள் அதைச் சிறுசிறு துண்டுகளாக்காமல் தடுத்தலும், அத் துண்டுகளைப் பிறருக்கு மாற்றுவதை ஒழுங்கு முறைக்குள் கொண்டுவருதலும் விரும்பத் தக்கது. முதல் திட்ட காலத்திலேயே வாரக் குடிகளின் (tenants) பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வாரக் குடிகளை வெளியேற்றும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். வாரத்தைக் (rent) கொடுக்காமலிருந்தாலோ, நிலத்தைத் தவருகப் பயன்படுத்தினுலோதான் அவர்களை வெளியேற்றலாம். 'சொந்த விவசாயம்' என்பதுபற்றி விளக்கம் கூறுவது கடினமாகையால், வாரக் குடிகளைப் பாதுகாக்கச் சட்டம் இயற்றுவதில் கஷ்டம் இருக்கிறது. இதில் மூன்று அமிசங்கள் உள்ளன. (1) வேளாண்மையில் உள்ள கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக்கொள்வது; (2) உரிமையாளரோ, அவர் குடும்பத்தைச் சேர்ந்தவரோ மேற்பார்வை செய்வது; (3) சொந்த உழைப்பு, 'சொந்த விவசாயம்' என்பதில் உரிமையாளரே எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற விளக்கம் சேர்க்கப்பட வேண்டும். நிலத்தைச் சொந்த விவசாயத்திற்கு வைத்துக்கொள்ளாமல், குறிப்பிட்ட காலத்திற்குள் அது குத்தகைக்கு விடப்பட்டால், வெளியேற்றப்பட்ட குத்தகைக் குடியே மீண்டும் அந்த நிலத்தில் இருக்கும் உரிமை பெறவேண்டும். பாதுகாப்புப்படையில் இருப்பவர்களுடைய நலன்கள் பாதிக்கப்படமாட்டா என்று உறுதியளிக்க

வேண்டும். சிறு நிலத்திற்கு உரியவர்கள் தம் நிலத்தை மீண்டும் பெற அனுமதிக்கப்பட வேண்டும். தம் நிலத்தில் சொந்த விவசாயம் செய்ய விரும்பும் உரிமையாளர் ஆறு மாதத்திற்குள் அதற்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். உச்சவரம்பிற்குள் நிலம் வைத்திருக்கும் உரிமையாளர், தம்முடைய வாரக் குடிக்குக் குடும்ப நிலம் இருந்தால், தாமே தம் நிலத்தைச் சொந்த விவசாயத்திற்குப் பெற உரிமை உள்ளவராவார். நில உரிமையாளர் குடும்ப நிலத்திற்கும் குறைவாக நிலம் பெற்றிருந்தால், தம் வாரக் குடியின் நிலத்தில் அவர் ஒரு பாதியைத் தம் சொந்த விவசாயத்திற்குத் திரும்பப் பெறலாம்.

வாரக்குடிகளின் வாரம் நியாமான அளவிற்குக் குறைக்கப்பட வேண்டும். வாரக்குடிகளை உரிமையாளர்களாக்குவதற்கு ஒவ்வோர் இராச்சியமும் தன் சொந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். 20 வருடங்களில் மீட்கக்கூடிய பத்திரங்களாக நஷ்டஈட்டுத் தொகையை அளிக்கலாம். இராச்சிய அரசாங்கம் நில வருவாயையும் நஷ்டஈட்டுத் தவணையையும் திரும்பப் பெறும் அளவு விளைச்சலில் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{5}$ க்கு மேல் இருக்கக்கூடாது.

இரண்டாம் திட்ட காலத்தில் உச்சவரம்புகளை விதிப்பதற்கு ஒவ்வோர் இராச்சிய அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இராச்சியத்திலும் ஒரு தனி நபர் வைத்துக் கொள்ளக்கூடிய மொத்த நிலத்திற்குத்தான் உச்சவரம்பு கட்ட வேண்டும். இந்த விஷயத்தில் இராச்சிய அரசாங்கத்திற்கே முடிவு செய்யும் பொறுப்பு விடப்படும். தேயிலை, காப்பி, ரப்பர், கரும்புத் தோட்டங்களும், அதிக முதலீட்டைப் பெற்றுத் திறமையாக நடத்தப்படும் பண்ணைகளும் உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படலாம். உபரி நிலங்களில் குடியானவர்களை அமர்த்துவதில் இடம் பெயர்ந்த வாரக் குடிகள், சிக்கனமற்ற நிலங்களை வைத்திருக்கும் குடியானவர்கள், நிலமற்ற உழவர்கள் ஆகியோர் முதன்மை பெறவேண்டும். குடியானவர்களை அமர்த்தும் திட்டத்தில் பூதான நிலங்களையும் கொண்டுவரலாம்.

விவசாயத்தைத் திருத்தியமைத்தல்

விவசாயத்தைத் திருத்தியமைப்பதில் நான்கு முக்கிய அமிசங்கள் எவையெனின், (1) நிலங்களை ஒருங்கிணைத்தல், (consolidation of holdings); (2) நில நிருவாக நடைமுறைகள்; (3) கூட்டுப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்; (4) கிராமப் பொருளாதாரச் சீரமைப்பைக் குறிக்கோளாகக் கொண்டு கூட்டுறவுக் கிராம நிருவாகத்தை விருத்தி செய்தல்.

ஒரு தலைமுறைக்கு மேலாக நாட்டின் பல பகுதிகளில் நிலங்களை ஒருங்கிணைக்கும் திட்டம் நடந்துவந்திருக்கிறது. இவ் விஷயத்தில் பின்தங்கியுள்ள இராச்சியங்கள் இந்த அனுபவத்தால் பயனடையலாம்.

விவசாய உற்பத்தியிலும், இயற்கைச் சாதனங்களை அழியாமல் காப்பதிலும் நில நிருவாக ஏற்பாடுகள் முக்கியமானவை. திறமையான வேளாண்மைக்கு நிதி உதவியும் தொழில் நுட்ப உதவியும் அளிக்கலாம். ஒவ்வோர் இராச்சியத்திலும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட தேசீய விஸ்தரிப்பு, சமூகத் திட்டப் பகுதிகளில் முதலில் இவ் உதவிகளை அளிக்கவேண்டும்.

முடிந்த அளவு விரைவாகக் கூட்டுப் பண்ணை முறையை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு தேசீய விஸ்தரிப்பு, சமூகத் திட்டப் பகுதியிலும் கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும். உபரி நிலங்களில் கூட்டுறவு முறையில் குடியானவர்களை அமர்த்த வேண்டும்; இவற்றில் சிறிய பண்ணைகளைக் கூட்டுறவு அமைப்பில் கொண்டுவர வேண்டும்.

கிராம முன்னேற்ற அமைப்பு

கூட்டுறவு முறையில் சமூக முன்னேற்றத்திற்குக் கிராமம்தான் மிகவும் சௌகரியமான பகுதி. உழவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையில்தான் கூட்டுறவுக் கிராம நிருவாகம் நடைபெற வேண்டும். ஒவ்வொரு கிராமச் சமூகத்திலும் கைவினைஞர்களும் (artisans), விவசாயமல்லாத வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களும் நீங்கலாக, நில உரிமையில்லாமல் விவசாயத்தை நம்பிக்கொண்டிருப்பவர்களும் இருப்பார்கள். மின்சாரத்தையும், திருந்திய அமைப்புச் சாதனங்களையும் பயன்படுத்திப் புதிய நுட்ப வினை முறைகளைக் கொண்டு கிராமப் பொருளாதாரம் முன்னேற வேண்டும். சிறிய, சிக்கனமில்லாத நிலங்களைக்கொண்டு தொழில்களில் வேறுபாடுகளை உண்டாக்குவதற்கு அதிக வாய்ப்பில்லை. நிருவாகப் பகுதியும், நடவடிக்கைப் (operation) பகுதியும் வெவ்வேறானவை. ஒரு கிராமம் முழுவதுமே நிருவாகப் பகுதியாக இருக்கும்போதுகூடப் பல வருடங்கள் வரையில் குடியானவனின் நிலம்தான் நடவடிக்கைப் பகுதியாக இருக்கும்.

உற்பத்திப் பெருக்கம், கிராமக் கைத்தொழில் முன்னேற்றம், கூட்டுறவுக் கடன், மார்க்கெட்டிங்கும் உழவும், பஞ்சாயத்துக்களை

உருவாக்குதல், கிராமத்தில் ஒரு சமூக நிலையத்தை உண்டாக்குதல் ஆகிய இவையெல்லாம் கூட்டுறவுக் கிராம நிருவாகத்தில் அடங்கும்.

கூட்டுறவு வளர்ச்சி

கூட்டுறவு முறையில் அமைப்பதற்குத் தகுந்த துறைகள் விவசாயக் கடன் மார்க்கெட்டிங்கும் பக்குவப்படுத்துதலும் (processing), கிராமங்களில் எல்லா உற்பத்தி அமிசங்கள், நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், கைவினைஞர்கள், தொழிலாளிகள் ஆகியோரின் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியனவும் ஆகும். கிராமம்தான் கிராமக் கூட்டுறவில் முக்கியமான பகுதி. கூட்டுறவின் ஆரம்பம்தான் கடன் வசதி. அது கூட்டுறவுப் பண்ணைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். கடைசியாக வாழ்க்கையில் எல்லா அமிசங்களையும் அமைப்பதற்கும் அது அளிக்கப்பட வேண்டும். நகரங்களில்கூட தழுவிய கூட்டுறவு, சமூகக்கூட்டுறவு முறை வளர்வதற்கு அதிக வாய்ப்புண்டு. சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம், போக்குவரத்து, சிறு தொழில்கள், பாங்குத் தொழில், குடியிருப்பு வசதி, கட்டட வேலை ஆகியவற்றில் இதற்கு இடமுண்டு.

கிராமக் கடனும் மார்க்கெட்டிங்கும்

கிராமக் கடன் ஆய்வில் (Rural Credit Survey) கூறப்பட்ட யோசனைகள் முன்னேற்றத் திட்டங்களுக்கு அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ரிசர்வ் பாங்கானது ஒரு தேசீய விவசாயக் கடன் நிதியை ஏற்படுத்தியிருக்கிறது. மத்திய அரசாங்கம் தேசீயக் கூட்டுறவு அபிவிருத்தி நிதியை ஏற்படுத்தும். முற்கூறிய நிதியிலிருந்து இராச்சிய அரசாங்கங்களுக்குக் கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்காகக் கடன் அளிக்கப்படும். பிற்கூறிய நிதியிலிருந்து கிடங்குகள் கட்டுவதற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாட்களுக்கும் உதவியளிக்கப்படும்.

சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கடன் சங்கங்களும், கடன் அல்லாத சங்கங்களும் இணைக்கப்படும். கடன் சங்கங்களிலிருந்து விவசாய வேலைகளுக்கு விவசாயிகள் கடன் பெறுவார்கள். கடன் சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களிடமிருந்து விளைச்சலைப்பெற்று, மார்க்கெட்டிங் சங்கம் மூலமாக விற்பதற்கு உதவும். மார்க்கெட்டிங் சங்கங்களிலிருந்து, அவை தம் உறுப்பினர்களுக்கு வேண்டிய இருப்புக்களை வாங்கிப் பங்கீடு செய்யும். வரப்போகும் விளைச்சலின்மீது

கடன் சங்கங்கள் கடன் பெறத் தகுதியில்லாத விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டும்.

ஒரு மத்தியக் கிடங்கு கார்ப்பொரேஷனும் (Central Warehousing Corporation) இராச்சியங்களுக்காகப் பதினாறு கிடங்கு கார்ப்பொரேஷன்களும் நிறுவப்படும். முற்கூறியது, முக்கியமான 100 இடங்களில் பெரிய அளவுள்ள கிடங்குகளையும், பிற்கூறியது மார்க்கெட்டிங் சங்கங்களுக்காக 250 கிடங்குகளையும் கட்டும். கூட்டுறவு மார்க்கெட்டிங்குக்கும் கிடங்குகளுக்கும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட குறிக்கோள்கள் பின்வருமாறு :

கடன்

பெரிய அளவுள்ள சங்கங்கள்	...	10,400
குறுகிய காலக் கடன் எல்லை	...	ரூ 150 கோடி
இடைக் காலக் கடன் எல்லை	...	50 ,,
நீண்டகாலக் கடன் எல்லை	...	25 ,,

மார்க்கெட்டிங்கும் பக்குவப்படுத்தலும்

ஏற்படுத்தப்படவேண்டிய முதன்மையான மார்க்கெட்டிங் சங்கங்கள்	...	1,800
கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்	...	35
கூட்டுறவுப் பருத்திக்கொட்டை நீக்கும் ஆலைகள்	...	48
மற்றக் கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் சங்கங்கள்		118

கிடங்குகளும் சேமிப்பு நிலையங்களும்

மத்திய, இராச்சிய கார்ப்பொரேஷன்களின் கிடங்குகள்	...	350
மார்க்கெட்டிங் சங்கங்களின் கிடங்குகள்	...	1,500
பெரிய அளவுள்ள சங்கங்களின் கிடங்குகள்	...	4,000

கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர் தொகையை 60 இலட்சத்திலிருந்து 150 இலட்சமாக உயர்த்த முடியும் என்று நம்பப்படுகிறது. இந்திய அரசாங்கப் பாங்கு முதல் ஐந்து ஆண்டுகளில் 400 புதிய கிளைகளைத் திறக்கும்.

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய பணியாட்களின் தொகை மதிப்பிடப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சமூக முன்னேற்றமும் தேசீய விஸ்தரிப்பும்

கிராம ஜனங்களின் நலனுக்காகச் சமூகத் திட்டங்கள் உள்ளன. விவசாயம், கல்வி, சுகாதாரம், கிராமக் கைத்தொழில், கூட்டுறவு ஆகியவை இதில் அடங்கும். மக்களின் நடவடிக்கைகளை இத் திட்டம் எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைப் பொறுத்துத் தேசீய விஸ்தரிப்பும், சமூக முன்னேற்றத் திட்டமும் பலன் தந்திருப்பதை யறிய வேண்டும். அரசாங்கம் செலவு செய்துள்ள தொகையில் 56% மக்கள் அளித்திருக்கிறார்கள் என்பதிலிருந்து, மக்களுக்கு இதில் உள்ள ஆர்வம் விளங்கும்.

சமூக முன்னேற்றத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் ஆகியவற்றின் நடவடிக்கைப் பகுதி அபிவிருத்திப் பகுதியே (development block) ஆகும். இதில் 100 கிராமங்களும், 60,000 முதல் 70,000 ஜனத்தொகையும் அடங்கும். 1952-ல் இத் திட்டம் தொடங்கப்பட்டது முதல், மேலும் சில திட்டங்கள் தொடங்கப்பட்டு, 1,23,000 கிராமங்களும், 8,00,00,000 ஜனத்தொகையும் கொண்ட 1,200 அபிவிருத்திப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 1955-ல் அபிவிருத்திக் குழு, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு முழுவதும் தேசீய விஸ்தரிப்புப் பணியைப் பெறவேண்டுமென்றும், விஸ்தரிப்புப் பகுதிகளில் 40% சமூக அபிவிருத்திப் பகுதிகளாக மாற்றப்படவேண்டுமென்றும் ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்திற்கு ரூ. 200 கோடி பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் திட்ட காலத்தில் கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் வளர்வது, கூட்டுறவுச் சங்கங்கள் வளர்வது, பெண்களும் இளைஞர்களும் முன்னேற வேலை செய்வது, பூர்வீக மக்களிடையே தீவிரமாக வேலை செய்வது ஆகியவை வற்புறுத்தப்படும். எல்லாவிதமான பணியாட்களுக்கும் பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 61 விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்கள், இவற்றையும் விவசாயக் கல்லூரிகளையும் சேர்ந்த 95 ஆதார விவசாயப் பள்ளிகள் ஆகியவை இரண்டாம் திட்ட காலத்தில் வேலை செய்யும். 25 முன்னோடித் திட்டங்கள் (pilot projects), கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் தீவிர முன்னேற்றத்திற்காகத் தொடங்கப்பட்டுள்ளன. சமூகத் திட்டங்களின் நோக்கம் நிறைய உணவு, உடை, குடியிருப்பு, சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றை அளிப்பது மட்டுமல்ல. மக்களின் மனப்போக்கில் மாறுதலைச் செய்து, மேலும் நல்வாழ்க்கை வாழ வேண்டுமென்று அவர்களிடம் ஓர் உயர்வான எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்பதுதான்.

விவசாயத் திட்டம்

முதல் திட்ட காலத்தில் 10 இலட்சம் ஏக்கருக்கு மேல் மத்திய டிராக்டர் சங்கத்தினாலும் (Central Tractor Organisation), 14 இலட்சம் ஏக்கர் அரசாங்க டிராக்டர் சங்கத்தினாலும் விவசாயத்திற்குத் தகுதியாக்கப்பட்டன. பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 3,260 இலட்சம் ஏக்கரிலிருந்து 1954—55-ல் 3,520 இலட்சம் ஏக்கராயின. உணவுத் தானிய உற்பத்தியின் விளைச்சலை இனி அதிகமாக வற்புறுத்த வேண்டியதில்லை. விவசாய உற்பத்தியைப் பலவகையாக்குவதுதான் இனி நம் நோக்கமாக இருக்க வேண்டும். நிலத்தை மிக நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். முதல் திட்டத்திலும், இரண்டாம் திட்டத்திலும் வெவ்வேறு இனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை கீழே காணலாம் :

இனம்		முதல் திட்டம் (ரூ. கோடிகளில்)	இரண்டாம் திட்டம் (ரூ. கோடிகளில்)
விவசாயம்	...	196	170
கால்நடை வளர்ப்புத் தொழில்	...	22	56
காடுகளும் மண்வளப் பாதுகாப்பும்	...	10	47
கூட்டுறவு	...	7	47
மீன் தொழில்	...	4	12
மற்றவை	...	1	9
மொத்தம்	...	240	341

இந்த விவரம் இரண்டாம் திட்டத்தில் எவை எவை வற்புறுத்தப் படுகின்றன என்பதைக் காட்டும்.

கீழ் வரும் அட்டவணையில் இத் திட்டத்தில் விவசாய உற்பத்திக்கு அமைந்த குறிக்கோள்களைக் காணலாம்.

சமூகத் தொகுதி		உத்தேச உற்பத்தி 1955-56	அதிக உற்பத்திக் குறிக்கோள்	உத்தேசு உற்பத்தி 1960-61
உணவுத் தானியங்கள் (10 இலட்சம் டன்)		65·0	10·0	75·0
எண்ணெய் விதைகள் ,,	...	5·5	1·5	7·0
கரும்பு (வெல்லம்) ,,	...	5·8	1·3	7·1
பருத்தி (10 இலட்சம் பேல்கள்)	...	4·2	1·3	5·5
சணல் ,,	...	4·0	1·0	5·0

கீழ் வரும் இனங்களிலிருந்து ஒரு கோடி டன் அதிக உணவு உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

			(பத்து இலட்சம் டன்கள்)
பெரிய நீர்ப்பாசனம்	...	...	2·4
சிறிய நீர்ப்பாசனம்	...	...	1·8
உரங்களும் உப்புக்களும்	...	...	2·5
மேலான விதைகள்	...	...	1·0
நிலமீட்பும் நில அபிவிருத்தியும்	...	...	0·8
விவசாய நடைமுறைகளில் பொதுவான அபிவிருத்தி	...	...	1·5
		மொத்தம் ...	10·0

இரண்டாம் திட்ட இறுதியில் உணவுத் தானிய நுகர்வின் அளவு இப்போது வயது வந்தவர்கள் உட்கொள்ளும் 17.2 அவுன்சிலிருந்து 18.3 அவுன்சாக உயரும். தேயிலை உற்பத்தியை 6,440 இலட்சம் டன்னிலிருந்து 7,000 இலட்சம் டன்னாக உயர்த்துவதற்குத் திட்டம் போடப்படும். 70,000 ஏக்கரில் மீண்டும் இரப்பரைப் பயிர் செய்தும் 10,000 ஏக்கர் புதிய பரப்பில் இரப்பர் பயிர் செய்வதற்கும் இரப்பர் குழு (Rubber Board) அளித்துள்ள திட்டத்தை மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இரண்டாம் திட்டத்தில் விவசாயத்துறையில் ஒரு முக்கிய நோக்கம் யாதெனின், பாதுகாத்து வைக்கப்படும் உணவிற்காகப் பழங்களையும் காய்கறிகளையும் பயிர் செய்வது.

கால்நடை வளர்ப்புத் தொழிலிலும், பால் பண்ணையிலும் இரண்டாம் திட்டத்திலுள்ள ரூ. 56 கோடி ஏற்பாட்டினால் அதிக முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. 1951 கணக்கெடுப்பின்படி மொத்தக் கால்நடையின் எண்ணிக்கை 198·44 இலட்சம். இதில் உபயோகமில்லாத 46·7 இலட்சம் கால்நடை அடங்கியுள்ளது. 1950—51-ல் கால்நடை உற்பத்தியின் நிகர மதிப்பு ரூ. 664 கோடியாகும். இது விவசாய வருமானத்தில் 16% ஆகும். கால்நடைத் தீவனம் தேவையான அளவுக்கும் மிகக் குறைவாக இருக்கிறது என்று ஆராய்ச்சியால் தெரிகிறது. பஞ்சம், பெருவாரிநோய் ஆகியவற்றின் விளைவுகள் தடுக்கப்பட்டிருப்பதால் உபரி கால்நடையின் தொகை பெருகலாம்.

கால்நடை அபிவிருத்திக்கான இராச்சியத் திட்டங்களில் மிருக மருத்துவ வசதியும் முக்கிய கிராமங்களும் பெருகுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கோழி வளர்ப்பு, செம்மறியாட்டு உரோம அபிவிருத்தி ஆகியவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுளது. ஏற்கெனவே உள்ள 2,650 மிருக வைத்தியசாலைகளோடு இரண்டாம் திட்டத்தில் மேலும் 1,900 தொடங்கப்படும். முக்கிய கிராமத் திட்டத்தின்மூலம் கால்நடை அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். தீவனச் சாதனங்கள் அபிவிருத்தி செய்யப்படும். முதல் திட்டத்தில் அமைக்கப்பட்ட 600 முக்கிய கிராமங்கள், 150 செயற்கைக் கரு நிலையங்கள் (insemination centres) ஆகியவற்றோடு, இரண்டாம் திட்டத்தில் மேலும் 1,258 முக்கிய கிராமங்களும் 245 செயற்கைக் கரு நிலையங்களும் நிறுவப்படும்.

மற்ற நாடுகளில் பசுக்களின் பால் சுரப்பு அளவு சராசரி ஒரு தடவைக்கு 3,000 முதல் 4,000 பவுண்டு வரையில் உள்ளது. இதோடு ஒப்பிடும்போது, நம் நாட்டில் உயர்ந்த சாதிப் பசுக்களுங்கூட ஒரு தடவைக்குச் சுமார் 1,500 பவுண்டுதான் அளிக்கின்றன. சமன்செய்யப்பட்ட சத்துணவுக்கு வேண்டிய பாலின் அளவு தலா 15 அவுன்சு என்று கருதப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் தலா நுகர்வு 5 அவுன்சுதான். 10 முதல் 12 ஆண்டுகளில் பால் உற்பத்தியின் அளவை 30 முதல் 40 % அதிகப்படுத்தவேண்டுமென்பது பொதுவான குறிக்கோள். போதீய தீவனம், அளவுக் கட்டுப்பாடு, கால்நடை வளர்ப்பில் திருந்திய முறைகள் ஆகியவற்றால் இந்தக் குறிக்கோளை அடைய முடியும். இரண்டாம் திட்டம் 36 நகரப் பால் அளிப்புத் (supply) திட்டங்களையும், 12 கூட்டுறவுப் பாலாடைத் தொழிற்சாலைகளையும், 7 பாலைக் கட்டியாக்கும் தொழிற்சாலைகளையும் தோற்றுவிக்க உத்தேசித்துள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்குக் கடன் வழங்கவும், உபரிப் பாலைப் பக்குவப்படுத்தவும், விற்கவுங்கூட உத்தேசித்துள்ளது. கோழிப் பண்ணைகள், செம்மறியாடு வளர்ப்பு ஆகியவைகளுக்கு ரூ. 4·50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன் பண்ணைகளுக்காக ரூ. 12 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

600 ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாய மார்க்கெட்டுகள் அதிகமாகத் தோற்றுவிக்கப்படும். விற்கவேண்டிய விளைச்சல்கள் (ரோமம், மிளகு போன்றவை) அன்னிய நாட்டு வியாபாரத்திற்காகத் தரப்படுத்தப்படும்.

இரண்டாம் திட்டத்தில் 3,80,000 ஏக்கர் காடு வளர்ப்பதற்காகவும், 1,13,000 ஏக்கர் புதிய தோட்டங்களுக்காகவும் ரூ. 27 கோடி

அளிக்கப்பட்டுள்ளது. இதில் தீப்பெட்டி மரம், வாட்டில் (wattle), நீலக் கோந்து முதலியவை அடங்கும். எல்லா இராச்சியங்களிலும் மண்வளப் பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இதற்காக ரூ. 20 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்ட காலத்தில் புஞ்செய்ப் பண்ணைகள் (dry farming), மண்வளப் பாதுகாப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்வகைகளை அபிவிருத்தி செய்தல். உரப் பரிசோதனைகள் முதலியவற்றில் ஆராய்ச்சி நடத்தப்படும், பணியாட்களைப் பயிற்றுவிப்பதற்குப் புதிய விவசாயக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, காட்டிலாகா அதிகாரிகளை அதிகரிப்பதற்கு வசதி செய்யப்படும்.

நீர்ப்பாசனமும் சக்தியும்

முதல் திட்டத்தின் தொடக்கத்தில் எல்லா வழிகளாலும் நீர்ப்பாசனம் பெற்ற நிலங்களின் மொத்தப் பரப்பு 510 இலட்சம் ஏக்கர். இவற்றுள் கால்வாய்ப் பாசனம் 200 இலட்சம் ஏக்கர், கிணற்றுப் பாசனம் 150 இலட்சம் ஏக்கர், ஏரிப் பாசனம் 90 இலட்சம் ஏக்கர், மற்ற வழிகளில் பாசனம் 70 இலட்சம் ஏக்கர். 15 ஆண்டுகளுக்குள்ளாக இதைப்போல் இரண்டு மடங்கு நிலத்தில் நீர்ப்பாசனம் செய்ய உத்தேசிக்கப்பட்டது. இதை நிறைவேற்ற முடியும். முதல் திட்டத்தில் 160 இலட்சம் ஏக்கர் நீர்ப்பாசனம் பெற்றிருக்கும். இரண்டாம் திட்டத்தில் 210 இலட்சம் ஏக்கர் நீர்ப்பாசனம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 30 இலட்சம் ஏக்கர், இரண்டாம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களிலிருந்து நீர்ப்பாசனம் பெறும். இந்தப் புதிய திட்டங்கள் இறுதியாக 150 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் அளிக்கும். 195 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களில் 143-க்கு ரூபா ஒரு கோடிக்குள்ளாகச் செலவாகும்; 35-க்கு ரூபா ஒரு கோடிக்கு மேலும் 5 கோடிக்குள்ளும் செலவாகும்; 7-க்கு ரூ. 5 கோடி முதல் 10 கோடி வரை ஆகும். மீதியுள்ள 10-க்கு முப்பது கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். ஆகவே, இரண்டாம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான திட்டங்கள், இடைத்தரமான, அல்லது சிறிய திட்டங்களே. அவை விரைவாக ஒன்றன் பின் ஒன்று பலனைத் தரும். இரண்டாம் திட்டம் ரூ. 20 கோடி உத்தேசச் செலவில் 3,581 குழாய்க் கிணறுகளை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இவற்றால் நீர்ப்பாசனம் பெறும் பரப்பு 9,16,000 ஏக்கர்.

பொருளாதார முன்னேற்றத்தின் அறிகுறி மின்சார சக்தியின் நுகர்வே என்று கூறப்படுகிறது. முதல் திட்டத்தின் தொடக்கத்தில், மொத்த மின்சார உற்பத்தி செய்யும் இயந்திரகங்ளின் உற்பத்தி அளவு

23 இலட்சம் கிலோவாட் (kW). முதல் திட்டத்தில் இது 11 கி. வாட் அதிகரிக்கப்பட்டு, 34 கி. வாட் ஆயிற்று. தலா மின்சார நுகர்வு 14 இலிருந்து 25 யூனிட்டாக உயர்ந்தது. 1965-க்கு நமது குறிக்கோள் 150 இலட்சம் கி. வாட் ஆக இருக்க வேண்டும். 1955-லிருந்து 1961-க்குள் 35 இலட்சம் கி. வாட் அதிகமாகும் என்று உத்தேசிக்கப்படுகிறது. இரண்டாம் திட்டத்தில் மொத்தம் 44 மின் உற்பத்தி நிலையத் திட்டங்கள் தொடங்கப்படும். இவற்றில் 25 நீர் மின் திட்டங்கள் ; 19 நீராவி மின் திட்டங்கள்.

1960-ல் பொதுப் பயன்பாட்டு (pubic utility) நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 12 பில்லியன் (billion) கி. வாட். இரண்டாம் திட்டத்தின் இறுதியில் நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள எவ்வளவு ஜனத்தொகை மின்சாரத்தைப் பெறும் என்பது கீழ்க்கண்ட அட்டவணையில் கூறப்படுகிறது :

ஜனத்தொகை		1951 கணக்கெடுப்புப்படி ஊர்களின் எண்ணிக்கை	1956 மார்ச்சில் மின்சாரம் பெற்றவை	1961 மார்ச்சில் மின்சாரம் பெறக்கூடியவை.
1,00,000-க்கு மேல்	...	73	73	73
1,00,000—50,000	...	111	111	111
50,000—20,000	...	401	366	401
20,000—10,000	...	856	350	856
10,000— 5,000	...	3,101	1,200	2,659
5,000-க்கும் கீழ்	...	5,56,565	5,300	13,900
மொத்தம்	...	**5,61,107**	**7,400**	**18,000**

தொழில்களும் தாதுப் பொருள்களும்

தனியார் துறையில் முதல் திட்டத்தின்படி 41 தொழில்களில், உற்பத்திக்கும் அதிக உற்பத்திக்கும் அளவுகள் உத்தேசிக்கப்பட்டன. பொதுத் துறையில் பல தொழில் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. திட்டத்திற்கு முன்னால் இடைக் கால உற்பத்திக் குறியீட்டெண் (index number) 105 ஆக இருந்தது. (1946-ல் 100) 1955-ல் அது 161 ஆயிற்று. 1951-ல் மாற்றப்பட்ட அடிப்படை (base) யின்படி 1955-ல் உற்பத்தி அளவு 122 ஆயிற்று. சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை, சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலை,

இந்திய டெலிபோன் தொழிற்சாலை, இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை, பெனிசிலின் உற்பத்தித் தொழிற்சாலைகள், D. D. T., பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலைகள் போன்ற பல தொழில் திட்டங்கள் பொதுத் துறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எஃகு உற்பத்தி குறைவாக இருந்ததால்தான் விரைவாகத் தொழில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எஃகு உற்பத்திக்காகப் பொதுத் துறையில் மூன்று புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படப் போகின்றன. தொழில்களுக்காகவும், சுரங்கத் தொழிலுக்காகவும் இரண்டாம் திட்டத்தில் ரூ. 690 கோடி அளிக்கப்பட்டுள்ளது. அன்றியும் கிராமக் கைத்தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவைகளுக்காக ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்டத்தில் தொழில் சக்தியைக் கீழ்க்கண்ட வரிசைக் கிரமப்படி பெருக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

1. இரும்பு, எஃகு, கனவியல் இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கம்.
2. அபிவிருத்திப் பண்டங்கள், உற்பத்திச் சாதனப் பொருள்களாகிய சிமெண்டு, அலுமினியம், பாஸ்வர உரங்கள் முதலியவற்றின் அளவுப் பெருக்கம்.
3. சணல், பருத்தி, சர்க்கரை போன்ற தேசீயத் தொழில்களை (ஏற்கெனவே உள்ளவை) நவீன முறைப்படி மாற்றியமைத்தல்.
4. ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளை மேலும் அதிகமாகப் பயன்படுத்துதல்.
5. நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியளவுப் பெருக்கம்.

இதே வரிசைக் கிரமத்தில்தான் தனியார் துறையிலும் தொழில் முன்னேற்ற நிகழ்ச்சிகள் இருக்கும். டாடா இரும்பு, எஃகு கம்பெனியும், இந்திய இரும்பு, எஃகு கம்பெனியும் தம்முடைய விரிவுத் திட்டங்களைப் பூர்த்தி செய்த பிறகு, அவற்றின் மொத்த உற்பத்தி சக்தி 12·5 இலட்சம் டன்னிலிருந்து 23 இலட்சம் டன்னுக உயரும். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தொழில் இயந்திரங்களின் மதிப்பு ஐந்தாறு மடங்கு அதிகமாகும்.

இரண்டாம் திட்டத்தில் மிகத் தீவிரமாகப் பல துறைகளிலும் முன்னேறுவதற்குப் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும்

தொழில் உற்பத்திக்கான, முக்கியமான மொத்த இலக்குகள் கீழ்க் கண்ட அட்டவணையில் உள்ளன :

சில பெரிய தொழில்களுக்கான தேசிய இலக்குகள்

		உத்தேச உற்பத்தி (1955—56)	இலக்கு (1960—61)
1. இரும்பும் எஃகும்			
(அ) உருவாக்கப்பட்ட பொருள்கள் ...	டன்கள்	13,00,000	43,00,000
(ஆ) இரும்புப் பட்டறைகளுக்கு வேண்டிய வார்ப்பிரும்பு ...	,,	380	750
2. கட்டடங்களுக்காக அமைக்கப்பட்டவை ...	,,	1,80,000	5,00,000
3. கனவியல் பட்டறைகளும் உலைக்களங்களும்			
(அ) எஃகு பட்டறை ...	,,	...	15,000
(ஆ) உலைக்களங்கள் ...	,,	...	12,000
(இ) வார்ப்பிரும்புப் பட்டறைகள் ...	,,	...	10,000
4. இரும்பு மாங்கனீஸ் ...	,,	28,000	1,60,000
5. அலுமினியம் ...	,,	7,500	25,000
6. நீராவி இஞ்சின்கள் ...	எண்	175	400
7. மோட்டார்கள் ...	,,	25,000	57,000
8. கனவியல் இரசாயனப் பொருள்கள்			
(அ) கந்தக அமிலம் ...	டன்கள்	1,70,000	4,70,000
(ஆ) சோடாச் சாம்பல் ...	,,	80,000	2,30,000
(இ) சோடாக்காரம் ...	,,	36,000	1,35,400
9. உரங்கள்			
(அ) நைட்டிரஜன் உரங்கள்	,,	77,000	2,90,000
(ஆ) பாஸ்வர உரங்கள் ...	,,	20,000	1,20,000
10. கப்பல் கட்டுதல்	GRT	(51–56) 50,000	(56–61) 90,000
11. சிமெண்டு ...	டன்கள்	42,80,000	1,30,00,000
12. பீங்கான் தொழில்கள் ...	,,	2,80,000	8,00,000

			உத்தேச உற்பத்தி (1955—56)	இலக்கு (1960—61)
13.	பெட்ரோலிய சுத்திகரிப்பு	10 இலட்சம் டன்கள்	3·6	4·3
14.	காகிதமும் அட்டையும் ...	டன்கள்	2,00,000	3,50,000
15.	பத்திரிகைக் காகிதம் ...	,,	4,200	60,000
16.	ரேயான்			
	(அ) ரேயான் இழை	10 இலட்சம் பவுண்டுகள்	15	68
	(ஆ) முக்கிய நார்கள் ...	,,	13·2	32
	(இ) இர்சாயனச் சோறு ...	டன்கள்	...	30,000
17.	டீசல் இஞ்சின்கள் ...	H. P.	1,00,000	2,05,000
18.	சைக்கில்கள் ...	எண்	5,50,000	10,00,000
19.	மின்சார மோட்டார்கள் ...	H. P.	2,40,000	6,00,000
20.	ACSR கண்டக்டர்கள் ...	டன்கள்	9,000	18,000

தாதுப் பொருள்கள், தொழில்கள் ஆகியவற்றின் முன்னேற்றத் திட்டங்களை நன்கு இணைக்க வேண்டும். எஃகு, போக்குவரத்து ஆகியவற்றின் தேவைக்காக நிலக்கரி உற்பத்திப் பெருக்கமானது இரண்டாவது திட்டத்தில் முதலிடம் பெறும். 1951-ல் நிலக்கரி உற்பத்தி 343 இலட்சம் டன்னாக இருந்தது. 1955-ல் அது 382 இலட்சம் டன் ஆயிற்று. இதில் பெரும்பகுதி தனியார் துறையில் தான் ஆயிற்று. இரண்டாம் திட்டத்தில் தொழில்கள், அனல் வெப்ப மின்உற்பத்தி, ரெயில்வேக்கள் ஆகியவைகளின் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டால், இத் திட்டத்தின் இறுதியில் நிலக்கரிக்கான தேவை 600 இலட்சம் டன்கள் ஆகும். இந்த 220 இலட்சம் டன் அதிகத் தேவையில் 120 இலட்சம் டன் பொதுத் துறையிலும், எஞ்சியது தனியார் துறையிலும் உற்பத்தி செய்யப்படும்.

இரண்டாம் திட்டத்தில் நம் முக்கிய வேலைகளில் ஒன்று நாட்டின் எண்ணெய்ச் சாதனங்களைத் தேடிக் கண்டுபிடித்து அபிவிருத்தி செய்வதாகும்.

நிலக்கரி தவிர மற்றத் தாதுப் பொருள்களை உள்நாட்டுத் தேவைக்காகவும், சிலவற்றை ஏற்றுமதி செய்வதற்காகவும் இரண்

டாம் திட்டத்தில் கீழ்க்கண்ட இலக்குகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

தாது	அலகு	உற்பத்தி 1954	உற்பத்தி 1960–61	ஏற்றுமதி இலக்கு 1954–55	ஏற்றுமதி இலக்கு 1960–61
இரும்புத் தாது	(10 இலட்சம் டன்கள்)	4·31	12·5	0·9	2
மாங்கனீஸ் தாது	,,	1·41	2·0	0·94	1·5
சுண்ணும்புக்கல்	,,	N. A.	23·3	...	...
ஜிப்சம்	,,	0·61	1·97	...	...
பாக்ஸைட்டு	(000)	75	175	2	...

கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்

இரண்டாம் திட்டத்தில் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றை மூன்று இணைப்பான கருத்துக்களைக் கொண்டு அணுக வேண்டும். அவை (1) ஒரே தொழிலில் சிறிய அல்லது பெரிய பகுதிகளுக்குப் பொதுவான உற்பத்தித் திட்டங்கள்; (2) பரவல் முறையில் உற்பத்தி செய்யும் துறை; (3) நுட்பத் தொழில் உதவி, நிதி உதவி, அளிப்பு (supplies) உதவி, பயிற்சி, கூட்டுறவு அமைப்பு ஆகியவற்ருல் சிறு பகுதிகளுக்கு உருப்படியாக உதவும் திட்டம். இதற்காகத் திட்டத்தில் ரூ. 200 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைச் செலவிடும் முறை உத்தேசமாக வருமாறு :

		ரூ. (கோடியில்)
கைத்தறி :	பருத்தி நெசவு ...	56
	பட்டு, உரோமம் நெசவு ...	3·5
கதர் :	உரோமம் நூற்றலும் நெசவும் ...	1·9
	பரவல் முறையில் பருத்தி நூற்றலும் நெசவும் ...	14·8
கிராமத் தொழில்கள் :	கைக்குத்தல் அரிசி ...	5·0
	தாவர எண்ணெய் (செக்கு) ...	6·7
	தோல் செருப்புகள் பதனிடுதல் ...	5·0
	வெல்லமும் கற்கண்டும் ...	7·0
	குடிசைத் தீப்பெட்டி ...	1·1
	மற்றக் கிராமத் தொழில்கள் ...	14

		ரூ. (கோடியில்)
கைவினைத் தொழில்கள் (Handi crafts)	...	9
சிற்றளவுத் தொழில்கள்	...	55
பட்டு வளர்ப்பு	...	5
கயிறு திரித்தலும் நெய்தலும்	...	1
பொதுத் திட்டங்கள் (ஆராய்ச்சி போன்றவை)	...	15
மொத்தம்	...	200

இந்தச் செலவில் அம்பர் சர்க்காவுக்காகக் குறிப்பிட்ட ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை. அதைப்பற்றிப் பிறகு பார்ப்போம். திட்ட இறுதிக்குள் இருப்புச் சரக்குகளையும், மற்றத் தேவைகளையும் பெற ரூ. 65 கோடி நடைமுறை முதல் (working capital) வேண்டும். தக்க கூட்டுறவு ஏஜென்சிகள் மூலம் ரிசர்வ் பாங்கு குறுகிய கால, இடைக் கால நிதி உதவி செய்வதற்கு விருப்பமாக இருக்கிறது.

'பொது உற்பத்தித் திட்டம்' என்பது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய பகுதிகளும் சிறிய பகுதிகளும் சமூகத்தின் மொத்தத் தேவைகளை யளிப்பதற்கும், சிறு தொழில்கள், தம் இலக்கு களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வழங் கப்பட வேண்டிய ஒரு நல்ல பெயராயிருந்தது. இந்த நடவடிக்கை இரண்டு வகையானவை : (1) சிறிய பகுதிகளுக்கு மார்க்கெட்டைத் தேடித் தந்து ஓரளவு சலுகை யளிப்பது, (2) கச்சாப் பொருள்கள், நுட்பத் தொழிலுதவி, நிதி உதவி, மார்க்கெட்டிங் அமைப்பு முதலிய உருப்படியான உதவிகளை யளிப்பது. பெரிய பகுதிகளுக்கு முதல் திட்டத்தில் கீழ் வரும் மூன்று முக்கிய நட வடிக்கைகளில் ஏதேனும் ஒன்றை எடுக்கலாம் என்று கூறப்பட்டது. (1) உற்பத்தித் துறைகளை ஒதுக்குவது அல்லது அறுதியிடுவது; (2) பேரளவுத் தொழிலின் (large scale industry) உற்பத்தி அளவைப் பெருக்காமல் இருப்பது; (3) பேரளவுத் தொழில்மீது செஸ் (cess) விதிப்பது, குறிப்பிட்ட பொருள்களை உற்பத்தி செய்யும் பெரிய பகுதிகளுக்குப் போட்டியாகவோ, உற்பத்தி நிலைகளிலும் துணைப் பகுதிகளை உற்பத்தி செய்வதிலும் பெரிய பகுதிகளோடு இணைக்கப்பட வேண்டியவையாக உள்ள சிறிய பகுதிகளுக்கு உற் பத்தித் துறையை அறுதியிடுவது நல்ல உதவியாயிருக்கும்.

கிராமத் தொழில்களிலும் சிறு தொழில்களிலும் முடிந்த அளவு கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வது நல்லது என்று ஒப்புக்

கொள்ளப்படுகிறது. 1950—51-ல் 6,26,000 ஆக இருந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1954-55-ல் 8,79,000 ஆகப் பெருகிவிட்டன. கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்குக் கைத்தறி போர்டு (Handloom Board) நெசவாளர்களுக்குப் பங்கு மூலதனமும் (share capital) நடைமுறை முதலும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. பங்கு மதிப்பில் அரசாங்கமே 75 முதல் $87\frac{1}{2}\%$-ஐக் கடனாகக் கொடுக்கிறது. மீதியை நெசவாளி கொடுக்கவேண்டும். ஒரு பருத்தித் தறிக்கு ரூ. 200-ம், ஒரு பட்டுத் தறிக்கு ரூ. 500-ம் ஆக நடைமுறை மூலதனத்தை அரசாங்கம் அளிக்கிறது.

போக்குவரத்தும் தொடர்பு வசதிகளும்

போக்குவரத்து என்பது ரெயில்வேக்கள், சாலைகள் (roads) இயற்கைத்துறைமுகங்கள், செயற்கைத்துறைமுகங்கள், உள் நாட்டு நீர்ப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து ஆகியவற்றைக் குறிக்கும். தொடர்பு வசதிகள் என்பது தபால், தந்தி, கடல் கடந்த தொடர்பு வசதிகள், ஒலி பரப்பு வானிலை ஆராய்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தொழிலின் தேவைக்கேற்பப் போக்குவரத்து அதிகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் வேகமாக முன்னேறும்போது போக்குவரத்துகள் நெருக்கடி மேலும் அதிகமாகும். இரண்டாம் திட்டத்தில் குறைந்த நிதிவசதியிருப்பதை மனத்தில்கொண்டு திட்டத்தில் 29% ஆகிய ரூ. 1,385 கோடிதான் போக்குவரத்துக்கும் தொடர்பு வசதிக்கும் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 900 கோடி ரெயில்வேக்களுக்கும், ரூ. 266 கோடி, சாலைகள், வெளிநாட்டார் சுற்றுப் பயணம் ஆகியவற்றிற்கும், ரூ. 100 கோடி கப்பல் தொழில், செயற்கைத் துறைமுகங்கள், இயற்கைத் துறைமுகங்கள் ஆகியவற்றிற்கும், ரூ. 43 கோடி வான் வழிப் போக்குவரத்துக்கும், ரூ. 76 கோடி தொடர்பு வசதிகள், ஒலி பரப்பு ஆகியவற்றிற்கும் அளிக்கப்பட்டுள்ளது.

ரூ. 974 கோடி மூலதனமுள்ள இந்திய ரெயில்வேக்கள் நம் நாட்டின் மிகப் பெரிய தொழிலீடுபாடாகும். திட்ட காலத்தில் ரெயில்வேக்கள் 2,258 இஞ்சின்களையும், 11,364 கோச்சுகளையும், 1,07,247 வாகன்களையும் செய்ய உத்தேசித்துள்ளன. பல துறைகளில் அதிக உற்பத்தி உண்டாவதன் விளைவாக, முதல் திட்டத்தின் இறுதியில் இருந்த 1,200 இலட்சம் டன் பொருள் போக்குவரத்து 1960-61-ல் 1,810 இலட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 51% உயர்வாகும். அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, அவை இந்த அதிகப் போக்குவரத்திற்கு ஈடு கொடுக்க

முடியாது. அவை அளிக்கும் வசதிகளில், தேவையைவிட 10% இயங்கும் சாதனப் (rolling stock) பற்றுக்குறையும், 5% தண்டவாளப் பற்றுக்குறையும் இருக்கும். பெரிய எஃகுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான 842 மைல் தண்டவாளம் அமைக்கப்படும். ரெயில்வேக்கள் பழைய சொத்துக்களுக்குப் (assets) பதில் புதிய சொத்துக்களை உருவாக்கும். இதனால் திட்ட இறுதியில் இஞ்சின்களில் 32% ஆக இருந்த பழைய இருப்பு 16% ஆகவும், வாகன்களில் 19% ஆக இருந்தது 8·5% ஆகவும், கோச்களில் 26% ஆக இருந்தது 10·5% ஆகவும் குறைக்கப்படும். பயனற்றுப்போன 8,000 மைல் தண்டவாளங்களைப் புதுப்பிக்கவும், 1,607 மைல் பாதையை இரட்டிக்கவும், 265 மைல் மீட்டர் கேஜ் பாதையை அகலப் பாதை (broad guage) யாக்கவும், 826 மைல் மின்சார ரெயில் அமைக்கவும், 1,293 மைல் டீசல் இஞ்சின் போடவும் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முதல் திட்டத்தின் தொடக்கத்தில் இந்தியாவில் 97,000 மைல் செப்பனிட்ட பாதையும், 1,47,000 மைல் செப்பனிடாத பாதையும் இருந்தன. முதல் திட்டத்தில் 10,000 மைல் நீளமுள்ள நல்ல புதிய பாதைகளும், 20,000 மைல் நீளமுள்ள மட்டமான பாதைகளும் அமைக்க ஏற்பாடாயிருந்தது. மத்திய அரசாங்கம் சில பெரிய பாலங்களைக் கட்டி, இப்போதுள்ள 2,500 மைல் பாதைகளைச் சீர் திருத்தியது. இரண்டாம் திட்டத்தில் சாலைத் திட்டங்களுக்காக ரூ. 271 கோடி அளிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் பெருஞ்சாலைகளில் 600 மைல் விடுபட்ட பாதைகளும், 60 பெரிய பாலங்களும் கட்டும் வேலை தொடங்கப்படும். நாட்டுப் பெருஞ்சாலைகள் அல்லாத மற்றப் பாதைகளில் 150 மைல் சாலைகள் அமைக்கப்பட்டு, 500 மைல் சாலைகள் பெருஞ்சாலைகளாக மாற்றப்படும். இராச்சியங்களில் 18,000 மைலுக்கு நல்ல பாதைகள் அமைக்க ஏற்பாடாயிருக்கிறது.

1947-ல் இந்தியாவில் ஐந்து பெரிய துறைமுகங்கள் இருந்தன முதல் திட்டத்தின் இறுதியில், ஆறாவது பெரிய துறைமுகமாகிய கண்ட்லாவில் கப்பல் நிற்குமிடமும் எண்ணெய் அறையும் வேலைக்குத் தகுதியாகிவிட்டன. இரண்டாம் திட்டத்தில் பெரிய துறைமுகங்களின் கொள்ளளவு (250 இலட்சம் டன்) 30% அதிகமாக்கப்படும். கப்பல் தொழில் எதிர்பார்த்ததைவிட மெதுவாக நடக்கிறது. முதல் திட்டத்தின் இலக்கு 6,00,000 G.R.T. இரண்டாம் திட்டத்தில் மொத்த டன் அளவு 9,00,000 G.R.T. ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

1953-ல் நம் வான்வழிப் போக்குவரத்து நாட்டு உடைமையாக்கப் பட்டது. இந்திய ஏர் லைன் கார்ப்பொரேஷன் நாட்டில் எல்லாப்

பகுதிகளையும் இணைத்திருக்கிறது. இவற்றின் வான்வழி மொத்தம் 19,985 மைல். இரண்டாம் திட்டத்தில் 8 புதிய விமான நிலையங்கள் கட்டப்படும். இக் காலத்தில் தபால் நிலையங்களும், மற்றத் தொடர்பு வசதிகளும் விரிவாக்கப்படும். தபால் நிலையங்களின் எண்ணிக்கை 54,900-லிருந்து 74,900 ஆக உயரும். டெலிபோன் தொடர்புகள் 2,68,000-லிருந்து 4,48,000 ஆகும்.

சமூகப் பணிகள்

இரண்டாம் திட்டத்தில் ரூ 945 சமூகப் பணிகளுக்காக அமைக்கப் பட்டுள்ளது. விவரம் வருமாறு:

		ரூ. கோடிகளில்
கல்வி	...	307
நகரத் தண்ணீர்த் திட்டம், சுகாதாரம்	...	274
வீட்டு வசதி	...	120
தொழிலாளர்	...	29
பின் தங்கியவர்களின் நலன்	...	91
சமூக நலன்	...	29
குடிபெயர்ந்தவர்களை வாழவைத்தல்	...	90
கற்று வேலையில்லாதோருக்கு விசேஷத் திட்டங்கள்	...	5
மொத்தம்	...	945

கல்வி

பத்து வருடங்களுக்குள் 14 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தை களுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி அளிக்க முயற்சி செய்யவேண்டு மென்பது நம் அரசியல் சட்டத்தில் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட தாக்கீதாகும். முதல்திட்ட இறுதியில், 6—11 வயது எல்லையில் உள்ள 51% குழந்தைகளுக்கு மேற்படி கல்வி வசதி கிடைக்கும். இதில் ஆண் கள் 69%, பெண்கள் 33%. 11—14 வயது எல்லையில் இந்த வசதி பெறக்கூடிய குழந்தைகளின் விகிதம் 14%-லிருந்து 19·2% ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால், பள்ளியில் உள்ளவர்களில் 12% தான் பெண்கள்.

இரண்டாம் திட்டத்தில் கல்விக்காக மொத்தச் செலவு ரூ. 307 கோடி. இது உத்தேசமாக எப்படிச் செலவு செய்யப்படுமென்று கீழே கூறப்பட்டிருக்கிறது :

		ரூ. கோடிகளில்
ஆரம்பக் கல்வி	...	89
உயர்நிலைக் கல்வி	...	51
பல்கலைக் கழகக் கல்வி	...	57
தொழில் நுட்பக் கல்வி, தொழிற் கல்வி	...	48
சமூகக் கல்வி	...	5
நிர்வாகமும் பலவகைச் செலவும்	...	57
மொத்தம்	...	307

இரண்டாம் திட்ட இறுதியில் 6—11 வயது எல்லையில் உள்ள குழந்தைகளில் 63%-மும், 11-14 வயது எல்லையில் உள்ள குழந்தைகளில் 23%-மும் கல்விபெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்குகளை நிறைவேற்ற 60,000 புதிய ஆரம்பப் பள்ளிகளும் 5,000 நடுநிலைப் பள்ளிகளும் நிறுவப்படவேண்டும். கல்வி வசதிகளை விரைவாக அதிகரிப்பதற்குக் கல்விச் செலவைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். (1) கட்டடச் செலவைக் குறைப்பது, (2) பிறழ்ச்சி (shift) முறையைப் பயன்படுத்துவது, (3) 6—11 வயது எல்லையில் உள்ள ஆண்களையும் பெண்களையும் சேர்த்துக் கல்வி புகட்டுவது ஆகிய நடவடிக்கைகளால் கல்வியில் பொருள் சிக்கனம் செய்யமுடியும். கிராமங்களில் குழந்தைகள் திறந்த வெளியில் படிக்கலாம். கிராமக் கோயில்களையும் பஞ்சாயத்துக் கட்டடங்களையும் பள்ளிக்கூடங்களாகப் பயன்படுத்தலாம். ஆரம்பக் கல்விப் பொறுப்பை ஊர்ச் சமூகத்தார் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கு ஒவ்வொரு இராச்சியமும் கல்விக்காக வரி விதிப்பதற்குத் தல அதிகாரிகளுக்கு உதவும் வகையில் சட்டமியற்றலாம். கல்வி முறையைத் திறமையாகச் சீர்திருத்தியமைப்பதற்கு ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளங்களையளிப்பதை அவசியமான நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டாம் திட்டத்தில் உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு ரூ. 51 கோடி அளித்திருப்பதால், கைவினைத் தொழில் (craft) படிப்பையும், விஞ்ஞானப் படிப்பிற்கு மேலும் நல்ல வசதிகளையும், பல நோக்குப்

பள்ளிகளையும், இளைஞர் தொழில் நுட்பப் பள்ளிகளையும் நிறுவலாம். இதனால் தொழில்களுக்கும், விவசாயத்திற்கும், மற்றத் துறைகளுக்கும் வேண்டிய தொழில் நுட்பப் பணியாட்களைப் பெறவும், பணம் வீணாவதைக் குறைக்கவும், முயற்சி தவறுவதைத் தடுக்கவும் முடியும்.

தொழில் நுட்பக் கல்வியில், இரண்டாம் திட்டத்தில் பொறியியல், நுட்பத் தொழில் ஆகியவற்றிற்குரிய பணியாட்களை அளிப்பதுதான் முக்கியப் பிரச்சினை. முதல் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்த முக்கியமான அமிசங்களில் கரக்பூரில் இந்திய நுட்பத் தொழில் கழகம் (Indian Institute of Technology) நிறுவுவதும், பெங்களூரில் இந்திய விஞ்ஞானக் கழகத்தை அபிவிருத்தி செய்வதும், அரசாங்க நிர்வாகத்தில் இல்லாத சில பொறியியல், நுட்பத் தொழில் கழகங்களைத் தேர்ந்து முன்னேற்றம் செய்வதும் அடங்கும். 1955-ல் 3,700 பொறியியல் பட்டதாரிகளும், 3,900 பட்டதாரிகள் அல்லாதவர்களும் உருவாக்கப்பட்டனர். இரண்டாம் திட்டத்தில் இப்போதுள்ள பல நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். குறிப்பாக, டெல்லி பல தொழில் நுட்பக் கல்லூரியும், கரக்பூர் நுட்பத் தொழில் கழகமும் அபிவிருத்தியாகும். மேலும், வடக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் மூன்று உயர்தர நுட்பத் தொழிற் கழகங்கள் தோற்றுவிக்கப்படும். ஒவ்வொரு கழகமும் 1,200 பட்டக் கீழ்ப்படிப்பு, 600 பட்ட மேல்படிப்பு மாணவர்களைப் பயிற்றுவிக்கும். தன்பாதில் (Dhanbad) உள்ள இந்தியச் சுரங்கப் பள்ளியும் விரிவாக்கப்படும். நான்கு வெவ்வேறு நிலையங்களில் தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கு மறு படிப்பும், பட்டப் படிப்பு நிலையங்களில் 500 ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும். இரண்டாம் திட்ட இறுதியில், பட்டப் படிப்பு, பட்ட மேல்படிப்பு ஆகியவற்றில் கல்வியளிப்பதற்கு 51 நிலையங்களும், பட்டமல்லாத படிப்புக்கு 104 நிலையங்களும் இருக்கும். 1960-61-ல் 5,700 பொறியியல் பட்டதாரிகளும் 6,800 பட்டதாரிகள் அல்லாதவர்களும் உருவாக்கப்படுவர்.

சுகாதாரம்

முதல் திட்டத்தில் சுகாதாரத் திட்டங்களுக்கு ரூ. 140 கோடி தான் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இரண்டாம் திட்டத்தில் ரூ. 274 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 43 கோடி மருத்துவ நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்ட இறுதியில், 1955-56-ல் இருந்த 1,25,000 படுக்கைகளுடன் கூடிய 10,000 நிலையங்கள், 1,55,000 படுக்கைகளுடன் கூடிய 12,600

நிலையங்களாக மாறும். சமூகத் திட்டங்களில் 3,000 சுகாதாரப் பகுதிகள் (health units) ஏற்படுத்தப்பட்டு, கிராம மருத்துவ, சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்படும். எல்லாப் பிரிவினரிலும் கிடைக்கக்கூடிய பயிற்சி பெற்ற பணியாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்துச் சுகாதார ஏற்பாடுகள் விரிவுபடுத்தப்படும். இப்போதுள்ள பற்றாக்குறையையும், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியத்தையும் கீழ்வரும் அட்டவணை விளக்குகிறது :

	1950-51	1955-56	1960-61	தேவையான எண்ணிக்கை
வைத்தியர்கள் ...	59,000	70,000	82,500	90,000
செவிலிகள் ...	17,000	22,000	31,000	80,000
மருத்துவச்சிகள் ...	18,000	26,000	32,000	80,000
சுகாதார வருகையாளர்கள்	600	800	2,500	20,000
செவிலித்தாய்களும் தாய்களும் ...	4,000	6,000	41,000	80,000
சுகாதார உதவியாளர்களும் கண்காணிப்பாளர்களும்	3,500	4,000	7,000	20,000

மலேரியா, க்ஷயம், பெருநோய், ஆண் பெண் சேர்க்கை நோய்கள் முதலிய பரவும் நோய்களைத் தடுக்க, இரண்டாம் திட்டத்தில் ரூ. 58 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. B.C.G. ஊசி குத்துவதன்மூலம் க்ஷயரோகத்தைத் தடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. இதற்காக மேலும் 200 மருத்துவ நிலையங்களும், ரூ. 14 கோடியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கிராமத் தண்ணீர்த் திட்டங்களுக்காக ரூ. 28 கோடியும், நகரத் தண்ணீர்த் திட்டங்களுக்கும் சுகாதாரத் திட்டங்களுக்குமாக ரூ. 53 கோடியும் உண்டு. தண்ணீர், சுகாதார வசதி செய்யும் திட்டங்களுக்கு உதவி செய்யும் கார்ப்பொரேஷன்களுக்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் மிக முக்கியமான அமிசம் சத்துள்ள உணவுதான். பாதுகாத்து வைக்கப்படும் உணவுகளை (பால், முட்டை, மீன், இறைச்சி, பழங்கள், பச்சைக் காய்கறிகள்) அதிக உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படும். முதல் திட்டத்தில் தொடங்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், அதிகமாகத் தொடர்ந்து நடத்தப்படும். இதற்கு ரூ. 5 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது.

வீட்டு வசதி

பொருளாதாரத் திட்டத்தின் பயனாக நகரங்கள் முன்னேற்ற மடைவதால், நகரங்களில் வீட்டு வசதிப் பிரச்சினை தோன்றி யிருக்கிறது. இது நகர முன்னேற்றப் பிரச்சினையின் ஒரு பகுதியாகும். 1931-லிருந்து 1941 வரை நகர ஜனத்தொகை 106 இலட்சமும், 1941-லிருந்து 1951 வரை 181 இலட்சமும் அதிகமாயிற்று. மேற்கூறிய முதல் பத்தாண்டில் நகரப் பகுதிகளில் மக்கள் குடிபுகுந்த வீடுகள் 18 இலட்சமும், இரண்டாம் பத்தாண்டில் 17 இலட்சமும் அதிகமாயின. 1951-க்கும் 1961-க்கும் இடையில், மொத்த நகர ஜனத்தொகை சுமார் 33% அதிகமாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் வீட்டு வசதி நிலைமை மேலும் கஷ்டமாகும். முதல் திட்ட காலத்தில் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் சேர்ந்து சுமார் 13 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அரசாங்கமும், தனியாரும், சங்கங்களுமாகச் சேர்ந்து நகரப் பகுதி களில் 19 இலட்சம் குடியிருப்புகளைக் கட்டுமென்று எதிப்பார்க்கப் படுகிறது.

1951-61-ல், நகரப் பகுதிகளில் தேவையான வீடுகள் 89 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. 1961-ல் நகரங்களில் குடியிருப்புப் பற்றாக்குறை 53 இலட்சம் இருக்கலாம். இரண்டாம் திட்ட காலத்திற்குள்ளாக, அரசாங்கம் 12 இலட்சம் குடியிருப்புகளையும், தனியார் 10 இலட்சம் குடியிருப்புகளையும் கட்டும் என்று மதிப்பிடப் படுகிறது.

இரண்டாம் திட்டத்தின் குடியிருப்புக்குத் தாற்காலிகமாக அளிக் கப்பட்டுள்ள ரூ. 120 கோடிக்கு விவரம் பின்வருமாறு :

		ரூ. கோடிகளில்
அரசாங்க உதவிபெற்ற தொழிற் குடியிருப்புகள்	...	45
குறைந்த வருமானமுள்ளோர் குடியிருப்புகள்	...	40
சேரி ஒழிப்பும், நகர சுத்தித் தொழிலாளர் குடியிருப்பும்	...	20
கிராமக் குடியிருப்புகள்	...	10
நடுத்தர வருமானமுள்ளோர் குடியிருப்புகள்	...	3
தோட்டத் தொழில் குடியிருப்புகள்	...	2

தொழிலாளர் கொள்கையும் திட்டங்களும்

இப்போதுள்ள தொழிற் சங்கச் சட்டத்தைக் கீழ்க்கண்ட நோக்கங்களோடு திருத்தியமைக்கவேண்டும்: (1) தொழிற் சங்கங்களில் வெளியார்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்; (2) சில நிபந்தனைகளின்பேரில் தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்; (3) தொழிற் சங்க இயக்கம் தன் நிதி வசதிகளைக்கொண்டே தன் நிதி அடிப்படையை விருத்தி செய்துகொள்வது. திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படவேண்டுமானால், தொழிலாளர்களை மேலும் மேலும் நிர்வாகத்தோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு தொழிலிலும், நிர்வாகிகள், நுட்பத் தொழில் வல்லவர்கள், தொழிலாளிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாகக் குழு ஒன்று இருக்கவேண்டும். அவர்கள் நிதி தவிர மற்ற எல்லா விஷயங்களையும்பற்றி விவாதிக்கலாம்.

வேலையாட்களின் சேம நிதித் திட்டத்தில், இதுவரையில் அடங்காத எல்லாத் தொழில்களையும் வியாபார நிறுவனங்களையும் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு அளிக்கப்படவேண்டிய விகிதம் 6¼%-லிருந்து 8¼% ஆக உயர்த்தப்படும். தொழிலாளர் பற்றிய திட்டங்களுக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 29 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகள் வற்புறுத்தப்படும். 19,700 பேர் அதிகமாகப் பயிற்சி பெற வசதிகள் செய்யப்படும்.

பின்தங்கிய வகுப்பாரின் நலன்

மக்கள் தொகையில் சில பகுதியினருக்கு விசேஷ பாதுகாப்பும் உதவியும் தேவை. இவர்கள் (1) 190 இலட்சம் உள்ள ஷெடியூல் வகுப்பினர். இவர்களுக்கு நல்ல தொடர்பு வசதியும், சுகாதாரமும், கல்வியும் தேவை; (2) 510 இலட்சம் உள்ள ஷெடியூல் சாதியினர்; (3) மற்றப் பின்தங்கிய வகுப்பினர்; இவர்களில், முன்பு 'குற்றப் பரம்பரையினர்' எனப்பட்ட 40 இலட்சம் மக்கள் அடங்குவர். இரண்டாம் திட்டத்தில் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக ரூ. 91 கோடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விவசாயக் குடியேற்றங்களில் மாறிமாறிப் பயிர்த்தொழில் செய்யும் சில பூர்வீகக் குடிகளைக் குடியிருப்புகளில் அமர்த்துவது முக்கியமாகக் கவனிக்கப்படும். இவற்றில் அவர்களுக்கு உழும் காளைகள், விவசாயக் கருவிகள், விதைகள், மாதிரிப் பண்ணைகள், சுத்தமான குடிதண்ணீர், பொதுச் சுகாதார வசதிகள், சேமநல நிலையங்கள், சமூக நிலையங்கள் முதலியவை ஏற்பாடு செய்யப்படும்.

ஷெடியூல் சாதியினருக்குப் பொருளாதார உயர்வு அளிப்பதில் விசேஷ கருத்துச் செலுத்தப்படும். அவர்களுக்கு நிலம் ஒதுக்கப் படும்; கைவினைகளிலும் தொழில்களிலும் பயிற்சியளிக்கப்படும்; உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டுக் கல்வி வசதி விஸ்தரிக்கப்படும்.

சமூக நலன்

முதல் திட்டத்தில் மத்திய அரசாங்கம் ஒரு சமூக நலக் குழுவை ஏற்படுத்தியது. அது இராச்சியங்களிலும் சமூக நலக் குழுக்களை அமைத்தது. ஏற்கெனவே கடந்த மூன்று வருடங்களில், இக் குழு 660 மாதர் நல நிலையங்களையும், 691 சேய் நல நிலையங்களையும், உறுப்புக் குறையுடையவர்களுக்கும் குற்றவாளிகளுக்குமான 151 நிலையங்களையும், பொதுநலப் பணிசெய்யும் 726 நிலையங்களையும் ஆதரித்துள்ளது. நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நல விஸ்தரிப்புத் திட்டத்தை இக் குழு தொடங்கியுள்ளது. இத் திட்டம் ஒவ்வொன்றும் 25 கிராமங்களுக்கு உதவுகிறது. இரண்டாம் திட்டத்தில் இக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு நல விஸ்தரிப்புத் திட்டத்தைத் தொடங்கும், இதனால் திட்ட இறுதியில் மொத்தம் 1,320 நல விஸ்தரிப்புத் திட்டங்கள் இருக்கும். இரண்டாம் திட்டத்தில் இளங்குற்றவாளிகள், சமூக சுகாதாரம், பிச்சைக்காரர் பிரச்சினை ஆகியவையும் கவனிக்கப்படும்.

மதுவிலக்கு

இராச்சிய அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் பெற்ற அனுபவத்தைப் பரிசீலிக்கவும், தேசீய அடிப்படையில் மதுவிலக்குத் திட்டத்தை நடத்தவும் திட்டக் குழுவானது ஒரு தனிக் குழுவை அமைத்தது. இக் குழுவின் அறிக்கை ஆலோசிக்கப் பட்டுவருகிறது. கீழ்வரும் முறையில் இராச்சிய அரசாங்கங்கள் முதல் நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது. (அ) விளம்பரங்கள் செய்வதை நிறுத்திவிடுதல்; (ஆ) பொது விடங்களாகிய உணவு விடுதிகள், மாணவர் விடுதிகள், கிளப்புகள் (clubs) முதலியவற்றில் குடிப்பதை நிறுத்துதல்; (இ) மது பானக் கடைகளைக் குறைப்பதற்கும், வாரத்தில் அதிக நாட்கள் மதுபானக் கடைகளை மூடிவைப்பதற்கும், மதுபானக் கடைகளுக்கு அளிக்கப்படும் மதுவின் அளவைக் குறைப்பதற்கும், ஆரோக்கிய மான தீங்கில்லாத பானங்களை உற்பத்தி செய்வதற்கும், பொழுது போக்கு நிலையங்களை அமைக்கத் தனியார் இயக்கங்களுக்கு உதவு வதற்கும் திட்டங்களைத் தீட்டக் குழுக்களை ஏற்படுத்துதல்.

இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வளித்தல்

முதல் திட்ட இறுதியில் 23 இலட்ச மக்கள் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வந்து, நிலம் அளிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கடன்களும் மானியங்களும் கொடுக்கப்பட்டன. நகரப்புறங்களில் 12 இலட்சம் மக்கள், காலியாக்கப்பட்ட வீடுகளில் அமர்த்தப்பட்டனர். இன்னும் 10 இலட்சம் பேர் 2,00,000 புதிய வீடுகளில் குடிவைக்கப்பட்டனர். நகரப்புறங்களில் இடம்பெயர்ந்த மக்கள் சிற்றளவுத் தொழில் அல்லது வியாபாரம் நடத்தி வாழ்வதற்காக இராச்சிய அரசாங்கங்கள் ஒரு குடும்பத்திற்கு ரூ. 5,000 வீதம் கடன் கொடுத்திருக்கின்றன. தொழிற் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு, 14 நகரங்கள் புதிதாக உண்டாக்கப்பட்டன. கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 38·3 இலட்சம் மக்கள் இதுவரையில் நாடு பெயர்ந்து வந்துள்ளனர். 3,88,000 குடும்பங்களுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. கிராமங்களிலும் நகரங்களிலும் அரசாங்க உதவியுடன் 3,50,000 குடியிருப்புப் பகுதிகள் கட்டப்படுள்ளன. இன்னும் 1,70,000 குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்டத்தில் பல புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக ரூ. 90 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

3. இந்தியாவின் இயற்கைச் சாதனங்கள்

முன்பு பிரிட்டிஷ் இந்தியாவும் இந்திய இராச்சியங்களும் அடங்கிய இந்திய தீபகற்பமானது, 1947-ல் பிரிவினை செய்யப்பட்ட போது, அடிப்படையான மாறுதலையடைந்தது. இந்தியா அல்லது இந்திய யூனியன் இப்போது ஓர் இணைப்பான பகுதியாகிவிட்டது. இப்போது அதன் எல்லைகள், தெற்கே இந்துமகா சமுத்திரமும், கிழக்கே வங்காள விரிகுடாவுமாகும். எனினும், வடக்கிலும் வடமேற்கிலும் அதன் எல்லைகள் பாகிஸ்தான், ஜம்மு காஷ்மீர் பகுதிகளும், திபேத்து, சிக்கிம், பூடான் ஆகிய இமாசலப் பகுதிகளும், பாகிஸ்தானைச் சேர்ந்த கிழக்கு வங்காளமும் ஆகும். இந்திய இராச்சியங்கள் சமஷ்டி அரசியல் சட்டத்தின்படி யூனியனோடு சேர்க்கப்பட்டு 'ஏ', 'பி', 'சி' இராச்சியங்கள் என்று அழைக்கப்பட்டன. மேலும் 1956ஆம் ஆண்டு இராச்சியப் புனரமைப்புச் சட்டத்தின்படி மீண்டும் சில பகுதிகள் மாற்றியமைக்கப்பட்டன. இது, மொழி அடிப்படையில் நிருவாகப் பகுதிகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற நீண்ட கிளர்ச்சியின் விளைவாகும். இந்தச் சட்டத்தின்படி, 1956 நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்திய யூனியன் 13 'ஏ' பிரிவு இராச்சியங்களும், ஒரு 'பி' பிரிவு இராச்சியமும், ஐந்து 'சி' பிரிவு இராச்சியங்களும் கொண்டதாகும். (பிரிட்டிஷ் ஆட்சியின்போது சுதேச மன்னர்களால் ஆளப்பட்ட) எல்லா 'பி' பிரிவு இராச்சியங்களும் இப்போது 'ஏ' பிரிவு இராச்சியங்களுடன் இணைக்கப்பட்டுவிட்டன. ஜம்மு—காஷ்மீர் மட்டும் 'பி' பிரிவு இராச்சியமாகத் தனித்து நிற்கிறது. பதின்மூன்று 'ஏ' பிரிவு இராச்சியங்களாவன: ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், பீகார், பம்பாய், கேரளம், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம். இந்த இராச்சியங்கள் எல்லாம் மொழி அடிப்

படையில் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன. பம்பாயும் பஞ்சாபும் மட்டும் இரு மொழி இராச்சியங்களாக உள்ளன. 'சி' பிரிவு இராச்சியங்கள் டில்லி, இமாசலப் பிரதேசம், மணிபுரி, திரிபுரா, இலட்சத் தீவுகள், மினிகாய் தீவுகள், அமிந்தீவி தீவுகள் ஆகியவை. இவை இந்திய ஜனாதிபதியால் நியமிக்கப்படும் லெப்டினன்டு கவர்னர் அல்லது பிரதம கமிஷனரால் நேரடியாக மத்திய அரசாங்கத்தினல் நிருவகிக்கப்படுகின்றன. சுதந்திர மடைவற்கு முன்பிருந்த எல்லாச் சுதேச இராச்சியங்களையும் முழுவதும் இணைத்துவிட்டு, அரசப் பிரமுகர்களையும் நீக்கிவிட்ட பிறகு, இந்தியாவிலிருந்து முக்கியமான படைமானியச் (feudalism) சின்னங்கள் மறைந்துவிட்டன.

இந்தியாவும் பிரான்சு அரசாங்கமும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக பிரஞ்சுப் பகுதிகள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டன. இன்னும் இந்திய அரசியலுக்கு உட்படாத போர்ச்சுகீசியப் பகுதிகளும் காலக்கிரமத்தில் இந்திய யூனியனின் நில எல்லைக்குள் சேர்க்கப்பட்டுவிடும்[1]. பிரிவினையால் வடமேற்கிலும் வடக்கிலும் இந்திய யூனியன் எல்லையில் பலக் குறைவு ஏற்பட்டுவிட்டது. ஏனெனின் கைபர் கணவாயாகிய கடினமான பகுதி அகற்றப்பட்டுவிட்டதால், நம் நாடு பகைவர் களின் மெதுவான ஊடுருவல்களுக்கு இலக்காகிவிட்டது. ஏன்? பெரிய அளவில் தாக்குதலுக்குக்கூட இலக்காகிவிடக்கூடும். கிழக்குப் பாகிஸ்தான் உண்டாக்கப்பட்டதால், வட கிழக்கில் ஏற்கெனவே ஒரு பிரச்சினை கிளம்பிவிட்டது. இப் பிரச்சினையை வடகிழக்கு எல்லைப் பகுதி (NEFA) தான் சமாளிக்கவேண்டும்.

நம் தேசீய சாதனங்கள் இயற்கையிலிருந்து நாம் பெறக் கூடிய கொடைகளே என்று ஒருவாறு கூறலாம். ஆனல், மக்கள் தேவைகளை நிறைவேற்றக்கூடிய காற்று, தண்ணீர், சூரிய வெளிச்சம், பிராணிகள், தாவரங்கள் எல்லாமே இதில் அடங்கும். இவ்வாறே மனிதன் தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு, மாற்றியமைத்துக்கொண்ட பொருள்களும் சக்தி களுங்கூட நம் தேசீய சாதனங்களாகும். மனிதன் இயற்கையை மேலும் கட்டுப்படுத்துவதற்காகச் செய்யும் ஒவ்வொரு புத்தமைப்பும் (invention) நமக்குக் கிடைக்கும் மொத்த சாதனங்களை அதிகரிக்கச் செய்கிறது. மனிதனும் அவனுடைய சாதனங்களும் 'வேலைக் குதவும் பரஸ்பரப் பொருள்கள்' (functional reciprocals) என்று கூறப்படுவது முற்றிலும் சரியே. இந்தச் சாதனங்களில் நிலம்

[1] இம் மூல நூல் எழுதப்பெற்ற காலத்தில் இருந்த நிலைமை.

(மேற்புறமுள்ள நிலம்) முக்கியமான இடத்தைப்பெறும் என்று கருதப்பட்டது. தொழிற்புரட்சிக்கு முன்பு நிலத்தைப் பயன் படுத்துதலே பெரும்பாலான மக்களின் தொழிலாக இருந்தது. நீராவி இயந்திரம், நீர் டர்பைன் (turbine), எண்ணெய் இயந்திரம் ஆகியவற்றால் உற்பத்தி செய்யும் முறையினால் உண்டான புரட்சியானது, நிலத்தின் மேற்புற மதிப்பைக் குறைத்து, அதனுள் இருக்கும் நிலக்கரி, பெட்ரோலியம், உலோகங்கள் ஆகியவை களுக்கு அதிக மதிப்பை உண்டாக்கிவிட்டது. இவ்வாறு இன்றைய உலகில் உணவு, கச்சாப் பொருள்கள் ஆகியவை சம்பந்தமான தொழில்களைவிட, ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உலோகத் தொழிற்சாலைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும். ஆனால் இந்தியாவின் முக்கியத் தொழில் இன்னும் விவசாயம்தான். கனவியல் தொழில்களை விருத்திசெய்வதற்கு நம்மிடமுள்ள சாதனங்களும், நம்மிடம் இயந்திரத் தொழில் நாகரிகத்தைத் தோற்றுவிப்பதற்காக உள்ள சக்திகளும், இது வரையில் நாம் அனுபவித்துவந்த விவசாயப் பொருளாதாரத்தை மாற்றி வேறு பொருளாதாரத்தை நாட்ட நம்பிக்கையளிக் கின்றன. நம்முடைய நிலக்கரி, இரும்பு, மனித ஆற்றல் முதலிய வற்றைக்கொண்டு நாம் சீனாவுக்கு நிகராக ஆசியாவில் தலைமை பெற்றோ, ஆசியாவின் தொழில் வளர்ச்சியில் சிறப்பான இடம் பெற்றோ விளங்க முடியும் என்று ஓர் அமெரிக்க நில நூல் பேராசிரியர் நம்புகிறார்.[1]

மண் வளம்

இந்தியா ஒரு கண்டம் போன்ற அளவுடையதாய்ப் பல வகையான மண் வளங்களையும் தட்பவெப்பங்களையும் பெற்றிருக் கிறது. இங்கு நான்கு வெவ்வேறு விதமான மண்கள் காணப் படுகின்றன. அவை : (1) பருத்தி விளைவிப்பதற்கேற்ற கறுப்பு மண் அல்லது கரிசல் மண் : இது பம்பாய், சௌராஷ்டிரம், மத்தியப் பிரதேசத்தில் சில பகுதிகள், ஹைதராபாத், சென்னை ஆகிய இடங்களில் இருக்கிறது. இதில் பொட்டாசும் சுண்ணாம்பும் உள்ளன ; ஆனால், நைட்டிரஜன், பாஸ்வாரீக அமிலம், அங்ககப் பொருள்கள் (organic matter) ஆகியவை குறைவு ; (2) சென்னை, மைசூர், தென்கிழக்குப் பம்பாய் முழுவதிலும், மத்தியப் பிரதேசம், பீகார், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தானம் ஆகியவற்றில் சில

[1] 'இந்தியாவின் தாதுப்பொருள் செல்வமும் அரசியலின் எதிர்காலமும்' என்ற கட்டுரையில் சார்லஸ் H. பெஹ்ரே கூறுகிறார் (Foreign Affairs, October, 1943).

பகுதிகளிலும் காணப்படும் சிவப்பு மண்; (3) பொட்டாசு, பாஸ்வாரிக அமிலம், சுண்ணும்பு ஆகியவை குறைவாக உள்ள லேடிரைட்டு (laterite) மண்: இது ஒரிசாவின் சில பாகங்களிலும், பம்பாய், மலபார், அஸ்ஸாம் ஆகிய இடங்களிலும் உள்ளது. பருவக் காற்றினுல் பாறைகள் சிதைந்து இது உண்டாகின்றது. (4) பஞ்சாபின் சில பகுதிகளிலும், உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், சிந்து கங்கைச் சமவெளி முழுவதிலும் உள்ள வண்டல்மண் (alluvical soil): இது பாஸ்வாரிக அமிலம், நைட்டிரஜன், இலை மக்கு (humus) ஆகியவற்றைக் குறைவாகப் பெற்றிருக்கிறது.[1]

நம் நாட்டின் மொத்த பூகோளப் பரப்பு 8,110 இலட்சம் ஏக்கர். ஆனுல் 7,220 இலட்சம் ஏக்கருக்கு மட்டும்தான் உபயோகத்திற்கான புள்ளிவிவரங்கள் கிடைத்திருக்கின்றன. புள்ளிவிவரம் கிடைக்காத, பயன்படுத்த முடியாத நிலம் மலைகளும், பாலைவனங்களும், நுழைய முடியாத காடுகளும் கொண்டது. கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து இந்தியாவின் மண்வளத்தைப் பொறுத்தவரையில் விவசாய சாதனங்கள் எத்தகையவை என்று மதிப்பிடலாம்.[2]

1954-55-ல் இந்திய யூனியனில் உள்ள நிலத்தின் பரப்பு
(பத்து இலட்சம் ஏக்கரில்)

வகை	ஏக்கர்	சதவீதம்
மொத்தப் பரப்பு ...	722	100
காடுகள் ...	133	18
பயிர்த்தொழிலுக்குக் கிடைக்காதது ...	122	17
உழப்படாத நிலம் ...	57	8
உழப்படாத நிலம் நீங்கலாகப் பயிர் செய்யப்படாத மற்ற நிலம் ...	95	13
விதைக்கப்பட்ட நிகரப் பரப்பு ...	315	44

காட்டில் அடங்கியுள்ள நிலத்தை நீக்கிவிட்டால், மீதியுள்ள நிலத்தில் உழப்படாத நிலம் உள்ளிட்டுப் பயிர்செய்யப்பட்ட நிலம் 63·2 சதவீதம் ஆகிறது. மீதியுள்ள 34·8 சதவீதத்தில், நகரங்களில் உள்ள 6 சதவீத நிலத்தைக் கழித்துவிட்டால், மீதியுள்ள 29 சதவீத நிலத்தைப் பயிர்செய்வதற்குத் தகுதியான

[1] Census of India, Paper No. 2, 1952 p. 15.
[2] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' —1956 பக்கம் 322.

நிலம் என்று கருதலாம். 'பயிர்த் தொழிலுக்குக் கிடைக்காதது' என்று அதிகார பூர்வமாக நிலத்தை வகையீடு செய்திருப்பது சிறிது தவறானது. நவீன விஞ்ஞான முன்னேற்றங்களின் காரணமாகப் பயிர்செய்யக்கூடிய தரிசு நிலம் (அல்லது உழப்படாத நிலம் நீங்கலாக மற்றப் பயிர் செய்யக்கூடிய நிலம்), பயிர்த் தொழிலுக்குக் கிடைக்காத நிலம் என்ற பாகுபாடு மிகவும் கடின மானது. இப்பொழுது உழப்படாத நிலத்தின் அளவைச் சிறந்த மாற்றுப்பயிர் முறையினல் குறைக்கலாம். நில மீட்புத் திட்டங் களினல், பயிர் செய்யக்கூடிய தரிசு நிலத்தில் உழுது பயிர் செய்யலாம்.[1]

அமெரிக்கா போன்ற நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்தும், பண்ணை உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி குறைந்தும் இருப் பதனல், விவசாயத்தின் பொருளாதார எதிர் காலம் மாறிக் கொண்டிருக்கிறது. அங்குச் சமூகப் போக்குகள்பற்றிய ஹிமுவர் குழுவானது, வீணைக் கிடைக்கும் 30,00,00,000 ஏக்கர் நிலத்தைத் திருத்தி, நீர் வடித்து, நீர்ப்பாசனம் செய்து பயிர் செய்யலாம் என்றும், மேலும் 30,00,00,000 ஏக்கர் மேய்ச்சல் நிலமாக இருப்பதை உழுது தோட்டப்பயிர் விளைவிக்கலாம் என்றும் கூறியுள்ளது. இந்த வகையாக நிலத்தைப் பிரித்தால், பயிர்த் தொழிலுக்குக் கிடைக்காத நிலம் என்றே எதுவும் இருக்க முடியாது. அமெரிக்காவில் விவசாயமல்லாத வேலைகளுக்கு நிலத்தை விஸ்தரிப்பதுதான் பிரச்சினை; நம் நாட்டில் விவசாய வேலை களுக்கு நிலத்தை மேலும் அதிகமாக எப்படிப் பயன்படுத்துவது என்பது முக்கியப் பிரச்சினை.

[1] 'அரசாங்கப் புள்ளி விவரங்களின்படி, பயிர் செய்யப்படக்கூடிய நிலத்தில் மூன்றில் ஒரு பங்கு வறிதே இருக்கிறது; உழமுடியாமல் இல்லை என்பது இந்தியாவில் ஒரு வியப்பான செய்தியாகும். இந்த உழக்கூடிய நிலம் பெரும்பாலும் எப்பொழுதும் உழப்பட்டதே இல்லை. இதற்கு ஒரு காரணம், ஆடு மாடுகளை மேய்ப்பதற்காகப் பெரிய நிலப் பரப்புகளைப் பயிர்செய்யா மலே விட்டுவிட வேண்டுமென்று மக்கள் வற்புறுத்துகிறார்கள். இந்தியா வின் சில பாகங்களில், ஆட்சி சரியாக இல்லாததால், மிகப் பரந்த நல்ல நிலங்கள் பயிர் செய்யப்படாமல் இருக்கின்றன.....சில தரிசு நிலங்கள் இன்னும் உழப்படாமலும் சீர்திருத்தப்படாமலும் இருக்கின்றன....நவீன நில அரிப்புத் தடுப்பு முறைகளாலும் நிலமீட்பு முறைகளாலும், பயிர் செய்ய முடியாதென்று இந்தியாவில் கூறப்படும் நிலத்தின் பெரும்பகுதி பயனுள்ள முறையில் பயிர் செய்யப்பட முடியும்'.

'இந்திய விவசாயப் பிரச்சினைகள்' — சாம் ஹிக்கின்பாதம், பசிபிக் தொடர்புக் கழகம், நியூயார்க், 1942, p. 29. 'Pacific Affairs' (ஜூன், 1942) S. சந்திரசேகர், 'இந்தியாவில் ஜனத்தொகை நெருக்கடி' என்னும் கட்டுரையில் இதை மேற்கோள் காட்டியிருக்கிறார்.

மழைப்பொழிவு

இந்தியாவில் ஆண்டுதோறும் பலவிடங்களில் உண்டாகும் மழைப்பொழிவுக்கும், பஞ்சம், பற்றுக்குறை ஆகியவைகளுக்கும் தொடர்பு உண்டென்று கூறப்படுகிறது. அஸ்ஸாமிலும், மேற்குத் தொடர்ச்சி மலையருகிலுள்ள பகுதிகளிலும் மிகுதியான மழை பொழிகிறது. தென்னிந்தியாவில் ஒரே அளவு வெப்பமான பகுதிகள் உள்ளன. மேற்கிலும் வடமேற்கிலும், வெப்பத்திலும் குளிர்ச்சியிலும் குறிப்பிடத் தகுந்த வித்தியாசம் இருக்கிறது. வடக்கிலும் வடமேற்கிலும் பயிர்செய்யும் பருவங்கள் இரண்டு உள்ளன. அவை, மழை காலமும் (kharif) குளிர் காலமும்,(rabi). பீகாரிலும், வங்காளத்தின் சில பகுதிகளிலும் மூன்று பருவங்கள் உள்ளன. அவை, மழை ஆரம்பப் பருவம், மழை முடிவுப் பருவம், குளிர்ப் பருவம்.[1] பயிர் செய்யும் முறை சீதோஷ்ணத்தைப் பொறுத்து மாறுபடும். மிகுந்த மழையுள்ள வங்காளம், பீகார் போன்ற சில இடங்களில் நெல் அதிகமாக விளைகிறது. கந்தேஷ் போன்ற மாவட்டங்களில், நெல்லுக்குப் பதில் பருத்தியும் தினைகளும் பயிராகின்றன.

மழையைப் பொறுத்து, நம் நாடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். அவை : (1) மிகுந்த மழையுள்ள அஸ்ஸாம், மேற்கு மலைத் தொடரை அடுத்துள்ள பகுதிகள் போன்றவை; (2) போதுமான மழையும், ஈரத்தை இழுத்து வைத்துக்கொள்ளும் தன்மையுடைய கரிசல் மண்ணும் உள்ள மத்தியப் பிரதேசமும், மத்திய இந்தியாவின் பெரும் பகுதியும்; (3) நாட்டின் மிக வறண்ட பகுதிகள்—பஞ்சாப், ராஜஸ்தான் சமவெளிகள். மழை பெய்வது நிச்சயமில்லாமையால் பயிர் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் உழவர்கள் பயிர்செய்யும் மாவட்டங்கள்தாம் மிகுதியும் ப்ஞ்சத்திற்கு இடமாக உள்ளன. இவை ராஜஸ்தானில் பெரும் பகுதியும், தக்காணமும், சென்னையும் ஆகும். பஞ்சாப் போன்ற மற்றப் ப்குதிகளில் தண்ணீர் கிடைப்பது உறுதியாயிருந்தலொழிய விவசாயி பயிர் செய்வதில்லை. அஸ்ஸாமில் வருடாந்தர மழை 90" முதல் 160" வரை பெய்யும். பம்பாயில் கடற்கரைப் பகுதிகளிலும், மலைத் தொடரை யடுத்துள்ள மாவட்டங்களிலும் மழைப்பொழிவு 60"

[1] வங்காளத்தில் மூன்று போகம் நெல் விளைகிறது. (1) அவுஸ் அல்லது இலையுதிர் காலப் பயிர்; மேடான நிலங்களில் ஏப்ரல், மேயில் விதைத்து, ஆகஸ்டு, செப்டம்பரில் அறுவடையாவது; (2) ஆமன் அல்லது மழை காலப் பயிர் தாழ்வான நிலங்களில், மே, ஜூனில் விதைத்து, டிசம்பர், ஜனவரியில் அறுவடையாவது; (3) போரோ அல்லது கோடைப் பயிர், பள்ளங்களிலும் சதுப்பு நிலங்களிலும் ஜனவரி, பிப்ரவரியில் விதைத்து, ஏப்ரல், மேயில் அறுவடையாவது.

முதல் 90" வரை இருக்கும். வருடாந்தர மழைப் பொழிவில் வெவ்வேறிடங்களில் இவ்வாறு மிகுந்த வேற்றுமை இருப்பதோடு, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளும் வேற்றுமை இருக்கிறது என்பதை அறியவேண்டும். அஸ்ஸாமில் சிரபுஞ்சியில் சராசரி மழைப்பொழிவு 425 அங்குலம். ராஜஸ்தானில் சில பகுதிகளில் சராசரி 5 அங்குலத்திற்கும் குறைவாக இருக்கிறது. பீகாரில் சிகோவ்வியில் ஆண்டு தோறும் 90" மழை பெய்கிறது. இதற்கு மேற்கே 9 மைல்களுக்கு அப்பால், ராஜ்காட்டில் 45" முதல் 47" வரைதான் பெய்கிறது. ராஜ்காட்டிற்கு 12 மைல் தென்மேற்கில் 26" தான் பெய்கிறது.

கீழ்க்கண்ட அட்டவணை 'ஏ' பிரிவு இராச்சியங்களில் 'சாதாரண' வருடாந்தர மழைப்பொழிவைக் (அங்குலத்தில்) காட்டுகிறது.

அஸ்ஸாம்		99·73
பீகார்		51·25
பம்பாய்	தக்காணம்	32·89
	குஜராத்	37·04
	கொங்கணி	107·50
	சௌராஷ்டிரம்-கட்சு	19·84
ஒரிஸ்ஸா		58·98
பஞ்சாப்		24·11
மத்தியப் பிரதேசம்	பீரார்	33·66
	மத்தியப் பிரதேசம்	52·20
சென்னை	வடக்குக் கடற்கரை	38·25
	தக்காணம்	23·98
	தெற்குக் கடற்கரை	36·48
	மலபார்	108·29
உத்தரப் பிரதேசம்		38·95
மேற்கு வங்காளம்		63·41

ஆனால், இந்தச் 'சாதாரண' மழையிலிருந்து அடிக்கடி அதிக மாறுதல் ஏற்படுவதுண்டு. இது விவசாயிகளுக்கு மிகவும் கவலையைத் தரும். (உதாரணமாக, 1949-ல் சாதாரண நிலையிலிருந்து இந்த மாறுதல் பீராரில் +44 ஆகவும், ராஜஸ்தானில்—19 ஆகவும் இருந்தது).

இந்தியாவில் மழையின் நிச்சயமற்ற தன்மை பல விதங்களாகக் காணப்படுகிறது. பருவ மழை தாமதமாக வரலாம்; அல்லது ஜூலை, ஆகஸ்டில் அதிக மழை பெய்வது விவசாய வேலையைத் தாமதப்படுத்தலாம்; அல்லது மழை போதிய காலத்திற்குப் பெய்யாமலும், பரவிப் பெய்யாமலும் இருக்கலாம். இந்தப் பெரிய நாட்டில் எந்த ஆண்டிலாவது, எங்காவது ஓரிடத்தில் முழுப் பஞ்சமோ, அரைகுறையான பஞ்சமோ ஏற்படாமல் இருப்பதில்லை. இந்த நிலைமையில் உதவுவதற்குக் காடுகளை வளர்ப்பதும், நீர்ப்

பாசனம் செய்வதும் ஆகிய இரண்டு வழிகள்தாம் உள்ளன. மழையின் நிச்சயமற்ற தன்மையை நம்பி வாழும் இந் நாட்டு மக்கள், தமக்கு அதிர்ஷ்டமோ துரதிருஷ்டமோ வரும்போது அதைத் தம் விதி என்று எண்ணி அமைவதில் ஆச்சரியம் ஒன்று மில்லே.

காடுகள்

புதுப்பிக்கப்படக்கூடிய இயற்கைச் சாதனங்கள் என்ற வகையில் காடுகளேச் சேர்க்கலாம். காடுகள் உஷ்ணத்தைக் குறைத்து, ஈரத்தை இழுத்து வைத்துக்கொள்வதால் விவசாயச் செழிப்பிற்குக் காரணமாகின்றன. மேகங்களிலுள்ள நீராவியை உறையச் செய்து மழை பெய்யும்படி செய்வதற்கு அவை உதவுகின்றன. அவை தண்ணீரைச் சேகரித்து வைத்துக்கொண்டு, வெள்ளப் பெருக்கு உண்டாகாமல் தடுப்பதால், மண்ணேப் பாதுகாத்து அதன் வளத்தையும் பெருக்குகின்றன. சோட்டா நாகபுரியில் உள்ள மலேயடிவாரக் காடுகளே அழித்துவிட்டதனுல்தான் ஒரிஸ்ஸாவில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறதென்று கூறப்படுகிறது. ‘நில அரிப்பை அவை தடுப்பதால், நல்ல மண் ஆறுகளால் அடித்துக்கொண்டுபோய் வீணுகாமல் அவை பாதுகாக்கின்றன.’ ‘பஞ்ச காலங்களில் அவை நமக்கு ஒரு மதிப்பு மிக்க செல்வமாக இருக்கின்றன. ஏனெனின், அவை அதிக தீவனத்தையும், உணவாகக்கூடிய பழங்களேயும், கிழங்குகளேயும் கொடுக்கின்றன’. இந்தியா போன்ற நாடுகளில், காடுகள் வீடுகளுக்கு வேண்டிய விறகையும் கரியையும், தொழிற்சாலேகளுக்கு வேண்டிய கரியையும் அளிக்கின்றன. காட்டிலிருந்து கிடைக்கும் மரத்தைக் கொண்டு விவசாயக் கருவிகளேச் செய்யலாம்; இலேக் காளான்களேச் சிறப்பான உரமாகப் பயன் படுத்தலாம். மேலும், வளரும் பொருளாதாரத்தில் காடுகள் காகிதம் செய்வதற்கு வேண்டிய பொருளேயும் கொடுக்கின்றன. உலகத்தில் 80% முதல் 90% வரை செய்யப்படும் காகிதம் மரநாரிலிருந்துதான் செய்யப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் காடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மே, 1952-ல் காட்டுக் கொள்கைத் தீர்மானம் கீழ் வருமாறு யோசனே கூறுகிறது. ‘இந்தியா தன் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கைக் காடுகளாகவே வைத்திருக்க வேண்டும். இமாலயம், தக்காணம், மற்ற மலேப் பகுதிகள் ஆகியவற்றில் நில அரிப்பு ஏற்படுவதனுல் காடுகள் மறைவதை ஈடு செய்ய, மேலும் அதிக சதவீத நிலத்தைக் (சுமார் 60 சதவீதத்தை) காடுகளாகவே வைத்திருப்பது நல்ல பாதுகாப்பு முறையாகும்.

அதிக நில அரிப்பும், நிலம் மேடு பள்ளமில்லாமலும் இருக்கும் சம நிலங்களில் இந்த விகிதத்தை 20% ஆகக் குறைக்கலாம். விவசாயத்திற்கு அதிக நிலம் வேண்டியிருப்பதால் ஆற்றங்கரைகளிலும், விவசாயத்திற்குத் தகுதியில்லாத மற்ற இடங்களிலும் காடுகளை விஸ்தரிக்க முக்கியமாக முயற்சி செய்யவேண்டும்.[1]

1949-ல் இந்திய யூனியனில் இருந்த மொத்த 6,630 இலட்சம் ஏக்கரில் 740 இலட்சம் ஏக்கர் காடுகளாக இருந்தது. 1949—50 ல் இந்தப் பரப்பை 1,477 இலட்சம் ஏக்கர் என்று 'இந்தியக் காடுகளின் புள்ளி இயல்' கூறுகிறது. இது மொத்த நிலப்பரப்பில் 18% ஆகும். 1950-ல் 'புள்ளி இயல் சுருக்கம்', 1948—49-ல் காடுகளின் பரப்பு மொத்த நிலப்பரப்பில் 13·5% என்று குறிப்பிடுகிறது. திட்டக் குழு கூறுவதுபோல, 'காடுகளாக இருக்கும் நிலப்பரப்பைப் பற்றிய சரியான புள்ளி விவரம் கிடைக்கவில்லை'. இரண்டாம் திட்டத்தின்படி மொத்த நிலப்பரப்பில் 22% காடுகளாக உள்ளது.

எனினும், 1952 தீர்மானத்தின்படி தெளிவாக வரையறுக்கப் பட்ட தேசீயக் கொள்கையானது இந்தியாவை உணவில் தன்னிறைவு பெறச் செய்யவேண்டுமென்ற விருப்பத்தினால் பெரு மாறுதல் அடையக்கூடும். அது, காடுகளை விவசாய நிலங்களாக மாற்ற வேண்டுமென்ற குறுகிய காலத் திட்டம்தான். மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், திருவாங்கூர்-கொச்சி ஆகிய இடங்களில் காடுகள் இருந்த பகுதிகள் அழிக்கப்பட்டு, அங்கு உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. வருடம் ஒரு முறை மரங்களை நடும் விழாவினால் அதிகப் பயனில்லை. அரசாங்க ஆதரவில் காடுகளை வளர்க்கும் தேசீயக் கொள்கையினால் அதிகப் பயன் ஏற்படக்கூடும்.

நிர்வாகத்திற்காகக் காடுகள், ஒதுக்கப்பட்ட காடுகள் (reserved forests), பாதுகாக்கப்பட்ட காடுகள் (protected forests), வகையீடு செய்யப்படாத (unclassed) காடுகள் என மூன்றாகப் பிரிக்கப் பட்டுள்ளன. 'ஒதுக்கப்பட்ட' காடுகள் அரசாங்க உடைமையாகும். 'பாதுகாக்கப்பட்ட' காடுகள் மீது அரசாங்கத்திற்கு உரிமை உண்டு; ஆனால், அவை ஒதுக்கப்பட்ட காடுகளில் சேரவில்லை. அரசாங்கமானது 20 வருட காலத்திற்கு மேற்படாமல் எந்த மரத் தொகுதியையும் 'ஒதுக்கப்பட்டது' என்றோ, காடுகளில் எந்தப் பகுதியையும் அடைத்துவிடப்பட்டதாகவோ அறிவித்து விடலாம். காட்டிலாகாவின் கீழ் உள்ள மற்ற எல்லாக் காடுகளும் 'வகையீடு செய்யப்படாதவை' யாகும். இவை யன்றிக் காட்டிலாகா

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்'—பக்கம் 285.

வின் கீழ் இல்லாத பெரிய காடுகளும் உண்டு. ஜமீந்தாரி, ஜாகிர்தாரி நில உரிமை முறைகள் ஒழிக்கப்பட்ட பின், 400 இலட்சம் ஏக்கர் காடுகள் இராச்சிய அரசாங்கங்களின் கீழ் வரும்.[1] தனியார் உடைமையாகவோ நிர்வாகத்திலோ இருந்த 200 இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் அரசாங்கத்தின் கீழ் வந்துவிட்டன என்று திட்டக் குழு அறிவிக்கிறது.[2]

ஒதுக்கப்பட்ட காடுகளிலிருந்து கிடைக்கும் மிக்க மதிப்புள்ள பொருள் மரம். இது உள்நாட்டில் ரெயில்வேக்கள் போன்றவை களுக்கு வேண்டிய தேவையை அளிப்பதோடு, ஐரோப்பாவில் வெளி நாட்டுச் சந்தைகளுக்கும் செல்கிறது. 1949—53-ல் காடுகளிலிருந்து மரம், மரச்சோறு, விறகு, கரி ஆகிய முக்கியப் பொருள்களும், பிரம்பு, மருந்துச் செடிகள், வாசனைப் பொருள்கள், கோந்து, அரக்கு, ரப்பர் முதலிய சிற்றளவு உற்பத்திப் பொருள்களும் எவ்வளவு கிடைத்தன என்பது கீழ்வரும் அட்டவணையில் காட்டப் பட்டிருக்கிறது.[3]

வருடம்	முக்கிய காட்டு விளைச்சல் — அளவு 1000 கன அடிகளில்	முக்கிய காட்டு விளைச்சல் — மதிப்பு 1000 ரூ. களில்	சிற்றளவு காட்டு விளைச்சலின் மதிப்பு 1000 ரூ. களில்
1950—51	5,57,588	1,90,807	69,248
1951—52	5,18,784	1,97,601	70,588
1952—53	4,48,324	1,74,838	59,401
1953—54	4,37,248	1,74,558	63,077
1954—55	5,08,001	2,16,784	77,387

காடுகளாக உள்ள இவ்வளவு அதிகமான சக்தி வாய்ந்த சாத னங்கள் இருப்பதைப் பார்த்தால், நாம் எவ்வளவு சாதிக்கலாம், இப்பொழுது எவ்வளவு சாதித்திருக்கிறோம் என்னும் இரண்டிற்கும் உள்ள வேற்றுமை விளங்கும். 1878-லேயே இந்தியர்களைக் காட்டுத் தொழிலில் பயிற்றும் முறை ஆரம்பிக்கப்பட்டது. காகித உற்பத்தி போன்ற சில தொழில்களில் அரசாங்கம் நம் சாதனங்களை வியாபார முறையில் பயன்படுத்த முயற்சி செய்தது. காகிதத்தில் நாம் தன்னிறைவு பெற முடியுமாயினும், இன்னும் நாம் அந்நிய

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்'—பக்கம் 286.
[2] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்'—பக்கம் 301,
[3] 'இந்தியா 1958'—பக்கம் 266-67.

நாடுகளிலிருந்துதான் காகிதத்தை இறக்குமதி செய்கிறோம். இந்திய அரசாங்கம் 'சிறிய உற்பத்திப் பொருள்கள்' (minor products) என்று அழைக்கும் நம் பரந்த காடுபடு பொருள்களைத் தொழில்களுக்குப் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் இன்னும் சாத்தியக் கூறுகளாகவே உள்ளன. எதிர் காலத்தில் காகித உற்பத்தி தவிர, ரப்பர், டர்பன்டைன் எண்ணெய், மருந்துச் செடிகள் முதலியவற்றை உற்பத்தி செய்ய இடமிருக்கிறது. இதனால் நாம் காடுகளை வரம்பின்றி அழிப்பதை நிறுத்துவதோடன்றி, அரசாங்கத்தின் உதவியால் இப்போதுள்ள காடுகளை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்து, மேலும் அதிகமான ஒதுக்கப் பட்ட காடுகளையும் தோட்டங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

முதல் திட்டத்தில் காடுகள்

முதல் திட்டம் காடு வளர்ப்புக்காக ரூ. 9·6 கோடி அளித்தது. காடு வளர்ப்பதற்கும், காட்டுத் தொடர்பு வசதிகளுக்கும், காட்டு நிருவாகத்தை வலுப்படுத்துவதற்கும், கிராமத் தோட்டங்கள், சிறிய அளவுள்ள தோட்டங்கள் ஆகியவற்றை உண்டாக்குவதற்கும் ஆன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 75,000 ஏக்கருக்கு மேற் பட்ட பரப்பில் காடுகளை வளர்த்துத் தாவரங்கள் திரும்ப உண்டாக்கப்பட்டன. இரண்டாம் திட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டங்களுக்காக ரூ. 27 கோடி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.[1]

தண்ணீரும் நீர்ப்பாசனமும்

முற்றிலும் மழையையே நம்பியிருக்கும் அதிக நிலங்களை யுடைய இந்தியா போன்ற நாட்டில், நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்துத்தான் விவசாய உற்பத்தியும் அபிவிருத்தியும் இருக்கும் என்பது கூருமலே விளங்கும். ஏனெனின், இங்குப் பெய்யும் மழையின் அளவு விவசாயத்திற்குச் சிறிதும் போதாது. விவசாயத் திற்குப் போதுமான அளவு மிகுந்த மழை பெய்தாலும், அது நன்கு பரவலாக வேண்டிய அளவு பெய்வதைப் பொறுத்தே விளைச்சல் உண்டாகும். அன்றியும், மழைக் காலப் பயிரையும், குளிர்காலப் பயிரையும் (rabi) விளைவிப்பதற்கு நீர்ப்பாசனம் வேண்டும். உலகத் தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் இயற்கை சில அனுகூலங்களைத் தந்திருக்கிறது. இமாலயப் பனிக் கட்டிகளால் ஆண்டு முழுவதும் தண்ணீரைப் பெறும் கங்கை

[1] விவரங்கள் 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 302 முதல்,

போன்ற நதிகளினால் நீர்ப்பாசன வசதிகளை வேறெங்கும் இல்லாத அளவுக்குச் செய்யலாம். இதனோடு நல்ல வளமுள்ள வண்டல் மண்ணும் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு சர் சார்லஸ் டிரெவ்லியான், 'இந்தியாவில் நீர்ப்பாசனம்தான் மிக முக்கியம். நிலத்தைவிடத் தண்ணீர் அதிக மதிப்புள்ளது. ஏனெனில், நிலத்தில் நீரைப் பாய்ச்சினால், அதன் விளைச்சல் ஆறு மடங்காகிறது; அல்லது பொதுவாக அதிகரிக்கிறது. ஒன்றுமே விளையாத நிலத்தில்கூட அது விளைச்சலை உண்டாக்குகிறது' என்று கூறினர்.

பெரிய திட்டங்கள் என்று சொல்லப்படுகிற இந்தியக் கால்வாய்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, ஆற்றில் வெள்ளம் வரும் போது தண்ணீரைக் கொண்டுசெல்லும் வெள்ளக் கால்வாய்கள். இவை வறண்ட காலத்தில் பயனற்றவையாகும். மற்றொன்று, ஆண்டு முழுவதும் நீர் ஓடும் கால்வாய்கள். இவற்றில் முக்கியமானது சுக்கூர் அணைத் திட்டம். இது இப்போது பாகிஸ்தானில் உள்ளது. இதன் அணை சிந்து நதிக்குக் குறுக்கே ஒரு மைல் அகலமாக உள்ளது.

கால்வாய்ப் பாய்ச்சல் தவிர, கிணறுகளாலும் ஏரிகளாலும் நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. இந்தியாவில் மிகப் பழங்காலம் தொட்டே ஏரிகள் உபயோகத்தில் இருந்தன. இவை கிராம மக்களின் கூட்டு உழைப்பால் கட்டப்பட்டவை. பொதுவாக இவை பருவ மழைகளால் நிரம்பும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அரசர்களால் கட்டப்பட்டு, ஒவ்வொன்றும் மூன்று முதல் நான்காயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்சக்கூடிய ஏரிகள் இன்றும் இந்தியாவில் உள்ளன. இதுபோலவே குறிப்பிட்ட தலங்களுக்கு உதவும் 'மேட்டுப் பாசனமும்' (terrace irrigation) இந்தியாவின் சில பகுதிகளில் உள்ளது. நாட்டில் எங்கும் கிணற்றுப் பாசனம் காணப்படுகிறது. அது உழவர்களின் வறுமைக்கு ஏற்றதாகவும், கட்டுவதற்கு மலிவாகவும், வேலை செய்வதற்கு எளிதாகவும் இருக்கிறது. கிணறுகளிலிருந்து நீரை இறைப்பதற்கு இந்தியர்கள் செய்யும் உபாயங்களை உலகில் வேறெங்கும் காண முடியாது. 1893-லேயே டாக்டர் வோயல்க்கர் (Voelcker), 'இந்திய விவசாயத்தில் கிணற்றுப் பாசனத்தினால் நீர் இறைத்துப் பயிர்செய்யும் சிறப்புப்போல், வேறெதுவும் என் மனத்தைக் கவரவில்லை' என்று கூறினர்.[1] கிணறும் கால்வாயும் நீர் அளிக்கக்கூடிய இடங்களில், உழவர்கள் கிணற்று நீரையே உபயோகிப்பது, கிணற்று நீரையும் கால்வாய் நீரையும் பகுத்தாயுமாறு வோயல்க்கரைத் தூண்டிற்று.

[1] 'விவசாயத்தைப் பற்றிய அறிக்கை'—பக்கம் 73.

இந்தப் பகுத்தாய்வினுல் வெளிப்பட்ட உண்மை என்னவென்ருல், ஒரு காலன் (gallan) கால்வாய் நீரில் 15 கிரெய்ன் திடப்பொருள்களே உள்ளன. ஆனுல், கிணற்று நீரில் 82 கிரெய்ன் திடப்பொருள்கள் உள்ளன. கிணற்று நீரில், சோடா, நைட்டிரேட்டுகள், குளோரைடுகள், சல்பேட்டுகள் ஆகியவை அதிகமாக இருந்தன. இந்தியாவில் கிணற்றுப் பாசனம், நீர்ப்பாசனம் பெறும் மொத்த நிலத்தில் கால் பாகத்திற்குமேல் ஆகும்.

பழங்காலத்திலிருந்தே இந்திய அரசர்கள் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார்கள். கிணறுகளையும் ஏரிகளையும் தோண்டுவது ஒரு பெரிய சமூகப் பணியாகக் கருதப்பட்டது. ஏன்? சமயப் பணியாகவுங்கூடக் கருதப்பட்டது என்னலாம். முகலாயர்கள் காலத்தில் கட்டப்பட்ட கால்வாய்கள் இன்னும் இருந்து, அவர்களுடைய முன்யோசனையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆனுல், 1880-லேயே பஞ்சக் குழுவானது, பஞ்சத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் அவசரமானவை என்று கூறியிருக்கவும், சமீப காலம் வரையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்று ஒன்றும் உருப்படியாகச் செய்யப்படவில்லை. அரசாங்கத்தினுல் திரட்டப்பட்ட மூலதன சாதனங்களில் பெரும் பகுதி ரெயில்வேக்களின் வளர்ச்சிக்கே செலவிடப்பட்டது. இந்தியாவில் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்தவேண்டியதில்லை. பெரிய வேலைகளில் நீர்ப்பாசனத்தை வறண்ட பகுதிகளுக்கு விஸ்தரிப்பது, அரசாங்கம் திட்டமிடுவதைத்தான் முழுவதும் சார்ந்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் நீர்ப்பாசனத் திட்டங்களின் வரலாறு திட்டமற்ற தன்மையையும், அரசாங்கத்தின் இணைப்பற்ற முயற்சிகளையுமே காட்டும். நிலத்தைவிட நீர் மிகவும் மதிப்புடையது என்று கூறப்பட்ட ஒரு நாட்டில், அரசாங்கம் நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதின் நன்மையை உணரத் தவறிவிட்டது. 1815-லேயே ஹேஸ்டிங்ஸ் பிரபு நீர்ப்பாசனத் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார். 1850-ல் டல்ஹௌசி ஒரு குறிப்பில் கீழ்வருமாறு எழுதினுர்: 'மிகுந்த நிலப்பரப்பை நான் கண்டவிடங்களிலெல்லாம், செழிப்பான சொத்துக்கள் இப்போது வீணுகக் கிடக்கின்றன. அவைகளைச் செழிப்புள்ள பயிர்த் தொழில் நிலங்களாக மாற்றுவதற்குத் தண்ணீர்மட்டும்தான் வேண்டும்'. 1880-ஆம் ஆண்டு பஞ்சக் குழுவும், 1901-ஆம் ஆண்டு நீர்ப்பாசனக் குழுவும் எவ்வளவோ சொல்லியுங்கூட, பல வருடங்கள் நீர்ப்பாசனம் புறக்கணிக்கப்பட்டது. எவ்வளவு தூரம் ரெயில்வேக்களில் மூலதன சாதனத்தைச் செலவழித்து நீர்ப்பாசனத் திட்டங்களைப்

புறக்கணித்து விட்டார்கள் என்பதற்கு ஒரு சான்று போதும். 1934—35-ல் நீர்ப்பாசனத்திற்கும் கப்பல் நடத்துவதற்கும் (Navigation) ரூ. 150 கோடி மூலதனம் செலவாயிற்று. ஆனல், அதே வருடத்தில் ரெயில்வேக்களுக்கு ரூ. 885 கோடி செலவாயிற்று. முதலிலிருந்தே ஒரு நல்ல திட்டமிட்ட நீர்ப்பாசனக் கொள்கை உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப் பட்டிருந்தால், இந்த நாடு நிச்சயமற்ற பருவகால மழைகளின் அபாயங்களிலிருந்தும் தப்பி யிருக்கும்.

1950-51-ல் இந்தியாவில் நீர்ப்பாசனம் பெற்ற பரப்பை இந்த அட்டவணை காட்டுகிறது:[1]

நீர்ப்பாசன முறைகள்		நீர்ப்பாசனம் பெற்ற பரப்பு (10 இலட்சம் ஏக்கரில்)	சதவீதம்
கால்வாய்கள் (அரசாங்கம்)	...	17·9	34·8
,, (தனியார்)	...	2·8	5·4
ஏரிகள்	...	8·8	17·1
கிணறுகள்	...	14·7	28·5
மற்ற மூலங்கள்	...	7·3	14·2
மொத்தம்	...	51·5	100
விதைக்கப்பட்ட நிகரப் பரப்பு	...	291·0	17·7%

1 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 323.

1938-39க்கு, புள்ளி இயலிலிருந்து கிடைத்த புதிய விவரங்களைப் பேராசிரியர் C. N. வக்கீல் கொடுக்கிருர் :

		பயிர் செய்யப்பட்ட பரப்பு (10 இலட்சம் ஏக்கர்)	நீர்ப்பாசனம் பெற்ற பரப்பு (10 இலட்சம் ஏக்கர்)	பயிர் செய்யப்பட்ட நிலத்தில் நீர்ப் பாசனம் பெற்ற பரப்பின் சதவீதம்
இந்தியா	...	251	47	18
பாகிஸ்தான்	...	54	20	36
ஹைதராபாத்	...	30	2	7
காஷ்மீர்	...	2·3	1	4
மொத்தம்	...	**338**	**70**	**21**

பாகிஸ்தான் தன் எல்லையில் 36% நீர்ப்பாசனம் பெற்ற நிலத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியாவிலோ, பயிர் செய்யப்பட்ட நிலத்தில் 18% தான் நீர்ப்பாசனம் பெறுகிறது. பாகிஸ்தானில் நீர்ப்பாசனம் பெற்ற பரப்புப் பெரும்பாலும் மேற்குப் பஞ்சாபிலும் சிந்துவிலும் இருக்கிறது. 'பிரிவினை யின் பொருளாதார விளைவுகள்' (1948), பக்கம் 13.

முதல் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரிய நீர்ப்பாசனம் பெற்ற நிலம்–நீர்ப்பாசன வேலைகளும், நடுத்தர நீர்ப்பாசன வேலைகளும் – நீர்ப்பாசனம் பெற்ற பகுதியில் மேலும் 63 இலட்சம் ஏக்கரைச் சேர்க்கும். 1956–க்குள் சிறிய நீர்ப்பாசன வேலைகளால் ஒரு கோடி ஏக்கர் அதிகமாகும். நீர்ப்பாசனப் பகுதியின் மொத்த அதிகரிப்பு 150 இலட்சம் ஏக்கர் என்று கொள்ளலாம். இதனுல், பயிர் செய்யப்பட்ட நிலத்தில் 20% நீர்ப்பாசன நிலமாக மாறும். இரண்டாம் திட்டம், மேலும் 210 இலட்சம் ஏக்கரை நீர்ப்பாசன நிலமாக்கும். இதில் பெரிய திட்டங்களாலும் நடுத்தரத் திட்டங்களாலும் 120 இலட்சம் ஏக்கரும், சிறிய திட்டங்களால் 90 இலட்சம் ஏக்கரும் நீர்ப்பாசனம் பெறும். (இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், பக்கம் 325).

சக்தி மூலங்கள்: (அ) தண்ணீர் சக்தி

உலகத்தின் மொத்தத் தண்ணீர் சக்தி சாதனம் 50,00,00,000 H.P. என்று குறைந்த பட்சம் மதிப்பிடப்படுகிறது. பெல்ஜியன் காங்கோவுக்கு 9,00,00,000 H.P. என்றும், அமெரிக்காவுக்கு 3,80,00,000 H.P. என்றும், இந்தியாவுக்கு 2,70,00,000 H.P. என்றும் மதிப்பிடப்படுகிறது. மின் சக்தியின் வளர்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம், ஜப்பான், ஆஸ்திரேலியா, ரஷ்யா, சீனு ஆகிய நாடுகள் தொழில்மயமாக்கப்பட்டதுதான். தொழில் நடவடிக்கை மின்சாரத்தினுல் மிகவும் ஊக்குவிக்கப்படுகிறது. ஏனெனின், அது தொழில் நடவடிக்கையை நாடு முழுவதும் பரப்ப உதவுகிறது; இதனுல், ஏற்கெனவே வளர்ச்சியடைந்துள்ள நகரங்களில் மேலும் ஜன நெருக்கம் உண்டாவது தவிர்க்கப்படுகிறது. எண்ணெய் அல்லது நிலக்கரி மிகவும் குறைந்த அளவில் கிடைக்கும் இந்தியா போன்ற நாட்டில், தொழில்களுக்காக மலிவாக மின்சார உற்பத்தி செய்தல் மிகவும் முக்கியமானது. நம்முடைய தண்ணீர் சக்தி சாதனத்தின் மிகக் குறைந்த பகுதியே இதுவரையில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. தேசீயத் திட்டக்குழுவின் அறிக்கைப்படி,[1] 1942 வரையில் கிடைக்கக்கூடிய நீர் மின்சக்தியில் 1·4% தான் விருத்தி செய்யப்பட்டது. ஆனுல், பெரும்பாலான ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் 15% முதல் 90% வரை விருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் நீர் மின்சக்திக்கு அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. உலகத்திலேயே இந்தியா இந்தச் சாதனத்தில்

[1] 'சக்தியும் எரிபொருளும்' 1947, பக்கம் 10. K. T. ஷா வெளியிட்டது.

முதன்மையான நாடுகளில் ஒன்று. மொத்தம் 1954-ல் செலவழிக்கப்பட்ட 63 இலட்சம் kWh-ல், இந்தியத் தொழில்கள் 41 இலட்சம் kWh-ஐ எடுத்துக் கொண்டன.

இமாலயத்திலிருந்து ஒவ்வோர் ஆயிரம் அடி வீழ்ச்சிக்கும் 30 இலட்சம் H.P. வீதம், சிந்து நதியிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் ஏழு பெரிய ஆறுகளும் சக்தியளிக்கும் என்று குறைந்தபட்சம் மதிப்பிடப்படுகிறது. இந்தியாவில் மற்றப் பகுதிகளில் உள்ள ஆறுகள் யாவும் இப்படியே. மின்சாரம், நீராவி, பெட்ரோல் ஆகியவற்றில் ஒரு குதிரை சக்தியானது ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு 10 மணி வீதம், வருடத்தில் 365 நாட்களும் வேலை செய்கிறது. நம் நாடு இன்னும் மனித சக்தியைத்தான் அதிகம் நம்பியிருக்கிறது. ஒரு மனிதன் ஒரு நாளுக்கு 8 மணி வீதம் ஒரு வருடத்தில் 300 நாள் தான் வேலை செய்கிறன். ஒரு குதிரையின் சக்தி இதைப்போலப் பத்து மடங்கு அதிகம். ஆகையால் மனித சக்தி, குதிரை சக்தியில் 1/20 பாகம்தான் என்பது புலப்படும். மற்ற நாடுகளில் தலா மின்சார நுகர்வோடு நமது நுகர்வை ஒப்பிடும்போது, நமது பின் தங்கிய நிலைமை விளங்கும். இங்கிலாந்தில் சராசரி தலா மின்சார நுகர்வு 1100 kWh, அமெரிக்காவில் 2207, கனடாவில் 3905; ஆனல் இந்தியாவில் சராசரி தலா நுகர்வு ஒரு வருடத்திற்கு 14 kWh தான்.[1] இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த kWh 1939-ல் 25,000 இலட்சம் kWh, 1950-ல் 51,000; 1951-ல் 58,580. முதல் திட்டத்தின் இறுதியாண்டில் திட்டக் குழு, சக்தி உற்பத்தியில் 10·8 இலட்சம் kW அதிகரிக்குமென்றும், பல ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் வேலை எல்லாம் முடிந்து முழு அபிவிருத்தியடைந்த பிறகு 14 இலட்சம் kW அதிகரிக்குமென்றும் மதிப்பிடப்பட்டது. முதல் திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்குப் பிறகு, 1950—51-ல் தலா நுகர்வு 14 யூனிட்டாக இருந்தது. 1955—56-ல் 25 யூனிட்டாக உயர்ந்தது. 1955-ன் இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த உற்பத்தியளவு 27 இலட்சம் kW. இதில் 9,39,000 kW நீர்ச்சக்தி; 17·6 இலட்சம் kW அனல் சக்தி (thermal). பேராசிரியர் வோல்மன் (Wolman) கூற்றின்படி, விவசாயத்திற்கும் மற்றக் காரியங்களுக்கும் சராசரி ஆண்டொன்றுக்கு உபயோகிக்கப்படும் தண்ணீரின் அளவு சுமார் 1 செகண்டுக்கு 4,33,000 கன அடி. இது கிடைக்கக்கூடிய சக்தியில்

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 345.

6% குறைவு. 'இந்தத் திரவரூபமான தங்கத்தில் 94% வீணாகக் கடலில் போய் விழுகிறது'.[1]

சுவீடன் தனது நீர் மின்சக்தி சாதனங்களை முறைப்படித் திட்டமிட்டுப் பயன்படுத்தியதால், அந்நிய நிலக்கரியே இப்பொழுது அதற்குத்தேவையில்லாமல் இருக்கிறது. இதுபோலவே ஃபிரான்சு, இத்தாலி போன்ற நிலக்கரிச் சாதனம் குறைந்த நாடுகளும், தம் நீர் மின்சக்தியை மிகவும் விருத்திசெய்துள்ளன. இதில் மிகவும் சிறந்த வழிகாட்டியாக இருப்பது சோவியத் ரஷ்யாதான். அங்குப் பத்து வருடங்களில் சக்தி வளர்ச்சி ஏழு மடங்காகி இருக்கிறது. இதற்குக் காரணம் லெனினுடைய மின்சாரத் திட்டந்தான். இதை அவர் சோஷலிசத்தில் ஒரு முக்கிய அமிசம் என்று கூறினார். பெரிய அளவில் மின்சார மயமாக்குவதற்குத் திட்டமிட்டதனால்தான், ரஷ்யா இருபது வருடங்களுக்குள்ளாகப் பெரிய தொழில் மயமான நாடாக மாறிவிட்டது.

இந்தியாவில் விருத்திசெய்யப்பட்ட சக்தி சாதனங்கள் எல்லாம், இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் தனியார் கம்பெனிகள் உண்டாக்கியவையே. அவை தம் சர்வாதீனத் தன்மையால், நாட்டின் பொது வளர்ச்சிக்காக அன்றி, மக்களைச் சுரண்டுவதற்கே இவற்றை அபிவிருத்தி செய்தன. 'தனியார் கம்பெனிகளின் முக்கிய அடிப்படை, பொதுவாகச் சர்வாதீனச் சுரண்டல்தான்; ஆனால், பெரிய நிறுவனங்கள்கூட, படிப்படியாக விகிதங்களைக் குறைத்து, நுகர்வோர் தேவையைப் பெருக்குவதில் அக்கறை காட்டவில்லை. அனுமதி பெற்ற தனியார் கம்பெனிகள் ஒவ்வொரு வருடமும் அதிக இலாப ஈவு (dividend) கொடுக்கின்றன. அண்மையில் உண்டான மந்த நிலையில்கூட அவை இலாபம் சம்பாதிக்காமல் இல்லை. இலாப ஈவு அளிக்கப்படாவிட்டால் இலாபம் காப்பு நிதிக்கு ஒதுக்கப்படுகிறது. அல்லது அடக்க விலைக்கணிப்பை (cost-accounting) சாமர்த்தியமாக மாற்றிக் குறைந்த இலாபத்தையோ நஷ்டத்தையோ காட்டுகிறார்கள்.[2] நம் தொழில் வளர்ச்சிக்கு, மலிவான மின்சார சக்தியை அடிப்படையாகச் செய்யலாம். சக்தி சாதனங்கள் சமூக சாதனங்களாகும். அவற்றை நன்கு விருத்தி செய்து, சிலருடைய இலாபத்துக்காக

[1] UNSCCUR நடவடிக்கையில் 'நிலத்தில் மேற்புறமும் அடிப்புறமும் உள்ள நீரையும் கடல் நீரையும் பயன்படுத்துதல்' தொகுதி IV, தண்ணீர் சாதனங்கள். (1951) பக்கம்—101.

[2] B. P. அதர்க்கார், இந்தியாவில் சக்தி அளிப்புப் பிரச்சினை என்பது பற்றிய கருத்தரங்கில், 'இந்தியாவில் நன்மை தரத்தக்க மின்சாரச் சட்டத்தின் அவசியம்' என்ற தலைப்பில் கூறியது. அலகாபாத்து தேசீய விஞ்ஞானக் கழகத்தினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர், 1938. பக்கம் 61.

அன்றி, நாடு முழுவதின் முன்னேற்றத்திற்காகச் சேமிக்க வேண்டும். இந்தச் சாதனங்களை முறையாகத் திட்டமிட்டு, நாட்டு உடைமையாக்கி விருத்திசெய்வதுதான் சரியான கொள்கை.[1] இந்தப் பரந்த சாதனங்களைச் சரியாகக் கட்டுப்படுத்தவும் பயன் படுத்தவும் செய்தால், நம் பொருளாதாரம் எளிதில் புரட்சிகரமான மாற்றமடையும். இத்தகைய கொள்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நம் அரசாங்கமானது ஒரு மத்திய நீர்வழி, நீர்ப்பாசன, கடற்கடவுக் குழுவை (Central Waterways, Irrigation and Navigation Commission) அமைத்திருக்கிறது. இதன் வேலை, நிலத்தின் மேலும் கீழும் உள்ள தண்ணீர் சக்தியின் அளவை அறிந்து, தாமோதர் பள்ளத்தாக்கு, மகாநதி போன்ற திட்டங்களை இயற்றி நிறைவேற்றுவதாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள தண்ணீர் இயந்திரங்களின் சக்தியை 1956 ல் இருந்த 34 இலட்சம் kW இலிருந்து, மார்ச் 1961-க்குள் 69 இலட்சம் kW ஆக உயர்த்த உத்தேசித்திருக்கிறது ; உற்பத்தி செய்யப்படும் சக்தியை 1955—56-ல் இருந்த 1,10,000 இலட்சம் யூனிட்டுகளிலிருந்து 1960—61-ல் 2,20,000 இலட்சமாக அதிகரிக் கலாம் என்று எதிர்பார்க்கிறது.

அணு சக்தியை அமைதியான காரியங்களுக்குப் பயன்படுத்து வதற்கு, அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால், மின்சார உற்பத்திக்கு ஒரு புதிய பெரிய வழி காட்டப்பட்டிருக்கிறது. நிபுணர்களின் கருத்துப்படி, சக்திப் பஞ்சத்தினால் உண்டாகக் கூடிய ஆபத்துக்கள் இனி மக்களினத்தை அண்டமாட்டா. நிலக்கரி, பெட்ரோலியம் ஆகியவற்றுடன் போட்டியிட்டுக்கொண்டு. இந்த அணு சக்தியானது இனி முக்கிய வேலைகளைச் செய்யும்.

காடுகள் போன்று புதுப்பிக்கக்கூடிய இந்த இயற்கைச் சாதனங்கள் ஒருபுறமிருக்க, புதுப்பிக்கப்பட முடியாத தாதுப் பொருள் சாதனங்களை நாம் இப்போது கவனிக்க வேண்டும். இவை பூமிக்கடியில் ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளன. ஆகை யால் இவற்றைப் பயன்படுத்துவதற்கு தற்கால நலன் மட்டு

[1] 1948-ல் அரசாங்கம் மின்சார அளிப்புச் சட்டத்தைச் செய்து, தொழில்களைத் தேசீய மயமாக்குவதற்கு, நாடு முழுவதும் மின்சாரத்தை விரைவாகப் பரப்பவும் ஏற்பாடு செய்திருக்கிறது. இச் சட்டம், இராச்சியங்களில் மின் சாரக் குழுக்களை ஏற்படுத்தவும், அதன்மூலம் அனுமதி பெற்றவர்கள் மின் சார உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் அளிக்கிறது. இராச்சியக் குழுக்களின் வேலையைப் பரிசீலனை செய்யவும், சக்தி உற்பத்தி பற்றி அவைகளுக்கு ஆலோசனை கூறவும் ஒரு மத்திய மின்சார நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மன்றி, எதிர் காலத்து முறைகளின் நலன்களையும் கருதி நீண்ட நோக்குடன் திட்டமிட வேண்டும்.[1]

(ஆ) பெட்ரோலியம்

பர்மா பிரிக்கப்பட்ட பிறகு, இந்தியாவிற்கு எண்ணெய்ச் சாதனங்கள் அதிகம் இல்லை. இருப்பினும், அஸ்ஸாமில் இமாலயத்தின் அடிவாரம் முழுவதிலும், கட்சு, கத்தியவார் ஆகிய பகுதிகளிலும் எண்ணெய் எடுப்பதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. இமாலயப் பகுதிகளில் இயற்கை வாயு கிடைப்பதும், அப் பகுதியின் நிலவியல் அமைப்பும், வட இந்தியாவின் பரந்த வண்டலான சமவெளிகளில் எண்ணெய் இருக்கிறதென்பதைக் காட்டுகின்றன. இந்திய சர்வே இலாகாவின் நிலப் பகுதிகளைப்பற்றிய ஆராய்ச்சியும், அக்கறையுள்ள சில அந்நியக் கம்பெனிகளின் ஆராய்ச்சியும் வட இந்தியாவின் சமவெளிகளிலும் மலையடிவாரங்களிலும் எண்ணெய் இருக்கக்கூடும் என்று வெளிப்படுத்தியுள்ளன.[2] மேற்கிந்தியாவில் அண்மையில் கேம்பே (Cambay) அருகில் லூனெஜிலும் (Lunej), பரோடா அருகில் வட்சாரிலும் நிலத்தைக் குடைந்து எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், இவ் விலையுயர்ந்த தாதுப்பொருள் இன்னும் அதிகமாகக் கிடைக்கும் என்று தோன்றுகிறது. இது உண்மையானால், இந்தியாவின் பொருளாதார எதிர் காலம் மிகவும் மாற்றமடையும். இப்பொழுது இந்தியா, தனக்குத் தேவையான எண்ணெயில் 7% தான் உற்பத்தி செய்கிறது. அஸ்ஸாமில் மொத்த உற்பத்தி சுமார் 6,10,00,000 கேலன்கள். 1940-ல் இந்தியாவில் உற்பத்தியான பண்படா பெட்ரோலியத்தின் அளவு 3,25,000 மெட்ரிக் டன்கள் என்று சர்வதேச சங்க ஆண்டுக் குறிப்புப் புத்தகம் (League of Nations Year Book) கூறுகிறது. ஆனால், அதே காலத்தில் பர்மாவில் 10,00,000 டன்களும், உலக முழுவதிலும் மொத்தம் 29,30,00,000 டன்களும் உற்பத்தியாயின. 1955-ன் ஐக்கிய நாடுகள் சங்க ஆண்டுக் குறிப்புப் புத்தகம் (The United Nations Year Book for 1955) 1954-ல் உலகத்தில் மொத்த உற்பத்தி 63,10,00,000 மெட்ரிக் டன்கள் என்று கூறுகிறது. ஆனால், இந்தியாவிற்குக் கடைசி

[1] முதல் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் தாது உற்பத்தியின் மதிப்பிலும் விலையிலும் பொதுவாக உயர்வு இருந்தது. 1954-ல் எல்லாத் தாதுப் பொருள்களினுடைய மொத்த மதிப்பு ரூ. 1,127 கோடி. மாங்கனீசு தாதுவிலும், மைக்கா மார்க்கெட்டிலும் மந்தநிலை ஏற்பட்டதின் விளைவாக, இதில் திடீரென்று வீழ்ச்சி உண்டாயிற்று. எல்லாத் தாதுக்களினுடைய மொத்த மதிப்பு ரூ. 102·5 கோடியாயிற்று. விவரங்களை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் 377 ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காணவும். '1954-ல் இந்தியாவின் தாதுப்பொருள் உற்பத்தி', இந்திய நிலவியல் ஆராய்ச்சிப் பிரிவு, கல்கத்தா, நவம்பர் 1955 ஐயும் பார்க்கவும்.

[2] 'Science and Culture', October, 1942.

யாகக் கிடைத்த விவரம் 1949 ஆண்டிற்குத்தான். இது 2,53,000 மெட்ரிக் டன்கள். பர்மா எண்ணெய்க் கம்பெனியின் கீழுள்ள அஸ்ஸாம் எண்ணெய்க் கம்பெனியினுல் இந்தியாவில் வடகிழக்கு அஸ்ஸாம் எண்ணெய் வயல்களில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. 1947-ல் எண்ணெய் இறக்குமதியின் அளவு ரூ. 32 கோடி மதிப்புள்ள 66,20,00,000 கேலன்கள்.[1] அஸ்ஸாம் எண்ணெய்க் கம்பெனியைச் சேர்ந்த டிக்பாய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை (refinery) ஒரு நாளுக்கு 5,000 பாரல்களைச் (barrels) சுத்தி செய்யும். ஆனால், நமக்கு வேண்டியதோ ஒரு நாளுக்கு 1,05,000 பாரல்கள். இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு இந்திய அரசாங்கம், அமெரிக்க ஸ்டாண்டர்டு வாக்குவம் ஆயில் கம்பெனியுடனும், இங்கிலாந்தின் பர்மாஷெல் கம்பெனியுடனும், அமெரிக்க கால்டெக்ஸ் கம்பெனியுடனும் இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளை நிறுவதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. இது ஒரு நாளுக்கு 85,000 பாரல்களாக உற்பத்தியை உயர்த்தும். ஸ்டாண்டர்டு வாக்குவம் சுத்திகரிப்புத் தொழிற்சாலை பம்பாயில் ஜூலை 1954-ல் வேலை தொடங்கியது. பர்மாஷெல்லும் பம்பாயிலேயே ஜனவரி 1955-ல் தொடங்கியது. கால்டெக்ஸ் சுத்திகரிப்பு நிலையம் விசாகப்பட்டணத்தில் 1956-ல் வேலை தொடங்கிற்று. 1957-க்குள், இந்த மூன்று சுத்திகரிப்பு நிலையங்களும் பழைய டிக்பாய் நிலையத்தோடு சேர்ந்து, தொடர்ச்சியாக மொத்தம் 40 இலட்சம் நீண்ட டன் பண்படா எண்ணெயைச் சுத்திசெய்யும் சக்தியுடையவையாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

(இ) நிலக்கரி

இந்தியாவின் நிலக்கரி சாதனம் 6,000 கோடி டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதில் 2/3 பாகம் இப்போதுள்ள நிலைமையில் இலாபகரமான முறையில் வெட்டி எடுக்க முடியாமல் மிக ஆழமாக இருக்கிறது.[2] 1931-ல் 220 இலட்சம் டன்னாக இருந்த நமது நிலக்கரி உற்பத்தி, 1940-ல் இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலக்கரியோடு சேர்ந்து 300 இலட்சம் டன்னாயிற்று. அப்பொழுது முதல் உற்பத்தி பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. 1951-ல் 349 இலட்சம் டன்னாக இருந்து, 1955-ல்

[1] இதில் 20% பாகிஸ்தானின் பங்கு. எஞ்சிய 58,40,00,000 கேலன்கள் நம் உபயோகத்திற்கு (இதில் அஸ்ஸாமில் உற்பத்தி செய்யப்பட்ட 540 இலட்சம் கேலன்கள் அடங்கும்).

[2] இதில் 5,00,00,00,000 டன் மிக உயர்ந்த வகையைச்சேர்ந்தது. இதில் மூன்றில் ஒரு பாகம் உலோக வேலைகளுக்கு உதவும்படியான சுட்ட நிலக்கரியாக மாற்றுவதற்குத் தகுந்தவை என்று கருதப்படுகிறது.

382 இலட்சம் டன்னுயிற்று.[1] 45 இலட்சம் டன்தான் அரசாங்கத் துறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டாம் திட்ட இறுதியில் நமக்குத் தேவையான 600 இலட்சம் டன் மதிப்பீட்டைக் கருதி, இரண்டாம் திட்டத்தில் 1955-ல் உற்பத்தி செய்ததைவிட 220 இலட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு விசேஷ முயற்சிகள் செய்யவேண்டும். இது அனல் சக்தி உற்பத்திக்கும் ரெயில்வே அபிவிருத்திக்கும் தேவையென்று தொழில் இலக்குகள், திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கணிக்கப்பட்டிருக்கிறது. இதில் 120 இலட்சம் டன் பொதுப் பகுதியில் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. 1952-ல் 33 இலட்சம் டன்னுக இருந்த நமது ஏற்றுமதியானது அடுத்த மூன்ருண்டுகளில் வரவரக் குறைந்து கொண்டே வந்து 1955-ல் 16 இலட்சம் டன்னுயிற்று.

1954-ல் இந்தியா 3,73,58,000 மெட்ரிக்கு டன்களை உற்பத்தி செய்தது. அதே வருஷத்தில் அமெரிக்காவின் உற்பத்தி 37,76,75,000 மெட்ரிக் டன்கள். உலக முழுவதிலும் உள்ள நிலக்கரியின் அளவு சுமார் 7,00,00,000 இலட்சம் டன் இருக்கலாம். இதில் இந்தியாவின் பங்கு 1% தான். இப்பொழுது இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் எவ்வளவு நிலக்கரி இருக்கும் என்பதைப்பற்றி நமக்குச் சரியாகத் தெரியாது. இதைப்பற்றிச் சரியாக அறிய இன்னும் அதிக ஆராய்ச்சியும் வேலையும் செய்ய வேண்டும். மேலும், இப்போதுள்ள வெட்டும் முறையும் சுத்தப் படுத்தும் முறையும் 50% நிலக்கரியைத்தான் அளிக்கின்றன. இந்த முறைகளைச் சீர்திருத்தினுல் நிலக்கரி உற்பத்தி அதிகபட்சமாகி, நிலக்கரி வயல்களின் ஆயுட்கால எல்லையும் அதிகமாகும்.[2]

உலகத்தில் சக்தி உற்பத்தியைக் காட்டும் இவ்வட்டவணை கவனிக்கத் தக்கது.

சக்தி மூலங்கள்	1913	1920	1925	1931	1937	1950
			(சதவீதத்தில்)			
நிலக்கரி	88·5	82·1	75·5	66·5	68·8	57·1
எண்ணெய்களும் வாயுவும்	7·2	11·7	16·1	21·1	25·4	37·1
தண்ணீர் சக்தி	4·3	6·2	8·4	12·4	5·8	5·8
மொத்தம்	100	100	100	100	100	100

[1] பர்த்வான் மாவட்டத்திலுள்ள ராணிகஞ், ஜாரியா வயல்கள் நமது முதன்மையான மூலமாகும். இங்கு மொத்தத்தில் 90% உற்பத்தியாகிறது.

[2] 'இந்தியாவில் நிலக்கரி பற்றிய கருத்தரங்கு'—Science & Culture, October, 1939.

'முதல் உலக யுத்தத்திலிருந்து, உலகத்தின் முக்கிய சக்தி மூலங்களின் உற்பத்தி வெவ்வேறு விகிதங்களில், படிப்படியாக உயர்ந்துகொண்டே இருக்கிறது. மோட்டார்களும், விமானங் களும், இயந்திர சாதனங்களும் மிகுதியாக உண்டாகியிருப்பதால், பெட்ரோலியத்திற்கு மார்க்கெட்டு மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டுவரும் இயற்கை வாயு மிகவேக மாக முன்னேற்றமடைந்துள்ளது. மின்சார உற்பத்திக்கு நீரின் சக்தியை உபயோகிப்பது, 1930-க்குப் பிறகு மிக அதிகமாகி இப் போது குறைந்து வருகிறது'.[1] ஆனால், தாது எரிபொருள்களின் அளவு வரவரக் குறைந்து கொண்டே வரும் தன்மையுடையதாகை யாலும், நீர் சக்தி கிடைக்கக்கூடிய அளவு அதிகமாக இருப்ப தாலும், அதன் எதிர் காலம் நன்றாக உள்ளது. நிலக்கரியும் எண்ணெயும் போதிய அளவு இல்லாததால், நம்மிடம் அதிகமாக உள்ள தண்ணீர் சாதனங்களை விருத்தி செய்வதில் நாம் அதிகக் கருத்தைச் செலுத்தவேண்டும்.

தொழிலுக்கு உதவும் தாதுக்கள்: (அ) இருப்பு

உலகத்திலேயே இந்தியாவில்தான் மிக உயர்ந்த வகையான இரும்புத் தாது அதிகமாகக் கிடைக்கிறது என்று கூறலாம். டாக்டர் கிருஷ்ணன், 'உலகத்தில் இரும்பையும் எஃகையும் உற் பத்தி செய்யக்கூடிய மிக முக்கியமான நாடுகளில் ஒன்றாக வருவதற் குரிய மிக அதிகமான தாதுப் படிவங்களை இந்தியா பெற்றிருக் கிறது என்பதில் ஐயமில்லை' என்று கூறுகிறார்.[2] இந்தியாவின் இரும்புத்தாது வளப்பத்தைப்பற்றிக் கீழ்க்கண்ட அட்டவணை அறிவிக்கிறது :[3]

10 இலட்சம் டன்களில் தாதுவளம்.

தாதுக்கள்	நிரூபிக்கப்பட்டதும் காட்டப்பட்டதும்	கிடைக்கக் கூடியது
ஹெமடைட் தாது	5,316	16,630
மாக்னடிக் தாது	605	1,610
லிமொனைடிக் தாது	500	2,000
மொத்தம்	6,421	21,240

[1] G. A. Lamb, 'Fuel Complex—A Projection' in the Annals, May, 1952.

[2] 'இந்தியாவின் இரும்புத் தாதுக்கள்', 1955. பக்கம் 149.

[3] மேலே கூறிய புத்தகம் பக்கம் 150.

பீகாரிலும் ஒரிஸ்ஸாவிலும் மிக அதிகமான இரும்புத் தாதுப் படிவங்கள் இருக்கின்றன. மத்தியப் பிரதேசத்திலும் சென்னையிலும் நல்ல தாதுக்கள் கிடைக்கின்றன. ஆனால், அங்குப் பக்கத்தில் நிலக்கரி இல்லாததால், அவை வெட்டி எடுக்கப்படவில்லை. மத்திய பாகத்தில் டிரக் மாவட்டத்திலுள்ள ராஜஹரி குன்றுகளில் (இவை வளைந்து வளைந்து 20 மைல் நீளம் பரவியுள்ளன) மேற்புறத்திலேயே 75 இலட்சம் டன் இரும்புத் தாது இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. சென்னையில் சேலத்திலும், நெல்லூர் மாவட்டத்திலும் எடுக்க எடுக்கக் குறையாத அளவு இரும்புத் தாது உள்ளது என்று இம்பீரியல் தாது வளக் கழகம் (Imperial Mineral Resources Bureau) அறிவிக்கிறது. இத் தொழிலில் வேகமான வளர்ச்சி உண்டாவதற்கு அண்மையில் நல்ல வகையான நிலக்கரி இருப்பது ஒரு முக்கிய அமிசமாகும்.

கீழ்க்கண்ட அட்டவணை இரும்புத் தாது உற்பத்தியின் வளர்ச்சியைக் காட்டுகிறது.[1]

ஆயிரம் மெட்ரிக் டன்களில்

வருடம்	1932	1939	1942	1947	1948	1950	1951	1954
அளவு	1,144	1,930	2,083	1,625	1,483	1,929	2,378	2,550

கடந்த காலங்களில் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டதிலிருந்து இரும்புக்குத் தேவை உள்ளது என்பது ஒருபுறமிருக்க, நம் நாட்டை மேலும் மேலும் தொழில் மயமாக்குவதற்கு, வரும் ஆண்டுகளில் இரும்பும் எஃகும் அதிகமாகத் தேவைப்படும் என்பது உறுதி. ஏனெனின், இந்த அடிப்படைத் தொழிலைப் பொறுத்துத்தான் மற்றத் தொழில்களின் முன்னேற்றம் இருக்கிறது. இரும்புக்கும் எஃகுக்கும் அளிக்கப்பட்டுள்ள முதன்மைக்கு ஏற்ப, ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய மூன்று இடங்களில் மூன்று எஃகுத் தொழிற்சாலைகளை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி பொதுத்துறையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றின் உற்பத்தியளவும் 10 இலட்சம் டன் ஆகும்.

(ஆ) மாங்கனீஸ்

மாங்கனீஸ் உற்பத்தியில் ரஷ்யாவுக்கு அடுத்த நிலையில் இந்தியா இருக்கிறது. நம்முடைய தாதுவில் 50% உலோகம் இருக்

[1] ஐக்கிய நாடுகளின் புள்ளி இயல் ஆண்டுக் குறிப்புப் புத்தகங்கள் 1952, 1957, 1956-க்குக் கிடைத்த விவரம் முடிவானதன்று.

கிறது ; ஆனால், ரஷ்யத் தாதுவில் 45% தான் இருக்கிறது. எனவே நம்முடைய தாது அதிக வளமுள்ளது. மாங்கனீஸ் கனி அபிவிருத்தி, எஃகுத் தொழிலோடு அதிகத் தொடர்புடையது. இப்போது இந்தியா அதிக எஃகை உற்பத்திசெய்வதில்லை யாகையால், நம்முடைய மாங்கனீஸ் உற்பத்தியில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1947–ல் இந்தியாவில் மாங்கனீஸ் தாது உற்பத்தி 4,51,000 டன்கள். இதில் இங்குள்ள எஃகுத் தொழிலில் 17% தான் பயன்படுத்தப்பட்டது. மீதி ஏற்றுமதி செய்யப்பட்டது. 1951–ல் உற்பத்தி 12,84,000 டன்களாக உயர்ந்தது; இதில் ஏற்றுமதி 9,52,000 டன்கள். 1954-ல் 14·1 இலட்சம் டன் உற்பத்தியாயிற்று. இதில் ரூ. 14·6 கோடி மதிப்புள்ள 10·4 இலட்சம் டன் ஏற்றுமதியாயிற்று. ஏற்றுமதியில் பெரும் பங்கு அருமைச் செலாவணி (hard currency) இடங்களுக்குச் செல்லுகிறது. நம்முடைய மாங்கனீஸ் படிவங்கள் பெரும்பாலும் மத்தியப்பிரதேசம், பம்பாய், மைசூர், சென்னை ஆகிய இடங்களில் உள்ளன.[1] உலக உற்பத்தியில் நமக்கு இன்னும் உரிய இடம் இருக்கிறதெனினும், 30%-ம் அதற்கு மேலும் உள்ள உயர் ரக மாங்கனீஸ் உற்பத்தியில் நம்மை ரஷ்யா தவிர மற்ற உலக நாடுகள் மிஞ்சி வருகின்றன. கீழ்வரும் அட்டவணை இதைக் காட்டுகிறது.[2]

வருடங்கள்	10 இலட்சம் மெட்ரிக் டன்களில் உலக உற்பத்தி	இந்தியாவின் பங்கு சதவீதம்
1932—35	1·8	40
1936—40	6·3	36·5
1941—45	6·0	23·0
1946—50	6·2	21·5

கியர்கள், உருளைகள், உருளை இருசுகள், ரெயில்வே போல்ட்டுகள், சக்தி கடத்தும் சங்கிலிகள்போன்ற அதிக இழுப்புத் தன்மையும் உறுதியும் வேண்டிய எஃகுச் சாமான்களைச் செய்வதில் மாங்கனீஸ் அதிகமாகப் பயன்படுவதால் அதன் முக்கியத்துவம் விளங்கும். உலகத்திலேயே இந்தியாவானது மாங்கனீஸ் கிடைக்கும் இடங்களில் முக்கியமான ஓரிடமாகும். ஆனால், உள்நாட்டில் இரும்பு-மாங்கனீஸ் செய்வதற்கும், ஊதுலையில் இடப்படும் பொருளோடு சேர்ப்பதற்கும் வேண்டிய ஒரு சிறு

[1] பிரிவினைத் திட்டத்தின்படி பாகிஸ்தானில் மாங்கனீஸ் அல்லது இரும்புப் படிவங்கள் இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை.

[2] ஐக்கிய நாடுகளின் புள்ளி இயல் ஆண்டுக் குறிப்புப் புத்தகத்திலிருந்து (1952) கணிக்கப்பட்டது.

அளவு தவிர, மீதியெல்லாம் மிகமிகக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாங்கனீஸ் கனியின் பக்கத்தில் 50% தூய்மையுடைய தாதுவின் விலை 1 டன்னுக்கு ரூ. 10 ஆனால், இரும்பு-மாங்கனீசின் விலை 1 டன்னுக்கு 15 பவுன் (ரூ. 200). அண்மைக் காலம் வரையில் உயர்ந்த வகையான இரும்பு-மாங்கனீசைத் தயார் செய்வதற்கு இந்தியாவில் நல்ல முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. 1949–50-ல் சுமார் 32,000 டன் இரும்பு-மாங்கனீஸ் உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் உற்பத்தி இலக்கை 1,60,000 டன்களாக நிருணயித்தது.

(இ) மைக்கா (அபிரகம்)

தொழிலுக்கு உதவும் தாதுக்களில் அபிரகத்தை மறந்துவிடக் கூடாது. இந்தியாவில் இது மிக அதிகமாக இருக்கிறது. அபிரகம் கிடைக்காமலிருந்திருந்தால் இந்த நூற்றுண்டில் மின்சாரத் தொழிலில் ஏற்பட்ட அளவு கடந்த வளர்ச்சி நடந்திருக்காது. இந்தியாவில் அபிரகம் கிடைக்கும் முக்கிய இடங்கள் : பீகாரில் ஹசாரிபாகும், சென்னையில் நெல்லூரும் ஆகும். உலகத் தேவையில் 80 சதவீதத்தை அளிக்கும் பீகார் அபிரகப் படிவு 60×12 மைல் பகுதியில் அமைந்திருக்கிறது. 1946 ல் 1,30,363 அந்தர் அபிரகம் உற்பத்தி செய்த இந்தியா 1947-ல் 1,36,308 அந்தர் உற்பத்தி செய்தது. இப்போது உற்பத்தி ஆண்டுக்கு 4,90,000 அந்தர் என்று மதிப்பிடப்படுகிறது. 1½ இலட்சம் மக்களுக்குமேல் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று டாக்டர் டன் (Dunn) கூறுகிறார்.[1] நெல்லூரில் உள்ள அபிரகச் சுரங்கம் 60×10 மைல் பாதையில் உள்ளது. நன்கு நிறுவப்படாத மின்சாரத் தொழில்கள் இங்கு இல்லாததால், நமது அபிரகத்தில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. கீழ்த்தரமான அபிரகத்தினால் செய்யப்படுவதும், மைகானைட்டு (micanite) செய்வதற்குப் பயன்படுவதும் ஆகிய அபிரகத் துண்டுகளில் 90% இந்தியாவிலிருந்து கிடைக்கிறது. யுத்தம் தோன்றியதால் அபிரக வாணிகம் ஆரம்பத்தில் தடைப்பட்டது. பிறகு ஒரு பொருளாதார வீக்கம் (boom) ஏற்பட்டு, இத் தாது அலட்சியமான முறையிலும் சிக்கனமற்ற முறையிலும் சுரண்டப்பட்டது. 1947-ல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இத் தாதுவின் மதிப்பு ரூ. 4,65,89,000 ஆகும். இதிலிருந்து இத் தாதுவின் முக்கியத்துவம் விளங்கும். 1951-ல் இதன் ஏற்றுமதி ரூ. 13,79,41,000 மதிப்புள்ள 4,90,488 அந்தர்கள் ஆகிய உச்ச நிலையை யடைந்தது. அதுமுதல் ஒரு பிற்போக்கு நிலை ஏற்பட்டு,

[1] இந்திய நிலவியல் ஆராய்ச்சித் துறையின் 'அபிரகம் பற்றிய குறிப்பு.'

1956-ல் இவ் ஏற்றுமதியின் அளவு ரூ. 8,74,56,000 மதிப்புள்ள 4,26,000 அந்தராகக் குறைந்தது. நமது மொத்த ஏற்றுமதியில் 50% க்கு மேல் வாங்குகிறது. பாதுகாப்புக்கும், உள்நாட்டு அமெரிக்கத் தொழில்களுக்கும் மிகவும் முக்கியமானதும், உலக உற்பத்தியில் 75% இந்தியாவில் இருக்கிறது என்று பெருமை பாராட்டத் தக்கதுமான இந்தப் பொருள் மந்த நிலையில் உள்ளது என்பது வருந்தத்தக்கது. மின்சார இயந்திரங்களைச் செய்வதற்கு அபிரகம் மிக இன்றியமையாதது. இந்தத் தொழிலுக்குத் தேவையான கட்டி அபிரகம் இந்தியாவில்தான் அதிகமாகக் கிடைக்கிறது என்ற நிலை உள்ள வரையில், அபிரகத் தொழிலின் எதிர்காலம் நன்ருக இருக்கும். அபிரகத்தை விற்பனை செய்யும் முறை மிகவும் குறைபாடுடையது. 1946 ஆம் ஆண்டில் அபிரக விசாரணைக் குழு, இத்தொழிலை நன்கு விருத்தி செய்வதற்குப் போதிய சோதனையும் தரப்படுத்துவதும் அவசியம் என்று கூறியது.

(ஈ) பாக்ஸைட்டு

அலுமினியத்திற்கு பாக்ஸைட்டு ஒரு முக்கியமான மூலம். நம் நாட்டில் பலவிடங்களில் பாக்ஸைட்டு அதிகமாக இருக்கிறது. இந்திய நிலவியல் ஆராய்ச்சிப் பிரிவு அண்மையில் பாக்ஸைட்டுப் படிகங்கள் உள்ள இடங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்தது. இந்தியாவில் அலுமினியம் உற்பத்தி செய்வது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு 1937-ல் ஒரு நிபுணர் குழு பாக்ஸைட்டுப் படிவுகள் உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று மின்சக்தி மூலங்களையெல்லாம் ஆராய்ந்தது. எல்லாத் தரமான படிவுகளும் 25,00,00,000 டன் இருக்குமென்று சுமாராக அறியப்பட்டது.

சோட்டா நாகபுரி பீடபூமிக்கு மேற்கில் ஜாஷ்பூரில் புதிய பாக்ஸைட்டுப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பண்ட்ராபட், துடோபானி போன்ற இடங்களிலும், ஜாஷ்பூரில் வேறிடங்களிலும் அலுமினியம் லேடிரைட்டும் பாக்ஸைட்டும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விடங்கள் உபர் காட்டில் (Uper Ghat) குரியா மேட்டு நிலத்தின் பல பகுதிகளில் அமைந்துள்ளன. லேடிரைட்டு கிடைக்கும் இடங்கள் எல்லாம் குறிக்கப்படவில்லை. ஆகையால், மேலும் சில இடங்களைக் கண்டுபிடிக்கக் கூடும். இந்தப் படிவங்களில் அலுமினியம் ஆக்ஸைடு தவிர, இரும்பு, கால்சியம், மக்னீசயம் ஆகியவைகளின் ஆக்ஸைடுகளையும் பெற்றுள்ளன. அலுமினியம் ஆக்ஸைடு 50% முதல் 60% வரை இருக்கிறது. நல்ல வகையான டைடானியம் கலந்த பாக்ஸைட்டு (titaniferous bauxite) இந்த இராச்சியத்தில் பலவிடங்களில் வெட்டியெடுக்கப்

படலாம் என்று திரு. டே (Dey) கூறுகிறார். இதில் முக்கிய இடையூறு யாதெனின், அருகிலுள்ள ரெயில் நிலையத்திற்குக் கொண்டுசெல்வதற்கு மலிவான போக்குவரத்துச் சாதனம் இல்லாமையே.[1] தென்னிந்தியாவில் செவர்னி குன்றுகளில் (Shevarhy Hills)முக்கியமான பாக்ஸைட்டுப் படிவங்கள் உள்ளன என்று இந்திய நிலநூல் ஆராய்ச்சிக் குழுவினர் அண்மையில் செய்த ஆராய்ச்சிகளால் வெளிப்பட்டுள்ளது. இத் தாது மிக உயர்ந்த வகையானது. இதில் அலுமினியம் அதிக சதவீதம் உள்ளது. உயர்ந்த வகையான பாக்ஸைட்டு 350 இலட்சம் டன் கிடைக்கும். அலுமினாவை இறக்குமதி செய்து உருக்கி, இந்தியாவில் முதல் முதலாக 1943-ல் அலுமினிய உலோகக்கட்டை செய்யப்பட்டது. இப்பொழுது ஓரளவு இந்திய பாக்ஸைட்டிலிருந்தே அது செய்யப் படுகிறது. 1947-ல் 3,223 டன் அலுமினியம் உற்பத்தி செய்யப் பட்டது. 1951-ல் இது 3,849 டன் ஆயிற்று. 1955-56-ல் உத்தேச உற்பத்தி 7,500 டன். இரண்டாம் திட்டம் 1960-61-ல் இதை 25,000 டன்னாக உயர்த்த உத்தேசித்துள்ளது. உள்நாட்டுத் தேவையில் ஒரு பகுதியையே இவ் வுற்பத்தி ஈடுசெய்ய முடிகிறது. ஆதலால் ரூ. 2·5 கோடி சராசரி மதிப்புள்ள 10,000 டன் உலோகத்தை நாம் இறக்குமதி செய்கிறோம். 1951-ல் 67,000 டன் பாக்ஸைட்டு உற் பத்தி செய்யப்பட்டது. இது 1956-ல் 91,000 டன் ஆயிற்று. உள் நாட்டு அலுமினியத் தொழிற்சாலைகள் ஆண்டுக்கு 20,000 டன் எடுத்துக்கொள்கின்றன. இந்தியாவில் அலுமினியத் தொழில் பெருகினால், இந்த அளவும் அதிகமாகும்.

(உ) இல்மெனைட்டு

உலகத்திலேயே இந்தியா அதிக இல்மெனைட்டு உற்பத்தி செய்யும் நாடாக இருந்தது. இப்போது அது அமெரிக்காவிற்கு அடுத்த இடத்தை அடைந்திருக்கிறது. திருவாங்கூர் கடற்கரை மணலிலிருந்து அது கிடைக்கிறது. உலகத்திலேயே இது மிகவும் தாது வளமுள்ள படிவமாகும். இது அங்கே கிழக்குக் கடற்கரை யில் அகப்படுகிறது. இது டைடானியம் கலந்த இரும்புத் தாது. இதில் டைடானியம் 32% வரை இருக்கும். மிக வேகமாகச் சுழலும் எஃகுக் கலவை செய்வதற்கு இது உதவுகிறது. 1949-ல் திருவாங்கூரில் இல்மெனைட்டு உற்பத்தி 3,08,180 டன்னாக உயர்ந்தது. பிறகு குறைந்துவிட்டது. 1954-ல் ரூ. 79·8 இலட்சம் மதிப்புள்ள 2,40,513 டன் முழு உற்பத்தியும் ஏற்றுமதி செய்யப் பட்டது.

[1] Science & Culture, Oct. 1942; Records of the Geological Survey of India, March, 1942.

(ஊ) அணுத் தாதுக்கள்

சென்ற பத்தாண்டுகளாக அணு ஆராய்ச்சி செய்யப்பட்டதன் விளைவாக, ஒன்றிரண்டு தலைமுறைகளில் உலகத்தையே மாற்றி விடலாம். இதனால் நமக்கு ஒரு புதிய சக்திமூலம் கிடைக்கும். அது இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் நிலக்கரி, பெட்ரோலியம், மின்சாரம் போன்ற சக்தி மூலங்களை நீக்கி அவற்றின் இடத்தைப்பெறும். அடுத்த சில நூற்றாண்டுகளுக்கு நம் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்கு உலகத்தில் அணு சக்தி மூலங்கள் இருக்கின்றன. அவையாவன: (1) யுரேனியம், (2) தோரியம், (3) பெரிலியம், (4) லிதியம், (5) சிர்கோனியம், (6) கிராபைட்டு.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் யுரேனியம் கலந்த தாதுக்கள் இருப்பது தெரிந்திருக்கிறது. ஆனால், அப் படிவங்கள் மிகக் குறைவாக இருந்ததால் அதிக உற்பத்திக்குப் போதாமல் இருந்தன. 1949-க்குப் பிறகு இரண்டு புதிய இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவை: (1) தென் பீகாரில் புகழ் பெற்ற சிங்பும் (Singhbhum) தாமிரப் படிவத்தின் பக்கத்திலேயே உள்ள 60 மைல் நீளமுள்ள படிவம்; (2) மத்திய இராசபுதனத்தில் சில இடங்கள். அணு சக்தித் துறையைச் சேர்ந்த இரசாயன வல்லுநர்கள் இத்தாது விலிருந்து உலோகத்தைப் பிரிப்பதும் பக்குவப்படுத்துவதும் பற்றிச் செலவு மதிப்பீட்டைக் கணித்திருக்கிறார்கள். அது இங்கிலாந்தி லும் அமெரிக்காவிலும் உண்டாகும் செலவுக்கு அண்மையிலேயே உள்ளது. சென்னையிலும் திருவாங்கூரிலும் உள்ள மோன சைட்டு மணலில் தோரியமும் யுரேனியமும் உள்ளன. இந்த மணலிலிருந்து பல ஆயிரம் டன் யுரேனியம் கிடைக்குமென்று கூறப் படுகிறது. திருவாங்கூர் மோனசைட்டிலுள்ள தோரியத்தின் அளவு 8% முதல் 10·5% வரை இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. பிரேசில் முதலிய அயல் நாடுகளில் உள்ள மோன சைட்டில் 5% முதல் 6% தான் யுரேனியம் உள்ளது. திருவாங்கூர்-கொச்சின் பகுதியிலுள்ள மோனசைட்டு மணலை ஆராய்ந்ததில் மொத்தம் 10 இலட்சம் டன்னுக்குமேல் அதில் தோரியச் செல்வம் இருப்பதாகத் தெரிகிறது. 1953-ல் செய்யப்பட்ட ஆராய்ச்சியின்படி, இத் தாது மிகுந்துள்ள பெரிய இடங்கள் 12 உள்ளன என்றும், சுமார் 20 இலட்சம் டன் மோனசைட்டு அங்கு இருக்கிறதென்றும் தெரிந்தது.

பெரிலியத்தின் முக்கியமான மூலம் பெரில் என்னும் தாது. இந்த அரிய உலோகம் அணு சக்தித் தொழிற்சாலைகளில் மிகப்

படுத்தி (moderator) யாகப் பயன்படுகிறது. இது இராசபுதனத்திலும் வட பீகாரிலும் மிக விரிவான படிவங்களாகக் காணப்படுகிறது. அங்கு இப் படிவங்களை எடுப்பதும் சுத்தப்படுத்துவதும் எளிது. இது ஆண்டுக்கு ஆயிரம் டன்னுக்குமேல் உற்பத்தி செய்யப்படுகிறது. மத்திய பிரதேசத்திலும் இது இருப்பதாகக் கூறப்படுகிறது. மற்ற நாடுகளில் உள்ளதைவிட இந்தியப்பெரிலில் அதிகப் பெரிலியம் இருக்கிறது. ஆகையால் இரண்டாம் உலகப் போரின்போது இத் தாது மிக அதிகமாக வெளியேற்றப்பட்டது. 1946-ல்தான் அதன் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. தென் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் அத் தாது அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், இந்தியாவானது உலகத்தில் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்ருக இருக்கும்.

ஹீலியம் அடங்கியுள்ள லிதியம் என்னும் உலோகம் பல இடங்களில் கணிசமான அளவுக்குக் கிடைக்கிறது. இந்தியாவில் அதிக அளவு சிர்கானும் (Zircon) கிடைக்கிறது. அணு உலையின் அமைப்பில் சிர்கோனியமும் அதன் கூட்டுப்பொருள்களும் அதிகம் பயன்படுகின்றன. திருவாங்கூரில் உள்ள இல்மெனைட்டு மணலில் 6% சிர்கான் உள்ளது. இந்தத் தாதுவை ஏற்றுமதி செய்வதற்கான அளவு அதிக உபரி இருக்கிறதென்று மதிப்பிடப்படுகிறது.

கிராபைட்டு மற்றப் பொருள்களோடு அன்றித் தனியாகக் கிடைப்பது அரிது. நடைமுறையில் இயற்கையான கிராபைட்டைச் சுத்தம் செய்யும் செலவைவிடக் குறைந்த செலவில் பெட்ரோலியத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் செயற்கைக் கிராபைட்டைத்தான் உபயோகிக்கிருர்கள். ஆண்டுக்கு 35 இலட்சம் டன் பண்படா எண்ணெயைத் தூய்மைப்படுத்தும் நமது நான்கு பெட்ரோலியம் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளிலிருந்து போதிய அளவு பெட்ரோலியம் கோக் (சுட்ட நிலக்கரி) கிடைக்கக்கூடும். இதிலிருந்து கிராபைட்டினுல் மிதப்படுத்தப்படும் அணு உலைகளுக்கு (Reactors) வேண்டிய செயற்கைக் கிராபைட்டைத் தயார் செய்துகொள்ளலாம்.

நம் நாட்டின் பலவிடங்களை இன்னும் ஆராய வேண்டியிருக்கிறது. எனினும், புதிய இடங்களிலிருந்து இலாபகரமாகப் பெற்று வாணிபம் நடத்தக்கூடிய முறையில் யுரேனியப் படிவங்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமே.[1] அணுசக்தித் துறையில் இந்தியத் திட்டம் மிகப் பெரிதில்லையெனினும், சென்ற ஆண்டில்

[1] 'இந்தியாவில் அணு சக்திக்கான தாது வளம்'—Holland Memorial Lecture delivered at Calcutta, by D. N. Wadia on January 20, 1956. 'Science and Culture' Vol XXI. No. 10. pp. 561-5.

அதிக முன்னேற்றம் உண்டாகியுள்ளது. பம்பாயில் டிராம்பே என்னுமிடத்தில் ஓர் அணு உலை அணு சக்தி நிறுவனம் அமைக்கப் பட்டுள்ளது. 1952-ல் திருவாங்கூர்-கொச்சிப் பகுதியில் ஆல்வாயில் அமைக்கப்பட்ட தொழிற்சாலை மோனசைட்டைப் பக்குவப்படுத்தி யுத்தத்திற்குத் தேவையான பொருள்களை அளிக்கும். மற்றொரு தொழிற்சாலை யுரேனியம், தோரியம் ஆகியவற்றைப் பிரித் தெடுக்கும். ஆகஸ்டு 4, 1956-ல் 'கப்சார்' என்ற பெயருடைய நீந்தும் குளம் மாதிரி அமைக்கப்பட்ட அணு உலை வேலை செய்யத் தொடங்கியது. கொழும்புத் திட்டத்தின்கீழ் இந்தியாவுக்குக் கனடா அணு உலையை அனுப்பியது. அது 1957-ல் பம்பாயில் வந்திறங் கியது. அண்மையில் அது வேலை தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இரசாயனப் பொருள்கள் : (அ) கந்தகம்

ஒவ்வொரு நாடும் அதிக அளவில் பெறும் முக்கியமான பொருள் கந்தகம். இந்தியா ஒவ்வொரு வருடமும் 42,500 டன் கந்தகத்தை இறக்குமதி செய்கிறது. கந்தக அமிலத் தொழிற்சாலை முன்னேற்றத்தின் காரணமாகச் சில வருடங்களாக இவ் இறக்குமதி அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த அமிலம் 1939-ல் 25,000 டன் உற்பத்தி செய்யப்பட்டது; 1950-ல் 1,00,000 டன் ஆயிற்று. எல்லா இராச்சியங்களிலும் சிறிய அளவில் கந்தகம் இருப்பதை இந்திய நிலவியல் ஆராய்ச்சித் துறை கண்டுபிடித்திருக்கிறது. அடிப்படையான கந்தகப் படிவங்கள் அதிகம் இல்லை எனினும், இரும்புப் பைரிடீஸ் (iron pyrites) அதிகம் கிடைக்கிறது. இதிலிருந்து கந்தகமும் கந்தகப் பொருள்களும் கிடைக்கும். சிம்லா அருகில் அதிக இரும்புப் பைரிடீஸ் படிவங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இத் தாதுவில் 40% முதல் 45% கந்தகம் இருப்பதாகப் பகுத்தாய்ந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 30,000 டன் வீதம் 20 ஆண்டுகளுக்கு இந்தப் படிவங்கள் நமக்குப் போதும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாமிர பைரிடீஸ், ஜிப்சம் ஆகியவற்றிலிருந்தும் கந்தகத்தை எடுக்கலாம். 1944 முதல் 1946 வரை மூன்றாண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட 2,61,972 டன்களில் இப்போது பாகிஸ்தானின் பகுதிகளாக உள்ள பஞ்சாபின் ஜீலம் மாவட்டத்திலிருந்தும் பலுசிஸ்தானத்திலிருந்தும் மூன்றில் ஒரு பங்கு கிடைத்தது. இந்தியாவில் கிடைக்கும் ஜிப்சம் மிக அதிகமாக உள்ளது. இப்பொழுதே ஆண்டுக்கு 2,00,000 டன்கள் எடுக்கப்படுகின்றன. இந்தியாவின் பெரிய பாலைவனத்தின் அருகில் பலவிடங்களில் ஜிப்சப் படுகைகள் உள்ளன. ஜோட்பூரில் மட்டும் உள்ள ஜிப்சப் படிவச் செல்வம் 250 இலட்சம் டன் என்று

மதிப்பிடப்பட்டிருக்கிறது. பிகானீரில் 280 இலட்சம் இருக்கிறது. முன்னேற்றம் உண்டாக உண்டாகக் கந்தகத் தேவைப் பிரச்சினை மிகக் கடினமாகும். மேலும் நிலவியல் ஆராய்ச்சி செய்து அதிக பைரிடீஸ் படிவங்களைக் கண்டுபிடித்தாலொழிய, இயற்கையான சல்பேட்டுகளிலிருந்து (Sulphates) தான் கந்தகத்தைப் பிரித்தெடுப்பதற்கு முயலவேண்டும்.[1]

கந்தகத்தை யளிக்கக்கூடிய மற்றொரு உப்பு சோடியம் சல்பேட்டு என்பது. உத்தரப் பிரதேசத்தில் ' உசார் ' (Usar) நிலங்களிலும், பீகாரில் ' காரி ' (Khari) உப்புக்களிலிருந்தும் கிடைக்கும் கார உப்புக்களில் (alkaline salts) சோடியம் சல்பேட்டு கிடைக்கிறது. நல்ல முயற்சிகளை மேற்கொண்டால், ஆண்டொன்றுக்கு 8,00,000 மணங்கு சோடியம் சல்பேட்டு கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

(ஆ) பாஸ்பேட்டுகள் (Phosphates)

திரிச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் பீகாரிலும் பரந்த இடங்களில் இயற்கையான பாஸ்பேட்டுகள் கிடைக்கின்றன திரிச்சிராப்பள்ளிப் படிவங்களில் 70 இலட்சம் டன் கிடைக்கலாம். பொதுவாக இந்திய மண்ணில் பாஸ்பேட்டு குறைவுதான். இந்தியாவிலிருந்து மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படும் எலும்புகளும், எலும்புப் பொடியும் பாஸ்பேட்டுகளை அளிக்கும் சிறந்த மூலங்களாகும். ஆண்டுக்கு 35,000 டன் சூபர் பாஸ்பேட்டுகளை உற்பத்தி செய்யும் அளவுக்குத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், இதற்குத் தேவை குறைவாக இருப்பதால் அண்மையில் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. 1955–56 ல் இது 20,000 டன் என்று மதிப்பிடப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் 1960-61-ல் இதன் உற்பத்தி 1,20,000 டன் என்று இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) காரங்கள் (Alkalies)

கீழ்க்கண்ட அட்டவணை நாம் எவ்வளவு காரங்களை இறக்குமதி செய்கிறோம் என்பதைக் காட்டுகிறது.

காஸ்டிக் சோடா	**1937-38**	**1938-39**	**1951-52**	**1952-53**
அந்தரில் அளவு	5,18,500	4,97,000	12,55,000	5,11,000
ரூபாய் மதிப்பு	42,81,000	45,07,000	3,79,09,000	1,45,65,000

[1] 'இந்தியாவில் தாது உற்பத்தித் தொழிற்சாலைகள்'—Brown & Dey 1955. pp. 495-96.

சோடியம் கார்பனேட்டு	1937_38	1938_39	1951_52	1952_53
அந்தரில் அளவு	14,88,000	13,19,000	17,06,300	16,32,000
ரூபாய் மதிப்பு	59,58,000	61,44,000	2,84,70,000	2,54,29,000
சோடியம் பை கார்பனேட்டு				
அந்தரில் அளவு	1,24,000	94,000	1,93,500	N. A.
ரூபாய் மதிப்பு	5,60,000	4,84,000	35,00,000	

காஸ்டிக் சோடா உற்பத்தி 1951-ல் 15,000 டன்னுக இருந்து 1955-ல் 34,000 டன்னுக உயர்ந்தது. இப்போது ஆண்டுக்குச் சுமார் 65,000 டன் தேவையாய் உள்ளது. 1960-61 க்குள் தேவையாகும் அளவைச் சரிக்கட்டுவதற்கு இரண்டாம் திட்டமானது 1,33,000 டன் உற்பத்தித் திறனேயும் (capacity), 1,20,000 டன் உற்பத்தியளவையும் இலக்காகக் கூறியிருக்கிறது.

இந் நாட்டில் சோடியம் கார்பனேட்டின் இயற்கையான முக்கிய மூலம் 'ரே' (reh) அல்லது 'கலார்' (kalar) என்பது. இது பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் 'உசார்' நிலங்களில் கிடைக்கக்கூடிய ஒரு வெண்மையான காரப் பொடி (alkaline efflorescence). உத்தரப்பிரதேசத்தில் கிடைக்கும் 'உசார்' உப்பில் அதிக சோடியம்-பை-கார்பனேட்டு இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 1,800 சதுர மைல்கள் இந்தப் பொடி கண்ணுக்குத் தெரியும்படியாக மூடப்பட்டுள்ளன. அந்த இராச்சியத்திலிருந்து ஆண்டுதோறும் 70 இலட்சம் பண்படாத சோடா கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. லக்சார் ரெயில் நிலேயத்திற்குப் பக்கத்தில் ஓரிடத்தில் மட்டும் 8% முதல் 11% வரை சோடியம் கார்பனேட்டு அடங்கியுள்ள படிவங்கள் அமைந்த மண் மிகுதியாகக் காணப்படுகிறது.

பலவகை

யுத்தத்திற்குத் தேவையான, மிக முக்கியமான நிக்கல் இந்தியாவில் இருப்பதாகச் சமீபகாலம் வரையில் தெரியவில்லே. ஆனுல், நேபாளத்தில் பனி மூடிய இமாலயப் பகுதிகளில் அது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1939-ல், இந்திய விஞ்ஞான காங்கிரசின் நிலவியல் பிரிவின் தலேவர், துத்தநாகம், கந்தகம், வைரம்போன்ற சில மறைந்துபோன

தாதுக்களை மீண்டும் கண்டுபிடித்துப் பயன்படுத்த முடியும் என்று தெளிவாகக் குறிப்பிட்டார். மற்றும் சில விலையுயர்ந்த கற்களை (கடலிலும் நீரிலும் உள்ள டோபாஸ், கற்படிகம், கார்னெட்டு, இரத்தினம் போன்றவற்றை) மீண்டும் வியாபாரம் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. அறியாமையால் சில விலையுயர்ந்த தாதுக்களை மீட்க முடியாமல் இழந்துவிடுகிறோம். இப்படித்தான் ஜெய்பூர் இராச்சியத்தில் ஒரு தாதுப்பொருள் வியாபாரி ஒரு டன் பெரிலை 12 பவுன் வீதம் ஏற்றுமதி செய்தார்.[1] இப்பொழுது அணு சக்தி உற்பத்தியில் அதற்குள்ள யுத்த கால முக்கியத்துவத்தைக் கருதி அதன் ஏற்றுமதி தடைசெய்யப்பட்டிருக்கிறது.

முடிவு

இப்பொழுது நாம் விரைவாகப் பரிசீலனை செய்ய, இந்தச் செல்வங்களைப் பொறுத்தவரையில், இந்தியாவில் இன்று இவற்றின் உற்பத்தியானது, அதற்கான சாத்தியக் கூறுகளைக் காணும்போது மிகமிகக் குறைவுதான் எனின் மிகையாகாது. எந்த நாடும் தாது மூலப் பொருள்களில் முற்றிலும் தன்னிறைவுடையதல்ல. இவை காடுகளைப்போலப் புதுப்பிக்கக் கூடியவையல்ல. எனினும், பொதுவாக நம் நிலைமை, யுத்த காலத் தேவைகளுக்கும், அமைதி காலத் தேவைகளுக்கும் திருப்தியளிக்கக் கூடியதாய் இருக்கிறது. யுத்த கால முக்கியத்துவம் வாய்ந்த தாதுப் பொருள்களும், மட்ட உலோகங்களும், உலோகக் கலவைகளும், பீங்கான் சாமான்களும், துணையான தாதுப் பொருள்களும் இந்தியாவில் போதிய அளவு உள்ளன. இவை எல்லாம் இல்லாவிட்டாலும், இவற்றில் பலவும் நம்மிடம் உள்ளன. இந்தியாவில் வெள்ளீயம், காரீயம், துத்தநாகம், நிக்கல், கிராபைட்டு, திரவ எரிபொருள்கள் ஆகியவை போதிய அளவு இல்லை. ஆனால், உப்பு மூல (basic) டங்ஸ்டன் உலோகங்கள், இரும்பு, மாங்கனீஸ், அலுமினியம், குரோமியம் (குறிப்பாக முதல் மூன்றும்) வேண்டிய அளவுக்குமேல் நம்மிடம் உள்ளன. துணையான தாதுக்களாகிய கல்நார் (asbestos), சிமென்டு, உரங்கள், களிமண் வகைகள், அபிரகம், கந்தகம், பலவகை உப்புக்கள், தாதுக்கள், தொழிலுக்கு உதவும் மற்றத் தாதுப் பொருள்கள் ஆகியவை நம் தேவைக்கு வேண்டிய அளவு உள்ளன. சிலவற்றில் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு உபரியும் உள்ளன.[2]

[1] 'இந்தியாவின் தாதுச் செல்வப் பாதுகாப்பு' — இந்திய விஞ்ஞானக் கழகத்தின் அறிக்கை, 1939.

[2] D. N. வாடியா, கல்கத்தா இந்திய விஞ்ஞானக் காங்கிரசில் (ஜனவரி 1943) ஆற்றிய தலைமைப் பேருரையைக் காண்க.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் இயற்கை உலோகம் செய்யவில்லை. தனக்குக் கிடைத்துள்ள பல வாய்ப்புகளைப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு மனிதன் தான் தவறிவிட்டான். கடந்த காலத்தில் எக்காரணத்தினாலாவது, இந்த வளங்களை மனிதன் பயன்படுத்தத் தவறியிருந்தால், இத் தவறுகளையே முன்னேற்றத்திற்குப் படிகளாகக் கொண்டு அவன் எதிர் காலத்தில் சிறந்து விளங்கலாம். ஏனெனின், முன்னேறிக்கொண்டிருக்கும் அறிவின் உதவியால், அவன் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்தும் கலையைப் பெற்றிருக்கிறான். எனினும், தாதுப் பொருள்கள் இயற்கையின் கொடைகள் என்பதையும், அவை நம் சமூகம் முழுவதற்கும் உரியவை என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். எனவே, அவற்றை நாடு முழுவதன் நன்மையைக் கருதிப் பயன்படுத்த வேண்டும்.[1]

இயற்கை நமக்களித்துள்ள வளங்களையெல்லாம் பொதுவாக நோக்கும்போது, எதிர் கால உலகில் பொருளாதாரத் துறையில் இந்தியாவிற்குரிய இடத்தைப்பற்றி நாம் ஐயங்கொள்ள வேண்டியதில்லை.[2] நம்முடைய தாதுக்களில் நான்கு (அபிரகம், மாங்கனீஸ் தாது, இல்மெனைட்டு, மோனசைட்டு) உலகத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால், அண்மைக் காலம் வரையில் இத் தாதுக்களில் பெரும்பகுதி அப்படியே ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது வருந்தத்தக்கது.[3] அபிரகத் தூள்களிலிருந்து மைகானைட்டு செய்ய முடியும்; மோனஸைட்டிலிருந்து தோரியம் ஆக்ஸைடும் சிரியமும் எடுக்க முடியும்; மாங்கனீஸ்

[1] இந்தச் சந்தர்ப்பத்தில், மொழி அடிப்படையில் இராச்சியங்களைக் கோரி ஆரவாரம் செய்யும் பிரிவினைச் சக்திகள் நமது தாதுச் செல்வத்தை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவதற்குத் தடையாயிரா என்று நம்புவோம். அஸ்ஸாமில் குறுகிய தன்னலக் குழுக்கள் தங்கள் பகுதியில் பழைய எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை விடாமல் வைத்துக் கொண்டு, மேலும் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குமாறு அரசியல் கிளர்ச்சி செய்ததைக் கண்டு, நாம் அஞ்சவேண்டியுள்ளது. மூன்று பெரிய எஃகுத் தொழிற்சாலைகளை நிறுவும் இடம்பற்றி உண்டான இழிவான சர்ச்சைகளையும் கண்டு நாம் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

[2] இந்தியப் பிரிவினையினால் நம்முடைய தாதுவள நிலைமையில் அதிக மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. 1946-ல், பிரிவினைக்கு முற்பட்ட இந்தியாவின் தாது உற்பத்தியில் 97% (மதிப்பின் அடிப்படையில்) இந்திய யூனியனிலிருந்துதான் கிடைத்தது. (இந்திய நிலவியல் ஆராய்ச்சித் துறையின் தஸ்தாவேஜுகள் Vol. 81, Part. 3, Page 389, 1950).

[3] இந்தியச் சுரங்கங்களில் கிடைக்கும் இரும்புத் தாது, மாங்கனீஸ் தாது, அலுமினியம், மக்னீசயம், டைடேனியம் தாதுக்கள், உயர்ரக பீங்கான்கள், அரிய உலோகங்கள், அபிரகம், தோரியம், யுத்த முக்கியத்தும் வாய்ந்த மற்ற அணு மூலகங்கள் ஆகியவை உலகில் முக்கியமானவை'. (Minerals and National Reconstruction, D. N. Wadia, Quarterly Journal of the Geological Mining and Metallurgical Society of India, Silver Jubilee Volume, p. 3. et seq).

தாதுவை உருக்கி இரும்பு-மாங்கனீசாக்க முடியும்; இல்மெனைட்டி லிருந்து டைடேனியம் வெள்ளை உண்டாக்க முடியும். அன்றியும், 43 மூலப் பொருள்களைத் தனியே உற்பத்தி செய்யவும் முடியும். இவை தொழில்கள் பெருகப் பெருக அதிகப் பயன்படும். பேரைட்டு, பாக்ஸைட்டு, குரோமைட்டு, களிமண் வகைகள், பெல்ட்ஸ்பார் (feldspar), புல்லர்மண் (fuller's earth), கண்ணாடி மணல், ஜிப்சம், கியானைட், சுண்ணாம்புக்கல், லிதியம், மாக்னசைட்டு, மாங்கனீஸ், அபிரகம், தாது வர்ணங்கள், மோனசைட்டு, நைட்டிரேட்டுகள், பாஸ்வேட்டுகள், பொட்டாசுக் காரம், உப்பு, ஸ்ட்ரான்ஷியம், கந்தகம், டால்க் (talc), டைடேனியம், டங்ஸ்டன், வனடியம்[1] போன்ற செல்வங்களைப் பயன்படுத்துவதற்கு மேலும் மேலும் அதிக இடமிருக்கிறது. பேராசிரியர் பெஹ்ரே, 'நிலக்கரி, இரும்பு, பல இரும்பு உலோகக் கலவைகள் (இவை நல்ல எஃகு செய்யப் பயன்படும்), துணையான தாதுக்கள் ஆகிய முக்கியமான தொழிற் சிறப்புடைய தாது வளங்கள் இந்தியாவில் அதிகம் உள்ளன. இவற்றால் அது சக்திவாய்ந்த, ஓரளவு தன்னிறைவுள்ள தொழில் நாடாக விளங்க முடியும்' என்று கூறுகிறார்.[2]

உலக நாடுகள் எல்லாம் சமத்துவ முறையிலும் நட்பு முறை யிலும் அமைதியோடு வாழ்வதற்கு, அவை தம்முடைய சக்திகளை யெல்லாம் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாயின், எல்லா இந்தியர்களும் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டிய ஒரு முக்கிய மான கடமை யாதெனின், அவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் தம் பொறிசெய் பொருள்களை ஆக்கு வதற்கு மூலப் பொருள்களை அனுப்புபவர்களாக இன்றித் தக்க முறையில் தம் வாழ்க்கையைத் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். இவ்வாறு திட்டமிடுவதால், தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், நியாயமான அளவுக்குத்[3] தங்கள் நாட்டைத் தன்னிறைவு உடையதாகச் செய்வதற்கும், இயந்திரப் புரட்சியின் புத்தமைப்புக்களை அவர்கள் பல சாதனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

[1] Dr. Dunn எழுதிய 'இந்தியாவின் தாது வளங்களை எதிர் காலத்தில் விருத்தி செய்தல்' என்னும் கட்டுரையைக் காண்க. (Indian Science Congress at Calcutta, January 1943).

[2] மேற்கூறியதையே காண்க.

[3] 'நியாயமான அளவுக்கு' என்றது ஏனெனின், கிராமங்களுக்கு இடையே பொருள்களையும் பணிகளையும் பரிமாறிக்கொண்டாலொழிய (அப்பொழுது தான் எல்லோரும் எல்லாப் பொருள்களையும் பங்கிட்டுக்கொள்ள முடியும்). மக்கள் முன்னேற்றத்தில் இறுதி இலட்சியத்தை அடைய முடியாது.

நம் நாட்டில் இதுவரையில் உண்டான பொருளாதார முன்னேற்றத்தின் தன்மையை நோக்கினால், இந்த முன்னேற்றத்தில் ஒரு கொள்கையும் கிடையாது என்று கூறலாம். முப்பது வருடங்களுக்கு முன்பு வரிக்குழுவினால் கூறப்பட்ட 'தேர்ந்தெடுத்துப் பாதுகாத்தல்' (discriminating protection) என்ற கொள்கை நடைமுறையில் ஒரே மாதிரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. முழுப் பாதுகாப்போ, பயனுள்ள பாதுகாப்போ, இந்தியத் தொழில்களுக்குச் சாதகமான பாதுகாப்போ இருந்ததில்லை.

நமக்கு ஒரு அறிவுக்கேற்ற திட்டமிட்ட தாதுப் பொருள் கொள்கை வேண்டும். அது முறையாக நம் தாது வளத்தைச் சரியான முறையில் பயன்படுத்தும் நோக்கமுடையதாயிருக்க வேண்டும்; நாட்டு நலனைக் கருதிப் பொருள்களை வீணாக்காமல், நம் வளத்தை நன்கு பாதுகாப்பதாயிருக்க வேண்டும். இது நம் மக்களின் பல துறை முன்னேற்றத்திற்கான இரும்பு, எஃகு, மின்சாரம், கனவியல் தொழில்கள், இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள் சம்பந்தமானவை முதலிய முக்கியமான தொழில்களை வளர்க்கக் கூடிய, திட்டமிட்ட கொள்கைக்கு அடிப்படையாக அமையும்.[1] முதல் ஐந்தாண்டுத் திட்டம், ஒரு தனி அத்தியாயத்தில் நம்முடைய தாது வளத்தை மதிப்பிட்டு, மேற்கொண்டு ஆராய்ந்து பார்வையிட்டுத் தேட வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியிருக்கிறது. ஒரு தெளிவான தாதுவளக் கொள்கை வேண்டுமென்றும், அதைப் பாதுகாத்துச் சிக்கனமான முறையில் வேலை செய்ய வேண்டுமென்றும் அது வலியுறுத்துகிறது. தாதுவளக் கொள்கையின் முக்கியக் குறிக்கோள்கள், வளங்களைக் கண்டுபிடித்து மதிப்பிடுதல், நல்ல முறையில் சுரங்கம் வெட்டித் தாதுக்களை எடுத்தல்,

[1] நம் நாடு ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், தன் பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிடத் தொடங்கியுள்ளது. 1949 செப்டம்பரில் இயற்றப்பட்ட இந்தியச் சுரங்கச் சட்டத்தின்படி ஒரு சுரங்கச் செய்தி நிலையம் (Bureau of Mines) நிறுவப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இதன் வேலை நம்முடைய தாதுப் படிவங்களைப் பாதுகாத்துத் தக்க முறையில் பயன்படுத்துவதற்காக விஞ்ஞான முறையில் அவற்றைக் கண்டுபிடித்து அறிவிப்பது. அது '1955-ஆம் வருடத்திய, தாதுப் பொருள் பாதுகாப்பும் வளர்ச்சியும் பற்றிய விதிகளை' இயற்றியிருக்கிறது. இவ்விதிகள் சுரங்கத் தொழிலில் வற்புறுத்தப்படுகின்றன.

இரண்டாவது உலகப் பெரும்போரில், அமெரிக்கா தனக்கு வேண்டிய நான்கு முக்கியத் தாதுப்பொருள்களுக்காக இந்தியாவையே நம்பியிருந்தது. அவை, பெரில் (90·6%), மாங்கனீஸ் (85·5%), யுத்தத்திற்கு உதவும் அபிரகம் (88%), டைடேனியம் (26%). 1975-ல் அமெரிக்கா இப்பொருள்களுக்காக நம்மை, முறையே 90%, 80%, 95%, 80% நம்பியிருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. (அட்டவணை I, உலக யுத்தம் II-லும், 1975-லும், அந்நியத் தாதுப் பொருள்களைச் சார்ந்திருக்குந் தன்மை – 'அந்நியத் தாதுப்பொருள்களுக்காக எதிர் காலத்தில் நாம் பிறரை நம்பியிருக்கும் நிலைமை' Allen M. Bateman, in Annal, May 1952).

4. சமூகச் சூழ்நிலையும் பொருளாதார வாழ்க்கையும்

பொருளாதார முறையில் வரலாற்றிற்குப் பொருள் காணுதல் (Economic Interpretation of History) என்று சாதாரணமாகக் கூறப்படும் கொள்கை கூறுவதாவது: மக்களுடைய முன்னேற்றத்தில் சமூக, கலாசாரக் கட்டங்கள் பொருளாதார நிலைமையினல்தான் இறுதியாக நிருணயிக்கப்படுகின்றன; இப் பொருளாதார நிலையோ, பௌதிக, பூகோளச் சூழ்நிலையைப் பொறுத்தது. சமூக நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் பொறுத்தவரையில், மார்க்ஸ் கொண்டுள்ள எண்ணச் சார்பற்ற செயல்வாதம் (determinism) உலோகாயதம் (materialism) என்றே கூறப்படுகிறது. ஏனென்ருல், சமூக நிகழ்ச்சிகளை நிருணயிப்பது பொருளாதார அமிசமே என்று மார்க்சீயம் வற்புறுத்துகிறது. உண்மையில் மக்கள் எண்ணங்களும் இலட்சியங்களுங்கூட, அவர்களுடைய பௌதிக, பொருளாதாரச் சூழ்நிலையின் பிரதிபலிப்பே என்று அது கூறுகிறது. எனினும், அவை மீண்டும் பொருளாதார, பௌதிகச் சூழ்நிலையை மாற்றும் இயல்புடையவை என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆதியில் மக்கள் முன்னேற்றம், மண்ணின் இயற்கை, சீதோஷ்ணம், உணவு இவற்ருல் உண்டாகும் தொழில்கள் ஆகியவற்ருல் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பது உண்மையே. மக்களுடைய தொழில்கள் அவர்களுடைய கூட்டத்தின் அளவையும் அமைப்பையும் நிருணயிக்கின்றன; ஓரளவு அவர்களுடைய உணர்ச்சிகள், பழக்க வழக்கங்கள், எண்ணங்கள் ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகின்றன பௌதிகச் சூழ்நிலையால் மக்களுடைய மதச் சார்பான கொள்கைகளும் ஓரளவு பாதிக்கப்படக்கூடும். ஆனல், நாகரிக வாழ்க்கையும், விஞ்ஞான வளர்ச்சியும் பெருகப் பெருக நம் சூழ்நிலையின் மீது நமக்கு அதிகக் கட்டுப்பாடு ஏற்படுகிறது. ஏனெனின், பௌதிக உலகம் எத்தகைய விதிகளால் இயக்கப்

படுகிறது என்ற அறிவு நமக்கு உண்டாகிறது. சமூகச் சூழ்நிலை என்பது, நம்மைச் சுற்றியுள்ள எல்லா வகையான நிலையங்களும்—சட்டங்கள், பழக்கவழக்கங்கள், சொத்து, மார்க்கெட்டுகள், திருமணம், அரசாட்சி முறைகள்—ஆகும். இச் சமூகச் சூழ்நிலையைப் பற்றி நாம் அதிகம் அறிய அறிய, நம்முடைய சூழ்நிலையை நாம் கட்டுப்படுத்த முடியும். அதனால் நாம் அதை மாற்றிச் சரி செய்து, மேலான, சந்தோஷமான வாழ்க்கையை அடைய முடியும்.

தனிப்பட்டவர்களோ, நாடுகளோ செய்யும் எல்லாச் செயல்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. சமூக, அரசியல், பொருளாதார நிலையங்கள் இடைவிடாமல் ஒன்றை ஒன்று பாதித்து வருகின்றன. இவற்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு புறம் சமூக, மதக் கருத்துக்களும் நிலையங்களும் நேரடியாகப் பொருளாதார வாழ்க்கையைப் பாதிக்கின்றன. ஆனால், மற்றொரு புறம் பொருளாதார நிலையங்கள், சமூக வாழ்க்கையையும், பழக்கவழக்கங்களையும், மதச் சார்பான செயல்களையுங்கூட மாற்றிவிடுகின்றன. கடந்த நூற்றாண்டுகளில் மக்களினம் கொண்டிருந்த எண்ணங்களை அரசியல் ஜனநாயகம் நிறைவேற்றவில்லையென்றால், அதற்குக் காரணம் ஜனநாயக இலட்சியங்களோடு ஒத்துவராத பொருளாதார, சமூகச் சூழ்நிலையில் ஜனநாயகத் தொடர்புடைய அரசியல் நிலையங்கள் வேலை செய்யவேண்டியிருந்ததுதான். இதே காரணத்தினால், ரஷ்யாவில் இருப்பது போன்ற பொருளாதார ஜனநாயகத்தை அப்படியே கடைப்பிடிப்பதும், மக்களினத்தின் வாழ்க்கையை நிறைவுடையதாகச் செய்வதும் தவறிவிடக்கூடும். ஆகையால் அதை ஒரு ஆன்மீக அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்ட சமூக, கல்வித் திட்டங்களின் உதவியால் நிறைவுடையதாகச் செய்யவேண்டும்.

இந்தியாவின் சமூக வாழ்க்கையில் மூன்று குறிப்பிடத்தக்க அமிசங்கள் உள்ளன. அவை, தன்னிறைவுடைய கிராமங்கள், சாதி முறை, பிரிவினையற்ற குடும்பம். கிராம மக்கள் பல சாதியினராகவும், அச் சாதிகளுள் பிரிவினையற்ற குடும்பத்தினராகவும் வாழ்கின்றனர். கிராமத்தை ஓர் அலகாகக் கொண்டு, பல நூற்றாண்டுகளாக மக்கள் இத்தகைய கட்டுப்பாடான பொருளாதார, சமூக அமைப்புடன் வாழ்ந்துவருகின்றனர். 'அரசியல் துறையில் உண்டான பெரிய மாற்றங்களால் சமூகத்தின் பொருளாதார அமிசங்களின் அமைப்பு சிறிதும் மாறாமல் இருக்கிறது' என்று மார்க்ஸ் கூறினர்.[1] அரசர்கள் சண்டையிட்டுக் கொண்டாலும், ஓர் அரசன் மற்றோர் அரசனை வென்றாலும்,

[1] Capital vol. I, p. 379 (Everyman's Library). இதில் பக்கம் 377 முதல் கிராம சமூகத்தைப்பற்றி விரிவாகக் காணலாம்.

கிராம மக்களின் வாழ்க்கை அவற்றால் அதிகமாகப் பாதிக்கப் படவில்லை. உழவர்கள், கைவினைஞர்கள், கைத்தொழிலாளர்கள் என்று கிராமத்தில் விரிவான தொழிற் பாகுபாடு இருந்தது. கைத்தொழிலாளர்கள் இடையிலேயும் சாதியடிப்படையில் இதே போலப் பல விரிவான உட்பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு வேலையும் பரம்பரைத் தொழிலாக இருந்தது. ஒவ்வொரு தொழி லாளியும் சில குடும்பங்களுக்குப் பரம்பரை உரிமையாக வேலை செய்யும் வழக்கமும் இருந்தது. பழங்காலத்தில் வாழ்க்கை எளிய முறையில் அமைந்திருந்தது. கிராமத்தில் உழவனைத் தவிர, தச்சன், குயவன், வண்ணான், நாவிதன், சக்கிலி முதலியவர்களும் இருந்தார்கள். நூற்றலும் நெய்தலும் கிராமத்தின் துணைத் தொழில்களாக இருந்தன. கைவினைஞர்கள் அன்றிக் கீழான வேலைகளைச் செய்யும் கிராம சுத்தித் தொழிலாளர்களும் இருந்தனர். இவர்கள் சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்கள். இவர்களில் பெரும் பாலோர் இந் நான்கு பூர்வீகக் குடிகளின் வழி வந்தவர்கள். இவர் களை இந்து சமூகம் அழித்துவிடாமல் தன் அமைப்புக்குள் ஏற்றுக் கொண்டது. பிராமணர்கள் உட்பட எல்லாக் கைவினைஞர்களும், சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்களும் தங்கள் ஊதியத்தைப் பணமாக அன்றிப் பொருளாக, ஒவ்வொரு நாளும் இன்றி வருடத்திற்கு ஒரு முறை அல்லது அரை வருடத்திற்கு ஒரு முறை பெற்றார்கள்.

கிராமங்களின் தன்னிறைவுக்கு ஏற்றவாறு மூலப் பொருள்களும் அருகிலேயே கிடைத்தன. கிராம எல்லைக்குள் வளரும் மரம் கட்டடங்களுக்கும் கருவிகளுக்கும் பயன்பட்டது. நாட்டில் பலவிடங் களில் பஞ்சும் கிடைத்தது. கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் பெரும்பாலும் கிராமத்திலேயே உபயோகிக்கப்பட்டன. உபரியாயிருந்த பொருள்களை வாரந்தோறும் கிராமச் சந்தைகளில் விற்றார்கள். இச் சந்தைகள் சில கிராமங்களுக்கு ஒன்றாக, மாறிமாறி ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தப்பெற்றன. கிராமத் தொழிலா ளர்கள் பரம்பரையாகத் தம் திறமையைப் பெற்றார்கள். இவர் ளுடைய தொழில்களுக்கு மதமும் ஆதரவளித்தது. இத் தொழில்கள் கடவுளின் கொடைகளாக, அவர்கள் உயிர் வாழ்வதற்கு அளிக்கப் பட்டவை என்றும், அவற்றை விட்டுவிடுவது தெய்வ நிந்தனை என்றும் கருதப்பட்டன.

சாதி முறை

சாதி முறையும் கடவுளின் கட்டளையென்றும், கருமவினையோடு தொடர்புடையதென்றும் கருதப்பட்டது. அதன்படி ஒருவனுடைய முற்பிறவிகளில் செய்த வினைகளுக்கேற்ப அவனது வாழ்க்கை நிலை

அமையும். இந்திய சமூக வாழ்க்கையில் இது மிகவும் முக்கியமான ஓர் அமிசமாகும். இன்று இந்து சமூகமானது ஆயிரம் சாதிகளும், சாதிக்குள் சாதிகளுமாகப் பிரிந்திருக்கிறது. இந்து சமூகத்தில் சாதிக்குத்தான் மதிப்பேயன்றித் தனி மனிதனுக்கு இல்லை. ஒவ்வொரு சாதியும் ஒரு தொழிலைப் பின்பற்றித் தனியாக இருக்கிறது. அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படும் மிக நுட்பமான காரியங்களில்கூடச் சாதிப் பழக்கவழக்கங்களைக் காணலாம். சமூக உறவும், திருமண உறவுங்கூட ஒரு கடினமான வரம்புக்குட்பட்டவையே. சமூக ஒற்றுமையைக் கருதித் தனிப்பட்டவனுடைய முன்னேற்றமும் கட்டுப்படுத்தப்பட்டது. ஒருவன் சாதிக் கட்டுப்பாட்டை மீறினால் அவன் அந்தச் சாதியிலிருந்து விலக்கப்பட்டு விடுவான். சரியான பிராயச்சித்தம் செய்யப்பட்ட பிறகுதான் அவன் மீண்டும் அந்தச் சாதியில் சேர்க்கப்படுவான். இல்லாவிட்டால் அவனும் அவனுடைய குடும்பமும் சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். சாதியின் முக்கிய அமிசம் அந்தச் சாதிக்குள்ளேயே திருமணம் செய்துகொள்வதுதான். ஒருவன் தன் சாதியைச் சேர்ந்த பெண்ணையே திருமணஞ் செய்துகொள்ள வேண்டும். இதன் முக்கியப் பொருளாதார விளைவு என்னவென்றால், பரம்பரைத் தொழில்கள் இதனால் உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வாறு குடும்பத்தின் இரு புறங்களிலிருந்தும் தொழிற் பரம்பரை உரிமையாக்கப்பட்டது.

ஒரு சாதிக்கும், அதன் உட்பிரிவுகளுக்கும் பொதுவான மூன்று அமிசங்கள் உள்ளன. அவை, உணவையும், சமூக உறவையும், திருமணத்தையும் பற்றியவை. ஒவ்வொரு சாதி உட்பிரிவிற்கும் தனித்தனி பஞ்சாயத்தோ, சாதிக் குழுவோ உண்டு. ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் தம் சாதியிலேயே உண்பது, குடிப்பது எல்லாம் செய்ய வேண்டும். சாதிகளும், சாதிப் பிரிவுகளும் அந்தந்தச் சாதிக்குள்ளேயே திருமணஞ் செய்ய வேண்டியவையாயிருந்தாலும், இந்தியா முழுவதும் கிராமச் சமூகத்தில் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த நிலையான உத்தியோகஸ்தர்களும், கீழான வேலை செய்பவர்களும் இருந்தார்கள். இந்தச் சாதி ஒவ்வொன்றும் தனி அந்தஸ்தைப் பொருளாதார வாழ்விலும் கிராம வாழ்விலும் பெற்றிருந்தது.[1] இவ்வாறே நகரங்களில் எல்லாச் சாதிகளிலிருந்தும் தொழில்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியோர்கள் சபை அந்த நகரத்தின் அலுவல்களைக் கவனித்துவந்தது. இவ்வாறு கூட்டுறவும் சமூக ஒற்றுமையும் கடைப்பிடிக்கப்பட்டன.

1. 'இந்தியாவில் சாதியும் இனமும்'—G. S. குர்யே. பக்கம் 23.

இந்தியாவில் பண்டை ஆரியர்களுடைய நிறுவனங்கள், இங்கிருந்த நிலைமைகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு இயற்கையாக விரிவடைந்து சாதி முறை உண்டாயிற்று. இந்துக்கள் கிரேக்கர்கள், ரோமர்கள் போலவும், பாரசீகர்கள், மீடியர்கள் (Medes) போலவும் ஒரே மாதிரிக் குடும்ப அமைப்பையும் கூட்டமைப்பையும் பெற்றிருந்தனர். அவர்கள் இந்தியாவிற்கு வந்தவுடன் தம்மால் வெல்லப்பட்ட மக்களின் நிறம், இனம் ஆகியவை வேருக இருந்ததைக் கண்டார்கள். வெற்றிபெற்றவர்களிடமிருந்த பூசாரி சாதி தன்னுடைய அதிகாரத்தை உறுதி செய்துகொண்டும், தன்னுடைய உரிமைகளைப் பெருக்கிக் கொண்டும் இந்தியாவில் சாதி முறையை வரையறுக்கத் தொடங்கியது. இந்தச் சாதி முறை, தொழில்களைப் பொருளாதார முறையில் அமைக்கப்பட்டதுமன்று; கூட்டங்களும் மாறுபட்ட இனங்களும் குழம்பிய நிலையில் இருப்பதுமன்று; பல வகுப்புகள் எளிய முறையில் ஒன்றுக்குமேல் ஒன்று அமைக்கப்பட்டதுமன்று. ஆனல், இந்த மூன்று அமிசங்களும் கலந்து எல்லாக் குழுக்களும் தம்முடைய வேலைகளில் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்ற பொது உணர்ச்சியால் உண்டானது. இந்த முறை வளர்வதற்குக் காரணமாக இருந்த மூன்று முக்கியமான நிலைமைகளாவன: (1) இனத்திலும் வெற்றியிலும் ஏற்பட்ட மாறுதல்களும், சமூக வேலைகள் வேறுபட்டிருந்தமையால் மக்கள் நிலைமையில் இருந்த வேற்றுமையும். இந்தச் சாதி முறைக்கு இக் காலத்தில் அமெரிக்காவில் நீக்ரோக்களைத் தனியாக வைத்துத் தனி இனமாக அடக்கி வைக்க வேண்டுமென்று எல்லா வெள்ளையர்களும் கூறுவதை உதாரணமாகக் கொள்ளலாம். நீக்ரோக்களில் பலர் வெள்ளையர்களில் பெரும்பான்மையோருக்கு மேலானவர்களாக இருக்கலாம். ஆனல், நீக்ரோவுடன் சாப்பிடுவதோ, வேலை செய்வதோ, விளையாடுவதோ அல்லது வெள்ளையர்களுடைய மேன்மை புலப்படாத முறையில் பழகுவதோ இழிவாகக் கருதப்படும். படை மானிய முறையின் (feudal system) வளர்ச்சியில் காணப்பட்ட வீரர்கள் (Knights), இழிந்தவர்கள் (Serfs) என்ற இரண்டு வெவ்வேருன சாதிகளைக் கொண்டும் சமூக வேலைகளில் எப்படி வேற்றுமைகள் உண்டாகின்றன என்றும், சாதி அமைப்பு எப்படி வளர்கிறது என்றும் தெரிந்துகொள்ளலாம். இந்த இரண்டு சாதிகளுக்கிடையே திருமணமோ, வேறுவிதமான உறவோ அனுமதிக்கப்படவில்லை. இந்தியாவில் சாதி முறைக்கு அடிப்படையான கொள்கை ஒன்று இருப்பதையும் நாம் அறிய வேண்டும். சாதி என்பது இயற்கையானது என்ற எண்ணம் உண்டாகி, அது புனிதத்தன்மை அடைந்தால், சாதி இல்லாத இடத்திலுங்கூட, அது சாதியை உண்டாக்கிவிடும் தன்மை உடையது; (2) சாதி வளர்வதற்கு

ஓர் அமைதியான சமூகம் ஏற்றது. மாறுதலை அது விரும்பாது. ஏனெனின், வாரிசுக் கொள்கை உறுதியாவதற்கு பல தலைமுறைகளாகத் தொழில்கள் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். இந்தியாவில் இம்மாதிரி ஓர் அமைதியான சமூகநிலை ஆயிரம் ஆண்டுகளாக இருந்தது; (3) தொடர்பு வசதிகளும் கல்வியும் மிகக் குறைவாய் இருந்ததாலும், சாதாரண மக்கள் கல்வியற்றவர்களாய் இருந்ததாலும், சமூகத்தின் பல பிரிவினருக்குள் தாராளமான உறவுக்குப் பல தடைகள் இருந்ததாலும் சாதி அமைப்பு உறுதியடைந்தது. ஜீவ சாஸ்திரக் கொள்கைமீது சமூக சிந்தனையின் செல்வாக்கினால் சாதி அமைப்பு உண்டாகிறது. அதாவது, தொழில்கள் தனிப்பட்டவர்களுடைய திறமைப்படி ஏற்படாமல், பரம்பரையாக அமைய வேண்டும் என்பது இதன் பொருளாகும். அன்றியும், புத்திபூர்வமாகச் செய்யவேண்டியதைச் சௌகரியத்திற்காக விட்டுக்கொடுத்துவிட வேண்டும் என்பதும், சுதந்திரத்தைக் கட்டுப்பாட்டிற்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்பதும் இதன் பொருளாகும்.[1]

இருப்பினும், எல்லா இந்து சமூக நிறுவனங்களிலும், எல்லோருடைய நன்மைக்காகத் தனிப்பட்டவர்கள் தாழ்த்தப்பட வேண்டும் என்பது நோக்கமாக இருப்பதை நாம் காணலாம். இச் சமூகம் தொழிலடிப்படையில் அமைந்த சமூகம். சாதி முறையின் தோற்றமும் இதற்கு விதிவிலக்கன்று. கண்மூடித்தனமான கலப்பினால் நல்ல சந்ததிகள் இல்லாமல் போவதைத் தடுப்பதற்கேனும் அது உதவியது. பரம்பரைத் தொழிற் கொள்கையால் சாதி முறையில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தவிர்க்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய சாதி தருமத்தை வற்புறுத்தியதால், அதில் வாணிபமும் தொழிலும் ஒழுங்குபடுத்தப்பட்டன; மக்கள் உலகியல் கவலைகளால் மனமழிந்து பேராசை கொள்ளாமல் இருந்தார்கள். சாதிகள் தொழிற்சங்கங்களாகவும் வேலை செய்தன. மற்றவர்கள் அவர்களுடைய தொழிலில் நுழையாமல் தடுக்கப்பட்டதால் சாதித் தொழில்கள் செய்பவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட்டன. சுரண்டலுக்கு இடங் கொடாமல் எல்லோரும் ஒன்றுபட்டு வேலை செய்தார்கள். இந்து கலாசாரத்தையும் நாகரிகத்தையும் காப்பாற்றுவதற்குச் சாதி முறைதான் காரணமாக இருந்தது.

இருப்பினும், மேனாடுகளின் தாக்குதலினால் உண்டான புதிய சக்திகளுக்கு அது இடங் கொடுக்கவில்லை. பொருளாதார

[1] 'இந்தியாவின் செல்வம்'—வாடியாவும் ஜோஷியும், 1925. பக்கம் 123-25.

விஷயத்தில், அது தொழிலாளர்களையும் மூலதனத்தையும் இயங்கும் தன்மையுடையவையாகச் செய்வதைத் தடுத்தது; தொழில் துணிவையும் முனைப்பையும் (enterprise and initiative) அது இல்லாமல் செய்துவிட்டது. ஏனெனின், தொழில்களைப் பரம்பரை உரிமையாகச் செய்து, சமூகத்தின் இடப்பெயர்ச்சியை (mobility) அது தடுத்து விட்டது. சமூக அமைப்பில் மேலே ஏறுவதற்கு முடியாமலிருந்த தால், ஒருவரும் தம் திறமையைக் காட்ட இடமில்லாமல் இருந்தது. தீண்டத்தகாதவர்கள் நடத்தப்பட்ட முறையால் மக்கள் அடிமைகளைவிட இழிவான நிலைக்குக் கொண்டுவரப்பட்டு, மக்களுடைய திறமையும் சக்தியும் பெரிதும் வீணாக்கப்பட்டன. பொருளாதார முன்னேற்றம் தடைபட்டது; ஏன்? முடியாமல் போயிற்று என்றுகூடச் சொல்லலாம். ஏனெனின், அந்தச் சமூக அமைப்பு முன்னேற்றத்திற்காக ஏற்பட்டதன்று; நிலையாக இருப்பதற்காகவே ஏற்பட்டது.

பிரிவினையற்ற குடும்ப முறை

இக் குடும்ப முறைக்கு மத சம்பந்தமான ஒரு பொருள் உண்டு. அது யாதெனின், குடும்பத்தில் இறந்துபோனவர்களுக்குக் கிரியைகளைச் செய்து, அவர்களுடைய ஆன்மாவுக்கு மோட்சத்தை அளிப்பது. பிரிவினையற்ற குடும்பத்தின் சொத்து, இறந்துபோனவர்களுடைய ஆன்மீக நன்மைக்காகவும், குடும்பத்தில் உயிருடன் இருப்பவர்களின் இக வாழ்வின் நன்மைக்காகவும் பயன்பட்டது. குடும்பத்தில் இறந்துபோனவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கருதிச் சொத்துரிமை பெரும்பாலும் தீர்மானிக்கப்பட்டது. திருமண முறையும் மத சம்பந்தமானதாகவே இருந்தது. குடும்பத் தலைவனுக்கு ஒரு மகன் இருக்க வேண்டும். ஏனெனின், அவனால்தான் அத் தலைவனுக்கு மோட்சம் கிடைக்கும். திருமணம் எல்லோருக்கும் கட்டாயமாக்கப்பட்டது. திருமணமாகாத பெண்ணை வைத்திருக்கும் தந்தை இழிவாகக் கருதப்பட்டதோடன்றி, மத சம்பந்தமான கடமையிலிருந்து தவறியவனாகவும் கருதப்படுவான். இள வயதிலேயே திருமணம் நிகழ்வது வழக்கம். சிறு வயதிலேயே பெற்றோர்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வார்கள். குடும்ப ஒற்றுமையைக் காப்பதற்கும் இளமைத் திருமணம் தேவையாயிருந்தது. தன் மகனைக் காதலிக்கும் எந்தப் பெண்ணுக்கும், நாற்பது வயதுடைய தாய், தன் குடும்ப நிர்வாகத்தை ஒப்படைத்து விடமாட்டாள். ஒரு குடும்பத்தில் ஒத்துழைத்துத் திருப்தியாக இருக்கவேண்டுமென்று கருதும் பெண், அக் குடும்பப் பழக்க வழக்கங்களில் பயிற்சி பெறுவதற்கு இள வயதிலேயே அதில் வந்து சேரவேண்டும்.

இந்தியாவில் பிரிவினையற்ற குடும்பம் என்பது ஒரே மூதாதையின் வழியில் வந்த ஒரு பெரிய சுற்றத்தாரின் கூட்டமாகும். இந்தக் குடும்பத்தில் இருப்பவர்களுக்குள் திருமணம் நடைபெறாது. இதன் வருமானமும் செலவும் பிரிக்கப்படாதது. இக் குடும்பத்தில் தனிப்பட்டவன் என்று ஒருவனும் இல்லை. அவன் கூட்டத்தில் ஒருவனே. குடும்பத்தில் அங்கத்தினர்களிடையே இருக்கவேண்டிய தொடர்புகளை உலகியல் சட்டங்கள் அன்றி, இந்து தர்மமும் பழக்க முறைகளுமே கட்டுப்படுத்தும். மேலும், முன்னரே நாம் பார்த்தபடி, பிரிவினையில்லாத குடும்பம் பாலிய விவாகங்களால் நன்கு இணைக்கப் பட்டிருந்தது. குடும்பம் உள்ள வரையில் இளங் கணவன் தன் மனைவியைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை இல்லை. அவன் தந்தையின் வீட்டைவிட்டு வெளியேறித் தனிக் குடும்பம் நடத்த வேண்டுமென்ற அவசியமில்லை. பிரிக்கப்படாத குடும்பத்தின் சொத்துக்கள் அவனுக்கும் அவன் மனைவிக்கும் பொருளாதாரத் துறையில் பாதுகாப்பளித்தன. தானுகச் சம்பாதித்து வாழ்க்கை நடத்தும் நிலைமை வரும் வரையில் குடும்பத்தில் உள்ள இளைஞன் காத்திருக்க வேண்டியதில்லை.

எவ்விதக் குடும்ப வாழ்க்கையாயினும் அதில் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். ஒருவருக்கொருவர் அதில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பிரிக்கப்படாத குடும்பத்தில் எல்லோருடைய விருப்பங்களையும் அறிந்து நடக்க வேண்டியிருப்பதால், இத் தியாகம் இன்னும் அதிகமாக உள்ளது. சிறியோரும் பெரியோரும், ஆண்களும் பெண்களும் அதில் திருப்தி செய்யப்படவேண்டும். இந்தக் கூட்டு வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச வாழ்க்கை வசதி உண்டு; கிழவர்கள், பலவீனமானவர்கள், விதவைகள், தாய் தந்தையில்லாதவர்கள் முதலிய எல்லோருக்கும் ஆதரவும் தக்க ஏற்பாடுகளும் உண்டு. இதனுல், வேலை விடுதிகளும், ஏழைகளுக்கான சட்டங்களும் தேவையற்றவையாகின்றன.

பொருளாதார விஷயத்தில் பிரிக்கப்படாத குடும்பத்தில் கூட்டுறவு முறையில் உற்பத்தியும் நுகர்வும் நிகழ்கின்றன. இதனுல், பொருள் வீணுவது தடுக்கப்பட்டுப் பொருளாதாரச் சாதனங்கள் சேமிக்கப்படுகின்றன; சரியான தொழில் முறைப் பகுப்பு ஏற்படுகிறது; அதில் ஒவ்வொருவனும் தன் திறமைக்கேற்ப வேலை செய்ய அவ் வேலையின் பயனை எல்லோரும் அனுபவிக்கிருர்கள். சுருங்கக் கூறின், பிரிவினையற்ற குடும்பம் ஒரு சிறு சோஷலிச அமைப்பு என்று கூறலாம்.

சமூக வாழ்க்கையில் மாறுதல்கள்: (அ) கிராமம்

பிரிட்டிஷ் ஆட்சியின் பயனுய்ப் புதிய பொருளாதார அமிசங்கள் இங்குப் புகுத்தப்பட்டபோது, முதன்முதலில் மறைந்தது தன்னிறைவுடைய கிராம அமைப்புத்தான். சாலைகளும், ரெயில்களும் போடப்பட்டதால் கிராமங்கள் நகரங்களோடு நெருங்கிய தொடர்புகொண்டு சந்தைகளும் பெருகின. பொருளாகக் கொடுக்கும் பழைய முறை மாறிப் பணமாகக் கொடுக்கும் முறை வந்தது. போட்டி முறை வந்ததால், வழக்கமாக நிர்ணயிக்கப்பட்ட கூலிகளும், செலுத்திய தொகைகளும் (wages and payments) மறைந்தன. கிராம சமுதாயத்தின் பொருளாதாரச் சமநிலையும், கிராமத்தின் சுய ஆதரவும் மாறிவிட்டன. கிராம மக்கள், வேலைக்காரர்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களிடையே இருந்த சம்பந்தமும் மாறிவிட்டது. இவர்கள் கிராமம் முழுவதற்குமன்றித் தனிப்பட்டவர்களிடம் வேலை செய்யத் தொடங்கினுர்கள். கிராம மக்கள் தனித்திருந்த நிலை போய்விட்டதால், தொழிலாளர் இடப்பெயர்ச்சி ஏற்பட்டது. தொழிலாளர்கள் நகரங்களுக்கு, வியாபாரத்திற்கும் தொழிலுக்கும், அங்குக் கிடைக்கும் அதிகக் கூலி விகிதங்களைக் கருதியுஞ் சென்றுர்கள். கைவினைஞர்களுங்கூடத் தாங்கள் பிறந்த ஊரையும், மூதாதையர்களுடைய தொழிலையும் விட்டுவிட்டுத் தங்களுடைய பொருள்களுக்கும் உழைப்புக்கும் அதிக விலை கிடைக்கக்கூடிய இடங்களுக்குச் சென்றுர்கள்.

அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளால் கிராமத்தின் சமூக அமைப்பு மேலும் மாறுபட்டது. சுய ஆட்சியுடைய கிராமங்கள் செய்துவந்த வேலைகளை அரசாங்கம் மேற்கொண்டதாலும், கல்வி, ஆயம் (excise), காடுகள் ஆகியவைகளுக்கு விசேஷ இலாகாக்கள் உண்டாக்கப்பட்டதாலும், தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டிருந்த கிராம மக்கள், படிப்படியாக வெளியிலுள்ள பிறரால் ஆளப்படும் நிலைக்கு இணங்கினுர்கள். கிராம அதிகாரிகளின் நிலை மாறிவிட்டது. கிராம சமூகத்தின் பிரதிநிதிகளாகவோ, பணியாட்களாகவோ இருந்த அவர்கள் அச் சமூகத்திற்குப் பொறுப்பற்றவர்களாய்விட்டார்கள். நிலவரி நிருவாக முறையும், நிலத்தை வைத்திருக்கும் தனிப்பட்டவனுடைய பொறுப்பைத்தான் வற்புறுத்தியது. தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நிலங்களுக்குத் தனியாக வரி விதிக்கப்பட்டது. ஆனுல், முன்போ கிராமம் முழுவதற்கும் மொத்தமாக வரி விதிக்கப்பட்டது. நிலத்தைத் தனிப்பட்டவர்களுடைய சொத்தாக வைத்துக்கொள்ளும் உரிமையை பிரிட்டிஷ் ஆட்சி ஒத்துக்கொண்ட காரணத்தினுல், நிலமானது விற்பனையாகும் பொருளாக மாறிவிட்டது. அதை விற்கவும்

வாங்கவும் முடிந்தது. நிலத்தை வேறொருவனுக்கு மாற்றும்போது, வெளியார் கிராமத்திற்குள் நுழையலாயினர். அது மட்டுமன்றிச் சொந்தக்காரர்களாகிய உழவர்களுக்குப் பதில் நிலச்சுவான்தார்களாகிய முதலாளிகள் என்னும் வகுப்பு உண்டாயிற்று. நெடுங்காலமாக இருந்த கூட்டுவாழ்க்கை அல்லது சகோதரத்துவ எண்ணம் போய்விட்டது. அது கிராமத்தில் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும், விட்டுக் கொடுப்பதும் கேட்டுப் பெற்றுக்கொள்வதும் ஆகிய முறையில் அரும்பாடுபட்டு வளர்க்கப்பட்டிருந்தது. இந்த அழிவினுல்தான் நாம் இப்போது வறுமையும் அசுத்தமும் நிறைந்த, சண்டைகளும் சச்சரவுகளும் மலிந்த, அறியாமையும் மூட நம்பிக்கையும் உள்ள 'நவீன' கிராமங்களைப் பார்க்கிறோம்; சுருங்கக் கூறின், இரக்கமற்ற, ஒழுக்கமற்ற கூட்டு வாழ்க்கையின் அமிசங்களையெல்லாம் காண்கிறோம்.

கிராம வாழ்க்கையை மாற்றிய தொடர்பு சாதனங்களுள் முக்கியமானது 'பஸ்'. 'இந்தியாவில் உழவர்களுடைய வாழ்க்கையில் சுறுசுறுப்பை உண்டாக்குவதில் ரெயிலைவிட பஸ் அதிக வேகமாக வேலை செய்கிறது. இந்தியாவில் உள்ள இலட்சக்கணக்கான எலிகள் பிளேக்கைப் பரப்புவது போல், ஆயிரக்கணக்கான பஸ்கள் கிராம மக்களை நிறைய ஏற்றிக்கொண்டு நகரங்களுக்குப் போய், அங்கிருந்து மீண்டும் கிராமங்களுக்குக் கொண்டுவருவதால், 'நவீன' அமிசங்களைப் பரப்புகின்றன.'[1] கிராமங்களை நகரங்களோடு தொடர்பு படுத்துவதாலும், நாட்டின் மற்றப் பகுதிகளில் நடைபெறும் சமூக, பொருளாதார மாறுதல்களை அவர்களுக்கு அறிவிப்பதாலும், பஸ்ஸானது கிராம மக்களை வாழ்க்கையில் ஒரு புதிய உணர்ச்சியுடையவர்களாகச் செய்து விழிப்பூட்டியுள்ளது. கிராம மக்கள் பஸ்களில் நகரங்களுக்குப் போய்ப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறார்கள்; இவற்றைத் தம் வீட்டில் சொல்கிறார்கள். கிராமவாசியின் வாழ்க்கையில் சினிமா ஒரு பரபரப்பை உண்டாக்கிப் புதிய துறைகளில் மனத்தை இழுத்து, ஒரு புத்துலகத்தைக் காட்டுகிறது.

கிராம வாழ்க்கையில் பஸ் இவ்வாறு பல மாறுதல்களைச் செய்திருப்பினும், இன்றும் ஆயிரக்கணக்கான கிராமங்கள் நகரங்களோடு தொடர்பில்லாமல் இருக்கின்றன. நகரங்களோடு அவற்றை இணைக்கக்கூடிய ரெயில்களோ, செப்பனிடப்பட்ட பாதைகளோ இல்லை. அவற்றிற்குக் கால்நடையாகத்தான் செல்லவேண்டும். அல்லது மெதுவாகச் செல்லும் கட்டை வண்டியில்தான் போக வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவில் உண்டான

[1] Basil Mathews, 'India Reveals Herself', Quoted by O'Malley in 'Modern India and the West' 1941, p. 248.

சமூகப் பொருளாதார மாறுதல்களால் இந்தக் கிராமங்கள் சிறிதும் மாறவில்லை. 'இப்பொழுதும், தொடர்பு வசதிகள் மிகவும் பெருகியிருந்தாலும், மிகச் சில கிராமங்களே ரெயில்களையும் செப்பனிட்ட பாதைகளையும் சில மைல் தூரம் வரையிலாவது பெற்றிருக்கின்றன. மற்றவற்றை அடைவதற்குக் கரடுமுரடான வண்டிப் பாதைகளும், வயல்களின் வழியாக வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதைகளும்தான் உள்ளன. பருவ காலங்களில் வெள்ளம் வந்து தடுக்காமலிருந்தால், மேற்கூறிய வண்டிப் பாதைகள் வழியாக மாட்டு வண்டிகளும், மற்ற வண்டிகளும் செல்லலாம். மேனுட்டவர்கள் கருத்துப்படி, இவ்வாறு பல இலட்சக்கணக்கான கிராம மக்கள் நகரங்களோடு தொடர்பற்றவர்களாய்த் தனித்திருக்கிறார்கள். நகரங்களுக்கோ, ரெயில் நிலையங்களுக்கோ, நல்ல பாதைகளுக்கோ அருகிலிருப்பவர்கள், கிராம சமூகத்திலேயே இருப்பவர்களைவிட அதிகம் தெரிந்துகொள்ளவும், வெளி உலக நிகழ்ச்சிகளையறியவும், தங்களுடைய உபரி விளைச்சலை இந்திய நகரங்களுக்கோ வெளிநாடுகளுக்கோ அனுப்பவும் முடிகிறது. ஆனால், மற்றவர்கள் இன்னும் பொருளாதாரத் துறையிலும் கலாசாரத் துறையிலும் உள்ளதே போதும் என்றிருக்கிறார்கள். நம் நாட்டின் பெரும் பகுதியில் பல நூற்றாண்டுகளாக மாறுதல் இல்லாத, தன்னிறைவுடைய இந்திய கிராம சமூகம் இன்னும் இருக்கிறது. இச் சமூகம் மிகச் சிக்கலானதும், வியக்கத்தக்கதும், விநோதமானதும் ஆகும். இது இடைக் காலத்தில் ஐரோப்பாவில் வாழ்ந்துவந்த கிராம சமூகத்தைப் பல அமிசங்களில் ஒத்திருக்கிறது. இதில் நிலச்சுவான்தார்களும், வாரக்குடிகளும், குடியானவர்களும், பூசாரியும், சந்நியாசியும், வட்டிக் கடைக்காரரும், தச்சன், கருமான், நெசவாளி, குயவன், வாணியன் போன்ற எல்லாக் கைவினைஞர்களும் இருக்கிறார்கள். இவர்கள் பல நூற்றாண்டுகளாகப் பரம்பரையாக வந்த தத்தம் தொழில்களையே செய்து வருகிறார்கள்.[1] இது எழுதப்பட்டு இருபது ஆண்டுகளாகியும் நிலைமை இன்னும் அப்படியேதான் இருக்கிறது.

ஒலிபரப்பினால் கிராம சமூக வாழ்க்கையில் என்ன மாறுதல்கள் உண்டாகும் என்பதை இப்போது அறிய முடியாது. கிராம மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும், சமூக சுகாதாரத்தை விருத்தி செய்யவும் அது பயன்படலாம். சுகாதாரம், சுத்தம், குழந்தை வளர்ப்பு, பயிர்களும் உரங்களும், கூட்டுறவு இயக்கம் போன்ற பலவற்றைப் பற்றி அதன் மூலமாக நாட்டு மொழிகளில் எளிய, இனிய சொற்பொழிவுகள் செய்யலாம். இவை அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புதிய ஆவலைத் தூண்டும். நடுவர்கள் அல்லது தரகர்களுடைய

[1] 1930—31-ல் இந்தியா. பக்கம் 155.

தந்திரங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்குப் பயிர்களின் அன்றாட விலைகளை அறிவிப்பது உழவர்களுக்கு உதவியாயிருக்கும். கிராம வாழ்க்கையின் சுவையற்ற தன்மையை மாற்றுவதற்கு இசை, பாட்டு, அன்றாடச் செய்திகளைப்பற்றிய உரையாடல்கள் முதலிய நிகழ்ச்சிகளை நடத்தலாம். வயது வந்தவர்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் இருக்கும் இந்தியாவில் ஒலிபரப்பினுல் எல்லையற்ற காரியங்களைச் சாதிக்கலாம். இதனுல் அவர்களின் அறியாமையைப் போக்கி, அறிவும் ஊக்கமும் உண்டாக்கலாம். கிராம மக்களிடையே மகிழ்ச்சியையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கலாம்.

(ஆ) சாதி அமைப்பு

சாதி என்பது கிராமத்தைப் போலவே ஒரு சுய ஆட்சியுடைய சமுதாயமாகும். அது தெய்வீகக் கட்டளைப்படி அமைந்த ஒரு ஸ்தாபனம் என்பதால், அதற்கு மதத்தின் அனுமதியும் உண்டு. ஒரு புறம் அது பல வகுப்பினரையும் ஒன்றுபட்ட சமுதாயமாக இணைக்காமல் தடுத்துப் பிரித்து வைக்கிறது; மற்றொரு புறம் ஒவ்வொரு சாதியினரும் தமக்குள் ஒற்றுமையாய்த் தங்களுக்கென ஒரு வாழ்க்கைத்தரத்தையும் ஒழுக்கத்தையும் உண்டாக்கிக் கொள்ள உதவுகிறது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தோன்றுவதற்கு நீண்ட காலம் முன்பே, உள்நாட்டு இயக்கங்களால், பிராமணர்களுக்கு இருந்த தனி உரிமைகளும், சாதி அமைப்பில் உள்ள ஏற்றத் தாழ்வுகளும் தாக்குதலுக்குள்ளாயின. சீர்திருத்தவாதிகள் சாதி முறையைப் பழித்தார்கள்; கடவுள் முன்னிலையில் யாவரும் சமம் என்று வற்புறுத்தினுர்கள்; பக்தியினுலும் நல்வாழ்க்கையினுலும் எல்லாச் சாதியினரும் தூய்மை பெற்று மோட்சமடையலாம் என்று போதித்தார்கள். இருப்பினும், சாதி வேறுபாடுகளை வெறுத்தொதுக்கிய லிங்காய்த்துக்கள் போன்ற பிரிவினரும் பிறகு சாதி முறையின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டார்கள். மேலும், முஸ்லீம் ஆட்சியின் கீழ் இருந்த பகுதிகளில் இஸ்லாம் மதத்தின் தாக்குதலினுல் சாதி முறை மேலும் உறுதியும் கட்டுப்பாடும் பெற்றது.

சாதிகளின் அமைப்பும் தொழில்களும் மாறுதலுக்குட்பட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மனுவின் சட்டங்கூடச் சமூக நிலையில் ஏற்படக்கூடிய மாறுதலை உணர்ந்திருந்தது. ‘சாதி முறை மக்களின் பொருளாதார வாழ்க்கையில் குறுக்கிடுகிறது’ என்று பன்முறை கூறப்பட்டுள்ளது. ஆனுல் இந்தக் கூற்று மிகைப்படுத்தப்

பட்டதும் வழக்கமாகக் கூறப்படுவதும் ஆகும். தவிர்க்க முடியாத பொருளாதார நிர்ப்பந்தந்தான் தொழிலாளிகளைத் தத்தம் தொழில்களில் இருக்கச் செய்வதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.[1] பழக்கத்தின் பெருமையும் சாதி விதியும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தொழில் மாற்றத்திற்குத் தடையாக இல்லை. 18 ஆம் நூற்றாண்டில்கூடப் பிராமணர்கள் வியாபாரிகளாகவும், பாங்குத் தொழில் செய்பவர்களாகவும், போர் வீரர்களாவும் இருந்ததைக் காண்கிறோம். தொழிலடிப்படையில் அமைந்த சாதிகளே, பரம்பரையான தொழிலை விட்டு மாறுவதை எதிர்க்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட புதிய நிலைமையில் சௌகரியம், உலகியல் நன்மைகள் ஆகியவற்றைக் கருதிச் சாதி விதிகள் புறக்கணிக்கப்பட்டன. 'கால் பந்தாட்டத்தில் உள்ள கவர்ச்சியானது, தோலின் மீதிருந்த வெறுப்பை வென்றுவிட்டது.'[2] வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரொட்டிகளும் பானங்களும் தடையின்றி உபயோகிக்கப்பட்டன. ஓர் ஐரோப்பியன் கையால் உணவு உட்கொள்ளாத வைதிகப் பிராமணன், ஐரோப்பியத் தொழிற்சாலையில் டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவைத் தயங்காமல் உண்கிறான்.

ரெயில், பஸ், டிராம் வண்டி ஆகியவை உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி ஆகி எயல்லாச் சாதிகளைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் உடன் செல்லும் பிரயாணிகளாக ஒருங்கு சேர்த்தன. எல்லாரும் நகரசபைக் குழாய்களிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டார்கள். இந்துக்களும் முஸ்லீம்களும் தெருக் குழாய்களைப் பயன்படுத்தினார்கள். இடைக் காலக் கத்தோலிக்க சமயத்தைப் போன்று பிரத்தியட்ச நோக்குடைய இந்து சமயத்தின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையானது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விட்டுக் கொடுத்தது. பழைய வழக்கங்களை எதிர்ப்பவனுக்கு மோட்சமே இல்லை என்று கூறிய இந்து சமயம், இப்போது புதிய வழக்கங்களை ஆதரித்தது. ரெயிலில் பயணம் செய்வதால் யாத்திரையின் பலன் வீணாகிவிடாது என்றும், நகரசபைக் குழாயிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொள்ளும் பாவத்திற்குப் பிராயச்சித்தமாகத் தண்ணீர் வரி கொடுத்துவிடலாம் என்றும் கூறப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் உடற்கூறு அறுவை முறை புகுத்தப்பட்டபோது, மருத்துவத்திற்காக மனித உடலை அறுப்பது சாத்திரங்களால் தடுக்கப்படவில்லை என்று பிராமணர்கள் கூறினார்கள்.

[1] 'இந்தியப் பொருளாதாரத்தின் அமைப்பு அடிப்படை'—1940. பக்கம் 39.

[2] O'Malley முற் கூறியது. பக்கம் 366.

'சில சாதியினரைத் தொட்டால் தீட்டு உண்டாகி விடும் என்ற கருத்தை நவீன வாழ்க்கையின் நிலை மாற்றிவிட்டது' என்று 1931ஆம் ஆண்டின் ஜனத்தொகைக் கணிப்பு அறிக்கை கூறுகிறது. இயந்திரங்களால் செய்யப்பட்ட பொருள்களின் போட்டியினால் பண்டைக் கைத்தொழில்களும் வேலைகளும் அழியத் தொடங்கியதால், கிராமங்களில்கூடப் பலர் தம் முன்னோர் செய்த தொழில்களோடு தொடர்பில்லாத புதிய தொழில்களை மேற்கொண்டனர். மேனாடுகளின் தொடர்பினால் உண்டான புதிய பொருளாதார சக்திகளின் தாக்குதலினால் சாதி முறை மாற்றப்பட்டுவிட்டது. சாதி முறை என்பது அசையாமல் ஒரே இடத்தில் இருக்கும் சமூகத்திற்கு ஏற்றது. அதில் புத்தமைப்புகளைச் செய்யும் அறிவாளிகளுக்கு ஒருவிதமான ஊக்கமும் இல்லை. ஆகையால் தொழிற் புரட்சி அதைத் தாக்கிய மாத்திரத்தில் அது அழிந்துவிட்டது. ஏனென்றால், இயந்திரங்கள் பிராமணனையோ சூத்திரனையோ மதிப்பதில்லை. தொழிற்சாலைகளில் பல சாதி மக்கள் சேர்ந்து வேலை செய்கிறார்கள். நகர வாழ்க்கையானது சிறிது சிறிதாகவும் உறுதியாகவும் வலுவுள்ள சாதிக் கட்டுப்பாடுகளை அழித்துவிடுகிறது. சாதி வித்தியாசமின்றிப் பணம் கொடுப்பவர்களுக்கெல்லாம் ரெயில், டிராம், சினிமாக் கொட்டகை ஆகியவை இடமளிக்கின்றன. ஆகையால் நகரங்களில் உயர்ந்த சாதியில் பிறந்த பிராமணன், தாழ்ந்த சாதியில் பிறந்த சூத்திரனோடு தோளை உராய்ந்துகொண்டிருக்கிறான். சந்தைகளிலும், தொழிற்சாலைகளிலும், தேனீர்க் கடைகளிலும் இனத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட எல்லாச் சாதி மக்களும் ஒன்றாகச் சேருகிறார்கள். ஐரோப்பியர்களுடன் பழகுவதிலும், அரசியல், பொருளாதார மாநாடுகளிலும் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடுகிறார்கள். அறுபதாண்டுகளுக்கு முன்பு அஞ்சத்தக்கவையாய் இருந்த வேலைகளுக்கு மேல் சாதி மக்கள் பொருளாதார நிர்ப்பந்தத்தினாலும் ஆசையினாலும் செல்கிறார்கள். கல்வி நிலையங்கள், தம்முடைய மாணவர் விடுதிகளில் வெவ்வேறு சாதியைச் சேர்ந்த சிறுவர் சிறுமிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பை வளர்க்கின்றன. கடந்த நூறு வருடங்களில் மக்கள் வாழ்க்கையில் உண்டான புதிய சமூக, கலாசார மாறுதல்கள் கற்றவர்களிடையே பழைய கட்டுப்பாடான சமூக அமைப்பின் அடிப்படையைத் தகர்த்துவிட்டன.

ஒவ்வொரு சாதியில் பிறந்தவர்களுக்கும் ஒரு வேலையை அளிப்பதாலும், சாதிக்குள் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதாலும், பரம்பரையாகக் கைவினைஞர்களின் தொழில் திறமையை அழியாமல் பாதுகாத்து வருவதாலும் சாதி முறை நல்லது என்று சில சமயங்களில் வாதாடப்படுகிறது. ஆனால் இதற்கு மாறாக, நாட்டில் பெரிய அளவில்

வேலையின்மை உண்டாகாமல் இருக்க அதனால் தடுக்க முடியவில்லை என்றும், கைவினைஞர்கள் எவ்வளவுதான் திறமையும் அறிவும் பரம்பரையாகப் பெற்றிருந்தாலும், அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியவில்லை என்றும் கூறலாம்.

சாதி முறை, கீழ்ச் சாதியைச் சேர்ந்த மிகப் பெரும்பாலோரை அடக்கி வைத்துள்ளது. அவர்களுடைய மனமும் உணர்ச்சியும் முன்னேறுவதற்குரிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. சாதி ஆதிக்கத்தின் கீழ் உள்ள சமூகம் அறிவுச் செல்வத்தையும் ஆன்மீகச் செல்வத்தையும் இழந்துவிடுகிறது. இச் செல்வங்கள்தாம் மக்களினத்தின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடியவை. தனித்திருக்க வேண்டுமென்னும் பிரிவினை உணர்ச்சியை வற்புறுத்துவதால் அது அந்நிய ஆதிக்கம் நீடிப்பதற்குப் பெரும்பாலும் காரணமாகிறது. பிராமணரல்லாதவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் சாதி இந்துக்களின் ஆதிக்கத்தை விட்டு அந்நிய ஆதிக்கத்தின் கீழிருக்கவே விரும்புகிறார்கள் என்று அடிக்கடி கூறியதை இதுவரையில் நாம் கேட்டிருக்கிறோம்.

1850 ல் இயற்றப்பட்ட 'சாதித் தடை நீக்கச் சட்டம்' (Caste Disabilities Removal Act) தான் சாதியைப் பாதித்த ஒரே ஒரு சட்டமாகும். இச் சட்டம், எவனும் தன் சாதியை இழந்ததனால் எந்தச் சட்டமோ வழக்கமோ அவனுடைய சொத்துரிமையையும் வாரிசுரிமையையும் பாதித்து விட்டதாகப் பிரிட்டிஷ் இந்திய நீதிமன்றம் ஒப்புக்கொள்ளாது என்று கூறுகிறது. இந்தச் சட்டம், கிறித்துவர்களாகவும் முஸ்லிம்களாகவும் மாறியவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக ஏற்பட்டது. நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, மாநில அரசாங்கத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைகள் கீழ்ச் சாதியினருக்கு இருந்த பல தடைகளை நீக்குவதற்குச் சட்டங்கள் இயற்றின.

சாதிக் கட்டுப்பாடு தளர்வதற்குக் காரணமாக இருந்த் பல வற்றுள் இந்தியாவில் உள்ள நீதிமுறையும் ஒன்றாகும். அரசாங்கம் வழங்கும் நீதிப்படி சாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள நீதி மன்றங்களும், அவை அளிக்கும் தண்டனைகளும் சட்டத்திற்குப் புறம்பானவையாகும். சாதிகளின் ஆதிக்கம், பலமுறை நீதி மன்றங்களின் தீர்ப்புக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. சாதி நீதி மன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து எந்த மனிதனும் சட்டப்படி நீதிமன்றத்தில் வாதாடலாம்.

இக் காலத்தில் நகரங்களில் குறுகிய பற்றினால் தம் சாதி மக்களுக்கென்று வீடுகளும், சத்திரங்களும், மருத்துவ மனைகளும்,

உபகாரச் சம்பளங்களும், மாணவர் விடுதிகளும் ஏற்படுத்திச் சாதி முறையை வலுப்படுத்தும் முயற்சி நடைபெற்று வந்தாலும்,[1] புதிய பொருளாதார சக்திகளின் தாக்குதலினல், குறிப்பாக நிதி மூலதன (finance capitalism) வளர்ச்சியினுல் சாதிக்குப் பதில் வர்க்கம் (class) சிறிது சிறிதாக இடம் பெற்று வருகிறது. இயந்திரத்தினல் ஒரு புதிய வர்க்கம் செல்வத்தையும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. பிறப்பினுல் பிரபுத்துவம் அடைந்த பழைய முறைக்குப் பதில், பொருளாதார சக்தியால் செல்வாக்கடைந்து வரும் ஒரு நடுத்தரச் செல்வர்கள் வர்க்கம் உருவாகிவருகிறது.

கீழ்ச் சாதியினர் மேல் நோக்கிச் செல்ல முயலுகிருர்கள். சமூகச் சீர்திருத்தங்கள், பொருளாதார முன்னேற்றம், கல்வி வளர்ச்சி ஆகிய வழிகளால் கீழ்ச் சாதியினரது நிலை உயர்த்தப்பட்டு வருகிறது. ஆரிய சமாஜம் போன்ற அருளுள்ளம் படைத்தவர்களால் முதலில் தீண்டத்தகாதவர்களின் முன்னேற்றம் தொடங்கப்பட்டது. 1919 சீர்திருத்தத்திற்குப் பிறகு, அரசியல் காரணங்களால் அவர்கள் இந்துக்கள் அல்லாதவர்கள் என்ற நிலை மாறிவிட்டது. இந்தியாவானது நாகரிகமடைந்த நாடுகளில் ஒன்ருகக் கருதப்படவேண்டுமானுல், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடைய முன்னேற்றத்திற்கு இந்தியர்களே பொறுப்பாளிகள் என்று உணரப்பட்டது. 1932-லும், பிறகு 1933-லும் காந்தியடிகள் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகச் சாகும்வரை பட்டினி கிடப்பதாகத் துணிந்து ஹரிஜன முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தினுர். இந்தப் பட்டினிகளின் விளைவாகவும், காந்தியடிகளின் தலைமையில் நடந்த கல்வி, நிர்மாணப் பணிகளாலும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் திருவாங்கூரிலும் தீண்டத்தகாதவர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப் பட்டனர். மற்ற இராச்சியங்கள், ஹரிஜனங்களுக்குக் கோயில்கள் திறந்துவிடப்பட்டனவென்று அறிக்கைகளை வெளியிட்டன. தீண்டாமையை மக்களினத்திற்குச் செய்யப்பட்ட பெருந் தீங்காகக் காந்தியடிகள் கருதினுர். மற்றவர்களைப் போலவே நல்லவர்களாகவும், சமூக நன்மையின் பொருட்டு முக்கியமான பணிகளைச் செய்பவர்களாகவும் உள்ள இந்து சமூகத்தின் பெரும் பகுதியினரை அப் பழக்கம் அடக்கிவைத்திருந்தது. நிதான புத்திக்கும் மனச்சாட்சிக்கும் மாருன ஆதிக்கத்தை அவர் ஏற்க மறுத்தார். இந்து சமூகத்தில் ஐந்தில் ஒரு பகுதியினர் மற்றவர்களோடு சரி சமமாக இருப்பதற்கு உரிமையை மறுப்பதனுல் கடவுளை மறுத்ததாகவே அவர் கருதி அவ்வாறு செய்ய விரும்பவில்லை. மாற்றமில்லாமல் நிலையாக இருந்த ஒரு சமூகத்தின் ஜடத்தன்மையும் இரக்கமின்மை

[1] முற்கூறிய குர்யே (Ghurye) கூறியுள்ளதைக் காண்க. பக்கம் 167-81.

யும் இன்று மறைந்து, மனித வாழ்க்கையின் மதிப்பையும் பெருமையையும் இலட்சக்கணக்கான இந்தியர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இதுகாறும் தங்களை அழுத்தி வந்த பழங்காலப் பிடிப்பிலிருந்து தாழ்த்தப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் விடுதலை பெறுமாறு காந்தியடிகள் தன் உயிரையே அர்ப்பணம் செய்ய முன்வந்ததனால் ஏற்பட்ட மாறுதல்தான். காந்தியடிகளின் உணர்ச்சியூட்டும் செயலால் நம் குடியரசுச் சட்டம் தீண்டாமையை ஒழித்துவிட்டது. சாதி, சமயம், பால் (sex) ஆகியவை காரணமாக வேற்றுமை பாராட்டுவது இச் சட்டத்திற்குப் புறம்பானது. ஷெடியூல் வகுப்பினர் எனப்படுபவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ளுகிறது. பின்தங்கிய வகுப்புக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு, அதன்மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகத் திட்டக் குழுவும் விசேஷ கவனம் செலுத்தியுள்ளது. முதல் திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 39 கோடி ஒதுக்கப்பட்டது. இரண்டாம் திட்டத்தில் பின்தங்கிய வகுப்பினரின் நன்மைக்காக ரூ. 91 கோடி அளிக்கப்பட்டுள்ளது.[1]

(இ) பிரிக்கப்படாத குடும்பம்

நூறு வருடங்களுக்கு முன்பு குடும்பங்கள் பிரிக்கப்படாமல், பல தலைமுறைகளாக எல்லாவற்றையும் பொதுவாக வைத்திருப்பது தான் பெருவழக்காக இருந்தது. தனிப்பட்டவர் சொத்து வைத்திருப்பது அரிது. காலம் செல்லச் செல்ல, பிரிக்கப்படாத குடும்பத்தைச் சேர்ந்த சொத்துப் பிரிக்கப்பட்டது. இரண்டு தலைமுறைக்கு மேலாக வந்த குடும்பத்தைக் காண்பது அரிதாயிற்று. தகப்பனார் மறைவுக்குப் பிறகு இப்பொழுது குடும்பங்கள் பிரிக்கப்படுவது சாதாரணமாக இருக்கிறது. சொத்தைப் பிரித்துப் பிள்ளைகள் தங்கள் பங்கைப் பெற்றுக்கொண்டு தனியே வாழ்கிறார்கள். கீழ்ச் சாதிகளில் தகப்பனார் இருக்கும்போதே பிரிவினையாகிவிடுகிறது. இதற்குக் காரணம் வீட்டில் போதிய இடமில்லாததுதான் என்று கூறப்படுகிறது. பெரும்பாலும் குடும்பம் இருக்கும் வீடு ஒரே ஓர்அறையாகத் தான் இருக்கும். மேல் சாதிகளில் தகப்பனார் உயிருடன் இருக்கும் போது அதிகமாகப் பிரிவினை உண்டாவதில்லை. பிள்ளைகள் நவீனக் கல்வி பெற்று மேனாட்டுக் கருத்துப்படி தனி உரிமை உணர்ச்சி பெற்றாலொழிய, அவர்கள் சொந்தமாகச் செலவு செய்வது கிடையாது. மேலும், இந்தியாவின் மிகச் செழிப்பான பாகங்களில்

[1] முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் 37-வது அத்தியாயத்தையும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் 28-வது அத்தியாயத்தையும் பார்க்க.

தான் பிரிக்கப்படாத பெரிய குடும்பங்கள் உள்ளன. ஏனெனின், அங்குக் கிராம ஜனத்தொகை மிக அதிகமாகவும், தொழிலாளர்களை யும் சாதனங்களையும் ஒருங்கு திரட்டி விவசாயத்தில் நல்ல பயனை அடையக்கூடிய வாய்ப்பு மிகுதியாகவும் இருக்கிறது.

பொருளாதாரக் காரணங்களாலும் கைவினைஞர்களுடைய குடும் பங்கள் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றன. விவசாயக் குடும்பங்களைவிட இக் குடும்பங்களில் பிரிவினை இல்லாமலிருப்பதால் அதிகக் கைத் திறமை காணப்படுகிறது. பிரிக்கப்படாத குடும்பத்தைச் சேர்ந்தவர் தனித்திருந்தாலும் தங்கள் மூதாதையர்களுடைய வீட்டிலே வாழ்ந்து வருவது சாதாரணமான நிகழ்ச்சியாகும். இதில் உள்ள குடும் பங்கள், ஒரே வீட்டில் குடிக்கூலி கொடுத்து வாழ்பவர்கள்போலத் தனித்தனியாக இருப்பார்கள்.

நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் இன்று காணப்படும் இச் சிதைவுக்குக் காரணங்கள் பலவாகும். நாட்டில் ஜனத்தொகை குறைவாக இருந்தபோதும், குடும்பம் வளருவதற்கேற்ப விவசாய உற்பத்தி பெருகக் கூடியதாயிருந்தபோதும் ஒரே குடும்பம் என்னும் நிறுவனம் தோன்றியது. குடும்பத்தில் அதிகமான பேர் இருந் தால் வேலைக்கும் அதிகமான பேர் கிடைப்பார்கள். தலைமுறை தலைமுறையாக ஒரே இடத்தில் வாழ்ந்து, ஒரே தொழிலைச் செய்து சமூகம் நிலையாக இருந்த காலத்தில் ஒரே குடும்பம் ஏற்றதா யிருந்தது. சென்ற நூற்றாண்டுகளில் ஜனத்தொகை பெருகி விவசாய நிலத்திற்கு அதிக நெருக்கடி ஏற்பட்டது. நிலத்தின் அளவு குறைவாயிருப்பதால் விவசாயிகளின் மக்கள் வேறு தொழில்களைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சாலைகளும் ரெயில்களும் மக்கள் இடம்பெயர்வதற்கு உதவுகின்றன. உடல் வலிமையுள்ள வர்களும், துணிவுள்ளவர்களும் வேறிடங்களில் வேலை தேடச் செல் கின்றனர்; தமக்கு வேலை கிடைக்குமிடத்தில் மனைவி மக்களோடு தங்கிவிடுகின்றனர்.

குடும்பம் சிதைவதற்கு மற்றொரு காரணம் மனோதத்துவ ரீதியாகும். கூட்டுறவும் கலெக்டிவிசமும் (collectivism) தூண் களாக உள்ள ஒரு நிறுவனத்திற்குத் தனியார் சுவாதீன உணர்ச்சி பகையாகும். பிரிட்டிஷ் ஆட்சியில் உயில் (will) எழுதிவைக்கும் அதி காரம் ஒப்புக்கொள்ளப்பட்டது முதல் குடும்பச் சிதைவு அதிகமாகி வந்திருக்கிறது. ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் சண்டையிட்டுக் கொள்வதும், பெண்களுக்குள் சண்டையும், சோம்பேறிகளின் தொல்லையும், குடும்பத் தலைவர் சொத்தைச் சரியாக நிர்வகிக்காம லிருப்பதும் குடும்பத்தின் சிதைவுக்கு மேலும் சில காரணங்களாகும்.

மேனாட்டுக் கருத்துக்கள் புகுந்ததாலும், இந்தியரின் வழக்கங்களுக்கு மாறான வாழ்க்கை முறைகள் வந்ததாலும் ஒரே குடும்பத்திற்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது. குடும்பத்தில் வயதானவர்கள் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் ; சிறியவர்கள் அவற்றை உதறிவிட்டார்கள்.

பிரிக்கப்படாத குடும்பத்தில் தனியார் முனைப்புக்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை. திறமையுடையவர்களும் உழைப்பவர்களும் சோம்பேறிகளுக்காகப் பாடுபட்டுத் தண்டனையடைய வேண்டியிருக்கிறது. இக்கால நிலைமையில் வெவ்வேறு தொழில்களில் கிடைக்கக்கூடிய ஏற்றத் தாழ்வான வருமானமும், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களுக்கிடையே மனக் கசப்பை உண்டாக்குகிறது. தனியாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற உரிமை அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. ஒவ்வொருவரும் சம்பாதிக்கும் பணத்தை எல்லோரும் பகிர்ந்துகொள்ளும் பழைய மனநிலை மாறிவருகிறது. 1930-ல் இயற்றப்பட்ட கல்வியின் பயன் சட்டம் (Gains of Learning Act) தனிப்பட்டவர் சொத்துரிமையை ஒப்புக்கொண்டதனால் பிரிக்கப்படாத குடும்பத்தின் கலெக்டிவிச அடிப்படை தளர்ந்துவிட்டது. அதற்கு முன் அத்தகைய கல்வியின் பயன்கள் கூட்டுச் சொத்தாகக் கருதப்பட்டன. இச் சட்டம் பெண்ணின் மகனுக்கும் தங்கையின் மகனுக்கும் குடும்பச் சொத்தில் வாரிசுரிமை யளித்தது. ஆண் வமிசத்தில் மட்டும் வாரிசுரிமையைக் கொண்டிருந்த கூட்டுக் குடும்பத்தின் அடிப்படையையே இச் சட்டம் தகர்த்துவிட்டது. வாரிசுரிமைபற்றிய இந்துக்கள் சட்டத்தை எளிதாக்குவதற்குத் தோன்றிய இந்து வாரிசுரிமைச் சட்டம் (Hindu Succession Act) மகளுக்கும் சொத்தில் பங்கு உண்டு என்னும் உரிமையை அளிக்கிறது. இந்து சமூகத்தின் சம்பிரதாயத்தைப் பெரிதும் பாதிக்கும் சட்டம் இது.

அண்மையில், மணவிலக்கையும், பிள்ளைகளைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமையையும் ஒப்புக்கொள்ளும் இந்து சட்டத் தொகுப்பு மசோதா ஒன்றை இந்திய அரசாங்கம் கொண்டு வந்தது. அந்த மசோதா சட்டமாகியிருந்தால், கூட்டுக் குடும்பத்தின் சிதைவை விரைவுபடுத்தியிருக்கும். அச் சமூகத்தில் உள்ள வைதீகர்களின் எதிர்ப்புக் குரல் அதிகமாக இருந்ததால் அம் மசோதா கைவிடப்பட்டது. புதிய 1952ஆம் வருடத்திய இந்து திருமணமும் மணவிலக்கும் பற்றிய மசோதா சட்டமாயிற்று. 1955 மே முதல் அது நடைமுறைக்கு வந்தது. பெண்களின் மண வயதை அது பதினான்கிலிருந்து பதினைந்தாக்கியுள்ளது. குற்றச் சட்டத்தின்படி (Penal Code) இரு தார மணத்தைத் தண்டிக்கத்

க்க குற்றமாக்கியுள்ளது. சட்டப்படி கணவன் மனைவி பிரிவதைப் பற்றியும், மண விலக்கைப்பற்றியும் நிபந்தனைகளைக் கூறுகிறது. 1933-ல் மலபாரிலும், 1942-ல் பழைய பரோடா இராச்சியத்திலும், 1946-ல் பம்பாயிலும் இரு தார மணத்தைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டும்[1].

இந்தியாவில் உள்ள பழைய சமூக நிறுவனங்கள் இப்பொழுது குழப்பமடைந்துள்ளன. தனித்தும், சுயேச்சையாகவும், தன்னிறைவுடனும் இருந்த கிராம சமுதாயம் அநேகமாக மறைந்துவிட்டது. பொருளாதார நிர்ப்பந்தம் ஒருபுறமும், மேனாட்டுக் கருத்துக்களாலும் வாழ்க்கை முறைகளாலும் உண்டான புதிய கருத்துக்களும் இட்சியங்களும் மற்றொரு புறமும் சாதி அமைப்புத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. கிராம மக்களிடையே கூட்டுக் குடும்பம் இன்னும் உறுதியாக இருப்பினும், நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் அது வேகமாக மறைந்து வருகிறது.

இந்தியாவின் மத, கலாசாரப் பரம்பரை

இயந்திரங்களின் முன்னேற்றத்தாலும், வாழ்க்கை வசதிகளாலும் மட்டும் ஒரு நாட்டின் கலாசாரமும் நாகரிகமும் உண்டாகிவிடாது. மக்கள் நெருங்கிய உறவுடன் தங்களுடைய வேறுபட்ட திறமைகளால் ஒருவர் மற்றொருவருடைய வாழ்க்கையை விரிவுபடுத்தியும் வளம்படுத்தியும் வாழும் சமூக அமைப்பே ஒரு நாகரிக நாடு எனப்படும். இந்தியக் கண்டத்தை உலகத்தின் மற்றப்பகுதிகளிலிருந்து பிரிக்கும் கோட்டைச் சுவர்போன்ற மலைகளும் காடுகளும் அது ஒரு தனி நாகரிகத்தை உருவாக்க உதவின. இந்தியாவின்மீது படையெடுத்துவந்த ஆரியர்கள் இங்குத் தங்களுக்குச் சூரியனின் கொடிய வெப்பத்திலிருந்து பாதுகாப்பளிக்கும் நிழலையும், வேள்வித் தீக்கு விறகையும், ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலங்களையும் தரும் காடுகளைக் கண்டனர். இந்தக் காடுகளில்தான் இந்திய நாகரிகம் பிறந்தது. இந்தச் சூழ்நிலைதான் அங்கு வந்து குடியேறியவர்களுக்கு இயற்கையுடன் நெருங்கிய நட்பையும் உண்டாக்கியது. பெரிய இராச்சியங்களை நிறுவிப் பழைய காடுகள் இருந்த இடத்தில்

[1] தண்டிக்கும் சட்டங்களால் நூற்றுண்டுகளாக உள்ள வழக்கங்களை எளிதில் கைவிடும்படி செய்யமுடியாது. இந்தச் சட்டத் தொகுப்பு மசோதாவைக் கொண்டுவந்த டாக்டர் அம்பேத்கார், அது சட்டமாக்கப்பட்ட நான்கு வருடங்களுக்குள், இரு தார மணத்தை எதிர்த்து 2,000 திருமணங்கள் நடத்தப்பட்டன என்று கூறினர். இதற்காக மத்திய அரசாங்கச் சட்டம் இல்லாமலிருந்ததால், பம்பாயிலிருந்து அடுத்த இராச்சியத்திற்குச் சென்று இச் சட்டத்திலிருந்து தப்புவது மிக எளிது என்பதை எவரும் அறியமுடியும்.

செல்வமிக்க நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டபோதும், மனிதனுடைய உணர்ச்சிக்கும் உலகத்தின் இயல்புக்கும் உள்ள இந்த நட்பை அவர்கள் மறந்துவிடவில்லை. 'தான் செல்வச் செழிப்பை மிகுதியாகப் பெற்றிருந்தபோதும், பழங்காலத்தில் கஷ்டப்பட்டுப் பெற்ற ஆன்ம உணர்ச்சியையும், காட்டில் ஆசிரமங்களில் வாழ்ந்த எளிய வாழ்க்கையின் பெருமையையும் என்றும் மறவாமல் பெருமையுடன் நினைவில் கொண்டிருந்தது[1].

இந்தியக் கலாசாரத்தையும், வாழ்க்கைப் பிரச்சினைகளை நோக்கும் முறையையும் மாற்றியது இந்தக் காடுகள் மட்டும் அல்ல. இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் இமய மலையில் காலங்கழித்திருக்க வேண்டும். பனி மூடிய சிகரங்களின் தெய்வீகப் பெருமையும் அழகும் அவர்கள் மனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். நிலமகளின் குடலிலிருந்து வெளிக் கிளம்பியுள்ள இப் பெரிய மலையின் கம்பீரத் தன்மையையும் அளவு கடந்த பெருமையையும், தனி மனிதனின் சிறுமையையும் செயலற்ற தன்மையையும் உணர்ந்திருப்பார்கள். இந்துப் புராணங்களில் இன்றும் காணப்படும் ஆக்கத் தன்மையுள்ள கதைகளையும் உருவகங்களையும் உருவாக்கக்கூடிய அளவுக்கு ஆரியர்கள் கவிதையாற்றலும் கற்பனைத் திறமையும் உடையவர்களாக இருந்தார்கள். இந்தியர் கருத்து சிந்தனை மிக்கது: வாழ்க்கையின் உலகியல் பகுதியால் அது கவரப்படவில்லை. வெளித் தோற்றமும் உண்மையும் ஒன்றே என்று இந்துக்கள் ஒருபோதும் கருதவில்லை. அளவு கடந்து மேலோங்கிய மலைகளையும், வேகமாக விழும் அருவிகளையும், அடர்ந்த காடுகளையுங் கண்டு தன் ஆற்றலின் எல்லையை உணர்ந்த அவர்கள் மக்கள் சக்தியை அதிகமாக நம்பவில்லை. புயல்கள், பூகம்பங்கள், வெள்ளப் பெருக்குகள், பஞ்சத்தையும் நோயையும் உண்டாக்கும் கொடிய வறட்சிகள் ஆகியவைகளுக்கும், நோய்கள், காட்டு மிருகங்கள் ஆகியவைகளின் தாக்குதலுக்கும் ஆளாக இருந்த அவர்கள், தங்கள் சூழ்நிலையின் ஆற்றலுக்கு அடங்கி, 'அச் சக்திகளை அடக்கவும், எதிர்த்துப் போராடவும், அவற்றைக் கூர்ந்து கவனித்து ஆராய்ந்து, பகுத்து, அவற்றை அடக்கி ஆளவும் மனமில்லாமல் இருந்தனர்.'

உபநிஷத்துகள் என்பவை கரும வினை, மாறிப் பிறத்தல் (transmigration) என்ற ஆரியர்களின் கருத்துக்களின் விளைவே. 'ரிக் வேதத்தில் காணப்படும் வாழ்க்கையின் களங்கமற்ற மகிழ்ச்சியானது, பிற்காலத்தில் ஒவ்வொருவரும் மரணத்திற்குப் பிறகு புதிய

[1] தாகூர் எழுதிய 'சாதனா' - பக்கம் 4-5.

வாழ்க்கையைப் பெற்று, அதில் முன்பு செய்த நல்ல செயல்களின் பயனை அனுபவித்துத் தீய செயல்களுக்குக் கிடைக்கும் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு வாழவேண்டும்' என்ற கருத்தால் மாறி விட்டது. உபநிஷத்துகள் கருமத்தின் தத்துவத்தைப்பற்றி விளக்கிக் கூறி, மீற முடியாத மறு பிறப்பாகிய தண்டனையிலிருந்து தப்புவதற்கு ஒரு வழி கூறின. மனிதன் பரமான்மாவாகிய 'இணையற்ற ஒன்றைத்' தியானித்து ஞானம் பெற்று, மறு பிறப்பி லிருந்து தப்ப முடியும்.

படைப்பின் இந்த அடிப்படை ஒற்றுமையானது வெறும் தத்துவ விளக்கம் மட்டும் அன்று. இந்த ஒற்றுமையை எண்ணத் திலும் செயலிலும் பண்டை முனிவர்கள் வாழ்ந்து காட்டியதைப் போல உணரும்படி செய்வதே இந்தியாவின் பணியாகும். 'இந்த உலக உண்மையானது நமக்குக் கற்பிப்பது ஒன்று உண்டு' என்று இந்தியா தன்னியல்பாக உணர்ந்தது. நாம் இதை நன்கு உணர்ந்து, இதனோடு தொடர்புகொள்வதற்கு மனம் விரும்பி முயற்சி செய்யவேண்டும். விஞ்ஞான ஆவலால் தூண்டப்பட்டோ, பேராசையின் காரணமாகவோ, உலகியல் நன்மை கருதியோ இதையறியாமல், ஒன்றுபட்ட உணர்ச்சியுடனும், சந்தோஷம், சாந்தி ஆகிய உணர்ச்சியுடனும் அறிய வேண்டும்[1].

ஆரியர்கள் இந்தியாவை வென்றபோது இங்கிருந்த பூர்வீக சமயத்தையும் கலாசாரத்தையும் பெரும்பாலும் அழித்துவிட்டார்கள். எனினும், எந்த நாகரிகமும் முற்றிலும் தூய்மையானதன்று. சிந்தனையை விட்டு மத நம்பிக்கைகளைக் கருதும்போது, வென்ற இந்துக்கள் பூர்வீகக் குடிகளுடைய பல கடவுள்களைத் தங்கள் தெய்வங்களின் வரிசையில் சேர்த்துக்கொண்டிருப்பதைக் காணலாம். இவை பிரமன், விஷ்ணு, சிவன் என்பவை. உயிரின் தத்துவமும் தோற்றமும் ஆகிய பிரமனும், காப்பாற்றுபவராகிய விஷ்ணுவும், அழிப்பவராகிய சிவனும் வணங்குதற்குரிய தெய்வங்க ளானார்கள். இதுபோலவே மற்றத் தெய்வங்களும் தேவதைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இறுதியில் இந்தத் தெய்வங்களும் தேவதைகளும் ஒரே கடவுளின் வெவ்வேறு தோற்றங்கள் அல்லது அவதாரங்களே. ஆனால், இன்னும் சாதாரண இந்தியனிடம் ஒருவித வடித்தெடுத்த உண்மைத் தோற்றம் உள்ளது. முடிவற்ற ஒன்றினைப்பற்றிய உணர்ச்சி இருக்கிறது. உண்மையின் காலங் கடந்த தத்துவத்தைப்பற்றிய எண்ணம் ஏற்படுகிறது. மற்ற எல்லாம் பயனற்றவை என்ற கருத்துத் தோன்றியுள்ளது.

[1] மேற்கூறியதில் பக்கம் – 7.

இந்துக்கள் உலகியலை ஆன்மீகத்திற்கு அடிமைப்படுத்தி விட்டார்கள். அவர்களுக்கு அரசியல் பெரிதல்ல; மதம்தான் மிகப் பெரியது. என்றும் உள்ள ஒன்றினை அவர்கள் மதித்தார்கள்; அழியக்கூடிய ஒன்றினை மதிக்கவில்லை. சமயத்தின் ஆற்றல் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் காணப்படும். 'நாம் வாழும் நூற்றாண்டில் ஞானி (அரசியல் அறிஞன் அல்ல) ஒருவர்தாம் இந்தியா முழுவதையும் முதன் முதலாக வரலாற்றிலேயே ஒன்றுபடுத்தியவர்[1]' என்பது வியக்கத் தக்கதா ?

தம்மால் வெல்லப்பட்ட மக்களின் தொடர்பினால் பழைய ஆரியர்களின் இந்தச் சிந்தனையானது மாறுதலடைந்தது போலவே, வெல்லப்பட்ட மக்களின் தொடர்பினால் அவர்களுடைய சமூக அமைப்பும் முறைப்பட்ட சாதியாக வளர்ந்தது. அது காலப் போக்கில் நூற்றுக்கணக்கான சாதிகளாகப் பெருகி, உணவு, திருமணம் போன்றவற்றிலும் கடுமையான கட்டுத்திட்டங்களைப் பெற்றது. பிற்கால மத அமைப்பின் தடைகளும் சாதி முறையை நிலைபேறடையச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. இதன்படி மக்கள் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்களாய், மற்றவர்களைவிட உயர்ந்தவர்களாகவோ தாழ்ந்தவர்களாகவோ கருதப்படுவார்கள். முற்பிறப்பில் ஒருவன் செய்த வினைகளின் பயனாக அவன் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறக்கிறான். அச் சாதியில் தன்னுடைய நிலைமையை அவன் ஒப்புக்கொண்டு, சாதி விதிகளைக் கடுமையாகக் கடைப்பிடித்தால்தான் அவனுக்கு மறு பிறவியிலாவது மேலான நிலைமை கிடைக்கும்.

'முனிவர்கள் போதித்த வாழ்க்கையின் இன்பமும் ஆன்ம ஞானமும் பின்னிடும்படி விமோசனக் கொள்கை ஒன்று உண்டாக்கப்பட்டது. அது மனித வாழ்க்கையில் தீமையும் துன்பமும் இயற்கை என்று வற்புறுத்தியது.' நம் சுய அறிவு உள்ள வரையில் வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து தப்ப முடியாது. ஆசையை ஒழிப்பதனால்தான் அமைதி உண்டாகும் என்ற போதனையில் பெரும்பாலோர் தமக்கு ஆறுதல் இருப்பதாகக் கண்டார்கள். 'வாழ்க்கையின் இன்பமும், வேலையில் உள்ள இன்பமும், அதிக உற்பத்தி செய்து கடவுளின் சாம்ராச்சியத்தை அடைவதற்கு உதவும் அறு வடைப்பாட்டில் உள்ள இன்பமும், பழைய காலத்தில் முனிவர்கள் போதித்த வேலைச் சித்தாந்தமும் இப்பொழுது ஆசைகளை ஒழிக்க வேண்டும், தேவைகளை அடக்க வேண்டும் என்னும் போதனையால்

[1] 'நாகரிகத்தின் கதை' – Will Durant, 1935, பக்கம் 503.

மறைந்துவிட்டன.[1] மனிதனைவிட இயற்கை வலிமையுடையது. மனிதனுடைய சக்திக்கு மீறி, அவனுடைய அதிர்ஷ்டத்தையும் துரதிர்ஷ்டத்தையும் நிருணயிக்கக்கூடிய, மீற முடியாத விதிகள் உண்டு என்ற கருத்துக்களால் அன்றித் தாழ்த்தப்பட்டும், ஒடுக்கப் பட்டும் வறுமையால் வாடியும் உழலும் மக்களுக்குத் தம் நிலைமையில் திருப்தி ஏற்படுத்தக்கூடிய சரியான வழி ஒன்றுமில்லை என்பதை எளிதில் உணரலாம்.

இந்திய மக்களின் வாழ்க்கையிலும் வரலாற்றிலும் சாதி முறை தான் மிக அடிப்படையான செய்தியாகும். ஐரோப்பாவில் உள்ளது போன்ற மொழிகளைவிட இரு மடங்கு அதிக மொழிகளைப் பேசுபவர் களாகவும், மிகவும் வேறுபட்ட சமயக் கொள்கை உடையவர் களாகவும், வெவ்வேறு நிலையில் அறிவு வளர்ச்சி பெற்றவர்களாகவும் உள்ள மக்களையும் இனங்களையும் அது ஒரே சமூக அமைப்பின் கீழ்க் கொண்டு வந்தது. எல்லா இனத்தவர்களும் தம் வேற்றுமைகளை விடாமல் வைத்துக்கொண்டிருப்பினும், அவர்கள் எல்லோரையும் ஒரே சமூக ஒற்றுமையுடையவர்களாகச் செய்வதில் சகிப்புத் தன்மையுடன் கூடிய இச் சாதி முறையானது ஒரு நல்ல முயற்சியாகும். அமெரிக் காவிலும் ஆஸ்திரேலியாவிலும் பூர்வீக நாட்டு மக்கள் பெரும் பாலும் அழிக்கப்பட்டு, அவர்களுள் ஒருசிலரே இன்று மக்களியல் ஆராய்ச்சிக்கான கண்காட்சிப் பொருள்களாக விட்டுவைக்கப் பட்டுள்ளனர். இந்தியாவில் பூர்வீக மக்கள், வெற்றி பெற்ற மக்களின் சமூக அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சாதி அமைப்பில் ஒரே ஒரு செய்தி புறக்கணிக்கப்பட்டு விட்டது. அது யாதெனின், 'மக்களிடையில் உள்ள வேற்றுமைகள், ஜடமான தடைகளாக (மலைகள் போன்று) எப்பொழுதும் நிலையாக இருப்ப தில்லை. வாழ்க்கை மாறுவதற்கேற்ப அவையும் மாறும் தன்மை யுடையவை. மோதல்களைத் தடுக்க வேண்டுமென்னும் முயற்சியில் இந்தியாவானது அசைக்க முடியாத சுவர்கள் போன்ற தடைகளை உண்டாக்கிவிட்டது. இவற்றால் அதிலுள்ள பல இன மக்களுக்கு அமைதி, ஒழுங்கு ஆகிய பயனற்ற நன்மையை அளித்தது; விரிந்து சென்று இயங்குதற்குரிய வாய்ப்பாகிய பயனுள்ள நன்மையை அளிக்கவில்லை.'[2] முயற்சி செய்வதிலும், பாடுபடுவதிலும் தன்னை மேலானவனாகவும், அதிக மகிழ்ச்சியுள்ளவனாகவும் செய்வதில் மதிப்போ பெருமையோ இல்லை என்று கருதும் தெளிவான வாழ்க்கைச் சித்தாந்தமே சாதி முறையாகும்.

[1] Wadia & Joshi—முற்கூறிய புத்தகம், பக்கம் 178.

[2] தாகூர் எழுதிய தேசீயம் (Nationalism) பக்கம் 116.

முடிவாகக் கூறுமிடத்து, இந்திய நாகரிகம், விஞ்ஞானத்தைவிட மதம் நுட்பமானது என்ற கருத்துடைய இடைக்கால மக்களுடைய கோட்பாட்டின் வெளிப்பாடே. ஏனெனின், மதமானது மக்களின் அறியாமை என்றும் நிலையானது என்றும், மக்கள் ஆற்றல் வெறும் ஆடம்பரமே என்றும் கூறுகிறது. இந்நுக்களின் இந்தப் பக்திதான் அவர்களுடைய சக்திக்கும் குறைபாட்டிற்கும் காரணமாக உள்ளது. மூட நம்பிக்கையும், கண்ணியமும், ஆன்ம சிந்தனையும், ஞானமும், பின்தங்கிய தன்மையும், ஆழ்ந்த அறிவும், போரில் வலியின்மையும், கலையில் வெற்றியும் ஆகிய இவையே அவர்களுடைய சிறப்புக்களும் குறைபாடுகளுமாம். சீதோஷ்ண நிலை அவர்களுடைய மதக் கொள்கைகளைப் பாதித்து, அதனோடு சேர்ந்து அவர்களை வலிமையற்றவர்களாக்கிவிட்டது என்பதில் ஐயமில்லை. ஆகையால் அவர்கள் இது விதியின் செயல் என்று ஹூணர்கள், முஸ்லீம்கள், ஐரோப்பியர்கள் ஆகியவர்களுக்குக் கீழ்ப்படிந்து விட்டார்கள்.[1]

கலாசாரங்களின் மோதல்

பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகு இந்தியா, கீழ்நாட்டு மக்களும் மேனாட்டு மக்களும் சந்திக்கும் இடமாயிற்று. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த அரசியல், சமூக, பொருளாதார மாறுதல்கள் ஒரு புதிய இந்தியாவை உருவாக்கின. அதிக ஜனத் தொகைப் பெருக்கம், வியாபாரத்தின் வளர்ச்சி, விரைவான போக்குவரத்துச் சாதனங்கள் (ரெயில், தபால்-தந்தி போன்றவை), அச்சடிக்கும் முறை, செய்தித் தாள்கள் ஆகியவை எல்லாம் முன்பு மக்களைப் பிரித்து வைத்திருந்த பூகோள ரீதியான தடைகளை நீக்கி, ஒரே பொது வாழ்க்கையும் முன்னேற்றமும் வேண்டும் என்ற உணர்ச்சியை உண்டாக்கின. போக்குவரத்து வசதியானது, மக்கள் இடம்பெயர்வதற்கு உதவிற்று; அதனால் கிராம வாழ்க்கையின் அமைப்பு மாறியது. பூனா அனைத்து மக்கள் சபையும் (Sarvajanak Sabha), இந்திய தேசீயக் காங்கிரசும் தேசீய உணர்ச்சியை வளர்த்தன. கல்வி நிலையங்களில் இந்திய இளைஞர்கள் ஆங்கில இலக்கியத்தின் வாயிலாக ஆங்கிலேயருடைய எண்ணங்களை உணர்ந்தனர். கல்வி பரவியதால் நம் பழைய கலாசாரத்தைப்பற்றி நமக்குப் பெருமை உண்டாயிற்று. ஜப்பான் ரஷ்யாவை வென்றதால், கிழக்கு ஆதிக்கம் மேற்கு ஆதிக்கத்தை வென்றதாகக் கருதப்பட்டது. இது ஆங்கில ஆட்சியிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்னும் கோரிக்கைக்குப் புதிய சக்தியை அளித்தது.

[1]மேற்கூறிய டியூராண்ட்—பக்கம். 611-12.

18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவிற்கு உண்டான மேனாடுகளின் தொடர்பானது, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந்த நூற்றாண்டின் முதல் நாற்பதாண்டுகளிலும் உண்டான தொடர்பினின்றும் வேறானது. ஷெல்லி, கீட்ஸ், வார்ட்ஸ்வொர்த்து ஆகியவர்களின் நூல்களின் வாயிலாகவும், மாஜினி, கரிபால்டி ஆகியவர்களின் மூலமாகவும் இந்தியாவுக்கு அறிமுகமான மேனாட்டுக் கருத்துக்கள் மக்களினத்தின் சகோதரத்துவத்தையும் சுதந்திரத்தையும்பற்றிக் கண்ட கனவுகள் ஆகும். கல்வி கற்ற இந்தியர்களுக்கு, இன்று மேனாடுகள் இயந்திரங்களையும் போர்க் கருவிகளையும் நம்பிச் செல்வத்தையும் அதிகாரத்தையும் வணங்கி, நுட்பமான பரம்பரைப் பண்புகளை இழந்துவரும் நாடுகளாகக் காட்சியளிக்கின்றன.

இந்தியாவானது கிழக்கும் மேற்கும் சந்திக்கும் இடம் என்று கூறும்போது, நம் நாட்டில் ஒரே மாதிரி கலாசாரம் எங்கும் பரவவில்லை என்பதை நாம் உணரவேண்டும். நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு பகுதி மக்களிடம் மட்டும் இன்று மேனாட்டுக் கலாசாரம் பரவியுள்ளது. கிராமங்களில் வாழும் இந்தியர்கள் மேனாட்டுச் செல்வாக்கினால் அதிகம் பாதிக்கப்படவில்லை. கிராமங்களின் ஒதுக்குப்புறத் தன்மை பஸ்களினால் அகற்றப்பட்டு வருகிறது; மேனாட்டு நிருவாக முறையாலும், இயந்திரங்களால் செய்யப்பட்ட பண்டங்களைப் பயன்படுத்துவதாலும் கிராமச் சந்தைகளை நாட்டின் உள்ளேயும் வெளியேயும் தொடர்புபடுத்தியுள்ள விலைப் பொருளாதாரத்திலும் (price economy) கிராமத்தின் பொருளாதார வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மற்றப்படி, பல தலைமுறைகளாக நடந்துவந்தது போலவே கிராம வாழ்க்கை நடந்து வருகிறது. இருப்பினும், கணக்கிட முடியாத நூற்றுக்கணக்கான வழிகளில் கிராமங்களில் புதிய வாழ்க்கை புகுந்துகொண்டிருக்கிறது. ரெயில், தந்தி, பஸ் முதலியவற்றாலும், சினிமா, வானொலி ஆகியவற்றாலும் கிராமங்கள் மேலும் மேலும் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன. வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஊர் சுற்றும் வியாபாரியும், கல்லூரியில் படித்துவிட்டுக் கிராமத்திற்குத் திரும்பிவரும் மாணவனும், வோட்டைப் பெற நினைக்கும் அரசியல்வாதியும், மக்களை ஆயிரக்கணக்கில் திரட்டும் பெரிய தலைவர்களும் எதிர் காலத்திற்கு அதிக நம்பிக்கையூட்டக்கூடிய புதிய வாழ்க்கையை அளித்து வருகிறார்கள்.

ஆனால், இந்த நம்பிக்கை எதில் முடியும்? கீழ் நாடுகளுக்கும் மேனாடுகளுக்கும் உள்ள வேற்றுமை ஆன்ம விசாரத்திலும் உல

கியல் பற்றிலும் மட்டுமன்று. ஐரோப்பா வெறும் உலகியலிலேயே அழுந்திவிடவில்லை. மக்கள் செயலின் இலட்சியங்களாகிய உண்மை, அழகு, நன்மை என்பவை ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கும் இனத்திற்கும் மட்டும் உரியவையல்ல. கீழ் நாடுகளில் போலவே மேனுடுகளிலும், மக்களினத்தின் நன்மைக்காகவும் அறிவைப் பெறுவதற்காகவும் மனிதன் தன் உயிரையே அர்ப்பணித்துக் கொண் டிருக்கிருன். ஆனுல், இங்குள்ள நாமோ, பழமை என்னும் விலங் கினுல் கட்டுண்டு, உருவத்திற்குள்ளிருக்கும் உயிரை வழிபடாமல் உருவத்தை மட்டும் வழிபடும் சடங்குகளில் மகிழ்ந்து கொண்டிருக் கிருேம். நம் பாவங்களைக் கங்கை நீரால் கழுவிவிட முடியும் என்று நம்பும் நாம்தான் இந்த அளவுக்கு உலகியல் நோக்குடையவர் களாக இருக்கிருேம். மனிதன் சிறப்பாக ஆன்மீகத் தன்மை யுடையவன். ஆகையால், அவன் எப்போதும் உலகியல் பற்றுடைய வனுகவே இருந்துவிட முடியாது. கூட்டத்தின் அதிக நன்மையைக் கருதி அதிலுள்ள தனிப்பட்டவர்களை அடக்கியும், தனிப்பட்டவர்கள் நிறைவு வாழ்க்கை வாழ்வதற்குத் தடை விதித்தும், தனிப்பட்ட வருடைய உரிமை, சுதந்திரம் என்று கூறிக்கொண்டு பொருளா தாரத் துறையில் குழப்பத்தை உண்டாக்கும் வாழ்க்கையைக் கடைப் பிடித்தும், மேலும் கட்டுக்கோப்பான முறையில் சிலருடைய குறுகிய நன்மைகளுக்காக இதைச் செய்தும் வரும் நிறுவனங்களைக் கொண்ட வாழ்க்கை முறைதான் கீழ் நாடுகளுக்கும் மேனுடு களுக்கும் உள்ள வேற்றுமையாகும்.

இந்த வேற்றுமையானது திருமண விஷயத்தில் இருப்பது போல வேறெதிலும் அவ்வளவு அதிகமாகத் தெரியவில்லை. தனிப் பட்டவனுடைய விருப்பம் அல்லது போக்கு என்பதை இந்து மண முறை ஒத்துக்கொள்வதில்லை. அந்நிய கலாசாரங்கள் அடிக்கடி தாக்கிக் கொண்டிருக்கும் முடிவற்ற துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையில் இந்து சமூகம் இருந்தது. ஆகையால், திருமணம் உணர்ச்சியின் பிடிப்பிலிருந்து காப்பாற்றப்பட வேண்டியதாயிற்று. சந்ததிகளைக் கருதிக் காதல் கல்யாணத்தைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. அரச குடும்பங் களில் இத்தகைய முறை ஐரோப்பாவில்கூட இருப்பதை நாம் உணரலாம். ஆனுல், மேனுடுகளில் மனிதனுடைய பேராசை யானது பெண்ணைத் தன் சொந்த இன்பத்திற்குக் கருவியாக்கி யுள்ளது. சமூகத்தில் முன்பு திருமணத்திற்கு இருந்த பெருமை போய்விட்டது. நகரங்கள் மிகுந்த காரணத்தினுல், தனிப்பட்டவன் தன் குழுவிலிருந்து பிரிக்கப்பட்டு, அதன் மேற்பார்வையிலிருந்து விடுபட்டான். புதிய இலட்சியங்கள் திருமணத்தின் சாத்திரீயத் தன்மையை அழித்துவிட்டன.

கடந்த பல ஆண்டுகளாக இந்தியா இந்த மாறுபட்ட தன்மைகளைக் கண்டு வருகிறது. கடந்த கால வரலாற்றை நாம் கிளற வேண்டியதில்லை. எனினும், வலிமை பெற்ற நாடுகள் தம்முடைய கட்டுக்கோப்பான அதிகாரத்தினால் வலிமையற்ற நாடுகளைச் சுரண்டு தற்குரிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்குக் காரணம், விஞ்ஞான அறிவினாலும், அதனைப் பயன்படுத்தியதாலும் உலகத்தின் பெரும்பரப்புக் குறைந்து காணப்படுவதே. வலிமையற்ற நாடுகள் தம்முடைய தேசீய உறுதியால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முனைந்திருப்பதால் மனத்தாங்கல்களும் போராட்டங்களும் மிகுந்துள்ளன.

நம் சமூக நிறுவனங்களில் உண்டான மாறுதல்களைப்பற்றிக் கூறினோம். பிரிட்டிஷ் ஆட்சியில் பொருளாதார வாழ்க்கையைப் பற்றி மற்றோரிடத்தில் கூறியுள்ளோம். இந்தியா, மேனாடுகளின் மோதல்களினாலும் தொடர்பினாலும் தம் கலாசாரத்தை மேலும் உயிருள்ளதாகச் செய்து கொண்டது. ஆன்மீகத் துறையில், நவீன விஞ்ஞானத்தினால் உண்டான அறிவைக்கொண்டு மத சம்பந்தமான மூட நம்பிக்கைகளை அது தகர்த்து வருகிறது. அரசியல் துறையில் முன்பு எப்பொழுதும் இல்லாத ஒற்றுமையை அது பெற்று வருகிறது. பொருளாதாரத் துறையில் மேனாடுகளைப் போலத் தன் தொழில்களை வளர்த்து வருகிறது. ஆனால், இந்தியாவில் உள்ள நாம், மேனாடுகளின் தொழிற் புரட்சியைக் கடைப் பிடித்துக் கட்டுப்பாடில்லாத முதலாளித்துவத்தினால் கோடீஸ்வரர்களும் பிச்சைக்காரர்களும், அரண்மனையும் சேரிகளும் தோன்றி வளரும்படி விட்டுவிடலாமா? ஏற்கெனவே இவையெல்லாம் தோன்றி நம் கலாசார மரபை அழித்துவருகின்றனவே. இவ்வாறன்றி, நம் பண்டைக் கலாசாரத்தைக் காப்பாற்றும் முறையில் மேனாடுகளிலிருந்து கிடைக்கும் நல்லவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றை நமக்கேற்றவாறு மாற்றி யமைத்துக்கொள்ளலாமா? இந்தப் போராட்டங்களுக்கிடையில் கீழ் நாடுகள் மக்களை மதித்து, அல்லது மேனாடுகளுடன் ஒத்துழைத்து, அறிவு பெற்று, மனித இனம் உலகியல் நன்மை பெறுவதுதான் நமது இலட்சியம் எனின், அந் நன்மையானது ஆன்மீக அழிவைவிட மிக மோசமானதாக இருக்கக்கூடும் என்று போதிக்கும் தகுதி பெறக்கூடிய மேலான அமைப்பு ஒன்றை உண்டாக்க முடியாதா? உலகிற்கு உரியவர்களாக இருக்கக்கூடியவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம். ஆனால், அதில் புனிதத் தன்மையுடையவர்கள்தாம் இன்புற்றிருக்க முடியும்.

இந்தியாவில் மேனாடுகளின் செல்வாக்கு, சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களிடத்தில்தான் அதிகம் பரவியுள்ளது.

அவர்கள் நகர மக்கள், அரசர்கள், நவாபுகள், நகரத்தில் உள்ள செல்வர்கள், உயர்ந்த தொப்பி அணிந்த ஆண்கள், குறுகிய பாவாடையும் சட்டையும் அணிந்த பெண்கள், சினிமாவுக்கும் உணவு விடுதிகளுக்கும் அடிக்கடி செல்பவர்கள் ஆகியவர்களே. இந்த உண்மையை உணர்ந்தால்தான் இக் கலாசாரங்களும் நிறுவனங்களும் இணைவது முடியுமா இல்லையா என்று கூறலாம். ஆட்சியாளர்கள் தோன்றி மறையலாம்; பழைய ஆதிக்கம் இருந்த டில்லியில் புதிய ஆதிக்கம் வரலாம். ஆனால், கிராமங்களில்தான் இந்தியாவின் துடிப்பு இன்னும் அதிகமாக இருக்கிறது. 'ஜஸியா' வுக்குப் பதில் உப்பு வரி வரலாம். ஆனால், இவையெல்லாம் சீதோஷ்ண நிலையும் மழையும்போல சமூகச் சூழ்நிலையில் உண்டாகும் தாற்காலிக மாறுதல்கள். உண்மையின்மீது அடங்காத பற்றுதல், அளவுக் கடங்காததைப்பற்றிய உணர்வு ஆகியவை கிராம மக்கள் மனத்தில் இம் மாறுதல்களைப்பற்றிக் கவலை இல்லாமல் செய்துவிட்டன. நல்லதொரு புதிய உலக அமைப்பு உண்டாகுமானல், அதில் இந்தியாவின் பங்கு குறிப்பிடத்தக்கதா யிருக்கும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. எனினும், எதிர்கால வரலாற்றில் நிகழ்ச்சிகள் வேறுவிதமாக மாறக்கூடும் என்பதையும் நாம் ஊகிக்கலாம். மேனாட்டு விஞ்ஞானத்தின் உலகியல் தன்மையால் அனுவசியமாகத் தேவைகளைப் பெருக்கிக்கொள்ளும் போக்கு நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் ஊடுருவிவிட்டது. நம்முடைய இளைஞர்களை அது மிகவும் இறுக்கிப் பிடித்துக்கொண்டுவிட்டது. அவர்கள் நம் பரம்பரைக் கலாசாரத்திற்கு மாறாகக் காலத்தின் கோலத்தில் மயங்கிப் பயனற்ற வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். கிழக்கையும் மேற்கையும் பிணைக்கக்கூடிய கலாசாரத்திற்குக் கீழ் நாட்டினராகிய நாம், நம் பரம்பரைக் கலாசாரத்தை அளித்து உருவாக்குவதை விடுத்து, மேனாட்டு நாகரிகத்தில் உள்ள சீரழிவுப் போக்குகளால் ஆட்கொள்ளப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பாசிசம், கம்யூனிசம், முதலாளித்துவம், தேசீயம் என்னும் பெயர்களால் உலவிக்கொண்டு தன்னை நிலைபெறச் செய்ய முயன்று வருவதும், இயந்திரத்தையே கடவுளாகக் கருதித் தனி மனிதனை மிருகமாக்கி, சிறுபான்மையோர் கையில் அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு வருவதும் ஆகிய ஒரு போக்கில் நாமும் கலந்துவிடக்கூடும். இந்தப் போக்கு நம் நாட்டில் இருக்கிறது என்பதை மக்களில் ஒரு பகுதியினரின் பொருட்டு நாட்டுப்பற்றைப் பறிகொடுக்கும் குறுகிய மொழிப்பற்றினால் அறியலாம். இப் பற்று, கடைசியில் அந்தச் சிறு பகுதியினருக்குக் காட்டும் பற்றாகவுமன்றித் தனி மனிதனிடம் காட்டும் பற்றாக மாறிவிடக்கூடும். போக்குவரத்து, கூட்டுறவு ஆகிய நெடுநாட் பழக்கங்களை அழிக்கும் முறையில் அமைந்த அயல்நாட்டுப் பயண அனுமதி முறை, மேனாடு

களில் ஒரே நாட்டையும் இனத்தையும் சேர்ந்தவர்களுடன் உறவு கொள்வதற்கு உள்ள தடைகள் ஆகியவை போன்றே நம் நாட்டிலும் மொழிவழி இராச்சியங்கள் வேண்டும் என்ற கோரிக்கையானது சட்ட வரம்பையும் மீறிய உண்ணாவிரதங்கள், பட்டினிகள், கூட்டத்தில் காலித்தனம், கட்டுக்கடங்காத வன்முறை ஆகியவற்றால் வற்புறுத்தப்படுவது இதற்கு ஓர் உதாரணமாகும்.[1]

சுதந்திர இந்தியா ஒரு புதிய பொருளாதார அமைப்பிற்குத் திட்டமிட வேண்டுமானால், அவ்வமைப்பு மக்களின் பொது நன்மையைக் கருதி விவசாயத்தையும் தொழில்களையும் சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவேண்டுமானால், பழைய சமூக நிலையங்களின்மீது அதை அப்படியே உண்டாக்க முடியாது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவுடையதாய் இருக்க வேண்டுமென்று எண்ணாமல், மற்றக் கிராமங்களை அதனோடு இணைத்து, புத்துயிரளிக்கப்பட்ட இக் கிராமத்தை ஒரு பொருளாதார அலகாகக் கொண்ட அடிப்படைமீது புதிய பொருளாதார அமைப்பை உண்டாக்கவேண்டும். அரசியல் பொருளாதார வேலைகளில் சாதி, சமயங்களுக்கும், மொழிவழி உரிமைகளுக்கும் இவ்வெதிர்கால அமைப்பில் இடமில்லை. ஏனென்றால், பொருளாதார மாறுதலால் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் பாதிக்கப்படுவார்கள். மார்க்கெட்டுகளும், விலைகளும், பாங்குத் தொழிலும், செலாவணியும் ஆகிய பொருளாதார சக்திகள், இந்து, முஸ்லீம், பார்சி, கிறிஸ்துவன், குஜராத்தி, மராட்டியன் என்ற வேறுபாடுகளைக் காட்டுவதில்லை. உண்மையில் நாம் ஏற்படுத்தப்போகும் பொருளாதார வாழ்க்கையின் ஒற்றுமையினால்தான் இந்தச் சாதி சமய வேற்றுமைகள் அகலும். பெண்கள், சமூகத்தில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படாமல், இரு பாலாரும் சமம் என்றும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமையில்லை என்றும் கருதி, குடும்பங்களில் ஆரோக்கியமும் இன்பமும் உண்டாகுமாறு செய்து, பெற்றோர்களுக்குள் அன்பை வளர்த்து, இளைஞர்களின் நலனைப் பாதுகாத்து, இனிப் பிறக்கப் போகிறவர்கள் நல்ல முறையில் பிறக்க உரிமையுடையவர்கள் என்பதை உணரும் புதிய குடும்பங்கள்

[1] நிருவாக நன்மைக்காக என்று கூறிக்கொண்டு, நம் நாட்டை இவ்வாறு மொழி அடிப்படையில் துண்டு போடுவதைப்போன்று நம் ஒற்றுமைக்கு ஊறு விளைக்கக் கூடியது வேறொன்றுமில்லை. இதனால் பிரிவினை அமிசங்களும், ஓர் இராச்சியத்திற்கும் மற்றோர் இராச்சியத்திற்கும் இடையே தடைகளும், இந்தியக் குடியுரிமைக்குப் பதில் இராச்சியக் குடியுரிமையும் நிலைபெற்றுவிடும். பண்டை ஆதென்ஸில் கிளைஸ்தெனீஸ் (Cleisthenes) எனப்பட்ட நாட்டுச் சீரமைப்பினாலும், 1789-க்குப் பிறகு ஃபிரான்சில் ஃபிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் செய்ததைப் போலவும் நாட்டைச் சீர்திருத்திப் பழைய காலப் போட்டிகளையும், சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்ற வர்க்க பேதங்களையும் ஒழித்தால் தான், மேலும் நல்ல நிருவாகத் திறமையை உண்டாக்கலாம்.

தோன்றவேண்டும். பழங்காலத்தில் சாதி அமைப்பு எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருந்தாலும், இத்தகைய பொருளாதார அமைப்பில் அதை ஒருவரும் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். இந்தப் பொருளாதார அமைப்பு உறுதியாகவும் நிலையாகவும் இருப்பதற்கு ஒரு புதிய சமூக அமைப்பு உண்டாக வேண்டும். இச் சமூக அமைப்பு, வேலைகளின் வேறுபாடுகளும் தொழில் பாகுபாடும் அற்ற, வர்க்கமில்லாத அமைப்பன்று. ஆனால், அதில் செல்வம், பிறப்பு, சொத்து என்ற அடிப்படையில் இல்லாமல், திறமை, பண்பு என்ற அடிப்படைமீது வேலைகளின் வேறுபாடு அமைந்திருக்கும். அந்தச் சமூகத்தில், அந்தஸ்தைப் பொறுத்தும், வமிசத்தைப் பொறுத்தும், தனித்து நிற்கும் கௌரவத்தைப் பொறுத்தும் வர்க்க பேதங்கள் இராமல், சமூக நன்மைக்கு உழைப்பவர்களைப் பொறுத்தே வர்க்க பேதங்கள் இருக்கும். எந்த யோக்கியமான வேலையும் மரியாதைக்குரியதாகவே கருதப்படும். எந்த வேலையும் தன்னியல்பாக நல்லது அல்லது கெட்டது என்று கருதப்பட முடியாது. சாதி சமய வேற்றுமையின்றி அளிக்கப்படும் சரிசமமான சந்தர்ப்பங்களால் எவனும் தனக்குரிய நிலையை அடையலாம். வெவ்வேறு வகுப்பினர் ஒத்துழைப்பதால் எல்லோரும் நிறைந்த வாழ்க்கையைப் பெறலாம். பழைய இந்திய சமூகத்தில் இருந்த சேவை உணர்ச்சியும், தியாக உணர்ச்சியும் சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டு, அச் சமூகத்தில் தேவையில்லாமல் சேர்ந்திருந்தவற்றையும், சந்தோஷமான ஆரோக்கிய வாழ்க்கையை அனுபவிப்பதற்குத் தடையாய் இருந்தவற்றையும் நீக்கிவிட்டு அந்தப் புதிய சமூகம் உண்டாக்கப்படும்.

5. மனித அமிசம்

ஒரு நாட்டின் செல்வம் இறுதியாக இரண்டு அமிசங்களைப் பொறுத்தது; ஒன்று, மண், சீதோஷ்ணம், தாதுப் பொருள் சாதனம், பூகோள நிலை உட்பட்ட இயற்கைக் கொடைகள்; மற்றொன்று மனித அமிசம்; அதாவது, மனித சக்தியின் அளவும் குணமும் அல்லது வேலை செய்யக்கூடிய மக்கள். மனிதன் நாகரிகத்தில் முன்னேறும்போது, மனித அமிசம் அதிகரித்துச் சூழ்நிலையின் சக்தி குறைகிறது. சமூகம் முன்னேறும்போது மனிதன் தன் சூழ்நிலையைச் சார்ந்திருக்கும் தன்மை வரவரக் குறைகிறது. அதை அவன் தன் விஞ்ஞான அறிவினால் அடக்கி மாற்ற முடிகிறது. மக்கள் தமக்குக் கிடைக்கும் சாதனங்களை நல்ல முறையில் பயன்படுத்தத் திறமையற்றிருந்தால், எவ்வளவுதான் இயற்கை வசதிகள் இருந்தாலும் ஒரு நாடு செல்வத்தை உற்பத்தி செய்வதில் பின்வாங்கத்தான் நேரும்.

ஜனத்தொகைபற்றிய கொள்கைகள்

1798-ல் மால்துஸ் (Malthus) என்பவர் எழுதிய ஜனத்தொகைக் கொள்கைபற்றிய கட்டுரையை முதலாகக் கொண்டு, இக்கால ஜனத்தொகைக் கொள்கைகள் எல்லாம் தோன்றின. பிராணிகளின் வாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்ததில், அவை வாழ்வதற்கு இயற்கை கொடுத்துள்ள பொருள்கள் போதாமல் போகும் அளவிற்கு அவை பெருகி வருகின்றன. அன்றியும், மால்துஸ் இருந்த காலத்தில் மிக அதிகமான அளவில் உணவு உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர முறைகள் இல்லை. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் உண்டான தொழிற் புரட்சியின் விளைவான பெருமளவு செல்வ உற்பத்தி அப்பொழுது தான் தொடங்கியிருந்தது. மேலும், மால்துஸ் காலத்தில் இங்கிலாந்தில் ஏழைகள் சட்டம் சரியாக நிருவகிக்கப்படாமலிருக்கும்

போதே ஏழை வகுப்பாரின் குடும்பங்களும் பெருகிவந்தன. இறுதியாகப் புதிய அமெரிக்க மண்ணில் குடியேறிய யாத்திரீகத் தந்தைகளின் (pilgrim fathers) சந்ததி 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மடங்காகப் பெருகிக்கொண்டுவந்தது. இந்த நிலைமையில் உயிர்வாழ்வதற்கு வேண்டிய உணவின் அளவை விட மக்கள் தொகை ஒவ்வொரு நாட்டிலும் அதிகமாகப் பெருகி வருகிறது என்ற கொள்கையைக் கூறினர். இப்படிப் பெருகும் போக்கிற்கு எதிராகப் போர், பஞ்சம், பிளேக் போன்ற நோய்கள் ஆகியவற்றால் ஜனத்தொகை அதிகமாகக் குறையும் தன்மை காணப்படுகிறது. இந்த விளைவுகளைத் தடுக்கவேண்டுமானல் கல்வியைப் பரப்புவதன் மூலம் அறத்தின் அடிப்படையில் அமைந்த கட்டுப்பாடும் சிக்கன முறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

காலத்தின் போக்கிற்கேற்ப ஜனத்தொகைக் கொள்கைகள் மாறுகின்றன. சுற்றுச் சார்புகளின் நிலைமையைப் பொறுத்தே அவை பெரும்பாலும் உருவாக்கப்படுகின்றன. மால்துஸ் தன் ஜனத்தொகை விதியைக் கூறிய நூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பாவில் அதிக அளவில் ஜனத்தொகை பெருகி, வாழ்க்கை வசதிகளின் தரமும் இடைவிடாமல் அதிகரித்து வந்தது. சென்ற நூற்றாண்டின் நடுவில், மூலதனச் சேர்க்கை, நிலையங்களின் செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் தன் ஜனத்தொகைக் கொள்கையை உருவாக்கினர். அவர் கருத்துப்படி, 'அதிக ஜனத் தொகை' ஏற்படுவதற்குக் காரணம், உற்பத்தி சக்தியின் குறைவு அன்றி, முதலாளித்துவத்திற்கே உரிய முறையில் வருமானத்தைச் சரியாக நிருவகிக்காமலிருப்பதுதான். முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு, மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முன்பு இல்லாத அளவிற்குப் பிறப்பு விகிதம் குறைந்திருப்பதைச் சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டினர்கள். சில ஆண்டுகளுக்குள் ஜனத்தொகை பெருகாவிட்டால், அது ஒரே நிலையாக இருந்து விடும் என்று அவர்கள் கூறினர்கள். அது மட்டுமன்றி, ஜனத் தொகை குறையும் போக்குக் காணப்பட்டதால், 'ஜனத்தொகைப் பெருக்கம்' என்ற கூக்குரலை மாற்றி, 'ஜனத்தொகைக் குறைவு' என்று கூறத் தொடங்கினர்கள். ஆசிய நாடுகளில் ஜனத்தொகை விரைவாகப் பெருகுவதை இதனேடு ஒப்பிட்டு, வெள்ளையரின்

ஜனத்தொகை ஒரே நிலையாக இருந்துவிடும் அல்லது குறைந்துவிடும் என்று எச்சரிக்கை செய்தார்கள்.[1]

மிக அண்மையில் உருவாக்கப்பட்ட உத்தம மக்கள் தொகைக் கொள்கை (optimum theory of population) கூறுவதாவது: 'மற்றவை மாருமலிருப்பின், ஒரு குறிப்பிட்ட காலத்திலோ, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலோ உச்ச விளைவு (maximum returns) ஏற்படக்கூடிய நிலை உண்டாகும். அப்போது ஜனத்தொகை நிலைமைக்குத் தக்கவாறு சரியாக இருக்கும். அது சற்றுக் குறைந்தாலோ கூடினாலோ விளைவும் குறைவாகிவிடும். இந்த ஜனத்தொகை உத்தம மக்கள் தொகை எனப்படும். உற்பத்தியை நிருணயிக்கும் நிலைமைகள் மாறும்போது, காலத்திற்கேற்ப இந்த உத்தமத் தொகையும் மாறும்.'

இந்த உத்தமக் கொள்கை (optimum theory), ஜனத்தொகை அடர்த்திக்குச் சராசரி வாழ்க்கைத் தரத்தை ஒரு ராசியாகக் (function) கொண்டுள்ளது என்று மிர்டல் (Myrdal) கூறுகிருர். ஆனால், இக் கொள்கையில் உத்தம அளவு இல்லாமல் இருப்பதற்கு ஒரு காரணமும் தெரியவில்லை. ஏனென்ருல், மிகப் பெரும்பாலான இடங்களில் தரம் ஒரே மாதிரியாக இருக்கிறது. 'இந்தக் கொள்கை, இவ்வுலகத்தோடு அதிகத் தொடர்பில்லாத ஒரு மனோபாவக் கற்பனையாகும். அது கண்கூடான அரசியல் உண்மையைப்பற்றித் தீர்மானிப்பதற்கு ஒரு வழியையும் காட்டவில்லை.'[2]

மிர்டலின் கருத்துக்கு அரணாக உத்தம ஜனத்தொகை பற்றிய மதிப்பீடு அதிகமாக எங்கும் எடுக்கப்படவில்லை என்ற செய்தி உள்ளது. மதிப்பீடு எடுக்கப்பட்ட இடங்களில், அவற்றைப்பற்றி நிபுணர்களின் முடிவுகளுக்கிடையே அதிக வேற்றுமை உள்ளது. உதாரணமாக, ஃபிரான்சின் உத்தம ஜனத்தொகை சாவி (Sauvy) என்பவர் 5 கோடிக்கும் 7½ கோடிக்கும் இடையில் இருப்பதாகக் கருதினர்; அது இப்பொழுதுள்ள ஜனத்தொகையைவிட மிக அதிகம். ஜூக்ஸ் (Jewkes) என்பவர், பிரிட்டனுக்கு இப்பொழுதுள்ள

[1] 1938-ல், டொமினியன்களின் உதவிச் செயலாளராக இருந்த டியூக் ஆஃப் வான்ஷயர் இவ்வாறு கூறினர்: 'நாம் தளவாட உற்பத்தியில் முனைந்திருக்கிறேம். ஆனால், யுத்தக் கப்பல்களும், டாங்கிகளும் (tanks), துப்பாக்கிகளும், கைத்துப்பாக்கிகளும் நம்மிடம் போதிய மக்கள் இல்லாவிட்டால் பயனற்றவையாகும். நம் சாம்ராச்சியத்திலுள்ள ஆங்கிலம் பேசும் மக்களிடையே ஜனத்தொகைக் குறைவு தொடர்ந்து இருக்குமாயின் தளவாடங்களால் பயனில்லை; நம் பெரிய பரம்பரைப் பண்பை நாம் பரப்ப முடியாது.' 'வாழ்க்கைக் கட்டுப்பாடு' என்பதில் H. சதர்லண்டு என்பவரால் (1944) இது மேற்கோளாகக் காட்டப்பட்டது. பக்கம் 32.

[2] 'ஜனத்தொகை-ஜனநாயகத்திற்கு ஒரு பிரச்சினை', 1940. பக்கம் 143-4.

ஜனத்தொகையைவிட மிகக் குறைவாக 2 கோடி என்று அதை மதிப்பிட்டார். இது தொழில் முறைப் பகுப்பில் (division of labour) அதிகபட்ச சிக்கனத்தைச் செய்யவும், குறைவான சாதனங்களுக்கேற்ப மக்கள் தொகை நெருக்கடியைத் தவிர்க்கவும் உதவும். வெல்ப்டன் (Whelpton), அமெரிக்காவுக்கு இப்போதுள்ளதைவிடக் குறைவாக 10 கோடி முதல் 13 கோடி வரையில் உத்தம ஜனத்தொகை இருக்கலாம் என்றார்.[1] தாக்லியாகார்னே (Tagliacarne) என்னும் இத்தாலிய நிபுணர், இந்தியாவும் மற்ற நாடுகளும் அதிக ஜனத்தொகை உடையவையா, குறைந்த ஜனத்தொகை உடையவையா என்று புலவழியாகவோ (empirical) கொள்கை வழியாகவோ கூறுவது முடியாது என்கிறார்.

அடுத்துவரும் ஆண்டுகளில், எந்தத் தனிப்பட்ட நாட்டை எடுத்துக்கொண்டாலும், ஜனத்தொகைப் பிரச்சினை பங்கீடு பற்றியதாக இருக்குமேயன்றி உற்பத்தி பற்றியதாக இருக்காது. எனினும். மேனாடுகளில், இரண்டாம் உலகப் போரின் காரணமாக உண்டான அதிக அழிவை ஈடுசெய்யும் பொருட்டுப் பெருமுயற்சி செய்வதே உடனடிப் பிரச்சினையாகும். இந்த அதிக உற்பத்திக்கு உழைப்பாளர் படை அதிகமாக வேண்டியிருக்கும். இதன் விளைவாக, யுத்தப் பிற்காலத்தில் வழக்கமாக நிகழ்வதுபோல, அதிகப் பிறப்பு விகிதம் உண்டாகும் போக்கு ஏற்படும். அடுத்து வரும் எதிர்காலத்தில் ஜனத்தொகையின் போக்கைப்பற்றி ஆராய்பவர்கள் வேறொருவிதமாக நீண்ட விளைவுள்ள பிரச்சினையைக் கவனிக்க வேண்டியிருக்கும். அது யாதெனின், ஒவ்வொரு நாடும் தன் இயற்கைச் சாதனங்களாகிய செல்வத்தையொட்டிய வாழ்க்கைத் தரத்தையே கடைப்பிடிக்க முடியுமா, அல்லது அறக் கருத்தின் அடிப்படையில் உலக சாதனங்களையெல்லாம் பங்கிட்டுக் கொண்டும், உலகின் எல்லாப் பகுதிகளுக்குச் சென்றும் வாழ்க்கைத் தரத்தை ஒரே சமமாகச் செய்ய முடியுமா என்பதே. அட்லான்டிக் சாசனம் கருதுவதுபோலத் தடையிலா மார்க்கெட்டில் உலகத்து சாதனங்களையெல்லாம் சேர்த்து, எல்லா நாடுகளும் அவற்றைப் பெற்று வாழ்வது ஜனத்தொகைபற்றிய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்காது. உலகத்தில் அதிக ஜனத்தொகையில்லாத நாடுகளை வெள்ளையர்கள் தங்களுக்கே உரிய இடங்களாகக் கருதாமலிருந்தால்தான் இது முடியும். எனவே, ஜனத்தொகைப் பிரச்சினையிலிருந்து சமூகம் முழுவதற்கும் உரிய கொள்கை,

[1] 'ஜனத்தொகையை நிருணயிக்கும் போக்குகளும் அதன் விளைவுகளும்' ஐக்கிய நாடுகள், நியூயார்க்கு 1953, பக்கம் 234. மேற்கோள் காட்டப்பட்டுள்ள இந்த ஐ. நா. வெளியீட்டில், 'ஜனத்தொகைக் கொள்கை வரலாறு' (அத்தியாயம் 3. பக்கம் 21-44) என்பதுபற்றி மிக அழகாகவும் விரிவாகவும் பற்றற்ற முறையில் கூறப்படுகிறது.

அதைச் சார்ந்த, முக்கியமாக அறம் தழுவிய கொள்கைகள் ஆகியவை கிளம்புகின்றன.

அண்மைக் காலத்தில் பொருளாதாரக் கொள்கை இரு வேறு கருத்தினருக்கிடையில் சிக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுள் ஒரு சாரார், உணவுச் சாதனங்கள் கிடைப்பதைப் பொறுத்து உலக ஜனத்தொகை வரையறுக்கப்படும் என்ற மால்தூசியக் (Malthusian) கொள்கைக்கு உயிர் கொடுப்பவர்கள்; மற்றொரு சாரார், ஜனத்தொகை வளர்ச்சிக் காலங்களில் மிகுந்த விஞ்ஞான, கலாசார, கலைச் சாதனைகளும், பொருளாதார முன்னேற்றமும் உண்டாகின்றன என்று கருதுகின்றனர். வில்லியம் வாக்ட் (William Vogt) சிந்தனையைத் தூண்டும் தமது நூலில், 'வாங்கும் சக்தியானது அடிப்படையான இயற்கைச் சாதனங்களைச் —குறிப்பாக நிலத்தை—சார்ந்துவிடுகிறது. உலகத்தில் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அடைய முடியாதபடி மிக அதிகமான ஜனத்தொகை இருக்கிறது; ஆனால், குறைந்த சாதனங்களே உள்ளன. ஒவ்வொரு நாளும் நிகரமாக அதிகரித்து வரும் 50,000 மக்களுக்கு, உலக முழுவதிலும் உழப்படாத நிலம் போதிய அளவு இல்லை. தம் இயற்கையான சூழ்நிலையைவிட்டு இடம் பெயர்ந்து வந்திருக்கும் மக்களைக் கவனிக்க வேண்டுமாயின், இப்பொழுது வாழும் கோடிக் கணக்கான மக்களுக்கு அதிக இடத்தைத் தேடவேண்டி வரும்' என்று கூறுகிறார்.[1] இதற்கு மாறாகக் காலின் கிளார்க் (Colin Clark) போன்றவர்கள், 'எவ்வளவு சக்தி படைத்த அரசியல் தலைவனுக்கும், எவ்வளவு கல்வி கற்ற பொருளாதார நிபுணனுக்கும் குழந்தைகள் பிறப்பதைத் தடுப்பதற்குச் சிறிதும் உரிமையில்லை. ஆனால், இதற்கு மாறாக பெற்றோர்கள், முதலமைச்சர்களையும் பொருளாதார வல்லுநர்களையும் தம் குழந்தைகளுக்கு உண்பதற்குப் போதிய அளவு உணவு கிடைக்குமாறு உலகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்பதற்கு உரிமையுடையவர்கள்'[2] என்கிறார். இவ்வாறே பிரேசில் நாட்டுப் பேராசிரியர் ஜோசு டி காஸ்ட்ரோ (Josue de Castro) என்பவர், 'அதிகப்படியான மக்களை ஒழிப்பதும், கருத்தடை செய்வதும் ஆகிய புதிய மால்தூசியப் பரிகாரங்களால் உலகம் உய்ய வழி இல்லை. உலகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் உற்பத்தி செய்பவர்களாக மாற்றும் முயற்சிதான் இதற்குப் பரிகாரம். உலகில் அதிக மக்கள் இருப்பதால் பட்டினியும் துன்பமும் உண்டாவ

[1] 'உயிர் வாழ்வதற்கு வழி' 1949. பக்கம் 78 தொடர்ந்து ஒப்பிடுக: 'நமது சூறையிடப்பட்ட உலகம்'—ஆஸ்பர்ன். இவர், உழக்கூடிய நிலம் முற்றிலும் குறைந்து, ஜனத்தொகை மிகவும் உயர்ந்துவிடும் என்று எச்சரிக்கிறார்.

[2] 'மக்கள் தொகைபற்றிய புதிய விளக்கம்'—The Listener, March, 26, 1953; பக்கம். 504.

தில்லை; உற்பத்தி செய்பவர்கள் குறைவாகவும், உண்பவர்கள் அதிகமாகவும் இருப்பதால் இவை உண்டாகின்றன '.[1]

உணவு உற்பத்திக்கும் ஜனத்தொகைக்கும் உள்ள தொடர்பாகிய இப் பிரச்சினைபற்றி நிபுணர்கள் செய்யும் சண்டையில் புதிய மால்தூசியர்களும், மால்தூசிய எதிர்ப்பாளர்களும் ஒருவரை ஒருவர் ஏகாதிபத்தியப் பாதுகாப்பாளர்கள் என்று குறைகூறுவது குறிப்பிடத்தக்கது. மால்தூசின் கொள்கைகளை ஆதரிப்பவர்கள் ஏகாதிபத்திய வாதிகளின் நண்பர்கள் என்று காலின் கிளார்க் கூறுகிருர். இவர்கள் வெளி நாடுகளில் உள்ள உபரி உணவைக் குறைந்த விலைக்கு வாங்கப் பிரிட்டனுக்கு உரிமையுண்டு என்று கூறுபவர்கள்.[2] இதற்கு மாருக வாரன் எஸ். தாம்சன், முப்பது, நாற்பது வருடங்களில் 80 கோடி ஜனத்தொகை அடையக்கூடிய இந்தியாவின் ஜனத்தொகைப் பெருக்கம் உலக அமைதிக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்கிருர். ஏனென்ருல், அப்போது உலக சமாதானங்களில் தனக்குரிய பங்கை வற்புறுத்திப் பெற்றுக் கொள்ளும் நிலையை இந்தியா அடைந்துவிடும்.[3] பொருளாதாரம் கற்கும் மாணவன், மால்தூசியக் கொள்கையை வெறும் பொருளற்ற கூக்குரல் என்று கூறும் ஷும்ப்டருக்கும் (Schumpeter), அதைப் புதுப்பிக்க முயலும் கீன்ஸ் பிரபு (Lord Keynes) விற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிருன்.[4] ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயக் குழுவானது, வட அமெரிக்காவில் ஆங்காங்கு உபரி உணவு இருப்பினும், 1940-ல் இருந்ததைவிட, உலகில் இன்று தலா உணவுப் பங்கீடு குறைவாகத்தான் இருக்கிறது என்பதை ஒளிவு மறைவு இன்றி ஒத்துக்கொள்கிறது. இந்தியாவைப் பொறுத்த வரையில், மால்தூசியக் கொள்கைக்கு அது ஒரு தொன்மையான எடுத்துக்காட்டு என்று கருதவேண்டும். ஒவ்வொரு

[1] 'பசிக்குக் காரணமான பூகோள நிலை '—பக்கம் 260 (1952). 'இந்தியாவின் தேசீய விளையாட்டுப் பெண்ணுசைதான்' என்று கூறுபவர்களைக் கண்டு, டி காஸ்ட்ரோ ஆத்திரம் கொள்கிருர்.

[2] மேலே கூறிய நூல்.

[3] 'Scientific American '—February, 1950, பக்கம் 14-15.

[4] சர் ஜான் ரஸ்ஸல் போன்று எதிர் காலத்தில் நம்பிக்கையுடையவர்கூட, விவசாய விஞ்ஞானத்திற்கு உணவு உற்பத்தி வரையறை ஓர் அறைகூவலாக இருக்கிறது என்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வரையறைகள் எவையெனின், உலகத்தின் மேற்பரப்பில் 7% முதல் 10% வரையில்தான் உபயோகமானது. பிராணிகள் தம் உணவில் 10% முதல் 25% வரையில்தான் மக்களுக்கு உதவும் உணவாக மாற்றுகின்றன. தாவரங்கள் சூரியனிடமிருந்து பெறும் சக்தியில் 5% தான் கிரகித்து உணவாக்குகின்றன ('Advancement of Science' October, 1949). இப் பத்திரிகையில் 'உலக ஜனத்தொகையும் உலக உணவு அளிப்பும்' என்பது பற்றிய தலைமைப் பேருரை).

நாடும் தன் சுவாதீனக் கொள்கையை வற்புறுத்தினுல், பிரச்சினை பெரிதாகி உலக முழுவதிலும் மால்தூசியக் கொள்கை செல்லுபடியாகத் தக்கதாக இருக்குமன்ரோ ?

வளர்ச்சியும் அடர்த்தியும்

கடந்த காலத்தில் நெடுநாட்களாக இந்தியாவின் ஜனத்தொகை மாருமலிருந்திருக்க வேண்டும்.[1] இந்த மாருத நிலைக்குக் காரணம், பிளேக், போர், பஞ்சம் முதலியவை முறையாக வேலை செய்து அதிகப்படியான ஜனத்தொகையைக் குறைத்துவிட்டன என்பதாகாது. 19ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் முன்பில்லாத அளவுக்குப் பாதுகாப்புச் செய்யப்பட்டதும், அதன் பிறகு பொருளாதாரச் சமநிலை இழப்பு உண்டானதும் ஜனத்தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாயிருக்கலாம். இதுவரையில் விவசாயம் செய்யப்படாத நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டால், இப்போதுள்ள வாழ்க்கைத்தரத்தின்படியே இன்னும் அதிக ஜனத்தொகை வாழலாம். 1840–க்கு முன் இந்தியாவில் அளவுக்கு மிஞ்சிய ஜனத்தொகை இல்லை என்று சர் வில்லியர் ஹன்டர் கூறுகிருர். இக் கருத்துக்கு ஆதாரம், அக்காலத்தில் விவசாயத்தில் போட்டி இருந்ததே ஒழிய உழவு நிலத்திற்குப் போட்டியில்லை என்பதுதான். 1840–க்குப் பிறகு நிலத்தின் மதிப்பு படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறது. ஜனத்தொகை நெருக்கம்தான் நிலத்தின் மதிப்பை உயர்த்திவிட்டது என்றும், பல இடங்களில் சிக்கன நிலைக்கு மேலும் உயர்த்திவிட்டது என்றும் கூறப்படுகிறது. ஆதலால், நிலத்திற்குரியவர்கள் நிலத்தின் விளைச்சலிலிருந்து அல்லாமல் உழவர்கள் செய்யும் மற்றத் தொழில்களின்

[1] தனக்குக் கிடைத்த எல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்ந்த பின்னர், சென்ற சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்குச் சிந்தனையைத் தூண்டக் கூடிய கட்டுரை ஒன்றை கிங்ஸ்லீ டேவிஸ் (Kingsley Davis) என்பவர், 'இந்தியா பாகிஸ்தான் ஜனத்தொகைகள்' (Princeton, 1951) என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிருர். அதிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஜனத்தொகை மதிப்பீடு—கி. மு. 300 முதல் கி. பி. 1871 வரை.

காலம்	இலட்சங்கள்	காலம்	இலட்சங்கள்
கி. மு. 300	1000—1400	1845	1300
கி. பி. 1600	1000	1855	1750
பி. பி. 1800	1200	1867	1940
கி. பி. 1834	1300	1871	2550

1855-க்குரிய மதிப்பீடு, 'பிரிட்டனின் கடல் கடந்த உடைமை நாடுகளுக்கு 1854—1868-க்குரிய புள்ளி இயல் சுருக்கம்' என்பதிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்கான 1240 இலட்சம் என்னும் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு இந்தியா முழுவதற்கும் உரிய ஜனத்தொகையில் 29% பிரிட்டிஷ் இந்தியா அல்லாத பகுதி என்ற கருத்தின்பேரில் இத்தொகை கணிக்கப்பட்டுள்ளது.

வருமானத்திலிருந்து இலாபத்தைப் பெறுகிறுர்கள். கடந்த பல ஆண்டுகளில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தோன்றியுள்ள இடங்களில்தான் பயிர் விளையும் நிலப்பரப்பு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்ருல் அதிகரித்துக்கொண்டு வரும் ஜனத்தொகைக்கேற்ப, இப்பொழுதுள்ள நிலையிலும் முறைகளாலும் விவசாயத்தை விருத்தி செய்வதற்கு அதிக வாய்ப்பில்லை. நிலங்கள் துண்டுபடுதல், உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படுதல், கடன் அதிகரித்தல், நிலமின்மை, நிலமில்லாதவர் உழைப்பு ஆகிய விவசாயத் தொடர்பான பெரும் பிரச்சினைகள் ஜன நெருக்கத்தினுல் எப்படி உண்டாகின்றன என்பதைப்பற்றிப் பிறகு ஓரிடத்தில் குறிப்பிடுவோம்.

1650 முதல் 1953 வரை, கண்டங்கள் வாரியாக உலக ஜனத்தொகை எப்படி அதிகரித்திருக்கிறது என்பதைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :[1]

ஜனத்தொகை 10 இலட்சத்தில்

	1650	1750	1800	1850	1900	1953
ஐரோப்பா ...	100	140	187	266	401	577
வட அமெரிக்கா ...	1	1·3	5·7	26	81	174
மத்திய, தெற்கு அமெரிக்கா ...	12	11·1	18·9	33	63	174
ஓஷியானியா ...	2	2	2	2	6	14
ஆப்பிரிக்கா ...	100	95	90	95	120	212
ஆசியா ...	330	479	602	749	937	1,341
மொத்தம் ...	545	728	906	1,171	1,608	2,492

[1] இவ்வட்டவணை கார் சாண்டர் என்பவரின் 'உலக ஜனத்தொகை' (1936, பக்கம் 42) யிலிருந்து தொகுக்கப்பட்டது. 'மக்கள் பட்டினி கிடக்க வேண்டுமா?' என்ற ஜாகப் ஒசர் (லண்டன் 1956, பக்கம் 39) எழுதிய நூலிலிருந்து 1953-க்குரிய எண்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் The Demographic Year Book 1953-54, 1954-55, ஒப்பிட்டுப் பார்ப்பதற்குப் பயன்படாது. ஏனெனின், ரஷ்யா, ஐரோப்பிய, ஆசியாப் பகுதிகளில் உள்ளதாயினும், அதை அக் கண்டங்களில் சேர்க்காமல், அது தனியாகக் காட்டப்பட்டுள்ளது.

		சதவீதப் பங்கீடு					
ஐரோப்பா	...	18·3	19·2	20·7	22·7	24·9	23·1
வட அமெரிக்கா	...	0·2	0·1	0·7	2·3	5·1	7·0
மத்திய, தெற்கு அமெரிக்கா	...	2·2	1·5	2·1	2·8	3·9	7·0
ஓஷியானியா	...	0·4	0·3	0·2	0·2	0·4	0·6
ஆப்பிரிக்கா	...	18·3	13·1	9·9	8·1	7·4	8·5
ஆசியா	...	60·6	65·8	66·4	63·9	58·3	53·8
மொத்தம்	...	100·0	100·0	100·0	100·0	100·0	100·0

கடந்த 150 ஆண்டுகளில் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவைகளின் ஜனத்தொகை மிக அதிகமாக வளர்ந்துவிட்டது என்பதையும், அதே சமயத்தில் மொத்த ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது ஆசியாவின் ஜனத்தொகை வளரும் விகிதம் குறைவாக இருக்கிறது என்பதையும் இந்த அட்டவணையிலிருந்து அறியலாம். 1750–ல் உலகத்தின் வெள்ளையர் ஜனத்தொகை 1,540 இலட்சம்; வெள்ளையரல்லாதவர் ஜனத்தொகை 5,740 இலட்சம். 1953-ல் வெள்ளையர்கள் 9,390 இலட்சமாகவும், மற்றவர்கள் 15,530 இலட்சமாகவும் பெருகினார்கள். ஆக மொத்தத்தில் 1750-ல் இருந்த $\frac{1}{5}$ பங்கிலிருந்து 1953-ல் வெள்ளையர் ஜனத்தொகை $\frac{2}{5}$ பங்காக உயர்ந்தது. இவ்வளவு அதிக அளவில் உயர்ந்தும், வெள்ளையர் வாழ்க்கைத்தரமும் கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால், மற்றவர்கள் வாழ்க்கைத்தரம் ஒரே நிலையாக இருக்கிறது. எனினும், தாழ்ந்துவிடவில்லை என்பது உண்மை. ஆசியாவில் ஜனத்தொகை உயர்வு மொத்தத்தில் அதிகமாக உள்ளது என்றால் அதற்குக் காரணம், நாம் இப்பொழுது ஒப்பிடுவதற்கு எடுத்துக்கொண்ட முதற்காலப் பகுதியிலேயே ஆசியாவில் அதிக ஜனத்தொகை இருந்தது.

பிரிக்கப்படாத இந்தியாவிலும், பிரிக்கப்பட்ட இந்திய யூனியனிலும் ஜனத்தொகை வளர்ச்சியை பக்கம் 147-ல் உள்ள அட்டவணை காட்டுகிறது.[1]

[1] பிரிவினையால் பிரிக்கப்படாத இந்தியாவின் ஜனத்தொகையில் 81%ம், பரப்பில் 77%ம் இந்தியாவிற்குக் கிடைத்தது. 1901-க்கும் 1947-க்கும் இடையில் சீனாவின் ஜனத்தொகையை ஒப்பிடும்போது, 1901-11-ல் 3,680 இலட்சமாக இருந்த சீனாவின் ஜனத்தொகை 1947-ல் 4,610 இலட்சமாக உயர்ந்தது. அதாவது, சீனா 46 வருடங்களில் ஜனத்தொகையை 930 இலட்சம் உயர்த்தியபோது, இந்தியா 20 வருடங்களில் 810 இலட்சம் உயர்த்தியது (பார்க்க: Population Index, Jan. 1948, Quoted by Satya Swarup in an article, 'Growth of Population in the World' in Epidemiological and Vital Statistics Report, World Health Organisation, April, 1953, பக்கம் 165).

ஆண்டு	பிரிக்கப்படாத இந்தியா		இந்திய யூனியன்	
	ஜனத் தொகை 10 இலட்சத்தில்	வருடத்திற்கு உயர்வு விகிதம்	ஜனத் தொகை 10 இலட்சத்தில்	வருடத்திற்கு உயர்வு விகிதம்
1891	279·4	1·16	235·9	...
1901	283·8	0·16	235·5	— 0·02
1911	303·0	0·65	249·0	+ 0·57
1921	305·6	0·09	248·1	— 0·04
1931	338·1	1·02	275·5	+ 1·1
1941	338·9	1·41	312·8	+ 1·35
1951	...	...	356·9	+ 1·41

1900-க்கும் 1947-க்கும் இடையில் உலகத்தின் மொத்த ஜனத் தொகை 16,080 இலட்சத்திலிருந்து 23,300 இலட்சமாயிற்று; மேற்கு ஐரோப்பாவில் உயர்வு விகிதம் குறைவு. ஜப்பானில் 1900ல் 430 இலட்சமாக இருந்த ஜனத்தொகை 1949-ல் 820 இலட்சமாயிற்று. அதாவது, 87% உயர்ந்தது. இந்தியாவைப் பொறுத்த மட்டில் ஆண்டுக்கு 1·26 சதவீத உயர்வு அதிகம் என்று கொள்ள முடியாது; ஆனால், இன்னும் எத்தனை பேருக்கு அதிகமாக உண வளிக்க வேண்டுமென்று எண்ணிப் பார்க்கும்போது, நிலைமை எவ்வளவு கடினமானது என்பதை உணரலாம் சென்ற 20 ஆண்டுகளில் நம் ஜனத்தொகை 810 இலட்சம் அதிகமாயிருக்கிறது; அதாவது, 1951-ல் இங்கிலாந்தின் ஜனத்தொகையைவிட $1\frac{1}{2}$ பங்குக்கும் சற்று அதிகம்; அல்லது இந்தியாவின் பரப்பைப் போல் $2\frac{1}{2}$ மடங்குள்ள பெரிய நாடாகிய பிரேசிலின் ஜனத்தொகையைவிட $1\frac{1}{2}$ மடங்கு அதிகம். சென்ற பத்தாண்டுகளில் நாம் மேலும் 420 இலட்சம் மக்களைப் பெருக்கியுள்ளோம். இது ஸ்பெயின், போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து ஆகியவற்றின் மொத்த ஜனத்தொகைக்குச் சமம். 1941-50ல் சராசரி பிறப்பு விகிதத்தை ஒட்டி இடையில் எடுக்கப்பட்ட ஜனத்தொகை மதிப்பீட்டின்படி 1952-ல் 3,675 இலட்சமாக இருந்த ஜனத்தொகை 1957-ல் 3,924 இலட்சமாகப் பெருகியது. இது சிக்கிம், ஜம்மு-காஷ்மீரின் ஜனத்தொகையையும் அடக்கியது.[1] இப்போதுள்ள நம் பொருளாதார நிலையில் இந்தப் பெரிய ஜனத் தொகை வளர்ச்சி அச்சம் தருவதாயுள்ளது; மகிழ்ச்சி தரத்தக்கதாகாது.

[1] 'India—1958' பக்கம் 64.

1870-லிருந்து இந்தியாவின் ஜனத்தொகை வளர்ச்சி திடீர் திடீர் என்று மாறியிருப்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து காணலாம் :

	சதவீத உயர்வு	
	பிரிக்கப்படாத இந்தியா	இந்திய யூனியன்
1891	9·4	...
1901	1·0	— 0·04
1911	6·1	+ 5·7
1921	0·9	— 0·03
1931	10·6	+ 11·0
1941	15·0	+ 14·3
1951	...	+ 12·7

1871-க்கும் 1881-க்கும் இடையில் ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிற்று என்பதையும், 1891-க்கும் 1901-க்கும் இடையில் வந்த பஞ்சத்தை அடுத்துப் பிளேக்கும் இன்புளுவென்சாவும் தொடர்ந்து சில ஆண்டுகள் இருந்தன என்பதையும் கவனிக்கும்போது இந்தத் திடீர் மாறுதல்களுக்குக் காரணங்கள் விளங்கும்.[1]

'பெரும் பிளவு' என்று கூறப்படும் 1921-க்குப் பின்னர் மேற் கூறிய ஜனத்தொகை வளர்ச்சிக் கணக்கில் பிளேக், இன்புளு வென்சா போன்ற பெருவாரி நோய்கள் உண்டாகாததால், அதிக விரைவான வளர்ச்சி காணப்படுகிறது. வளர்ச்சி விகிதம்தான் அச்சத்தைத் தருகிறது என்று கூற முடியாது. ஏனெனின், மற்ற நாடுகளைவிட் அது இங்கு அவ்வளவு அதிகமாக இல்லை. நிலையான சமூகப் பொருளாதார அமைப்பில், மக்கள் எண்ணிக்கை உயர்வது தான் அஞ்சத்தக்கது.

எதிர்காலத்திற்கு நம்பிக்கையளிக்காத மால்தூசியக் கொள்கை யானது, இந்தியாவிலுள்ள ஜனத்தொகை வளர்ச்சித் தடைகளைக்

[1] Schultz (Chicago, 1945) பதிப்பித்த 'உலகத்திற்கு உணவு' என்ற சஞ்சிகைக்கு F. W. Notestein எழுதிய கட்டுரையில் இரண்டுவிதமான ஜனத் தொகைக் குறைவை வேறுபடுத்திக் காட்டுகிறார். இனப்பெருக்க ஆற்றல் மீளமுடியாத அளவுக்குக் குறைந்துவிட்ட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து போன்ற நாடுகளில் உள்ள ஆரம்ப ஜனத்தொகைக் குறைவு என்பது ஒன்று. மரண விகிதத்தைக் குறைக்கக் கூடிய நுட்பத் தொழில் முறைகளின் வளர்ச்சியினால், இனப்பெருக்க ஆற்றல் அதிகமாகக் கூடியது மற்றொன்று. இந்த இரண்டாவது வகையில், சோவியத் யூனியனும் ஜப்பானும் தவிர மற்ற எல்லா ஆசிய நாடுகளும் அடங்கும்.

கருதும்போது, இந் நாட்டிற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது; வாழ்க்கைச் சாதனங்களைப் பற்றாக்குறையாக்கும் அளவுக்கு ஜனத் தொகை நெருக்கடி உள்ளது என்பதற்குத் தெளிவான சான்றுகள் இருக்கின்றன. பயிர் செய்யப்படும் நிலப்பரப்பிற்கு ஏற்ப ஜனத் தொகை நெருக்கடியைப்பற்றி மதிப்பிட முயற்சிகள் செய்யப் பட்டுள்ளன. தனி ஒருவனுக்கு ஆரோக்கியமும் திறமையும் அளிப் பதற்கு வேண்டிய குறைந்த அளவு உழவு நிலம் 2·5 ஏக்கர் என்று சொல்லப்படுகிறது.[1] இந்தியாவில் பல பகுதிகளில் ஆண்டுக்கு இரண்டு போகம் விளைகிறது என்பதையும், குளிரான மேனாடுகளை விடக் கிழக்கு நாடுகளில் உணவு குறைவாகத் தேவைப்படும் என்பதையும் மனத்தில் கொண்டு, ஐந்து பேர் உள்ள ஒரு குடும்பத் திற்குக் குறைந்தபட்சம் தேவையான விவசாய நிலம் 5 ஏக்கர் என்று கொள்ளலாம். தலைக்கு ஓர் ஏக்கர் பயிர் நிலம் வேண்டும் என்று பார்த்தால், நம் நாட்டில் அதிக ஜனத்தொகை உள்ளது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்:[2]

மாகாணம்	ஜனத் தொகை 10 இலட்சத்தில்	பயிர் நிலம் 10 இலட்சம் ஏக்கரில்	தலா பயிர் நிலம் ஏக்கரில்	அதிக ஜனத் தொகையின் குணகம் (co-efficient)
வங்காளம்	50·1	23	0·47	2·1
பீகார், ஒரிசா	37·6	24	0·63	1·58
ஐக்கிய மாகாணம்	48·4	36	0·74	1·35
சென்னை	46·7	34	0·74	1·35
பஞ்சாப்	23·5	26	1·12	0·89
மத்திய மாகாணம்	15·5	24·5	1.58	0·63
பம்பாய்	21·9	33	1·61	0·62

கடந்த பதினைந்தாண்டுகளில் இந்த மாகாணங்களின் ஜனத் தொகை அதிக வேகமாக உயர்ந்திருக்கிறது என்பதையும், பிரிவினை யினால் நிலைமை அதிகச் சீர்கெட்டு, நிலத்திற்குத் தக்கவாறு அன்றி, அதிக விகித ஜனத்தொகை நமக்குக் கிடைத்துள்ளது என்பதையும் எண்ணும்போது, நிலைமை அதிகக் கவலைக்கிடமாக உள்ளது.

[1] உணவும் ஜனத்தொகையும்: உலக ஜனத்தொகை மகாநாட்டு நடவடிக்கை. பக்கம் 89.

[2] '40 கோடிக்கு உணவுத் திட்டம்'—R. முகர்ஜி, 1938. பக்கம் 2.

எனினும், ஜனத்தொகைக்குத் தக்கவாறு உணவு கிடைத்தால் மட்டும் போதுமான அளவு அதிக ஜனத்தொகைக் குணகம் கிடைக்காது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சமூகத்தின் மொத்த வருமானத்தை நாம் கணக்கிடவேண்டும். அதிகத் தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில், ஜனத்தொகைக்கேற்ற மொத்த உற்பத்திக் குறியீட்டெண்கள் (indices) ஜனத்தொகை நிலைமைபற்றி நமக்குப் போதிய செய்தியைத் தரும். இந்தியாவில் உற்பத்திக் கணிப்பு இல்லாத நிலையில் இவ்விதமாக ஆராய்ச்சி செய்வது பொருந்தாது. எனினும், பெரும்பான்மையோர் விவசாயிகளாக இருந்து, விவசாய விளைச்சலிலிருந்து 80 சதவீதம் வருமானம் கிடைக்கும் நம் நாட்டில், பயிர் நிலப்பரப்பிற்கேற்ற அதிக ஜனத்தொகையின் குணகத்தைக் கணிப்பது நம் ஜனத்தொகையின் போக்கைக் காட்டக்கூடிய ஒரு பயனுள்ள அறிகுறியாகும்.

ஜனத்தொகை வளர்ச்சிக்கு எதிரான தடைகள்

இந்தியாவில் பட்டினி, நோய் ஆகியவை ஜனத்தொகை வளர்ச்சிக்கு எதிரான தடைகளாக இருக்கின்றன என்பது அரசியல் முறையில் மிகையாகக் கூறுவதன்று; கணிப்பினுல் நிரூபிக்கக் கூடியதே.

காலம்	பஞ்சம் எத்தனை தடவை உண்டாயிற்றென்பது	மரண விகித மதிப்பீடு
1775—1800	3	...
1800—1825	5	10,00,000
1826—1850	2	4,00,000
1851—1875	6	50,00,000
1876—1900	18	20,000,000

பாதிக்கப்பட்ட பரப்பும் ஜனத்தொகையும்

காலம்	பரப்பு, சதுர மைலில்	ஜனத்தொகை பத்து இலட்சத்தில்	நிவாரண வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை
1888—1889	3,500	1	64,000
1891—1892	50,000	7	2,40,000
896—1897	2,25,000	62	33,00,000
1899—1900	1,89,000	28	46,00,000

இந்த எண்கள், ஆற்றல் குறைந்த மக்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்திருப்பதைக் காட்டும்; இதனுல் அவர்கள் பட்டினியால் மடியக்கூடியவர்கள் என்பதையும் காட்டும். எனினும், இதையடுத்துவந்த காலத்தில் நிலைமை மிகவும் சீர்கேடடைந்து விட்டது என்பதைக் காண்கிருேம்.

20-ஆம் நூற்ருண்டில் பஞ்சங்கள்[1] (இந்தியா)

காலம்	பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிர்கை	பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை
1901	5,00,00,000	40,00,000
1906-07	5,00,00,000	50,000
1918-19	15,00,00,000	1,00,00,000
1942-44	4,00,00,000	10,00,000
மற்ற ஆண்டுகள்	...	1,50,00,000

1901-44ல், ஆசியா முழுவதிலும் 7,60,00,000 பேர் பஞ்சத்திஞல் பாதிக்கப்பட்டார்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இதில் இந்தியாவின் பங்கு 3,00,00,000. இதே காலத்தில் ஐரோப்பாவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,20,00,000. மேலும் 1775-லிருந்து 1900 வரையில் உள்ள 125 வருடங்களில் இந்தியாவில் பட்டினியால் இறந்தவர்கள் 4,00,00,000 பேர். ஆனுல், 1901 முதல் 1944 வரையில் உள்ள 44 வருடங்களில் மரணமானவர்கள் 3,00,00,000. தொழிற் புரட்சியினுல் நூருண்டுகளில் உண்டான முன்னேற்ற நிலைமையில், மால்தூசிய முற்கோள்கள் (postulates) உறுதியடைந்துவிட்டன அல்லவா என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்தியாவில் எந்தவிடத்திலாவது பஞ்ச நிலைமை ஏற்படாத வருடமே இல்லையென்று கூறலாம். அடிக்கடி உண்டாகும்

[1] Helen R. Hinman and William R. Battin (1945, page 64) எழுதிய 'ஜனத்தொகை நெருக்கடி', 'போரும் வறுமையும்' என்பதிலுள்ள 6-வது அட்டவணையிலிருந்து எடுக்கப்பட்டது. இதனுடன் டி காஸ்ட்ரோ எழுதிய Geography of Hunger என்பதில் Andre Philip கூறியுள்ள மேற்கோளை ஒப்பு நோக்குக (பக்கம், 156). 'போதிய விளைச்சல் இல்லாததினுல்தான் எப்பொழுதும் பஞ்சம் உண்டாகிறது என்பதில்லை. ஆனுல், வரி வசூலிப்பவன், நிலக்கிழார், அநியாய வட்டிக்குக் கடன் கொடுப்பவன் ஆகியவர்கள் தங்களுக்குரியதைப் பெற்றுக்கொண்ட பின்னர், உழவனுக்கு எஞ்சியிருக்கும் மிகக் குறைந்த விளைச்சலே இதற்குக் காரணம்'. இதேபோல, 'அப்போது உண்டாகும் விளைச்சலுக்கும், மிகக் குறைந்த நிலையில் உயிர் வாழ்வதற்கு வேண்டிய உணவுக்கும் உள்ள வித்தியாசம் எப்பொழுதும் மிகக் குறைவாக இருப்பதால், போதிய உணவின்றி இலட்சக் கணக்கான மக்கள் எப்பொழுதும் மடிகிருர்கள். பயிர்கள் சராசரி அளவுக்குச் சிறிது குறையும் போதும் பஞ்சம் உண்மையில் உண்டாகிறது என்பது இதனுல் தெரிகிறது'. W. S. தாம்சன், Annals of New York Academy of Science, Vol. 54. p. 735, 1952.

வறட்சிகளையடுத்துப் போதிய நல்ல உணவு கிடைக்காததால் நோய்கள் பரவுகின்றன. உணவு போதாததால் உண்டாகக்கூடிய நோய்களாலும், பஞ்சம் உள்ள இடங்களில் சீதபேதி, காய்ச்சல், வயிற்றுப்போக்குப் போன்ற நோய்களாலும் ஏற்படும் மரண விகிதத்தைப்பற்றிச் சரியாக இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. 1901ஆம் ஆண்டின் பஞ்சக் குழு அறிக்கை, பட்டினிச் சாவை யடுத்து, காலரா, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் ஆகியவற்றால் அதிக மரணவிகிதம் உண்டாகிறதென்று கூறுகிறது. இதற்குக் காரணம் இந்த நோய்களைத் தாங்கும் சக்தி மக்களிடம் இல்லாததுதான். இந்தியாவில் மக்களின் இயல்பான வறுமையும், வாங்கும் சக்தி யின்மையும் பயிர் விளைச்சலில் பற்றாக்குறையைப் பஞ்ச நிலைமை போன்றே மாற்றிவிடுகின்றன.[1]

ஜனத்தொகை வளர்ச்சிக்குத் தடையான பெருவாரி நோய்களைப்பற்றி இனிக் காண்போம். 1896—1920-ல் பியூபானிக் பிளேக் என்னும் நோயினால் உண்டான மரண விகிதத்தைப்பற்றிக் கீழ் வரும் அட்டவணையில் காணலாம் :

காலம்	இந்தியா முழுவதிலும் பதிவு செய்யப்பட்ட மரண விகிதம்	உண்மையான மதிப்பீடுகள்
1896—1901	5,00,000	7,50,000
1901—1911	65,00,000	87,55,000
1911—1921	30,22,000	39,29,000

1918, 1919-ல் பியூபானிக் பிளேக் போலவே இன்புளுவென்சாவும் நிறைய உயிர்களை மாய்த்தது. இந்த இரண்டு ஆண்டுகளில் இன்புளுவென்சாவினால் மொத்த மரணம் 84,19,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. திருவாளர்கள் ரஸ்ஸலும் ராஜாவும் 1918—1919-ல் இன்புளுவென்சாவினால் மரண விகிதம் 1,40,00,000

[1] சமீப காலத்தில், கறுப்புச் சந்தை, பதுக்கல் ஆகியவற்றால் நாட்டின் சில பகுதிகளில் நல்ல விளைச்சல் உண்டாகியும் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. பங்கீட்டு முறையும் கட்டாயக் கொள்முதலும் இருந்தும் பயனில்லாது போயிற்று. மழைப் பொழிவும் பூகோள அம்சங்களும் மாறுபட்டு இருப்பினும், பஞ்சத்திற்குக் காரணமான வேறு சில அமிசங்களை கிங்ஸ்லி டேவிஸ் கூறுகிறார் : ' இந்த உபகண்டத்தில் போதிய போக்குவரத்து வசதியில்லை. ஒவ்வோரிடமும் துண்டிக்கப்பட்டுள்ளது. அதனால், பாதிக்கப்பட்ட பகுதிக்கு மற்றப் பகுதிகளிலிருந்து உதவி வர முடியாது. அங்குப் படை மானியத் திட்டம் போன்ற வியாபார முதலாளித்துவம் இருக்கிறது. அதனால், விலை அமைப்பை மாற்றி, பஞ்ச நிலையைக் குறைக்காமல் அதிகப்படுத்துகின்றனர். இந்தியா அரசியல் குழப்பத்தாலும், சாதித் தடைகளாலும், கலாசார வேற்றுமையாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் பஞ்சத்தைத் தடுப்பதற்கான பெரிய திட்டங்களை இடுவது இயலாததாகியுள்ளது.' மேற்கூறிய நூல் பக்கம் 39.

என்று மதிப்பிட்டுள்ளனர்.[1] கிங்ஸ்லி டேவிஸ் இதை 2,00,00,000 என்று மதிப்பிட்டுள்ளார்.[2]

இந்த நாட்டில் பதிவு செய்யப்படும் முறைகளைக் கவனிக்கும் போது, வெவ்வேறு காரணங்களால் மரணமடைவோரின் தொகையில் காணப்படும் வேறுபாடுகள் வியப்பிற்குரியவையல்ல. கிராமங்களில் பல மரணங்கள் பதிவு செய்யப்படுவதில்லை. பொதுவாகக் கிராம அதிகாரி கல்வியற்றவனுகவும், போதிய ஊதியம் அளிக்கப்படாதவனுகவும், பல வேலைகளைச் செய்துகொண்டு, குற்றங்களைத் தாக்கல் செய்வதும், உத்தியோகஸ்தர்களின் பின்னுல் போவதுமாக இருப்பதால், விருப்பமில்லாத மக்களிடம் தகவல்களைப் பெற்று, மரணத்திற்குக் காரணத்தை அறிவிக்க வேண்டியவனுக இருக்கிருன். அதனுல், மொத்த மரணங்களில் 60% காய்ச்சலாலும், 25% மற்றக் காரணங்களாலும் உண்டாயின என்று கூறப்படுகிறது. அதாவது பதிவு செய்யப்பட்ட மரணங்களில் 85%-க்குக் காரணம் தெரியாது 1919-க்குப் பிறகு, 'பொதுச் சுகாதாரம்' மாகாணங்களுக்கு மாற்றப்பட்டபோது, விளக்கங்களில் வேறுபாடும், மரணப் பதிவில் வித்தியாசமும் ஏற்பட்டுக் குழப்பம் மேலும் அதிகமாயிற்று.[3]

பியூபானிக் பிளேக், இன்புளுவென்சா போன்ற பெருவாரி நோய்களால் மட்டும் மால்தூசியத் தடைகள் வேலை செய்வதில்லை. தடுக்கக்கூடிய சாதாரண மலேரியா நோய்கூட, பியூபானிக் பிளேக்கைவிட இந்தியாவில் அதிக மரணத்தை உண்டாக்கியுள்ளது. மருத்துவ ஆராய்ச்சியினுல் கடந்த 60 ஆண்டுகளாக ஐரோப்பாவில் இந்நோய் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இந்நோய்களால் இறந்தவர்களின் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.[4]

1901—21

பிளேக்கினுல் மொத்தம் மரணமடைந்தவர்கள்	82,62,365
மலேரியாவினுல் மொத்தம் மரணமடைந்தவர்கள்	1,83,61,167

மலேரியாவினுல் இறந்தவர்களின் அதிகாரபூர்வமான எண்ணிக்கையை எடுத்துக்கொண்டாலுங்கூடப் பெருவாரி நோயினுல் உண்டாகும் அழிவைவிட, அதனுல் அதிக அழிவு

[1] மேற்கூறிய புத்தகம் பக்கம் 37. R. முகர்ஜி காட்டிய மேற்கோள்.

[2] மேற்கூறிய புத்தகம் அனுபந்தம் B. பக்கம் 237.

[3] 'மரணங்களின் காரணங்களைக் கூறும் உயிரியல் புள்ளி விவரம் மிகவும் கேவலமாக உள்ளது'—கிங்ஸ்லி டேவிஸ், மேற்கூறிய நூல். பக்கம் 45.

[4] 'இந்தியாவின் ஜனத்தொகைப் பிரச்சினை'—ரணதீவ் 1930, பக்கம் 100.

உண்டாயிருக்கிறது என்பது புலப்படும்.[1] இந்தியாவில் மலேரியா ஒரு பெரிய தொல்லையாகக் கருதப்படாமல், வாழ்க்கையின் சாதாரண அமிசமாகக் கருதப்படுகிறது. நம் சேம நலத்தைக் கருதுவோர், இதனால் உண்டாகும் நேரடியான மரணத்தைவிட, இதன் விளைவுகளால் உண்டாகக்கூடிய மறைமுகமான மரண விகிதத்தைக் கண்டு கவலை கொள்ளவேண்டும். மலேரியா அறவே நீங்காமலிருந்தால், ஆற்றல் குறைந்து, பிறப்பு விகிதமும் குறையும் என்பது யாவரும் அறிந்த உண்மை. மலேரியாவானது பிறப்பு விகிதத்தை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பது சரியாகத் தெரியவில்லை.[2]

எனினும், மலேரியா ஜனத்தொகைக்கு மிகப் பெரிய ஆபத்து என்பதில் ஐயமில்லை. பல வருடங்கள் இந்தியாவின் மலேரியா ஆராய்ச்சி டைரக்டராக இருந்த கர்னல் சின்டன் (Sinton), பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் ஒவ்வொரு வருடமும் 10 கோடி பேர் மலேரியாவினால் துன்புறுகிறார்கள் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன என்றும், மேலும் $2\frac{1}{2}$ கோடி முதல் $7\frac{1}{2}$ கோடி பேர் மலேரியாவினால் மறைமுகமாக வலியிழந்து துன்புறுகிறார்கள் என்றும் கூறுகிறார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் மலேரியாவினால் இறப்பவர் $12\frac{1}{2}$ இலட்சம் பேர். 1936-ல் பிரிட்டிஷ் இந்தியாவில் பதிவான எண்ணிக்கையின்படி 15,67,084 பேர் இறந்தார்கள். 'கடந்த பத்து வருடங்களில் பலரும் அறிந்த காலரா, பெரியம்மை, பிளேக் ஆகிய தொற்றுநோய்கள் வருடந்தோறும் 3,57,000 மரணங்களை உண்டாக்கின. இது மலேரியாவால் மரணமடைபவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவு. ஆகையால், இந்தியாவில் பெரிய பொதுநலப் பிரச்சினையாக இருப்பது மலேரியாதான் என்பது உறுதி. ஆரோக்கியத்தைக் குறைப்பதாலும், மரணத்தை உண்டாக்குவதாலும் இது பெரும் பிரச்சினையாக உள்ளது.[3]

[1] 1936-ல், மருத்துவச் சாலைகளில் கவனிக்கப்பட்ட மலேரியா நோயாளிகள் 120 இலட்சம் பேர். இது அங்கு மொத்தம் வைத்தியஞ் செய்யப்பட்டவர்களில் 17% ஆகும் (இந்திய அரசாங்கத்தின் சுகாதாரக் கமிஷனரின் ஆண்டறிக்கை 1936, பக்கம் 49). சுகாதாரக் கமிஷனரின் 1939ஆம் ஆண்டறிக்கை, மலேரியாவினால் உண்டான மரணம் 15 இலட்சம் என்று கூறியது. மேற்கூறிய நூலில், பக்கம் 53-ல் K. டேவிஸ் என்பவருடைய அடிக்குறிப்பைக் காண்க.

[2] வங்காளத்தில் மலேரியா பரவியுள்ள இடங்களுக்கும் வங்காளம் முழுவதிற்கும் உரிய பிறப்பு விகிதங்களை திரு. ரணதிவ் ஒப்பிட்டுக் காட்டுகிறார். மேற்கூறிய நூல் பக்கம் 102.

[3] பொதுச் சுகாதாரக் கமிஷனரின் ஆண்டறிக்கை, 1936, பக்கம் 49.

1947-ல் பதிவு செய்யப்பட்ட மரணங்கள் 10,66,000.[1] இதுதான் கடைசியாகக் கிடைத்த எண்ணிக்கை.

க்ஷய ரோகத்தைப் பொறுத்தவரையில் (இது முக்கியமாக வறுமையால் உண்டாகும் நோய்) பொதுச் சுகாதாரக் கமிஷனர் தம் 1938ஆம் ஆண்டின் அறிக்கையில் கூறுவதாவது: 'நமக்குக் கிடைத்திருக்கும் சான்றுகளிலிருந்து, இந்த நோய் ஜனநெருக்கமுள்ள நகரப் பகுதிகளிலிருந்து கிராமப் பகுதிகளுக்குப் பரவுகிறதென்று தெரிகிறது. உடல் நலத்தைப் பொறுத்தவரையில் இது இப்போது இந்தியாவில் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்ருக உள்ளது. பெருநோயைப் போல இதுவும் ஒரு சமூக வியாதி. வாழ்க்கை வசதிகளைச் சீர்திருத்துவதற்கு விரிவான திட்டங்களை அமைப்பதன் மூலம்தான் இதைக் கட்டுப்படுத்த முடியும். இதைத் தடுப்பதற்கான முயற்சியில், சீர்திருந்திய குடியிருப்பு வசதியும், நல்ல சத்துள்ள உணவும் முக்கியமானவை.' க்ஷய ரோகத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைப்பற்றிய புள்ளிவிவரத்தைச் சரியாகத் தெரிந்து கொள்வது கடினம். நகரங்களிலும் கிராமங்களிலும் க்ஷய ரோகத்தால் இறந்தவர்கள் காய்ச்சலாலோ, சுவாசம் பற்றிய நோய்களாலோ இறந்தவர்களாகப் பதிவு செய்யப்படுகிருர்கள். 1932—41-ல் க்ஷய ரோகத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை 4,50,000 முதல் 8,20,000 வரை இருந்தது. இது மொத்தம் எல்லாவித மரணங்களிலும் 7% முதல் 13% வரை ஆகும். இந்த நோய் மிக வேகமாக அஞ்சத்தக்க முறையில் பரவுகிறதென்று சர் ஜான் மெகா (Sir John Megaw) கருதுகிருர். 1955 ஜூனில், இந்தியா முழுவதிலும் மருத்துவ விடுதிகளில் இருந்த க்ஷய ரோகிகளின் எண்ணிக்கை 16,827. 1947-ல் இந்த நோயால் துன்புற்றவர்கள் எண்ணிக்கை 20,00,000.[2]

[1] முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1953 ஏப்ரலில் ஒரு தேசிய மலேரியாக் கட்டுப்பாடு திட்டம் தொடங்கப்பட்டது. இது செயற்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே நோயாளிகளின் எண்ணிக்கை 2 கோடி குறைந்தது. இக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மலேரியா கண்ட 6 கோடி பேர்களில் இந்த 2 கோடி குறைக்கப்பட்டது. மலேரியா கழகத்தினுல் அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து, 1951-52-ல், 10 இலட்சம் ஜனத்தொகைக்கு 17·2 ஆக இருந்த மலேரியா மரண விகிதம், 12·7 ஆகக் குறைந்தது. இதனுல் மலேரியாத் தடுப்பு மருந்துகளின் நுகர்வும் 67·7% குறைந்தது.

[2] 1939-ல் நிறுவப்பட்ட பேரரசின் க்ஷய ரோக எதிர்ப்பு நிதியும், இந்திய க்ஷய ரோக சங்கமும், அண்மையில் (1952) மத்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட க்ஷய ரோக எதிர்ப்பு நிதியும். இந்த நோயைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிகளைக் குறிக்கின்றன. 1951-ல் உலக சுகாதார இயக்கத்தின் (W.H.O.) உதவியால் B. C. G. ஊசி குத்தும் பொது இயக்கம் தொடங்கப்பட்டது. 1957 இறுதியில் 10 கோடி மக்கள் சோதிக்கப்பட்டு, அவர்களில் 3·5 கோடி பேருக்கு ஊசி குத்தப்பட்டது.

1952-ல் காலராவினுல் உண்டான மரணங்கள் 45,000. இதில் சென்னை இராச்சியத்தைச் சேர்ந்தவர்களே மிகுதியானவர்கள். உலக சுகாதார இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் பிராட் (Biraud), கவுல் (Kaul) என்பவர்கள் "இன்றும் காலரா நோய் 'ஆசிய நோய்' என்றழைக்கப்படுவதற்குத் தகுதியானது. ஏனெனின், கடந்த முப்பது வருடங்களாக அது அந்தக் கண்டத்திலேயேதான் உள்ளது. மேலும், ஆசியாவில் இந்தியாதான் இந் நோயால், விடாமல் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது" என்று கூறுகிறுர்கள். எனினும், அண்மையில் சில வருடங்களாகக் காலரா பரவியுள்ள இடங்கள் குறைந்து வருகின்றன. யுத்தத்தின் விளைவாக 1941, 1942-ல் காலராவினுல் மரணம் அதிகமாயிற்று. 1943-ல் அது உச்ச நிலையையடைந்து, கடந்த நூற்றுண்டின் இறுதியில் இருந்தது போல 4,60,000 மரணங்களை உண்டாக்கியது.[1]

சில நகரங்களில் உண்டான மரண வீதங்களைக் கீழ்க்கண்ட அட்டவணை ஒப்பிட்டுக் காட்டுகிறது :[2]

1,00,000 க்குத் தெரிந்த மரண விதங்கள்

காரணம்	கல்கத்தா	சென்னை	பம்பாய்	நியூயார்க்	லண்டன்
க்ஷயரோகம்	270·0	113·0	170·0	47·0	87·0
சீதபேதியும் வயிற்றுப் போக்கும்	250·0	436·0	252·0	0·0	0·0
டைபாய்டு (விஷ ஜுரம்)	90·0	16·0	40·0	0·2	0·4
காலரா (வாந்திபேதி)	50·0	0·0	0·0	0·0	0·0

இந்தியாவில் மால்தூசிய ஜனத்தொகை வளர்ச்சித் தடைகள் இன்னும் இருக்கின்றன என்பது அம் மக்களின் வாழ்க்கை முறை

[1] தொற்று நோய் பற்றியும் உயிரியல் பற்றியும் புள்ளி இயல் அறிக்கை உலக சுகாதார இயக்கம், மார்ச்சு 1953.

[2] John B. Grant, எழுதிய 'இந்தியாவின் ஆரோக்கியம்'—இந்திய விவகாரம் பற்றிய ஆக்ஸ்போர்டு துண்டுப் பிரசுரங்கள் ; 1943, பக்கம் 21.

களையும், அந் நாட்டையாளுபவர்களின் நிருவாகத்தையும் பற்றி எடுத்துக்காட்டுகிறது.[1]

மக்கள் அடர்த்தி

எந்த நாட்டிலும் ஒரு சதுர மைலுக்கு எத்தனை மக்கள் இருக்கலாம் என்பது, அந் நாடு அடைந்திருக்கும் பொருளாதார முன்னேற்றத்தையும், அதன் இயற்கைச் சாதனங்களையும் பொறுத்தது. பழங்கால முறைப்படியே விவசாயத்தைச் செய்து, அதையே பெரும்பாலும் சார்ந்திருக்கும் இந்தியா போன்ற நாட்டை விட, மிகவும் தொழில் மயமாக்கப்பட்ட ஒரு நாட்டில் ஒரு சதுர மைலுக்கு மிக அதிகமான மக்கள் இருக்கலாம். ஒரே அளவு பரப்புள்ள நாடுகளின் ஜனத்தொகை அடர்த்தியோடு ஒப்பிடும்போது இந்தியாவில் அதிக அடர்த்தி உள்ளது. இதைப் போன்ற பரப்புள்ள வேறெந்த நாட்டிலும் இவ்வளவு அடர்த்தி இல்லை. உலகிலேயே மிக அதிகமான ஜனத்தொகையுள்ள (இது 1939-ல் 45,00,00,000) பெரிய சீனா (Greater China) இந்தியாவைப் போல $3\frac{1}{2}$ பங்கு அதிகப் பரப்புடையது.

கீழ்க்கண்ட அட்டவணையினால் இந்தியாவின் ஜனத்தொகை அடர்த்தியில் உண்டான வளர்ச்சி விளங்கும் :

பிரிவினைக்கு முன்பு					இந்திய யூனியன்	
1901	1911	1921	1931	1941	1941	1951
179	191	193	213	246	261	281[2]

எந்த நாட்டிலும் ஜனத்தொகை அடர்த்தியே அந்த நாட்டைச் சார்ந்துள்ள மக்களைக் காப்பாற்றுதற்குப் போதிய நிலம் அதில்

[1] வறுமையின் இயல்பான விளைவாகிய போஷணக் குறை ஒன்றுதான் இந்த உயர்ந்த மரண விகிதத்திற்குக் காரணம். போஷணக் குறை, உணவுச் சத்து சம்பந்தமான நோய்களை உண்டாக்கி, மற்ற நோய்களுக்கும் இடம் தருகிறது. இதனோடு அசுத்தமும் சேர்ந்தால், விளைச்சல் இல்லாததாலும், பெருவாரி நோய்களாலும் உண்டாகும் ஆபத்தை எதிர்க்கச் சக்தியில்லாமல் போகிறது ('ஜனத்தொகை வளர்ச்சியும் நுகர்வு அளவுகளும்'—Horace Belshaw 1956, பக்கம் 10). ஒப்பிடுக : 'இந்தியாவில், வறுமையையும் அதன் விளைவுகளையும் கண்டவர்கள், மால்தூசியக் கணிப்பைப் பரிகசித்தாலும், மால்தூசியத் தடைகள் உள்ளன என்னும் உண்மையில் ஐயம் கொள்ள மாட்டார்கள்'—மேற்கூறிய நூல். அடிக்குறிப்பு—பக்கம் 10.

[2] மேற்கூறிய நூல் பக்கம் 17. கிங்ஸ்லி டேவிஸ். "இந்தியா 1953' மேற்கூறியது. இதில் இந்திய யூனியனின் ஜனத்தொகை அடர்த்தி சதுர மைலுக்கு 312 என்று கூறப்படுகிறது. இந்த உயர்வுக்கு ஒரு காரணம் ஜனத்தொகையின் மிகுதி; மற்றொரு காரணம் இந்திய யூனியனில் இன்னும் சேராத பகுதிகளைச் சேர்த்துக்கொண்டமை. அவ்வாறிருந்தும், காரணம் கூற முடியாத அமிசம் ஒன்று இருக்கிறது

உள்ளது என்பதற்கு அறிகுறியாகாது. மொத்த ஜனத்தொகைக் கேற்ப நகரங்கள் குறைவாகவும் சிறியவையாகவும் இருப்பதோடன்றி, விவசாயமே வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாகவும் உள்ள இந் நாட்டில், மண் வளமுள்ளதாகவும், தண்ணீர் மிகுதியாகக் கிடைக்கக் கூடியதும் ஆகிய பகுதிகளில்தான் மக்கள் நெருக்கமாக இருப்பர். 1951-ல் பகுதி வாரியாக இருந்த மக்களின் அடர்த்தியைக் காட்டும் கீழ்க்கண்ட அட்டவணை இதை மெய்ப்பிக்கிறது :

இராச்சியம்		சதுர மைலுக்கு அடர்த்தி	இராச்சியம்		சதுர மைலுக்கு அடர்த்தி
பம்பாய்	...	323	பஞ்சாப்	...	338
பீகார்	...	572	ஐக்கிய மாகாணம்	...	557
சென்னை	...	446	ராஜஸ்தான்	...	117
வங்காளம்	...	806	இமாசலப் பிரதேசம்		94
திருவாங்கூர்-கொச்சி		1,015	சிக்கிம்	...	50

இந்த அடர்த்தி, திருவாங்கூர்-கொச்சியில் 1,015-ம், சிக்கிமில் 50-ம் ஆக மிகவும் வேறுபட்டிருப்பதைக் காணலாம்.

மண்வளம் சிறந்திருப்பினும், விவசாயத்திற்கு மிகவும் ஏற்ற நிலம் படைத்த இராச்சியங்களில் உள்ள மக்கள் அடர்த்தியானது, அவர்கள் நன்கு வாழ்வதற்கு முடியாதவாறு மிக அதிகமாக உள்ளது என்பது தெளிவு. கங்கைப் பள்ளத்தாக்கும், கடற்கரைப் பகுதிகளும் அதிக மழைப் பொழிவு உடைய இடங்களாகையால், அங்கு ஜனநெருக்கம் அதிகம். சில பகுதிகளில் நீர்ப்பாசனத்தால் உற்பத்தி சக்தி பெருகுமாயினும், அங்கு வாழ்க்கை வசதிகள் உயர்ந்து, மக்கள் நெருக்கம் உண்டாவதற்குரிய வாய்ப்பு இல்லை.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நகரங்கள் மிகுந்த நாடுகளில், நகரங்களில் சதுர மைலுக்கு 1000 வரையில் மக்கள் அடர்த்தி உயர்ந்திருப்பினும், நம் நாட்டில் கிராமப் பகுதிகளில்தான் சதுர மைலுக்கு அதிகபட்சம் 1000 பேர் உள்ளனர். மேலும் அமெரிக்காவில் ஒவ்வொரு சதுர மைலுக்கும் விவசாய ஜனத்தொகை 48 பேராக இருக்க, நம் நாட்டில் இது 422 ஆக உள்ளது.

1951 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கை (Census Report) ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள விவசாயப் பரப்பையும், மொத்தப் பரப்பில் உழவு செய்யக்கூடிய பரப்பையும்

விகிதாசாரப்படி ஒப்பிட்டுக் காட்டும் அட்டவணை ஒன்றைத் தருகிறது.

தலா பரப்பு (சென்டுகளில்)

	இந்தியா	ரஷ்யா நீங்கலான ஐரோப்பா
மொத்த நிலம்	225	307
விவசாய நிலப்பரப்பு	97	153
உழக்கூடிய நிலம்	97	92

சாதாரண இந்தியனைவிடச் சாதாரண ஐரோப்பியனுக்குத் தலா நிலம் அதிகமாக உள்ளது. ஐரோப்பியன் நிலத்தில் 30%-ஐத் தான் உழு நிலமாக மாற்றியிருக்கிறான். ஆனால், இந்தியன் 43%-ஐ மாற்றியிருக்கிறான். ஐரோப்பியனுக்கு நல்ல நிலம் அதிகமாக இருப்பதாலும், அதில் ஒரு சிறு பகுதியையே விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாலும், அவன் நிலையாக 61 சென்டு நிலத்தை மைதானங்களாகவும் மேய்ச்சல் நிலமாகவும் வைத்துக்கொள்ள முடிகிறது. மேய்ச்சல் நிலங்களால் பால், பால் பொருள்கள், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி முதலிய உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. இந்தியாவில் இதைப்போல எங்குமே இல்லை.[1]

பிறப்பு வீதமும் இறப்பு வீதமும்

எந்த நாட்டிலும் ஜனத்தொகை அதிகரிப்பு, பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகிய இரண்டு மாற்றங்களின் காரியமாகும். உயிரோடிருப்பவர்களின் வீதம், ஜனத்தொகையில் மொத்த உயர்வைக் காட்டும்; அதாவது, பிறப்புகளுக்கும் இறப்புகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டும். ஜனத்தொகையில் ஆயிரத்திற்கு ஒரு வருஷத்திற்கு உண்டாகும் பிறப்புகளை, அதாவது பிறப்பு வீதத்தைக் கொண்டு சாதாரணமாக ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை கூறப்படும். அதிகப் பிறப்பு வீதத்தினாலோ அதிக இறப்பு வீதத்தினாலோ ஜனத்தொகை உயரலாம். அல்லது சிறிய பிறப்பு வீதமும் அதைத் தொடர்ந்து சிறிய மரண வீதமும் அதிக ஜனத்தொகையை உண்டாக்கலாம். சில நாடுகளில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் எப்படி உள்ளன என்பதை பக்கம் 160-ல் உள்ள அட்டவணை காட்டும்.[2]

[1] இந்தியாவின் கணக்கெடுப்பு, 1951, Vol. I, பக்கம் 39-40.

[2] League of Nations Statistical Year Book 1941-42.

குறைந்து வரும் பிறப்பு விதமும் இறப்பு விதமும்

(ஆண்டுக்கு 1000 பேருக்கு)

		பிறப்பு விதம்				இறப்பு விதம்		
தேசம்	1881—91	1921—25	1926—30	1931—35	1881—91	1921—25	1926—30	1931—35
இங்கிலாந்து ...	32·5	20·4	17·2	15·5	19·2	12·4	12·3	12·2
சுவீடன் ...	39·1	19·1	15·9	14·1	16·9	12·1	12·1	11·6
ஜெர்மனி ...	36·8	22·1	18·4	16·6	25·1	13·3	11·8	11·0
ஃபிரான்ஸ் ...	23·9	19·3	18·2	16·5	22·1	17·2	16·8	15·7
அமெரிக்கா ...	...	22·5	19·7	17·3	...	11·8	11.8	10·9
ஜப்பான் ...	27·2	34·6	33·5	31·6	19·9	21·8	19·3	18·1
இந்தியா ...	35·9	32·7	33·3	34·4	27·4	26·0	24·3	23·3

இதிலிருந்து மேனாடுகளில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் கீழே இறங்கும் போக்கையுடையன என்பதும், இதற்கு மாறாக இந்தியாவில் இடைவிடாமல் அதிகப் பிறப்பு வீதமும் அதிக இறப்பு வீதமும் உள்ளன என்பதும் தெளிவாகத் தெரிகிறது. மேலும் இந்தப் பிறப்பு வீதங்களும் இறப்பு வீதங்களுங்கூடக் குறைந்து மதிப்பிடப்பட்டவையாக இருக்கலாம்.[1]

162ஆம் பக்கத்தில் அட்டவணை, 1936-50-ல் பிறப்பு வீதத்திலும் இறப்பு வீதத்திலும் இருந்த போக்கைக் காட்டுகிறது.[2]

கடந்த பத்து வருடங்களில் மேனாடுகளில் பிறப்பு வீதம் மேல் நோக்கிச் சென்றிருக்கிறது. இதற்குக் காரணம் யுத்தத்தின் போதும், அதற்குப் பிறகும் சாதாரணமாகத் திருமண வீதம் அதிகமாகிறது என்பதுதான். இது ஒரு தாற்காலிகப் போக்கு என்று கருதப்படுகிறது. இது மாறி, மீண்டும் குறைவான பிறப்பு வீதம் உண்டாகலாம்.[3] கடைசி ஐந்தாண்டுகளில், பிறப்பு விகிதம் உயரும் போக்குத் தெளிவாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் வாழ்க்கைத்தர உயர்வாக இருக்கலாம்.[4]

'ஜனத்தொகைப் போக்கைத் தீர்மானிப்பவையும், அதன் விளைவுகளும்' என்ற ஐக்கிய நாடுகளின் சபை அறிக்கை, அண்மை

[1] இந்தியாவில் சாதாரணப் பிறப்பு விதமும் இறப்பு விதமும் ஒரு மைலுக்கு முறையே 48-ம் 33-ம் ஆகும். ஏனெனின், உண்மை நிலையை ஒட்டி நியாயமாக மதிப்பிடுவதற்குப் பிறப்பு வீதத்தில் 33%-ம் இறப்பு வீதத்தில் 30%-ம் கூட்ட வேண்டும் என்று டாக்டர் சியான்சந்த் கூறுகிறார். அண்மையில் அதிகாரபூர்வமான புள்ளியியலை ஒத்துக்கொள்ளப் பலர் மறுக்கிறார்கள். D. கோஷ் என்பவர் தம், 'ஜனத்தொகை நெருக்கடியும் பொருளாதாரத் திறமையும்' என்ற நூலில், பிறப்புகளிலும் இறப்புகளிலும் பெரும்பகுதி இந்நாட்டில் அரசாங்கத்தில் பதியப்படுவதில்லை என்றும், ஆயுள் அட்டவணைகளைக் கொண்டு மறைமுகமாகச் செய்த கணிப்பினால் அதிகாரபூர்வமாகக் கூறப்படும் ஆயிரத்திற்கு 34 என்னும் பிறப்பு விகிதம் தவறு என்றும், அது ஆயிரத்திற்கு 40 வரையில் இருக்கக்கூடும் என்றும் கூறுகிறார்.

[2] Demographic Year Book—1952, United Nations.

[3] 1946-ல் அமெரிக்கக் கணக்கெடுப்பு நிலையம், உயர்ந்து வரும் பிறப்பு வீதத்தைப்பற்றி, மாதிரி ஆராய்ச்சி செய்தது. மந்த நிலைக் காலத்தில் பல தம்பதிகள் திருமணத்தை ஒத்திப் போட்டனர் என்பதை அது கண்டது. உரிய காலத்திற்கு முன்னரே, பல போர்க்காலத் திருமணங்கள் நிறைவேறின. அந்த இனப்பெருக்க உயர்வுக் காலத்தில், முதல் குழந்தைகளும் இரண்டாம் குழந்தைகளும் மிக அதிகமாகப் பிறந்தன (Human Fertility, R. C. Cook, பக்கம் 228-9). ஒப்பிடுக.

[4] '.........அவர்களுடைய வருமானம் உயர்ந்தால், அவர்களுடைய பிறப்பு விதமும் உயரும். ஆகையால், ஸ்பெயின், இத்தாலி, ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இருந்ததைவிட அமெரிக்காவில் அதிகப் பிறப்பு விதம் இருந்தது என்பது வியக்கத்தக்கதன்று. **'நாம் அதிகச் செல்வம் பெற்றிருக்கிறோம். ஆதலால், இதனால் துன்பமில்லை'**. ஜேகப் ஆசரின் 'மக்கள் பட்டினி கிடக்க வேண்டுமா?' 1956, பக்கம் 49. (தடித்த எழுத்து நாம் எழுதியது)—ஒப்பிடுக.

1936—50 க்கான பிறப்பு, இறப்பு விதங்கள்

	பிறப்பு விதம்			இறப்பு விதம்		
தேசம்	1936—40	1941—45	1947—50	1936—40	1941—45	1947—50
இங்கிலாந்து ...	15·18	16·2	17·97	12·66	12·94	11·67
சுவீடன் ...	14·8	15·4	17·77	11·68	10·64	10·15
ஃபிரான்ஸ் ...	14·8	15·4	20·92	16·28	17·32	12·95
அமெரிக்கா ...	17·3	20·16	24·37	10·96	10·60	9·82
ஜப்பான் ...	28·78	24·82	32·25	17·28	18·88	12·27
இந்தியா ...	33·3	28·3	26·0	22·14	22·76	17·22

யில் பிறப்பு வீதம் உயர்ந்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்று கூறுகிறது. இந்தக் காரணங்களுள் சில, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அதிக திருமணங்கள் நடைபெற்றதும், திருமண வயதைக் குறைத்ததும், குடும்ப நலப்படி திட்டங்களும், மற்றப் பொதுநல நடவடிக்கைகளும் ஏற்பட்டதனுல் பெற்ருேர் களுக்குப் பொருளாதாரச் சுமை குறைந்ததும், எல்லோருக்கும் வேலே யளிக்கப்படும் என்ற கொள்கையால் நம்பிக்கை உண்டானதும் ஆகும். வட ஐரோப்பாவின் விவசாய சமூகங்களில் நிறைய விளைச்சல் உண்டானபோது அதிகப் பிறப்பு வீதமும், பயிர் விளையாத போது குறைந்த பிறப்பு வீதமும் உண்டாயின.[1]

பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகியவை நம் அதிகாரபூர்வமான அறிக்கைகளில் சரியாகக் கூறப்படவில்லே என்பதை கணக்கெடுப்பு அதிகாரி (Census Commissioner) ஒத்துக்கொண்டு, அதற்குச் சமாதானங்கள் கூறுகிருர். 1941-50-க்குப் பதிவு செய்யப்பட்ட பிறப்பு வீதம் 27·2. ஆனுல், சரியான அளவு 40. '1941-50-ல் மொத்தப் பிறப்புகளில் 32% பதிவு செய்யப்படாமல் போய்விட்டன (ஜனத்தொகையில் கால் பங்கு மக்களிடையே உண்டாகும் பிறப்புகள் பதிவு செய்யப்படவே இல்லே என்ற உண்மை ஒருபுற மிருக்கிறது). இது போலவே, பதிவு செய்யப்பட்ட இறப்பு வீதம் 19·4. ஆனுல், உண்மையான இறப்பு வீதம் 27 என்று நம்ப இட மிருக்கிறது. பதிவு செய்யப்பட்ட இடங்களிலேயே, 1941-50-ல் 28% மரணங்கள் பதிவு செய்யப்படாமல் போய்விட்டன.'[2] பதிவு செய்வதில் ஏற்பட்ட இந்தக் குறை வருந்தத்தக்கது. எனினும், நாம் இதைக் கண்டு ஆச்சரியப்படத் தேவையில்லே என்று ஆறுதல் கூறப்படுகிறது. யுத்தத்தின்போதும் அதற்குச் சில ஆண்டுகள் பின்னரும், போர் நடத்துவதுபற்றிய வேலேகளால் நிருவாகம் மிகவும் துன்பப்பட்டது. பிறகு உணவுப் பொருள்களை ஒவ்வோரிட மாக அனுப்புவதிலும், விலேகளைக் கட்டுப்பாடு செய்வதிலும் நிருவாக வேலே கடினமாயிற்று. ஆகையால், அன்ருட வேலே தடை பட்டது. 1951-60-ல் பிறப்பு, இறப்புக் கணிப்புகளைச் சரிபார்க்கும் போது மீண்டும் இதேபோல நமது இளமை வாய்ந்த ஜனநாயக

[1] மேற்கூறிய புத்தகம் பக்கம் 82-88. சேம நல அரசு என்ற பெயரால் இந்திய அரசாங்கம் ஆதரித்து வரும் நடவடிக்கைகள் நம் சிந்தனையைத் தூண்டத் தக்கவை. சமூகப் பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானவை என்பதற்கு இது ஓர் உதாரணமாகும். இந்திய மக்களின் வாழ்க்கை நிலேயை உயர்த்து வதற்குச் செய்யும் முயற்சியால், ஜனத்தொகை அதிகரிக்கும் போக்கு ஏற் படலாம். ஆதலால், வறுமையைப் போக்கும் முறையில் அதை நாம் மேலும் அதிகரிக்கக்கூடும்.

[2] Census of India, 1951, பக்கம் 183-184.

அமைப்பு நமக்குச் சமாதானம் கூறத் தேவையிராது என்று நம்புவோமாக.

இந்தியா, பாகிஸ்தான் ஆகியவைகளின் ஜனத்தொகைகளே ஆராய்ச்சி செய்த கிங்ஸ்லி டேவிஸ் என்பவர், பிறப்பு வீதம்பற்றிய அதிகாரபூர்வமான புள்ளி இயலின் குறையை விளக்கிப் பின்வரும் நான்கு பெருங் குறைகளைக் குறிப்பிட்டிருக்கிருர்: (1) ஜனத் தொகையில் முக்கால் பங்குதான் பதிவு செய்யப்பட்டது. ஒழுங் கான பிறப்புப்பற்றிய புள்ளி இயல் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு மட்டுந்தான் எடுக்கப்பட்டது; சுதேச இராச்சியங்களுக்கு எடுக்கப் படவில்லே. (2) 1932 வரை வெளியிடப்பட்ட வீதங்கள், சென்ற கணக்கெடுப்பின்போது பதிவுக்குள்ளாக்கப்பட்ட ஜனத்தொகையின் அடிப்படையில் அமைந்தவை. இயற்கையாக இடையில் உண்டாகும் ஜனத்தொகை உயர்வு கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லே. (3) தாய்மார்களின் வயதிற்கேற்ப வீதங்கள் வெளியிடப்படவில்லே. (4) பிறப்புப்பற்றிய அறிவிப்பு முழுவதுமாக இல்லே. அரை குறையாக உள்ளது. பிரிட்டிஷ் இந்தியாவில், உண்மையான எண்ணிக்கையைவிட, அறிவிக்கப்பட்ட பிறப்புகள் சராசரி 20 முதல் 50 சதவீதம் வரை குறைவாக இருந்தன. 'இந்தக் குறை ஏன் ஏற்பட்டது. அது இன்னும் ஏன் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குக் கிராம மக்கள் கல்வியற்றவர்களாகவும் பெரும் பான்மையினராகவும் இருப்பதையும், கிராமக் காவற்காரன்தான் பதிவு செய்பவன் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.' 'அதிகாரபூர்வமான கணிப்புகள் மொத்தப் பிறப்புகளைக் குறிப் பதாக எவ்விடத்திலும் ஒத்துக் கொள்வதற்கில்லே.'[1]

இப்போதுள்ள மரண வீதத்தைப்பற்றிய நிலைமையைப்பற்றி முடிவாகக் கூறும்போது, டேவிஸ் அதிக நம்பிக்கை அளிக்கக் கூடியதாக ஒன்றும் கூறவில்லே. 'மனிதனுக்குத் தெரிந்த எல்லா விஞ்ஞானக் குறுக்கு வழிகளாலும், பொருளாதார, மனிதவியல் பற்றிய கண்கூடான உண்மைகளிலிருந்து மரண வீதத்தைப் பிரிக்க முடியாது.' மரண வீதம் குறைவதால், உயிரியல்-சமூக நிலைமைகள் முழுவதும் பாதிக்கப்படும். 'தாற்காலிகமாகச் சாவின் பழைய காரணம் ஒன்று தடுக்கப்பட்டிருந்தால், அது எப்பொழுதுமே தடுக்கப்பட்டுவிட்டதாக கருதப்படமாட்டாது. பொருளாதார, சமூக அமைப்புக்களில் விரைவாக மாறுதல்கள் செய்யப்பட்டாலன்றி, இந்து முஸ்லீம்களின் வாழ்க்கை முறை மாற்றப்பட்டாலொழிய,...... மக்களின் இனப் பெருக்கப் பண்பில் ஒரு மாறுதலும் ஏற்படாது.

[1] Kingsley Davis—மேற்கூறிய நூல், பக்கம் 67.

இந்த அபாயம் இருந்துகொண்டே இருக்கும். மீண்டும் நாட்டில் பஞ்சம், போர், பெருவாரி நோய்கள், போஷணக் குறைவு முதலியவை ஏற்படும். இந்த அபாயங்கள் ஏற்கெனவே உள்ளன... மரண வீதம் மேலும் குறையாது என்று நாம் கூறவில்லை. ஆனால், நவீனப் பொருளாதாரமும் நாகரிகமான இனப் பெருக்க முறையும் இல்லாமல் குறைவான மரண வீதம் தொடர்ந்து இருக்க முடியாது.'[1]

பிறப்பு வீதத்தை நிருணயிக்கக்கூடிய காரணங்கள் சுருக்கமாக மூன்று தலைப்புகளின் கீழ் ஆராயப்படலாம். அவையாவன: (1) சீதோஷ்ணம், பௌதிகச் சூழ்நிலை ஆகியவற்றால் உண்டாகும் சுற்றுச் சார்பாலான காரணங்கள். (2) பொருளாதார நிலைமைகள் அல்லது காரணங்கள். (3) மக்களின் சமூக-சமயச் சார்பான நோக்கு.

(1) ஒவ்வோராண்டிலும் மாத வாரியாகப் பிறப்பில் ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன என்று கூறப்படுகிறது. இளமைத் திருமணம் நிகழும் வெப்பமான நாடுகளில், குளிர் நாடுகளைவிடப் பிறப்பு வீதம் அதிகமாக இருக்கும். குளிர் நாடுகளில் பெண்கள் பருவமடையும் காலமும், அவர்களுடைய திருமணக் காலமும் மிகவும் பிற்பட்டு வருகிறது.

(2) பொருளாதார அமிசம் மேலும் முக்கியமானது. செல்வர்களைவிட வறியவர்களுக்குக் குடும்பம் பெரிதாக உள்ளது என்று கூறப்படுகிறது. தனிப்பட்ட ஒருவனாயினும், ஒரு வகுப்பாயினும் எவ்வளவுக்கெவ்வளவு ஏழையோ, அவ்வளவுக்கவ்வளவு குடும்பம் பெருகியிருக்கும். வாழ்க்கையில் ஒன்றுமில்லாதவர்களுக்கு ஒரு குழந்தை அதிகமாகப் பிறந்தால் அதைக்கொண்டு அதிக வருமானம் பெறலாம். ஏனெனின், அதைச் சிறு வயதிலேயே வேலைக்கு அனுப்பிக் குடும்பத்தின் சிறிய வருமானத்தைப் பெருக்க முடியும். கல்வியின்மை, சிக்கனக் கருத்தின்மை, திருமணம், இனப் பெருக்கம் ஆகியவற்றில் பொறுப்பற்ற தன்மை ஆகியவை வறுமையோடு இணைந்தவை. இதற்கு மாறாக, மேனாடுகளின் வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வாழ்க்கைத்தரம் உயர்ந்த பிறகு,

[1] மேற்கூறிய நூல், பக்கம் 61.

பொதுவாகப் பிறப்பு வீதம் குறைகிறது. கல்வியினால் சிக்கனக் கருத்து ஏற்படுகிறது. அமெரிக்காவில் இவ்வாறுதான் வெள்ளையர்களைவிட நீக்ரோவர்களுக்குப் பெரிய குடும்பங்கள் உள்ளன.[1]

(3) ஒரு நாட்டின் அல்லது வகுப்பினரின் சமூக, சமயச் சார்பான நோக்கு, பிறப்பு வீதத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு முக்கிய அமிசமாகும். இந்தியாவிலும், சில தெற்கு ஐரோப்பிய நாடுகளில் போலத் திருமணம் சம்பந்தமான சமூகப் பழக்க வழக்கங்கள் பிறப்பு வீதத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. இந்தியாவில் திருமணம் எல்லோருக்கும் உண்டு. 1931-ல் ஒவ்வோர் ஆயிரம் மக்களிலும் 467 ஆண்களுக்கும், 493 பெண்களுக்கும் திருமணம் நடந்தது. அதாவது, மனைவியை இழந்தவர்கள், கணவனை இழந்தவர்கள், துறவிகள், பிச்சைக்காரர்கள் ஆகிய எல்லோரையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், திருமண வயதடைந்த ஒவ்வொருவரும் திருமணஞ் செய்துகொண்டார்கள். இந்தியர்களுடைய வறுமை எங்கும் இல்லாத அளவுக்கு இருப்பினும், திருமண விஷயத்தில் பொருளாதாரத் தடைகள் அவ்வளவு முக்கியமாகக் கருதப்படுவதில்லை. இன்றும், மணந்துகொள்பவர்களுடைய கருத்தையறியாமலே திருமணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பெரும்பாலும் வருவாயும் எதிர்கால நோக்கும் இன்றியே அவை செய்யப்படுகின்றன. இந்தியாவில் வறுமையானது திருமணத்திற்குத் தடையாக இல்லை. இங்குத் திருமணம் என்பது ஒரு மதச் சடங்கு. குடும்பம் பெரியதாக இருப்பது கடவுளின் கிருபைக்கு அறிகுறி என்று கருதப்படுகிறது. 15 வயதுக்குள் தன் மகளுக்குத் திருமணம் ஏற்பாடு செய்யாமலிருப்பது தந்தைக்குப் பெரிய இழுக்காகும். மேலும், இளமைத் திருமணம் பிறப்பு வீதத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு காரணமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெரும்பாலும் பெண்களுக்கெல்லாம் 20 வயதிற்கு முன்பே திருமணமாகி விடுகிறது ; 30 வயதிற்குள்ளாகவே அவர்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளையெல்லாம் பெற்றுவிடுகிறார்கள்.

[1] இருப்பினும், வாழ்க்கைத்தரம் உயர்வதற்குக் காரணமாயிருந்தவையே மரண வீதம் குறைவதற்குக் காரணமாகி, விரைவாக ஜனத்தொகை வளர்ச்சியை உண்டாக்குகின்றன. காலக்கிரமத்தில், வாழ்க்கைத்தர உயர்வு பிறப்பு வீதத்தைக் குறைத்து, ஜனத்தொகை குறையாமல் ஒரே நிலையில் வைக்கிறது. இவ்வாறுதான் ஜப்பான் தொழில் மயமாக்கப்பட்டு 50, 60 ஆண்டுகள் கழிந்த பிறகும், மக்கள் நகரங்களில் சென்று வாழத் தொடங்கிய பிறகும், அந்நாடு முழுவதிற்கும் பிறப்பு வீதம் ஓரளவு குறைந்தது. இதே போல இங்கிலாந்திலும் வேல்சிலும் தொழில் பெருக்கமும் நகர வாழ்க்கையும் ஏற்பட்ட ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு பிறப்பு வீதம் குறையத் தொடங்கியது. இருப்பினும், அண்மையில், அமெரிக்காவில் வருமானம் உயர்ந்த பிறகு பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது. வருமான உயர்வே பிறப்பு வீத உயர்வுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இந்தியாவிலும், நடுத்தர வகுப்பாரின் வருமானம் குறைந்ததால், சமீப காலத்தில் பிறப்பு வீதமும் சிறிது குறைந்திருக்கிறது என்று கூற முடியுமா ?

இந்தியாவில் இளமைத் திருமணம் செய்யும் வழக்கம் பிற் காலத்தில் ஏற்பட்டது. 50 சதவீதம் பெண்கள் தம் 15ஆம் வய திற்குள்ளாகவே திருமணம் செய்துகொள்கிறார்கள் என்று திருமண ஒப்பந்த வயது குழு (Age of Consent Committee) கணித்தது. இளமைத் திருமணத்தால், மணமான பெண்களின் உடல்நிலை கெடுவதோடு, நாட்டில் விதவைகளின் எண்ணிக்கையும் பெருகுகிறது. சட்டப்படி நிருணயிக்கப்பட்ட திருமண வயதிற்குக் குறைவாகத் திருமணங்கள் நிகழ்வது இன்னும் வழக்கத்தில் உள்ளது. 1931-ல் குழந்தை விதவைகளின் எண்ணிக்கை இரு மடங்காயிற்று. இதற்குக் காரணம் 1929-30-ல் ஒரு வயதிற்கும் குறைந்த பெண் குழந்தைகள் திருமணம் செய்யப்பட்டுத் தம் கணவர்களை இழந்ததுதான். 1929 செப்டம்பரில் 'குழந்தை திருமணத் தடைச் சட்டம்' இயற்றப்பட்டது. 1930 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அது நடைமுறைக்கு வர இருந்தது. இந்த இடைக் காலத்தில் சட்டத்தை மீறித் திருமணங்கள் நடத்தப்பட்டன. ஆகவே, 1921-ல் 85 இலட்சமாக இருந்த மணமான பெண்களின் எண்ணிக்கை 1931-ல் 127 இலட்சமாக உயர்ந்தது; 1951ஆம் வருடக் கணக்கெடுப்பு அறிக்கை, குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் வந்த 1931-க்கும், 1951-க்கும் இடையில் சட்டத்தை மீறி 92 இலட்சத் திருமணங்கள் நடந்தன என்று கூறுகிறது. இங்கிலாந்தில் திருமண ஒப்பந்த வயது அண்மையில்தான் பதினான்கிலிருந்து பதினாறாக உயர்த்தப்பட்டது என்பது வியப்பாக இருக்கிறது. 1928-ல் இங்கிலாந்தில் 12 வயது பெண்ணுக்குத் திருமணம் செய்வது சட்ட வரம்புக்குட்பட்டதே. இளமைத் திருமணங்களை ஒழித்தால், பருவமடைந்த பின்னர் ஆண்களும் பெண்களும் அதிக இனப் பெருக்க ஆற்றல் பெறுவார்கள் என்பதை யும் நாம் அறிய வேண்டும். இதனால் இளமைத் திருமணத்தை நாம் ஆதரிப்பதாகக் கொள்ளக் கூடாது.

முற்காலத்தில் நம் சமூகத்தில் உண்டான சமூக, அரசியல் மாற்றங்களால் இளமைத் திருமண முறை ஏற்படுத்தப்பட்டது எனின், இப்பொழுது திருமண வயதை மாற்றியமைக்கக் கூடிய முறையில், தம் கருத்தை ஏன் நாம் மாற்றிக்கொள்ளக்கூடாது? தாயின் உடல் நலம் குறைவதாலும், குழந்தை பெறும் பருவத்தில் பெண்களின் மரண வீதம் அதிகமாக இருப்பதாலும், மக்களின் நிலை சீர்கேடடைந்து, சமூகத்திற்கு ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானால், பெண்கள் திருமணம் செய்துகொள்ளும் வயதை இரண்டு மூன்று ஆண்டுகள் உயர்த்திக் கல்வியையும் அதிகமாகப் பரப்ப வேண்டும்.

ஆக, இந்தியாவில் அதிகப் பிறப்பு வீதத்திற்குக் காரணம் இளமைத் திருமணமும், எல்லோருக்கும் திருமணம் நிகழ்வதும் ஆகும். அயர்லாந்தில் மக்களின் வறுமையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், அயர்லாந்தில் கத்தோலிக்க மதத்தின்படி திருமணமும், இந்தியாவில் திருமண சம்பந்தமான சமயக் கருத்துக் களும் பிறப்பு வீதத்தின் உயர்வுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன. குழந்தை பெறும் வயதுடைய விதவைகளை, மறுமணம் செய்துகொள்வது பாவம் என்ற கருத்தினால், மலடாக்குவதனால், பிறப்பு வீதம் மேலும் உயராமல் தடுக்கப்படுகிறது. 'இந்தியாவில் உள்ள அதிகப் பிறப்பு வீதம் நம் பண்பாட்டோடு இணைந்தது. சமூகத்தின் அறவுணர்ச்சிகள் தாமாகவோ, நிர்ப்பந்தத்தினாலோ மாறினாலொழிய, மற்ற நாடுகளில் உண்டானது போல நம் நாட்டில் பிறப்பு வீதத்தில் குறைவு உண்டாகாது.'[1] இந்தியாவில் பிறப்பு வீதம், சமூகப் பழக்க வழக்கங்களோடு இணை பிரியாமல் பிணைந் துள்ளது. இவைதாம் இறுதியில் பெண்களின் இழிநிலைக்குக் காரணமாகின்றன. இந்தியாவில் பெண்கள் தம் உரிமை பெற்று, வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் ஆண்களோடு சமத்துவம் பெற்றாலன்றிப் பிறப்பு வீதப் போக்கில் ஒருவிதமான அடிப்படை மாறுதலையும் நாம் காண முடியாது.

(1) அறியாமையினாலும், பேறுகாலச் சேவைகளைப் பயன் படுத்திக் கொள்வதற்கு விருப்பமோ வசதிகளோ இன்மையாலும், அதிக சிசு மரணவீதம் உண்டாகிறது. சாதாரணமாக ஆரோக்கியம் பற்றிய எளிய விதிகளும் சுத்தமும் அவர்களுக்கு அறவே தெரியாது. ஆனால், சிசுக்கள் விஷயத்தில், குறைந்த பிறப்பு வீதமும், குறைந்த இறப்பு வீதமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்று கூற முடியாது.[2]

[1] கியான்சந்தின், 'இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள்' 1939, பக்கம் 145.

[2] இந்தியாவில் முன்னேற்றத்திற்கு அதிக இடம் இருக்கிறது என்பதை, சிசு மரண விதத்தைச் சில நகரங்களில் ஆராய்ந்தால் தெரியும் :

பிறந்த ஆயிரம் குழந்தைகளுக்கு மரண விதம்

கல்கத்தா	சென்னை	பம்பாய்	நியூயார்க்கு	லண்டன்
212·9 (1931)	205·8 (1931)	201·4 (1931)	30·8 (1941)	48·0 (1940)

1949-ல் சிசு மரண விதத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குக் கீழ்க்கண்ட அட்டவணை உதவும் :

இந்தியா	இங்கிலாந்து	அமெரிக்கா	ஜப்பான்	ஃபிரான்ஸ்	சுவீடன்
122·8	34·1	31·3	62·5	60·2	23·3

(2) இந்தியாவில் மருத்துவ நிலையங்களும், மருத்துவச் சாலைகளும், மருத்துவ உதவியும், நோய்த் தடுப்பு முறைகளும் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில் இல்லையென்பதும் உண்மை.[1]

(3) ஒரே அளவான வருமானமுள்ள ஒருவன், தனக்குக் குறைவாகக் குழந்தைகள் இருந்தால் அவர்களை நன்கு கவனிக்க முடியும் என்பதும், அதிகக் குழந்தைகள் இருந்தால் நன்கு கவனிக்க முடியாது என்பதும் யாவரும் அறிந்த உண்மை. நம்மைப் போல வறுமையில் மிகவும் ஆழ்ந்துள்ள மக்கள், கற்றவர்களாயிருந்து, சுகாதாரம், ஆரோக்கியம் ஆகியவைபற்றிய விதிகளை நன்கு அறிந்திருந்தாலும், தம் குழந்தைகளுக்கு உணவளித்தல், வளர்த்தல், மருத்துவ உதவியளித்தல் ஆகியவற்றைப் போதிய அளவு செய்ய முடியாது.

(4) மரண வீதத்தைக் குறைப்பதற்கு அதிக உதவியாயிருப்பவை மேலான குடியிருப்பு வசதிகளையளித்தலும், நகரங்களிலும் கிராமங்களிலும் சுகாதார வசதி செய்தலும், மருந்துகளைத் தாராளமாகக் கொடுத்துதவி நல்ல மருத்துவ சேவை புரிதலும், மருத்துவச் சாலைகள், ஆரோக்கிய நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் ஆகும். இவற்றை அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். பாதுகாப்பிற்காகக் கோடிக்கணக்கில் செலவழிக்கும் அரசாங்கம் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவழிக்கலாம். நீர்ப்பாசனத்திற்கும் ரெயில் அபிவிருத்திக்கும் கடன்களை எழுப்பும்

[1] நம் ஜனத்தொகையில் 6,300 பேருக்கு ஒரு டாக்டரும், 43,000 பேருக்கு ஒரு செவிலியும், 4,00,000 பேருக்கு ஒரு உடல்நலக் கண்காணிப்பாளரும் (health visitor), 60,000 பேருக்கு ஒரு மருத்துவப் பெண்ணும் (midwife) உள்ளனர். இங்கிலாந்தில், 1,000 பேருக்கு ஒரு டாக்டர், 300 பேருக்கு ஒரு செவிலி, 4,770 பேருக்கு ஓர் உடல்நலக் கண்காணிப்பாளர், 618 பேருக்கு ஒரு மருத்துவப் பெண் உள்ளனர். இப்போதுள்ள மொத்த டாக்டர்கள் 47,400. இவர்களில் 34,400 பேர் தனியாகத் தொழில் புரிகின்றனர். இவர்களிலும் பெரும்பாலோர் .நகரப் பகுதிகளில் உள்ளனர். பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்த மொத்த நோயாளிப் படுக்கைகள் 73,000; அதாவது ஜனத்தொகையில் 4,000 பேருக்கு ஒன்று. இங்கிலாந்திலும் வேல்சிலும் 1,000 பேருக்கு 7 படுக்கைகள் விதம் உள்ளன (ஆரோக்கியக் கண்காணிப்பு, முன்னேற்றக் குழுவின் அறிக்கை, 1946. Vol. I, பக்கம் 13-16). 1955-56-ல் டாக்டர்கள் 70,000, செவிலிகள் 22,000, மருத்துவப் பெண்கள் 26,000. ஆரோக்கியக் கண்காணிப்பாளர்கள் 800, செவிலித் தாய்களும் தாய்களும் (dais) 6,000, ஆரோக்கிய உதவியாளர்களும் சுகாதாரக் கண்காணிப்பாளர்களும் 4,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மீக்கோன் தரத்தை (norms) 1,000 பேருக்கு ஓர் படுக்கை, 5,000 பேருக்கு ஒரு செவிலியும் ஒரு மருத்துவப் பெண்ணும், 20,000 பேருக்கு ஓர் ஆரோக்கியக் கண்காணிப்பாளரும் ஒரு சுகாதாரக் கண்காணிப்பாளரும் என்று நிருணயித்துள்ளது. ஆரோக்கியத் திட்டங்களுக்கான முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது ரூ. 140 கோடி. ஆனால், இரண்டாம் திட்டத்தில் ரூ. 274 கோடி இதற்காக அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம், நல்ல வீடுகளையும், சாக்கடைகளையும், மருத்துவ நிலையங்களையும் கட்டுவதற்கும் கடன்களை எழுப்பலாம்.[1]

அரசாங்கம் பெறக்கூடிய சாதனங்கள் மக்களின் சாதனங்களைப் பொறுத்தே இருக்கும். உற்பத்தி சாதனங்களுக்கு ஏற்பவோ, அதற்கும் வேகமாகவோ, ஜனத்தொகை பெருகினால் மக்களின் சாதனங்களைப் பெருக்க முடியாது. நம்முடைய குறைவான சாதனங்களைக்கொண்டு, ஆண்டுக்கு $1\frac{1}{4}$ சதவீதம் உயர்ந்துவரும் அதிகப் பிறப்பு வீதத்தினால் உண்டாகக்கூடிய துன்பத்தைக் குறைப்பதற்கு, எந்த முற்போக்கான தேசிய அரசாங்கத்தாலும் முடியாது. 'கடந்த காலத்தின் கந்தாயங்களைக் கழிப்பதே பெரிய வேலையாயிருக்கிறது. இந்த உண்மையை நன்கு உணர்ந்தால், நம் சமூக, பொருளாதார அமைப்பில் ஓர் அடிப்படையான மாறுதலைச் செய்ய வேண்டுமென்ற பெரும்பாலோர் விருப்பத்தை நாமும் தீவிரமாக ஆதரிப்போம். ஆனால், ஆண்டுதோறும் ஒரு கோடி குழந்தைகள் பிறப்பதால் இந்த வேலை மிகவும் கடினமாகிறது. இக் குழந்தைகளில் கால் பகுதி ஓராண்டுக்கு மேல் உயிர் வாழ்வதில்லை. அரைப் பகுதி 10 வயது வரையில்கூட வாழ்வதில்லை. இதனால், ஒரு வெறுப்புணர்ச்சியும், உயிராற்றல், மக்கள் இன்பம் ஆகியவற்றின் அளவற்ற அழிவும், அவர்களுடைய மிகக் குறுகிய வாழ்க்கைக்காகச் சாதனங்கள் முற்றிலும் வீணாக்கப்படுவதும்தான் நாம் கண்ட பலன். ஆகையால், எத்தகைய அடிப்படையான மாறுதல்களும், ஓர் ஆரோக்கியமும் நாகரிகமும் பொருந்திய வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மிகக் குறைந்த அளவில்கூட அளிக்க முடியாது.'[2]

ஒரு நாட்டில் பிறப்பவர்களின் எண்ணிக்கைக்கும், அதன் சமூக நிலைமைக்கும் ஒரு முக்கியமான தொடர்பு உண்டு. இது போலவே சமூக நிலைமையானது, பிறப்பவர்களின் எண்ணிக்கையைப் பாதிக்கிறது. ஃபிரான்சில் உள்ள குறைந்த பிறப்பு வீதத்தினால், அதிக உற்பத்தி சக்தியுள்ள மக்கள் உண்டாகிறார்கள். ஆனால், அதனால் எதிர் காலத்திற்கு நன்மை ஒன்றும் இல்லை. குறைந்த பிறப்பு வீதத்தினால், குறைவான உற்பத்தி சக்தியோ, சமூக ஒழுக்கக் கேடோ ஏற்படுமாயின், அது தீங்கானது. உயர்ந்த பிறப்பு

[1] UNICEF-ன் 8,50,000 டாலர் உதவியைக்கொண்டு இந்திய அரசாங்கம் பூனாவில் ஒரு பெனிசிலின் தொழிற்சாலையைத் தொடங்கியிருக்கிறது. பம்பாய் அரசாங்கம் ஒரு D. D. T. தொழிற்சாலையை நிறுவியிருக்கிறது. பம்பாயில் உள்ள ஹப்கின் நிலயம் சல்பா மருந்துகளை உற்பத்தி செய்கிறது.

[2] கியான்சந்தின் மேலே கூறிய நூல், பக்கம் 173—74.

வீதமானது, உற்பத்தி சக்தியை மிகவும் அதிகமாக்கி, இடைவிடாத வறுமையை உண்டாக்குமாயின், அது தீங்கானது. உயர்ந்த பிறப்பு வீதத்தாலும், உயர்ந்த இறப்பு வீதத்தாலும், அல்லது மிதமான பிறப்புகளாலும் இறப்புகளாலும் ஒரு சமூகம் வளருமாயின், அது அந்தச் சமூகம் எத்தகைய நாகரீக நிலையில் இருக்கிறது என்பதற்கு ஓர் அறிகுறியாகும். மிகுந்த பிறப்பு வீதமும், மிகுந்த இறப்பு வீதமுமே, உயிர் வீணுக அழிவதற்கு அறிகுறியாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஜனத்தொகையில் 1000 பேருக்கு 7 அல்லது 8 பேர் வாழ்வதற்கு 17 அல்லது 18 பேர் சாக வேண்டும் என்பது பொருளாகிறது.

குழந்தை பெறும் வயதுடைய (15—45) பெண்களில் ஆண்டுதோறும் ஆயிரம் பேருக்குப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக்கொண்டு இனப் பெருக்க வீதம் (fertility rate) கணிக்கப்படுகிறது. இனப் பெருக்க வீதம் மாருமலிருக்கும்போது, பிறப்பு வீதம் குறையக்கூடும். 1000 பேரில், குழந்தை பெறும் வயதுடைய பெண்கள் 240-க்குப் பதில் 120 ஆக இருந்தால், இனப் பெருக்க வீதம் மாருமலிருக்கக் கூடும்; ஆனல், பிறப்பு வீதம் பாதியாகக் குறைந்துவிடும். எல்லா நாடுகளிலும் இனப் பெருக்க வீதத்தை நிர்ணயிப்பதில், குழந்தை பெறும் பெண்களை வயதுப்படி பிரிப்பது ஒரு முக்கியமான அமிசமாகக் கொள்ளப்பட வேண்டும்.

1931-ல் இந்தியாவில் இனப் பெருக்க வீதத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு தனி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதன்படி, குழந்தை பெறும் முப்பது வருடங்களில் ஒரு பெண் சராசரியாக அந்தக் காலம் முழுவதிலும் 6 முதல் 7 குழந்தைகளைப் பெறுகிருள் என்று தெரிந்தது. இந்த முடிவை விளக்குவதற்குக் கீழ்க்கண்ட அட்டவணை உதவும்.

இனப் பெருக்கப் பண்பு முடிவுற்ற
ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைகள்

மாகாணம் அல்லது இராச்சியம்	குழந்தைகளின் எண்ணிக்கை	மாகாணம் அல்லது இராச்சியம்	குழந்தைகளின் எண்ணிக்கை
அஸ்ஸாம் ...	6·7	மத்திய மாகாணம்	6·7
வங்காளம் ...	6·0	பரோடா ...	6·0
பம்பாய் ...	6·1	மைசூர் ...	7·0
ஞ்சாப் ...	6.4	திருவாங்கூர் ...	6·4

இந்தியாவில் இனப் பெருக்க வீதத்திற்குரிய விவரங்கள் அதிகம் கிடைக்கவில்லே. 1931-க்குக் கொச்சியில் கிடைத்த விவரங்களேக் கொண்டு, கீழ்க்கண்ட ஒப்பெண்கள் கிடைத்துள்ளன :

வயது காலம்	கொச்சி	இங்கிலாந்தும் வேல்சும்	வயது காலம்	கொச்சி	இங்கிலாந்தும் வேல்சும்
15—19	224	372	30—34	246	127
20—24	249	267	35—39	182	81
25—29	257	187	40—44	120	33

	கொச்சி	இங்கிலாந்தும் வேல்சும்
மொத்த இனப்பெருக்கம்	6,370	5,335

இந்தியாவுக்கும், இங்கிலாந்து—வேல்சுக்கும் உரிய பிறப்பு வீதங்களில் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஆனல் இனப் பெருக்க வீதத்தில், குறைவான வித்தியாசமே உள்ளது. சராசரியாக இந்தியப் பெண் 6 குழந்தைகளேயும், ஆங்கிலப் பெண் 5 குழந்தைகளேயும் பெறுகிருள். ஆனல், ஆங்கிலேயர்களிடையே அதிகமாக உள்ள கருத்தடை முறைகளேக் கருதும்போது, ஆங்கிலப் பெண்ணே விட இந்தியப் பெண் அதிக விருத்தியுடையவளல்ல, குறைவான விருத்தியுடையவளே என்று முடிவு கட்டலாம்.[1]

மேனுடுகளில், வெவ்வேறு வகையாக உள்ள பிறப்பு வீதத்தைச் சில சமயங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிருர்கள். உயிரியல் முறைப்படி உயர்ந்தவர்களாகக் கருதப்படும் மேல் வகுப்பாரைவிட ஏழைகளான கீழ் வகுப்பாரிடையே பிறப்பு வீதம் உயர்வாக இருக்கிறதென்று கூறப்படுகிறது. செல்வமிக்க வகுப்பார் இனப்பெருக்கம் செய்ய மறுப்பதால், நாகரிகம் நசித்துவிடும் என்று எச்சரிக்கை செய்கிருர்கள். மேல் வகுப்பாரிடையே குறைந்த பிறப்பு வீதம் உண்டாவதற்குக் கருத்தடை முறைகள் உதவியாயிருக்கின்றன. இந்தியாவில் வெவ்வேறு வகுப்பார், சாதியார்களுடைய பிறப்பு வீதத்தைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியாது. ஆனல், 1931-ல் நடத்தப்பட்ட விசேஷ ஆராய்ச்சியிலிருந்து மேல் வகுப்பாரிடையே குறைந்த பிறப்பு வீதம் இருக்கிறதென்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லே. கீழே உள்ள அட்டவணேயைக் காண்க :[2]

[1] கோஷ்—மேலே கூறிய நூல், பக்கம் 15, 17.

[2] மேற்கூறிய கியான்சந்தின் நூலிலிருந்து (பக்கம் 157—9) இந்த அட்டவணே சுருக்கித் தரப்பட்டுள்ளது.

	ஒரு குடும்பத்தில் பிறக்கும் சராசரி குழந்தைகளின் எண்ணிக்கை
விவசாயிகள்	4·4
தொழில்கள்	4·2
உத்தியோகங்கள்	4.3
சட்டம், வைத்தியம், ஆசிரியத்தொழில் ...	3·7
அரசாங்க நிருவாகம்	3·9
எல்லா வேலைகளுக்கும் சராசரி	4·3
பிராமணர்கள்	5.2
காயஸ்தர்கள்	6·3
தாழ்த்தப்பட்ட வகுப்பார்	4·1

கணக்கெடுப்பு அறிக்கை கூறும் எண்கள், இடைப்பட்ட காலத்தில் நிலைமை அடியோடு மாறவில்லை என்பதைக் காட்டுகின்றன. 1951–ல் ஒரு குடும்பத்திற்குச் சராசரி கிராமப் பகுதிகளில் 4·3 குழந்தைகளும், நகரப் பகுதிகளில் 4·2 குழந்தைகளும் இருந்தன.

1951ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கையில் குழந்தை பிறப்புப் பற்றிய கீழ்க்கண்ட குறியீட்டு அட்டவணையும் தரப்படுகிறது:

தாய்மார் பிரிவு		வயது 45–ம் அதற்கு மேலும்	எல்லா வயதுகளும்
விவசாய நிலம் உடையவர்களும் வாரக் குடிகளும்	...	6·7	4·5
விவசாய உழைப்பாளிகள்	...	6·3	4·1
விவசாயிகள் அல்லாத குடும்பங்கள்	...	6·6	4·2

இந்த அட்டவணைகள், இந்திய மக்கள் தம்மால் இயன்ற அளவு இனத்தைப் பெருக்கும் போக்குடையவர்கள் என்பதைக் காட்டுகின்றன. எல்லாச் சாதியாரும் வகுப்பாரும் தம் இனப் பெருக்க ஆற்றலை முழுவதும் பயன்படுத்துகிறார்கள். உலகத்திலேயே மிக அதிகமாக உள்ள இந்தப் பிறப்பு வீதம் உடனடியாக மாறக்கூடியதாக இல்லை என்று தெரிகிறது. அடிப்படையான

சமூக மாறுதல்களைச் செய்ய முடியாதென்பதல்ல; காந்திஜியைப் போன்ற ஒரு சக்தி வாய்ந்த மனிதர் விரைவான மாறுதல்களை உண்டாக்க முடியும். சமூக சீர்திருத்தங்கள் அளவிலும் சிறப்பிலும் அதிகமாக உண்டாகிக் கொண்டிருக்கின்றன. மாதரின் நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது. மக்கள், வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கவும் ஆராயவும் தொடங்கியிருக்கிறார்கள். கருத்தடை மருந்துகள் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; கற்றவர்களிடையே அவை மேலும் அதிகம் பயன்படலாம். எனினும், எதிர் காலத்தில் மக்கள் தொகையின் போக்கு எப்படியிருக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது.

உற்பத்தியைப் பெருக்கி, வருமான அளவை நம் நாட்டில் அதிகப்படுத்திப் பிறப்பு வீதத்தைக் குறைக்கலாம் என்று எண்ணுங்கால், இப் பிரச்சினையில் இடையே புகுந்து, உடனடியாகப் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்குத் தடையாயுள்ள சில அமிசங்களை நாம் மறந்துவிட முடியாது. இந்த அமிசங்களை நாம் முன்பே வற்புறுத்தியிருக்கிறோம். சென்ற 20, 30 ஆண்டுகளில் ஒரு சக்தி வாய்ந்த அரசாங்கமும், போக்குவரத்துத் தொடர்பு வசதிகளின் முன்னேற்றமும், பெருவாரி நோய்க்கட்டுப்பாடும், ஓரளவு சுகாதாரமும், நம் நாட்டை மூலப் பொருள்கள் பெறுவதற்கு இடமாகவும் பொறிசெய் பொருள்களை விற்பதற்குச் சந்தையாகவும் செய்த குடியேற்ற நாட்டுக் கொள்கையும், எல்லாமாகச் சேர்ந்து நம் ஜனத்தொகை வளர்ச்சிக்குக் காரணமாயின. அதே சமயத்தில் வாழ்க்கைத்தர உயர்வு ஏற்படவில்லை. இவற்றோடு, விதவை மறுமணத் தடைக்கு எதிர்ப்பையும், அதிக இனப்பெருக்கத்திற்குக் காரணமான சமூக-சமய அமைப்பை ஆதரிக்கும் நடுநிலைமையான மதக் கொள்கையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்திய மக்களின் முழுப் பழக்கவழக்க அமைப்பும் கலாசாரமும் எப்படியாவது மாறினாலொழிய, இந்தியாவில் படிப்படியான உற்பத்திப் பெருக்கத்தினால், பிறப்பு வீதம் மாறாமலிருந்து இறப்பு வீதம் மட்டும் குறையக்கூடும். இவையெல்லாம், விரைவில் உண்மையான பொருளாதார முன்னேற்றம் உண்டாவதற்கும், இனப்பெருக்கப் பண்பைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான அமிசங்களாகும். ஒரு வேகமான புரட்சி ஏற்பட்டாலொழிய, மக்கள் தம் சோம்பலை விட்டு, ஒரு சுமை போலத் தம்மை அழுத்திக்கொண்டிருக்கும் மதத்தை உதறிவிட்டு இந்தக் கலாசார மாறுதலையடைவார்கள் என்று கருத முடியாது.[1]

[1] 'உலகத்திற்கு உணவு' Ed. by T. W. Schult, Chicago 1945, papers and discussion by Notestein and Lorimer. பக்கம் 50, 66.

இந்தியாவின் இனப் பெருக்க வீதத்தைப்பற்றி முடிவாகக் கூறப் போந்த கிங்ஸ்லி டேவிஸ் கேட்கும் கேள்வியாவது: 'அபாயமான ஜனத்தொகை வளர்ச்சியோ, பேராபத்தான இறப்புவீத உயர்வோ வராமல் தடுப்பதற்கு, உரிய காலத்தில் இனப் பெருக்கப் பண்பு குறைக்கப்படுமா?' என்பது. இதற்கு எதிர்மாறான முடிவுக்கு அவர் வருகிறார். நகர வாழ்க்கை அதிகமானதால் பிறப்பு வீதம் குறையத் தொடங்கவில்லை. முஸ்லீம்கள் விதவை மறுமணத்தை ஓரளவு அனுமதிப்பதால், அவர்களிடையே அதிக இனப் பெருக்க வீதம் உள்ளது. இந்தியர்களின் இனப் பெருக்க வீதம் அதிகமாயிருப்பினும், உயிர்நூல் அனுமதிக்கும் அதிகபட்ச அளவுக்குக் கீழேயே இருக்கிறது. ஏனெனின், அது விதவை மறுமணத் தடை போன்ற சமூகப் பழக்கங்களால் மறைமுகமாகக் கட்டுப் படுத்தப்படுகிறது. மேனாட்டுத் தொடர்பினால் இந்தக் கட்டுப்பாடு களின் விளைவு குறையக்கூடும். கருத்தடை மருந்துகள், கருச் சிதைவு போன்ற கட்டுப்பாடுகள் வரும்வரையில், பிறப்பு வீதத்தில் அதிகக் குறைவை எதிர்பார்க்க முடியாது. 'சீக்கிரத்தில் இனப் பெருக்க வீதம் குறைவதற்கு வழியில்லை என்ற துக்ககரமான முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது'.[1]

பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும் உள்ள சம்பந்தத்தைக் காணும்போது, ஏற்கெனவே நாம் கூறியதுபோல், அதிகப் பிறப்பு இறப்பு வீதத்தினால் உண்டாவது போலவே குறைந்த பிறப்பு இறப்பு வீதத்தினாலும் நிகர ஜனத்தொகை உயர்வு உண்டாகும். அதிகப் பிறப்பு இறப்பு வீதம் அரைகுறை நாகரிகமுள்ள நாடுகளின் தன்மை என்றும், குறைந்த பிறப்பு இறப்பு வீதம் முழு நாகரிமடைந்த நாடுகள் அடைய வேண்டிய இலட்சியம் என்றும் நாம் நினைக்கிறோம். ஒவ்வொரு வருடமும் ஒரு சமூகத்தின் நிலை எத்தகையது என்று அறிவதற்கு இறப்பு வீதம் ஒரு குறியீடாகும். போர்கள், பெருவாரி நோய்கள், பொரு ளாதார மந்தநிலை ஆகியவை அதிக இறப்பு வீதத்தை உண்டாக்கு கின்றன. குறைந்த இறப்பு வீதம், பொருளாதாரச் செழிப்புக்கும், ஆரோக்கிய வாழ்க்கைக்கும், விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தும் தன்மைக்கும் அறிகுறியாகும். ஆண், பெண், வயது, சீதோஷ்ணம், இன வேறுபாடு, வேலையின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இறப்பு வீதம் வேறுபடும். பொருளாதாரக் கஷ்டம் வரும்போது ஒரு சமூகம் அதை எப்படித் தாங்கிக்கொள்கிறது என்பதற்கு அது ஓர் அறிகுறி. ஒவ்வோராண்டுக்கும், மாறும் நிலைமைகளுக்கு ஏற்பவும் இறப்பு வீதத்தில் ஏற்ற இறக்கம் இருந்தால், அந்தச்

[1] கிங்ஸ்லி டேவிஸ் எழுதிய மேற்கூறிப நூல். பக்கம் 81–82.

சமூகம் இயற்கைச் சக்திகளை எதிர்த்து நிற்க ஆற்றல் இல்லாதது என்பதை அது காட்டும்.

இந்தியாவில் 1000-க்கு 25 என்று பதிவு செய்யப்பட்ட மரண வீதம், உண்மையான மரண வீதமாகிய 1000-க்கு 33-ஐவிடக் குறைவானது.[1] 1918-ல் இன்புளுவென்சா நோயால் இறப்பு வீதம் 1000-க்கு 62 ஆக உயர்ந்தது. அந்த ஆண்டில், பதிவு செய்பவர்கள் சரியாக செய்யாததால், பதிவு சரியாக இல்லை. ஆயுள் அட்டவணையிலிருந்து கீழ்க்கண்டபடி நம்பத் தகுந்த சரியான இறப்பு வீதம் கிடைத்துள்ளது :

	1881	1891	1901	1911	1931
ஆண்	42	41	42	44	37
பெண்	39	39	42	43	38

1921-லிருந்து, உலகத்தில் மற்ற நாடுகளைவிட இந்தியாவில் உயிரோடிருக்கும் வீதம் (Survival rate) அதிகமாக உள்ளது. பக்கம் 177-ல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் சில ஒப்பெண்களைக் காணலாம்.

போர்க்காலத்தில் இருந்த அசாதாரண நிலைமையின் காரணமாக 1911—20-க்குரிய வீதம் இதில் கொடுக்கப்படவில்லை. ஜப்பானுக்கு அடுத்தபடியாக, 1931 முதல் இந்தியாவில் உயிரோடு இருக்கும் வீதம் உலகத்திலேயே அதிகமாக உள்ளது. 1947—50-ல் அமெரிக்காவில் திடீரென்று இந்த வீதம் உயர்ந்ததற்கு யுத்தப் பிற்கால நிகழ்ச்சிகள் காரணமாக இருக்கலாம். இந்தியாவில் 1910-17, 1922-30 ஆகிய காலங்களில், வழக்கமாக இருந்ததைவிட பிறப்பு வீதம் அதிகமாகவும், இறப்பு வீதம் குறைவாகவும் இருந்தது. முன்பைவிடப் பஞ்சத்தினல் ஏற்படும் மரணங்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம், உணவு உற்பத்திப் பெருக்கம் அன்று; போக்குவரத்து வசதியும், நிருவாக அமைப்பும் சீர்திருத்தப்பட்டிருப்பதுதான். போதிய ஊட்டம் (Nutrition) இன்மையால் நோய்களை எதிர்க்கும் ஆற்றல் குறைந்துள்ள மக்களைக் கொண்ட இந்தியாவில், 1910—11, அல்லது 1918—19-ல் இருந்ததைவிட

[1] பதிவு செய்யப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட மரண வீதம் அதிகமாக இருப்பினும், 1921-க்குப் பிறகு அது குறைந்துவிட்டது. அது 1881—1891-ல் 1000-க்கு 41, 1921—31-ல் 1000-க்கு 36, 1941—45-ல் 1000-க்கு 22 ஆகக் குறைந்தது, ஆனல், மரண வீதம் குறைந்தாலும், பிறப்பு வீதம் அப்படியே இருக்கிறது. 1951 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கை, 1941—50-க்குச் சராசரிப் பிறப்பு வீதம் 40 என்றும், அதே காலத்திற்குச் சராசரி இறப்பு வீதம் 27 என்றும் தெரிவிக்கிறது.

12

உயிரோடிருக்கும் விதம்

		1891—1901	1901—11	1921—25	1926—30	1931—35	1947—50
இங்கிலாந்து	...	11·7	11·8	8·0	4·9	3·3	6·30
சுவீடன்	...	10·7	10·7	7·0	3·8	2·5	7·62
ஃபிரான்ஸ்	...	0·6	1·2	2·1	1·4	0·8	0·03
அமெரிக்கா	...	...	...	10·7	7·9	6·0	14·55
ஜப்பான்	...	8·9	11·4	12·8	14·2	13·7	19·98
இந்தியா	...	4·1	4·3	6·7	9·0	10·9	8·78

மரண வீதம் இன்னும் அதிகமாகக் கூடும். கூனூரில் உள்ள ஊட்ட ஆராய்ச்சிச்சாலைத் தலைவர், 'இந்தியாவில் பதிவு செய்யப் பட்ட மரணங்களில் பாதி, பத்து வயதுக்கும் குறைந்த குழந்தை களிடையேதான் உண்டாகிறது. உலகில் பிறந்தவுடன் வெகு சீக்கிரத்தில் இவ்வுயிர்கள் வெளியேறிவிடுவதற்குக் காரணம் போதிய ஊட்டம் இன்மையே' என்று கூறுகிறார்.[1]

போதிய முன்னேற்றமடையாத நாடுகளில் அதிக மரண வீதத் திற்குக் காரணமான அமிசங்களை ஆராய்ந்த, 'ஜனத்தொகைப் போக்குகளை நிருணயிப்பவையும், அவற்றின் விளைவுகளும்' என்னும் ஐக்கிய நாடுகளின் அறிக்கை கூறுவதாவது: 'குறைவான தலா வருமானம், அதிக வீதக் கல்வியின்மை, ஆண்களில் பெரும் பாலோர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பது, ஒரு வைத்தியரை நம்பி அதிகம் பேர் இருப்பது ஆகியவற்றால் அதிக மரண வீதம் உண்டா கிறது. குடியிருப்பு வசதி, ஊட்டம், பொதுச் சுகாதாரம் முதலியவை பற்றிய புள்ளிவிவரங்கள் கிடைக்காவிட்டாலும், இந்த அமிசங் களுக்கும் வெவ்வேறு மரண வீதங்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடும்.'[2]

தட்ப வெப்ப நிலை தவிர, ஆரோக்கிய வாழ்க்கைபற்றிய அறிவின்மை, மருத்துவ விடுதிகளும் மருந்துகளும் போதிய அளவு இன்மை, மக்களின் வறுமை ஆகியவையும் இந்தியாவில் அதிக மரண வீதத்திற்குக் காரணமாயிருக்கலாம். நம்மிடையே அதிகப் பிறப்பு வீதம் இருக்கும்வரையில், நமது நிலையில் உடனடியாக ஒரு மாறுதலும் உண்டாகாது என்பது தெளிவு.

நிகர இன விருத்தி வீதம்

கடந்த 50 ஆண்டுகளில், வெள்ளையர்கள் வாழ்ந்துவரும் எல்லா நாடுகளிலும் இனப் பெருக்க வீதத்தில் தெளிவாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குழந்தை பெறும் வயதில் உள்ள திருமணமான பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ரஷ்யாவில் 5 முதல் 6-ம்,

[1] 'இந்தியாவின் ஆரோக்கியம்' என்னும் ஆக்ஸ்ஃபோர்டு துண்டுப் பிரசுரத்தில் (பக்கம் 8) மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

[2] பக்கம் 49

தென் கிழக்கு ஐரோப்பாவில் 3 முதல் 4-ம் ஆகும்; ஆனல், மேற்கு ஐரோப்பாவிலும், வடக்கு ஐரோப்பாவிலும் உள்ள பெரும்பாலான நாடுகளிலும், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் இரண்டு தான். இத்தாலி, ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகள், குறைந்துவரும் இனப் பெருக்க வீதத்தைக் கண்டு கவலைகொண்டு, பெரிய குடும்பங் களை உண்டாக்குவதற்குப் பல வழிகளைக் கையாண்டன. பெரிய அளவு குடும்பங்களை உடைய வேலையாட்களுக்கு வரி விலக்கு அளித்தல், குழந்தை பிறப்புக்கு வட்டம் (birth premia) அளித்தல், பெரிய குடும்பம் உள்ளவர்களுக்கு அரசாங்க வேலையில் சலுகை அளித்தல் முதலிய முறைகளைக் கையாண்டும், எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ஆகையால், பொருளாதார வல்லுநர்கள், பிறப்பு இறப்புகளுக்கிடையே உண்மையான சமநிலையை உண்டாக்க வேண்டுமானல், இனப் பெருக்க வீதத்தைக் கருதாமல் நிகர இன விருத்தி வீதத்தையே கவனிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.[1] இந்த வீதமானது, இப்போதுள்ள ஒரு தாய்க்கு எதிர் காலத்தில் பிறக்கக்கூடிய சராசரி தாய்மார்களின் எண்ணிக்கையைக் காட்டும். இந்த வீதம் ஒன்று என்றால், இந்தத் தலைமுறையில் உள்ள தாய் மார்கள் இறந்த பிறகு, அவர்கள் எல்லோருக்கும் பதிலாகப் புதிய பெண்கள் பிறந்து, ஜனத்தொகை மாறாமலிருக்கும் என்று பொருள். இந்த வீதம் ஒன்றுக்கு அதிகமாயிருந்தால் ஜனத்தொகை உயரும்; இது ஒன்றுக்குக் குறைவாயிருந்தால் ஜனத்தொகை குறையும்.[2] இவ்வாறு பார்த்தால் கீழ்க்கண்ட விளைவுகள் உண்டாகும்.

[1] Kuczynski கூறுகிறார்: 'இறப்பவர்களைவிடப் பிறப்பவர்கள் அதிகமா? என்பது தேவையான கேள்வியன்று. ஆனல், நிலையாக ஒரு குறிப்பிட்ட பிறப்பு இறப்பு வீதங்களுக்கு ஆளாகும் தலைமுறை ஒன்று, தான் இருக்கும் போதே, அதாவது தான் இறப்பதற்கு முன்பே, அத் தலைமுறைக்கு ஈடான எண்ணிக்கையுள்ள குழந்தைகளைப் பெறுமா? என்பதே கேள்வி. குறிப்பாக இக்கேள்வி யாதெனின், புதிதாகப்பிறந்த 1,000 பெண்கள் தம் வாழ்க்கையில் 1,000 பெண்களைப் பெற்றெடுப்பார்களா? என்பதுதான்' (Balance of Births and Deaths, Vol. I, பக்கம் 41).

[2] 'ஜனத்தொகைப் பிரச்சினை' என்ற நூலில் Kuczynski 'உலக ஜனத்தொகை' என்னும் கட்டுரை (1938, பக்கம் 113), 15 முதல் 45 வயது வரையுள்ள 1,000 பெண்கள் பெறும் குழந்தைகள் இனப் பெருக்க வீதம் எனப்படும். சரா சரியாக 45 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறகு ஒரு பெண் குழந்தை இருக்குமாயின், ஜனத்தொகை சரியாகப் பெருகிக் கொண்டேயிருக்கும். அப்போது நிகர இன விருத்தி வீதம் ஒன்று. வீதம் ஒன்று என்றால், சராசரியாக 15 முதல் 45 வயதுடைய 100 பெண்கள், இறந்த பிறகு அவர்களுக்குப் பதில் அதே வயதுடைய 100 பெண்கள் இருப்பார்கள் என்று பொருள். நிகர இன விருத்தி வீதம். 75 என்றால், குழந்தை பெறும் வயதுடைய (15—45) 100 பெண்களுக்குப் பிறகு 75 பெண் கள்தாம் இருப்பார்கள் என்று பொருள்.

வெவ்வேறு நாடுகளின் நிகர இன விருத்தி விதங்கள்[1]

இங்கிலாந்து		ஆஸ்திரேலியா		அமெரிக்கா		ஃபிரான்ஸ்	
1920	1·265	1921	1·313	1930	1·091	1920	0·980
1930	0·840	1930	1·130	1935	0·975	1930	0·930
1935	0·764	1935	0·945	1940	1·023	1935	0·870
1940	0·772	1940	1·017	1943	1·190	1938	0·910[2]
1946	1·111	1941	1·244	1946	1·359	1946	1·270
1947	1·205	1946	...	1947	1·524	1947	1·310
1948	1·070	1947	1·364	1948	1·462		
		1948	1·326				

1920-க்கும் 1935-க்கும் இடையிலிருந்ததைப் போலவே நிகர இன விருத்தி வீதம் குறைந்துகொண்டு வருகிறது என்று கொண்டால், 1938-ல் 450 இலட்சமாக இருந்த இங்கிலாந்து—வேல்சின் ஜனத்தொகை 1975-ல் 380 இலட்சமாகவும், 2035-ல் 200 இலட்சமாகவும் குறையும். 420 இலட்சமாக இருந்த, ஃபிரான்சின் ஜனத்தொகை 1975-ல் 300 இலட்சமாகக் குறையும். எனினும் இரண்டாம் உலக யுத்தத்தின்போதும், அதற்குப் பிறகும், மேனுடுகளில் (ஃபிரான்ஸ் உள்பட) இக் குறைவு தடுக்கப்பட்டதோடன்றி, நிகர இன விருத்தி வீதம் உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. ஜனத்தொகையை உயர்த்துவதன்றி, அதன் வளர்ச்சியைத் தடுப்பதே விரைவில் பிரச்சினேயாகிவிடும். இந்த மாறுதலுக்குக் காரணம் கூறுவது சிறிது கடினம்தான். மாறிவரும் இந்த நிலேமையில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கும், குறைந்து வரும் பிறப்பு வீதத்திற்கும் தொடர்பு உண்டு என்பதை ஒத்துக்கொள்ள முடியாது.

இந்தியாவின் நிகர இன விருத்தி வீதத்தைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதன்று. வெவ்வேறு வயதுடைய பெண்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளேப்பற்றிப் புள்ளிவிவரம் கிடைக்கவில்லே. இந்த விவரம் (data) இல்லாததனுல், ஜனத்தொகை வளர்ச்சியின் இனப் பெருக்க வீதத்தையே எடுத்துக்கொள்ளலாம். நமது பெருகும் ஜனத்தொகையைப் பெருவாரி நோய்கள் இயற்கையாகக் குறைத்தாலோ, விரைவான பொருளாதார முன்னேற்றத்தால் இந்த வளர்ச்சி வீதம் குறைந்தாலோ அன்றி, அதிக வறுமை ஏற்பட்டு நம் எண்ணிக்கை உயரக்கூடும்.

[1] 'Demographic Year Book—1949–50' United Nations.

[2] இடையிலுள்ள ஆண்டுகளுக்கு விவரங்கள் கிடைக்கவில்லே.

ஏனெனின், அண்மையில் நம் பிறப்பு வீதம் மாறக்கூடியதாக இல்லை. பொருளாதார வளர்ச்சியின் வேகம் எவ்வளவு அதிகமாக இருப்பினும் (இது நம் ஆழ்ந்த விருப்பம்), பாமர மக்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் அளவைப் பாதிக்கும் அளவுக்கு வாழ்க்கைத்தரம் உயரக்கூடியதாக இல்லை. ஆகையால், வரும் 20, 30 ஆண்டுகளில், படிப்படியாக உயர்ந்துவரும் ஜனத்தொகையானது, நமது சமன் செய்யப்படாத, சீர்கேடான பொருளாதார—சமூக அமைப்போடு மோதுவதால் உண்டாகும் ஜனத்தொகைப் பிரச்சினையே பெரிதாக இருக்கும்.[1]

இச் சந்தர்ப்பத்தில், அடுத்த பத்து வருடங்களில் சிசு மரண வீதம் குறைவதால் உண்டாகக் கூடிய ஜனத்தொகை உயர்வை பக்கம் 182-ல் காட்டும் அட்டவணை அதிகப் பயனுள்ளது. இது இந்தியக் கணிப்பு, தாள் 3-ல் (Census of India, Paper No. 3, 1949) இருந்து எடுக்கப்பட்டது.

ஆக, 1951—61-ல் உண்டாகும் 25% சிசு மரண வீதக் குறைவினால், இந்தியாவின் 1961ஆம் ஆண்டுக் கணிப்பில் 1,20,00,000 மக்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவார்கள். 'ஜனத்தொகையோடு சேரும் எண்ணிக்கை மதிப்பீடுகள் அதிகமாக இருப்பினும், அவை குறைவான மதிப்பீடுகளே என்பதை அறிய வேண்டும். இதற்கு முக்கிய காரணம், சிசு மரண வீதத்தில் ஏற்படக்கூடிய குறைவை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டிருப்பினும், அதிக வயதுடையவர்களிடையே ஏற்படக்கூடிய குறைவை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதே.[2]

1951-ஆம் ஆண்டுக் கணிப்பைப்பற்றிய அகில இந்திய அறிக்கையில் கணிப்பு ஆணையாளர் (Census Commissioner) இந்தியாவில் எதிர் காலத்தில் ஜனத்தொகை வளர்ச்சிபற்றிய மதிப்பீடு ஒன்றைத் தருகிறார். 1981ஆம் ஆண்டோடு முடியும் 30 ஆண்டுகளுக்கு அவர் தம் கருத்தை வெளியிடுகிறார். அவருடைய கணிப்பு இரண்டு எடுகோள்களில் ஒன்றைத் தழுவியது: (அ) 1951—60, 1961—70, 1971—80 ஆகிய ஒவ்வொரு பத்தாண்டுக்கும் சர்ாசரி வளர்ச்சி, 1921—50-ல் இருந்த 30 ஆண்டுகளின் சராசரி வளர்ச்சி போலவே இருக்கும். (ஆ) இந்த முப்பது

[1] 1931-க்குரிய அகில இந்தியப் பெண்களின் ஆயுள் அட்டவணையோடு, கொச்சிக்குரிய இனப் பெருக்க விதத்தைப் பொருத்தி நமது நிகர இன விருத்தி விதம் 1·1 என்று திரு. D. கோஷ் கணித்திருக்கிறார்.

[2] 'சிசு மரண விதக் குறைவினால் இந்திய யூனியனின் ஜனத்தொகையில் ஏற்படக்கூடிய விளைவு'—Dr. சத்திய சுவரூப், பக்கம் 3.

ஒவ்வொரு கணிப்பு வருடத்திலும் சேர்த்து எண்ணப்படக்கூடிய அதிக மக்களின் எண்ணிக்கை.

ஜனத்தொகை உயர்வின் மூலம்	1931	1941	1951	1961 1920-46-ன் போக்கைத் தழுவிக் கணிக்கப் பட்டது	சிசு மரண வீதத்தில் மேலும் 25% குறையும் என்று கருதிக் கணிக்கப்பட்டது.
சிசு மரண வீதம் குறைவதால் அதிகமாகும் குழந்தைகள் ...	6,72,995	24,97,613	50,31,625	83,65,539	1,00,59,680
உயிரோடிருக்கும் குழந்தைகளுக்குப் பிறக்கக்கூடியவை					
(அ) முதல் தலைமுறை ...	...	17,884	4,41,964	19,54,338	19,54,420
(ஆ) இரண்டாம் தலைமுறை.	...	...	12	9,532	9,532
மொத்தம் ...	6,72,995	25,15,497	54,73,601	1,03,29,409	1,20,23,632

ஆண்டுகளில் கடைசிப் பத்தாண்டுகளில் இருந்த வீதம் போலவே சராசரிப் பத்தாண்டு வீதம் இருக்கும். இந்த இரண்டு எடுகோள் களும் எதிர் காலத்தில் ஜனத்தொகை வளர்ச்சியின் கீழ் எல்லையை யும் மேல் எல்லையையும் தருகின்றன. எதிர் கால நிலைமைபற்றிய முடிவைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.[1]

வருடம்	கீழ் எல்லை 10 இலட்சத்தில்	மேல் எல்லை 10 இலட்சத்தில்
1951	361	361
1961	407	411
1971	458	469
1981	527	535

இந்த முடிவுகள் நாடு முழுவதற்கும் பொருந்தும் என்ற ஊகத் தினல் உத்தரப் பிரதேசம், சென்னை, மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று இராச்சியங்களிலும் அதே முப்பது வருடங்களுக்கு ஜனத் தொகை எப்படியிருக்கும் என்று எதிர் கால நிலைமையைக் கண்டு பிடித்து, மேற்கூறிய கணிப்புகளை உறுதிப்படுத்த நினைக்கிருர்கள். இந்த மூன்று இராச்சியங்களுக்கான எதிர் கால நிலைமை, அங்குள்ள ஜனத்தொகையை வயதுப்படி மூன்று பெரும் பிரிவுகளாகவும், ஆண் பெண் என்ற உட்பிரிவுகளாகவும் பிரித்துக் கணிக்கப்பட்டு உள்ளது. இந்த முடிவுகள் இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இவற்றைக் கீழே உள்ள அட்டவணையில் காண்க:

வருடம்	10 இலட்சத்தில்	முன் சென்ற 10 ஆண்டுகளுக்கு உயர்வு 10 இலட்சத்தில்
1951	361	44
1961	407	46
1971	452	45
1981	515	63

[1] Census of India, 1951, பக்கம் 177 முதல்.

6. மனித அமிசம் (தொடர்ச்சி)

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் ஜனத்தொகைப் பங்கீடு

சமன் செய்யப்பட்ட பொருளாதாரம் உள்ள நாட்டில், நகரங்களிலும் கிராமங்களிலும் ஜனத்தொகை ஏறக்குறைய ஒரே மாதிரியாகப் பங்கிடப்பட்டிருக்கும். ஜனத்தொகை, நகரங்களிலோ கிராமங்களிலோ குவிந்திருப்பது, பொருளாதார, சமூக, அரசியல் தன்மையுள்ள பெரும் பிரச்சினைகளை உண்டாக்கும். 19ஆம் நூற்றுண்டின் முதற் பகுதியிலேயே இந்தியாவில் ஒரே மாதிரிப் பங்கிடப்பட்ட ஜனத்தொகை இருந்தது. கிராமங்கள், பஞ்சாயத்துகள் மூலம் தம் சமூகப் பிரச்சினைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு, தன்னிறைவுள்ள சுயாட்சிப் பகுதிகளாக இருந்தன. நகரங்களில் அரசர்கள் தொழில்களை வளர்த்து, பல பணியாளர்களையும் தமக்கு வேண்டியவர்களையும் ஆடம்பரமாக வைத்து ஆதரித்து வந்தார்கள். இந்த அரசர்களின் அரண்மனைகளுக்குக் கலைப் பொருள்கள் தேவைப்பட்டன. அரசர்களும், அவர்களைச் சார்ந்து வாழ்ந்துவந்த பணக்கார வியாபாரிகளும் நிலக்கிழார்களும், பல வணிகர்களையும், நடுவர்களையும், கைவினைஞர்களையும் வேலைக்கு அமர்த்தினர். இந்த நகரங்கள் கிராமங்களுக்குத் தம் உற்பத்திப் பொருள்களைக் கொடுத்து, அவைகளுக்குப் பதிலாகக் கிராமப் பகுதிகளிலிருந்து தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்றன.

ஐரோப்பாவில் தொழிற் புரட்சியினால் ஜனத்தொகைப் பங்கீட்டில் அதிக மாறுதல் ஏற்பட்டது. இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால், தம் வேலைகளை இழந்த கைவினைஞர்களும் தொழிலாளிகளும், விரைவாகப் பெருகிவந்த தொழிற்சாலைகளில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஏற்கெனவே ஜன நெருக்கமுள்ள நகரங்களுக்குக் கிராமப் பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் கவர்ப்

பட்டனர். உழவுக் கருவிகளின் சீர்திருத்தமும், உழவுத்தொழிலில் இயந்திரங்களைப் புகுத்தியதும், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் இடம் பெயர்வதை ஊக்கின. இந்த இடப்பெயர்ச்சிக்குத் தொடர்பு வசதிகளும் துணையாயிருந்தன. ஆக, மேனுடுகளில் இயந்திர சகாப்தமும் பேரளவு உற்பத்தியும் மக்களை நகரவாசிகளாக மாற்றிவிட்டன. ஆனால், இதற்கு மாருக, இந்தியாவில் இயந்திரத்தால் செய்யப்பட்ட மலிவான பொருள்களும், பொறிசெய் பொருள்களின் இறக்குமதியும், நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் இருந்த கைத்தொழில்களை அழித்துவிட்டன. இத் தொழில்களால் பிழைத்து வந்த நகர மக்கள் வேறு வழியின்மையால் நிலத்தை நம்பியே வாழ வேண்டியதாயிற்று. நம் நாடு உற்பத்தி செய்யும் தொழில் மயமான நாடாயிருந்து, பெரும்பாலும் விவசாய நாடாக மாற்றப்பட்டு விட்டது.

மேலும், இன்று இந்தியாவில் உள்ள நகர வாழ்க்கை பெரும்பாலும் வாணிபம் கருதியதே யன்றித் தொழில் கருதியதன்று. இந்தியாவில் இன்றுள்ள நகர் வாழ்க்கை தொழில் மயமாக்கப் பட்டதால் ஏற்பட்டதன்று. அது செயற்கையாக உண்டாக்கப்பட்ட ஒரு பொருளாதார மாறுதலின் செயற்கையான விளைவாகும். முக்கியமான ரெயில் சந்திப்புகளும், பங்கீட்டுக் கேந்திரங்களுமாக இருந்த காரணத்தாலும், பிரிட்டிஷ் நிருவாகத்தின் கேந்திரங்களும், அரசாங்க இலாகாக்களின் தலைமை இடங்களுமாக இருந்ததாலும், நாகபுரி, கான்பூர் போன்ற பல நகரங்கள் இன்றுள்ள அளவுக்கு வளர்ந்துள்ளன. நவீன நகரங்கள் பலவற்றின் வளர்ச்சி, போக்குவரத்து வளர்ச்சியோடு தொடர்புடையது என்று கூற முடியாது. 19ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதி வரையில் 'பம்பாய் நகரம் மேற்குக் கடற்கரையிலுள்ள சிறிய துறைமுகங்களின் வியாபாரத்தை ஒருங்கு திரட்டும் இடமாகவே இருந்தது.'[1] பஞ்சாப் ரெயிலால் இணைக்கப்பட்டிருந்ததால், ஒரு பங்கீட்டுக் கேந்திரமாக உதவி, மேற்கு இந்தியாவின் பொருளாதார வாழ்க்கை முக்கியத்துவம் பெற்றிருந்த காரணத்தினுல் கராச்சி நகரம் மிகுதியாக வளர்ச்சியடைந்தது. ஒரு முக்கிய ரெயில் சந்திப்பாகவும், 'மாஞ்செஸ்டரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளைப் பங்கிடுவதற்குச் சௌகரியமான இடமாகவும், பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலிருந்து வரும் இரும்புச் சாமான்களையும் இயந்திரங்களையும் பங்கீடு செய்யும் இடமாகவும்' இருந்ததால் கான்பூர் முக்கியத்துவம் பெற்றது.[2]

[1] Handbook of Commercial Information for India, p. 70.

[2] மேலே கூறிய நூல், பக்கம் 110.

கீழ்வரும் அட்டவணை, இந்தியாவில் முக்கிய நகரங்களில் ஜனத்தொகை வளர்ச்சியைக் காட்டுகிறது.

நகரங்கள்		ஜனத்தொகை 1931	1941	1951	சதவீத மாறுதல் 1901—11	1911—21	1921—31	1931—41	1941—51
கல்கத்தாவும் ஹௌராவும்	...	13,89,000	24,88,000	29,82,307	+11·0	+ 4·3	+11·9	+79	+19·8
பம்பாய்	...	11,61,000	16,95,000	28,39,270	+26·2	+20·0	— 1·2	+28	+50·5
சென்னை	...	6,47,000	7,77,000	14,16,056	+ 1·8	+ 1·6	+22·8	+20	+58·2
ஹைதராபாத் (தக்காணம்)	...	4,67,000	7,39,000	10,85,722	+12·0	—19·0	+16·0	+58	+38·0
டில்லி	...	4,47,000	5,22,000	9,14,790	+11·6	+30·7	+47·0	+23	+54·7
அகமதாபாத்	...	3,10,000	5,91,000	7,88,333	+16·6	+26·4	+14·5	+91	+28·6
லக்னோ	...	2,75,000	3,87,000	4,96,861	— 1·6	— 4·6	+14·2	+41	+24·8
அமிர்தசரஸ்	...	2,65,000	3,91,000	3,25,747	— 6·0	+ 4·9	+65·3	+48	—18·2
கான்பூர்	...	2,44,000	4,87,000	7,05,383	—12·0	+21·2	+12·6	+99	+36·6
நாகபுரி	...	2,15,000	3,02,000	4,49,099	—21·0	+43·0	+48·0	+45	+39·2

1941ஆம் ஆண்டுக் கணிப்பின்படி, 23 நகரங்களில் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருந்தது. 1931 ல் 17 நகரங்களில்தான் இதற்குமேல் இருந்தது. 1931-ல், மொத்த ஜனத்தொகையில் 11 சதவீதம் நகர ஜனத்தொகையாக இருந்தது. 1941-ல் அது 13% ஆகவும், 1951-ல் 17·3% ஆகவும் உயர்ந்தது. கடந்த 20 ஆண்டுகளாக நகரங்களுக்கும் பெரிய ஊர்களுக்கும் மக்கள் இடம் பெயர்ந்து செல்லும் போக்குத் தெளிவாகக் காணப்பட்டது. சென்ற பத்தாண்டுகளில், சண்டையினுலும், பிரிவினைக்குப் பிறகு அகதிகள் புகுந்ததாலும் இது மேலும் அதிகமாயிற்று. நகர வாழ்க்கையின் வளர்ச்சியும், பிறர் ஆதரவு தேவையில்லாத உற்பத்திமுறை மீது போட்டிமுறை திணிக்கப்பட்டதும், கிராமங்களின் பொருளாதாரத் தன்மையை அழித்து, குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் தொழிலாளர் மார்க்கெட்டை உண்டாக்கிப் பாமரர்களைச் சுரண்டும் தன்மையுள்ள முதலாளித்துவ முறையை ஏற்படுத்திவிட்டன. தொழில் வளர்ச்சியின் பயனை நாம் இதுவரையில் அதிகமாகத் துய்க்கவில்லை எனினும், நம் நகரங்களில் மக்கள் நெருக்க மிகுதியால் உண்டாகக்கூடிய பல தீமைகளையும், சேரிகளையும், வேலையின்மையையும் நாம் உண்டாக்கிவிட்டோம். அண்மையில் மத்திய இராச்சிய அரசாங்கங்களும், நகரசபைகளும் இத் தீமைகளை நீக்கி, நகர வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி வருகின்றன.

இயற்கையாக நகரங்களில் ஜனத்தொகை வளர்கிறது என்று கருத முடியாது. கிராம மக்களைவிட நகர மக்களுக்குப் பிறப்பு வீதம் குறைவு. இது போலவே நகரங்களில் கிராமங்களைவிட இறப்பு வீதம் அதிகம். நகரங்களில் சுகாதாரமில்லாததும், கிராமங்களைவிடக் குறையுள்ள உணவே கிடைப்பதாலும், இது எதிர்பார்க்கக்கூடியதே. ஆகையால், நகரங்களில் ஜனத்தொகை வளர்ச்சிக்குக் காரணம் பெரும்பாலும் மக்கள் இடம்பெயர்ந்து வருவதுதான் என்று நாம் முடிவு கட்டலாம்.

இந்த இடப்பெயர்ச்சிக்கு நமக்குப் போதிய புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. எவ்வளவு குறையுடையதாயிருப்பினும், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படும் கணிப்புதான் நமக்கு ஒரே வழிகாட்டியாக உள்ளது. 1931-ன் கணிப்பு ஒவ்வொரு மாகாணத்திலும் நகரங்களுக்கு வெளியே பிறந்து, நகரங்களில் வாழும் மக்களின் சதவீதப் பட்டியலை அளிக்கிறது. டேவிஸ் என்பவர் 26 நகரங்களின் மொத்த ஜனத்தொகையைப் பகுத்தாய்ந்து, நகரங்களுக்கு வெளியில் பிறந்தவர்கள் சராசரி 37·3% என்று கூறுகிருர்.[1]

[1] கிங்ஸ்லி டேவிஸ், மேற்கூறிய நூல். அட்டவணை 49, பக்கம் 134.

'இந்தியாவில் பெரிய நகரங்களில் வாழும் மக்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல், அந்த நகரங்களுக்கு வெளியே பிறந்தவர்கள்.' கடந்த பத்து வருடங்களில் அகதிகள் நுழைந்தது, இந்தச் சத வீதத்தை இன்னும் அதிகமாக்கும்.[1] பொதுவாகக் கூறினால், பொருளாதார வறுமைதான் கிராம மக்களை இடம்பெயரும்படி தூண்டுகிறது. விவசாயியின் பழக்க வழக்கங்களும், சுற்றுச் சார்பும் கிராமத்திலேயே அவனை இருக்கும்படி செய்கின்றன. நகரத்தில் உள்ள சேரிகளும், சுகாதார வசதியின்மையும், நல்ல உணவுக்குள்ள பஞ்சமும் அவனுக்கு நகர வாழ்க்கையை வசீகரமாகச் செய்வதில்லை. அவன் தன் குடும்பத்தைவிட்டு நகரத்தில் தங்கித் தன் கிராமத்திற்கு மீண்டும் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும்வரையில் அங்கேயே இருக்கிறான். இவ்வாறு இடம்பெயர்வதால் நாட்டின் தொழில் வாழ்க்கையில் உண்டாகும் விளைவுகளைப்பற்றி மற்றொரு பிரிவில் நாம் விளக்குவோம்.

நகர வாழ்க்கையினால் இந்தியாவில் சேரிகள் அதிகமாயிருக்கும் அளவு பம்பாய் நகரத்தில் 1931-க்குரிய மக்கள் நெருக்கத்தைப் பற்றிய விவரங்களிலிருந்து அறியலாம்.[2]

வீட்டிலுள்ள அறைகள்	வீடுகள்	சதவீதம்	வீட்டில் இருப்பவர்கள்	ஜனத்தொகையில் சதவீதம்	அறைக்குச் சராசரி
1 அறை	1,97,516	81	7,91,762	74	4·01
2 அறைகள்	26,231	11	1,31,872	12	2·51
3 ,,	7,416	3	44,821	4	2·00
4 ,,	6,169	2	42,013	4	1·70
5 ,,	2,953	1	22,302	2	1·50
6 அறைகளும் அதற்கு மேலும்	3,836	2	39,199	4	...

[1] அகதிகளைப்பற்றிச் சரியான தொகை கிடைக்கவில்லை. ஆனால், ('ஆசியாவில் ஜனத்தொகை மாற்றம்', 1949) கூற்றுப்படி, 110 இலட்சத்திற்கு மேல் மாற்றப்பட்டனர். இருப்பினும் இந்தியாவில் 350 இலட்சம் முஸ்லீம்களும், பாகிஸ்தானில் 530 இலட்சம் இந்துக்களும் சீக்கியர்களும் இருக்கிறார்கள். பாகிஸ்தானிலிருந்து, குறிப்பாகக் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் வெளியேற்றம் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு முஸ்லீம்கள் செல்வதில்லை.

[2] இதற்குப் பிந்திய புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை.

பம்பாயில் ஓர் அறையுள்ள வீடு சாதாரணமாக 10×10 அடி முதல் 12×15 அடி வரை இருக்கும். ஓர் அறைக்குச் சராசரி 4 பேருக்கு மேல் இருப்பர். ஒவ்வொருவருக்கும் சராசரி 5 முதல் 7 சதுர அடி இடம் கிடைக்கும். சில சமயங்களில் ஒரே அறையில் 3, 4 குடும்பங்கள் சேர்ந்திருக்கும். எனினும், இதோடு ஒத்திட்டுப் பார்ப்பதற்குத் தொழில் நகரமாக மட்டும் உள்ள ஜாம்ஷெட்பூரை எடுத்துக்கொண்டால், அங்கு டாடா கம்பெனியார் தங்கள் வேலையாட்களுக்குத் தக்க வடிகட்டிய தண்ணீர் வசதியும் சாக்கடையும் அமைத்துள்ளனர்.

1941ஆம் ஆண்டின் இந்தியக் கணிப்பு, குடியிருப்பு வசதிபற்றிக் கீழ்க்கண்ட விவரங்களைத் தருகிறது:

1000 வீடுகளுக்கு மக்கள் எண்ணிக்கை

		1931	1941
இந்தியா	...	4,965	5,116
மாகாணங்கள்	...	4,998	5,131

1931ஆம் ஆண்டின் கணிப்பு அறிக்கையில் சென்னைக் கணிப்பு மேலதிகாரி கீழ்வருமாறு எழுதியுள்ளார்: 'சென்னையின் குறிப்பிடத்தக்க அமிசம் தெருக்களில் வாழ்பவர்களும் உட்கார்ந்திருப்பவர்களும்தான். நடு இரவில் மத்தியப் பகுதியிலும், வட பகுதியிலும் சென்று பார்த்தால், சாலையின் இரு புறங்களிலும் மக்கள் படுத்திருப்பார்கள். இவர்கள் எல்லாம் நாடோடிகள் அல்லர். இவர்களில் பெரும்பாலோர் நகர மக்கள்தாம். ஆனால், அவர்களுக்கு வீடுகள் இல்லை. நிலையில்லாத கூலி வேலை பார்த்து வரும் மக்களுக்கு நல்ல, இன்பமான சீதோஷ்ணமுள்ள வீடுகள் கிடைப்பது அரிதாகவும், வாடகை மிக அதிகமாகவும் உள்ள நகரத்தில் வீடுகள் வைத்துக்கொள்வது தேவையில்லை.'[1] இது மற்றப் பெரிய நகரங்களுக்கும் பொருந்தும். நகர ஜனத்தொகை அதிகமாகிவிட்டதாலும், போதிய அளவு வீடுகள் கட்டும் வேலை நடைபெறாததாலும், 1951-ல் நிலைமை இன்னும் சீர்கேடடைந்து விட்டது.[2] பாதிப் பட்டினியும், அளவு கடந்த நெருக்கமும், சுகாதாரமின்மையும் சேர்ந்து மக்களை என்ன பாடுபடுத்தும் என்று எளிதில் சிந்தித்துப் பார்க்கலாம்.

[1] Census of India, 1931, Vol. I, p. 57.

[2] சுற்றுச்சார்பு சுகாதாரக் குழுவானது, நகரங்களில் 18·4 இலட்சம் வீடுகள் பற்றாக்குறையாகவும், பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு மேலும் 10 இலட்சம் வீடுகள் தேவையாகவும் உள்ளன என்று மதிப்பிட்டிருக்கிறது.

1951ஆம் ஆண்டின் கணிப்பு அறிக்கை, கணிப்பின்போது, கிராமங்களில் 541 இலட்சமும், நகரங்களில் 103 இலட்சமும் ஆக மக்கள் குடியிருந்த வீடுகள் மொத்தம் 644 இலட்சம் என்று கூறுகிறது. இதிலிருந்து 'நகரத்தில் ஒரு வீட்டிற்கு 6 பேரும், கிராமங்களில் ஒரு வீட்டிற்கு 5.5 பேரும் இருக்கிறார்கள்' என்பது தெரியும். சில பெரிய நகரங்களில் ஒவ்வொரு வீட்டிலும் மக்கள் குடியிருக்கும் அறைகள் எத்தனை உள்ளன என்று கணக்கெடுக்க முயற்சி செய்வதில்லை. நகரத்தில் உள்ள வீடு 50 அறைகள் கொண்டதாகவும் இருக்கலாம், ஒரே அறையைக் கொண்டதாகவும் இருக்கலாம். இதை விளக்குவதற்கு அவ்வறிக்கை, ஒரு வீடு' என்பது என்ன என்று வரையறுத்துக் கூறுகிறது. 'ஒரு கட்டடத்தின் வெவ்வேறு பகுதிகள் தனித்தனியாக அமைக்கப்பட்டு, தனித்தனியான தலைவாயில்களைப் பெற்று, ஒவ்வொரு பகுதிக்கும் தனியாகச் செல்ல முடியுமானால்,' அத்தகைய ஒவ்வொரு பகுதியும் ஒரு வீடு என்று எண்ணால் குறிக்கப்பட வேண்டும். பிறகு அவ்வறிக்கை ஒரு வீட்டிற்கும், ஒரு வீட்டில் உள்ளவர்களுக்குமுள்ள வித்தியாசத்தைக் கூறுகிறது. 'ஒரு வீட்டில் உள்ளவர்கள் என்பவர்கள் ஒரே தலைவாயில் வழியாக வருவதும் போவதுமாய், வீட்டிற்குள் தனித்தனியாகச் சமைத்துச் சாப்பிடுபவர்கள்.' வீட்டிலுள்ளவர்கள் 'சிறிய' (3 பேர்கள்), 'நடுத்தர' (4 முதல் 6 பேர்கள்), 'பெரிய' (7 முதல் 9 பேர்கள்), 'மிகப் பெரிய' (10 பேரும் அதற்கு மேலும்) என்று நான்கு வகையானவர்களாகப் பிரிக்கப்படுகிறார்கள். பிறகு கீழ்க்கண்ட அட்டவணை தரப்படுகிறது.[1]

வீட்டிலுள்ளவர்களின் வகை	வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை மாதிரிக் கிராமம்	மாதிரி நகரம்
சிறிய	33	38
நடுத்தர	44	41
பெரிய	17	16
மிகப் பெரிய	6	5
மொத்தம்	100	100

ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்த வகையீடு எப்படிப் பயன்படும் என்பது எளிதில் புரியவில்லை. கணிப்பு ஆணையாளர், பெரிய நகரங்களில் குடியிருப்புப் பிரச்சினையைப்பற்றி அறிய விரும்பும் சமூக விஞ்ஞானிகளுக்குப் புதிய நுட்பவினை முறை (technique) வகையீடு

[1] Census of India, 1951, pp. 48–50.

ஒன்றை விரித்துக் கூறியிருப்பதற்காக நாம் அவரைப் பாராட்ட வேண்டும்.

பெரும்பாலும் விவசாயத்தைச் சார்ந்த நாட்டில், தேக்கமும், தொழில்துணிவின்மையும் ஏற்படக்கூடும் என்றும், வலிமை வாய்ந்த தேசீயப் பண்பை உருவாக்குவதற்கு ஓரளவு தொழில் வாழ்க்கை தேவை என்றும் கூறப்படுகிறது. இப்போது இந்தியாவில் 17·3 சதவீத ஜனத்தொகைதான் நகரவாசிகளாக உள்ளனர். ஆனால், அமெரிக்காவில் 1950-ல் 67·3 சதவீதம் நகரத்தில் வாழ்ந்தனர்.[1]

ஆண், பெண் அடிப்படையில் பங்கீடு

ஐரோப்பாவின் பல பாகங்களில் பெண்கள் அதிகமாக உள்ளனர். 1950-ல் இத்தாலியில் 1,000 ஆண்களுக்கு 1,052 பெண்களும், 1951-ல் இங்கிலாந்திலும் வேல்சிலும் 1,071 பெண்களும் இருந்தனர். அமெரிக்காவில், இதற்கு மாறாக 1940-ல் 1,000 ஆண்களுக்கு 985 பெண்களே இருந்தனர். இந்தியாவில் பெண்களைவிட ஆண்கள் அதிகம். ஒவ்வொரு பத்தாண்டிலும் இது எப்படி அதிகரித்து வருகிறது என்று இந்த அட்டவணை காட்டுகிறது.

வருடம்	ஆண்கள்	பெண்கள்
1901	1,000	963
1911	1,000	954
1921	1,000	945
1931	1,000	941
1941	1,000	935
1951	1,000	947

[1] ஐக்கிய நாடுகளின் மக்களியல் (Demographic) ஆண்டுப் புத்தகம், 1952, பக்கம் 11-ஐ ஒப்பிட்டுப் பார்க்க.

		நகர ஜனத்தொகை	1,00,000 மும், மேலும் உள்ள நகரங்கள்
இந்தியா (1951)	...	17·3	6·8
இங்கிலாந்தும் வேல்சும்	...	80·7	51·9
அமெரிக்கா	...	67·3	33·5
ஜப்பான்	...	37·5	25·6
ரஷ்யா	...	32·8	17.1

இந்த ஆண்டுப் புத்தகத்தில், 64 நாடுகளில் இந்தியா 60-வது இடத்தில் உள்ளது. இதற்குக் கீழ் உள்ள நான்கு நாடுகள், யுகோஸ்லேவியா, சிலோன், ஹைட்டி, பர்மா. இந்த ஆண்டுப் புத்தகத்தில் ஒரு குறிப்புக் கூறுவதாவது: ‘தொழில் வளர்ச்சியினால் கட்டாயமாக உடன் தோன்றுவது நகர வாழ்க்கை. நகர வாழ்க்கையின் முற்றிய நிலையில், தலைநகரங்களில் மக்கள் ஒன்றாகத் திரள்வது சாதாரண நிகழ்ச்சி மட்டுமன்றித் தேவையான நிகழ்ச்சியும் ஆகும்.’ நம் நாட்டில் உள்ள மொத்த அடர்த்திக்கேற்றவாறு, பல தலைநகரங்கள் உண்டாகவில்லையென்பது, தொழில் துறையில் நாம் பின்தங்கிய நிலையிலிருப்பதையே காட்டுகிறது.

இராச்சியங்களில் ஆண், பெண்களின் விகிதம் :
1,000 ஆண்களுக்குப் பெண்கள்

	1901	1911	1921	1931	1941	1951
பஞ்சாப்	854	817	828	831	847	863
சென்னை	1,028	1,030	1,024	1,021	1,009	1,006
வங்காளம்	1,016	......	933	924	890	859
பம்பாய்	964	......	926	929	927	932

சில நாடுகளில் உள்ள ஆண், பெண் விகிதத்தைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :

	1,000 ஆண்களுக்குப் பெண்கள்		
	1880	1939	1950
அமெரிக்கா	965	993	1,019
இங்கிலாந்தும் வேல்சும்	1,033	1,088	1,070
ஃபிரான்ஸ்	1,005	1,071	1,077

ஆக, 1,000 ஆண்களுக்கு அதிகப் பெண்கள் வீதம் இந்த நாடுகளில் இருக்க, நம் நாட்டில் எதிர்மாருன போக்குக் காணப் படுகிறது.

நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டால், 1,000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. 1951-ல் சிறிது அதிகமாயிருப்பினும், இந்தியாவில் பெண்களின் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் யாதாயிருக் கலாம் என்று அதிக ஹேஷ்யம் தோன்றியுள்ளது. இது இந்திய ஜனத்தொகையின் ஒரு சிறப்பான அமிசம்.

(1) இளமைத் திருமணம் ஒரு காரணமாக இருக்கலாம். நன்ருக உடல் வளர்ச்சியடைவதற்கு முன்பே, இளம் வயதும், குன்றிய வலிமையுமுடைய பெண்கள் தாய்மார்களாகி விடுகிருர்கள். அடிக்கடிக் குழந்தை பெறுவதால் அவர்களுடைய உடல் வலிமை குறைந்து, ஆற்றல் அழிந்துவிடுகிறது. இதனுல் பெண்களின் மரண வீதம் அதிகமாகிறது.

(2) உடல் வலிமையற்ற இளந் தாய்மார்கள் தொடர்ந்து பற் பல ஆண்டுகள் குழந்தைகளைப் பெறுவதோடன்றி, அக் குழந்தைகள்

பெண்களாயிருந்தால், அவற்றைச் சரியாகக் கவனிப்பதில்லை. இதற்குக் காரணம் இரக்கமின்மையன்று. சமூகப் பழக்க வழக்கங்களாலும் மனப்பான்மையாலும் பெண்களை ஒரு சுமையாகப் பெற்றோர்கள் கருதுகிறார்கள். ஆனால், பிள்ளைகள் தங்களை ஆதரிப்பவர்களாகவும், குடும்பத்தின் உயிரையும் செழிப்பையும் பாதுகாப்பவர்களாகவும் கருதப்படுகிறார்கள். பிள்ளைதான் மூதாதையர்களுடைய தெய்வங்களுக்குப் பலிகளைக் கொடுக்கலாம். குடும்பத்தின் நிலைப்பும் நீடிப்பும் இத் தெய்வங்களின் ஆசிகளைப் பொறுத்தவை. 'தந்தையின் மோட்ச சாதனத்திற்கு மகன் அவசியம் என்று கருதும் இந்துக்கள் மட்டுமன்றி, மற்றச் சமூகத்தினரும் மகனைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். இந்தியாவின் பல பகுதிகளில் பெண்கள் திருமணத்திற்காக அதிகப் பொருள் செலவு செய்ய வேண்டும். இந்துக்கள், பெண்கள் பருவம் அடைவதற்கு முன்பு திருமணத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். பெண்கள் பிறப்பதை மிகவும் வெறுப்பதன் காரணத்தால், சில சமயம் கருவில் உள்ள குழந்தை பெண் என்று தெரிந்தால், கருவைச் சிதைத்து விடுவதாகவும் கூறப்படுகிறது.'[1]

ஒவ்வோர் இராச்சியத்திலும் பிறக்கும் ஆண்களைவிடப் பெண்கள் குறைவு. இப்போதுள்ள நிலையில் ஜனத்தொகை நெருக்கடி வளர்ந்துவந்தாலும், பெண்கள் பிறப்பது குறைந்து வந்தால், காலப்போக்கில் ஜனத்தொகை குறையக்கூடும். பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ள விகிதம் குறைந்து வருவது, கணிப்பு எண்கள் கிடைத்துள்ள சில ஆண்டுகளின் அமிசமாக இருக்கிறது. இது நாட்டின் சக்தி குறைந்துவரும் போக்கைக் காட்டுகிறது. போதிய ஊட்டமின்மையும், பெரும்பாலோருடைய வறுமையுமே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

(3) சில சமயங்களில் பெண்கள் அதிக வேலை செய்வதால் இறந்துவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நம் நாட்டில் கருவுற்றிருக்கும் பெண் கடைசி நாள் வரையிலும், சில சமயங்களில் குழந்தையைப்பெறும் நேரம் வரையிலுங்கூட, வேலை செய்வதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். குழந்தையைப் பெற்ற பிறகு அந்தத் தாய் உயிரோடிருந்தால், அவள் ஒன்றுக்கும் உதவாதவளாக இருப்பாள். குழந்தை பெறுவதற்கு முன்பும் பின்பும் சரியான மருத்துவ உதவி கிடைக்காததால், சில சமயங்களில் அவள் உயிரோடிருப்பதும் அரிது.

[1] Census Report, 1931, Vol. I, Part I, p. 195,

(4) பெண் குழந்தைகள் அதிகமாக கொலை செய்யப்படுகின்றன என்பதற்கு ஆதாரமில்லை. இந்த வழக்கம் மிகக் குறைவு. 1930லேயே ஜம்மு-காஷ்மீர் இராச்சியம், சில ராஜபுதன கிராமங்களில் குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. ஜெய்ப்பூர், குவாலியர் இராச்சியங்களிலுள்ள சில கூட்டத்தாரிடையே 1,000 ஆண்களுக்கு 500 முதல் 600 பெண்கள் வீதம் இருக்கிறார்கள். 1931 ஆம் ஆண்டு அறிக்கையில் ராஜபுதன கணிப்பு அதிகாரி, 'வேண்டுமென்றே குழந்தைகள் கொல்லப்படுவது வெளிக்கு வருவதில்லை. எனினும், தேவையில்லாத பெண் குழந்தைகள் கவனிக்கப்படாமல் இருப்பதால், இறந்துவிடுகின்றன' என்று கூறுகிறார்.[1]

1951ஆம் ஆண்டுக் கணிப்பு ஆணையாளர் இந்தியாவில் பெண்கள் குறைவாயிருப்பதுபற்றி ஓர் எளிய யுக்தியான விளக்கம் கூறுகிறார்: (1) ஆண்களும் பெண்களும் ஒரே எண்ணிக்கையாகப் பிறப்பதில்லை. (2) குழந்தைப் பருவத்திலோ, வயதான பிறகோ, ஒரு குறிப்பிட்ட வயது எல்லைக்குள்ளோ அல்லது எல்லாப் பருவங்களையும் சேர்த்துப் பார்த்தாலுங்கூட, அவர்களுடைய மரண எண்ணிக்கையும் சமமாக இருப்பதில்லை. பெண்களைவிட ஆண்கள் அதிகமாகத்தான் பிறக்கிறார்கள். இவ்வாறு இயற்கையானது ஏற்றத்தாழ்வை உண்டாக்கிவிட்டுப் பிறகு அதைச் சரிப்படுத்த முயல்கிறது. முதல் வயது நிரம்புவதற்குள்ளேயே பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள். வயது ஆக ஆக, ஒவ்வொரு வருடமும் இந்த விகிதம் மாறிக்கொண்டே இருக்கிறது. இவ்வேற்றத்தாழ்வைப்பற்றி எல்லா இடங்களுக்கும் காலங்களுக்கும் பொருத்தமான விதி ஒன்றும் இல்லை. இந்த உண்மைகளை விஞ்ஞானிகள் முற்றிலும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் விளக்கி யிருப்பினும், அவ் விளக்கம் ஒன்றும் தனக்குக் கிடைக்கவில்லை என்று இவ் அதிகாரி கூறி முடிக்கிறார்.[2]

[1] 1931 கணிப்பு அறிக்கைத் தொகுதி 1, பகுதி 1, பக்கம் 196-ல் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதோடு D. கோஷ் எழுதிய 'இந்தியாவில் ஜனத்தொகை நெருக்கடியும், பொருளாதாரத் திறமையும்' (1946) பக்கம் 6,7-ல் உள்ள செய்தியை ஒப்பிடுக : 'இந்தப் பெரிய நாட்டில் பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுகின்றன. ஆனால், இது ஆண் பெண் விகிதத்தை மாற்றக்கூடிய அளவுக்கு அவ்வளவு அதிகமாக இல்லை. ஒவ்வொரு கணிப்பிலும் ஆண், பெண்களுக்கிடையே அதிகரித்துவரும் வித்தியாசத்திற்கு இது காரணமன்று. மேலும் 1 முதல் 4 வயதுடைய குழந்தைகளில் ஆண்களைவிடப் பெண்கள் உண்மையில் அதிகமாக உள்ளனர். ஒவ்வொரு சமூகத்திலும் பெண்களைவிட ஆண்கள் அதிகம் பிறப்பதால்—இந்த விகிதம் சாதாரணமாக 100 பெண்களுக்கு 105 முதல் 108 ஆண்கள்வரை உள்ளது—பெண் குழந்தைகள் கொல்லப்பட்டால், வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களில் பெண்கள் அதிகமாக இருக்க முடியாது.'

[2] Census of India, 1951, p. 59-62.

ஐரோப்பா முழுவதிலும் ஒவ்வொரு வருடமும் பெண்களைவிட ஆண்கள் அதிகம் பிறக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான நாடுகளில் பெண்களைவிட ஆண்கள் அதிகம் இறக்கிறார்கள். அதிகமாகப் பிறக்கும் ஆண்களை அழிக்கக்கூடிய அளவிற்கு இந்த மரணங்கள் உள்ளன. ஆண்கள் அதிகமாக இறப்பதற்குக் காரணம் அவர்கள் நாட்டுப் பாதுகாப்புப் பணியிலும், சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும், அபாயமான வேலைகள் செய்வதாக இருக்கலாம். கெட்ட குணங்களும் குற்றங்களுங்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம். ஐரோப்பாவில், நாடு பெயர்வினால் ஆண், பெண் விகிதம் அதிகம் மாறுகிறது. ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு நாடு பெயர்ந்து சென்றவர்களில் 60 சதவீதம் ஆண்கள் என்று கூறப்படுகிறது. அமெரிக்காவில் 1870-ல் 1,000 ஆண்களுக்கு 978 ஆக இருந்த பெண்களின் எண்ணிக்கை 1890-ல் 952ஆகக் குறைந்தது. நாடு பெயர்ந்து வருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் 'கோட்டா' (quota) முறை புகுத்தப்பட்டபோது, ஆண், பெண் விகிதம் சரியாகிவிட்டது. 100 பெண்களுக்கு 102 ஆண்கள் என்று விகிதம் மாறியது. இப்பொழுது ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் உள்ளனர்.

நகரங்களில் ஆண், பெண் விகிதம்

1951-ல் இந்தியா முழுவதற்கும், கிராமப் பகுதிகளில் 1,000 ஆண்களுக்கு 966 பெண்கள் இருந்தனர். ஆனால், நகரப் பகுதிகளில் 1,000 ஆண்களுக்கு 860 பெண்களே இருந்தனர். 1951-ல் வெவ்வேறு இராச்சியங்களில் 1,000 ஆண்களுக்குள்ள பெண்கள் எண்ணிக்கையைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது:

இராச்சியம்		1,000 ஆண்களுக்கு மொத்த ஜனத் தொகையில் பெண்கள்[1]	1,000 ஆண்களுக்கு நகர ஜனத் தொகையில் பெண்கள்[2]
சென்னை	...	1,006	993
பீகார்	...	989	820
மத்தியப் பிரதேசம்	...	993	886
வங்காளம்	...	859	601
உத்தரப் பிரதேசம்	...	910	805
பம்பாய்	...	932	773
அஸ்ஸாம்	...	879	577
பஞ்சாப்	...	863	699
ஒரிசா	...	1,022	...

[1] 1952 கணிப்புத்தாள் 1-ல் இருந்து கணிக்கப்பட்டவை.

[2] இந்த எண்கள் 1931-க்குரியவை ; 1951-க்குரிய எண்கள் கிடைக்கவில்லை.

இந்தியாவில் ஆண்கள் தம் கிராமங்களைவிட்டுப் பிழைப்புக்காக நகரங்களுக்குச் சென்று வாழும் வழக்கத்தினால் இந்த எண்கள் மாறுபடுகின்றன. நகரங்களில் மணமான 1,000 ஆண்களுக்கு, மணமான பெண்களின் எண்ணிக்கை, ஆண் பெண்களின் விகிதத்தைவிட மேலும் குறைவாக இருக்கிறது. இதைக் கீழே உள்ள அட்டவணையில் காண்க:

எட்டுப் பெரிய நகரங்கள்		1,000 ஆண்களுக்குப் பெண்கள் 1931	1951[1]	மணமான 1,000 ஆண்களுக்கு மணமான பெண்கள்[2]
கல்கத்தா	...	468	570	365
பம்பாய்	...	554	657	499
சென்னை	...	897	921	936
ஹைதராபாத்	...	886	989	822
டில்லி	...	694	770	754
ஹௌரா	...	550	616	447
காசி (வாரணசி)	...	792	811	796
நாகபுரி	...	848	919	838

ஐரோப்பாவில் இதற்கு மாறாகப் பெரிய நகரங்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. 10 வயதுக்கும் 20 வயதுக்கும் இடையில் பெண்கள் நகரங்களுக்கு வீட்டு வேலைக்காரிகளாகக் குடிபெயர்ந்து செல்கிறார்கள். 50 வயதுக்குமேல் ஆண்கள் நகரங்களிலிருந்து கிராமங்களுக்குச் செல்கிறார்கள். இதற்குக் காரணம், பெண்களைவிட ஆண்கள் விரைவில் வேலை செய்யத் தகுதியற்றவர்களாக இருக்கலாம்.

வயது அமைப்பு

சமூகவியல்படி வயதுக்கேற்ப ஜனத்தொகையை வகையீடு செய்வது முக்கியம். சுண்ட்பார்க் (Sundbarg) என்பவர், சாதாரண ஜனத்தொகையில் 15 வயதுக்கும், 50 வயதுக்கும் இடையில் உள்ளவர்கள் மொத்தத்தில் பாதியாக இருப்பார்கள் என்றும், இந்த வயதுக்கு மேலும் கீழும் இருப்பவர்களின் விகிதம், ஜனத்தொகை உயர்கிறதா, நிலையாக இருக்கிறதா, குறைகிறதா என்பதைக் காட்டும் என்றும் கூறுகிறார். ஜனத்தொகை வளர்ந்துகொண்டே இருக்க

[1] 1952 கணிப்புத்தாள் 1-லிருந்து இந்த எண்கள் கணிக்கப்பட்டன.

[2] இந்த எண்கள் 1931-க்குரியவை. பிந்திய விவரங்கள் கிடைக்கவில்லை.

வேண்டுமாயின், இந்த மூன்று பிரிவுகளில் மிகவும் வயது முதிர்ந்ததைவிட, மிகவும் வயது குறைந்தது இரண்டு பங்காக இருக்க வேண்டும். 1931, 1951 ஆம் ஆண்டுகளுக்கான கணிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்வரும் எண்கள், சுண்ட்பார்க்கின் வகையீட்டுப்படி இந்தியாவின் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது என்பதைக் காட்டும்.[1] மாகாணங்கள் வாரியாகப் பிரிக்கப்பட்ட 1931 கணிப்பும் இதையே காட்டுகிறது. 1951 கணிப்பையும் இதே போலச் செய்ய முடியுமானல், முடிவு வேறு விதமாக இருக்க முடியாது.

ஜனத்தொகையின் வயதுப்படி சதவீதம்

	0-15	15-50	50 க்கு மேல்
1931	39·9	50·5	9·6
1951	37·5	50·4	12·1

1931ஆம் ஆண்டின் கணிப்பு அறிக்கை, சுண்ட்பார்க்கின் வகையீடுகள், இந்திய நிலைமைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. அன்றியும், இந்தியர்களின் வயது அறிவிப்புச் சரியாக இல்லை என்பதும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. 1931 அறிக்கையில் சென்னைக் கணிப்பு அதிகாரி கூறுவதாதாவது: "சேலத்திலுள்ள ஒரு தந்தை, புதிதாகப் பிறந்த குழந்தை உட்பட வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்கப்பட்ட போது, 'இப்பொழுதுதான் பிறந்த குழந்தை; அதையுமா எண்ணப் போகிறீர்கள்?' என்று வியப்புடன் கேட்டார். அன்றியும், பெண்களின் வயது 10 முதல் 15 வரை சரியாக இருப்பதில்லை. இதற்கு ஒரு காரணம் பருவமடைந்த பெண்கள் திருமணமாகாமல் தம் வீட்டில் இருக்கிறார்கள் என்பதை இந்துக்கள் வெளிப்படையாகச் சொல்ல மறுப்பதுதான். இந்தியாவின் சில பகுதிகளில் பெண்கள் பருவமடைந்தவுடன் பிரித்து அல்லது மறைத்து வைக்கப்படுகிறார்கள். வயதைச் சரியாகக் கூறினல் ஆயுள் குறைந்துவிடும் என்ற மூட நம்பிக்கையாலும் பலர் தம் வயதை வேண்டுமென்றே தவருகக் கூறுகிறார்கள்."

சுண்ட்பார்க்கின் வகையீடுகள் இந்தியாவிற்குப் பொருந்தா என்பதற்கு மற்றொரு முக்கிய காரணம், இந்திய மக்களின் வேலை செய்யும் வயது 15 முதல் 50 வரை அல்ல; 15 முதல் 40 வரைதான். 1931 கணிப்பு அறிக்கையில் இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது கூறுவதாவது. 'சுண்ட்பார்க் கூறுவது போல 15 முதல் 50

[1] Demographic Year Book, 1955, U. N. அளிக்கும் மதிப்பீடுகளிலிருந்து 1951 க்கான எண்கள் கணிக்கப்பட்டுள்ளன.

என்று இல்லாமல் 15 முதல் 40 என்றே நான் கொண்டிருக்கிறேன். இதற்குக் காரணம் இந்தியாவில் முதுமை சீக்கிரம் வந்து விடுகிறது; மற்ருெரு காரணம், இது வாழ்க்கையில் இன விருத்தி செய்யும் காலத்தோடு ஒத்திருக்கிறது.' இந்த அடிப்படையில் ஜனத் தொகையைப் பிரித்தால், 1931, 1938, 1951-க்குக் கீழ்வரும் சதவீத வயது அமைப்புக் கிடைக்கிறது.[1]

வயது	1931	1938	1951
0—14	39·9	39·8	37·5
15—39	41·0	41·2	40·6
40-க்குமேல்	19·1	19·0	21·9

இதிலிருந்து, இந்தியாவில் வேலை செய்யும் ஆண், பெண் ஜனத் தொகை, அதாவது 15 வயது முதல் 40 வயதுவரை இருப்பவர்கள், மொத்த ஜனத்தொகையில் 41 சதவீதம் இருக்கிருர்கள் என்பது தெரியும். இந்துக்களில் மேல் ஜாதியைச் சேர்ந்த பெரும்பாலான பெண்களும், முகத்திரை அணியும் வழக்கமுடைய இந்துக்களும் முஸ்லீம்களும் நாட்டின் செல்வ உற்பத்தியைப் பெருக்கும் வேலையில் ஈடுபடக் கூடாதவர்கள் என்று பழக்க வழக்கங்களால் தடுக்கப் பட்டுள்ளனர். அவர்கள் தாய்மார்களாகவும், குடும்பத்தைக் கவனிப் பவர்களாகவும் மட்டுந்தான் வேலை செய்யலாம். ஆகவே, தாராள மாக மதிப்பிட்டாலும், மொத்த ஜனத்தொகையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, ஜனத்தொகையில் 30 சதவீதத்தினரிடம்தான் இருக்கிறது.

1951ஆம் ஆண்டின் கணிப்பு, இந்திய அறிக்கைகளின் வழக் கத்தைத் தொடர்ந்து வேருேர் அடிப்படையில் வயது அமைப்பை வகையீடு செய்து அளிக்கிறது. இப் புதிய வகையீட்டின்படி, ஜனத் தொகையில் 38 சதவீதத்தினர் 15 வயதுக்குள்ளும், 45 சதவீதத்தினர் 15-க்கும் 44-க்கும் இடையிலும், மீதி 17 சதவீதத்தினர் சுமார் 44 வயதின் அருகிலும் இருக்கின்றனர். இந்தப் பிரச்சினையைப்பற்றிக் கணிப்பு ஆணையாளர் கூறுவதாவது: '1,000 பேர்களில் 15 வயதுக் குட்பட்டவர்கள் அமெரிக்காவில் 271 பேரும், இந்தியாவில் 383 பேரும் உள்ளனர். இதன் பொருள் என்னவென்ருல், சாதாரண அமெரிக்கத் தம்பதிகள் போலவே சாதாரண இந்தியத் தம்பதிகளும் தம் குழந்தைகளை வளர்ப்பதற்குப் போதிய சாதனங்களைப் பெற்றிருந்

[1] சர்வதேச சங்கத்தின் 1940-41 புள்ளி இயல் ஆண்டுப் புத்தகத்திலிருந்து 1938-க்குரிய மதிப்பீடுகள் கிடைத்துள்ளன. 1951-க்குரிய எண்கள், ஐக்கிய நாடுகளின் (1955) மக்களியல் ஆண்டுப் புத்தகத்திலுள்ள மதிப்பீடுகளி லிருந்து கணிக்கப்பட்டவை.

தாலும், ஒவ்வோர் அமெரிக்கக் குழந்தையைவிட, ஒவ்வோர் இந்தியக் குழந்தைக்கும் இச் சாதனங்களில் மிகக் குறைந்த அளவே கிடைக்கும். உண்மையில், சாதாரண இந்தியத் தம்பதிகளுக்குக் கிடைக்கும் சாதனங்கள் மிகக் குறைவு. இதனால், கவனிக்கப்பட வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கையில் உள்ள வித்தியாசம் மிகவும் பெரிதாகிறது. உணவு, உறையுள், பாதுகாப்பு, நோயுற்றபோது கவனிப்பு, கல்வி, வாழ்க்கைக்குத் தயாரித்தல் போன்றவற்றில் இந்தியக் குழந்தை நிச்சயமாகவும் கட்டாயமாகவும் குறையுடையதாயிருக்கிறது.'[1]

'ஜனத்தொகையின் போக்கை நிருணயிப்பவை' என்னும் ஐ. நா. வெளியீடு கூறுவதாவது: 'அளவுக்கு மிஞ்சிய ஜனத்தொகையுள்ள நாடுகளில்கூட, பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான தடைகளுள் ஒன்றாக இருப்பது மனித ஆற்றல் (man power) இன்மையே என்பது முரணாக இருக்கிறது. ஜனத்தொகையின் வயது அமைப்பின்படி, முதியோர்கள் போதிய அளவு இல்லை.'[2] சமூக வழக்கங்களின் காரணமாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய முதியவர்களில் ஒரு சிறு பகுதியினரே வேலைக்குக் கிடைக்கின்றனர். பாதகமான வயது அமைப்பினால் ஏற்படக்கூடிய பராதீன நிலைமைபற்றி ஐ. நா. வெளியீடு ஓர் அடிக்குறிப்பில் விளக்குகிறது. 'எடுத்துக்காட்டாகத் தேவையின் அளவு கீழ்க்கண்ட விகிதத்தின்படி இருப்பதாகக் கொள்வோம்; குழந்தை, மூன்றில் ஒரு பங்கு; வயது வந்த ஆண் அல்லது பெண் பாதி; உற்பத்தி செய்யும் வயதுள்ள முதியவர் ஒன்று. ஆகையால், ஒரு பின்தங்கிய நாட்டின் ஜனத்தொகையில் 42 சதவீதம் குழந்தைகளும் 55 சதவீதம் உற்பத்தி செய்யும் வயதுடைய முதியவர்களும், 3 சதவீதம் கிழவர்களும் இருந்தால், உற்பத்தி செய்யும் வயதுடைய 100 முதியவர்களுக்குச் சமமான நுகர்வோர் 128 பேர் வீதம் இருப்பார்கள். முன்னேற்றமடைந்த நாட்டின் ஜனத்தொகையில், மேற்கூறிய வயது எல்லையில் முறையே 23, 67, 10 சதவீதம் இருப்பார்கள். இங்கு மேற்கூறிய விகிதம் 119-க்கு 100 ஆகும்.' இருப்பினும், இந்தக் குறிப்பு இந்தியா போன்ற நாட்டில் சமூக வழக்கத்தின்படி, பெண்களில் வயது முதிர்ந்த பெரும்பாலோர் உற்பத்தி வேலைகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதை மறந்துவிட்டது.

மேனாடுகளில் வேலை செய்யும் வயது 15 முதல் 60 வரை என்று கொண்டால், 1940-ல் அமெரிக்காவின் ஜனத்தொகையில் 64·5 சத

[1] Census of India, 1951, p. 66.

[2] பக்கம் 265.

வீதம் வேலை செய்வோர் இருந்தனர். இந்த மூன்று வயது எல்லைகளில் உள்ள ஜனத்தொகை, உலகில் பல நாடுகளுக்குக் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.[1]

வயது எல்லை	அமெரிக்கா	ஃபிரான்ஸ்	சுவீடன்	இத்தாலி	கனடா	இங்கிலாந்து வேல்ஸ்	இந்தியா
	1950	1950	1949	1950	1951	1951	1951
0—14	27·1	21·7	23·0	26·4	30·3	22·0	37·5
15—59	60·8	61·8	62·3	61·6	58·2	62·0	50·4
60ம்மேலும்	12·1	16·5	14·7	12·0	11·5	16·0	12·1

இங்குக் குறிப்பிட்ட நாடுகளைவிட இந்தியாவில் இளைஞர்களையும் கிழவர்களையும் ஆதரிக்கவேண்டிய பொறுப்பு, ஜனத்தொகையில் குறைந்த விகிதத்தினரையே சாருகிறது. இது மட்டுமன்று, இந்தியாவில் வாழ்க்கை அதிகம் வீணுக்கப்படுகிறது. இதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம். அதில் பல நாடுகளில், 0_14, 15_49, 50_ம் அதற்கு மேலும் உள்ள வயது எல்லையுடையவர்கள் ஜனத்தொகையில் எத்தனை சதவீதம் என்று ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

வயது எல்லை	அமெரிக்கா	ஃபிரான்ஸ்	சுவீடன்	கனடா	இங்கிலாந்து வேல்ஸ்	இந்தியா
	1950	1950	1950	1950	1951	1951
0—14	27·1	21·1	23·0	30·3	22·0	37·5
15—49	50·4	49·7	50·8	49·4	50·0	50·4
50 க்கு மேல்	22·5	28·6	26·2	20·3	28·0	12·1

0_14 வயது எல்லையில், மற்ற நாடுகளைவிட இந்தியாவில் உள்ள வித்தியாசம் நன்கு தெரிகிறது. முதல் வயது எல்லையில் உள்ள மிக அதிகமான பேரில் அதிக மரணவீதம் இருந்தால்தான் இரண்டாம் வயது எல்லையில் சுண்ட்பார்க்கின் 50 சதவீத சராசரி உண்டாகும்.

[1] மனித இயல் ஆண்டுப் புத்தகம், 1952, 1953, U. N. 1954-ல் உள்ள எண்களிலிருந்து கணிக்கப்பட்டது.

சான்ருக, 1938 ல், 0–15 வயது எல்லேயில் 1,000–க்கு 33 பேர் மரண வீதம் இருந்தது; ஆனல், 15–50 எல்லேயில் 1,000 பேருக்கு 12 வீதம் மரணம் உண்டாயிற்று.

0–15 வயது எல்லேயில் ஆண், பெண்களின் மரணவீதத்தைக் காட்டும் கீழ்க்கண்ட அட்டவணை இக் கருத்தை மேலும் ஆதரிக்கிறது.[1]

குறிப்பிட்ட வயதில் 1000 க்கு மரண விதம்

வயது	அமெரிக்கா	கனடா	ஃபிரான்ஸ்	சுவீடன்	இந்தியா
	1949—51	1950—52	1950—51	1946—50	1941—50
			ஆண்கள்		
0	33·4	43·3	52·1	26·6	190·0
5	0·9	1·0	0·9	1·0	17·1
10	0·6	0·8	0·6	0·5	13·1
15	1·1	1·1	1·0	0·9	10·6
			பெண்கள்		
0	25·9	34·2	40·2	20·5	175·0
5	0·7	0·8	0·8	0·6	20·6
10	0·4	0·5	0·5	0·4	13·1·
15	0·6	0·7	0·7	0·6	8·4

இந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாடுகளோடு ஒப்பிடும்போது, இந்தியாவில் முதல் வயதிலேயே இறக்கும் குழந்தைகளின் மரணவீதம் மிக அதிகமாக இருப்பதைக் காணலாம். 1910–க்குப் பிறகு இந்தியாவில் சிசு மரணவீதம் குறைந்துள்ளது; 1930–ல் 1,000–க்கு 180 ஆகவும், 1940–ல் 160 ஆகவும், 1950–ல் 127 ஆகவும் இருந்தது. நகரங்களில் சிசு மரணவீதம் இன்னும் அஞ்சத்தகுந்த அளவுக்கு அதிகமாகவே இருந்தது. 1940–ல் பம்பாயில் அது 1,000 க்கு 213 ஆகவும், கல்கத்தாவில் 214 ஆகவும், லக்னேவில் 295 ஆகவும், நாகபுரியில் 211 ஆகவும் இருந்தது. நகரங்களில் இந்த அதிக மரண வீதத்திற்குக் காரணம், இளவயதிலேயே தாய்மையடைதலும், பர்தா முறையும் (purdah system), பழங் காலப் பிள்ளேப் பேறு மருத்துவமும் ஆகும். நம் நாட்டில் வெவ்வேறு வயதுகளில் வாழ்வோருடைய ஆயுட் கால எல்லேயைக் (expectation of life) கொண்டும் வாழ்க்கை அதிகமாக வீணுவதை விளக்கலாம்.

[1] Demographic Year Book, 1954, U. N.

'பெரும்பாலான மேனுடுகளைவிட இந்தியாவில் சராசரி ஆயுட் காலம் குறைவு.[1] 1921 கணிப்புப்படி இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையே இந்தச் சராசரி 24·8-ம், 24·7-ம் ஆகும்; அல்லது பொதுவான சராசரி 24·75 வருடங்கள். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 55·6 வருடங்கள். இது 1931-ல் மேலும் குறைந்து விட்டது; ஆண்களுக்கு 23·2-ம், பெண்களுக்கு 22·8-ம் ஆகக் குறைந்தது.[2] நம்முடைய பிறப்புப் புள்ளியியல் (vital statistics) சிறிதும் சரியானவையல்ல. இருப்பினும், இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 1881-91-ல் 45·4ஆக இருந்த ஆயுட் கால எல்லை 1950-ல் 60ஆக உயர்ந்திருக்க, இங்கு 1921-30-ல் 27 ஆக இருந்தது, 1941-50-ல் 32 ஆகத்தான் உயர்ந்தது.[3]

பக்கம் 203-ல் உள்ள அட்டவணை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆண்களும் பெண்களும் பிறந்தவுடனேயும், வெவ்வேறு வயதுகளிலும் எதிர்பார்க்கக்கூடிய ஆயுட்கால எல்லையைத் தருகிறது.[4]

1931-க்கும், 1941-50-க்கும் இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய ஆயுள் அட்டவணை கவனிக்கத்தக்கது.[5]

	ஆண்கள்		பெண்கள்	
வயது	1931	1941—50	1931	1941—50
0	26·91	32·45	26·56	31·56
10	36·38	38·97	33·61	39·45
20	29·57	33·03	27·08	32·90
30	23·60	26·58	22·30	26·18
40	18·60	20·53	18·23	21·06
50	14·31	14·89	14·65	16·15
60	10·25	10·13	10·81	11·33

[1] ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, வேல்ஸ் ஆகிய நாடுகளில் 10 வயதில் ஆயுட் கால எல்லை 60 வருடங்கள்; ஜப்பானில் 50; இந்தியாவில் 39.

[2] 'இந்தியாவில் இயந்திரத் தொழிலாளிகள்' —ஜினிவா அறிக்கை, 1938. பக்கம் 8.

[3] அமெரிக்காவில் புதிதாகப் பிறந்த 10 வெள்ளையர் பெண் குழந்தைகளில் 9 பேர் 50 வயது வரை (கருப்பம் தரிக்கும் கால முடிவுவரை) வாழலாம். இந்தியாவில் இந்த விகிதம் 10-ல் 2. உலக ஜனத்தொகைப் பிரச்சினைகள்பற்றிய மாநாடு, நியூயார்க் விஞ்ஞானக் கழகம், Annals Vol. 54. p. 747.

[4] Census of India, 1931, Vol, I, Part I: Table XXXII: p. 165-66.

[5] மேலே கூறியது. 1941–50-க்குரிய எண்கள் இந்தியக் கணிப்பு 1954–ன் தாள் 2–லிருந்து எடுக்கப்பட்டவை. பக்கம் 35-38.

	இந்தியா				இங்கிலாந்து			
	ஆண்கள்		பெண்கள்		ஆண்கள்		பெண்கள்	
வயது	1901	1911	1901	1911	1901	1911	1901	1911
0	23·63	22·59	23·96	23·31	44·07	46·04	47·70	50·02
10	34·73	33·36	33·86	33·74	49·65	52·35	51·98	55·02
20	28·59	27·46	28·64	27·96	41·04	43·67	43·45	46·36
30	22·90	22·45	23·82	22·99	33·06	35·29	35·43	37·84
40	17·91	18·10	19·12	18·49	25·65	27.27	27·81	29·65
50	13·59	13·97	14·50	14·28	18·89	19·85	20·63	21·87
60	9·53	10·00	10·02	10·11	12·90	13·83	14·08	14·81

1941_50-க்குரிய எண்கள் குறிக்கும்படி சிறிது முன்னேற்றம் இருப்பினும், குறுகிய ஆயுட் காலத்தினுல் நம் நாட்டில் பொருளாதார சக்தி ஏராளமாக வீணுகிறது என்று உறுதியாகக் கூறலாம். பொருளாதார முறையில் பார்க்கும்போது, தம் இளமையில் நாட்டின் செல்வத்தை நுகர்பவர்கள், சிறு வயதிலேயே இறந்துவிடாமல் அதிக காலம் உயிரோடிருந்தால், செல்வத்தை உற்பத்தி செய்ய உதவியிருப்பார்கள் என்றும், அப்படி இல்லாததனுல் நாட்டின் செல்வம் படிப்படியாகக் குறைந்து வருகிறது என்றும் கூறலாம்.[1] இவ்வாறு ஒரு சார்பான வயது பங்கீடு நம் நாட்டில் உள்ளது. இது பூகோள அல்லது சீதோஷ்ண நிலைமையினுல் தவிர்க்க முடியாததாக அன்றி, மாற்றப்படக்கூடிய சமூகப் பொருளாதார அமிசங்களின் விளைவு என்பது மேலும் வருந்தத்தக்கது.

வயது பங்கீட்டில் மேலும் முக்கியமான ஒரு விஷயம் என்னவென்ருல், 22 முதல் 45 வரை வயதுள்ளவர்களில், ஆண்களைவிடப் பெண்களே அதிகம் இறந்துவிடுகிருர்கள். சாதாரணமாக 45 வயதில் கருத்தரிக்கும் ஆற்றல் இல்லாமல் போய்விடுகிறது. இந்தியாவில் 15_24 வயது காலத்தில்தான் முதலில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பெரும்பாலும் பிறந்துவிடுகின்றன என்று திரு. ஜெயின் கூறுகிருர். 15_19 வயது காலத்தில் முதல் குழந்தைகள் பிறக்கின்றன. இந்த வயது எல்லையில் மணமான பெண்களில் 1,000 பேருக்கு 155 குழந்தைகள்தாம் பிறக்கின்றன. 1931-ல் 15_19 வயது எல்லையில் மணமான பெண்கள் 84% தான் இருந்தனர். இந்த வயது எல்லையில் 1,000 பெண்களுக்கு 130 குழந்தைகள்தாம் பிறக்கின்றன என்பது இதற்குப் பொருள். 20 வயதுக்குப் பிறகு ஆண்களைவிடப் பெண்களே அதிகம் இறக்கின்றனர் என்பது இந்த விவரத்திலிருந்து தெரிகிறது.[2] 1941_50 அட்டவணையிலிருந்து தெரியும் பெண் மரணவீதம் இதை உறுதிப்படுத்துகிறது. கீழ்க்கண்ட அட்டவணையைக் காண்க:[3]

இறப்பு விதங்கள் (1941—50)

வயது	20	25	30	35	40	45
ஆண்கள்	10·5	12·0	14·1	17·0	20·2	24·8
பெண்கள்	7·8	11·4	16·7	21·4	24·3	27·4

[1] மேலும், ஒவ்வொரு வயது எல்லைக்கும் உரிய ஆயுட் கால வரையறை மேனுடுகளில் இருப்பதைவிடக் குறைவாய் இருப்பதால், உற்பத்தி செய்யும் பருவத்தை யடைந்தவுடன், வேலையாள் உற்பத்தி செய்யுங் காலம் குறைவாகத்தான் இருக்கும். மேற்கூறிய பெல்ஷா, பக்கம் 134 பார்க்க.

[2] Census Paper No. 2 of 1954.

[3] Demographic Year Book, 1954, U. N.

இதற்கும், நம் ஜனத்தொகையின் நிகர இன விருத்தி வீதத்திற்கும் நேரடித் தொடர்பு உண்டு. ஒவ்வொரு பெண்ணும் பெறும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையிலிருந்து இதை நிருணயிக்கலாம். இந்த வீதத்தின்படி, பிறந்த பெண் குழந்தை ஒவ்வொன்றும், தானும் குழந்தை பெறும் வயது முடிய உயிரோடிருக்கும்.

இந்தியாவில் ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை அதிகம். 1931 கணிப்பில், இந்தியா முழுவதிலும் பல பகுதிகளில் பல வகுப்பினரைச்சார்ந்த 9 இலட்சம் குடும்பங்களைப் பற்றிய விசேஷ ஆராய்ச்சியின் முடிவுகள் தரப்பட்டுள்ளன. இந்த விசாரணையின்படி, ஒரு சாதாரண மணமான பெண் 4·2 குழந்தைகளை உயிரோடு பெறுகிறாள்; இவற்றுள் 2·9 குழந்தைகள் அவளுக்குப் பிறகு உயிரோடிருக்கின்றன. 1951 கணிப்பின் திருவாங்கூர்-கொச்சி ஆராய்ச்சி, ஒரு சாதாரண மணமான பெண்ணுக்கு 4·3 குழந்தைகள் பிறக்கின்றன என்றும், அவற்றுள் 3·2 குழந்தைகள் தாய்க்குப்பின் உயிரோடிருக்கின்றன என்றும் கூறுகிறது. இந்தக் குறைவான பிறப்பு வீதம், கருத்தடை முறைகளை மேற்கொள்ளுவதனாலோ, காலந்தாழ்த்திச் செய்யும் திருமணங்களாலோ ஏற்படுவதன்று. பல பெண்கள் இனப் பெருக்கம் செய்யும் பருவம் அடைவதற்கு முன்பே இறந்து விடுவதன் விளைவே இது. மணமான பெண்கள் இளமையிலேயே இறந்து விடுவதற்குக் காரணம் இளமைத் திருமணந்தான். இளமைத் திருமணத்தை ஒழித்தால் பிறப்பு வீதம் நிச்சயமாக அதிகரிக்கும். கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வது தடுக்கப்படுவதாலும், குறைவான இனப் பெருக்க வீதம் ஏற்படுகிறது. 1931 ல் மொத்தப் பெண்களில் 16·1 சதவீதம் கைம்பெண்கள். ஆனால், 1951 கணிப்பில் இது 12·8 சதவீதமாயிற்று. கைம்பெண்களின் விகிதம் குறைந்தாலும், மணமான பெண் ஒருத்திக்குப் பிறக்கும் சராசரி குழந்தைகளின் எண்ணிக்கை மாறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஆகவே, இந்தியாவில் சமூக சீர்திருத்தமானது கைம்பெண்களின் திருமணத்தைச் சட்டப்படி அங்கீகரித்தாலும், இளமைத் திருமணங்களை ஒழித்தாலும், திருமண வயதை உயர்த்தினாலும், சுகாதார அறிவைப் பரப்பினாலும், நல்ல மருத்துவ உதவிகளை அளித்தாலும் (குறிப்பாகத் தாய்மை சம்பந்தமாக), பிறப்பு வீதத்தை நேரடியாகப் பாதித்து, நம் எண்ணிக்கையை மிகவும் வேகமாக வளரும்படி செயயும். சமூக சீர்திருத்தத்தினால், இப்போது நம் நாட்டில் உள்ள ஜனத்தொகை உயர்வு வீதம் மேலும் அதிகரிக்கும்

என்று கூறுவது பொருளற்றது. ஏனெனின், இயற்கையும் மனிதனுடைய யுக்திகளும் வளர்ச்சி வீதத்தைக் குறைக்கக்கூடிய வழிகளை உண்டாக்கும். கல்வியின் தரம் உயர்வாக உள்ள மற்ற நாடுகளில் ஜனத்தொகையை மக்கள் தாமாகவே விரும்பிக் கட்டுப் படுத்திக் கொள்கின்றனர். அதனால், குடும்பத்தின் அளவு ஒரு வரையறைக்குள் இருக்கிறது. இதற்கு மாருக, இந்தியாவில் ஒரு திட்டமான கொள்கை இன்றி, 'ஒவ்வொரு வாய்க்கும் கடவுள் இரண்டு கைகளைப் படைத்து அனுப்புகிருர்' என்ற பழமொழியை நம்பிக்கொண்டு இருக்கின்றனர். இதன் விளைவாக, நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, உயர்ந்த பிறப்பு வீதமானது, அதற் கேற்ப உயர்ந்த இறப்பு வீதத்தையும் உண்டாக்கி விட்டது.

வேலையின்படி பங்கீடு

சமூக நிலைமைபற்றியும் மாறுதல்கள்பற்றியும் அறிவதற்கு, ஜனத்தொகையானது வேலைக்கேற்றவாறு எப்படிப் பங்கீடு செய்யப் பட்டுள்ளது என்ற புள்ளி விவரம் முக்கியமானது. ஒரு நாட்டின் தொழில் முன்னேற்ற நிலையை யறிவதற்கு அவை மிக நல்ல அறி குறியாகும். இது சம்பந்தமாகக் கணிப்பு எண்கள் நமக்கு மிகவும் முக்கியமான மூலமாகும். எனினும், நம் நாட்டில் கணிப்புகளி லிருந்து கிடைக்கும் எண்களை ஒப்பிட்டுப் பார்ப்பது தவருன முடிவைத் தரக்கூடும். ஏனெனின், தகவல்களைப் பெறும் முறை யிலும், கிடைத்த தகவல்களின் தன்மையிலும் ஒவ்வொரு கணிப் பின்போதும் மாறுதல்கள் புகுத்தப்பட்டுள்ளன. 1931-ல் இத்தகைய ஒரு பெரிய மாறுதல் புகுத்தப்பட்டது. அது, முதல் முறையாக வேலை செய்பவர்கள் என்றும், வேலை செய்யாமல் பிறரைச் சார்ந் திருப்பவர்கள் என்றும் மக்களை இரு பிரிவுகளாகப் பிரித்தது. குடும்பத் தேவைக்குச் சிறிதும் போதாத வருமானமுடைய எவரும், வேலை இல்லாமல் பிறரைச் சார்ந்திருப்பவர் என்று கூறப்பட்டது. மத்திய மாகாணத்தின் கணிப்பு அதிகாரி கீழ்வருமாறு குறிப் பிட்டுள்ளார்: 'வேலை செய்பவர்கள், வேலை செய்யாமல் பிறரைச் சார்ந்திருப்பவர்கள் என்ற பாகுபாடு, அறிவும் பயிற்சியும் உடையவர் களுக்கு நன்கு விளங்குமெனினும், சாதாரணக் கணக்கெடுப்பவர் களுக்கு இது புரிவதில்லை. இதை அவர்களுக்கு மிகவும் விளக்க வேண்டியுள்ளது. கணக்கெடுப்பவர் இதை நன்கு புரிந்துகொண்டு விட்டாலும், சரியாகப் பதிவு செய்வதற்கான தகவலைக் கிராம மக்களிடமிருந்து பெறுவது மிகவும் பெரிய பிரச்சினையாக உள்ளது. அதிக ஆர்வமில்லாக் கணிப்பு அதிகாரிகள் தயாரிக்கும் கணிப்பு களில் பெருந்தவறுகள் நேருவது இயற்கையே.'

கீழ்வரும் அட்டவணை, 1901 முதல் 1921 வரை இந்திய ஜனத் தொகையில் வேலைக்கேற்ற பங்கீட்டில் உள்ள மாறுதல்களை ஒப்பிட்டுக் காட்டுகிறது.

	1901		1911		1921	
	ஜனத்தொகை 10 இலட்சத்தில்	சதவீதம்	ஜனத்தொகை 10 இலட்சத்தில்	சதவீதம்	ஜனத்தொகை 10 இலட்சத்தில்	சதவீதம்
(அ) மூலப்பொருள் உற்பத்தி ...	192	67·4	221	72·7	231	73·1
(ஆ) பொருள்களைத் தயார் செய்து அளிப்பது	56	19·7	56	18·4	56	17·7
(இ) அரசாங்க நிருவாகமும் படித்தவர் செய்யும் வேலைகளும்	10	3·5	10	3·3	10	3·2
(ஈ) பலவகை ...	27	9·4	17	5·6	19	6·0

1931-க்குரிய எண்கள், வெவ்வேறு தொழில்களைச் சார்ந்துள்ளவர்களைப்பற்றிய குறிப்பு ஒன்றையும் தரவில்லை; அதற்குப் பதில், மேற்கண்ட நான்கு பிரிவுகளுக்கும் இவ் அட்டவணையைத் தருகிறது:

	வேலை செய்பவர் 10 இலட்சத்தில்	வேலை செய்வோர் சதவீதம்	பிறர் ஆதரவில் இருப்பவர்கள் 10 இலட்சத்தில்	மொத்தம் ஆதரிக்கப்படுபவர்கள் 10 இலட்சத்தில்	மொத்த ஜனத்தொகையில் சதவீதம் 10 இலட்சத்தில்
(அ)	103·6	67·3	131·7	235·3	67·1
(ஆ)	25·6	16·6	32·7	58·5	16·6
(இ)	4·1	2·8	6·3	10·4	3·0
(ஈ)	20·5	13·3	26·1	46·6	13·3

வகையீட்டின் அடிப்படையே மாற்றப்பட்டு விட்டதால், இந்த எண்களை இதற்கு முந்திய மூன்று கணிப்புகளின் எண்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. 1941 கணிப்பில், இந்தத் தலைப்பின்

கீழ் எண்கள் தரப்படவில்லை. 1951 கணிப்பில் வகையீடு மறுபடியும் மாற்றப்பட்டு விட்டது. ஆகையால், சம்பாதிப்பவர்கள், பிறரைச் சார்ந்திருப்பவர்கள் என்ற பிரிவில் உள்ள வேலை சம்பந்தமான போக்குகளையும் மாறுதல்களையும் நாம் ஒப்பிட்டுப்பார்க்க முடிய வில்லை.

மேய்த்தலும் விவசாயமும்

மேய்த்தலிலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கும் முக்கியமான வேலையாட்களின் எண்ணிக்கைபற்றிக் கீழ்வரும் அட்டவணை கூறுகிறது.[1]

	1911 (ஆயிரங்கள்)	1921 (ஆயிரங்கள்)	1931 (ஆயிரங்கள்)
மேய்த்தலும் விவசாயமும்	1,06,538	1,06,394	1,04,147

மேய்த்தலையும் விவசாயத்தையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கும் மொத்த மக்களின் எண்ணிக்கையில் அதிக மாறுதல் ஒன்றுமில்லை என்பதை இதிலிருந்து காணலாம். 1931-ல் வகையீட்டில் செய்யப்பட்ட மாறுதல்களே இதில் உயர்வு இல்லாமலிருப்பதற்குக் காரணம். அது, 'வீட்டு வேலை' என்ற தலைப்பில் 1921-ல் வேலை செய்துவந்த 25 இலட்சம் மக்கள், 1931-ல் 39 இலட்சமாக அதிகரித்ததைக் காட்டுகிறது.[2] 'சரியாக விளக்கப்படாத வேலைகள்' என்ற தலைப்பில் இதேபோல அதிக உயர்வு காணப்படுகிறது. 1921-ல் மொத்தம் வேலையில் இருந்தவர்கள் 60 இலட்சம் பேர். 1931-ல் இத் தொகை 78 இலட்சமாயிற்று. முந்திய கணிப்புகளில் பின்பற்றப்பட்ட வகையீட்டு முறையே பின்பற்றப்பட்டிருந்தால், 1931-ல் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை மட்டுமன்றிப் பிறர் ஆதரவில் உள்ளவர்களின் எண்ணிக்கையும் (விவசாயத்தைப் பொறுத்தவரையில்), மொத்த ஜனத்தொகையில் 75 சதவீதம் ஆகியிருக்கும் என்ற முடிவுக்கு நாம்

[1] 'ஜனத்தொகையில் வேலை சம்பந்தமான பங்கீட்டில் மாறுதல்'—B. G. Ghate, 1940, No. 1. 'இந்தியப் பொருளாதார ஆராய்ச்சி'—இந்திய அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகரின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டது.

[2] ஒப்பிடுக: '1921-க்கும் 1931-க்கும் இடையில், விவசாயத் தொழிலிலும் மேய்த்தல் தொழிலிலும் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகத் தெரிவது வெறும் ஏமாற்றமே. இதற்குக் காரணம் வேலையில் ஏற்பட்ட மாறுதல் அன்று; வகையீட்டில் உண்டான மாறுதலே. 'Vera Anstey'-ன் 'இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம்', பக்கம் 61.

வரவேண்டியிருக்கிறது; இன்னும் அதிகமானாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆக, விவசாயத்தைச் சார்ந்துள்ள ஜனத் தொகையின் சத்வீதம் கீழ்க்கண்டவாறு அதிகரித்து வருகிறது:

1891	1901	1911	1921	1931
61·1	65·5	72·2	73·0	75·0

சென்ற இருபதாண்டுகளாக ஒரு நல்ல மாறுதலும் ஏற்பட வில்லை என்று தெரிகிறது; ஏனெனின், 1951 கணிப்பின் எண்ணிக்கைப்படி, 1931-ல் 66—67 சதவீதமாக இருந்த விவசாய வேலையாட்கள் 1951-ல் 68—70%ஆக மாறினர். 'ஓரளவு தவிர்க்க முடியாத நிச்சயமற்ற அமிசம் இருப்பினும், சென்ற இருபதாண்டு களாக விவசாய வேலையை நம்பியிருக்கும் தன்மை குறையவில்லை என்பதற்கும், ஒரு சிறிதளவுதான் அதிகரித்திருக்கக்கூடும் என்பதற் கும் இதைச் சான்றாகக் கொள்ளலாம்' என்று கூறப்பட்டுள்ளது.[1]

15 முதல் 60 வயது, 10 முதல் 60 வயது உள்ளவர்களில், எல்லா வயதினரும், ஜனத்தொகையில் எவ்வளவு விகிதம் வேலை செய்பவர்களாக உள்ளனர் என்பதை இவ் அட்டவணை காட்டும்.[2]

	1911	1921	1931
வேலை செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை (10 இலட்சத்தில்)	148·9	146·6	146·9
15 முதல் 60 வயது வரை உள்ள மொத்த ஜனத்தொகை (10 இலட்சத்தில்) ...	176·6	175·5	195·8
15 முதல் 60 வயது வரை ஜனத் தொகையில் 1000-க்கு வேலை செய்பவர்களின் விகிதம் ...	843	834	749
10 முதல் 60 வயது வரை உள்ள மொத்த ஜனத்தொகை (10 இலட்சத்தில்) ...	211·8	214·7	238·5
10 முதல் 60 வயது வரை ஜனத் தொகையில் 1000-க்கு வேலை செய்பவர்களின் விகிதம் ...	703	682	616

[1] Census of India, 1951, Vol. I, part I B. 1955, p. 207.

[2] மேற்கூறிய கடே (Ghate) எழுதிய நூல்.

தொடர்ந்து வரும் ஒவ்வொரு கணிப்பிலும் வேலே செய்யத் தகுதியுள்ளவர்களில், 1000-க்கு வேலே செய்பவர்களின் விகிதம் குறைந்துகொண்டே வருகிறதென்பது இதனுல் தெரிகிறது. 1911-ல் 10 முதல் 60 வயது, 15 முதல் 60 வயது உள்ளவர்களில் எல்லா வயதினரும் 1000-க்கு முறையே 703, 843 என்று இருந்த விகிதம் 1931-ல் 616, 749 என்று முறையே குறைந்துவிட்டது.

1951-ல் இந்தியக் கணிப்பு, தாள் I-ல், வேலேப்படி பங்கீடு பற்றிய கணிப்பு எண்கள் மீண்டும் வகையீட்டின் பெயரையும் முறையையும் மாற்றிவிட்டன. கீழ்க்கண்ட அட்டவணே இதைக் காட்டும்:

			10 இலட்சத்தில்	மொத்த ஜனத் தொகையின் சதவீதம்
I	முக்கியமாக அல்லது முழுவதுமாக நிலத்திற்கு உரியவர்களாய் உழுபவர்களும் அவர்களேச்	ஆ.	85	46·8
	சார்ந்தவர்களும் ...	பெ.	82	
	மொத்தம் ...		167	
II	முக்கியமாக அல்லது முழுவதுமாக நிலமில்லாதவர்களாய் உழுபவர்,	ஆ.	16	9·0
	அவர்களேச் சார்ந்தவர்கள் ...	பெ.	15	
	மொத்தம் ...		31	
III	உழவுத் தொழிலாளரும் அவர்	ஆ.	22·3	12·6
	களேச் சார்ந்தவர்களும் ...	பெ.	22·4	
	மொத்தம் ...		44·7	
IV	நிலத்திற்கு உரியவர்களாய் விவசாயம் செய்யாதவர்களும், விவசாய வாரம் பெறுபவர்களும்,	ஆ.	2·4	1·4
	அவர்களேச் சார்ந்தவர்களும் ...	பெ.	2·8	
	மொத்தம் ...		5·2	
V	விவசாயம் அல்லாத உற்பத்தி ...	ஆ.	20	10·6
		பெ.	17	
	மொத்தம் ...		37	

VI வாணிபம்	...	ஆ.	11	5·9
		பெ.	10	
	மொத்தம் ...		21	
VII போக்கு வரத்து	...	ஆ.	3·1	1·7
		பெ.	2·5	
	மொத்தம் ...		5·6	
VIII மற்ற வேலைகளும் பல வகைகளும்		ஆ.	22·6	12·0
		பெ.	20·3	
	மொத்தம் ...		**42·9**	**100·0**

விவசாயத்தை நம்பியிருக்கும் மொத்த மக்கள், ஜனத் தொகையில் 70 சதவீதம். VIII-வது வகையில் சேர்க்கப்பட்டிருப்பவர்கள் ஒருவரும் நில சம்பந்தமான வேலையில்லாதவர்கள் என்று கொள்ள வேண்டும். ஆனால், இந்த வகையீட்டில் V-வது வகையில் காட்டப்பட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை அஞ்சத் தக்கதாக உள்ளது. இவர்களுள் பலர் சுரங்க வேலை செய்பவர்களாக இருக்கலாம். இருப்பினும், அதை அப்படியே எடுத்துக் கொண்டாலும், V-வது வகையில் உள்ள 10·6 சதவீத ஜனத் தொகையில் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களும், கைத் தொழில்களிலும் குடிசைத்தொழில்களிலும் ஈடுபட்டிருப்பவர்களும் அடங்குவர். இவர்களின் மொத்தம் 370 இலட்சம். இவர்களில் சுவாதீனமற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த ஊகம் சரியாயிருப்பின், 1931-ல் தொழிலைச் சார்ந்தவர்கள் மொத்தம் 342 இலட்சம் பேர் என்று கூறியிருப்பதோடு, இந்த 370 இலட்சம் முரணாக இருக்கிறது. தொழில் மயமாக்குவதை மிகத் தீவிரமாகக் கடைப்பிடித்தும், இருபதாண்டுகளில் தொழில்களை நம்பியிருப்பவர்களின் ஜனத்தொகை 28 இலட்சம்தான் அதிகரித்துள்ளது என்று கருதலாமா? பேரளவு உற்பத்தி அல்லது தொழிற்சாலைத் தொழில்களில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதால், கைவினைத் தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டும். இந்த ஊகம் சரியாயிருக்க வேண்டும். அல்லது, 1931-லும் 1951-லும் கடைப்பிடிக்கப்பட்ட வெவ்வேறு வகையீட்டு முறைகளால் எந்த ஊகமும் செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டிருக்க வேண்டும். 430 இலட்ச மக்களின், அதாவது ஜனத்தொகையில் 12 சதவீதத்தினரின் வேலைகள் என்ன என்று விரிவாகக் கூற முடியாத நம் கணிப்பாளர்களின் திறமையையும் அறிவையும்பற்றி நாம் என்ன சொல்வது? மேலும், VIII-வது வகையில், 'மற்ற வேலைகள்'

என்ற தலேப்பில், படித்தவர்கள் செய்யும் வேலேகளும் தொழில்களும் மத்திய, இராச்சிய அரசாங்கப் பணிகளும், வீட்டு வேலேக்காரர்களும் அடக்கப்படுவதைப்பற்றியும் என்ன சொல்வது? நாம் இப்பொழுது ஐக்கிய நாடுகள் சபையிலும், அதன் கிளேக் குழுக்களிலும் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பதால், நம் இந்திய அரசாங்கம் தன் மக்களியல் பதிவுகளில் ஒரு பொதுவான வகையீட்டைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவருகுமா? இதனுல் ஆராய்ச்சியாளர்கள் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் செய்யப்படும் பதிவுகளே ஒப்பிட்டுப் பார்ப்பது எளிதாகுமன்ரே?

1951-ன் கணிப்பு அறிக்கை, சம்பாதிப்பவர்கள், சம்பாதித்துக் கொண்டு பிறர் ஆதரவில் இருப்பவர்கள் ஆகியவர்கள் ஜனத் தொகையில் மொத்தம் எவ்வளவு என்பதை ஒப்பிட்டுக் காட்டும் அட்டவணேயைக் கீழே காண்க:[1]

இந்தியா		1931	1951	
		(10 இலட்சத்தில்)		
மொத்த ஜனத்தொகை	...	275	356	
சம்பாதிப்பவர்கள்	...	103	104	(சுவாதீனமானவர்கள்)
சுவாதீனமின்றி வேலே செய்பவர்கள்		19	38	(சம்பாதித்தும் சுவாதீன மற்றவர்கள்)
வேலே செய்யாமல் பிறரைச் சார்ந்திருப்பவர்கள்		153	214	(சம்பாதிக்காமல் பிறரைச் சார்ந்திருப் பவர்கள்)

வேறு அடிப்படையில் வகையீடு செய்யப்பட்ட 1931-ன் எண்களேயும் 1951-ன் எண்களேயும் நியாயமான எல்லேக்குள் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய முறையில் மாற்றியமைக்க முடியும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.[2] 1931-ல், சம்பாதிப்பவர்களும், சுவாதீனமின்றி வேலே செய்பவர்களும் மொத்த ஜனத்தொகையில் 44 சதவீதமாக இருப்பினும், 1951-ல் இது 39·9 சதவீதமாக மாறியது என்பதை அட்டவணே காட்டுகிறது.

[1] Census of India, 1951, Vol. I, part I B, 1955, p. 189.

[2] ஒப்பிடுக: '1931-ல், சம்பாதிப்பவர்களேயும் சுவாதீனமின்றி வேலே செய்பவர்களேயும், 1951-ல் சுவாதீனமானவர்களேயும், சம்பாதித்தும் சுவாதீனமற்றவர்களேயும்தாம் உண்மையில் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அல்லது, 1931-ல் வேலே செய்யாமல் பிறரைச் சார்ந்திருப்பவர்களேயும், 1951-ல் சம்பாதிக்காமல் பிறரைச் சார்ந்திருப்பவர்களேயும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் இதைப் போலவேயாகும்.' மேற்கூறியதில் பக்கம்-189.

தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, தொழிற்சாலைகளில் தினந்தோறும் வேலை செய்பவர்களின் சராசரி எண்ணிக்கையைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது :

வருடம்	1911—14	1924	1934	1937	1939	1951
எண்ணிக்கை (ஆயிரத்தில்)	909	1,456	1,497	1,676	1,751	2,537

தொழில்களில் வேலை செய்யும் மொத்தப் பேர்களின் எண்ணிக்கையைக் கீழ்க்கண்ட அட்டவணை (ஆயிரத்தில்) தருகிறது.[1]

	1911	1921	1931	சதவீத மாறுதல்
நெசவாலைகள் ...	4,449	4,031	4,102	+ 1·8
மரம் ...	1,731	1,581	1,632	+ 3·2
உலோகமும் பீங்கானும் ...	1,896	1,811	1,738	— 5·0
உணவுத் தொழில்கள் ...	2,134	1,653	1,478	— 10·7
ஆடைத் தொழில்களும் ஒப்பனையும் ...	3,748	3,404	3,381	— 0·7
மரச்சாமான் தொழில்கள் ...	18	12	21	+ 50·1
கட்டடத் தொழில்கள் ...	962	812	619	— 23·8
சுரங்க அமைப்பு ...	25	23	29	+ 27·4
பௌதிக ஆற்றலை உற்பத்தி செய்தலும் அனுப்புதலும்	7	11	24	+117·0

மேலே கண்ட அட்டவணைகளிலுள்ள எண்ணிக்கையைப் பார்த்து, கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து உழுநிலத்தில் நெருக்கடி அதிகமாக உண்டாகவில்லை என்று கூறுவது தவறு. 1911-க்கும், 1931-க்கும் இடையில் தொழில்களில் ஈடுபட்டிருந்த மக்களில் சுமார் 20 இலட்சம் குறைந்துள்ளது.[2] ஒவ்வொரு வேலையாளையும் மூன்று பேர்கள் சார்ந்திருக்கிறார்கள் என்று கொண்டு, 1921-ல் கைவினைத்தொழிலை நம்பியிருந்த 67 இலட்சம் மக்கள், 1931-ல் நிலத்தை நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டது என்று தெரிகிறது. 1881-க்கும் 1931-க்கும் இடையில் பெரும்பாலும்

[1] மேற்கூறிய கடே (Ghate), பக்கம்-26.

[2] முற்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் நம் நாடு தொழில் மயமாக்கப் பட்டதற்கு இது நல்ல விளக்கமாக அமைகிறது.

விவசாய வாழ்க்கையுடையதாய், சமன் செய்யப்படாத பொருளாதாரத்தைப் பெற்றிருக்கும் நம் நாட்டின் நிலை திருந்தியிருக்கிறதென்பதற்குச் சான்றாக, நம் ஜனத்தொகையின் வேலை சம்பந்தமான பங்கீட்டின் போக்கில் எவ்வித மாறுதலும் உண்டாயிருப்பதாகக் கூற முடியாது. 'படிப்படியான கிராம வாழ்க்கைப், போக்குடையதாகக் குறை கூறப்படும் நிலைமை மாறவில்லை. வேலை செய்யும் மக்களின் மொத்த அளவில், கடந்த சில ஆண்டுகளாக நன்கு அமைக்கப்பட்ட இயந்திரத் தொழில்களில் அதிகமாக வேலையில் அமர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கையானது மிக மிகக் குறைவே. ஆகவே, மொத்தத்தில் இந்த எண்கள், விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ள நம் நாட்டின் ஒருசார்பான தன்மையையே காட்டுகின்றன. கீழ்வரும் அட்டவணையில் விவசாய நிலத்தின் மேல் மக்களின் நெருக்கடி அதிகரித்து வரும் பெரிய பிரச்சினை காட்டப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் தொழில்களில் வேலை செய்யும் மக்களின் விகிதத்தை அது ஒப்பிட்டுக் காட்டுகிறது.[1]

	1911	1921	1931	1941	சதவீத மாறுதல் 1911—41
ஜனத்தொகை (10 இலட்சத்தில்) ...	315	319	353	389	+23·5
வேலை செய்யும் மக்கள் (10 இலட்சத்தில்) ...	149	146	154	170[2]	+13·4
தொழில்களில் வேலை செய்பவர்கள் (10 இலட்சத்தில்) ...	17·5	15·7	15·3	16·3[2]	— 6·3
வேலை செய்யும் மக்களில் தொழில்களில் வேலை செய்பவர்களின் சதவீதம் ...	11·0	11·0	10·0	9·6	—12·7
மொத்த ஜனத்தொகையில் இயந்திரத் தொழிலாளர்களின் சதவீதம்.	5·5	4·9	4·3	4·2	—23·6

ஓரளவு தொழில் மயமாக்கப்பட்டிருப்பினும், வேலை செய்யும் மக்களில் இயந்திரத் தொழிலாளர்களின் சதவீதம் குறைந்திருப்பது, குடிசைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களில் பலர் வெளியேற்றப்

[1] மேற்கூறிய நூல், R. முகர்ஜி, பக்கம்-204.

[2] சுமாராக மதிப்பிடப்பட்டவை.

பட்டு வருகிறார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கைத்தறி நெசவாளர்கள்தாம். பெருகி வரும் ஜனத்தொகை தொழில்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. இதற்கு மாறாகக் கடந்த காலத்தில் தொழில்களை நம்பியிருந்தவர்களில் ஒரு பகுதியினர் நிலத்தைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலான தொழில்களில் எண்ணிக்கை குறைவது விவசாயத்தில் மேலும் அதிக மக்கள் ஈடுபடுவதையே காட்டுகிறது. இதனால், மேலும் அதிகமாக வறுமையும் கடனும் உண்டாகின்றன. 1911-க்கும் 1941-க்கும் இடையில் மொத்த ஜனத்தொகை 740 இலட்சம் அதிகமாயிற்று. நன்கு அமைக்கப்பட்ட தொழில்களில் 10 இலட்சம் பேர் அதிகமாகச் சேர்ந்தும், மொத்தத் தொழிலாளர்கள் 170 இலட்சத்திற்குமேல் ஆகவில்லை. இதற்கு மாறாக, வேலை செய்யும் மக்களின் எண்ணிக்கை 160 முதல் 180 இலட்சம் வரை அதிகரித்திருக்க வேண்டும்.

பம்பாய் மாகாணத்தில் 1921-க்கும் 1931-க்கும் இடையில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 7% உயர்ந்திருக்க, தொழில்களில் வேலைக்கமர்ந்தவர்களில் 5% குறைவு காணப்பட்டது. வங்காளத்தில் தொழில்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்ததுபற்றிக் கீழ்வரும் அட்டவணையால் அறியலாம்.[1]

	1911	1921	1931	சதவீத மாறுதல் 1911—31
ஜனத்தொகை (10 இலட்சத்தில்) ...	46·3	47·5	51·8	+10·0
வேலை செய்யும் மக்கள் (10 இலட்சத்தில்) ...	16·2	16·8	14·7	— 0·9
தொழில்களில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை (10 இலட்சத்தில்) ...	1·7	1·7	1·3	— 0·23
வேலை செய்யும் மக்களில் இயந்திரத் தொழிலாளர்களின் சதவீதம் ...	10·5	10·1	9·0	—14·2
மொத்த ஜனத்தொகையில் இயந்திரத் தொழிலாளர்களின் சதவீதம் ...	3·9	3·7	2·5	—35·8

[1] மேற்கூறிய நூல், R. முகர்ஜி, பக்கம்-207.

வேலைப்படி சமன் செய்யப்படாத இந்தப் பெருங்குறை, நல்ல காலம் வந்தால் தானாகத் தீர்ந்துவிடும் என்று எண்ண முடியாது. எவ்வளவு பேரளவு உற்பத்தி செய்தாலும், அதில் ஆண்டுதோறும் அதிகமாகி வரும் ஜனத்தொகையைக்கூட ஈடுபடுத்த முடியாது. 1939-ல் இந்தியாவில் பேரளவு நிறுவனங்களில் வேலை செய்துவந்த மொத்த மக்கள் எண்ணிக்கை 20 இலட்சத்திற்கும் குறைவாக இருந்தது. இப்போது அது 30 இலட்சம் இருக்கலாம். இப்போதுள்ள வீதத்தின்படி ஆண்டுக்கு 40 முதல் 60 இலட்சம் வரை ஜனத்தொகை உயர்ந்துகொண்டே போனால், நாம் விரைவாகத் தொழில் மயமாக்குவதற்குத் திட்டமிட்டால்கூட, இந்த உபரியைத் தொழில்களில் சேர்த்துக்கொள்வது மிகக் கடினமான வேலையாகும். இப்போது உபரியாக உள்ள விவசாய ஜனத்தொகையை அத் தொழில் உற்பத்தியில் எப்படிச் சேர்த்துக்கொள்ள முடியும்? சிற்றளவு, நடுத்தர அளவுத் தொழில்களை விருத்திசெய்தால் அன்றிச் சமநிலையை ஏற்படுத்த முடியாது. மேனாடுகளின் தொழில் முறையைக் கண்மூடித்தனமாய் அப்படியே பின்பற்றுவதால், இப் பொருளாதாரச் சீரமைப்பைச் செய்ய முடியாது. ஒரு புதிய பொருளாதார அமைப்பை நாம் காணவேண்டும். அதில் தொழில் துறையில் முன்னேறிய நாடுகளுக்கு மிகச் சிறியவையாய்த் தோன்றக்கூடிய, ஆனால், நம் நாட்டில் கிடைக்கும் அதிக அளவுத் தொழிலாளர்களுக்கும், குறைந்த அளவு மூலதனத்திற்கும் ஏற்ற உத்தம (optimum) அளவுள்ள தொழில்களால் வெவ்வேறு வகையான உற்பத்திகளைச் செய்யவேண்டும். மேலும், அச் சீரமைப்பில், பூகோள முறைப்படி தொழில்களைத் திட்டமிட்டு, அவை சில பெரிய நகரங்களிலே குவியாமல், கிராமங்களிலும் பெரிய ஊர்களிலும் பரவியிருக்குமாறு செய்யவேண்டும். நம் ஆற்றலைப் புதிய வாழ்க்கைக்குப் பயன்படுத்தும்படியும், சமூகத்தை இது வரையில் அலட்சிய மனப்பான்மையிலும் சோம்பலிலும் அழுத்தி வந்த அறியாமை, வறுமை, நோய் ஆகியவற்றினின்றும் விடுவிக்கும் படியும், ஒரு சமூக உணர்ச்சியோடு இத்தகைய பொருளாதாரச் சீரமைப்பிற்குத் திட்டமிட்டால், நம் மக்களுக்கு அதிக இன்பமும் செல்வமும் நிறைந்த வாழ்க்கையும் உண்டாகுமென்று நாம் எதிர் பார்க்கலாம்.

7. மனித அமிசம் (தொடர்ச்சி)

ஜனத்தொகையின் தன்மை

ஒரு சமூகத்தின் நிலையை, அவர்கள் வழக்கமாகப் பின்பற்றும் வாழ்க்கைத்தரத்தைக்கொண்டு நிச்சயமாகவும், உடற் குறை, தற்கொலை, தீய பழக்கங்கள், குற்றங்கள்பற்றிய புள்ளி விவரங்களைக் கொண்டு ஏதோ ஒரு வகையாகவும் அறியலாம். ஒவ்வொரு நாட்டிலும், ஏதேனும் உடற் குறை அல்லது மூளைக் குறை காரணமாக உடல் வலிமை இல்லாதவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்கள் சமூகத்திற்கு ஒரு சுமை. அவர்கள் இருப்பது பொருளாதார முறையில் நஷ்டமாகும். இறுதியாகப் பார்த்தால், சமூக அமைப்பில் உள்ள ஏதோ ஒரு குறைதான் இதற்குக் காரணம். வறுமை, நோய், தீய பழக்கங்கள், குற்றங்கள் ஆகியவை எல்லாம் நோயுற்ற சமூகத்தின் அறிகுறிகளே. இவ்வாறு, உடற் குறையுள்ளவர்களைப் பற்றிய விவரங்களை ஆராய்வது, இதற்கான காரணங்களை அறிய உதவும்.

உடற் குறையில் பலவ்கை உண்டு. சில குறைகள் ஒருவனை எதற்கும் உதவாமல் செய்துவிடும்; மற்றவை ஓரளவு பயனற்றவனாகச் செய்துவிடும். சில குறைகள் பிறவி முதலே இருக்கும்; மற்றவை வயதாக ஆக வரும். சிலர் முற்றிலும் குருடாக இருப்பர்; சிலருக்குப் பார்வை மட்டமாக இருக்கும். சிலர் செவிடாக மட்டும் இருப்பர்; சிலர் செவிடும் ஊமையுமாக இருப்பர். இவற்றுள் பல வயதான காலத்தில் இயல்பாக வருபவை. கை, கால் போன்ற உறுப்புகள் இல்லாமலிருந்தால், ஒருவர் முற்றிலும் திறமையாக வேலைசெய்ய முடியாவிட்டாலும், உற்பத்தி செய்வதில் ஓரளவு உதவுவதற்கு அது தடையாக இராது. நாகரிகமான நாடுகளில்கூட ஓரளவு குறையுடையவர்களையெல்லாம் பதிவு செய்வது கடினம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில், உடற்குறையுள்ளவர்களைப் பற்றிப் பதிவு செய்வது ஒருபொழுதும் திருப்திகரமாக இருந்ததில்லை. மூளைத்திறமை குறைந்தவர்கள் பைத்தியம் என்றும், பார்வை மந்தமானவர்களைக் குருடு என்றும் பதிவு செய்கிறார்கள். பெருநோய் போன்ற வியாதிகள், குறிப்பாகப் பர்தா முறை உள்ள இடங்களில் மறைக்கப்படுகின்றன.

உணவுக் குறையால் வரும் நோய்கள்

முந்திய அத்தியாயம் ஒன்றில், ஜனத்தொகைப் பெருக்கத்திற்கு எதிரான தடைகளைப்பற்றிக் கூறும்பொழுது, காலரா, பிளேக், இன்ஃப்ளுவென்சா, மலேரியா ஆகியவற்றால் உயிர்கள் மிகவும் பலியாகின்றன என்று கூறினோம். சில நோய்களுக்கு மரணவீத ஒப்பெண்களையும் கொடுத்திருக்கிறோம். இந்த நோய்கள் யாவும் மக்களின் ஆற்றலையும் ஜனத்தொகையின் தன்மையையும் பாதிக்கும். மரணங்களில் 50 சதவீதம் 'காய்ச்சலால்' உண்டாவதாகக் கூறப்படுகிறது. இது அதிகப் பொருளில்லாத சொல். இவற்றுள் பல போதிய ஊட்டமின்மையாலும் அரைப்பட்டினியாலும் ஏற்படுகின்றன. ஆகவே, இவை 'உணவுக் குறையால் உண்டாகும் நோய்கள்.'[1] வறுமையால் உண்டாகும் நோய்களில், காலரா, பெரியம்மை, பிளேக், ஜுரங்கள், க்ஷயம், சீதபேதி, வயிற்றுப் போக்கு முதலியவை அடங்கும். இவை பெரும்பாலும் தடுக்கப்படக்கூடியவை. இந்த நோய்களின் காரணமாக, நம் மக்கள் இருக்கவேண்டியபடி இல்லாமலிருந்தால், போதிய அளவு தடுப்பு முறைகள் இன்மையும் ஊட்டமின்மையும்தாம் அதற்குக் காரணம். போதிய அளவு இல்லாததும் கெட்டதும் ஆகிய உணவினால் உண்டாகும் தீமைகளைப் போக்க விரும்பும் நல்ல திட்டப்படி அமைந்த சமூகமானது, தன் மக்களின் தரத்தை நிச்சயமாக உயர்த்தவே விரும்பும்.

எழுத்தறிவு

பொருளாதார நோக்குடன் பார்த்தாலுங்கூடக் கல்வியின் முக்கியத்துவம், சாதாரணமாக யாவரும் அறிந்ததே. பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி, நம் பொதுப் பாரம்பரியச் சொத்தைத் துய்த்து வாழும் விரிவும் நிறைவும் பொருந்திய

[1] 'நுகர்வுப் பிரச்சினைகள்' என்ற அத்தியாயத்தில், ஊட்டக் குறைவாலும், உணவுக் குறைவாலும் உண்டாகும் நோய்களைப்பற்றி விளக்கப்பட்டிருப்பதைக் காண்க.

வாழ்க்கைக்கும் அது தேவையானது. கணிப்பிற்காக, எழுத்தறிவு என்பது கடிதம் எழுதுவதற்கும், அதற்குரிய பதிலைப் படிப்பதற்கும் போதுமான அறிவு என்று விளக்கப்பட்டுள்ளது. 1881-ல் இந்தியா முழுவதிலும் மொத்தம் 1,000-க்கு 46 பேர் எழுத்தறிவு உடையவர்கள். 1921-ல் இந்த விகிதம் 1,000-க்கு 71 ஆக உயர்ந்தது. 1931 ல் இது 1,000-க்கு 80 ஆகவும், 1941-ல் 121 ஆகவும் மாறியது. 5 வயதுக்கும் அதற்கு மேலும் உள்ளவர்களில் எழுத்தறிவுடையவர்களைப் பற்றிய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

5 வயதிற்கும், அதற்கு மேலும் 1000-க்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்

			1921	1931
ஆண்கள்	...	...	139	156
பெண்கள்	...	...	21	29
ஆட்கள் (persons)	...	...	82	95

எழுத்தறிவைப் பொறுத்தமட்டில், 1941ஆம் ஆண்டின் கணிப்பு அறிக்கைப்படி, '1931-ல் இருந்ததைவிட ஜனத்தொகை முழுவதற்கும் பொதுவாக, இந்தியாவில் 70 சதவீதம் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது. இதில் ஆண்கள் உயர்வு 60, பெண்கள் உயர்வு 150. பெண்கள் கல்வியில் அதிக முன்னேற்றத்திற்கு இடமிருந்தது. மாகாணங்களில் உயர்வு 80 ஆகவும், இராச்சியங்களில் 70 ஆகவும் இருந்தது. இதில் ஆண், பெண் பகுதிகள் ஏறக்குறைய முன் போலவே இருந்தன. பஞ்சாபில்தான் மிகவும் குறிப்பிடத்தக்க எண்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அங்கு 140 சதவீதம் உயர்வு இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனுல், இப்போது அங்குள்ள எழுத்தறிவு சதவீதம் 13 ஆகும். இதில், ஆண்களுக்கு 110 சதவீத உயர்வும், பெண்களுக்கு 390 சதவீத உயர்வும் அடங்கும். இவ்வளவு பெரிய எண்ணிக்கைகளைக்கொண்டு ஆராய்வதற்கு முன்பு, இதில் நேர்ந்திருக்கும் தவறுகளைப் பரிசீலனை செய்து தெளிவாகப் பிரிக்க முற்படவேண்டும். ஐக்கிய மாகாணத்தின் பதிவு, பார்த்த அளவிலேயே, பொதுவாகப் பார்த்ததற்கும் அனுபவத்திற்கும் ஒத்துவருகிறது. இங்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை, மற்றப் பகுதிகளைவிடவும் எல்லாப் பெரிய மாகாணங்களைவிடவும் குறைவு. மொத்த ஜனத்தொகையில் 8 சதவீதம்தான் அங்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஆனுல், இந்தப் பத்தாண்டுகளில் எல்லா இடங்களிலும் 80 சதவீதம் உயர்வு காணப்படுகிறது. அதில் ஆண்கள் 70-ம் பெண்கள் 170-ம் ஆகும். எனினும், இப்

போதுங்கூடப் பெண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 2 சதவீதம்தான். 1931-ல் இருந்தது போலவே, பம்பாய்தான் எல்லா மாகாணங்களிலும் முதலில் நிற்கிறது. அது 100 சதவீதம் உயர்வையும், ஆண்களில் 30 சதவீதத்தையும் பெண்களில் 9 சதவீதத்தையும் உண்டாக்கியுள்ளது. அடுத்தபடியாக வங்காளம், மொத்தத்தில் சதவீதம் ஆண்களுக்கு 25-ம், பெண்களுக்கு 7-ம் ஆக வருகிறது.'[1]

1951 ஆம் ஆண்டின் கணிப்பில் கல்வியைப்பற்றிய பதிவு ஒரு பத்திகூட (Para) இல்லை. ஆனால், பிறகு வந்த ஓர் அறிக்கையில், கணிப்பின் அடிப்படையில் ஜனத்தொகையில் மாதிரிக்காக 10 சதவீதம் எடுத்துக்கொண்டு, இந்தியா முழுவதிற்கும் கல்வியின் சதவீதம் 16·6 என்று கூறப்படுகிறது.[2] அதன்படி ஆண்களில் 24·9 சதவீதமும், பெண்களில் 7·9 சதவீதமும் கற்றவர்கள். இந்தியாவின் சில பகுதிகளில் பெண்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 3·6 சதவீதம்தான் என்று கூறப்படுகிறது.

நம் முன்னேற்றம் மிகவும் மெதுவானது. இந்த முறையில் சென்றால் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாவதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகும். 1917-ல் ரஷ்யா இதே நிலையிலிருந்து தொடங்கி, 1936-ல் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இல்லாதவாறு செய்ததைப் பார்த்தால், நாமும் சரியாகத் திட்டமிட்டால் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?

பின்னோக்கும் முன்னோக்கும்

நாம் இப்பொழுது ஜனத்தொகைப் பிரச்சினையை முக்கியமான ஓர் ஆதாரத்திலிருந்து ஆராய்ந்தோம். இப்பொழுது நாம் இரண்டு விதப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவில் அளவுக்கு மிஞ்சிய தொகை இருக்கிறதா? நாம் எண்ணிக்கையில் மிகவும் அதிகம் இருக்கிறோமா? நாம் அவ்வாறு அதிகம் இருந்தால், நாகரிக வாழ்க்கை வாழ்வதற்குப் புதிய பொருளாதார

[1] இந்தியக் கணிப்பு, 1941 தொகுதி—I, பகுதி—I, பக்கம்-31-32. கணிப்பு அறிக்கைகள் சதவித உயர்வுகளாக எண்களைக் குறிப்பிடுவது வியப்பாக இருக்கிறது. இது கல்வியின் நிலைமைபற்றிச் சரியான கருத்தை அளிப்பதில்லை. இந்த எண்கள் அதிக அபிவிருத்தி இருப்பதாகக் காட்டுகின்றன. கல்வியில் உண்டான உயர்வு, மக்கள் அமைச்சரவைகள், குறிப்பாகக் காங்கிரஸ் அமைச்சரவைகள் மேற்கொண்ட முயற்சியால்தான் ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை. பத்தாண்டுகளில் உண்டான உயர்வு நம்பிக்கையளிப்பதாக இல்லை. பத்து வருடங்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 1000-க்கு 30-ஆக இருந்தது, 121 ஆக உயர்ந்தது இது மிகவும் அதிருப்தியளிக்கக்கூடியது.

[2] Census of India, paper No. 5 of 1954, p. 1.

முறைகளை நாம் கடைப்பிடிக்கக்கூடிய ஒரு நல்ல சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம் இப்பொழுதுள்ள நம்முடைய அவல வாழ்க்கையிலேயே அமைய விரும்பினுல், அப்பொழுது நம் எண்ணிக்கையைப்பற்றிக் கவலை கொள்ளாமல், அது அதிகம் இல்லை என்று ஆறுதல் அடையலாம். இந்த அவல நிலை நம் வறுமையினுல் உண்டாவது மட்டுமன்றி, அவ் வறுமையால் மக்கள் வாழ்க்கையின் பெருமையையும், அழகையும், மதிப்பையும் நாம் மறந்துவிடுமாறு அது செய்கிறது. இப்படி இருந்தால், நாம் எதிர்காலத்தில் நம் எண்ணிக்கை பெருகுவதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் இருக்கலாம். வறுமை மிகுந்தாலும், அதனுல் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மன வலிமை நமக்கு உண்டாகியிருக்கிறது. பழங்காலச் சமூக அமைப்புகளிலும் கொள்கைகளிலும் நமக்கு அவ்வளவு பற்றுதல் இருக்கிறது. இதற்கு மாருக, நாம் எதிர் காலத்திற்கு ஒரு புதிய இந்தியாவைப்பற்றி எண்ணி, அதில் நம் மக்கள் இழிவான வறுமை நிலையில் வாழாமல் ஆரோக்கியமும், திறமையும், கலாசாரமும் பெற்று, அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு ஆக்க வேலைகளைச் செய்ய வாய்ப்புகளையும் அளித்து வாழ விரும்பினுல், நம் ஜனத்தொகையின் போக்கில் ஏதோ ஓர் அடிப்படையான தவறு இருக்கிறதென்றும், நம் மக்கள் வாழ்க்கையோடு போராடி ஆற்றலை இழந்து வாழாமல், வறுமையால் அவர்களுக்கு உண்டாகியிருக்கும் சோம்பலிலிருந்து அவர்களை விடுவித்து, நம் பொருளாதார வாழ்க்கையையும், சமூகச் சூழ்நிலையையும் திட்டமிட வேண்டுமென்றும் ஓர் ஆழ்ந்த எண்ணம் நம் மனத்தில் கட்டாயம் உண்டாகும்.

இந்தியாவின் ஜனத்தொகைப் பிரச்சினை நம் பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் பாதிக்கிறது. நாட்டின் எதிர் காலத்திற்கும் அது மிகவும் முக்கியமானது. எவ்விதமான சமூக, பொருளாதார, அரசியல் சீரமைப்பிலும் இப்போதுள்ள ஜனத்தொகையின் அளவும், அது வளர்ந்துவரும் வீதமும் கவனிக்கப்படவேண்டும். நம் எதிர் காலத் தேசீய வாழ்க்கைக்கு இப்போதுள்ள நம் எண்ணிக்கை எவ்வளவு பெருந் தடையாக இருக்கிறது என்பதை நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். எப்படிப் பார்த்தாலும் நம் எண்ணிக்கையைக் குறைப்பது, அல்லது எவ்விதத்திலும் அது மேலும் உயராமல் தடுப்பது மிக அவசரமான தேவை என்பது புலப்படும். மேற்கில் சில நாடுகள் அடைந்துள்ள அவ்வளவு உயர்ந்த செயற்கையான வாழ்க்கைத்தரத்தை நம் மக்கள் அடையவேண்டுமென்று நாம் கூறவில்லை. ‘ஒருவன் சைவ உணவு உண்பவனுகவோ, கிளர்ச்சியூட்டும் பானங்களை அருந்தாதவனுகவோ இருப்பதில் தவறில்லை. ஐரோப்பாவில் உள்ள அளவு

வாழ்க்கை வசதியை அடையாமல் ஒருவனுடைய மனைவி மக்கள் சிக்கனமாக வாழ்வதிலும் தவறில்லை.'[1] எளிய சத்துள்ள உணவை உண்பது குற்றமல்ல. இக் காரணத்தால், நியூஸிலாந்துடன் வியாபாரம் செய்யும் கப்பல்களில் இந்தியர்களை வேலைக்கமர்த்தாமல் விலக்க முயன்றதை குரு பிரபு (Lord Crew) 1911-ல் கண்டித்தார். இந்தியர்களின் எளிய வாழ்க்கை வேறு விதமானது. இந்திய விவசாயியின் வறுமையும், கிராமவாசியின் வறுமையும், 'பற்றுக் குறை, அச்சம், வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளைப் பெற இயலாமை ஆகிய அமிசங்களைக் கொண்டவை. நம் மக்களில் பெரும்பாலோர் மிகவும் பற்றுக்குறையாலும் பட்டினியாலும் துன்புறும்போது, நம்மில் பெரும் பகுதியினர் நம் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்றும், கீழ்நாட்டுப் பெரியோர்கள் கூறிய அறிவுரைப்படி வாழவேண்டும் என்றும் வற்புறுத்துவது அவர்களை இகழ்வது போலாகும்'.[2]

இந்தப் பிரச்சினையைப்பற்றி ஒரு குழப்பமான எண்ணம் உண்டாகியிருக்கிறது. மேனாடுகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்டுள்ள வாணிப நோக்குள்ள இழிவான கொள்கைகளைக் கண்ட நம்மில் சிலர் அச்சத்தால், "ஐயோ, அது நமக்கு வேண்டவே வேண்டாம்! 'எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும்' என்ற நம் பழங்கால இலட்சியமே மிகவும் உயர்ந்தது" என்ற கூக்குரலை எழுப்பினோம். எனினும், இந்தத் தோல்வி மனப்பான்மை தேவையில்லாதது என்பதை எளிதில் காணலாம். மற்றப் பிரச்சினைகளைப்போலவே இதிலும் ஓர் இடைத்தரமான நல்ல உத்தம வழி உண்டு. அதன்மூலம் நாம் மனிதனிடமிருக்கும் எல்லாச் சிறப்பான ஆற்றல்களையும் வெளியிட முடியும். இந்த அளவுக்குக் குறைந்த எந்த வாழ்க்கைத்தரமும் வறுமையையும், துன்பத்தையும், குற்றங்களையும் வருந்தியழைப்பது போல ஆகும். இதற்கு மேலான வாழ்க்கைத்தரம், பிறர் வருந்தத் தான் வாழ்வதும், செல்வத்தில் மோகங்கொண்டு அதைப் பெருக்குவதும், திருப்தி செய்ய முடியாத பேராசையைத் தாங்கி நிறுத்துவதற்கு அதிகாரத்தை வளர்ப்பதும் ஆக முடியும்.

இந்தியாவில் ஜனத்தொகைப் பிரச்சினையைப் பல கோணங்களிலிருந்தும் ஆராய்ந்த எவனும், இந்திய மண்ணும், அதன் உற்பத்தி அளவும் தாங்க முடியாத அளவுக்கு இங்கே மக்கள் மிகுதியாக

[1] மேற்கூறிய நூலில் கியான்சந்த் மேற்கோளாகக் காட்டியுள்ள குரு பிரபுவின் (Lord Crew) கூற்று. பக்கம் 318.

[2] மேற்கூறிய கியான்சந்தின் நூல், பக்கம் 319.

இருக்கிறார்கள் என்ற கூற்றை மறுக்க முடியாது. 'இந்தியாவின் மக்களில் மிகப் பெரும்பாலோர் போதிய உணவின்றியும், நோயுற்றும், கல்வியின்றியும், திறமையின்றியும் உள்ளனர். அமெரிக்காவைவிட இங்குத் தலா உணவு உற்பத்தி மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவு. இந்து நாகரிகத்தின் இலட்சியமாகிய 'எளிய வாழ்க்கையும் உயர்ந்த' எண்ணமும்' என்ற கொள்கைப்படி பார்த்தாலுங்கூட, இப்போது இந்தியாவில் உள்ள தொழில் திறமையின் நிலைமையில் ஓரளவு அறப் பண்போடும் தேசீய முன்னேற்றத்தோடும் வாழ்வதற்கு இருக்கவேண்டிய ஜனத்தொகையைவிட இரண்டு பங்கு ஜனத்தொகை இருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம்.[1]

1931ஆம் ஆண்டின் கணிப்பு ஆணையாளர் டாக்டர் ஹட்டன், எவ்வளவு ஜனத்தொகை இருந்தால் நல்லது என்பதும், அதிகபட்சம் எவ்வளவு ஜனத்தொகை இருக்க முடியும் என்பதும் வெவ்வேறு விஷயங்கள் என்றும், நாட்டு மக்களுக்கு உணவளிக்க முடியாத அளவுக்கு நாட்டின் திறமை குறைந்துவிடவில்லை என்றும் கூறுகிறார். மேலும் அவர், 'பொதுவாகக் கூறப்போனால், ஐரோப்பாவில் இருப்பதைவிட இந்தியாவில் விவசாய மக்களின் அதிகபட்ச அடர்த்தி இன்னும் மிகுதியாகவே இருக்கலாம். ஏனெனில், நிலம் இங்கு அதிகச் செழிப்பாக உள்ளது; கடுமையற்ற சீதோஷ்ணத்திற்கு ஏற்ப இங்கு வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளும் மிகக் குறைவு' என்கிறார். நிலத்தை அதிகமாகத் துண்டுபோடுவதையும், நிலமில்லாமல் அதிக உபரியாக இருக்கும் மக்களையும் கண்டு டாக்டர் ஹட்டன் வருந்துகிறார். எனினும், நம் ஜனத்தொகை மேலும் அதிகரிப்பதைக்கண்டு அவர் கவலை கொள்ளவில்லை. டாக்டர் பி. ஜே. தாமசும்[2], திரு. டி. ஜி. கார்வேயும்[3] கூட இந்தியாவில் ஜனத்தொகையைவிட உற்பத்தி அதிக வேகமாக உண்டாகிறது என்று கூறியிருப்பதால், இவ் விஷயத்தில் கவலையில்லாதவர்களாகவே காணப்படுகிறார்கள். டாக்டர் பல்ஜித் சிங் (Baljit Singh) உடம்புக்குத் தேவையான அளவைவிட 22 சதவீதம் குறைவாக இந்தியர் உணவு உட்கொள்வதை, விவசாயம், தொழில், வாணிபம் முதலிய நம் சாதனங்களைத் திரட்டிப் பயன்படுத்தினால் ஈடுசெய்ய முடியும் என்றும், திருமண விருந்துகளிலும், பிராணிகள்,

[1] 'தென் ஆசியாவிலும் கிழக்கு ஆசியாவிலும் உள்ள நிலைமை' என்பதில் கர்னல் சர் சார்லஸ் குளோஸ் என்பவர், R. K. தாஸ் கூறியதை மேற்கோளாகக் காட்டியுள்ளார் (Vol. I, No. I, 1933).

[2] 'ஜனத்தொகையும் உற்பத்தியும்' (1931-32) 'இந்தியப் பொருளாதார சஞ்சிகை', தொகுதி XV, 1934-35.

[3] 'இந்தியாவில் வறுமையும் ஜனத்தொகையும்', 1936.

பறவைகள், பூச்சிகள் முதலியவைகளாலும் வீணுவதைத் தடுக்க முடியும் என்றும், இப்படிச் செய்தால், வளர்ந்துவரும் ஜனத் தொகைக்கு ஏற்ப உத்தம வாழ்க்கை நிலையை அடைய முடியும் என்றும் கூறுவதால், இவரும் மேற்கூறியவர்களைப் போலவே சிறிது வேறு வழியில் நம்பிக்கையுடையவராகக் காணப்படுகிருர்.[1] விருந்துகளை நிறுத்திவிடுவதாலும், எல்லாப் பூச்சிகளையும் கொன்று விடுவதாலும், உணவுப் பழக்கங்களை மாற்றிவிடுவதாலும் இன்றுள்ள ஜனத்தொகையின் வாழ்க்கை நிலையை உயர்த்தினுல், நாளை வரும் அதிக ஜனத்தொகை, பொருள் வீணுவதையும், மேலும் பழக்கங்கள் மாறுவதையும் தடுக்க வழியில்லாமல், நம்மை மேலும் கீழான நிலைக்குக் கொண்டுசெல்லும். 'பின்தங்கிய பகுதிகளில் உற்பத்தியை இருமடங்கு அல்லது மும்மடங்கு ஆக்கும் பிரச்சினை தான் நம்மைத் திணறவைக்கிறது என்று நினைக்கவேண்டியதில்லை. முடிவில்லாமல் ஜனத்தொகை பெருகுவதற்கேற்ப, இவ்வாறு உற்பத்திப் பெருக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்பது தான் நம் அறிவைத் திணறவைக்கும் பிரச்சினையாக உள்ளது. ஜனத்தொகை வளர்ச்சியை உடனே நிறுத்துவதுதான் மக்களியல் பிரச்சினையன்று. ஆனுல், ஜனத்தொகை கட்டுக்கடங்காதபடி பெருகி விடுவதை, உதாரணமாக, இப்போதுள்ள தொகை இரட்டிப்பாக மாறுவதைத் தடுப்பதுதான் பிரச்சினை' என்று கூறப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமே.[2]

இந்தியாவில் விவசாயத்தைப்பற்றி நாம் ஆராய்ந்ததில், இப்போதுள்ள நிலைமையில், இப்போதுள்ள உழவு முறைகளைக் கொண்டு, வறுமையில் ஆழ்ந்திருக்கும் நம் விவசாய மக்கள், அனைத்து நாட்டுச் சந்தையில் உண்டாகும் விலை ஏற்ற இறக்கங் களில் சிக்கிக்கொண்டு, மழை நினைத்தபோது பெய்வது நிச்சய மில்லாமல் இருப்பதால், செழிப்பான நிலம் இருந்தும் பட்டினி நிலையையடைந்துள்ளனர் என்று குறிப்பிட்டோம். அதிகரித்து வரும் ஜனத்தொகையால் இந் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். மற்ருெரு தனிப் பிரிவில் நம் உணவுச் சாதனங்களுக்கும் ஜனத் தொகைக்கும் உள்ள சம்பந்தத்தைப் பார்ப்போம். 1931 கணிப்புத் தொகுதியோடு இணைக்கப்பட்ட ஆக்சுயரியின் (Actuary) அறிக்கை யில், நம் ஜனத்தொகை உச்ச எல்லையை அடைந்துவிட்டது என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. கார்சாண்டர்ஸ் கூறியதை திரு. வைத்தியநாதன் மேற்கோளாக முதலில் காட்டுகிருர்: 'இந்தியா விலும் சீனுவிலும் அண்மைக்காலம்வரையில் குழந்தைகள் கொல்லப்

[1] 'இந்தியாவில் ஜனத்தொகையும் உணவுத் திட்டமும்,' 1947, பக்கம் 101.

[2] 'அதிக ஜனத்தொகை உள்ள பகுதிகளுக்கேற்ற கொள்கை'—F.W. Notestein Quoted by K. Davis, p. 222.

பட்டுவந்தன. இப்போது அந்த வழக்கம் கைவிடப்பட்டுவிட்டது. குடும்பங்களைச் சிறிய அளவில் வைத்திருப்பதற்கு, அதற்குப்பதில் இப்போது வேறு வழி ஒன்றுமில்லை. மக்கள் எவ்வளவு நன்றாக வாழவேண்டுமோ அவ்வளவு நன்றாக வாழவில்லை என்பது சமூக நிலையைப் பரிசீலித்ததில் தெரிகிறது. பஞ்சங்கள் புதியவையல்ல; அவை அதிக தூரத்திலுமில்லை. அளவுகடந்த ஜனத்தொகை இருக்கிறதென்பதற்கு இவை அடையாளங்கள். இதற்குக் காரணம் குழந்தைகளைக் கொல்வதற்குப் பதில், ஜனத்தொகையை ஒழுங்கு படுத்தக்கூடிய வேறொரு வழியும் இல்லாததே.' மேலும், அவர் கூறுகிறார்: 'இந்தியாவை வாட்டும் துன்பம், அதிக ஜனத்தொகை தவிர வேறொன்றுமில்லை என்பதற்குப் பெரும்பாலான மக்களின் இழிவான வாழ்க்கைத்தரத்தைவிடச் சான்று வேறு வேண்டியதில்லை. வாழ்க்கைத்தரம் மிகவும் குறைவாக இருக்கும்போது, பத்தாண்டுகளுக்கொரு முறை 340 இலட்சம் அதிக ஜனத்தொகையால்[1] நிலத்தின் மீது நெருக்கடியை உண்டாக்கினால், இந்தியாவின் நன்மையை விரும்புபவர்களின் மனத்தில் உண்மையான அச்சம் உண்டாகும். இதே அளவு செல்வத்தை உற்பத்தி செய்வதற்கு அறிகுறி ஒன்றுமே இல்லாதபோது, மேலும் அதிக ஜனத்தொகை உண்டாகி, அதன் விளைவாகத் தொழில் துணிவும் குறையுமாயின், இப்போதுள்ள குறைவான வாழ்க்கைத்தரம் மேலும் குறையும். பல தலைமுறைகளாக வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை மிகக் குறைவாகப் பெற்றுவந்த நிலைமையில், இயற்கையாக உண்டாகும் சோம்பலும், நம்பிக்கை இழந்த தன்மையும் பெரும்பாலான இந்தியர்கள் தம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குக் கடுமையான முயற்சி ஒன்றையும் மேற்கொள்ளாமல் இருக்கும்படி செய்துவிட்டன. முதலில், நாம் நம் குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்தினால் தான் நம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். அதிக ஜனத் தொகையின் விளைவாகவும் காரணமாகவும் தானே இருந்து வருவதால், சாதாரண இந்தியனின் வாழ்க்கைத்தரமானது ஒரு விஷச் சக்கரமாக உள்ளது.[2]

இந்தப் பிரச்சினையைப்பற்றி அதிக நம்பிக்கையுடனிருப்பவர்கள், நம் அளவுகடந்த சாதனங்களை எண்ணியிருக்கிறார்கள். உண்மையில் நம் சாதனங்கள் மிக அதிகமானவைதாம். நவீன விஞ்ஞானத்தின் சாதனைகளும், உண்மையில் வியக்கத்தக்கவையே. இவற்றையெல்லாம் ஒத்துக்கொண்டாலும், நம் ஆற்றல்களைப்பற்றி

[1] இது 1931-க்குரியது. 1941-க்குள் மேலும் 360-இலட்சம் அதிகமாயிற்று. சென்ற பத்தாண்டில், இந்திய யூனியனில் 420 இலட்சம் அதிகமாயிற்று.

[1] Census Report, 1931, p. 150.

நாம் தெளிவில்லாமல் கூறி நிதானத்தை இழந்துவிடக் கூடாது. அடுத்த 25 அல்லது 30 வருடங்களில் எந்த அளவில் தொழில்நுட்ப முன்னேற்றத்தை நாம் அடைய முடியும்? இந்தச் சந்தர்ப்பத்தில் இதுதான் முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வி தோன்றியவுடன், நாம் எதிர்பார்ப்பதற்கும் நாம் செய்வதற்கும் இடையில் உள்ள அதிக வித்தியாசத்தை நாம் உணருகிறோம். இந்த வித்தியாசம் குறைந்தது ஒன்றிரண்டு தலைமுறைகளுக்கு இருப்பதோடு, நம்மைச் சிந்திக்கவும் செய்யும். பொருளாதாரத் திட்டமிடுதல் என்பது, சமூகத் திட்டத்தின் அமிசமாகவே கருதப்பட வேண்டுமென்று நாம் நெடுக வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஜனத்தொகையைத் திட்ட மிடாத எந்தச் சமூகத் திட்டமும் பயன் தராது. இதன் சமூக, அரசியல் விளைவுகள் என்ன என்பதைக் கீழே காண்போம்.

செய்யக்கூடிய பரிகாரங்கள்

'இந்தியாவில் அளவுகடந்த ஜனத்தொகை இருக்கிறதா?' என்ற கேள்விக்கு 'ஆம்' என்ற ஒரே விடைதான் இருக்க முடியும். இதை ஒத்துக்கொண்ட பிறகு, நமக்குக் கிடைத்துள்ள சாதனங் களைக்கொண்டு இந்தப் பெருந்தொகையினரின் துன்பத்தைப் போக்க நாம் என்ன செய்ய முடியும்? என்ற கேள்வி அடுத்தபடியாக எழுகிறது.

ஜனத்தொகையைப் பொறுத்தவரையில் உடனடியாக எதிர் காலத்தில் நாம் மூன்று வழிகளில் பரிகாரம் தேடலாம்: (1) ஜனத் தொகை நெருக்கடியைக் குறைப்பதற்கு நாடு பெயர்வைக் கையாள லாம், அல்லது உள்நாட்டிலேயே ஜனத்தொகையை மாற்றிப் பங்கிட லாம். (2) அடுத்த சில ஆண்டுகளில் நம் நாட்டு வருமானம் இரண்டு பங்கு ஆகக்கூடிய முறையில் நம் விவசாய, தொழில் உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடலாம் என்று சில பொருளாதார வல்லுநர்கள் கருதுகிறார்கள். (3) நம்மைக் கேளாமல் வரும் பெருந்துன்பங் களால் ஜனத்தொகை தானாகக் குறைவது தவிர, வேறு வழியில் நம்மால் குறைக்க முடியவில்லை என்றால், நம் எண்ணிக்கை மேலும் அதிகரிக்காமல் நாம் தடுக்கவாவது செய்யலாம். இதற்குக் கருத் தடை முறைகளைப்பற்றிய அறிவைப் பரப்பி நம் குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

குடியேற்றம்

மேனாட்டுப் பொருளாதார வல்லுநர்களும், மக்களியல் வல்லுநர் களும், அதிக ஜனத்தொகைக்குப் பரிகாரம் நாடு பெயர்தல் என்று

கூறும்போது, வெள்ளையர்களைக் கருதித்தான் அவ்வாறு கூறு கிறார்கள். சீனர்களும் இந்தியர்களும், தாம் தம் ஜனத்தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடு பெயர்தல் வேண்டுமாயினும், மேனாட்டவர்கள் ஆசிய மக்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்வதே இல்லை. ஜனத்தொகையைக் குறைப்பதற்கு இந்தியாவைவிட்டு வெளிநாடுகளுக்குப் பெயர்ந்து செல்லுதல் என்பது நம் வசத்தில் இல்லை. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் 25 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை, பர்மா, மலேயா, மார்ஷியஸ், பிரிட்டிஷ் கியானா, தென் ஆப்பிரிக்கா ஆகிய காமன்வெல்த் நாடுகளில் 15 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இலங்கையையும் பர்மாவையும் பொறுத்தவரையில், யுத்தத்திற்கு முன்பும் பின்பும் நடந்த நிகழ்ச்சிகள் இந்த இராச்சியங்களில் இந்தியர்கள் குடியேறுவதற்கு அதிக எதிர்ப்பு இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. ஜப்பானியர்கள் மலேயாவைப் பிடித் துக்கொண்டபோது, அங்கு இந்தியர்களுக்கு இனி அதிக இடமில்லை யென்று கூறப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து போன்ற டொமினியன்கள் எதிர்காலத்தில் வெள்ளையர்கள்மட்டும் தங்குவதற்காகவே ஒதுக்கப்பட்டவை என்று அந்த நாடுகள் தெளிவான கொள்கையை வகுத்துக்கொண்டிருக் கின்றன. 1922-க்குப் பிறகு கோட்டா முறைப்படி அமெரிக்கா, ஆசிய மக்களுக்கெதிரான ஒரு கொள்கையைத் தெளிவாகக் கடைப் பிடித்தது. அது யுத்தத்தின் இறுதியில்தான் இந்தியர்களின் உணர்ச்சியை மதிக்கும் முறையில் மாற்றியமைக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, கென்யா ஆகிய இடங்களில் இந்தி யர்கள் படும் துன்பங்கள் அதிகமாகுமேயன்றிக் குறைவதாகத் தெரிய வில்லை. அண்மையில், தென் ஆப்பிரிக்காவில் சட்டமாக்கப்பட்ட குடியிறக்கத் தடுப்பு மசோதாவும் (Pegging Bill), இனவொதுக்கல் சட்டமும் (Apartheid Act) காட்டுவதுபோல, அங்கு இந்தியர்கள் படும் துன்பங்கள் இன்னும் அதிகரிக்குமேயன்றிக் குறையா. இலங்கையும் பர்மாவும் சட்டப்படி குடியிறக்கத்தைத் தடுத்துள்ள தால், நாடு பெயர்வினால் பரிகாரம் காண முடியாது என்பது தெளிவு. ஆகவே, வெளி நாடுகளில் குடியேறுவதால் நம் ஜனத்தொகைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நம் சொந்த சாதனங்களைக்கொண்டே நம் ஜனத்தொகையை நாம் காப்பாற்றவேண்டும். அதிக அளவில் நாடு பெயர்வு இயலு மாயினும், இந்தியா, சீனா போன்ற அதிக இனப்பெருக்க வீதமுள்ள நாடுகளுக்கு அது ஒரு தாற்காலிகப் பரிகாரமாகவே இருக்கும். ஏனெனின், அதனால் உணவு நெருக்கடி தீர்ந்து, மீண்டும் ஜனத் தொகை அதிகரிப்பு ஏற்படும்.

டாக்டர் ராதாகமல் முகர்ஜியும்,[1] டாக்டர் சந்திரசேகரும்[2] உலகத்தில் வறிதே உள்ள இடங்களில் இந்தியர்கள் அதிக அளவில் குடிபெயர்ந்து செல்லவேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். ஆனல், இந்த வேண்டுகோள்களை மேனுட்டு மக்களியல் வல்லு நர்கள் இந்து ஏகாதிபத்தியத்தின் அறிகுறி என்றும், உலகில் இனி வருங்காலத்தில் இந்தியாதான் அபாயத்திற்குரிய இடம் என்றும் கருதுவது வியப்பிற்குரியது.[3] 'ஒரே உலகம்' என்று உபசாரமாகக் கூறப்படும் இவ்வுலகில் இனவெறுப்பையும் வெள்ளையர் குடியிறக் கமும் ஆதிக்கம் பெற்றுள்ளவரையில், நம் ஜனத்தொகைப் பிரச் சினைக்குத் தாற்காலிகமாகவோ, சிறிதளவோகூடக் குடியேற்றம் ஒரு தீர்வாகும் என்று நம்புவதற்கில்லை.

நம் நாட்டிற்குள்ளேயே ஜனத்தொகையை மாற்றிப் பங்கிடுவ தென்ருல், அதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பினும், அது நம் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியாக உதவும் என்ற நம்பிக்கையை அளிக்கவில்லை. விவசாயத்திற்கேற்ற வறிய நிலம் என்று பிரித்து வைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 1,240 இலட்சம் ஏக்கர், உபரி ஜனத்தொகையைக் குடியேற்ற உதவும் என்று கருதலாம் எனினும், விவசாயக் குழுவானது இதில் பெரும்பகுதி நிலத்தை உழ முடியாது என்றும், இந்தக் கூற்றைப் பலர் மறுத்திருக்கிருர்கள். 'இந்திய அரசாங்கத்தின் முத்திரையோடு ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஒரு தொகுதியில் உள்ள அறிக்கை கூறுவதுபோல, பிரிட்டிஷ் இந்தியாவின் பரப்பில் கால்பகுதி உழத்தக்கதாயினும், உழப்படவில்லை என்பது தேவையில்லாமல் தவருன கருத்துகளை உண்டாக்கும்' என்று கூறியுள்ளது.[4] இந்தத் தடைகள் இருப்பினும், ஒவ்வொரு இராச்சியத்திலும் விவசாயத்திற்கேற்ற வறிய நிலம் என்று பிரிக்கப் பட்டிருப்பது எவ்வளவு என்று கண்டுபிடித்து மக்களுக்கு

[1] 'இனம், நாடுகள், மக்கள்' (1946).

[2] 'பசித்த மக்களும் வறிய நிலங்களும்' (1953).

[3] ஒப்பிடுக: 'ஜனத்தொகை நெருக்கடியைப்பற்றி மக்கள் பேசுவது வறுமை யினுல் மட்டுமன்று, மற்றவர்களைவிட நாம் வறியவர்கள் என்ற உணர்ச்சியும், தம் ஆற்றலைப் பயன்படுத்தி மற்ற மக்கள் நல்ல வாழ்க்கை பெற்றிருக்கிருர்கள் என்ற அறிவும் அவர்களை அப்படிப் பேசுமாறு செய்கின்றன. 80 கோடி மக்களை இந்தியா பெறும்போது, இன்று இருப்பதைவிட, அன்று, அது அதிக வறுமையில் இருந்தது என்று உணர்ந்து, உலகில் உள்ள சாதனங்களில் தங்களுக்குரிய நியாயமான பங்கைப் பெறுவதற்குத் தம் வலிமையெல்லாம் ஒருங்கு திரட்டக்கூடும்', வாரன் S. தாம்சன் 'Scientific America' Feb. 1950, பக்கம் 14-ல் கூறுகிருர். டாக்டர் முகர்ஜியின் யோசனையைக் குறித்து, வாக்ட் (Vogt), தம் 'பிழைத்திருக்க வழி' (Road to Survival) என்ற நூலில் (பக்கம் 228-ல்) 'அதிக ஜனத்தொகையுடன் அதிக இயந்திர மயமாக்கப்பட்ட இந்தியா, உலகம் முழுவதற்கும் அபாயமாகும்' என்கிருர்.

[4] அறிக்கை, பக்கம் 605.

அறிவித்தால், மக்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்ருெரு பகுதிக்குப் பெயர்ந்து செல்ல உதவியாயிருக்கும் என்று கூறுவது தவருகாது.[1]

கடந்த இருபது ஆண்டுகளில் இராச்சியங்களுக்கிடையே உண்டாகியுள்ள பொருமையும் போட்டியும், அவை 1935-க்குப் பிறகு, மாகாண சுய ஆட்சியின் பெயரால் மேலும் அதிகமாகியிருப்பதும் நாம் அறிந்ததே. இந்தியா முழுவதற்கும் ஒரு சமஷ்டி அரசியல் இருந்தால், அதனுல் பல நன்மைகள் உண்டு. ஆனுல், நாடு முழுவதற்கும் திட்டமிடாமல் இராச்சியங்கள் தம் விருப்பம்போல் தனியாகப் பொருளாதார வாழ்க்கைக்குத் திட்டமிடச் சுதந்திரம் அளிக்கப்பட்டால், அதிக ஆபத்து ஏற்படக்கூடும். உபரி உணவுடைய இராச்சியங்கள் தம் உபரி உணவை மற்ற இராச்சியங்களுக்குக் கொடுக்க விரும்பாமலிருப்பதை நாம் பார்த்தோம். மத்திய அரசாங்கம் உணவு நெருக்கடியை முன்னிட்டு, அவைகளை மிகவும் கட்டாயப்படுத்தியதால்தான் அவை தம் கொள்கையை மாற்றிக் கொண்டன.[2]

உற்பத்திப் பெருக்கம்

நாடு பெயர்தல், ஜனத்தொகையை மாற்றிப் பங்கிடுதல் ஆகியவை இருக்க, நாம் நம்முடைய பொருளாதார வாழ்க்கையை, நம் விவசாயத்தைப் பெருக்கியும், தொழில் உற்பத்தியை உயர்த்தியும் நமது மொத்த ஆண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கேற்றவாறு திட்டமிடலாம் என்று கூறப்படுகிறது. எதிர்காலத்தில் நம் விவசாய உற்பத்தியை எப்படி உயர்த்தலாம் என்று மற்ருேரிடத்தில் நாம் விளக்கியுள்ளோம். இப்போதுள்ள பொருளாதாரச் சமூக அமைப்பில் நாம் விவசாயத்தில் செய்யக்கூடிய மாறுதல்கள், மேலான பயிர் வகைகள், பயிர் நோய்களையும் பூச்சிகளையும் ஒழித்தல், நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துதல், உரங்களை நன்கு பயன்படுத்துதல், செயற்கை உரங்களை உபயோகித்தல், பயிர்த்

[1] பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்துள்ள இலட்சக்கணக்கான அகதிகளால் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது.

[2] இராச்சியங்களுக்கு முழுப்பொருளாதாரச் சுய ஆட்சி வழங்கப்பட்டால், மொழி அடிப்படையில் புதிய இராச்சியங்களை அமைப்பது அஞ்சத்தகுந்ததாகும்.

தொழிலுக்கு மேலான கருவிகளைப் பயன்படுத்துதல் ஆகியவையே.[1] இந்திய விவசாயத்திற்கு அடிப்படைத் தடைகளாக உள்ளவற்றை நீக்கினல் ஒழிய, நம் விவசாய உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் உண்டாகுமென்று நம்புவதில் பயனில்லை. இத் தடைகள் யாவை எனின், நிலத்தைத் துண்டுபடுத்துதல், சிறு பிரிவுகளாகப் பிரித்தல், பெரு நிலக்கிழார்களின் (ஜமீந்தார்கள்) அளவு கடந்த விவசாயக் கடன், இதுபோலவே அளவு கடந்துள்ள விவசாய மக்கள் ஆகியவையே. சிந்தித்துத் திட்டமிடப் பட்ட நீண்டகால விவசாயக் கொள்கையைக் கடைப்பிடித்து, நம் விவசாய அமைப்பு முழுவதையுமே மாற்றக்கூடிய சாத்தியக் கூற்றுக்கு இது தடையாக இல்லை.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதுபற்றி நாம் மற்ருெரு குறிப்பைக் கூறவேண்டும். இரசாயன உரங்களைப் போடுவதால் மண்வளத்தை மேலும் நன்கு பயன்படுத்தி சில வருடங்கள்

[1]டிகாஸ்ட்ரோ கூறுவதை ஒப்பிடுக: 'விஞ்ஞான முறைப்படி விதைகளைப் பொறுக்கி எடுத்து, ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வயல் உற்பத்தியைப் பெருக்கியிருக்கலாம். பருத்தி, கரும்பு, சணல் ஆகிய பணப் பயிர்களுக்கு அவர்கள் இப்படித்தான் செய்தார்கள். உணவு, விவசாயக் கழக நுட்பத் தொழிலாளர்கள் போதிய உரமிடுவதால் இந்தியாவில் உணவு உற்பத்தி 20% உயருமென்று கூறுகிருர்கள். ஏற்றுமதிப் பயிர்களுக்குத் தவிரச் செயற்கை இரசாயன உரங்கள் இதுவரை வேறெதற்கும் பயன்படுத்தப் படவில்லை.—'Geography of Hunger'—மேலே கூறியது பக்கம் 160.

ராதாம்ஸ்டெட்டிலுள்ள புள்ளியியல் துறைத்தலைவர் F. ஏட்ஸ் என்பவர் கூறுவதை இங்குக் கவனிக்கலாம்: 'இந்தியாவின் ஜனத்தொகை ஆண்டுக்கு 25 இலட்சம் வீதம் அதிகரித்து வருகிறது. அங்குள்ள புதிய அம்மோனியம் சல்பேட்டுத் தொழிற்சாலையின் உற்பத்தி இலக்கு ஆண்டுக்கு 70,000 டன் நைட்ரஜன். இதையெல்லாம் உணவுப் பயிர்களுக்குப் பயன் படுத்தினுலுங்கூட, ஜனத்தொகையில் ஓராண்டு உயர்வுக்குத்தான் உயிர் வாழ்வதற்குப் போதிய அளவு பங்கிட்டுக் கொடுக்க முடியும்.'—கிளார்க் அண்டு பிரீ, 1951, வெளியிட்டுள்ள '400 கோடி மக்கள்' (Four Thousand Million Mouths) என்ற நூலில், பக்கம் 69-ல் உள்ளது. சர் A. ஹோவர்டு போன்ற விவசாய விஞ்ஞானிகள், தொகுப்பு உரங்கள் மண்ணுக்கு வேண்டிய எல்லா மூலகங்களையும் கொடுத்து, முற்றிலும் அதைப் புதுப்பிக்கக்கூடிய தன்மையுடையவை அல்ல என்று கருதுகிருர்கள். இரசாயனப் பொருள்களும் மருந்துகளும் மண்ணை நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்கு ஒன்றும் செய்ய முடியாது. அவற்றை உபயோகிப்பதால், வளர்ச்சியையும் சிதை வையும் சமப்படுத்த முடியாது. மண்ணின் மூலதனத்தை நடப்புக் கணக்கிற்கு அவை மாற்றுமே தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

மேலும் ஒப்பிடுக: 'கிழவனை இளைஞனுக்குவதைவிட, இளைஞனை முழுவளர்ச்சியடைந்த மனிதனுக்குவது எளிது. அது போலவே இனிப் பலன் தரப்போகும் நிலத்தின் மண்வளத்தைப் பாதுகாப்பது எளிது. ஏற்கெனவே பயன் தந்த மண்ணின் வளத்தைப் பாதுகாப்பது அரிது. மனிதனின் சுற்றுப்புறத்தை இம் முறையில் பார்க்கும்போது, இந்தியாவிலும் சீனுவிலும் உணவுப் பற்ருக்குறையைப் போக்க மண்வளம் பாதுகாப்புச் செய்வது முக்கியமில்லை. ஆனல், அமெரிக்காவிலும், நமக்கு நேர் அடியில் உள்ள நாடுகளிலும், ஏற்கெனவே உண்டாகும் உபரி உணவை மேலும் அதிகரிக்கும்படி செய்யலாம்.'—'400 கோடி மக்கள்' என்ற நூலில் (பக்கம் 41—42) G. V. ஜாக்ஸ் கூறுகிருர்.

அதிக பயனைப் பெறலாம். ஆனால், காலப்போக்கில் மண்வளம் குறைந்துவிடும். மண் கொடுக்கக்கூடிய அளவுக்கும், வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவதற்கு அதை எவ்வளவு கொடுக்கவைக்கிறோமோ அந்த அளவுக்குள்ள சமநிலை அழிந்துவிடும்.

இதை நாம் பிறகு விளக்குவோம். நம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உழைப்பு வேண்டாத உபாயங்களையும் (இயந்திரங்களையும்) பேரளவு உற்பத்தி முறைகளையும் மேற்கொண்டால், வேலை இல்லாப் பிரச்சினை அதிகமாகி, மேலும் அதிகமாக வேலைக் குறைவு ஏற்படும். வேலை செய்ய வாய்ப்பில்லாமல் போனால் பெரிய குடும்பங்கள் பெருகும் என்பது நாமறிந்த உண்மை.

இப்பொழுது நாம், விவசாயத்தில் உற்பத்தி இலக்குகளைக் கொண்டு ஐந்தாண்டுத் திட்டங்களால், திட்டமிடப்பட்ட விவசாயக் கொள்கையைக் கடைப்பிடித்திருக்கிறோம். 1951-ன் கணிப்பு அறிக்கை, கடைசி அதிகாரம் ஒன்றில் 1981-ல் 52 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நமது ஜனத்தொகையின் 'எண்ணிக்கைக்கேற்ப நாம் நம் விவசாயத்தை விருத்தி செய்ய முடியுமா?' என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

சுரங்கங்களிலோ, தொழிற்சாலைகளிலோ ஓராண்டு உற்பத்திக்குத் திட்டமிடுவதுபோல, விவசாயத்தில் திட்டமிடமுடியாது என்று ஆணையாளர் குறிப்பிடுகிறார். ஏனென்றால், பருவ மழைகள் நம் விருப்பப்படி பெய்வதில்லை. 'உற்பத்தித் திறனை' (productivity) உயர்த்துவது ஒன்றுதான் நாம் செய்ய முடியும். எல்லாப்பயிர்களும் விதைக்கப்படும் மொத்த நிலங்களில், உணவுப் பயிர்கள் மட்டும் விதைக்கப்படும் நிலம் 78 சதவீதமாக இருப்பதால், சராசரி உணவு விளைச்சல் 556 இலட்சம் டன் என்று கொண்டால், மொத்த விவசாய உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 700 இலட்சம் டன் ஆகும். நம் ஜனத்தொகை இப்பொழுது 36 கோடி. ஜனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்கவேண்டும் என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்:

ஆண்டு	ஜனத்தொகை 10 இலட்சத்தில்	தேவையான உற்பத்தித் திறன் 10 இலட்சம் டன்னில்	அபிவிருத்தி இலக்குகள் 10 இலட்சம் டன்னில்
1961	410	85	15
1971	460	96	26
1981	520	108	38

1951-ல் இருந்த (700 இலட்சம் டன்) அளவு உற்பத்தித் திறனின் சதவீதமாக இவற்றைக் கூறினால், 1961-க்கு

முன் 21 சதவீதமும், 1971-க்கு முன் 37 சதவீதமும், 1981-க்கு முன் 54 சதவீதமும் உயரவேண்டும்.

நீர்ப்பாசனம் பெறும் நிலங்களில் எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறைவேறிய பிறகு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 36 இலட்சம் டன் அதிக விவசாய உற்பத்தித் திறன் உண்டாகவேண்டும். இப்போதுள்ள குறைவைப் போக்கி, ஜனத்தொகை வளர்ச்சிக்கு ஈடுகொடுப்பதற்கு 150 இலட்சம் டன் தேவைப்படும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களால் நீர்ப்பாசனம் பெறும் நிலங்களில் 113 இலட்சம் ஏக்கர் அதிகமாகும். ஆண்டுதோறும் உற்பத்தித் திறன் 24 இலட்சம் டன் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரண்டு பகுதியான நீர்ப் பாசன அபிவிருத்தி (ரூ. 500 கோடி செலவில்) நிறைவேற்றப் பட்டால், அவை காலப்போக்கில் 60 இலட்சம் டன்னை அளிக்கும். ஆக, 1961-க்குள் நமக்குத் தேவையான அளவில் மூன்றில் இரண்டு பங்கைப் பெறலாம்.

1981-க்குள் விவசாயம் செய்யப்படும் மொத்த நிலத்தை 32 கோடியிலிருந்து 35 கோடி ஏக்கராக மாற்றி (இதற்கு மேல் முடியாது) பசுந்தாள் உரம், தாது உரங்கள், சிறந்த மாற்றுப் பயிர் முறை, மேலான விதைகள், நோய்களும் பூச்சிகளும் வராமல் பாதுகாத்தல் ஆகிய வழிகளை மேற்கொண்டு, ஓர் ஏக்கருக்கு அதிக விளைச்சலை உண்டாக்கினாலுங்கூட, நாம் ஆண்டொன்றுக்கு 240 இலட்சம் டன் அதிக உற்பத்தியைத்தான் உண்டாக்க முடியும். 1971-க்குள் நமக்குத் தேவையான அளவுக்கும் இது குறைவாகவே இருக்கும். அதற்குள் நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி யிருப்பினும், குறைந்துசெல் விளைவு விதி (Law of diminishing returns) வேலை செய்து வருவதால், கட்டுப்படுத்தப்படாத ஜனத்தொகைக்கு ஈடு கொடுப்பதில் நாம் கட்டாயம் தோல்வியடைவோம் என்று கணிப்பு ஆணையாளர் கூறுகிறார்.

குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அறிவுரை கூறி, வழிகளையும் காட்டிப் பொதுமக்களிடையே பிரசாரம் செய்யவேண்டுமென்று திட்டக் குழு கூறுவதை ஆணையாளர் குறிப்பிடுகிறார். இக் கருத்து வெறுங் கனவு என்று அவர் கருதுகிறார். அவர், முன் யோசனையின்றிக் கருத்தரித்தலைக் கட்டுப்படுத்தி, உயிரோடிருந்தாலும் இறந்தாலும் மூன்று குழந்தைகள் அளவில் குடும்பத்தை வரையறுத்து, 45 கோடி நம் ஜனத்தொகையை நிலையாகச் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறார். குடும்பக் கட்டுப்பாடு கனவாயின், முன்யோசனையின்றிக் கருத்தரித்தலைத் தடுப்பதற்கு மக்களிடையே பிரசாரம் செய்வதும் கடினமாகும்.

இரண்டாம் உலகப் பெரும்போர் தோன்றியதனுல், நம் தொழில்களை வளர்ப்பதற்கு நமக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது சரியாகத் திட்டமிட்டிருந்தால், எவ்வளவு தடை இருப்பினும், 20 ஆண்டுகளில் செய்து முடிக்கக்கூடியதை இரண்டே ஆண்டுகளில் முடித்திருக்கலாம். தொழில்களைப்பற்றிய பிரிவுகளில் நாம் புதிய முறையில் தொழில்மயமாக்குவதைப்பற்றிக் கூறியுள்ளோம். அது நம் சிறிய குடிசைத் தொழில்களையும், பெருவாரி உற்பத்தியையும் இணைக்கக்கூடியது. தேர்ந்தெடுத்துப் பாதுகாக்கும் கொள்கையால், இந்தியத் தொழில்களில் அந்நிய மூலதனம் ஏராளமாக முதலீடு செய்யப்பட்டிருப்பதைப்பற்றி நமக்குத் தெரியும். பேரளவு உற்பத்தி சம்பந்தமாகக் காந்தீயக் கருத்தையும் நாம் அறிய வேண்டும். ஆனுல், நாம் ஏற்கெனவே தொழில் நாடாக மாற்றிவிட்டோம். நாம் எவ்வளவுதான் நவீனத் தொழில் முறையின் தீமைகளை வெறுத்தாலும், இதற்கு முன்னுல் இருந்த பொருளாதார அமைப்பிற்கு நாம் திரும்பிச் செல்ல முடியாது.

அதிகமாகத் தொழில்மயமாக்குவதால் நம் ஜனத்தொகைப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இன்று பேரளவுத் தொழில்கள் சுமார் 30 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை தருகின்றன. ஒவ்வொரு தொழிலாளியையும் மூன்று பேர் நம்பி வாழ்கிருர்கள் என்று கணக்கிட்டால், பேரளவு உற்பத்தித் தொழில்களைச் சார்ந்திருப்பவர்கள் 120 இலட்சம் பேருக்குமேல் இருக்க முடியாது. இப்போது தொழில்களை நம்பியிருக்கும் நம் மொத்த ஜனத்தொகை 370 இலட்சம். இதோடு, நிலத்தை நம்பி, நிலமில்லாமல் உழைக்கும் 8 கோடி முதல் 10 கோடிவரை உள்ள உபரி ஜனத்தொகையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். எவ்வளவு பெரிய அளவில் தொழில்மயமாக்கினுலும், சுவாதீனமற்றவர்கள் உட்பட 12 கோடியுள்ள மக்களை அத் தொழில்கள் இழுத்துக்கொள்ள முடியுமா? சர் எம். விஸ்வேஸ்வரய்யா போன்ற சிலர், பொருளாதார அமைப்பில் எவ்வித அடிப்படை மாறுதலும் தேவையில்லை என்று கருதி, முதலாளித்துவத் தொழில் துணிவுகளால் நம் தொழில் உற்பத்தியைப் பெருக்கி, நம் ஜனத்தொகைப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்கிருர்கள். ஆனுல், அவர்கள் இயந்திரங்களால் மக்கள் மேலும் மேலும் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்ற அடிப்படை உண்மையை மறந்துவிட்டார்கள். தொழில்மயமாக்கப்பட்ட மேனுடுகளில், போரில் ஏராளமான அழிவைச் சற்றே விட்டுவிட்டுப் பார்த்தால், இனியும் தொழில்மயமாக்க இடமில்லாத நிலை உண்டாகிவிட்டது. அதனுல், பெருகிக்கொண்டே வரும் வேலையற்ருேர் எண்ணிக்கையை, அதிக உற்பத்தியில் ஈடுபடுத்த முடியவில்லை. இப்படியிருக்க, இப்போதுள்ள முதலாளித்துவ அமைப்பில்

தொழில் உற்பத்தியைப் பெருக்கி, நம் உபரி ஜனத்தொகையில் கால் பங்கையாவது அத் தொழில்களில் இழுத்துக்கொள்ள முடியும் என்று நம்புவதற்கு நியாயமாக இடமில்லை.

ஆகவே, விவசாயத்திலும், விவசாயமல்லாத துறைகளிலும் இயந்திர முறைகளால் அதிக உற்பத்தி செய்வது நமது ஜனத்தொகை நெருக்கடியை விரைவில் போக்க முடியாது என்ற முடிவுக்கு நாம் கட்டாயம் வரவேண்டியிருக்கிறது. பெவரிட்ஜ் அறிக்கை கூறுவது போலப் போரின் நெருக்கடியில்கூடப் போரிடும் மேனாடுகள், செல்வ உற்பத்திக்கு அன்றிப் பங்கீட்டிற்கே திட்டமிட்டு வந்தன. நாம் இந்தியாவில் இன்னும் முதலாளித்துவத் தொழில் அமைப்பின் ஆரம்ப நிலையில்தான் இருக்கிறோம். பேரளவு உற்பத்தியால் நமக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை நமது பெருகிவரும் ஜனத்தொகையை அழித்துவிடாமல் இருக்க உற்பத்தியை மட்டுமன்றிப் பங்கீட்டைப்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இந்தியப் பொருளாதாரத்தின் பண்பாக இருந்த பெரிய ஏற்றத்தாழ்வுகளைப் போக்கும் முறையில், அண்மையில் வரி விதிப்பின் போக்கு அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பொதுப் பயன்பாட்டுத் தொழில்களையும் முக்கியத் தொழில்களையும் தேசீயமாக்கும் கொள்கைகளிலும் இப் போக்குக் காணப்படுகிறது. இதனால், தனிப்பட்டோர் இலாபமாகச் சிதறிப் போகக்கூடியவற்றைச் சமூக நன்மைக்குப் பயன்படுத்த முடிகிறது. ஆனால், ஏற்கெனவே அதிகமாக வளர்ந்துவிட்ட ஜனத்தொகையை நாம் ஒவ்வோராண்டும் பெருக்கிக்கொண்டே போவதால், நம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நாம் செய்யும் முயற்சிகள் நம் எண்ணிக்கையால் பாழாக்கப்படுவது, நம் ஜனத்தொகைப் பிரச்சினையை நாம் விரைவில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை அளிக்கவில்லை.

எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்

ஒருவகையாகப் பார்க்கப்போனால், இந்திய ஜனத்தொகையின் எதிர்காலத்தைப்பற்றி நாம் எதையும் கூறுவது கடினம். மேனாடுகளில் 1876 க்கும், 1926-க்கும் இடையில் பிறப்பு வீதம் மிகவும் குறைந்தது. ஆனால், இறப்பு வீதமும் குறைந்துவிட்டதால், இதனால் பயன் ஏற்படவில்லை எனினும், இந்தியாவிலும் சீனாவிலும் அதிகரித்துவரும் ஜனத்தொகையைக் கருதி, வெள்ளையர்களின் ஜனத்தொகை குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஐரோப்பியர்களுக்கும் ஆசிய மக்களுக்கும் உள்ள விகிதம் ஐரோப்பியர்களுக்குச் சாதகமாக மாறிவிட்டது என்பதை மறந்துவிட்டார்கள்.

மேனுடுகளில் பிறப்பு வீதம் குறைந்ததற்குக் காரணம் கருத்தடையே. இதைக் கிறித்துவர்கள் ஒரு காலத்தில் பாவம் என்றும் கூறிக் கண்டித்தார்கள். இன்றும், மத குருமார்களைத் தவிரப் பிற தலைவர்களும் கருத்தடையை 'இனத் தற்கொலை' என்று கூறி இகழ்ந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் ஏதேனும் ஒரு 'தாழ்ந்த இனம்' (அத்தகைய இனம் ஒன்று இருக்கிறது என்பது கற்பனையே) தங்களைவிட அதிகமாகப் பெருகி வந்துவிடும் என்ற அச்சமாக இருக்கலாம். அருகிலுள்ள பகைவர்களைவிட எண்ணிக்கையில் நாம் மிஞ்சவேண்டும் என்று கருதும் தேசீய வாதிகள், குழந்தைகளைப் பெறுவது நம் கடமை என்று வற்புறுத்துவார்கள். ஃபிரான்சிற்கு அதிக வீரர்கள் தேவை. இங்கிலாந்திலும் எண்ணிக்கை குறைந்து வருவதுபற்றிக் கவலை உண்டாகியுள்ளது. மற்றுஞ் சிலர், உயர்ந்த நிலையில் இருந்து எல்லா நன்மைகளையும் பெற்றுவருவதால், கருத்தடை தமக்குத் தேவையில்லை என்றும், கீழான பாமர மக்கள் விரைவாகப் பெருகி, இனத் தாழ்வை உண்டாக்கிவிடுவார்கள் என்றும், அதனால் அவர்களுக்குக் கருத்தடை வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

கருத்தடையைப்பற்றி விவாதிக்கும்போது, இந்த இரண்டு பிரச்சினைகளையும் தனித்தனியாகக் கருதவேண்டும். இந்தியாவைப் போல வறுமையில் ஆழ்ந்திருக்கும் மக்களின் தொகை பெருகுவதால் உண்டாகும் பொருளாதாரப் பிரச்சினை ஒன்று; தேர்ந்தெடுத்து இனப் பெருக்கம் செய்து இனத்தை விருத்தி செய்வது வேறொன்று; இது உயிர் நூல் வல்லுநர்கள் கவனிக்க வேண்டிய பிரச்சினை; பொருளாதார வல்லுநர்கள் கவனிக்க வேண்டியதன்று. இவ்வாறு நாம் கருத்தடையின் பொருளாதார அமிசத்தைத் தனியாகவும், இனத்தை விருத்தி செய்யும் இனப் பிரச்சினையைத் தனியாகவும் பிரித்துப் பார்த்தால், குழப்பம் ஏற்படாமல் இருப்பதோடு, மக்கள் எண்ணிக்கை சம்பந்தமான பிரச்சினையைப்பற்றி நாம் நிதரிசனமான கருத்தைக் கொள்ளமுடியும். சென்ற 50 ஆண்டுகளின் அனுபவம் தெளிவாகக் காட்டுவதென்னவென்றால், உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கேற்ப பெற்றோர்களின் கடமையும் நன்கு விளங்குகிறது; சிக்கனக் கருத்தினால் மக்கள் தங்கள் குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்த விருப்பமாகவும் தயாராகவும் உள்ளனர். செல்வர்கள் தம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது குடும்பப் பற்றினால் அல்லவென்பதையும், சுகபோகங்களை விரும்பும் சமூக வெறுப்பான பண்பினால்தான் என்றும் இங்குக் குறிப்பிடுவது தகும்.

எனினும், எண்ணிக்கையைக் குறைத்துவிட்டால் மட்டும் நமது வறுமைப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கூற முடியாது. இந்தியப்

பொருளாதாரத் திட்டத்தில் கருத்தடைக்குரிய இடம், நம் உற்பத்தியைப் பெருக்குவதோடு, அறப் பண்புகளை உணர்ந்து நம் தேசீய வாழ்வைச் சமூகத் துறையிலும் கல்வித் துறையிலும் சீர் செய்யும்படியான ஒரு பெரிய திட்டத்தின் பகுதியாக இருப்பதுதான். செல்வம், உடைமை ஆகியவற்றின் மீதுள்ள பேராசைக்கு இடங் கொடாமல் இத்தகைய வாழ்வில் உண்மையும், அழகும், நன்மையும், மேலோங்கி நிற்கும். ஹாலந்து, ஜெர்மனி, ஃபிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம், இத்தாலி, மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் கருத்தடைப் பிரசாரத்திற்காகக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வியக் கத்தின் தலைசிறந்த ஆதரவாளர்களுள் ஒருவராகிய திருமதி சாங்கர் (Sanger) 1922-ல் உலகம் முழுவதும் பிரயாணம் செய்து, ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய இடங்களில் அதிக ஆவலைத் தூண்டிவிட்டார். ஃபிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் அண்மையில் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கருப்பம் உண்டாவதைத் தடுப்பதற்கு யோசனை கூறும் எந்த விஷயத்தையும் அஞ்சலில் அனுப்பக்கூடாதென்று சட்டம் தடுக்கிறது. அமெரிக் காவில் பல இராச்சியங்கள் கருத்தடைபற்றிய தகவல்களை அளிப் பதைக் குற்றமாக்கிவிட்டன.

அறத்தின் அடிப்படையில் இதற்குத் தோன்றிய முக்கியமான தடை, பண்டை மதங்களின், குறிப்பாக ரோமன் கத்தோலிக்க மதத்தின் பிரதிநிதிகளிடமிருந்து வந்துள்ளது. அவர்கள் திருமணத்தின் அவசியமான விளைவு குழந்தைகளே என்று வாதாடு கின்றனர். இதுபோலவே காந்தியடிகளின் கருத்தும் உள்ளது. அவர், திருமணமானவர்கள் குழந்தையைப் பெறுவதற்கன்றி உறவு கொள்வது தவறு என்றும், அதருமம் என்றும் கருதினர். மலடாக்கப் படுமாறு தூண்டப்படுபவர்கள் விஷயத்தில் இவ்வாறு கூறுவது பொருந்தும்; ஆனல், அறிவோடு குடும்பத்தின் அளவைக் கட்டுப் படுத்துவதற்குப் பொருந்தாது. உயர்ந்த வாழ்க்கைத் தரத்தோடு ஒரு சிறிய குடும்பத்தைக் காப்பாற்றுவதனுல் ஒழுங்கும் இன்பமான குடும்ப வாழ்க்கையும் உண்டாகும். இவ்வாறன்றி, அளவில்லாமல் அதிகக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு வாழ்வதற்கே போராடுவதில் ஒழுங்கும் குடும்ப இன்பமும் இரா. கத்தோலிக்கர்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதை எதிர்க்கவில்லை; அதற்காக செயற்கைத் தடைமுறைகளைக் கையாளுவதைத்தான் எதிர்க்கிருர்கள். காந்தியடிகளும் இவ்வாறே, ‘அறவுணர்வோடு தம் குழந்தைகளின் எண்ணிக்கையை மணமானவர்கள் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். புணர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டே இவ்வாறு செய்வதும், புணர்ச்சி யின் விளைவான கருத்தரித்தலைத் தடுக்கும் முறைகளைப் பயன்படுத்து

வதும் தகாது. முதலில் கூறியதில், மக்களுக்கு எல்லா வகையிலும் நன்மையே உண்டாகும். பிற்கூறியதில் தீமைதான் விளையும்.'[1]

ஆகையால், கருத்தடைக்கு எதிர்ப்பு உள்தூண்டுதலைப் பற்றிய தன்று; அதற்காகக் கையாளும் முறைகளைப்பற்றியதே. கருத்தடையின் அறம்பற்றிய பிரிட்டிஷ் குழுவானது (British Committee on the Ethics of Birth Control) இதற்குச் சரியான பதிலளித்திருக்கிறது. "நாகரிகம் என்பதே மனிதன் இயற்கையை அடக்கியாண்ட வரலாறாகும். இதற்கு முக்கியமாக உதவியது இயந்திர சாதனமே. குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிப்பதற்கு வைத்தியர்கள் தயங்குகிறார்கள். ஆனால், மக்கள் ஒழுக்கம் பற்றிய பிரிட்டிஷ் தேசீய சபையின் மருத்துவக் குழு 'திருமணமானவர்கள் சுகாதாரத்திற்காகவோ, அதிகக் குழந்தைகளைப் பெற்றுவிட்ட காரணத்தினாலோ, வறுமையினாலோ' கருத்தடை மருந்துகளைப்பற்றி அறிய விரும்பினால், அதற்கு ஒரு தடையும் இருக்கக்கூடாது" என்று ஒருமனமாக அறிவித்துள்ளது. கருத்தடை மருந்துகளைப் பலரும் பயன்படுத்தியதன் காரணமாக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் உண்டாகியுள்ளன; சிசுக்கொலையும் குறைந்துள்ளது. கருத்தடையினால் உலகியல் நலம் அதிகமாகி, மனைவியின் நிலை உயர்ந்து, குழந்தைகள், பெற்றோர்களின் ஆரோக்கியத்திற்கும் சாதனங்களுக்கும் ஏற்பத் தக்க இடைவெளியிட்டுப் பிறப்பதால் அவர்களுடைய ஆரோக்கியமும் கல்வியும் வளர்க்கப்பட்டுப் பல நன்மைகள் உண்டாகியுள்ளன என்றும் கூறப்படுகிறது. உண்மையில், மேனாடுகளில், முன் தலைமுறைகளின் பெரிய குடும்பங்களை முன்யோசனையற்ற செயலாகவும், கட்டுப்பாடற்ற புணர்ச்சியின் விளைவாகவும் பொதுமக்கள் கருதுகிறார்கள். வறுமையை ஒழிப்பதற்கும், இனவிருத்தி, உணவு பெறுதல் ஆகியவற்றின் சமூக வாழ்க்கையை உயர்த்துவதற்கும் குடும்பக் கட்டுப்பாடு முக்கியமான வழியாகக் கருதப்படுகிறது. இறுதியாக, அடிக்கடி உண்டாகும் அழிவைத்தரும் போர்களால் பல குடும்பங்களில் துப்பாக்கிக்கும் குண்டுகளுக்கும் இரையாவதற்குத் தான் குழந்தைகளைப் பெறவேண்டுமா என்ற ஐயம் உண்டாகியிருக்கிறது.[2]

[1] M. K, Gandhi, 'Self-Restraint versus Self Indulgence', p. 8.

[2] அடிக்கடி வரும் ஆபத்துகளும், எல்லா நாடுகளின் பாதுகாப்புக்கு வரும் இடைவிடாத தொல்லைகளும் இல்லாமலிருந்தால், பருவ மழையுள்ள ஆசியாவில், படிப்படியான உற்பத்திப் பெருக்கத்தோடு ஜனத்தொகைப் பெருக்கமும் உள்ள நீண்ட இடைக்காலம் இருக்க முடியாதென்று கூறப்படுகிறது. ஆதலால், இனப் பெருக்கத் தன்மையை நல்ல முறையில் கட்டுப்படுத்தக்கூடிய விரைவான இடைக்காலம் உடனடியாகத் தேவையாகும். அத்தகைய விரைவான இடைக்காலம் உண்டாகுமா? அதை உண்டாக்க முடியுமா?

எனினும், எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு, தனிப் பட்டவர்கள் விரும்பினால்தான் கருத்தடை முறையைக் கையாளலாம். இவ்விஷயத்தில் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்குப் பொது மக்கள் கருத்து உருவாக்கப்பட்டால்தான் தேசியக் கொள்கை எதுவும் வெற்றியடைய முடியும். இதனால், தனிப்பட்ட பெற்றோர்கள் தம் குடும்பத்தின் அளவைப்பற்றித் தீர்மானிப்பதற்குச் சமூகத்தின் நிலை அவர்களுக்கு முதன்மையானதாகத் தெரிய வேண்டும். சினிமா, வானொலி, செய்தித் தாள்கள் முதலியவற்றின்மூலம் பிரசாரம் செய்து, இனி வரப்போகும் தலைமுறைகளுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமை இது என்று மக்கள் உணருமாறு செய்தால்தான் ஜனத் தொகைபற்றிய தேசீயக் கொள்கை எதுவும் சாத்தியமாகும்.

மேனாடுகளில் இன்று குடும்பத்தின் அளவு குறைவதைப் பற்றியே பேச்சாக இருக்கிறதேயன்றிப் பிறப்புவீதம் குறைவதைப் பற்றி இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். சாதாரணக் குடும் பத்தின் அளவு குறைந்திருப்பதற்குக் காரணம் குடும்பக் கட்டுப்பாடே, சென்ற நூற்றாண்டுகளாகக் குடும்பத்தைக் கட்டுப்படுத்த வேண்டு மென்று தோன்றியுள்ள மனப்பான்மைக்குக் காரணம், ஒன்றுக் கொன்று தொடர்பான பல சிக்கலான சமூக, பொருளாதார அம்சங்களே. இவற்றுள் நகர வாழ்க்கை, தம்முடைய சமூக, பொருளாதார நிலையையும், தம் குழந்தைகளின் நிலையையும் உயர்த்தவேண்டுமென்ற விருப்பம், சமூகத்தில் பெண்களின் நிலைமையில் உண்டான மாறுதல், வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட உயர்வு, குழந்தைகளை வளர்ப்பதற்கு உண்டாகும் அதிகச் செலவு முதலியவை அடங்கும். மதத்தில் உள்ள ஆவல் குறைந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்த அமிசங்கள் எதிர் காலத்தில் தொழில்மயமாக்கப்பட்டு, நகர வாழ்க்கை மிகுந்த நம் சமூகத்தில் எவ்வளவு தூரம் தொழிற்படுமோ அதைப் பொறுத்து நம் நாட்டின் எதிர்காலமும் இருக்கும்.

நம் நாடு அளவுகடந்த ஜனத்தொகையைப் பெற்றுள்ளது என்றும், இனியும் இந்த எண்ணிக்கையை அதிகரிப்பது விரும்பத் தக்கதன்று என்றும் கொண்டால், நம் எண்ணிக்கையைக் குறைப் பதற்குக் கருத்தடை இயக்கம் எவ்வளவு தூரம் உதவும்? இந்தி யாவில் கருத்தடை இயக்கம் ஆரம்ப நிலையில்தான் உள்ளது. மருத்து வர்கள் பலர் அதை வெளிப்படையாக ஆதரிக்கிறார்கள். மகாராஜாக் களாலும், உயர் நீதிமன்ற நீதிபதிகளாலும் ஆதரிக்கப்பட்ட புது மால்தூசிய கழகம் (New Malthusian League) ஒன்று சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டின் கணிப்பு அறிக்கை, "இப்போதுள்ள உயர்வு வீதத்தின் காரணமாக, சிசு மரண வீதத்தைக்

குறைக்க முயற்சி செய்வதற்கு முன்னுல் பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்கு முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 'குழந்தை வாரம்' கொண்டாடினுல், அதையொட்டிக் கருத் தடைக்கு வழி முறைகளையும் கூறவேண்டும்'' என்று யோசனை கூறியது. ஹரிபுரா காங்கிரசில் சுபாஷ் சந்திரபோஸ் தன் தலைமைப் பேருரையில் நம் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தெளிவாக ஆதரித்தார். அனைத்திந்திய மாதர் மாநாட்டில் இந்திய மக்க ளிடையே கருத்தடைபற்றிய அறிவைப் பரப்ப வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது. மைசூர் அரசாங்கம், அந்த இராச்சியத்தின் முக்கியமான மருத்துவ விடுதிகளில் கருத்தடைப் பிரிவுகளை நிறுவியது. இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் சில நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1952 டிசம்பரில் பம்பாயில் நடத்தப்பட்ட ஒரு சர்வதேச மாநாட்டில், குடும்பத்தின் அளவை வரையறுக்கும் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. பம்பாய் நகரத்தில் நகர சபையின் மேற்பார்வையில் குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவ நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்தை மக்களிடையே பரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திட்டக் குழுவானது, அதிகரித்துவரும் ஜனத்தொகையால் உண்டாகும் அபாய நிலையை உணர்ந்து, குடும்பத்தைத் திட்டமிட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் பின்வரும் திட்டத்திற்காக 65 இலட்ச ரூபாயை ஒதுக்கியது. அத் திட்டமாவது, அரசாங்க மருத்துவ நிலையங்களிலும், உடல்நல நிலையங்களிலும் மருத்துவ யோசனை கூறுவது, ஒவ்வொருவருக்கும் ஏற்ற முறையில் கருத்தடைக்காக மருந்துகளையோ, கருவிகளையோ, உயிர்நூல் முறைகளையோ பயன் படுத்துமாறு கூறுவது, முறை வைப்பு வழி (rhythm method) யையும், மற்ற வழிகளையும் பரிசோதிப்பது, குடும்ப அளவுபற்றிப் பெற்றேர் மனப்பான்மையை அறிவது, மக்களின் இனப் பெருக்கத் தன்மைபற்றியும், அதைக் கட்டுப்படுத்துவதுபற்றியும், உடற்கூறு மருத்துவ சம்பந்தமான ஆராய்ச்சி செய்வது ஆகியவை முதல் திட்டத்தில் 111 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களுக்கும், உயிர்நூல், மக்களியல் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பத்தொன்பது திட்டங்களுக்கும் உதவித் தொகையோ, மானியமோ கொடுக்கப் பட்டது. இரண்டாம் திட்ட காலத்தில் இத் திட்டம் மேலும் விருத்தி செய்யப்படும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 5 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்ட காலத்தில் 300 நகர நிலையங் களும், 2,000 கிராம நிலையங்களும் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், கடவுளுடைய ஆசியினுல்தான் பெரிய குடும்பங்கள் உண்டாகின்றன என்றும், பழம் பிறவிகளில் செய்த குற்றங்களுக்குத் தண்டனையாகத்தான் இப் பிறவியில் குழந்தையில்லாத பழி ஏற்படுகிறதென்றும் பெரும்பாலோர் கருதும் நம் நாட்டில், கருத்தடை மருந்துகளைப் புகுத்துவதில் உள்ள சிரமத்தை நாம் அறியாமல் இல்லை. எல்லோரும் திருமணம் செய்துகொள்ளும் வழக்கமும், இளமைத் திருமண வழக்கமும் சமூகப் பழக்கங்களே யன்றி, மதக் கருத்துகளினுல் ஏற்பட்டவையல்ல. ஆனுல், எந்தச் சமூகப் பழக்கத்தை மாற்ற முயலும்போதும் மக்கள் அம் மாறுதலுக்ெதிராக மத சம்பந்தமான வாதங்களைக் கூறுகிருர்கள். இந்திய மக்களைக் கருத்தடை இயக்கத்தை ஆதரிக்குமாறு செய்வதும் கடினமே. இதுபற்றி எந்தச் செய்தியையும் அவர்களுக்குப் படிக்கத் தெரியாது. இந்த இயக்கத்தைக் காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி போன்ற அரசியல் ஸ்தாபனங்கள் ஊக்கமாக ஆதரிப்பதில்லை. இத்தகைய நடவடிக்கைகளை ஆதரிப்பதால் ஓட்டுகளைப் பெற முடியாமல் போய்விடும் என்று அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர்.[1]

[1] ஒப்பிடுக : 'மேனுடுகளில் உள்ள சமூக நிலையில் பக்குவமடைந்து தோன்றிய குடும்பக் கட்டுப்பாட்டுக் கருத்துகளை, மாருமலிருக்கும் கீழ் நாடுகளின் வாழ்க்கையில் புகுத்த முயல்வது பயனற்ற காரியமாகும். மேனுடுகளில் சமூக, பொருளாதார நிலை ஏற்றதாக இல்லாமலிருந்தால், இக் கருத்துகள் அங்குத் தோன்றியிருக்க முடியாது. ஃபிரான்ஸ், பிரிட்டன் அல்லது சுவிடனில் வாழ்க்கை முறை மாறினுல் ஜனத்தொகை பெருகாமலிருக்கும் என்று உறுதி கூற முடியாது. இந்தியாவிலோ, ஜப்பானிலோ நிலைமை மாறினுல், ஃபிரான்சில் இருப்பதுபோல ஜனத்தொகை ஒரு நிலையான கட்டத்தையடையும் என்பதற்கும் சான்று இல்லை.'—'400 கோடி மக்கள்' —கிளர்க், பக்கம் 21.

காந்திய வழியைப் பின்பற்றும் தலைவர்களும், மந்திரி சபையில் உள்ள சில சகாக்களும், காந்தியடிகளின் கருத்துகளையே இன்னும் விடாமல் பிடித்துக்கொண்டிருந்தாலும், பண்டித நேருவாவது, நம் ஜனத்தொகை பெருகுவதில் உள்ள அபாயத்தை உணர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

'திருவாங்கூரில் தவிர இந்தியாவில் வேறு எங்கும் எனக்கு மத சம்பந்தமாக எதிர்ப்பே உண்டாகவில்லை. திருவாங்கூரில் மட்டும் அனைத்திந்திய மாதர் மாநாட்டின் கூட்டத்திலிருந்து 30, 40 போர்த்துகீசியப் பாதிரிமார்கள் வெளியேறிவிட்டார்கள்' என்று திருமதி மார்க்கரெட் சாங்கர் கூறுகிருர். ஆனுல், அவர் நகரத்தில் உள்ள படித்த பெண்கள் தம் நவீன முற்போக்குக் கருத்துகளைப் பறையறையவே பாடுபட்டார்கள் என்பதைத்தான் கூற விரும்புகிருர் என்பது தெளிவு. 'ஜனத்தொகையும் உலக சாதனங்களும்' என்பதுபற்றி (1948, பக்கம் 93.) பன்னுட்டுக் காங்கிரசின் நடவடிக்கைக் குறிப்புகளைக் காண்க.

இது சம்பந்தமாக, செல்டன்ஹாம் காங்கிரசில் நடந்த ஒரு விவாதத்தில், வட கரோலினுவைச் சேர்ந்த சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் பிரதிநிதியாகிய திருமதி உட்சைட் (Woodside) என்பவர், அவருடைய இராச்சியத்தில் எல்லாப் பொது உடல்நலத்துறைகளிலும், குடும்பக் கட்டுப்பாடு உள்ளது என்றும், ஆனுல் அது இருந்தாலும், கல்வியில்லாத அதிக இனப்பெருக்கத் தன்மையுடைய தாயானவள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை (நடவடிக்கைக் குறிப்புகள், பக்கம் 161).

பாமர மக்கள்மீது மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த காந்தியடிகள் கருத்தடை முறைகளை எதிர்த்தார் என்பது உண்மையில் துக்ககரமானது. அவர் பெரிய குடும்பங்கள்பற்றிய பிரச்சினைக்குத் தன்னடக்கமே பரிகாரம் என்று கூறினுர். அதுமட்டுமன்றி அவர் கருத்தடை முறைகளைக் கண்டித்தார். இதனுல், பிரசாரம் செய்யும் வேலை மிகவும் கடினமாயிற்று. கருத்தடை மருந்துகளை மட்டும் அவர் இயற்கைக்கு முரணுனவை என்று கருதுவானேன்? மூக்குக் கண்ணுடிகளைக்கூட அப்படிக் கருதியிருக்கலாமே? இது வியப்பிற்குரியது. இதைவிடப் பெரிய சிரமம் என்னவென்ருல், பாமர மக்களுக்கு ஏற்றதும், அவர்கள் விலைகொடுத்து வாங்கக் கூடியதும் ஆன மலிவான கருத்தடை மருந்தை அளிப்பது. இந்தியாவில் கருத்தடைபற்றிய விஞ்ஞானத்தை டாக்டர்கள்கூடப் பொதுவாக அதிகம் அறிந்திருப்பதில்லை. இதுமட்டுமன்றி, பத்துக் கிராமங்களில் ஒன்பது கிராமங்களுக்கு டாக்டர்களோ, மருத்துவ நிலையங்களோ இல்லை.

ஆகவே, இந்தியாவில் தேசீய புனரமைப்பிற்காகக் கருத்தடை இயக்கம் பரவ வேண்டுமானுல், இது ஒரு பெரிய திட்டத்தின் பகுதியாக அமைய வேண்டும். அத் திட்டம், ஆரோக்கிய வருகையாளர்கள் (health visitors) கூறும் நேரடியான யோசனையால் மக்களுக்குத் தகவல்களை அளிக்கக்கூடிய ஒரு தக்க உடல்நல நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும். சில சமயங்களில் சமூகத்தில் படிப்படியாக விழிப்பு ஏற்படாமல் வியக்கத்தக்க முறையில் விரைவாக ஏற்படுவதும் உண்டு. கல்வியையும் பிரசாரத்தையும்விடப் பொருளாதார அதிருப்தியால் சமூகத்தில் தீவிர மாறுதல் ஏற்படலாம். மேனுடுகளில் மத குருக்களும் அரசாங்கமும் எதிர்த்துங்கூட இந்த இயக்கம் பரவியிருக்கிறது. விஷயமறிந்த அரசாங்கத்தின் உதவியாலும், நவீனப் பிரசார முறைகளாலும் புதிய அமைப்பில் பழங்காலப் பழக்க வழக்கங்களை எதிர்க்கக்கூடியதும், புதிய சமூக மீக்கோள் தரங்களை (norms) நிலைநிறுத்தக்கூடியதும் ஆகிய ஒரு புதிய தலைமுறையை உண்டாக்க முடியும். ஏனெனின், நாம் ஏற்கெனவே கூறியது போல, ஜனத்தொகைக் கட்டுப்பாடு சட்டத்தினுலோ, நிருவாக நடவடிக்கையினுலோ ஏற்படக் கூடியதன்று. சமூகப் பொறுப்பை உணரும்படி அறிவூட்டப்பட்ட பெற்ருேர்கள் தாமாக விரும்பிச் செய்யும் செயலாகவே அது இருக்க வேண்டும். இதனுல் அவர்கள் எதிர்காலத் தலைமுறைகளின் நன்மையைக் கருதித் தம் குடும்பங்களின் அளவை வரையறுத்துக் கொள்வார்கள்.

முடிப்புக் கருத்துகள்

அடுத்த முப்பதாண்டுகளுக்கு நம் நாட்டில் சமன் செய்யப்படாத பொருளாதார, சமூக அமைப்பை நமது வளர்ந்துவரும் ஜனத்தொகை எப்படிப் பாதிக்கும் என்பதுதான் நமது ஜனத்தொகைப் பிரச்சினை என்று நாம் முன்பே கூறினோம். ஆகவே, விரிவான சமூகக் கொள்கையின் அடிப்படைமீது அமைக்கப்பட்ட, திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையோடு நமது ஜனத்தொகைக் கொள்கை அறிவோடொத்த முறையில் இணைக்கப்பட வேண்டும். இத்தகைய குறிக்கோளை அடைவதற்கு நாம் அரசியல், சமூக, பொருளாதார முனைகளில் எல்லாம் போராடவேண்டியிருக்கும்.

முதலாளித்துவ, பிரதேச, மொழி அடிப்படையில் உள்ள ஊன்றிய நலமிகள் (vested interests) காரணமாக, நாம் கருதிய பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிட முடியாமல் இருக்கிறது. இவர்களோடு சில சிறுபான்மைக் கூட்டங்களும் சேர்ந்துகொண்டு சமூகம் முழுவதன் நன்மைக்கெதிராகத் தங்கள் நன்மையை நிலை நாட்ட முயலுவார்கள். நாம் நினைக்கும் பொருளாதார அமைப்பு இந்தியா முழுவதின் அடிப்படையில்தான் அமைய முடியும். அதில் கடமைகள் இன்றி உரிமைகள் இல்லை. மேற்கூறிய சிரமங்களால் விரிவான அடிப்படையில் பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கு நாம் எவ்வளவுதான் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் இருப்பினும், உடனடியான அரசியல் சமரசத்திற்காக நாம் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாது. வெற்றிகரமான சமூகப் புரட்சி உண்டானால், அது தேவையில்லை. அத்தகைய புரட்சி இப்போது மக்களிடத்தில் போதிய ஆர்வமின்மையால் நடக்கவும் முடியாது.

இத் துன்பங்களை மீறி, முரணான பல மாறுபட்ட கொள்கைகளுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்கினாலுங்கூட, எதிர் காலத்தில் நம் துன்பங்கள் ஓய்ந்துவிட்டதாகக் கூற முடியாது. அவை அப்போது தான் தொடங்கும். ஏனெனின், நாம், நம் தேசீய வாழ்க்கையை எல்லாத் துறைகளிலும் திட்டமிடவேண்டியிருக்கும். இத் திட்டத்தில், நம் சமூக வியாதிகளாகிய வறுமை, துன்பம், நோய், குற்றம் ஆகிய பிரச்சினைகளை, பெருகிவரும் ஜனத்தொகையோடு நேரடியாகவோ, மறைமுகமாகவோ இணைந்துள்ள பிரச்சினைகளை எதிர்க்கவேண்டியிருக்கும்.

இந்தியாவின் எதிர் காலத்திற்காக நாம் இடும் எந்தத் திட்டத்திலும் ஒரு சமூகவியல் நிகழ்ச்சியை நாம் மறந்துவிட முடியாது.

அது என்னவென்ருல், நம் மரண வீதத்தைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியத்தை வளர்த்தல், நோய்களை நீக்குதல், கொள்ளை நோய்களின் காரணங்களை அகற்றுதல் முதலியவற்றிற்காக நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையினுலும் மரணவீதத்தைக் குறைக்கக் கூடுமாயினும், தனிப்பட்ட குடும்பங்கள் கருத்தடை அவசியம் என்று தாமாக விரும்பி மேற்கொண்டால்தான் முடியும். சட்டமிட்டுச் செய்ய முடியாத சமூக, மத சம்பந்தமான பல அமிசங்களைப் பொறுத்ததே பிறப்பு வீதம். தலைமுறை தலைமுறையாக வந்து, நம் வாழ்க்கையில் ஆழமாக வேரூன்றியுள்ள பழக்கங்களைத் திடீரென்று ஒரு நாளில் மாற்ற முடியாது. ஆகையால், நாம் எதிர் காலத்தில் மரணவீதம் குறைந்துகொண்டும், பிறப்புவீதம் அதிகரித்துக் கொண்டும் வரக்கூடிய நிலையில், இப்போதுள்ள நம் ஜனத்தொகை மேலும் அதிகமாகப் பெருகுவதால் வரும் அபாயத்தை எதிர்க்க வேண்டியிருக்கும். அப்போது நம் பொருளாதாரத் தரத்தை உயர்த்துவதற்கு நாம் செய்யும் முயற்சிகள் எல்லாம் வீணுகப் போகக் கூடும். ‘இந்தியாவில் இருப்பதுபோல ஜனத்தொகைக்குப் போதாத விளைநிலக் குறைவும், மூலதனக் குறைவும் இருந்தால், ஜனத்தொகையைக் கட்டுப்படுத்திஞல்தான் வருமானத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் விரைவாக உயர்வு ஏற்படும் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கிறது’ என்று திட்டக் குழு கூறுவது முற்றிலும் உண்மையே.[1]

ஜனத்தொகைபற்றிய நிகழ்ச்சிகள் பல இன்னும் நமக்குத் தெரியாமல் உள்ளன என்பதையும், மக்களால் கட்டுப்படுத்த முடியாதவை இன்னும் எவ்வளவோ உள்ளன என்பதையும் எவரும் ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. ‘எதிர்கால ஜனத்தொகையைப்பற்றிய மதிப்பீடுகளை ஒத்துக்கொள்ளவும் ஆமோதிக்கவும் யுத்தத்திற்கு முன்பு பல பொருளாதார நிபுணர்கள் தயாராக இருந்தார்கள். மேனுடுகளில் எல்லாம் ஜனத்தொகை குறைந்துவரும் நிலையை அவை எதிர்க்கவேண்டியிருந்தது. இக் குறைவினுல் உண்டாகக் கூடிய விளைவுகளைப்பற்றியும், இதைத் தடுக்க முடியாத நிலைபற்றியும், இதனுல் மேனுடுகளுக்கு உண்டாகக்கூடிய அபாயம் பற்றியும் அஞ்சத் தகுந்த செய்திகள் கூறப்பட்டன. ஆனுல், இந்த ஜோதிடம் நம்பத் தக்கதாக இல்லை. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் யுத்தத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டதைவிட இப்போது ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு குறைவான ஜனத்தொகையுள்ள நாடுகள் என்று கூறப்பட்டவை, அளவு

[1] ‘இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்’, 1956, பக்கம் 7.

கடந்த ஜனத்தொகை பெற்றுள்ளன என்று சிலரால் கருதப்படுகின்றன.'[1]

ஆகவே, மிகவும் அறிவோடொத்த திட்டங்களிலும் முன்கூட்டிக் கூற முடியாத சில அமிசங்கள் இருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இது நமது ஆற்றலின் எல்லையை நமக்கு அறிவுறுத்துகிறது. நாம் பௌதிகச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் அளவுக்குச் சமூக நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இயற்கையானது சில சமயங்களில் பழிக்குப் பழிவாங்கி, மனிதனுடைய தான்ரோன்றித்தனமான செருக்கை அழிக்கிறது. உயிர்களைத் தாங்கும் நோக்கம் தோல்வியடையும் அளவுக்கு நிலத்திலிருந்து நாம் வற்புறுத்திப் பெற முடியும். அதுபோலவே, நம் மக்கள் நீடித்து நல்வாழ்வு வாழவேண்டுமென்பதற்காக நாம் செய்யும் செயல்கள், நம் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பல எதிர்பாராத நிகழ்ச்சிகளை உண்டாக்கக்கூடும்.

[1] 'பொருளாதார வல்லுநரும் பொதுஜனக் கொள்கையும்'—John Jenks in 'Lloyds Bank Review,' April 1953, p. 25.

8. விவசாயம்

முன்னுரை

பழங்காலம் தொட்டே விவசாயம் இந்தியாவில் முதன்மையான தொழிலாக இருந்துவருகிறது. 1872 ல் இந்தியா பிரிக்கப்படாத நிலையில் விவசாயத்தை நம்பியிருந்த ஜனத்தொகை 65 சதவீதமாக இருந்து, 1951–ல் இந்திய யூனியனில் 70 சதவீதமாக உயர்ந்தது. நம் நாட்டில் மிகுந்துள்ள ஜனத்தொகையில் ஐந்தில் நான்கு பங்கு இன்னும் கிராமிய நிலையிலேயே வாழ்ந்து வருகிறது. நகரங்களில் வாழும் தொழிற்சாலைத் தொழிலாளரும் வியாபாரிகளும் கிராமங்களிலிருந்து நகரத்திற்குக் குடிபெயர்ந்த பின்னரும், தங்கள் கிராமங்களோடு தொடர்புகொண்டுள்ளனர். இந்தியப் பொருளாதார அமைப்பில் விவசாயம் மிகவும் முதன்மையானது என்று யாவரும் அறிந்திருப்பினும், அதுபோல நமது விவசாய உற்பத்தியின் மிகுந்த விரிவையும் வகைகளையும் பற்றியும், நம் விவசாயச் சாதனங்களைப் பற்றியும் யாவரும் பொதுவாக அறிந்தவர்களாக இல்லை. இந்த நாடு, உணவுப் பயிர்களும் மூலப்பொருள்களும் ஆகிய முதன்மையான விளைபொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளில், இவ்வுலகத்திலேயே முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. இந்த நிலையை, மேனாடுகள் கீழ்நாடுகளைப்பற்றி அறியாமையால் உணராமலேயே இருந்தன. அடிமை நாடு என்ற இழி நிலையாலும் இங்கு உற்பத்தியாகும் அளவுபற்றி ஓர் இருண்ட நிலை ஏற்பட்டிருந்தது. கடந்த நூற்றாண்டுகளில் இங்கிலாந்தோடு இந்தியா கொண்டிருந்த தொடர்பின் காரணமாக இங்கிருந்து மூலப்பொருள்களை அங்கு ஏற்றுமதி செய்வதற்கு மிகுதியாக உற்பத்தி செய்வது ஒன்றுதான் நோக்கமாக இருந்தது. இந்தியாவின் தேவைகளுக்காக உற்பத்தி செய்வது நோக்கமாக இல்லை.

உலகத்தில் இந்தியாவின் நிலை பிரிவினையால் எப்படிப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம் :

உலகப் பரப்பில் சில பயிர்கள் விளையும் சதவீதமாக இந்தியப் பரப்பு[1]

	பிரிவினைக்கு முன்பு	பிரிவினைக்குப் பின்பு	
	1940	1951	1954
சணல் ...	99·2	49·7	57·3
அரிசி ...	48·6	31·5	37·9
பருத்தி ...	29.4	19·2	24·4
நற்சணல் விதை (Linseed)	14·1[2]	27·6	23·1
கோதுமை ...	13·4	7·6	7·9
வாற்கோதுமை (பார்லி)...	6·8	7·4	7·8

பிரிவினைக்கு முன், இந்தியா முக்கியமான விவசாயப் பொருள்களில் உலக உற்பத்தியில் நிலக்கடலை 52 சதவீதமும், சணல் 98 சதவீதமும், அரிசி 48 சதவீதமும் ஆக உற்பத்தி செய்தது. இன்று (1951) இந்தச் சதவீதங்கள் முறையே 32, 41, 20·7 ஆகக் குறைந்து விட்டன. இன்னும் இந்தியாதான் நிலக்கடலை, கரும்பு, சிறு சணல் (hemp) ஆகியவைகளை மிக அதிகமாகவும், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாகப் பருத்தியையும், அமெரிக்காவுக்கும் சீனுவுக்கும் அடுத்தபடியாகப் புகையிலையையும் உற்பத்தி செய்கிறது.

1939-ல் போர் தோன்றியதனுல்தான் இந்தியாவின் முக்கியத்துவம் உணரப்பட்டு, விவசாய சாதனங்களில் அதன் சாத்தியக் கூறுகள் அறியப்பட்டன. இருப்பினும் விவசாயத் துறையில் நம் சாத்தியக்கூறுகளை உணர்ந்த பின்னரும், குறிப்பிட்ட சாதனைகள் ஒன்றும் செய்யப்படவில்லை. நம் நாட்டின் பெரிய நன்மைகளும் நீண்டகால நலனும்பற்றிய சில கருத்துகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. முதலாவதாக, நமது முதல் பிரச்சினை என்னவென்ருல், பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்ப நமது உணவுச் சாதனங்களைச் சரிசெய்தல். போட்டி முறையில், உழப்படாத நிலத்தை உழவுக்குக் கொண்டுவந்து நம் நிலச் சாதனங்களைப் பெருக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. இரண்டாவதாக, கிழக்குக் குழு

[1] காண்க : சர்வதேச சங்கத்தின் புள்ளியியல் ஆண்டுப் புத்தகம், 1941. உணவு, விவசாயப் புள்ளியியல் ஆண்டுப் புத்தகம், 1952, 1945, F. A. O. U. N. Rome.

[2] 1936 ஆம் ஆண்டுக்குரிய எண்களை அடிப்படையாகக் கொண்டது.

மகாநாடு (Eastern Group Conference) விரும்பியது போன்ற ஒரு திட்டத்தை ஏற்றுக்கொள்வது நம் நாட்டின் நன்மைக்கு உகந்த தாகாது. அதனுல், காமன்வெல்த்தின் நன்மைக்காக நம் விவசாய சாதனங்கள் சுரண்டப்படும். அத்தகைய திட்டம் தவருன வழியில் விவசாயத்தைப் பெருக்குவதாகும். மேலும், அதனுல் இந்தியா விவசாய அபிவிருத்தியையே கவனித்து, விவசாய விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவே தொடர்ந்து நீடிக்க வேண்டியிருக்கும். இந்த ஏற்றுமதிக்குப் பதிலாக இது பொறி செய்பொருள்களையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்துகொள்ளும். இவ்வாறு விவசாயப் பெருக்கத்தை வரையறை செய்வதால், இந்தியா கனவியல் தொழில்களை வளர்க்கும் திட்டத்தைக் கைவிட வேண்டிய தாகும். இவ்வாறு செய்வது பொருந்தாது.

இருப்பினும், யுத்த கால அனுபவத்தினுல் நம் விவசாய உற்பத்தி நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடையதல்ல என்பது தெரிந்துவிட்டது. ஏப்ரல் 1942-க்குப் பிறகு, 'உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று பிரசாரம் செய்தும் உற்பத்தியில் ஒன்றும் உயர்வு ஏற்படவில்லை. 'இந்த இயக்கத்தினுல் உண்டான விளைவு கண்ணைக் கவரத்தக்கதாய் இல்லை. இரண்டாம் உலக யுத்தத்தின்போது உண்டான விவசாய உற்பத்தியின் போக்கை இந்த அட்டவணை காட்டும்.[1]

இந்திய விவசாய உற்பத்தி (ஆயிரம் டன்களில்)

பண்டம்	1938-39	1940-41	1942-43	1943-44
அரிசி ...	26,069	23,838	26,194	32,393
கோதுமை ...	10,267	10,283	11,242	10,016
கம்பு, தினை, சோளம்	12,750	14,444	15,070	14,647
நற்சணல் விதை ...	442	434	411	395
நிலக்கடலை ...	3,275	3,700	2,821	3,263
மற்ற எண்ணெய் விதைகள் ...	1,450	1,640	1,643	1,540
கரும்பு ...	3,389	5,800	5,076	5,696
பருத்தி ...	4,990	6,080	4,554	5,060
சணல் ...	9,690	5,460	......	5,430
தேயிலை ...	452	464	564	554

[1] 'முதன்மையாக உற்பத்தி செய்யும் நாடுகள்'—A. R. பிரெஸ்ட், 1948, பக்கம் 39.

ஆனால், இந்த எண்கள் உண்மைச் செய்திகளை வெளிப்படுத்த வில்லை. இந்த எண்களிலிருந்து எந்த முடிவுக்கும் வரும்போது, இந்த விவசாயப் புள்ளியியல் முற்றிலும் நம்பத்தக்கதல்ல வென்பதையும், பருத்தி, சணல் உற்பத்திகள் வேண்டுமென்றே கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதையும், உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டுள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் உள்நாட்டிற்குத் தேவையான உணவும், மற்ற முதன்மையான விளைபொருள்களும் போதிய அளவு கிடைக்கும் முறையில் இந்தியாவின் விவசாய உற்பத்தி பெருக்கப்பட வேண்டும். மேலும், நம் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை அளிக்கும் முறையிலும் அதை மாற்ற வேண்டும். உதாரணமாக, இப்போது நாம் பேரளவில் உற்பத்தி செய்யும் பலவித எண்ணெய் விதைகளைக்கொண்டு உள்நாட்டு நுகர்வுக்கு வேண்டிய வர்ணப்பூச்சுக்கள், வார்னீஷ்கள், சாயங்கள், எண்ணெய்கள் ஆகிய வற்றை உற்பத்தி செய்வதற்கான புதிய தொழில்களை அமைக்கலாம். இவ்வாறு பயன்பெற வேண்டுமானால், மேனாடுகளில் பொருளாதாரத் துறையில் காணப்படும் இலாப நோக்குடையதும், பொருளாதாரக் குழப்பத்தை உண்டாக்கியதும் ஆகிய தனியார் தொழில்துணிவு நமக்கு உதவாது. நம் தேவைக்கேற்ப உற்பத்தியைச் சரிசெய்யும் இணைப்பான பொருளாதார வாழ்க்கைத் திட்டமே நமக்கு வேண்டும்.

1869–லேயே ஒரு இந்திய வைசிராய், இங்கிலாந்தில் ஒரு நல்ல நிலக்கிழார் செய்யவேண்டிய வேலைகளை இந்தியாவில் அரசாங்கம் செய்யவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார். ஏனெனின், அரசாங்கம்தான் தேவையான மூலதனத்தையும் விஷய ஞானத்தை யும் பெற முடியும். இன்று, இங்குள்ள அதிக ஜனத்தொகையும் மிகுந்த வறுமையும் காரணமாக உள்ள விவசாயப் பிரச்சினையின் கடுமையை எண்ணி அவர் இப்படிக் கூறியிருக்க முடியாது. எனினும், இந்தியாவில் விவசாயத்தைக் கொண்டுசெலுத்துவதற்கான எத்தகைய முயற்சியிலும் நாம் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கையை அவர் மிகவும் நன்றாக உணர்ந்திருந்தார். அக் கொள்கை யாதெனின், அரசாங்கம்தான் எல்லாச் சாதனங்களையும் பெற்று, நம் விவசாய சாதனங்களைத் திரட்டித் திட்டமிட்டுப் பயன் படுத்த முடியும் என்பது.

ஒரு நாட்டின் நிலத்தை விவசாயம், காடுகள், மேய்ச்சல் ஆகிய முக்கியமான காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். குடியிருப்

பதற்கும், தொழில்களுக்கும், சுரங்கங்களுக்கும் பயன்படுத்தப்படும் நிலத்தையும் மறந்துவிடக்கூடாது. நாகரிக நாடுகளில் நிலத்தைப் பயன்படுத்தும் பிரச்சினை அண்மையில்தான் கவனிக்கப்பட்டது. 1931-ல் நிலத்தைப் பயன்படுத்துவதுபற்றிய தேசீய மாநாட்டில், விவசாய மதிப்புடைய நிலங்களை வகையீடு செய்வது பற்றியும், நில அரிப்பு, அங்ககப்பொருள் அழிவு, அதிக மேய்ச்சல், வெள்ளப் பெருக்கு முதலியவற்றை முடிந்த அளவு குறைத்து நிலத்தைப் பாதுகாக்கும் திட்டத்தைப்பற்றியும் கவனிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் 'தேசீய நிலப்பயன் திட்டக் குழு', 'நிலத்தைப் பயன் படுத்துவதற்குத் தேசீய ஆலோசனைக் குழு' ஆகியவை அமைக்கப் பட்டன. ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் யோசனைப்படி நம் நாட்டில் அமைக்கப்பட்ட விவசாய விஞ்ஞானத் துறை இருந்தும், இதைப் போல ஒன்றையும் அது செய்யவில்லை. இராச்சியங்களின் நீர்ப்பாசனத் துறைகளாலும், விவசாயச் சோதனை நிலையங்களாலும், மற்ற ஆராய்ச்சிப் பகுதிகளாலும் குறிப்பிட்ட இடங்களில் மண்ணைப்பற்றிய விவரங்களும் நிலத்தைப் பயன் படுத்துதல்பற்றியும் சில விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. விவசாயத்தைத் திட்டமிடுவதற்கு, மண்ணைப்பற்றியும், நிலத்தைப் பயன் படுத்துவது பற்றியும் விரிவாக விஞ்ஞான முறையில் ஆராயாம லிருப்பது ஒரு பெருந்தடையாக இருக்கிறது. திட்டக் குழு மண் வகைகளையும் நிலத்தைப் பயன்படுத்துவதையும்பற்றி இந்தியா முழுவதிலும் ஆராயவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து (அ) மத்திய அரசாங்கத்தில், நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், மண்வளத்தைப் பாதுகாப்பதற்கும் ஒரு மத்திய அமைப்பையும், (ஆ) ஒவ்வோர் இராச்சியத்திலும் நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், மண்வளத்தைப் பாதுகாப்பதற்கும் ஒரு குழுவையும் அமைக்க வேண்டுமென்று கூறியது.

இந்தச் சங்கங்களின் அமைப்பையும் வேலைகளையும்பற்றி அது விரிவாகக் கூறியுள்ளது.[1] 1953-ல் மத்திய மண்வளப் பாதுகாப்புக் குழு ஒன்றும், அது போலவே அநேகமாக எல்லா இராச்சியங் களிலும் ஒவ்வொரு குழுவும் நிறுவப்பட்டன. முதல் திட்ட காலத்தில் சுமார் 250 விவசாய அதிகாரிகளும் காட்டிலாகா அதிகாரிகளும் மண்வளப் பாதுகாப்பு முறைகளில் பயிற்சி பெற்ற னர். இத் திட்ட காலத்தில் மொத்தம் 7 இலட்சம் ஏக்கரில், எல்லைகளில் கரைகளைக் கட்டுவது, அகழிகளை வெட்டுவது, பள்ளங் களை அடைப்பது, மேடுகளை அமைப்பது போன்ற மண்வளப் பாது காப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பம்பாய் மட்டுமே

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்,' பக்கம் 303-5.

மூன்றில் இரண்டு பங்கு பரப்பளவில் வேலைசெய்தது. இரண்டாம் திட்டத்தில், மண் அரிப்பினால் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களில் 30 இலட்சம் ஏக்கர் நிலத்தில் மண்வளப் பாதுகாப்பிற்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.[1]

நிலப் பங்கீடு

1954-55–ல் இந்திய யூனியனில் நிலத்தைப் பயன்படுத்து வதைப்பற்றிய புள்ளி விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :[2]

இந்திய யூனியனில் நிலப் பங்கீடு

	10 இலட்சம் ஏக்கரில்	மொத்தத்தில் சதவீதம்
காடுகள் ...	133	18·4
உழவுக்குக் கிடைக்காதது ...	122	17·0
இப்போது பயிர் செய்யப்படாதது ...	28	4·0
பயிர் செய்யப்படக்கூடிய தரிசு நிலம்	124	17·0
விதைக்கப்பட்ட நிகர இடம் ...	315	43·6
பயிர் செய்யப்படக்கூடிய நிலம் ...	467	......
வகையீடு செய்யப்பட்ட மொத்த நிலம்	722	100·0

நம் நாட்டின் மொத்தப் பூகோளப் பரப்பு 8,110 இலட்சம் ஏக்கர். ஆனால், 7,220 இலட்சம் ஏக்கருக்குத்தான் நிலத்தைப் பயன்படுத்து வதற்குரிய புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது. நிலத்தைப் பயன் படுத்துவதற்குரிய புள்ளி விவரம் கிடைக்காத 890 இலட்சம் ஏக்க ரின் பெரும்பகுதியில் மலைகள், பாலைவனங்கள், நுழைய முடியாத காடுகள் ஆகியவை உள்ளன. பயிர் செய்யப்பட்ட மொத்த நிலம் 3,430 இலட்சம் ஏக்கர். இதில், சுமார் 355 இலட்சம் ஏக்கரில் ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்கள் விளைகின்றன. முதல் திட்டத்தில் திட்டக் குழு விவசாய நிலையில் காணப்படும் இரண்டு போக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டது. அவை: (1) சென்ற 40 ஆண்டுகளில் இரண்டு பயிர்களை விளைவிப்பதால் மொத்தப் பயிர்நிலம் அதிகரித் திருந்தாலும், புதிய நிலம் சிறிதும் உழப்படவில்லை; (2) பெரும்

1 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 306-7.

2 மேலே கூறியதில் பக்கம் 322.

பகுதி நிலம் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினும், விலை அமைப்பில் உண்டாகும் மாறுதல்களால் விளைவிக்கப்படும் பயிர் களிலும் மாறுதல் உண்டாகிறது. 'கடந்த 40 வருடங்களில் ஜனத்தொகை மேலும் மேலும் பெருகிக்கொண்டு வந்திருப்பினும் தரிசு நிலங்களில் பயிர் செய்யப்படவில்லை.'[1]

நமது நிலச் சாதனங்கள் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், இந்தியாவின் மொத்தப் பரப்பில் காடுகள் 18 சதவீதப் பரப்பில் உள்ளன. பயிர்த் தொழிலுக்குக் கிடைக்காத நிலம் என்று 17 சதவீதம் பிரிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய காட்டுப் பகுதிகளைப் பாதுகாப்பதும், அதை மேலும் குறைக்காமலிருப்பதும் மிக முக்கியம் என்று நாம் முன்பே குறிப்பிட்டோம். விவசாயத் துறைக்கும் காட்டிலாகாவிற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியது விரும்பத்தக்கதும் முக்கியமானதும் ஆகும் என்பதைப் பின்னர் குறிப்பிடுவோம். விவசாயத்திற்குக் கிடைக்காத நிலம் என்று பிரிக்கப்பட்டதில் ஒரு பகுதியையேனும் காடுகளாக மாற்றுவது முடியுமா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும் என்று மட்டும் நாம் இங்குக் குறிப்பிட விரும்புகிறோம். அமெரிக்காவில் காடுகள் உள்ள நிலத்தின் பரப்பும், பண்ணைகள் உள்ள நிலத்தின் பரப்பும் ஒரே அளவாக உள்ளன. இருப்பினும், 1929-ல் ஜனாதிபதி அமைத்த சமூகத் திட்டம்பற்றிய ஆராய்ச்சிக் குழுவானது கீழ்த்தர மான விவசாய நிலத்தை அரசாங்கத்திற்குரிய காடுகளாக மாற்றிக் காடுகள் உள்ள இடங்களையும் மேலும் விருத்தி செய்வதை ஆதரித்தது. வங்காளத்தில், 1940-ல் அந்த மாகாணத்திலுள்ள காடுகளைப் பாதுகாப்பதுபற்றி அறிவிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப் பட்டது. மொத்த நிலத்தில் 17 சதவீதம் விவசாயத்திற்குக் கிடைக்காதது என்றும், மேலும் 17 சதவீதம் பயிர் செய்யப்படக் கூடிய தரிசு நிலம் என்றும் பிரிக்கப்பட்டுள்ள மொத்த 2,460 இலட்சம் ஏக்கரில், காட்டிலாகாவினால் நிருவகிக்கப்படக்கூடியதாய், எரிபொருள்களுக்காகவும் தீவனத்திற்காகவும் நிலச் சாதனங்களை ஒதுக்கிக் காடுகளாக மாற்றப்படும் நோக்கத்துடன், நிலப் பயன் பாட்டுக் கொள்கை ஒன்றை நன்கு சிந்தித்துத் திட்டமிடுவதற்கு

[1] பிரிவினையால் மொத்த நிலச் சாதனம் கீழ்வருமாறு பங்கிடப்பட்டது.

	இந்திய யூனியன் (சதவீதத்தில்)	பாகிஸ்தான் (சதவீதத்தில்)
விதைக்கப்பட்ட மொத்த நிலம் ...	84	16
இப்போது பயிர் செய்யப்படாதது ...	82	18
காடுகள் ...	94	6
விவசாயத்திற்குக் கிடைக்காத நிலம்...	76	24

(மேற்கூறியதில்-பக்கம் 12-பேராசிரியர் C. N. வக்கீல் கொடுத்திருக்கும் எண்களிலிருந்து கணக்கிடப்பட்டது).

நிறைய இடமிருக்கிறது. இந்த நிலம் முழுவதும் காடுகளை உண்டாக்குவதற்கு உதவாது என்பது உண்மையே. ஆனால், வெவ்வேறு மண்ணிற்கேற்ப, வெவ்வேறு மரங்களைத் தேர்ந்தெடுத்தால், இந்த நிலத்தில் பெரும்பகுதி காடாக மாற்றப்பட முடியும். 25 கோடி விவசாய மக்கள் சிக்கனமில்லாத நிலங்களில் பயிர் செய்து கொண்டும், நிலத்திற்கு உரமாகக்கூடிய பொருள்களை எரித்துக் கொண்டும், கால்நடைகளுக்குச் சரியான மேய்ச்சல் நிலம் இன்றியும் இருக்கும்போது, வீடு கட்டுவதற்குரிய மரத்தை வளர்த்து, விவசாய மக்களுக்குக் கருவிகள் செய்ய உதவும் மரத்தையும், விறகையும், இலைகளையும், கால்நடைகள் மேயும் இடங்களையும் கொடுத்து உதவக்கூடிய காட்டிலாகா ஒன்று வேண்டும். கிராமங்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்கு இன்றியமையாத வாய்ப்புகளை அளிக்கும் கொள்கை வேண்டும். கிராம மக்களிடமிருந்து உள்ளதையும் பிடுங்கிக் கொள்ளும் கொள்கை கூடாது.[1]

1890-லேயே 'காடுகளை ஒதுக்கியவுடன் அங்கு மக்களும் கால் நடைகளும் விலக்கப்படவேண்டும்; மக்களின் நன்மைக்காக அன்றி, அரசாங்கத்தின் நன்மைக்காகவே அவை பயன்பட வேண்டும்' என்ற தவறான கருத்தை அகற்றவேண்டியதன் அவசியத்தைச் சென்னை அரசாங்கம், ஒரு தீர்மானத்தில் குறிப்பிட்டது. 'நாட்டின் பெரும்பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள காடுகளின் முக்கிய நோக்கம், மேய்ச்சல் நிலங்கள், வீடுகட்டுவதற்கு உதவும் சிறிய மரங்கள்; உரத்திற்குரிய இலைகள், குப்பை கூளங்கள் முதலியவற்றை அளிப்பதேயாகும் என்பதை அதிகமாக வற்புறுத்தவேண்டியதில்லை, 1894-ல் இந்திய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட மற்றொரு தீர்மானம், 'அரசாங்கத்திற்குரிய காடுகள் நிருவகிக்கப்படுவதன் முக்கிய நோக்கம் பொதுமக்கள் நன்மையே' என்ற கொள்கையைக் குறிப்பிட்டது. அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களின் நன்மைக் காகவே சிறிய காடுகளும், மேய்ச்சல் நிலங்களும், புல்வெளிகளும் பாதுகாக்கப்படவேண்டும் என்று இந்திய அரசாங்கம் தன்

[1] ஒப்பிடுக: 'கிராம வாழ்க்கை பற்றி ஐரோப்பிய மகாநாடு' (ஜினிவா 1939, பக்கம் 36) ஃபிரான்ஸ்பற்றிய கட்டுரை, ஃபிரான்ஸில் காடு வளர்ப்பின் நீண்டகாலப் பலன்பற்றிக் குறிப்பிடுகையில் அவ்வறிக்கை கூறுவதாவது, 'இத்தகைய கொள்கையால் உண்டாகும் பலன்கள் (.) விலையுயர்ந்த வீடு கட்டும் மரம் விளைதல். (2) இலைகளை நீக்குதல், வெட்டுதல், மரம் விழ்த்துதல், வண்டியிலேற்றுதல் போன்றவற்றில் விவசாய மக்களுக்கு வேலையளித்தல். (3) மரச்சாமான்களைப் பழுதுபார்ப்பதற்கும் விவசாயக் கருவிகளைச் செய்வதற்கும் விவசாயிகளுக்கு வேண்டிய பல வகை மரங்களின் விலைகளைக் குறைத்தல். (4) தொழிற்சாலைகள், காகித ஆலைகள், அறுக்கும் ஆலைகள் முதலியவற்றை நிறுவுதல். (5) சிதறிக் கிடக்கும் கிராமங்களுக்கிடையே போக்குவரத்தை எளிதாக்குவதற்குப் பாதைகளை அமைத்தல், எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில் மலிவான விறகை அளிப்பதிலும், பசுஞ்சாணத்தை எருவாகப் பயன்படுத்துவதிலும் காடு வளர்த்தல் முக்கியமானது.'

தீர்மானத்தில் கூறியது. நாற்பது வருடங்கள் கழித்து விவசாயக் குழுவின் அறிக்கை, மொத்த எண்ணிக்கையில் காடுகளில் மேயும் கால்நடைகளின் சதவீதத்தைக் கீழ்வரும் அட்டவணையிலுள்ளது போலக் குறித்தது.

பம்பாய்	...	13·4	சதவீதம்
மத்திய மாகாணம், பீகார்	...	25·7	,,
சென்னை	...	5·9	,,
பஞ்சாப்	...	13·0	,,
உத்தரப் பிரதேசம்	...	2·6	,,

விவசாயக் குழுவின் அறிக்கையில் காடுகளைப்பற்றிய அதிகாரத்தைக் கூர்ந்துபார்த்தால், விவசாயிகளின் நன்மையைக் கருதியல்லாமல், போக்குவரத்துச் செலவையும், 'எரி பொருள்களை அளிக்கும் பொருளாதாரத்தையும்' கருதி, விவசாயிகளுக்குக் காட்டிலாகா தீவனங்களையும் விறகையும் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அக் குழுவின் மனத்தை அலைத்துக்கொண்டிருந்தது விளங்கும். இந்திய அரசாங்கத்தின் காடுகளைப்பற்றிய கொள்கை அறிவிக்கப்பட்டு ஐம்பது வருடங்களாகியும், மக்களுக்காகக் காடுகள் அல்ல, காடுகளின் நிதிக்காகவே மக்கள் என்ற வியாபார மனப்பான்மை காட்டிலாகாவைவிட்டு அகலவில்லை.

ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் வேலைபற்றி சர். ஜான் ரஸ்ஸல் 1937-ல் வெளியிட்ட அறிக்கை, 'பயிர் செய்யப்படக்கூடிய தரிசு நிலத்தில்' அதிக மரங்களைப் பயிரிடுவதுபற்றியும், தோட்டங்களில் எத்தகைய மரங்களைத் தீவனத்திற்காகப் பயிரிடலாம் என்று ஆராய்வதுபற்றியும் குறிப்பிட்டது.

நாட்டின் பொருளாதாரத்தில் காடுகளுக்குள்ள முக்கியத்துவத்தையுணர்ந்து திட்டக் குழுவானது, 'சமன் செய்யப்பட்டதும், ஒன்றுக்கொன்று துணையானதும் ஆகிய முறையில் நிலத்தைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தரிசு நிலத்தை உடனடியாக ஆராய்தல் வேண்டும்' என்று யோசனை கூறியது.[1] மூன்று வழிகளில் காடுகள் உள்ள நிலங்களைப் பெருக்குவதற்கு அதற்கு யோசனை கூறியுள்ளது: (அ) நில அரிப்பைத் தடுப்பதற்குக் காடுகளை வளர்த்தல்; (ஆ) மரங்கள் உள்ள நிலத்தை அதிகப்படுத்துவது; (இ) விறகையும் தீவனத்தையும் அதிகம் பெறுவதற்குக் கிராமங்களில் தோட்டங்களை நிறுவுதல். 1952 மே 15ஆம் தேதியிட்ட

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 285 முதல்.

காட்டுக் கொள்கைத் தீர்மானம் ஒரு புதிய திருப்பத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. 'இந்தியா முழுவதிலும் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக வைக்கப்படவேண்டும், காடுகளோ மேல் மண்ணோ மறைந்துவிடாமல் இருப்பதற்குப் பாதுகாப்பாக இன்னும் அதிக சதவீத நிலம் (60%) இமாலயப் பகுதிகளில் பாதுகாப்பைக் கருதிக் காடுகளாக வைக்க வேண்டும்.' இதுபோலவே, நில அரிப்புக்கிடமாக உள்ள தக்காணம் முதலிய மலைப் பகுதிகளிலும் செய்யவேண்டும். சம நிலங்களில், நிலம் சமமாகவும், நில அரிப்பு அதிகம் இல்லாமலும் இருப்பதால், இது 20 சதவீதமாக இருக்கவேண்டும். திட்டக் குழு கூறுவது போலக் காட்டுச் சாதனங்களின் நீண்ட கால அபிவிருத்திக்காகவும், உடனடியான எதிர் காலத்தில் அதிகமாகத் தேவைப்படும் மரத்திற்காகவும் காட்டுக் கொள்கை தக்கபடி மாற்றியமைக்கப்பட வேண்டும்.[1]

விவசாய நெருக்கடியின் காரணமாக விவசாயத்திற்கு உதவாத ஆறுகளின் கரைகளிலும், மற்றச் சௌகரியமான இடங்களிலும், மரங்கள் உள்ள நிலத்தை அதிகமாக உண்டாக்கவேண்டும். கோஷங்களாலும் சொற்பொழிவுகளாலும் ஆடம்பரமாக மரங்களை நடுவதன்றி (பிறகு இவற்றைக் கவனிப்பவர்கள் எவரும் இருப்பதில்லை) நன்குகத் திட்டமிடப்பட்ட ஓர் அமைப்பின் பகுதியாக இத் தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றுவது மிகவும் அவசியம்.[2]

இப்போது பயிர் செய்யப்படாத நிலம்

1949–50-ல் மொத்த 615 இலட்சம் ஏக்கருள்ள நிலத்தில், 580 இலட்சம் ஏக்கர் அல்லது சுமார் 9 சதவீதம் விவசாயப் புள்ளி விவரத்தில் 'இப்போது பயிர் செய்யப்படாத நிலம்' என்று பதிவு செய்யப்பட்டிருப்பது ஒன்றே விவசாய உற்பத்தியில் இந்தியா எவ்வளவு பின் தங்கியிருக்கிறது என்பதைக் காட்ட வல்லது. பழங் காலத்தில், மண் அமைப்பில் உள்ள இரசாயனமும் உயிர் நூல் தன்மையும்பற்றிய விஞ்ஞானமும் வளர்ச்சியடையாமல் இருந்தபோது, செயல்முறை விவசாயத்தினுல் பெறப்பட்ட அனுபவ வழி அறிவைக் கொண்டு மண்ணுக்கு ஓய்வு கொடுப்பதனுல் மட்டுமன்றிப் புதிய

[1] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 299.

[2] 'நிலச் சாதனங்களை அறிவுக்கொத்த முறையில் பயன்படுத்துவதற்கு உஷ்ண மண்டலங்களில் நிலத்தைப் பயன்படுத்துதல்' என்பதைப் பார்க்க; F.A.O. Development Paper No. 17, ஜனவரி 1952.

பயிர்களை விளைவிப்பதாலும் யோசனையோடு பயிர்களை மாற்றுவதாலும் நிலத்தின் செழிப்பு பாதுகாக்கப்படும் என்பதை விவசாயிகள் உணர்ந்தார்கள். இன்று, மேனுடுகளில் பயிர் செய்யப்படாத நிலம் இருந்த இடத்தில் தானியம், உருளைக்கிழங்கு, மற்றக் கிழங்குகள் ஆகியவற்றை இடையிடையே வரிசை வரிசையாக உழுது பயிர் செய்கிறார்கள். புஞ்செய் நிலங்களில் நிலத்தின் செழிப்பைப் பாதுகாப்பதற்கு வைக்கோல் பயிர் செய்யப்படுகிறது. உதாரணமாக, வட அமெரிக்காவின் மத்திய சமவெளிகளில் அல்ஃபால்ஃபா (Alfalfa) விதைகளைப் பெறுவதற்காக, வரிசை வரிசையாகப் பயிர் செய்யப்படும் முக்கியப் பயிராக உள்ளது. உயிர் வாழ்வது கருதிப் பயிரிடுவதால், நம் உற்பத்தி சாதனங்கள் வீணாக்கப்படுகின்றன. ஏனென்றால், உயிர் வாழ்வதற்காக விவசாயி எல்லா வகையான நிலங்களிலும் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. பிறகு நிலத்தைப் பயிர் செய்யாமலே போட்டுவிட்டு அதன் வளத்தைப் பாதுகாக்க முயற்சி செய்கிறான். திட்டக் குழுவானது, '1940 தொடங்கி சில ஆண்டுகள் வரையில் பயிர் செய்யப்படாத நிலத்தின் பரப்பு 1919-20-ல் இருந்த அளவாகவே இருந்தது. பிறகு சிறிது அதிகரித்தது. குறிப்பாகப் பருத்தி விளையும் பகுதிகளில் திடீரென்று பருத்தி நிலம் குறைக்கப்பட்டதாலோ என்னவோ, ஒரு பகுதி பயிர் செய்யப்படாமல் விடப்பட்டது'[1] என்பதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு, நவீன விவசாய விஞ்ஞான முறைப்படி பயிர் செய்யப்படாத நிலங்களையும், அவற்றைப் பயன்படுத்துவதைப்பற்றியும் ஒன்றுமே கூறவில்லை. எனினும், 1954-55ல் மொத்தமுள்ள 7,220 இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்படாத நிலம் 280 இலட்சம் ஏக்கராகக் குறைக்கப்பட்டது; அதாவது மொத்தத்தில் 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது என்பது மகிழ்ச்சிக்குரியது.

பயிர் செய்யப்படும் நிலத்தின் பிரிவுகள்

1953-54-ல் பயிர்கள் விளைவிக்கப்பட்ட மொத்த நிலம் 35,17,05,000 ஏக்கர். 1949-ல் இது 30,18,76,000 ஏக்கர். இவை பின்வருமாறு பிரிக்கப்பட்டன :[2]

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்,' பக்கம் 154.

[2] 'இந்திய விவசாயப் புள்ளி இயல்' 1949-50, Vol. I, (1952), பக்கம் 3-4 1953-54 (1956), பக்கம் 9-11.

(ஆயிரம் ஏக்கரில்)

		1949-50	1953-54
உணவுத் தானியங்கள்	...	2,35,573	2,72,325
சர்க்கரை	...	3,702	3,617
ஊறுகாய் வகைகளும் நறுமணப் பொருள்களும்	...	2,459	2,967
பழங்களும் காய்கறிகளும்	...	5,003	5,765
மற்ற உணவுப் பயிர்கள்	...	1,645	2,034
மொத்த உணவுப் பயிர்கள்	...	2,48,382 (82·8%)	2,86,708 (81·5%)
நார்கள்	...	13,785	20,144
எண்ணெய் விதைகள்	...	24,275	26,886
மருந்துகள், மயக்க மருந்துகள்	...	1,973	2,089
தீவனப் பயிர்கள்	...	11,171	13,812
அவுரி	...	19	6
உணவல்லாத மற்றப் பயிர்கள்	...	2,271	2,060
மொத்த உணவல்லாத பயிர்கள்	...	53,494 (17·8%)	64,997 (18·5%)
பயிர் செய்யப்பட்ட மொத்த நிலம்		3,01,876	3,51,705

(1) முதல் உலகப் போர் தொடங்குவதற்குச் சற்று முன்பும், (2) பெரிய மந்தநிலை தோன்றுவதற்கு முன்புள்ள 1927-28 ஆகிய காலமும், (3) 1940-41 ஆகிய காலமும் என்று சிறப்பான காலப் பகுதிகளில் பிரிட்டிஷ் இந்தியாவில் பயிர் செய்யப்பட்ட நிலத்தின் பிரிவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், கீழ்க்கண்ட சுருக்கமான முடிவுகள் கிடைக்கும் :

பிரிட்டிஷ் இந்தியாவில் பயிர் செய்யப்பட்ட நிலத்தின் சதவிதம்

	உணவுத் தானியங்களும் மற்ற உணவுப் பயிர்களும்	உணவல்லாத பயிர்கள்
1913-14	81·9	18·1
1927-28	80·9	19·1
1940-41	80·0	20·0

இந்த முப்பதாண்டுகளில் உணவுத் தானியம் பயிர் செய்யப்பட்ட நிலங்கள், தீவனங்கள் பயிர் செய்யப்படும் நிலங்களாக மாற்றப்பட்டன. அதாவது, அதுவரை உணவுத் தானியம் பயிர் செய்யப்பட்ட நிலம் இனி அதற்கு உதவாது என்று, கால்நடைகளை மேய்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதைவிடப் பெரிய விஷயம் என்னவென்றால், உணவுப் பயிர்கள் விளையும் நிலம், பருத்தி, சணல் போன்ற வாணிபப் பயிர்கள் விளையும் நிலமாக மாற்றப்பட்டது. கீழ்க்கண்ட அட்டவணையில் இதைக் காணலாம்:

10 இலட்சம் ஏக்கரில் பரப்பு

	உணவுப் பயிர்	உணவல்லாத பயிர்	பருத்தி, சணல்
1913-14	190	42	19
1927-28	192	45	18
1939-40	197	47	25
1940-41	198	50	29

1913-14-ஐ அடிப்படையாகக் கொண்டு, பரப்பின் அதிகரிப்பைக் காட்டும் குறியீட்டெண்கள்.

1913-14	100	100	100
1927-28	101	107	95
1939-40	104	112	132
1940-41	104	119	153

இந்த முப்பது வருடங்களில் உணவுப் பயிர் விளையும் பரப்பு 4 சதவீதம் அதிகரித்தது என்றும், பருத்தி, சணல் விளையும் பரப்பு 53 சதவீதம் அதிகரித்தது என்றும் இந்த அட்டவணையிலிருந்து தெரிகிறது. போர்க் காலத்தில் பர்மாவிலிருந்து நமக்கு வரும் அரிசி நின்றுவிட்டபோது, பருத்தி, சணல் போன்ற வாணிபப் பயிர்கள் விளைவிக்கப்பட்ட நிலங்களில் உணவுப் பயிர்களை விளைவிக்குமாறு அரசாங்கம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

1937-ல் சர் ஜான் ரஸ்ஸல் கூறியதாவது: ‘நீர்ப்பாசனம் பெறும் நிலப் பரப்பு அதிகரித்ததற்கு ஏற்பப் பருத்தி, கரும்பு, கோதுமை விளையும் பரப்பு அதிகரித்திருக்கிறது. ஜனத்தொகை உயர்வுக்கேற்பவும் இந்த அதிகரிப்பு நிகழ்ந்திருக்கிறது. இதற்கு மாறாக, உணவுப் பயிர் விளையும் பரப்பு மிகக் குறைவான அதிகரிப்பையே காட்டுகிறது. கொடுக்கப்பட்ட எண்களை ஒத்துக்கொள்வ

தாயின், ஜனத்தொகையில் தலைக்கு பரப்புக் குறைந்துவிட்டது.'[1] விவசாயத்தின் இந்தப் போக்கில் தேசீயக் கொள்கை எதுவும் இன்மை புலப்படும். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவானது பன்னாட்டுச் சந்தையில் நுழைந்ததால், விவசாய உற்பத்தியில் மாறுதல்கள் உண்டாயின. அம் மாறுதல்களால் உணவுப் பயிர்களுக்குப் பதில் பணப் பயிர்கள் விளைவிக்கப்படுவதற்குத் தூண்டுதல் ஏற்பட்டது. அரசாங்க இலாகாக்களின் விவசாய ஆராய்ச்சியாலும், சோதனைப் பண்ணைகளாலும் புதிய பணப் பயிர்கள் புகுத்தப்பட்டும், அவற்றின் தரம் உயர்த்தப்பட்டும் வந்து, அதே சமயத்தில் உணவுப் பயிர்கள் புறக்கணிக்கப்பட்டதால், இந்தப் போக்கு மேலும் வலுவடைந்தது. இந்த விரும்பத்தகாத போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை. போரின் கடுமையால் நமது ஆபத்தான உணவு நிலைமையும், நமது சிறிய இழைப் பருத்திக்கு மார்க்கெட்டுகளைத் தேடும் பிரச்சினையும் உண்டானபோதுதான் நாம் அண்மையில் விழித்துக்கொண்டோம். பருத்திக்குப் பதிலாகப் பயிர் செய்யப்பட்ட உணவுத் தானியங்கள் கம்பும் தினையுந்தான். அரிசியின் விலை உயர்ந்துவிட்டதால்தான் பெரும்பாலும் சணல் விளையும் நிலத்தில் அரிசி விளைவிக்கப்பட்டது.

பொதுவாகக் கூறப்போனால், இந்திய யூனியனில் பயிர்முறை மாறவில்லை. 82 சதவீதம் உணவுப் பயிர்களும் 18 சதவீதம் உணவல்லாத் பயிர்களுமாக இருந்துவருகிறது. பிரிவினைக்குப் பிறகு, சணலும் பருத்தியும் விளையும் நிலத்தில் பெரும்பகுதி பாகிஸ்தானுக்கு மாற்றப்பட்டுவிட்டதால், பணப் பயிர்கள் விளையும் நிலத்தின் பரப்புக் கணிசமாகக் குறைந்திருக்கவேண்டும். ஆனால், பாகிஸ்தானோடு நமக்குள்ள வேறுபாடுகளின் காரணமாகப் பருத்தி, சணல் ஆகியவற்றில் நாம் தன்னிறைவுடன் இருக்க விரும்புவதால், இந்த இரண்டும் விளையும் பரப்பு மிகவும் அதிகரித்துவிட்டது. 1947—48 முதல் 1953—54 வரையில் உள்ள காலத்தில் பருத்தி விளையும் நிலம் 98,12,000 ஏக்கரிலிருந்து 1,75,19,000 ஏக்கராகவும், சணல் விளையும் நிலம் 6,54,000 ஏக்கரிலிருந்து 12,69,000 ஏக்கராகவும் உயர்ந்தது. இவ்வாறு நிகழாமல் இருந்திருந்தால், இந்த இரண்டும் விளைவிக்கும் அதிகப்படியான நிலம் உணவு உற்பத்திக்குப் பயன்பட்டிருக்கும்.[2] குறுகிய காலத்தில் மேலும் அதிக நிலத்தைப் பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்துவது முடியக்கூடிய செயலாகத் தோன்றவில்லை. ஆகவே, பணப் பயிர்

[1] மேலே கூறியதில், பக்கம் 7.

[2] 1952-ல் பணப்பயிர் விளைவிக்கப்படும் போக்கு உண்டாயிற்றென்பதைத் திட்டக் குழு, ஓர் அடிக்குறிப்பில் ஒத்துக்கொள்கிறது ('முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 209).

விளையும் நிலங்களை உணவு விளைவிப்பதற்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமானுல், நிலத்தின் தலா உற்பத்தித் திறனை அதிகரிப்பது தவிர வேறு வழியில்லை. பணப் பயிர்களை நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து, அதனுல் கிடைக்கும் அந்நியச் செலாவணியைக் கொண்டு மலிவான உலக மார்க்கெட்டில் உணவை வாங்கலாம் என்ற இப்போதுள்ள கருத்துத் தவறுனது. ஏனெனின், நமது பணப் பயிர்களுக்கு உத்தரவாதமான மார்க்கெட்டு ஒன்றும் கிடையாது; உணவு அரசியல் கருவியாக இருப்பதால், போர்க் காலத் தந்திரங்களின்படி உணவில் தன்னிறைவு பெறுவதற்கு முதன்மையளித்து, நமது பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்குவது இன்றியமையாதது. இவ்வாறு, நாம் நம் நிலத்தைப் பயன்படுத்தும் கொள்கையை மாற்ருவிட்டால் (பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த கொள்கையை மாற்ருவிட்டால்), எதிர் காலத் தலைமுறையினருக்கு நாம் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியவர்களாவோம்.[1]

விவசாய உற்பத்தி : அரிசி

இந்திய மக்களின் முக்கிய உணவு அரிசி. அது இந்தியாவில் முக்கிய விளைபொருள்களுள் ஒன்று. 1936–52-ல் அரிசி விளையும் பரப்பும் உற்பத்தி அளவுகளும் கீழ்க்கண்டவாறு வேறுபட்டன.[2]

	சராசரிப் பரப்பு (ஆயிரம் ஏக்கரில்)	சராசரி உற்பத்தி (ஆயிரம் டன்னில்)
1936—39	58,665	21,199
1947—48	64,415	21,244
1948—49	72,485	22,597
1949—50	75,414	23,170
1950—51	75,975	20,295
1951—52	75,595	20,767

[1] ஒப்பிடுக: ''ஹார்வார்டைச் சேர்ந்த பேராசிரியர் J. D. பிளாக் சில காலத்திற்கு முன்பு மிக நன்ருகக் கூறியதுபோல, பிரத்தியட்ச நோக்கை நாம கைக்கொள்வது மிகவும் நல்லது. 'ஒரு நாட்டிலிருந்து மற்ருெரு நாட்டிற்கு அதிக உணவு சென்றுகொண்டுதான் இருக்கிறது. ஆனுல், சாதனங்களுக்கேற்ப ஜனத்தொகையைச் சரி செய்வது ஒவ்வொரு நாடும் தானே செய்ய வேண்டிய செயல். ஒவ்வொரு நாடும் தானே ஒரு பரிகாரத்தைக் காண வேண்டும்.' உலகத்தில் ஒவ்வொரு நாடும் சிக்கனம் என்னும் நல்ல பண்பைப் பயிலவேண்டும். உள்நாட்டுச் சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தன்னுல் இயன்றதையெல்லாம் செய்யவேண்டும்.'' 'நமது அபிவிருத்தியடையாத உலகம்' Dudley Stamp, 1953, பக்கம் 149.

[2] 'India, 1953', Government of India, p. 248.

இந்தப் பதினாறு ஆண்டுகளில் பரப்பு 586 இலட்சம் ஏக்கரிலிருந்து 756 இலட்சம் ஏக்கராக உயர்ந்த போதிலும், உற்பத்தி 212 இலட்சம் டன்னிலிருந்து 208 இலட்சம் டன்னாகக் குறைந்துவிட்டது. அரிசி முக்கியப் பயிராக விளையும் இராச்சியங்கள் மேற்கு வங்காளம், பம்பாய், பீகார், ஒரிசா, சென்னை. மே முதல் ஆகஸ்டு வரையில் விதைக்கும் வேலை நடைபெறும். பயிர் டிசம்பர், ஜனவரியில் சாகுபடி செய்யப்படும். ஒவ்வோர் இராச்சியமும் தன் உற்பத்தியில் பெரும் பகுதியைத் தானே நுகர்கிறது வங்காளமும் தென்னிந்தியாவும் தங்கள் உற்பத்தியில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்கின்றன. அவை, பர்மாவிலிருந்து கீழ்த்தரமான அரிசியை இறக்குமதி செய்து வந்தன. மொத்தத்தில் இந்தியா, தான் உற்பத்தி செய்யும் அளவைவிட அதிக அரிசியை நுகர்கிறது. அரிசி இறக்குமதியில் பெரும்பகுதி பர்மாவிலிருந்து வந்தது. 1939-40-ல் பர்மாவிலிருந்து இறக்குமதி $22\frac{1}{2}$ இலட்சம் டன்னாக இருந்தது.

உலகத்தில் அரிசி உற்பத்தி செய்யும் பெரிய நாடுகள் இந்தியா, பர்மா, சீனா, ஜப்பான், தாய்லாந்து ஆகியவை. இவற்றில், இந்தியா முதல் வரிசையில் நிற்கிறது. 1951-ல் இந்தியாவின் உற்பத்தி 3,20,00,000 மெட்ரிக் டன்கள்; பர்மா, 55,00,000; ஜப்பான் 1,13,02,000; தாய்லாந்து 72,50,000 டன்கள் உற்பத்தி செய்தன. உணவு விவசாய நிறுவனத்தின் ஆண்டுப் புத்தகத்திலிருந்து தொகுக்கப்பட்ட இந்த அட்டவணை, அரிசி உற்பத்தியைப்பற்றி மேலும் விளக்குகிறது.[1]

இந்தியாவில் பரப்பிலும் உற்பத்தியிலும் வேறுபாடு

	அரிசி விளையும் பரப்பு 1,000 ஹெக்டேரில்	குறியீட்டெண்	மெட்ரிக் டன்களில் உற்பத்தி	குறியீட்டெண்
1936—38	25,081	100·0	34,882	100.0
1949	30,519	121·7	35,312	103·3
1950	30,746	122·6	30,930	90·8
1951	29,782	118·7	31,649	92·6

1936-51 ஆகிய குறுகிய காலத்தை எடுத்துக் கொண்டாலுங்கூட, அரிசி விளையும் பரப்பு 18·7 சதவீதம் உயர்ந்திருந்தாலும் உற்பத்தி 7·4 சதவீதம் குறைந்தது. 1953-ல் நிலைமை கணிசமாக விருத்தியடைந்தது. அப்போது பரப்பு 3,11,73,000 ஹெக்டேராகவும்,

[1] Year Book of Food and Agricultural Statistics, 1952, Vol. VI, Part I, Production, F.A.O., United Nations, Rome, 1953.

உற்பத்தி 4,20,04,000 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தன. எனினும், 1954-ல் பரப்பிலும் உற்பத்தியிலும் குறைவு உண்டாயிற்று. 1955-லும், 1956-லும் தொடர்ச்சியான முன்னேற்றம் இருந்துவந்திருக்கிறது. 1956-ல் பரப்பு 3,16,35,000 ஹெக்டேர்கள் ; உற்பத்தி 4,24,90,000 மெட்ரிக் டன்கள்.[1]

மக்களின் முக்கிய உணவு அரிசி. உணவுப் பயிர்கள் விளையும் மொத்த 24,80,00,000 ஏக்கரில், 7,10,00,000 ஏக்கர் அரிசி விளையும் நிலமாக உள்ளது. எனினும், விவசாய இலாகாவும் ஆராய்ச்சி நிலையங்களும் கோதுமை, பருத்தி ஆகியவற்றையே தொடர்ந்து பேணி வருகின்றன. அண்மைக் காலம் வரையில் அரிசி கவனிக்கப்படவில்லை. சர் ஜான் ரஸ்ஸல், அரிசியின் தரத்தைப்பற்றி அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டார். தரம் என்னும் சொல் இரு பொருள்களையுடையது என்று அவர் கூறுகிறார். மார்க்கெட் தரத்தை, ஏதாவது வியாபாரத்திற்கு விரும்பப்படுவதை அது குறிப்பிடலாம். ஊட்டத்தின் தரம் அல்லது மக்களின் உணவாவதற்குரிய மதிப்பு என்றும் அது பொருள்படலாம். அரிசியில் உள்ள ஊட்டத்தின் மதிப்புத்தான் மிகவும் முக்கியமான குணம். அரிசியின் தரத்தைப்பற்றி இரசாயன முறையில் ஆராய்ச்சியை ஊட்ட நிபுணர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று அவர் சிபாரிசு செய்தார். அதை அவர்களுடைய ஆற்றலுக்குள் கொண்டுவர வேண்டும் அல்லது கைவிட்டுவிட வேண்டும் என்றும் அவர் கூறினார். விவசாய ஆராய்ச்சிக் குழுவிற்கு, சர் ஜான் ரஸ்ஸல் ஓர் ஏக்கர் நிலத்தில் விளையக்கூடிய அரிசியின் அளவு குறைவது பற்றி மாதிரி ஆராய்ச்சிகள் நடத்தி, இவ் விஷயத்தில் தெளிவான தகவல்களை அறியவேண்டும் என்று அறிவுரை கூறினார்.[2]

யுத்தப் பிற்காலத்தில் எல்லா ஆசிய நாடுகளிலும் அரிசி விளையும் பரப்பிலும், அரிசி விளைச்சலிலும் குறைவு ஏற்பட்டது. உணவு, விவசாய நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட ஓர் அரிசி ஆராய்ச்சிக் குழு, அரிசி கலப்பினத் திட்டம் (Rice Hybridisation Project)[3]

[1] மேற்கூறியது (1957). ரோம், 1958.

[2] முற்கூறிய நூல், பக்கம் 24.

[3] இந்தியாவில் ஓர் ஏக்கரில் அதிக உற்பத்தி செய்வதற்கு ஜப்பானிய நெல்லையும், இந்திய நெல்லையும் கலந்து ஒரு புதிய கலப்பினத்தை உண்டாக்குவது இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று. 1953-ல் 4,00,000 ஏக்கரில் ஜப்பானிய முறைப்படி மிகுதியாக உற்பத்தி செய்யும் வேலை தொடங்கப்பட்டது. இதில் நல்ல பலனும் கிடைத்தது. அதற்கு முன் ஏக்கருக்கு 615 முதல் 1,200 பவுண்டாக இருந்த விளைச்சல், இதனால், 3,500 முதல் 8,000 பவுண்டுகள் வரையில் ஆயிற்று. இந்த முறையை மேலும் அதிக நிலத்தில் புகுத்தத் தீவிரமான முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

ஒன்றைத் தொடங்கியிருக்கிறது. 1946-ல் நிறுவப்பட்ட கட்டாக்கில் உள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையத்தில், 1952-ல் அரிசி தயாரிப்பில் ஒரு பன்னாட்டுக் கழகம் நடத்தப்பட்டது. முதல் திட்ட காலத்தில், 1951-52-ல் இருந்த 210 இலட்சம் டன் அரிசி உற்பத்தியானது, 1954—55 ல் 242 இலட்சம் டன்னாக உயர்ந்தது; 1955-56-ல் 255 இலட்சம் டன்னாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், திட்டக் குழு கூறுவதுபோல, 'ஒரே ஒரு சாதகமான வருடத்தில் தவிர, மற்றச் சமயங்களில் மொத்தத்தில் அரிசியில் நாம் எதிர்பார்த்தது நடக்கவில்லை.[1]

கோதுமை

இந்தியாவில் அரிசிக்கு அடுத்தபடியாக முக்கிய உணவுப் பயிர் கோதுமை. இது கிழக்குப் பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பம்பாய், மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது. அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் அடுத்தபடியாகக் கோதுமை உற்பத்தியில், பிரிக்கப்படுவதற்கு முன் இருந்த இந்தியா உலகில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது. பிரிவினைக்குப் பிறகு இந்திய யூனியன் பற்றாக்குறை நாடாக மாறிவிட்டது. இப்போது நாம் உலகத்தில் ஆறாவதாக இருக்கிறோம். ஏனெனின், அதிக உற்பத்தித் திறனுடைய 40 இலட்சம் ஹெக்டேர் கோதுமை விளையும் நிலம் பாகிஸ்தானுக்கு உரியதாகிவிட்டது. 1936—52-ல் கோதுமை விளையும் பரப்பும் உற்பத்தியும் கீழ்க்கண்டவாறு மாறுதலடைந்தன:[2]

	சராசரிப் பரப்பு (1,000 ஏக்கரில்)	சராசரி உற்பத்தி (1,000 டன்களில்)
1936-39	26,153	7,277
1947-48	20,843	5,570
1948-49	22,342	7,650
1949-50	24,114	6,290
1950-51	24,134	6,374
1951-52	23,235	5,768

உணவு, விவசாய ஆண்டுப் புத்தகம், 1952 கோதுமை உற்பத்தியைப் பற்றிக் கீழ்க்கண்ட எண்களைத் தருகிறது.

[1] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 257.

[2] 'இந்தியா 1953'.

	1,000 ஹெக்டேர்களில் பரப்பு	குறியீட்டெண்	1,000 மெட்ரிக் டன்களில் உற்பத்தி	குறியீட்டெண்
1934–38 (சராசரி)	10,802	100·0	7,411	100·0
1949 ...	9,041	83·7	5,741	77·3
1950 ...	9,758	90·3	6,391	86·4
1951 ...	9,767	90·4	6,476	87·4

1934—38 முதல் 1951 வரை 16 ஆண்டுகளில், ஏக்கர் அல்லது ஹெக்டேர் அலகுகளில், அலகு ஒன்றுக்குச் சராசரி விளைச்சல் மிகவும் குறைந்துவிட்டதென்பதை ஐயத்திற்கிடமின்றி, இந்த எண்கள் தெரிவிக்கின்றன. எனினும், அடுத்த ஐந்து வருடங்களில் நிலைமை முன்னேறியிருப்பதாகத் தெரிகிறது. 1956-ல் பரப்பு 1,22,97,000 ஹெக்டேர்களாகவும், உற்பத்தி 87,07,000 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தது.[1] இதே காலத்திற்குரிய எண்களை இந்திய அரசாங்கத்தின் 'இந்தியா 1953' என்ற உத்தியோகப் பூர்வமான நூலில் கண்டபடி எடுத்துக்கொண்டால், 1936—39-க்கு ஓர் ஏக்கருக்குச் சராசரிக் கோதுமை விளைச்சல் 623 பவுண்டு; 1951—52 ல் அது 556 ஆகக் குறைந்தது.[2] முதல் திட்ட காலத்தில், 1951—52-ல் 61 இலட்சம் டன்னுக இருந்த கோதுமை விளைச்சல், 1954-55-ல் 85 இலட்சம் டன்னுக உயர்ந்தது. 1955—56-க்கு மதிப்பீடு மாறவில்லை.

தினை வகைகள்

தினைகளில் பலவகையுண்டு. அவற்றுள் முக்கியமான ஒன்ருகிய கம்பு, சென்னை, பம்பாய், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஹைதராபாத் ஆகியவற்றிலும், தினை பம்பாய், கிழக்குப் பஞ்சாப்,

[1] F.A.O. Year Book of Food and Agricultural Statistics, 1955.

[2] மத்திய அரசாங்கத்தின் உணவு அமைச்சர், இந்திய அரசாங்கத்தின் உத்தியோகப் பூர்வமான வெளியீடுகளில் அளிக்கப்பட்டுள்ள எண்களைத் தவறு என்று கூறுகிருர். திட்டக் குழுவும் தன் அறிக்கையில், 'நிலத்தின் செழிப்பைக் காட்டும் அளவாக, வெவ்வேருண்டுகளில் கிடைத்த விளைச்சல்களை ஒப்பிடுவதற்கு இவற்றை அதிகம் நம்புவது கூடாது' என்று கூறுகிறது. விவசாய இலாகா அளிக்கும் புள்ளி விவரங்களைப் போலவே, மாதிரி ஆராய்ச்சிகளும் (Sample Surveys) நம்பத்தகாதவையாக இருக்கலாம். புதிதாக வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள், சில மாதங்கள் பயிற்சி பெற்றதும், மிகத் துல்லியமாக விஞ்ஞான ரீதியான விவரங்களைப் பெற்றுத் தருவதற்காக நியமிக்கப்படுகிருர்கள். ஆனுல், பத்தாண்டுகள் கழித்து, இப்போது கிராமக் கணக்கர்கள் இருப்பதுபோல, இவர்களும் மிகவும் குறைபாடுடையவர்கள் என்று கூறப்படலாம். முறைகள் குறையுடையவையல்ல; இந்த முறைகளைக் கையாளுபவர்கள் குறையுடையவர்களாக இருக்கிருர்கள்.

உத்தரப் பிரதேசம், சென்னை, ஹைதராபாத் ஆகியவற்றிலும் பயிரிடப்படுகின்றன. இவை இரண்டும் உணவையும் தீவனத்தையும் அளிக்கின்றன. இவற்றின் தானியம் மக்களுக்கு உணவாகவும், தண்டுகளும் இலைகளும் கால்நடைகளுக்குத் தீவனமாகவும் உதவுகின்றன. கம்பும் தினையும் விளையும் நிலங்கள் முறையே 380 இலட்சம், 220 இலட்சம் ஏக்கர் பரப்புடையவை. கம்பு ஆண்டுக்கு 60 முதல் 70 இலட்சம் டன் வரை உற்பத்தியாகிறது; தினை 20 முதல் 30 இலட்சம் டன் வரையில் விளைகிறது. சிறு தினை வகைகள் 110 இலட்சம் ஏக்கரில் 18 இலட்சம் டன் விளைகின்றன. 'இந்தியா 1953' ஓர் ஏக்கருக்குக் கம்பும் தினையும் எவ்வளவு விளைகின்றன என்பதை ஒப்பிட்டுக் காட்டுகிறது:

	சராசரி 1936-39	1947-48	1948-49	1949-50	1950-51	1951-52
கம்பு	437	369	305	338	315	322
தினை	351	303	246	273	256	221

1956-57-ல் கம்பும் தினையும் விளைந்த மொத்தப் பரப்பு முறையே 410 இலட்சம் ஏக்கரும், 270 இலட்சம் ஏக்கரும்; உற்பத்தி முறையே 70 இலட்சம், 30 இலட்சம் டன்கள்.

பார்லி

1954-55-ல் பார்லி பயிரிடப்பட்ட நிலம் 86 இலட்சம் ஏக்கர். 1936-39-ல் 65 இலட்சம் ஏக்கர்தான். இது முக்கியமாக உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் விளைகிறது. சீனா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குப் பிறகு நான்காவதாகப் பார்லி உற்பத்தியில் இந்தியா இடம் பெறுகிறது. இதற்கு உள்நாட்டுத் தேவை அதிகமாயிருப்பதால், இது அதிகம் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. இன்னும் சில காலம் இப்படியேதான் இந்த ஏற்றுமதிநிலை இருக்கும். இந்தியாவில் பார்லி, தினை, கம்பு ஆகியவை ஏழைகளின் உணவாகும். ஆண்டுக்கு 20 இலட்சம் டன் பார்லி உற்பத்தியாகிறது. அரிசியிலும் தினை வகைகளிலும் இருப்பதைவிட இதில் புரதச் சத்தும் (புரோட்டீன்) கொழுப்பும் அதிகம் இருக்கிறதாகக் கூறப்படுகிறது.

சோளம்

பீகார், உத்தரப் பிரதேசம், கிழக்குப் பஞ்சாப் ஆகிய இடங்களில் சோளம் விளைகிறது. இது முக்கியமாக மக்களாலும் கால்நடை

களாலும் உபயோகிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இப் பயிரில் 75 சதவீதம் பன்றிகளுக்கும் குதிரைகளுக்கும் உணவாகிறது. ஆனால், இந்தியாவில் இதே அளவு மக்களுக்கு உணவாகிறது; இதன் இலைகளும் தட்டைகளும் பிராணிகளுக்கு அளிக்கப்படுகின்றன. 1954-55-ல் சோளம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த இடம் 90 இலட்சம் ஏக்கர்; உற்பத்தி 30 இலட்சம் டன். 1948-1949-ல் உணவுப் பஞ்சம் உண்டானபோது சோளம் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டது; மொத்த இறக்குமதி முறையே 28 இலட்சம், 14 இலட்சம் மெட்ரிக் டன்கள்.

பருப்புகள்

மக்களின் உணவில் பருப்புகள் முக்கியமானவை. ஊட்டம் கருதி அவை அதிக மதிப்புடையவை. இவற்றால் நம் உணவு சமன் செய்யப்படுகிறது. இவை அரிசியில் இல்லாத புரதச் சத்தை அளிக்கின்றன. அரசாங்க இலாகாவோ, ஆராய்ச்சிக் குழுவோ பருப்புகளைப்பற்றி ஆராயும் திட்டங்களை மேற்கொள்ளவில்லை என்றும், இவை புரதச் சத்தை அளிப்பதில் முக்கியமானவையாகையால், 'ஊட்ட நிபுணர்களுடன் ஒரு மகாநாடு நடத்தி, பயன்தரும் முறையில் அதிக ஆராய்ச்சி செய்ய முடியுமா? அப்படியானால், எந்த வகையான ஆராய்ச்சி செய்யவேண்டும்?' என்று கண்டுபிடிக்க வேண்டுமென்று சர் ஜான் ரஸ்ஸல் விரும்பினார். மேலும், பருப்புகள் நிலத்தைச் செழிப்பாக்கி, மண்ணுக்கு வேண்டிய அங்ககப்பொருளை அளிக்கிறது. மாற்றுப் பயிர் செய்வதில் இவை முக்கியமானவை. ஏனெனின், அவை காற்றிலிருந்து நைட்ரஜனை எடுத்துக்கொண்டு மற்றப் பயிர்களால் நிலம் இழக்கும் சத்துக்களை மீண்டும் நிலத்திற்கு அளிக்கின்றன. இந்தியாவில் உள்ள ஒரு சோதனை நிலையத்தில், அடுத்த பயிருக்கு வேண்டிய உரத்திற்குச் சமமாக இப் பயிர் விளைவதால் நிலத்தில் சத்து உண்டாகிறது என்று காட்டப் பட்டுள்ளது. பருப்புகளுக்கு அரிசியைவிடக் குறைவான மழையே போதும். இவற்றின் விதைகளும் தண்டுகளும் கால்நடைகளுக்கு நல்ல உணவாகும். பருப்புகளில் அதிக ஏற்றுமதி வாணிபம் இல்லை. விளைச்சல் முழுவதும் உள்நாட்டிலேயே செலவழிந்துவிடுகிறது.

சமீபத்தில் உளுந்து, பயிறு, கொள் ஆகியவை விளைந்த நிலத்தின் பரப்பு அடுத்த பக்கம் அட்டவணையில் காட்டப்படுகிறது.[1]

[1] 'India 1953' and 'India 1958'.

உளுந்து, பயிறு, கொள்

	பரப்பு ஆயிரம் ஏக்கரில்	உற்பத்தி 1,000 டன்களில்
1936–37	16,703	3,862
1949–50	20,497	3,667
1950–51	18,709	3,593
1951–52	16,876	3,334
1955–56	24,157	5,331
1956–57	23,990	5,930

சணல்

சணலை வாணிபப் பயிராக விளைவிப்பதில் பிரிக்கப்படாத இந்தியாவிற்குச் சர்வாதீன உரிமை இருந்தது. பிரிவினைக்குப் பிறகு, உலக உற்பத்தியில் நாம் 41 சதவீதம் உற்பத்தி செய்கிறோம். மேற்கு வங்காளம், அஸ்ஸாம், பீகார் ஆகியவைதான் முக்கியமாக உற்பத்தி செய்பவை. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் சணலும், சணல் பொருள்களுமே 35 சதவீதம் உள்ளன என்பதிலிருந்து இதன் முக்கியத்துவம் விளங்கும். இது நமக்கு டாலர்களைப் பெற்றுத் தருவதிலும் மிக முக்கியமானது.[1]

கடந்த 21 ஆண்டுகளில் சணல் பயிராகும் பரப்பிலும் உற்பத்தியிலும் ஏற்பட்ட மாறுதல்களை இவ்வட்டவணை காட்டும்:

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி 400 பவுண்டு கொண்ட பேல்களாக 1,000 பேல்களில்
1936–39	862	1,904
1950–51	1,411	3,283
1951–52	1,951	4,678
1955–56	1,739	4,197
1956–57	1,883	4,221

வங்காளத்தில் சணல் உற்பத்தி அடிக்கடி உலகத் தேவைகளுக்கு ஏற்றவாறு சரி செய்யப்படவில்லை. அதனால், 1930–34–ல்

1 '1948-ல் இந்தியாவில் அயல்நாட்டுச் செலாவணியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு இப் பண்டத்திலிருந்து கிடைத்தது. அருமைச் செலாவணி (Hard Currency) சம்பாத்தியத்தில் 66 சதவீதம் இதிலிருந்தே கிடைத்தது.' இந்திய அரசாங்கத்தின் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவின் அறிக்கை, 1949, பக்கம் 27.

மந்தநிலைக் காலத்தில் (1919-20-ல்) ரூ. 44 கோடி மதிப்புள்ள ஒரு வருடப் பயிர், 1930-34-ல் 15 கோடியாகக் குறைந்தது. சணல் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. 1935-ல் வங்காள அரசாங்கம் சணல் பயிராகும் பரப்பை மக்கள் தாங்களே விரும்பிக் குறைக்குமாறு வேண்டி ஓர் இயக்கத்தை நடத்தத் தீர்மானித்தது. இந்த நடவடிக்கைகளின் விளைவு எப்படியாயினும், 1939-40-ல் போர் அறிவிக்கப்பட்டு, சணலுக்கும் சணல் பொருள்களுக்கும் அதிகக் கிராக்கி ஏற்பட்டது. சணல் மார்க்கெட்டில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களின் காரணமாக, வங்காள அரசாங்கம் ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் 1940 மே மாதத்தில் உயர்ந்தபட்ச விலையையும் குறைந்தபட்ச விலையையும் நிருணயித்தது. பிறகு, ஆலைகளில் வேலை நேரத்தைக் குறைத்தும், பரப்பளவைக் கட்டுப்படுத்தியும் சணல் பயிரைக் கடுமையாகக் கட்டுப்பாடு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும், 1936-ல் சோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் நடத்துவதற்கும், சரியான புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கும் ரூ. 5 இலட்சம் அரசாங்க மானியத்தோடு 'இந்திய மத்திய சணல் குழு' ஒன்று நியமிக்கப்பட்டது.

பிரிவினையால் வங்காளத்தில் பொருளாதாரம் முழுவதும் சிதைந்துவிட்டது. அதில் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் சணல் பயிராகும் பரப்பு 10 சதவீதமேயாயினும் (ஆனால், அரிசி 72·5 சதவீத நிலத்தில் பயிராயிற்று), வங்காளத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட சணல், சணல் பொருள்கள் மொத்த ஏற்றுமதியில் 50 சதவீதமாக இருந்தன. பிரிவினையால் சணல் பயிராகும் பரப்பில் பெரும்பகுதி (75 சதவீதம்) பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டது. ஆனால், சணல் தொழிற்சாலைகள் முழுவதும் இந்தியாவில் இருந்தன. ஆதலால், இந்தியாவில் உள்ள சணல் தொழிற்சாலைகள் பாகிஸ்தானிலிருந்து வரும் சணலையே அதிகமாக நம்பியிருக்கின்றன. இந்த அண்டை நாடுகள் இரண்டுக்கும் இடையே உள்ள அரசியல் சச்சரவு காரணமாக 1950-51-ல் ஓர் இணைப்பான உற்பத்தித் திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் உணவு, பருத்தி, சணல், கரும்பு ஆகியவற்றில் தன்னிறைவு பெறுவது. இதற்கு முன்பே, பாகிஸ்தானை அதிகம் நம்பியிராமல் இருப்பதற்காக இந்தியாவில் அதிகச் சணல் உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆகவே, 1948-49-ல் 206 இலட்சம் பேல்களாக (பேல் ஒன்றுக்கு 400 பவுண்டு) இருந்த இதன் உற்பத்தி 1950-51-ல் 330 இலட்சம் பேல்களாக உயர்ந்தது. திட்டத்தில் முதல் ஆண்டில், மேலும் 138 இலட்சம் பேல்கள் அதிகமாக உற்பத்தியாயின.[1] ஆனால்,

[1] · India 1953' p, p. 256–57.

திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் 46 முதல் 47 இலட்சம் பேல்கள் வரை இருந்த உற்பத்தி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 31 இலட்சம் முதல் 32 இலட்சம் பேல்கள்வரை குறைந்தது. திட்டத்தின் இறுதியாண்டில் உற்பத்தி 40 இலட்சம் பேல்கள்.[1] இருப்பினும், தரமான ஹெஸ்ஸியத் துணி நெய்வதற்கான உயர்ந்த வகைச் சணலை இந்தியா உற்பத்தி செய்வதில்லை. இந்த அளவிற்கு இந்தியா, பாகிஸ்தானிலிருந்து ஹெஸ்ஸிய சணலை இறக்குமதி செய்யவேண்டும். இல்லாவிட்டால், நாம் நமது சணல் பொருள்களின் மாதிரியையே மாற்றவேண்டிவரும். 1946-47-ல் மொத்த உற்பத்தியில் 43·5 சதவீதமாக இருந்த ஹெஸ்ஸியப் பொருள்கள், 1951-52-ல் 33 ஆகக் குறைந்தன.[2] இரண்டாம் திட்டம் 1960-61-க்கு இலக்கு 50 இலட்சம் பேல்கள் என்று குறித்துள்ளது.

பருத்தி

உலகத்தில் பருத்தி உற்பத்தியில் இந்தியா, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. நமது ஆடைத் தொழிலுக்கு மூலப்பொருளை அளிப்பதோடன்றி, அது நமது ஏற்றுமதி வியாபாரத்தில் கணிசமான பகுதியாக இருந்தது. போருக்கு முன்பு சாதாரண காலங்களில் மொத்த உற்பத்தியில் 50 சதவீதத்திற்குமேல் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜப்பான்தான் நமது முக்கியமான வாடிக்கைக்காரர். நமது மொத்த உற்பத்தியில் சுமார் 40 சதவீதம் ஆலைகளாலும், மீதி நம் குடிசைத் தொழில்களாலும் (நூற்றலிலும் நெசவிலும்) எடுத்துக்கொள்ளப்பட்டன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தி பரவலாக்கப்பட்டுள்ளன. இது நம் காலத்தில்கூடக் கிராம மக்களுக்கு ஒரு துணைத் தொழிலாக மிகவும் உதவுகிறது. ஜப்பான் தவிர, மற்ற அயல்நாட்டுச் சந்தைகளில் நமக்குப் பெரிய வாடிக்கைக்காரர்கள் இல்லை. இதற்கு ஒரு காரணம் நமது பருத்தி தாழ்ந்த ரகமானது; மற்றொரு காரணம், உற்பத்திச் செலவு நமக்கு அதிகமாக இருப்பதால் நாம் போட்டியிட முடியவில்லை. ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவும் இந்திய மத்திய பருத்திக் குழுவும், பயிர் செய்யும் முறைகளைச் சீர்திருத்துவதும் உற்பத்தியின் தரத்தை உயர்த்துவதும் ஆகிய முக்கியமான பிரச்சினைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. எகிப்திலும் அமெரிக்காவிலும் இந்தியாவைவிட முறையே 6 பங்கு, 3 பங்கு அதிக விளைச்சல் உண்டாகின்றது.

[1] ' India 1958 ' p. 259.

[2] ' Overseas Economic Survey—India ', Rowland Owen, July 1952. p. 221.

பிரிவினையால், சிந்துவிலும் மேற்குப் பஞ்சாபிலும் உள்ள செழிப்பான நீர்ப் பாசனமுள்ள பகுதிகள் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டன. 1946 47 ல் பருத்தி பயிரான 149 இலட்சம் ஏக்கரில், பாகிஸ்தானின் பங்கு 32 இலட்சம் ஏக்கர். அதாவது 22 சதவீதம். மீதியிருந்த 117 இலட்சம் ஏக்கர் இந்திய யூனியன் எல்லையிலேயே இருந்தது. நீர்ப்பாசனம் பெற்ற பருத்திப் பரப்பில், மூன்றில் இரண்டு பாகம் பாகிஸ்தானுக்குப் போய்விட்டது. குட்டை, நடுத் தரம், நீளம் என்னும் மூன்று இழைப் பருத்திகளில், முறையே, பிரிக்கப்படாத இந்தியாவின் உற்பத்தியாகிய 9·9, 21·5, 11·6 இலட்சம் பேல்களில், இந் நாடுகளின் பங்கு 45, 62, 76 சதவீதமாகும்.[1] இந்திய ஆலைகளுக்கு நீளம், நடுத்தரம் ஆகிய இழைகளில் சுமார் ஓர் இலட்சம் பேல்கள் கிடைக்காமல் போயின. இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்குக் கிழக்கு ஆப்பிரிக்கா, சூடான், எகிப்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. சமீப காலத்தில் பாகிஸ்தானோடு வியாபார முறிவு ஏற்பட்டுவிட்டதாலும், பாகிஸ்தானின் பஞ்சு கிடைக்காததாலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து இறக்குமதி அதிகரித்தது.

கடந்த 19 ஆண்டுகளில் பருத்திப் பரப்பிலும் உற்பத்தியிலும் உண்டான மாறுதல்களைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது :[2]

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி 1,000 பேல்களில் (பேல் ஒன்றுக்கு 392 பவுண்டுகள்)
1936–39	20,969	4,146
1949–50	12,173	2,128
1950–51	14,536	2,910
1951–52	16,201	3,133
1955–56	19,978	4,001
1956–57	19,843	4,723

இந்திய அரசாங்கத்தின் விவசாய அமைச்சர் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் கூற்றுப்படி, 1950-51-ல் நீண்ட இழைப் பருத்திப் பரப்பு 23 சதவீதத்திலிருந்து 1954-55 ல் 34 சதவீதமாக அதிகரித்தது. பருத்தி விளையும் மொத்தப் பரப்பை மிகவும் அதிகரித்துங்கூடக் குட்டை இழைப் பருத்திப் பரப்பு 1950-51-ல் 25 சதவீதமாக இருந்து, 1954-55-ல் 21 சதவீதமாகக் குறைந்தது.

[1] 'Cotton Resources of India', Kalidas Sawhney, Secretary of the Indian Central Cotton Committee, in 'Indian Cotton Textile Industry' Centenary, Vol. 1951, p. 69.

[2] 'India 1953' and 'India 1956'.

1950-51 முதல் 1954-55 வரை வெவ்வேறு இழைப் பருத்தி உற்பத்தியைப்பற்றி அறிவிக்கும் அட்டவணை கீழே உள்ளது:[1]

உற்பத்தி 10 இலட்சம் பேல்களில்

பருத்தியின் வகை	1950-51	1951-52	1952-53	1953-54	1954-55
நீண்ட இழை ...	0·7	0·9	0·9	1·4	1·6
நடுத்தர இழை ...	1·4	1·2	1·4	1·6	1·9
குட்டை இழை ...	0·8	1·0	0·9	0·9	0·8
மொத்தம் ...	**2·9**	**3·1**	**3·2**	**3·9**	**4·3**

இந்தியாவின் கடல்கடந்த நாடுகளின் பிரிட்டிஷ் பொருளாதார ஆராய்ச்சி (British Overseas Economic Survey of India) யிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட அட்டவணை, இந்திய ஆலைகள் பருத்தியை எடுத்துக் கொள்வதுபற்றிச் சில முக்கிய அமிசங்களைக் காட்டுகிறது. இவை ஒவ்வொரு பருத்தி ஆண்டிற்கும் தனித் தனியாகக் கணிக்கப்பட்டவை.[2]

இந்திய ஆலைகளில் பருத்தி நுகர்வு

(மொத்தம் 400 பவுண்டுகள் கொண்ட பேல்கள்—நிகரம் 392 பவுண்டு)

	11 மாதங்கள் (1-9-51 முதல் 31-7-52 வரை)	1950-51	1949-50	1948-49
இந்தியப் பருத்தி ...	29,87,453	25,16,963	25,44,174	31,23,915
	73%	70%	69%	73%
அந்நியப் பருத்தி ...	10,84,018	11,05,125	11,40,711	11,30,721
	27%	30%	31%	27%
பாகிஸ்தான் பருத்தி	4,185	17,578	2,03,442	4,10,956
அமெரிக்கப் பருத்தி	6,78,828	4,43,501	1,73,916	51,731
கிழக்கு ஆப்பிரிக்கப் பருத்தி ...	1,62,868	2,28,382	2,81,503	1,85,967
எகிப்தியப் பருத்தி...	1,57,524	3,06,306	4,03,082	3,95,850
மற்றப் பருத்தி ...	80,613	1,09,358	78,768	83,217
மொத்த இந்திய, அந்நியப் பருத்தி	40,71,471	36,22,088	36,84,885	42,54,636

1951-52-ல் இறக்குமதி செய்யப்பட்ட 12 இலட்சம் பேல்களில், அமெரிக்காவிலிருந்து 1 இலட்சம் பேல்களும், கிழக்கு ஆப்பிரிக்கா

[1] 'Cotton in the Second Five Year Plan' in Major Industries in India Annual, 1955-56, edited by M. P. Gandhi, 1956. p. 79.

[2] மேலே கூறிய ஒவென் (Owen) எழுதிய நூலில் பக்கம் 197

விலிருந்து 1.3 இலட்சம் பேல்களும் வந்தன. பிரிக்கப்படாத இந்தியாவில் பருத்தி இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாக இருந்தது; ஆனல், பிரிவினைக்குப் பிறகு ஏற்றுமதிகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. 1951-52-க்கு நிர்ணயிக்கப்பட்ட ஏற்று மதிக் கோட்டா, 3,52,000 பேல்கள். நமது முக்கிய வாடிக்கைக் காரர்கள் ஜப்பானும் அமெரிக்காவும். பிரிவினைக்குப் பிறகு உடனே சில ஆண்டுகளில், அதிக உணவு உற்பத்தி செய்வதற்காகப் பருத்திப் பரப்புக் குறைக்கப்பட்டது. 1950 முதல் தடைகள் நீங்கிய பிறகு பருத்திப் பரப்பிலும் உற்பத்தியிலும் உயர்வு உண்டாயிற்று. உணவு, பருத்தி, சணல், சர்க்கரை ஆகியவற்றில் தன்னிறைவு பெறுவதற்காக 1950-51-ல் உருவாக்கப்பட்ட இணைப்பான உற்பத்தித் திட்டம், நிலத்தை மாற்றும் பத்தாண்டுத் திட்டத்தோடு சேர்க்கப்பட்டுவிட்டது. அந்நியப் பருத்தியை நம்பியிருப்பது இப்போது சரியாகாது. அதிகப் பருத்தி உற்பத்தி செய்வதற்கு இலக்கு 1950-51 அளவுக்கு மேல் 45 சதவீதமாக வைக்கப்பட்டது. 1951-52-ல் பருத்தி உற்பத்தி 33 இலட்சம் பேல்கள். ஆனல், 1950-51-ல் 29·7 இலட்சம் பேல்கள். 1955-56-க்குள் அடைய வேண்டிய இலக்கு 42·3 இலட்சம் பேல்கள்.[1] உணவு உற்பத்தியைப் பாதிக்கும் முறையில், அண்மையில் பணப்பயிர்கள் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்று நம்பலாம். (1) மேலான விதைகளை அதிகமாக உபயோகிப்பதாலும், (2) உரமிடுதல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், மேலான நில அபிவிருத்தி முறைகளைக் கையாளுதல் போன்றவற்றல் ஏக்கர் ஒன்றுக்கு அதிக விளைச்சலை உண்டாக்குவதாலும் இலக்கை அடைய முடியும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.[2]

பருத்தி விளையும் 150 இலட்சம் ஏக்கரில், 8,00,000 ஏக்கர்தான் நீர்ப்பாசனம் பெறுகிறது. மைசூரில் நீண்ட இழையுள்ள எகிப்தியப் பருத்தியையும், சென்னையிலும் கிழக்குப் பஞ்சாபிலும் நீண்ட இழை யுள்ள அமெரிக்கப் பருத்தியையும், மேற்குச் சென்னையில் மிகவும் நீண்ட இழையுள்ள பருத்தியையும் அதிகம் உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.[3] துணிகளுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள இலக்குகளுக்கேற்ப, இரண்டாம் திட்டத்தில் 1955-56-ல் இருந்த 42 இலட்சம் பேல் கச்சாப் பருத்தி உற்பத்தியை, 1960-61-ல் 55 இலட்சம் பேல்களாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் நீண்ட இழைவகைகளை அதிகம் உற்பத்தி செய்யவேண்டுமென்று

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 77.

[2] மேலே கூறிய சாஹ்னி (Sawhney) பக்கம் 71.

[3] மேலே கூறிய ஓவென் (Owen) பக்கம் 199.

வற்புறுத்துகிறது. குறிப்பாகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் உள்ள பகுதிகளில் இவ்வாறு செய்யப்படும். திட்டக் குழுவின் கருத்துப்படி, முதல் திட்டத்தில் நாம் முக்கியமாகச் சாதித்தது, 1948-49-ல் நீண்ட இழை வகைகளின் உற்பத்தி 17·5 சதவீதமாக இருந்தது, 1954-55-ல் 37 சதவீதமாக்கப்பட்டதுதான்.[1]

கரும்பு

அண்மைக் காலத்தில் கரும்புப் பயிர் செய்வதில் மிக அதிகமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சர்க்கரைத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதுதான். உத்தரப் பிரதேசமும் பீகாரும் சர்க்கரை உற்பத்தியை அதிகமாகச் செய்யும் இடங்கள். மொத்த உற்பத்தியில் இவற்றின் பங்கு 73 சதவீதம். ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழு உயர்ந்த கரும்பு வகைகளை அதிகம் உண்டாக்குவதற்கு நல்ல பணியைச் செய்திருக்கிறது. ஜாவாவில் உள்ள தொழிற்சாலைகள் நவீன கருவிகளால் தங்களுக்குப் பக்கத்திலேயே கரும்பைப் பயிர் செய்துகொள்கின்றன. ஆனால், இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள், பல விவசாயிகளிடமிருந்தே தமக்குத் தேவையான கரும்பைப் பெறவேண்டியிருக்கிறது. கரும்புத் தர நிர்ணயத்தினாலும், மேலான முறையில் பயிர் செய்யும் முறைகள் புகுத்தப்பட்டிருப்பதாலும் இத் தொழில் வளர்வதற்குரிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன. வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார், சென்னை ஆகிய இடங்களில் கரும்பை வாங்குவதிலும், அடிப்படை விலைகளை நிருணயிப்பதிலும் ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 21 வருடங்களில் கரும்பு விளையும் பரப்பிலும் உற்பத்தியிலும் உண்டான முன்னேற்றத்தைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.[2]

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி 1,000 டன்னில்
1936—39	3,276	4,455
1947—48	4,056	5,817
1949—50	3,624	4,938
1950—51	4,214	5,616
1951—52	4,792	6,066
1955—56	4,564	5,931
1956—57	5,019	6,689

1. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், பக்கம் 263-4.

1. 'இந்தியா 1953', 'இந்தியா 1958' உற்பத்திக்கான எண்ணிக்கை வெல்லத்தைப் பற்றியது.

அண்மைக் காலத்தில் ஓர் ஏக்கரில் உண்டாகும் கரும்பு விளைச்சலின் சராசரி அளவு குறைந்துகொண்டே வந்திருக்கிறது. இப்போது அது 14 டன்னுக உள்ளது. ஆனுல், ஜாவாவில் 56 டன்; ஹவாயில் 62 டன். கரும்பிலிருந்து சர்க்கரை கிடைக்கும் சதவீத அளவும், மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இங்குக் குறைவாகவே உள்ளது. இது இந்தியாவில் 9·9, ஜாவாவில் 11·5, கியூபாவில் 12·3, மார்ஷியஸில் 12·1. இவ்வாறு குறைவான விளைச்சலுக்கும், குறைவான சர்க்கரை அளவிற்கும் காரணமாவன, பரவலாகப் பயிர் செய்வது, போதிய எருவும் உரங்களும் இன்மை, தரமான, நோயில்லாத விதைகள் போதிய அளவு கிடைக்காமை, நீர்ப் பாசனத்திலும் சீதோஷ்ணத்திலும் உள்ள வித்தியாசங்கள் ஆகியவையே. விளைச்சலை அதிகரிப்பதற்கும், கரும்பினுள் சர்க்கரை யின் அளவை உயர்த்துவதற்கும் ஐந்தாண்டுக் கரும்பு அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது.[1] முதல் திட்டத்தில் அதிகப் படியாக உற்பத்தி செய்யவேண்டிய இலக்கு 7,00,000 டன் வெல்லம். கரும்பு அளிக்கப்பட்ட அதிக விலையின் காரணமாகவே, திட்டத்தின் முதல் ஆண்டில் பரப்பும் உற்பத்தியும் அதிகமாயின. ஆனுல், கரும்பின் விலை வீழ்ச்சியால் இவை குறைந்தன. ஆகவே, இவை அடிப்படை வருடத்தைவிட 1953-54-ல் குறைவாக இருந்தன. அது முதல் உற்பத்தியில் முன்னேற்றம் இருந்துவருகிறது. 1953—54-ல் 44·6 இலட்சம் டன்னுக இருந்த உற்பத்தி, 1954—55-ல் 55.5 இலட்சம் டன்னுக உயர்ந்தது. இது 1955—56-ன் உத்தேச அளவு 58 இலட்சம் டன்களாகும். இரண்டாம் திட்டம் 1960—61-ல் உற்பத்தியை 71 இலட்சம் டன்னுக்க எண்ணியுள்ளது.[2]

புகையிலை

பல விவசாயப் பொருள்களில், பணப்பயிர் என்ற முறையில் புகையிலைக்கு உயர்ந்த இடம் உண்டு. அமெரிக்காவுக்கும் சீனுவுக்கும் அடுத்தபடியாக உலகத்தில் இந்தியாதான் அதிகப் புகையிலை உற்பத்தி செய்யும் மூன்ருவது நாடாக உள்ளது. புகை யிலைப் பயிர் விளையும் முக்கிய இடங்கள், மேற்கு வங்காளம், சென்னை, பம்பாய், பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய இராச்சியங்களில் உள்ளன.

1936-57-ல் புகையிலைப் பயிர் விளைந்த பரப்பும் ஆண்டு உற்பத்தி யும் அடுத்த பக்கமுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.[3]

[1] மேற்கூறிய ஒவென், பக்கம் 183.

[2] 'இந்தியா 1958'.

[3] 'இந்தியா 1953', 'இந்தியா, 1958',

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி 1,000 டன்களில்
1936—39	902	338
1947—48	827	234
1948—49	803	255
1950—51	902	263
1951—52	713	206
1955—56	1,013	295
1956—57	1,022	306

யுத்தத்திற்குப் பிறகு புகையிலை உற்பத்தியும் பரப்பும் குறைந்ததற்குக் காரணம் உணவுப் பற்றுக்குறையாக இருக்கலாம். அதே சமயத்தில் நம் நாடு ஏற்றுமதிகளைக் கணிசமாக அதிகரித்துள்ளது. கீழே உள்ள அட்டவணையைக் காண்க:

	மெட்ரிக் டன்கள்
1948	32,000
1949	34,000
1950	45,000
1951	50,000

இந்திய ஏற்றுமதியில் அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் ஐரோப்பா தனக்கு வேண்டிய புகையிலையை எளிமைச் செலாவணிப் (Soft Currency) பகுதிகளிலிருந்து பெற விரும்பியதுதான். அமெரிக்கப் புகையிலைக்கு அதிக விலை வைத்திருப்பதும், அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு நிதி உதவி இல்லாததாலும், இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி மேலும் அதிகரிக்கக்கூடும். ஆனால், சாதகமான இந்த ஏற்றுமதி நிலையைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, உணவுப் பற்றுக்குறை தடையாக இருக்கக்கூடும். இந்தியப் புகையிலையின் தரம் மேலும் உயர்ந்தால், ஐரோப்பாவுக்கு இந்திய ஏற்றுமதி அதிகமாகலாம்.[1] இங்கிலாந்துதான் நமது முதன்மையான வாடிக்கைக்காரர். அது 1952-ல் ரூ. 16·8 கோடி மதிப்புள்ள 1,006 இலட்சம் பவுண்டு புகையிலையை இறக்குமதி செய்தது.[2]

இந்தியாவில் புகையிலைத் தொழில் இன்னும் நன்றாக விருத்தியாகவில்லை. அது, பீடி (ஏழைகள் புகைப்பது), சுருட்டு, சிகரெட்டு என்று மூன்று தொழில்களாகப் பிரிந்துள்ளது. பீடித் தொழிலில்

[1] Tobacco, F. A. O. Bulletin No. 20, October 1952.

[2] ஒவன் எழுதிய மேற்கூறிய நூல், பக்கம் 185.

நாடு முழுவதும், ஒரு நாளுக்கு இலட்சக்கணக்கான பீடிகளைச் செய்யக்கூடிய சிறு நிறுவனங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவை இந்தியாவில் ஓர் அமைப்புக்குள் சிறிதும் வராமல் சிதறிக் கிடக்கின்றன. உற்பத்தியாகும் பீடி முழுவதும் உள்நாட்டிலேயே செலவாகி விடுகிறது. 1944-ல் இத் தொழிலில் 5 இலட்சம் பேர் வேலை செய்துவந்தார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்தில் 1,25,000 பேர்களும், தென்னிந்தியா, பம்பாய் ஒவ்வொன்றிலும் ஓர் இலட்சம் பேர்களும் வேலை செய்தனர். இத் தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலை செய்கின்றனர். இதைக் 'குழந்தைகளை வேலையில் அமர்த்தும் சட்டத்தின்'படி சில இராச்சியங்கள் தடுக்க முற்பட்டுள்ளன.

சுருட்டுத் தொழில் முக்கியமாகச் சென்னை இராச்சியத்திலேயே உள்ளது. திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், சென்னை நகரம் ஆகியவை சுருட்டு உற்பத்தி செய்யும் முக்கிய இடங்கள். 1944-ல் சுருட்டு உற்பத்தியாளர் சங்க டிரஸ்டில் 90 உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்தச் சங்கத்தில் சேராத சில தொழிற்சாலைகளும் இருந்தன. திண்டுக்கல்லில் உள்ளது தவிர, மற்றவையெல்லாம் சிற்றளவுத் தொழிற்சாலைகளே. மேலும், 127 உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுறவுச் சுருட்டுத் தொழிற்சாலை ஒன்றும் திண்டுக்கல்லில் உள்ளது. இவர்களுள் 80 உறுப்பினர் சுருட்டு வேலை செய்வோர்.

அநேகமாக எல்லாச் சிகரெட்டுத் தொழிற்சாலைகளும் நூற்றுக் கணக்கான வேலையாட்களைக் கொண்ட பேரளவுப் பகுதிகளே. இவை தொழிற்சாலைச் சட்டத்திற்குட்பட்டவை. 1944-ல் வங்காளத்தில் 4 தொழிற்சாலைகளும், பம்பாயில் 6-ம், பெங்களூரில் ஒன்றும் இருந்தன.[1] பீகார், சென்னை, மத்தியப்பிரதேசம், ஆஜ்மீர் ஆகிய இடங்களில் உள்ள புகையிலைத் (பீடி உட்பட) தொழிற்சாலைகளில், 1948-ஆம் வருடக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின்படி குறைந்தபட்சக் கூலிகள் நிருணயிக்கப்பட்டன. சிகரெட்டுகள் செய்வதற்காக இந்தியப் புகையிலையில் கலப்பதற்கு அமெரிக்க வர்ஜீனியாப் புகையிலை இறக்குமதி செய்யப்படுகிறது. 1951-52-ல் ரூ. 1·76 கோடி பெறுமானமுள்ள 43 இலட்சம் பவுண்டு புகையிலை இறக்குமதி செய்யப்பட்டது.

1954 55-ல் புகையிலையினால் ரூ. 11 கோடி அந்நியச் செலாவணி கிடைத்தது. முதல் திட்டத்தில் புகையிலை காணப்படவில்லை.

[1] Report on an Enquiry into Conditions of Labour in Bidi, Cigar and Cigarette Industries, D. V. Rege, Government of India, 1946.

ஆனால், இதன் பொருளாதார முக்கியத்துவம் இப்போது உணரப்பட்டு இரண்டாம் திட்டத்தில் புகையிலைபற்றி ஆராய்ச்சி செய்வதற்கும், இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான புகையிலை விளையும் பகுதியாகிய ஆந்திர இராச்சியத்தின் குண்டூர் மாவட்டத்தில் புகையிலை விஸ்தரிப்புத் திட்டம் ஒன்று நடத்துவதற்காகவும் ரூ. 31 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.[1]

இந்தியப் புகையிலையின் தரத்தை உயர்த்துவதற்கு அதிக இடம் இருக்கிறது. அதோடு, புகையிலைத் தொழிலையும் ஏற்றுமதி வாணிபத்தையும் இந்தியாவில் அபிவிருத்தி செய்வதற்கும் இடம் இருக்கிறது.

தேயிலை

இந்தியாவில் தோட்டப் பயிர்களில் தேயிலைதான் மிகவும் முக்கியமானது. உலகிலேயே இந்தியாதான் தேயிலை உற்பத்தி அளவில் முதல் இடம் பெற்றிருக்கிறது. தேயிலைத் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் 850 இலட்சம் பவுன்; அதில் 545 இலட்சம் பவுன் பிரிட்டனைச் சேர்ந்தது; மீதி இந்தியாவுடையது.[2] இந்த உள்நாட்டுச் செடி முதலில் 1820-ல் அஸ்ஸாமில் கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி ஐந்தாண்டுகளாக நடத்திவந்த அஸ்ஸாம் கம்பெனிதான் முதல் முதலில் நமக்கு மாற்றப்பட்டது. தேயிலை விளையும் சராசரிப் பரப்பு 1936-39-ல் 7,47,000 ஏக்கராக இருந்தது, 1949-50-ல் அது 8,07,000 ஏக்கராகப் பெருகியது. 1949-ல் உற்பத்தி 5,850 இலட்சம் பவுண்டுகள். 1950-ல் 6,028 இலட்சம் பவுண்டுகள்; 1951-ல் 6,180 இலட்சம் பவுண்டுகள். பிரிக்கப்படாத இந்தியாவில் உற்பத்தி 5,950 இலட்சம் பவுண்டாக இருந்தது. 1950-ல் 520 இலட்சம் பவுண்டு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுவந்த 4,000 ஏக்கர் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டது. சுமார் 82 சதவீதத் தேயிலை வட இந்தியாவில் அஸ்ஸாமிலும், துவார்சிலும் (Dooars) பயிராகிறது. இது கல்கத்தா துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1950-க்கும் 1954-க்கும் இடையில் உற்பத்தி 6,130 முதல் 6,440 இலட்சம் பவுண்டாகவும், ஏற்றுமதி 4,270 முதல் 4,700 இலட்சம் பவுண்டாகவும் இருந்தது.

1932-33-ஆம் ஆண்டு தேயிலைத் தொழிலுக்கு மிகவும் கேடான ஓர் ஆண்டு. உலக முழுவதும் பரவியிருந்த மந்தநிலை போதா

[1] 'இந்தியா 1956'.

[2] 'The Economist', September 8, 1956. p. 813.

தென்று, அளவுகடந்த உற்பத்தியும் உண்டாகிவிட்டது. அதனுல், உலக முழுவதிலும் இருந்த தேயிலே உற்பத்தியாளர்கள் விலே இறக்கத்தையும் இருப்புகளேயும் சமாளிக்க வேண்டியிருந்தது. 1933-ல் அளவுகடந்த உற்பத்தியைத் தடுக்கச் சட்டசபையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்மூலம் உற்பத்திக்கும் ஏற்று மதிக்கும் வரையறை செய்யப்பட்டது. தரப்பொருள் ஏற்றுமதியில் $82\frac{1}{2}$ சதவீதமாக இருந்த ஏற்றுமதிக் கோட்டா, 1938-39-ல் $92\frac{1}{2}$ சதவீதமாக உயர்ந்தது. இருப்புச் சேர்ந்துவிட்டதால் அடுத்த ஆண்டுக்குக் கோட்டா 90 சதவீதமாக்கப்பட்டது. போர் தோன்றியதால் புதிய நிலேமை ஏற்பட்டது. இங்கிலாந்தில் தேயிலே வாணிபம் முழுவதும் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அவசரச் சட்டத்தை நடத்துவதற்கு இந்தியாவில் ஒரு தேயிலேக் கட்டுப்பாட்டு அதிகாரி நியமிக்கப்பட்டார். எல்லா வகையான தேயிலேகளுக்கும் அதிகக் கிராக்கி ஏற்பட்டது. 1939 அக்டோபரில் ஏற்றுமதிக் கோட்டா 95 சதவீதமாக உயர்த்தப்பட்டது. பன்னுட்டுத் தேயிலேக் குழு அதில் பங்கெடுத்துக்கொள்ளும் எல்லா நாடுகளுக்கும் 1940-41க்குரிய கோட்டாவைக் குறைத்துவிட்டது. தேயிலே ஏற்றுமதிபற்றிய நிலேயை இந்த அட்டவணே காட்டுகிறது.[1]

தேயிலே ஏற்றுமதி

வருடம்	அளவு 10 இலட்சம் பவுண்டில்	மதிப்பு கோடி ரூபாயில்
1950—51	439	80
1951—52	429	94
1952—53	427	81
1953—54	471	102
1954—55	459	148
1955—56	404	109

1953-54-ல் ஏற்றுமதியளவில் மிக உயர்ந்த நிலே உண்டாயிற்று. ஆனுல், இதன் மதிப்பு 1954-55-ல் இருந்த அளவே. இச்சந்தர்ப்பத்தில் நாம் இந்திய ரிசர்வ் பாங்கியின் சில குறிப்புகளேக் கவனிக்க வேண்டும். ‘உலக உற்பத்தி அதிகமானதால், உலகச் சந்தையில் இந்தியத் தேயிலே அதிகப் போட்டியைச் சமாளிக்க வேண்டியதாயிருக்கிறது. 1951-ல் மொத்தத் தேயிலே ஏற்றுமதி நிலேயாக இருப்பதற்குரிய அடையாளங்களேப் பெற்றிருந்தாலும், இந்தியாவும்

[1] 1955-56-க்கு இந்திய ரிசர்வ் பாங்கின் ‘செலாவணியும் நிதியும்’ பற்றிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பக்கம் 218.

இங்கிலாந்துச் சந்தையில் தனக்குரிய பங்கைச் சிறிது சிறிதாக இழந்து வருகிறது. அமெரிக்காவிலுங்கூட எல்லா இடங்களிலிருந்துவரும் தேயிலை இறக்குமதியில் இந்தியா தன் போட்டியாளர்களுக்கு இடங்கொடுத்துக்கொண்டு வருகிறது.'[1]

1952-ன் மத்தியிலிருந்து இங்கிலாந்தில் தேயிலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. குறைந்துவரும் விலைகளால், விற்கும் சந்தைக்குப் பதில் வாங்கும் சந்தை ஏற்பட்டது. இதனால், இந்தியத் தேயிலைத் தொழிலில் ஒரு நெருக்கடி உண்டாயிற்று. இந்திய அரசாங்கம் இராஜாராம் ராவ் குழு என்னும் உத்தியோகப்பூர்வமான குழு ஒன்றை நிறுவி நெருக்கடிக்குக் காரணங்களை ஆராயும்படி செய்தது. இக் குழு, எகிப்து, துருக்கி, இராக், பர்மா, ரஷ்யா ஆகிய நாடுகளை உடனே விசாரிக்குமாறு சிபாரிசு செய்தது. இந் நாடுகளில் சந்தைகளை உண்டாக்குவது சாத்தியம் என்று அது கருதியது.

1952 அக்டோபரில் கட்டுப்பாடு முழுவதும் நீக்கப்பட்டதால், இங்கிலாந்துச் சந்தையில் மறுபடியும் இடம் கிடைத்தது. சாதகமான மற்ற நிலைமைகளுள், இங்கிலாந்தில் தாழ்ந்த ரகமான தேயிலை இருப்பைத் தீர்த்து விடுவதையும், உணவுத்தானியத்தில் அளிக்கப்படும் சலுகையை ரொக்கக் கூலியாகக் கொடுத்துவிடுவதென்று தொழிலாளர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் தேயிலைத் தோட்டத்தின் நிருவாகச் செலவு முதலியவை சிறிது குறைந்ததையும் கூறலாம். மேலும், இத் தொழில் 1953-ல் உற்பத்தியை 8 சதவீதம் குறைப்பதென்று தீர்மானித்தது. வழக்கம்போலச் சர்க்கரை, துணி முதலிய பண்டங்களைப் போலவே தேயிலைக்கும் உள்மார்க்கெட்டை அபிவிருத்தி செய்யாததால் உற்பத்தி குறைகிறது. இதற்குக் காரணம், 'அமித உற்பத்தி'யாகிய நெருக்கடிதான்.[2] 1955-56-ல் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைந்ததற்குக் காரணம் இங்கிலாந்தில் பாங்குச் செலாவணிக் கட்டுப்பாடுகளே (Credit restrictions).

சணலுக்கும் பருத்திக்கும் அடுத்தபடியாகத் தேயிலைதான் இந்தியாவிற்கு அதிக அயல்நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துத் தருவது. 1955-56-ல் தேயிலை ஏற்றுமதி, மொத்த ஏற்றுமதி வியாபாரத்தில் 18·5 சதவீதமாக இருந்தது. முந்திய ஆண்டில் அது 25·1 சதவீதமாக இருந்தது. இங்கிலாந்துதான் தேயிலையை இறக்குமதி செய்யும் முக்கியமான நாடு. பிறகு, அது சாதாரணமாக

[1] மேற் கூறியது, 1951-52. பக்கம் 115.

[2] B. T. இரணதிவ் எழுதிய 'இந்தியப் பொருளாதார நெருக்கடி' என்னும் நூலில் பக்கம் 66 முதல். முற்கூறிய ஒவென் எழுதிய நூலில் பக்கம் 176-77.

மற்ற நாடுகளுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. திட்டக் குழு 7,000 இலட்சம் பவுண்டு உற்பத்தி இலக்கு சாத்தியம் என்று கருதுகிறது. இரண்டாம் திட்ட முடிவுக்குள் 4,700 முதல் 5,000 இலட்சம் பவுண்டு ஏற்றுமதி இலக்கும் சாத்தியம் என்று எண்ணுகிறது.

காப்பி

காப்பிப் பயிர் செய்வது மைசூர், திருவாங்கூர்-கொச்சி, குடகு, சென்னையில் ஒரு பகுதி ஆகிய எல்லைக்குள் அடங்கியிருக்கிறது. மொத்தப் பயிர் நிலத்தில் மைசூரில் 50 சதவீதம் இருக்கிறது. இந்தியாவில் காப்பிப் பயிர் செய்யப்படும் பரப்பும் உற்பத்தி அளவும் விரைவாக அதிகரித்துள்ளன. 1935-39-ல் 1,86,000 ஏக்கராக இருந்தது, 1954-55-ல் 2,34,000 ஏக்கராக உயர்ந்தது. இதே காலத்தில் உற்பத்தி 360 இலட்சம் பவுண்டிலிருந்து 509 இலட்சம் பவுண்டாக உயர்ந்தது. இந்தியா இதை உலக உற்பத்தியின் மொத்தத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக உற்பத்தி செய்கிறது. 1954-ல் 25,00,000 மெட்ரிக் டன்களாகிய மொத்த உலக உற்பத்தியில், பிரேசில் 10,37,000 டன்னும், கொலம்பியா 3,90,000 டன்னும் அளித்தன. இந்தியாவின் பங்கு 24,600 மெட்ரிக் டன்கள்தான். மந்த காலத்தில் உண்டான விலைவீழ்ச்சி காப்பித் தோட்டங்களை மிகுதியும் பாதித்தது. ஏனெனின், விளைந்த மொத்தப் பயிரும் உள்நாட்டில் செலவழியவில்லை. உற்பத்தியாளர்கள் அரசாங்க உதவியை நாடவேண்டியதாயிற்று. 1935-ன் இந்தியக் காப்பி செஸ் சட்டம் ஒரு நிதியை உண்டாக்குவதற்கு ஏற்பாடு செய்தது; பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லைக்கு அப்பால் உள்ள எந்த நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கு ஒரு அந்தருக்கு எட்டணுவீதம் வரி விதிக்கவும் ஏற்பாடு செய்தது. இந்தியக் காப்பி போர்டு எனப்படும் குழு, இப்படிக் கிடைக்கும் பணத்தை இந்தியக் காப்பிப் பயிர் முன்னேற்றத்திற்கும், பொறி வழியாக்கத்திற்கும் (manufatcure) உள்நாட்டு நுகர்வை அதிகப் படுத்துவதற்கும் செலவு செய்யவேண்டும். யுத்தத்திற்கு முன்பு, ஏற்றுமதிப் பொருளாக இது சிறந்த இடத்தைப் பெற்றது. ஏற்றுமதி ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாயாகவும், மொத்த உற்பத்தியில் இது 60 சதவீதமாகவும் இருந்தது.

எனினும், கடந்த பத்து வருடங்களாக உள்நாட்டு நுகர்வு உயர்ந்து ஏற்றுமதி குறைந்துவிட்டது. 1934-38-ல் 9,000 மெட்ரிக் டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1953-ல் 1,000 மெட்ரிக்

டன்கள் தான் ஏற்றுமதியாயின.[1] தோட்டத் தொழிலாளர் சட்டம் செயல்முறைக்கு வந்தால், உற்பத்திச் செலவு அதிகமாகலாம். விலை ஏறும் அபாயத்தைத் தடுப்பதற்கு ஓர் ஏக்கரில் உண்டாகும் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான விஞ்ஞான முறைகளை உடனே கையாள வேண்டியது அவசியம்.

ரப்பர்

ரப்பர் அண்மையில்தான் விருத்தியடைந்தது. அரை நூற்றுண்டுக்கு முன்னர் அது இலட்சியமில்லாத பொருளாக இருந்தது. 1914-19 போருக்கு முன்னுல், அது பவுண்டு ஒன்றுக்கு 12 ஷி. 9 பெ. விலை கூறப்பட்ட அரிய பண்டமாயிருந்தது. அப்போது இத்தோட்டத் தொழில் ஆரம்பநிலையில் இருந்தது. 1904-ல் உலகத்தில் உற்பத்தியான மொத்தத் தோட்ட ரப்பர் 50 டன்கள். இன்று அது உலக நாடுகளுக்கிடையே ஒரு முக்கியமான வாணிபப் பொருளாக இருக்கிறது. அது உலக முழுவதிலும் பல தொழில்களில் பயன்படுகிறது. 1954-ல் உலகத்தில் உற்பத்தியான ரப்பரின் அளவு 18,30,000 மெட்ரிக் டன்கள். இந்தியாவின் உற்பத்தி 1931-ல் 10,000 டன் முதல் 1940-ல் 12,000 டன் வரை இருந்தது. 1954-ல் அது 21,000 டன்னுக உயர்ந்தது. திருவாங்கூர்-கொச்சி தான் முக்கிய உற்பத்தி இடம். ரப்பர் உற்பத்தியை எல்லாம் பதிவு செய்வதற்கும், பலதரமான ரப்பர்களுக்கு விலை நிருணயம் செய்யவும், கச்சா ரப்பரை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதுபற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவும் 1947-ன் ரப்பர் சட்டப்படி (உற்பத்தியும் மார்க்கெட்டிங்கும்) இந்திய ரப்பர் போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. சுங்கவரி போர்டு, 1951-ல் ரப்பர் தோட்டத் தொழிலுக்குப் பாதுகாப்பும் உதவியும் அளிப்பது குறித்து விசாரணை செய்து, பாதுகாப்பும் உதவியும் தேவையில்லை என்று அறிவித்தது. ஏற்கெனவே அது, அனைத்திந்திய ரப்பர் ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவும்படி சிபாரிசு செய்திருக்கிறது. தொழில் வளர்ச்சியிலும் நாட்டுப் பாதுகாப்பிலும் ரப்பருக்குள்ள முக்கியமான இடத்தைக் கருதியும், சர்வதேச நிலையில் உள்ள நிச்சயமற்ற நிலைமைகளாலும் வெளிநாட்டு இறக்குமதியை நம்பியிருப்பது உசிதமன்று. ரப்பர்த் தோட்டங்கள் பெரும்பாலும் சிறியவையாய் உள்ளன. இவை தேயிலை, காப்பித் தோட்டங்களைப் போல அவ்வளவு திறமையாக நிருவகிக்கப்படவில்லை. ரப்பர்த் தோட்டங்களுக்கான அபிவிருத்திக் குழு, அவற்றின் புனரமைப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒரு

[1] உணவு, விவசாயப் புள்ளியியல் ஆண்டுப் புத்தகம், 1955, தொகுதி 6, பகுதி 2 1956.

பதினைந்தாண்டுத் திட்டம் வகுத்துள்ளது.[1] கச்சா ரப்பர் உற்பத்தி 1955-56-ல் 22,444 டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1947-க்குப் பிறகு இதுதான் மிக அதிகம். இதற்குத் தேவை அதிகமாக இருப்பதால், பற்ருக்குறை இறக்குமதியால் சரி செய்யப்படுகிறது. இந்தியாவைத் தன்னிறைவுள்ளதாகச் செய்வதற்கு 1,20,000 ஏக்கரில் ரப்பர் பயிர் செய்வதற்கான திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[2]

அண்மைக் காலத்தில், சில நாடுகள் தொகுப்பு முறையில் (Synthetic) ரப்பர் செய்ய முயன்றுள்ளன. இது 1939-ல் ரஷ்யாவில் 50,000 டன், ஜெர்மனியில் 20,000 டன், அமெரிக்காவில் 3,000 டன் உற்பத்தி செய்யப்பட்டது. 1941-ல் அமெரிக்கா தொகுப்பு ரப்பரை 12,000 டன் அதிகமாக உற்பத்தி செய்துள்ளது. அண்மையில் சில ஆண்டுகளில் தொகுப்பு ரப்பர் உற்பத்தியில் மிக அதிகமான முன்னேற்றம் உண்டாகியுள்ளது. இதற்கு முதன்மையான காரணம் யுத்தத்தில் இது முக்கியமாகத் தேவைப்படுவதே.

சிறுசணல் விதை (Linseed)

சிறுசணல் இந்திய ஏற்றுமதியில் முக்கியமான பங்கை வகிக்கிறது. இது ஏற்றுமதி மார்க்கெட்டினுல் அபிவிருத்தி செய்யப்பட்ட பயிர்களில் ஒன்று. இதற்கு உள்நாட்டிலும் அதிகச் செலவு உண்டு. கீழே இதன் பரப்பும் உற்பத்தியும் தரப்பட்டுள்ளன.[3]

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி 1,000 டன்னில்
1936—39	3,736	428
1947—48	3,977	431
1950—51	3,447	361
1951—52	3,409	328
1955—56	3,781	414
1956—57	3,758	349

1951-ல் உலகத்தின் மொத்த 24,00,000 மெட்ரிக் டன் உற்பத்தியில், இந்தியாவின் பங்கு 3,14,000 மெட்ரிக் டன்கள். அண்மைக் காலத்தில் பரப்பும் விளைச்சலும் குறைந்திருக்கின்றன. உள்நாட்டுத் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. 1950-51-ல் மொத்த

1 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 160.

2 'இந்தியா 1956',

3 'இந்தியா 1953', 'இந்தியா 1958'..

உற்பத்தியில் 87 சதவீதம் இங்குச் செலவாயிற்று. உணவுக்கு உதவும் எண்ணெய்க்காகவும் (30 சதவீதம்), தொழில்களில் பயன் படுத்துவதற்காகவும் (70 சதவீதம்)—குறிப்பாக வர்ணப் பூச்சுத் தொழிலில்—இதில் 75 சதவீதம் ஆலைகளில் பிழியப்பட்டது.

இந்தியாவில் உண்டாகும் விதை அதிக எண்ணெய் உடைய தாகையால், உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. சிறு சணல் பயிராகும் மிகப் பெரிய பரப்பு மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. விரிந்து கொண்டேவரும் ஏற்றுமதி மார்க்கெட்டை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியாத நம் நிலைமைக்குப் பல எடுத்துக்காட்டுகளில் சிறு சணல் விதை ஒன்ருகும்.

1914-க்கு முன், இதன் மொத்த உலக ஏற்றுமதி 14 இலட்சம் டன். இதில் ஆர்ஜென்டின 6,76,000 டன்களையும், இந்தியா 3,67,000 டன்களையும் ஏற்றுமதி செய்தன. அதற்குப் பிறகு, சிறு சணல் விதையின் ஏற்றுமதி 50 சதவீதம் அதிகமாயிற்று. ஆர்ஜென்டின இந்த அதிகப்படி முழுவதையும் பிடித்துக்கொண்டு விட்டது. 1931-ல் மொத்த உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 5 சதவீதம்தான். ஆனல், ஆர்ஜென்டினவோ 85 சதவீதம் ஏற்றுமதி செய்தது. 1932-க்குப் பிறகு நிலைமை சீர்திருந்தியது. இதற்கு முக்கியக் காரணம், அடுத்தடுத்து மூன்று வருடங்களில் ஆர்ஜென்டினவில் சிறுசணல் பயிர் விளையாததுதான். இந்தியா மீண்டும் தன் இடத்தைப் பெற்றது தன் வலிமையினல் அன்றி, ஆர்ஜென்டினவின் குறையினல்தான்.

இப்போது சில வருடங்களில் சிறு சணல் விதை எண்ணெயின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. அதே சமயத்தில், அதன் பிண்ணுக்கு ஏற்றுமதி குறைந்துவிட்டது. 1949-50-ல் இவ் விதையின் ஏற்றுமதி ரூ. 456 இலட்சம் பெறுமான 71,660 டன்கள். இது 1951-52-ல் ரூ. 70 இலட்சம் பெறுமான 7,284 டன்கள் ஆயிற்று. அதே சமயத்தில், 1949-50-ல் இவ் எண்ணெயின் ஏற்றுமதி ரூ. 128 இலட்சம் பெறுமான 7,298 டன்கள். இது 1951-52-ல் ரூ. 567 இலட்சம் பெறுமான 25,025 டன்களாக உயர்ந்தது.[1] ஆர்ஜென்டின, பெல்ஜியம், லக்ஸம்பெர்க், உராகுவே ஆகிய நாடுகளையடுத்து இந்தியாதான் உலகத்திலேயே இவ்வெண்ணெயை ஏற்றுமதி செய்யும் நான்காவது பெரிய நாடாகும். சரியான மார்க்கெட்டிங் வசதி இல்லாததால் இந்திய ஏற்றுமதிக்கு விலை குறைவாகக் கிடைத்தது என்று கூறப்படுகிறது. குறைந்துவரும் பரப்பும்,

[1] மேலே கூறிய ஒவென், பக்கம் 173.

உற்பத்தியும், அதிகரித்துவரும் உள்நாட்டு நுகர்வும் காரணமாக ஏற்றுமதி குறையலாம். 1954-ல் மொத்த உலக ஏற்றுமதியாகிய 5,20,000 மெட்ரிக் டன்களில் இந்தியாவின் பங்கு 2,996 மெட்ரிக் டன்கள்தான்.

நிலக்கடலை

இந்த நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகள் வரையில் இந்தியாவிலிருந்து நிலக்கடலை ஏற்றுமதி ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன்களாகத்தான் இருந்தது. நிலக்கடலை பயிராகும் பரப்பு சென்னையில் 2,50,000 ஏக்கராகவும், பம்பாயில் 1,60,000 ஏக்கராகவும் வரையறுக்கப்பட்டிருந்தது. ஐரோப்பாவில் இந்திய நிலக்கடலைக்குத் தேவை மிகவும் குறைவாயிருந்தது. அதிக எண்ணெய் உள்ள விதைகள் தோன்றும் வரையில் இவ்வாறிருந்தது. இந்தப் புதிய விதைகளால் இது பயிர் செய்வது அதிகமாகத் தொடங்கியது. இப்போது 1,10,00,000 ஏக்கரில், 30,00,000 டன்களுக்கு மேல் உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகிலேயே இந்தியாதான் அதிக நிலக்கடலை உற்பத்தி செய்யும் நாடு. சென்னை, பம்பாய், ஹைதராபாத், சௌராஷ்டிரம் ஆகிய இடங்களில் இது முக்கியமாகப் பயிரிடப்படுகிறது.

கீழ்க்கண்ட அட்டவணை உற்பத்தியிலும் பரப்பிலும் வேறுபாடுகளைக் காட்டுகிறது.[1]

	பரப்பு 1,000 ஏக்கரில்	உற்பத்தி (காயாக) 1,000 டன்களில்
1936—39	8,022	3,145
1947—48	10,079	3,411
1948—49	9,165	2,901
1950—51	11,130	3,437
1951—52	12,151	3,142
1955—56	12,692	3,862
1956—57	13,101	4,086

பரப்பில் உண்டான மாறுதலுக்குக் காரணம் விலை ஏற்ற இறக்கங்களும் சீதோஷ்ண நிலையும் என்று சொல்லப்படுகிறது. சீதோஷ்ண நிலையானது, பரப்பு அதிகரித்தும் உற்பத்தி குறைவதற்குக் காரணமாயிருந்தது. உற்பத்தியில் பெரும் பகுதிக்கு உள்நாட்டிலேயே மார்க்கெட் இருக்கிறது. நம் உற்பத்தியில் சுமார்

1 'இந்தியா 1953', 'இந்தியா 1956', 'இந்தியா 1958'.

கால்பகுதிதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1934 35-ல் 5,00,000 டன்னாக இருந்த ஏற்றுமதி 1938-39-ல் படிப்படியாக வளர்ந்து 8,35,000 டன்னாக உயர்ந்தது. எனினும், அண்மைக் காலத்தில் ஏற்றுமதி மிகவும் குறைந்துவிட்டது. 1949-50-ல் ரூ. 904 இலட்சம் பெறுமான 1,26,016 டன் ஏற்றுமதி, 1951-52-ல் ரூ. 235 இலட்சம் பெறுமான 19,744 டன்னாகக் குறைந்தது. முக்கியமான இறக்குமதி நாடுகள் சுவிட்சர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து.

எண்ணெய் ஆட்டும் தொழில் வளர்ந்ததால், நிலக்கடலை ஏற்றுமதி குறைந்து எண்ணெய் ஏற்றுமதி உயர்ந்தது. ஆனால், உள்நாட்டில் இது அதிகமாக நுகரப்படுவதால் ஏற்றுமதிக்குக் கிடைக்கும் அளவு வரையறுக்கப்பட்டுவிடுகிறது. மொத்தம் பருப்பு உற்பத்தி (100 டன் காய்களுக்கு 70 டன் பருப்பு வீதம்) 1951-52-ல் 21,28,000 டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில், 17,09,000 டன் எண்ணெய் எடுப்பதற்காகப் பிழியப்பட்டது. 100 டன் பருப்புக்கு 40 டன் எண்ணெய் வீதம், 1951-52-ல் மொத்தம் உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெயின் அளவு 6,83,000 டன்கள்; இதில் 5,13,000 டன்கள் சமைப்பதற்கும், 1,50,000 டன்கள் வனஸ்பதி தயார்செய்வதற்கும், மீதி 20,000 டன் ஏற்றுமதிக்கும் பயன் பட்டன. கொரியப் போரின் காரணமாக விலைகள் உயர்ந்ததால், 1950-51-ல் கடலை எண்ணெய் ஏற்றுமதி உச்சநிலையை அடைந்தது. ஏற்றுமதியின் அளவு ரூ. 17 கோடி பெறுமான சுமார் 200 இலட்சம் காலன்கள். அரசாங்கத்தின் கொள்கை பக்குவப்படுத்தப்படாத பொருள்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதும், பக்குவப்படுத்தப் பட்ட பொருள்களின் ஏற்றுமதியை அனுமதிப்பதும் ஆகும். 1951-52 ல் இந்தியா ரூ. 4·32 கோடி பெறுமான 50,00,000 காலன் கடலை எண்ணெயை ஏற்றுமதி செய்தது. நமது முக்கியமான வாடிக்கைக்காரர்கள் பர்மாவும் கனடாவும். அதிக விலையினாலும், நல்லெண்ணெயை அதிகம் கலப்பதாலும் அண்மைக் காலத்தில் இந்தியாவில் சமைப்பதற்குக் கடலை எண்ணெயின் உபயோகம் மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் ஏற்றுமதி குறைந்து விட்டது.

மற்ற எண்ணெய் விதைகள்

மற்ற முக்கியமான எண்ணெய் விதைகள் எள், இலுப்பை, கடுகு, ஆமணக்கு. நிலக்கடலைக்கு அடுத்தபடியாக எள்தான் அதிகப் பரப்பில் விளைகிறது. உலகிலேயே இந்தியாதான் அதிக மாக எள்ளை உற்பத்தி செய்கிறது. உலக உற்பத்தியில் இந்தி யாவின் பங்கு 72%. சென்னையும் உத்தரப் பிரதேசமும் இது முக்கிய மாக விளையும் இடங்கள். இது உள்நாட்டில் அதிகம் செலவாவதால்

ஏற்றுமதி குறைந்துவிட்டது. இந்த ஐந்து முக்கியமான எண்ணெய் விதைகளின் உற்பத்தி 1950–51 ல் 51 இலட்சம் டன்னாக இருந்தது, 1955–56-ல் 57 இலட்சம் டன்னாக உயர்ந்தது. இரண்டாம் திட்டம் இவற்றின் உற்ப்பத்தியை 70 இலட்சம் டன்னாக உயர்த்த எண்ணியிருக்கிறது. கீழே விவரத்தைக் காண்க.[1]

		இலட்சம் டன்களில்
நிலக்கடலை	...	47·00
எள்	...	6·51
சிறு சணல் விதை	...	4.28
இலுப்பை, கடுகு	...	10·60
ஆமணக்கு	...	1·61
மொத்தம்	...	70·00

இந்திய மத்திய எண்ணெய் விதைக் குழுவின் ஆதரவில் நல்ல ரகமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் திட்டம் நடத்தப்பட்டு நல்ல பலனைத் தந்திருக்கிறது. இரண்டாம் திட்டத்தில் மேலான விதைகளை விரிவான அளவில் மக்களிடையே அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பழங்களும் காய்கறிகளும்

இந்தியாவில் உள்ள வெவ்வேறு வகையான தட்ப வெப்ப நிலைகளாலும் மண்ணினாலும் இங்குப் பலவகையான காய்கறிகளையும் பழங்களையும் விருத்தி செய்ய முடியும். எனினும், விஞ்ஞான முறைப்படி உற்பத்தியைப் பெருக்குவதற்கு இதுவரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. டாக்டர் பர்ன்ஸ் கூற்றுப்படி, பிரிவினைக்கு முந்திய இந்தியாவில் பழ மரங்கள் உள்ள பரப்பு சுமார் 25 இலட்சம் ஏக்கர் என்றும், காய்கறிச் செடிகள் உள்ள பரப்பு 7 இலட்சம் ஏக்கர் என்றும் மதிப்பிடப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில் இருந்துவந்த உணவுப் பற்றாக்குறையின் காரணமாகக் காய்கறிகளை அதிகமாகப் பயிரிடும்படி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. பழங்களை உற்பத்தி செய்யும் இடங்களாவன, கங்க்ரா, குலு பள்ளத்தாக்குகள், தெற்குக் காஷ்மீர், அஸ்ஸாமின் மலைப்பாங்கான மாவட்டங்கள், கொங்கணி, நீலகிரி மலை. பயிரிடுவதற்குப் பழ வகைகளைத் தேர்ந்

[1] ‘இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்’ பக்கம் 264.

தெடுப்பதற்கு, அவற்றின் பலன் தரும் சக்தி, நல்ல நிலைமையில் நெடுந்தொலை கொண்டுசெல்லக்கூடிய நிலை, பழம் உண்டாகும் பருவத்தின் கால அளவு ஆகியவற்றைக் கவனிப்பார்கள். வட இந்தியாவில் மேடான இடங்களில் எல்லா வகையான ஐரோப்பியக் காய்கறிகளையும் பயிர் செய்யலாம். தென்னிந்தியச் சமவெளிகள் வெப்ப மண்டலப் பழவகைகளைப் பயிர் செய்வதற்கு ஏற்றவை. குலு, கங்க்ரா பள்ளத்தாக்குகள் பியர், வால்நட்டு, பீச்சு ஆகியவைகளுக்குப் பெயர் பெற்றவை. அஸ்ஸாம், நாகபுரி, பூனு ஆகிய இடங்களில் ஆரஞ்சுப் பயிராகிறது. மழை அதிகமாகவும், காற்று ஈரமாகவும் உள்ள இடங்களில் எல்லாம் மாம்பழம் விளையும். பழங்காலப் போக்குவரத்து, மார்க்கெட்டிங் முறைகளில் பழம் பயிரிடப்படுவதை விஸ்தரிப்பதற்கு முடியவில்லை. குலு, கங்க்ரா பள்ளத்தாக்குகளும், அஸ்ஸாம் மலைகளும் போக்குவரத்துச் சாதனங்கள் செல்ல முடியாத இடங்கள். அங்குத் தலையின் மேலும், பொதி சுமக்கும் கழுதைகளின் மேலும் தான் சுமைகளை எடுத்துச் செல்லவேண்டும். பழங்கள் பழுப்பதற்கு முன் பச்சைக் காய்களாகவே பறிக்கப்பட்டு, பழைய தேவதாரு மரப் பெட்டிகளிலோ, கூடைகளிலோ இலைகளும் புல்லும் சுற்றிலும் வைத்து அடைக்கப்படுகின்றன. இதனால் பழங்கள் வெதும்பி, ரெயிலை அடைவதற்கு முன்னால் சாதாரணமாக அழுகிவிடுகின்றன. பழத்தோட்டம் பயிரிடுவதில் வியாபார அமிசங்கள் சரியாகக் கவனிக்கப்படவில்லை. குளிர்ப்பெட்டிப் பாதுகாப்பு நிலையங்களும், பனிக்கட்டியால் குளிர்ச்சியாக்கப்பட்ட வண்டிகளும் கிடைத்தால், உள்நாட்டுச் சந்தையில் பழங்களைப் பயிரிடுவதற்கு நல்ல எதிர்காலம் உண்டு. போக்குவரத்து வசதியும், குளிர்ப்பெட்டி பாதுகாப்பும் இல்லாததனால் ஆண்டுக்கு ஒரு கோடி டன் அளவு உற்பத்தியாகும் நம் பழங்களில் ஐந்தில் ஒரு பங்கு வீணாகிவிடுகிறதென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இப்போது கிடைக்கும் பழங்களும் காய்கறிகளும் ஒரு நாளுக்கு முதியவர் ஒருவருக்கு முறையே 1·5, 1·3 அவுன்சுகள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், சமன் செய்யப்பட்ட உணவிற்குத் தேவையானது 3 அவுன்சு பழங்களும், 10 அவுன்சு காய்கறிகளும் ஆகும்.[1] போதிய ஊட்டம் பெறுவதற்குப் பால் மட்டுமன்றி, இந்தக் காப்பு உணவுகளும் மிக அதிகமாகப் பயிர் செய்யப்பட வேண்டும்.

காய்கறி, பழத்தோட்டங்களை விருத்தி செய்வதற்கு இரண்டாம் திட்டம் ரூ. 8 கோடி அளித்திருக்கிறது. இப்போதுள்ள 5 இலட்சம்

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 158.

ஏக்கர் பழத்தோட்டங்களைப் புதுப்பிக்கவும், புதியதாக 2 இலட்சம் ஏக்கரில் பழங்களைப் பயிரிடவும் இராச்சியத் திட்டங்கள் உத்தேசித்துள்ளன. குறிப்பாக நகரங்களின் அருகில், நல்ல ரகமான விதைகளைக் கடனாகக் கொடுத்தும், தொழில் நுட்ப உதவியளித்தும், காய்கறி உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படும். டப்பாக்களில் அடைக்கப்படும் பழங்களையும், காய்கறிகளையும் ஆண்டுக்கு 20,000 டன்னிலிருந்து 50,000 டன்னாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்ட இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் ஏற்றுமதி 1,000 டன்னிலிருந்து, 11,000 டன்னாக உயர்த்தப்படவிருக்கிறது.

மீன் பண்ணைகள்

மீன் பண்ணைகளைப் பற்றிச் சுருக்கமாகவேனும் குறிப்பிடாவிட்டால், நம் உணவுச் சாதனங்களைப்பற்றிய ஆராய்ச்சி முற்றுப்பெற்றதாகாது. மீன் பண்ணைகள் ஆண்டுதோறும் நம் தேசிய வருமானத்திற்கு ரூ. 10 கோடியை அளிக்கின்றன. மீன்கள் புரோட்டீன்கள், வைட்டமின்கள், தாது உப்புக்கள் முதலியவற்றை அதிகம் பெற்றிருப்பதால், அவை மதிப்பு மிக்க காப்பு உணவாக உள்ளன. இப்போது இவற்றின் உற்பத்தி 10 இலட்சம் டன்கள். இதில் 70 சதவீதம் கடல் மீன்கள்; 30 சதவீதம் புதிய நீரில் வாழும் மீன்கள். நீண்ட காலத்திற்கு இவற்றின் உற்பத்தி அளவு தெரியவில்லை. வருடத்திற்கு வருடம் பிடிக்கப்படும் மீன்களின் அளவில் அதிக வித்தியாசம் இருப்பினும், உற்பத்தியின் போக்கில் உயர்வு காணப்படுகிறது.[1] உள்நாட்டுப் பண்ணைகளுக்கு, ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள் ஆகியவற்றின் நீர்ப்பரப்பாகிய 150 இலட்சம் ஏக்கரில் ஒரு சிறு பகுதிதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடல் மீன் பண்ணைகளை விருத்தி செய்வதற்கு இந்தியாவின் கடலோரத்தில் அதிக வாய்ப்பு இருக்கிறது. கரையிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் செல்ல முடியாத நாட்டுப் படகுகளை உபயோகிப்பதாலும், துறைமுகம், இறங்குவதற்கு இடம் முதலியவை இல்லாததாலும் கடல் நீரில் உள்ள மீன்களில் ஒரு சிறிய பகுதியே இப்போது பிடிக்கப்படுகிறது. மீன் பண்ணை அபிவிருத்திக்குத் திட்டக் குழு ஒரு தனி அமைப்பை நிறுவ உத்தேசிக்கவில்லை. எனினும், அது நாட்டுப் படகுகளை இயந்திரப் படகுகளாக்கவும், புதிய இயந்திரப் படகுகளைப்

[1] மேலே கூறியதில் பக்கம் 306. விவரங்களுக்கு 23 ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

புகுத்தவும், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குக் கடல் வழிகளின் படங்களை வரையவும், பயிற்சியளிக்கவும், நல்ல முறையில் மார்க்கெட்டிங் செய்யவும் சிபாரிசு செய்துள்ளது. நான்கு அமிசத் திட்டத்தின் கீழ் (Point Four Programme) உணவு விவசாய அமைப்பின் மூலம் நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. முதல் திட்டத்தில் இதற்கு ரூ. 4·6 கோடி மொத்தச் செலவு செய்யவும், திட்ட இறுதியில் உற்பத்தியை 10 இலட்சம் டன்னிலிருந்து 15 இலட்சம் டன்னுக உயர்த்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டாம் திட்டம் மீன் பண்ணைகளின் வளர்ச்சிக்கு மொத்தம் ரூ. 12 கோடி செலவு செய்ய உத்தேசித்துள்ளது.[1]

[1] விவரங்களுக்கு, 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 292-97 காண்க.

9. நமது விவசாயப் பிரச்சினை

மண்வளம் குறைதல்

நாம் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து, முக்கியமான விவசாயப் பயிர்களை ஆராய்ந்ததில், நம் விவசாயப் பொருளாதாரத்தைப்பற்றி நம் மனத்தில் ஒரு பெரிய கேள்வி எழுகிறது. அது யாதெனின், இந்தியாவின் மண்வளம் குறைந்துகொண்டு வருகிறதா ? இந்தக் கேள்வி இக்காலத்தில் அடிக்கடி கேட்கப்படுகிறது. 1893-ல் ஓயெல்கெர் (Voelcker) இக் கேள்வியைக் கேட்டார். மண்வளம் குறைந்து வருகிறதென்பதற்கு உறுதியான சான்று உடனே கிடைக்கவில்லை என்று அவர் கூறினர். இருப்பினும், அவருடைய காலத்தில் நிலவரி அலுவலர் நாடு முழுவதும் நிலத்தின் உற்பத்தி சக்தி குறைந்து வருகிறது என்று நம்பியதைக் குறிப்பிடுகிருர். இது வெறுங்கூற்றல்லவென்று அவர் எண்ணினர். முப்பத்தைந்து வருடங்களுக்குப் பிறகு விவசாயக் குழு தன் அறிக்கையில், 'விவசாய நிலம் விளைச்சலைத் தருவதில் சிறிது சிறிதாகத் திறமை குறைந்து வருகிறதா ?' என்ற கேள்வியை மீண்டும் கேட்டது. இதற்குக் காரணம் இயற்கையினலோ, விவசாயத்தினலோ அளிக்கப்படும் பொருள்களைவிட அதிகமாக ஆண்டுதோறும் பயிர்கள் விளைவதற்கு வேண்டிய பொருள்களை நிலம் இழந்து வருகிறது என்ற நம்பிக்கையே. மண்வளம் படிப்படியாகக் குறைந்து வருவதற்குச் சான்றுகள் எவையும் விவசாயக் குழுவிற்குக் கிடைக்கவில்லை. அக் குழு பின்வருமாறு குறிப்பிட்டது. 'நமக்குக் கிடைத்துள்ள பரிசோதனை வழி விவரங்கள், ஆண்டுதோறும் நிலத்தில் பயிர் செய்யப்பட்டுப் பயிர்கள் நீக்கப்பட்ட பிறகு எரு இடாமல் இருந்தால், ஒரு நிலையான தன்மை ஏற்பட்டு விடுகிறது... ..இந்தியாவில் நீண்ட காலத்திற்குத் தஸ்தாவேஜுகள் கிடைக்காமையால் இதைச் சரியாக நிரூபிக்க முடியவில்லை. எனினும், இந்தியாவில் நெடுங்காலத்திற்கு முன்பே பெரும்பாலான நிலங்கள்

பரிசோதனே வழி விவரங்கள் குறிப்பிடும் நிலேயை அடைந்து விட்டன என்று நாங்கள் நினேக்கிறோம். ஒரு சமநிலே ஏற்பட்டு விட்டது. இப்போதுள்ள விவசாய முறைப்படி இனியும் நிலம் தன் வளத்தை இழந்துவிடும் என்று கூற முடியாது.'[1]

1930-ல் இதற்கு மாருக, வங்காள மாகாண பாங்கு விசாரணேக் குழு குறிப்பிடுவதாவது. 'எருக்கள் இடப்படாததால் விவசாய நிலத்தின் செழிப்புப் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. வெவ்வேறு பயிர்களின் விளேச்சல் குறைந்து கொண்டே வருகிறது.' இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக அது கீழ்வரும் அட்டவணேயைத் தருகிறது.[2]

வங்காளத்தில் ஏக்கருக்குச் சராசரி விளேச்சல் (பவுண்டுகளில்)

ஐந்தாண்டுக் கால முடிவு	கோதுமை	கார் கால அரிசி	கொள், உளுந்து	இலுப்பை, கடுகு
1906—07	801	1,234	881	492
1911—12	861	983	881	492
1916—17	698	1,036	867	460
1921—22	688	1,029	826	485
1926—27	721	1,022	811	483
20 வருடங்களில் குறைவு	80	212	70	9

உத்தரப் பிரதேசத்தில் வரலாற்றுக் காலம் முதல் கோதுமை விளேச்சல் குறைந்துகொண்டு வருகிறது என்பதற்குச் சான்ருக டாக்டர் ராதாகமல் முகர்ஜி இந்த அட்டவணேயைத் தருகிருர்.[3]

	ஏக்கருக்குச் சராசரிக் கோதுமை விளேச்சல் பவுண்டுகளில்	செய்தி கிடைத்த வழி
அக்பர் காலம்	1,555	
1827—40	1,000 (நீர்ப்பாசனம் பெற்றது) 620 (நீர்ப்பாசனம் பெருதது)	ஆயினி அக்பரி, தார்ன்டனுடைய முசாஃபர் நகர் நிலவரித் திட்ட அறிக்கை.

[1] விவசாயக் குழுவின் அறிக்கை, பக்கம்-76.

[2] வங்காள மாகாண பாங்கு விசாரணேக் குழுவின் அறிக்கை. பக்கம்-21-22.

[3] 'India Analysed' Vol. III, p. 169.

	ஏக்கருக்குச் சராசரிக் கோதுமை விளைச்சல் பவுண்டுகளில்	செய்தி கிடைத்த வழி
1917—21	1,280 (நீர்ப்பாசனம் பெற்றது) 840 (நீர்ப்பாசனம் பெருதது)	முசாஃபர் நகர் நில வரித் திட்டத்தைப்பற்றிப் பிந்திய அறிக்கை
1931	1,000 (நீர்ப்பாசனம் பெற்றது) 900 (சராசரி)	இந்தியாவில் சராசரிப் பயிர் விளைச்சல் (ஐந்தாண்டு அறிக்கை)

புதிய மாவட்டங்களில் சராசரி அடர்த்தி மிக அதிகமாக இருப்பதையும், காசி, அசம்கார், ஜான்பூர் போன்ற பழைய மாவட்டங்களில் அடர்த்தி குறைந்து வருவதையும் டாக்டர் முகர்ஜி நம் கவனத்திற்குக் கொண்டுவருகிருர்.

சராசரி அடர்த்தி

மாவட்டம்		1881	1891	1901	1911	1921	1931
கோரக்பூர்	...	574	657	649	707	722	787
பஸ்தி	...	582	637	659	653	687	737
காசி	...	885	914	875	890	899	930
அசம்கார்	...	733	790	700	675	691	710
ஜான்பூர்	...	780	816	776	746	745	797

'மொத்தம் பயிர் செல்யப்பட்ட பரப்புப் படிப்படியாக அதிகரித்து வந்தும், நீர்ப்பாசனம் பெறத்தக்க பரப்பில் வறட்சிக்காலத்தில் முறையே, 95, 93, 82 சதவீதமாகக் கிணற்றுப் பாசனத்தை மிக அதிகமாக விஸ்தரித்துங்கூட, நிலத்தின்மீது மக்கள் நெருக்கடி ஏராளமாக இருப்பதால், மக்களுடைய முயற்சி இங்குக் 'குறைந்து செல் விளைவை'க் காட்டி, ஜனத்தொகை குறையத் தொடங்கியிருக்கிறது என்று ஊகிக்கலாமன்ருே?' 1891-ல் கடைசி மூன்று மாவட்டங்களில் அடர்த்தி குறைந்திருப்பதுபற்றி அவர் இவ்வாறு குறிப்பிடுகிருர்.[1]

மார்ச் 1950-ல் பாடியாலாவில் நடந்த இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் எட்டாவது கூட்டத்தில், அக் குழு ஒரு குறிப்பில் இந்தியாவில் முக்கிய உணவுப் பயிர்களின் விளைச்சல் உலகத்திலேயே மிகக் குறைவானதென்றும், 'இந்தத் திருப்தியற்ற நிலைமை, ஆண்டுக்கு ஆண்டு படிப்படியாகக் குறைந்துவரும்

[1] மேற்கூறிய நூல், பக்கம்-184.

விளேச்சல்களால் மேலும் மோசமாகிவிட்டது' என்றும் கூறுகிறது. இக் குறிப்புக்குப் பின் ஓர் அட்டவணேயும் உள்ளது. அதைக் கீழே காண்க :[1]

	1936—39	1945—46 (சராசரி)	1948—49
அரிசி ...	793	703	699
கோதுமை ...	618	541	573
கொள், உளுந்து ...	543	463	519
கம்பு ...	435	322	303
சோளம் ...	659	594	529

இந்தியாவில் மண் இயற்கையாக வளம் குறைந்ததன்று; ஆனல், அதன் வளம் குறைக்கப்பட்டுவிட்டது. மேலும் 'மண்ணின் ரிசர்வ் பாங்கு' எனப்படும் குணபம் (humus) நம் நாட்டில் குறைந்து வருகிறதென்றும், அவ்வாறு குறையாமல் பாது காக்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது. அவ்வாறு நீண்ட காலம் வளம் குறைந்துகொண்டே வந்தால், "மேற்கு அமெரிக்கா, மொசொபொட்டேமியா பாலேவனம் ஆகிய இடங்களின் 'புழுதிக் குடர்களில்' காணப்படுவது போன்ற நோய் இதன் விளேவாக உண்டாகும்."[2]

வங்காளத்தின் நீர்ப்பாசன இலாகாக் குழு ஒன்று, நிலத்தின் வளம் மிகவும் குறைந்துவிட்டதால், அதை இனிக் காப்பாற்ற முடியாதென்றும், 'கடைசியாக அந்நிலம் சதுப்பு நிலமாகவும் காடாகவும் மாறிவிடும்' என்றும் குறிப்பிடுகிறது.[3] மத்திய வங்காளத் திலும் மேற்கு வங்காளத்திலும் விவசாயம் மிக அதிகமாகவும் விரைவாகவும் சுருங்கிவிட்டது. இதற்கு முன்பு இப்படி நிகழ்ந்ததே

[1] விவசாய போர்டுடன் (சிம்லா, 1952) இணேந்துள்ள பயிர்கள், மண் வகைகள் பிரிவின் எட்டாவது கூட்ட நடவடிக்கை. பக்கம்–81-83.

ஒப்பிடுக : '1910 முதல் அரிசியின் சராசரி விளேச்சல் ஒரு ஹெக்ட் டேருக்கு 10·1 குவின்டலாக இருந்து 8·8 குவின்டலாகக் குறைந்தது. அதே காலத்தில் அரசாங்கத்தின் ஒழுங்கான முயற்சியால் ஜப்பானில் விளேச்சல் 22·8-லிருந்து 27·1 குவின்டலாக உயர்ந்தது. (Sir John Boyd Orr, 'The White Man's Dilemma' 1953, p. 69.) இவ்வாறு நிலத்தின் வளம் குறைவதற்குக் குணபமும் உரங்களும் இல்லாததும், மண்வளம் அடியோடு குறைந்ததற்குப் 'பசுஞ் சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்தும் வழக்கமும் முக்கிய காரணம் என்று சர் ஜான் கூறுகிருர்.

[2] 'இந்தியாவின் பல கோடி மக்களும் இந்தியாவில் உணவுச் சுழற்சி வட்ட மும்' 'Indian Farming' Vol. II, 1941, p. 615.

[3] மேலே கூறிய, 'பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்தியா,' தொகுதி-III, பக்கம் 196-ல் மேற்கோளாகக் கட்டப்பட்டது.

இல்லை. பர்த்வானிலும் ஹூக்ளியிலும் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் பாதி வறிதே கிடக்கிறது. இன்னும் பயிர் செய்யப்படும் பரப்புக் குறைந்து வருகிறது.[1]

வங்காளத்தைப்பற்றி டாக்டர் ராதாகமல் முகர்ஜி கூறுவதாவது 'இப் பள்ளத்தாக்கின் மற்றொரு பகுதியில், மண்ணை நம்பி வாழும் மனிதனுக்கு விஞ்ஞானம் உதவி புரியாதது மட்டுமன்றித் தண்ணீரையும் கழிநீரையும்பற்றிய பிரச்சினைகளை விஞ்ஞான முறைப்படி கவனிக்காததால், உலகத்தில் எப்பொழுதுமே இல்லாத அளவுக்கு விவசாயம் வீழ்ச்சியடைந்துவிட்டது.' டிச்சர் (Ditcher) என்பவர் 'மூலதனம்' (Capital) என்னும் நூலில், 'இந்திய அரசாங்கம் வங்காளத்தின் சில பகுதிகளை நந்தவனமாகக் கண்டது; இப்போது அவற்றைப் பாலைவனமாக்கிவிட்டது. நிருவாகப் பொருளாதார முறைகளில் வங்காளத்திற்கு இழைக்கப்பட்ட இப் பெருந் தீங்கிலிருந்து அது இன்னும் மீளவில்லை' என்கிறார்.[2]

இதுபோலவே பஞ்சாபில், பஞ்சாப் அரசாங்கத்தின் விவசாய இரசாயன நிபுணர் டாக்டர் லாண்டர் (Dr. Lander) என்பவர், 'பஞ்சாபில் கணிசமான நிலப்பகுதி பயிர்த்தொழில் செய்யாமல் கைவிடப்பட்டுவிட்டது' என்றும், 'காலார் நோயின் காரணமாக இன்னும் அதிக நிலம் கைவிடப்பட்டு வருகிற' தென்றும் கூறினர்.[3]

சர் ஜான் ரஸ்ஸல் அரிசி விளையும் நிலம்பற்றி 1937-ல் குறிப்பிடுகையில் இப் பிரச்சினையை மேலும் ஆராயவேண்டுமென்று தம் கருத்தைக் கூறாமல் விட்டுவிட்டார். 'அரிசி விளையும் பரப்பு குறைந்துகொண்டு வருகிறது. விளைச்சல் குறைந்து வருகிறதென்று பல முறைகள் என்னிடம் கூறப்பட்டது. இதுபற்றி எண்கள் சரியாகக் கிடைக்கவில்லை. மேலும் ஆராய்ந்து பார்த்து இந்த நம்பிக்கைக்கு இடமிருந்தால், குறைவு உள்ளதாகக் கூறப்படும் இடங்களில், இதுபற்றித் திட்டமான விவரங்களை அறிவதற்கு, இக் கழகம் 'மாதிரி ஆராய்ச்சிகளை' (Sample Surveys) நடத்த ஏற்பாடு செய்வது நல்லது.'[4]

மண்வளம் குறைவதுபற்றிச் சரியான விவரங்களைப் பெற வேண்டுமென்று ஓயெல்கெர் கூறி, 45 வருடங்களுக்குப் பிறகும்

[1] மேலே கூறிய நூல், பக்கம் 197.

[2] மேலே கூறிய நூல், பக்கம் 195.

[3] விவசாயக் குழுவின், பயிர்கள், மண்வகைகள் பற்றிய பிரிவின் இரண்டாவது கூட்ட நடவடிக்கைகள், பக்கம் 43.

[4] மேலே கூறியதில், பக்கம் 24.

இந்திய அர்சாங்க உயர் அலுவலர்கள் 'சரியான தகவல்' பெறுவதன் முக்கியத்துவம்பற்றி விவரித்துக்கொண்டே இருந்தார்கள். திட்டக் குழுவும் இந்தக் குரல்களோடு சேர்ந்து பாடுகிறது. 'சாதாரண விளைச்சலையும் சந்தர்ப்ப அமிசத்தையும் அடிப்படையாகக் கொண்ட உத்தியோகப் பூர்வமான விளைச்சல் மதிப்பீடுகள், தங்கள் சொந்தக் கருத்தைக் கூறுபவையாய் உள்ளன.' புதிய சுதந்திர சகாப்தம் வேறொரு அமிசத்தைப் புகுத்தி, இதை நம்ப முடியாததாகச் செய்துவிட்டது. அது என்னவென்றால், திட்டக் குழுவின் பணிவான சொற்கள்படி 'இராச்சிய அரசாங்கங்கள் ஆண்டுதோறும் தங்கள் உபரிகளையும் பற்றாக்குறைகளையும் உணவுக்கான அடிப்படைத் திட்டத்திற்காக அறிவிக்கத் தயங்குவதுதான். பருவம் சரியாக இல்லாதபோது உற்பத்தியைக் குறைத்து மதிப்பிடும் போக்கு தெளிவாகக் காணப்படுகிறது.'[1]

சில முக்கியமான பயிர்கள் ஓர் ஏக்கருக்குத் தரும் விளைச்சலில் உள்ள வேறுபாட்டைக் காணும்போது, இந்தியாவில் மண்வளம் குறைந்துகொண்டு வருகிறதென்று தெரிகிறது. கீழ்வரும் அட்டவணையில் காணப்படும் குறியீட்டெண்கள் இக் கருத்தை வலியுறுத்துகின்றன :[2]

பரப்பு விளைச்சல்பற்றிய குறியிட்டெண்கள் (1913-14 = 100)
பிரிட்டிஷ் இந்தியா

வருடம்	அரிசி		கோதுமை		இலுப்பை, கடுகு		நிலக் கடலை		பருத்தி	
	பரப்பு	விளைச்சல்	பரப்பு	விளைச்சல்	பரப்பு	விளைச்சல்	பரப்பு	விளைச்சல்	பரப்பு	விளைச்சல்
1927-28	109	97	116	91	99·8	81	338	390	102	113
1939-40	121	106	123	99	103	107	577	489	88	95
1940-41	120	103	126	86	104	105	617	578	97	115

1951-52 உடன் முடிவடையும் மூன்றாண்டுகளில், பரப்பையும் உற்பத்தியையும் ஒப்பிட்டுக் காட்டும் இந்த அட்டவணை, இவற்றில் உள்ள ஏற்ற இறக்கங்களைப்பற்றித் தெரிவிக்கிறது :[3]

[1] "முதல் ஐந்தாண்டுத்திட்டம். பக்கம் 155-56.

[2] இந்தியாவின் முக்கியப் பயிர்களின் பரப்பும் விளைச்சலும்பற்றிய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

[3] ஓவென் கொடுத்துள்ள எண்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது. மேலே கூறிய நூல். பக்கம். 158.

1951-52-ல் பரப்பும் உற்பத்தியும்பற்றிய குறியிட்டெண்கள்
(1949—50 = 100)

	பரப்பு	உற்பத்தி
அரிசி	97·5	88·7
கோதுமை	94·5	90·3
தினை	95·7	77·3
பருத்தி	124·3	113·9
சணல்	140·4	145·0
எண்ணெய் விதைகள் ...	112·2	93·2

1949-50 உடன் முடிவடையும் மூன்று வருடங்களை யுத்தத்திற்கு முந்திய காலத்தோடு ஒப்பிடும்போது, தானியங்கள் விளையும் பரப்புக் கணிசமாக மாருமலிருப்பினும், விளைச்சல் 619 பவுண்டிலிருந்து 565 பவுண்டாகக் குறைந்தது என்று திட்டக் குழு கூறுகிறது.[1]

பரப்பு அதிகரித்திருக்க, அதற்கேற்ப விளைச்சல் அதிகரிக்காமல் குறைந்திருப்பதனுல், இக் குறையில் ஒரு பகுதி மட்டமான நிலத்தில் பயிர் செய்யப்பட்டதால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நாம் இப்போது அறிகிரேும். இதற்கு மற்றொரு காரணம், ஜனத்தொகை வளர்ச்சியினுல் தரிசாக விடப்படும் நிலத்தின் பரப்பும் காலமும் குறைந்ததாக இருக்கலாம். இதனுல் கிடைக்கும் உரத்திற்குத் தக்கவாறன்றி அதிகமாக நிலம் பயிரிடப்பட்டது. இதன் விளைவு மண்வளத்தைக் குறைப்பதுதான்.

மண்வளக் குறைவை வேறு விதமாகவும் கவனிக்கலாம். குறிப்பிட்ட பகுதிகளுக்குப் புள்ளிவிவரங்கள் கிடைக்காததால் இந்தியாவில் மண்வளம் குறையவில்லை என்று கூற முடியாது. மேலும் மேலும் நிலம் பயிர் செய்யப்படுவதால், போதாமல் அளவாகக் கிடைக்கும் உரத்தை அதிகமான பரப்பிற்கு அளிக்கவேண்டியதாயிருக்கிறது. விவசாயத்தில், நிலத்திலிருந்து பயிராக எடுக்கப்பட்டதற்கு ஈடாக வேறு வகையில் நிறைவு செய்யவேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஏனென்ருல், உரமிடாமல் தொடர்ந்து பயிர் செய்து வந்தால், எவ்வளவு வளமுள்ள மண்ணும் வறிதாகிவிடும். மேலும், எவ்வளவுக்கெவ்வளவு அதிகப் பயிர் விளைகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உரங்களாலோ, மாற்றுப் பயிர் முறை போன்ற உபாயங் களாலோ நிலத்திற்குச் செழிப்பைத் திரும்ப அளிக்கவேண்டும். இந்தியாவில் நாம் பருத்தி, சணல், எண்ணெய் விதைகள், கோதுமை, நிலக்கடலை முதலிய எதை ஏற்றுமதி செய்தாலும் அது நிலத்தில்

[1] மேலே கூறியதில் பக்கம் 155.

உள்ள பகுதிப்பொருள்களை (constituents) பெரிய அளவில் அகற்றி விடுகிறது. மண்ணுக்கு நாம் திரும்ப எதையாவது கொடுக்கிறோமா? நமது முக்கியமான இயற்கை உரமாகிய பசுஞ்சாணத்தை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகிறோம். நாம் வெறுப்பின் காரணமாக மீன் அல்லது எலும்பு உரத்தைப் பயன்படுத்துவதில்லை. இலைகளையும் தண்டுகளையும் நாம் பயன்படுத்துகிறோம் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதனால் மண்ணின் பகுதிப்பொருள்களில் ஒரு சிறு பாகமே அதற்குத் திரும்ப அளிக்கப்படுகிறது. நாம், நம் பயிர்களை மட்டுமன்றி, எலும்புத்தூள், எண்ணெய் விதைகள், பிண்ணாக்கு முதலிய உரச்சாதனங்களையும் ஏற்றுமதி செய்கிறோம். 'பயிர்களையும் உரங்களையும் ஏற்றுமதி செய்யும் நாடு செழிப்பில் குறையவேண்டியதுதான்.' அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இது கூறப்பட்டும், இன்னும் நம் ஏற்றுமதி வாணிபத்தில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை.

இதற்கு மாறாக, இந்திய மண்ணில் சீர்திருந்திய உழவு முறைகளும் சரியான உரமும் பயன்படுத்தப்பட்டால் தக்க பலன் இருக்கிறதென்றும், அடுத்து இருபது, முப்பது ஆண்டுகளில் பயிர் செய்யப்படும் நிலத்தில் 30 சதவீதம் அதிக உற்பத்தி செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது.[1] 1944-ல் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த ஆறு இந்திய விஞ்ஞானிகள், சரியான நிருவாகத்தினாலும், போதிய உரங்களாலும் அடுத்த பத்து வருடங்களில் விவசாய உற்பத்தியை இரண்டு மடங்காக்கலாம் என்கிறார்கள்.[2] ஒருகால் பழைய விவசாய முறைகள், 'விளைச்சலுக்கும், மண் தன் வளத்தைப் பெறுவதற்கும் இடையே வேலைக்குத் தக்க சமநிலையை ஏற்படுத்தியிருந்தன' எனின் தவறாகாது.[3] 1939 டிசம்பரில் மத்திய மாகாண—பீரார் அரசாங்கத்தின் விவசாய இரசாயன நிபுணர் ராவ் பகதூர் பால் (Rao Bahadur Bal) என்பவர், விவசாய போர்டின் 'பயிர்கள், மண் வகைகள் பிரிவின்' மூன்றாவது கூட்டத்தில் விவாதிப்பதற்காக எழுதிய குறிப்பில், பல நூற்றாண்டுகளாகப் பயிர் செய்யப்பட்டு வரும் இந்திய மண்வகைகள் 1900—1922 ல் பயிர் விளைச்சலில் படிப்படியான குறைவு ஒன்றும் ஏற்படவில்லை என்று கூறியுள்ளார். இக் கருத்தை அவர் (அண்மையில் பயிரிடப்பட்ட மண்ணையுடைய) கனடாவிலும், (பல நூற்றாண்டுகளாகப் பயிரிடப்பட்டு வரும் மண்ணையுடைய) இந்தியாவிலும் உண்டான கோதுமை விளைச்சலை அட்டவணைப்படுத்திக் காட்டி ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

[1] பதினேழாவது இந்திய விஞ்ஞான காங்கிரசின் நடவடிக்கைகள், பக்கம் 34.
[2] 'Times of India' 9th November, 1944.
[3] R. முகர்ஜி எழுதிய மேற்கூறிய நூல், பக்கம், 172.

ஏக்கருக்குக் கோதுமை விளைச்சல்
புஷல்களில்

வருடம்	கனடா	இந்தியா
1895	...	9·6
1900	...	10·5
1905	...	11·9
1910	18·9	11·6
1915	19·1	11 4
1920	13·2	11 5
1922	15·4	11·8

இந்திய மண் ஒரு நிலையான தன்மையடைந்துவிட்டதென்று டாக்டர் பால் கருதுகிறார். பல நூற்றாண்டுகளாகப் பயிர் செய்யப் பட்டுவரும் மண்ணையுடைய ஐரோப்பிய நாடுகள் விஷயத்திலும் இது பொருந்தும். மற்றப் பயிர்கள் விஷயத்திலும் இது உண்மை என்று டாக்டர் பால் உறுதியாகக் கூறுகிறார். 'பல நூற்றாண்டுகளாகப் பயிரிடப்பட்டுப் போதிய அங்ககப் பொருள்களையும் பாஸ்வேட்டுகளையும் திருப்பியளிக்காததாலும், சில முக்கியமான வழிகளில் சரியாக மண் நிருவாகம் நடைபெறாததாலும், மிகவும் குறைந்த விளைச்சலைத் தரும் நிலையான செழிப்புள்ள நிலையை நம் மாவட்டத்திலுள்ள மண்கள் அடைந்துவிட்டன' என்று அவர் கூறுகிறார். ஆகையால், அவர் 'இனி நம் முன் உள்ள பிரச்சினை, மண்வளம் மேலும் குறைவதைத் தடுப்பதன்று. ஆனால், அநேகமாக மிகவும் குறைந்தபட்சச் செழிப்பு நிலையை அடைந்துவிட்ட மண்ணை வளப்படுத்தும் முறைகளைக் கண்டுபிடிப்பதுதான்' என்று கூறுகிறார்.

கடந்த நாற்பதாண்டுகளில் காணப்படும் போக்குகளைக் கண்டு பிடிப்பதற்காக உணவு, விவசாய அமைச்சுத்துறை மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியைப்பற்றித் திட்டக் குழு குறிப்பிடுகிறது. இதன்படி 'எந்த இராச்சியத்திலும் எல்லாப் பயிர்களும் ஒரே மாதிரியாக விளைச்சல் குறைவைக் காட்டவில்லை. இந்த ஆராய்ச்சி, மண்வளம் அண்மையில் குறைந்துவிட்டதாகவோ, கால்நடைக் கலைத்தரத்தில் குறைவு ஏற்பட்டு விட்டதாகவோ நம்புவதற்குக் காரணமில்லை' என்று கூறி முடிக்கிறது.[1] பரப்பு அதிகரித்ததற்கு ஏற்ப உற்பத்தி பெருகவில்லை என்று 'வரைவு அறிக்கை' (Draft Report) கூறுகிறது.[2]

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 156.

[2] பக்கம் 12.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைத்த விவரங்களைக்கொண்டு விளைச்சலின் போக்கைப்பற்றி முடிவு கூறுவதற்குத் திட்டக் குழு தயங்கியது.[1]

உணவுப் பற்றுக்குறையுள்ள இவ்வுலகத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், விவசாய உற்பத்தித் திறனைக் கணக்கிடுவதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. டாக்டர் டட்லி ஸ்டாம்பு, தாம் அண்மையில் எழுதிய நூல் ஒன்றில், தேர்ந்தெடுத்த இருபது நாடுகளில், ஒன்பது பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு விளைச்சலைக் கண்டுபிடிப்பதற்குப் பயிர்களின் உற்பத்தித் திறனை அளக்கக் கெண்டால் (Kendall) கூறிய வழியைப் பின்பற்றியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், நெதர்லாந்து, ஜப்பான், இந்தியா ஆகியவை அடங்கும். இயற்கையின் கொடைகளாகிய மண், சீதோஷ்ணம் ஆகியவற்றோடு விவசாயத் திறமையும் சேர்ந்தால்தான் பயிர் உற்பத்தித் திறன் உண்டாகும். ஆதலால், டட்லி ஸ்டாம்பு ஓர் அட்டவணையில் இந்தியாவின் சீதோஷ்ண நிலை வசதி, திறமையற்ற விவசாயத்தினால் பயனற்றுப் போய்விட்டதால், அது எல்லா நாடுகளுக்கும் கீழ் இருக்கிறது என்கிறார்.[2] ஆனால், அவர் ஓர் எச்சரிக்கை விடுக்கிறார். ஓர் அலகு பரப்பில் உண்டாகும் உயர்ந்த உற்பத்தியை விவசாயத் திறமையின் முக்கியமான அடையாளமாகக் கொள்ள முடியுமா? இப்போதுள்ள தொழிலாளர் எண்ணிக்கையைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களைக் கொண்டே இப்போது உலகத்தில் உண்டாகும் உற்பத்தியைத் தொடர்ந்து நிலைபெறச் செய்யலாம். நிலம் அதிகமாகவும்

[1] இந்திய அரசாங்கம் தந்துள்ள பின்வரும் எண்களிலிருந்து ('இந்தியா—1953') நாம் ஒரு திட்டமான முடிவுக்கு வர முடியாது; எனினும், இவ்வெண்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

1947—52 ஆண்டுகளுக்கு ஓர் ஏக்கருக்கு முக்கியப் பயிர்களின் விளைச்சல்

(சராசரி)	1936-39	1947-48	1948-49	1949-50	1950-51	1951-52
அரிசி (சுத்தம் செய்தது) ...	809	739	698	688	598	632
கம்பு ...	437	369	305	338	315	322
தினை ...	351	303	246	273	256	221
சோளம் ...	683	640	551	559	489	548
கேழ்வரகு ...	696	633	613	625	579	494
சிறுதினைகள் ...	414	418	344	375	340	362
கோதுமை ...	623	599	566	584	592	556
பார்லி ...	755	781	641	631	681	613
கொள், உளுந்து ...	518	522	496	401	430	423
நிலக்கடலை ...	878	758	709	770	692	579
சிறு சணல் விதை ...	257	243	252	245	235	210

[2] 'நமது வளர்ச்சியடையாத உலகம்' 1953, பக்கம் 95 முதல்

தொழிலாளர் குறைவாகவும் உள்ள அமெரிக்கா போன்ற நாட்டில் இப்படிக் கருதுவது இயற்கையே. ஆனுல், இந்தியா போன்று ஜனத்தொகை அதிகமுள்ள நாட்டில், நிலம் குறைவாகவும் தொழிலாளர் அதிகமாகவும் இருக்கும்போது, தொழிலாளர் திறமையை அதிகரிக்கச் செய்தால் வேலையின்மைப் பிரச்சினைதான் அதிகரிக்கும்.

இதுவரையில் நிலத்தின் செழிப்புக் குறையவில்லையென்ருலும், எதிர்காலத்தில் எப்படி இருக்கும்? ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே போனுல், நம் எதிர்காலத் தேவைகளை நிலம் ஈடு செய்ய முடியுமா? நிலத்தின் பகுதிப் பொருள்களையும், அது அளிக்கக்கூடிய செழிப்பையும் நம் ஜனத்தொகை அதிகரிப்பது கருதிப் பாதுகாப்பது மிக அவசியம் என்று நாம் உணர்ந்திருக்கிருேமா? 'நாம் கொடுத்தால்தான் நமக்குப் பிறர் கொடுப்பார்கள்' என்ற விதி, மக்கள் உறவு முறைக்குப் பொருந்துவது போலவே, விவசாய உற்பத்திக்கும் பொருந்தும். விவசாயத்தில், கடந்த சில வருடங்களாக நாம், நம் மூலதனச் சாதனத்தையே செலவழித்துக்கொண்டிருக்கிருேம். கடந்த சில ஆண்டுகளாக நாம் அதிகமாகக் கேள்விப்படும், 'அதிக உணவு உற்பத்தி செய்' என்ற இயக்கம், நமது உடனடித் தேவை பற்றிய குறுகிய கால நோக்கத்தினுல், இந்த அழிவு இன்னும் வேகமாக நிகழ்ந்தது.

சென்ற அறுபது ஆண்டுகளில் ஒருபுறம் இரசாயனம், மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் ஆகியவைபற்றி நம் அறிவு வளர்ந்திருப்பதாலும், மற்ருெருபுறம், இயந்திரங்கொண்டு உற்பத்தி செய்யும் முறைகளைத் தெரிந்திருப்பதாலும் நல்ல நில அபிவிருத்திக் கொள்கையைக் கையாள்வதால், நிலம் செழிப்புக் குறையாமல் இருப்பதோடு, நம் மக்களும் உயர்ந்த தரமான வாழ்க்கை வாழ்ந்து, ஏற்றுமதி செய்வதற்கான உபரி விவசாய உற்பத்தியையும் பெறக்கூடும் என்று சொல்லப்படுகிறது. மேலும், இந்தியாவில் 'அதிக உற்பத்தி செய்ய முடியாமலிருப்பதற்குக் காரணம், பரிசோதனே வழி ஆராய்ச்சியும் விஞ்ஞான அறிவும் இன்மை யன்று; ஆராய்ச்சிக்கும் விஸ்தரிப்புக்கும் இடையே உள்ள நெடுந்தூரம்தான் இதற்கு முக்கியமான காரணம் என்று தெரிகிறது.'[1] அரிசி விஷயத்தில் மட்டுமன்றி, எல்லாப் பயிர்களுக்கும் இது பெருந்தும். பயிர்களை அகற்றி விடுவதாலும், மழையின் அரிப்பினுலும் மண்வளம் போய்விட்டால் அந்த நஷ்டத்தை நம்மிடமுள்ள தாதுப்பொருள் சாதனங்கள் முதலியவற்ருல் ஈடுசெய்து காப்பாற்ற முடியும். இருபுற வெடிகனிச்

[1] கே. இராமையா எழுதிய 'அரிசி வளர்ப்பும் பிறப்பியலும்' இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், விஞ்ஞானக் கட்டுரை எண் 19, (1953) பக்கம் 294.

செடிகளின் (leguminous plants) வேர்களில் வாழும் பாக்டீரியாக்கள் மண்ணுக்கு எப்பொழுதும் நைட்ரஜனை அளித்துக் கொண்டே இருக்கின்றன என்று கூறப்படுகிறது. நம் விவசாயத் தேவைக்குப் போதுமான கந்தகமும் பாஸ்வரமும் போதிய அளவு உள்ளன.

உரங்கள் மலிவாகிக்கொண்டு வருகின்றன. உற்பத்தி முறைகள் சீர்திருந்தினால். கலப்பு உரங்களில் உள்ள மிகவும் விலையுயர்ந்த நைட்ரஜன் மலிவாகக் கிடைக்கும். மேலும் கோதுமை, அரிசி, பருப்புகள் முதலியவைகளுக்குப் போதாத சிறிய பயனற்ற நிலங்களைக் காய்கறிகளையும் பழங்களையும் பயிரிடும் தோட்டங்களாக மாற்றலாம். இதனால், நிலமில்லாதவர்களுக்கு வேலை கொடுத்து சிற்றளவுக் கிராமத் தொழில்களை நிறுவுவதற்கு வாய்ப்பளிக்க முடியும்.

ஆகவே, நாம், நம் நாட்டில் விவசாயத்தின் எதிர் காலத்தைப்பற்றி நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. ஆனால், திட்டமிடுவதற்குச் சிந்தனையும், அத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியும் நமக்கு வேண்டும்.

நம் விவசாயப் பிரச்சினையின் இரண்டு தன்மைகள்

சென்ற நூற்றுண்டுகளாக நம் விவசாயப் பிரச்சினையின் சிக்கலான தன்மைபற்றிப் பலர் அடிக்கடித் தம் கருத்துகளைக் கூறி வந்துள்ளனர். இந்திய விவசாயம் நாகரிகத்தில் குறைந்ததல்லவென்றும், இந்திய விவசாயி, அமெரிக்க அல்லது ஆங்கில விவசாயி போலவே சிறந்தவன் என்றும் நமக்கு அடிக்கடி நினைவூட்டி வந்திருக்கிறார்கள். இந்தியாவில் பயிர்களை விளைவிக்கும் நிலைமை மிகவும் நல்லதென்றும், நம் உழவர்கள் பல நூற்றுண்டுகளாக விவசாய அனுபவமுடையவர்கள் என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நிறைவேற்றக்கூடிய வாய்ப்புள்ள சிறந்த யோசனைகளை இந்திய விவசாயிக்குக் கூறுவதைவிட, இங்கிலாந்தின் விவசாயத்தில் உண்டாகக்கூடிய முன்னேற்றங்களைப்பற்றிக் குறிப்பிடுவது எளிது என்றும் கூறப்படுகிறது. 1893-லேயே ஓயெல்கெர், தமது விவசாய அறிக்கையில், தாம் யோசனை கூறும்போது, தாமும் தெரிந்து கொள்ள வேண்டியது அதிகம் இருக்கிறதென்றும், இந்திய விவசாய நிலையை ஆராய்ந்து, தாம் தெரிந்துகொள்ள முடியாததும் அதிகம் உண்டு என்றும் கூறினர்.[1]

[1] இந்திய விவசாய முன்னேற்றம்பற்றிய அறிக்கை, பக்கம் 12.

இந்திய விவசாயப் பிரச்சினை இரண்டு விதமானது. முதலாவதாக, விவசாய நிலைமையிலும் நடைமுறையிலும் நாடு முழுவதிலும் அதிக வேற்றுமைகள் காணப்படுகின்றன. அதனால், பம்பாயில் குஜராத் போன்ற இடங்களுக்கு விவசாயத்தில் முன்னேற்றமே தேவையில்லை. ஆனால், மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் முன்னேற்றத்திற்கு இடமிருக்கிறது. இரண்டாவதாக, மற்ற நாடுகளோடு இந்தியாவின் விவசாய உற்பத்தித் திறனை ஒப்பிட்டுப் பார்த்தால், உலகத்தில் மற்றப் பகுதிகளில் கிடைப்பதைவிட இந்தியாவில் கிடைக்கும் சராசரி பயிர்களின் விளைச்சல் மிகவும் குறைவு. இந்திய விவசாயியின் பிரச்சினை இரண்டு விதமானது. அது போலவே அப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிகளும் இரண்டு விதமானவை. (1) உடனடியாகச் செயல்முறைக்குக் கொண்டுவரக்கூடிய, இக் காலச் சிறந்த விவசாய முறைகளை உழவர்களுக்குக் கற்பித்தல்; (2) விஞ்ஞானக் கருவிகளால் பேரளவு விவசாய முறையைக் கடைப்பிடித்து, உழவு முறைகளில் அடிப்படையான மாறுதலை உண்டாக்குதல்; இதற்கு இப்போதுள்ள சமூக, பொருளாதார அமைப்புகளையும் முதலில் அடியோடு மாற்றவேண்டும்.

இந்தியாவின் விவசாய நிலையில் உள்ள வேற்றுமைகள்

கீழ்வரும் அட்டவணையில் ஓர் ஏக்கருக்குக் கிடைக்கும் விளைச்சலில் வெவ்வேறு பயிர்கள் காட்டும் ஏற்ற இறக்கங்களை விளக்கமாகக் காணலாம்.

	இந்தியாவின் சராசரி	சென்னை	பம்பாய்	மத்தியப் பிரதேசம்	பீகார்	உத்தரப் பிரதேசம்	மேற்கு வங்காளம்	பஞ்சாப்
கோதுமை	628	...	382	399	827	757	565	804
அரிசி	748	1023	887	596	671	592	830	565
சோளம்	724	778	631	996	636	800	721	780
கம்பு	438	541	341	498	562	481	707	190
உளுந்து	555	431	331	385	717	626	594	430

சென்னையில் அரிசி விளைச்சல் ஏக்கருக்கு 1023 பவுண்டுகள். ஆனால், பஞ்சாபிலும் உத்தரப் பிரதேசத்திலும் முறையே 565, 592. மத்தியப் பிரதேசத்தில் பீகாரைவிட இரண்டு மடங்கு அதிகம் நிலத்தில் கோதுமை விளைந்தாலும், பீகாரைவிட மத்தியப் பிரதேசத்தில் ஏக்கருக்கு விளைச்சல் பாதிக்கும் குறைவே. வெவ்வேறு மாகாணங்

களில் உள்ள மண், சீதோஷ்ணம், மழை முதலியவற்றில் வேற்றுமை இருப்பதாகக் கொண்டாலும், விளைச்சலில் காணப்படும் இந்த அதிக வித்தியாசத்திற்கு எளிதில் காரணம் கூற முடியாது. அரசாங்க வெளியீடுகளில் உள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால், ஒரே இராச்சியத்தில் ஒவ்வொரு வருஷத்திற்கும் ஓர் ஏக்கருக்குக் கிடைக்கும் விளைச்சலில் அதிக வித்தியாசம் இருக்கிறது. இதையும் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை. விவசாயத் துறையினர் வெவ்வேறு தரமுள்ள நிலங்களின் சராசரி விளைச்சலை ஊகமாகக் கொண்டு கூறியுள்ள அரசாங்கப் பூர்வமான புள்ளி விவரங்களிலிருந்து நாம் ஒரு பயனுள்ள முடிவுக்கும் வர முடியாது என்றே கூறவேண்டும்.[1]

குறைந்த விவசாய உற்பத்தித்திறன்

அடுத்தபடியாக, இந்தியாவில் பல வகையான பயிர்கள் ஓர் ஏக்கருக்கு அளிக்கும் விளைச்சலை, அதே பயிர்கள் மற்ற நாடுகளில் ஓர்

[1] ஒப்பிடுக: 'தாற்காலிக நிலவரித் திட்டமுள்ள மாகாணங்களில் பரப்புக்கேற்ற எண்கள் அநேகமாகச் சரியானவை என்று கூறலாம். ஆனால், சாசுவத நிலவரித் திட்டமுள்ள மாகாணங்களில், பரப்புக்கேற்ற எண்கள் பெரும்பாலும் ஊகமானவையாகையால், இவை போலவே அவையும் சரியானவை என்று கூற முடியாது. மேலும், வெவ்வேறு மாகாணங்கள் பயிரறுக்கும் சோதனைகளை நடத்திய பிறகு, அதன் அடிப்படையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தயார் செய்யப்படும் திட்ட விளைச்சலிலிருந்து உற்பத்தியளவுகள் (Standard yields) கணிக்கப்படுகின்றன. இப்பயிரறுக்கும் சோதனைகளிலிருந்து கிடைக்கும் விவரங்கள் சிறிதும் நம்பத்தகாதவை என்று அனுபவத்தினால் முடிவாகத் தெரிகிறது.'' W. பர்ன்ஸ் எழுதிய 'இந்தியாவில் விவசாய முன்னேற்றத்திற்குத் தொழில் நுணுக்கச் சாத்தியக்கூறுகள்', 1944, p. III.

1944 முதல் இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு புதிதாக உற்பத்தியை மதிப்பிடுவதற்கு அங்கொன்றும், இங்கொன்றுமாக மாதிரி ஆராய்ச்சி செய்யும் முறைப்படி (Random sampling Technique) பல ஆண்டுகளுக்கு விவரங்களைச் சேகரித்தால், நீண்ட காலத்தின் போக்கைக் காட்டக்கூடிய நம்பத்தக்க எண்கள் கிடைக்கும் என்று திட்டக் குழு நம்புகிறது. இந்த முறைப்படி உற்பத்தியை மதிப்பிடுவதற்கு இக் குழு முதன்மையளித்துள்ளது. எனினும். திருப்தியற்ற முறையில் மதிப்பீடுகளைச் செய்யும் நிலவரி அலுவலர்கள் போலவே, இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்காகப் பயிற்சியளிக்கப்பட்டவர்களும் இருப்பார்கள் என்று நாங்கள் கருதுகிறோம்.

மேலும் ஒப்பிடுக: 'பயிரறுக்கும் சோதனைகளால் கிடைத்த ஊகமான சராசரி எண்ணை, விதைக்கப்பட்ட பரப்புகளின் எண்களோடு பொருத்திப் பார்த்தால்தான் உற்பத்தியளவுகளை மதிப்பிட முடியும். மேலும், இந்தியா முழுவதற்குமான எண்கள் மிக அதிகமாக இருப்பதால், ஒரு சிறிதளவு தவறு உண்டானாலும், பல இலட்சம் டன் உணவளிக்கக்கூடிய மிகப்பெரிய பரப்பில் அது மிகுதியாகப் பாதிக்கும். அன்றியும், ஏதாவதொரு பகுதியில் காலநிலை வேறுபாட்டினால் அழிவு உண்டானால், உற்பத்தியின் போக்கைப் பற்றி எந்த முடிவுக்கும் வருவதற்கு, நாடு முழுவதற்கும் உரிய எண்கள் நமக்கு உதவா. பல பகுதிகளில் நல்ல மழையால் உண்டாகும் நன்மை வெள்ளங்களால் அழிந்துவிடுகிறது. விதைக்கப்பட்ட பரப்புகளோடு உற்பத்தி எண்களை ஒப்பிட்டுச் செழுப்பிலோ, உற்பத்தியிலோ கூடுதல் அல்லது குறைவு இருக்கிறதென்று முடிவுக்கு வருவது மேற்கூறிய காரணங்களால் பயனற்ற செயலாகும்.' மேற்கூறிய ரௌலண்டு ஒவென் எழுதிய நூல், பக்கம் 157.

ஏக்கருக்கு அளிக்கும் விளைச்சலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் விவசாய உற்பத்தித் திறன், சீனு, ஜப்பான் ஆகியவற்றின் உற்பத்தித் திறனேடு ஒப்பிடக் கூடியதாக இருக்கிறது. ஏனெனின், இந்தியாவைப் போலவே இந்த நாடுகளிலும் தலைமுறை தலைமுறையாகப் பல நூற்றுண்டு காலம் விவசாய முறைகள் ஒரே மாதிரி வந்துள்ளன. அமெரிக்கா போன்ற நாடுகளோடு நம் உற்பத்தித் திறனை ஒப்பிடுவது பயனுள்ளது. அது விஞ்ஞான முறையில் விவசாயத்தைப் பேரளவில் நடத்தி, உலக விவசாய உற்பத்திக்குப் பெரும் பகுதியை அளிக்கிறது. அடுத்துவரும் அட்டவணைகள் வெவ்வேறு நாடுகளில் உள்ள விவசாய உற்பத்தித் திறனை ஒப்பிட்டுக் காட்டுகின்றன.

மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் நிலம் மிகக் குறைவான உற்பத்தித் திறனையுடையதாக இருப்பதற்குக் காரணம், பெரும்பாலும் விவசாய முறைகளில் வித்தியாசம் இருப்பதும், பொருளாதார வாழ்க்கையின் முன்னேற்றத்தில் இந் நாடுகளிடையே வேறுபாடு இருப்பதுமே யாகும் என்பது நமக்குத் தெரியும். இந்த அட்டவணைகள், இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரின் விளைச்சல் உலகத்திலேயே மிகக் குறைவாக இருக்கிறது என்பதையே காட்டுகின்றன. ஆராய்ச்சியாளரையும் அரசியலாளரையும் திணற அடிக்கும் பிரச்சினை என்னவென்ருல், இந்திய மண்ணின் வளத்தையும் செழிப்பையும் பார்க்கும்போது, இதைவிட இந்த விஷயத்தில் தாழ்வான நாடுகளில் மக்கள் பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கியிருப்பதுபோல, நாமும் விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்தி மண்ணிலிருந்து அதிக உற்பத்தியைப் பெற முடியாதா என்பதுதான்.

சில பயிர்கள் ஏக்கருக்குத் தரும் விளைச்சல்கள்
புஷல் (60 பவுண்டு) களில்[1] (1951)

நாடு		கோதுமை	சோளம்	அரிசி	பார்லி
இத்தாலி	...	21·6	30·7	52·9	17
அமெரிக்கா	...	16·2	34	28·2	23
இந்தியா	...	10·3	8·4	12·9	12
கனடா	...	22	49·2	...	...
எகிப்து	...	28·5	31·2	...	...
சீனு	...	14·5	19·5	28·4[2]	17
உலக சராசரி	...	17·2	23·7	18·1	20

[1] மேற்கூறிய டட்லி ஸ்டாம்பு நூலில் அட்டவணை VII. பக்கம் 80-83-லிருந்து தொகுக்கப்பட்டது.

[2] இந்த எண் 1945-47-ன் சராசரிக்குரியது.

ஹெக்டேருக்கு (2·47 ஏக்கர்) குவின்டல்களில் (220·46 பவுண்டு) விளைச்சல் (1946)[1]

நாடு	அரிசி	கோதுமை	பார்லி	சோளம்	உருளைக் கிழங்கு
இத்தாலி ...	41·7	13·3	9·7	15·1	58
ஸ்பெயின் ...	42·2	9·6	12·9	14·3	64
ஆர்ஜென்டினு	33·9	10·0	11·9	22·3	52
ஜப்பான் ...	36·9	9·7	10·7	12·5	91
இந்தியா ...	12·3	6·0	7·9	6·2	12·3
உலக சராசரி ...	16·7	10·3	11·1	15·2	12·3

தண்ணீரும் நீர்ப்பாசனமும்

(1) பௌதிகச் சூழ்நிலை அல்லது (2) சமூக, பொருளாதார அரசியல் நிலைகள் என்ற இரண்டு அமிசங்கள் இந்திய மண்ணின் உற்பத்தித் திறனை எப்படி நிருணயிக்கின்றன என்று ஆராய்வது நல்லது. சீதோஷ்ணநிலை, மண் என்ற இரண்டு அமிசங்கள் அடங்கிய பௌதிகச் சூழ்நிலை அநேகமாகப் பூகோள நிலையால் அமைகின்றது. இவற்றையும் மக்கள் முயற்சியால் மாற்றலா மாயினும், இவற்ருல் உற்பத்தித் திறனில் உண்டாகும் வித்தியாசத்தை முழுவதுமாக நாம் அகற்றிவிட முடியாது. மக்களால் மாற்றப்படக்கூடிய வேறு சில அமிசங்கள்உண்டு. நாட்டின் ஒரு பகுதியில் கையாளப்படும் முறைகளையும் வழக்கங்களையும் மற்ருெரு பகுதிக்கு மாற்றியும், இந்திய நிலைக்கு ஏற்ற அளவில் மேனுட்டு முறைகளைப் புகுத்தியும் இவ்வாறு செய்யலாம்.

விவசாயத்திற்குத் தண்ணீர் இன்றியமையாதது. பெரும் பகுதியில் புஞ்செய் விவசாயம் நடத்தப்படும் இந்தியா போன்ற நாட்டில் மற்ற இடங்களைவிடப் போதிய அளவு தண்ணீர் அளிப்பது முக்கியம், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பெய்யும் மழையின் வேறுபாட்டினுல், நாடு முழுவதுக்கும் இவ் விஷயத்தில் ஒரே மாதிரி கொள்கையை ஏற்படுத்த முடியாது. தண்ணீர் வசதிக்கேற்ப இந்தியாவை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) அஸ்ஸாம், மேற்கு மலைத் தொடர் போன்ற மழை மிகுதியான இடங்கள். இங்கு நீர்ப்பாசனம் தேவையில்லை. (2) தக்காணம், சென்னை போன்ற மழையை நம்ப முடியாத இடங்கள். இங்குப் பஞ்சநிலை எப்போதும் உண்டாகலாம் என்ற அச்சம் இருப்பதால், நீர்ப்பாசனம் மிகவும் விரும்பத் தக்கது.

[1] மேற்கூறிய 'பயிர்கள், மண் வகைகள்' பிரிவின் 8-வது கூட்ட நடவடிக்கைகளிலிருந்து சுருக்கித் தரப்பட்டது. பக்கம் 82- அட்டவணை I,

(3) இந்தியாவின் மிக வறண்ட பஞ்சாப், இராஜஸ்தான் போன்ற பகுதிகள். இங்கு மழை மிகக் குறைவாக இருப்பதால் நீர்ப்பாசனம் மிகவும் அவசியம்.

இந்தியா பிரிக்கப்படுவதற்கு முன்பு, 1945-ல் பயிர் செய்யப்பட்ட மொத்த 2,160 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 580 இலட்சம் ஏக்கர் நீர்ப் பாசனம் பெற்றவை. 1947-ல் நாட்டைப் பிரித்தபோது மிகவும் முன்னேற்றம் அடைந்த கால்வாய்ப் பாசனப் பகுதிகள் பெரும்பாலும் மேற்குப் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டன. பிரிக்கப்படுவதற்கு முன்பு கால்வாய்களால் கொண்டுசெல்லப்பட்ட மொத்த 4 இலட்சம் கியூசெக் (Cusec) தண்ணீரில் பாதியை இப்பொழுது பாகிஸ்தான் கால்வாய்கள் கொண்டு செல்கின்றன; அரசாங்கத்திற்குச் சொந்த மான 240 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பாதிக்குமேல் பாகிஸ்தானில் இருக்கிறது. இந்திய யூனியனில் உணவு நிலை கடினமானதற்கு இதுவும் ஒரு காரணம் என்று திட்டக் குழு கூறுகிறது. பிரிக்கப் படுவதற்கு முன்பு இந்தியாவில் இருந்த ஜனத்தொகையில் 18 சத வீதம் பாகிஸ்தான் பெற்றது; ஆனால், பிரிக்கப்படாத இந்தியாவின் மொத்தப் பரப்பில் 23 சதவீதமும், அரிசியில் 32 சதவீதமும், கோதுமையில் 35 சதவீதமும், உணவு தானியங்களில் எல்லாம் 25 சதவீதமும் பெற்றது. யுத்தத்திற்குப் பின் ஆறுண்டுகளில் பல நோக்குத் திட்டங்கள்—சில, பல நோக்குள்ளவை; மற்றவை நீர்ப் பாசனத்திற்கு மட்டும்—தொடங்கப்பட்டன. முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் மொத்தச் செலவு ரூ. 720 கோடி. இதில் ரூ. 80 கோடி திட்டம் தொடங்குவதற்கு முன்பே செலவழிக்கப்பட்டது. திட்டக் குழு இத் திட்டங்களுக்கு முதலிடம் அளித்தது. தாமோதர் பள்ளத்தாக்கு, பக்ராநங்கல், ஹிராகுட் ஆகியவை இவற்றுள் அடங்கும். முதல் திட்ட காலத்தில் இவற்றிற்கு ஆகும் செலவு ரூ. 340 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது; மீதி இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்குக் கொண்டு போகப்பட்டது. இரண்டாம் திட்ட காலத்தில் இத் திட்டங்களுக்கு ரூ. 209 கோடித் தேவைப்படும். இத் திட்டங்கள், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டில் 8·5 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் அளிப்பதோடு, 1·08 கிலோவாட் சக்தியையும் உற்பத்தி செய்யும். இவை முற்றிலும் நிறைவேறி நன்கு வளர்ச்சியடைந்த வுடன் நீர்ப்பாசனம் பெறும் பரப்பு 169 இலட்சம் ஏக்கரும், சக்தி 1·4 கிலோவாட்டும் அதிகரிக்கும். இவற்றோடு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல உண்டு. முதல் திட்ட காலத்தில் இவற்றின் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 47 கோடி.

இரண்டாம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் செலவு ரூ. 380 கோடி. இதில் ரூ. 172 கோடி இரண்டாம் திட்ட காலத்திலேயே செலவழிக்கப்படும்; மீதி அடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களுக்குக் கொண்டுசெல்லப்படும். 195 புதிய திட்டங்கள் உட்படப் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இரண்டாம் திட்டத்தில் அளிக்கப்பட்ட தொகை ரூ. 381 கோடி. இத் திட்டம் மேலும் 210 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் அளிக்கும்.

நீர்ப்பாசனத்தின் பயன்

நீர்ப்பாசனத் திட்டங்களின் முக்கியத்தை மூன்று வேறுபட்ட நிலைகளில் கவனிக்கலாம். முதலாவதாக, உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றவும், இரண்டாவதாக, ஏற்றுமதிக்காகப் பணப்பயிர்களை உண்டாக்கவும், மூன்றாவதாக கால்நடைத் தொழிலின் பராமரிப்புக் காகவும் அத் திட்டங்களை மேற்கொள்ளலாம். இந்தியாவில், வறுமையில் ஆழ்ந்திருக்கும் மக்களுக்குத் தங்கள் சொந்தப் பணத்தினால் கிணறுகள் வெட்டக்கூட முடியாதவர்களாய், நாட்டின் பெரும் பகுதியில் மழையை நம்பி வாழ்பவர்களாய், எப்பொழுதும் பற்றாக் குறையாலும் பஞ்சத்தாலும் அஞ்சும் மக்களுக்கு அரசாங்கத்தின் முதற்கடமை கிணறு வெட்டுவதற்கும், தண்ணீரைத் தேக்கி வைப் பதற்குக் குளங்கள் அமைப்பதற்கும் நிதிவசதி அளிப்பதுதான். இத் தேவைகளுக்காக அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தும், அரசாங்கமே நேரடியாகக் கிணறுகளையும் குளங்களையும் அமைப் பதற்கு விரிவான திட்டத்தை மேற்கொண்டும் அரசியல் ஞானத்தைக் காட்டியிருக்க வேண்டும். ஆனால், 1928-லேயே விவசாயக் குழுவானது, 'கிணறுகளை வெட்டுவது தனியார் தொழிற் துணிவைச் சார்ந்ததே' என்று தலையிடாக் கொள்கையை அறி வித்தது. பணப் பயிர்களாகிய பருத்தியையும், கோதுமையையும் பயிர் செய்வதற்கு ஊக்கமளிக்கக்கூடிய கால்வாய் நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதில் இந்திய அரசாங்கத்தின் கருத்துச் சென்றது. கிணறுகளையும் குளங்களையும்விடக் கால்வாய்களே அதிக முக்கியம் என்று கருதப்பட்டன. இவை மூலதனத்திற்கு 7 சதவீதம் வட்டியளித்தன. வரலாற்றில் ஏற்பட்ட சந்தர்ப்பக் கோளாற்றினால், கோடிக்கணக்கான மக்களின் நலனைக் கவனிக்கும் பொறுப்பைக் கிழக் கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஏற்றுக்கொண்டு, அதன் வழிவந்த அரசாங்கம், தான் பரம்பரை உரிமையாகப் பெற்ற வியாபாரப் புத்தியை விட்டுவிட முடியவில்லை,

கால்நடைத் தொழிலே நடத்துவதற்கு நீர்ப்பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தும் எண்ணமே நம் நாட்டில் இருந்ததில்லே. இத் தொழில், இன்று இருக்கிறதென்ருல், அது, அதன் சொந்த ஆதரவினுல்தான். ஐரோப்பாவில் உள்ள புரோவென்கள் சமவெளி (Provencal Plains), மலேப் பள்ளத்தாக்குகள் போன்றவையும், வடமேற்கு அமெரிக்காவில் உள்ள புல்வெளிகளும் நம் நாட்டிற்கு வேண்டாத ஆடம்பரங்கள். 1903-ல்தான் நீர்ப்பாசனக் குழு ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது. இந்தியாவிற்கு நீர்ப்பாசனம் முக்கியம் என்பதை உணர்ந்து, அபிவிருத்திக்கு அது ஒரு திட்டம் ஏற்படுத்தியது. அதனுல், பிரிவினேக்கு முந்திய இந்தியாவில் 250 இலட்சம் ஏக்கர் கால்வாய்ப் பாசனம் பெற்றது. ஆனுல், சரியாகத் தண்ணீர் ஓடாததால், தண்ணீர் தேங்கி, பூமிக்குள் ஊறிய தண்ணீர் தாதுப் பொருள்களே மேற்புறத்தில் கொண்டுவந்து செழிப்பற்ற உப்பு நிலத்தை உண்டாக்கிவிட்டது. அடர்த்தி மிகுந்த ஜனத் தொகையுள்ள நாட்டில், ஆண்டு முழுவதும் நீர்ப்பாசனம் அளிக்கும் திட்டங்கள் சுமத்தப்பட்டால், பயிர் செய்யப்படாத நிலம் இல்லேயாயின் மண் தன் வளத்தை இழந்துவிடும். இதை அதிக உரமிட்டு ஈடுசெய்ய வேண்டும். இந்தியாவில் அதிகச் செலவு செய்து உரமிடுவது விவசாயிகளால் இயலாது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் வற்புறுத்தப்படும் இக் காலத்தில் ஆசியாவுக்கும் தூரக் கிழக்குக்கும் நியமிக்கப்பட்ட உணவு, விவசாய அமைப்பின் நிபுணர் குழு விடுக்கும் எச்சரிக்கையை நாம் கவனிக்க வேண்டும். பாகிஸ்தானின் நீர்ப்பாசனத்தைப் பற்றி உணவு, விவசாய அமைப்பின் அறிக்கை கூறுவதாவது, ‘ நீண்ட காலமாகவும் விரிவாகவும் நடத்தப்படும் நீர்ப்பாசனமானது குறையுள்ள நீர்ப்பாசன முறைகளாலும், கழிவுநீர் முறைகளாலும் தண்ணீர் தேங்கி உப்புத் தன்மை அடைந்திருக்கும் பெரிய பிரச்சினே உலகத்தில், பஞ்சாபிலும் சிந்துவிலும் தவிர வேறெங்குமே இல்லே என்று கூறலாம்.[1] தலத்தில் சென்று ஆராய்ந்து பார்த்ததில், மொத்தம் 18 இலட்சம் ஹெக்டேர்களில், அதாவது இந்த இரண்டு மாகாணங்களில் பயிர் செய்யப்பட்ட பரப்பில் 21 சதவீதத்தில், 20 சதவீதத்திற்குமேல் உப்புத் தன்மையடைந்து மேற்பரப்புக் கெட்டுவிட்டது. இந்தப் பரப்பில் 2,40,000 ஹெக்டேர்கள் முற்றிலும் பயிர் செய்யப்படாமல் விடப்பட்டன. அன்றியும், பஞ்சாபில் மட்டும் 28.5 இலட்சம் ஹெக்டேர்களில், 20 சதவீதத்திற்கும் குறைவான நிலம் மேற்புறத்தில் உப்படைந்திருக்கிறது. தண்ணீர்த் தேக்கம்,

[1] புதிதாகக் கட்டப்பட்ட பக்ராநங்கல் அணேயிலும், கட்டடக் குறைகளால் தண்ணீர் தேங்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை செய்திருக்கிருர்கள்.

பஞ்சாபிலும் சிந்திலும் பயிர் செய்யப்படும் நிலத்தில் 37 சதவீதத்தைப் பாதித்து விட்டது, அல்லது பாதிக்கும் நிலையில் இருக்கிறது. இதில் 27 இலட்சம் ஹெக்டேரில், மேற்பரப்பிலிருந்து 5 அடி முதல் 10 அடிக்குள்ளாகவே தண்ணீர் இருக்கிறது. இத் தண்ணீர்ப் படிமானத்தின் மட்டமும், அதிகரித்துவரும் உப்புத் தன்மையும் சேர்ந்து ஆண்டு ஒன்றுக்கு 4,000 முதல் 8,000 ஹெக்டேர் வீதம் நிலத்தைப் பயிர்த் தொழிலுக்கு உதவாமல் செய்துவிட்டன என்று மதிப்பிடப் பட்டுள்ளது.'[1] இந்த ஆபத்தைத் தவிர்க்கத் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று நாம் நினைக்கிறோம். இல்லாவிட்டால் சில ஆண்டுகளில், இவற்றிற்குச் செய்யப் பட்ட அதிகச் செலவும், குறுகியகால நன்மைகளும் பயனற்றுப் போய்விடும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும், மின்சாரத் திட்டங்களையும் கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டு நிறைவேற்றிப் பெரிய சாதனைகளைச் செய்ய நினைக்கும் திட்டக் குழு, கிணற்றுப் பாசனத்தையும், பாசனத்திற்கு உதவும் குளங்களையும் பற்றி விரிவாக ஒன்றும் குறிப்பிடவில்லை. இதற்கு முக்கியத்துவமும் அளிக்கவில்லை. 1901–03 ஆம் ஆண்டுகளின் நீர்ப்பாசனக் குழு, 'எந்த மாகாணத்திலும், இந்தப் பாசன முறையைப் பயனுள்ள வழியில் விரிவாக அமைக்க முடியும். நிறைய அமைப்புச் சாதனங்களையுடைய சில மாவட்டங்களில் பயிர்த் தொழிலுக்கும், அடர்த்தியான ஜனத்தொகையைப் பாதுகாப்பதற்கும் கிணறுகள் மிகவும் அவசியமானவை. ஆகையால், எல்லோரும் வேலை பெறக்கூடிய அளவு அதிகபட்ச ஜனத்தொகை உண்டாகும்வரையில் கிணறுகளைப் பெருக்கி அவற்றைக் காப்பாற்ற வேண்டும். சில இடங்களில் பூமி மட்டத்திற்குச் சிறிது ஆழத்திலேயே தண்ணீர் இருக்கிறது. இந்த இடங்களில் கால்வாய்ப் பாசனம் தேவையில்லை; அதனால் தீங்குகூட ஏற்படும். எனினும், எந்த வழியிலாவது அங்கு நீர்ப்பாசனம் செய்வது மிகவும் அவசியமும் அவசரமும் ஆகும்.'[2]

1945–ஆம் ஆண்டின் பஞ்ச விசாரணைக் குழு, அரசாங்கம் கிணறு வெட்டுவதற்குக் கடன்களையும் மானியங்களையும் அளித்தும், தொழில் நுட்பமான யோசனைகளைக் கூறியும் கிணற்றுப் பாசனத்தை அபிவிருத்தி செய்யவேண்டியதன் உடனடித் தேவையை வற்புறுத்தியது.

[1] 'ஆசியாவிலும் தூரக் கிழக்கிலும் விவசாயம்' F.A.O. (Rome) அக்டோபர் 1953. பக்கம் 73.

[2] 1945 ஆம் ஆண்டின் பஞ்ச விசாரணைக் குழுவின் அறிக்கையில் மேற்கோளாகக் காட்டப்பட்டது. பக்கம் 135. 'வளர்ந்துவரும் வேலையின்மையைப் போக்குவதற்கு, இப்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.'

மேலும், அது குளங்களைக் கட்டுவதும், சீர்திருத்துவதும், குழாய்க் கிணறுகளை அமைப்பதும் அவசியம் என்று வற்புறுத்தியுள்ளது. முதல் திட்டம், இராச்சியங்களில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 77 கோடி ஒதுக்கியது. இத் திட்டங்களில் கிணறுகள், குழாய்க் கிணறுகள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் முதலியவற்றைக் கட்டுவதும் சீர்திருத்துவதும் அடங்கும். இரண்டாம் திட்டம் 3,581 குழாய்க் கிணறுகளைச் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அமைக்க ரூ. 20 கோடி செலவிட ஏற்பாடு செய்துள்ளது. இவற்றால் 9,16,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். இரண்டாம் திட்டத்தில் நடுத்தரமான நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தாலும், நீர்ப்பாசனத் திட்டத்தில் சிறிய நீர்ப்பாசனங்களுக்கு முக்கியத்துவம் இருந்துகொண்டுதான் இருக்கும். திட்டக் குழு, 'சிறிய திட்டங்கள் குறைந்த உற்பத்தியை அளிக்கின்றன. ஆனால், அவற்றைக் கருத்தோடு காப்பாற்ற வேண்டும்' என்றும், 'கால்வாய்ப் பாசனத்தைவிடக் குழாய்க் கிணற்றுப் பாசனத்திற்குப் பொதுவாக அதிகம் செலவாகும்'[1] என்றும் கூறியுள்ளது.

உரம்

விவசாயத்தை விருத்தி செய்வதற்கு உரம் மிகவும் முக்கியமானது. சூழ்நிலையின் தன்மையில் மனித முயற்சியும் அறிவும் செய்யக் கூடிய மற்றொரு மாறுதல் இது. இந்தியாவில், மற்ற நாடுகளைப் போலவே, பழங்காலத்தில் பிராணிகளின் உரங்களைத்தான் பயிர் செய்யும் நிலங்களுக்கு இடுவது முறையான விவசாயமாக இருந்தது. விவசாயத்தில் உரமிடுவது முக்கியம் என்று உணர்ந்ததற்கு அறிகுறியாக, மக்களிடையே இன்றும் பல பழமொழிகள் உலவுகின்றன.

முதலாவதாக, உரமும் தண்ணீரும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. ஒன்று மற்றொன்றுக்கு அவசியம். இந்த இரண்டும் இல்லாமல், விவசாயி நிலத்திலிருந்து அதிகம் பெற முடியாது. 'உழவனுக்குத் தண்ணீரும் உரமும் அளித்தால், அவன் பாறையின் மேல்கூடப் பயிர் விளைவிப்பான்' என்று சாதாரணமாகக் கூறப்படுகிறது. விவசாயிக்கு உரத்தின் பயன் என்ன என்பது நன்கு தெரியும். எனினும், உரமாகக்கூடிய பசுஞ்சாணத்தை அவன் எரிக்கின்றான் என்றால், எரிப்பதற்கு வேறொன்றும் இல்லாததனால் அதை எரிக்கின்றான் என்று நாம் கொள்ளவேண்டும். பசுஞ்சாணத்தின் மதிப்பு அவனுக்குத் தெரியாமல் இல்லை. மேலும்,

[1] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்,' பக்கம் 326-31.

தன்னிடமுள்ள உரத்தை எப்பொழுது, எப் பயிருக்கு உபயோகிக்க வேண்டுமென்றும் அவன் அறிவான். நஞ்செய் நிலத்தில் அதைப் போட்டால் அது சீக்கிரம் சிதைந்துவிடும் என்றும், புஞ்செய் நிலத்தில் சிதையாது என்றும் அவனுக்குத் தெரியும். புதிய பசுஞ் சாணத்தைப் பயன்படுத்தினுல் கரையான் வந்து பயிர்களை அழித்து விடும் என்ற அபாயத்தையும் அவன் அறிவான்.

பசுஞ்சாணம்

இந்தியாவில், வங்காளத்தில் தூர் எடுத்துப் புதுப்பிக்கப்பட்ட இடங்கள், பருத்தி விளையும் கரிசல் மண் இவை தவிரப் பெரும் பாலான இடத்திற்கு உரமிடுதல் வேண்டும். நம் நாட்டில் உரமளிப்பு மிகமிகக் குறைவு என்பது எல்லோரும் அறிந்ததே. உரங்களுள் தொழு உரம் மிகவும் முக்கியமானது. இது இங்கிலாந்தில் பண்ணை உரம் எனப்படும். ஆனுல் இங்கிலாந்தில் பண்ணை உரத்தோடு வேறு உரங்களும் இடுகிருர்கள் ; அல்லது அதற்குப்பதில் செயற்கை உரங்களை உபயோகிக்கிருர்கள். ஆனுல், இந்தியாவில் இது ஒன்றுதான் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய உரம். 1893-ல் டாக்டர் ஒயெல்கெர் பசுஞ்சாணத்தை எரிபொருளாக எரிக்கும் வழக்கம் வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டார். இந்தியத் தொழு உரத்தில் உள்ள அங்ககப் பொருள் மிகுதியைப்பற்றியும் அவர் விளக்கிக் காட்டினுர். ஒரு டன் தொழு உரத்தை எரிப்பதால், அதில் உள்ள 30 பவுண்டு மொத்த நைட்ரஜனில் 29·25 பவுண்டு முற்றிலும் வீணுகிவிடுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இந்திய மண்ணில் தாவரப்பொருள்களும் (குணபமும்) மிகக் குறைவு. ஆகையால், எரிக்கும் போது, அங்கக அல்லது தாவரப் பொருள்கள் முற்றிலும் அழிந்து விடுகின்றன ; மேலும், கிராமங்களில் சுவர்களையும் தரைகளையும் மெழுகுவதற்கும், நகரங்களின் அருகில் செங்கல்லைச் சுடுவதற்கும் பசுஞ்சாணம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

டாக்டர் ஒயெல்கெர், நிலத்திற்கு அரசாங்கம் உரங்களை அளிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினுர். ‘உழவன் எரிப்பதற்கு வேறு பொருள் இல்லாததால் உரத்தை எரிக்கும்போது, உரத்தின் சிறப்பைப்பற்றிப் பரிசோதனைப் பண்ணைகளில் விளக்கிக் காட்டுவதால்

பயன் என்ன ?'[1] டாக்டர் ஒயெல்கெர், கால்நடைகளுக்கு நாம் போடும் தீவனப் பயிர்களைத் தின்று எஞ்சியதை கால்களால் மிதித்துப் போட்டால், அதையும் எடுத்துப் பாதுகாத்து உரமாக்க முடியும் என்பதை விவசாயிகளுக்கு நாம் கற்பிக்க வேண்டுமென்கிறார். புல் பூண்டுகள் முதலியவை அவற்றின் கால்களால் மிதிக்கப்பட்டு மூத்திரத்தைக் கிரகித்து வைத்துக்கொள்வதால், உரத்தின் மதிப்பு இருமடங்காகிறது.

டாக்டர் ஒயெல்கெர் தம் அறிக்கையை வெளியிட்டு 35 வருடங்கள் ஆனபிறகு விவசாயக் குழு நமக்குக் கூறுவதாவது: '1893-ல் ஒயெல்கெர் இந்திய விவசாயத்தைப்பற்றி எழுதிய அறிக்கைக்குப் பிறகு, உரத்தைப் பாதுகாப்பதுபற்றி ஒரு முன்னேற்றமும் உண்டாக வில்லை. அரசாங்கப் பண்ணைகள் தவிர மற்ற இடங்களில் கால்நடை களுக்குத் தீவனப்பொருள்களைப் போடும் வழக்கம் இல்லை. கால்நடை களின் மூத்திரத்தைப் பாதுகாத்து வைப்பதற்கு விவசாயிகள் முயற்சி செய்வதில்லை. உரத்தின் மதிப்பைப் பாதுகாக்கவும் முயற்சி செய்யப் படுவதில்லை.[2] பத்து வருடங்கள் கழித்து, சர் ஜான் ரஸ்ஸல், எரிபொருள் வேறு கிடைக்காததால், உரமாகக்கூடிய பொருளை எரிமுட்டையாகத் தட்டி எரிக்கும் வழக்கத்தைக் கண்டு அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் இருப்பதற்கு இதுபோலவே நொண்டிச் சமாதானம் கூறினார். 'வேறு எரிபொருளைக் கொடுத்தால்தான் அவர்களை இவ்வாறு செய்யாமல் நாம் தடுக்க முடியும்.'[3] இயந்திரங்

[1] மேற்கூறிய நூல் பக்கம்-132—33. ஒப்பிடுக: 'மண்ணில் அங்ககப் பொருள்கள் செய்யும் வேலை மிகவும் முக்கியமானது. சிதைந்துபோனால் அது கூழ் பொருளாகிக் களிமண் பகுதியோடு ஒரு சிக்கலான பொருளாக மாறுகிறது. அது மண்ணின் பௌதிக, இரசாயனத் தன்மையைச் சீராக்கு கிறது; பயிருக்கு நைட்ரஜனை அளிக்கிறது; இதற்கு மேலாக மண்ணில் ஓர் இடைப்பொருளாக இருந்துகொண்டு, பயிர்களின் வேர்களுக்கு (அனங்கக) தாவரப் போஷக சத்துக்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்கிறது. இரசாயன உரங்களை அளிக்கும்போது, இது மிகவும் அவசியமானது. நம் நாடு உஷ்ணப் பகுதிகளும், உஷ்ணம் குறைந்த பகுதிகளும் உடைய தாகையால், மண்ணில் உள்ள குணபம் அதிக சூரிய வெப்பத்தினால் சுருக்கப்பட்டுவிடுகிறது. பல பயிர்களின் அங்ககப் பொருள்கள் (தண்டுகள் இலைகள் முதலியவை) கால்நடைகளுக்கு உணவாகவும், கூரை வேயும் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு விடுவதால், மிகமிகச் சிறிய அளவுகூட நிலத்தில் திரும்பப் போடப்படுவதில்லை. மலிவான எரிபொருள் அதிகம் கிடைக்காததால், கிடைக்கும் பசுஞ்சாணத்தின் பெரும்பகுதி (20 கோடி டன் பண்ணை உரம்) எரிக்கப்பட்டு விடுகிறது. பசுந்தாள் உரம் போடுவதும் முடியாது. ஏனெனில், உரமாக உதவும் பசுந்தாளைப் பயிர் செய்வதற்கு வேண்டிய தண்ணீர் இல்லை சமூக, சமய வெறுப்புகளின் காரணமாக மலங்களை உரமாக உபயோகிப்பதில்லை. ஆக, மண்ணின் குணப நிலை குறைந்துகொண்டே வருகிறது (விவசாயக் குழுவின் பயிர், மண் பிரிவின் 8-வது கூட்டத்தில், காப்டன் V. M. சவான் படித்த கட்டுரை, 1952, பக்கம்-98—9).

[2] அறிக்கை, பக்கம்-83.

[3] மேற்கூறியதில், பக்கம்-57.

களால் உற்பத்திசெய்யப்பட்ட காற்றடுப்புகள், எண்ணெய் அடுப்புகள் ஆகியவற்றைக் கிராம மக்கள் பயன்படுத்த மாட்டார்கள் என்றும், கிராமங்களின் அருகில் சீக்கிரத்தில் வளரும் மரங்களைப் பயிரிடவேண்டுமென்றும் சர் ஜான் ரஸ்ஸல் கூறினர்.

1939-ல் பயிர்கள், மண்வகைப் பிரிவின் கூட்டத்தில் மத்திய மாகாண அரசாங்கத்தின் விவசாய இரசாயன நிபுணர் டாக்டர் பால் (Dr. Bal) புதிய நிலத்தில் பயிர் செய்தல், அங்ககப் பொருள்களின் அழிவு வேகமாக நடைபெறுகிறதென்றும், ஆனல், இறுதியாக மண்ணின் ஆக்கும் தொழிலிலும் அழிக்கும் தொழிலிலும் சமநிலே அடைந்துவிடுகின்றன என்றும் கூறினர். இந்திய மண்ணின் பெரும் பகுதி பல நூற்ருண்டுகளாகப் பயிர் செய்யப்பட்டு வருவதால் இவ்வாறு ஒரு நிலேயான தன்மையை அடைந்துவிட்டது என்று தோன்றுகிறது. அதிக அளவு நைட்ரஜன் நிறைந்த பண்ணே உரம், மலம், மூத்திரம் முதலியவை அதிக விளேச்சலேத் தருகின்றன என்பது பரிசோதனேகளால் காணப்பெற்றுக் கீழே உள்ள அட்டவணே யில் கூறப்பட்டுள்ளது:

பயிர்	உரமளிப்பு முறை	ஏக்கருக்குப் பவுண்டில் சராசரி விளேச்சல்
பருத்தி	உரமில்லே	318
	ஏக்கருக்கு $2\frac{1}{2}$ டன் பண்ணே உரம்	532
கம்பு	உரமில்லே	680
	ஏக்கருக்கு $2\frac{1}{2}$ டன் பண்ணே உரம்	779
நெல்	உரமில்லே	992
	ஏக்கருக்கு 4,000—8,000 பவு. பண்ணே உரம்	1,623

தொழுஉரம் 60 ஆண்டுகளுக்கு முன் எந்த நிலேயிலிருந்ததோ, அதே நிலேயில் இன்றும் இருக்கிறது. பஞ்சகாலத்தில், மழை யில்லாதபோது உரம் இடப்பட்ட நிலத்தில் சிறிதேனும் விளேயும்; உரமிடப்படாத நிலத்தில் ஒன்றுமே விளேயாது. ஆகவே, உரம் இடுவதால் பஞ்சத்திற்கு எதிராக ஓரளவு பாதுகாப்பு உண்டாகும்; பஞ்ச நிலே ஏற்படும் என்று அஞ்சவேண்டியதில்லே. அரசாங்கம் தன் நிபுணர்கள் கூறிய சிபாரிசுகளேத் தானே மதிக்காமல் இருந்தால்—அதுவும் கோடிக்கணக்கான உயிர்களேப் பாதிக்கும் விஷயத்தில் அப்படியிருந்தால் — அதை மன்னிக்க முடியாது. காட்டிலாகாவின் உதவியால் விறகுக்காகவும் கரிக்காகவும் மரங் களே நடுவது, கிராம மக்கள் எளிதில் அறிந்து கடைப்பிடிக்கக்கூடிய முறையில் தொழு உரத்தைப் பரப்புவது போன்ற எளிய வழக்கங் களால் கோடிக்கணக்கான மக்கள் உயிரைக் காப்பாற்றுவதில்

தாமதமோ, செயலற்ற தன்மையோ இருந்தால் அதை எவ்விதமான சாக்குப்போக்கினாலும் மறைக்க முடியாது.

சுதந்திரம் கிடைத்துப் பத்து வருடங்கள் ஆகியும், திட்டக்குழு நிலைமையைச் சீர்செய்வதுபற்றிய ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது '1951-ல் செய்யப்பட்ட கால்நடைக் கணிப்பின் அடிப்படையில் புதிய சாணத்தின் மொத்த உற்பத்தி அளவு 80 கோடி டன்கள். எனினும், இந்த மதிப்புமிக்க உரம் முழுவதும் நிலத்திற்குத் திரும்ப அளிக்கப்படுவதில்லை. இதில் அதிக பாகம்—சமார் 50 சதவீதம் என்று சொல்லலாம்—விவசாயிகளால் எரி பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது எரிக்கப்படும் சாணத்தை விவசாயத்திற்கு உபயோகிக்கலாம். ஆனால், தக்க எரிபொருள்கள் கிடைக்கும்படி செய்யவேண்டும்.'[1]

மக்களுடைய மலமும் மூத்திரமும், நைட்ரஜன், பாஸ்வரம், அங்ககப் பொருள்கள் முதலியவற்றை அளிப்பவை என்பதை நாம் உணர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இந்தியாவில் நகரப் பகுதிகளில் மலத்தைக் குப்பையுடன் சேர்த்துக் கூட்டு உரம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு உரமாக விற்கப்படுகிறது. 3000 நகரங்களில் 1600 ல் கூட்டு உரம் செய்யப்படுகிறது.

'கிராமப் பகுதிகளில் மக்கள் உபயோகிக்கூடிய கக்கூஸ்களை அமைக்க வேண்டுமென்றும், இவற்றை அங்குக் கிடைக்கும் சாமான்களைக் கொண்டே கட்டும் செலவை இவற்றிலிருந்து உண்டாக்கும் உரத்தை விற்று ஈடு செய்யலாம்' என்றும் திட்டக் குழு நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளது.[2]

பசுந்தாள் உரமிடுதல்

மண்ணில் மீண்டும் சேர்ப்பதற்கென்றே பயிர்களை விளைவிக்கும் வழக்கம் பசுந்தாள் உரமிடுதல் எனப்படும் நிலத்தில் போட்டு உழுதால், அவை அங்ககப் பொருள்களை அதிகமாக்குகின்றன. அதிக ஆழத்தில் உள்ள தாவரப் போஷகச் சத்துக்களை இவை

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 255.

[2] மேலே கூறியதில் பக்கம் 256. 'பண்ணை உரத்தில் பெரும் பகுதி இன்னும் எரிபொருளாகவே உபயோகிக்கப்பட்டுவரும் என்ற நிலையை ஒத்துக் கொண்டாலும், அதில் ஒரு சிறிய பகுதியைக் கூட்டு உரம் செய்வற்கு 'ஆரம்பமாக எடுத்துக் கொள்வதுதான் தக்க வழி' என்று டாக்டர் பர்ன்ஸ் கூறுகிறார். 'சீனக்காரர்கள் கிடைக்கக்கூடிய எந்தப் பொருளையும் உரமாக உபயோகிக்கிறார்கள். இந்திய விவசாயிகளும் அப்படியே செய்யலாம். அப்படிச் செய்வதற்குச் சிறந்த வழி எது என்று கண்டு பிடிப்பதுதான் நாம் செய்யவேண்டியது' (அறிக்கை. பக்கம். 221).

மேலே கொண்டுவந்து கொடுக்கின்றன. இவை மண்ணின் அமைப்பைச் சீர் செய்கின்றன. இருபுற வெடிகனிச் செடிகளைப் (legumes) பயிரிட்டால், அடுத்த பயிர்களுக்கு மேலும் அதிக நைட்ரஜன் கிடைக்கும். பசுந்தாள் உரம் பயிர் செய்வதற்கு விரைவாக வளரும் செடிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தியாவில் நம் மண்ணுக்கு முக்கியத் தேவையாயிருப்பது நைட்ரஜன் தான். இந்தியாவில் நெடுநாட்களாக ஆவாரை, அவுரி, கொழுஞ்சி போன்ற இருபுறவெடிகனிச் செடிகள் பழக்கமாகியுள்ளன. இவற்றைப் பயன்படுத்தினால் ஓர் ஏக்கருக்கு 40 முதல் 140 பவுண்டு வரை நைட்ரஜன் கிடைக்கிறதென்று கூறப்படுகிறது. இதன் அளவு மண்ணின் தரத்தையும், சீதோஷ்ண நிலையையும், விளையக் கூடிய பயிர்களின் தன்மையையும் பொறுத்தது. சராசரி 80 பவுண்டு நைட்ரஜன் கிடைக்கும்.[1]

பசுந்தாள் உரப் பயிர்கள் மண்ணை அரிப்பினின்றும் பாதுகாத்து, போஷகச் சத்துக்களை—குறிப்பாக நைட்ரேட்டுகளைக் காப்பாற்றுகின்றன. இல்லாவிட்டால் இந்த நைட்ரேட்டுகள், வேறு பயிர்கள் விளைவிக்கப்படாமல் இருக்கும்போது மழையினால் ஆழத்தில் சென்றுவிடும். மேலும், இவ் உரப்பயிர்கள், இலேசான மண்ணுக்கு நீரைப் பிடித்து வைத்துக்கொள்ளும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன. மண்ணில் உள்ள பாஸ்வேட்டு, பொட்டாஸ் ஆகியவற்றை எளிதில் அகப்படும்படியாக மாற்றுகின்றன. அன்றியும் மண்ணிலுள்ள நன்மை செய்யும் நுண் அங்க ஜீவிகளின் வேலையையும், உழப்பட்ட மண்ணையும் நல்ல முறையில் வைத்திருக்கின்றன.[2]

சென்னையில் நெல் விளையும் டெல்டாப் பகுதிகளில் தவிர மற்ற இடங்களில் பசுந்தாள் உரமிடுதல் அதிகம் முன்னேறவில்லையென்று உட்ஹெட் பஞ்ச விசாரணைக் குழு கூறுகிறது. 'முன்னேற்றமில்லாததற்கு முக்கியக் காரணம், சிறிய விவசாயிகள் பசுந்தாள் உரம் பயிர் செய்வதற்காக, ஏதாவது ஒரு சிறிய உணவுப் பயிரைக்கூட தியாகம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, எங்குத் தண்ணீர் அதிகமாக இருக்கிறதோ, எங்கு ஜன நெருக்கம் அதிகமில்லாமல் இருக்கிறதோ, அல்லது எங்கு வழக்கமாக மாற்றுப் பயிர் முறை மேற்கொள்ளப்படுகிறதோ, எங்கு அது இயற்கையாக முடியுமோ அங்குத்தான் பசுந்தாள் உரமிடுதல் வெற்றிகரமாக நடத்தப்பட முடியும். பசுந்தாள் உரத்தைப்பற்றி

[1] மேலே கூறிய, பயிர்கள், மண்கள் பிரிவின் 8-வது கூட்டம், பக்கம் 230.

[2] Pusa Bulletin No. 54 of 1915. See also "Green Manuring" by R. D. Rage in 'Indian Farming', Vol. II, Page 521.

மேலும் ஆராய்ச்சி நடத்தவேண்டும். ஆகையால், உடனே இதைத் தொடங்கவேண்டும் என்று சிபாரிசு செய்கிறோம்.'[1]

எலும்பும் மீனும்

நம் நாட்டில், அறியாமையினாலோ, நெடுங்காலமாக உள்ள வெறுப்பினாலோ இறந்துபோன பிராணிகளின் எலும்புகளையும் எலும்புத் தூளையும் பயன்படுத்துவதில்லை. இரண்டாவதாக, வெவ்வேறு மண்ணுக்கு எலும்பை எப்படி உரமிடுவது என்பது பற்றிச் சரியான விவரங்கள் கிடைக்காததனாலும் இதை உபயோகப் படுத்துவதில்லை. மேலும், எலும்புகளைச் சேர்த்து வைத்துப் பொடியாக்குவதிலும் சிரமம் இருக்கிறது. எலும்பை உரமாகப் பயன் படுத்துவதுபற்றி பரிசோதனை வழி ஆராய்ச்சிகளை நடத்த வேண்டும் என்று டாக்டர் ஒயெல்கெர் கூறி முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, விவசாயக் குழு இதே மாதிரி மீண்டும் சிபாரிசு செய்தது. 'விவசாயிகளுக்கு எவ்வளவு விலையில், எந்தப் பயிர்களுக்கு எலும்புத் தூளைப் பயன்படுத்துவது நன்மையாகும் என்பதுபற்றித் தெளிவான விவரங்களைச் சேகரிப்பது முதலில் அவசியமாகும்.'[2] சர் ஜான் ரஸ்ஸல் பத்தாண்டுகள் கழித்து, 'நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாசியம் ஆகியவை எந்த மண்ணுக்கு, எந்தப் பயிருக்கு எந்த அளவில் வேண்டும், அல்லது அங்கக உரத்தை உபயோகிப்பதற் குரிய விகிதம் யாது என்பனபற்றி அதிகத் தகவல் ஒன்றும் கிடைக்க வில்லை'[3] என்று கூறினர். ஆக இந்தியாவில் எலும்புகளையும், எலும்பு உரத்தையும் மண்ணுக்குப் போடாமல் ஏற்றுமதி செய்ததால், முக்கியமான உரவகை ஒன்று நமக்குக் கிடைக்காமல் போய்விட்டது.[4]

[1] அறிக்கை, பக்கம் 147. ஒப்பிடுக: முதல் ஐந்தாண்டுத் திட்டம் 'பசுந் தாள்கள் உரத்தின் சிறப்பு நன்கு தெரிந்ததே. ஆனல், போதிய மழை யும், நிறைய நீர்ப்பாசன வசதியும் உள்ள இடங்களில் இந்த வழக்கம் சாதாரணமாக இல்லை. பொதுவாக இத்தகைய இடங்களில் ஜனத் தொகை மிக அதிகமாக இருப்பதால் விவசாயிகள் உடனே நேரடியாகப் பலன் தராத பயிரை விதைக்க முடிவதில்லை............நிலைமை திருப்தியாக உள்ள இடங்களில், அரசாங்கம் விதைக்கும் பருவத்தில் விதைகளைக் கொடுத்தும், நீர்ப்பாசனம் அளித்தும், தண்ணீர்வரி அல்லது நிலவரியை விட்டுக்கொடுத்தோ இத்தகைய பயிர்களை விளைவிக்க ஊக்கமளிக்க வேண்டும்' (பக்கம் 256-57).

[2] அறிக்கை , பக்கம் 93.

[3] அறிக்கை, பக்கம் 58.

[4] 'எலும்புகளின் ஏற்றுமதி படிப்படியாக அதிகரித்தது. 1884க்கும் 1951 க்கும் இடையே 40 இலட்சம் டன் எலும்பு ஏற்றுமதி செய்யப்பட்டது' (முதல் ஐந்தாண்டுத் திட்டம் பக்கம் 258). எலும்புத்தூள் எல்லாவகை மண்ணுக்கும் தக்க உரமாகும். குறிப்பாக, சூப்பர் பாஸ்வேட்டு உதவாத அமிலத் தன்மையுள்ள நிலங்களுக்கு இது நல்லது. தானியத்தில் பாஸ்வரத்தை இது அதிகரிக்கச் செய்து அதன் ஊட்ட மதிப்பை உயர்த்துகிறது.

சராசரி ஒரு வருடத்தில், 1,50,000 டன் எலும்பு சேகரிக்கப் படுகிறது. 'ஆண்டொன்றுக்கு இறந்துபோகும் கால்நடைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், கிடைக்கக்கூடிய அளவில் இது கால் பாகம்தான். இப்பொழுது எலும்பில் 25 சதவீதம் தூளாகவும், மீதி 75 சதவீதம் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகவும் செய்யப்படுகிறது. அங்கு, இது ஆலைகளில் அரைக்கப்பட்டு, இதிலிருந்து பசை, ஊன் பசை ஆகியவை எடுக்கப்படுகின்றன.' இப்போது எலும்பு ஏற்றுமதி தடுக்கப்பட்டுள்ளது. எலும்பு முழுவதும் இங்கேயே உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. எலும்பு ஏற்றுமதியைப் பற்றித் திட்டக் குழு சிபாரிசு செய்வதாவது, இந்தியாவிலேயே அதன்உடன் விளைபொருளாகிய (byproduct) பசை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே. ஜப்பானிலிருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட எலும்பரைக்கும் இயந்திரம், எலும்புக்குள் அதிக அழுத்தத்தில் நீராவியைச் செலுத்திக் கொழுப்பையும் பசையையும் எடுக்கிறது. ஆதலால், எலும்புகள் எளிதில் நொறுங்கும் தன்மைபெற்று, எத்தகைய அரைக்கும் இயந்திரத்திலும் அரைக்கப்படக்கூடும். இவ்வாறு எலும்புத் தூளைப் பெற்று அதை உரமாகவோ, கால்நடைத் தீவனமாகவோ உபயோகிக்கலாம்.

1939-ல் 4,700 டன் மீன் உரம் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதை நாம் இப்போதுதான் அறிகிறோம். மீன் உரமாக உதவக் கூடியது என்பது பற்றித் திட்டக் குழு ஒன்றும் குறிப்பிடவில்லை. உட்ஹெட் பஞ்ச விசாரணைக் குழு, யுத்தப் பிற்காலத்தில் மீன் தொழில் முன்னேற்றமடைந்ததால், மீன் உரமும் அதிகமாக உற்பத்தியாயிருக்கவேண்டுமென்று போகிறபோக்கில் குறிப்பிட்டுள்ளது. விஞ்ஞானக் கணக்கீட்டின்படி நிலத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலில் நமக்குத் தினந்தோறும் வேண்டிய சக்தியில் 98 சதவீதமும், நாம் உட்கொள்ளும் புரோட்டீனில் 94 சதவீதமும் கிடைக்கின்றன. 1 அல்லது 2 சதவீத சக்திதான் நாம் உண்ணும் மீனிலிருந்து கிடைக்கிறது. சையாம், பர்மா, இந்தியா ஆகிய இடங்களில் ஒரே தானிய உணவுக்குச் சற்று மாற்றாக மீன் உணவு முக்கிய இடம் பெறுகிறது.[1] இந்திய அரசாங்கம் வெளியிட்ட 'இந்தியா 1953' என்னும் வெளியீடு, உற்பத்தி செய்யப்படும் 141 இலட்சம் மணங்கு மீனில் 11 இலட்சம் மணங்குதான் உரமாக மாற்றப்படுகிறது என்று கூறுகிறது. உணவுப் பற்றாக்குறையாக உள்ள நம் நாட்டில் மீன் உற்பத்தி, அதிக உணவுப்பயிர் செய்யும்

[1] மேற்கூறிய டட்லி ஸ்டாம்பு. பக்கம் 100-01.

இயக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமேயல்லாது, அதை உரமாக்குவது அவ்வளவு முக்கியமன்று. இது முற்றிலும் இயற்கையே.

எண்ணெய் விதைகளும் பிண்ணாக்கும்

எண்ணெய் விதைகள், பிண்ணாக்கு என்பவற்றுள் முக்கியமாகப் பிண்ணாக்கு எருவாக உதவும். 15 வருடங்களில் (1811–25) விளைந்த பருத்தி, நிலக்கடலை, இலுப்பை, கடுகு, சிறு சணல், எள் ஆகியவற்றில் 18 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று விவசாயக் குழு கூறியது. விதைகளையும் பிண்ணாக்கையும் ஏற்றுமதி செய்வது, மண்ணின் பகுதிப் பொருள்களை அகற்றிவிடுவது போலாகும். இந்தியாவில் உள்ள கால்நடைகளுக்குப் பிண்ணாக்கை உணவாக அளித்தால், அவை அதை உரமாக நிலத்திற்குத் திரும்ப அளிக்கும். அதனால், நிலத்தின் செழிப்பு பாதுகாக்கப்படும். 'எண்ணெய் விதைகளை முழுவதுமாகவோ, எண்ணெய் எடுத்த பிறகு பிண்ணாக்கையோ அனுப்பி விடுவது, விதையிலுள்ள உரச் சத்துக்களை அனுப்பி விடுவதற்கு ஒப்பாகும். சுருங்கக் கூறின் இவற்றை ஏற்றுமதி செய்வது நிலத்தின் செழிப்பை ஏற்றுமதி செய்வது போலாகும்.'[1] சென்ற உலகப் பெரும்போர் தொடங்குவதற்கு முன்பு, நாம் நமது மொத்த இலுப்பை, கடுகு, சிறுசணல் விதை, ஆமணக்கு, நிலக்கடலை ஆகியவைகளை உற்பத்தியில் 22 சதவீதம் ஏற்றுமதி செய்தோம். ஆனால், அண்மையில் உள்நாட்டு நுகர்வினால் ஏற்றுமதி குறைந்துவிட்டது.[2]

இரசாயன உரங்கள்

நைட்ரஜன் உரங்களை மண்ணுக்கு இடுவதால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி சர். ஜான் ரஸ்ஸல் தம் அறிக்கையில் கூறி

[1] மேலே கூறிய ஒயெல்கெர், பக்கம் 106.

[2] பயிர்கள், மண்வகைகள் பிரிவின் 8-வது கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை ஒன்றில் திரு. M. D. சதுர்வேதி, I.F.S. அவர்கள், 'மொத்த எண்ணெய் விதை உற்பத்தியில் 20% ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படுவதும், 30,000 டன் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும். இந்தியாவின் உரச் செல்வத்தை விணாக்குவதாகும் (அடிக் குறிப்பு. பக்கம் 103). இருப்பினும், இந்திய அரசாங்கத்தினால் ஏற்றுமதி, கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், எண்ணெய் விதை ஏற்றுமதி குறைந்திருக்கிறது. சிறு சணல் விதையும் அதன் எண்ணெயும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 1949–50-ல் 78,000 டன்னாக இருந்தது, 1951-52-ல் 32,000 டன்னாகக் குறைந்தது. 1951–52-ல் இலுப்பை விதை ஏற்றுமதி மிகச் சொற்பம். எள் ஏற்றுமதி அறவே இல்லை. பருத்தி விதையை அநேகமாக முழுவதும் அப்படியே கால்நடைகளுக்கு உணவாக அளிக்கிறார்கள்

யிருக்கிருர். எனினும், இவற்றின் உபயோகம் குறைவாகத்தான் உள்ளது என்றும், ஓரளவு கிடைக்கும் இவ் உரங்களையெல்லாம் தேயிலைப் பயிர் செய்பவர்களே எடுத்துக்கொண்டு விடுகிருர்கள் என்றும் ஒத்துக்கொள்கிருர்.[1] விவசாயக் குழு தன் அறிக்கையில், செயற்கை நைட்ரஜன் உரங்களை உபயோகிப்பதுபற்றி மிக வருத்தத்துடன் குறிப்பிடுவதாவது, 'இத்தொழிலின் பொருளாதாரம் இன்றுள்ளது போலவே இருந்தால், அரசாங்கத்தின் ஆதரவில் இதுபற்றி இனி மேற்கொண்டு விசாரணை நடத்தும்படி நாங்கள் சிபாரிசு செய்யமாட்டோம்.'[2]

இந்தியாவில் உணவு நிலை நெருக்கடி மிகுதியாகிவிட்டதால், அரசாங்கத்தின் உணவுத் தானியக் கொள்கைபற்றி விசாரணை நடத்தவேண்டியதாயிற்று. 1943-ல் கிரிகரி குழு, இந்தியாவின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நைட்ரஜன் உரங்களைப் பேரளவில் உற்பத்தி செய்யவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியது. பீகாரில் தன்பாத்தின் அருகில் உள்ள சிந்திரி தொழிற்சாலையின் வேலை 1947-ல் தொடங்கி, 1951-ல் முடிவுற்றது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 23 கோடி. இதில் ஒரு நாளில் உற்பத்தியாகக்கூடிய அளவு 960 டன் அல்லது ஆண்டுக்கு 3,50,000 டன் அமோனியம் சல்பேட்டு. 1951-ல் உற்பத்தித் தொடங்கியது. இதுவரையில் 10 இலட்சம் டன்னுக்குமேல் அமோனியம் சல்பேட்டு உற்பத்தியாகியுள்ளது. இதனுல் ரூ. 30 கோடி அந்நியச் செலாவணி நமக்கு மிச்சமாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக நைட்ரஜன் உர நுகர்வு அதிகரித்து வந்திருக்கிறது. இரண்டாம் திட்டம் 1961-க்குள் நுகர்வு 3,70,000 டன் ஆகும் என்று மதிப்பிடுகிறது. 1954-ல் அரசாங்கம் ஒரு உர உற்பத்திக் குழுவை நியமித்தது. இதன் வேலை, தேவைக்கேற்ப நைட்ரஜன் உரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதுபற்றிச் சிபாரிசு செய்வதுதான். இது செய்த சிபாரிசுப்படி, ரூ. 58 கோடி செலவில் நங்கல், ரூர்கேலா, நெய்வேலி ஆகிய இடங்களில் மூன்று புதிய உரத் தொழிற்சாலைகள் நிறுவத் தீர்மானம் செய்யப்பெற்றது. 1960-க்குள் இத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யத் தொடங்கும். மேலும், ஆறு சிறிய தொழிற்சாலைகள் ஆண்டுக்கு 80,000 டன் உற்பத்தி செய்யும் திறமையுடையவை. 1955-56-ல் நைட்ரஜன் உர நுகர்வு 6,10,000 டன்னுயிருந்தது. இதை 1960-61 முடிவுக்குள் 18 இலட்சம் டன்னுக உயர்த்த, இரண்டாம் திட்டம் உத்தேசித்துள்ளது.

[1] மேலே கூறியதில் பக்கம் 58.

[2] அறிக்கை, பக்கம் 91.

நம் நாட்டில் பயிர்த் தொழிலுக்கு உதவக்கூடிய அதிக நிலத்தை யெல்லாம் அநேகமாக நாம் பயன்படுத்திக்கொண்டு விட்டோம் என்று கூறப்படுகிறது. ஆகையால், நாம் ஓர் ஏக்கர் நிலம் அளிக்கக்கூடிய விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு, வழக்க மாகப் பயிரிடும் முறைகளைச் சீர்திருத்தப் பாடுபடுகிறோம். இப் பிரச்சினை இரண்டு பிரிவானது. முதலாவது, நிலத்தின் உற்பத்தித் திறனைப் பாதுகாக்க உதவுவது; இரண்டாவது, அதிகமாகப் பயிர் செய்யும் முறைகளால் உற்பத்தித் திறனைப் பாதுகாப்பது. இந்திய மண், குறிப்பாக நெல் விளையும் நிலம் நைட்ரஜன் குறையுடைய தாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓர் ஏக்கருக்குக் குறைந்த அளவு 20 பவுண்டு நைட்ரஜன் வேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக் கிறது.[1] வெவ்வேறு உரங்கள்—அங்கக, அனங்கக உரங்கள்—நெல் விளையும் மொத்த நிலத்திற்கு 25 இலட்சம் அமோனியம் சல்பேட்டும், 1 கோடி டன் பிண்ணாக்கும், 10 கோடி டன் கூட்டு உரமும் தேவைப்படும்.[2]

மொத்தத் தேவை இவ்வாறிருக்க, கிடைக்கக்கூடிய பண்ணை உரம் 60 முதல் 80 கோடி டன் ஆயினும், இதில் 20% வீணாக்கப் பட்டும், 40% எரிக்கப்பட்டும் விடுகிறதென்று சொல்லப்படுகிறது. ஆகவே, எஞ்சியிருப்பது 20 முதல் 30 கோடி டன்தான். இதில் பெரும்பகுதி நீர்ப்பாசனம் பெறும் இடங்களுக்குச் சென்றுவிடுகிறது. இது பயிர் செய்யப்படும் மொத்த நிலத்தில் கால் பகுதி. பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் கிடைக்கும் 200 இலட்சம் டன் கூட்டு உரத்தையும், சீர்திருந்திய முறையில் கிடைக்கக்கூடிய 800 இலட்சம் டன் கூட்டு உரத்தையும் சேர்த்தால், நமது மொத்தக் கூட்டு உர உற்பத்தி 4,000 இலட்சம் டன்தான். ஆனால், நமது தேவையோ 10,000 முதல் 12,000 இலட்சம் டன்கள்.

600 இலட்சம் ஏக்கர் நெல் விளையும் பகுதிக்கு 30 இலட்சம் டன் அனங்கக உரம் வேண்டுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. உரங்களை நன்கு பயன்படுத்துவதற்கேற்ற, மழை மிகுதியான இடங்களை இதில் சேர்த்துக்கொள்ளவில்லை. ‘உணவுப் பயிர்களின்

[1] நிபுணர்களே கருத்து வேற்றுமை கொண்டால், ஒன்றும் அறியாத ஏழை உழவன் என்ன செய்வான்? ஒரே தொடர்ச்சியான கூட்டங்களில், வேறொரு நிபுணர் 20 பவுண்டுக்குப் பதில் 10 பவுண்டு நைட்ரஜன் தேவை என்கிறார். (மேற்கூறிய, பயிர்கள், மண் வகைகள் பிரிவின் 8வது கூட்டம், பக்கம் 219.)

[2] மேற்கூறியதில் பக்கம் 127. மற்ற நிபுணர்கள் அமோனியம் சல்பேட்டு 30 முதல் 40 இலட்சம் டன் தேவை என்கிறார்கள். (பம்பாய், விவசாயத் துறை இயக்குநர் குறிப்பு, பக்கம் 214.)

விளைச்சல் கணிசமான அளவுக்கு உயர வேண்டுமானால், உடனே பத்து இலட்சம் டன் உர உற்பத்தி செய்வது குறைந்தபட்சக் குறிக்கோளாகக் கருதப்பட வேண்டும்.'[1]

செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்று கூறும் போது, அதற்குரிய எல்லையையும் அறிய வேண்டும். தண்ணீர் தான் இதற்கு ஒரு கீழ் எல்லை. அதிகத் தண்ணீர் இல்லாமல் உரங்களைப் போட்டால் பயிர்கள் வாடிவிடுவது எல்லோரும் நன்கு அறிந்ததே. ஆகையால் நீர்ப்பாசனம் பெறும் பகுதிகளுக்கும், தப்பாமல் மழை பெய்யும் இடங்களுக்கும் மட்டும் உரங்களைப் போட வேண்டும். இந்தியாவில் பயிர் செய்யப்படும் நிலத்தில் 600 முதல் 700 இலட்சம் ஏக்கர்வரையில்தான் உரங்களைப் பெறுகின்றன. இந்தியத்தொழிற்சாலைகளில் அதிகபட்ச உற்பத்தி, நமது தேவையில் 5 அல்லது 6-ல் ஒரு பங்குதான். ஆகையால், அயல் நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யவேண்டி யிருக்கிறது. மேலும், உரங்களின் உற்பத்தி விலை அதிகமாக இருப்பதால், உழவர்களில் பெரும்பாலோர் அவற்றை வாங்கிச் சோதித்துப் பார்க்கக்கூட முடியாத நிலையிலிருக்கிறார்கள். ஆகையால், அரசாங்கம் உழவர்களுக்கு இதற்காக நிதி உதவி செய்ய வேண்டும்.

அதிக உணவுப் பயிர் செய்யும் இயக்கத்தின் விளைவாக உரங்களை உபயோகிப்பதில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஆந்திரம், சென்னை, உத்தரப் பிரதேசம், பம்பாய் ஆகிய இராச்சியங்களில் இதைப் பார்க்கலாம். பீகார், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் ஆகிய இராச்சியங்களில் உரங்களை அதிகமாக உபயோகிப்பதற்கு இடமிருக்கிறது. ஆனால், உழவர்களிடம் வாங்கும் சக்தி குறைவாயிருப்பது உரங்கள் அவர்களிடையே பழக்கமாவதற்குத் தடையாக உள்ளது. உரங்களைக் கடனாகக் கொடுத்து, அறுவடைக்குப் பிறகு பணமாகவோ, பொருளாகவோ திரும்பப் பெற்றுக்கொள்ளும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. 1951-52 முதல் 1954-55 வரை 1,67,00,000 ஏக்கரில் 9,59,000 டன்

[1] மேற்கூறியதில் பக்கம் 128. ஒப்பிடுக: 'நைட்ரஜனை எந்த உருவத்தில் அளித்தாலும் இந்தியாவில் நெல் விளையும் வயல்கள் நல்ல பலனையளிக்கின்றன. முதலில் ஓர் ஏக்கருக்கு 5,000 பவுண்டு பசுந்தாள் உரம் போட்டு உழுது பக்குவப்படுத்திய பிறகு, 30 பவுண்டு நைட்ரஜனை அமோனியம் சல்பேட்டாகப் போடவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது'. இவ்வாறு இந்தியாவுக்கு மொத்தத் தேவையான அனங்கக நைட்ரஜனின் மொத்த அளவு 5,000,000 டன் அமோனியம் சல்பேட்டு இப்போது 4,00,000 டன்தான் உற்பத்தியாகிறது. இப்போது 1 சதவீதத்திற்குக் குறைவான நெல்தான் உரத்தைப் பெறுகிறது. (Report of the Second Meeting of the Working Party on Fertilisers, International Rice Commission, F.A.O. Rome, 1953, P. 35).

உரங்கள் போடப்பட்டு, 15,36,000 டன் அதிக விளைச்சல் கிடைத்திருக்கிறது.[1]

தொடர்ந்து இரசாயன உரங்கள் அளிக்கப்பட்டால், பயிர்கள் ஆக்ஸிமோன்களின் குறைவினால் விஷமூட்டப்பட்டுவிடும் என்றும் கூறப்பட்டுள்ளது. பயிர்களுக்கு இந்த ஆக்ஸிமோன்கள் அங்கக உரங்களிலிருந்துதான் கிடைக்கின்றன. மேலும், நீர்ப்பாசனப் பகுதிகளுக்கு உரமளிப்பதுபற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடத்திப் பூர்வாங்க வேலைகளைச் செய்தால்தான், பிறகு உழவர்களுக்குத் தக்க யோசனை கூற முடியும். உதாரணமாக, உரங்களை எப்பொழுது போடுவது நல்லது, வெவ்வேறு பயிர்களுக்கும் மண்களுக்கும் எந்த அளவில் நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாசியம் ஆகியவை கலந்த உரங்கள் போடவேண்டும், அங்கக உரங்களோடு செயற்கை உரங்களை எந்த விகிதத்தில் கலக்கவேண்டும் என்பனபற்றியெல்லாம் நமக்கு ஒன்றும் அதிகமாகத் தெரியாது. உண்மையில், உரங்களை உபயோகிப்பதுபற்றி இன்னும் அதிக ஆராய்ச்சியும் பரிசோதனைகளும் செய்ய வேண்டும். பிறகே, அவற்றைப் பயன்படுத்துவதுபற்றி விவசாயத்துறை நல்ல திருப்திகரமான யோசனைகளைக் கூறமுடியும்.[2]

மண்ணின் செழிப்பைப் பாதுகாத்து அதிகரிக்கச் செய்வதற்கு, அங்கக உரம், இரசாயன உரம் ஆகிய இரண்டு வகை உரங்களும் வேண்டும் என்று திட்டக்குழு கூறுகிறது. 'அதிக அளவில் அங்கக உரம் இல்லாமல் இரசாயன உரங்களைமட்டும் தொடர்ந்து உபயோகித்தால் மண்வளம் குறைந்து, வரவர விளைச்சலும் குறைந்துவிடும் என்பது யாவரும் நன்கு அறிந்ததே.' மேலும், 'அண்மைக் காலத்தில் உரங்களின் விலை அதிகமாயிருப்

[1] 'இந்தியா 1956', பக்கம் 148.

[2] பஞ்ச விசாரணைக் குழு, 1945, பக்கம் 148. ''மேனாடுகளில்கூட, உணவு, விவசாய அமைப்பைச் சேர்ந்த நிபுணர்கள், இன்னும் அதிக விழிப்புடன் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். 'உரங்களும் செயற்கை உரங்களும், மண்ணையும், பயிரையும் (ஒரே பயிரில் வெவ்வேறு வகைகளையும்), பருவத்தையும், மற்ற அமிசங்களையும் பொறுத்து வேறுபட்ட பலன்களை அளிப்பதால், வெவ்வேறு மண்வகைகள், வெவ்வேறு ஆண்டுகளில் வெவ்வேறு பயிர்கள் ஆகியவற்றைக்கொண்டு பல பரிசோதனைகளைச் செய்யவேண்டும். எந்த உரத்தை எந்த அளவில் உபயோகிக்கவேண்டுமென்று அறிவதற்குப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். மேலும், மண்ணின் சில நிலைமைகளிலும், சில சீதோஷ்ண நிலைமைகளிலும் பயிர்கள் உரங்களால் பயனடைவதில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். ஒரு மாவட்டம் முழுவதிற்குமன்றிக் குறிப்பிட்ட மண் வகைக்கு உரங்களைச் சிபாரிசு செய்யவேண்டும், பலவிடங்களில், உத்தம வளர்ச்சியைத் தருவதற்கு, ஒரு குறிப்பிட்ட இடத்தின் மண்வகைகள்கூட வெவ்வேறு வகையான உரங்களை வெவ்வேறளவில் ஏற்கின்றன''. Fertilisers, F. A. O. 1949, page 85-87),

பதால், உணவுப் பயிர்களுக்கன்றி, வாணிபப் பயிர்களுக்கு உரங்களை மிகுதியாக உபயோகிக்கிருர்கள். ஆகவே, உணவுத் தானியங்களைப் பயிர் செய்பவர்கள் வாங்கக்கூடிய அளவுக்கு விலைகளைக் குறைத்தாலன்றி உணவுப் பயிர்களுக்கு உரங்களை விரிவாக உபயோகிக்க முடியாமல் போய்விடும்.'[1]

உணவு உற்பத்தியை உயர்த்துவது நம் உடனடியான நோக்கமாயின், உரங்களை உற்பத்தி செய்வதற்கு ஏராளமாகச் செலவு செய்வதற்குப்பதிலாக, மண்வளம் மேலும் குறைவதைத் தடுப்பதற்குக் கம்போஸ்டைத் தயாரிக்க ஊக்கமளிப்பதும், நம் காடுகளை அதிகபட்சம் பயன்படுத்தி விறகைப் பெற்றுக் கொடுத்து, அங்கக உரத்தை எரிபொருளாகப் பயன்படுத்தும் வழக்கத்தைத் தடுப்பதுமாகிய காரியங்களுக்கு அப்பணத்தைச் செலவழித்திருக்கலாகாதா என்ற கேள்வியைக் கேட்கத் தோன்றுகிறது.[2]

பழங்காலத்தில் இந்திய விவசாயிக்கு எருவின் மதிப்பு தெரிந்திருந்தது. இன்றுகூட உழவர்கள், 'மாதிரிப் பண்ணைகளில் காட்டப்படும் நல்ல முறைகளின் பயனைக் கண்டு போற்றுகிருர்கள். ஆனல், இந்த அறிவினல் அவர்கள் அதிக நன்மை பெற முடிவதில்லை. ஆனல், அவர்கள் இதைக் கிரகித்துக்கொண்டு, நன்கு உழுவதும் உரமிடுவதும் பயிர்களை நன்ருக விளையும்படி செய்யும் என்று உணர்வார்கள்.'[3] இந்திய விவசாயிக்கு வாங்கும் சக்தி இல்லை. மாதிரிப் பண்ணைகளில் பரிசோதனை நடத்தியும், விவசாயப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ச்சிகளை நடத்த ஊக்கமளித்தும் வாங்கும் சக்தி இல்லாத குறையைப் போக்குவதற்குத் தலையிடாக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த விலைப் பொருளாதாரத்தினல் முடியாது. இவை ஓரளவு மதிப்புடையவை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனல், இப்போது கிடைக்கும் உரத்தை வாங்குவதற்கு உழவர்களுக்கு அதிக அளவில், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகவோ, நேரடியாக அரசாங்கமோ கடன் கொடுக்கும் முறை வந்தாலொழிய உரமிடும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம்-259.

[2] அரசாங்கமே கூட்டு உரத்தை உண்டாக்கிப் பங்கீடு செய்து வருவதில் அதிகக் கவனம் செலுத்துவது மகிழ்ச்சியைத் தருகிறது. கடந்த நான்கு வருடங்களில் 54 இலட்சம் டன் நகரக்கூட்டு உரம் அதிக உணவு உற்பத்தி செய்யும் இயக்கத்தில், வெவ்வேறு இராச்சியங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

[3] 'இந்தியத் தொழில்கள்'—எலியட் ஜேம்ஸ் பக்கம்-6.

பிற்சேர்க்கை

நீர்ப்பாசனத் திட்டங்கள்

உலகத்திலேயே மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றை உருவாக்குவதில் நம் நாடு ஈடுபட்டிருக்கிறது. பல நோக்குடைய ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள், அதிக உணவு உற்பத்தி செய்வதற்கும், வாணிபப் பயிர்களை விளைவிப்பதற்கும் நீர்ப்பாசன வசதிகளை அளிக்கும்; பயிர்கள், சொத்துகள், கால்நடைகள், மக்கள் உயிர் ஆகியவைகளுக்கு அதிக அழிவை விளைவிக்கும் வெள்ளங்களைத் தடுக்கும்; மேலும் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் உதவும். இவற்ருல் உண்டாகும் மற்ற நன்மைகள், உள்நாட்டில் நீர்வழிப் போக்குவரத்து, மண் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, குடிநீர் வசதி முதலியவை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இவைகளுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. இதன் பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பங்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது.

இப்போது நாட்டின் பல பகுதிகளில் 153 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஆறுதான் பலநோக்குடையவை. 104 நீர்ப்பாசனத் திட்டங்கள்; 43 மின்சாரத் திட்டங்கள். இத்திட்டங்கள் எல்லாவற்றிற்கும் ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 680 கோடி. முக்கியமான பலநோக்குத் திட்டங்களைப் பற்றிய விவரங்களைக் பக்கம் 324-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.[1]

[1] 'இந்தியா 1956', பக்கம் 197.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மின்சாரத் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும், செலவும், நன்மையும்.

பலநோக்குத் திட்டங்கள்	மொத்தச் செலவு 1951—56 இலட்ச ரூபாய்கள்	நீர்ப்பாசன நன்மை 1000 ஏக்கர்		மின்சாரப் பயன் 1000 கிலோவாட்டு	
		1955—56-க்குள்	முடிந்த பிறகு	1955—56-க்குள்	முடிந்த பிறகு
பக்ரா - நங்கல் ...	7,750	1,361	3,604	96	114[1]
ஹரிக்கே ...	1,062	...	...	...	...
தாமோதர் பள்ளத்தாக்கு ...	4,170	595	1,141	154	254
ஹிராகுட் ...	4,400	261	1,785	...	123
மேற்படி திட்டங்களுக்கு அதிக நிதி ...	5,000	...	...	...	...
புதிய திட்டங்கள் ... (கோசி, கொய்னு, சாம்பல், கிருஷ்ணு, ரிஹண்டு)	3,000	...	...	..	429
மொத்தம் ...	25,382	2,217	6,530	250	940
வெவ்வேறு இராச்சியங்களில் மாற்றத் திட்டங்கள் ...	29,459	6,316	10,412	708	1,280

[1] நங்கல் மட்டும்

10. நமது விவசாயப் பிரச்சினை
(தொடர்ச்சி)

மண் அரிப்பு

மண் அரிப்புப் பிரச்சினை இந்தியாவுக்கு மட்டும் உரியதன்று. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் முன்பு விவசாயம் செய்யப்பட்ட நிலத்தில் 175 இலட்சம் ஏக்கர் நிலம் துளைக்கப்பட்டு அழிந்து விட்டது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.[1] அரிப்பினுல், மேல் மண்ணில் உள்ள குணபமும், மேலே புரைபோன்றுள்ள அமைப்பும், அதன் தண்ணீரைப் பிடித்துவைக்கும் தன்மையும், அதிலுள்ள பாக்டீரியாவின் அளவும், அடி மண்ணைவிட மேல்மண் செழிப்பாக உள்ளதற்குக் காரணமாகிய மற்ற எல்லா அமிசங்களும் அழியும். சாதாரணமாகத் தடுப்பு முறைகளை மேற்கொள்ளாவிட்டால், நில அரிப்பினுல் உண்டாகும் நஷ்டம் மிக அதிகமாகும். ஏனெனில், உழுவதனுலும், அதன் விளைவான ஆக்ஸிகரணத்தினுலும் மண் களைத்துப்போகும். மேல்மண் அகற்றப்படுவதால் உறுதியான அடிமண் வெளிப்படும். நில அரிப்பினுல் உணவுக் கவலை ஏற்படாத அமெரிக்காவில்கூட, நில அரிப்பு ஏற்பட்ட இடத்தில் எல்லாம் வறுமை உண்டாகியிருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில், இப் பிரச்சினை உத்தரப் பிரதேசத்திலும் மேற்கு வங்காளத்திலும் மிகவும் முக்கியமானது. இங்குப் பல நீண்ட பள்ளங்கள் ஏற்பட்டு நிலம் தன் செழிப்பை இழந்துவிட்டது. பம்பாய் இராச்சியத்தின் தென் ஜில்லாக்களிலும் சோட்டாநாகபுரியிலும் மலைச்சரிவுகளில்

[1] அமெரிக்காவில் செய்த நில ஆராய்ச்சியினுல், 50,000,000 ஏக்கர் நல்ல பயிர் நிலம், பயிருக்கு உதவாமல் பாழாகிவிட்டது என்றும், இதே அளவுள்ள நிலம் அரிக்கப்பட்டுவிட்டது என்றும் தெரிகிறது. ஏற்கெனவே நிகழ்ந்த அரிவு இருக்க, மொத்தப் பயிர்நிலத்தில் 75 சதவீதம் இப்போது நில அரிப்புக்குள்ளாகியிருக்கிறது. ஆகவே, அதுவும் இறுதியாக மிகவும் அழிந்துவிடும்.'' 'மாறும் உலகத்தில் உழவர்கள்', விவசாய ண்இப் புத்தகம், வாஷிங்டன், 1940.

பெய்யும் பருவ மழை இதே மாதிரி செய்துவிட்டது. மழையினாலும் காற்றினாலும் உண்டாகும் அழிவைச் சாதாரணமாகத் தாவரங்களே தடுத்துப் பாதுகாக்கின்றன. ஆனால், அத்தாவரங்களை அகற்றி விட்டவுடனே, காற்றுக்கும் மழைக்கும் திறந்துவிடப்பட்ட மண்ணானது, ஓடைகளாகச் செய்யப்பட்டுப் பயிர்த் தொழிலுக்குத் தகுதியற்றதாகிவிடுகிறது. ஆற்றங்கரைகள் மழையினால் கரைந்து, வாய்க்கால்களிலும் ஓடைகளிலும் தூர் நிறைந்துவிடும். மேலும், தாவரங்களை அகற்றிவிடுவதால், மழை நீரானது மண்ணில் ஊறாமல் போய், ஓடைகள், ஊற்றுகள், கிணறுகள் எல்லாம் வற்றிப் போகும். ஜனத்தொகை அதிகரிப்பதாலோ, பிராணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ தாவரங்கள் எல்லாம் அகற்றப் படுகின்றன. காடுகளை அழிப்பதும், ஆடு மாடு முதலிய கால்நடைகளை அளவின்றி மேயவிடுவதும் மண்ணின்மேல் உள்ள பாதுகாப்பை அழித்துவிடுகிறது. மீண்டும், இதனால் அதிக வெள்ளங்களும் வறட்சிகளும் உண்டாகின்றன. ஆறுகளில் தூர் நிறைந்துவிடுவதுதான் இதற்குக் காரணம். மலைச்சரிவுகளில் பயிர் செய்வதினாலும் அரிப்பு உண்டாகிறது என்று தெரிகிறது.[1]

அரிப்புக்கு மிகவும் சாதாரணமான காரணங்கள் காடுகளை அழிப்பதும், அதிகமாக மேய்ச்சல் செய்வதும்தான். புல்தரையை ஒரு முறை அழித்துவிட்டால் மறுபடியும் உண்டாக்க முடியாது. இந்தியாவின் பெரும் பகுதியில் இயற்கையான புல்தரைகள் மறைந்துவிட்டதால், கால்நடைகள் தினந்தோறும் தின்பதற்குப் புதர்களையும் வளர்ந்த மரங்களையும் நாடவேண்டி யிருக்கிறது. மற்ற நாடுகளில் கால்நடைகளுக்குப் புல் ஊட்டி வளர்த்து, புதர்களை மிகவும் பஞ்சநிலை ஏற்படும்போது பயன்படுத்துவதற்காக, ஒதுக்கப்பட்ட இடங்களாக வைத்துள்ளனர். நம் நாட்டிலோ புதர்களில் எஞ்சியிருக்கும் சிறிதளவும் கால்நடைகளுக்கு அன்றாடம் உணவாகிறது.

இந்நிலையில், மலைச் சரிவுகளின் மேற்பகுதிகளைப் புல் வளரும் இடங்களாகச் செய்தால், அல்லது கரைகளைக் கட்டினால், அல்லது மேடுகளைப் படிப்படியாக அமைத்தால் பாதுகாப்பு ஏற்படும். மண்

[1] காடுகளை அழிப்பது, ஆடுமாடுகள் அளவின்றி மேய்வதால் தாவரப் பாதுகாப்பு அழிவது, விறகுக்காக மரங்களை அதிகம் வெட்டுவது, விவசாயத்திற்காகக் காடுகளை அகற்றுவது ஆகியவை நில அரிப்புக்குக் காரணம் என்று திட்டக்குழு கூறுகிறது. ஒவ்வோராண்டும், அரிப்பினால் மேல் மண்ணில் 2 சதவீதம் வீணாகிறதென்று சொல்லப்படுகிறது. பம்பாயில் இங்கு மங்குமாக 28 இடங்களில் ஆராயப்பட்ட 50,000 ஏக்கர் நிலத்தில், 17 முதல் 23 சதவீதம் மட்டும்தான் அரிப்பினால் பாதிக்கப்படாமல் இருந்தது; 60 சதவீதம் மிகவும் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதால் 9 அங்குலம் மண்தான் எஞ்சியிருக்கிறது (திருமலை, 'இந்தியாவில் யுத்தப் பிற்கால விவசாய பிரச்சினைகளும் கொள்கைகளும்' 1954, பக்கம் 166).

அரிப்புக்கு எதிராகச் செய்யக்கூடிய முக்கியப் பாதுகாப்புக் காடுகளை வளர்ப்பதுதான். இது விவசாயக் குழு கூறியிருப்பதுபோலப் பலன் தரக்கூடியதா என்று நினைக்காமல், இனிவரும் தலைமுறைகளுக்கு இதனால் கிடைக்கும் நன்மையை நினைக்கவேண்டும். காட்டிலாகா புதர்களையும் பெரிய மரங்களையும் வளர்த்து நிலத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசர நிலைபற்றி டாக்டர் ஒயெல்கெர் கூறி நாற்பதாண்டுகளுக்குப் பிறகு 1937-ல் சர் ஜான் ரஸ்ஸல் இதே மாதிரி சிபாரிசு செய்தார். 'மண் அரிப்பு உண்டாகக்கூடிய இடங்களில் பாதுகாப்புக்காகச் சிறிய தோட்டங்களை வளர்க்கும் சாத்தியக்கூறுகளைப் பற்றிக் காட்டிலாகாவைக் கலந்தாலோசிக்க வேண்டும். இதனால், கீழே உள்ள பயிர்கள் அபிவிருத்தியடைவதற்கு இடமுண்டு.' ஆராய்ச்சியைவிட வேலையில் இறங்குவதுதான் அவசரம் என்று சர் ஜான் ரஸ்ஸல் கூறியிருப்பது அரிப்பைப்பற்றி அவர் கருத்தை மிகத் தெளிவாக்கியுள்ளது. அரிப்பைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவேண்டும். ஒவ்வொரு அரிப்புப் பகுதியையும் அப்படியே முழுவதுமாகக் கவனிக்க வேண்டும். ஆண்டுதோறும் அரிப்பு மகாநாட்டை நடத்தி, அதில் காடு, விலங்கு, மண் ஆகிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் சந்தித்து, எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று ஆலோசனை கூற வேண்டும். இந்த நடவடிக்கைகளை அமைச்சர்கள் எடுத்து, பாதுகாக்கப்பட்ட நிலங்களுக்குச் செலவுகளைப் பகிர்ந்துவிட வேண்டும்.[1]

திட்டக்குழு, தனியார் தொழில் துணிவுக்கு ஆதரவாகக் கொண்டிருக்கும் கருத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறது. 'உழவர்களே பெரும்பாலான மண்பாதுகாப்பு வேலையைச் செய்ய வேண்டி இருப்பதால், அரிப்புப் பிரச்சினைபற்றி அவர்கள் நன்கு உணர்ந்து, மண்பாதுகாப்பு வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட வேண்டியது அவசியம். விவசாய முறைகளில் முன்னேற்றங்களையும் அவர்களே செய்யவேண்டும். அரசாங்கத்தின் வேலை அவர்களுக்கு இவற்றின் அவசியத்தை எடுத்துக் கூறுவது மட்டும் தான்.'[2] இருப்பினும், இக்குழு அடுத்த பத்தியில் அரசாங்கம் அரிப்பைக் கட்டுப்படுத்தி மண்ணைப் பாதுகாப்பதற்கு எடுத்துக்

[1] ரஸ்ஸலின் அறிக்கை, பக்கம்-57. விவசாயக்குழு, மண் பாதுகாப்புத் திட்டங்கள் தனியார் தொழில் துணிவுக்கே விடப்பட வேண்டுமென்று கூறியது. 'கூட்டுறவான முயற்சிகள்' அல்லது தனிப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தல்மூலமாகவும் இதைச் செய்யலாம். இங்கிலாந்தின் தாராளக் கொள்கை (liberalism) வழிவந்த இக்குழுவினர், அக்கொள்கையை விட்டுவிட முடியாதவர்களாயுள்ளனர் (அறிக்கை, பக்கம் 80).

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம்-299.

கொண்டுள்ள நடவடிக்கைகள் நாடு முழுவதும் பரவவில்லை என்ற வருத்தத்தைத் தெரிவித்துத் தன் கொள்கைக்கு முரணுகப் பேசியிருக்கிறது. இக்குழு இதற்காகச் சட்டமியற்ற வேண்டுமென்று கூடக் கூறியிருக்கிறது. ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் தண்ணீர் ஓடிவரும் பகுதிகளில் மண்ணைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், மண்ணைப் பாதுகாப்பதற்குத் தடுப்பு அணைகளும், மற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவேண்டுமென்றும், இப்படிச் செய்யாவிட்டால் ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் இரண்டாம் திட்டம் குறிப்பிட்டிருக்கிறது.[1] உண்மையில், மண் முழுவதும் செலவாகிவிடாமலும், அரிக்கப் படாமலும் தடுப்பதற்குச் செய்யவேண்டிய முயற்சிகள் தனியார் தொழில் துணிவினுல் முடியாத அளவுக்கு மிகப் பெரியவையாய் உள்ளன. விவசாயத்தைப் பெருக்கிக்கொண்டு போவது, 'மண்ணைக் கொலை' செய்வதற்கொப்பாகும். ஒரு பகுதியில் செய்யப்படும் அலட்சியமான செயல்கள் மற்ருெரு பகுதியில் வெள்ளத்தை உண்டாக்கலாம். ஒரு பகுதியில் காடுகளை அழிப்பதால் மற்ருெரு பகுதியில் நிலம் பாழாகிவிடும். ஒரு சிறிது காலத்திற்கு அதிக விலைகள் இருந்தாலும், அது 'புழுதிப் பகுதி'யை உண்டாக்கக் கூடும்.[2] ஓர் இணைப்பான கொள்கை இல்லாமல் விவசாயத்தை இராச்சிய அரசாங்கத்தின் பொறுப்பாக்கி அதற்குத் தனியாட்சி கொடுத்துவிட்டால் உண்டாகக்கூடிய ஆபத்துகளைக் கருதி, நாடு முழுவதன் நன்மைக்காகவும் மத்திய அரசாங்கம் அகில இந்தியத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு நடத்தவேண்டும்.

பூச்சிகளையும் நோய்களையும் தடுத்தல்

பூச்சிகள், புழுக்கள், நோய்கள் ஆகியவை விவசாய உற்பத்திக்குப் பெரு நஷ்டத்தை விளைவிக்கின்றன. இவற்ருல் உண்டாகும்

[1] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம்-325.

[2] "1934-ல் அமெரிக்காவில் விவசாயப் பொருள்களுக்குக், குறிப்பாகக் கோதுமைக்கு அதிக விலை உண்டானதால், பரந்த புல்வெளிகளையெல்லாம் தானியங்களைப் பயிர் செய்யும் நிலங்களாக மாற்றியபோது இவ்வாறுதான் நடந்தது. இவ்வாறு காற்றுக்குத் திறந்து விடப்பட்ட மண், அடித்துக் கொண்டு போகப்பட்டு, அடியில் உள்ள செழிப்புக் குறைந்த மண்தான் விவசாயிக்கு எஞ்சி நின்றது. 1934-ல் அந்நாட்டின் நடுப்பாகத்தில் இருந்த 'புழுதிப் பகுதி'யின் சிவப்பு மண்தான் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் சூரியனுடைய கதிர்களை மங்கச் செய்தது. ஒப்பிடுக: ஓர் ஆற்றின் போக்கைத் திருப்பி அதன் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கு எடுத்துக்கொண்டால் வேறெங்காவது செழிப்பான நிலத்தில் உப்புப் படிவங்கள் பரவிவிடும். இதனுல் நல்ல பயிர்கள் விளையலாம். ஆனுல் ஒரே பயிரை அதிகமாகப் பயிர் செய்வதால் பயிர் நோய்கள் உண்டாகும். இதற்கு ஒரே பரிகாரம் நிலத்தை நீண்ட காலம் பயிர் செய்யாமல் விட்டு விடுவதுதான்''. லாரென்ஸ் தாம்சன், 'மாறுதலின் அறைகூவல்', 1956, பக்கம் 21-22.

நஷ்டம் ஒரு வருடத்திற்கு ரூ. 180 கோடி என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.[1] கரும்பு வயல்களில் பூச்சிகள் வாழ்வதற்கு வசதி யாக இருக்கிறது. இங்கேதான் அதிகமான பயிர் நோய்கள் உண்டாகின்றன என்று தெரிகிறது. இவற்றுள் மிகவும் தீங் கானவை, விற்பனையாகக்கூடிய கரும்பின் விளைச்சலையும் சத வீதத்தையும் குறைக்கும் துளைக்கும் பூச்சிகளே. பருத்தி, உணவுப் பயிர்கள் ஆகியவற்றிலும் இவ்வாறே. சர் ஜான் ரஸ்ஸல் இத் தகைய பயிர் நோய்களை ஆராய வேண்டுமென்றும், இவற்றை நேரில் சென்று பார்த்துத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை கூறும் நிபுணர்களை நியமிக்க வேண்டுமென்றும் கூறினர்.

பயிர் நோய்களைத் தடுப்பதற்கு மூன்று வழிகள் சாதாரணமாக உள்ளன: (1) நோய்களைத் தடுக்கும் ஆற்றலுள்ள பயிர்களை உண்டாக்குவதால் இத் தொல்லையே இல்லாமல் செய்வது. (2) மண்ணின் நிலைமையையோ, பயிர் செய்யும் முறைகளையோ மாற்றி நோய் வராமல் தடுப்பது. (3) பூச்சிகளை அல்லது காளான்களை இரசாயன முறைகளாலோ உயிர் நூல் முறைப்படியோ அழிப்பது.

பருத்தி, கரும்பு ஆகிய பணப் பயிர்கள் தவிர, மற்றப் பயிர்கள் விஷயத்தில் நோய்கள், பூச்சிகள்பற்றிய பிரச்சினை இன்னும் ஆராய்ச்சி நிலையிலும் பரிசோதனை நிலையிலுமே இருக்கிறது. இக்காலத்தில் உள்ள விரைவான போக்குவரத்து சாதனங்களால் மற்ற நாடுகளிலிருந்து வரும் நோய்க் கிருமிகளைத் தடுப்பது முடியாத காரியமாகத் தோன்றும். எனினும், முதலாவதாக, விஞ்ஞான முறைப்படி பயிர் நோய்களைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு இன்னும் அதிக காலம் பிடிக்கலாம். இரண்டாவதாக, கண்டுபிடிக்கப்பட்டதை அரசாங்கம் விரிவாகக் கையாளுவதற்கும் அதிக காலம் ஆகலாம். இருந்தாலும், 1919 ஆம் ஆண்டின் 'சென்னைச் சட்டத்தின்' மாதிரியில், பம்பாய் அரசாங்கம் 1941-ல் 'பம்பாய் விவசாயப் பூச்சிகள், நோய்கள் சட்டம்' ஒன்றை இயற்றி இத்துறையில் ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது. 1946-ல் இந்திய அரசாங்கம், 'தாவரப் பாதுகாப்பு, நோய் ஒதுக்கம், சேமிப்புப் பிரிவு' என்னும் பெயரால் ஒரு மத்திய தாவரப் பாதுகாப்புத் துறையை நிறுவியது.

[1] "நோய்கள், புழுப் பூச்சிகள், எலிகள் முதலியவற்றால் இந்தியாவில் பயிர்களுக்கு உண்டாகும் நஷ்டம், மொத்த விளைச்சலில் 10 சதவீதம் என்று குறைவாகவே மதிப்பிடலாம்." உட்ஹெட் பஞ்ச விசாரணைக் குழு, பக்கம் 158.

இது இராச்சிய அரசாங்கங்களுக்கு, நோய்களையும் பூச்சிகளையும் தடுப்பதற்கான யோசனைகளைக் கூறி, தாவரப் பாதுகாப்புக் கழகங்களை அமைப்பதற்கு உதவி செய்கிறது. இத்தகைய கழகம் இப்போது அநேகமாக எல்லா இராச்சியங்களிலும் இருக்கிறது. எல்லா இராச்சியங்களும் தங்கள் பயிர்ப் பரப்பு, நோய் தாக்கும் தன்மை ஆகியவற்றிற்கேற்ப அளிக்கும் நிதியைக் கொண்டு பாலைவன வெட்டுக்கிளிகள்பற்றி அறிக்கை பதிவு செய்வதும் அவற்றைக் கட்டுப்படுத்துவதும் மேலான முறையில் நடைபெறுகின்றன. இவை பெருக்கப்பட்டும் வருகின்றன. முதல் திட்ட காலத்தில் பயிர்ப் பாதுகாப்புக்காக நான்கு நிலையங்கள் நிறுவப்பட்டன. இரண்டாம் திட்டத்தில் இன்னும் மூன்று நிறுவப்படும்.

உழவும் நுட்பவினை முறையும்

இந்தியாவில் பயிர் செய்யும் முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோலவே உள்ளன. அடிப்படையில், மற்ற நாடுகளிலும், கடந்த காலத்தில் பல நூற்றாண்டுகளாக நடந்து வந்ததுபோலவே அவை உள்ளன. மக்கள் உணவுக்குத் தானியங்களும், நார்கள், ஆடைகள், எரிப்பதற்கு எண்ணெய்கள் ஆகியவைகளும் பெறுவதற்காகவே விவசாயம் நடத்தப்பட்டது. பிராணிகளுக்கு உணவுபற்றிய எண்ணமே இல்லை. இயற்கையாகக் கிடைக்கக்கூடிய புல்லும் தண்டுகளும்தான் மேய்வதற்குக் கிடைத்தன. இந்தியாவில் பழங்காலம் முதல், தீவனம் கிடைக்காத காலத்திலும் உழைக்கக்கூடிய காளைமாடுதான் சக்திபெறும் மூலமாக இருந்தது. மற்றக் கால்நடைகளைவிட அதற்குத்தான் மதிப்பு அதிகம். பழங்காலத்தில் இருந்ததுபோலவே விவசாயக் கருவிகளும், ஏரும், மண்வெட்டியும் இன்றும் உள்ளன. இந்தியாவில் பின்பற்றப்படும் விவசாய முறைகளைக் கூர்ந்து கவனித்தவர்கள், அவை பல நூற்றாண்டு அனுபவத்தின் பலன் என்றும், அவை நாகரிகத்தில் குறைந்த முரண்பட்ட வழிகள் அல்லவென்றும் கூறியுள்ளனர். அவர்கள் விதைகளை விதைக்கும் முறைகளும், பயிர்களைக் கலந்து விளைவிப்பதும், களை பிடுங்குதலும், செடிகளை அளவாக வெட்டி விடுவதும், மண்ணை மாற்றுவதும் கலப்பதும், ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வோரளவு ஆழமாக நிலத்தை உழுவதும், இக்கால விவசாய விஞ்ஞானம், ஆராய்ச்சி ஆகியவற்றின் பயனாக மேலும் ஒன்றாகச் செய்யப்பட முடியும். ஆனால், அவை பல நூற்றாண்டு அனுபவத்தின் வழி, தலைமுறை தலைமுறையாக வந்தவை. அவை பயனற்றவை என்று கூறிவிட முடியாது. 'சாதாரண விவசாய முறைகளை எடுத்துக்கொண்டால், நிலத்தில் களைகள் இல்லாமல்

துப்புரவாக வைத்துக்கொள்வதும், தண்ணீர் இறைக்கும் உத்தியான முறைகளும், மண்ணைப்பற்றியும் அதன் பகுதிப் பொருள்களைப்பற்றியும் தெளிவான அறிவும், சரியான விதைக்கும் பருவமும் அறுவடை செய்யும் பருவமும் இந்திய விவசாயத்தில் காணப்படுவதுபோல வேறெங்கும் காண முடியாது. இவை சிறப்பாக ஓரிடத்தில் மட்டுமன்றிச் சாதாரணமாக எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக உள்ளன. நான் பயணம் செய்து தங்கிய இடங்களில் கண்ட கருத்தான விவசாயத்தையும், கடினமான உழைப்பையும், விடா முயற்சியையும், சாதனங்களின் வளத்தையும் விடச் சிறந்தவற்றை நிச்சயமாக எப்பொழுதும் கண்டதில்லை.'[1] இவ்வாறே சர் ஜான் ரஸ்ஸலும், 'உலகத்தில் வெவ்வேறிடங்களில் நான் கண்ட விவசாயங்களைவிட இந்திய விவசாயி எந்த விதத்திலும் குறைந்தவனல்லன்' என்கிறார்.[2]

இந்திய விவசாயிகளின் அனுபவ ஞானமும் அறிவு நுட்பமும் இவ்வாறு போற்றப்பட்டாலும், தொழில் துறையைப் போலவே விவசாயத் துறையிலும் நாம் உற்பத்தியைப் பெருக்கி, நம் மக்களை இப்போதுள்ள வறுமையிலிருந்து காப்பாற்றி, மேலும் சௌகரியமும் செழிப்பும் உள்ள வாழ்க்கை வாழச்செய்ய வேண்டுமானால், நாம் விஞ்ஞான முறைகளையும் இயந்திரக் கருவிகளையும் கொண்டு தொழில் செய்யத் தெரிந்துகொள்ள வேண்டும்.

'இப்போதுள்ளமுறை'களால் பெறுவதைவிட மேலான உழவு முறைகளாலும், உரங்களை இடுவதாலும், தக்க பருவத்தில் விதைப்பதாலும், இயந்திரக் கருவிகளாலும், நிலத்திலிருந்து நாம் இன்னும் அதிகமாகப் பெறலாம் என்பது வெளிப்படையான உண்மை. திரு. கீடிஞ்சின் (Keatinges') நூலிலிருந்து எடுக்கப் பட்ட இரண்டு அட்டவணைகள் மேலான முறைகளால் விளையும் பயிர்களைக் காட்டுகின்றன.[3]

தீர்மான அமிசம்		கிடைக்கக்கூடிய அதிகப் பயிரின் சதவீதம்			
		சூரத்	ஜல்கான்	பூனு	தார்வார்
உரம்	...	30	30	30	30
விவசாயம்	...	20	25	30	35
விதை	...	10	10	10	10
நீர் வடித்தல்	...	10	...	...	...
வரப்புக் கட்டுதல்	...	...	15	15	20
மொத்தம்	...	70	80	85	95

[1] டாக்டர் ஓயெல்கெரின் அறிக்கை. பக்கம் 10.

[2] மேற்கூறியதில். பக்கம் 3.

[3] 'மேற்கிந்தியாவில் விவசாய அபிவிருத்தி' பக்கம் 104.

ஓர் ஏக்கருக்கு விளைச்சலின் மதிப்பு

பயிர்		கிராம மக்கள் பெற்றது		மேற்கூறிய வசதிகளால் அரசாங்கப் பண்ணைகளிலிருந்து பெற்றது
		ரூ.	அ.	ரூ.
கம்பு	...	24	13	55 (காரிப்) 80 (ரபி)
தினை	...	17	4	38
கோதுமை	...	24	2	53
நிலக்கடலை	...	45	0	99

மேலான விதைகள்

உற்பத்தியை அபிவிருத்தி செய்து அதிகரிப்பதற்கு மிகவும் நல்ல முறை என்னவென்றால், நல்ல பயிர்களைத் தேர்ந்தெடுத்தும், கலப்பினங்களை உண்டாக்கியும், அந்நியத் தாவரங்களைப் புகுத்தி இச் சூழ்நிலைக்குத்தக வளர்ப்பதும் ஆகிய முறைகளால் மேலான ஜாதிப்பயிர்களை விருத்தி செய்வதுதான். மேலான வகைத் தாவரங்களால் 5 முதல் 10 சதவீதம் அதிக விளைச்சலைப் பெறலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலான விதைகளைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்யப்பட்டதால் உண்டான முக்கிய உணவுப் பயிர்களின் பரப்புப்பற்றிய அட்டவணையைக் காங்கிரசின் விவசாயச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.[1]

பயிர்		மேலான விதைகள் விதைக்கப்பட்ட பரப்பு (10 இலட்சம் ஏக்கரில், 1938-39)	மதிப்பிடப்பட்ட சதவீதப் பரப்பு—மேலான விதைகள் விதைக்கப்பட்டது, 1938-39
அரிசி	...	4·5	6·2
கோதுமை	...	7·9	22·4
கம்பு	...	0·6	1·1
நிலக்கடலை	...	0·3	6·7
கொள், உளுந்து	...	0·2	1·6

உட்ஹெட் குழுவும், 1926-27-க்கும், 1938-39-க்கும் உரிய ஒப்பெண்களின் அட்டவணையை பக்கம் 233-ல் தந்துள்ளது.[2]

[1] அறிக்கை, பக்கம் 160.

[2] அறிக்கை, பக்கம் 152.

பயிர்	மேலான பயிர் வகைகளின் பரப்பு (10 இலட்சம் ஏக்கரில்)		மேலான பயிர் வகைகளின் சதவீதப்பரப்பு		மேலான பயிர்கள் ஆண்டுக்கு அளித்த அதிக விளைச்சல் (10 இலட்சம் மணங்கில்)	
	1926–27	1931–39	1926–27	1938–39	1938–39	
அரிசி	0·9	4·5	1·1	6·2	9·0	(நெல்)
கோதுமை	2·9	7·9	11·9	22·4	15·8	
கம்பு	0·1	0·6	0·5	1·1	0·6	
நிலக்கடலை	0·4	0·6	10·3	6·7	1·05	
கொள், உளுந்து	0·1	0·2	0·8	1·6	0·2	
பருத்தி	3·6	6·5	22·7	27·5	3·2	(விதையுள்ள பருத்தி)
சணல்	0·5	1·6	13·1	50·2	3·5	
கரும்பு	0·2	2·1	7·2	68·2	420·0	(கரும்பு)

பரப்பிலும் விளைச்சலிலும் மிக அதிகமான உயர்வு பணப் பயிர்களில்தான் உள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். விதைகளைப் பெருக்குவதிலும் பங்கீடு செய்வதிலும், அதிக அபிவிருத்திக்கு இடமிருக்கிறதென்று திட்டக் குழு கூறியுள்ளது. ஒவ்வொரு இராச்சியத்திலும் விவசாயத் துறையின் மேற்பார்வையில் பல விதைப் பண்ணைகளை நிறுவ வேண்டுமென்று அது சிபாரிசு செய்தது. அவற்றை மற்றப் பரிசோதனைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், அக்குழு விவசாயத்திற்கு அளிக்கப்படும் உயர்ந்த ஜாதி விதைகள், தம் தரம் மாறிவிடாமல் இருப்பதற்காக அவற்றை நான்கைந்து வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று கூறியது. நல்ல விதையானது விவசாயியின் நிலத்தில் தரம் குறைந்து போவதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றிச் சரியான விவரங்களைப் பெறவேண்டும். விதைகளைப் பரிசோதிப்பதற்குரிய வசதிகள் இப்போது மிகவும் குறைவு. மூன்று இராச்சியங்களில்தான் விதைகளைச் சுத்தம் செய்வதற்கு வசதிகள் உள்ளன. முதல் திட்டத்தின் நான்கு வருடங்களில் பகிர்ந்தளிக்கப்பட்ட மேலான விதைகள் மொத்தம் 1,76,000 டன்கள். இவை 200 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விதைக்கப்பட்டன. இரண்டாம் திட்டத்தில், மொத்தம் 93,000 ஏக்கர் உள்ள 3,000 விதைப் பெருக்கப் பண்ணைகளை ஏற்படுத்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேசீயப் பரப்புத் தொகுதியும் ஒரு விதைப்

பண்ணையையும், ஒரு விதைப் பண்டகசாலையையும் பெற்றிருக்கும். மேலான விதைகளால் உணவு உற்பத்தி 10 இலட்சம் டன் அதிக மாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாற்றுப் பயிரும் கலப்புப் பயிரும்

இந்திய விவசாயிக்கு நிலத்தைப் பயிரிடாமல் விட்டு வைப்பதும் மாற்றுப் பயிர் முறையும் தெரிந்தவையே. ஆனால், நிலத்தின்மீது மக்கள் நெருக்கடி ஏற்பட்டதாலும், மண்ணுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டதாலும் நிலத்தைப் பயிரிடாமல் விட்டுவைக்கும் வழக்கம் குறைந்துவிட்டது. இன்றுகூட, கம்பு போன்ற தானியப் பயிர் செய்யும்பொழுது, இடையிடையே ஏதேனும் ஒரு இருபுற வெடிகனிப் பயிரைப் பயிர் செய்யும் வழக்கத்தைச் சாதாரணமாகக் காணலாம். இவ்வாறு கலப்புப் பயிர் செய்வது, விவசாயத்தில் பருவகால ஏற்றத் தாழ்வுகளால் உண்டாகும் நஷ்டத்திற்குப் பாதுகாப்பாக இருக் கிறது. இதனால், ஒரு பயிர் பலன் தராவிட்டாலும் மற்றொன்று பலன் தரும். சில ஏக்கர் நிலத்தைக் கொண்டு ஒரு பெரிய குடும் பத்தையும் கால் நடைகளையும் காப்பாற்ற வேண்டியவர்களுக்கு இது ஒரு முக்கியமான காரியம்.

டாக்டர் ஓயெல்கெர், மாற்றுப் பயிர்முறை நம் நாட்டில் பலவிடங் களில் கையாளப்படுவதற்குக் கணக்கற்ற உதாரணங்களைக் காட்டி யிருக்கிறார். இங்குப் பலவகையான பயிர்கள் ஒன்றாக விளைவிக்கப் படுகின்றன. அவை கோதுமை, பார்லி, கொள், உளுந்து போன்றவை. இதைவிட மிகச் சிக்கலான முறைகளும் உண்டு. அடுத்தடுத்து வரிசையான பயிர்கள் மட்டுமன்றி, ஒன்றுவிட்ட வரிசைகளில் வெவ்வேறு பயிர்கள் கலந்தும் பயிரிடப்படும். இவற்றுள் சில விரைவாக வளர்ந்து அறுவடையாகிவிடும்; மற்றவை மெதுவாக வளர்ந்து, முற்கூறிய பயிர் அறுக்கப்பட்ட பிறகு அறுவடை செய்யப்படும். சில பயிர்கள் ஆழமான வேர்கள் உடையவை; மற்றவை மேற்பரப்பிலேயே உணவெடுத்துக் கொள்ளும் தன்மையுடையவை. இந்த முறையினால் மண் நன்றாக மூடப்பட்டு, சூரிய வெப்பம் அதன்மேல் தாக்காமலும், அதனால் ஈரம் புலராமலும் இருக்கும்படி செய்யப்படுகிறது. இந்த மாற்றுப் பயிர் முறையை மேலும் சீர்திருத்தலாம் என்று சொல்லக்கூடும். சரியாகப் பயிர்களை மாற்றாததனால் விவசாயம் தாழ்ந்துவிட்டது என்றும் கூறலாம். ஆனால், அரசாங்கம் கரும்பையும், பருத்தியை யும் விளைவிப்பதில் செய்யக்கூடிய மாற்றுப்பயிர் முறையைப்பற்றியே தன் கருத்தைச் செலுத்தியது. இந்தியப் பருத்தி, கரும்பு குழுக் களின் ஆராய்ச்சிக்குள் அடங்காத மற்றப் பயிர்களைப்பற்றி விரிவாக

விசாரணை நடத்துவது முடியாத செயல் என்று விவசாயக் குழு ஒத்துக்கொண்டது. ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் யோசனைப்படி நடத்தப்பட்ட வேலையை மதிப்பிட்டுக் கூறிய 230 பக்க அறிக்கையில், சர் ஜான் ரஸ்ஸல், சிந்து மாகாணத்தில் லாயிடு அணைத் திட்டத்தில் பருத்தி, கோதுமை முதலியவற்றை மாற்றிப் பயிரிடும் சாத்தியக்கூறுகளைப்பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளார். இங்குக்கூட, மாற்றுப் பயிருக்கு உரமிடுதல் வேண்டும் என்பதை அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார்; தீவனத்திற்குச் சற்றுப் பக்கத்தில் அதிகக் கிராக்கியும், கால்நடைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அதிக இடமும் இருந்தாலும், பால்பண்ணை உற்பத்திப் பொருள்கள் நெடுந்தூரமுள்ள சந்தைகளுக்குப் போகவேண்டி யிருப்பதால் பாதிக்கப்படும் என்றும் கூறுகிறார்.

சுருங்கக் கூறின், இப்போதுள்ள மாற்றுப் பயிர் முறையையும் கலப்புப் பயிர் முறையையும் சீர்திருத்துவதற்கு அதிக இடமில்லை. இடமிருந்தால், பருத்தி, கரும்பு ஆகியவற்றிற்குரிய மேலான முறைகள்பற்றிய ஆராய்ச்சிகளே நடைபெறும். முக்கிய உணவாகிய அரிசியைப் பொறுத்தவரையில், மாற்றுப் பயிர்முறை கடைப்பிடிக்கப் படுவதில்லை என்றும், அரிசியைப் பயிராக்கும் நிலைமைபற்றிக் கவனித்தால் இதற்குக் காரணம் எளிதில் விளங்கும் என்றும் டாக்டர் ஓயெல்கெர் குறிப்பிட்டிருக்கிறார். தூர் எடுத்துப் புதுப்பிக்கப்பட்ட நிலங்களுக்கு உரம் தேவையில்லை. அவை, நிறையத் தண்ணீரைப் பெறுகின்றன. ஆகவே, மாற்றுப் பயிர்முறைகளால் உண்டாகும் உரம் அவற்றிற்குத் தேவையில்லை. நாற்பத்தைந்தாண்டுகள் கழித்து சர் ஜான் ரஸ்ஸல், 'ஒரே பயிர் செய்வதைவிட மாற்றுப் பயிர் செய்வதுதான் சிறந்தது என்று அனுபவத்தில் அறிகிறோம். அரிசி விளைச்சல்தான் அதிக கஷ்டமானது; குறிப்பாக வெள்ளப் பெருக்கு வரக்கூடிய கனமான மண்ணைவிட மிருதுவான மண்ணில் தான் பயிர்களை மாற்றியோ, வரிக்கிரமமாகவோ பயிர் செய்ய முடியும்' என்று கூறினார்.

கருவிகள்

ஏரைச் சீர்திருத்துவதற்குப் பல முயற்சிகள் செய்யப் பட்டுள்ளன. அரசாங்கப் பண்ணைகளில் இரும்பு ஏர்கள் பயன் படுத்தப்படுகின்றன. ஆனால், அவற்றை உழவர்கள் இன்னும் பின் பற்றவில்லை. இதற்குக் காரணம் கண்டுபிடிப்பது எளிது. இரும்பு ஏரைவிட மர ஏர் மிகவும் மலிவானது. இரும்பு ஏர் மிகவும் கன மானது. அதை உழவன் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டு ஒவ்வொரு வயலுக்கும் போக முடியாது. மேலும், இரும்பு ஏரை

இரும்புப் பட்டரையிலன்றி, வேறெங்கும் செப்பனிட முடியாது. இரும்பு ஏரில் ஆழமாக உழுதால், சுண்ணும்புக்கல் மேலே வந்து, மண்ணில் உள்ள ஈரம் போய்விடும். மண்ணில் உள்ள நைட்ரஜனை அது ஆக்ஸிகரணம் செய்து மண்வளத்தின் சமநிலையை அழித்துவிடும்.[1] மேலும், ஆழ உழுவதனுல் அதிக உரம் தேவைப்படும். விவசாயியால் அவ்வளவு உரம் போட முடியாது. அதனுல் களைகளும் அதிகமாகப் பரவக்கூடும். நெல் விவசாயத்திற்கு இரும்பு ஏரைவிட மர ஏரே மிகவும் சிறந்தது. இந்தியாவில் உள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறுதான் விவசாயக் கருவிகள் அமைந்துள்ளன என்று விவசாயக் குழு கூறியுள்ளது. 'அவை பஞ்சத்திஞல் அடிபட்ட எருதுகளின் சக்திக்கேற்ப அமைந்துள்ளன; அவை அதிக விலையுள்ளவையல்ல; லேசாகவும், எடுத்துச் செல்லக் கூடியவையாகவும் உள்ளன. அவற்றைச் செய்வதும் பழுது பார்ப்பதும் எளிது. அவை செய்யப்படும் மரம் எளிதில் கிடைக்கக் கூடியது. எனினும், நாம் இப்பொழுது அறிந்துள்ள மண்வள நிலைக்கேற்ப இவற்றை இன்னும் அதிகமாகச் சீர்திருத்துவதற்கு இடமிருக்கிறது. ஆனுல், விவசாயக் குழு இவ்விஷயத்தில் ஒன்றுமே செய்யவில்லை.'[2] 1925—26-ல் 17,000 சீர்திருந்திய ஏர்கள் விற்கப்பட்டன. அதே ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் 25,000,000 ஏர்கள் உபயோகத்தில் இருந்தன. சர் ஜான் ரஸ்ஸல் அதிக நம்பிக்கை தெரிவித்துக் கூறுவதாவது: 'பழைய கருவிகளை விடப் புதிய கருவிகள் எல்லா வகையிலும் மேலானவையல்ல; ஆனுல், இவை இலேசானவை; இதற்கு மக்களின் உழைப்பும் எருதுகளின் உழைப்பும் அதிகத் தேவையில்லை. இவை வேகமாக வேலை செய்கின்றன. எருதுகளின் சக்தியை மிச்சப்படுத்திஞல், பெரிய விவசாயிக்கு அதிக எருதுகள் தேவையிரா. ஆகையால், அவன் கறவை மாடுகளை வளர்க்கலாம். வேகமாக வேலை செய்வதால், வேண்டும்போது வேலை செய்யலாம். எப்போது நன்மையோ அப்போது வேலை செய்யலாம்.'[3] காளை மாட்டு வண்டிகளுக்கு உருண்டைத் தாங்கல்களையும் (ball bearings), ரப்பர் டயர்களையும் அமைத்துச் சீர்திருத்தலாம். இதைவிட மோட்டார் போக்குவரத்திஞல் இப்பிரச்சினை எளிதாகிவிடும்.

இப்போதுள்ள நிலைமையில் இந்திய விவசாயத்தில் காணப்படும் சிறிய, சிதறியுள்ள நிலங்களில் உழுவதற்கு விவசாயிக்கு நீராவியால் இழுக்கப்படும் பொறிகளும், இயந்திர (மோட்டார்) உழுகருவிகளும்

[1] மேலே கூறிய ஹோவார்டு, பக்கம் 15.

[2] அறிக்கை, பக்கம் 107.

[3] மேலே கூறியதில், பக்கம் 59.

போன்ற விவசாயக் கருவிகள் தகுதியற்றவை. மோட்டார் உழு கருவிகள் நீராவிப் பொறிகளைவிடச் சிக்கனமானவை என்றும், 8 அல்லது 10 ஜோடி எருதுகளுக்குப் பதில் ஓர் இயந்திர உழுகருவி போதும் என்றும் இந்திய சர்க்கரைக் குழு அறிவித்துள்ளது. நம் அரசாங்கத்தின் ஆதரவில் பெரிய பண்ணைகளில் இவ் விஷயத்தில் முன்னேற்றத்தை நாம் இனி எதிர்பார்க்கலாம்.

கடந்த இருபது ஆண்டுகளில், அரசாங்கம் ஆராய்ச்சியில் அதிகக் கருத்துச் செலுத்தியிருப்பினும், உள்நாட்டுக் கருவிகளைச் சீர்திருத்துவதற்கு ஒன்றுமே செய்யவில்லை. 1945-ல் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு விவசாயப் பொறியியல் துறை தோற்றுவிக்கப்பட்டது.

நிலமீட்பு

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நில மீட்பும் துப்புரவு செய்தலும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அடுத்தபடி முக்கியமாகக் கருதப்பட்டன. நீர்ப்பாசனத் திட்டங்கள் போலவே, முதல் திட்டம் தொடங்குவதற்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவும் மிகுதியாகவும் இவை இருந்தன. இந்த நில மீட்புத் திட்டங்கள், அதிக உணவு உற்பத்தி செய்யும் இயக்கத்தோடும், அகதிகளையோ, போரிலிருந்து திரும்பிய வீரர்களையோ குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளோடும் இணைக்கப்பட்டன. முதல் திட்டம் 1955—56-க்குள் 75 இலட்சம் ஏக்கர் நிலத்தை, புல்லையும் காடுகளையும் அகற்றியும், பல ஆண்டுகளாக சமூகத்துறைபற்றிய காரணங்களாலும், தொழில் நுட்பம் பற்றிய காரணங்களாலும் பயிர் செய்யப்படாமல் இருந்த நிலத்தை உழுதும் மீட்க உத்தேசித்தது. 1947-ல் தோற்றுவிக்கப்பட்ட மத்திய டிராக்டர் கழகத்தினால் (Central Tractor Organisation) அமெரிக்கப்படை விட்டுச்சென்ற 200 டிராக்டர்களைக்கொண்டு இந்த வேலை தொடங்கப்பட்டது. ஆழமாக வேர் பதியும் ஒருவகைப் புல் நிறைந்த நிலத்தை மீட்பதில் முக்கியமாக முனைந்துள்ள இக்கழகம், மரங்களை வெட்டுவதும், காடுகளை அழிப்பதுமாகிய வேலைகளையும் செய்து வருகிறது. 1951 ல் அரசாங்கம், பன்னாட்டுச் சீரமைப்பு, அபிவிருத்தி பாங்கியினால் (International Bank of Reconstruction and Development) கொடுக்கப்பட்ட கடனிலிருந்து 240 புதிய டிராக்டர்களை வாங்கியது. முதல் திட்டம் நில மீட்பிற்காகவும், நில அபிவிருத்திக்காகவும் ரூ. 35 கோடி அளித்தது. இதில், மத்திய டிராக்டர் கழகத்தின் 14,00,000 ஏக்கர் நிலமீட்புத் திட்டத்திற்காக ரூ. 10·22 கோடி

22

ஒதுக்கப்பட்டது. இக்கழகம் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டு களில் 10 இலட்சம் ஏக்கரை மீட்டது. இராச்சிய டிராக்டர் கழகங்கள் மேலும் 14,00,000 ஏக்கர் நிலத்தை மீட்டுப் பயிர்த் தொழில் செய்தது.[1]

கால்நடைகள்

இழுக்கும் சக்தியும், போக்குவரத்துச் சாதனமும் காளைமாட்டைத் தவிர வேறில்லை என்ற நிலைமையுள்ள இந்தியாவில், விவசாயத்தின் செழிப்புக் கால்நடைகளைப் பொறுத்தே இருக்கிறது. உலகத்தின் பெரும் பகுதியில் கால்நடைகள் உணவுக்காகவும், பாலுக்காகவுமே போற்றப்படுகின்றன. ஆனால், இந்தியாவில் அவற்றின் மதிப்பு விவசாயத்தைப் பொறுத்ததே. மேனாடுகளில் முற்காலத்தில் விவசாயத்தில் குதிரைகள் மிகவும் பயன்பட்டன. இப்போது அவைகளுக்குப் பதில் இயந்திரங்கள் வந்துவிட்டன.

கால்நடைகளின் உழைப்பைப் பணத்தால் மதிப்பிட முடியாது. 1951 கணிப்புப்படி, இந்தியாவில் 29,20,00,000 கால்நடைகள் இருந்தன. இவற்றில் 15,50,00,000 ஆடுமாடுகள்.[2] உலகத்திலேயே இந்தியாவில்தான் கால்நடைச் செல்வம் அதிகம். 1929 ல் இருந்த விலையின்படி கால்நடைகள், பிராணிப் பொருள்கள் ஆகியவற்றின் மதிப்பு ரூ. 2,000 கோடியாகும்.

'பெரும்பாலான நாடுகளில் கோழிப்பண்ணை நடத்துவது, விவசாயத்தின் மாற்றாந்தாய்ப் பிள்ளை போன்றது. இந்தியாவிற்கு இக்கூற்று மிகவும் பொருந்தும். ஏனெனின், சமீபகாலம் வரையில், கோழி, வாத்து முதலியவற்றின் உற்பத்தியோ, விற்பனையோபற்றிக் கவனமே செலுத்தப்படவில்லை' என்று திரு. மாக்டொனால்டு கூறுகிறார்.[3] கோழிப்பண்ணைகளைச் சிறப்பாகவோ கூட்டாகவோ நடத்துவது இங்குச் சிறிதும் காணப்படவில்லை. இருப்பினும் அது நம் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாகத் தோன்றுகிறது. இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுரிய முட்டை மார்க்கெட்டிங் அறிக்கை பக்கம் 339-ல் உள்ள விவரங்களைத் தருகிறது.[4]

[1] 'இந்தியா, 1956', பக்கம் 147.

[2] 'இந்தியா, 1954', பக்கம் 159.

[3] 'The Poultry Industry in India' in 'Indian Farming' Vol. I, p. 60.

[4] மேலே கூறியது.

		இலட்சம் ரூபாய்களில்
மேலான பறவைகள் (Improved fowls)	...	7·3
உள்நாட்டுப் பறவைகள் (Desi fowls)	...	514·7
குள்ள வாத்துகள் (Ducks)	...	54·8
பெரிய வாத்துகள் (Geese)	...	1·6
வான்கோழிகள் (Turkeys)	...	0·1
கிளிப்பறவைகள் (Guinea fowls)	...	4·2

விவசாயத்தில் பறவைப் பண்ணைகள் மிகவும் வருந்தத்தக்க முறையில் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. அது நம் கிராம விவசாயத்தில் ஒரு முக்கிய அமிசம். ஏனெனின், கோழி முட்டைகளில் 60 சதவீதமும், வாத்து முட்டைகளில் 80 சதவீதமும் விற்கப்படுகின்றனவேயன்றி உற்பத்தி செய்பவர்களால் உட்கொள்ளப் படுவதில்லை. விற்கப்படும் முட்டைகளின் மதிப்பு வருடத்திற்கு ரூ. 5¼ கோடி என்றும், பறவைகளின் மதிப்பு ரூ. 7 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நாம் உற்பத்தி செய்யும் முட்டைகள் மிகக் குறைவு. இது ஒரு பறவைக்கு 54 முட்டைகள் வீதம் ஆகிறது. ஆனால், மற்ற நாடுகளில் ஒரு பறவைக்கு 100 முதல் 120 முட்டைகள் வரை உற்பத்தியாகின்றன. முட்டைகளின் பருமனும் மற்ற நாட்டு முட்டைகளில் மூன்றில் இரண்டு பங்குதான் இருக்கிறது. பிற நாடுகளில் நவீன முறையில் முட்டைகள் உண்டாக்கப்படுகின்றன. தாழ்ந்த ஜாதி, நோய், போதிய ஊட்டமின்மை, பொதுவாக வளர்க்கத் தெரியாமலிருத்தல் ஆகியவையே முட்டைகள் குறைவாக உற்பத்தியாவதற்குக் காரணம். மற்ற நாடுகளில் தலைக்கு 150 முதல் 300 முட்டைகள் சாப்பிடுகிறார்கள்; நம் நாட்டில் தலைக்கு எட்டுத்தான். மேற்கூறிய விவரங்களால் பிராணித் தொழிலில் ‘நம்மிடம் அதிகச் செல்வம் உள்ளது என்றும், உலகத்தில் மற்ற எந்த நாட்டிலும் எந்தத் தொழிலிலும் இல்லாத அளவு இது அதிக மதிப்புடையது என்றும் அறியலாம்.’

திட்டக் குழுவின்படி இந்தியாவில் பறவைப் பண்ணை நடத்துவதற்குப் பெருந்தடையாய் இருப்பது, பறவைகள் ‘ராணிகெட்’ (Ranikhet) நோய்க்கு அதிகம் இரையாவதுதான். ஆனால், அண்மையில் ஒரு சிறந்த தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் இப்பொழுது பறவைகளை வளர்ப்பதற்கு அனுகூலமாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பறவைப் பண்ணைகளை ஊக்குவதற்கு இராச்சிய அரசாங்கங்கள் ரூ. 25·15 இலட்சம் ஏற்பாடு செய்தன. முக்கியக் கிராமத் திட்டத்தில் (Key Village Scheme) தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்யும் முறையும் நல்ல முறையில் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிக விவசாயம் நடைபெறும் பகுதிகளிலும், சமூகத் திட்டங்கள் நிறைவேறும் பகுதிகளிலும் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படும் என்று நம்புகிறோம்.[1]

ஆடுமாடுகளின் பணமதிப்பு ஆண்டுக்கு ரூ. 400 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாபில் உள்ள நிலங்களில் விவசாயச் செலவில் கால்நடைகளின் உழைப்பு 15 முதல் 20 சதவீதம் மதிப்புடையது என்று விசாரித்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மற்றோர் ஆராய்ச்சியினால் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[2]

உணவு விவசாய அமைப்பின் வெளியீட்டில், உலகத்தின் கால்நடை 17,380 இலட்சம் பிராணிகள் என்று காணப்படுகிறது. இவற்றில் இந்தியாவில் உள்ளவை 2,910 இலட்சம். கடந்த சில ஆண்டுகளில் ஆடுமாடுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதா, உயர்ந்துள்ளதா என்பதுபற்றிக் கீழ்க்கண்ட அட்டவணையின் துணைகொண்டு பார்க்கும்போது, குறைந்து வருகிறது என்பதற்கு ஆதாரமில்லை.

பிரிக்கப்படாத இந்தியாவில் காலைமாடுகளின் எண்ணிக்கை
(10 இலட்சத்தில்)

1920	145·8	1945	144·5
1925	151	1947—48	175[3]
1930	154·6	1948—49	173
1935	153·7	1949—50	173
1940	147·7	1950—51	195

வெவ்வேறு நாடுகளில் ஜனத்தொகையில் 100-க்கு உள்ள ஆடு மாடுகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது, மாடுகள் இழுப்பதற்குத்

[1] மேற் கூறியதில், பக்கம் 278.

[2] ஏகாதிபத்திய விவசாயக் குழுவின் ஆதரவில் நடந்த ஆராய்ச்சி.

[3] 1947-48-க்குரிய இந்த எண்கள் 'இந்தியா 1953' பக்கம் 251-ல் உள்ளது. இவை பாகிஸ்தான் நீங்கலான இந்தியாவுக்குரியவை. பிரிக்கப்படாத இந்தியாவில் 1945-ல் இருந்த எண்ணிக்கைக்கும், பிரிவினைக்குப் பிறகுள்ள இந்தியாவின் எண்ணிக்கைக்குமுள்ள வித்தியாசத்திற்குக் காரணம் கூறுவது அரிது. 'இந்தியா 1953'-ல் காணப்படும் முழு அட்டவணை (10 இலட்சம் கணக்கில்) கீழே உள்ளது :

	1947—48	1948—49	1949—50	1950—51
காலை மாடுகள்...	175	173	173	195
ஆடுகள் ...	82	80	80	88
மற்றவை ...	7	7	7	8
மொத்தம் ...	264	260	260	291

தான் பயன்படுகின்றன என்பதையும், இறைச்சி முக்கிய உணவாக இல்லை என்பதையும், விவசாயத்தின் துணைப்பொருளாகத்தான் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் எண்ணவேண்டும். மற்ற நாடுகளில் ஆடுமாடுகள் இறைச்சிக்காகவும், பால்பண்ணை பொருள்களுக்காகவும் போற்றப்படுகின்றன. இந்தியாவில் பெரும் பாலான ஆடுமாடுகள் வயதாகி உதவாக்கரையாகிவிட்டன; அவை வருமானம் அளிப்பதற்குப் பதில் ஏற்கெனவே வறுமையுற்ற நிலத்திற்குச் சுமையாக இருக்கின்றன. ஆடுமாடுகளில் 10 சதவீதம் அல்லது வயதுவந்தவற்றில் 114 இலட்சம் பயனற்றவையாகவோ, உற்பத்திக்கு உதவாதவையாகவோ உள்ளன என்று கால்நடைப் பயன்பாட்டுக் குழு (Cattle Utilisation Committee) மதிப்பிட்டுள்ளது.[1] புல் நிலங்களுக்கு வேலியிட்டுப் பொருளாதார நெருக்கடி உண்டாக்குவதும், வளர்ச்சியடையாத காளைகளைக் காயடிப்பதும், உழவுக் கருவிகளைச் சீர்திருத்துவதும், குறிப்பாக மாட்டுவண்டிகளைச் சீர்திருத்தி மாடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதும் மாடுகளின் தொகையைக் குறைக்க உதவும். இதனுல் விவசாயத்திற்கு நன்மை ஏற்படும்.

ஆடுமாடுகளும் மேய்ச்சலும்

இந்நாட்டில் உள்ள ஆடுமாடுகளின் பெரும்பகுதி மேய்ச்சலைத் தான் போஷணைக்கு முற்றிலும் நம்பியிருக்கின்றன. இந்த மேய்ச்சலும் வருடத்தில் ஐந்து மாதங்களுக்குத்தான் போதுமானது. இந்தியாவில், 'வேலை செய்யாத மாடுகள் தம் சொந்தக்காரர் நிலத்தில் தீவனம் இல்லாதபோது கிராமப் பொதுவிடங்களில் தாஞக மேய்ந்துகொள்ளவேண்டும். அல்லது பயிர் செய்யப்படாத நிலத்திலும் காட்டிலும் மேய்ந்துகொள்ள வேண்டும் என்பது வழக்கமாக உள்ளது. தானியங்கள், பருப்புகள் ஆகியவற்றின் துணைப்பொருள்களைச் சேமித்து வைத்து, அவை உள்ள வரையிலும் தீவனமாகக் கொடுக்கப்படும். விவசாயிகள் வெளியே போய்த் தீவனம் வாங்குவது அரிது. உதாரணமாகக் காடுகளில் வெட்டிக் கொடுக்கப்

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம்–273, இப்பிரச்சினையைத் தீர்பபதற்கு முதல் திட்டம் உதவாத மாடுகளைக் கொண்டு சேர்ப்பதற்கு கோசதனங்களை (Go - Sadans) நிறுவ ஏற்பாடு செய்தது. ஆனுல் இவை திருப்திகரமாக வேலை செய்யவில்லை. 1954-ல் இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 'ஆடுமாடுகளை வெட்டுவதைத் தடுக்கும் குழு' இவற்றை வெட்டுவதை முற்றிலும் தடுத்துவிட்டால் இவற்றின் எண்ணிக்கை 6 சதவீதம் உயர்ந்து கொண்டுவரும் என்று எச்சரிக்கை செய்தது. இப்போதுள்ள ஆடு மாடுகளை வளர்ப்பதற்கே போதிய தீவனங்களும், மற்றச் சாதனங்களும் அறவே இல்லை என்று அது கூறியது. உத்தரப்பிரதேசத்தில் இப்போதுள்ள அரசாங்கத் தீவனச் சாதனங்கள் 58 சதவீதக் கால்நடைகளுக்கே போதுமானவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

படும் உலர்ந்த புல்லை அவர்கள் வாங்குவதில்லை. மத்திய மாகாணத்தில், காடுகளில் அதிகப் புல் வெட்டப்படும் இடங்களில், ஓரிடத்தில் மட்டும்தான் விவசாயிகள் வந்து வாங்கினார்கள் என்று கூறப்படுகிறது.[1] மற்ற மாகாணங்களில் காட்டிலாகா அனுசரித்து வரும் பொதுவான கொள்கையின்படி, கிராம மக்கள் காட்டில் புல்லை வெட்டிக்கொண்டு போக, மகிழ்ச்சியுடன் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அதற்குக் கிராக்கி இல்லை. இந்தக் காட்டுப் புல்லைப் பஞ்ச காலத்திற்கு ஒதுக்கப்பட்டவையாகவும், சாதாரண காலத்தில் உபயோகிக்கக்கூடாதென்றும் கருதுகிறார்கள். கால்நடை அபிவிருத்தி பற்றிய யோசனைகளைக் கவனிக்கும்போது, கீழ் நாடுகளிலும் மேனாடுகளிலும் ஆடு மாடுகளை வைத்திருப்பவர்களுக்கிடையே உள்ள இந்த வித்தியாசத்தை மனத்தில் கொள்ள வேண்டும்.'[2] பல நாடுகளில் உரியவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயத்தில் இந்தியா வேறு விதமாக நடந்து கொள்கிறது என்பதை விவசாயக் குழு சுட்டிக் காட்டுகிறது. இது இந்திய விவசாயியைப் பற்றிய ஒரு தவறான எண்ணமாயின், இந்திய விவசாயி கல்வியற்றவன் என்று முன்கூட்டியே கொள்ளும் எண்ணம்போலப் பொதுப்படையாக, அவசரப்பட்டுக் கொள்ளும் கருத்துகளில் இதுவும் ஒன்று என்றும், காட்டிலாகா நிர்வாகத்தின் தவறுகளினால் காட்டுப் பொருள்கள் பஞ்ச காலத்திற்கு ஒதுக்கப்பட்டவை என்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது என்றும் கூறத் தோன்றுகிறது. இந்த நிலையை விவசாயக் குழு நன்கு பரிசீலனை செய்து கூறுவதாவது: 'கிடைக்கக்கூடிய மேய்ச்சல் மிகவும் கீழ்த்தரமானது என்பதையும், பயிர் செய்யப்படும் நிலத்தில் உண்டாகும் தீவனம் மிகவும் குறைவாக இருக்கும் பருவத்தில் இந்த மேய்ச்சலும் போதிய அளவாக இல்லை என்பதையும் நினைக்கும்போது, ஆடு மாடுகளின் இவ்வெண்ணிக்கை நிலத்தினால் ஆதரிக்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது என்றே நமக்குத் தோன்றுகிறது. கால்நடை வளர்ப்பைப் பொருளாதார முறையில் போற்றும் நாடுகளில் ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்குத் திருப்திகரமான இலாபத்தை அவை அளிக்க வேண்டுமானால், காளை மாட்டுக்கு வேலை நிறைய இருக்கவேண்டும்; பசுக்கள் அதிகம் பால் கொடுக்கக்கூடியனவாய் இருக்கவேண்டும்; இவற்றின் உரத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து நிலத்திற்குத் திரும்ப அளிக்க வேண்டும்.'

நிலத்தில் வேலை செய்யக்கூடிய மாடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, இந்தியாவிலுள்ள மாடுகளின் மொத்த எண்ணிக்கை

[1] விவசாயிகளுக்கு இதற்கேற்ற வாங்கும் சக்தி உள்ளதா?

[2] விவசாயக் குழுவின் அறிக்கை, பக்கம் 200.

இருக்கிறது. மாடுகள் திறமையானவை என்று கொண்டால், நமது தேவையைவிட அதிகமாக நமக்கு இங்கு மாடுகள் இருக்கின்றன என்று விவசாயக் குழு குறிப்பிட்டுள்ளது. திறமையான மாடுகளை வளர்ப்பதற்கு நிலைமை சரியாக இல்லாமலிருந்தால், அதற்கேற்ப விவசாய வேலைகளுக்குத் தேவையானவற்றின் எண்ணிக்கை அதிகமாகும். பசுக்கள் செழிப்புக் குறைந்து காணப்படும்; கன்றுகள் போதிய வளர்ச்சியற்றிருக்கும்; இதனால் விவசாயிகள் இன்னும் அதிகமான மாடுகளை வளர்க்க வேண்டிவரும். மாடுகளின் எண்ணிக்கை அதிகமானால், கிடைக்கும் உணவில் நெருக்கடி ஏற்பட்டு, பசுக்களின் தரத்தில் மேலும் குறைவு உண்டாகிறது. மாடுகள் பருமனில் குறைந்து எண்ணிக்கையில் அதிகமானால், அவற்றின் பருமனுக்கேற்ப தேவையான உணவின் அளவு அதிகமாகும். இந்தியாவில் சில பருவங்களில் இருப்பது போல உணவு மிகவும் குறைவாக இருக்கும்போது, பருமன் குறைந்த, மிகுதியான எண்ணிக்கையுள்ள மாடுகள் நாட்டிற்குக் கேடு விளைக்கும். மேலான காளை மாடுகளைக் கொடுத்துக் கால்நடைகளின் தரத்தை அபிவிருத்தி செய்ய முயன்றால், உணவுக்கேற்ப அதிகப் பிராணிகள் இருப்பதால், அம் முயற்சி தோற்றுவிடுகிறது. கால்நடை விவசாயத்தின் முக்கியப் பிரச்சினை பிராணிகளுக்கு அதிக உணவு உற்பத்தி செய்வது தான். சர் ஜான் ரஸ்ஸல் கூறியதுபோல இந்தியாவிலுள்ள பிராணிகளுக்குப் போதிய அளவு உணவு உற்பத்தி உண்டாகவில்லை. அவற்றுள் பலவற்றிற்குப் போதிய உணவு இல்லை. கிடைக்கக்கூடிய தீவனத்தினால், இப்போதுள்ள கால்நடையில் மூன்றில் இரண்டு பங்கைத்தான் நல்ல முறையில் காப்பாற்ற முடியும்.[1] காளைமாட்டை இன்னும் மேலாக நடத்தலாம்; ஆனால், பசுவை அவ்வளவு நன்றாக உணவூட்டி வளர்ப்பதில்லை. அதற்கு உணவு குறைவாக இருப்பதால், குறைவான அளவு பாலையே தருகிறது அரசாங்கத்தினாலும், கால்நடை வளர்ப்பவர்களாலும், தர்ம ஸ்தாபனங்களாலும் கால்நடை அபிவிருத்தி வேலை நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள ஜாதிகளில் மூன்று பிரிவு உண்டு; அவை, கறவை, இழுவை, இரண்டு வேலைக்கும் உதவுபவை. கடைசியாக இந்தியக் கால்நடைகளை இரண்டு வேலைகளுக்குமட்டும் உதவக்கூடியவையாக அபிவிருத்தி செய்யலாம். அரசாங்கம் வெவ்வேறு இராச்சியங்களுக்கு ஆண்டுதோறும் பண்ணையில் வளர்க்கப்பட்ட இனம் தெரிந்த 750 காளைகளை அளிக்கிறது. இவையன்றித் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக அங்கீகரிக்கப்பட்ட காளைகள் உள்ளன ஆனால், இப்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட காளைகளின் எண்ணிக்கை, நாட்டின் மொத்தத் தேவையில் 5 சதவீதத்திற்கும் குறைவுதான். போதிய

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 273.

அளவு இனம் தெரிந்த உயர்ந்த ஜாதிக் காளைமாடுகளை உற்பத்தி செய்து உபயோகிப்பதுபற்றி, முக்கியக் கிராமத் திட்டத்தில் திட்டக் குழு உத்தேசம் தெரிவித்தது. முதல் திட்ட காலத்தில் 600 நிலையங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று நான்கு கிராமங்கள் அடங்கும். அங்கு விவசாயிகளால் வளர்க்கப்படும் மூன்று அல்லது நான்கு உயர்ந்த ஜாதி எருதுகளைக்கொண்டு இன விருத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. அங்கீகரிக்கப்படாத எருதுகள் அகற்றப்படுகின்றன. நான்கு முக்கியக் கிராமங்களுக்கு ஒன்றாக 150 செயற்கைக் கரு உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பிறகு ஆண்டொன்றுக்கு 60,000 காளைகள் உற்பத்தி செய்யப்படும். இரண்டாம் திட்டத்தில் 1,258 முக்கியக் கிராமங்களில் 245 செயற்கைக் கரு உற்பத்தி நிலையங்கள், 254 விஸ்தரிப்பு நிலையங்கள் ஆகியவை நிறுவப்படும். இவற்றின் குறிக்கோள் 22,000 உயர்ந்த ஜாதி காளைமாடுகளையும், 9,50,000 சிறந்த எருதுகளையும், 10 இலட்சம் சிறந்த பசுக்களையும் உற்பத்தி செய்வது. தீவன வளர்ச்சியிலும், பிராணியின் பண்ணைப் பொருள்களை விற்பனை செய்வதிலும் தவிர, மற்ற விஷயங்களில் தைரியமளிக்கக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மண் வளத்திற்குக் கால்நடைகளின் அவசியம்—கலப்பு விவசாயம்

இந்தியாவில் கால்நடை உரத்தின் பணமதிப்பு ரூ. 180 கோடி முதல் ரூ. 270 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சொற்பமாகக் கிடைத்த தகவலைக்கொண்டு இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று குறை கூறப்படுகிறது. இப்போது, நாம் விரிவான விவசாய முறைகளுக்கேற்ற வழிகளைக் கைக்கொண்டு அடர்த்தி மிகுந்த ஜனத்தொகையைக் காப்பாற்றி வருகிறோம். குறைவான பயிர் விளைச்சலை ஈடுசெய்வதற்கு அதிகமான பகுதிகளில் பயிர் செய்கிறோம். இத்தகைய முறைகள், ஜனத்தொகை குறைவாகவும், நிலம் அதிகமாகவும் கிடைக்கும் புதிதாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்றவை. சதுர மைலுக்கு 281 மக்கள் உள்ள இந்தியாவில், ஏக்கருக்கு விளைச்சல் அதிகமாக இருக்க வேண்டும். எனவே, விவசாய அபிவிருத்தியில், 'உழவும் விலங்கு விவசாயமும் கலப்பு விவசாயமாக இணைக்கப்பட வேண்டும்.' 'இதில் தலைதூக்கி நிற்கும் பிரச்சினை கால்நடைப் பிரச்சினைதான்.'[1] கலப்பு விவசாய முறையால், கிடைக்கக்கூடிய எல்லா உரமும் பயன்படுத்தப்பட்டு, மண்ணின் செழிப்புக்குக் காரணமான இருபுற வெடிகனிப் பயிர்

1. B. A. Keen, 'The Real Problem in India' Quoted in Dr. Wright's Report on Development of the Cattle and Dairy Industries of India, 1937.

களின் விவசாயமும் நடைபெறும். மீண்டும், தீவனப் பயிர்கள் கால் நடைகளுக்கு நல்ல உணவாகும்; முக்கியமாகப் பால் கொடுக்கும் மாடுகளுக்கு இவை சிறந்த உணவாகும். கலப்பு விவசாயத்தில் பிராணிகளால் உண்டாகும் பால் போன்ற பொருள்களும் ஒருங்கே உற்பத்தி செய்யப்படும் இதில் இருபுற வெடிகனிப் பயிர்கள் மண்ணின் செழிப்பைப் பாதுகாக்கும்; பால் உற்பத்தியில் ஏதேனும் விலை அதிகமானால், இதை ஈடு செய்வதற்கு, இதனால் உண்டாகும் அதிக விளைச்சல் உதவியாயிருக்கும். மேலும், கலப்பு விவசாயத்தினால் மூலதனச் சேமிப்பு அதிகமாகும். ஏனெனின், பால் பண்ணையானது விவசாயிக்கு ஆண்டு முழுவதும் வேலை தரும்.

பால், பால்பண்ணைத் தொழில் பிரச்சினை

விவசாயக் குழு கூறியிருப்பதுபோலக் கால்நடைகளின் ஜாதியையும் தரத்தையும் அபிவிருத்தி செய்யும் பிரச்சினையைப்பற்றி யோசிக்கும்போது, 'இரண்டு வேலைகளுக்கும் உதவும்.' அதாவது, இழுப்பதற்கும் பால், நெய் உற்பத்திக்கும் உதவக்கூடிய பிராணியை உண்டாக்குவதற்கு முயற்சி செய்யக்கூடாது. இழுப்பதற்கு உதவும் மாடுகளுக்கு இருக்க வேண்டிய முக்கியமான குணங்களைக் காப்பாற்றுவதற்கேற்ற முறையில் பால்தரும் பண்பை வளர்க்க வேண்டும் என்று இக்குழு யோசனை கூறியுள்ளது.[1] மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் மாடுகளின் தலா உற்பத்தி மிகவும் குறைவு. கீழ்க்கண்ட அட்டவணை இதைக் காட்டும்.

ஒரு பசு கொடுக்கும் பாலின் சராசரி அளவு (பவுண்டுகளில்)

இந்தியா ...	... 413
நெதர்லாந்து ...	... 8,000
ஆஸ்திரேலியா ...	... 7,000
சுவீடன் ...	... 6,000
அமெரிக்கா ...	... 5,000

முறையாகப் பால் சம்பந்தமான பதிவுகள் அரசாங்கப் பண்ணைகளிலும், மற்றும் சில தனியார் பண்ணைகளிலும்தான் செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் பசுக்கள் பால்தரும் அளவு மத்தியப் பிரதேசத்தில் 65 பவுண்டு முதல் கிழக்குப் பஞ்சாபில் 1,445 பவுண்டு வரையில் உள்ளது. கனடாவைவிட இந்திய யூனியனில் 15 மடங்கு அதிக மாடுகள் உள்ளன. ஆனால், பால் இரண்டு மடங்குதான் அதிகம் கிடைக்கிறது. இந்தியாவில் கிடைக்கும் பாலின் பெரும்

[1] அறிக்கை, பக்கம் 212.

பகுதி நெய் செய்வதற்கு உபயோகப்படுகிறது. மற்ற நாடுகளின் பண்ணைகளில் உள்ள சிறப்பான மாடுகளோடு இந்திய மாடுகளைக் கட்டோடு ஒப்பிட முடியாது. இந்திய மாடுகள் குறைவாகப் பால் தருவதற்குக் காரணம் தீவனப் பற்ருக்குறைதான். மேலும், அதிக மழையுள்ள இராச்சியங்களில் நெற்பயிரில் உணவுச் சத்துக் குறைவாக இருப்பதால் மாடுகள் சீர்கேடடைந்து வருகின்றன. பருவகாலத்தில் சாதாரண மேய்ச்சல் தவிரப் பெரும்பாலான கறவை களுக்கு அதிகத் தீவனம் கிடைப்பதில்லை. உலர்ந்த புல்லில் ஊட்டச் சத்து மிகவும் குறைவு.

இந்தியாவில் /பால் விற்பனைபற்றிய 1950 ஆம் ஆண்டு அறிக்கை, ஆண்டுக்கு மொத்தப் பால் உற்பத்தி 5,830 இலட்சம் மணங்கு என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பால் இவ்வளவு அதிகமாக உற்பத்தியாளுலும், ஜனத்தொகை அடர்த்தியின் காரணமாகத் தலா பால் நுகர்வு மிகவும் குறைவு. இது ஒரு நாளுக்குத் தலைக்கு ஆறு அவுன்சுக்கு மேல் இல்லை. நுகர்வை அதிகரிக்கச் செய்யவேண்டுமானுல், இப்போது உற்பத்தியாகும் பாலின் அளவை அதிகரிக்கச் செய்வதோடு, பெரும்பாலோரின் வாங்கும் சக்திக்குத் தக்கவாறு பால் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் சிக்கனம் செய்ய வேண்டும். மார்க்கெட்டிங் ஆராய்ச்சியால் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்குஅப்படியே பாலாக உட்கொள்ளப்படுகிறதென்று தெரிகிறது. மீதியில் 75 சதவீதம் நெய்யாகவும், 22 சதவீதம் கோவா, தயிர் முதலியவையாகவும் மாற்றப்படுகின்றன. மேல் நாடுகளின் உற்பத்திப் பொருளாகிய பாலாடை, வெண்ணெய், பாலாடைக்கட்டி ஆகியவற்றை ஐரோப்பியர்களும், சில இந்தியர் களும் தவிர மற்றவர்கள் உபயோகிப்பதில்லை. ‘இறக்குமதி செய்யப்படுகின்ற எல்லாப் பால்பொருள்களுக்கும் பதிலாக உள்நாட்டில் செய்யப்படும் பொருள்களை வைத்துக்கொண்டாலும், நெய்யின் மதிப்பில் ஒரு சதவீதம் அதிகமாளுலுங்கூட பால்பண்ணைத் தொழிலின் மதிப்பை அது அதிகரிக்கவே செய்யும்.’[1]

[1] மேற்கூறியதில் Wright என்பவரின் அறிக்கை, பக்கம் 9, 10. ஒப்பிடுக: இந்திய அரசாங்கத்தின் பால்பண்ணை அபிவிருத்தி ஆலோசகர் டாக்டர் கொத்தவாலா கூறியதாவது: ‘உலகத்தின் மொத்தக் கால்நடை எண்ணிக்கையில் இந்திய டொமினியன் 380 இலட்சம் கால்நடைகளைக் கொண்டிருந்தது. ஆனுல், ஒவ்வொரு ஆடு அல்லது மாடு கொடுக்கும் பாலின் சராசரி மிகவும் குறைவாக இருந்ததால், எல்லோருக்கும் போதுமான அளவு பால் இல்லை. ஊட்டத்தைப் பொறுத்தவரையில், ஒருவருக்கு ஒரு நாளுக்கு 16 அவுன்சுபால் வேண்டும்; இதில் பாதியைப் பாலாகவும், மற்றப் பாதியைப் பால் பொருள்களாகவும் சாப்பிட வேண்டும். இதன்படி, இந்தியாவின் பால்உற்பத்தி மும்மடங்காகப் பெருக வேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவு பால் கிடைக்கும்.’ தேசீயத் திட்டக்குழுவின் விலங்கு விவசாயத்துறை, பால்பண்ணை முதலியவைபற்றிய அறிக்கையில், விலங்கு விவசாயத்தின் சுருக்கத்திற்குப் பிற்சேர்க்கை; பக்கம் 228.

வேகமாகப் பாலை ஓரிடத்தில் கொண்டுவந்து திரட்டும் வசதி, தக்க முறையிலமைந்த போக்குவரத்து வசதி, கிராமப் பாலை மலிவான முறையில் பங்கீடுசெய்யும் வசதி ஆகியவை இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். 1950-ல் வெளியிடப் பட்ட 'இந்திய யூனியனில் பாலை மார்க்கெட்டிங் செய்தல்' பற்றிய அறிக்கை கூறுவதாவது :

'இந்தியாவில் பாலை உற்பத்தி செய்தல், கையாளுதல், பங்கிடுதல் ஆகியவற்றில் அசுத்தமான, அபாயகரமான முறைகள் பின்பற்றப்படுவது பொதுவாக எல்லோருக்கும் தெரியும். எனினும், இப்படிச் செய்வதால் பொதுச் சுகாதாரம் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைப்பற்றி அநேகமாக உயிர்நூல் முறையில் ஒரு சிறிதும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. ஒவ்வொரு தடவை பால் கறக்கும் போதும் கன்றைவிட்டுச் சிறிது பாலைக் குடிக்கச் செய்யும் பரந்த வழக்கமும், வீடு வீடாகப் பாலைக் கொடுப்பதற்குத் தெருக்களில் பாலைக் கறப்பது, இப் பிராணிகளின் அசுத்தமான மடியும், கழுவிச் சுத்தம் செய்யப்படாத வயிற்றுப் பகுதியும், குறிப்பாக சேற்றில் புரளும் எருமைகளின் மடியும் வயிறும், பால் கறப்பவனுடைய அசுத்தமான கைகளும், அவனுடைய அசுத்தமான ஆடைகளும், சுகாதாரத்திற்கு ஒவ்வாத பழக்கங்களும் (உதாரணமாக இருமுதல், தும்முதல், விரல்களால் மூக்கைச் சிந்துதல்), பால் கறப்பவன் அல்லது பாலைந் தொடுபவர்களுக்கு இருக்கக்கூடிய நோய்கள், அசுத்தமான தொழுவம், அதிலுள்ள அசுத்தமான உரத்தினல் பால் அசுத்தமடைதல், பாலைக்கொண்டு செல்வதற்கு அசுத்தமான குறையுள்ள முறைகள், மூடியில்லாத டப்பாக்களிலிருந்து தெறிக்காமலிருப்பதற்காக அவற்றில் இலைகள், வைக்கோல், காகிதம் முதலியவற்றை வைத்தல், பாக்டீரியா வளர்வதற்கேதுவான வெது வெதுப்பான சீதோஷ்ணம், பால் வியாபாரம் செய்பவர்கள் சுகாதாரத்தைப்பற்றிச் சிறிதும் அறியாமலும் கவலைப்படாமலும் இருத்தல், தெருக்களில் மூடாமல் இருக்கும் சுகாதாரமற்ற பால் கடைகள், சம்பந்தப்பட்ட மக்களுக்குக் கல்வியும் தொழில் நுட்பமும் புகட்டுவதற்குப் போதிய வசதியின்மை, சுகாதார அதிகாரிகள் சரியாகக் கட்டுப்பாடு செய்யாமல் இருத்தல் ஆகியவை இந்தியாவில் விற்பனைக்கு வரும் பாலை அசுத்தம் செய்து, மற்ற நாடுகளைவிடத் தரத்தில் குறையுமாறு செய்வதற்குச் சில காரணங்கள் ஆகும்.'

பிற்பாடு இரண்டு புதிய திட்டங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று 'டில்லி பால் அளிப்புத் திட்டம்'; மற்றொன்று 'ஆரே பால்

திட்டம்' எனப்படும் பம்பாய் பால் குடியேற்றத் திட்டம். இதே போன்று கல்கத்தாவில் ஹரிங்கட்டா என்னுமிடத்தில் ஒரு குடியேற்றம் நிறுவப்பட்டுக்கொண்டிருக்கிறது. 1949 கோடைக் காலம் வரையில் நகரத்திலேயே மிகவும் சுகாதாரக் கேடான நிலையில் வைக்கப்பட்டிருந்த சிறுசிறு எருமைக் கூட்டங்கள் தாம் பம்பாய்க்குப் பாலை அளித்து வந்தன; சுமார் 55,000 மாடுகள் மிகவும் சிக்கனமற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஏனெனின், அதிக தூரத்திலிருந்து நல்ல பால் கொடுக்கும் எருமைகள் கொண்டுவரப்பட்டுக் கறவைக் காலம் முடிந்தவுடன், மேலும் பால் உற்பத்திக்காகப் பாதுகாத்து வைக்காமல் கொன்றுவிடுவார்கள். 1948-ல் பம்பாயிலிருந்து 20 மைல் வடக்கே, பால்தரும் மாடுகளுக்கு நவீனத் தொழுவங்கள் கட்டப்பட்டன. முன்பு காடாயிருந்த நிலத்தில் மாடுகளை வைத்திருப்பவர்கள் அவற்றை மேய்ப்பதற்காக, 30 அல்லது 40 புதிய பண்ணைகள் உண்டாக்கப்பட்டன. இப் பண்ணைகளைச் சேர்ந்த பால் பண்ணையில் மிக்க சுகாதாரமுள்ள நவீன இயந்திரங்கள் வைக்கப் பட்டுள்ளன. 1949-ல் இந்தப் புதிய இயந்திரங்களிலிருந்து பம்பா யில் 5 இலட்சம் பேர்களுக்கு மேல் நல்ல தரமுள்ள பாலைப் பெற்றார் கள்.[1] இருப்பினும், இத் திட்டத்தினால் சுத்தமான பால் கிடைத்த தென்றாலும், இதன் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகிய பால் விலைக் குறைப்புக் கைகூடவில்லை. அது கூடிய விரைவில் கைகூடாதென்றும் தெரிகிறது. பக்குவப்படுத்தப்பட்ட பாலை நகரங்களில் குறைந்த விலைக்குக் கொடுத்து இந்தக் கஷ்டத்தைக் குறைக்கப் பார்க்கிறார்கள். இதைப் போன்ற திட்டங்கள், பொதுவாகக் கூட்டுறவுப் பால் பண்ணைகள், மலிவான நல்ல பாலை அளிப்பதற்காக நாடு முழுவதி லும் நிறுவப்படவேண்டும். அப்போதுதான் மக்களுடைய ஊட்டச் சத்து அதிகமாகும்.

(அ) வெப்ப நாடுகளில் பாலைக் கையாளுவதில் உள்ள அடிப் படையான சங்கட்ங்களாலும், (ஆ) போதிய அளவு போக்குவரத்து வசதிகள் இல்லாமையாலும் உள் நாட்டுப் பொருள்களாகிய நெய்யும் தயிரும் உற்பத்தி செய்வது வரையறுக்கப்படுகிறது. மேலும், மக்கள் தொகையில் 90 சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்வ தாலும், கிராம மக்கள் உட்கொள்வதற்குப் பாலையும், பால் பொருள் களையும் அளிப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தி யாளர்கள் கிராமத் தொழில் அடிப்படையில் ஒன்று சேருவது

[1] Dairy Products Commodity Series, Bulletin No. 24, Feb. 1953, F.A.O. pp. 13–14.

இந்தியாவில் பால் பண்ணைகளை அமைப்பதற்கு நல்ல முறையாகும். எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த மார்க்கெட்டிங் வசதிகள் இருந்தால்தான் உற்பத்தியில் அபிவிருத்திக்கு உதவியாயிருக்கும்.

கிராமங்களில் உள்ள நிலைமைகளுக்கேற்ப நடைமுறையில் இந்தியாவில் பாலை உற்பத்தி செய்வதற்குக் கைக்கொள்ளத்தக்க முறைகளைப்பற்றிக் கருத்துடன் ஆராய்ச்சிகளை நடத்தவேண்டும். பாலைக் கெடாமல் பாதுகாத்து வைப்பதற்கு உஷ்ணத்தினுல் பக்குவப் படுத்தலும், குளிரறைகளைப் பயன்படுத்தலும் தக்க வழிகள் என்று டாக்டர் ரைட் (Wright) தம் அறிக்கையில் கூறுகிருர். ஆனுல், குளிரறைகளைப் பயன்படுத்துவது அதிகச் செலவுள்ள முறையாகும். அதிகத் தூரத்திலுள்ள உற்பத்தியிடங்களிலிருந்து பெரிய நகரங்களுக்குப் பாலை அனுப்புவதற்கு இம்முறையைப் பயன்படுத்தலாம். பாலைப் பங்கீடு செய்வதற்கு முப்பது வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் கையாளப்பட்ட முறைப்படி, அசுத்தம் ஆகாமல் அதிகச் செலவின்றிச் சிறிய அளவில் கொடுப்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதற்குக் கழுவுவதற்கேற்ற பெரிய வாயும், கீல் போட்ட மூடியும் உள்ள பால் டப்பாக்களை உபயோகிக்கவேண்டும். இத்தகைய டப்பா ஒன்றின் விலை ரூ. 5 முதல் 10 வரை ஆகும். இதில் பால் கொண்டு போகும்போது, அது பத்திரமாகப் பாதுகாக்கப் படும். டப்பாக்களுக்குக் குழாய்களை வைப்பது கூடாது. ஏனென்ருல், அவற்றைக் கழுவுவதும், கிருமிகள் இல்லாமல் சுத்தம் செய்வதும் முடியாது.

வெவ்வேறு இராச்சியங்களில் பலவிதமான நெய்களைப் பரிசோதித்தபோது, அவற்றுள் 65 சதவீதம் கலப்புடையனவாயிருந்தன என்று தெரிந்தது. கலப்பைக் கண்டுபிடிப்பதற்கு எளிய வழிகளைக் கண்டுபிடித்து, விற்பனை வசதிகளையும் பெருக்குவதற்கு வழி செய்ய வேண்டும். இந்தியக் கால்நடைகளை விருத்தி செய்வதைவிடப் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மலிவாகச் செய்வதற்கும் வேறெந்தத் தனி வழியும் இல்லை. மாடுகள் அதிகப் பாலைக் கொடுத்தால் பால் உற்பத்திச் செலவு குறையும். எப்படியெனின், அதிக உற்பத்தியினுல் மாடுகளைப் பாதுகாக்கும் செலவும், கூலியாட்களுக்கு ஆகும் செலவும் பகிர்ந்து விடப்படும். நல்ல மாடுகளைத் தேர்ந்தெடுப்பதனுல், உள்நாட்டுச் சாதிகளை அபிவிருத்தி செய்யவும், அதிகப் பாலைப் பெறவும் முடியுமென்றும், இத்தகைய இந்திய மாடுகள் ஐரோப்பிய மாடுகளுக்கு நிகராகப் பால் அளிக்கக் கூடியவை என்றும், வெவ்வேறிடங்களில் செய்த மாடு வளர்ப்புப்

பரிசோதனைகளிலிருந்து தெரிகிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான கறவை மாடுகள் போதிய உணவின்றி வருந்துகின்றன. இவை வளரும் வீதமும், பால்வற்றிப் போகும் நீண்ட காலங்களும் இதற்குச் சான்ருகும். இவைகளுக்கு அதிக உணவு கொடுப்பது அவசியம். கரடுமுரடான தீவனத்திற்குப் பதில் இருபுற வெடிகனிப் பயிர்களை (பெர்சீம், அல்பால்பா போன்றவற்றை) அளிக்க வேண்டும். இவை மண்ணின் செழிப்பை அதிகரிக்கச் செய்வதால் விவசாயிக்கும் முக்கியமானவை. சிறுசணல் விதை, பருத்தி விதை, நிலக்கடலைப் பிண்ணுக்கு ஆகியவற்றில் அதிக புரோட்டீன் சத்து இருக்கிறது. இவற்றை மாடுகளுக்குக் கொடுத்தால் அவை அதிகப் பால்தரும். விவசாயிகள் இத்தகைய தீவனங்கள் வாங்குவதற்குச் சக்தி இல்லாமல் இருப்பதால், சரியான கிராம நிதித் திட்டத்தினுல்தான் இதற்கு ஒரு வழி பிறக்கும்.

11. நிலங்களின் உட்பிரிவுகளும் துண்டாக்கப்படுதலும்

வாரிசுச் சட்டத்தின்படியும், சொத்துரிமைச் சட்டத்தின்படியும் சொத்தை வெவ்வேறு வாரிசுகளுக்குப் பங்கிடுவதால், தனிப்பட்ட ஒருவருடைய பண்ணையின் மொத்த அளவு குறைவதனுல் நிலங்களில் உட்பிரிவு ஏற்படுகிறது. இதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். நிலத்தைத் துண்டாக்குதல் என்பது ஒருவருடைய நிலங்கள் ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களில் சிதறி, ஒன்றுக்கொன்று அதிகத் தூரத்தில் இருக்கும்படி செய்வது. இந்தியாவில் நிலங்களின் உட்பிரிவு, முக்கியமாக இந்துக்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் உள்ள சொத்துரிமைச் சட்டங்களால் ஏற்படுகிறது. இச் சட்டங்கள் எல்லா வாரிசுகளுக்கும் சமமான பங்கை அளிக்கின்றன. ராதாகமல் முகர்ஜி கூறுவதுபோல, ‘இந்தியாவில் சில ஆண்டுகளாக மட்டும் காணப்படுகின்ற உட்பிரிவு செய்யும் போக்கு, ஆங்கில நீதிபதிகள் இந்து சட்டத்தையும், முகமதிய சட்டத்தையும் தங்கள் விருப்பப்படி வியாக்கியானம் செய்ததன் விளைவேயாகும். ஏனெனில், அவர்களுக்கு நிலத்தைத் தனிப்பட்டவர்கள் வாரிசுரிமையாகப் பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் வன்மையாக இருக்கிறது’[1] வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பவர்கள் நிலத்தைச் சுவாதீனப் படுத்திக்கொள்வதால் இத் தீமை மேலும் அதிகமாகிறது. ஏனெனின், இதனுல் பல சிறிய நிலங்கள் உண்டாகி, வாரிசுகளுக்குச் சேரவேண்டிய மொத்தம் குறைந்துவிடுகிறது. ஒவ்வொரு வகையான நிலத்திலும் ஒவ்வொரு வாரிசுக்கும் தனிப் பங்கு கொடுக்க வேண்டும் என்ற சமூகப் பழக்கத்தினுல் நிலம் துண்டுபட்டு விடுகிறது.

நாட்டின் எல்லாப் பாகங்களிலும், மேலும் மேலும் நிலம் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதாலும் துண்டுபடுவதாலும் இந்தியாவில் விவசாய உற்பத்தித் திறன் மிகக் குறைவாக உள்ளது என்று கூறப்படுகிறது. 1917-லேயே பம்பாய் விவசாயத்துறை இயக்குநர்

[1]‘இந்தியாவின் நிலப் பிரச்சினை’, 1933, பக்கம் 55.

திரு. கீடிஞ்ச் பின்வருமாறு கூறினர். 'இந்தியாவில் விவசாயிகளின் நிலங்கள் மிகச் சிறியவையாகும் அளவுக்குப் பிரிக்கப்பட்டுவிட்டன என்றும், இந்நிலங்கள் சிறியவையாயினும் பெரியவையாயினும், விவசாயத்திற்குத் தடையா யிருக்கும்படி மேலும் துண்டாக்கப் படுகின்றன. இந்தப் படிப்படியான உட்பிரிவும் துண்டுபடுதலும், ஜனத்தொகை மிகுதியால் ஏற்படுகின்றன. மேலும், இந்நாட்டின் சொத்துரிமைச் சட்டங்கள், நிலமுள்ளவனுடைய குடும்பத்தில் ஒவ்வொரு ஆணுக்கும் குடும்ப நிலத்தில் பங்கு கிடைக்கும்படி நிருவகிக்கப்பட்டு வருவதாலும் இப்படி ஏற்படுகிறது. பொதுவாகப் பம்பாய் மாகாணத்திலும், குறிப்பாகக் கொங்கணம், மேற்குத் தக்காணம், குஜராத்தின் தோட்டப் பகுதியிலும் நெல்வயல் பகுதியிலும் உட்பிரிவும் துண்டுபடுதலும், மேலும் தாங்க முடியாத அளவுக்கு நடந்துவிட்டன. அரை ஏக்கருக்கும் குறைந்த வயல்கள் தனித்தனியாக வைத்துக்கொள்ளப்படும் 20 துண்டுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் பல, ஒரு குந்தாவுக்கும் (ஒரு குந்தா = $\frac{1}{40}$ ஏக்கர்) குறைவாக உள்ளன.'[1]

பம்பாய் மாகாணம்

போர்சாத் தாலுக்காவில் (கைரா மாவட்டம், குஜராத்து) 1901-லும் 1921-லும் 72 கிராமங்களில் நிலங்களின் எண்ணிக்கையையும் அளவையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.

அளவு	1901 எண்ணிக்கை	1901 சதவீதம்	1921 எண்ணிக்கை	1921 சதவீதம்	1901-லிருந்து சதவீத உயர்வு அல்லது குறைவு
5 எக்கரும், அதற்குக் கீழும்	7,740	53	19,740	82	+125
6 ஏக்கருக்கும் 25 ஏக்கருக்கும் இடையில் ...	5,107	38	3,916	16	—23
26 ஏக்கருக்கும் 100 ஏக்கருக்கும் இடையில் ...	570	4	432	2	—3
100 ஏக்கருக்கும் 500 ஏக்கருக்கும் இடையில் ...	30	...	29	...	..
மொத்தம் ...	13,447	100	24,117	100	+79

	1901	1921
மொத்தப் பரப்பு ஏக்கரில் ...	94,660	92,639
சராசரி ஒருவர் நிலம் ஏக்கரில் ...	7	3·8

[1] Statement of Objects—Draft Bill for Consolidation of Holdings, 1916.

ஆக, இருபது வருடங்களுக்குள் மொத்த நிலங்கள் 79 சதவீதம் அதிகரித்தன. ஆனல், 1901-ல் சராசரி ஒருவர் நிலம் 7 ஏக்கராக இருக்க, 1921-ல் அது 3·8 ஏக்கராயிற்று. அடுத்து 20 வருடத்திலும் இதே போல் மேலும் உட்பிரிவுகள் ஏற்பட்டிருந்தால், சராசரி ஒருவர் நிலம் இரண்டு ஏக்கருக்கும் குறைந்திருக்கும். இந்த அட்டவணையை அளித்த திரு. படேல் ஒரு ஜோடி மாடுகள் ஒரு வருடத்தில் சராசரி 25 ஏக்கர் உழும் என்கிருர். புரூம்பீல்டு குழுவின்படி இது ஒரு சிக்கனமான (பொருளாதார முறையில் இலாபகரமான) நிலமாகும். 1921-22 ல் அத்தாலுக்காவில் இருந்த 21,000 நிலங்களில் 349 மட்டும், அதாவது 2 சதவீதத்திற்கும் குறைவாகவே 25 ஏக்கர் பரப்புள்ளவையாய் இருந்தன. மேற்கூறியபடி சிக்கனமான நிலம் என்பது, போர்சாத் தாலுக்காவில் மிகப் பெரியதாகும். ஆகவே, 'போர்சாத் தாலுக்காவில் வாழும் மக்களின் தரத்தையொட்டிச் சிக்கனமான நிலம் இன்னது என்று வரையறுப்போம். நம் தாலுக்காவில் சிக்கனமான நிலத்தின் பரப்பு ஒரு குடும்பத்திற்கு 12½ ஏக்கர்......விவசாயிகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உண்மையாக உரிய நிலம் இதில் மூன்றில் இரண்டு பங்குதான் இருக்கிறது.'[1]

இதுபோலவே, குஜராத்தில் ஓல்பட் தாலுக்காவில் (சூரத் ஜில்லா) 1929-30-ல் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஆராய்ந்தபோது, சிக்கனமான நிலம் 20 ஏக்கராக உள்ளது. இதற்குப் 'பொருத்தமான எல்லா அமிசங்களும் கவனிக்கப்பட்டன. ஒரு சாதாரணக் குடும்பம் என்பது சராசரி ஐந்து பேர் அடங்கியது என்று கொள்ளப்பட்டது.' இத்தாலுக்காவில் உள்ள சிக்கனமற்ற நிலம் எவ்வளவு என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.[2]

கிராமக் கூட்டங்களுக்கேற்ப நிலங்களின் சுருக்கமான அட்டவணை

கூட்டம்	மொத்த நிலங்கள்	சிக்கனமான நிலங்களும், அந்த அளவுக்கு மேலும் உள்ளவை	சிக்கன மில்லாத நிலங்கள்	மொத்தத்தில் சிக்கனமில்லாதவற்றின் சதவீதம்
I	92	19	73	79·3
II	128	7	121	94·5
III	76	9	67	88·1
IV	92	3	89	96·7
V	203	8	195	96·0
மொத்தம்	**591**	**46**	**545**	**92·2**

[1] A. D. படேல், 'இந்திய விவசாயப் பொருளாதாரம்', 1937, பக்கம் 124, 171.

[2] J. B. சுக்லா, 'குஜராத் தாலுக்காவில் வாழ்க்கையும் உழைப்பும்', 1937, பக்கம் 92.

பம்பாய் விவசாயத்துறை இயக்குநர் டாக்டர் ஹரால்டுமான், 1957-ல் பூனுவில் உள்ள ஒரு மாதிரிக் கிராமத்தில் விசாரித்தறிந்த விவரங்களே வெளியிட்டார். அவர் கண்டபடி, 1771-ல் சராசரி ஒருவருக்குரிய நிலம் 40 ஏக்கர்; 1820-40-ல் 14 ஏக்கர்; 1914-15-ல் 7 ஏக்கர். இவற்றில் 81 சதவீத நிலங்கள் மிகவும் அனுகூலமான சந்தர்ப்பங்களில்கூட உரியவர்களேப் பாதுகாப்பதற்குப் போதாமல் இருந்தன. 'பிரிட்டிஷார் காலத்திற்கு முன்பும், பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்திலும் நிலங்கள் பெரிய அளவாகப் பெரும்பாலும் 9 அல்லது 10 ஏக்கர் இருந்தன. இரண்டு ஏக்கருக்குக் குறைவாகத் தனிப்பட்டவர்கள் வசத்தில் இல்லே. இப்போது நிலங்கள் இரண்டு மடங்குக்கு மேலாகி இவற்றில் 81 சதவீதம் 10 ஏக்கருக்குக் குறைவாகவும், 60 சதவீதம் 5 ஏக்கருக்குக் குறைவாகவும் உள்ளன'[1] என்று அவர் கூறி முடிக்கிருர்.

தாணு மாவட்டத்தில் பிவாந்தி தாலுக்காவில், இதேபோல நிலங்கள் உட்பிரிவுகளாக்கப்படுவதற்குச் சான்றுகளே டாக்டர் பகத் (Bhagat) அளித்திருக்கிருர். 9,584 கதேதார்களே (khatedars) ஆராய்ந்து சராசரி ஒருவர் நிலத்தைப்பற்றிக் காட்டும் கீழ்க்கண்ட அட்டவணையை அவர் கொடுக்கிருர்.[2]

	1886		1903	
நிலங்கள்	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
5 ஏக்கருக்குள் ...	3,731	49·7	6,416	62·6
5 முதல் 25 ஏக்கர் ...	3,041	40·5	3,205	31·6
25 முதல் 100 ஏக்கர்	694	9·3	556	5·4
100 முதல் 500 ஏக்கர்	39	·5	41	·4
500-க்குமேல் ...	...	...	...	...
மொத்தம் ...	7,505	100·0	10,218	100·0

	1921		1937	
—	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
5 ஏக்கருக்குள் ...	10,458	74·2	6,638	69·1
5 முதல் 25 ஏக்கர்...	3,404	24·1	2,426	25·5
25 முதல் 100 ஏக்கர்	206	1·4	438	4·5
100 முதல் 200 ஏக்கர்	30	·3	79	·9
500-க்குமேல் ...	...	...	3	மிகக் குறைவு
மொத்தம் ...	14,098	100·0	9,584	100·0

[1] Dr. H. H மான், 'தக்காணக் கிராமத்தில் நிலமும் உழைப்பும்', Vol. I, 1917, பக்கம் 46.

[2] Dr. M. G. பகத், 'விவசாயியின் நலமும் செல்வமும்', 1943, பக்கம் 93.

1927-28-ல் திரு. முக்தியார் (Mukhtyar), சூரத் மாவட்டத்தில் பல்சார் தாலுக்காவில் அட்கம் கிராமத்தில் ஒரு ஆராய்ச்சியை நடத்தினர். அக்கிராமத்தில் 461 குடும்பங்கள் இருந்தன. இவைகளுள் 249 குடும்பங்கள் அல்லது 54 சதவீதம் விவசாயக் குடும்பங்கள். அங்கு நிலம் உட்பிரிவுகளாகவும் துண்டுகளாகவும் செய்யப்பட்டிருப்பது குறித்து அவர் கீழ்க்கண்ட அட்டவணையைத் தந்துள்ளார்.'[1]

உட்பிரிவு

நிலம் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை	1900-01	1917-18	1926-27
100 ஏக்கருக்கு மேல்	1	1	3
71-100 ஏக்கர்	5	3	...
51-70 ,,	8	6	8
31-50 ,,	21	9	7
15-30 ,,	34	37	37
6-14 ,,	39	107	95
1-5 ,,	67	132	133
1 ஏக்கருக்குக் கீழ்	44	109	143
மொத்தம்	219	404	426

துண்டாக்கப்பட்டது

துண்டுகளின் எண்ணிக்கை	குறிப்பிட்ட துண்டுகளுடைய நிலங்கள்	துண்டுகளின் எண்ணிக்கை	குறிப்பிட்ட துண்டுகளுடைய நிலங்கள்
1-5	286	21-25	7
6-10	62	26-30	8
11-15	42	31-40	6
16-20	22	40-க்கு மேல்	3

துண்டுகளின் அளவு	ஒவ்வோர் அளவிலும் துண்டுகளின் எண்ணிக்கை	துண்டுகளின் அளவு	ஒவ்வோர் அளவிலும் துண்டுகளின் எண்ணிக்கை
10 ஏக்கருக்கு மேல்	30	5-6 ஏக்கர்	39
9-10 ஏக்கர்	12	4-5 ,,	58
8-9 ,,	11	3-4 ,,	75
7-8 ,,	20	2-3 ,,	135
6-7 ,,	18	1-2 ,,	320
		1 ஏக்கருக்குக்கீழ்	1,924

[1] G. C. முக்தியார், 'தென் குஜராத்து மாகாணம் ஒன்றில் வாழ்க்கையும் உழைப்பும்', 1930, பக்கம் 110-115.

1 ஏக்கருக்குக் கீழ் உள்ள துண்டுகளின் அளவும் எண்ணிக்கையும்

30–40 குந்தாக்கள்	201	10–15 குந்தாக்கள்	339
20–30 ,,	311	5–10 ,,	552
15–20 ,,	216	5 குந்தாக்களுக்குக்கீழ்	305

(1 குந்தா = $\frac{1}{40}$ ஏக்கர்)

முதல் ஐந்தாண்டுத் திட்டம் பம்பாய்க்குரிய எண்களைக் கீழ் வருமாறு கொடுத்துள்ளது:[1]

ஏக்கர்	நிலங்களின் சதவீதம்
0–5	52·31
5–15	28·18
15–25	10·90
25–100	8·02
100–500	0·57
500–க்கு மேல்	0·02

50 சதவீதத்திற்குமேல் நிலங்கள் 5 ஏக்கருக்கும் குறைவாக உள்ளன. ஆனால், இந்த நிலங்கள் சமமாகப் பங்கிடப்படாததால், இவற்றின் சராசரி உண்மையான நிலையை நமக்குக் காட்டவில்லை. பம்பாய் மாகாணத்தில் சிறிய நிலங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்ததில், சிலர்வசத்திலேயே நிலங்கள் குவிந்திருந்தது தெரியவந்தது. 'மிகச் சில விவசாயிகளே பெரிய நிலங்களை வைத்திருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் மொத்தப் பரப்பில் பெரும் பகுதியைத் தங்களிடம் வைத்திருக்கிறார்கள். இதற்கு மாறாகப் பல விவசாயிகள் சிறிய நிலங்களையே வைத்திருக்கிறார்கள். இவை எல்லாம் சேர்ந்து மொத்தப் பரப்பில் மிகவும் குறைந்த பகுதியே ஆகும்.'[2]

சென்னை மாகாணம்

தென்னிந்தியாவில் நிலங்கள் உட்பிரிவுகளாகச் செய்யப்படும் முறையைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்வதற்குப் பல கிராமங்களை டாக்டர் கில்பர்ட் ஸ்லேடர் ஆராய்ந்தார். இது 1916–ல் நடந்தது. 1936–ல் மீண்டும் இதே கிராமங்கள் ஆராயப்பட்டன. இதன் முடிவுகள் பக்கம் 357–ல் உள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

[1] பக்கம் 199.

[2] Bulletin of the Bureau of Economics and Statistics, Government of Bombay, Vol. II, No. 3.

வடமலைபுரம் கிராமம் (இராமநாதபுரம் மாவட்டம்)

நிலங்களின் அளவு	1916 நிலங்களின் எண்ணிக்கை	1916 ஏக்கரில் பரப்பு	1936 நிலங்களின் எண்ணிக்கை	1936 ஏக்கரில் பரப்பு
1 முதல் 10 ஏக்கர்	38	250	121	535
10—25 ,,	38	649	37	594
25—50 ,,	12	469	8	264
50—100 ,,	3	211	1	160
100—250 ,,	3	471	3	105
மொத்தம்	94	2,050	170	1,658

1916-லிருந்து மொத்தப் பரப்புக் குறைந்ததும், அதே சமயத்தில் நிலங்களின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. 1916-ல் இருந்ததைப் போல், சராசரி ஒருவர் நிலம் பாதியாயிற்று. மேலும், ஒன்று முதல் 10 ஏக்கர் உள்ள சிறிய நிலங்களில் மிக அதிகமாக உட்பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.[1]

மலபார் மாவட்டத்தில் குருவாயூர் கிராமத்தை எடுத்துக் கொண்டால், 1936-ல் அங்கு நிகழ்ந்த உட்பிரிவுகளின் அளவைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.

அளவு	எண்ணிக்கை	ஏக்கரில் பரப்பு
$\frac{1}{4}$ ஏக்கருக்கும் குறைவு	106	13·19
$\frac{1}{4}$ ஏக்கர் முதல் $\frac{1}{2}$ ஏக்கர்வரை	125	44·68
$\frac{1}{2}$,, 1 ,,	152	100·49
1 ,, 2 ,,	69	95·73
2 ,, 5 ,,	62	192·78
5 ,, 10 ,,	24	169·73
10 ,, 20 ,,	11	145·82
20 ஏக்கருக்கு மேல்	7	397·99
மொத்தம்	556	1.160.41

இந்தக் கிராமத்தில் ஒருவர் வைத்திருக்கும் நிலத்தின் சராசரி அளவு 2·1 ஏக்கர். அதிகமாகப் பயிரிடப்படும் தென்னைமரப் பகுதியில் இந்த அளவு சிக்கனமற்றதாக இராது. ஆனால், மேற்கூறிய

[1] 'தென்னிந்தியக் கிராமங்கள்—மறு ஆராய்ச்சி', தாமஸ் & இராதாகிருஷ்ணன் பதிப்பித்தது, 1940, பக்கம் 9–10.

எண்களின்படி மொத்த நிலங்களில் 68 சதவீதம் ஒரு ஏக்கருக்குக் கீழும், 42 சதவீதம் அரை ஏக்கருக்குக் கீழும் உள்ளன.[1]

நிலம் துண்டிக்கப்படுவதைப்பற்றித் தெளிவான விவரங்கள் கிடைக்கவில்லை என்று தென்னிந்தியக் கிராமங்களை மீண்டும் மேற்பார்வை செய்த பதிப்பாசிரியர்கள் கூறுகிருர்கள். 1916-ல் இந்தக் கிராமங்கள் பலவற்றில், மிக ஆவலோடு கேட்டுங்கூட, டாக்டர் ஸ்லேடருக்குப் போதிய விவரமான பதில்கள் கிடைக்கவில்லை. 'மறு ஆராய்ச்சி நிகழ்த்தப்பட்ட எட்டுக் கிராமங்களில் நான்கில் மட்டும் அதிகத் தகவல் கிடைத்துள்ளது...இருபது ஆண்டுகளில் நிலைமை மோசமாகிவிட்டது என்பதற்கு இடமிருக்கிறது'[2] சென்னையில் ரூ. 10-ம், அதற்குக் குறைந்தும் வரி செலுத்தும் பட்டாக்கள் 82·2 சதவீதமாக இருந்தன. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இவை 69·5 சதவீதமாக இருந்தன.

மற்ற இராச்சியங்கள்

1939-ல் வங்காளத்தில் நியமிக்கப்பட்ட நிலவரிக் குழு, சர் ஃபிரான்சிஸ் புளௌட் (Floud) தலைமையில், வங்காளத்தில் உள்ள நிலைமையை மற்ற மாகாணங்களில் உள்ள நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்குச் சென்னைக்கு வந்தது. அது தன் அறிக்கையில் கூறுவதாவது: '1931-ல் விவசாயம் செய்யும் மக்களின் விகிதம் 70 சதவீதம் என்று கொண்டால், இந்த மாகாணத்தின் விவசாய மக்களின் எண்ணிக்கை 327 இலட்சம் ஆகும். விவசாயம் செய்யப் பெற்ற மொத்த நிகர நிலப்பரப்பு 317 இலட்சம் ஏக்கராகும். ஆதலால் இவர்களுக்குத் தலா சராசரி கிடைக்கும் நிலம் ஒரு ஏக்கருக்குங் குறைவு. சென்னையில் ஒரு குடும்பத்திற்குள்ள சராசரி நிலத்தின் பரப்பு அக்குடும்பத்தின் பாதுகாப்பிற்கே போதாது. வங்காளத்திலும் இதேபோலச் சிக்கனமற்ற (இலாபமற்ற) நிலங்களும், நிலங்கள் பிரிக்கப்படுதலும் காணப்படுகின்றன. ஜனத்தொகை நெருக்கடியினல் வங்காளத்தைவிட இங்குக் குடிவாரங்கள் மேலும் அதிக வேகமாகப் பிரிக்கப்படுகின்றன. பட்டாக்களில் 74% அல்லது மொத்தப் பரப்பில் 36 சதவீதமுள்ள ரயத்துவாரி நிலங்கள் சராசரி 2·4 ஏக்கர் பரப்புள்ளவை.'[3]

இதேபோலப் புளௌட் குழு மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறியதாவது: 'நிலப் பத்திரப் பதிவு இயக்குநர் இக்குழுவிற்காக

[1] மேற்கூறியதில் பக்கம் 301–339.

[2] மேற்கூறியதில் பக்கம் 340.

[3] நிலவரிக் குழுவின் அறிக்கை, வங்காளம், Vol. II, 1940, பக்கம் 30.

விசாரிக்கவேண்டியிருந்த, கவலை தரும் செய்தி யாதெனின், இரண்டு ஏக்கரும் அதற்குக் கீழும் நிலம் வைத்திருப்பவர்களின் சதவீதம் 41·9 என்பதும், இரண்டு ஏக்கருக்கும், 4 ஏக்கருக்கும் நடுவில் நிலம் வைத்திருப்பவர்களின் சதவீதம் 20·6 என்பதும் ஆகும். இம்மாகாணம் முழுவதும் உள்ள பொருளாதார நிலையை இவ்வெண்கள் குறிப்பதாயிருந்தால், விவசாயக் குடும்பங்களில் ஐந்தில் இரண்டு பங்கினர் இரண்டு ஏக்கரும், அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது அவர்களுடைய பாதுகாப்பிற்குப் போதாது. அவர்கள் சட்டப்படி உரிமையில்லாத பர்க்காதார்களாக (bargadars) நிலத்தைப் பெற்று அல்லது நாட்கூலிகளாக உழைத்து வருமானம் பெற்று வாழும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். சிக்கனமில்லாத நிலங்களைப்பற்றி எந்த முறையில் பார்த்தாலும், எல்லோருக்கும் போதிய அளவு நிலம் கிடைக்காது என்ற அடிப்படை உண்மையை நாம் உணரவேண்டியுள்ளது. இப்போது விவசாயிகளில் தலைக்கு ஒரு ஏக்கர் நிலத்திற்குங் குறைவாகத்தான் நிலம் உள்ளது.[1]

வங்காளப் பஞ்சப் பின்விளைவுகளைப்பற்றிச் செய்த மாதிரி ஆராய்ச்சியால், விவசாயத்தை நம்பியுள்ள 75 சதவீத ஜனத்தொகையினருக்குப் பயிர்செய்யப்பட்ட மொத்த நிலத்தில் 88 சதவீதத்தில் நெல் பயிராயிற்று. 1943 ஏப்ரலில் பஞ்சம் வருவதற்கு முன்பு கிராமக் குடும்பங்களில் 36 சதவீதத்தினருக்கு நெல் வயல்களே இல்லை; 41 சதவீதத்தினருக்கு இரண்டு ஏக்கர் வரையில் தான் இருந்தது; 15 சதவீதத்தினருக்கு 2 முதல் 5 ஏக்கர் வரையில் தான் இருந்தது,[2] 8 சதவீதத்தினருக்குமட்டும்தான் 5 ஏக்கருக்கு மேல் இருந்தது. 1940ஆம் வருஷத்திய வங்காள நிலவரிக் குழுவின் கருத்துப்படி, ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சௌகரியமாக வைத்திருப்பதற்கு வேண்டிய குறைந்தபட்ச நிலம் ஐந்து ஏக்கராகும். அந்த நிலம் அமன் (aman) நெல்லையன்றி வேறொன்றையும் விளைவிக்காமலிருந்தால், இதற்கு வேண்டிய பரப்பு 8 ஏக்கராகும். நாம் முன்பே பார்த்ததுபோல விவசாயிகளில் 8 சதவீதத்தினர் 5 ஏக்கருக்குமேல் வைத்திருந்தார்கள்.

டாக்டர் கால்வெர்ட் பஞ்சாபைப் பற்றியும் இதே கதையைத்தான் கூறுகிறார். பிரிவினைக்கு முன்பு பஞ்சாபில் விவசாயிகளின்

[1] அறிக்கை, தொகுதி–I, பக்கம் 86. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 20,000 குடும்பங்களின் பொருளாதார நிலையை விசாரித்ததிலிருந்து இந்த முடிவுகள் கிடைத்தன.

[2] Sankhya, Vol. VII, (1945-46), p. 374.

நிலத்தினுடைய அளவையும் பங்கீட்டையும்பற்றிக் கீழ்க்கண்ட அட்டவணை அறிவிக்கிறது.[1]

அளவு				நிலங்களின் எண்ணிக்கை	மொத்தத்தில் சதவீதம்
1	ஏக்கரும் அதற்குக் கீழும்		...	68,664	22·5
1	முதல் 2½ ஏக்கர்		...	46,917	15·4
2½	,, 5	,,	...	54,461	17·9
5	,, 7½	,,	...	34,285	11·2
7½	,, 10	,,	...	28,370	9·3
10	,, 15	,,	...	31,000	10·2
15	,, 30	,,	...	31,753	10·4
30	,, 50	,,	...	6,729	2·2
50-ம் அதற்கு மேலும்			...	2,741	0·9
		மொத்தம்	...	3,04,920	100·0

பஞ்சாபில் மொத்தம் பயிராக்கப்பட்ட நிலம் 21,93,860 ஏக்கர். இது ஒரு குடும்பத்திற்குச் சராசரி 7·2 ஏக்கர் ஆகிறது. மொத்த நிலத்தில் 55·8 சதவீதம் 5 ஏக்கருக்கும் குறைந்தவை.

1928-ல் மொத்த நிலத்தில் 3 ஏக்கருக்குங் குறைவாக இருந்த நிலங்கள் 43·4 சதவீதமாக இருந்து, 1939-ல் 48·8 சதவீதமாயின என்று பஞ்சாப் பொருளாதார விசாரணைக்குழு கூறுகிறது.[2] பஞ்சாபில் ஒரு கிராமத்தில் 12,800 ஏக்கர் நிலம், 63,600 வயல்களாகப் பிரிந்திருந்தது. நாடு முழுவதிலும் சராசரி நிலத்தின் அளவு வேகமாகக் குறைந்துகொண்டே வருகிறதென்று நிலங்களைப் பற்றிச் செய்த விசாரணைகளிலிருந்து தெரிகிறது. இந்தப் போக்கு எல்லா இராச்சியங்களிலும் வெவ்வேறளவு காணப்படுகிறதென்று பஞ்ச விசாரணைக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. வெவ்வேறு

[1] Board of Economic Enquiry, Punjab, Size of Holdings by Dr. Calvert, 1925.

[2] பஞ்ச விசாரணைக் குழுவின் அறிக்கை (1945), பக்கம் 256.

இராச்சியங்களில் அளவுக்குத் தகுந்தவாறு நிலங்கள் பங்கிடப்பட்டிருப்பதைப்பற்றிக் கீழ்க்கண்ட அட்டவணை தெரிவிக்கிறது.[1]

அளவுக்குத் தகுந்தபடி நிலங்களின் பங்கிடு

	சென்னை	பஞ்சாப்	உ. பி.	வங்காளம்
நிலத்தின் சராசரி அளவு (ஏக்கரில்)	4·5	10	N.A.	4·4
மொத்தத்தில் நிலங்களின் சதவீதம்				
5 ஏக்கருக்குக் குறைவு	82	63·7	81·2	71·3
10 ,,	89	80	93·9	88·3
15 ,,	N.A.	87·9	N.A.	N.A.
25 ,,	N.A.	93·7	99·1	N.A.

	பம்பாய்	மைசூர்	அசாம்	ஒரிசா
நிலத்தின் சராசரி அளவு (ஏக்கரில்)	13·3	6·2	4·8	4·9
மொத்தத்தில் நிலங்களின் சதவீதம்				
5 ஏக்கருக்குக் குறைவு	41·9	65·9	66·4	79·2
10 ,,	60·9	85·7	87·4	89·5
15 ,,	72·5	N.A.	N.A.	94·3
25 ,,	85·2	N.A.	N.A.	97·8

[1] இந்தியாவில் விவசாயச் சட்டம், தொகுதி II, நிலங்களை ஒன்று சேர்த்தல் (இந்திய அரசாங்கத்தின் விவசாய 'அமைச்சுத்துறையைச் சேர்ந்த பொருளாதார புள்ளியியல் ஆலோசகர் வெளியிட்டது). 1950, பக்கம் 1.

திட்டக் குழு ('முதல் ஐந்தாண்டுத் திட்டம்'–பக்கம் 199–202) ஒரு பிற்சேர்க்கையில் 5 ஏக்கருக்குக் குறைந்த நிலங்களைப்பற்றி ஓர் அட்டவணை கொடுத்திருக்கிறது. அதன் சுருக்கம் பின்வருமாறு :

இராச்சியம்	நிலங்கள் சதவீதம்	பரப்பு சதவீதம்
உத்தரப் பிரதேசம்	81·2	38·8
பம்பாய்	52·31	14
மத்தியப் பிரதேசம்	51·5	10
ஒரிசா	74·2	30·1
பீகார்	83·3	N.A.
அசாம்	66·1	26
மைசூர்	66·2	25·3
திரு. - கொச்சி	94·1	44
இமாசலப் பிரதேசம்	95·0	71
பெப்சு	45·4	8·2

உத்தரப் பிரதேசத்தில் 'ஜான்பூர் மாவட்டத்தில், ஒரு வாரக் குடியின் சராசரி நிலத்தின் அளவு 3·5 ஏக்கர். கோரக்பூர் ஜில்லாவில், பர்கானு சித்னு ஜோபுவாவில் சென்ற நிலவரித் திட்டத்தின் போது சராசரி நிலம் 1·3 ஏக்கராகத்தான் இருந்தது; ஹடாவில் அது 0·9 ஏக்கராக இருந்தது; சாலிம்பூரில் 0·65 ஏக்கராக இருந்தது; ஜான்பூர், கோரக்பூர் போன்ற ஜில்லாக்களில் கிராமங்களில் எங்கும் இல்லாத அளவுக்கு ஜனத்தொகை அடர்த்தி சில தாலுக்களில் உள்ளது. அங்குப் பாதிக்கு மேற்பட்ட விவசாயிகள் நஷ்டத்திற்குப் பாடுபட்டுச் சிக்கனமில்லாத நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவை மிகச் சிறியவையானையால் கிராமம் முழுவதும் சிதறிக் கிடக்கின்றன.'[1]

1880-ல் மேஜர் எர்ஸ்கின் கணித்த எண்களும், 1929-ல் உத்தரப் பிரதேச பாங்கு விசாரணைக்குழு கணித்த எண்களும், 1948-ல் ஜமீன்தாரி ஒழிப்புக் குழு கணித்த எண்களும் உத்தரப் பிரதேசத்தில் சராசரி ஒருவர் வைத்திருக்கும் நிலத்தின் அளவு குறைந்துகொண்டு வருகிறது என்பதைக் காட்டுகின்றன.

கான்பூரில் வித்யாசாகர் விவசாய நிலங்களைப்பற்றி அண்மையில் செய்த ஆராய்ச்சி ஒன்றில், இருபது வருடங்களில் (1925—1945) நான்கு கிராமங்களில் சராசரி நிலத்தின் அளவு 3·1 ஏக்கரிலிருந்து 2·7 ஏக்கராகக் குறைந்துவிட்டது. இவற்றில் 75 சதவீதத்திற்கு மேல் 3 ஏக்கருக்கும் குறைவாக உள்ளன.[2]

1945 பஞ்சக் குழுவிற்கு அளித்த அறிக்கை ஒன்றில் ஒரு மாகாண அரசாங்கம் 'எல்லா மாகாணங்களிலும் நிலம் துண்டுபடும் போக்குக் காணப்படுகிறது' என்று கூறியுள்ளது.[3]

உட்பிரிவுக்கும் துண்டுபடுதலுக்கும் காரணங்கள்

மேலே நாம் காட்டிய எண்களினால், சீனாவில் உள்ளது போன்ற ஒரு விவசாய முறை இங்குள்ளது என்று தெரிகிறது. இந்த முறையில் சீதோஷ்ணம், மண், நீர்ப்பாசனம், இரு போகம் ஆகிய வசதிகளால் ஒரு சிறிய துண்டு நிலம் வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்கிறது. இத்தகைய சிறிய நிலங்களை அடிப்படையாகக் கொண்டு இம்முறை அமைந்துள்ளது. சீனாவைப் போலவே

1 'Indian Analysed', Vol. III, 1934, pp. 175-76.

2 அறிக்கை (Bulletin) எண் 16, பொருளாதார, புள்ளியியல் துறை, உத்தரப் பிரதேசம், 1950.

3 திருமலை மேற்கோள் காட்டியது, மேற்படி நூல், பக்கம் 153.

இங்கும் தகப்பனுர்தான் குடும்பத் தலைவர். இக்குடும்பத்தில் இரண்டு மூன்று தலைமுறையினரும், மற்ற உறவினரும் சேர்ந்து வாழ் வார்கள். இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் இல்லாவிடினும் குடும்ப வரவு செலவில் பங்குடையவர்கள்.

விவசாய நிலங்களை உட்பிரிவாக்குவதற்கும் துண்டுபடுத்துவதற் கும் நாட்டின் ஜனத்தொகைப் பெருக்கம்தான் காரணம் என்று கூறப் படுகிறது. 'ஜனத்தொகை அதிகரித்தால், தலைக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தின் அளவும் குறைகிறது' என்று புள்ளிவிவரக் குழு கூறுகிறது. மேலும், நிலத்தை உட்பிரிவு செய்தலும் துண்டு போடுதலுந்தான் அதிக விரைவாக வளர்ந்துவரும் ஜனத் தொகைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. பிழைப்புக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு, சிறுசிறு துண்டு நிலங்களில் விவசாயம் செய்பவர்களுக்கு வாழ்க்கையில் இலாப நஷ்டம் ஒன்றுமில்லை. அவர்கள் தம் குடும்பத்தைப் பெருக்கிக்கொள்வதால் அவர்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. வறுமையும், குடும்பப்பெருக்கமும் ஒன்ருகவே நிகழும். வாரிசுச் சட்டமும் சொத்துரிமைச் சட்டமும், நிலம் உட்பிரி வாக்கப்படுவதற்கும் துண்டுபோடப்படுவதற்கும் உதவியாய் இருக்கின்றன. வாரிசுரிமை பெறும்போது ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு வகையான நிலத்திலும் பங்கு கேட்கின்ருன். இதனுல், நீண்ட கோவணம் போன்ற நிலத்துண்டுகள் கிராமத்திலுள்ள ஒவ் வொரு விவசாயிக்கும் கிடைக்கின்றன. மூதாதையர்களுடைய சொத்தின் மீதுள்ள ஆசையால் ஒருசில ஏக்கருக்குள்ள மூதாதையர் நிலங்களையும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கும் தன்மை இந்திய கிராம வாழ்க்கைக்குமட்டும் சிறப்பானதன்று. இந்தச் சொத்தின் மீதுள்ள ஆசையையும், மக்களின் மிக்க வறுமையையும் சேர்த்துப் பார்க்கும்போதுதான் இப்பிரச்சினை எவ்வளவு கடுமையானது என்பது விளங்கும்.

இந்தியாவில் வாரிசுச் சட்டமும் சொத்துரிமைச் சட்டமும் பல நூற்ருண்டுகளாக இருக்கின்றன. பழங்காலத்தில் நிலம் நிறைய இருந்தது. இன்றுபோல அதை அளந்து முறைப்படி படங்களில் குறிக்கவில்லை. ஒருவருக்கும் சொந்தமில்லாத நிலம் அதிகம் இருந்தது. அதனுல், குடும்பத்தில் உள்ளவர்கள் பெருகினுல், இப்பொழுதுபோல நிலத்தைப் பிரிக்கவேண்டிய அவசியமில்லை. குடும்பத் தலைவன் இறந்துவிட்டால் குடும்பச் சொத்தின் முழுத தன்மை பாதிக்கப்படாது. குடும்பம் பல ஆண்டுகள் ஒன்ருகவே வாழ்ந்து வந்தது. கூட்டுச் சொத்துரிமை விதியாக இருந்தது; சொத்தைப் பிரிப்பது விதிவிலக்காக இருந்தது. இன்றுகூடச் சட்டப்படி இந்துக் குடும்பம் பிரிக்கப்பட்டதாக நிரூபிக்கப்படா

லன்றி, அது ஒரே குடும்பமாகவே கருதப்படுவதிலிருந்து இதையறியலாம். சொத்துப் பிரிக்கப்பட்டால், குடும்பத்திலுள்ள பிள்ளைகள் விவசாயத்தைவிட்டுக் கிராமத்தில் வேறு வேலைகளைச் செய்யவும் வாய்ப்பிருந்தது.

கடந்த நூறுண்டுகளில் நிலைமை மிகவும் வேகமாக மாறி விட்டது. கிராமப் பொருளாதார வாழ்க்கையின் முக்கிய அமிசமாக இருந்த கைவினைத் தொழில்களும், மற்றத் தொழில்களும் இங்கிலாந்திலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் இயந்திரங்களால் செய்து இறக்குமதிசெய்யப்பட்ட மலிவான பொருள்களால் அநேகமாக மறைந்துவிட்டன. கிராமக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த பல மக்கள் இப்போது வேலையற்றுப்போய் நிலத்தில் கூலிவேலை செய்பவர்களாய் மாறி, அதில் கிடைக்கக் கூடிய ஊதியம் எவ்வளவு சொற்பமாயினும் அதையும் ஆவலோடு கைப்பற்ற எண்ணினர். கிராம வாழ்க்கை மிகுந்ததால் நிலத்திற்குக் கிராக்கி அதிகமாயிற்று. இதைச் சமாளிக்க நிலத்தை உட்பிரிவு செய்யும் முறை மிகுதியாக்கப்பட்டது. ஆக, வாரிசுச் சட்டங் களாலும், சொத்துரிமைச் சட்டங்களாலும் மட்டும் நிலங்கள் பிரிக்கப்பட்டும் துண்டுபோடப்பட்டும் வந்தன என்று கூற முடியாது. விவசாய மல்லாத தொழில்களில் ஈடுபட முடியாத, பெருகிவரும் ஜனத்தொகையின் நிலப்பசியைத் தீர்ப்பதற்கும் இப்படிச் செய்ய வேண்டியிருந்தது. 1880ஆம் ஆண்டின் பஞ்சக் குழு, மிக அபாய கரமானதென்று குறிப்பிட்ட, நிலத்தை நம்பியுள்ள உபரி ஜனத் தொகை, அது முதல் மேலும் ஏராளமாகப் பெருகியது. அது உற்பத்திக்கு மேலும் உதவக்கூடிய சாதனங்களை அழித்துத் தின்று கொண்டு வருகிறது.

அதிகமான உட்பிரிவும் துண்டுபோடுதலும் உண்டாக்கியுள்ள பிரச்சினையை மேலும் கடுமையாக்கக்கூடிய மற்றோர் அமிசம் இருக்கிறது. விவசாயம் செய்யும் குடும்பம், தனக்குக் கிடைத்த நிலத்தில் பயிர் செய்துகொண்டு, தனக்குத் தேவையானவற்றைத் தானே ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது, பொதுப் பொரு ளாதாரத்தைப் பாதிக்காத வகையில், ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலம் செழிப்புத் தன்மையில் வேறுபட்டிருந்தால் அதில் ஒரு சங்கடமும் இல்லை. பன்னாட்டு அளிப்புக்கும் தேவைக்கும் ஏற்பப் போட்டி விலை அமைப்பு ஏற்பட்டிருக்கும்போது, அதற்குத் தகுந்தபடி நிலத்தில் உற்பத்தி செய்வதற்கான செலவைச் சரிக் கட்டுவதில், சிறிய துண்டு நிலங்களில் திறமையற்ற முறைகளைக் கையாளுவதால் உண்டாகும் நஷ்டம் அதிகக் கவலையைத் தரும் விஷயமாய் உள்ளது. பொதுவாகச் சிறிய நிலம் வைத்திருப்பவர்

களுக்குப் போதிய வசதி இல்லாததால் அதிக உதவி தேவையாய் இருக்கிறது. எனினும், சிறிய துண்டு நிலங்களை வைத்திருப்பத ஞலேயே அவர்களை நம்பிக் கடன் கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆதலால், கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்கு நிதி உதவியளிக்க முடிவதில்லை.

இறுதியாகக் கிராம லேவாதேவிக்காரனும் இத்தீமையை மிகுதிப் படுத்துகிருன். ' இந்து சொத்துரிமைச் சட்டம், நிலத்தின் செழிப்பில் வேறுபாடு, வரிவிதிப்பில் வேறுபாடு ஆகியவைகளோடு இந்த நிலைமைக்குக் காரணமான மற்ருென்று யாதெனில், கிராம சௌகார் தனக்கு அடமானம் அல்லது விற்பனை செய்ய ஒப்படைக்கப்பட்ட நிலத்தை உரிய காலத்திற்கு முன்பே சிறிது சிறிதாகத் தன்வசப் படுத்திக்கொண்டுவிடுவதுதான். ஆகவே, விவசாய மக்கள், தங்களுக்குள் பிரித்துக்கொள்வதற்குச் சிறிதளவு நிலமே எஞ்சி யிருக்கிறது.'[1]

சிக்கனமான நிலம்பற்றிய பிரச்சினை

உட்பிரிவுகளும் துண்டுபோடுதலும் அதிகரித்து வரும் நிலையில், ஐந்துபேர் உள்ள குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் வேண்டிய நிலம் எவ்வளவு என்ற கேள்வி நம் முன் தோன்றுகிறது. இக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாது. ஒரு நாட்டில் உள்ள பல அமிசங்களைப் பொறுத்து விவசாய நிலத்தின் அளவு இருக்கும். பூகோள, சீதோஷ்ண நிலைகளும், சட்டங்களும், சமூகப் பழக்க வழக்கங்களும், பயிர் செய்யும் முறைகள் நுட்பவினை ஆகியவற்றைப் பொறுத்தும் இது இருக்கும். இதே போலப் பயிரின் தன்மையைப் பொறுத்தும், விவசாய உற்பத்தியின் நோக்கத்தைப் பொறுத்தும் — உள்நாட்டில் மக்களுடைய உணவுத் தேவையையும் மற்றத் தேவை களையும் திருப்தி செய்வதற்கா அல்லது ஏற்றுமதி மார்க்கெட்டுக்குப் பணப் பயிர்களை விளைவிப்பதற்கா என்பதைப் பொறுத்தும்—நிலத்தின் சரியான அளவு மாறுபடும்.

உதாரணமாகத் தானியமும் உரோமமும் தேவையாயிருக்கும் இடங்களில் பெரிய நிலம்தான் சிக்கனமானதாக இருக்க முடியும். இதற்கு மாருகச் சிறிய பண்ணைகள் பால் உற்பத்திக்கும், காய்கறி பழம் உற்பத்திக்கும், திராட்சைத் தோட்டத்திற்கும் மிகவும் ஏற்றவை. 1875-க்கு முன்பு, இங்கிலாந்தில் ஒன்றரை நூற்ருண்டுகளாக ஜனத்தொகை வேகமாக அதிகரித்துவந்ததால் தானியத்திற்கு

[1] பர்தி தாலுக்கா பொருளாதார விசாரணைக் குழுவின் அறிக்கை, 1926, பக்கம் 16.

அதிகத் தேவை இருந்தது. தானியங்களின் விலை உயர்ந்ததால், அதிக மூலதனத்துடனும் விஞ்ஞானக் கருவிகளுடனும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 1875-க்குப் பிறகு புதிய நிலங்களில் பயிரிட்டு விஞ்ஞான முறைகளும் போக்குவரத்தும் விருத்தியடைந்து தானியங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டபோது பேரளவுப் பண்ணைகள் இலாபத்தைக் கொடுக்காமல் போய்விட்டன; சிறிய நிலங்களே வெண்ணெய், பழம், காய்கறி முதலியவைகளுக்கு மிகவும் ஏற்றவையாக இருந்தன.

ஆகவே, ஒரு நிலம் சிக்கனமானதா (இலாபம் கொடுக்கக் கூடியதா), சிக்கனமற்றதா (இலாபம் கொடுக்காததா) என்பதைக் கண்டிப்பான முறையில் தீர்மானிக்க முடியாது.[1] எந்த அளவுள்ள நிலம், குறிப்பிட்ட விவசாய வசதிகளோடு அதிகபட்ச உற்பத்தியைச் செய்கிறதோ, அதுவே பொருளாதார முறையில் சிறந்தது. அதிக பட்ச உற்பத்தி வீதாசார விதியால் (Law of Proportions) நிர்ணயிக்கப்படுகிறது. பெரிய நிலத்தைக் கொடுத்து அதிகபட்ச உற்பத்தி வேண்டுமானல், அதற்கு விதைகள், இயந்திரக் கருவிகள், உரங்கள் போன்ற குறிப்பிட்ட மூலதனமும், ஒரு குறிப்பிட்ட உழைப்பும் வேண்டும். இவை கிடைக்காவிட்டால் பேரளவு விவசாயம் பயனற்றதாகிவிடும். மூலதனம், விவசாய முறைகள் ஆகிய சாதனங்களால் சரியாகப் பயிர்செய்யப்பட முடியாதபடி நிலம் பெரியதாக இருந்தால், பொருளாதாரக் காரணங்களால் அதன் அளவைக் குறைக்கவேண்டும். மேற்கூறிய சாதனங்களைவிட நிலம் சிறியதாயிருந்தால் நிலத்தைப் பெரிதாக்கவேண்டும். இங்கிலாந்தில் சராசரி 50 முதல் 60 ஏக்கர் நிலமும், அமெரிக்காவில் 150 ஏக்கர் நிலமும் பெரிய நிலங்களாகக் கருதப்பட முடியாது. ஆனல், இந்தியாவில் 50 ஏக்கர் நிலம், அன்ருட வாழ்க்கைக்குத் திண்டாடிக் கடன்பட்டிருக்கும் விவசாயிகளும், அதைப் பயிர் செய்வதற்குக் குறைந்தபட்ச சாதனங்களும் இருப்பதனல், சிக்கனமில்லாத மிகப் பெரிய நிலம் என்று கருதப்படவேண்டும்.

[1] 'சிக்கனமான' என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் இருப்பதைப் பொறுத்து, சிக்கனமான நிலம்பற்றிய இருவேறு கருத்துகள் உள்ளன. இயந்திர முறைகளாலும், விவசாய நுட்பத்தொழிலாலும், அதிகபட்ச விளைவைத் தரக்கூடிய நிலம்தான் சிக்கனமான நிலம் எனின், பெரிய பண்ணைகளை உண்டாக்குவதால் ஏற்படக்கூடிய அதிக வேலையின்மைப் பிரச்சினையை நாம் சமாளிக்கவேண்டியிருக்கும். இதனல் சமூகப் புரட்சி உண்டாகலாம். இதற்கு மாருக, ஐந்துபேருள்ள குடும்பத்தைப் பாது காப்பதற்குப் போதுமான நிலமே சிக்கனமான நிலம் என்று கொண்டால், இயந்திர முறைகளோ, உற்பத்தி நுட்ப வினையில் அடிப்படையான மாறுதலோ தேவையில்லை. பிற்கூறப்பட்ட இந்த நிலம் பிழைப்புக்குப் போதுமான நிலம் என்று குறிக்கப்படலாம்.

இந்தப் பொருளற்ற கேள்விகளை விட்டு, நிபுணர்கள் கூறியுள்ள சில தேர்ந்தெடுத்த கருத்துகளைப் பார்ப்போமாயின், அவற்றுள்ளும் அதிக வேற்றுமைகள் இருப்பதைக் காணலாம். 'எந்த நிலம் செலவெல்லாம் போகத் தன்னையும், தன் குடும்பத்தையும் போதிய வசதியுடன் காப்பாற்றுவதற்குத் தகுந்த உற்பத்தியை அளிக்குமோ அதுவே சிக்கனமான நிலம்' என்று பம்பாயில் கீடிஞ்ச் (Keatinge) கூறினர். 'தக்காணத்தில் 40 அல்லது 50 ஏக்கர் நல்ல நிலம் ஒரே பரப்பாக, நீர்ப்பாசனத்திற்கு ஒரு நல்ல கிணற்றுடன் இருந்தால் அது சரியான சிக்கனமுள்ள நிலமாகும்.'[1] டாக்டர் ஹரால்டு மான் கூறுவதாவது, 'ஒரு சாதாரணக் குடும்பத்திற்குத் திருப்தியான குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்தை அளிக்கக்கூடிய நிலமே சிக்கனமான நிலம் ..... அத்தகைய நிலம் 20 ஏக்கர் பரப்புடையதாக இருக்கும்'[2] என்கிருர். பேராசிரியர் ஸ்டான்லி ஜெவான்ஸ், ஒரு விவசாயி நல்ல வாழ்க்கைத்தரத்துடன் வாழ்வதற்கு ஏற்ற நிலம் 30 ஏக்கருள்ளதாக இருக்கவேண்டும் என்று கூறினர். இதற்கு மாருக ஒரு குடும்பப் பாதுகாப்பிற்குக் குறைந்தபட்சம் வேண்டிய நிலம் 4 முதல் 6 ஏக்கர்வரை என்றும், மண் உற்பத்தித்திறன், தண்ணீர் வசதி, மாற்றுப் பயிர்முறை, விவசாய நடைமுறைகள் முதலியவைகளால் இந்த அளவு மாறுபடலாம் என்றும் சர் டி. விஜயராகவாச்சாரியார் கூறினர்.[3]

சர் டி. விஜயராகவாச்சாரியார் கூறுவதுபோல நல்ல ஊட்டம் பெறுவதற்குத் தலைக்கு ஓர் ஏக்கர் நிலம் இன்றியமையாதது என்று கொண்டு குறைந்தபட்ச சிக்கனமான நிலம் இன்னது என்பதற்கு நாம் என்ன ஆதாரத்தை மேற்கொண்டாலும், இந்தக் குறைந்தபட்ச அளவுகூட, இப்பொழுது நமக்கு இந்தியாவில் இல்லை என்பது தெளிவு. இந்தியா முழுவதற்கும் தலா பயிர்செய்யப்பட்ட நிலம் 0·78 ஏக்கர்தான் இருக்கிறது. பம்பாய், கிழக்குப் பஞ்சாப் போன்ற இராச்சியங்களில் ஓர் ஏக்கருக்குமேல் சிறிது இருக்கலாம்.

நிலங்களை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள்

துண்டுபடுத்தப்படும் தீமைக்கு எதிராக நிலங்களை ஒருங்கிணைப்பதுதான் சரியான பரிகாரம் என்று கூறப்படுகிறது. நிலத்தின் அளவினல் அது சிக்கனமற்றதாய் இருக்கும் தன்மைக்கும்,

[1] ''பம்பாய் தக்காணத்தில் கிராமப் பொருளாதாரம்'—கீடிஞ்ச், பக்கம்-52-53.

[2] 'தக்காணக் கிராமத்தில் நிலவிவசாயிகள்', தொகுதி II, பக்கம்-43.

[3] இந்திய விவசாயப் பொருளாதாரச் சங்கத்தின் இரண்டாவது மகாநாட்டில் தலைமைப் பேருரை, ஏப்ரல் 1941, பக்கம் 15.

நிலம் துண்டுபட்டிருப்பதனுல் ஏற்பட்டிருக்கும் தீமைக்கும் இடையே இப் பிரச்சினையைக் கவனிப்பவர்கள் ஒரு குழப்பத்தை உண்டாக்கிவிடுகிருர்கள். ஒருங்கிணைப்பது என்பது துண்டுபடுதலுக்கு எதிரான பரிகாரம். ஒருங்கிணைக்கப்பட்ட பிறகும் அந்த நிலத்தின் அளவு ஒரு சாதாரணக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்குப் போதாத அளவு மிகச் சிறியதாக இருக்கலாம்.

சிதறிக் கிடக்கும் நிலங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் பல முயற்சிகளைச் செய்திருக்கிருர்கள். மத்தியப் பிரதேசத்தில் நிலச்சுவான்தார்கள் ஏதோ செய்திருப்பதாகவும், அதற்கு வாரக்குடிகள் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. பம்பாயில் நிலவரிச் சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ்ப்பட்ட சர்வே எண்களை அங்கீகரிக்க மறுத்தது. ஆனுல், நீதிமன்றங்கள் அவற்றை அங்கீகரித்ததால், நிலவரிச் சட்டத்தில் குறிப்பிட்ட பிரிவு நீக்கப்பட வேண்டியதாயிற்று. பரோடா, போபால், மத்திய பாரதம் ஆகிய இடங்களிலும் இதைப் போல முயற்சிகள் செய்யப்பட்டன. மத்திய பாரதத்தில் 15 ஏக்கருக்குக் குறைந்த நிலங்கள் குடிவாரச் சட்டப்படி பிரிக்கப்படக் கூடியவை அல்ல. இந்த முயற்சிகள் ஒரு குறுகிய தன்மையுடையவையாகையால் உருப்படியான பலன் ஒன்றும் கிடைக்கவில்லை.

பஞ்சாபில் மக்கள் தாங்களாக விரும்பி முன்வந்து ஒருங்கிணைப்பதற்கு வழிகாட்டினர். நிலங்களை ஒருங்கிணைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் 2 இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்டு 18·24 இலட்சம் பகுதிகளாக இருந்த நிலங்களை 2·86 இலட்சம் பகுதிகளாகக் குறைத்தன. 1947-48 வரையில் மொத்தம் 21,881 கிராமங்களில் 1,552-ல் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் முடிந்தன. தாமாக விரும்பிச் செய்யும் இவ்வேலை மெதுவாகத்தான் நடந்தது. இதற்கு மக்கள் அரசாங்கம் கட்டாய நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத்தையும் இயற்றவேண்டியதாயிற்று.

ஒருங்கிணைப்புபற்றிச் சட்டமியற்றுதல்

முதலிலேயே ஒருங்கிணைப்பை விரைவுபடுத்துவதற்குச் சட்டமியற்றவேண்டிய அவசியம் உணரப்பட்டது. விவசாயக் குழுவின் அறிக்கை, ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மேலும் உட்பிரிவு செய்வதைத் தடுக்கவேண்டுமென்று கூறப்பட்டது. ஒருங்கிணைப்பதற்குச் சட்டமியற்றும் வரலாற்றில் மூன்று நிலைகள் உள்ளன. முதல் நிலையில் பரோடா சட்டம் (1920) செய்ததுபோலச் சட்டம் அனுமதி

தந்தது. இரண்டாவது நிலையில் கட்டாய அமிசம் புகுத்தப்பட்டது. இவ்வாறுதான் மத்திய மாகாண நில ஒருங்கிணைப்புச் சட்டம் (1928), தங்கள் வசமுள்ள பகுதியில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாமல் நிலம் வைத்திருப்பவர்கள், சாசுவதமாக நிலம் வைத்திருப்பவர்களில் பாதிக்குக் குறையாமல் இருந்தால், அந்த நிலங்களை மாற்றிப் பங்கிடும் திட்டத்திற்குத் தம் உறுதியான ஒப்புதலை அளிக்கும்படி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் அளித்தது. உத்தரப் பிரதேசத்தில் தங்கள் வசமுள்ள பகுதியில் மூன்றில் ஒரு பங்கு நிலத்திற்குரியவர்கள் கேட்டுக்கொண்டால், ஒருங்கிணைப்பு உத்தரவைப் பிறப்பிக்கலாம். மூன்றாவது நிலையில், எந்தப் பகுதியிலும் ஒருங்கிணைப்புத் திட்டத்தை, நிலம் வைத்திருப்பவர்களுடைய விருப்பம் இல்லாமலேயே கட்டாயமாக நடத்தலாம். 1927-ல் பம்பாயில், ஒரு குறைந்தபட்ச நிலம் இன்னது என்பதை வரையறுத்து, அதற்குக் கீழ் பிரிவு செய்யக்கூடாது என்று தடுத்து, சிறு நிலங்கள்பற்றிய மசோதாவில் (Small Holdings Bill) இந்த முறையில் முதல் முயற்சி செய்யப்பட்டது. ஆனால், அப்போது அந்த மசோதா கைவிடப்பட்டது. 1947-ல் துண்டுபடுத்தலும், நிலங்களை ஒருங்கிணைத்தலும்பற்றிய சட்டம், எந்தப் பகுதியிலும் குறைந்தபட்ச நிலம் இவ்வளவு என்று தீர்மானிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளித்தது. குறைந்தபட்ச நிலம் இவ்வளவு என்று அறிவிக்கப்பட்டதும், உரிமைப் பதிவுப் பத்திரத்தில் (Record of Rights) எல்லாத் துண்டு நிலங்களையும் பதிவு செய்ய வேண்டும். அத்தகைய துண்டுகளை, ஒரு தொடர்ச்சியான சர்வே எண்ணோடு சேர்த்த பிறகே பிறருக்கு மாற்றலாம்; பிரிவினையோ, கிரயமோ துண்டு உண்டாவதற்குக் காரணமானல், அது தடுக்கப்பட்டது.

சமீபகாலச் சட்டங்கள்

இதுவரையில் இயற்றப்பட்ட சட்டங்கள் அனுமதிக்கும் தன்மையோ கட்டாயத் தன்மையோ உடையவை. 1948-ன் பம்பாய்ச் சட்டமும், கிழக்குப் பஞ்சாப் நிலச் சட்டமும் விரிவும், கட்டாய அமிசமும் உள்ளவை. ஆனால், அவை நேரடியாகச் சிக்கனமான (இலாபம் தரும்) நிலத்தை உண்டாக்க ஏற்பாடு செய்யவில்லை. சில குறிப்பிட்ட இடங்களில் தனியாக விவசாயம் செய்யக்கூடியபடி, குறிப்பிட்ட அளவுள்ள நிலங்களை உண்டாக்க அவை ஏற்பாடு செய்கின்றன; அன்றியும், அந்த அளவுக்குக் குறைந்தவற்றைத் துண்டுகள் என்று அறிவிக்கும்படியும், துண்டுகள் உண்டாகும்படி நிலத்தைப் பிரிக்கக்கூடாதென்று தடுத்து, அத்தகைய துண்டுகளை விற்பதாயின், அவற்றோடு தொடர்ச்சியாக

நிலம் வைத்திருப்பவர்கள் அவற்றை முதலில் வாங்குவதற்கு உரிமையளிக்கின்றன.

இந்தச் சட்டங்களின் கீழ்ப் பாதிக்கப்படும் நிலத்தையுடையவர்கள், ஒவ்வொரு சட்டத்தில் ஒவ்வொரு மாதிரிக் குறிக்கப்படுகிறார்கள். மத்தியப் பிரதேசச் சட்டத்தில் (1928) சாசுவதமாக நிலம் உடையவர்களில் கேதார்களும் (Kedars) அடங்குவர். உத்தரப் பிரதேசச் சட்டம் 'விவசாயிகள்' என்று குறிக்கப்படுபவர்களையும் சேர்த்துக்கொள்கிறது. இவர்கள், ஒரு நிலத்தைப் பயிர் செய்துகொண்டிருப்பவர்கள் என்றும், வாரக் குடியின்கீழ் வேலை செய்பவர்கள் இதில் அடங்கமாட்டார்கள் என்றும், தம் நிலம் முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை வாரக் குடியின்கீழ் வேலை செய்பவனுக்கு குத்தகைக்குக் கொடுத்தவர்களும் இதில் அடங்குவர் என்றும் கூறுகிறது. பம்பாய்ச் சட்டமும் பஞ்சாப் சட்டமும் 'சொந்தக்காரர்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. 'சொந்தக்காரர்' என்பவர் பிறருக்கு மாற்றப்படாத நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர் என்றும், நிலம் மாற்றப்பட்டிருந்தால் மேலுரிமை உள்ளவர் என்றும் கூறுகின்றன.

மத்தியப் பிரதேசச் சட்டத்தில் கட்டாய அமிசம் இருக்கிறது. கிராமத்தில் மூன்றில் இரண்டு பங்கு நிலம் வைத்திருப்பவர்களில், சாசுவதமாக நிலத்திற்குரியவர்கள் பாதிப்பேர் சேர்ந்து ஒருங்கிணைப்புத் திட்டம் வேண்டுமென்று கேட்டால், அத் திட்டம் உறுதியானபிறகு, அப் பகுதியில் சாசுவதமாக நிலம் வைத்திருப்பவர்கள் எல்லோரையும் அது கட்டுப்படுத்தும். எந்தப் பகுதியிலும் அரசாங்கம் ஒருங்கிணைப்பிற்குத் திட்டம் வகுத்து நிறைவேற்ற விரும்பினால், அதை அறிவிப்பதற்கு பம்பாய்ச் சட்டமும் பஞ்சாப் சட்டமும் அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கின்றன.

நடைமுறை

ஒருங்கிணைப்புக்காகக் கொடுக்கப்படும் விண்ணப்பங்களுடன் முதலில் நிலங்களை மாற்றியமைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் சேர்ந்து அனுப்பப்படலாம்; அல்லது அனுப்பப்படாமலும் இருக்கலாம். விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டிருக்கிறது. சாசுவதமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் அது அறிவிக்கப்படும். விண்ணப்பத்தில் கையெழுத்திட்டவர்கள் வேண்டிய அளவு இருந்தால் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். ஒருங்கிணைப்பு அதிகாரி நிலங்களை மாற்றியமைக்கத் திட்டம் வகுப்பார். பிறகு வெவ்வேறு வகையில் பாதிக்கப்

பட்டவர்களைக் கொண்டு ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படும். இதன் வேலை முக்கியமாக ஆலோசனை கூறுவதுதான். கிராம நிலங்கள், அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்படும்; முடிந்த இடங்களில் ஒரே அளவு உற்பத்தித் திறனுடைய நிலங்களை மாற்றிக்கொள்ளலாம். ஒரே அளவுள்ள நிலங்களை மூன்று தரமாக, உயர்ந்தது, நடுத்தரமானது, மட்டமானது என்று பிரித்து ஒன்றாகச் சேர்ப்பார்கள். ஒரு படத்தில் நிலத்தின் சொந்தக்காரர்களுடைய சம்மதத்தின்பேரில் அவற்றின் விலைமதிப்பு குறிக்கப்படும். இரண்டாவதாக, முக்கியமான பயிர்களுக்குத் தக்க நிலத்தை ஒவ்வொரு விவசாயிக்கும் கொடுக்க முயற்சி செய்யப்படும். அதன் மதிப்பு, அவன் முதலில் கொடுத்த நிலத்தின் மதிப்பிற்குச் சமமாக இருக்கும். பிறகு, நிலஉரிமை மாற்றியமைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட தேதியில் விவசாயிகள் புதிய நிலங்களைப் பெற்றுக்கொள்வார்கள். நிலத்தை அடமானம் பெற்றிருப்பவர் ஈடு கேட்கலாம்.

இப்பிரச்சினை மீண்டும் எழாமல் இருப்பதற்கு நடவடிக்கை

ஒருங்கிணைப்பு நிரந்தரமான தீர்வாகாது. அடுத்த தலைமுறையில் இப்பிரச்சினை மீண்டும் எழுப்பப்படலாம். எதிர்காலத்தில் பாகப் பிரிவினைகள் நடைபெறாமலும், மாற்றிக்கொள்ளாமலும், கிரயம் செய்யாமலும் இருப்பதற்குத் தடைவிதிக்க வேண்டும். இதற்காகப் பம்பாய், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீரார் ஆகிய இடங்களில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. துண்டாடுவதற்குத் தடை, நிலங்களை ஒருங்கிணைத்தல்பற்றிய பம்பாய்ச் சட்டம் (1947) ஒரு குறிப்பிட்ட பகுதியில், ஒரு குறிப்பிட்ட அளவுக்குக்கீழ் நிலத்தைத் துண்டுபோடுவதைச் சட்டவிரோதம் என்று கூறுகிறது. கிராமப் பதிவுப் புத்தகத்தில் எல்லாத் துண்டுகளையும் பதிவு செய்யவேண்டும். இத் துண்டுகளை மாற்றுவதோ, குத்தகைக்கு விடுவதோ தடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள்கூடத் துண்டு உண்டாகுமாறு நிலத்தைப் பிரிப்பதை அனுமதிக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான சர்வே எண்ணுள்ள நிலத்தை வாங்குவதற்கு ஒருவரும் சரியாகக் கிடைக்கவில்லை என்றால், அரசாங்கமே சொந்தக்காரருக்கு நஷ்டஈடு கொடுத்து அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். பம்பாய்ச் சட்டத்தைப் போலவே கிழக்குப் பஞ்சாப் நிலச் சட்டமும் (1948) நிபந்தனைகளையுடையது.

ஜமீந்தாரிமுறை ஒழிக்கப்பட்டு, நிலச் சீர்திருத்தம் புகுத்தப்பட்ட பிறகு ஒருங்கிணைப்புப் பிரச்சினை எளிதாகக்கூடும். பல இராச்சியங்களில் நிலத்தை மாற்றுவதில் வரம்பற்ற உரிமை

இருப்பதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கொள்கை வலுவடைந்து வருகிறது.[1]

அண்மையில் முன்னேற்றம்

நிலங்களை ஒருங்கிணைக்கும் திட்டம்பற்றி அநேகமாக் ஒவ்வோர் இராச்சியத்திலும் அதிக ஆவல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், சில இராச்சியங்களில்தான் கணிசமான முன்னேற்றம் உண்டாகியிருக்கிறது. 'பஞ்சாபில் 1955 மார்ச் முடிவுக்குள் 40 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குமேல் ஒருங்கிணைக்கப்பட்டுவிட்டது. மத்தியப் பிரதேசத்தில் 25 இலட்சம் ஏக்கரும், பெப்சுவில் 10 இலட்சம் ஏக்கரும் இணைக்கப்பட்டன. பம்பாயிலும் டில்லியிலும் முறையே 1,060-ம் 210-ம் கிராமங்கள் இணைக்கப்பட்டன.'[2] இந்த வேலைக்கு வரம்பாயிருப்பவை நிதி வசதியும், பயிற்சிபெற்ற பணியாட்களும், நுட்பத் தொழில் அறிவுமேயாகும். பஞ்சாபிலும் உத்தரப் பிரதேசத்திலும் இதனால் நன்மையடைந்தவர்களிடமிருந்து நாளாவட்டத்தில் செலவில் பெரும்பகுதி திரும்பப் பெறப்படுகிறது. தம் மனம்போல வாரக்குடிகளாயிருப்பவர்கள் அதிக நிலத்தை வைத்திருக்கும் இடங்களில், நிலங்களை ஒருங்கிணைப்பதற்கு முன், குடிவாரச் சட்டங்களை இயற்றவேண்டும். இல்லாவிட்டால் முயற்சி வீணாகிவிடும். இரண்டாம் திட்ட காலத்தில் பல இராச்சியங்களின் திட்டங்களில் ஒருங்கிணைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், உட்பிரிவும் துண்டுபடுத்தலும் நிகழாமல் தடுப்பதற்குப் பல இராச்சியங்கள் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் பிரிவினை செய்வதும் மாற்றுவதும் ஆகியவற்றிற்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. உத்தரப் பிரதேசத்தில் இந்த அளவு $6\frac{1}{2}$ ஏக்கராகவும், ஹைதராபாதில் 2 முதல் 24 ஏக்கராகவும், டில்லியில் 8 ஸ்டாண்டர்டு ஏக்கராகவும், மத்தியப் பிரதேசத்திலும் போபாலிலும் 15 ஏக்கராகவும் குறிக்கப்பட்டிருக்கிறது. விந்தியப் பிரதேசத்தில் நீர்ப்பாசனம் பெற்ற பகுதிகளுக்கு 5 ஏக்கரும், புஞ்செய் நிலங்களுக்கு 10 ஏக்கரும் என்று வரம்பு குறிக்கப்பட்டுள்ளது. பம்பாய், பஞ்சாப், ஒரிசா, பெப்சு, ஆகிய

[1] விவசாய அமைச்சுத் துறையைச் சேர்ந்த பொருளாதார, புள்ளி இயல் ஆலோசகர் நிலங்களின் ஒருங்கிணைப்புபற்றி (புது டில்லி, 1950) அளித்துள்ள இவ்விவரங்களுக்காக, நாம் அவருக்குப் பெரிதும் நன்றியுடையவர்களாவோம்.

[2] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 199.

இராச்சியங்களில் நிலங்களின் குறைந்தபட்ச அளவை நிருணயிப்பதற்கு, அரசாங்கத்திற்குச் சட்டம் அதிகாரம் தந்திருக்கிறது.[1]

சீர்திருத்தத்திற்கு யோசனைகள்

(அ) பஞ்ச விசாரணைக் குழு: பயிர் செய்யப்பட்ட நிலங்கள் சிறியவையாய் இருப்பதுபற்றி, நமது விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கடந்த பல ஆண்டுகளாகப் பல யோசனைகள் கூறப்பட்டு வருகின்றன. உட்ஹெட் பஞ்ச விசாரணைக் குழுவின் அறிக்கை (1945), நிலங்களைப்பற்றியும், வயல்களைப் பற்றியும் கிடைத்த புள்ளி விவரங்களில் உள்ள குறைகளைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தத் தகவல்கள் அரைகுறை யானவை; ஒரு தனி மனிதனால் பயிர் செய்யப்படும், 'பண்ணை' பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. 5 முதல் 10 ஏக்கர் உள்ள சிறிய நிலங்களால் உள்ள பொருளாதார நன்மைபற்றி இக்குழுவின் உறுப்பினர்கள் வேறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். வாரிசுரிமைச் சட்டத்தை மாற்றினால் பொதுஜன அபிப்பிராயம் எதிர்ப்பாக இருக்கும் என்று கருதி, இக்குழு அதில் மாறுதல் வேண்டுமென்று கூறவில்லை. தோல்வி மனப்பான்மையோடு இக் குழு, 'சொத்துரிமைச் சட்டத்தைப் பாதிக்காத வகையில் நிலத்தை உட்பிரிவு செய்வதைத் தடுப்பதற்கு உருப்படியான யோசனை ஒன்றும் கூறப்படவில்லை' என்கிறது.[2] எனினும், அக்குழு நிலங்களை ஒருங்கிணைப்பது பற்றியும், தடையின்றி நிலத்தை மாற்றுவதைக் கட்டுப்படுத்துவதுபற்றியும் சிபாரிசு செய்துள்ளது.

(ஆ) விவசாய சீர்திருத்தக் குழு: காங்கிரசின் விவசாய சீர்திருத்தக் குழு (1951) அரசாங்கத்திற்கும் உழவனுக்கும் இடையே உள்ள எல்லா நடுவர்களையும் நீக்கிவிட வேண்டுமென்று கூறியது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பல இராச்சியங்களில் வெவ்வேறு நிலையில் நிறைவேற்றப்பட்டு வரும் ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாக்கள் இத் துறையில் முதல்படி என்று அது கருதியது. மேலும், எதிர்காலத்தில் குத்தகைக்காரர்கள் நிலத்தை வேறொருவனுக்கும் குத்தகைக்குக் கொடுக்காமலிருக்கவும், கைம்பெண்கள், வயது வராதவர்கள், உறுப்புக் குறையுடையவர்கள் விஷயத்தில் மட்டும் விதிவிலக்களிக்கவும் வழி செய்ய வேண்டுமென்று கூறியது. ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக நிலத்தைப் பயிர் செய்தவர்களுக்கு

[1] 'இந்தியா 1956', பக்கம் 166.

[2] அறிக்கை, பக்கம் 264.

நிலம் சுவாதீனம் ஆகவேண்டும். மற்ற நிலங்கள் விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட காலம்வரையில் சொந்தக்காரர் தம் சொந்த விவசாயத்திற்காக நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். வாரக்குடியின் நிலம் சிக்கன அளவுக்கும் குறையாமலிருந்தால், அவர் மேலும் அதிக நிலத்தைச் சொந்த விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இந்த அளவு அறிவிக்கப்பட்ட அதிகபட்ச வரம்பிற்கு மேற்படக்கூடாது. இக்குழு நிலங்களின் அளவுக்கு மூன்று மீக்கோள்தரங்களைக் (norms) குறித்துள்ளது.

(1) வெவ்வேறு பகுதிகளின் நிலைமைகளுக்கேற்பத் தீர்மானிக்கப்பட்ட சிக்கனமான நிலம்: இது விவசாயிக்கு நியாயமான வாழ்க்கைத்தரத்தை அளிக்கக்கூடியதாகவும், சாதாரண அளவுள்ள குடும்பத்திற்கு நிறைய வேலையளிப்பதாகவும் இருக்கவேண்டும்.

(2) சிக்கனமான நிலத்திற்குங் குறைந்த அடிப்படையளவு நிலம். இவற்றின் எண்ணிக்கையும் சதவீதமும் இந்தியாவில் மிக அதிகமாக இருப்பதால் இவற்றின் புனரமைப்பு அரசாங்கத்தின் நிருவாகத் திறமைக்கு உட்பட்டதாக இல்லை. ஆகவே, இக்குழு, சிக்கனமான நிலத்திற்குங் குறைந்த அளவுள்ள ஒரு புதிய அடிப்படை நிலத்தை அறிவித்தது. இதற்குப் புனரமைப்பு முறைகளைக் கையாளலாம். இது விவசாயிக்கு நியாயமான வாழ்க்கைத்தரத்தை அளிக்க முடியாததாயினும், விவசாய வேலைகளுக்குத் தகுதியுடையதாயிருக்கும்.

(3) இந்தியாவில் சாதாரண விவசாயிக்குள்ள நிருவாகத் திறமையையும் நிதி வசதிகளையும் மனத்தில் கொண்டு, அளவு வரையறுக்கப்பட்ட உத்தம அளவுள்ள நிலம், பொதுவாக ஒரு நிலத்தின் உத்தம அளவு, சிக்கனமான நிலத்தின் அளவைவிட மூன்று மடங்குக்கு மேல் இருக்கக்கூடாது. பிரிக்கப்படாத குடும்பங்களுக்கும் அறநிலையங்களுக்கும் விதிவிலக்களிக்கப்படும்.

சிக்கனமான நிலத்தின் அளவுக்குக் குறைந்த அடிப்படை நிலத்திலும், உத்தம அளவுள்ள நிலத்திலும் குடும்பங்கள் விவசாயம் செய்வதில் உள்ள இடையூறுகளை நீக்குவதற்கு, பல நோக்குக் கூட்டுறவுத் திட்ட வசதிகள் கிடைக்கும். இவை இத்தகைய பண்ணைகளில் விவசாயம் செய்வதில் திறமைக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். அடிப்படை நிலத்திற்குக் குறைந்த அளவு நிலமுடையவர்கள் வேண்டிய அளவு ஒன்றாகச் சேர்ந்து உத்தம அளவுள்ள நிலத்தை அளித்தால், அவர்களுக்குக் கூட்டுறவுக் கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தும்படி இக்குழு சிபாரிசு செய்துள்ளது.

வெவ்வேறு விதமான விவசாயத்திற்கு வெவ்வேறு தரமான ஒரு கூட்டுறவை நடத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கவேண்டும்.

இறுதியாக, இக் குழு விவசாயச் சீர்திருத்தத்தைச் சிறிது சிறிதாக அன்றி, முழுதுமாகவும் இணைப்பாகவும் செய்ய வேண்டுமென்றும், ஒரே இணைப்பான நிறுவனத்தினால் ஒரே சீரான கொள்கையின் அடிப்படையில் நடத்தப்படவேண்டுமென்றும் கூறுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

நிலச் சீர்திருத்தத்தில் முதல்படியாக ஒவ்வோர் இராச்சியத்திலும் நிலங்களின் அளவும் பங்கீடும்பற்றிய விவரங்களைத் திரட்டுவதற்கு ஒரு கணிப்பை (Census) ஏற்படுத்த வேண்டுமென்றும், நடுவர்களுக்குள்ள உரிமையை ஒழித்து அவர்களுக்கு அரசாங்கப் பத்திரங்கள் உருவத்தில் நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்றும், திட்டக் குழு கூறுகிறது.[1] இக் குழு, ஒருவர் வைத்துக் கொள்ளக் கூடிய நிலத்தின் அளவிற்கு உச்ச வரம்பு கட்டுவது நல்லது என்ற கொள்கையை ஒத்துக்கொண்டுள்ளது. ஒரு குடும்ப நிலத்தைப் போல் மூன்று மடங்கு இருக்கும்படி உச்ச வரம்பை நிருணயிக்கலாம் என்று விவசாயச் சீர்திருத்தக் குழு கூறிய சிபாரிசை இக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

'சிறிய நிலத்திற்குரியவர்கள்' என்பவர்கள் 'குடும்ப அளவு நிலத்திற்கு' மேல் இல்லாதவர்கள் என்றும், குடும்ப அளவு நிலத்திற்கு மேலும், சொந்த விவசாயத்திற்குரிய உச்ச அளவு நிலத்திற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்கள், 'நடுத்தர நிலத்திற்குரியவர்கள்' என்றும் திட்டக் குழு வரையறுக்கிறது. இந்த அளவு நிலம் உடையவர்களுக்குக் கூட்டுறவு முறையில் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்வதுதான் பொதுக் கொள்கையாக இருக்க வேண்டும் என்று திட்டக் குழு கூறுகிறது. சிக்கனமில்லாத துண்டு பட்ட நிலங்களை ஒருங்கிணைப்பதற்குத் திட்டங்களை விரிவுபடுத்திச் சுறுசுறுப்பாக வேலையில் இறங்கவேண்டும். ஒரு குறைந்தபட்ச நிலத்திற்குச் சட்டமூலம் வரம்புகட்டி, அதை மேலும் பிரிப்பதைத்

[1] திட்டக் குழு, நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுவதற்காக ஒவ்வோர் இராச்சியத்திலும் நிலம் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்கு, மத்திய நிலச்சீர்திருத்தக் குழு ஒன்றை நிறுவியது. 1953-ல் திட்டக் குழு, நிலங்களைப்பற்றியும் விவசாயம்பற்றியும் கணிப்பு நடத்துமாறு இராச்சியங்களைக் கேட்டுக்கொண்டது. பல இராச்சியங்கள் கண்காணிப்பை நடத்தின. கிராம தஸ்தாவேஜுகள் சரியாக இல்லாத இடங்களில் மாதிரி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இது வரையில் 22 இராச்சியங்களின் கணிப்பு முடிவுகள் கிடைத்துள்ளன.

முடிப்புக் குறிப்புகள்

நம் நாட்டில் நிலத்தைத் துண்டுபடுத்தலும் உட்பிரிவு செய்தலும் ஆகியவற்றின் விளைவுகளிலிருந்து தப்புவதற்கு மூன்று விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று முடிவாகக் கூறலாம். (1) நிலங்களை ஒருங்கிணைத்தல்; (2) சிக்கனமான நிலத்தை வரையறுத்து, அதை மேலும் பிரிக்க முடியாதபடி சட்டமியற்றுதல்; (3) வாரிசுச் சட்டத்தையும் சொத்துரிமைச் சட்டத்தையும் மாற்றுதல்.

(அ) இந்த யோசனைகளைக் கவனிக்கும்போது, இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதையும், ஒன்றையொன்று சார்ந்தவை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இவற்றில் ஒன்றை மட்டும் தனியாக நிறைவேற்றினால் பயனில்லை; அதற்குத் துணையாக மற்றவற்றையும் நிறைவேற்ற வேண்டும். பிறக்கும் போதே சமமான சொத்துரிமை இருக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று இவ்விஷயத்தில் அடிப்படையான மாறுதல் செய்வதற்கு அதிகக் காலம் ஆகும். மேலும், பஞ்ச விசாரணைக் குழு கூறியிருப்பதுபோல, உற்பத்தித் திறனைக் கருதும்போது, குறைந்த பட்ச எல்லையை விதித்து, அதே சமயத்தில் வாரிசுகள் சிறுசிறு பங்குகளைப் பெறுவதற்கு உரிமையையும் நிலைநாட்டும் ஒரு சட்டத்தினால் அதிகப் பயன் இராது. 'சட்டப்படி உள்ள ஒரு நிலத்தை வாரிசுகள் விவசாயத்திற்காகப் பிரிப்பதைத் தடை செய்ய முடியாது.'[1] மேலும், சிறுசிறு பங்குகளுக்கு உரியவர்களைக் கூட்டாக விவசாயம் செய்யும்படி சட்டத்தின் மூலம் வற்புறுத்துவதும் இயலாது.

குறைந்தபட்ச அளவுள்ள சிக்கனமான நிலத்தைப் பாதுகாப்பது பற்றி, ஒருபுறம் ஓர் அகில இந்திய இந்து வாரிசுரிமைச் சட்டத்தையும் சொத்துரிமைச் சட்டத்தையும் இயற்றுவது விரும்பத்தக்கதெனினும், மற்றொருபுறம், ஓர் அலகு (unit) என்று கருதத்தக்க சிக்கனமான நிலத்தின் அளவு மாறுவதனால் சங்கடங்கள் உண்டாகின்றன. இது ஒருபுறமிருக்க, இப்போதுள்ள மனப்பாங்கில், இந்தச் சமூகமானது நிலத்தை விவசாயம் செய்யக்கூடிய ஒருவனுக்கு மட்டும் தன் நிலத்தை எழுதிவைக்கவேண்டும் என்று வற்புறுத்தக் கூடிய புரட்சிகரமான சமூக மாறுதலை ஏற்றுக்கொள்ளுமா? எனினும், துண்டுபோடுதலையும், சிறு பிரிவுகளாகப் பிரித்தலையும் தடுக்கவேண்டுமானால், நிலத்தை எழுதிவைப்பவருக்குள்ள

[1] அறிக்கை, பக்கம் 261.

உரிமையைக் கட்டுப்படுத்தி, அவருடைய நிலத்தை அவருடைய மனைவியோ, நிலத்தை முன்பு பயிரிட்ட ஒரு மகனோ மட்டும் பெறும் படி செய்வது மிக அவசியம்.

(ஆ) சிக்கனமான நிலம் விவசாய அபிவிருத்திக்குப் பயனுள்ள தாக இருக்க வேண்டுமானால், அந்த நிலத்திற்குரியவனுடைய பழைய கடன்சுமை நீங்க வேண்டியது மட்டுமன்றி, அவனுக்கு விதை, மாடுகள், கருவிகள் முதலியவை வாங்க நிதி வசதியும் கொடுக்கவேண்டும்.

(இ) விவசாயம் நிச்சயமற்ற மழையை நம்பி இருக்கும் இடங் களில் வெவ்வேறு வகையான மண்ணுள்ள நிலங்களாக ஒருவ னுடைய சொத்துப் பிரிந்திருப்பது நல்லது. இந்தியாவின் பல பாகங் களில் தூரத்தூரமாக உள்ள வயல்களில் இரண்டு மூன்று பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இதனால் மழைக் குறைவினால் ஒரு பயிர் அழிந்துபோனாலும், மற்ற வயல்களிலிருந்து சற்று அதிக விளைவு கிடைக்கக்கூடும்.

(ஈ) நிலங்களை ஒருங்கிணைப்பதால் வேலையிலிருந்து நீக்கப்படும் பலருக்கு வேலையளிப்பதற்காக இப்போது பின்பற்றப்படும் விவசாய முறைகளால் அதிகப் பயனளிக்காத தரிசு நிலங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்று யோசனை கூறப்பட்டுள்ளது. ஆனால், இத்தரிசு நிலங்களைப் பயன்படுத்துவதால், புல் நிலங்கள் எல்லாம் மறைந்து, விலங்கு விவசாயத்துறை வளர்ச்சியடைந்து, விவசாயத் துறையில் ஏற்கெனவே உள்ள சமனற்ற நிலை மேலும் அதிகரிக்கும். ஏனெனில், அது செடிகளின் உற்பத்தியை வற்புறுத்தி நிலத்தின் செழிப்பைக் குறைத்துவிடும். விவசாய நாடுகளுக்கும், தொழில் மயமான நாடுகளுக்கும் இடையே நடக்கும் வாணிபத்தில் நிலத்தின் செழிப்பே ஏற்றுமதி செய்யப்படுவதோடு, இந்தியாவில் புல் நிலம் அதிகமில்லாமலிருப்பதால், அரைப்பட்டினியாயுள்ள ஆடு மாடு களால் மண்ணின் வளம் குறைந்து வறண்டுவிடும்.

(உ) கிராமங்களில் துணைத்தொழில்களும், கிராமத்தொழில் களின் புத்தமைப்பும், பேரளவு உற்பத்தியும் இன்று நமது விவ சாயத்தில் திறமையின்மைக்குக் காரணமாயுள்ள அரைச் சோம்பேறி களையும் பயனற்றவர்களையும் தம்பால் இழுத்துக்கொண்டா லொழிய, இந்த நடவடிக்கைகள் எல்லாம், ஒருங்கிணைப்பதிலும் சொத்துரிமைச் சட்டத்தை மாற்றுவதிலும் வெற்றியைத் தரமாட்டா.

(ஊ) ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் வெற்றியைத் தருவது, விரிவான சமூக, பொருளாதாரத் திட்டத்தில் அவற்றிற்குரிய

இடத்தைப் பொறுத்தது. எந்தத் தனிப்பட்ட நடவடிக்கையும், இப்பிரச்சினையை எளிதாகக் கருதிச் செய்யும் எந்த வேலையும், தலையிடாக் கொள்கையின் வழக்கப்படி செய்யும் எந்த ஒட்டு வேலையும் நம் விவசாயத்தில் உள்ள துன்பங்களைக் குறைப்பதற்குப் பதில் அதிகரிக்கத்தான் செய்யும்.

(எ) இறுதியாக, இப்பிரச்சினை எவ்வளவு சிக்கலானது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. துண்டுபட்ட நிலங்களும் சிக்கனமற்ற நிலங்களும் விவசாயத்தில் படிப்படியாகச் சீர்கேட்டை உண்டாக்கி, மக்களின் வறுமையை அதிகரிக்கச் செய்துள்ளன. மேலும் மேலும் விவசாயிகள் கடன்படுவதால், அவர்களுடைய நிலத்தை விவசாயிகள் அல்லாதவர் பறித்துக்கொள்ளும் நடவடிக்கை அதிகரித்துவருகிறது; விவசாயத்தில் கீழ்நிலையில் உள்ளவர்கள் எல்லாம் நிலத்திற்குச் சுமையாகி வருகின்றனர். நாம் முன் விளக்கிக் கூறிய சட்ட ரீதியான தடுப்பு நடவடிக்கைகள் பயனைத் தரா. சட்டத்தால் தடுக்க முடியாதாயினும், மக்கள் தாமாக விரும்பிக் கூட்டு விவசாயம் செய்தால் வெற்றி கிடைக்கும் என்று கூறப்படுகிறது. நம் விவசாயம் போட்டியால் ஏற்படும் விலைகளை நம்பியிருக்கும்வரையில், இப்போதுள்ள சமூக, பொருளாதார அமைப்பில் கட்டாயக் கூட்டு விவசாயத்திலுல்கூட, அரசாங்கம் அளிக்கக்கூடிய விதைகள், கருவிகள், கடன் வசதிகள் எல்லாம் இருந்தும், நமது பற்றுக்குறையான விவசாயப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

அரைகுறையான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதில் ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்களை மீண்டும் பங்கீடு செய்து கூட்டுறவு முறையில் பேரளவு உற்பத்தி செய்தால், அது புரட்சிகரமானதாய், ஊன்றிய நலமிகளுடன் நீண்ட போராட்டத்தை விளைவிக்கக்கூடியதாய் இருக்கும். இவ்வூன்றிய நலமிகள் லேவாதேவிக்காரர்களும், தலத்திலில்லா நிலக்கிழார்களும் (Absentee Landlords), நிலத்தின் மேல் விடாத பற்றுடைய உரிமையாளர்களும் ஆவர். நாம் மிகக் கடினமான, ஏன், தீர்க்க முடியாத ஒரு சங்கடமான நிலையை எதிர்க்க வேண்டியுள்ளது. நமது சமூக, பொருளாதார அமைப்பை அடியோடு மாற்றக்கூடிய அடிப்படையான திட்டங்களை மேற்கொள்வதா, ஏதோ சீர்திருத்தங்கள் என்று சிறிது சிறிதாக விட்டு விட்டுச் செய்துகொண்டு, இப்போதுள்ள நிச்சயமற்ற நிலையை நீடிக்கவிடுவதா என்னும் இரண்டில் ஒன்றை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். ஜே. எஸ். மில் கூறியபடி, 'மக்களின் சாசுவதமான நிலைமையை உயர்த்துவதற்குச் சிறிய நடவடிக்கைகளால் ஒன்றுமே பயனில்லை.'

இந்தியாவில் நிலச்சீர்திருத்தத்தில் பல பெரிய சங்கடங்கள் உள்ளன. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற விருப்பத்தினல் புல் நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றினல் மண்ணின் செழிப்பு மிக வேகமாகக் குறைந்துவிடக்கூடும். உள்நாட்டு நிலையை உணராமல், மேனுட்டு முறைகளையும் இயந்திரங்களையும் பயன் படுத்துவது, மண்ணை வளப்படுத்துவதற்குப் பதிலாக கெடுத்துவிடக் கூடும். மனித சக்தியை மிச்சம் பிடிப்பதால் விவசாய உற்பத்தியில் ஒன்றும் இலாபம் இராது. இதன் விளைவு நம் கிராமப் பொருளா தாரம் முழுவதும் சீர்குலைவதுதான். எனினும், காலப்போக்கில் இப்பிரச்சினை விவசாயத்திற்கும் தொழிலுக்கும் எத்தகைய சம நிலையை ஏற்படுத்துவது என்பது பற்றியதாக இருக்கும். அன்றியும், இயந்திரங்கள் அளிக்கும் அதிக சுகத்தையும் ஆறுதலையும் பெற வேண்டுமென்ற விருப்பத்தைக் கட்டுப்படுத்துவதில் மக்களுக்குள்ள திறமைக்கும், இயந்திரத் தொழில்கள் அளிப்பதாகக் கூறுவதைவிட இயற்கை நியாயமாக அளிப்பதைக்கொண்டு திருப்தியடைவதில் அவர்களுக்குள்ள விருப்பத்திற்கும் இடையே சம நிலை ஏற்படுத்துவது பற்றியதாகவும் இருக்கும். சிறிய சிக்கனமற்ற நிலத்திற்குரியவர்கள் கூட்டு முறையில் விவசாயம் செய்வது அதிக நம்பிக்கை தரும் நடவடிக்கையாகும். இதற்குச் சிற்றளவுத் தொழில்களையும் குடிசைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்து, நிலத்தின் மேலுள்ள மக்கள் நெருக்கடியைக் குறைக்க வேண்டும். வாழ்க்கைத் தரத்தை நிருணயிப்பதில் மதமும் அறக் கருத்துக்களும் வரலாற்று முழு வதிலும் ஒரு முக்கியமான பங்கை வகித்துள்ளன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானல், சமூக, பொருளாதார அமைப்பு மாற்றப்படுவதோடு, வாழ்க்கைத்தர உயர்வுக்குப் பகையாயுள்ள சமயக் கருத்துகளும் செயல்களும் கைவிடப்படவேண்டும்.

12. கிராமக் கடனும் கடன் சட்டங்களும்

நம் நாட்டில் உள்ளது பற்றுக்குறை விவசாயப் பொருளாதாரம் என்று திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. மொத்த ஜனத்தொகையில் 70 சதவீதமுள்ள விவசாயிகளுக்கு இது ஒரு ‘ பிழைக்கும் வழி ’ (Way of life) என்று கருதப்படுகிறதேயன்றி, நாட்டில் பொருளாதார அமைப்பில் ஓர் அமிசம் என்று கருதப்படுவதில்லை. உலகத்தின் மற்றப் பகுதிகளோடு ஏற்பட்டுள்ள தொடர்பினால் புரட்சிகரமான மாறுதல்கள் உண்டாயிருப்பினும், விவசாயி தன் சிறு துண்டு நிலத்திலிருந்து பிழைப்புக்காக வருந்தி அதை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

விவசாயியின் வருமானத்தைக் குறைக்கக்கூடிய முக்கியமான அமிசம் யாதெனின், என்றும் நீங்காத அவனுக்குள்ள கடன்தான். சௌகாரிடம் கடன்பட்டிருக்கும் அவன் இரண்டு விதமாகச் சுரண்டப்படுகிறான். அவை, அவன் தன் கடனுக்கு அளவுகடந்த வட்டி வாங்குவதும், அவனுடைய விற்பனைத் தரகனாக இருந்து அவனை மோசம் செய்வதும் ஆகும். ஆதலால், விவசாயி அதிக வட்டி கொடுக்கவேண்டியதோடு, விளைச்சலுக்குக் குறைந்த விலையையும் பெறவேண்டி யிருக்கிறது.

உலகம் முழுவதிலும் விவசாயிகள், தங்களுக்குள்ள குறைவான சாதனங்களின் காரணமாகத் தங்கள் நீண்டகாலத் தேவைகளுக்காகவும், குறுகிய காலத் தேவைகளுக்காகவும் கடன்படுகிறார்கள். ஆனால், இந்திய விவசாயிகளின் கடனுக்கும், மேனாட்டு விவசாயிகளின் கடனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், மேனாட்டு விவசாயிகளின் கடன் உற்பத்திக்கு உதவுகிறது; இந்திய விவசாயிகளின் கடன் உற்பத்திக்குப் பெரும்பாலும் உதவுவதில்லை.

சுமை உண்மையில் இரண்டு மடங்காகிவிட்டது. 1937-ல் ரிசர்வ் பாங்கியின் விவசாயக் கடன் இலாகாவின் அறிக்கை, இக்கடனின் மதிப்பு, பண்டமாக ரூ. 1,800 கோடி என்று கூறியது.

1875 லேயே தக்காணத்தில் உண்டான விவசாயக் கலகத்தைப் பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு ஒன்று, விவசாயக் கடனுக்குக் காரணங்களைப் பற்றியும் விசாரித்தது. பிறகு, சென்னையில் நிக்கல்சன் இதே பிரச்சினைபற்றி விசாரித்து, இதே முடிவுக்கு வந்தார். பின்னும், மாகாண பாங்கு விசாரணைக் குழு விவசாயக் கடனுக்குக் காரணங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்தது. இதன் முடிவுகள் நிக்கல்சனின் முடிவுகளை ஒத்திருந்தன.

டாக்டர் ராதாகமல் முகர்ஜி, வெவ்வேறு கிராமங்களில் நடத்தப் பட்ட விசாரணைகளின் பேரில், இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் சராசரிக் கடனைப்பற்றிக் கீழ்க்கண்ட விவரங்களைத் தருகிறார்.[1]

வருடம்	இடம்	கடனின் அளவு
1896	சியால்கேட், குஜ்ரன்வாலா, ஷாபூர் ஆகிய இடங்களில் 9 கிராமங்கள் (தோபர்ன் விசாரணை)	கடன்பட்ட சொந்தக்காரருக்குத் தலா ரூ. 562
1918	43,733 உரிமையாளர்கள் (அ) (டார்லிங் விசாரணை) (ஆ)	தலா ரூ. 463 சொந்தக்காரருக்குத் தலா ரூ. 385
1875	அகமது நகரில் 12 கிராமங்களில்	நிலத்தை வைத்திருப்பவருக்குத் தலா ரூ. 371
1907	பரீத்பூர் மாவட்டம்	கடன்பட்ட உழவருக்குத் தலா ரூ. 121
1913	பரோடா இராச்சியம்	கடன்பட்ட நிலம் ஒன்றுக்கு ரூ. 450
1917	பிம்ப்ளாசௌதாகக் கிராமம் (தக்காணம்)	கடன்பட்ட குடும்பம் ஒன்றுக்கு ரூ. 225
1918	ஆஜ்மீர்-மெர்வார (10,779 கூட்டுறவாளர்கள்)	கூட்டுறவாளர் ஒருவருக்கு ரூ. 379
	சிந்த்வாரா	சாதாரண வாரக்குடி ஒருவருக்கு ரூ. 112
1919	வங்காளம் (4,000 கூட்டுறவாளர்கள்)	கூட்டுறவாளர் ஒருவருக்கு ரூ. 120
1919	மைசூர் (24,350 கூட்டுறவாளர்கள்)	கடன்பட்ட கூட்டுறவாளர் ஒருவருக்கு ரூ. 273

[1] 'இந்தியாவின் நிலப்பிரச்சினைகள்' 1933, பக்கம் 274-5.

வெவ்வேறு வருடங்களில் வெவ்வேறு மாகாணங்களில் உண்டான விவசாயக் கடன்பற்றி மதிப்பீடுகளைக் காட்டும் அட்டவணை ஒன்றைக் கீழே தருகிறோம்.

கிராமக் கடன்பற்றி வெவ்வேறு மதிப்பீடுகள்

மதிப்பிட்டவர்	விசாரணை வருடம்	கடன் அளவு ரூபாயில்	பொதுக் குறிப்புகள்
தக்காணக் கலக விசாரணைக் குழு	1875	நிலம் வைத் திருப்பவருக்குத் தலா ரூ. 371.	(பம்பாயில்) அகமதுநகர் மாவட்டத்தில் 12 கிராமங்களைப் பகுத்தாய்ந்ததை அடிப்படையாகக் கொண்டது. அரசாங்க நிலத்தை வைத்திருந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடன்பட்டிருந்தார்கள்; நில வரியைப் போல் 18 மடங்குக் கடன் இருந்தது.
பஞ்சக் குழு	1880	...	நிலம் வைத்திருந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அதிகக் கடன்பட்டிருந்தனர்; மற்றொரு மூன்றில் ஒரு பங்கினர் கடன் பட்டிருந்தாலும் அதைத் தீர்க்கும் சக்தியுடையவர்கள்.
சர் பிரெடெரிக் நிக்கல்சன்	1895	45 கோடி	சென்னை மட்டும்.
பஞ்சக் குழு	1901	...	பம்பாயில் கால் பங்கினர் நிலத்தை இழந்துவிட்டனர்; ஐந்தில் ஒரு பங்குக்கும் குறைவானவர்கள் கடன் இல்லாமலிருந்தனர்.
சர் எட்வர்டு மாக்லகன்	1911	300 கோடி	சர் F. நிக்கல்சன் சென்னைக்குக் கூறியதை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டிஷ் இந்தியாவிற்குக் கூறப்பட்டது.

மதிப்பிட்டவர்	விசாரணை வருடம்	கடன் அளவு ரூபாயில்	பொதுக் குறிப்புகள்
M. L. டார்லிங்	1925	600 கோடி	பஞ்சாபுக்குக் கூறப்பட்ட 90 கோடியை அடிப்படையாகக் கொண்டது; நிலவரியைப்போல 19 மடங்கு; ஆனால், 17-ஐப் பெருக்கும் எண்ணாகக் கொண்டது.
மத்திய பாங்கு விசாரணைக் குழு	1929	900 கோடி	மாகாண பாங்கு விசாரணைக் குழு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது.
P. J. தாமஸ்[1]	1939	1,200 கோடி	......
விவசாயக் கடன் இலாக்கா அறிக்கை	1937	1,800 கோடி	......
பம்பாய் (சிந்து உள்பட)[2]	1929	81 கோடி	வரியைப் போல 15 மடங்கு. நிலம் உள்ள குடும்பம் ஒன்றுக்குச் சராசரி கடன் ரூ. 570; நிலம் இல்லாத குடும்பத்திற்கு ரூ. 189; கடன் இல்லாத குடும்பங்களின் சதவீதம் வட குஜராத்தில் 21, தென் குஜராத்தில் 23, கொங்கணியில் 29, சிந்துவில் 13
சென்னை	1929	150 கோடி	வரியைப் போல 19 மடங்கு.
வங்காளம்	,,	100 கோடி	ஒரு குடும்பத்திற்குச் சராசரிக் கடன் ரூ. 160.
உத்தரப் பிரதேசம்	,,	124 ,,	......

[1] '1928—29-ல் பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த விவசாயக் கடன் 900 கோடி ரூபாயானால், 1933-க்குள் அது ரூ. 1,200 கோடியாக உயர்ந்திருக்க வேண்டும். 1929-க்கும், 1933-க்கும் இடையில் 50 சதவீதம் விலை விழுந்துவிட்டதால், உண்மையான கடன்சுமை ரூ. 2,200 கோடிக்குச் சமமாகும்' P. J. தாமஸ்—'இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகள்' தொகுதி-I, 1939, பக்கம் 176.

[2] இனி வரும் மதிப்பீடுகள் எல்லாம் மாகாண பாங்கு விசாரணைக் குழுக்களால் செய்யப்பட்ட மதிப்பீடுகள்,

மதிப்பிட்டவர்	விசாரணை வருடம்	கடன் அளவு ரூபாயில்	பொதுக் குறிப்புகள்
பஞ்சாப்	1929	135 கோடி	1929-ல் வரியைப் போல 27 மடங்கு. ஆனால், 1921-ல் 19 மடங்கு ; 8 வருடங்களில் 50% அதிகரிப்பு ; 1929-ல் விவசாயிக்குச் சராசரிக் கடன் ரூ. 104 ; 1921-ல் ரூ. 76.
பீகார், ஒரிசா	,,	155 ,,	சாதாரண விவசாயிக்கு ரூ. 129 கோடி. நிலக்கிழார் களுக்கு ரூ. 24 கோடி ; மற்றக் குடும்பத்தவர் களுக்கு ரூ. 2 கோடி.
மத்திய மாகாணம், பீரார்	,,	36½ ,,	ஒரு குடும்பத்திற்கு ரூ. 227.
அசாம்	,,	22 ,,	வரியைப் போல 21 மடங்கு. குடும்பங்களில் 15% கடன் இல்லாதவை.

நம் புள்ளி விவரங்கள் திருப்தியளிக்கக்கூடியவையாய் இல்லாமல் இருப்பதால், இந்தக் கிராமக் கடன்பற்றிய மதிப்பீடுகள் எவ்வளவு தூரம் நம்பத்தக்கவை என்று கூறமுடியாது.[1] ஆனால், அவை கடன் சுமை அதிகரிக்கும் போக்கைத் தெளிவாகக் காட்டுகின்றன. மந்தநிலை வருடங்களில் கடன்சுமையை மிகவும் அதிகரித்திருக்க வேண்டு மென்பதிலும் ஐயமில்லை. ஏனெனின், விவசாயப் பண்டங்களின் விலைகள் மிகவும் குறைந்து, செலவுகள் மாருமலிருந்தன. இது பற்றி அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆராய்ச்சி கூறுவதாவது: '1929—30 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1931—39 முழுவதும் மிக அதிகமான கடன் இருந்தது என்பது, மந்தநிலைக்கு முன்னரும் பின்னரும் இருந்த போக்கைப்பற்றிக் கிடைத்த விவரங்களால் தெரிகிறது. 1931—39-ல் விவசாயக் கடனில் பணச்சுமை ஒருகால் அதிகரித்திருக்கக்கூடும்.'[2]

[1] பாங்கு விசாரணைக் குழுவின் மதிப்பீடுகளை, விவசாய நிதியைபபற்றிய காட்கில் குழு நம்பத்தக்கவை என்று கருதவில்லை.

[2] சர்வே அறிக்கை, தொகுதி-I, பகுதி-I, 1956. பக்கம் 225-26.

1939-க்குப் பிறகு கிராமக் கடன்சுமை

விலைகளின் உயர்வு, குறிப்பாக யுத்த காலத்திலும், யுத்தப் பிற்காலத்திலும் விவசாயப் பண்டங்களின் விலை உயர்வு, விவசாயச் செழிப்பினால் தேசீய வருமானத்தை நகரப் பகுதிகளிலிருந்து கிராமப் பகுதிகளுக்கு மாற்றிவிட்டதென்றும், இது பெரும்பாலும் விவசாயம் செய்பவர்களுக்கு நன்மையளித்துள்ளது என்றும், பெரிய வணிகர்கள் தந்திரமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதைப் பலரும் நம்புகிறார்கள்.[1] ஆதலால், இப்போது கடன் பிரச்சினையே இல்லை என்று கூறப்படுகிறது. இந்த நம்பிக்கை மிகவும் பரவியிருந்தால், திட்டக் குழு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இப் பிரச்சினை இல்லாதது போலவே எண்ணி, இதைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை.[2]

இந்த விவசாயச் செழிப்புக் கூறப்படும் நிலைமைக்கு ஆதாரமாக நம்பத்தகுந்த விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால், இதைப் பற்றித் தெரிவிக்கும் சில விசாரணைகள் நடந்துள்ளன. இத்தகைய கிராமக் கடன்பற்றிய ஒரு விசாரணை சென்னையில் டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடுவால் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் செய்யப்பட்ட மாதிரி ஆராய்ச்சியாகும்.[3] 'அனுகூலமான யுத்த கால அமிசங்கள் இருந்தும், இந்த மாகாணத்தின் கிராமக் கடன் மிக அதிகமாக, ரூ. 217·7 கோடியினின்றும் குறையாமல் இருக்கிறது. இது 1935-ல் W. R. S. சத்தியநாதன் கணித்ததைவிட ரூ. 14 கோடி அதிகம். இதன் பிறகு, சென்ற பத்து ஆண்டுகள் பொருளாதார மறுமலர்ச்சிக் காலம். இது யுத்த காலப் பொருளாதார வீக்கத்தில் வந்து முடிந்தது. இதற்கு முன்பு இதைப்போலக் கடனைத் தீர்ப்பதற்குரிய சாதகமான நிலை ஏற்பட்டதில்லை. இருப்பினும் கடன் கணிசமாகக் குறையவில்லை. அது இன்னும் அரசாங்க வரியைப் போல 22·5 மடங்கு அதிகமாக உள்ளது என்பது கவலையுடன்

[1] வரிக் குழு அறிக்கை, 1949 50, பக்கம் 203-ஐயும், 'கிராம பாங்கு விசாரணைக் குழு அறிக்கை, 1950, பக்கம் 30-39-ஐயும் காண்க.

[2] 'விவசாயியின் உழைப்பின் பலனை அவனுக்குக் கிடைக்காமல் செய்து, அவனுடைய ஊக்கத்தை உறிஞ்சி, நம்பிக்கையை அழித்து, அபிலாஷைகளைச் சிதைத்து, வாழ்க்கையையே இருள் மயமாக்கும்படியாக', எப்பொழுதும் உள்ளதும், அதிகரித்துக்கொண்டே வருவதும் ஆகிய இக்கடன் சுமையின் அபாயத்தைப்பற்றி நாம் மழுப்பிப் பேசுதல் கூடாது (மார்க்குவிஸ் லின்லித்கோ, ' இந்திய விவசாயி ' பக்கம் 3-ல் கூறியதை. ரங்நேகர் 'இந்தியாவில் விவசாய நிதி நிலைமை', 1952, பக்கம் 92-ல் மேற்கோள் காட்டியிருக்கிறார்).

[3] கிராமக் கடன்பற்றிப் பொருளாதார நிபுணரின் விசாரணைபற்றிய அறிக்கை, 1946, அரசாங்க அச்சுக்கூடம், சென்னை.

கவனிக்கத்தக்க விஷயமாகும்.'[1] 1930-ல் சென்னையில் மொத்தக் கடன் ரூ. 150 கோடியாக மதிப்பிடப்பட்டது. 1939 ல் இது. ரூ. 271·9 கோடியாக உயர்ந்தது. 1945-ல் இருந்த ரூ. 217·7 கோடி, 20 சத வீதக் குறைவைக் காட்டுகிறது. ஆனால், 1930-ல் இருந்த கடனோடு ஒப்பிடும்போது, இது 45 சதவீத உயர்வைக் குறிக்கிறது.

டாக்டர் நாயுடு விவசாய வகுப்பினரை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கிறார்: (அ) நிலமில்லாத கூலிகள்; (ஆ) வாரக்குடிகள்; (இ) ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ள சிறிய நிலக்கிழார்கள்; (ஈ) ஐந்து ஏக்கருக்கும் 25 ஏக்கருக்கும் இடையில் நிலம் உள்ள நடுத்தர நிலக்கிழார்கள்; (உ) 25 ஏக்கருக்கு மேல் அதிக நிலம் உள்ள பெரிய நிலக்கிழார்கள். 'விவசாய அமைப்பில் மிகவும் கீழ் நிலையில் உள்ள முதல் இரண்டு பிரிவினராகிய நிலமற்ற கூலிகளும் வாரக்குடிகளும் தம் கடனை வளர்த்துக்கொண்டனர். இதனால் அவர்களுடைய பொருளாதார நிலை மோசமாயிற்று. சிறிய நிலக்கிழார்களுக்கு மிகக் குறைந்த நன்மையே கிடைத்தது. பெரிய நிலக்கிழார்கள் தம் கடனைக் குறைத்துக்கொண்டார்கள்.

பிரிவுக்குத் தகுந்தபடி தலா கடனைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது:

பிரிவு	1939 கோடி ரூபாயில்	1945 கோடி ரூபாயில்	சதவீத உயர்வு அல்லது தாழ்வு
I	188·5	113·3	−39·9
II	78·8	59·4	−24·6
III	42·8	37·6	−12·3
IV	20·5	21·3	+ 4·1
V	5·7	8·3	+45·6

1939-லும் 1945-லும் ஐந்து பிரிவினரின் சதவீதம்

பிரிவு	1939 (1)	1945 (2)	2-க்கும் 1-க்கும் உள்ள சதவீதம்
I	14·4	10·8	60
II	43·5	41·0	70
III	35·3	38·7	88
IV	5·4	7·0	104
V	1.4	2·5	143
மொத்தம் ...	100	100	80·1

[1] மேற்கூறியதில் பக்கம் 57.

நடுத்தர நிலக்கிழார்களும் சிறிய நிலக்கிழார்களும் அடங்கிய II, III பிரிவுகள், மொத்தக் கிராமக் கடனில் 80 சதவீதத்திற்குப் பொறுப் புள்ளவர்களாக இருக்கிருர்கள். பணக்கார நிலச்சுவான்தார்கள் தாம் நன்மையடைந்திருப்பதாகத் தெரிகிறது. யுத்தகாலப் பொருளாதார வீக்கம், 'தேவைக்குத் தகுந்தபடி அன்றி, நிலங்களின் அளவுக்குத் தகுந்தபடி நன்மை அளித்திருக்கிறது.'[1]

1941 கணிப்பின் போது மைசூரில் கடன்சுமைபற்றித் தேர்ந் தெடுக்கப்பட்ட 258 கிராமங்களில் திரட்டிய தகவல்களிலிருந்து, மொத்தக் குடும்பங்களில் 56·1 சதவீதம் கடன்பட்டிருந்தது என்றும், ஒரு குடும்பத்திற்குச் சராசரிக் கடன் ரூ. 257 என்றும் தெரிந்தது. இந்த 258 கிராமங்களை மீண்டும் பரிசீலனை செய்ததில், 1945 ல் கடன் பட்ட குடும்பங்களின் சராசரி 56·1 லிருந்து 53·6 ஆகக் குறைந்தது என்று தெரியவந்தது. ஆனல், 1941-ல் குடும்பம் ஒன்றுக்கு மொத்தம் ரூ. 257 ஆக இருந்த கடன் ரூ. 359 ஆக உயர்ந்துவிட்டது. யுத்த கால விவசாய விலைகளின் உயர்வினல், பெரிய நிலங்களை வைத்திருந்த சில குடும்பங்களே நன்மையடைந்தன. சிறிய நிலக் கிழார்களும், வாரக்குடிகளும், கூலிகளும் சிறிதுகூடப் பயனடைய வில்லை. அவர்களுடைய நிலைமை மோசமாகிக் கடனும் அதி கரித்தது.[2]

உத்தரப் பிரதேசத்தில் மாதிரிப் பகுதிகளில் பேராசிரியர் வீர்பகதூர் 1945-ல் நேரில் நடத்திய விசாரணையின் அடிப்படையில் கிடைத்த புள்ளி இயல் விவரங்களிலிருந்து காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு, 'யுத்த காலப் பொருளாதார வீக்கத்திலிருந்து விவசாய சமூகம் அநேகமாக ஒரு நன்மையும் அடையவில்லை. உண்மையான கடன்சுமை குறைந்திருந்தாலும் பணச்சுமை குறையவில்லை' என்று முடிவு கட்டுகிறது.[3]

கிராமக் கடனை யுத்த காலப் பொருளாதார வீக்கம் எப்படிப் பாதித்தது என்ற பிரச்சினைபற்றிக் காட்கில் குழு ஒரு முடிவு கட்டி யுள்ளது. அம் முடிவு, 1944-ல் அரசாங்கம் கொடுத்திருந்த கடன்

[1] மேற்கூறியதில் பக்கம் 42-3.

[2] 'சில கிராமங்களில் கடன்பற்றிய மறு ஆராய்ச்சி, 1945' (S. நாகப்பா), பக்கம் 1-20. சர்வே அறிக்கையில் மேற்கோள். முன்கூறிய நூலில் பக்கம் 220.

[3] அறிக்கை, பக்கம் 91, ஒப்பிடுக : 'யுத்த காலத்தில் கிடைத்த இலாபம் தொழி லதிபர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், தரகர்கள், குத்தகைக்காரர்கள் (contractors) ஆகியவர்களிடமே சென்றது. கிராமப் பகுதிகளில்............விவசாயிகள் தங்களுடைய உண்மையான வருமானம் குறையப் பெற்றுர்கள்'. B. S. மாலிங்குர்வே 'விவசாயச் செழிப்பின் மாயம்', இந்திய சோஷலிஸக் கட்சியின் அறிக்கை எண் 1, 1948. பக்கம் 13.

பாக்கிகள் 1939-ல் இருந்ததைவிடக் குறைவு என்பதையும், கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வாய்தா மீறிய கடன்கள் மிகவும் குறைந்துவிட்டன என்பதையும், அவை கொடுத்த கடன்கள் யுத்தத்திற்கு முன்பிருந்ததைவிடக் குறைவு என்பதையும் திரும்பச் செலுத்தப்பட்ட தொகைகள் அதிகமாக இருந்தன என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. அந்த முடிவு யாதெனின், '1939-ல் இருந்ததைவிட 1944-ல் பணமாக இருந்த மொத்தக் கடன் குறைவானது என்று துணிந்து கூற இடமிருக்கிறது. ஆனால், பிறகு இந்த மொத்தக் கடனை அதிகரிக்கக்கூடிய சக்திகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன; விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைகளில் காணப்பட்ட மேல் நோக்கும் போக்குத் தடைபட்டது. விவசாயச் செலவில் ஏற்பட்ட உயர்வு, விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைகளில் உண்டான உயர்வுக்குச் சமமாகிவிட்டது; சில சமயங்களில் அந்த உயர்வையும் தாண்டிவிட்டது.'[1]

1942-க்கும் 1945-க்கும் இடையில், குறிப்பாகப் பெரிய நிலக்கிழார்கள், நடுத்தர நிலக்கிழார்கள் விஷயத்தில் கடன்சுமையில் ஒரே மாதிரியான குறைவு காணப்பட்டதென்று பஞ்ச விசாரணைக் குழு நம்புகிறது. ஆனால், நாட்டின் பல பகுதிகளில் சிறிய நிலக்கிழார்களின் கடன்சுமை அதிகமாகக் குறைந்திருக்காது என்று கருதுகிறது.[2] கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் நில அடமான பாங்குகளுக்கும் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகைகளைக் கொண்டும், ஆண்டுதோறும் பதிவு செய்யப்படும் அடமானங்களின் மதிப்பைக் கொண்டும் கிராமக் கடனில் அதிகம் குறைந்திருக்கிறது என்று நிரூபிக்கப் பார்க்கிறார்கள். 1944-ல் கடன் தொகை குறைந்திருக்கக் கூடும்; ஆனால், அது முதல் அது மேல் நோக்கிச் செல்லும்

[1] இந்திய அரசாங்கத்தின் விவசாய நிதித் துணைக் குழுவின் அறிக்கை, பக்கம் 7-8. ஒப்பிடுக: 'பம்பாயின் சர்வோதயப் பகுதியாகிய ரத்னகிரி ஜில்லாவில். 1948 தொடக்கத்தில் இருந்ததைவிட முடிவுக்குள் கடன்பட்ட குடும்பங்கள் 15 சதவீதம் உயர்ந்துவிட்டன; குடும்பத்திற்குத் தலா கடன் 16·7 சதவீதம உயர்ந்துவிட்டது. மைசூரில் 1941-ல் இருந்த மொத்தக் கடன் ரூ. 56·07 இலட்சத்திலிருந்து 1945-ல் ரூ. 76·98 இலட்சமாக உயர்ந்தது; அதாவது, 37·3 சதவீதம் உயர்ந்தது. வங்காளத்தில் 1943-ல் 31·4 சதவீதமாயிருந்த கடன்பட்ட குடும்பங்கள் 1946-ல் 60 சதவீதமாயின. குடும்பம் ஒன்றுக்குக் கடன் ரூ. 87·6-லிருந்து ரூ. 158·0 ஆக உயர்ந்தது'.........' விவசாயக் கடன் சங்கங்கள், நிலஅடமான பாங்குகள் ஆகியவற்றின் கடன் கொடுக்கல் வாங்கல் நிலை.........பிரிவினைக்கு முன் இருந்ததைவிட 21 சதவீதம் புதிய கடன்கள் அதிகரித்தன', திருமலை, 'இந்தியாவில் யுத்தப் பிற்கால விவசாயப் பிரச்சினைகளும் கொள்கைகளும்', 1954. பக்கம் 186.

[2] அறிக்கை 1945, பக்கம் 299-300.

போக்குடையதாக இருக்கிறது. 1945 முதல், 'புதிய கடன்களும் பாக்கிகளும் அதிக வேகமாக உயர்ந்து வருகின்றன' என்று கிராம பாங்குத் தொழில் விசாரணைக் குழுவும் கூறுகிறது.[1]

டாக்டர் G. D. அகர்வால், உத்தரப் பிரதேசத்தில் 14 கிராமங்களிலுள்ள 1,088 குடும்பங்களின் விவசாயக் கடனைப்பற்றி விசாரித்து, 1939 உடன் ஒப்பிடும்போது, 1949-ல் கடன்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் மொத்தக் கடனும் குறைந்திருக்கின்றன என்றும், எல்லா வகையான நிலக்கிழார்களுக்கும் சராசரிக் கடன் ஒவ்வொரு குடும்பத்திலும் அதிகரித்திருக்கிறதென்றும் கூறுகிறார்.[2] பம்பாய் இராச்சியத்தில் கர்நாடகம், தங்காணம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட விசாரணைகளினால், அப் பகுதிகளில் சிறிய நிலச்சுவான்தார்களின் கடன் உண்மையில் அதிகரித்திருக்கிறது என்று தெரிகிறது. முதன்மையான நில அடமான பாங்குகள் கொடுத்த நீண்டகாலக் கடன்கள், 1938—39-ல் ரூ. 59·44 இலட்சமாயிருந்தது, 1942—43-ல் ரூ. 24·81 இலட்சமாகக் குறைந்து, மறுபடியும் 1948—49-ல் ரூ. 75·87 இலட்சமாக உயர்ந்தன. 1942—43-ல் திரும்பச் செலுத்தப்பட்ட தொகைகள் ரூ. 37·98 இலட்சமாக உச்ச நிலையையடைந்து, 1948-49-ல் ரூ. 29·80 இலட்சமாகக் குறைந்து விட்டன.[3]

1951-52-ல் கிராமக் கடனைப்பற்றி ஒரு விரிவான விசாரணையை ஓர் அனைத்திந்தியக் கிராமக்கடன் ஆராய்ச்சிக்குழு நடத்தியது.[4] கடந்த விரிவான விசாரணையின்போது வெவ்வேறு மாகாண பாங்கு விசாரணைக் குழுக்கள் மேற்கொண்ட முறைகள் ஒரே மாதிரியாக இல்லாததனால், அம்முடிவுகள் இந்த ஆராய்ச்சியினால் கிடைத்த விவரங்களோடு ஒரே மாதிரி ஒப்பிட்டுப்பார்க்க முடியாதவையாய் இருந்தன. இந்த ஆராய்ச்சியின் அறிக்கை, ஒரு குடும்பத்திற்குள்ள கடன் அளவை ஒப்பிட்டுக்காட்டும் அட்டவணையைத் (பக்கம் 392) தருகிறது :[5]

[1] அறிக்கை, பக்கம் 36.

[2] 'விவசாயக் கடன் புனரமைப்பு', 1952, பக்கம் 89.

[3] D. K. ரங்நேகர் எழுதிய மேற்கூறிய நூல், பக்கம் 75.

[4] திரு. A. D. கோர்வாலா (தலைவர்), பேராசிரியர் D. R. காட்கில், திரு. B. வெங்கடப்பையா, டாக்டர் N. S. R. சாஸ்திரி (செயலாளர்) ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை ஏப்ரல் 1951-ல், நாடு முழுவதிலும் கிராமப் பகுதிகளில் கடன் நிலைமைபற்றி ஆராயத் திட்டமிடவும், அமைப்பு வேலைகள் செய்யவும், மேற்பார்வை செய்யவும் ரிசர்வ்பாங்கு ஒரு வழிகாட்டும் குழுவை நியமித்தது. நாடு முழுவதிலும், பொறுக்கி எடுக்கப்பட்ட 75 மாவட்டங்களில் 600 கிராமங்களில், 1,30,000 குடும்பங்கள் விசாரிக்கப்பட்டன.

[5] அட்டவணை 5, அறிக்கை, தொகுதி I-, பகுதி I மேலே கூறியதில் பக்கம் 180.

கிராமக் கடன் ஆராய்ச்சியாலும், அதற்கு முந்திய விசாரணைகளாலும் வெளியான கடன் அளவும் அது பாதிக்கும் அளவும்

(தொகை ரூபாயில்)

ஒரு குடும்பத்திற்குள்ள கடன்

இராச்சியம்	முந்திய விசாரணை	கிராமக் கடன் விசாரணை	கடன்பட்ட குடும்பம் ஒன்றுக்குக் கடனில் சதவீத உயர்வு அல்லது தாழ்வு	கடன்பட்ட குடும்பங்களில் சதவீத உயர்வு அல்லது தாழ்வு விகிதாசாரம்
அஸ்ஸாம் :				
மாகாண பாங்கு விசாரணைக் குழு ...	205	219	+27	−16
பீகார் : ,, ...	282	291	−6	+10
பம்பாய் : ,, ...	324	345	—	—
சென்னை :				
1. ,, ...	194	483	—	—
2. திரு. சத்தியநாதன் (1935) ...	194	483	—	—
3. டாக்டர் நாயுடு (1939) ...	319	483	+9	+39
4. டாக்டர் நாயுடு (1945) ...	255	483	+62	+15
மத்தியப் பிரதேசம் :				
மா. பா. வி. குழு ...	227	226	−9	+9
ஒரிசா : ...	73	90	+52	—20
பஞ்சாப் : ...	468	417	—	—
உத்தரப் பிரதேசம் : ...	162	316	+51	+28
மேற்கு வங்காளம் :				
1. மா.பா.வி. குழு ...	168	164	—	—
2. கிராமக்கடன் விசாரணை (1946 முதல் கட்டம்) ...	64	127	+81	+10
3. ,, (1947 இரண்டாம் கட்டம்)	41	127	+76	+77

இராச்சியம்	முந்திய விசாரணை	கிராமக் கடன் விசாரணை	கடன்பட்ட குடும்பம் ஒன்றுக்குக் கடனில் சதவீத உயர்வு அல்லது தாழ்வு	கடன்பட்ட குடும்பங்களில் சதவீத உயர்வு அல்லது தாழ்வு வீதாசாரம்
திருவாங்கூர்-கொச்சி :				
மா. பா. வி. குழு ...	479	303	—42	+9
ஹைதராபாத் :				
1. S. M. பரூச்சா (1937) ...	188	282	+9	+38
2. K. ஐயங்கார் (1949-50) ..	151	213	—	—
மைசூர் :				
1. பொருளாதார ஆராய்ச்சி (1941) ...	144	391	+93	+41
2. கடன் சுமைபற்றி மறு ஆராய்ச்சி (1945) ...	185	391	+38	+52

இடைக்கால நடுவில் இராச்சியங்களின் அமைப்பில் உண்டான மாறுதல்கள், மேற்கூறிய அட்டவணையில் ஆராயப் புகுந்த தலா குடும்பக்கடனை ஒப்பிட முடியாமல் செய்துவிட்டன. எனினும், இவ்விவரங்கள் சில விரிவான, ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய முடிவுகளை அளித்துள்ளன. 'கடந்த இருபது ஆண்டுகளாக மாறுமல் இருக்கும் கடன்போக்குகள் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படுகின்றன.' இந்த ஆண்டுகளில் வங்காளம், அஸ்ஸாம், ஒரிசா ஆகிய மூன்று கிழக்கு இராச்சியங்கள், குடும்பம் ஒன்றுக்கு மிகக் குறைவான கடன்சுமையைப் பெற்றுள்ளன. ஆனல், பஞ்சாபும் பம்பாயும் அதிகக் கடன் உள்ள இராச்சியங்களாகவே இருக்கின்றன. மாகாண பாங்கு விசாரணைக் குழுக்களின் விவரங்களோடு (Data) ஒப்பிடும்போது, இராச்சியங்களின் வரிசையில் இந்த ஆராய்ச்சி இரண்டு முக்கியமான மாறுதல்களைக் காட்டுகின்றது. மாகாண பாங்கு விசாரணைக் குழு கொடுத்துள்ள விவரங்களின்படி இராச்சியங்களைத் தலா குடும்பக் கடன்படி இறங்கு வரிசையில் அமைத்திருந்த அமைப்பில் நடுவில் இருந்த சென்னை இராச்சியம், இராச்சியங்களின் வரிசையில் முதல் இடத்தை நோக்கி மேலே சென்றுவிட்டது. மற்ற இராச்சியங்களைவிடச் சென்னையில் கடன் உயர்வு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. உத்தரப் பிரதேசத்திலும்,

தெளிவாக அதிகக் கடன் ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் படி, ‘1929-30-ல் மாகாண பாங்கு விசாரணைக் குழு விசாரித்தபோது இருந்ததைவிட, 1951-52-ல் கிராமக்கடன் ஆராய்ச்சி நடந்தபோது கடன்சுமை மிகக்குறைவாக இருந்தது.’

பம்பாய், சென்னை, மைசூர் ஆகிய மூன்றிடங்களில் யுத்தத்தினால் விவசாயக்கடன் எப்படிப் பாதிக்கப்பட்டதென்று மதிப்பிடுவதற்குச் செய்த ஆராய்ச்சியால், யுத்தத்தின்போது உண்டான விலை உயர்வினால் பெரிய விவசாயிகள் நன்மையடைந்தார்கள் என்று தெரிகிறது. ஆனால், மைசூரில் சிறிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தெரிகிறது. எனினும், சிறிய விவசாயிகளுக்குக்கூடக் கடனின் பணச்சுமை அதிகமாக உயரவில்லை என்றும், பணத்தின் மதிப்புக் குறைந்துவிட்டதால் பழைய கடனின் உண்மையான சுமை குறைந்தது என்றும் தெளிவாகத் தெரிகிறது.[1] எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த விவசாயிகளுக்கு, யுத்தகாலத்தில் கடன் கணக்குகள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தன. ஆனால், இவை மந்த நிலைக் காலத்திலும், அதை அடுத்து யுத்தம் தோன்றும்வரை சில ஆண்டுகளும் அசையாத சுமையாக இருந்தன.

யுத்தத்தை அடுத்த காலத்தில் கடன்சுமை அதிகரிக்கும் போக்குக் காணப்பட்டது. பிறகு இதைப்போலவே, இதன் போக்கு மேல் நோக்கிச் சென்றது. ஆனால், இந்த ஆராய்ச்சியால் வெளிப்பட்ட அளவுக்கு, யுத்தப் பிற்கால விசாரணைகள் எதிலும் அவ்வளவு அதிகக் கடன் இருந்ததாகத் தெரியவில்லை.

யுத்தப் பிற்காலத்தில் கடன்சுமையின் போக்கைத் தெரிந்து கொள்வதற்குத் தக்க விவரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், ‘யுத்த காலத்தின் பிற்பகுதியில் சுமார் 1943-44 க்குப் பிறகும், 1946-47 வரையிலும் விலைகளுக்கேற்றவாறு செலவுகளும் அதிகரித்துவந்தன. பிறகு மேலும் விரைவாக, எல்லோருக்கும் கடன் குறையாமலும், சிலருக்கு ஒருகால் கடன் அதிகரித்தும் நிலைமை நிலைபேறடைந்தது.’ கட்டுப்பாடு நீக்கத்திற்குப் பிறகு, திடீரென்று விலைகள் உயர்ந்ததால் விவசாயிகளின் நிதிநிலைமை விருத்தியடைவதற்கு இடம் உண்டாயிற்று. இதன் பிறகு 1950-51-ல் கொரியா யுத்தப் பொரு

[1] பணச்சுமைக்கும், உண்மையான சுமைக்கும் கூறப்படும் வித்தியாசம் கொள்கையளவில் திருப்தியளிக்கக்கூடியதாயினும், நடைமுறையில் பயனுடையதாக இல்லை என்பதை நாம் குறிப்பிட விரும்புகிறோம். கடனாளியைப் பொறுத்த வரையில், உண்மையான சுமை குறைந்ததால், அவனுடைய நிலைமை மாறவில்லை; ஆனால், அது கடன் கொடுத்தவரை மிகுதியும் பாதிக்கும். தன்னிறைவுள்ள விவசாயத்தில் பணத்தின் மதிப்புக் குறைவது விவசாயிக்கு நன்மை தராது. எனினும், அவனுடைய உபரியைக் கடன் தீர்ப்பதற்காக விற்பதில் உள்ள நஷ்டம் மாறாமல் இருக்கிறது.

ளாதார வீக்கம் உண்டாகும் வரையில் சிறிது காலம் ஒருவாறு நிலை பேறு ஏற்பட்டது. ஆனால், 'பத்தாண்டுக் காலத்தில் இல்லாத அளவுக்கு, ஆராய்ச்சி நடந்த வருடத்தில் விவசாயப் பொருள்களின் விலை திடீரென்று கீழ்நோக்கிச் சென்றது. அன்றியும், அதற்கு முன்பு பல வருடங்களில் எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு, இதன் காரணமாகக் கடன்சுமை மேலும் அதிகரித்தது.'[1]

வெவ்வேறு இராச்சியங்களில் வெவ்வேறு விதமான நிலைமைகள் இருப்பதால், டாக்டர் நாயுடு சென்னையில் நடத்திய விசாரணையைக் கொண்டு இந்தியா முழுவதற்குமான மொத்தக் கடனை மதிப்பிடுவது கடினம். ஆனால், ஜனத்தொகைக்கேற்ப இந்தக் கடன் வீதாசாரத்தையே இந்தியா முழுவதற்கும் கொண்டால், 1945-ல் மொத்தக் கிராமக்கடன் ரூ. 1,300 கோடியாகும். பாகிஸ்தானுக்குச் சென்ற பகுதிகளையும், வெவ்வேறு இராச்சியங்களில் உள்ள நிலைமைகளையும் விட்டுவிட்டால், இந்தியா முழுவதற்கும் இந்த மதிப்பீடு ரூ. 1,100 கோடியாகும்.[2] தேசீய வருமானக் குழுவின் முதல் அறிக்கை கிராமக் கடனை ரூ. 913 கோடி என்று மதிப்பிடுகிறது. இதில் 83 சதவீதம் உற்பத்திக்கு உதவாதது; 5 சதவீதம்தான் கூட்டுறவுச் சங்கங்களால் கொடுக்கப்பட்டது. இந்தக் கடனுக்கு வட்டி ரூ. 86·5 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.[3] கடன்நிலை 1937-ல் இருந்த அளவே இருந்தது. அதாவது சுமார் ரூ. 1,800 கோடி என்று கொள்வது பொருந்தும் என்று S. திருமலை கருதுகிறார்.[4]

விவசாயப் பண்டங்களின் விலைகள் உயர்ந்ததற்கு ஏற்றபடி யன்றி, விவசாயச் செலவும் வாழ்க்கைச் செலவும் அதிக வீதாசாரத்தில் உயர்ந்திருக்கின்றன என்பதையும், பல பயிர்கள் விளையும் நிலம் மிகக் குறைவு என்பதையும், உணவிலும் விவசாய உற்பத்திப் பொருள்களிலும் விவசாயி தன்னிறைவுள்ளவன் அல்ல என்பதையும், இதனால், யுத்தகாலப் பொருளாதார வீக்கம் செழிப்புக் காரணமாக இருப்பதற்குப் பதில், சாதாரண விவசாயிக்கு அதிக துன்பங்களைத் தந்தது என்பதையும், மேலும் விவசாய உழைப்பாளிக்குக் கூலியைப் பண்டமாகக் கொடுத்தாலன்றிக் கூலி உயர்வினால்

[1] விரிவான விளக்கத்திற்கு, அறிக்கை தொகுதி I, பகுதி I, மேற்கூறியதில் அத்தியாயம் 5, '1929—30 முதல் கடன்சுமையின் போக்கு' பக்கம் 178—277.

[2] ரங்நேகர், மேற்கூறியது, பக்கம் 74.

[3] அறிக்கை, 1951.

[4] மேற்கூறியதில் பக்கம் 186.

பயனில்லை என்பதையும் கவனிக்கும்போது, கடன் குறையவில்லை என்றுதான் நாம் முடிவு கட்டவேண்டியிருக்கிறது.[1] இறுதியாக, விவசாய வருமானம் சிலர் கையில் குவிந்திருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும் 'கிராம பாங்குத்தொழில் விசாரணைக் குழு கூறுவதாவது: இந்தச் சிறுபான்மையோரிடம் (விவசாயிகளில் 20 சதவீதத்திற்கும் குறைவான) மொத்த விவசாய வருமானத்தில் பெரும் பகுதி சென்றுவிட்டது. இவர்களுக்குத்தான் கடன்சுமைக் குறைப்பு நன்மையளித்திருக்கிறது.'[2] தேசீய வருமானக் குழு கொடுத்துள்ள மிகக் குறைந்த எண்ணிக்கையை எடுத்துக்கொண்டாலும், 1930-ல் மத்திய பாங்குத் தொழில் விசாரணைக் குழு அளித்துள்ள மதிப்பீட்டிற்குப் பிறகு, கடந்த சில ஆண்டுகளில் மாறுதல்கள் உண்டாயிருப்பினும், கிராமக்கடன் நிலை 25 வருடங்களுக்கு முன்பு இருந்தது போலவே உள்ளது.

கடன்சுமைக்குக் காரணங்கள்

இந்தக் கடன் சுமையின் ஒரு தனி அமிசம் யாதெனில், இது பரம்பரையாக வருவது. தலைமுறை தலைமுறையாகக் கடன் கைமாறி வந்துகொண்டிருக்கிறது. தகப்பனுர் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்துவதற்காக மகன் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. கூட்டுக் குடும்ப அமைப்பில், குடும்பத் தலைவர் செய்த கடன் அவருடைய சொந்தக் கடன் அன்று. அவர் இறந்தவுடன் அந்தக் கடன் இல்லாமலும் போய்விடுவதில்லை; ஆனுல், சொத்துடன் சேர்ந்து, தந்தையிடமிருந்து மகனுக்குச் செல்கிறது.

இரண்டாவதாகக் கடன் வாங்கியவர் கட்டவேண்டிய வட்டித் தொகை மிக அதிகமாக இருக்கிறது. வறுமையில் ஆழ்ந்திருக்கும் விவசாயிக்குக் கடன் கிடைக்கக்கூடிய ஒரே வழி, கிராம மார்வாரி அல்லது சவுக்கார்தான். மார்வாரிக்குக் கடன் வாங்குபவருடைய கஷ்டங்கள் தெரியும். அதை அவர் திருப்பித்தரக்கூடிய வாய்ப்பு

[1] 'காங்கிரஸின் விவசாயச் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 91—92. பேராசிரியர் வக்கீல் கூறுவதாவது: 'சிறிய சிக்கனமற்ற நிலங்களில் பயிர் செய்துகொண்டு, பருவமழையின் நிச்சயமற்ற நிலையை நம்பிச் செய்யப்படும் விவசாயம் நம் நாட்டில் பிழைப்புக்குப் போதுமா, போதாதா என்ற நிலையில் இருக்கும்போது, உணவுநிலை ஏறியுள்ள பொருளாதார வீக்க நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அதிக இலாபம் பெறக்கூடிய அளவுக்குச் சாதாரண விவசாயியிடம் விற்கக்கூடிய உபரி அதிகம் இல்லை' (மேலே கூறிய, 'விவசாயச் செழிப்பின் மாயம்' என்பதற்கு முகவுரை). கிராமக் கடனையும், இப்போதுள்ள நிலையையும் யுத்தம் எப்படிப் பாதித்திருக்கிறது என்பதுபற்றிக் கிராமக்கடன் ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கை நமக்கு நம்பத்தக்க விவரங்களைத் தரும் என்று நம்புகிறேம்.

[2] அறிக்கை, பக்கம் 40.

அதிகம் இல்லை என்பதும் தெரியும்; திரும்பக் கொடுக்கும்படி வற்புறுத்துவதில் உள்ள சங்கடங்களும் அவனுக்குத் தெரியும். கடந்த காலத்தில் கிராம லேவாதேவிக்காரன், கிராமத்தில் பொருளாதார வாழ்க்கையில் முக்கியமான வேலையைச் செய்துவந்தாலுங்கூட, இப்போது அவனுடைய நடவடிக்கைகள் சமூக விரோதமானவை. தான் கொடுத்த தொகையைவிட இரட்டிப்புக்கு மேல் திரும்ப வாங்கக்கூடாது என்ற பழைய கிராம வழக்கம் (Damdupat) தள்ளி வைக்கப்பட்டுவிட்டதால், அவன் அமித வட்டி வீதத்தை விதித்து, தப்புக் கணக்குகளை எழுதி, இறுதியாக விவசாயியின் நிலத்தைப் பறித்துக்கொள்கிறான்.

மூன்றாவதாக, விவசாயம் மழையை நம்பியிருக்கும் சூதாட்டமாக இருக்கும் நாட்டில், பஞ்சம் இல்லாவிட்டாலும் நான்கைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பற்றாக்குறை வருடம் உள்ள் நாட்டில், அதிகம் விளையும்போது தன் பிழைப்புக்கே போதாது என்ற நிலையில் உள்ள விவசாயி, பற்றாக்குறை வருடத்தின் தன் உபயோகத்திற்காகக் கட்டாயம் கடன் வாங்கவேண்டியவனாய் இருக்கின்றான். அடிக்கடி அவனுடைய விதைகள் அழுகிப் போகக்கூடும். மாடுகள் இறந்துவிடக்கூடும் ; விவசாயக் கருவிகள் அவனுக்குத் தேவையாய் இருக்கலாம்; அல்லது அவனுடைய குடிசையைப் பழுதுபார்க்க வேண்டியிருக்கலாம் ; இவற்றிற்கெல்லாம் அவன், தனக்குச் சமயத்தில் உதவக்கூடிய ஒரே ஒரு மனிதனாகிய கிராமலேவாதேவிக்காரனிடம் செல்லவேண்டியிருக்கிறது.[1] திருமணம், சாவு, குழந்தை பிறத்தல் முதலிய மற்றச் சமயங்களிலும் விவசாயி அடிக்கடி கடன் வாங்கவேண்டியிருக்கிறது. கிராமத்திலுள்ள மற்றவர்கள் தன்னைப் பெருமையாக எண்ணிக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் சந்தர்ப்பங்களில் அவன் முன்யோசனையின்றித் தாராளமாகவும் கண்மூடித்தனமாகவும் செலவு செய்வான். பணச் செலவைக் கருதாமல், கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கும் மனித இதயத்தை, இந்த உலகப்பற்று மிகுந்த காலத்தில் யார் புரிந்துகொள்ள முடியும் ?

நான்காவதாகக் கடனுக்குக் காரணங்களை ஆராயும்போது, நிலத்தின்மீதும், பயிரின்மீதும் முதல் சுமையாக உள்ள நிலவரியைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கடன் வாங்கித்தான் நிலவரியைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. மழை பருவத்தில்

[1] கடன் கொடுக்கும் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் எல்லாம் சேர்ந்து, விவசாயிகள் வாங்கும் கடனில் 93 சதவீதத்தை அளிக்கின்றன. இவர்களுள் லேவாதேவிக்காரன் முக்கியமானவன். லேவாதேவியைத் தொழிலாகக் கொண்டவன் மொத்தத்தில் 45 சதவீதமும், விவசாய லேவாதேவிக்காரன் 25 சதவீதமும் கொடுக்கிறார்கள் (அறிக்கை, தொகுதி II, 1954, பக்கம் 167).

பெய்து பயிர்கள் நிறைய விளையும்போதும், பயிர்கள் விளையாமல் போனாலும் (இது சில வருடங்களுக்கு ஒருமுறை ஒழுங்காக நிகழக் கூடியதே), வரியைச் செலுத்தியாக வேண்டும். விவசாயத் தீர்வை சாதாரணமாக, மகசூல் அறுவடையாகி விற்கப்படுவதற்கு முன்பே வசூலிக்கப்பட்டுவிடுவதால், அந்தச் சமயத்தில் முதல் தவணையைக் கட்டுவதற்கு, பிழைப்புக்கே திண்டாடும் விவசாய மக்கள் ஆண்டு தோறும் ஒழுங்காகக் கடன் வாங்காமல் இருக்க முடியாது. உண்மையில், மகசூலே விற்பதற்கு முன்பே, அது லேவாதேவிக் காரனுக்கு அடமானம் வைக்கப்படுகிறது. ஆகவே, அவன் விவசாயிக்கு மேலும் சாதகமான நிலையில் விற்றுப் பயனடையக் கூடிய வாய்ப்பு இல்லாமல் செய்துவிடுகிருன்.

ஐந்தாவதாக, ஜமீந்தாரிப் பகுதிகளிலாயினும் சரி, ரயத்துவாரிப் பகுதிகளிலாயினும் சரி, குத்தகைக்காரன் மறுபடி வேருெருவனுக்குக் குத்தகைக்கு விடும் வழக்கம் உள்ள இடங்களில் எல்லாம் நிலத்தின் மீது ஒரு கண் உள்ள பெருவாரியான தரகர்கள், சிறிய விவசாயியின் கடன்சுமை அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கிருர்கள். இந்தக் காரணங்களுடன் வேருென்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அது யாதெனின், நிலமில்லாமல் இருக்கும் பெருவாரியான மக்கள், நிலப்பசியுடையவர்களால் சிக்கனமில்லாத நிலங்களே வாங்கு வதற்குக் கடன் வாங்குவதுதான். அவர்கள் பட்டினி கிடக்காமல் இருப்பதற்கு இது ஒன்றுதான் மாற்று வழி.

பாங்கு விசாரணைக் குழு, நிலத்தை விருத்தி செய்வதற்காக விவசாயி கிராம லேவாதேவிக்காரரிடம் கடன் வாங்குவது அரிது என்று கூறியது. விவசாயிகளின் இந்தக் கடன்சுமை, லேவாதேவிக் காரர்களுக்கு நிலத்தை மாற்றும்படியாகச் செய்கிறது என்றும், நிலமில்லாத உழைப்பாளிகளின் தொகையைப் பெருக்கிக் கொண்டே இருக்கும்படி செய்கிறது என்றும் அது குறிப்பிட்டது.

விவசாயக் கடனைப்பற்றி அப்படியே பார்க்கும்போது, இக் கடனின் அளவு நம் கருத்தைக் கவரவில்லை; எந்தச் சூழ்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக இது அதிகரித்திருக்கிறது என்பதுதான் நம் கருத்தைக் கவர்கிறது. கிராம மார்வாரியும் மஹாஜனும் பல நூற்ருண்டுகளாக உள்ளவர்கள். இப்போதுள்ள பெரிய பிரச்சினையை

உண்டாக்காமல், அவர்கள் கடந்த நீண்டகாலமாக விவசாயிகளின் பொருளாதார வாழ்க்கைக்கு உதவினர்.[1] முன்யோசனையில்லாமலும், வழக்குத் தொடரவேண்டுமென்ற விருப்பத்தோடும் கிராமக்கடன் உண்டாகிறதென்று கூறுவதும், விவசாயி சிக்கனம் தெரியாதவன் என்று அவனை இகழ்வதும், கடன்சுமைப் பிரச்சினையைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளாத நிலையையே காட்டுகிறது. இன்று விவசாயக் கடன் பெரிய பொருளாதாரத் தீமையின் அறிகுறியாக இருக்கிறது எனின், அதற்குக் காரணம், முதலாவதாக, விவசாயிகள் துண்டுபட்ட நிலங்கள்மீது கடன்சுமையை ஏற்றிக்கொள்கிறார்கள். அந்நிலங்களை நிபுணர்கள்கூட இலாபகரமாக நடத்த முடியாது; அவை பிழைப்புக்கு வேண்டிய அளவுகூடப் பலன் தரமாட்டா. இரண்டாவதாகக் கடன் வளர்ந்துகொண்டுவரும் வேகத்திற்குக் காரணம், விவசாயப் பொருளாதாரம் முழுவதுமேயாகும். இது பிழைப்புக்குப் போதுமோ போதாதோ என்ற அளவுள்ளதாயிருப்பதோடு, உலகச் சந்தை, உலக விலைகள் ஆகியவற்றோடு இணைக்கப்பட்டிருக்கிறது. விவசாயி இவ்வாறு உலக விலைகளின் சுழற்சியில் இழுக்கப்பட்டுக் கிடக்கும்போது, அமெரிக்கா, கனடா, டென்மார்க்கு, ஜெர்மனி போன்ற நாடுகளில் விவசாயிகளுக்குக் கிடைப்பது போன்ற நிருவாக அமைப்போ, கடன் வசதிகளோ அளிக்கப்படுவதில்லை. விவசாயி பிழைப்புக்கு வேண்டிய அளவு இருந்தால் போதும் என்ற பொருளாதார நிலைக்குப் பல நூற்றாண்டுகளாகப் பழங்கப்பட்டிருக்கையில், வாங்குபவர்களுடைய ஆற்றல் மிக்க சங்கங்களால் சூழப்பட்டிருக்கிறான். அவர்கள் அவனுக்கு நியாயமான விலை கிடைக்க முடியாதபடி செய்துவிடுகிறார்கள். சரியான கடன் வசதிகள் இல்லாத முக்கியமான காரணத்தினால், அதிகமாக விளையும் காலத்தில்கூட அவன் தன் விளைச்சலை விற்காமல் வைத்துக்கொள்ள முடிவதில்லை.

கடன் செலவு செய்யப்படும் நோக்கங்களை ஆராய்தல்

விவசாயக் கடன் விரைவாக அதிகரித்ததற்குச் சென்னையைத் தகுந்த மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம் 1895-ல் நிக்கல்சன் இம் மாகாணத்தின் மொத்தக் கடனை ரூ. 45 கோடி என்று மதிப்பிட்டார்.

[1] ஒப்பிடுக: 'இத் தேவைகளை லேவாதேவிக்காரன் பயன்படுத்திக்கொண்டு சுரண்டுகின்றான் என்று நினைப்பது முற்றிலும் தவறு; அவன் இவைகளுக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்கிறான்.' கடனாளியைப்பற்றி அவன் நன்கு அறிந்திருப்பதால், அவனுடைய நிலத்தை அவன் ஈடாகக் கேட்பதில்லை; அவன் தள்ளிப்போட முடியாத செலவுக்காகக் கடன் கொடுக்கிறான். அவனை எளிதில் அணுக முடியும். அவனிடமிருந்து கடன் வாங்குவதற்கு விவசாயி ஒன்றும் செலவு செய்யவேண்டியதில்லை (மேலே கூறிய நூல் பக்கம் 171 முதல்).

1930-ல் பாங்கு விசாரணைக் குழு, மொத்தம் பாக்கி நிற்கும் கடன் ரூ. 150 கோடி என்று மதிப்பிட்டது. வருடம்தோறும் உண்டாகும் கடனை ரூ. 70 கோடி என்று மதிப்பிட்டது. 1934-ல் கிராமக் கடன் பற்றித் திரு. சத்தியநாதன், I. C. S. அளித்த அறிக்கையில், மொத்தக் கடனை ரூ. 200 கோடி என்று மதிப்பிட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட 140 கிராமங்களில் விரிவாக விசாரணை செய்து, கடன் உண்டாவதற்குக் காரணங்கள் கீழ்வருமாறு என்பதை வெளியிட்டார்:[1]

காரணம்		சதவீதம்
முந்திய கடனைத் திருப்பித் தருவதற்காக	...	25·1
நிலம் வாங்குவதற்காக	...	13·8
வியாபாரம்	...	12·9
திருமணம் முதலிய சடங்குகள்	...	10·5
விவசாயச் செலவுகள்	...	10·0
வீடு கட்டுதல்	...	5·6
கஷ்டத்தைப் போக்குதல்	...	6·1
நிலத்தை அபிவிருத்தி செய்தல்	...	4·4
நிலவரி செலுத்துதல்	...	3·3
குழந்தைகளின் கல்வி	...	1·4
மற்றக் காரணங்கள்	...	6·9
மொத்தம்	...	100·0

இது போலவே 1928—29-க்கு போக்ரா மாவட்டத்தில் கரிம்பூர் கிராமத்தில் 52 குடும்பங்களின் கடன்களுக்குக் கீழ்க்கண்ட காரணங்கள் காட்டப்பட்டன:[2]

காரணம்		சதவீதம்
பழைய கடனைத் திருப்பித் தருவதற்காக	...	14·3
மாடுகள் வாங்கவும், மூலதன அபிவிருத்திக்கும் நிலையான அபிவிருத்திக்கும்	...	40·0
நிலவரிக்காகவும் நிலத்திற்காகவும்	...	21·1
விவசாயத்திற்காக	...	16.1
சமூக, சமயக் காரணங்களுக்காக	...	5·5
வழக்காடுவதற்காக	...	0.6
மற்றக் காரணங்களுக்காக	...	2·4
மொத்தம்	...	100·0

[1] கூட்டுறவுபற்றிய குழுவின் அறிக்கையில் மேற்கோளாகக் காட்டப்பட்டது, சென்னை, பக்கம் 73.

[2] வங்காள மாகாணக் குழுவின் அறிக்கையில் உள்ள எண்களிலிருந்து சதவீதங்கள் கணிக்கப்பட்டுள்ளன, பக்கம் 72.

கடலூர் தாலுக்காவில் டாக்டர் நாராயணசுவாமி நாயுடும், திரு. P. வைத்தியநாதனும் (50 குடும்பங்களில்) நடத்திய ஆராய்ச்சியிலிருந்து எக்காரணங்களுக்காகக் கடன் வாங்கப்பட்டது என்பதைக் கீழ்க்கண்டவாறு காணலாம் :

கடன் வாங்கிய காரணம்		சதவீதம்
மூதாதையர் கடன்கள்	...	53·0
விவசாயச் செலவுகள்	...	13·7
வியாபாரம்	...	5·2
வீட்டுச் செலவுகள்	...	5·3
திருமணமும் சமூகச் சடங்குகளும்	...	7·9
நிலம் வாங்குவதற்கு	...	1·6
மற்றக் காரணங்கள் (பெருந்தொகையாகிய நிலவரி உட்பட)	...	13·3
மொத்தம்	...	100·0

மேலே நாம் காட்டிய அட்டவணைகளிலிருந்து, வழக்காடுவதற்கும், சமூக, சமயச் செலவுகளுக்கும் கிராமங்களில் முக்கியமாகக் கடன் வாங்கப்படவில்லை என்று தெரியும். இந்த விசாரணைகளிலிருந்து, இந்திய விவசாயிகள் முன்யோசனையற்றவர்கள். அளவுக்கு மீறிச் செலவு செய்பவர்கள் என்ற குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியவில்லை. இந்த அட்டவணைகளில் முதல் அட்டவணை, திருமணத்திற்காகவும் மற்றச் சடங்குகளுக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை 11 சதவீதம் என்றும், கடைசி அட்டவணை 8 சதவீதம் என்றும் காட்டுகின்றன. இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டபடி, வழக்காடு செலவு 0·6 சதவீதம்தான். 1875-ல் தக்காண ரயத்துகள் குழு கூறியவற்றை இந்த எண்கள் நிரூபிக்கின்றன. 'திருமணம், பண்டிகைகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவுபற்றி அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரயத்துகளின் கடன் கணக்கில் இந்தச் செலவு ஓரளவு முக்கியமானதுதான் ; ஆனால், அது அவர்களுடைய கடன்சுமைக்கு நடுநாயகமாக இல்லை.'[1]

1945-ல் வீர்பகதூர் சிங்கினல் உத்தரப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து, 2·5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் உணவுக்காகமட்டும் 65 முதல் 100 சதவீதமும், 5 முதல் 7 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 75 முதல் 95 சத

[1] கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கையும் இதற்குச் சான்றாக இருக்கிறது. இது மொத்தக் குடும்பச் செலவாகிய 50·2 சதவீதத்தில் (பக்கம் 402-ல் உள்ள அட்டவணையைக் காண்க), மரணச் செலவுகளும் திருமணச் செலவுகளும் 37·3 சதவீதம் என்று கூறுகிறது.

வீதமும் கடன் வாங்குகிறார்கள் என்று தெரிகிறது.[1] ஆசிய நாடுகளில் சமூகக் கொள்கையின் பொருளாதார அடிப்படைபற்றிப் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் அறிக்கை (I. L. O. Report), கிராம மக்களின் மீதுள்ள பெரிய கடன்சுமையைக் குறிப்பிட்டுக் கூறுவதாவது: 'விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகமட்டும் கிராம மக்களின் கடன் முக்கியமாக ஏற்படுமாயின் அக்கடன் பெருகுவதும் பரவியிருப்பதும் நமக்குக் கவலையளிக்க வேண்டியதில்லை. பல ஆசிய நாடுகளில் முக்கியமாகத் தம் உபயோகத்திற்குப் பொருள்களை வாங்குவதன் பொருட்டே கிராமங்களில் மிகுதியான கடன் சேர்ந்துவிட்டது.'[2]

75 மாவட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய விவரங்களையெல்லாம் கொண்டு. கிராமக்கடன் ஆராய்ச்சி அறிக்கை கீழ்க்கண்டவாறு கடன்படுவதன் முக்கியக் காரணங்களைத் தெரிவிக்கிறது.[3]

கடன் வாங்குவதன் காரணம்		மொத்தத்தில் சதவீதம்
பண்ணைகளில் மூலதனச் செலவு	...	27·8
பண்ணைகளில் நடப்புச் செலவு	...	9·3
பண்ணை அல்லாத வியாபாரச் செலவு	...	6·6
குடும்பச் செலவு	...	50·2
மற்றச் செலவுகள்	...	5·7
ஒரு காரணத்திற்கு மேற்பட்டவை	...	0·4
மொத்தம்	...	100·0

முதல் மூன்று காரணங்கள் உற்பத்திச் செலவைக் குறிக்கும். இவை மொத்தக் கடனில் 43·7 சதவீதம். மற்றவை உற்பத்தியல்லாத செலவுகளைக் குறிக்கும். இவை 56·3 சதவீதம். இவை மொத்தக் கடனில் பெரும் பகுதியாகும். இவற்றில் குடும்பச் செலவு 50·2 சதவீதமும் அடங்கும். குடும்பச் செலவு என்பது, பொருள்களை வாங்குவது, வைத்தியச் செலவு, கல்விச் செலவு, வீடு கட்டுதல், பழுது பார்த்தல் முதலியவையாகும். மற்றச் செலவுகள் என்பதில் வழக்காடுதலும், பழைய கடன்களைத் திருப்பிக் கொடுத்தலும் சேரும்.[4]

[1] காங்கிரஸின் விவசாயச் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 87.

[2] பக்கம் 36.

[3] மேலே கூறியதில், பக்கம் 274 இக்காரணங்கள் துணைக் காரணங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. காரணங்களின் விரிவான பிரிவுகளை அறிய, ஆராய்ச்சி அறிக்கை தொகுதி - I, பகுதி - 2, 1937. பக்கம் 5. காண்க.

[4] மேற்கூறியதில் பக்கம் 263-64.

கடனாளிகளுக்கு உதவும் வழிகள்

முதல் கடன் நிவாரண நடவடிக்கை, கடன் கொடுத்தவர்கள் தாமாக விரும்பிக் கடனைக் குறைத்துக்கொண்டதுதான். பல இராச்சியங்களில் சட்டம் இயற்றப்பட்டுச் சமரசக் குழுக்கள் நியமிக்கப் பட்டன. இவை, கடன் கொடுத்தவர்கள் தம் கடனைக் குறைத்துக் கொள்ளவும், பல தவணைகளில் சிறுசிறு தொகைகளாகத் திரும்பிப் பெறவும் சம்மதம் தெரிவிக்குமாறு செய்தன. இதற்குப் பிறகு கட்டாயமாகக் கடனைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி, உயர்ந்தபட்ச வட்டிவீதம் நிருணயிக்கப்பட்டு, கொடுக்க வேண்டிய மொத்த வட்டி அசலுக்கு மேல் இருக்கக்கூடாதென்றும், சில குறிப்பிட்ட சொத்துகளை ஜப்தி செய்யக்கூடாதென்றும் ஏற்பாடாயிற்று. இச்சட்டங்கள் ஒவ்வோர் இராச்சியத்திலும் ஒவ்வொரு விதமாக நிவாரணம் அளிக்கப்படவேண்டிய வகுப் பாரைக் குறிப்பிட்டன. கடனுக்கு விதிக்கவேண்டிய உயர்ந்தபட்ச வட்டியும் ஒவ்வொரு விதமாக இருந்தது. இந்த வட்டி அடமானக் கடன்கள்மீது $4\frac{1}{2}$ முதல் 7 சதவீதமும், அடமானமல்லாத கடன்கள் மீது 6 முதல் 10 சதவீதமும் இருந்தது.

1920-ஆம் ஆண்டின் இன்சால்வென்சி சட்டம், கடன் ரூ. 500-ம் அதற்கு மேலும் இருந்தால் கடனாளிகளைக் கைதுசெய்வதும் சிறை செய்வதும் கூடாதென்று தடுத்துப் பாதுகாப்பளித்தது. 1934 ஆம் ஆண்டின் பஞ்சாப் கடன் நிவாரணச் சட்டமும், 1935 ஆம் ஆண்டின் மத்திய மாகாண இன்சால்வென்சி திருத்தச் சட்டமும் இத் தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 250 ஆகக் குறைத்தன. 1938 ஆம் ஆண்டின் வங்காள விவசாயக் கடனாளிகளின் சட்டம், ஒரு சமரசக் குழுவை ஏற்படுத்திக் கடனாளி தன் கடனை 20 வருடங்களில் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அவனிடம் சொத்துகள் இல்லை யென்றால், அக்கடனாளியை இன்சால்வென்ட் என்று அறிவிக்க ஏற்பாடு செய்தது. அன்றியும், கொடுக்கப்படாமல் நின்றுவிட்ட தவணைப் பாக்கிகளைத் திரும்பப் பெறமுடியாவிட்டால், கடனாளியை இன்சால்வென்ட் என்று சான்று அளிக்கும் உத்தியோகஸ்தர் (Certifying Officer) அறிவிக்கலாம். கூட்டுறவுபற்றிய சென்னைக் குழு (1939-40) ஓர் எளிய கிராம இன்சால்வென்சி சட்டத்தை இயற்றுமாறு சிபாரிசு செய்தது.[1]

[1] ஒப்பிடுக: விவசாயக் குழு அறிக்கை: 'கடன் கொடுத்தவர்கள், கடனாளி களின் சொத்தையெல்லாம் தம் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குக் கேட்க உரிமை பெற்றிருப்பது போலவே. தம் சொத்தையெல்லாம் கொடுத்து விட்ட கடனாளி, மீண்டும் பிழைப்பு நடத்துவதற்கும், புதிதாக வாழ்க்கை தொடங்குவதற்கும் உரிமையுடையவராக இருக்கவேண்டும் என்பதில் ஐய மில்லை'. பக்கம் 441.

கடனாளியின் சொத்துக்கும் அவனுக்கும் பாதுகாப்பளிப்பதிலும் வித்தியாசம் இருந்தது. மேற்கு வங்காளத்தில் கடனாளி வசிக்கும் வீடுமட்டும் ஜப்தி செய்யப்படுவதினின்றும் விலக்கப்பட்டது. ஹைதராபாத்தில் அவனுக்குரிய எல்லா நிலங்களுக்கும் விலக்களிக்கப்பட்டது. மத்தியபிரதேசம், பயிர்களையும் மற்ற அழியக்கூடிய ஜங்கம சொத்துகளையும் விலக்கியது. நீதிமன்றங்களில் தீர்ப்புக்கூறப்பட்ட கடன் விவரங்களிலிருந்து, கடன்கள் திருவாங்கூரில் 19 சதவீதத்திலிருந்து, சௌராஷ்டிராவில் 76 சதவீதம்வரை குறைக்கப்பட்டன.[1]

லேவாதேவிச் சட்டம்

1931–39-ன் மந்த நிலைக்குப் பிறகு சில ஆண்டுகளில், கடன் கொடுப்பதுபற்றி இராச்சியங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்களின் முக்கிய ஏற்பாடுகளாவன :

(1) கடன் கொடுப்பவர்கள் அனுமதி பெறுதலும் பதிவு செய்து கொள்ளுதலும்; (2) குறிப்பிட்ட பாரங்கள் (Forms) கணக்குகளை வைத்துக் கொள்ளுதல்; (3) கடனாளிகளுக்கு ரசீதும் கணக்கு விவரமும் கொடுத்தல்; (4) அதிகபட்ச வட்டி நிர்ணயித்தல் (5) கடனாளியின் சொத்துக்களில் சிலவற்றை ஜப்திசெய்யாதிருக்குமாறு விலக்களித்தல்; (6) அடமானங்களை ஒழுங்குபடுத்துதல்; (7) சட்டத்தை மீறியவர்களுக்குத் தண்டனையும், சட்டத்தை நடத்தி வைக்க ஏற்பாடும்.

பம்பாய், ஹைதராபாத், மத்தியப்பிரதேசம், மத்திய பாரதம், மைசூர், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் அனுமதி பெறுமல் லேவாதேவி செய்வது குற்றமாகும். பீகார், ஒரிசா, பஞ்சாப் ஆகிய இடங்களில் அப்படிச் செய்வது சட்டப்படி குற்றமாகாது. ஆனல், அனுமதி பெற்ற லேவாதேவிகாரர்தாம், தம் கடனைத் திரும்பிப் பெற நீதிமன்றத்தை நாடமுடியும்.

வட்டிவீதத்தைப் பொறுத்தவரையில், அசாம், பீகார், ஹைதராபாத், குடகு ஆகிய இடங்களில் கூட்டு வட்டி தடைசெய்யப்பட்டுள்ளது. அடமானக் கடன்களுக்கு அதிகபட்ச சாதாரண வட்டி

[1] இங்குக் கூறப்பட்ட சட்டங்களாவன : 'சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்' (1938). 'மத்திய மாகாணம், பீரார் நிவாரணச் சட்டம்' (1939), 'ஐக்கிய மாகாணங்களின் கடன்பட்ட எஸ்டேட்டுகள் சட்டம்' (1934), 'திருவாங்கூர் கடன் நிவாரணச் சட்டம்' (1940), 'பஞ்சாப் கடன் நிவாரணச் சட்டம்' (1934), இதன் திருத்தம் (1940) மற்றும் சில.

சென்னையில் $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து, மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசங்களில் 12 சதவீதம்வரையில் இருக்கிறது. அடமானமில்லாத கடன்களுக்குச் சென்னையில் குறைந்தபட்ச வட்டி $5\frac{1}{2}$ சதவீதம் ; உத்தரப்பிரதேசத்தில் 24 சதவீதம்.

எனினும், லேவாதேவிக்காரர் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு பெரும்பாலும் மீறப்பட்டுள்ளது. மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களில் 50 சதவீதத்திற்கு மேலும் வட்டிக்குக் கடன் வாங்கப்படுவதாகத் தெரிகிறது. கடன் கொடுப்பவர் சட்டத்தை மீறும் வழிகளாவன : (1) உண்மையாகக் கொடுக்கப்பட்ட தொகையைவிட அதிகத் தொகைக்குப் புரோநோட்டு எழுதி வாங்கிக் கொள்வது ; (2) சட்ட விரோதமான வட்டிப்படி கணக்கிட்டு, அதை முதலிலேயே பிடித்துக்கொள்வது ; (3) லேவாதேவிக்காரனின் உறவினர் பெயரில், முதல் புரோநோட்டு தவிர வேறொன்றை எழுதி வாங்கிக்கொள்வது ; (4) கடனாளியின் விளைச்சலை முன் கூட்டியே விலைக்கு வாங்கிவிடுவது. கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை கூறுவதாவது : 'அனுமதி பெறுதல் கட்டாயமாக உள்ள இடங்களில்கூட், மிக அதிகமான லேவாதேவி அனுமதியில்லாமலேயே நடத்தப்பட்டு வருகிறது என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.'[1]

யூனியன் உணவு அமைச்சுத்துறையின் பொருளாதாரப் புள்ளியியல் பிரிவு அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இக் குறிப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. பீகாரில் 88 சதவீதத்திற்கு மேற்பட்ட கடன்கள் குறிப்பிட்ட வீதங்களுக்குமேல் இருந்தன. மத்தியப் பிரதேசத்தில் 67 சதவீதமும், சென்னையிலும் ஒரிசாவிலும் 86 சதவீதமும், மேற்கு வங்காளத்தில் 88 சதவீதமும் இவை இருந்தன.[2] ஆக, லேவாதேவிக்காரர்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் பெரும்பாலும் காகிதத்தில்தான் இருக்கிறது.

இவ்விஷயத்தில் எல்லா இராச்சியங்களுக்கும் ஒரேமாதிரி சட்டம் இருப்பது விரும்பத் தக்கது. பாங்குகளைப் போலவே

[1] தொகுதி-II, பக்கம் 126. கடைசி இரண்டு பிரிவுகள், அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆராய்ச்சி, அத்தியாயம், IX, தொகுதி II-லிருந்து கிடைத்தவை. இதற்கு எங்கள் நன்றி.

[2] ஒப்பிடுக : 'பல மாகாணங்களில் பெரிய நிலக்கிழார்கள், தக்க அடமானங்களின்மீது 9 முதல் 12 சதவீதம் வரை கடன் பெறலாம் ; ஆனால், பெரும் பகுதியாக உள்ள சிறிய விவசாயிகளுக்கு விதிக்கப்படும் வட்டி 300 சதவீதம் வரையில் இருக்கும். தானியங்களின்மீது வாங்கப்பட்ட கடனுக்குச் சாதாரணமாக வட்டி 50 சதவீதம். ஆனால், பல சமயங்களில் 100சதவீதம் வரையில் செல்கிறது' ('சமூகக் கொள்கையின் பொருளாதார அடிப்படை' I. L. O., 1947, பக்கம் 46).

பதிவுசெய்யப்பட்ட லேவாதேவிக்காரர்களையும் ரிசர்வ் பாங்கோடு இணைத்து அவர்களுக்கும் மறுகழிவு (rediscount) வசதிகள் தரலாம்.

கடன் சட்டம் நடத்தப்படும் முறைபற்றி ஆராய்ச்சி

கடன் சட்டத்தினால் உண்டான பலனைப்பற்றி ஆராய்ந்த டாக்டர் அகர்வால் கூறுவதாவது: 'கடனைக் கட்டாயமாக அதிகம் குறைக்க வேண்டுமென்று மிக அண்மையில் கடன் சட்டத்தில் செய்திருந்த ஏற்பாட்டினால், கடன் கொடுப்பவர்களுடைய தைரியம் மிகவும் குன்றிவிட்டது.'[1] கடன் சட்டத்தை ஆராய்ந்து விவசாயச் சீர்திருத்தக்குழு கூறியதாவது: 'லேவாதேவிக்காரனின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்றப்பட்ட சட்டங்கள் முற்றிலும் தோல்வியடைந்துவிட்டன.'[2] 1945-ன் பஞ்ச விசாரணைக் குழு, இச்சட்டங்களால் கடன் வசதி குறைந்துவிட்டதென்று கூறியது; இக்கருத்தை 1950 ஆம் ஆண்டின் கிராம பாங்குத்தொழில் விசாரணைக் குழு உறுதிப்படுத்தியது. கடனைச் சரிசெய்யவும், லேவாதேவியைக் கட்டுப்படுத்தவும் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மொத்தப் பலன் என்னவென்றால், 'சிறிய விவசாயிகளுக்குச் சாதாரணமாகக் கடன் கிடைக்கும் இடங்கள் இல்லாமல் போய் விட்டன. கடன் அளிப்பு குறைந்துவிட்டதால், விவசாயத்தின் தரம் குறைந்துவிட்டது என்று கூறப்படுகிறது.'[3] லேவாதேவிக்காரனுக்குச் சர்வாதீன நிலை இருக்கும்வரையில், கடன் கொடுப்பதைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதும், வட்டி வீதங்களை கட்டுப்படுத்துவதும் விவசாயிக்கு நன்மை தரமாட்டா. இதனால் கடன் வசதி கட்டாயம் குறைந்துவிடும்: அல்லது கடன் கொடுப்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே ஒப்பந்தத்தினால் சட்டம் மீறப்படும். அமெரிக்காவில்கூட 'இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சட்டத்தினால் கட்டுப்படுத்துவதுதான் வழி என்று கூறமுடியாது; பொருளாதாரப் போட்டி, நல்ல முறையில் இருந்தால். அதுவே மிக நல்ல தீர்வாகும். குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பவனுக்குப் போதிய வசதிகள்

[1]மேலே கூறியதில், பக்கம் 128.

[2]அறிக்கை, பக்கம் 96.

[3]மேற்கூறிய திருமலை எழுதிய நூல், பக்கம் 190, உத்தரப் பிரதேசத்தில், ஐந்து கிராமங்களில் விசாரித்ததில், 1936-ல் முறையே 172 ஆகவும், 183 ஆகவும் இருந்த விவசாய சம்பந்தமில்லாத லேவாதேவிக்காரர்களும் சராசரிக்கடன் வாங்குபவர்களும், 1949-ல் முறையே 38 ஆகவும், 59 ஆகவும் குறைந்துவிட்டனர். (அகர்வால், மேற்கூறிய நூலில் பக்கம் 128—29).

இருந்து அவனுடைய நிபந்தனையும் உதவக்கூடியனவாய் இருந்தால், அதிக வட்டி கொடுப்பவனை அவன் விரட்டிவிட முடியும்.'[1]

சமரசம் செய்யப்படவேண்டிய கடன்களின் உயர்ந்த எல்லைகள் (மத்திய மாகாண சட்டத்தின்படி ரூ. 50,000மும், பம்பாய் சட்டத்தின்படி ரூ. 15,000மும்) நிவாரணம் தேவையில்லாத ஒருவகைக் கடனாளிகளுக்கே நன்மைதருகின்றன என்றும் குறைகூறப்படுகிறது.

இரண்டாவதாக, நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட (decree) தொகையை ரொக்கமாகத் திருப்பிக்கொடுக்க வசதிகள் இன்மையால், கடன் சமரசக் குழுக்களின் வேலை தடைபடுகிறது. ஆகையால், கடன் சமரசக் குழுக்கள் இருப்பதாகக் கூறப்படும் இடங்களில் எல்லாம், நில அடமான பாங்குகளை ஏற்படுத்துவது நல்லது. இவை விவசாயக் கடனாளிகளின் கடன்களை ஏற்றுக் கொள்ளலாம். (இப்போது சௌராஷ்டிராவுடன் இணைந்துள்ள) பவநகர் இராச்சியத்தில் இவ்விஷயத்தில் செய்யப்பட்டுள்ள வேலை போற்றத்தக்கது. ஒரு விவசாயக் கடனாளி அதிகபட்சம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை அவன் கொடுக்கவேண்டிய வருட வரியைப்போல மூன்று மடங்குக்குமேல் இருக்கக்கூடாது என்ற திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு அந்த இராச்சியத்தின் கடன் மீட்புக் கொள்கை அமைந்துள்ளது. இவ்வாறு அந்த இராச்சியம், கடனாளிகள் தம் கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கு உதவியது[2]

விவசாயிகளின் கடன், ஆழமாகப் பதிந்துள்ள ஒரு துன்பத்தின் அறிகுறியே. நாம் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ள சட்டங்கள், இரத்தம் கசிவதை நிறுத்தி, நோய் மேலும் பரவாமல் தொற்று நீக்கிகளைக் காயத்தின்மேல் வைத்துக்கட்டி முதல் உதவி செய்வது போன்றவை. ஆனால், நோயின் காரணத்தைக் கவனிக்க அவை ஒன்றும் செய்வதில்லை. கடனைக் குறைக்கவோ, லேவாதேவிக்காரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ சட்டமியற்றுவதால் நோய் குணமாகிவிடாது; அல்லது அதிகபட்ச வட்டியை நிருணயிப்பதும், பதிவு செய்துகொள்ளும் முறையும், கட்டாயமாகக் கணக்கு வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்துவதும் நோயின் காரணத்தை அணுகவும் முடியாது.

நிலத்தைப் பிறருக்கு மாற்றும் உரிமை இருப்பதால், விவசாயிக்கு அன்றிக் கடன் கொடுப்பவருக்குத்தான் நீர்ப்பாசனம், வாணிபப்

[1] விவசாயச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் மேற்கோள், பக்கம் 98.

[2] மேற்கூறியதில் பக்கம் 95. கடன் நிவாரணச் சட்டம்பற்றி விரிவான விளக்கத்திற்கு N. G. அய்யங்கர் எழுதிய 'மாகாணக் கடன் சட்டம்' (புதுடில்லி, 1940) என்னும் நூலைப் பார்க்க.

பயிர்களைப் பயிரிடுதல் முதலிய நன்மைகள் கிடைக்கின்றன. விவசாயம் செய்யத் திறமையில்லாத லேவாதேவிக்காரனுக்கு நிலம் கிடைத்தால், விவசாயி தன் சொந்த நிலத்திலேயே வாரக்குடியாக லேவாதேவிக்காரன் விருப்பத்திற்கிணங்கப் பயிர்செய்யவேண்டியிருக்கிறது. மேலும், அவன் அதை விவசாயிக்கு அதிகக் குத்தகைக்கு விடுவதனல் விவசாயி பயிர்களை அபிவிருத்தி செய்ய ஊக்கமில்லாமலும் கடன் வாங்க வசதியில்லாமலும் இருப்பான். அதிக விவசாய ஜனத்தொகையுள்ள நம் நாட்டில், இந்த நிலைமையில் வறுமை அதிகமாகக்கூடிய ஆபத்துதான் ஏற்படுகிறது. இதனல் கிராம மக்கள் உற்பத்தியைப் பெருக்க விருப்பமோ திறமையோ இன்றி இருப்பார்கள். இப்போதுள்ள கடன்களையெல்லாம் முழுவதுமாக ரத்து செய்து (இது மற்ற எல்லா நடவடிக்கைகளுக்கும் இன்றியமையாத முதன்மையான நடவடிக்கை)[1] விவசாயிகள் மீண்டும் புதிதாகத் தொழிலைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்தும், ஒழுங்காகக் கடன் வசதிகள் கிடைக்குமாறு செய்தும், நிலங்களை ஒருங்கிணைத்தும், மாடுகள் பஞ்சத்திஞலும் நோயாலும் பாதிக்கப்படுவதற்குக் காப்புறுதி செய்தும், துணைத்தொழில்களைத் தொடங்கியும், சுருக்கமாகக் கூறினல், அவர்களுடைய வறுமை சம்பந்தமான எல்லா அமிசங்களையும் ஒரே சமயததில் பல முனைகளிலிருந்து தாக்கியும், விவசாய வேலைகளுக்குப் பாதுகாப்பு அளித்தால் ஒழிய, அதுவரையில், இந்தியாவில் விவசாயத்திற்கு மேன்மையும் செழிப்பும் வாய்ந்த நிலைமை ஏற்படும் என்று நியாயமாக நம்புவதற்கில்லை.

இறுதியாக, விவசாயக்கடன் பொருளாதார முன்னேற்றத்தோடு ஒன்ருக இணைந்துள்ளது. வறுமை, அறியாமை தொழில்மயமாக்கப் படாமை, நிலையான சமூக அமைப்பு, ஆழமாக வேரூன்றிய சமயப் பழக்க வழக்கங்கள், உலக விலைகளின் ஏற்ற இறக்கங்களால் உண்டாகக்கூடிய நிச்சயமற்ற நிலைமையும், பாதுகாப்பற்ற நிலைமையும் ஆகியவற்ரேடு கடன் சுமையும், விவசாயத் திறமைக் குறைவும் சேருகின்றன. இவற்றுள் எந்த ஒரு பிரச்சினையையும், எல்லா அமிசங்களும் சேர்ந்த இணைப்பான வாழ்க்கையைப் பல முனைகளில் விரிவாகப் புனரமைப்புச் செய்தாலொழியத் தனியாகத் தீர்க்க முடியாது.

[1] கிராமக்கடன் ஆராய்ச்சி அறிக்கையைப்பற்றிப் பெருமையாகக் கூறுவதற்கு ஒரு வசதி உண்டு. அது யாதெனின், அதனல் நமக்கு விவசாயத்தின் தேவைகளைப்பற்றியும், விவசாய சம்பந்தமில்லாத தேவைகளைப்பற்றியும், நிதி உதவியைப் பொறுத்தவரையில் ஒரு விரிவானதும் இணைப்பானதுமான திட்டத்தையளித்து இப்பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று வழி காட்டப்பட்டுள்ளது. ஆகையால், விவசாயக்கடனை ஒழிக்காவிட்டாலும், விவசாயிகளின் பெரிய கடன் சுமையைப்பற்றித் தற்செயலாகக்கூடக் கவனம் செலுத்தப்படவில்லை என்பது நமக்கு மிக்க வியப்பாக இருக்கிறது.

13. நிறுவனங்கள் மூலம் விவசாயக் கடன்

விவசாயக் கடன் முக்கியமாகத் தனிப்பட்ட லேவாதேவிக் காரர்கள், பேங்கர்கள் ஆகிய நிறுவனத்திற்குள் சேராதவர்களிட மிருந்துதான் கிடைக்கிறது. லேவாதேவிக்காரர்களின் எண்ணிக் கைபற்றி நம்பத்தகுந்த மதிப்பீடு ஒன்றும் கிடைக்கவில்லை. மிகக் குறைத்து மதிப்பிட்டாலுங்கூட, இவர்களின் எண்ணிக்கை 3,00,000 முதல் 3,50,000 வரை இருக்குமென்று கூறப்படுகிறது. கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை அளித்துள்ள கீழ்வரும் அட்டவணையில் ஆராய்ச்சி நடந்த வருடத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்த பலரிடமிருந்து கிடைத்த கடன் சதவீதம் காட்டப்பட்டுள்ளது.[1]

கடன் கொடுப்பவர்	விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடனில் ஒவ்வொருவரிடமிருந்தும் பெற்ற கடன் சதவீதம்
லேவாதேவித் தொழில் செய்பவர்கள் ...	44·8
விவசாயத்திற்குக் கடன் கொடுப்பவர்கள் ...	24·9
உறவினர்கள்	14·2
வியாபாரிகளும் தரகு வியாபாரம் செய்பவர்களும்	5·5
நிலக்கிழார்கள்	1·5
அரசாங்கம்	3·3
கூட்டுறவுச் சங்கங்கள்	3·1
வியாபார பாங்குகள்	0·9
மற்றவர்கள்	1·8
மொத்தம் ...	100·0

[1] தொகுதி—II, பொது அறிக்கை, பக்கம் 167.

இவ்விவரங்களிலிருந்து, தனிப்பட்டவர்கள் (நிறுவனப் பகுதியைச் சேர்ந்த வியாபார பாங்குகள் நீங்கலாக), விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடனில் 93 சதவீதம் அளித்துள்ளனர் என்பதும், தனிப்பட்ட லேவாதேவிக்காரன் கைதான் ஓங்கியிருக்கிறது என்பதும் தெரிகின்றன.[1]

ஒரு நிறுவனத்திற்குள் சேராத லேவாதேவிக்காரர்களைப் பற்றிய முக்கியப் பிரச்சினை என்னவென்றால், அவர்களுடைய சில தொழில் முறைகளை நீக்கிக் கிராமக்கடன் வசதி முறையோடு கூடுமானால் அவர்களை இணைக்க வேண்டும். இதற்காக அவர்களை ரிசர்வ் பாங்கின் பணவசதி முறையோடு இணைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால், மாற்றுக்கடன் வசதியை ஏற்படுத்தி அவர்களை அடியோடு ஒழித்துவிட வேண்டும். இந்த மாற்றுக்கடன் வசதி, 'லேவாதேவிக்காரர்களுக்குப் போட்டியாக எங்கும் இருக்கவேண்டும்.' இப் பிரச்சினையை ஆராய்ந்தவர்கள் எல்லோரும் லேவாதேவிக் காரர்களை இன்னும் பல வருடங்கள்வரை ஒழிக்க முடியாதென்றும், வேறு கடன்வசதிகளை விவசாயிக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்வரையில் அவனுக்கு இப்போதுள்ள கடன் வசதிகளையும் பறித்துவிடக் கூடாது என்றும் ஒத்துக்கொண்டுள்ளனர். கிராமக் கடன்வசதி ஆராய்ச்சி அறிக்கை, நிறுவனத்தின் மூலம் மாற்று உதவி அளிப்பதற்காகவும், அதனால் லேவாதேவிக்காரர்களுக்குப் போட்டியை உண்டாக்கவும், அரசாங்கத்தோடு கூட்டாளியான ஓர் இணைப்பான கூட்டுறவு பாங்கு முறையை விருத்தி செய்து பலப்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது. இத்தகைய திட்டத்தில் லேவா தேவிக்காரனுக்கு இயற்கையாக இடமிராது என்று நாம் எதிர் பார்க்கலாம்.

இந்தியாவில் நிறுவனங்களின்மூலம் அளிக்கப்படும் உதவி களுள் முதலாவதாக அரசாங்கம் அளிக்கும் கடன்களையும் உதவி களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கக் கடனும் முன்பணமும்

வறுமையில் ஆழ்ந்திருக்கும் விவசாயிகளுக்குக் கடன் வாங்கும் வசதிகளை ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியம். இந்தியாவில் மூலதன மானது, 'சிறிய அளவில், சிறிய முதலாளிகளால், சிறிது வியாபாரத் திறமையுள்ளவர்களுக்கு' அளிக்கப்படுகிறது என்று சொல்லப்படு கிறது. ஒரு பக்கம் அதிகக் கடன் வாங்குதலும் மற்றொரு பக்கம்

[1] விரிவான விளக்கத்திற்கு, மேற்கூறிய நூல், அத்தியாயம் 14–ஐப் பார்க்க.

பணம் கிடைப்பது அரிதாகவும் இருக்கிறது. இந்திய விவசாயிக்கு இந்த இரண்டுவிதமான துன்பங்களும் உண்டு. கிராம சௌகார் அல்லது மார்வாரி தவிர, கிராம மக்களுக்கு வேறுவிதமான கடன் வசதிகளும் கிடைக்கும்படி அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கமேகூடக் கடன் கொடுத்திருக்கிறது; கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் ஏற்பாடு செய்திருக்கிறது.[1] 1883 ஆம் ஆண்டின் நில அபிவிருத்திக் கடன் சட்டம், 1884 ஆம் ஆண்டின் விவசாயிகள் கடன் சட்டம் ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட தக்காவிக் கடன்களை அரசாங்கம் அளிக்கிறது. முந்திய சட்டம் நில அபிவிருத்திக்காகக் கடன் கொடுக்கும்படி ஸ்தல அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது. அபிவிருத்தி என்பது நிலத்தின் குத்தகை மதிப்பை உயர்த்தக்கூடிய காரியம் என்று விளக்கப்பட்டுள்ளது. இக் காரியங்களில் கிணறுகளுக்கு முதலிடம் உண்டு. கடனைத் தவணைகளாகத் திருப்பிக் கொடுக்கலாம்; நிலவரிப் பாக்கியைப்போலவே அதனை வசூல் செய்யலாம். விவசாயக் கடன் சட்டம், துன்ப நிவாரணம், விதைகளையும் மாடுகளையும் வாங்குவதுபோன்ற வேறு காரியங்களுக்காகக் கடன் அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. வட்டி வீதம் $7\frac{13}{16}$ சதவீதம் அல்லது இன்னும் குறைவு.[2] ஆனால், இதில் பலவித நிர்ப்பந்தங்கள் உண்டு; கடன் மிகவும் கடுமையாக வசூலிக்கப்படும். பொதுவான விலை ஏற்றத்தினாலும், புதிய சாலைகள் ரயில்வேக்கள் அமைக்கப்பட்டதனாலும் நிலவரியை உயர்த்துவதில் அரசாங்க ஊழியர்கள் காட்டிய ஊக்கமானது, தக்காவிக் கடன்களின் உதவியைக் கொண்டு தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் நிலங்களில் செய்த அபிவிருத்திக்கும் வரி விதிக்கும்படி செய்திருக்கிறது. இதனால், விவசாயிகள் தக்காவிக் கடன் வாங்க விரும்புவதில்லை. மேலும், அதில் வழக்கமான தாமதமும், அரசாங்க நடைமுறைத் தொல்லைகளும், சிறிய உத்தியோகஸ்தர்கள் தேவையில்லாமல் கேள்விகளைக் கேட்பதும் ஆகிய பல துன்பங்கள் உள்ளன. 1938-39-ல் ஒரு கோடி ரூபாய்தான் கடனாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், அதிக உணவுப் பயிர் செய்யும் இயக்கத்தின் காரணமாக, 1949-50ல் இக் கடன்கள் ரூ. 15 கோடிவரை உயர்ந்தன.

1943 முதல் 1950-51 வரை, அதிக உணவுப் பயிர் செய்யும் இயக்கத்திற்காக மத்திய அரசாங்கம் செலவிட்ட மொத்தப்பணம்

[1] மேற் கூறியதில் பக்கம் 481-3.

[2] வெவ்வேறு இராச்சியங்கள் விதிக்கும் வட்டி விதத்தையறிய Survey Report Vol. I, Part II, 1957, பக்கம் 66-ல் உள்ள அட்டவணையைப் பார்க்க.

ரூ. 67·5 கோடி. (இதில் உணவுக் கொள்முதலுக்காகச் செலவிடப் பட்ட ஒரு பகுதியும் அடங்கும்.) அண்மையில் சில வருடங்களில், பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளைக் குடியேற்றவும், வாழ வைக்கவும் அரசாங்கக் கடன் கொடுக்கப்பட்டது.

கிராமக் கடன் ஆராய்ச்சியின்படி, விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடனில் அரசாங்கம் கொடுத்த விவசாயக் கடன் 3 சத வீதம்தான் ஆகிறது. 'நடைமுறையில், தகாத ஒருவர் போதாத அளவு பணத்தைத் தவறான முறையில் கொடுப்பதைவிடத் தக்காவிக் கடன் சிறந்ததன்று', 'தக்காவிக் கடனின் சாதனை, பற்றாக்குறை சாதனைதான்.' இதன் பல அமிசங்களாவன : (1) பற்றாத பணம்; பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு; அடமானத்தின் பொருத்தமின்மை; (2) வேண்டிய சமயத்தில் கிடைக்காமலிருத்தல்; இடையில் உண்டாகும் தாமதங்கள்; கடன் வாங்குபவர்மீது வெவ்வேறு விதமான நிர்ப்பந்தங்களைச் சுமத்துதல்; (3) மேற்பார்வை சரியின்மை; இணைப்பு வேலை அரைகுறையாக இருத்தல்; மேலும், சிறிய அல்லது நடுத்தர விவசாயிக்கு அன்றிப் பெரிய விவசாயிக்குப் பொதுவாக அதிகக் கடன் கொடுக்கப்படுகிறது. உற்பத்திக் காரியங் களுக்காக அளிக்கப்படும் சிறிய கடன் சரியான வழியில் செலவிடப் படுகிறதா என்று மேற்பார்வை செய்வதற்குரிய ஏற்பாடு போதாது. அன்றியும், இலாக்கா அதிகாரிகளிடம் கடனுக்குள்ள தேவைபற்றி எடுத்துக்கூறி வற்புறுத்துவதில் அதிகச் சங்கடம் இருக்கிறது. இதனால், மற்றவர்களிடமிருந்து கடன் பெறுவதைவிட அரசாங்கத் தினிடமிருந்து பெறுவதில் அதிகச் செலவு ஏற்படுகிறது.[1]

அரசாங்கக் கடனை மக்களிடையே பரப்புவதற்குக் காட்கில் குழு, இப்போது நிலவரி இலாக்காவிடமுள்ள அரசாங்கக் கடன் நிருவாகத்தை ஒரு தனி அரசாங்க இலாக்காவை ஏற்படுத்தி அதனிடம் ஒப்படைக்குமாறு சிபாரிசு செய்தது.[2]

துன்பக் காலத்திற்கு மட்டும்தான் 1884-ஆம் வருடச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றும், அரசாங்கக் கடன்கள் சுயமுயற்சி என்றும், நல்ல முறைக்குத் தடையானவை என்றும் கண்டுபிடித்த பெருமை சென்ற விவசாயக் குழுவிற்கே உரியது. துன்பம் என்பது எப்பொழுதோ வராமல் எப்பொழுதுமே உள்ள ஒரு

[1] அரசாங்கம் கடன் கொடுக்கும் நிலையமாக வேலை செய்வதுபற்றி விரிவாகத் தெரிந்துகொள்வதற்கு, மேற்கூறியதில் அத்தியாயம் 19, பக்கம் 61-182 ஐயும், மேற்கூறிய பொது அறிக்கை, அத்தியாயம் 17, பக்கம் 199-208 ஐயும் பார்க்க.

[2] அறிக்கை, பக்கம் 33.

நாட்டில் விவசாய மக்களின் வறுமையும் செயலற்ற தன்மையும், வேறெங்குமில்லாவிட்டாலும் இங்கு அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையைக் கைவிடுவது நியாயம் என்று நிரூபித்துள்ள நாட்டில், 1928ல் 19-ஆம் நூற்றுண்டின் குற்றுயிராயிருக்கும் கொள்கையை அறிவித்து மீண்டும் வற்புறுத்தும் பணியை இந்த விவசாயக் குழு செய்தது.

வழி காட்டும் குழு, இனிமேல் தக்காவிக் கடனைக் கண்டிப்பாகக் குறைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. தாற்காலிகமான ஏற்பாடாகவோ, நீண்ட காலமாகப் பரவியுள்ள பஞ்சம், வெள்ளம், பற்ருக்குறை போன்ற துன்பங்களைக் கருதியோதான் இக் கடன்களைக் கொடுக்கலாம் என்று அது கூறியுள்ளது. பஞ்ச காலத்திலும் கஷ்ட காலத்திலும், கூட்டுறவுக் கடனும் அரசாங்கத் தக்காவியும் இணைப்பாக வேலை செய்ய வேண்டும். குறிப்பிட்ட உற்பத்திக் காரியங்களுக்காக அரசாங்கம் அளிக்கும் குறைந்த வட்டிச் சலுகையான தக்காவிக் கடனேடும் கூட்டுறவுக் கடன் இணைப்பாக வேலை செய்ய வேண்டும். பஞ்சம், கஷ்டம் ஆகிய காலங்களில் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே தக்காவி சம்பந்தமாக வேற்றுமை காட்டக்கூடாது. மற்றச் சமயங்களில் கடன்களை ஒரே மாதிரி வட்டி வீதத்திற்கு அளிக்கவேண்டும்; சலுகையான தக்காவியைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக அளிக்க வேண்டும். கஷ்ட காலத்தில் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு, அரசாங்க விவசாயக் கடன் நிதியை நிறுவவேண்டும். உணவு, விவசாய அமைச்சுத்துறையின் கீழ், மத்திய அரசாங்கத்தினுல் நிறுவப்படவிருக்கும் தேசீய விவசாயக் கடன் (நிவாரணமும், உத்தரவாதமும்) நிதியோடு இணைப்பாக இதைப் பயன்படுத்த வேண்டும்.[1]

கூட்டுறவு இயக்கம்

மற்ருெரு வகை நிறுவனக் கடன், கூட்டுறவுக் கடனுகும். இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வளர்ந்தது. அதன் தோற்றமும் வளர்ச்சியும் அரசாங்கத்தினுலேயே பெரிதும் ஏற்பட்டது. இவ்வியக்கம் விவசாய மக்களோடு நின்றுவிடவில்லை. ஆனல், அவர்களுடைய நன்மைக்காகவே இது தொடங்கப்பட்டது. இன்றும் பெரும்பாலான சங்கங்கள் கிராமச் சங்கங்களாகவே உள்ளன. 1900-க்கு முன்பே, சென்னையில் கூட்டுறவுக் கொள்கையின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க முறையில் இருந்தது. 3,600

[1] சிபாரிசுகளின் விவரத்தையறிய, மேற்கூறிய பொது அறிக்கை, தொகுதி II, அத்தியாயம் 40, பக்கம் 471-480 பார்க்க.

அங்கத்தினர்களைக் கொண்ட பரஸ்பரக் கடன்நிதி என்று கூறப்பட்ட நிதிகள் இரண்டரைக் கோடி ரூபாய் மூலதனத்தோடு உண்டாயின. ஆனால், இவற்றின் வாடிக்கைக்காரர்கள், விவசாயிகள் அன்றிப் படித்த மக்களாக இருந்தனர். 1901ல் சில மாகாணங்களில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, இப் பிரச்சினை முழுவதையும் ஆராய இந்திய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்தது. இந்தக் குழுவின் அறிக்கை, சட்டம் இயற்றாமல் உண்மையான முன்னேற்றத்தைக் காண முடியாது என்று கூறியது. 1904-ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கச் சட்டம் விரிவான கொள்கைகளை வகுத்து, இராச்சிய அரசாங்கங்கள் மாகாணப் பதிவாளர்களை (Registrars) நியமிக்கலாம் என்று அதிகாரம் அளித்தது. இச் சட்டத்தின் நோக்கம், 'சிக்கனத்தை ஊக்குவிப்பதும், சுய முயற்சியைத் தூண்டுவதும், விவசாயிகள், கைவினைஞர்கள், குறைந்த வருமானமுடையவர்கள் ஆகியவர்களிடையே கூட்டுறவை வளர்ப்பதும்' ஆகும். சங்கங்கள், கிராமச் சங்கங்கள், நகரச் சங்கங்கள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன. முதல் வகையில் அங்கத்தினர்களுள் ஐந்தில் நான்கு பங்கினர் விவசாயிகளாக இருக்கவேண்டும். இரண்டாவதில் விவசாயிகள் அல்லாதவர்களாக இருக்கவேண்டும். அங்கத்தினர்களுக்கோ, கிராமச் சங்கத்திற்கோதான் கடன் கொடுக்கப்படும். பதிவாளர் கட்டாயமாகக் கண்காணிப்பும் தணிக்கையும் செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

கிராமச் சங்கங்கள் வரையற்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டன. அங்கத்தினர்களுக்கு நபர் ஜாமீன்பேரிலோ, சொத்து ஜாமீன்பேரிலோ கடன் கொடுக்கலாம். இலாபத்தைக் காப்பு நிதிக்கோ (Reserve Fund), வட்டி வீதத்தைக் குறைப்பதற்கோ, வரவு வைத்துக் கொள்ளலாம். இச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட பதிவாளர்கள் மாதிரிச் சங்கங்களை ஏற்படுத்திப் பிரசார வேலையும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 1911–12 வரை சங்கங்கள் அடைந்த வளர்ச்சியைப்பற்றிக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது:

வருடம்	சங்கங்களின் எண்ணிக்கை	அங்கத்தினர்களின் எண்ணிக்கை	நடைமுறை மூலதனம் ரூபாயில்
1906-07	843	90,844	23,71,683
1909–10	3,428	2,24,397	1,24,68,392
1911–12	8,177	4,03,318	3,35,74,162

1904ஆம் ஆண்டின் சட்டத்தை இயற்றியவர்கள் மனத்தில் குழப்பம் கொண்டு இரண்டு வெவ்வேறு நோக்கங்களை ஒன்றாக்கி

விட்டனர். ஒருபுறம், இச் சட்டம் தொடங்கியுள்ள இயக்கத்தினுல், விவசாயக் கடன் பிரச்சினையைச் சரிக்கட்ட முடியும் என்றும், இப்போதுள்ள கடன் சுமையை ஒழிக்க முடியும் என்றும், மேலும் கடன் உண்டாவதைத் தடுக்க முடியும் என்றும் கருதப்பட்டது. அசல் மசோதாவுடன் சேர்க்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில், சர் டேன்சில் இப்பெட்சன், 'விவசாயிகள் தங்கள் மொத்தச் சேமிப்பைக் கூட்டுறவுக் கடனுக்குப் பயன்படுத்தும்படி தூண்டப் பட்டால், ஓரளவாவது லேவாதேவித் தொழில்காரனிடம் செல்வதி லிருந்தும் விடுவிக்கப்பட்டு' அதிக நன்மை அடைவார்கள் என்று கூறியிருக்கிறுர். இதற்கு மாருக, விவசாயிகளின் சிதறியுள்ள சேமிப்பையெல்லாம் ஒருங்குதிரட்டுவதற்கும், சிக்கனத்தை வளர்ப் பதற்கும், சுயமுயற்சியையும் பரஸ்பர நம்பிக்கையையும் தைரியத்தை யும் உண்டாக்குவதற்கும் இந்த இயக்கம் உதவி செய்து தம் இனத்தைச் சேர்ந்தவர்களின் மொத்தச் சாதனங்களிலிருந்தே எளிய நிபந்தனைகளின்பேரில் கடன் வாங்க அவர்களுக்கு உதவியா யிருக்கும் என்றும் கருதப்பட்டது.

1904ஆம் ஆண்டின் சட்டம், கடன் அளிப்புத் தவிர மற்றக் காரியங்களுக்கான சங்கங்களைப்பற்றி ஏற்பாடு செய்யவில்லை. அது ஜெர்மனியில் உள்ள ரய்ஃபீசன் (Raiffeisen), ஷுல்ஸ் டிலிச் (Schulze-Delitsch) பாங்குகளைப்போலச் செய்யப்பட்டது. ஆனுல், 1904-க்கு முன்பே ஜெர்மன் கூட்டுறவு இயக்கம் தன் முந்திய நோக்கத்தையும் மிஞ்சி வளர்ந்து, கிராம நிதிக்கான ஓர் இணைப்பான முறையாக விருத்தியடைந்துவிட்டது. 1904-ல் பழைய ரய்பீஃசன் மாதிரியில் முதன்மையான கடன் சங்கங்களை நிறுவியது, 1904ஆம் ஆண்டுச் சட்டத்தை இயற்றியவர்களின் தெளிவான அறிவைப்பற்றி நமக்கு ஐயத்தை உண்டாக்குகிறது. முன்னேற்றம் என்பது முயற்சியாலும், தவறு செய்வதாலும் ஏற்படுகிறது. விவசாயக் குழுகூட இதைப்பற்றிக் குறிப்பிடும்போது 'குருடர்களுக்குக் குருடர்கள் வழி காட்டுவதுபோல இது உள்ளது' என்று கூறுகிறது.[1]

கூட்டுறவு இயக்கம் மக்களுடைய வேண்டுகோளினுல் ஏற்பட்ட தன்று. ஆகவே, அதிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டவோ, அதற்கு வழிகாட்டவோ பொதுமக்கள் கருத்து உருவாகவில்லை. அரசாங்கம் மக்களுக்குச் சிக்கனத்தையும் சுய உதவியையும் கற்றுக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சியே இது. இச் சட்டம் சில ஆண்டுகள் நடத்தப்பட்டதற்குள், அப்போதிருந்த சங்கங்களின்

[1] அறிக்கை, பக்கம் 444.

நடைமுதல் மூலதனம், நாட்டில் பல பகுதிகளில் ஒரு தாலுக்காவிலிருந்த கடன் தொகையளவுகூட இல்லை என்று தெரிந்தது. ஆகவே, 1904ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பதில் வேறொரு சட்டத்தை இயற்றவேண்டியதாயிற்று. இப் புதிய சட்டம் பிரதேசங்களுக்கும் மாகாணங்களுக்குமு் கூட்டுறவுப் பாங்குகளை ஏற்படுத்துவதோடு, கடன் அல்லாமல், வாங்குவதற்கும் விற்பதற்குங்கூட வெவ்வேறுவகையான சங்கங்களை ஏற்படுத்தவும் செய்தது. 1912ஆம் ஆண்டின் சட்டத்தினால் இது சாதிக்கப்பட்டது. இச் சட்டம் பழைய சட்டத்தின் குறைகளை அகற்றியது. எனினும், கடன் அல்லாத காரியங்களைச் செய்வதற்கு வசதியளித்துங்கூட, விவசாய வகுப்பினருக்குக் கடன்தான் விடாத தேவையாக இருந்தது. ஆகவே, இது கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அமிசமாக இருந்தது.

1912ஆம் ஆண்டுச் சட்டம், அதுகாறும் சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்படாத பல கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியது. சங்கங்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டவை, வரையறுக்கப்படாதவை என்று பிரிக்கப்பட்டன. பதிவாளர்கள் இவ்வியக்கத்தை மேற்பார்வை செய்வதோடு, இதனைப் பரப்பவும் வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. வறுமையும் அறியாமையும் உள்ள விவசாயிகளோடு, பணமின்மையும் சரியான மேற்பார்வை இன்மையும் சேர்ந்து, இவ்வியக்கம் வளர்ச்சியடைய முடியாமல் செய்துவிட்டன. பதிவாளர் ஊக்கமிகுதியால் 1914-ல் சங்கங்களின் எண்ணிக்கையை 5,000 ஆகவும், அங்கத்தினர்களின் எண்ணிக்கையை 6,95,000 ஆகவும் உயர்த்தினர். இவ்வியக்கத்தின் முன்னேற்றத்தை ஆராயும்படி ஒரு விரிவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து மக்லகன் குழு நியமிக்கப்பட்டு, இவ்வியக்கம் சரியான முறையில் முன்னேறுகிறதா என்று ஆராயும்படி உத்தரவிடப்பட்டது. இக் குழு, இவ்வியக்கத்தை ஆராய்ந்து, மிக முக்கியமான யோசனைகளை வெளியிட்டது. இதன் விளைவாக எல்லா மாகாணங்களிலும் மாகாண பாங்குகள் நிறுவப்பட்டன.

இவ்வியக்கத்தின் மேற்கொண்ட வளர்ச்சி

1919-ல் இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும், கூட்டுறவு மாகாண விஷயமாக மாறிவிட்டது. பிறகு அது மாகாண அரசாங்கங்களால் நிருவகிக்கப்பட்டது. 1925-ல் பம்பாயும், 1932-ல் சென்னையும், 1935-ல் ஒரிசாவும் ஆக மூன்று மாகாணங்கள் தமக்கு அளிக்கப்பட்ட விருப்பத்தின்படி, தங்கள் சொந்த மாகாணச் சட்டங்களை நிறைவேற்றின, பக்கம் 417-ல் உள்ள அட்டவணை இந்தியா

முழுவதிலும் (இந்திய இராச்சியங்கள் உள்பட) கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டதுமுதல் உண்டான வளர்ச்சியைக் காட்டுகிறது.[1]

வருடங்களின் சராசரி	சங்கங்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	நடைமுறை (மூலதனம் ஆயிரம் ரூபாய்களில்)
1906—10	2	162	6,800
1911—15	12	548	54,800
1916—20	28	1,129	1,51,800
1921—25	58	2,155	3,63,600
1926—30	94	3,689	7,48,900
1931—35	106	4,322	9,46,100
1936—40	117	5,077	10,46,800
1941—45	150	7,218	12,43,500
1946—50	159	10,732	18,87,300
1951—55	195	14,605	33,03,200
1955—56	240	17,622	46,88,200
1956—57	245	19,373	56,76,700

1920-க்கும் 1930-க்கும் இடையில், சங்கங்களின் எண்ணிக்கையும் நடைமுறை மூலதனமும் வேகமாக அதிகரித்தன. 1930-ல் விலைகள் அபாயகரமாக விழுந்துவிட்டதன் விளைவாக ஏற்பட்ட மந்த நிலையின்போது, இவ் இயக்கம் மிகவும் பாதிக்கப்பட்டது. அப்போது அது கட்டழிந்து நிலுவைக் கடன்களும் பாக்கிகளும் அதிகம் இருந்தன. 1933-36-ல் பல முதன்மையான சங்கங்களும் மத்திய சங்கங்களும் மூடப்பட வேண்டியதாயிற்று. நிதிகளின் பெரும்பகுதி முடக்கப்பட்டது. 1937-38-ல், விவசாயச் சங்கங்களின் அங்கத்தினர்களிடமிருந்து வரவேண்டிய மொத்தப் பாக்கிகள் ரூ. 11·4 கோடியும், ஆனால் நடைமுறை முதல் ரூ. 32 கோடியும் ஆக இருந்தன. சர். மால்கம் டார்லின் செய்த விசாரணையினால், 1934 முடிவு வரையில், இவ் இயக்கம் தொடங்கப்பட்டது முதல் தோற்றுவிக்கப்பட்ட மொத்தச் சங்கங்களில் 24 சதவீதம் கலைக்கப்பட்டன என்றும், இந்தச் சதவீதம் வங்காளத்தில் 9 முதல் மத்திய மாகாணத்திலும் பீராரிலும் 49 வரையிலும் சென்றது என்றும் தெரிகிறது. 1928-லேயே விவசாயக் குழு, கூட்டுறவு இயக்கத்தின் சில அடிப்படையான குறைகளைக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறியது: 'சங்கங்களின் அங்கத்தினர்கள் பணம் செலுத்த முடிந்தாலும், தாமதமாகச் செலுத்துகின்றனர்;

[1] 1946-47 வரையில் உள்ள எண்கள் பிரிக்கப்படாத இந்தியாவுக்கும், பின்னர் உள்ளவை இந்திய யூனியனுக்கும் உரியவை.

கூட்டுறவின் தத்துவங்களையும், கிராமக் கடன்பற்றிய அடிப்படைச் செய்திகளையும் மக்கள் அறியாதவர்களாய் உள்ளனர் ; ஒழுங்காகத் தவணை கட்டத் தவறுபவர்கள்மீது அலுவலகத்தில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை ; கிராமத்தில் இவ் இயக்கம் உயிருள்ள ஒரு சக்தியாக இருக்கவேண்டுமானுல் அதற்கேற்ற அளவு சுய உதவி உணர்ச்சி அதிகமாக இல்லை. குறைகள் நன்ருக இருப்பதாகத் தெரிந்து ஒத்துக்கொள்ளப்பட்டாலும், சீர்திருத்தமுடியாத சங்கங்களைக் கலைப்பதற்கு விருப்பமிருப்பதில்லை. இது மிகவும் அபாயகரமானதும் வருந்தத்தக்கதும் ஆகும்.'[1]

1935-ல் இந்திய ரிசர்வ் பாங்கு நிறுவப்பட்டபோது, விவசாய நிதியை நிருவகிப்பதற்குள்ள ஏற்பாட்டைச் சீர்திருத்துவதற்கும் விவசாயக் கடன் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு ஒரு தனி இலாக்காவை நடத்துவதற்கும், இந்திய அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அது கேட்டுக் கொள்ளப்பட்டது. 1937-ல் மாகாண சுய ஆட்சி வந்ததும், லேவாதேவியையும் வட்டி வீதங்களையும் ஒழுங்குபடுத்துவதற்குச் சட்டமியற்றப்பட்டது. இந்தச் சட்டத்தினுல் கிராமக் கடன் வசதி குறைந்துவிட்டதென்று கூறப்படுகிறது. விவசாயிகள், கடன் சுமையிலிருந்து விரைவில் நிவாரணம் பெறுவதற்குத் தங்கள் அரசாங்கத்தை நாடுமாறு ஊக்குவிக்கப்பட்டிருந்ததால், மிகவும் தாமதமானதும் கடினமான நிபந்தனைகள் உடையதுமான கூட்டுறவு நிதியைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. 1940 முதல் பலநோக்குச் சங்கங்கள் வளர்ச்சியடைந்ததால் ஒரு புதிய நிலை தோன்றியுள்ளது.[2] இருப்பினும், கடன்களை ஏற்பாடு செய்வதுதான் இன்னும் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய வேலையாக இருக்கிறது.

யுத்தமும் கூட்டுறவு இயக்கமும்

விவசாயப் பொருள்களின் விலைகள் ஏறியதால், இரண்டாம் உலகப் பெரும்போரின்போது இவ்வியக்கம் சிறிதளவு உயிர் பெற்றது. சங்கங்களின் வைப்புக்களில் (deposits) உயர்வு காணப்பட்டது. பணக்கார விவசாயிகள் பாக்கிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். 1939-க்கும் 1946-க்கும் இடையில், சங்கங்களின் எண்ணிக்கை 41 சதவீதமும், அங்கத்தினர் எண்ணிக்கை

[1] அறிக்கை, பக்கம் 449.

[2] 1953-54க்குள் 48,659 பல நோக்குச் சங்கங்களும், 24,79,971 அங்கத்தினர்களும், ரூ. 1,691·18 இலட்சம் நடைமுறை மூலதனமும் உண்டாயின.

70·6 சதவீதமும், நடைமுறைமுதல் 54 சதவீதமும் அதிகமாயின. யுத்தகாலத்தில், கூட்டுறவு இயக்கத்தில் கடன் அமிசத்திலிருந்து, உற்பத்தி, பங்கீடு அமிசங்களில் முக்கியமாகக் கவனம் திரும்பியது. கடன் வேலையைப் பாதிக்காமல், பலநோக்குச் சங்கங்களை அமைப்பதில் அபிவிருத்தி உண்டாயிற்று. 'கடன் அல்லாத அமிசங்களில் நல்ல முன்னேற்றம் காணப்படினும் (குறிப்பாக, இரண்டாம் உலக யுத்தத்தின்போது இவ்வாறு நடந்தது), விவசாயக் கடன் சங்கங்கள் இன்னும் முக்கியமான நிலையை வகிக்கின்றன. 1947–48-ல் இந்தியாவில் கடன் சங்கங்கள் முதன்மையான மொத்தச் சங்கங்களில் 66·4 சதவீதமாக இருந்தன. இவை 1945-46-ல் 72·7 சதவீதமாக இருந்தன.'[1]

யுத்தகாலத்தில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளால் பல நுகர்வோர் பண்டக சாலைகளும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. பிற்கூறப்பட்டவை யுத்தத் தேவைகளையும் மக்கள் தேவைகளையும் உற்பத்தி செய்வதில் உதவின. 1945-ல், கூட்டுறவு அபிவிருத்தித் திட்டம் வகுப்பதற்காக, இந்திய அரசாங்கம் ஒரு கூட்டுறவு திட்டக்குழுவை நியமித்தது. இதன் தலைவர் R. G. சாரையா. 1946-ல் சமர்ப்பிக்கப்பட்ட இதன் அறிக்கை, இவ் வியக்கத்தைப்பற்றி முற்றிலும் மதிப்பிட்டு, அடைய வேண்டிய இலக்குகளைக் குறிப்பிட்டு, அபிவிருத்திக்கு வழிகளையும் கூறியது. 1947-ல் சுதந்திரம் கிடைத்ததும், அகதிகளைப் புனரமைப்புச் செய்யும் புதிய பிரச்சினைகள் தோன்றின. அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அகதிகளுக்கு உதவும் கொள்கையை மேற்கொண்டது முற்றிலும் சரியே. அரசாங்க உதவிக் கடன்கள், மாலிவன நிலம், கட்டடச் சாமான்கள், மற்றச் சலுகைகள் ஆகியவை தாராளமாக அளிக்கப்பட்டன. வீடு கட்டுதல், தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் ஆகியவைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. மேலும், எருக்கள், உரங்கள் (fertilisers) விவசாயக் கருவிகள் ஆகியவற்றை விநியோகம் செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. பலநோக்குச் சங்கங்கள் உண்டானதால், அதிக நிதி தேவைப் பட்டது. திட்டக்குழு, கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கூறுவதாவது: 'திட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அமிசங்களில் முறையாக முதலீடு செய்யக் கிராமங்களில் கடன் வசதி செய்து தருவதற்குக் கடன் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுவது இன்றியமையாதது' என்பதே.[2]

[1] இந்திய ரிசர்வு பாங்கினல் செய்யப்பட்ட (1950) இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் பரிசீலனை, 1946-48.

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்,' பக்கம் 166.

கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு

இவ்வியக்கத்தின் உச்சியில் இருப்பது, இராச்சியக் (முன்பு மாகாண) கூட்டுறவு வங்கி. இது மாகாண நிதி அமைப்பாகவும், மத்தியக் கூட்டுறவு பாங்குகள், முதன்மையான சங்கங்கள் போன்றவற்றின் உபரி நிதிகளைத் திரட்டி .உதவும் நிறுவனமாகவும் உள்ளது. இராச்சியக் கூட்டுறவு பாங்கு பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுகிறது. இதற்கு அதிக நடைமுறை முதல் உண்டு. இது இராச்சிய அரசாங்கங்களிடமிருந்து கடன்களையும் உத்தரவாதங்களையும் பெற முடியும். 1955-56-ல் இதைப்போல 24 பாங்குகள் இருந்தன. அவற்றின் மொத்த நடைமுறை முதல் ரூ. 63·34 கோடி.

அரசாங்க பாங்குக்குக் கீழ் மத்தியக் கூட்டுறவு பாங்குகள் மாவட்டத் தலைநகரங்களிலும், முக்கியமான வியாபாரத் தலங்களிலும் உள்ளன. பல முதன்மையான சங்கங்கள் இணைந்து ஏற்படுத்திக்கொண்டுள்ள மேற்பார்வை செய்யும் யூனியன்களும் உள்ளன. மத்தியக் கூட்டுறவு பாங்குகள் நடுத்தர வகுப்பினரிடமிருந்தும், பணக்காரர்களிடமிருந்தும், அங்கத்தினர்களாக உள்ள சங்கங்களிலிருந்தும் வைப்புகளைப் பெற்றுக்கொண்டு, தம் எல்லைக்குள் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் கடன் கொடுக்கின்றன. அவை முதன்மையான சங்கங்களுக்கு வழிகாட்டி, மேற்பார்வையும் செய்து வருகின்றன. 1956-57-ல் 451 மத்தியக் கூட்டுறவு பாங்குகள் இருந்தன. அவற்றின் நடைமுறை முதல் ரூ. 110·26 கோடி.

முதன்மையான சங்கங்கள் விவசாயச் சங்கங்களாகவோ, விவசாயச் சம்பந்தமில்லாத சங்கங்களாகவோ இருக்கும். இவ்விரண்டு வகையில் வெவ்வேறு பிரிவுகள் உண்டு. அவை கடன் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், நீர்ப்பாசனச் சங்கங்கள் முதலியன. இரண்டு வகையிலும் கடன் சங்கங்கள் தாம் மிகப்பெரும்பாலானவை. விவசாயச் சங்கங்கள் அல்லது ரய்பீசன் சங்கங்கள் என்று கூறப்படுபவை, சில குறிப்பிட்ட கொள்கைகளுடன் வேலை செய்கின்றன. அவை (அ) குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்கள் தாம் அவற்றில் அங்கத்தினர்களாகலாம்; (ஆ) நடைமுறை முதல் மத்தியக் கூட்டுறவு பாங்குகளால் கொடுக்கப்படும் மிகச் சில சங்கங்களுக்குத்தான் பங்கு மூலதனம் உண்டு; (இ) சங்கத்தின் கடன்களுக்கெல்லாம் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனியாகவும் கூட்டாகவும் வரையறையில்லாத பொறுப்பு உண்டு; (ஈ) இலாபத்தையெல்லாம் காப்பு நிதிக்கு ஒதுக்கிவிடுவார்கள்; சில மாகாணங்களில் இலாபத்தில் அதிகபட்சம் 25 சதவீதத்தை அப்

பகுதியிலுள்ள மக்களின் பொது நன்மைக்காகப் பயன்படுத்தலாம்; (உ) அங்கத்தினர்களுக்கு மட்டும், அதுவும் உற்பத்திச் செலவுகளுக்காக மட்டும் கடன் கொடுக்கப்படும். இக்கடன்கள் 6 மாதம் முதல் ஒரு வருடத்தில் திருப்பித் தரக்கூடிய குறுகிய காலக்கடன்கள்; (ஊ) அவற்றின் அலுவலர்கள் கௌரவத்திற்காக வேலை செய்பவர்கள். (எ) இச்சங்கங்கள் அங்கத்தினர்கள் அல்லாதவர்களிடமிருந்து வைப்புகளைப் பெறலாம்; ஆனல், அவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது. மற்றவகையான விவசாயச் சங்கங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவு. விவசாயச் சம்பந்தமில்லாத சங்கங்கள் அல்லது ஷுல்ஸ்டிலிட்ஷ் சங்கங்கள் அங்கத்தினர்களிடமிருந்து பங்குகளைப் பெற்றும், மத்தியக் கூட்டுறவு பாங்குகளிடமிருந்து வைப்புகளையும் கடன்களையும் பெற்றும் தங்களுக்கு வேண்டிய நடைமுறை முதலை அடைகின்றன. அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் கடன் கொடுக்கப்படும். இதற்குக்கடன் பெறுபவருடைய ஜாமீனும் மற்ற இரண்டு அங்கத்தினர்களுடைய ஜாமீனும் வேண்டும். அங்கத்தினர்களுடைய பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

உச்சநிலை பாங்குகளும் (apex banks), மத்தியக் கூட்டுறவு பாங்குகளும் முதன்மையான சங்கங்களுக்கு மத்திய நிதி நிலையங்களாக இருந்து, அவற்றின் வேலையையும் கட்டுப்படுத்துகின்றன. எனவே, இந்த இயக்கத்தின் வெற்றி, இந்த உச்சநிலை பாங்குகளும் மத்திய பாங்குகளும் திறமையாக வேலை செய்வதைப் பொறுத்துள்ளது.

பக்கம் 422-ல் உள்ள அட்டவணை, கூட்டுறவு இயக்கத்தின் பலத்தை ஒப்பிட்டுக் காட்டுகிறது.[1]

ரிசர்வ் பாங்கின் பரிசீலனை

ஜூன் 1940 வரையில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட்டு, 1941-ல் ரிசர்வ் பாங்கு, டெபுடி கவர்னர் கையெழுத்துடன் ஓர் அறிக்கையை வெளியிட்டது. கூட்டுறவு இயக்கம் ஓர் இக்கட்டான நிலையில் இருக்கிறதென்றும், கிராம வாழ்க்கையை நிருமாணிப்பதில் கூட்டுறவின் பணி மிகக் குறைவானது என்றும், எனினும், முன்பு தோல்வியுற்றிருந்தாலும், அவ்வியக்கத்தை இனி நன்ருக வளர்த்து, எளிய முறையில் கடன் வழங்குவது மட்டுமன்றி, இந்தியாவில் கிராமப் புனரமைப்புக்கு அதை முக்கியக் கருவியாக்கிக்

[1] 'இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் பரிசீலனை' 1949-50 (1952), 1952-54 (1956) என்ற ரிசர்வ் பாங்கு வெளியீட்டிலிருந்து தொகுக்கப் பட்டது.

கூட்டுறவு இயக்கம் பற்றிய புள்ளி விவரங்கள்

		1949—50			1955—56		
		எண்ணிக்கை	அங்கத்தினர் எண்ணிக்கை	நடைமுறை முதல் கோடி ரூபாய்	எண்ணிக்கை	அங்கத்தினர் எண்ணிக்கை	நடைமுறை முதல் கோடி ரூபாய்
மாகாண பாங்குகள்	...	14	18,618[1]	30·45	24	36,394[2]	63.34
மத்திய பாங்குகளும் பாங்கு யூனியன்களும்	...	498	1,89,722[1]	49·87	478	2,72,000[1]	92·67
விவசாயக் கடன் சங்கங்கள்	...	1,16,534	48,17,545	35·22	1,59,939	77,91,000	79·10
விவசாயமல்லாத கடன் சங்கங்கள்	...	7,534	20,65,990	51·60	10,003	30,73,000	85·74
பலநோக்குச் சங்கங்கள்	...	29,525[2]	15.07,801	7·55	65,011[2]	24,10,000	20·63
நில அடமான பாங்குகள்	...	288[3]	1,95,201	12·73	325[3]	4,04,000	29·88
தொழில் சங்கங்கள்	...	5,934	5,53,624	5·98	13,272	12,73,000	13·74
நுகர்வோர் சங்கங்கள் (மொத்த வியாபாரம் முதன்மையானவை)	...	9,034	21,76,468	...	7,433	14,37,102	...
பால் சங்கங்களும் யூனியன்களும்	...	1,004	79,229	...	1,599	1,56,330	...
மார்க்கெட்டிங் சங்கங்கள்[4]	...	8,722	26,09,979	...	12,141	28,77,299	...
தானிய பாங்குகள்	...	...	...	...	8,169	7,30,000	2·42

[1] இந்த எண்கள் தனிப்பட்டவர்கள், பாங்குகள், சங்கங்கள் சம்பந்தமானவை.

[2] இவற்றில் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 22,789 இருந்தன. 1953-54-ல் இவ்வெண்ணிக்கை 29,685 ஆயிற்று.

[3] இவற்றில் 1949-50, 1955-56-ல் முறையே 5-ம், 9-ம் மத்திய முதன்மை நில அடமான வங்கிகளாக இருந்தன.

[4] இந்த எண்கள் முதன்மையான யூனியன்கள், சமஷ்டிகள், இராச்சிய சங்கங்கள் சம்பந்தமானவை.

கொள்ளலாம் என்றும் அது குறிப்பிட்டது. விவசாயக் கூட்டுறவின் தோல்விக்கு, அல்லது தேக்க நிலைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை விவசாய வருமானம் நிச்சயமற்றதாக இருந்ததும், மந்த நிலையின் போது அது மிகவும் குறைந்துவிட்டதும் ஆகும். மூன்றாவதாக ஒரு காரணமும் உண்டு என்று அவ்வறிக்கை குறிப்பிட்டது. அது யாதெனின், உண்மையான கூட்டுறவு உணர்ச்சியையும், சுய உதவியையும், பரஸ்பர உதவியையும் அது வளர்க்கத் தவறியதுதான்.

1946-48 க்குரிய ரிசர்வ் பாங்கு அறிக்கை, கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைப்பற்றி மூன்று அமிசங்களை நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறது: (அ) நாட்டின் பொருளாதாரத்தில் கூட்டுறவு முக்கியப் பங்கு வகிக்க வேண்டுமாயின் இலாகா பணியாட்களுக்குப் பயிற்சியளிப்பதில் போதிய கருத்துச் செலுத்தவேண்டும். குறிப்பாக, 'நுகர்வோர் கூட்டுறவு, தொழில் கூட்டுறவு, கூட்டுறவு மார்க்கெட்டிங், கூட்டுறவு விவசாயம் முதலிய புதிய அமிசங்களில்' பயிற்சியளிக்க வேண்டும்.[1] இலாகா பணியாட்களுக்கு மட்டுமன்றி, நிருவாகிகளுக்கும், நிலையங்களின் அங்கத்தினர்களுக்குங்கூடப் பயிற்சியளிப்பது அவசியம். (ஆ) பல மாகாணங்களிலும் இராச்சியங்களிலும் நல்ல மத்திய நிதி நிறுவனங்களை அமைப்பது பற்றி எண்ணமே இல்லை. (இ) நுகர்வோர் கூட்டுறவுகள், கூட்டுறவுப் பால் அளிப்பு, தொழில் கூட்டுறவுகள் ஆகியவை நகர்ப்புறங்களில் அபிவிருத்தியடைந்திருப்பினும், கிராமங்களில் முக்கியமாகக் கடன் சங்கங்களே உள்ளன. விவசாயியின் தேவைகளுக்கு உதவக்கூடிய பலநோக்குச் சங்கங்களை நிறுவவேண்டியதன் அவசியம் பற்றி அவ்வறிக்கை வற்புறுத்தியுள்ளது.

1948-50-க்குரிய அறிக்கை, கிராமப்புறங்களில் பலநோக்குச் சங்கங்களை அமைக்க வேண்டியதன் இன்றியமையாமையை மீண்டும் வற்புறுத்தியது. 'கூட்டுறவுமூலம் இந்திய விவசாயிகளைப் பொருளாதாரத் துறையில் புனரமைப்புச் செய்யும் எண்ணம் கைகூடவில்லை.'[2]

1950-52-க்குரிய அறிக்கை, பம்பாயிலும் சென்னையிலும் மட்டும் அதிகம் உள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டி, இவ்வியக்கம் சமமாக எங்கும் பரவவில்லை என்று கூறுகிறது. மேலும், அளிக்கப்பட்ட கடன் வசதி விவசாயிகளின் தேவைகளுக்குச் சிறிதும் போதுமானதாக இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. இவ்வியக்கத்தின்

[1] பக்கம் 129.

[2] பக்கம் 185.

புனரமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அவ்வறிக்கை மூன்று கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுகிறது. அவையாவன: கடன் அமைப்புக் கோபுர அமைப்புப் போன்றதாக, ஒத்துக்கொள்ளப் பட்ட முறைப்படி இருக்க வேண்டும் என்பதும், நிதி விஷயத்திலும் அமைப்பு விஷயத்திலும் எல்லா நிலைகளிலும் கூட்டுறவு நிலையங்களை வலுப்படுத்தவேண்டும் என்பதும், இவ்வியக்கத்தின் வளர்ச்சியில் ரிசர்வ் பாங்கும், இராச்சிய, மத்திய அரசாங்கங்களும் முக்கியப் பங்கு வகிக்கவேண்டும் என்பதும் ஆகும்.[1]

1952–54-க்குரிய அறிக்கை, இவ்வியக்கத்தின் பொன்விழாவைப் பற்றிக் குறிப்பிட்டு, ஓர் எச்சரிக்கையையும் புகழுரையையும் அளிக்கிறது. 'பல வழிகளில் முன்னேற்றம் காணப்படுகிறது; ஆனால், செய்யவேண்டிய காரியங்களை ஒப்பிடும்போது, இதுவரையில் செய்தது மிகமிகக் குறைவானது; முக்கியமில்லாதது.'[2] இவ்வியக்கத்தின் முன்னேற்றம் ஒருபுறமிருக்க, கிராம மக்களுள் பெரும்பகுதியினர் கூட்டுறவு இயக்கத்திற்குள் இன்னும் வரவில்லை. அளிக்கப்பட்ட கடன் மிகக் குறைவு; இதனால் விவசாயிகள் மற்றவர்களிடமிருந்து மேலும் கடன் பெறவும், கூட்டுறவுச் சங்கங்களைவிட விரைவில் அளிக்கக் கூடியவர்களிடமிருந்து பெறவும் முயல்கின்றனர். உற்பத்திக் காரியங்களுக்காக விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் ஏற்பாடு செய்வதிலும், கிராம மக்களுள் ஏழைகளின் தேவைகளுக்காகக் கடன் அளிப்பதிலும் அதிகக் கவலை காணப்படவில்லை. 'விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதும் பக்குவப்படுத்துவதும், அங்கொன்றும் இங்கொன்றுமாக வெற்றியுடன் நடத்தப்பட்டிருக்கிறதே தவிர, மொத்தத்தில் வருந்தத்தக்கதாய் இருக்கிறது.'[3] அவ்வறிக்கை, ஆராய்ச்சி நடத்தப்பட்ட காலத்தில், கடன் திரும்பச் செலுத்தப்படுவதில் அதிகச் சீர்கேடு உண்டாகிவிட்டது என்றும், 'செலுத்தப்பட வேண்டிய பாக்கிகள் அதிகரித்துக் கொண்டிருக்கும்போது, விவசாயக் கடன் சங்கங்கள் கடன்களையும் அதிகம் கொடுத்துக்கொண்டிருந்தன என்பது கிராமக் கடன்களை ஏற்பாடு செய்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம்' என்றும் கூறுகிறது.[4] ஆகையால், அது கடன் வசதியைச் சரியான முறையில் பயன்படுத்துவதையும், கடன்கள் கெடு தவறாமல் திரும்பச் செலுத்தப்படுவதையும் சரியாக மேற்பார்வை செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறது.

[1] பக்கம் 196.

[2] பக்கம் 178.

[3] மேலே கூறியது.

[4] பக்கம் 179.

1954-55 அறிக்கைப்படி, அண்மையில் சில ஆண்டுகளாக இவ்வியக்கம் ஆரவாரமாக இல்லாவிடினும், அமைதியாக நிலைத்து நிதானமாக வேலை செய்துள்ளது என்று தெரிகிறது. சில இராச்சியங்களில் அதிகக் கடன்கள் கொடுக்கப்பட்டதன் விளைவாக அதிகப் பாக்கிகள் நின்றுவிட்டிருந்த நிலைமாறிச் சிறிது அபிவிருத்தி காணப்படுகிறது என்று அது மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறது. மேலும், 'கூட்டுறவு விவசாயக் கடன் துறையில், கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் சீர்திருத்தமும் அபிவிருத்தியும் செய்யப்பட்டிருப்பதால், ஓரளவு பலன் கிட்டியிருக்கிறது; அன்றியும், இவற்றால் கூட்டுறவுக் கடன் அமைப்பு வலுவடைந்து, கூட்டுறவுக் கடன் நிலையங்கள் அளித்துள்ள விவசாய நிதியின் அளவும் பெருகியுள்ளது'.[1] ஆனால், நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் குறைந்து சீர்கேடடைந்துவிட்டது இவ்வியக்கத்தின் வருந்தத்தக்க அமிசமாகும் என்று அவ்வறிக்கை கருதுகிறது.

கிராமக்கடன் ஆராய்ச்சி

வழிகாட்டும் குழுவின் அறிக்கை, கூட்டுறவுக் கடனின் குறை பற்றிய மூன்று அமிசங்களை நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. அவை: (1) இவ்வியக்கம் பரவாத இடங்கள் நாட்டில் அதிகமாக உள்ளன; (2) கூட்டுறவு இயக்கம் பரவியுள்ள பகுதிகளில்கூடக் கிராம மக்களுள் பலர் அதில் சேராமல் இருக்கின்றனர்; (3) அங்கத்தினர்கள்கூடத் தம் கடன் தேவைகளைக் கூட்டுறவு இயக்கத்தை விட்டு மற்ற இடங்களிலிருந்து பெறுகின்றனர். "இம்மூன்று குறைகளின் மிகுதியைத் தரத்தில் அன்றி அளவில் கருதும்போது, ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும். அதாவது, நாட்டில் கூட்டுறவுக் கடன் துறையின் ஐம்பதாண்டுச் சாதனை 'தோல்வி அடைந்துவிட்டது' என்பதுதான்." 'வேறு விதமாக இதை வருணிப்பது பொருந்தாது.'[2]

இவ்வறிக்கை, கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அமிசங்களைக் கீழ் வருமாறு தொகுத்துக் கூறுகிறது: 'பல இராச்சியங்களில் முதன்மையான சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் ஏற்பாட்டில், சொத்து ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது; கடனைத் திரும்பப் பெறுவதைப் பற்றிக் கவலை எடுத்துக்

[1] பக்கம் 168.

[2] மேற்கூறிய அனைத்திந்தியக் கிராமக்கடன் ஆராய்ச்சி, பொது அறிக்கை, பக்கம் 245. அவ்வறிக்கை, சில இராச்சியங்களில் இவ்வியக்கம் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறது. உதாரணமாகப் பம்பாயில் குறுகிய கால உற்பத்தி நிதியில் 40% கூட்டுறவுச் சங்கங்களினால் அளிக்கப்பட்டது.

கொள்ளப்படுவதில்லை; கடன், உற்பத்திச் செலவுக்காகவா மற்றச் செலவுக்காகவா என்பதும் கவனிக்கப்படுவதில்லை; உற்பத்தியையும் கடனைத் திரும்பப் பெறுவதையும் தொடர்புபடுத்துவதில்லை.' கடன் பாக்கி ஏறிக்கொண்டே போவதை மேற்பார்வை செய்வதில்லை. இப்போதுள்ள முறைப்படி, இவ்வமைப்பின் மேல்நிலைகளில் கிடைக்கக்கூடிய நிதியை நல்ல முறையில் கீழ்நிலையில் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை.[1] அண்மையில், உச்ச நிலையில் அதிகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், மத்திய பாங்குகள் பலவீனமாக இருக்கின்றன. ஆனால், எல்லா இடங்களிலும் பலவீனமாக உள்ள இச்சங்கிலியில் மிகவும் பலவீனமான இடம் யாதெனின், முதன்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்தான்.[2]

இக்குறைகள் எல்லாம் இருப்பினும், இந்தியாவில் விவசாயக் கடன் அமைப்பு, விவசாயிகள் ஏதாவதொரு முறையில் கூட்டுறவுச் சங்கமாகச் சேர்ந்தால்தான் முடியும் என்ற அடிப்படைக் கொள்கை ஒன்றை அவ்வறிக்கை அறிவிக்கிறது. 'கூட்டுறவு தோற்றுவிட்டது; கூட்டுறவு வெற்றி பெறவேண்டும்.'

கூட்டுறவு இயக்கத்தின் தோல்விபற்றி ஆராய்ச்சி அறிக்கை

கூட்டுறவு இயக்கத்தின் தோல்விக்கு அடிப்படைக்காரணங்களைப் பகுத்தாய்ந்து, இவ்வறிக்கை ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத் துறை 1951-ல் வெளியிட்ட ஒரு கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டுகிறது. அது யாதெனின், போதிய முன்னேற்றமடையாத நாடுகளில் அதிகக் கடன்சுமை இருந்தால், அதிக முதலீடு செய்யப்பட்டுள்ளது என்று பொருளாகாது; உற்பத்தியை மிஞ்சிய நுகர்வுக்காகக் கடன் வாங்கப்படுகிறது என்றுதான் பொருள். கூட்டுறவுக் கடன் சங்கங்களை வெற்றிகரமாக அமைப்பதற்குப் பெரிய தடையாயிருப்பது ஏற்றுமதிப் பயிர்களின் விலைகளில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களே என்றும் அக்கட்டுரை குறிப்பிடுகிறது.

கூட்டுறவின் அடிப்படை நோக்கங்கள், 'சிறந்த விவசாயம், சிறந்த வாணிபம், சிறந்த வாழ்க்கை' என்று இவ்வாராய்ச்சி அறிக்கை கூறுகிறது. கடன் என்பது, கூட்டுறவுப் பொருளாதார முன்னேற்றத்தின் ஒரு பகுதியே. இந்தியக் கிராமங்களில் கூட்டுறவு அமைப்பு, அரசாங்கத்தின் உதவியின்றித் தானாகவே சிறந்த விதைகளையும் உரங்களையும் அளிக்கவோ, நீர்ப்பாசனத்திற்கு அதிக

[1] மேற்கூறியதில் பக்கம் 235-36.

[2] மேற்கூறியதில் பக்கம் 228.

வசதிகள் செய்யவோ, சிறந்த தொழில் நுட்பத்தைக் கற்றுக் கொடுக்கவோ முடியாது. இதற்கு அரசாங்கத்தின் முனைப்புத் தேவை. அண்மையில் நில உரிமை முறை, குடிவாரச் சட்டங்கள் சீர்திருத்தப் பட்டதாலும், விதைகளும் உரங்களும் வழங்கப்பட்டதாலும், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் அமைக்கப்பட்டதாலும் நிலைமை வேகமாக மாறி வருகிறது

'இந்தியாவில் நிறுவனக்கடன்' நகரங்களுக்கு ஏற்றதாக இருக்கிறதென்றும், அது இன்னும் கிராம நலனுக்கு ஏற்றதாக இல்லையென்றும் இவ்வறிக்கை கூறுகிறது. இந்த நிலையில், கிராமங் களில் கிராம உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங் களை ஏற்படுத்தி, அவற்றின்மூலம் கடன்முறையில் வாணிபம் செய்ய வேண்டியுள்ளது. சங்கத்தை அமைத்த பிறகு, அவர்கள் தனிப்பட்ட வர்கள் அளிக்கும் கடன் வசதி, தனிப்பட்ட, லேவாதேவிக்காரர்கள், தொழில்களைத் தனிப்பட்ட முறையில் அமைத்தல் ஆகியவற்றோடு பலமாகப் போட்டியிட வேண்டியிருக்கிறது. இவையெல்லாவற்றிற் கும் வியாபார பாங்குகளும், நிதியும், ஏற்றுமதி வியாபாரம் அல்லது மொத்த வியாபாரமும் ஆதரவாயிருக்கின்றன. இதே நிலையில், கிராம உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முறையில், தங்கள் மகசூலைப் பக்குவப் படுத்துதல், விற்பனை செய்தல் முதலியவற்றிற்காக ஒன்றுசேர வேண்டியிருக்கிறது. இது போதாதென்று கிராமத்தில் பெரிய நிலக் கிழார்களும் கிராம லேவாதேவிக்காரர்களும் ஒருபுறமும், நடுத்தர விவசாயிகளும் சிறிய விவசாயிகளும் மற்றொரு புறமுமாகப் பிளவு பட்டுள்ளனர்.

இந்தியக் கிராமங்களில் கூட்டுறவுக் கடன் இயக்கத்தைப்பற்றி ஆராயும்போது, கிராமங்களில் சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகப்பொருளாதார அமைப்பு இருக்கிறதென்பதை மறந்துவிடக் கூடாது. இது மற்ற நாடுகளில் இல்லாத ஒரு புதுமையான அமைப்பு. அன்றியும், இந்த அமைப்பின் மேல்பகுதி, ரொக்கப் பொருளாதாரத் தோடும், நகரப்பகுதிகளில் குவிந்துள்ள நிருவாகத்தோடும் இணைந் துள்ளது. நகரப் பகுதிகளில் நிருவாகம் குவிந்ததற்குக் காரணம் வரலாற்றில் ஒருங்கே நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகளாகும். அவை யாவன: குடியேற்ற ஆட்சியும் நிருவாகமும் விவசாயத்தை வியாபார மயமாக்கியது; தொழில்களை நகரமயமாக்கியது. கிராமத்திற் குள்ளேயே பெரிய ஏற்றத் தாழ்வையும், கிராமத்திற்கும் நகரத் திற்கும் இடையில் இதே போலப் பெரிய ஏற்றத்தாழ்வையும் உண்டாக்கக்கூடிய நிகழ்ச்சிகளும் சக்திகளும் சேர்ந்து உருக்குலைந் துள்ள இத்தகைய சமூக—பொருளாதார அமைப்பில்தான்,

இந்தியாவில் இதுவரையில் கடன் வசதியை அபிவிருத்தி செய்வதற்குக் கூட்டுறவு முயற்சி செய்யப்பட்டது.[1]

கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கையின் சிபாரிசுகள்

இவ்வியக்கத்தைத் திருத்தியமைக்கும் நோக்கத்தோடு ஓர் இணைப்பான கிராமக்கடன் திட்டத்தை நடத்துமாறு பொது அறிக்கை சிபாரிசு செய்துள்ளது. இவ்வாறு திருத்தியமைப்பதில் முக்கிய அம்சம், இவ்வியக்கத்தை வலுப்படுத்துவதற்காக எல்லா நிலைகளிலும் கூட்டுறவு நிலையங்களோடு அரசாங்கத்தின் கூட்டுறவை ஏற்படுத்துவதுதான். இரண்டாது முக்கிய யோசனை, குறுகிய காலக் கடன்களைப் பயிர்களின்மீது அளிப்பதும், நில அடமான பாங்குகள் உற்பத்திக்கான கடனை அளிப்பதும் ஆகும். மூன்ருவதாக, மேலும் அதிகமான பகுதிகளில், வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள பெரிய முதன்மையான கடன் சங்கங்களின் அடிப்படைமீது விவசாயக் கடனை அளிக்கவேண்டும். நான்காவதாக, விவசாயக் கடனுக்கும், விற்பனை, பக்குவப்படுத்துதல் முதலிய மற்றப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இறுதியாக உள்ள தொடர்பை மாற்றியமைக்க வேண்டும். ஆகவே, கூட்டுறவு விற்பனை, பக்குவப்படுத்துதல் ஆகியவற்றையும், சேமிப்பதற்கு இட வசதி, கிடங்கு வசதி ஆகியவற்றையும் திட்டமிட்டு அபிவிருத்தி செய்யவேண்டும்.

ஒரு முக்கிய சிபாரிசு என்னவென்ருல், கூட்டுறவுப் பாங்குகளுக்கும், மற்றப் பாங்குகளுக்கும் மிக விரிவான பணம் செலுத்தும் வசதிகளும் கடன் வசதிகளும் ஏற்பாடு செய்வதற்காகக் கிராமப் புறங்களில் பல கிளைகளோடுகூடிய அரசாங்கத்தைக் கூட்டாளியாகக் கொண்ட இந்திய அரசாங்க பாங்கியை (State Bank of India) நிறுவ வேண்டும் என்பது. சௌராஷ்டிரா பாங்கு, பாடியாலா பாங்கு, பிகானிர் பாங்கு, ஜெய்ப்பூர் பாங்கு, ராஜஸ்தான் பாங்கு, பரோடா பாங்கு, ஹைதராபாத் அரசாங்க பாங்கு, இந்தூர், மைசூர், திருவாங்கூர் பாங்குகள், இந்திய இம்பீரியல் பாங்கு போன்ற பல அரசாங்க சம்பந்தமான பாங்குகளை ஒன்ருகச் சேர்த்து இந்திய அரசாங்க பாங்கியை நிறுவ வேண்டும். இதில் ரிசர்வ் பாங்கும் இந்திய அரசாங்கமும் 52 சதவீதம் பங்குகளை வாங்க வேண்டும். மேலும், எல்லா நிலைகளிலும் கூட்டுறவுப் பணியாட்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நாடு முழுவதிலும் வசதிகளை விஸ்தரிக்க வேண்டுமென்றும், ரிசர்வ் பாங்கில் தக்க தேசிய நிதிகளை அமைக்க வேண்டுமென்றும் அது கூறுகிறது. இந்திய அரசாங்கம்,

[1] விரிவான விளக்கத்திற்கு மேற்கூறிய நூல் அத்தியாயம், 21-ம் 22-ம் பார்க்க.

இவ்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கொள்கைகளை நடத்தி வைப்பதற்குப் போதிய நிதி வசதியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது.

ரிசர்வ் பாங்கில் இரண்டு நிதிகள் இருக்க வேண்டும்: (1) ஒரு தேசீய விவசாய (நீண்டகால வேலை) நிதி. இது (அ) கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பங்குகளை வாங்க உதவி செய்வதற்காக இராச்சிய அரசாங்கங்களுக்குக் கடன்களை ஏற்பாடு செய்யவேண்டும். முதலில் ரெகரிங் அல்லாத 5 கோடி ரூபாயும், பிறகு 5 கோடி ரூபாய் ரெகரிங் தொகையும் கொடுக்கப்படவேண்டும்.[1] (ஆ) விவசாயக் காரியங்களுக்கு நடுத்தரக் காலக் கடன்களை ஏற்பாடு செய்வது. (இ) மத்திய நில அடமான பாங்குகளுக்குக் கடன்களை ஏற்பாடு செய்வதும், அவற்றின் கடன் பத்திரங்களை விலைக்கு வாங்குவதும். (2) ஒரு தேசீய விவசாயக் கடன் (நிலைபேறுக்க) நிதி. இதற்கு வருடந் தோறும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறையாமல் ஒதுக்கப்பட வேண்டும். இத் தொகை, வறட்சி, பஞ்சம் அல்லது மற்ற இயற்கையான விபத்துகளின்போது, வேண்டிய இடத்தில் குறுகிய காலக் கடனை நடுத்தரக் காலக் கடனாக மாற்றுவதற்கு உதவியாக இருப்பதற்கு, அரசாங்கக் கூட்டுறவுப் பாங்குகளுக்கு நடுத்தரக் காலக்கடனை அளிப்பதற்கு வேண்டும்.

இவற்றோடு, இந்திய அரசாங்கத்தில் மூன்று நிதிகள் இருக்க வேண்டும். அவை, தேசீயக் கிடங்கு அபிவிருத்தி நிதி, தேசீயக் கூட்டுறவு அபிவிருத்தி நிதி, தேசீய விவசாயக் கடன் (நிவாரணம், உத்தரவாதம்) நிதி. முதல் இரண்டு நிதிகளும், தேசீயக் கூட்டுறவு, கிடங்கு அபிவிருத்திக் குழுவின் ஆதரவில் அமைக்கப்பட வேண்டும். இவை இரண்டுக்கும் வருடந்தோறும் ரூ. 5 கோடிக்குக் குறையாமல் ரெகரிங் மானியம் ஒதுக்கப்படும். இதில் சாதாரணமாக ரூ. 3 கோடி கூட்டுறவு அபிவிருத்தி நிதிக்காகவும், ரூ. 2 கோடி கிடங்கு அபிவிருத்தி நிதிக்காகவும் அளிக்கப்படும். பிற்கூறப்பட்ட நிதிக்கு ஆரம்பத்தில் ரெகரிங் அல்லாத மானியமாக ரூ. 5 கோடி அளிக்கப்படும். இந்த நிதிகள் கிடங்குகளை அபிவிருத்தி செய்வதற்கு, மத்திய, இராச்சிய கிடங்கு காரப்பரேஷன்கள்மூலமாகச் செலவு செய்யப்படும். இவைகளுக்கு உதவியாகப் பங்குத் தொகைகள், கடன்கள், மானியங்கள் முதலியவை கிடைக்கும். கூட்டுறவு விற்பனை, பக்குவப் படுத்துதல் முதலியவற்றிற்கும் இந்த நிதிகள் பயன்படுத்தப்படும். மூன்றாவது நிதிக்கு, கூட்டுறவு நிலையங்

[1] மே 1955-ல் இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் ஒன்று முதலில் ரெகரிங் அல்லாத தொகை 10 கோடி ரூபாயாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தியது.

களுக்குப் பஞ்சம், வெள்ளம் போன்ற நிலைமைகளில் நிவாரணம் அளிப்பதற்கு வருடந்தோறும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறையாமல் மானியம் கொடுக்கப்படும். இந்த நிலைமைகளில் அவற்றிற்குச் சேர வேண்டிய பாக்கித் தொகையை நஷ்டக் கணக்கில் எழுதிவிட வேண்டும். இந்த நிதி, அரசாங்கமானது கூட்டுறவு நிலையங்களுக்கு அளித்துள்ள சில வகையான உத்தர்வாதங்களை நிறைவேற்றுவதற்கும் உபயோகப்படும். இவைதான், அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆராய்ச்சியறிக்கையில் முக்கியச் சிபாரிசுகள். இது, ரிசர்வ் பாங்கிலிருந்து கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும், அரசாங்கத்திலிருந்து கூட்டுறவுக் கடன் அல்லாத சங்கங்களுக்கும் நிதி உதவியை அளிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. ஆனால், இந்த இரண்டுவிதமான சங்கங்களின் அமைப்புகளும், கடன் வசதியும் விற்பனையும் ஒன்றுக்கப்பட்ட ஓர் இணைப்பான கடன் திட்டத்தில்தான் சேர்ந்து வேலை செய்ய முடியும். விவசாயிகளின் நன்மைக்காக நாடு முழுவதிலும் கூட்டுறவு இயக்கத்தை முழுவதுமாக வலுப்படுத்தி, நிலைபெறச் செய்து விரிவுபடுத்துவதற்கு மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் ஒன்றுகச் சேர்ந்து முயற்சி செய்வது அவசியம்.

14. நிறுவனங்கள்மூலம் விவசாயக் கடன் (தொடர்ச்சி)

கூட்டுறவின் மற்ற வகைகள் : கடன் அல்லாத சங்கங்கள்

கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கங்கள் கிராமப் பொருளாதாரத்தில் இதேபோல முக்கியத்துவம் வாய்ந்தவை.[1] உத்தரப்பிரதேசத்திலும் பீகாரிலும் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பைக் கொடுக்கும் சங்கங்கள் தனி வகையைச் சேர்ந்தவை. குஜராத்தில் உள்ள பருத்தி விற்பனைச் சங்கங்கள் விளைச்சலை ஒன்ருகத் திரட்டிச் சராசரி விலைக்கு விற்கின்றன. நிலங்களை ஒருங்கிணைப்பதற்கும், அங்கத்தினர்களுக்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதற்கும், நெய் உற்பத்திக்கும் விற்பனைக்கும், மலேரியா ஒழிப்பிற்கும் (வங்காளத்தில்) சிறந்த வேளாண்மைக்கும், கூட்டுறவுப் பண்ணைக்கும் உள்ள சங்கங்கள் கவனிக்கத்தக்கவை. விவசாய உற்பத்தியில் கூட்டுறவு சிறிதளவு தான் உதவியிருக்கிறது. சில இராச்சிய அரசாங்கங்களால், உதாரணமாகப் பம்பாய், உத்தரப்பிரதேசம், சென்னை முதலிய இடங்களில் பரீட்சார்த்தமாகக் கூட்டுறவுப் பண்ணைகள் தொடங்கப் பட்டிருக்கின்றன.

விவசாய விற்பனைச் சங்கங்கள்

விவசாய விளைச்சலை விற்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிறந்த முறையில் உதவ முடியும். விவசாயி கல்வியற்றவனுக இருப்பதால், மார்க்கெட்டு நிலைமைபற்றிய அறிவினுல் உண்டாகக்கூடிய நன்மைகள் அவனுக்குக் கிடைக்கும்படி கூட்டுறவுச் சங்கம் செய்ய முடியும். சரியான போக்குவரத்து வசதி இல்லாததால் அவன்

[1] மற்ருெரு பிரிவில் மார்க்கெட்டிங் பிரச்சினைபற்றி விளக்குவோம்.

தன்னுடைய சொந்தக் கிராமத்தில் அன்றி, வேறெங்கும் சென்று தன்னுடைய விளைச்சலை விற்று அதிக விலை பெற முடியாது. அவனுடைய வறுமையாலும் கடன்களினாலும் அவன் தன்னுடைய விளைச்சலுக்கு முன்பணமாக 20 முதல் 50 சதவீதம் வரையில் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. கடன் கொடுப்பவன் முன்னமே ஏற்பாடு செய்துகொண்டுள்ள விலையில் அவ்விளைச்சலைத் தனக்கு விற்றுவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இந்த விலை எப்பொழுதும் மார்க்கெட் விலையைவிடக் குறைவாகவே இருக்கும். கடன் கொடுத்தவன் பயிர்கள்மேல் கடன் கொடுத்ததல்லாமல், அறுவடை முடிந்தவுடன் கடனைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்துவான். ஏனெனில், அப்படியில்லாவிட்டால், அவன் மறு அறுவடை வரையில் காத்திருக்க வேண்டும். அவன் தன் விளைச்சலை மிக விரைவில் விற்றுவிடவேண்டும். இல்லாவிட்டால், எல்லோரும் ஒரே சமயத்தில் விற்கும்போது விலை மந்தமாகிவிடும். கிராம லேவாதேவிக்காரர்கள் தங்களுக்குப் பணம் கடன் கொடுக்கும் பெரிய லேவாதேவிக்காரர்களுக்கு வட்டி கொடுக்க வேண்டும். அதனால் அவர்கள் விவசாயிகளுக்கு மிகக் குறைவான விலையைத்தான் அளிப்பார்கள். சில சமயங்களில் வியாபார நிறுவனங்கள் பெரிய நகரங்களில் தம் ஏஜென்டுகளை நியமித்து, அவர்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பார்கள்.

இந்த நிலைமையில், அங்கத்தினர்களின் விளைச்சல்களை ஒருங்கு திரட்டி விற்பதற்காகக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கங்கள் எவ்வளவு அவசியம் என்பதை எளிதில் உணரலாம். இந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வேலை சிறிது சிக்கலானது. அதிக அளவில் மார்க்கெட்டிங்குக்காக நிதியைப் பெறுவது கடினம். மேலும், கூட்டுறவு உத்தியோகஸ்தர்களுக்குத் தொழில் நுண்ணியல் தெரியாது; கிடங்கு வசதிகளும் சேமிப்பு இடவசதிகளும் இல்லாமலிருப்பது, விற்பனைச் சங்கங்கள் விரைவாகப் பெருகுவதற்குத் தடையாய் இருக்கிறது. பம்பாயில் பருத்தி விற்பனைச் சங்கங்கள் பருத்திப் பயிர் செய்பவர்களுக்கு நன்மையளித்திருக்கின்றன. அந்த இராச்சியத்தில் பருத்தி மார்க்கெட்டிங் செய்வதற்கு 94 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. அவற்றுள் சூரத்திலும் புரோச்சிலும் உள்ளவை குறிப்பிடத்தக்கவை. சூரத்திலுள்ள விற்பனைச் சங்கங்கள் அண்மையில் ஒரு சமஷ்டியாகச் சேர்ந்து, அங்கத்தினர்களால் தொடங்கப்பட்ட கூட்டுறவுக் கொட்டை நீக்கும் தொழிற்சாலை ஒன்றை (ginning factory) எடுத்து நடத்துகின்றன. வங்காளத்தில் பல சணல் விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. இவைகளுக்குக் கல்கத்தாவில் ஒரு மொத்த விற்பனைச் சங்கம் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் சட்டத்தின் கட்டாயத்தினால் கரும்பு யூனியன்கள் வெற்றியுடன் வேலை செய்து

வருகின்றன. இந்த யூனியன்களில் தனிப்பட்டவர்கள் வாங்குவதும் விற்பதும் நடைபெறுகிறது.[1] அதனுல் இரு திறத்தாரும் நன்மையடைகின்றனர்.

மார்க்கெட்டிங் சங்கங்களினுல் பல இராச்சியங்களில் முன்னேற்றம் உண்டாகி இருக்கிறது. பம்பாயில் 1945-46-ல் இவற்றின் எண்ணிக்கை 197-லிருந்து 1953-54-ல் 331 ஆயிற்று. பம்பாய் இராச்சியக் கூட்டுறவு பாங்கு, மார்க்கெட்டிங் சங்கங்களை நிறுவுவதில் உதவி செய்கிறது; அது தானே பால் விற்பனைச் சங்கங்களை அமைத்திருக்கிறது. சென்னையில் 1948-ல் 192 விற்பனைச் சங்கங்களும், ஐந்து மார்க்கெட்டிங் சமஷ்டிகளும் இருந்தன. இச்சங்கங்கள் ரூ. 188 இலட்சம் கடனுகவும் முன்பணமாகவும் அளித்தன; ரூ. 152 இலட்சம் மதிப்புள்ள விளைச்சலை விற்பனை செய்தன.[2] சென்னையிலுள்ள மார்க்கெட்டிங் சங்கங்களின் முக்கியமான அமிசம், 'கட்டுப்பாடுள்ள கடன் திட்டம்' (Controlled Credit Scheme) என்பது. இது இந்த இராச்சியத்தின் சில பகுதிகளில் வேலை செய்கிறது. இத்திட்டத்தின்படி, விவசாயிகளுக்கு வேண்டும்போது கடன் அளிக்கப்படுகிறது. விளைச்சலை விற்கும்போது கடனைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். கடன் வாங்கியவர் உள்ளூரிலுள்ள முதன்மையான கடன் சங்கத்தின் மூலமோ, அல்லது இதன் இணைப்பான விற்பனைச் சங்கத்தின் மூலமோ தம் இருப்பை விற்பதாக ஒப்பந்தம் எழுதித் தர வேண்டும். சேலம் மாவட்டத்தில் அது 16 வருடங்களாக வேலை செய்துங்கூடத் திருப்திகரமாக வேலை செய்யவில்லை. இதற்கு முக்கியக் காரணம், பக்குவப்படுத்துதல், சேமித்தல் போன்ற வசதிகளையும் மார்க்கெட்டிங் வசதிகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்யாததுதான்.[3] போதிய சேமிப்பு வசதிகள் இல்லாததைப் பற்றி மார்க்கெட்டிங் பிரச்சினையில் பல முறைகள் விளக்கப்பட்டிருக்கின்றன. முதன்மையான மார்க்கெட்டிங் சங்கங்களின் முன்னேற்றத்தைப்பற்றிக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.[4]

[1] பொது அறிக்கை, கிராமக்கடன் வசதி ஆராய்ச்சி; மேற்கூறியது, பக்கம் 107.

[2] மேற்கூறிய ரங்னேகர் எழுதிய நூல், பக்கம் 149 முதல்

[3] கட்டுப்பாடுள்ள கடன் திட்டத்தைப்பற்றி விவரம் அறியக் கிராமக் கடன் ஆராய்ச்சி தொகுதி–I, ஆராய்ச்சி அறிக்கை, பகுதி–2, இந்திய ரிசர்வ் பாங்கு, 1957, பக்கம் 210-12 பார்க்க.

[4] கூட்டுறவு இயக்க அறிக்கை, 1948-50, 1950-52, மேற்கூறியது.

	அங்கத்தினர்கள்			இலட்ச ரூபாய்களில்	
வருடம்	எண்	தனிப்பட்டவர்	சங்கங்கள்	கொடுக்கப்பட்ட கடன்	விற்கப்பட்ட பொருள்களின் மதிப்பு
1949—50	6907	13,20,418	7521	539·56	2507·64
1950—51	7355	11,22,767	6988	657·95	2998·76
1951—52	8246	8,45,279	8241	1112·82	3447·26
1952—53	8816	9,07,484	7415	861·23	2606·40
1953—54	9240	9,18,344	9778	743·30	2191·68
1954—55	9367	9,63,000	7000	681·00	1922·00
1955—56	9778	10,14,000	6000	884·00	2378·00

முதன்மையான கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தும், 1951-52-ல் ரூ. 11·13 கோடியாக இருந்த கடன் அளிப்புத் தொகை 1953-54-ல் ரூ. 7·4 கோடியாகக் குறைந்தது. விற்பனை அளவு (turn over) 1951-52-ல் ரூ. 34·47 கோடியாக இருந்தது, 1953–54-ல் ரூ. 21·92 கோடியாகக் குறைந்தது. இது கட்டுப்பாடு நீக்கத்தின் விளைவே என்பதில் ஐயமில்லை. மார்க்கெட்டிங் நிதி பெறுவதற்குரிய ஒரு வழி யாதெனின், அனுமதி பெற்ற கிடங்குகளை நிறுவுவதுதான். இதனால், ரிசர்வ் பாங்குச் சட்டத்தின் பிரிவு 17 (4d) படி, கிடங்கு ரசீதுகளின் ஜாமீன்பேரில் ஷெடியூல் பாங்குகள் மூலமாகவும், இராச்சியக் கூட்டுறவு பாங்குகள் மூலமாகவும் இந்திய ரிசர்வ் பாங்கிலிருந்து பண வசதி பெறலாம்.

பல இராச்சியங்களில் அனுமதி பெற்ற கிடங்குகளை அமைப்பதற்குச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சென்னையில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கட்டும் கிடங்குகளுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் வரையில் உதவித்தொகை அளிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. 1949-50-ல் இத்திட்டம் வேலை செய்யத் தொடங்கியது. இதுபோலவே, பம்பாயில் விவசாயப் பொருள்களைச் சேமித்து வைக்கவோ, விற்கவோ கிடங்குகள் கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது. இக்கடன்களுக்கு வட்டி 3½ சதவீதம், அல்லது கிடங்கு கட்டும் செலவில் 25 முதல் 50 சதவீதம் வரையில் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

ரிசர்வ் பாங்கு அறிக்கை இந்த நிலைமையைப்பற்றிக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறுகிறது: 'இது வரையில் இந்தியாவில் கூட்டுறவு மார்க்கெட்டிங் அதிக முன்னேற்றம் அடையவில்லை. புள்ளி

விவரங்கள் தவருக இருக்கக்கூடும். ஏனெனின், இந்த நிலையங்களின் பெரும்பகுதி வேலை உணவுத் தானியங்கள், துணி, மற்ற வாழ்க்கைத் தேவைகள் முதலிய முக்கியப் பொருள்களைப் பங்கீடு செய்வதாகவே இருந்திருக்கிறது.'[1] 1952–54-ல் கட்டுப்பாடுகள் சிறிது சிறிதாகத் தளர்த்தப்பட்டபோதுதான் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் அங்கத்தினர்களின் விளைச்சலை விற்பனை செய்யத் தொடங்கின. இதனால், அவற்றின் குறை அவைகளுக்குத் தெரிந்தது. கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை, இந்தியாவில் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கங்கள் தோல்வியடைந்ததுபற்றிக் கூறுவதாவது: 'இந்தியாவில் உள்ள எல்லாக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கங்களையும் சேர்த்தாலுங்கூட அவை முக்கியமாகத் தெரியவில்லை. கடன் சங்கங்கள் காகிதத்தின் மீது தங்களுடைய எண்ணிக்கையின் மிகுதியை விளம்பரப்படுத்தி மனத்தைக் கவரும் தன்மைகூட அவைகளுக்கு இல்லை. 'முதன்மையான கடன் சங்கங்களுக்கும் மார்க்கெட்டிங் சங்கங்களுக்கும் வேலையில் பயனுள்ள இணைப்புச் சிறிதும் இல்லை.'[2]

நில அடமான பாங்குகள்

பழைய கடன்களைத் தீர்ப்பதற்கும், நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நீண்ட காலக்கடன் அளிப்பதற்குத் தனியான நிறுவனம் வேண்டியிருந்ததால் நில அடமான பாங்குகள் நிறுவப்பட்டன. இத்தகைய முதல் பாங்கு, சென்னையில் 1929-ல் மத்திய நில அடமான பாங்கு என்னும் பெயருடன் தொடங்கப்பட்டது. இந்த மாகாணத்தில் உள்ள முதன்மையான பாங்குகளின் வேலையை அது இணைப்பாக நடத்தியது. இப்பாங்குகள் 1942-43-ல் 12-லிருந்து 120 ஆயின. மற்ற மாகாணங்களிலும் இத்தகைய பாங்குகள் தோன்றின. 1942-43 இறுதியில் இந்தியாவில் 27 நில அடமான பாங்குகள் இருந்தன. இவற்றின் நடைமுறை முதல் ரூ. 7·7 கோடி. நில அடமானக் கடன்களின் பெரும்பகுதி விவசாயக் கடன்களை மீட்பதற்காக அளிக்கப்பட்டது. விவசாயப் பொருள்களின் விலைகள் விழுந்துவிட்ட சமயத்தில், விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாதபோது, அவர்களுடைய நிலங்கள், கடன்காரர்கள் கையில் அகப்படாமலிருப்பதற்காக இவை ஏற்படுத்தப்பட்டன. நிலைமை பிறகு சீர்திருந்தியபோது, கடன் நிவாரணத்திற்குப் பதிலாக நில அபிவிருத்திக் கடன்கள் அளிக்கப்பட்டன. எடுத்துக்

[1] மேலே கூறியது, 1948-50, மார்க்கெட்டிங் பிரச்சினை பற்றி மேல் விவரங்களுக்கு முந்திய அத்தியாயத்தில் பிற்பகுதியைப் பார்க்கவும்.

[2] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம் 106-107.

காட்டாக பம்பாயில் நில அடமான பாங்குகள் கிணறுகள் வெட்டுவதற்கும், கரைகட்டுவதற்கும், விலையுயர்ந்த விவசாயக் கருவிகளை வாங்குவதற்கும் கடன்களை அளித்தன. இக்கடன்கள் குறைந்த வட்டிக்குக் கிடைக்கின்றன. இதனால் இவைகளுக்கு உண்டாகும் நஷ்டத்திற்கு ஈடாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தப் பாங்குகள் அடைந்த வளர்ச்சியைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம் :[1]

மத்திய நில அடமான பாங்குகள்

இலட்ச ரூபாயில்

வருடம்	எண்ணிக்கை	உறுப்பினர்	வைப்பும் கடனும்	நடைமுறை முதல்	புதிய கடன்கள்
1948—49	5	8,127	19·55	597·35	103·40
1951—52	6	34,769	152·94	1,016·58	250·65
1952—53	8	36,898	99·61	1,230·86	170·57
1953—54	9	49,753	144·13	1,392·66	192·40
1954—55	9	65,893	198·85	1,578·82	243·49
1955—56	9	90,790	226·02	1,852·63	283·04
1956—57	9	1,16,560	266·56	2,132·47	380·22

ஆந்திரா, சென்னை, மைசூர் இராச்சியங்கள் தவிர மற்ற இடங்களில் முதன்மையான நில அடமான பாங்குகள் அதிக முன்னேற்றமடையவில்லை. 1956-57-ல் இந்தியாவில் இருந்த இத்தகைய 326 பாங்குகளில் (இவற்றின் அங்கத்தினர் 3,34,000 ; நடைமுறை முதல் ரூ. 1,270·44 இலட்சம்) 240 பாங்குகள் (இவற்றின் அங்கத்தினர் 2,67,000 ; நடைமுறை முதல் ரூ. 1,047·40 இலட்சம்) இந்த மூன்று இராச்சியங்களிலேயே இருந்தன.

நில அடமான பாங்குகள் பெரும்பான்மையாக உள்ள சிறிய நிலக்கிழார்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை.[2] இவற்றின்

[1] 'இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான புள்ளி விவர அறிக்கை' 1855-56, பக்கம் 82-85.

[2] ஒப்பிடுக : A பகுதி இராச்சியம் ஒன்றில் மற்ற இடங்களைவிட அதிகமாக இந்த பாங்குகள் பெருகியுள்ளன. அந்த இராச்சியத்தைச் சேர்ந்த ஒருவர், 'நில அடமான பாங்குகள் விவசாய மக்களை அணுகுவதுகூட இல்லை. இவை பணக்காரர்களாகவும் பெரியவர்களாகவும் உள்ள விவசாயிகளுக்குத் தான் உதவுகின்றன. இவர்களுள் சிலர் தலத்திலில்லா நிலக்கிழார்களாய், நிலங்களைக் குத்தகைக்கு விடுபவர்கள்' என்று கூறுகிறார் (பொது அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டது. பக்கம் 225).

பொருட் சாதனங்களைப் பெருக்கிக்கொள்வதற்குக் கடன் பத்திரங்களை உபயோகித்துங்கூட (இவை பாங்குகள், இன்சூரன்சு கம்பெனிகள், மற்ற நிறுவனங்களால்தான் அநேகமாக வாங்கப்படுகின்றன) இவை போதிய அளவு பொருட் சாதனங்களை அடையவில்லை; பொதுவாக, இவைகளின் கடன் பத்திரங்களுக்கு இராச்சிய அரசாங்கங்கள் உத்தரவாதம் அளித்துங்கூடத் தங்கள் வேலைக்கு வேண்டிய அளவு நீண்ட கால நிதிகளை இவை அடைய முடிவதில்லை. இவற்றின் வேலை விவசாயிகளின் நீண்ட காலத் தேவைகளுக்கு ஏற்றதாக இல்லை. திட்டக் குழு இவற்றின் மந்தமான முன்னேற்றத்திற்குக் காரணமான இரண்டு அமிசங்களை விளக்கிக் கூறுகிறது. அவை, பயிற்சி பெற்ற பணியாட்கள் இன்மையும், கடன் வாங்குபவர் நிலத்தைச் சட்டப்படி அடமானமாக வைக்க முடியாமல் இருப்பதும் ஆகும்.[1] இப்போது வேலை செய்யும் முறையில் நில அடமான பாங்குகள் விவசாயிகளின் நீண்ட காலத் தேவைகளைத் திருப்தி செய்ய முடியாது.[2]

ஆராய்ச்சி அறிக்கையும் கூட்டுறவுக்கடனின் எதிர்காலமும்

கிராமக்கடன் ஆராய்ச்சிபற்றிய மிகப் பெரிய அறிக்கையைக் கவனிக்கும்போது அது விவசாய அபிவிருத்திப் பிரச்சினையோடு இறுதியாக இணைந்துள்ள பிரச்சினைகளை விவசாயக் கடன் சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்து கூறப்பட்டது என்று கூறத் தயங்க வேண்டியதில்லை. இவ்வறிக்கையைத் தயாரித்தவர்கள் நாட்டில் உள்ள மிகப் பெரிய விவசாயக்கடன்சுமையைப்பற்றி அறிந்திருந்துங்கூட, விவசாயச் சீர்திருத்தத்திற்கு முதன்மையான தடையாக உள்ள இதை அகற்றுவதற்கு ஓர் உருப்படியான யோசனையையும் கூருமலிருந்தது வியப்பாக இருக்கிறது. விவசாயியின் முந்திய கடன்களைக் கவனிக்காமல் இருந்தால் - கடன் ஏற்பாட்டை எவ்வளவு பெருக்கினலும், இப்போது விவசாயத்திற்குப் போதும் என்று கருதப்படுகிற எந்தக் கடன் வசதியும் - இவ்வறிக்கையில் உத்தேசிக்கப்படும் பலன் ஒன்றும் கிடைக்காது. இரண்டாவதாக, விவசாயியின் நுகர்வுத் தேவைகளை அளிக்கப் போதுமான ஏற்பாடு செய்யவேண்டிய அவசியத்தையும் இந்த அறிக்கை நன்கு உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. 'முக்கியமாக உற்பத்திக்கும், தேவையான இடங்களில் நுகர்வுக்கும், நிறுவனங்களின் மூலம் போதிய நிதி வசதி செய்தாலன்றி, லேவாதேவிக்காரனுக்கு மாற்ருன ஒரு வழியையும் செய்ய

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 239-40.

[2] விவரங்களுக்குப் பொது அறிக்கை (மேலே கூறியது), பக்கம் 221-23ம் ஆராய்ச்சி அறிக்கை, தொகுதி-I, பகுதி 2. (மேலே கூறியது) அத்தியாயம் 20, பக்கம் 318-334-ம் பார்க்க.

முடியாது' என்று இந்த ஆராய்ச்சி அறிக்கை கூறியிருப்பதால், இத் தேவையை அது உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது.[1] விவசாயிகளில் கணிசமான சதவீதத்தினருக்கு விளைச்சலின் மொத்த மதிப்பைவிட விவசாயச் செலவு அதிகமாகியிருக்கிறது என்பதை இந்த அறிக்கை நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. இது பயிர்கள் முற்றிலும் அல்லது ஒரு பகுதி விளையாமல் போன இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களைப்பற்றிக் கூறப்பட்டது. விவசாயம், விளைச்சலை விற்பதற்காக அன்றி, வயலில் கிடைப்பதை வீட்டில் நுகர்வதற்குப் பெறும் நோக்கத்தோடு முக்கியமாகச் செய்யப்பட்டது.[2] இத்தகைய பிழைப்புக் கருதிய பொருளாதாரத்தில் விவசாயக் குடும்பங்களின் அன்றாடத் தேவைகளுக்கு மட்டுமன்றி, அடிக்கடி நிகழும் பிறப்பு, கலியாணம், மரணம் முதலிய செலவுகளுக்கும் கடன் வசதி கிடைக்கும்படி செய்தாலொழியக் கடன்சுமைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதுதான் உற்பத்தியல்லாத செலவுக்குக் கடன் கொடுக்கத் தயாராக இருக்கும் தனிப்பட்ட லேவாதேவிக்காரன் கிராமப் பகுதிகளில் நிலையாக இருப்பதற்கு ஒரு முக்கியக் காரணம். வழிகாட்டும் குழு, ஏலச் சீட்டுகளை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கும் யோசனை விவசாயிகளின் தேவையைச் சமாளிப்பதில் வெற்றி பெற முடியாது.[3]

இந்தியாவில் கூட்டுறவைப்பற்றி, 'வேர்கள் மண்ணில் பதிய மறுப்பதால் அரசாங்கம் இரு கைகளாலும் செடியை நேராகப் பிடித்துக்கொண்டிருக்கிறது' என்று உவமித்துக் கூறியிருப்பதில் ஓரளவு உண்மை இருக்கிறது. விவசாயிகள் உண்மையாக ஒத்துழைக்க விரும்பினாலொழிய, அரசாங்கத்தால் தொடங்கப்பட்டுக் காப்பாற்றப்படும் நிலையங்கள் வெற்றி பெறுவதற்கு இடமில்லை.

கூட்டுறவு இயக்கத்தை மீண்டும் நோக்கும்போது, விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்கு எளிதில் கடன் கிடைக்கும்படி செய்தால் மட்டும் போதாது. 'விவசாயம் செழித்தால்தான் கூட்டுறவுக் கடன் இயக்கம் செழிக்க முடியும்.' இந்தியாவில் விவசாயத்தின் அபிவிருத்தியும் செழிப்பும் பல அம்சங்களைப் பொறுத்தன. அவை, நிலங்களை ஒருங்கிணைப்பது, மேலான விதைகள், சீர்திருந்திய விவசாய முறைகள், அதிக உரங்கள், சிறந்த மாற்றுப் பயிர் முறை, அதிக

[1] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம் 160.

[2] சுருக்கம், தொகுதி-I, ஆராய்ச்சி அறிக்கை, 1955. பக்கம் 68. விவரங்களுக்கு நடைமுறை விவசாய வேலைகள், ஆராய்ச்சி அறிக்கை, தொகுதி-I, 1956, பக்கம் 818-951 பார்க்க.

[3] ஏலச் சீட்டுகள் பற்றிய விவாதத்திற்குப் பொது அறிக்கை, பக்கம்-338-40 பார்க்க

நீர்ப்பாசன வசதிகள் முதலியவை. கடனைக் கொடுப்பதால் மட்டும் இவையெல்லாம் கிடைத்துவிடா. எளிய கடன் அளிப்பு நிறுவனம் என்ற முறையில் அன்றி, விரிவான முறையில் கூட்டுறவு நிகழுமாறு செய்வது ஒரு நல்ல முறையும் நிருவாகமும் ஆகும். இந்த முறைப் படி நமக்காகப் பிறர் நம் காரியங்களைச் செய்யாமல் நாமே செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்.[1]

கூட்டுறவுச் சங்கங்களின் பயனை விஸ்தரிப்பதற்குக் கூறப்படும் பல யோசனைகளுள் பலநோக்குச் சங்கங்களை நிறுவுவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்கும் நிறுவனங்களாக அன்றி வேறொரு வேலையும் செய்யவில்லை என்றும், தங்கள் அங்கத்தினர்களின் வாழ்க்கையில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் பாங்கு தன் அறிக்கைகளில் இப்போதுள்ள கூட்டுறவு முறையில் காணப்படும் இக்குறையை எடுத்துக்காட்டிக் கடன் சங்கங்கள் பலநோக்குச் சங்கங்களாக மாற்றப்படவேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது. இவை நிதியை அளிப்பதோடு, கிராம மக்களின் வாழ்க்கை மேன்மையடைவதற்கு உதவி செய்து, நல்ல விதைகளையும், திருந்திய கருவிகளையும் அளித்து, மத்தியஸ்தம் செய்து வழக்காடும் செலவைக் குறைத்து, நிலங்களை ஒருங்கிணைத்து, சுகாதாரத்தை விருத்தி செய்து, மருத்துவ உதவியளித்து இவ்வாறு கிராம வாழ்க்கையின் காரியங்க்ளுக்கெல்லாம் கேந்திரமாக விளங்க வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கின் விவசாயக் கடன் இலாகா, கிராமங்களில் முதன்மையான பகுதியாக பலமுனைச் சங்கங்களை நிறுவவேண்டும் என்று கூறியும், ஒரே சங்கம் விவசாயியின் எல்லாத் தேவைகளையும் அளிக்க முடியும் என்ற கருத்தைக் கூட்டுறவு அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. விவசாயிக்குப் பல தேவைகள் இருப்பதால், ஒவ்வொன்றையும் ஒரு தனிச் சங்கம்தான் கவனிக்க முடியும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

எனினும், இக்காலத்தில் கிராமங்களில் முதன்மையான பகுதியாகப் பலமுனைச் சங்கங்களை அமைப்பது நல்லது என்ற கருத்து

[1] ஒப்பிடுக: ‘இந்தியா, சீனு, தென்கிழக்கு ஆசியா, நடுக்கிழக்கு ஆசியா ஆகிய இடங்களில் கடன் பற்றுக்குறை, வறுமைக்குக் காரணமாகவும் அதன் விளைவாகவும் இருக்கிறது. சிறிய விவசாயிகளும் வாரக்குடிகளும் அதிகக் கடன்படுவது பொருளாதாரக் குறைபாடுகளின் அடையாளம். இவை கடன் அளிக்கும் முறையைவிட மிகக்கேடானவை. இந்த நாடுகள் கடன் அளிக்கும் ஏற்பாட்டைச் சீர்திருத்தினுல் மட்டும் கடன் பிரச்சினை தீர்ந்து விடாது என்றும், விவசாய புனரமைப்புக்கான ஒரு பொதுத் திட்டத்தின் பகுதியாகக் கடன் வசதிகளைக் கூட்டுறவுக் கொள்கைப்படி விவசாயிகளுக்கு விஸ்தரித்தால்தான் அது வெற்றியடையும் என்றும் தோன்றுகிறது.’ (‘விவசாயக் கடனிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள்’—விவசாயக் கடன் கூட்டுறவுக் கடன் பற்றிய பன்னுட்டு மாநாடு, 1952, பக்கம் 72, 75).

வளர்ந்து வருவது ஒரு நல்ல அறிகுறியாகும். கூட்டுறவுத் திட்டம் பற்றிய சரய்யா குழுக்கூட, முதன்மையான கடன் சங்கங்களைப் பல முனைச் சங்கங்களாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறது. இக்கருத்து முக்கியமாகப் பம்பாய், சென்னை, உத்தரப் பிரதேசம், மைசூர் ஆகிய இடங்களில் பரவியிருக்கிறது.

பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகத்தின் ஆதரவில் வெளியிடப்பட்ட ஜினிவா அறிக்கை ஒன்று, 'பொருளாதாரத் துறையில் பலவீனமாக இருப்பவர்கள், தாமாக விரும்பிச் சம உரிமை, சமப் பொறுப்பு என்ற அடிப்படையில் ஒன்றுகூடித் தங்களுடைய பொருளாதார வேலைகளைத் தம் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப ஒரு நிறுவனத்தினிடம் ஒப்படைப்பார்கள். இதுவே கூட்டுறவுச் சங்கம் என்பது. இப்பொருளாதாரத் தேவைகள் அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவை. ஆனால், இவற்றை அவர்கள் தனியாக இருந்து முயற்சி செய்தால் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. ஆதலால், இந்த நிறுவனத்தை அவர்கள் தங்கள் பரஸ்பர உலகியல் நன்மைக்காகவும் தார்மிக நன்மைக்காகவும் ஒன்ருகச் சேர்ந்து பயன்படுத்திக் கொள்கிருர்கள்' என்று கூறுகிறது.[1] இந்த விளக்கத்தைப் புரிந்து கொள்ள இந்தியாவில் போதிய கல்வியறிவுடையவர்கள் இல்லை. ஜனநாயகக் கட்டுப்பாடும் இல்லை. இதேபோலத் தொழிலை நடத்தும் திறமையும், அடிப்படையில் உள்ள சுதந்திரமான பெரிய பகுதிகளைச் சமஷ்டியாக இணைக்கும் அமைப்பும் இல்லை. இந்த அமைப்பும் இதன் நோக்கமும் ஒன்று. ஆனால், இந்தியாவில் அமைப்புக்கும் நோக்கத்திற்கும் அதிக அடிப்படை வேற்றுமை இருப்பதால், கூட்டுறவு இயக்கத்தால் நாம் அதிக நன்மையை எதிர்பார்க்க முடியாது.

ஆனால், அது தன் இலட்சியத்தை நிறைவேற்றுவது ஒருபுறமிருக்க, மற்றொரு கேள்வியை நாம் கேட்கலாம்: விவசாய மக்களுக்குக் கூட்டுறவு இயக்கம் எளிய முறையில் கடன் கொடுக்கும் சிறிய காரியத்திலாவது வெற்றி பெற்றிருக்கிறதா? 1939-40-ல் விவசாயச் சங்கங்களின் மொத்த நடைமுறை முதல் சுமார் ரூ. 30·5 கோடியாகவும், 1945-46-ல் ரூ. 33 கோடியாகவும், 1950-51-ல் ரூ. 51 கோடியாகவும், 1956-57-ல் ரூ. 98 கோடியாகவும் இருந்தது. ரூ. 8·1 கோடி விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது. இது இந்தியாவின் மொத்த விவசாயக் கடன் சுமையில் அரை சதவீதம் இருக்கக்கூடும். 1956-57-ல் கொடுக்கப்பட்ட கடன்கள் ரூ. 67·33 கோடி. அதற்கு முந்திய வருடம் ரூ. 49·62 கோடிதான். யுத்தத்திற்குப் பிறகு, யுத்தத்திற்கு முன்பைவிட விவசாயக் கடன் சங்கங்கள் கொடுத்த கடன்

[1] 'கிராம வாழ்க்கையில் கூட்டுறவு நடவடிக்கை', ஜினிவா, 1939. பக்கம்-5.

தொகை மிக உயர்ந்தது. ஆனால், இவை குறுகிய காலக் கடன்கள். விவசாயிகளில் பெரும்பாலோர் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற் குரிய பணங்கூட இல்லாதவர்களாக இருக்கிறார்கள். 'மக்களில் ஒருபுறம் பெரும் பணக்காரர்களாக இருப்பதால், அவர்கள் அங்கத் தினர்களாகி, வரையறையில்லாத பொறுப்பை ஏற்றுக்கொள்ள விரும்ப வில்லை. மற்றொருபுறம், பலர் மிகவும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கு அங்கத்தினர் நிலை கொடுக்கப்படுவதில்லை. ஆகையால், கூட்டுறவு அங்கத்தினர்கள் நடுத்தர விவசாய மக்களின் பிரதிநிதி களாக இருக்கின்றனர் என்று கொள்வதில் தவறில்லை.'[1] கிராமக் கடன் ஆராய்ச்சியால், மொத்தக் கடன்களில் கூட்டுறவு இயக்கத் தினால் விவசாயிக்குக் கொடுக்கப்படும் கடன் அளவு மிகக் குறைவு என்றும், இது அவனுடைய கடன்களில் 3 சதவீதத்திற்குச் சிறிது அதிகமாக உள்ளது என்றும் தெரிகிறது. இதுமட்டுமன்றிக் 'கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் சிறிதளவில், ஒரு சிறு பகுதிதான் நடுத்தர விவசாயிக்கும் சிறிய விவசாயிக்கும் கிடைக்கிறது.'[2]

இவ்வியக்கத்தை ஊக்கமாக ஆதரிப்பவர்கள், விவசாயக் கடன் சங்கங்களுக்கு உள்ள சாதனங்கள் மிகக் குறைவு என்று விடாமல் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாட்டின் குறுகிய, நடுத்தர, நீண்டகாலக் கடன் தேவைகள் சுமார் ரூ. 750 கோடி என்று மதிப் பிடப்பட்டுள்ளது. நாட்டின் குறுகிய கால வங்கிச் சாதனங்களைத் தன் கையில் வைத்திருக்கும் ரிசர்வ் பாங்கு, நன்கு அமைக்கப் படாததோடு காலநிலை மாறுதல் உள்பட எல்லாவிதமான ஆபத்து களுக்கும் ஆளாகக் கூடிய ஒரு தொழிலுக்கு நிதியை உதவுவதற்காக இச்சாதனங்களை அளிக்க முடியாது என்று கூறப்படுகிறது. இச் சாதனங்களை அளித்தாலுங்கூடத் தேவையான கடன் வசதி முழு வதும் கிடைக்காது. அஞ்சல் நிலையச் சேமிப்பு வங்கிகள், கஜானா பத்திரங்கள் (treasury bonds) மூலமாகக் கிடைக்கும் கிராமச் சேமிப்புகளின் கணிசமான பகுதி, விவசாயத்திற்கு நிதி உதவும் முதன்மையான நோக்கத்திற்கன்றி மற்ற நோக்கங்களுக்கு அளிக்கப் படுகிறது. பெருந்தொழில்களுக்கு உதவுவதற்குத் தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் ஒன்றை நிறுவியுள்ள நம் தேசீய அரசாங்கம், மக்களின் நலனில் அதிகக் கவலை கொண்டிருப்பதாகக் கூறும் அரசாங்

[1] வங்காள மாகாண பாங்கு விசாரணைக் குழு அறிக்கை. பக்கம் 69. ஒப்பிடுக : 'உதவி மிகவும் தேவையாக உள்ள விவசாயிகளுக்கு மிக்க வறுமையுள்ள ஜில்லாக்களில், கடன் சங்கங்களால் பயனில்லை என்பது மற்றொரு சங்கடம். தங்கள் நிலங்களில் போதிய வருமானம் இல்லாத—இதற்குக் காரணம் துண்டுபடுதல், சீதோஷ்ண நிலைத் துன்பம் அல்லது மற்றத் துன்பங்கள்—தங்கள் கடன்களை என்றுமே திருப்பிக் கொடுக்க முடியாத விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் சிறிதும் பயனில்லை.' டாக்டர் ஆன்ஸ்டே கூறியது. (இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி, பக்கம் 202).

[2] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம்-8.

கம், கிராம மக்களின் சேமிப்புகளை நாட்டின் முக்கியத் தொழிலை வளர்ப்பதற்குப் பயன்படுத்துவதற்காகத் தேசீய விவசாய நிதிக் கார்ப்பொரேஷன் ஒன்றைக் கொள்கையளவில்கூட ஒத்துக்கொள்ள வில்லை. காட்கில் குழு இக்கருத்தை எண்ணியது. காங்கிரஸ் விவ சாயச் சீர்திருத்தக் குழு இக்கருத்தைப் புறக்கணித்துவிட்டது. இதற்குக் காரணம், இது ஒரு புதிய நிலையமாக இருக்கும் என்பதும், கடன் வசதிகளைச் செய்ய வேண்டுமானால், நாற்பது ஆண்டுகளாகக் கிராம மக்களோடு தொடர்புகொண்டுள்ள முதன்மையான சங்கங்கள், நில அடமான வங்கிகள் ஆகியவற்றின் மூலமாக இது நல்ல முறையில் செய்யப்படக்கூடும் என்பதும் ஆகும்.[1] ஆனால், கிராமச் சங்கங்கள் தங்கள் விதிகளின்படி தவணைகளில் திருப்பித் தரக் கூடிய, போதிய உத்தரவாதமளிக்கக்கூடிய பணக்கார விவ சாயிக்குத்தான் இவை உதவுகின்றன என்பதை மறந்துவிடு கிறார்கள்.

கடன் அளிக்கும் இயக்கம் என்ற முறையில், கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டுக் குறைகள் நிறைந்ததாய், நிருவாகத் தாமதங்களும் தடைகளும் உடையதாய் இருக்கிறது என்று நாம் கூறியிருப்பதால், இவ்வியக்கத்தையே நாம் எதிர்க் கிறோம் என்று கொள்ளக்கூடாது. கடன் அளிக்கும் இயக்கமாகவே அது அளவற்ற நன்மைகளைச் செய்யக்கூடும். அரசாங்க சாதனங் களின் துணைகொண்டு, விவசாயியின் நடைமுறைத் தேவைகளுக்கு எளிய முறையில் கடன் கொடுத்தால் அது அவ்வாறு நன்மை செய்ய முடியும். விவசாயச் செழிப்புக்காகக் கடன் அளிப்பது தவிர இவ்வியக்கம் வேறு பல வழிகளிலும் உதவக்கூடும். அவை, மார்க் கெட்டிங் அபிவிருத்தி, சிறந்த விதைகளை யளித்தல், கரை கட்டுதல், நில அரிப்புத் தடுப்புத் திட்டங்கள், கிணற்று நீர்ப்பாசன அபிவிருத்தி, நில மீட்புத் திட்டங்கள், நிலங்களை ஒருங்கிணைத்தல், குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிரளித்தல் முதலியன. 'கிராம மக்களின் பொதுவான, குறிப்பாகப் பொருளாதார புனரமைப்புக் காகக் கூட்டுறவு இயக்கத்தின் பணி கூட்டுறவைப் பயன்படுத்துவது தான்.'[2] இந்த விதத்தில் மாற்றியமைத்தால்தான் விவசாயப்

[1] மிக அதிகமான சிறிய விவசாயிகளுக்கு நிறுவனத்தின் மூலமாக உதவுவது நடைமுறையில் முடியாது என்றும், கூட்டுறவு நிதிக்குத்தான் தேவையுள் ளதே அன்றி 'கார்ப்பொரேஷன்' நிதிக்குத் தேவையில்லை என்றும், இதில் நிதி அளிக்கும் நிறுவனம் நேராக விவசாயியோடு தொடர்பு கொள்கிறது என்றும் கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை கூறுகிறது (பொது அறிக்கை, பக்கம்-158).

[2] கூட்டுறவு இயக்கம்பற்றி ரிசர்வ் பாங்கு அறிக்கை' 1941. பக்கம்-81. மேலும் V.L. மேத்தா, சமூகப் பணி பற்றிய இந்திய சஞ்சிகையில் (Dec. 1942) எழுதிய, 'இந்தியக் கிராமங்களுக்குக் கூட்டுறவு ஏற்றதா?' என்ற கட்டுரையைப் பார்க்க.

புனரமைப்புக்குக் கூட்டுறவு இயக்கம் ஒரு தேசீய இயக்கமாக மாற முடியும்.

மேனாடுகளில்கூடச் சிறிய நிலக்கிழார்கள் தாமாகவே, விலைகளைப்பற்றியும், கடத்து (transport) வீதங்களைப்பற்றியும், நுகர்வு நிகழும் இடங்களின் உண்மையான தேவையைப் பற்றியும் சரியாக அறிவதில்லை என்று கூறப்படுகிறது. 'சிறிய உற்பத்தியாளர்களுக்கு மார்க்கெட்டிங் பிரச்சினை இயல்பாகவே தீர்க்க முடியாதது. பெரிய நிலக்கிழார்களுக்கு அவர்களுடைய மூலதனம் எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு நன்மைகளைச் சிறிய நிலக்கிழார்களுக்குக் கூட்டுறவு இயக்கம் அளிக்கிறது.'[1] இந்தியாவில் விவசாயிக்கு இந்தக் கஷ்டங்கள் எல்லாம் உண்டு. விற்பனைச் சங்கங்களாகப் பணியாற்றும் கூட்டுறவு மார்க்கெட்டிங் அரசாங்கத்தின் உதவியின்றி இக் கஷ்டங்களைத் தீர்க்க முடியாது. உடனடியாக, அவசரமாகச் செய்யவேண்டிய வேலை தரகர்களை ஒழிப்பதுதான். இவர்களை ஒழிக்கவேண்டுமானால், வயலில் விளையும் பயிர்களைத் திரட்டி எடை போட்டு, தரப்படுத்திச் சேமித்து விவசாயிகளின் பொறுப்புகளையும், அடுத்த பயிர்ச் செலவையும் சமாளிப்பதற்குக் கடன் கொடுத்து, விளைச்சலை விவசாயிக்கு நல்ல விலைக்கு விற்றுத்தர வேண்டும். இத்தகைய அமைப்பு, விற்பனைச் சங்கமாயினும், வேறெந்த விதமான கூட்டுறவு அமைப்பாயினும், இந்தியா போன்ற நாட்டில் ரிசர்வ் பாங்கு அளிக்கக்கூடியது போன்ற விரிவான கடன் ஏற்பாட்டைப் பெற்றால்தான் வெற்றி பெற முடியும். ரிசர்வ் பாங்குக்கு ஏற்கெனவே கடன் நிறுவனங்களுக்கும் அரசாங்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கிராமக் கடன் அளிப்பதற்குச் சட்டப்படி அதிகாரம் உண்டு. இதுவரையில் அது இவ்வாறு தன் சாதனங்களைப் பயன்படுத்தாமல் இருந்தது. அனுகூலமில்லாத நிலையில், விவசாயி தன் விளைச்சலை விற்றுவிடாமல் சேமித்து வைத்துக்கொள்வதற்கு உதவுவதற்காகக் கடன் அளிப்பதைக்கூட அது அவ்வளவாக ஆதரிக்கவில்லை.

1951-லும் 1953-லும் இந்திய ரிசர்வ் பாங்கு சட்டத்தில் செய்யப்பட்ட மாறுதல்கள், மார்க்கெட்டிங் சங்கங்கள் அல்லது மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் உண்டியல்கள் (Bills of Exchange), புரோநோட்டுகள் அரசாங்கக் கூட்டுறவு வங்கிகளால் உறுதியளிக்கப்பட்டிருந்தால் (endorsed) அவற்றை ஈடாக வைத்துக்கொண்டு கடன்களும் முன் பணமும் கூட்டுறவு நிலையங்களுக்குக் கொடுக்கலாம் என்று அந்தப் பாங்குக்கு அதிகாரம் அளித்திருக்கின்றன.

[1] கிராம வாழ்க்கையில் கூட்டுறவு நடவடிக்கை, பக்கம் 18.

'விவசாய வேலைகள்' என்பதற்கு (கலப்பு விவசாயத்தையும் சேர்த்துக்கொள்வதற்காக) விரிவான பொருளும், 'பயிர்கள்' என்பதற்கு (பயிர்களைப் பக்குவம் செய்வதையும் சேர்த்துக்கொள்வதற்கு) விரிவான பொருளும் அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் கூட்டுறவு பாங்குகளும், நிதிக் கார்ப்பொரேஷன்களும் வெளியிட்ட உண்டியல்களையும் புரோநோட்டுகளையும் இப்பாங்கினுல் அங்கீகரிக்கப்பட்டு, 12 மாதங்களில் காலாவதியாகக் கூடியவையாய் இருப்பின், மறுகழிவு (Rediscount) செய்ய இதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்திக்கு நிதி உதவுவதற்காகவும், குடிசைத் தொழில்கள், சிற்றளவுத் தொழில்கள் ஆகியவற்றின் பண்டங்களை விற்பதற்காகவும் இவ்வாறு செய்யலாம். ஐந்து வருடங்களுக்கு மேற்படாமல், அரசாங்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயக் காரியங்களுக்காக நடுத்தரக் காலக் கடன்களையும் ரிசர்வ் பாங்கு அளிக்க முடியும். ஆனுல், இந்தக் கடன்கள் இராச்சிய அரசாங்கத்தினுல் உத்தரவாதமளிக்கப்பட்டு, அந்தப் பாங்குகளின் சொந்த நிதிகளைவிட அதிகமாக இல்லாமல் இருக்க வேண்டும்.[1]

1951-ல் பாங்குவீதம் 3-லிருந்து $3\frac{1}{2}$ ஆக உயர்த்தப்பட்ட பிறகும் கூட, ரிசர்வ் பாங்கினுல் பெரும்பாலான கடன்கள் $1\frac{1}{2}$ சதவீத வட்டிக்குத்தான் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அளிக்கப்படும் வசதிகளைக் கூட்டுறவு நிலையங்கள் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றன என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்:

வருடம்	மாகாணக் (இப்போது இராச்சிய) கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட கடன்களும் முன் பணங்களும் (கோடி ரூபாயில்)
1945-46	... ... 0·01
1948-49	... ... 1·03
1950-51	... ... 5·38
1951-52	... ... 12·11
1952-53	... ... 11·90
1953-54	... ... 14·72
1954-55	... ... 18·04
1955-56	... ... 25·61

திட்ட காலத்தில் ரிசர்வ் பாங்கினுல் அளிக்கப்பட்ட குறுகிய காலக் கடன் ரூ. 5·38 கோடியிலிருந்து ரூ. 25·61 கோடியாக

[1] பொது அறிக்கை, மேற்கூறியது. பக்கம் 588-89

உயர்ந்தது[1]. இது 1956-57-ல் ரூ. 34 கோடியாக இருந்து 1957-58-ல் ரூ. 50 கோடியாக மறுபடியும் உயர்ந்தது.

விவசாயமே முக்கியத் தொழிலாக உள்ள கனடாவில், மத்திய வங்கி நிலையங்கள் தாமாகவே முன் வந்து, பயிர்களை விளைப்பதற்கும் விற்பதற்கும் விவசாயிகளுக்கு வேண்டிய கடனை அளிக்கின்றன எனின், வங்கி நிலையங்கள் குழந்தைப் பருவத்திலும், மக்களுக்கு வங்கிப் பழக்கம் தெரியாமலும் உள்ள நம் நாட்டில் ரிசர்வ் பாங்கு தனக்குக் கிடைத்துள்ள புதிய அதிகாரங்களைக் கொண்டு தானாக முன்வந்து, தேசீய நிதிகளை விவசாயத்தைப் புத்துயிர் பெறச் செய்யும் தேசீய நோக்கத்திற்கு ஏன் பயன்படுத்தக் கூடாது என்று கேட்கிறோம் ?[2]

ரிசர்வ் பாங்கு கடன் வேலையைமட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் கடன் அல்லாத வேலைகளைமட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இப்போது பரவியுள்ள கருத்துத் தவறானது. இரண்டு விதமான வேலைகளும் ரிசர்வ் பாங்கிலேயே குவிந்திருக்கவேண்டும்.

இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையில் கூட்டுறவு இயக்கத்தின் இடத்தையும், அதன் மெதுவான வளர்ச்சிக்கான காரணங்களையும் ஆராயும்போது, முதலில் அது கடுவட்டி, கடன் சுமை ஆகிய தீமைகளை ஒழிப்பதற்காக ஏற்பட்டது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆதலால், அது எளிய முறையில் கடன் கொடுக்கும் வேலையை மட்டும் கவனித்தது. நாம் இவ்வியக்கத்தின் இந்த அமிசத்தைக் குறை கூறும்போது, நம் நாட்டில் பல இடங்களில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள கடன் அல்லாத சங்கங்களையும் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. பம்பாயில் பருத்தியையும் வெல்லத்தையும் விற்பதற்காகவும், பஞ்சாபில் நிலங்களை ஒருங்கிணைப்பதற்காகவும், பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும் கரும்பு உற்பத்திக்காகவும், வங்காளத்தில் நீர்ப்பாசனத்திற்காகவும் உள்ள சங்கங்கள் வெற்றியுடன் வேலை செய்து வருகின்றன. அவை உலகத்தின் மற்றப். பகுதிகளில் அவை போன்றுள்ள மற்ற நிலையங்களுக்கு நிகரானவை.

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை' 1957. பக்கம் 120.

[2] கிராமக் கடன் ஆராய்ச்சியின் வழிகாட்டும் குழு, இத்தகைய விரிவான, இணைப்பான திட்டம் ஒன்றை நடத்தும்படி சிபாரிசு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இது முற்றிலும் நிறைவேற்றப்பட்டால், நமது கிராமக் கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவும். இந்திய இம்பீரியல் வங்கியைத் தேசீய மயமாக்கியது இத்துறையில் ஒரு நல்ல நடவடிக்கையாகும்.

இரண்டாவதாகக் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கியவர்கள் எதிர்பார்த்தது போல, அது கடன் அளிக்கும் சங்கங்களாக வெற்றியுடன் நடைபெறவில்லையென்றால், அதற்கு ஒரு காரணம், அது மேலிருந்து அரசாங்கத்தினால் தொடங்கப்பட்டது. ஆகவே, அதற்கு இளைஞர்களும் ஆர்வமுள்ளவர்களும் தம் ஆதரவையும் பணிகளையும் அளிக்க முன் வரவில்லை; இப்படித் தொடங்கப்பட்ட ஒவ்வோர் இயக்கத்தையும் அவர்கள் சந்தேகக் கண் கொண்டுதான் பார்த்தனர். 'அரசாங்கம் பொதுமக்கள் உணர்ச்சியையும் கருத்துகளையும் அறியாமலிருப்பதால், நிர்வாக இயந்திரத்தை அவர்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருந்தாலும், இயக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் அவர்கள் தோற்றுவிடுகிறார்கள்.[1]

பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகத்தினால் 1939-ல் ஐரோப்பாவில் கிராம வாழ்க்கையில் கூட்டுறவு நடவடிக்கை பற்றித் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறப்படுகிறது: 'இந்தக் கூட்டுறவு நிறுவனங்களின் சிறந்த இயல்பு தாமாக விரும்பி வேலை செய்வது. அவை, மக்களின் தேவைகளால் ஏற்பட்டு, அத் தேவைகளை உணர்த்துபவை. அத் தேவைகளுக்கு ஏற்ப அவை சரியாக அமைந்திருக்கின்றன. எங்குப் பார்த்தாலும் மக்களின் வழக்கமான வாழ்க்கையில் அவை வேரூன்றியிருக்கின்றன. பழைய சமூக நிலையங்களோடு தொடர்புடையவையாய் உள்ளன. இக்காலப் பொருளாதாரத்தில் அவை, அப்பழைய நிலையங்களின் புத்துயிர் பெற்ற உருவங்களாகத் திகழ்கின்றன. அங்கத்தினரின் நேரடி முயற்சிகளாலேயே அவை முக்கியமாக வளர்ந்து பெருகியுள்ளன. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சமயத்திலும், அவற்றின் பழைய பண்பிற்கேற்பச் சட்டங்கள் தோன்றித் துணை செய்யவில்லை.[2] இந்தியாவில் இந்த இயக்கத்தில் மக்கள் தாமாக விரும்பி வேலை செய்யக்கூடிய இந்த இயல்புதான் இல்லை.

அடுத்தபடியாக, அரசாங்கத்தில் தலையீடு மலிந்து, இவ்வியக்கம் வெற்றி பெறுவதற்கு வேண்டிய அளவு அரசாங்க உதவி இல்லாமல் இருக்கிறது. நிருவாகச் செலவும், பிரசாரத்திற்காகவும் வழி காட்டுவதற்காகவும் ஊதியம் பெற்று வேலை செய்யும் நிறுவனச் செலவும், கடனுக்கு விதிக்கப்படும் வட்டி வீதங்களைக் குறைக்க முடியாமல் செய்துவிட்டன. மேலிருந்து செய்யப்படும் மேற்பார்வையும் கட்டுப்பாடும் நிதி முறையை நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை இல்லாததாகச் செய்துவிட்டன.

[1] V. L. மேத்தா, மேற்கூறியது.

[2] பக்கம் 41.

கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி சர் ஜான் ரஸ்ஸல் கூறுவதாவது: 'கூட்டுறவில் வெற்றிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது, சிறிய உழவர்கள் உள்ள டென்மார்க்கு நாடுதான். இதனுல் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கைத்தரம் உலகம் முழுவதும் பொருமைப்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. டென்மார்க்கில் வெற்றிக்கு வேண்டிய நான்கு முக்கியமான அமிசங்களும் இருக்கின்றன. அவையாவன: (1) கிராம மக்கள் ஒரே தன்மையுடையவர்களாக உள்ளனர். சாதிப் பிரிவுகள் போன்ற எதுவும் இல்லை; (2) விவசாயிகள் எல்லாம் படித்தவர்கள்; (3) தொடக்கத்திலிருந்தே மக்கள் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, வீட்டிலும் கிராமத்திலும் நல்வாழ்க்கை வாழ்வதற்கும், கிராம வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கையிலும் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வதற்கும் கற்பிக்கப்பட்டது; (4) கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பாலும் வாணிபச் சங்கங்கள். அவை விவசாயிகளிடமிருந்து விளைச்சலை எடுத்துச் சென்று, விற்பதற்குத் தகுதியாகச் செய்து, அவர்களுக்காக விற்றுத்தருகின்றன. மேலும், அவை அவனுக்கு வேண்டிய வீட்டுக் கருவிகளையும் உழவுக் கருவிகளையும் அளிக்கின்றன. அவை உள்ளூர் பாங்குகளிடமிருந்து அதிக நிதி உதவி பெறுகின்றன. அங்கத்தினர்கள் தனியாகவும் கூட்டாகவும் கடனுக்குப் பொறுப்பாவார்கள். அங்கத்தினர்கள் வைப்பு நிதிகளைப் போட்டு, வேண்டிய நிதியில் பெரும் பகுதியைப் பெறுகிறூர்கள்; தங்களுடைய பணத்தையே அவர்கள் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுக்கிறூர்கள். ஆதலால், கடன் வாங்குபவன் ஒவ்வொருவனும் திருப்பித் தரவேண்டிய அவசியத்தை உணர்கிறன்.[1]

துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் இத்தகைய நிலைமைகள் ஒன்றும் இல்லை. நம் விவசாயத்திலுள்ள சங்கடங்களுக்கெல்லாம் கூட்டுறவு இயக்கம்தான் ஒரே பரிகாரம் என்று நினைப்பவர்கள், டென்மார்க்கில் இந்த இயக்கம் வெற்றி பெற்றதற்கான நிலைமைகள் இங்கு ஒன்றும் இல்லை என்பதை உணர வேண்டும்.

கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறவேண்டுமென்று நாம் எதிர் பார்ப்பதற்கு முன்பு, இந்தியக் கிராமங்களின் சமூக, பொருளாதார அமைப்பைப் புதிய முறையில் உண்டாக்க வேண்டியது அவசியம் என்று கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை கூறுகிறது. இந்தப் புதிய அமைப்பில் கிராம வாழ்க்கையின் சீரமைப்பு, கிராம மக்களின் விழிப்பு, உறுதி, வழியமைப்பு முதலியவற்றின் சேர்க்கை ஆகியவை அடங்கும். இருப்பினும், அதே மூச்சில் இத்தகைய சேர்க்கை ஒரு முக்கிய

[1] சர் ஜான் ரஸ்ஸல் அறிக்கை, பக்கம் 63.

அமிசமாக விளங்க வேண்டுமானால், அரசாங்கத்தினாலும், அதனுடைய அதிகச் சக்தி வாய்ந்த நிலையங்களினாலும்தான் உண்டாகவேண்டும் என்று அது கூறுவது வியப்பாக இருக்கிறது.[1] மக்களியலிலும் மக்களின் நிலையங்களிலும் உள்ள குறைகளால் ஏற்படும் முரண்பாடுகளை மக்களின் முயற்சியினால் மட்டும் தீர்த்துவிட முடியாது. அழியாத நகரத்திற்கு நாம் மேற்கொள்ளும் முடிவற்ற யாத்திரையில் கீழே இடறி விழுந்தும் எழுந்தும் போய்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

விவசாயப் பொருள்களை விற்றல்

இந்தியாவில் உள்நாட்டு வாணிபத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் சிறிதும் திருப்தியாய் இல்லை ; வாணிபத்தின் அளவைப் பற்றி அவற்றால் நாம் ஒன்றும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாது. பழைய காலத்தில் விவசாயி தனக்கு வேண்டிய உணவைத் தானே பயிரிட்டுக்கொள்வான் ; அவன் தன்னிடமுள்ள மிச்சத்தை மற்ற வாழ்க்கைத் தேவைகளை வாங்குவதற்காக அறுவடைக் காலத்தில் சந்தையில் விற்றுவிடுவான். இப்போது இந்தியப் பொருளாதாரம் மிகவும் மாறுதலடைந்துள்ளது. சாலைகளும் ரெயில்களும் தோன்றிப் பண்டைப் பொருளாதாரத் தொடர்புக்குப் பதிலாக ரொக்கப் பணத் தொடர்பு ஏற்பட்டதும், பழைய அமைப்பு மாறி, வியாபார மயமாகி, விற்பதற்காகவே விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவே தன்னுடைய விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியச் சந்தையாய் இருப்பதால், மார்க்கெட்டிங் பிரச்சினை ஒரு தனி முக்கியத்துவம் அடைகிறது. 1929-ல் பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த விவசாய உற்பத்தியின் மதிப்பு, பாங்கு விசாரணைக் குழுவினால் சுமார் ரூ. 1,200 கோடிக்கும் ரூ. 1,300 கோடிக்கும் இடையில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. இதில், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 200 கோடி. 1931–32-க்கு மொத்த விவசாய உற்பத்தியை டாக்டர் ராவ் ரூ. 78,360 இலட்சம் என்றும், சேதாரம், தேய்மானம் முதலியவை போக நிகர மதிப்பு ரூ. 59,270 இலட்சம் என்றும் மதிப்பிட்டார்.[2] 1950–51-ல் எல்லா விவசாயப் பொருள்களின் மொத்த மதிப்பு, தேசீய வருமானக் குழுவினால் ரூ. 4,866 கோடி (அறிவிப்புச் செய்யப்படாத பகுதிகள் நீங்கலாக) என்று கொள்ளப்பட்டது.

[1] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம் 375-77.

[2] V. K. R. V. ராவ், மேலே கூறியது, பக்கம் 81,

மார்க்கெட்டிங் செய்யப்படும் நிலைகளும் முறைகளும்

இந்திய விவசாயம் உள்நாட்டுச் சந்தையையே பெரும்பாலும் நம்பியிருக்கவேண்டி இருந்தாலும், இந்தியாவில் ஒழுங்கான மார்க்கெட்டிங் முறை இல்லை. உற்பத்தியாளன் தன் விளைச்சலைப் பாதகமான நிலையிலேயே விற்கிறான். இப்போது, (1) உள்ளூர் அல்லது வாரச்சந்தையில் மிகுதியான விவசாயப் பொருள்கள் வாங்கவும் விற்கவும் படுகின்றன. (2) உள்ளூர் லேவாதேவிக்காரன் விளைச்சலை விவசாயியிடமிருந்து அடிக்கடி வாங்கிப் பெரிய சந்தையில் விற்றுவிடுகிறான். (3) தங்களுக்காகவோ, தங்கள் முதலாளிகளுக்காகவோ ஊரூராகச் சுற்றும் வியாபாரிகள் கிராமங்களுக்குச் சென்று, விளைச்சலைத் திரட்டி அதிகத் தூரத்திலுள்ள சந்தைக்கு எடுத்துச் செல்கிறார்கள். விவசாயிகள் கல்வியற்றவர்களாக இருப்பதால், இந்தச் சந்தைகளில் உள்ள நிலைமைகளையும், விலை ஏற்ற இறக்கங்களையும் அறியாமல், லேவாதேவிக்காரர்கள், தரகர்கள் ஆகியவர்களின் தயவில் இருக்கவேண்டியுள்ளது.

இந்தியாவில் விவசாய மார்க்கெட்டிங் நிலைமையில் முக்கிய அமிசம் யாதெனில், விவசாயிகளுக்கும், பயிரை இறுதியாக விற்பவனுக்கும் இடையில் உள்ள மிக அதிகமான தரகர்கள்தாம். பஞ்சாபிலும் உத்தரப் பிரதேசத்திலும் பல பகுதிகளில் பஞ்சாராக்கள் (Banjaras) எனப்படும் நாடோடி அல்லது ஊர் சுற்றும் தரகர்கள் கிராமங்களில் உள்ள தானியங்களைச் சேகரிக்கிறார்கள். அவர்கள் நாட்டில் அதிகத் தொலை செல்கிறார்கள். அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, விதைக்கும் பருவத்தில் நெல் விதைகளைக் கடனாகக் கொடுத்து, அதைப்போல நான்கைந்து மடங்கு அதிக நெல்லை அறுவடையின்போது திரும்பப் பெறுகிறார்கள். அறுவடைக் காலத்தில் வண்டிக்காரர்களும் வியாபாரிகளும் தங்கள் எருமைகள் அல்லது மட்டக் குதிரைகளோடு கிராமங்களில் சுற்றி வருவார்கள். பணக்கார விவசாயிகள் சொந்த வண்டிகளை வைத்துக்கொண்டு, அடிக்கடிக் கூடும் சந்தைகளுக்கு அல்லது மண்டிகளுக்குத் தங்கள் விளைச்சலை அனுப்புகிறார்கள். ஆனால், பெரும்பாலோர் வியாபாரிகள், சவுக்கார்கள் முதலியவர்களோடுதாம் பழக வேண்டியிருக்கிறது. சிறு சணல் விதை, கடுகு, கோதுமை, கரும்பு போன்ற பயிர்களுக்கு ஊரூராகச் சுற்றிவரும் வியாபாரிகளைத்தான் அவர்கள் நம்பியிருக்கவேண்டியுள்ளது. இவர்கள் பெரிய வியாபாரியோடு (arhatiya) சம்பந்தப்பட்டவர்கள். அப்பெரிய வியாபாரி இப்பண்டங்களை மண்டியில் விற்கிறான். இது போலவே, பெரிய ஏற்றுமதி நிறுவனங்களின் ஏஜெண்டுகள் கிராமங்களுக்குச் சென்று கோதுமை, பருத்தி, நிலக்கடலை முதலியவற்றைத் திரட்டுகிறார்கள்,

29

விவசாயி பெறும் விலைக்கும், மத்திய மார்க்கெட்டுகளின் விலைக்கும் உள்ள வித்தியாசம் சுமார் 15 முதல் 20 சதவீதம் வரையில் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இந்த வித்தியாசத்தில் தரகனுடைய இலாபமும் வண்டி அல்லது கடத்துச் செலவும் அடங்கும்.[1] இந்தியாவில் உள்ளது போன்ற விவசாயப் பொருளாதாரத்தில், தரகன் 15 சதவீத இலாபம் பெற்றாலுங்கூட, அது விவசாயியின் பிழைப்பில் மண்ணைப் போடுவதாக ஆகும். விவசாயி அரைப்பட்டினி கிடந்தால்தான் அவன் தாகனுக்கு இவ்வளவு இலாபத்தைத் தர முடியும்.

இது சம்பந்தமாக விவசாயம்பற்றிய அரசர் குழு (Royal Commission on Agriculture) கூறியதாவது: 'இப்போதுள்ள அமைப்பில் விவசாயிகள் தம் விளைச்சலை விற்பதில் உள்ள துன்பங்களைப்பற்றி எல்லா மாகாணங்களிலிருந்தும் எங்களுக்குப் புகார்கள் வந்துள்ளன. தராசுகளும், எடைகளும், அளவுகளும் அவர்களுக்கு எதிராகத் தந்திரமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறப்படுகிறது. இந்த வழக்கம், ஒரே தரமான எடைகளும் அளவுகளும் இல்லாததாலும், ஒழுங்கான கண்காணிப்பு இல்லாததாலும் எளிதாக நிகழ்ந்துவருகிறது. மதம், தர்ம காரியம், மற்றக் காரியங்கள் ஆகியவைகளுக்காகச் சந்தைகளில் செய்யப்படும் கழிவுகளை அவர்கள் எதிர்க்க முடியாமல் இருக்கிறது. விற்பனை செய்யாதபோதுங்கூட விளைச்சலில் அதிக அளவு மாதிரியாக எடுத்துச் செல்லப்படுகிறது. இதற்கு அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை. அவர்களுக்காக வரும் ஏஜென்டுக்கும், வாங்குபவருக்காக வரும் ஏஜென்டுக்கும் இடையில் ரகசியப் பேரம் நடக்கிறது. அதைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. தரகன் விற்பவனுக்கன்றி வாங்குபவனுக்குத்தான் அதிகத் தாட்சண்யம் காட்டுகிறான். ஏனெனின், விற்பவனை அவன் எப்போதோ ஒரு முறைதான் பார்க்கிறான்.[2] பாங்கு விசாரணைக் குழு மற்றொரு கஷ்டத்தைக் கூறுகிறது: விலை தீர்மானிக்கப்பட்ட பிறகுங்கூட, எடை போடும்போது, தரம் குறைவாக இருக்கிறதென்ற காரணத்தைக் காட்டி விலை மேலும் குறைக்கப்படுகிறது.

மேலும், மார்க்கெட்டிங் நிலைமை இராச்சியத்திற்கு இராச்சியம் வேறுபடுகிறது. விவசாயிகளில் மேலானவர்கள் ஒரு வருடத்திற்கு வேண்டிய பொருள்களை வைத்துக்கொண்டு மிச்சத்தைத்தான் விற்கிறார்கள். ஆனால், கடனால் சுமத்தப்பட்ட பெரும்பாலோருக்கு

[1] 'இக்கால இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினை' என்னும் நூலில் 'விவசாய விற்பனை' என்னும் கட்டுரை, தொகுதி I, 1939. பக்கம் 193 முதல்.

[2] அறிக்கை, பக்கம் 388-9,

மொத்தப் பயிரில் பெரும் பகுதியை விற்க வேண்டிய நிர்ப்பந்தமும், வருடக் கடைசியில் பிறகு அதில் சிறிதளவு கடனுகப் பெற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. தானியக் கடனுக இருந்தால், விளைச்சல் முழுவதையும் லேவாதேவிக்காரனுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

பாங்கு விசாரணைக் குழு, இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெற்றுள்ள அறிக்கைகளில், விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கு அதிக வட்டி வீதம் விதிக்கப்படுவதோடு, கடன் வாங்கியவர்கள் எதிர்பார்க்கப்படும் மார்க்கெட்டு விலையைவிட குறைந்த விலைக்குத் தம் விளைச்சலை விற்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்று கூறுகிறது. இவ்வாறுதான் வங்காளத்தில் சில பகுதிகளில் கடன்களுக்கு 24 முதல் 75 சதவீதம் வரை வட்டி விதிக்கப்பட்டு, விவசாயி எதிர்பார்க்கப்படும் மார்க்கெட்டு விலையைவிட 10 முதல் 25 சதவீதம் குறைவான விலைக்கு விற்பதாக ஒப்பந்தம் செய்துகொள்கிருன். மாகாண வங்கித் தொழில் குழு அறிக்கையில் கூறப்படும் மற்ருெரு விஷயம், விவசாயியின் கடன் சுமைக்கும், அவன் தன் விளைச்சலை விற்பதற்கும் உள்ள தொடர்பைப்பற்றியது. பயிர்த் தொழிலுக்கென்று குறிப்பிட்டுக் கடன் வாங்காதபோதுகூட இது நிகழ்கிறது. வங்காளக் குழு, கடன்பட்ட விவசாயி, அறுவடையானவுடன் கடன் கொடுத்தவனுல் நெருக்கப்படுகிருன் என்று அறிவிக்கிறது. இந்த நெருக்கடியின் பலன் அதிகமாக இருப்பதால், கடன் வாங்கியவன் தன் விளைச்சலை உடனே விற்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிருன். எல்லோரும் ஒரே சமயத்தில் விற்ருல், போட்டியினுல் விலை குறைந்துவிடுகிறது.

மூன்ருவதாகப் பம்பாய் வங்கித் தொழில் விசாரணைக் குழு, சில விவசாயிகள் வயல்களில் உள்ள தங்கள் பருத்தியைப் பணம் இல்லாத காரணத்தினுலோ, ஹேஷ்ய வியாபாரமாகவோ விற்றுவிடுகிருர்கள் என்று கூறுகிறது. பம்பாயில் மாங்காய், மரத்தில் இருக்கும்போதே அநேகமாக விற்றுவிடப்படுகிறது. சில சமயங்களில் காய்கள் மரத்தில் தோன்றும்போதே விற்றுவிடப்படுகின்றன.

நம் நாட்டில் உள்ள மார்க்கெட்டிங் நிலைபற்றியும் முறைகள் பற்றியும் நாம் கூறியுள்ளதைக் கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கை ஆதரித்துக் கூறுவதாவது: 'லேவாதேவித் தொழில் செய்பவர்களிடமிருந்து வாங்கப்பட்ட கடனில் 58 சதவீதம் கிராமத்தில் லேவாதேவித் தொழில் செய்பவர்களிடமிருந்துதான் வந்தது என்று தெரிந்தது. கிராம லேவாதேவிக்காரர்களில் 82 சதவீதம் விவசாயிகள் என்று கூறப்பட்டது. அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்களும் அல்லாத சொந்த நன்மை கருதிய ஒரு கூட்டத்தினிடம் விவசாயப்

பொருள்களின் விற்பனை கட்டுப்பட்டுக் கிடக்கிறது. இக்கூட்டம் கடன் வரும் வழிகளையும், விளைச்சலை விற்பனை செய்யும் வழிகளையும் கட்டுப்படுத்துகிறது. ஆகவே, பெரும்பாலும் விவசாயி, பணத்தையும், கடன் வசதியையும், மார்க்கெட்டையும் தன்னிடம் வைத்துக்கொண்டு வண்டியுடன் வருகிற ஒருவனிடம் முடிந்தால் பேரம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறான்.[1]

விவசாயக் குழுவின் சிபாரிசுகள்

விவசாயம்பற்றிய அரசர் குழு, விவசாய மார்க்கெட்டிங்கை அபிவிருத்தி செய்யவும் அமைக்கவும் கீழ்க்கண்ட யோசனைகளைக் கூறியது. இவற்றை மாகாண, மத்திய வங்கி விசாரணைக் குழுக்கள் ஆதரித்துள்ளன.

(1) கிராமத் தொடர்பு வசதி உள்படப் போக்குவரத்து வசதிகளைச் சீர் செய்தல்; (2) ரெயிலில் சாமான் கட்டண விகிதங்களைக் குறைத்து, மற்ற வசதிகளையும் செய்தல்; (3) பீரார், ஹைதராபாத் மார்க்கெட்டுகளில் உள்ளது போல், மாகாணங்களில் சட்டங்களை இயற்றி, ஒழுங்கு செய்யப்பட்ட மார்க்கெட்டுகளை நிறுவுதல்; (4) எடைகளையும் அளவுகளையும் தரப்படுத்துவது; (5) வாங்குபவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சங்கம் அமைத்து மேலான தரமுள்ள விளைச்சலை உண்டாக்கவும், கலப்படம் நிகழாமல் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுத்தல்; (6) பண்டங்களுக்குத் தரங்களையும் வகைகளையும் நிர்ணயித்தல்; (7) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், விற்பனைக்காகத் தக்க சங்கங்களையும் அபிவிருத்தி செய்தல்; (8) மேலான பயிர் வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அதிக விலை பெற்றுத் தருவதற்காக, விவசாய இலாகா ஏல விற்பனையை நடத்துதல்; (9) மார்க்கெட்டுகளை ஆராய்தல்; (10) மார்க்கெட்டில் வழங்கும் மொழியைப் புரிந்துகொள்ளக்கூடிய திறமை வாய்ந்த மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களை விவசாய இலாகாவில் நியமித்தல்.

விவசாயம்பற்றிய அரசர் குழு, எடைகளையும் அளவுகளையும் தரப்படுத்தவேண்டிய அவசியம்பற்றி எடுத்துக் கூறிப் பல ஆண்டுகளாயின. 1939-ல் இந்திய அரசாங்கம் தரப்படுத்தும் சட்டம் ஒன்றை இயற்றியது. ஆனால், அது பயனற்றதாகிவிட்டது. ஏனெனின், இராச்சிய அரசாங்கங்கள் அதை நடத்திவைக்க விரும்ப

[1] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம் 102.

வில்லை.[1] காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு வருத்தத்துடன், 'இன்று தரப்படுத்தப்பட்ட எடைகளும் அளவுகளும் இல்லாததால், மிக எளிய கணக்குகள்கூடத் தெரியாத கல்வியற்ற குடியானவர்கள் வியாபாரிகளால் இரக்கமின்றிச் சுரண்டப்படுகிறார்கள்'[2] என்று கூறுகிறது.

பாங்கு விசாரணைக் குழு, மார்க்கெட் கேந்திரங்களில் கிடங்குகளைக் கட்டுவதற்கு மாகாண அரசாங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்டகாலக் கடன்களைக் குறைந்த வட்டி வீதத்திற்கு அளிப்பது விரும்பத்தக்கது என்று கூறியது. அக்குழு, தனிப்பட்ட நிறுவனங்கள் பெரிய கிடங்குகளை (warehouses) ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், முக்கியமான வாணிபத் தலங்களில் பெரிய ரெயில்வே கிடங்குகளைக் கட்டுவதுபற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்றும் கூறியது. ரெயில்வே ரசீதுகளையும் கப்பல் ரசீதுகளை (bills of lading) போலவே கருதவேண்டுமென்றும் அது கூறியது.

வெளிநாட்டுச் சந்தைபற்றி ஆராய்வதற்காக ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினால் 1930-ல் பிரிட்டிஷ் தொழில் காட்சிக்கு அனுப்பப்பட்ட டாக்டர் க்ளவுஸ்டன் (Clouston), 'உலகச் சந்தையில் இந்திய விவசாயப் பொருள்களின் மதிப்பு மிகக் குறைவாக இருக்கிறது; ஐரோப்பாவில் இப்பொருள்களுக்கு நுகர்வோர் அளிக்கும் விலை பெரும்பாலும் அவற்றின் நல்ல பெயரையே பொறுத்துள்ளது. தங்கள் விளைச்சலை அபிவிருத்தி செய்துள்ள விவசாயிகள் பெறும் விலையை இது மிகவும் பாதிக்கிறது' என்று அறிவித்தார்.[3] மேலும் நல்ல முறையில் நிர்வாகம் செய்யவேண்டுமென்று டாக்டர் க்ளவுஸ்டன் கேட்டுக்கொண்டார். 'இந்தியாவில் உற்பத்தியாளர்கள் மிகச் சிறந்த நிலைமையில் தம் விளைச்சலை விற்பதற்குச் சிறிதும் ஊக்கம் தரப்படுவதில்லை. அவர்கள் அதற்குப் பெறும் விலையினால்தான் அவர்களுக்கு ஊக்கம் உண்டாகிறது.'[4] இந்தியச் சந்தையின் ஒழுங்கற்ற தன்மைபற்றி அரசர் குழு வருணித்துள்ள நிலை பன்னிரண்டு ஆண்டுகள் கழித்துத் தேசீயத் திட்டக் குழு கண்டபோதும் மாறாமல் இருந்தது. எப்படியாயினும், மொத்தத்தில்,

[1] மெட்ரிக் முறையில் தரப்படுத்தப்படும்; ஆனால், விவசாயிகளுக்குத் தசாம்ச முறை தெரியாததால், அதிக முயற்சி செய்துதான் அதை வெற்றியுடன் நடத்த முடியும். பல ஆண்டுகள் வரையில் மெட்ரிக் முறையில் இரக்கமின்றிச் சுரண்டுதல் நடைபெறும்.

[2] அறிக்கை, பக்கம் 109-10.

[3] மத்திய பாங்கு விசாரணைக் குழுவினால் மேற்கோள் காட்டப்பட்டது. தொகுதி I, பக்கம் 208.

[4] விவசாயம் பற்றிய அரசர் குழுவின் அறிக்கை, பக்கம் 398.

அன்று அவர்கள் வருணித்த நிலை, இந்தியச் சந்தையில் இன்றும் அப்படியே இருக்கிறது.[1]

சேமிப்பதற்குள்ள வசதிகளையும், கடன் வசதியைச் சேமிப்புடனும் மார்க்கெட்டிங்குடனும் இணைப்பதையும் பொறுத்து விவசாயப் பண்டங்களைச் சரியாக மார்க்கெட்டிங் செய்யலாம். கடன் வசதியையும் மார்க்கெட்டிங்கையும் ஒன்ருக இணைக்க வேண்டும். கடன் நிலையங்கள் கடனையளிப்பது, கடன் அல்லாத தனி நிலையங்கள் விளைச்சலை விற்கும் பொறுப்பை ஏற்பது என்ற வழக்கமான கொள்கை கைவிடப் படவேண்டும். முக்கியமாகப் பருத்தி, நிலக்கடலை, கரும்பு போன்ற ஒரு போகம் விளையும் பகுதிகளில் இவ்வாறு செய்யவேண்டும். அரசாங்கம் கூட்டுறவுக் கடன், மார்க்கெட்டிங், பக்குவப்படுத்துதல் ஆகியவற்ருேடு நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும் என்று கிராமக்கடன் ஆராய்ச்சி அறிக்கை சிபாரிசு செய்துள்ளது. மத்திய அரசாங்கம் பெரிய கிடங்குகளையும் சிறிய கிடங்குகளையும் நிறுவி, அவற்றின்மூலம் கூட்டுறவு மார்க்கெட்டிங்கைப் பலப்படுத்தும் திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கிறது. ஓர் அபிவிருத்தி நிதியையும், கிடங்கு அமைக்கும் நிதியையும் கொண்டு ஒரு தேசீயக் கூட்டுறவு அபிவிருத்தி கிடங்கமைப்புக் குழு நிறுவப்பட்டிருக்கிறது. இது போலவே அண்மையில், ஒரு மத்தியக் கிடங்கமைப்புக் கார்ப்பொரேஷனும், ஏழு இராச்சியக் கிடங்கமைப்புக் கார்ப்பொரேஷன்களும் தோற்றுவிக்கப்பட்டு, நாடு முழுவதிலும் பெரிய கிடங்குகளும் சிறிய கிடங்குகளும் பரவலாக அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மார்க்கெட்டிங் நடவடிக்கைகள் : (அ) கடத்து வசதிகள்

விவசாயிகளின் நன்மை கருதிச் செய்யப்படும் நல்ல மார்க்கெட்டிங்குக்கு உதவக்கூடிய ஒரு முக்கிய அமிசம் கடத்து வசதி. இந்தியாவில் 34,000 மைல் ரெயில் பாதையும், 1,82,000 மைல் மோட்டார் செல்லும் பாதையும், 1,59,000 மைல் செப்பனிடப்படாத பாதையும் உள்ளன. இவை, 100 சதுர மைலுக்குச் சராசரி 22 மைல் நீளமுள்ள பாதையை அளிக்கின்றன. ஆனல், ஜெர்மனியில் 100 சதுர மைலுக்கு 95 மைல் பாதை உள்ளது. கிராமப் பாதைகளை நீக்கி, எல்லாப் பருவங்களிலும் உதவக்கூடிய 1,18,000 மைல் பாதை நம் நாட்டில் இருக்கிறது. இங்குள்ள பாதைகள் நம் தேவைக்குப் போதிய அளவு இல்லை. 100 சதுர மைல் பரப்புக்கு, எல்லாப் பருவங்களிலும் உதவக்கூடிய பாதைகள் 9.7 மைல்கள்தான் உள்ளன.

1. 'கிராம மார்க்கெட்டிங்கும் நிதி வசதியும்', 1947, பக்கம் 40.

இப்போதுள்ள பாதைகள் (அ) தேசீய, (ஆ) இராச்சிய, (இ) மாவட்ட, (ஈ) கிராமப் பாதைகள் என்று நான்கு வகையாகும். தேசீயப் பாதைகள் பொது மராமத்து இலாகாவின் பொறுப்பில் உள்ளன. கிராமப் பாதைகள் கிராம மக்களின் பொறுப்பில் உள்ளன. அதனுல் அவை கேட்பாரற்றுக்கிடக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை மழைக் காலத்தில் உதவாத வழிகளாகும். விவசாயம்பற்றிய அரசர் குழு, பாதைகளை அமைப்பதற்கும் சீர்திருத்துவதற்கும் தல அரசாங்கங்கள் தாராளமாக மானியங்கள் அளிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தது. 1940-ல் சாலைகளுக்கான நிலைக் குழு (Standing Committee), சாலை அபிவிருத்திக்காக மாகாண அரசாங்கங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் மானியம் அளிக்க அனுமதி கொடுத்தது. சாலை நிதியில் உள்ள மாகாணங்களின் பங்கில் 25 சதவீதம் கிளைச்சாலைகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று இந்திய அரசாங்கம் விதி செய்துள்ளது. விவசாயி களின் நன்மை கருதி மிக அவசரமாகச் செய்ய வேண்டிய காரியம், சாலைகளை மிகுதியாக அமைப்பது மட்டுமன்றி ரெயில்வேக்களை மோட்டார் போக்குவரத்துடன் இணைப்பதும், பால், பழம், காய்கறிகள் போன்ற அழியக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அதிக வசதிகளைச் செய்வதும் அவசியம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் தேசீயப் பெருஞ்சாலைகளையும் இராச்சியச் சாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 100 கோடி அளித்தது. அத்திட்டத்தில் 3,000 மைல் புதிய சாலைகளும், 16,000 முதல் 17,000 மைல் வரை கிராமச் சாலை களும் மக்களின் முயற்சியால் போட உத்தேசிக்கப்பட்டது.

இரண்டாம் திட்டத்தில் ரூ. 246 கோடியும், மத்தியசாலை நிதியி லிருந்து ரூ. 25 கோடியும் சாலை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது. நாகபுரித் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை நீள இலக்கு 1960–61-க்குள் கைகூடிவிடும் என்று நம்பப்படுகிறது. இதன்படி மொத்தம் 3,31,000 மைல் சாலைகளில், 2,23,000 மைல் செப்பனிடப் பட்ட சாலைகளும் அமைக்கப்படும்.

(ஆ) மார்க்கெட்டிங் அமைப்பு

1935-ல் இந்திய அரசாங்கம் இராச்சிய அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து விவசாய மார்க்கெட்டிங் ஆலோசகர் (இப்போது மார்க்கெட்டிங் கண்காணிப்பு இயக்குநர்) என்ற பதவியை உண்டாக் கியது. இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினிடமிருந்து பெற்ற உதவித் தொகையைக்கொண்டு சில இராச்சிய அரசாங்கங்கள் இது போன்ற நிறுவனங்களை அமைத்துள்ளன. இவை பம்பாய்,

சென்னை, மேற்கு வங்காளம், பீகார், பஞ்சாப், ஹைதராபாத், மைசூர் ஆகிய இராச்சியங்களில் நிலைபெற்றுவிட்டன.

இந்த நிறுவனத்தின் வேலை, (1) சில முக்கியமான விவசாயப் பொருள்களை இப்போது விற்கும் முறைபற்றி ஆராய்ச்சி நடத்தி, அறிக்கை வெளியிட்டு, அபிவிருத்திக்கு வழிகளைக் கூறுவதும், (2) மார்க்கெட்டில் உள்ள மாதிரிகளைப் பரிசீலனை செய்து தகுந்த துறையில் தரப்படுத்துதலும் ஆகும்.

1937-ல் டில்லியில் அழியக்கூடிய பொருள்களைக் குளிர்பதனம் செய்தலும், எடுத்துச் செல்லுதலும்பற்றி ஓர் அறிக்கை வெளியிடப் பட்டது. இதையடுத்துக் கோதுமை, சிறு சணல் விதை, முட்டைகள், புகையிலை, காப்பி, திராட்சை, பால், அரிசி ஆகியவற்றை இந்தியா முழுவதிலும் விற்பனை செய்வதுபற்றிய ஆராய்ச்சி அறிக்கைகள் வெளிவந்தன. ரோம வியாபாரிகளுக்கு 'இந்திய ரோமத்தின் தரம்' பற்றிய அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இதுவரையில் மொத்தம் பல பண்டங்களை விற்பதுபற்றி 70 அறிக்கைகள் வெளி வந்துள்ளன.

அண்மையில் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கங்களும் நாட்டில் வேரூன்றியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஒரே பண்டத்தைத்தான் கையாளுகின்றன. இவை விளைச்சலின் பேரில் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுத்தும், அவர்களின் விளைச்சலைத் திரட்டி விற்றும் தருகின்றன.

மார்க்கெட்டிங்குக்கு நிதி பெறுவதில் பெருந்தடையாக இருப்பது சேமிப்பு வசதிகள் இன்மையே. பிராமிசரி நோட்டுகளுடன் துணை ஜாமீனாக இருக்கக்கூடிய பண்டகசாலை (கிடங்கு) ரசீதுகள் இன்மை யால், மார்க்கெட்டிங் வேலைகளுக்கு ரிசர்வ் பாங்கு கடன் கொடுப்பதற்கு தடை ஏற்பட்டுள்ளது. கிடங்குகளில் சேமிப்பதன் அவசியம்பற்றிப் பல குழுக்களும் ரிசர்வ் பாங்கும் பன்முறை வற்புறுத்தியிருக்கின்றன. இருப்பினும், சில இராச்சியங்களில் கிடங்கில் சேமிப்பதுபற்றிச் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், அனுமதி பெற்ற கிடங்குகளை அமைக்க இதுவரையில் ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை. இராச்சியங்கள் கவலையின்றி இருக்கின்றன. ஏனெனின், சட்டங்கள் அனுமதி தரும் இயல்புடையவையாய் இருப்பதால், தனி யார் முனைப்பினால்தான் அவை நிறுவப்படவேண்டியுள்ளன. சரியாகத் திரட்டித் தரப்படுத்துவதைப் பொறுத்துத்தான் நல்ல கிடங்கு சேமிப்பு முறை அமையும்.

(இ) பண்டங்களைத் தரப்படுத்தல்

உற்பத்தியாளரிடமிருந்து மேலான தரமுள்ள பண்டங்களைச் பெறுவதற்கு, பழங்கள், முட்டைகள் முதலியவற்றைத் தரவாரியாகப் பிரித்து பாக் (pack) செய்யும் முறை கையாளப்பட்டது. 1937 ஆம் ஆண்டின் விவசாய விளைச்சல் (தரப்படுத்தலும் விற்றலும்) பற்றிய சட்டம், பட்டியலில் குறிக்கப்பட்ட பொருள்களுக்குத் தரங்களையும் விற்கும் முறைகளையும் விளக்கிக் கூறியது. விவசாய மார்க்கெட்டிங் ஆலோசகரிடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற்ற 550 பேர்களின் உதவியால் சிலர் தாமாக விரும்பித் தரப்படுத்தி விற்பனை செய்கிறார்கள். இப்பட்டியலில் இப்போது பழங்கள், காய்கறிகள், முட்டைகள், பால் பண்ணைப் பொருள்கள், புகையிலை, காப்பி, மாவு, தாவர எண்ணெய்கள், எண்ணெய் விதைகள், பருத்தி, அரிசி, கோதுமை, கரும்பு, வெல்லம், அரக்கு, தோல், ரோமம், மரம், பாக்கு முதலியவை உள்ளன. இப்படித் தரப்படுத்தப்பட்ட பொருள்களுக்கு 'அக்மார்க்' (Agmark) இடப்படுகிறது. 1943-ல் மட்டும் 'அக்மார்க்' பெற்ற ரூ. 549 இலட்சம் மதிப்புள்ள பண்டங்கள் விற்கப்பட்டன; 1940-ல் ரூ. 102 இலட்சத்திற்குத்தான் விற்கப் பட்டன. 1953-ல் தரப்படுத்தப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 14 கோடியாக உயர்ந்தது. ஏற்றுமதிக்குக் கட்டாயமாகப் பொருள்களைத் தரப்படுத்தவேண்டுமென்ற கொள்கையை திட்டக் குழு ஒத்துக்கொண்டது. 1951-52-ல் தொடங்கி ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக ரூ. 87 இலட்சம் செலவில் தரப்படுத்தும் திட்டம் ஒன்றையும் அது ஒப்புக்கொண்டது. சான் (Sann) நற்சணல் நார், சிகரெட்டுப் புகையிலை, ரோமம், ரோம முட்கள், நரந்தம்பில் எண்ணெய் போன்ற சில ஏற்றுமதிப் பொருள்களைக் கட்டாயமாகத் தரப்படுத்த வேண்டும். 1957 பிப்ரவரி முதல், சந்தனத் தைலத் தையும் கட்டாயம் தரப்படுத்த வேண்டும். தரப்படுத்துவதால் ஏற்றுமதியின் மதிப்பில் 10 சதவீதம் உயரும் என்று திட்டக்குழு மதிப்பிட்டது.[1] இந்த நன்மைகள் அரைப்பட்டினி கிடக்கும் விவசாயிகளுக்குக் கிடைக்குமா? அல்லது நமது நாட்டுப் பற்றுமிக்க ஏற்றுமதியாளர்களும் தரகர்களும் அவர்களை விழுங்கிவிடுவார்களா?

(உ) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள்

மண்டியில் விவசாயிகளுக்கு எதிராகச் செய்யப்படும் தவறான செயல்களை நிறுத்துவதற்குச் சில இராச்சியங்கள் ஒழுங்கு செய்யப் பட்ட சந்தைகளை நிறுவியுள்ளன. அவற்றில், அனுமதியில்லாமல்

[1] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 248.

கழிவுகள் செய்வது தடுக்கப்பட்டு, தரகு, எடைகள் ஆகியவை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் வெளிப்படையான ஏலம் அல்லது விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு ஒழுங்கு படுத்தப்பட்ட மார்க்கெட்டுகளின் நிருவாகக் குழுவில் இடம் இருப்பினும், அவர்களுடைய பேச்சு எடுபடுவதில்லை. இந்த மார்க்கெட்டிங் குழுக்கள் மார்க்கெட்டிங் வசதிகளைச் சீர்திருத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் நிதிகளைப் பயன்படுத்துவதில்லை. இந்த நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு ஓரளவு நன்மையளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. விவசாயப் பொருள்களின் மார்க்கெட் சட்டம் நிறைவேற்றப்பட்டுங்கூட சில இராச்சியங்களில் இன்னும் ஒழுங்குபடுத்தப்படாத மார்க்கெட்டுகள் உள்ளன. திட்டக்குழு 1955–56-க்குள் மார்க்கெட்டிங் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இச்சட்டத்தை ஒவ்வொரு இராச்சியத்திலும் உள்ள முக்கியமான மார்க்கெட்டுகளுக்கெல்லாம் விஸ்தரிக்கும்படி சிபாரிசு செய்தது. திட்ட காலத்தில் மேலும் மூன்று இராச்சியங்கள் சட்டத்தை இயற்றியுள்ளன. ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கெட்டுகள் 1950–51-ல் 265 ஆக இருந்து 1955–56-ல் 450–க்கு மேல் பெருகின. பெரும்பாலான ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கெட்டுகளில் விற்பனைத் தரம் உயர்ந்திருந்தாலும், பணியாட்கள், அபிவிருத்தி ஆகிய இரண்டு முக்கியச் சங்கடங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. மார்க்கெட்டுக்கு வெளியே தீய பழக்கங்கள் அனுமதியின்றி நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஏனெனில், தனிப்பட்டவர்களின் சுயநலம் பெரிதாக இருக்கிறது. ஒரு முக்கியமான குறை என்னவென்றால், 'கிராமங்களில் நடைபெறும் விற்பனை கட்டுப்படுத்தப்படுவதே இல்லை. அதில் முதன்மையாக உற்பத்தி செய்பவன், சட்டப்படியும் நடைமுறையிலும் உண்மையாகவே கிராம வணிகர்களின் தயவில் இருக்கிறான்.'[1]

கிராமப் புனரமைப்பும் கிராமச் சமூகத்தைக் கட்டுப்படுத்தலும்

மேனாடுகளில் கூட்டுறவு நடவடிக்கை வளரும்போது, அது குடியானவனின் குடும்பப் பொருளாதார நலன்களுக்கும் அப்பால் விரிந்து சென்று, அவனுடைய ஆரோக்கியம், பொது நன்மை ஆகிய காரியங்களைக் கவனித்தது. கிராம சமூகம் முழுவதற்கும் வேண்டிய அமைப்புச் சாதனங்களையும் கட்டுப்பாட்டையுங்கூட அது கவனித்தது. இவை அங்கு இல்லாமல் இருந்தன. பிரான்சில், கிராமக் குடியிருப்பு வசதிகளை ஏற்கெனவே உள்ள வீடுகளுக்கு வேண்டியவற்றை அளித்து, அல்லது மேலும் பெரிய, ஆரோக்கிய

[1] பொது அறிக்கை, மேலே கூறியது, பக்கம் 105

மான வீடுகளைக் கட்டியும் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தி செய்வதற்குக் காரணமாயிருந்தன. ஹங்கேரியில் 7½ வருடங்களில் அரசாங்க உதவியோடு கிராம வீட்டு வசதிக்கான தேசீயக் கூட்டுறவுச் சங்கம் 38,000 சிறிய வீடுகளைச் சீர்திருத்தியமைக்க உதவியது. பிரான்சில் 1938 ஜூனில் அளிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவினால், தேசீய விவசாயக் கடன் நிதியும் வட்டார நிதிகளும் குடிநீரை யளிக்கவும் சாலைகளை அமைக்கவும் தல அதிகாரிகளுக்குக் கடன் கொடுக்க முடிந்தது. அங்கு மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்களும், தண்ணீர் அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுங்கூட உள்ளன. யுகோஸ்லேவியாவில் ஆரோக்கியத்திற்கான கூட்டுறவுச் சங்கங்கள் நீரூற்றுக்களை அமைத்தும், சாணக்குழிகளை வெட்டியும் கிராமத் தெருக்களைச் சீர்திருத்தியும், வைத்தியரையும் சிறிய மருத்துவ விடுதியையும் ஒவ்வொரு கிராம சமூகத்திலும் ஏற்பாடு செய்தும் உதவின. டென்மார்க்கில் 1,94,000 அங்கத்தினர்களோடு கூடிய 1,077 சங்கங்கள் ஆரோக்கிய நிலையங்களை நடத்தின.[1]

இந்தியாவிலும் அண்மையில் இதுபோலக் கிராமப் புனரமைப்பில் சிறிது கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. ஆனால், இதுவரையில் செய்யப்பட்டதெல்லாம் தனிப்பட்டவர்களுடைய முயற்சியால் ஆனதே. இவர்கள் சமூக சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியுடன், கிராம மக்களின் நலனுக்குத் தங்கள் பொருளையும் திறமையையும் அளித்தார்கள். இத்தகைய பணி, பஞ்சாபில் குர்கான் என்ற இடத்தில் கல்வி, சுகாதாரம், மருத்துவ உதவி, விவசாய அபிவிருத்தி, தாய்மை நலன் முதலிய துறைகளில் செய்யப்பட்டது. பிறகு பஞ்சாப் அரசாங்கம், குர்கானில் பணியாற்றிக் கொண்டிருந்த கர்னல் பிரெயின் (Brayne) என்பவரைக் கிராமப் புனரமைப்பு ஆணையாளராக நியமித்தது. வங்காளமும் இதேபோலச் செய்தது.

1940-41-ல் 19,08,000 அங்கத்தினர்களைக் கொண்ட 17,442 சங்கங்கள், 1955-56-ல் 33,00,000 அங்கத்தினர்களைக் கொண்ட 27,745 சங்கங்களாகப் பெருகின. இவை விவசாய சம்பந்தமில்லாத கடன் கொடுக்காத சங்கங்கள். இவற்றின் நடைமுறை முதல், 1940-41 ல் ரூ. 28·53 இலட்சமாக இருந்து, 1955-56ல் ரூ. 58·13 இலட்சமாக உயர்ந்தது. உத்தரப்பிரதேசத்திலும் பஞ்சாபிலும் பெரும்பாலும் சில சங்கங்கள், கல்விச் சங்கங்கள், உடல்நலச் சங்கங்கள், விலங்கு மருத்துவச் சங்கங்கள், மேலான வாழ்க்கைச் சங்கங்கள் என்று சில குறிப்பிட்ட சமூகநலத் துறைகளுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன.

[1] 'கிராம வாழ்க்கையில் கூட்டுறவு நடவடிக்கை'—ஜினிவா, 1939.

1955-56-ல் பல இராச்சியங்களில் இத்தகைய சமூகப்பணி சங்கங்கள் சுமார் 2,829 இருந்தன.

அண்மையில் உண்டான அபிவிருத்திகள்

1946 முதல் மத்தியப் பிரதேசத்தில் சேவாக் கிராமத்திலும், பம்பாயில் பல சர்வோதயக் கேந்திரங்களிலும், சென்னையில் பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்திலும், உத்தரப் பிரதேசத்தில் எடாவா (Etawah) விலும், கோராக்பூரிலும் உள்ள முன்னோடித் திட்டங்களிலும் (Pilot Projects) தீவிரக் கிராம அபிவிருத்திப் பரிசோதனைகள் பல நடத்தப்பட்டன. இந்தப் பரிசோதனைகளின் விளைவாகக் கிடைத்த பலனைக் கொண்டு ஊக்கப்பெற்று, முதல் திட்டத்தின் ஒரு இணைப்பான பகுதியாகச் சமூக அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் திட்டக் குழு தயாரித்தது. அது அமெரிக்காவில் உள்ள விவசாய விஸ்தரிப்புத் திட்டங்களைப்போன்ற பல சமூகநலத் திட்டங்களை அமைப்பதற்கு ரூ. 90 கோடி அளித்தது. கிராமங்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைப் புனரமைப்புக்காக 1952-ல் மத்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட இணைப்பான சமூகத் திட்டங்கள், அடுத்த பத்து வருடங்களில் நாடு முழுவதிலும் விஸ்தரிப்புத் திட்டங்களைப் பரவலாக அமைக்க உத்தேசித்துள்ளன. இவற்றால் நவீன விவசாய முறைகள் விவசாயிகளை நாடிச் செல்லும். அன்றியும் மற்றத் துறைகளிலும் அவர்களுடைய நோக்கம் மாறுதலடையும்.[1] இரண்டாம் திட்டம் நாடு முழுவதற்கும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு ரூ. 200 கோடியை அளித்துள்ளது.

எதிர்காலம்

கிராமப் புனரமைப்புப் பிரச்சினைபற்றி விளக்கும்போது, காந்தியடிகள் கடந்த சில ஆண்டுகளில் செய்த வேலையை நாம் மறந்துவிடக்கூடாது. கிராமத்தைப் பொருளாதார அலகாகக் கொண்டுதான் காந்தியடிகளின் இந்தியப் பொருளாதாரப் புனரமைப்பு முழுவதும் இருந்தது. நம் நாட்டின் பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதலுக்கு நாம் தயாராக இல்லை என்ற உறுதியான எண்ணத்துடனும், அந்நிய அரசாங்கம் நமக்கு முதலாளித்துவ முறைப்படி சீர்திருத்தம் அளிக்கும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று கருதியும் அவர் தம் வேலையைத் தொடங்கினார். ஆகையால், கிராம முன்னேற்றத்திற்கான ஒரு

[1] விவரங்களுக்கு, 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', அத்தியாயம் 15 காண்க.

திட்டத்தை அளித்தார். அதன் முக்கிய அமிசங்களாவன: மற்றக் கிராமத் தொழில்களோடு கையால் நூற்றலும் நெய்தலும், விவசாய மக்களுக்கேற்ற ஒரு புதிய கல்விமுறை, மாதரின் முன்னேற்றம், நல்ல சுகாதாரம், தீண்டாமை ஒழிப்பு, குடி ஒழிப்பு. இந்தத் திட்டங்களை மக்கள் தாமாகவே விரும்பி நிறைவேற்ற வேண்டும். இதற்குப் பொதுமக்கள் தாமாக விரும்பித் தியாகம் செய்ய முன்வர வேண்டும். இவ்வாறு அவர்கள் முன்வருவதற்கு, உற்பத்தியாளன் தன் வேலையைத் தொண்டு செய்வதற்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதவேண்டுமே தவிர, சொந்த இலாபம் பெறுவதற்கு வழியாகக் கருதக்கூடாது. கிராம சேவகன் 'தோட்டியாகவும், செவிலியாகவும், மத்தியஸ்தனாகவும், கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு ஆசிரியனாகவும்' ஒருங்கே இருக்கவேண்டும். 'பொருளாதாரச் சமத்துவம் என்னும் பலமான அடிப்படைமீது அமைக்கப்படாவிட்டால் இத் திட்டம் முழுவதும் மணல்மீது கட்டப்பட்ட கட்டடம் போலாகும். பொருளாதாரச் சமத்துவம் என்றால், எல்லோரும் ஒரே அளவான உலகப் பொருள்களைப் பெற்றிருக்கவேண்டும் என்று பொருளாகாது. எப்படியிருப்பினும், எல்லாரும் வசிப்பதற்குத் தக்க வீடு கிடைக்கும் என்றும், போதிய, சமன்செய்யப்பட்ட உணவும், தன்னை மறைத்துக்கொள்வதற்குப் போதிய கதரும் கிடைக்கும் என்றும் பொருளாகும்.' இந்தியத் தேசீயக் காங்கிரசின் தீர்மானத்தின்படி, கிராமச் சுகாதாரத்தையும், உணவையும், கிராமத் தொழில்களையும் அபிவிருத்திசெய்வதற்காக 1934-ல் அனைத்திந்தியக் கிராமக் கைத்தொழிற் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் வேலைக்குத் துணையாக, அகில இந்திய நூற்போர் சங்கமும் காந்தி சேவா சங்கமும் வேலை செய்தன.

மேனாடுகளில் கூட்டுறவு இயக்கம் கிராமப் புனரமைப்புக்கான இயக்கமாக மாறிவிட்டது. அது கிராமத்தின் பொது வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றி வருகிறது. 'கூட்டங்கள், திருவிழாக்கள், விளையாட்டுகள், கம்பியில்லாத் தந்தி, சினிமா, நூல் நிலையங்கள் நிறுவுதல் ஆகியவற்றால் தலக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் சமஷ்டிகளும் கிராம மக்களுக்குப் பொழுதுபோக்கு, கலாசாரம், சமூக வாழ்க்கை முதலியவற்றை அளிக்கத் தம்மால் இயன்றதையெல்லாம் செய்கின்றன.'[1]

ஆனால், இங்கு இந்தியாவில் நாம் வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். பூதான இயக்கமும், அதிலிருந்து தோன்றிய கிராமதான இயக்கமும் தன்னிறைவுள்ள கிராமங்களை மீண்டும்

[1] 'கிராம வாழ்க்கையில் கூட்டுறவு நடவடிக்கை', ஜினிவா, 1939, பக்கம் 29

உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கையை அளிக்கின்றன. இக்கிராமங்களில் நாம் மிக ஊக்கமாக உற்பத்தி செய்யும் மின்சார சாதனங்கள் அமைக்கப்பட்டு, இவை ஒவ்வொரு கிராமக் குடும்பத்திற்கும் கிடைக்கும்படி செய்யப்படும். இக்கிராமங்கள், பல நூற்றுண்டுகளாகச் சிறப்புப் பெற்றுள்ள வேலைப்பாகுபாட்டை விடாமல்வைத்துக் கொண்டுள்ள குடும்பங்களின் இணைப்பான கூட்டுறவு முயற்சிகளின் அடிப்படையில் அமையும். இதற்கு மாருக, விரைவாகத் தொழில் மயமாகும் போக்கும், பேரளவு உற்பத்தியும், ரெயில் தொடர்பும் சாலைத் தொடர்பும், பண்டமாற்றுக்குப் பதில் பணத் தொடர்பும், நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் எளிதில் கிடைப்பதும், உரங்கள் எளிதில் கிடைப்பதும், நவீனத் தொழில் நுண்ணியலைக் கைக்கொள்வதும் ஆகியவை சமூகத்திலும் மதத்திலும் மாறுதலை உண்டாக்கக் கூடிய இடைக்காலம் ஒன்றைப் புகுத்தும். இவ்விடைக் காலத்தில் தொழில் நுண்ணியல் அளிக்கும் நன்மையைவிடப் பொருளாதார நஷ்டம் அதிகமாக இருக்கக்கூடும். நம் ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் புகுத்தக்கூடிய நுட்பத்தொழில் மாறுதல்கள் எவ்வளவு இருப்பினும், நாம் இன்னும் நீண்டகாலம் விவசாய நாடாகவே இருப்போம். நாம், நம் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஒரு வழியும் கண்டுபிடிக்கவில்லை என்ருல்; அதிகாரத்திற்காகவும் செல்வாக்கிற்காகவும் சண்டையிடும் சுயநலக் கோஷ்டிகள் கிராமங்களின் பழைய நிலையங்களுக்குப் பதிலாகப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஜனநாயக முறையை, தேர்தல்களைக் கொண்டுவந்தால், கூட்டுறவு இயக்கத்தால் ஏற்படும் நம்பிக்கை, நம்பிக்கையளவாகவே நின்றுவிடும்.

15. நில உரிமை முறைகளும் நில வரியும்

பழைய வரலாறு

பொருளாதாரப் பிரச்சினைபற்றிப் பேசும்போது, இந்தியா போன்ற விவசாய முக்கியத்துவம் வாய்ந்த நாட்டில் நில உரிமை முறைகள், நிலவரிபற்றிய பிரச்சினைகள் முதன்மையான சிறப்புடையவையாகும். இந்தியாவில் பலவகைச் சாதனங்களும் பூகோள நிலைமைகளும் இருப்பதால், பலவகையான நில உரிமை முறைகள் இருக்கின்றன. இவை சரித்திர சம்பந்தமான காரணங்களால் மேலும் சிக்கலாகிவிட்டன.

இந்துக்கள் ஆண்ட காலத்தில் நிலம் கிராமத்திற்குரிய சொத்தாகக் கருதப்பட்டது. அது ஒருபோதும் அரசனுக்குரியதாக இருந்ததில்லை. நிலத்தில் விளையும் பொருள்களில் ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு வழக்கமாக உரியதாக இருந்தது. அது நெருக்கடியான காலங்களில் நான்கில் ஒரு பங்காக உயர்த்தப்பட்டது. பொருளாக அளிக்கப்படும் ஒரு பங்கு மட்டும்தான் அரசாங்கத்திற்கு உரியதாக இருந்தது. முஸ்லீம்கள் ஆட்சியில் அப்போதிருந்த நில உரிமை முறைகளும் வரி முறைகளும் சில மாறுதல்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் பங்கு மூன்றில் ஒரு கூறாக உயர்த்தப்பட்டது. அக்பர் காலத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நில வரியை ரொக்கமாகக் கொடுக்கும்படி நிர்ணயிக்கப்பட்டது. வரியை ஒழுங்காக வசூலிப்பதற்குத் தலையாரிகள் (headmen) அல்லது வரிக் குடியானவர்கள் நியமிக்கப்பட்டார்கள். 17ஆம் நூற்றாண்டின் இடையில் ஜமீந்தார்கள், நிலமளிக்கப்பட்டவர்கள், வரிக் குடியானவர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொண்டார்கள். இந்த நிலைமை

மத்திய அரசாங்கத்தின் பலக்குறைவால் பரம்பரை உரிமையாகி விட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தபோது, அவர்கள் இந்தப் பரம்பரை முறையை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் பிரிட்டிஷ் சட்டக் கருத்துகளை இந்தியாவில் புகுத்தியதால், நில முறையின் தன்மை முற்றிலும் மாறிவிட்டது. அரசாங்கம்தான் எல்லோருக்கும் மேலான நிலப்பிரபு என்று கருதப் பட்டது. கிராம மக்கள் மொத்தமாக விளைச்சலில் கொடுத்து வந்த வழக்கமான பங்குக்குப் பதிலாக, நிலத்தின் மதிப்பின் மீது ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்கமாக வரி செலுத்தும் முறை புகுத்தப் பட்டது. இந்த வரி, விளைச்சல் எப்படியிருந்தாலும் அதைப் பொறுத்ததன்று. பெரும்பாலும் வரி விதிப்பு தனிப்பட்டவர்கள் மேல்தான் இருந்தது. இது நேராக விவசாயியின் மீதோ, அரசாங்கம் நியமித்த நிலக்கிழார்கள் மீதோ போடப்பட்டது. நிலவரி, வரியாக அன்றிக் குத்தகைப் பணமாகக் (அல்லது வாடகையாக) கருதப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் வெவ்வேறு மாகாணங்களில் உள்ள நிலைமையைப் பொறுத்தும், நிர்வாகச் சௌகரியத்தைப் பொறுத்தும் வரியை விதிக்கும் முறையும் வசூலிக்கும் முறையும் வேறுபட்டன.

இன்றைய நிலவரி முறையின் அடிப்படைக் கொள்கை என்ன வென்றால், அரசாங்கம்தான் எல்லோருக்கும் மேலான நிலப்பிரபு என்பதும், நிலத்திலிருந்து கொடுக்கப்படும் வரி குத்தகைக்குச் சமம் என்பதும் ஆகும். இவ்வாறு சொல்வதைச் சிலர் மறுத்தாலும், நடைமுறையில் அரசாங்கத்திற்கும் விவசாயிக்கும் உள்ள தொடர்புபற்றிய இவ் விளக்கம்தான் மிகவும் சரியானது. நிலவரி நிர்ணயிக்கும் முறைக்கு அதிகாரபூர்வமான பெயர் 'செட்டில் மெண்டு' (settlement) என்பது.

இந்தியாவில் நில உரிமை முறை என்பது, நிலத்தை வைத்துக் கொண்டோ, பயிர் செய்துகொண்டோ உள்ளவர்களுக்கும் (தனி மனிதர்கள்) அரசாங்கத்திற்கும் இடையே (வரியைக் கொடுக்கும் விஷயத்தில்) உள்ள உரிமைகள், பொறுப்புகள் ஆகியவைபற்றிய நிலையேயாகும். இந்தியாவில் உள்ள முக்கியமான நில உரிமை முறைகள் பின்வருமாறு: (1) நிலம் வைத்திருப்பவனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பொறுத்து ஜமீந்தாரி அல்லது ரயத்துவாரி முறை; (2) நில உரிமையின் கால அளவைப்பொறுத்துச் சாசுவதமான அல்லது தாற்காலிகமான முறை. ஜமீந்தாரி முறையில், ஜமீந்தார்தாம் அரசாங்கத்திடமிருந்து

நிலத்தையெல்லாம் பெற்றிருப்பவர். அவர்தாம் நில வரிக்குப் பொறுப்புடையவர்; நிலம் வாரக்குடிகளால் பயிர் செய்யப்படும். ரயத்துவாரி முறைப்படி, ரயத்து அல்லது நிலத்திலுள்ளவன் தானே நேரடியாக நிலத்தை வைத்திருப்பான்; இவன் பெரும்பாலும் தனியாகவே அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்துவதற்குப் பொறுப்புடையவன்.[1] ஜமீந்தாரி முறை, சாதாரணமாக சாசுவத நிலவரி முறை எனப்படும். ஆனால், தாற்காலிக 'ஜமீந்தாரி முறை' என்றும் ஒன்று உண்டு. வங்காளத்தில் கார்ன்வாலிஸ் பிரபு 1793-ல் சாசுவத நிலவரி முறையைப் புகுத்தினர். பிறகு இம்முறை பீகார், ஒரிசா, சென்னை ஆகியவற்றில் சில இடங்களிலும் புகுத்தப்பட்டது. இம்முறை பிரிட்டிஷ் இந்தியாவின் பரப்பில் 19 சதவீதத்திற்கு அல்லது 12 கோடி ஏக்கர் நிலத்திற்கு ஏற்பட்டது.

மொத்தப் பரப்பில் 30 சதவீதம் தாற்காலிக ஜமீந்தாரி முறைக்கு உள்ளாயிற்று. நிலவரிப் புள்ளி விவரங்களின்படி (1947-48), A பகுதி இராச்சியங்களில் 960 இலட்சம் ஏக்கர் அல்லது 24 சதவீதம் சாசுவத நில்வரி முறையும், 1540 இலட்சம் ஏக்கர் தாற்காலிக ஜமீந்தாரி முறையும் பெற்றிருந்தன. ஆக, ஜமீந்தாரி முறை 62 சதவீத நிலத்தில் பரவியிருந்தது; மீதியிருந்த 38 சதவீதம் அல்லது A பகுதி இராச்சியங்களில் 1510 இலட்சம் ஏக்கர் ரய்த்துவாரி முறையின்கீழ் இருந்தன.[2] தாற்காலிக ஜமீந்தார்கள் பெரும்பாலும் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பாடியாலா, ஹைதராபாத் முதலிய இராச்சியங்களில் உள்ளனர். தாற்காலிக ஜமீந்தாரியில் சிறிது மாறுபட்ட உருவம் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. இது மல்குசாரி (Malguzari) எனப்படும். இதில் மல்குசார்கள் அல்லது படேல்கள் (Patels) மகாராட்டிரர்களின்கீழ் வரிக் குடியானவர்களாய் இருந்து, பிறகு உரிமையாளர்களாகக் கருதப்பட்டார்கள்.

ரயத்துவாரி முறை

சுமார் 1,510 இலட்சம் ஏக்கர் அல்லது A பகுதி இராச்சியங்களில் 38 சதவீதம் ரயத்துவாரி நில உரிமை முறைப்படி உள்ளது. இது பம்பாய், சென்னையில் பெரும் பகுதி, பீரார், அசாம் ஆகிய

[1] வங்காளத்தில் அவர்கள் (பிரிட்டிஷார்) பேரளவில் இங்கிலாந்தின் நிலவுடைமையைக் கேலிக்கூத்தாகச் செய்துவிட்டார்கள்; தென்கிழக்கு இந்தியாவில் சிறிய அளவு சொத்து ஒதுக்கிக் கேலி செய்தார்கள்; வடமேற்கில் தங்களால் முடிந்த அளவு இந்தியச் சமூகத்தை நிலத்திற்குப் பொது உரிமையாளர்களாக்கி அந்த முறையையே கேலி செய்தது. [மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' (Capital) தொகுதி III, பக்கம் 392-3.] காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டது.

[2] திருமலை மேலே கூறியது, பக்கம் 129.

இடங்களில் இருக்கிறது. ரயத்துவாரி நில உரிமை முறையின் முக்கிய அமிசங்களாவன: (அ) தரிசு நிலங்கள் உட்பட எல்லா நிலங்களும் அரசாங்கத்திற்கு உரியவை என்பது இதன் அடிப்படைக் கொள்கை. (ஆ) நிலத்தை வைத்திருப்பவன் அதில் வசிப்பவனாக மட்டும் கருதப்படுவான். அவன் அதை உபயோகிக்கவும், வாரிசுகளுக்குக் கொடுக்கவும், மாற்றவும், விட்டு நீங்கவும் உரிமையுடையவன். அவன் நில வரியைக் கொடுக்கும் வரையில் அந்த நிலத்திற்கு உரியவனாவான். நிலவரி பயிர்களின்மீது விதிக்கப்படும்; முந்திய வருடப் பாக்கிகள் அந்நிலத்தின் மீதுள்ள முதற் பொறுப்பாகும். நில வருமானம் குத்தகையாகக் கருதப்படுமேயன்றி, வரியாகக் கருதப்படுவதில்லை. ஏனெனின், வரி கொடுத்தால் நிலம் தனிப்பட்டவனுடைய உரிமையாகிவிடும். (இ) நிலத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் நிலவரியைச் செலுத்துவதற்குத் தனித்தனியே பொறுப்புள்ளவராவார். (ஈ) 20 அல்லது 30 வருடங்களுக்கு ஒரு முறை வரி நிர்ணயம் செய்யப்படும். சர்வே செட்டில்மென்டு செய்து நிலங்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வரி நிர்ணயம் செய்வார்கள். இந்த செட்டில்மென்டுகள் நில வரியை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பளித்தன.[1]

இரண்டுவிதமான ரயத்துவாரி நிலங்கள் உண்டு. (1) நேராக அரசாங்கத்தினிடமிருந்து தனிப்பட்டவர் ஒவ்வொருவரும் நிலத்தைப் பெற்றிருப்பது. (2) கிராம சமூகங்கள் நிலத்தைப் பெற்று, கிராம அதிகாரிகள் கிராமம் முழுவதற்கும் வரி செலுத்தும் பொறுப்புடையவர்களாயிருப்பது. சென்னை, அசாம், பம்பாய் ஆகிய இடங்களில் ரயத்துவாரி முறை தனிப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தனிப்பட்டவர் நேராக வரி விதிக்கப்பட்டதால் கிராம சமூகம் தன் பொருளாதார வேலையை இழந்தது. நிலத்தில் குடியானவனுக்குச் சொந்த உரிமை யளிக்கப்பட்டது. அதனால், அவனுக்கு நிலத்தை விற்கவோ, ரொக்கத்திற்கு அடமானம் வைக்கவோ முடியும். இந்தியாவில் விலைப் பொருளாதாரம் தொடங்கிப் பரவிவந்த நிலையில் இது ஏற்பட்டது. நிலத்தின் அடிப்படையில் வரியின் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது. அது வருடந்தோறும் விளையும் பயிருக்கு

[1] கஷ்ட காலத்தில் ஒரு செட்டில்மென்டில் குறைக்கப்பட்ட வரி, அடுத்த செட்டில்மென்டில் சிறிது செழிப்பு உண்டானாலும் மிகக் கடுமையாக்கப்படும். விவசாயத்தில் பணம் சேர்ப்பது என்பது, ஒவ்வொரு அடுத்த செட்டில்மென்டிலும் நிலவரியை மாற்றக்கூடிய அதிகாரம் செட்டில்மென்டு உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும்வரையில் அறவே முடியாது. அரசாங்கம் அநியாயமாக வரியை உயர்த்தும்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத விவசாயிகளின் நிலைமை சிறிதளவும் அபிவிருத்தியடையாது. (R. C. டட் எழுதிய 'விக்டோரியா காலத்தில் இந்தியாவின் பொருளாதார வரலாறு,' 1903; 5-வது பதிப்பு, பக்கம் 53-54).

ஏற்பக் குறிப்பிட்ட காலங்களில் ரொக்கமாகக் கொடுக்கக்கூடியதாக இல்லை. இந்த அமிசங்கள் எல்லாம் சேர்ந்து கிராமப் பொருளாதாரத்தில் லேவாதேவிக்காரனின் முக்கியத்துவத்தை அதிகமாக்கின.

மகல்வாரி முறை

1883-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் சாசுவத நிலவரிக் கொள்கையைக் கைவிட்டபோது, ஆக்ராவிலும், அயோத்தியிலும் (Oudh), பின்னர் பஞ்சாபின் சில பகுதிகளிலும் கூட்டாக அல்லது சமூகமாக நிலத்திற்கு உரிமையுள்ள 'மகல்வாரி' முறை எனப்படும் ஒரு புதிய முறை தோன்றியது. இந்த முறைப்படி, கூட்டமான சொந்தக்காரர்கள் (owners) அல்லது கிராம சமூகங்கள் நிலத்திற்கு உரியவர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டனர். ஆனால், கூட்டு உரிமை என்பது பெயரளவில்தான் இருந்தது. தனித்தனியாக வரி விதிக்கப்படும் போக்கு உண்டாயிற்று. நடைமுறையில் உடன் உரிமையாளர்கள் தனிப்பட்ட உரிமையாளர்களாகவே நடத்தப்பட்டனர்.[1] அரசாங்கம், குத்தகையில் 40 முதல் 70 சதவீதம் வரையில் வரியாகக் கேட்டது. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை செட்டில்மென்டு செய்யப் பட்டதால், விவசாய வருமானத்தில் மேலும் மேலும் அதிகப் பங்கை அரசாங்கம் கவர்ந்தது. ஒவ்வொரு நிலக்கிழாரும் கட்டவேண்டிய பங்கு இவ்வளவு என்று கண்டுபிடிக்க முடிந்ததாலும், தனியாக அதைப் பெற முடிந்ததாலும் ரயத்துவாரி முறையில் குடியானவர்கள் இருந்த நிலையிலேயே இந்த விவசாயிகளும் இருந்தார்கள்.

ஜாகீர்தாரி, இனும் செட்டில்மென்டு என்ற வேறு வகையான செட்டில்மென்டுகளும் நாம் கவனித்தற்குரியன. இவை பெரும்பாலும் ராஜஸ்தானம், மத்தியபாரதம், சௌராஷ்டிரம், ஹைதராபாத், சென்னையிலும் மேற்கு வங்காளத்திலும் சில பகுதிகள் ஆகிய இடங்களில் இருக்கின்றன. இந்த செட்டில்மென்டுப்படி, நிலத்தில் பயிர் செய்பவர்களிடமிருந்து ஜாகீர்தார்களும் இனும்தார்களும் குத்தகையைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். ஆனால், அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்த நிலத்தை அவர்கள் சொந்தமாக்கிக் கொள்ளவோ, நிருவகிக்கவோ, பயிர் செய்யவோ உரிமையற்றவர்கள். ஜாகீர்கள் அல்லது இனும்களின் குத்தகைச் சொத்து, அவர் செய்த ஒரு தொண்டுக்காகவோ அல்லது செய்யவேண்டிய தொண்டுக்காகவோ வெகுமானமாக அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது.

[1] R. முகர்ஜி எழுதிய 'இந்தியாவில் நிலப் பிரச்சினைகள்', 1933, பக்கம் 328.

சாசுவத செட்டில்மென்டு

முதலில் அரசாண்ட பிரிட்டிஷார்களுடைய மனத்தில் ஜமீன் தார்கள் பற்றியும், ஆங்கில நிலக்கிழார்கள் பற்றியும் உண்டான ஒரு குழப்பத்தினுல், முகலாயர்களின்கீழ் முன்பு வரிக் குடியானவர் களாகவோ, நிலவரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களாகவோ இருந்த ஜமீந்தார்கள், நடைமுறையில் நிலத்திற்கு உரியவர் களாக ஒப்புக்கொள்ளப்பட்டனர். ஆனுல், அவர்கள் உண்மை யில் நிலத்தை வைத்திருப்பவர்களேயன்றி, நிலத்திற்கு உரிய வர்கள் அல்லர். ஆனுல், சாசுவதமாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு நில வரியை அவர்கள் செலுத்தப்பொறுப்புடையவர்களாக்கப்பட்டார்கள். சர் ரிச்சார்டு டெம்பில் கூறுவது போல, வங்காளத்தில் சாசுவத செட்டில்மென்டு, 'இங்கிலாந்திலிருந்த நிலம் சம்பந்தமான வழக் கங்களே வங்காளத்தில் உள்ள மக்களிடையே சட்டப்படி நிலேநாட்டு வதற்குச் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையே.'[1]

வாரக்குடிகளிடமிருந்து வாங்கப்பட்ட வரி மிகவும் அதிகமாக இருந்தது. வரி செலுத்தத் தவறினுல் நிலங்கள் ஹேஷ்யக்காரர் களுக்கு விற்றுவிடப்படும். முதலில் செட்டில்மென்டு செய்யப் பட்டபோது, ஜமீந்தாருக்கு விதிக்கப்பட்ட வரி, அவர் தம் ரயத்து களிடமிருந்து பெறும் குத்தகையில் சுமார் 11-ல் 10 பங்காக இருந்தது. மீதியுள்ள 11-ல் 1 பாகம் அவருடைய சிரமத்திற்காக அவருக்குக் கொடுக்கப்படும் ஊதியமாக இருந்தது. பிறகு ஜமீந் தார்களின் செட்டில்மென்டு மாருமலிருக்கவும், அவர்கள் தம் வாரக் குடிகளிடமிருந்து பெறும் குத்தகையை அதிகரித்துக்கொண்டே போயினர் என்று வரலாறு கூறுகிறது. தரிசு நிலம் பயிர் செய்யப் பட்டு, விவசாயப் பொருள்களின் விலே ஏறியவுடன் பெறப்பட்ட குத்தகைகள் அதிகமாயின. ஆனுல், நிலக்கிழார்களின் சம்பாத்தியத் திற்கு வருமான வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

சாசுவத நிலவரி செட்டில்மென்டின் ஒரு விளேவு என்ன வென்ருல், ஊன்றிய நலமிகளாக ஜமீந்தார் வகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டதுதான். அவர்களுக்கு ஒருபோதும் சொந்தமாக இல்லாத பெரிய எஸ்டேட்டுகளுக்கு அவர்கள் உரியவர்களானுர்கள். ஏனெனின், அவர்கள் பரம்பரையான வரிக்குடியானவர்கள் அல்லது குத்தகை வசூலிப்பவர்கள். இதன் மற்ருெரு விளேவு ரயத்துக்கு வழக்கமான குத்தகையும் சாசுவத நில உரிமையும் இல்லாமல் போனதுதான். வரி கட்டத் தவறினுல் ஜமீந்தார்களே விற்றுவிட

1. இந்தியாவில் என் காலத்தில் மக்களும் நிகழ்ச்சிகளும்,' பக்கம் 30.

முடியுமாயினும், அவர்கள் தலத்திலில்லாத நிலக்கிழார்கள்ளாய், சுயநலத்தோடு, பிறர் இரத்தத்தை உறிஞ்சிப் பிழைக்கும் ஒரு கூட்டமாகக் கெட்டுவிட்டனர். அரசாங்கம் சாசுவத நிலவரியினுல் அதிகமாக வரக்கூடிய வருமானத்தை இழந்தது. இதனுல், கொடுமைப்படுத்தி அதிக வரி வாங்கும் வழக்கமும் வந்தது. வங்காளத்தில் சாசுவத செட்டில்மென்டின் மற்ருெரு விளைவு யாதெனின், நில உரிமையில் உட்பிரிவுகள் உண்டானதுதான். ஜமீந்தார்கள் தங்கள் உரிமையைக் குத்தகைக்கு விட்டார்கள். தரகர்கள் அதை மேலும் சிலருக்குக் குத்தகைக்கு அளித்தார்கள். இவ்வாறு,அரசாங்கத்திற்கும் உண்மையாகப் பயிர் செய்பவர்களுக்கும் இடையில், குத்தகை பெறுபவர்களும் கொடுப்பவர்களும் ஒரு நீண்ட சங்கிலிபோல உண்டானுர்கள். 1819-ல் ஜமீந்தார்களின் கட்டளை களுக்கு நிலத்தில் பயிர் செய்பவர்கள் முற்றிலும் கீழ்ப்படிந்திருந்த தன்மை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும், 1859 வரையில் வாரக்குடிகளைப் பாதுகாக்க ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆக, 'ஒருபுறம் நிலமானிய முறையும், மற்ருெரு புறம் அடிமை முறையும் வங்காளத்தின் நிலம் சம்பந்தமான முறையின் முக்கிய அமிசங்களாக இருந்தன.' இதைவிட முக்கிய மானது சாசுவத செட்டில்மென்டினுல் உண்டான சமூக மாறுதலே. ஜமீந்தாருக்குச் சொத்து சம்பந்தமான இறுதி உரிமைகளைக் கொடுத்ததால், அரசாங்கம் அவர்களுடைய நிலையை உயர்த்தி, அவர் களுடைய அந்தஸ்து தொடர்ந்து உயர்வதற்கு உதவி புரிந்தது. இதற்கு மாருக ரயத்துகளின் உரிமைகள் அழிவுக்குள்ளாயின. வழக் கத்தில் அவர்களுக்கிருந்த நடைமுறைப் பாதுகாப்பு அழிந்து விட்டது. இதற்குப் பதில் சட்டத்தின் சந்தேகமான பாதுகாப்பும், எதிர்காலத்தில் ஏதோ உதவியளிக்கப் போவதாக வாக்குறுதியும் அளிக்கப்பட்டன. இவ்வாறு ரயத்துகளின் பாதுகாப்பைக் குறைத்தும், ஜமீந்தார்களின் நலனுக்குப் புதிதாக வழி வகுத்தும், வங்காளத்தில் கிராம சமூகத்தின் சமநிலை சாசுவத செட்டில்மென் டினுல் மாற்றப்பட்டது.[1]

ஜமீந்தாரி, ரயத்துவாரி முறைகளின் விளைவுகள்

இவ்வாறு, பிரிட்டிஷ் ஆட்சியில் நிலமுறையில் முழு மாறுதல் ஏற்பட்டது. இதனுல் அரசாங்கம் எல்லோருக்கும் மேலான நிலப்

[1] 'வங்காளத்தில் சாசுவத செட்டில்மென்டும் அதன் விளைவுகளும்', லண்டன், 1949, பக்கம் 25.

பிரபுவாகவும், விவசாயிகள் வாரக்குடிகளாகவும் மாறினர். சாசுவத செட்டில்மென்டில் நிழக்கிழார்கள் அரசாங்கத்தினிடமிருந்து தம் உரிமையைப் பெற்றூர்கள்; வரி கட்டத் தவறினால் நிலம் அவர்களிட மிருந்து பறிக்கப்படும். ஜமீந்தாரி முறை அமைதியாக, ஆனால், புரட்சிகரமான மாறுதலாகப் புகுத்தப்பட்டதும், ரயத்துவாரிப் பகுதி களில் விவசாயிகளுக்கு மிகவும் குறைந்தபட்ச உரிமை ஒப்புக்கொள்ளப் பட்டதும், விவசாயிகளுக்கோ, அரசாங்கத்திற்கோ நன்மை பயக்க வில்லை. சாசுவதமாகவும், தாற்காலிகமாகவும் செட்டில்மென்டு செய்யப்பட்ட பகுதிகளில் ஜமீந்தாரின் உரிமைப் பங்கு வளர்ந்து கொண்டே வந்தது. அவர் இயன்ற அளவு குத்தகையை அதிகமாக வற்புறுத்திப் பெற்றூர். தாற்காலிக செட்டில்மென்டுப் பகுதிகளில், அரசாங்கம் ஜமீந்தார்களிடமிருந்து பெறவேண்டிய தன் பங்கை, அவர்கள் ஒவ்வொரு முறை வரிகள் மாற்றப்படும்போதும் வசூலிக்கும் தொகையில் 50 சதமாக உயர்த்திக்கொண்டது. 1893-லேயே வங்காளத்தின் லெப்டினன்டு கவர்னர் ஒருவர் சாசுவத செட்டில்மென்டைப் பற்றிக் கூறுகையில் 66 வருடங்களுக்குள், அதாவது 1793 முதல் 1859-க்குள் உரிமையாளர் கூட்டம் வலிமை யிலும் செல்வத்திலும் செழித்தது. ஆனால், கிராம சமூகங்கள் அழிந்தன என்று கூறினர்.[1]

இந்த இரண்டு முறைகளினாலும் கிராம சமூகமும் விவசாயி களும் அழிந்ததுதான் நாம் கண்ட பலன். விவசாயிகளும் கைவினைஞர்களும் பரம்பரையாகப் பெற்றிருந்த ஒற்றுமையான கிராம சமூக உறவு குலைந்துவிட்டது. நிலப்பிரபுத்துவத்தை உண்டாக்கியதும், நிலத்தை அனுபவித்துவந்தவர்களைச் சொந்தக் காரர்களாகவும், அவர்கள் கீழிருக்கும் உரிமையாளர்களாகவும் செய் ததும், மேல் உரிமையாளர்கள், கீழ் உரிமையாளர்கள் என்ற பாகு பாட்டை வற்புறுத்தியதும், விவசாயிகளின் பொருளாதார நிலை தாழ்வடைவதற்குக் காரணமாயிருந்ததோடு, வரியை வசூலிக்கும் தரகர்களான ஒரு முதலாளித்துவ வகுப்பையும் வளர்த்துவிட்டன. தனிப்பட்டவர்களுக்கு வரி விதிக்கும் முறையும், பொதுவுரிமைகளை

[1] H. D. மாளவியா, 'இந்தியாவில் விவசாய சீர்திருத்தம்' டில்லி, 195 பக்கம் 123-ல் மேற்கோளாகக் காட்டப்பட்டது.

ஒழித்ததும் நம் விவசாயப் பிரச்சினையை மேலும் கடுமையாக்கி விட்டன.[1]

நிலவரிக் குழு, வங்காளம் (1938-40)

1938-ல் வங்காளத்தில் முக்கியமாகச் சாசுவத செட்டில்மென்டு குறித்து நிலவரி முறையை ஆராய்வதற்காக, சர் பிரான்சிஸ் புளௌடைத் (Sir Francis Floud) தலைவராகக் கொண்ட ஒரு நிலவரிக் குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவில் பெரும்பாலோர் ஜமீந்தாரி முறையில் உள்ள குறைகளைக் குறிப்பிட்டு, அதை ஒழித்து விட வேண்டுமென்று சிபாரிசு செய்தனர். அவர்கள் குறிப்பிட்டதாவது: (1) ஜனத்தொகை அதிகமானதாலும் விவசாயம் விஸ்தரிக்கப்பட்டதாலும் நிலத்தின் மதிப்பு உயர்ந்ததற்கேற்ப, அதில் அரசாங்கத்திற்குரிய பங்கை உயராமல் செய்துவிட்டது; (2) தாதுப் பொருள்கள், மீன்பண்ணைகள் ஆகியவற்றிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை அது இழக்கும்படி செய்து விட்டது; (3) ரயத்துவாரி முறையில் கிராம நிலையைப்பற்றி அறிய முடிவதுபோல, இந்த முறையில் அரசாங்கம் நேரடியாக ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை; (4) அது மாகாணங்களில் ஒரு மாற்ற முடியாத உறுதியான அமைப்பைச் சுமத்திவிட்டது. அது எல்லா வகுப்பாருடைய ஊக்கத்தையும், தொழில் துணிவையும் கொன்றுவிட்டது; (5) அது மேலும் மேலும் அதிக நிலமானிய முறை உட்பிரிவுகளை உண்டாகும்படி செய்துவிட்டது. இதனால், ஜமீந்தாருக்கும் நிலத்தை உழுபவனுக்கும் இடையில் பல சுயநலமுள்ள தரகர்கள் தோன்றினார்கள். சில மாவட்டங்களில் அவர்கள் 1902-ல் இந்திய அரசாங்கத்தின் நிலவரிக் கொள்கைபற்றிய குறிப்பை மேற்கோள் காட்டுகின்றனர். இக்குறிப்பு, தலத்திலில்லா நிலக்கிழார் முறையினாலும், இரக்கமில்லாத ஏஜென்டுகளால்

[1] R. முகர்ஜி எழுதிய மேற்கூறிய நூல், பக்கம் 53. சைமன் கமிஷன், 'வரிப் பங்கீட்டில் உள்ள மோசமான ஏற்றத் தாழ்வுகளை'ப் பற்றிக் குறிப்பிடுகிறது. அரசாங்கத்திற்குத் தன் நிலத்திலிருந்து வரும் பெரும் பகுதியை வரியாகக் கொடுத்துவிடுவதுடன், சர்க்கரை, மண்ணெண்ணெய், உப்பு, மற்றும் பொதுவாக உபயோகிக்கக்கூடிய பொருள்கள் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வரிகளையும் ஏழை விவசாயி தாங்கவேண்டியிருக்கிறது. ஆனால், அவன் ஜமீந்தார் அல்லது நிலக்கிழாரால், சாசுவத செட்டில்மென்டு உள்ள பகுதிகளில் வேறுவிதமாக நடத்தப்படுகிறான். ஜமீந்தார் அல்லது நிலக்கிழார் மிகப் பெரிய எஸ்டேட்டுகளுக்கு உரியவராய், அதற்காக அரசாங்கத்திற்குப் பெயரளவில் சிறிது தொகையைக் கொடுக்கிறார். இத்தொகை நூறு வருடங்களுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டு, எப்பொழுதுமே மாற்றப்படாததாய் உள்ளது. ஆனால், அவருடைய விவசாய வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (Report of the Indian Statutory Commission. 1930, Vol. I) எனினும், அண்மையில், சென்னை, மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், பீகார், ஒரிசா போன்ற சில இராச்சியங்கள் விவசாய வருமான வரியை விதித்துள்ளன.

எஸ்டேட்டுகள் நிருவகிக்கப்படுவதையும், நிலக்கிழாருக்கும் வாரக் குடிக்கும் உள்ள வருந்தத்தக்க தொடர்பையும், ஜமீந்தாருக்கும் பயிர் செய்வோருக்கும் இடையில் குடிவார உரிமையுள்ளவர்கள் அல்லது தரகர்கள் பெருகியுள்ளதையும் எடுத்துக்காட்டுகிறது. இக்குறிப்பு, சாசுவத செட்டில்மென்டை ஒரு விவசாயக் குடிவார உரிமை முறை என்று விளக்குகிறது. இது, எந்த நாகரிக நாட்டிலும் காண முடியாதது. இந்தியாவில் செய்யப்பட்ட இப்பெரிய பரிசோதனையும் இதை நியாயமென்று நிரூபிக்க முடியவில்லை. இது வாரக்குடிகளை முழுவதும் நிலக்கிழாரின் தயவில் இருக்கும்படியாகச் செய்து விட்டதால், அவர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் மிகக் கடுமை யாகச் சட்டமியற்றி நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தாற்காலிக செட்டில்மென்டு உள்ள பகுதிகளில் இந்த அவசியம் ஏற்படவில்லை.[1]

குழுவில் பெரும்பாலானவர்கள், அரசாங்கமே நிலத்தை ஏற்றுக் கொள்வதைவிட இப்போதுள்ள நில அமைப்பு முறையில் உள்ள குறைகளைப் போக்குவதற்கு வேறு வழியில்லை என்ற தெளிவான கருத்தைத் தெரிவித்தனர். இப்போதுள்ள முறை மாருமல் இருக்கச் கூடாது என்றும், செட்டில்மென்டில் ஓரளவு மாறுதல் வேண்டும் என்றும் அவர்கள் கூறினர். சாசுவத செட்டில்மென்டும் ஜமீந்தாரி முறையும் ஒழிக்கப்பட்டு, ரயத்துவாரி முறை அமைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர். 1793-ல் சாசுவத செட்டில்மென்டு செய்வதற்கு எந்தவிதமான நியாயம் இருப்பினும், இப்போதுள்ள நிலைமைக்கு இனி அது பொருந்தாது. ஜமீந்தாரி முறையில் பல குறைகள் ஏற்பட்டுவிட்டதால், அது நாட்டு நலத்துக்கு உதவாது என்று அக்குழு கூறியது. எந்த அரைகுறை நடவடிக்கையாலும் அதன் குறைகளை நல்ல முறையில் போக்க முடியாது. நியாயமான நிபந்தனைகளின்பேரில் எல்லா வகையான வரி வசூல் செய்பவர் களையும் ஒரு திட்டத்தின்கீழ் கொண்டுவர முடியுமானல், உழவர்களை அரசாங்கத்தின் வாரக்குடிகளாகச் செய்வதே நல்ல கொள்கை யாகும்.[2] வங்காளம் பிரிக்கப்படுவதற்கு முன்பு, அங்கு இந்த அறிக்கையின் அடிப்படையில் சட்டம் இயற்றப்பட்டது.

நிலவரி நிருவாகம்

ஜமீந்தாரி அல்லது ரயத்துவாரி முறையில் நிலவரி நிருவாகத்தின் பொதுவான அமிசங்களை மூன்று தலைப்புகளின்கீழ்க்

[1] நிலவரிக் குழு அறிக்கை, வங்காளம், தொகுதி I, 1940. பக்கம் 36.

[2] மேலே கூறியது, பக்கம் 42.

குறிப்பிடலாம்: (அ) நிலவரி சம்பந்தமான ரிக்கார்டுகளைத் தயாரித்தல், (ஆ) நிலவரியை மதிப்பிடுதல், (இ) இப்படி மதிப்பிடப் பட்ட நிலவரியை வசூலித்தல்; வரி மதிப்பிடப்பட்ட ஒவ்வொரு பகுதியின் மீதும் ரொக்கமாக வரி விதிக்கப்படுகிறது. ஜமீந்தாரி முறையில் ஒரு தனிப்பட்ட உரிமையாளர் அல்லது கூட்டமான உடன் பங்காளிகளுக்குச் சொந்தமான கிராமம் அல்லது எஸ்டேட்டு மீது வரி கேட்கப்படும். கேட்கப்படும் ரொக்கம், சாசுவதமாக அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய குறிப்பிட்ட தொகையாகும். இந்தக் காலத்தில் கிடைக்கக்கூடிய மொத்த அதிக இலாபம் முழுவதையும் தனிப்பட்ட நிலக்கிழாரே அனுபவிப்பார். ரயத்துவாரி முறையில், சர்வேயினால் எல்லை குறிக்கப் பட்ட ஒவ்வொரு நிலத்திற்கும் வரி மதிப்பிடப்படும். வெவ்வேறு வகையான நிலங்களுக்கு நிலவரி விகிதங்கள் ஒரு குறிப்பிட்ட காலத் திற்குத் தீர்மானிக்கப்படும். பம்பாயில் தவிர (விளைச்சலைப் பொறுத்து இங்கே வரி மதிப்பீடு செய்யப்படுவதில்லை), இந்தியா முழுவதிலும் 'நிகர விளைச்சலில்' ஒரு பங்காக இருக்கும்படி வரி மதிப்பிடப் படுகிறது. 'நிகர விளைச்சல்' என்பதன் பொருள், இந்தியாவில் வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசப்படுகிறது. வட இந்தியாவிலும் மத்தியப் பிரதேசத்திலும் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்தால் நிலக்கிழார் பெறக்கூடிய மொத்த விளைச்சலின் ஒரு பகுதியை அல்லது குத்தகையை அது குறிக்கிறது. சென்னையில் இதற்கு மாருக (இங்கு அரசாங்கம் நேராக விவசாயிகளோடு தொடர்பு கொண்டுள்ளது) நிகர விளைச்சல் என்பது, மொத்த விளைச்சல் என்று கருதப்படுவதன் மதிப்பிற்கும், உற்பத்திச் செலவின் மதிப்பிற்கும் உள்ள வித்தியாசமாகும். இந்தியா முழுவதற்குமாக அரசாங்கம் நிகரச் 'சொத்துகளில்' தன் பங்காகக் கோருவது சுமார் ஒரு பாதி. வெவ்வேறு இராச்சியங்களில் சாசுவதமாகவோ, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ தனிப்பட்டவர்கள் செய்த கிணறுகள், குளங்கள், கரைகள் போன்ற அபிவிருத்திகளால் கிடைக்கும் அதிக வருமானத் திற்கும், வரி மதிப்பிடப்பட்ட பிறகு, மதிப்புக் குறைந்துவிட்ட நிலங் களுக்குள்ள அதிக வரி விதிப்பிலிருந்து நிவாரணம் அளிப்பதற்கும், வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நிலவரி வசூல்

விவசாயிகளின் வறுமையாலும், ஒரு வருடத்திற்கு இரண்டு முக்கியப் பயிர்களை விளைவிக்கும் வழக்கத்தினாலும் பொதுவாக நிலவரி வருடத்திற்கு ஒரு முறை ஒரே தடவையாக அன்றித் தவணைகளாகப் பெற்றுக்கொள்ளப்படும். இத் தவணைகளின் தேதியும் தொகையும்

அங்கங்குள்ள நிலைமைகளைப் பொறுத்திருக்கும். இந்தத் தேதிக்குள் செலுத்தப்படாத தொகைகளைப் பெறுவதற்காகச் சட்டப்படி ஜப்தி செய்தல், விற்றல் உள்பட அதிக அதிகாரங்கள் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கம் 1905 மார்ச் 25-ஆம் தேதியிட்ட ஒரு தீர்மானத்தில், ஸ்தல அரசாங்கங்கள் நிலவரியைத் தள்ளிப்போடுவதற்கும் விட்டுக்கொடுப்பதற்கும் சில விதிகளை வகுத்திருக்கிறது. சாதாரண வருடங்களில் விவசாயி நல்லதையும் கெட்டதையும் சேர்த்து எடுத்துக்கொள்வது சட்டப்படி நியாய மாயினும், தன் பிழைப்புக்கே போதாத அளவு பயிர் விளைந்த வருடங்களில், நிர்ணயிக்கப்பட்ட வரியைக் கொடுக்கவேண்டுமென்று அவனிடமிருந்து எதிர்பார்ப்பது நடவாத காரியம். அதிகச் சிக்கனம் தெரியாத விவசாயியின் எதிர்காலப் பொருள் நிலையைக் குலைக்கக் கூடிய அளவுக்கு அவனை வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது. 'சாதாரண விளைச்சலில் பாதி கிடைக்கும்போது நிவாரணம் தேவையில்லை' என்று 1901 ஆம் வருடத்திய பஞ்சக் குழு கூறியதை இந்தீர்மானம் ஆதரிக்கிறது. சாதாரண விளைச்சலில் கால் பகுதிக்குக் குறையும்போது முழு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. சட்டப்படியோ, வேறுவிதமாகவோ நிலத்தை உழுபவனுக்கு வீதாசாரப்படி நிவாரணத்தில் பங்கு கிடைக்கும்படி செய்தாலன்றி, வரி செலுத்தும் நிலப்பிரபு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சாதாரணமாக நிவாரணம் கொடுக்கப்படமாட்டாது.

ரயத்துவாரி முறையில் நிலவரியானது நிலத்திலிருந்து சம்பாதிக்கப்படாத வருமான உயர்வைப் பிடுங்கிக்கொள்வதாகாது என்றும், ஆனால், பிழைப்புக்கே போதாத அளவுள்ள பொருளில் அநியாயமாகப் பங்கு கேட்பதாகும் என்றும் கூறுவதில் அதிக உண்மை இருக்கிறது. விவசாய நிலங்களில் பெரும்பாலானவை சிக்கனமானவை என்று கருத முடியாத அளவுக்கு மிகச் சிறியவையாய் இருப்பதால், விவசாயிகள் நிலவரிச் சுமையைத் தாங்க முடியாது. ஆகவே, அவர்கள் அரசாங்கத்தின் வரியைச் செலுத்துவதற்கு லேவாதேவிக்காரனிடம் போகவேண்டியிருக்கிறது. விவசாயிகளைப்பற்றி 1901ஆம் ஆண்டின் பஞ்சக்குழு பின்வருமாறு கூறியது: 'நன்றாக விளைந்த வருடங்களில் பிழைப்புக்குப் போதுமான அளவுதான் அவர்கள் எதிர்பார்க்கலாம்; நன்றாக விளையாத வருடங்களில் அவர்கள் பொதுமக்களிடமிருந்து தருமம் கேட்க வேண்டியிருக்கிறது.'

நிலவரியை வாங்கும் முறையும் காலமும் விவசாயிக்கு மேலும் துன்பம் தருகின்றன. சாதாரணமாக அவனிடம் சேமிப்பு ஒன்றுமில்லை. பயிர்கள் விளையாமல்போனால் அவன் கடன் வாங்கி அரசாங்க

வரியைச் செலுத்த வேண்டும். சாதாரண விளைச்சலின்போது கூட, அவன் இரண்டு தவணைகளில், ஜனவரி 15ஆம் தேதிக்கு முன் ஒன்றும், மார்ச் 15ஆம் தேதிக்கு முன் மற்றொன்றுமாக நில வரியைச் செலுத்த வேண்டும். இச் சமயத்தில் அவனிடம் பணம் இருக்க வேண்டும். அவனிடம் பயிர் விற்பதற்குத் தயாராக இருந்தாலும், அவன் மார்க்கெட்டில் உள்ள விலை வீழ்ச்சியால் அதை விற்க முடியாது. ஏனெனின், எல்லா விவசாயிகளும் ஒரே சமயத்தில் விற்க முனைவார்கள். அவன் தன் இலாபத்தை இழக்கவேண்டி வரும்; அல்லது கிராம சௌக்காரிடம் கடன் வாங்கவேண்டிவரும்.

இந்தியாவில் விவசாயத்தைச் சீர்திருத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நிலவரிக் கொள்கையை அடியோடு சீர்திருத்த வேண்டியது மிக அவசியம். இந்த வழியில் அடிப்படை மாறுதல் இல்லாமல், விவசாயக் கடனைக் குறைப்பது அல்லது ஒழிப்பது என்ற பேச்செல்லாம் பயனற்றது.

‘சிக்கனமான நிலம்’ என்பது எப்படி விளக்கப்படினும், ‘சிக்கனமான நிலங்கள்’ மீதுதான் அரசாங்கம் வரி விதிக்க வேண்டும். வரி வசூல் விவசாயிக்குப் போதிய அளவு மிஞ்சியிருக்கும்படி நெகிழ்ச்சியுடையதாயிருக்க வேண்டும்.

நில வரியின் பாதிப்பு

செட்டில்மென்டின் தன்மை, நில உரிமையின் வகை, நிலத்தின் வகை ஆகியவற்றைப் பொறுத்து, இந்தியாவில் நில வரியின் பாதிப்பு இருக்கும். சாசுவத செட்டில்மென்டில், 1937-38-ல் வங்காளத்தில் மொத்தம் ரூ. 3,14,00,000 நிலவரி கிடைத்தது. தாற்காலிக செட்டில்மென்டுகளில், ஜமீந்தாரி நிலங்களில் குத்தகை அளவில் 50 சதவீதம் அதிகபட்ச நிலவரியாகக் கருதப்படுகிறது. ரயத்துவாரிப் பகுதிகளில் அரசாங்கத்தின் பங்கு இவ்வளவு என்று கூற முடியாது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு மொத்த விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை அரசாங்கத்தின் அதிகபட்ச வரியாக நிர்ணயிக்கும்படி செல்வாக்குள்ள பலர் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்று அளிக்கப்பட்டது. இந்த விண்ணப்பத்திற்கும், மற்றவர்களின் முறையீட்டிற்கும் பதிலளிக்கும் முறையில் இந்திய அரசாங்கம் 1905-ல் தன் நிலவரிக் கொள்கை சரியானதே என்று வாதிக்கும் தீர்மானம் ஒன்றை வெளியிட்டது. அது ‘இப்போதுள்ள நடைமுறைப்படி அரசாங்கம் இப்போது பெறும் வரியானது, இவர்கள் விதிக்கும்படி கேட்கும் வரியைவிட மிகவும் குறைவானதே’ என்று வன்மையாக நிலைநாட்டியது. இன்றுகூட இந்திய

அரசாங்கத்தின் நிலவரிக் கொள்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கு இத்தீர்மானமே அதிகாரபூர்வமான விளக்கமாக உள்ளது. இத் தீர்மானத்தில் உள்ள விதிகளாவன : (1) ஜமீந்தாரி நிலங்களில் சொத்தில் 50 சதவீதம் என்னும் அளவிற்குக் குறைவாக அன்றி அதிகமாக வாங்கப்படுவதில்லை ; (2) நிலக்கிழார்களின் கொடுமை யிலிருந்து வாரக்குடிகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் சட்ட மியற்றத் தயங்குவதில்லை ; (3) ரயத்துவாரிப் பகுதிகளில் நீண்டகால செட்டில்மென்டு கொள்கை விஸ்தரிக்கப்பட்டு வருகிறது ; (4) தல வரிகள் அதிகமாகவோ, தாங்கமுடியாமலோ இல்லை; (5) வறுமைக்குப் பொதுவான அல்லது மிகுந்த காரணம் அதிக வரி விதிப்பு அன்று ; இது பஞ்சத்திற்கும் ஒரு காரணமாகாது.

ஆனால், நிலவரியில் தொடர்ச்சியாக உயர்வு ஏற்பட்டுள்ளது என்று தயங்காமல் கூறலாம். அது எல்லோரையும் சமமாகப் பாதிக்க வில்லை என்றும் கூறலாம். டாக்டர் மான் (Mann) தக்காணத்தில் உள்ளகிராமத்தில் 1829-30-ல் ரூ. 889ஆக இருந்த நிலவரி 1914-15ல் ரூ. 1,660 ஆக உயர்ந்தது என்று எடுத்துக் காட்டுகிறார்.[1] ராதாகமல் முகர்ஜி, 'சென்னையிலும் பம்பாயிலும், குறிப்பாக உத்தரப் பிரதேசத்திலும் வரி விதிப்பு அளவு கடந்து சென்றுவிட்டது,'[2] என்று கூறுகிறார். விலைகள் ஏறினாலும் சிறு விவசாயிகள் அதனால் நன்மையடைய முடிவதில்லை. ஏனெனின், அவர்களுடைய விளைச்சல் அவர்களுக்கு விதை முதலியவைகளுக்காகப் பணம் கொடுக்கும் சௌக்காருக்கு அநேகமாக அடமானம் வைக்கப்பட்டுவிடுகிறது. மேலும், விலைகள் ஏறியிறங்குகின்றன ; ஆனால், குத்தகையும் நில வரியும் அவ்வளவு நெகிழ்ந்து கொடுப்பவையல்ல. நிலவரி உயர்வை, தலா விவசாய வருமானக் குறியீட்டெண்ணோடு ஒப்பிட்டு, டாக்டர் முகர்ஜி இவ்வாறு முடிவு கூறுகிறார்: 'உத்தரப் பிரதேசம், சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் கடந்த மூன்று பத்தாண்டுகளில் விவசாய வருமானம் முறையே சுமார் 30, 60, 23 சதவீதம் உயர்ந்திருக்க, நிலவரி முறையே 57, 22·6, 15·5 சதவீதம் உயர்ந்துள்ளது. இவ்வளவு அதிக நிலவரி உயர்வோடு, அதை ரொக்கமாக மாற்றி அறுவடைக் காலத்தில் வசூலிப்பதால், இந்த மாகாணங்களில் பெரும்பாலாக உள்ள சிக்கனமற்ற நிலத்தையுடைய விவசாயிகளின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்படுகிறது.'[3]

[1] 'தக்காணக் கிராமம் ஒன்றில் நிலமும் உழைப்பாளிகளும்' 1917, பக்கம் 42-43.

[2] மேலே கூறியது, பக்கம் 206

[3] மேலே கூறியது, பக்கம் 345

வங்காளத்தில் 1764-65-ல் நிலவரி வருமானம் £ 8,11,000 ஆக இருந்தது. இது 1765-66-ல் £ 14,70,000 ஆக உயர்த்தப்பட்டது. 1793-ல் இது சாசுவத செட்டில்மென்டுப்படி £ 30,00,000 ஆக உயர்ந்தது.[1] மொத்த நிலவரி வருமானம் 1857-8-ல் £ 153 இலட்சமாக இருந்து, 1911-12-ல் £ 200 இலட்சமாகவும், 1936-37ல் £ 230 இலட்சமாகவும் மாறியது. புளௌட் குழுவின் உறுப்பினரான கான்பகதூர் S. M. ஒசேய்ன், வங்காளத்தில் 1793-க்கும் 1940-க்கும் இடையில் குத்தகைகள் 160 சதவீதம் உயர்ந்தன என்றும், ஜமீந்தார்களின் நிகர வருமானம் இன்னும் அதிகமாகவும்—அதாவது, 1793ல் ரூ. 20 இலட்சமாக இருந்து, 1940-ல் ரூ. 832 இலட்சமாக அல்லது 4,160 சதவீதமாக—உயர்ந்தது என்றும் கூறுகிறார்.[2] டாக்டர் ராதாகமல் முகர்ஜி செய்த கணிப்பின்படி, கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளில் நிலக்கிழார்கள் ரூ. 1,800 கோடிக்குக் குறையாமல் பறித்துக்கொண்டார்கள். இதேபோல உத்தரப் பிரதேசத்தில் 1793-ல் அரசாங்கத்தின் குத்தகைப் பங்காகிய 90 சதவீதம், 1946-ல் 39 சதவீதமாகக் குறைந்தது. 1893-94-க்கும் 1943-44-க்கும் இடையில் குத்தகையில் கோரப்பட்ட உயர்வு 42 சதவீதமும், நிலவரியில் 15 சதவீதமும் இருந்தன. தரகர்களுடைய இலாபம் 70 சதவீதம் உயர்ந்தது.[3] ஆக, விவசாயிகளின்மீது கடன் சுமை 1893-94-ல் ரூ. 12·24 கோடியாக இருந்து, 1944-45-ல் ரூ. 17·53 கோடியாக உயர்ந்தது. இந்த உயர்வில் பெரும் பங்கு நடுவில் உள்ள தரகர்களால் கைப்பற்றப்பட்டது. 1929-30-ல் நிலக்கிழார்களுக்கு மிக அதிகமான இலாபம் கிடைத்தது. அப்போது 58 சதவீதம் குத்தகையில் உயர்வும், நிலவரி வருமானத்தில் அதற்கேற்ப 19 சதவீதம் உயர்வும் உண்டாகி, நிலக்கிழார்களின் இலாபம் 96 சதவீதமாக உயர்ந்தது.[4] இந்த எண்கள் ரயத்துகளின் மீதுள்ள சுமையைப் பற்றி முழுவதுமாக அறிவிக்கவில்லை. கிரமமான குத்தகைகள் அல்லாமல், ஜமீந்தார்கள் பலவித நியாய விரோதமான கோரிக்கைகளை (நவாப், நசரானு, சலாமி போன்றவற்றை) வற்புறுத்தினார்கள்.

ரயத்துவாரிப் பகுதிகளில் ஒவ்வொரு தடவை வரியை மாற்றும் போதும் வரி உயர்த்தப்படுகிறது. பர்தோலியில் அதிக வரி

[1] திரு. ஷோர் கூறிய குறிப்பு, பிற்சேர்க்கை I, R. C. டட்டினால் 'பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதார வரலாறு' என்பதில் (பக்கம் 85) மேற்கோளாகக் கூறப்பட்டது.

[2] 'இந்தியாவில் ஜமீந்தாரி நில உரிமை முறைப் பிரச்சினைகள்' 1949, பக்கம் 63-ல் P. M. டிரைவரால் மேற்கோள் காட்டப்பட்டது.

[3] H. D. மாளவியா, மேற்கூறிய நூலில் கூறியது, பக்கம் 101.

[4] உத்தரப் பிரதேசத்தில் ஜமீந்தாரி முறை ஒழிப்புக் குழுவின் அறிக்கை, 1948, பக்கம் 346,

விதிப்பை எதிர்த்து விவசாயிகள் 'சத்தியாக்கிரக' இயக்கம் நடத்திய தால், ஒரு அதிகாரபூர்வமான விசாரணை செய்து, 'வரி விதிப்பு மிகவும் அதிகம் என்று பம்பாய் அரசாங்கம் ஒப்புக்கொள்ளும்படி நிரூபிக்கப்பட்டது.'[1] சில விஷயத்தில் வரி விதிப்புக் குறைவாய் இருந்திருப்பினும், வரி செலுத்தப்படும் காலம்பற்றிய கண்டிப்பும், வரி விதிப்பின் கண்டிப்பும் விவசாயியின் பொருளாதார நிலை சீர்கேடடைவதற்குக் காரணங்களாகும்.

1905-ல் இந்திய அரசாங்கம் செய்த தீர்மானம் இருப்பினும், இந்தியாவில் விவசாயம் சரியாக நடைபெறாததற்கு நிலவரி முறையும் ஒரு காரணமாகும் என்று நாம் கருதுகிறோம். வரி விசாரணைக் குழு, 'பருவ நிலை மோசமாயிருக்கும்போது மிக அதிகமான மக்கள் லேவாதேவிக்காரர்களை அண்டுகின்றனர்' என்று கூறியது. விவசாயியின் நிகர விளைச்சலுக்கும், பிழைப்புக்கு வேண்டிய குறைந்தபட்ச அளவுக்கும் உள்ள சிறிய வித்தியாசத்தைக் குறைத்து விடுவதால், அது மூலதனப் பஞ்சத்திற்கும் காரணமாகிறது. வரி விசாரணைக் குழுவின் தீர்ப்பைவிட நிலவரி முறைக்கு மிக அதிகமான கண்டனம் தேவையில்லை.[2]

நிலக்கிழார்களும் தரகர்களும்

சாசுவதமாகவும் தாற்காலிகமாகவும் வரி விதிக்கப்பட்ட பகுதி களில்மட்டும் தரகர்கள் அதிகமாவதில்லை.[3] வங்காளத் திலேயே பயிரில் பங்கு பெறுபவர்கள் பிரச்சினை மிகப் பெரியதாக இருக்கிறது. ஏனெனின், விவசாயத்திற்குத் தகுதியான பகுதிகளில் 20 சதவீதம் அவர்களால் பயிர் செய்யப்படுகிறது. அவர்களுக்குச் சட்டப்படி ஒரு பாதுகாப்பும் இல்லை. வங்காள நிலவரிக் குழு சிபாரிசு செய்துள்ளபடி, 'முதலாளியின் விருப்பத்திற்கிணங்க வேலை செய்யும்

[1] 'நவீன இந்தியா' என்னும் நூலில், 'விவசாயிகளும், நிலக்கிழார்களும், அரசாங்கமும்' என்று மோர்லண்டு எழுதிய கட்டுரை, 1932, பக்கம் 166.

[2] அறிக்கை, பக்கம் 77–78.

[3] ஒப்பிடுக : 'விவசாயிகளின் கையிலிருந்து நிலவுரிமை நழுவிச் செல்லும் போக்கு அதிகமாகிக்கொண்டுள்ளது. நிலத்தை இப்படிப் பெறுபவர்கள் விவசாயிகள் அல்லாதவர்களாகவோ, தாங்களாகவே நேரில் விவசாயம் செய்யக்கூடிய அளவைவிட அதிக நிலத்தை ஏற்கெனவே உடைய விவசாயி களாகவோ இருக்கலாம். இந்தப் போக்கு குறைந்துவிட்டது அல்லது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது என்று கருத இடமில்லை. 1938-ன் வங்காளக் குடிவாரச் சட்டத் திருத்தத்தினால் இது மேலும் மோசமாகி இருக்கும் என்று நினைக்கலாம். இச் சட்டம், நிலத்தை விற்றுவிடும் உரிமைமீதுள்ள கட்டுப்பாட்டை நீக்கிவிட்டதால், உண்மையான விவசாயிகளின் கையி லிருந்து நிலங்கள் மாறிச் செல்வதை அதிக எளிதாக்கிவிட்டது' (பஞ்ச விசாரணைக் குழு அறிக்கை, பிற்சேர்க்கை II c, பக்கம் 445).

வாரக்குடிகள் பெறவேண்டிய பாதிப் பங்கை மூன்றில் ஒரு பாகமாகக் குறைத்தால், அதைப்போல ரயத்துகள் $5\frac{1}{2}$ பங்கும், ரயத்துகளின் கீழ் உள்ளவர்கள் கொடுப்பதைப் போல $2\frac{2}{3}$ பங்கும் கொடுக்கவேண்டி வரும்.[1] 1944-45ல் பயிரில் பங்கு பெறுவோர், பயிர் செய்யப்பட்ட நிலத்தில் 25 சதவீதமும், .விவசாய மக்கள் 20·6 சதவீதமும், வெவ்வேறு உரிமையுள்ள வாரக்குடிகள் 35·8 சதவீதமும்தான் பயிர் செய்தனர்.[2]

இந்த விவரங்கள் இந்தியா பிரிக்கப்படுவதற்கு முன்னர் பொருந்துபவை. 1951 கணிப்புப்படி, மேற்கு வங்காளத்தில் 30 இலட்சம் பேர் பயிரில் பங்கு பெறுபவர்களாகவும், 30 இலட்சம் நிலமற்ற உழைப்பாளிகள் கூலிக்கு வேலை செய்பவர்களாவும் இருந்தனர். ஜமீந்தாரி ஒழிப்புக் குழு அறிக்கையின்படி, உத்தரப் பிரதேசத்தில் 'சிர்' (Sir) கீழ்வாரக்குடிகளின் (Sub-tenants) வாரக்குடிகள் வைத்திருந்த நிலம் சுமார் 27 இலட்சம் ஏக்கர்; இத்தகைய வாரக்குடிகளின் மொத்த எண்ணிக்கை 27 இலட்சம். டாக்டர் ராதாகமல் முகர்ஜி இவர்களின் தொகையை 32 இலட்சம் என்கிறார்.[3] சென்னையில் விவசாயிகளில் 14 சதவீதம் பிறருடைய நிலங்களை உழும் நிலமற்ற வாரக்குடிகள். மொத்தக் கீழ்வாரக்குடிகள் எண்ணிக்கை 15 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. 'ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாயப் பொருளாதாரத்தின் அமிசமாகக் கீழ்வாரக்குடி முறை இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு மாகாணத்திலும் கீழ்வாரக்குடி முறை எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பதைத் தக்க தஸ்தாவேஜுகள் இல்லாததால் காட்ட முடியாது.'[4]

பம்பாயில் ரயத்துவாரி முறையில் விவசாயிக்கே நிலம் உரியதாகக் கருதப்படினும், '18,56,000 விவசாயிகள் 1,86,56,000 ஏக்கருக்கு உரியவர்களாகவும், 5,22,600 விவசாயிகள் அல்லாதவர்கள் 82,94,000 ஏக்கருக்கு உரியவர்களாகவும் உள்ளனர். அதாவது, விவசாய வகுப்பாருக்குரிய தலா சொந்த நிலம் 10 ஏக்கர்; விவசாயம் செய்யாத வகுப்பாருக்குரிய தலா சொந்த நிலம் 15·9 ஏக்கர்.'[5]

[1] காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 37.

[2] B. சென். 'இந்தியாவில் விவசாய நெருக்கடியும் பிற்போக்குத் திட்டமும்,' 1952, பக்கம் 28.

[3] காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 37.

[4] மேலே கூறியது.

[5] மேலே கூறியது, பக்கம் 40.

கீழ்க்குத்தகைக்கு விடும் வழக்கத்தினுல் பம்பாயிலும் சென்னையிலும் உள்ள நிலங்களில் 30 சதவீதம் வாரக்குடிகளால் பயிரிடப் படாமல் இருக்கின்றன. இவ்வாறே பஞ்சாபிலும் பிரிவினைக்கு முன்பு குடிவாரம் வாங்குபவர்களின் எண்ணிக்கை 60 இலட்சத்திலிருந்து ஒரு கோடியாயிற்று. உத்தரப் பிரதேசத்தில் 1891-க்கும் 1921-க்கும் இடையில் குடிவாரம் வாங்குபவர்கள் 46 சதவீதம் அதிகரித்தனர். இதே காலத்தில் மத்திய மாகாணத்தில் 50 சதவீதம் உயர்வு காணப்பட்டது. வங்காளத்திலுள்ள சாசுவத செட்டில்மென்டைப்பற்றிச் சைமன் கமிஷன் கூறியதாவது: 'சில மாவட்டங்களில் கீழ்க்குத்தகைக்கு விடுவது மிக அதிகமாகிவிட்டது. மேலே உள்ள ஜமீந்தார்களுக்கும், கீழே உள்ள உழவனுக்கும் இடையில் 50-க்கு மேற்பட்ட தரகர்கள் தோன்றினர்.'[1]

கீழ்க்குத்தகை விடுவது அதிகமானதால், குத்தகை பெறுபவர்களின் தொகை படைபோலப் பெருகிவிட்டது. இவர்கள் எல்லோரும் விவசாயிகளின் உழைப்பினுல் பிழைக்கிருர்கள். 'விவசாயிகள் வேலை செய்வதறகு இது தாங்க முடியாத பெருஞ்சுமையையாக இருக்கிறது. இவர்கள் விவசாய அபிவிருத்திக்கு ஒரு உபயோகமான வேலையும் செய்யாமலும, நிலச் சாதனங்களை அதிகரிப்பதற்குப் பயனுள்ள ஒரு வழியையும் ஏற்பாடு செய்யாமலும் இருப்பதற்கு நியாயமே இல்லை.'[2] கீழ்க்குத்தகை அதிகரித்ததோடு, வாரிசுரிமைச் சட்டங்களால் நிலம் மேலும் மேலும் துண்டுபட்டுக்கொண்டே போகிறது. இதனுல் நிலமுறையின் தன்மை சிக்கலாகிவிட்டது.

ஜமீந்தாரி முறையில் மட்டுமன்றி, ரயத்துவாரி முறையிலும் தலத்திலில்லா நிலப்பிரபுத்துவம், திறமையற்ற நிருவாகத்திற்கும், இறுதியில் விவசாயத்தின் அழிவுக்கும் காரணமாகிறது. விவசாயம் செய்யாத நிலச் சொந்தக்காரர்கள் எங்கும் பெருகிவருகிருர்கள். விவசாயம் செய்யும் உரிமையாளர்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் இது காணப்படுகிறது. இவ்வாறு நிலப்பிரபுத்துவம் ஆக்கிரமிப்பதால் லேவாதாரித்தனமும் அநீதியான நிருவாகமும் உண்டாகின்றன.[3]

லேவாதேவிக்காரர்களும் முதலாளிகளும் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதால், அரசியலில் மிகப் பெரிய விளைவுகள் உண்டாகியுள்ளன. விவசாயிகள் தம் உரிமைகளை உணர்ந்து வருவதால், அகில இந்திய கிசான் (உழவர்) சபை ஏற்படுத்தப்பட்டு,

[1] சைமன் கமிஷன் அறிக்கை, தொகுதி I, பக்கம் 340.

[2] புளௌட் குழு அறிக்கை, பக்கம் 37.

[3] R. முகர்ஜி, மேற்கூறிய நூல், பக்கம் 148.

1936 முதல் அவர்கள் தங்களுடைய குறைகளை வெளியிடுவதற்கும், நிலையை உயர்த்துவதற்கும் வருடந்தோறும் மாநாடுகளை நடத்தி வருகிறார்கள். மேலும், 1935 ஆம் ஆண்டின் அரசியலமைப்புப்படி இதுவரையில் தாழ்த்தப்பட்டிருந்த விவசாய வகுப்பாரிடையே அவர்களை ஆதரிக்கும் அரசியல் கட்சிகள் புதிய நம்பிக்கையை உண்டாக்கின. இதற்கு மாறாக, 1938-ல் முதல் அகில இந்திய நில உரிமையாளர்கள் மாநாடு, ஒரு தனிக் கழகத்தை நிறுவுவதற்காகக் கூட்டப்பட்டது. 1935 ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தில் மாகாண, மத்திய சட்டசபைகளில் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டனர். ஆனால், சிக்கனமற்ற நிலத்தையுடைய சிறிய விவசாயிகளில் பெரும்பாலோரின் நிலைமையும், கீழ்வாரக்குடிகள், பாதுகாப்பற்ற வாரக்குடிகள் ஆகியோரின் நிலைமையும் உழைப்பாளிகளின் நிலைமை போலவே அநேகமாக இருந்தன. இவ்விரு திறத்தாரையும் வேறுபடுத்திக் காண்பது அரிதாக இருந்தது. சென்னை வங்கித் தொழில் விசாரணைக் குழு கூறியதுபோல, ‘வயலில் வேலை செய்து பயிர் செய்பவர்களுக்கும் கீழ்வாரக் குடிகளுக்கும் தெளிவாக வித்தியாசம் காண்பது அரிது. கீழ்வாரத்திற்கு விடுவது அநேகமாகப் பணக் குத்தகைக்கு அன்று. அது பொதுவாகப் பங்கு முறைக்கு விடப்படுகிறது. அதன்படி நிலக்கிழார் விளைச்சலில் 40 முதல் 60 சதவீதம் அல்லது 80 சதவீதம் வரையிலும் பெறுவார். மீதி வாரக்குடிக்குக் கொடுக்கப்படும். சாதாரணமாக வாரக்குடி ஒவ்வொரு வருடமும் இந்த ஆபத்தான நிலையில் நிலக்கிழாரிடம் கடன் வாங்கிக்கொண்டு, அவரிடம் விதைகளையும் மாடுகளையும் பெற்று வாழ்ந்து வருகிறான். இதற்கு மாறாக, வயலில் வேலை செய்பவன், நிலக்கிழாரின் விதைகளையும், மாடுகளையும், கருவிகளையும் பயன்படுத்தித் தன் சிறிய தேவைகளுக்காக அடிக்கடி ரொக்கமாகக் கடன் பெற்று, அறுவடைக் காலத்தில் தானியத்தை மொத்தமாகவோ, விளைச்சலில் வீதாசாரத்தையோ ஊதியமாக அடைவான். சில சமயங்களில் இவன் சிறிது ரொக்கமும், ஒரு குறிப்பிட்ட அளவு தானியமும் பெறுவான். வாரக்குடி, தன் சொந்த மாடுகளையோ கருவிகளையோ கொண்டு விவசாயம் செய்வான். ஆனால், இந்த இரண்டுக்கும் நடைமுறையில் அதிக வித்தியாசமில்லை. நிலக்கிழார் தலத்தில்லாமல் இருந்தால், உழுபவன் விவசாயியா, கீழ்வாரக்குடியா என்பது நன்றாகத் தெரியாது.’[1] விவசாய உரிமையாளர்களால், நாடு பிரிவினைக்கு முந்திய பஞ்சாபில் நிலத்தில் ஐந்தில் இரண்டு பாகம்தான் சொந்தக்காரர்களால் பயிர் செய்யப்பட்டது; மீதி, பல வகையான வாரக்குடிகளால் பயிர் செய்யப்பட்டது. கடந்த 55 ஆண்டுகளில், வருடந்தோறும் மாறும் வாரக்குடிகளின்

[1] சென்னை மாகாண பாங்குத் தொழில் விசாரணை அறிக்கை, 1930. பக்கம் 14-15.

எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.[1] 311·7 இலட்சம் ஏக்கர் பயிர் நிலத்தில் 152·6 இலட்சம் ஏக்கர் இவர்களால் பயிர் செய்யப்பட்டது.[2]

குடிவாரச் சட்டம்

வரலாற்றின்படி, புதிய நிலச் செட்டில்மென்டுகளால் மிகவும் பாதிக்கப்பட்ட வாரக்குடிகளைப் பாதுகாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் கட்டாயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்த போது 1859-ல் முதல் குடிவாரச் சட்டம் (வங்காள குத்தகைச் சட்டம்) நிறைவேற்றப்பட்டது. பல மாகாணங்களில் நடந்த குத்தகை கொடா இயக்கத்தினாலும், தனிப்பட்டவர்களிடம் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாதென்று ஆரவாரம் செய்ததாலும், வாரக்குடிகளின் நிலை உயர்வதற்கான சட்டங்கள் மேலும் இயற்றப்பட்டன. இச் சட்டங்கள், நில உரிமை முறையை மாற்றாமல், தரகர்களுக்கு வாரக்குடிகள் கொடுக்கவேண்டிய குத்தகையை ஒழுங்குபடுத்தவும், அவர்களின் நில உரிமையைப் பாதுகாக்கவும் இயற்றப்பட்டன.[3]

[1] T. ஜெயின் 'Eastern Economist' என்னும் பத்திரிகையில் (Dec. 1, 1944) எழுதிய 'பஞ்சாபில் குடிவார விவசாயம்' என்ற கட்டுரையைக் காண்க.

[2] இந்திய விவசாயப் பொருளாதாரச் சங்கம் வெளியிட்டுள்ள, 'இந்தியாவில் நில உரிமை முறைகள்' என்ற கட்டுரை, பக்கம் 75.

[3] 1939-ன் பம்பாய் குடிவாரச் சட்டம் ஒரு புதிய வகையான 'பாதுகாக்கப்பட்ட' வாரக்குடிகளை ஏற்கெனவே உள்ள நிலையான வாரக்குடிகளோடும், வருடந்தோறும் மாறும் வாரக்குடிகளோடும் சேர்த்தது. நிலக்கிழார்களுக்கும் வாரக்குடிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஒழுங்குபடுத்துவதற்கான முதல் சட்டம் இதுவே. 'பாதுகாக்கப்பட்ட' வாரக்குடி என்பவன், 1938 ஜனவரி முதல் தேதிக்கு முன்பு தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் நிலத்தை வைத்திருந்தவன் என்று விளக்கப்பட்டது. இதனால், நிலக்கிழார் தம் இஷ்டப்படி வேண்டும்போது வாரக்குடியை மாற்றும் முறை ஒப்புக்கொள்ளப்படவில்லை. இச் சட்டம் வாரக்குடிகளுக்கு நில உரிமையில் உறுதியும், குத்தகை, வீடு கட்டுதற்கு இடம், வெளியேற்றப்படாமலிருக்கப் பாதுகாப்பு ஆகியவற்றில் உறுதியும் அளித்தது. இச் சட்டம் 1948-ல் தானியத்தில் பங்குபெற்றுக் கூலி வேலை செய்யும் மக்களைக் கொண்டு தங்கள் நிலங்களைப் பயிர் செய்த விவசாயிகளை விலக்குவதற்குத் திருத்தப்பட வேண்டியதாயிற்று. 1948-ன் பம்பாய் குடிவாரச் சட்டம் சில இராச்சியங்களால் முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டது. 'எனினும், இறுதியாகப் பம்பாய் இராச்சியத்தில் பயிரில் பங்கு பெறுபவர்களைக் கொண்டு விவசாயம் இன்னும் மிகுதியாக நடத்தப்படுகிறது. ஏனெனின், பயிரில் பங்கு பெறுவோர், தம்மை வாரக்குடிகளாக நடத்தவேண்டும் என்று தம் உரிமையை வற்புறுத்த ஒரு ஏற்பாட்டையும் செய்யவில்லை. (D. தார்னர் எழுதிய 'இந்தியாவில் விவசாயத்தின் எதிர்காலம்', 1956, பக்கம் 28). பம்பாய்ச் சட்டம், உத்தரப் பிரதேசத்தைப் போலப் புதிய நிலப் பிரபுக்கள் வர்க்கம் ஒன்றை ஏற்படுத்தவில்லை; பழைய நிலக்கிழார்கள், சாசுவத வாரக்குடிகள், பாதுகாக்கப்பட்ட வாரக்குடிகள், சாதாரண வாரக்குடிகள் என்ற பாகுபாடுகள் அப்படியே இருந்தன. இவர்களின்கீழ் பயிரில் பங்கு பெறுவோரும். நிலத்தில் உழைப்பவர்களும் வேலை செய்தனர் (மேலே கூறியது). பம்பாய் இராச்சியத்தில் நிலச் சீர்திருத்தம்பற்றி விரிவான விளக்கத்திற்கு G. D. படேல் எழுதிய 'மாற்றியமைக்கப்பட்ட பம்பாய் இராச்சியத்தில் நிலப் பிரச்சினை' என்ற நூலைப் பார்க்கவும் (1957).

உண்மையாக நிலத்தில் உழைப்பவர்களுக்காக இயற்றப்பட்ட இச் சட்டங்கள் இடையிலுள்ள தரகர்களால் பாதுகாப்பளிக்கத் தவறிவிட்டன. இவர்களுள் பலர் பாதுகாப்பற்ற வாரக்குடிகளாகவும், நிலமில்லாத உழைப்பாளிகளாகவும் ஆகிவிட்டனர். புளௌட் குழு கூறியதுபோலக் 'குடிவாரச் சட்டங்களில் செய்யப்பட்ட ஏற்பாடு களால் ரயத்துகளுக்கு நடைமுறையில் நில உரிமை அளிக்கப்பட்ட தென்பது உண்மையே. ஆனால், உண்மையாகப் பயிர் செய்பவர் களில் பெரும் பகுதியினருக்கு உரிமையே இல்லை; அதிகக் குத்தகையி லிருந்து பாதுகாப்பு இல்லை; வேலை செய்யும் காலத்தில் பாதுகாப்பு இல்லை (அறிக்கை, பக்கம் 39).

ரயத்துவாரிப் பகுதிகளில் இந்தச் சட்டங்களின் நடைமுறைப் பயன் நிலச் சொந்தக்காரர்களின் உரிமைகளை ஆதரித்ததும், வாரக் குடிகளுக்கு ஒருவித உரிமையும் இல்லாமல் மறுத்ததும்தான்.

நிலவுரிமைப் பிரச்சினைகள்

இவ்வாறு இந் நாட்டில் நிலத்தை அபிவிருத்தி செய்வதில் அக்கறையற்ற தரகர்கள், முழு அதிகாரம் பெற்ற நிலக்கிழார்கள் ஆகியவர்களுடன் அரசாங்கமும் சேர்ந்துகொண்டு கடுமையான வரிகளைக் கேட்கிறது. இந்தியாவில் நவீன நிலப்பிரபுத்துவம், ஐரோப்பாவில் 18 ஆம் நூற்றாண்டில் எஞ்சியிருந்த படைமானிய முறையைப்போல ஒரு ஊன்றிய நலமி ஆகிவிட்டது. ஆனால், இந்தியாவில் முன்பிருந்த வழக்கங்களினால் அன்றி, தவறான சட்டங் களால் இது ஏற்பட்டது. வங்காள ஜமீந்தார்களாயினும், அயோத்தி தாலுக்காதார்களாயினும், பஞ்சாபில் வாய்க்கால் குடியேற்றங்களில் உள்ள பெரிய நிலச் சொந்தக்காரர்களாயினும், நிலமுள்ள பெரியவர் களெல்லாம் ரயத்துகளுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமை களைப் புறக்கணித்துவிட்டு, நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றும் செய்யாமல், தங்கள் புறக்கணிப்பினால் விவசாய மக்கள் மேலும் வறுமையடைவதற்குத் துணைபுரிந்துள்ளனர்.

இந்தியாவில் நிலவுரிமை முறையினால் நிலக்கிழார்களுக்கும் வாரக் குடிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு மிகவும் அதிருப்திகரமான தென்று தெரிகிறது. இப்போதுள்ள முறையினால் தோன்றியுள்ள, தலத்திலில்லா நிலக்கிழார்களின் பொறுப்பற்ற தன்மையால் உண்டான தீங்குகளைப் போக்குவதற்குக் குடிவாரச் சட்டங்கள் போன்ற தாற்காலிகப் பரிகாரங்கள் பயனற்றவை. 'கிராமப் பொது நிலங்களின் மீதுள்ள குறைவான உரிமைகளை நிலக்கிழார்கள் ஆக்கிர மித்துக்கொண்டு, நீர்ப்பாசனக் கடமையைப் புறக்கணித்து, சட்ட

விரோதமான மேல் வரிகளை விதித்து, வாரக்குடிகளின் நிலையை உயர்த்துவதில் நடைமுறையில் சிறிதும் அக்கறை காட்டவில்லை.'[1] எங்கும் கீழ்வாரத்திற்கு விடுவதால் பெருகிவிட்ட தரகர்கள், ரயத்தின் பொருளாதார நிலையைத் தாழ்த்திவிட்டார்கள். இந்தச் சாறுண்ணிகளாகிய தரகர்களையும் நிலக்கிழார்களையும் முற்றிலும் ஒழிப்பதற்கு முன், குத்தகையைக் குறைத்து, உழவனுக்குப் போதுமான உபரித் தானியம் கிடைக்குமாறு செய்து, நிலக்கிழார் குத்தகை பெறுபவராக அன்றி, விவசாயச் செல்வத்தை உற்பத்தி செய்பவராக மாற்றப்பட்டால்தான் நிலக்கிழார்களுக்கும் வாரக்குடிகளுக்கும் இடையில் சுமுகமான உறவை ஏற்படுத்த முடியும்.

சுதந்திரம் பெற்ற பிறகு சீர்திருத்தங்கள்[2]

சுதந்திரம் வந்ததால் ஜமீந்தாரி முறையில் அடிப்படையான மாறுபட்ட நோக்கம் உண்டாயிற்று. விவசாயிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள தரகர்களை ஒழித்துவிடுவதென்று காங்கிரஸ் நீண்ட காலத்திற்கு முன்பே முடிவு செய்துவிட்டது.[3] 1947-க்குப் பிறகு பல இராச்சியங்களில் ஜமீந்தாரி ஒழிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1949-ல் விவசாயச் சீர்திருத்தக் குழு அதை ஒழிக்கவேண்டுமென்று சிபாரிசு செய்தது. ஜமீந்தாரிடமிருந்து பறிக்கப்பட்ட நிலம் விவசாயிக்கு மாற்றப்படவேண்டுமென்றும், அதை அவன் கீழ்க்குத்தகைக்கு விடக்கூடாதென்றும் கூறியது.

ஜமீந்தாரி ஒழிப்புக்காக இராச்சியங்களில் இயற்றப்பட்ட சட்டங்களில் காணப்பட்ட இரண்டு பொதுவான கொள்கைகளாவன : (அ) இராச்சியத்திற்கும் விவசாயிக்கும் இடையில் உள்ள தரகர்களை ஒழிப்பது ; (ஆ) நிலக்கிழார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது, ஒரு

[1] ஒப்பிடுக : 'நிலக்கிழார் செல்வத்தை உற்பத்தி செய்பவராக அன்றிக் குத்தகை பெறுபவராக இருக்கிறார். விவசாயக் கூட்டில் அவர் தம் பழம் பெரும் பொறுப்பை மறந்துவிட்டார். இன்று அவர் விவசாய மூலதனத்தை அளிப்பதும் இல்லை ; விவசாய வேலைகளைக் கட்டுப்படுத்துவதும் இல்லை. அவருக்குக்கீழ் இப்போதுள்ள நில முறையின் சிக்கலினால் நன்மையடைந்து, உண்மையாக உழுபவனின் சிரமமான நிலைமையை மேலும், ஆபத்துக்குள்ளாக்கிவிட்ட தரகர் வர்க்கம் ஒன்று வளர்ந்துவிட்டது. இது ஒரு புகார் அல்ல; உண்மை நிலையின் சுருக்கம் (R. முகர்ஜி, மேலே கூறியதில் பக்கம் 361).

[2] விரிவான விளக்கத்திற்கு Dr. K. முகர்ஜி எழுதிய 'நிலச் சீர்திருத்தம்' 1952; Dr. G. D. படேல் எழுதிய 'இந்திய நிலப்பிரச்சினையும் சட்டங்களும்' 1954, பார்க்க.

[3] 1946-ன் தேர்தல் அறிக்கை. சென்னைதான் முதல் முதலில் ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. இந்த மசோதாவிற்கு ஏப்ரல் 1949-லேயே கவர்னரின் சம்மதம் கிடைத்தது.

இராச்சியத்திற்கும் மற்ருெரு இராச்சியத்திற்கும் நஷ்டஈட்டு அளவு, முறை ஆகியவற்றில் வித்தியாசம் உண்டு. அநேகமாக நஷ்ட ஈட்டை நிர்ணயிப்பதற்கு அப்போதுள்ள குத்தகையே அடிப் படையாக இருந்தது. சில சமயங்களில் குறைந்த குத்தகை அடிப் படையாக இருந்தது. உத்தரப் பிரதேசத்திலும் மத்தியப் பிரதேசத் திலும் வாரக்குடிகள் இராச்சிய நிதிக்குப் பணம் கொடுக்கவேண்டும். அதிலிருந்து நிலக்கிழார்களுக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கும். இந்த முறையில் உள்ள வேடிக்கை என்னவென்ருல், ஜமீந்தார்களால் சுரண்டப்பட்டவர்கள், தம்மை முன்பு சுரண்டியவர் களுக்குத் தாங்களே நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நஷ்டஈடு மத்தியப் பிரதேசத்தில் ஏக்கருக்கு ரூ. 3-ம், சென்னையில் ஏக்கருக்கு ரூ. 9-ம், உத்தரப் பிரதேசத்தில் ஏக்கருக்கு ரூ. 27-ம், பீகாரில் ரூ. 38-ம் ஆக உள்ளது.[1] உயர்ந்தபட்ச, குறைந்தபட்ச அளவுள்ள நிலங்கள் பற்றியும் செய்யப்பட்ட ஏற்பாட்டில் வித்தியாசங்கள் உண்டு. உயர் எல்லை 50 முதல் 125 ஏக்கர்வரை உள்ளது. சில சட்டங்கள் இந்த நிலங்களை நிலக்கிழாரே பயிர் செய்யவேண்டுமென்று கூறுகின்றன. சில சட்டங்கள் துண்டு பட்ட நிலங்களைக் கட்டாயமாக ஒருங்கிணைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துள்ளன. மற்றவை சிக்கனமற்ற நிலங்களை இணைப் பதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

1928-லேயே காங்கிரசினுல் கொள்கையாக வகுக்கப்பட்டதன் விளைவாகவே, சுதந்திரத்திற்குப் பிறகு பல இராச்சியங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டன. 'நம் திட்டத்தில் நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது முக்கியமான இடம் பெற வேண்டும்.' 1928-ல் உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் குழுவின் ஆண்டு மாநாட்டில் இப் பிரச்சினை பற்றிப் பண்டித நேரு கூறியதாவது: 'பெரிய எஸ்டேட்களை நாம் எப்படி ஒழிப்பது? சிலர் பறிமுதல் செய்ய வேண்டுமென்றும், மற்றும் சிலர் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிருர்கள். பிற்கூறியது முடியாத செயல் என்று எடுத்த உடனேயே கூறி விடலாம். ஏனெனில், நஷ்டஈடு கொடுப்பதற்கான அதிகப் பணம் நம்மிடம் இல்லை. பணம் இருந்தாலும், நிலத்தின்மேல் உள்ள

[1] பீகார் 1948-ல் ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தையும், 1949-ல் நிலச் சீர் திருத்தச் சட்டத்தையும் இயற்றியது மத்தியப் பிரதேசத்தில் 1949-ல் நிலச்சுவான் உரிமை ஒழிப்புச் சட்டமும், 1950-ல் விவசாய ரயத்துகள், வாரக்குடிகள் சட்டமும் இயற்றப்பட்டன. அசாம், ஜமீந்தாரிகளை அரசாங்கம் பெறும் சட்டத்தை (1948) இயற்றியது. பம்பாயில் 1949-க்கும் 1950-க்கும் இடையில் கோடி (Khoti), தாலுக்தாரி, மெஹ்வாசி, மலேகி நில உரிமை முறைகளையும் மற்றவற்றையும் ஒழிக்கும் சட்டங்களைச் செய்தது. ஜமீந்தாரி சட்டங்கள், பல இராச்சிய உயர் நீதிமன்றங்களில் செல்லத்தக்கவையல்ல என்று வாதாடப்பட்டன. சுப்ரீம் கோர்ட்டும் அரசியல் சட்டமும் திருத்தப் பட்டு இச்சட்டங்கள் செல்லத்தக்கவையாக ஆக்கப்பட்டன.

சுமை தொடர்ந்து இருக்கும். இப்போது நிலம் வைத்திருப்பவர்கள் அதனால் நன்மையடைய மாட்டார்கள். ஜமீந்தார்தாம் இதனால் நன்மையடைய முடியும். அவர் மாறுபடக்கூடிய, தொல்லைதரும் வருமானத்தைவிட்டு ரொக்கப் பணமாகப் பெறுவார். மேலும், நஷ்டஈட்டை முழுவதுமாகக் கொடுத்துவிட்டால், செல்வத்தைச் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு முயற்சி இராது. ஆகவே, எப்படியும் நாம் முழு நஷ்டஈட்டைக் கொடுக்க முடியாது.

'இதற்கு மாறாகப் பறிமுதல் செய்வது நியாயமாகச் சரியானதே எனினும், பல துன்பங்களை உண்டாக்கும். ஆகவே, நாம் கஷ்டமான நிலை உள்ளவர்களுக்காவது ஓரளவு நஷ்டஈடு கொடுக்கலாம். நஷ்டஈடு பெறுபவன் மீண்டும் பணக்காரனாகும்படி அவனுக்கு நாம் அதைக் கொடுக்கக்கூடாது.'[1]

அதிகாரத்தை ஏற்ற பிறகு ஒரு பொறுப்புணர்ச்சியும் உண்டாகிறது. சொத்தைத் தர்ம வைப்பாகக் கருதிய காந்திஜீயின் செல்வாக்கும் நோக்கத்தை மாற்றுவதில் உதவி புரிந்திருக்கலாம். ஏனெனில், 1948-லேயே சுதந்திர இந்தியா உண்டானதால், காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு நிலச் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு கொடுக்கும் கொள்கையை அப்படியே ஒத்துக்கொண்டு விட்டது. இந்தக் கொள்கை இந்திய அரசியல் சட்டத்தின் 31-வது பிரிவில் இணைக்கப்பட்டுவிட்டது. இதன்படி, எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்துக்கு நஷ்டஈடு கொடுக்கச் சட்டம் ஏற்பாடு செய்து, நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயித்து அல்லது நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயித்துக் கொடுப்பதற்கான விதிகளைக் குறிப்பிட்டாலன்றி, எந்தச் சட்டத்தின்படியும் எந்தச் சொத்தையும் உரிமையாக்கிக் கொள்ளவோ, பொதுக் காரியங்களுக்கு எடுத்துக்கொள்ளவோ முடியாது.

[1] H. D. மாளவியாவினால், மேற்கூறிய நூல் பக்கம் 21-ல் மேற்கோள் காட்டப் பட்டது. அப்போதைக்கும் (1928) இப்போதைக்கும் (சுதந்திரம் அடைந்த பிறகு) உள்ள மாறுபட்ட நோக்கத்தைக் காட்டுகிறதென்று இதை நாம் மேற்கோளாகக் கூறுகிறோம். 'காந்திஜியுடன் ஒரு வாரம' என்ற புத்தகத்தில் லூயி பிஷர் 1942-ல் காந்திஜியுடன் நடந்த ஒரு பேட்டியைக் கூறுகிறார். 'விவசாயிகளின் நிலைமையை உயர்த்துவதற்கு உங்கள் திட்டம் என்ன?' என்று நான் கேட்டேன். 'விவசாயிகள் நிலத்தை எடுத்துக்கொள் வார்கள்' என்று அவர் விடையளித்தார். 'அதை எடுத்துக்கொள்ளும்படி நாம் அவர்களுக்குக் கூறவேண்டியதில்லை', 'நிலக்கிழார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டுமா?' என்று நான் கேட்டேன. 'இல்லை' என்று அவர் கூறினார். 'அது அரசாங்க வருமானத்திலிருந்து முடியாது.' மேலும் சிரித்துக்கொண்டே 'நம் கோடீஸ்வர நண்பர்களுக்கு நாம் காட்டும் நன்றியானது, இதைப்போல நாம் சொல்வதற்குத் தடையாய் இல்லை' ('இந்தியாவில் நிலச்சீர்திருத்தம்', மேற்கூறியது, பக்கம் 71-ல் கூறப் பட்டது).

இதன்படிப் பல இராச்சியங்களில் நிறைவேற்றப்பட்ட ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டங்கள் நஷ்டஈட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளன. அசாம், பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் நஷ்டஈட்டுத் தொகை 'நிகர வருமானத்தின்' அடிப்படையில் நிர்ணயிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னையில், 'அடிப்படை ஆண்டுத் தொகை' என்ற தொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஜமீந்தாரின் மொத்த வருமானத்தில் நிலவரி, நிருவாகச் செலவு, ரயத்துக்கு நன்மை தரும் வேலைகள் முதலியவற்றைக் கழித்து நிகர வருமானம் கணக்கிடப்படுகிறது. உத்தரப்பிரதேம், மத்தியப் பிரதேசச் சட்டங்களில் கடைசியாகக் கூறிய இனத்திற்கு ஏற்பாடு ஒன்றும் இல்லை. சென்னை முறையில் நிகர வருமானத்தின்மேல் நஷ்டஈட்டை நிர்ணயிக்காமல், இந்தப் பகுதிகளில் ரயத்துவாரி முறை புகுத்தப்பட்ட பிறகு விதிக்கப்படும் நிலவரியில் சுமார் 25 சத வீதத்திற்குச் சமமான தொகை நிர்ணயிக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் நிகரச் சொத்தைப்போல 8 பங்கு நஷ்டஈடு அளிக்கப் படும். அதோடு ரூ. 5,000-க்கு மேற்படாத நிலவரியுள்ள ஜமீந்தார் களுக்கு நிகரச் சொத்தைப்போல் 20 தடவையிலிருந்து இரண்டு மடங்கு வரையில் புனர்வாழ்வு மானியங்கள் அளிக்கப்படும். அசாம் சட்டத்தில், நிகர வருமானத்தின் அளவைப் பொறுத்து, அதைப் போல் 3 முதல் 15 மடங்குக்குச் சமமான நஷ்டஈடு கொடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. விஜ் செய்துள்ள கணிப்பின்படி, 'A' பகுதி இராச்சியங் களில் மட்டும் ஜமீந்தாரி உரிமையை ஒழிப்பதற்கு அளிக்கப்பட வேண்டிய நஷ்டஈடு ரூ. 414 கோடியாகும். ஆனால், இராச்சிய அரசாங்கங்களின் வருமானம் ரூ. 19·52 கோடிதான் அதிகமாகும்; அதாவது, மொத்த நஷ்டஈட்டில் மிக அற்பமான 4·71 சத வீதம்தான்.[1] இதற்கு மேலும் மற்ற இராச்சியங்களில் தரகர் களுக்குக் கொடுக்கப்படவேண்டிய நஷ்டஈடு இருக்கிறது. இதற்கான தொகை சரியாகத் தெரியவில்லை. இடையிலுள்ளவர்களின் உரிமையை ஒழிப்பதற்கான நஷ்டஈடு ரூ. 550 கோடி என்று தாராளமாக மதிப்பிடலாம்.

காந்தியடிகள் 1942-லேயே மனச்சாட்சிக்கு மாறுபாடின்றி ஜமீந்தார்களின் சொத்தைப் பறிமுதல் செய்ய முடியும் என்று கூறியிருப்பதால், இப்போது காந்தியடிகளின் வழியைப் பின்பற்று பவர்களாய் அதிகாரத்தில் உள்ளவர்கள், பல சட்டங்களையும் நிருவாக நடவடிக்கைகளையும் காந்தியடிகளின் பெயரால் புனிதப்

[1] Reserve Bank of India Bulletin, June, 1950.

படுத்தத் தயங்காதவர்கள், சமூகச் சாறுண்ணிகள் என்று கருதத்தக்க இவர்களுக்குப் போதிய நஷ்டஈடு கொடுப்பதில் ஏன் இவ்வளவு கருத்தாயிருக்க வேண்டுமென்பதைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது. இதற்கு எதிர் வாதமாக அரசியல் சட்டம் புனித மானது (அதன்படி நடக்கவேண்டும்) என்று வற்புறுத்தப்படுகிறது. ஆனால், இப் புனிதத் தன்மை பல முறைகள் புறக்கணிக்கப்பட்டிருக் கிறது. மனித வாழ்வு ஒன்றுதான் புனிதமானது. மற்றவற்றின் புனிதத் தன்மை யெல்லாம் இதற்குக் கருவியானவையே. நஷ்டஈடு கொடுக்கும் விஷயத்தில் அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமானால், சமூக அநீதிக்கு ஆளானவர்கள்மீதே பெருஞ்சுமையைப் போடவேண்டியிருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிலச்சீர்திருத்தத்திற்கு ஒரு விரிவான கொள்கையைக் கூறியது. அது ஜமீந்தாரி ஒழிப்புக் கொள்கையை ஒத்துக்கொண்டது. இவ்வாறு ஒழிக்கப்பட்ட பின்னர், சரியான நிருவாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அது உத்தேசித்தது. எதிர்காலத்தில் நிலம் பெறுவதற்கு அது ஒரு உச்ச வரம்பைச் சிபாரிசு செய்தது. அது குத்தகையைக் குறைத்து, வாரக்குடிகளின் உரிமையைப் பாதுகாக்கவும், நிலத்தில் உட்பிரிவுகள் ஏற்படாமல் தடுப்பதற்குக் குறைந்தபட்ச அளவை நிர்ணயிக்கவும், உச்ச வரம்புக்கு மேற்பட்ட நிலங்களையெல்லாம் நிருவகித்து, நிலமற்ற உழவர்களைக் குடியேற்றுவதற்கு அந்த நிலங்களைப் பயன்படுத்தவும், கூட்டுறவு விவசாயச் சங்கங்களையெல்லாம் ஏற்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் ஊக்கமளிக்கவும் ஆதரவளித்தது. ஆனால், திட்டக் குழு ஜமீந்தாரி ஒழிப்புக்கு நஷ்டஈடு கொடுப்பதில் உள்ள சங்கடங்களை முற்றிலும் மறந்துவிட்டது. ஓர் இணைப்பான நிலக்கொள்கையை உடனே உருவாக்கவேண்டியதன் அவசியத்தை அது கவனிக்கவில்லை. பரவலான நிருவாகத்தின் பொருட்டு, ஒவ்வொரு இராச்சியமும் தன் மனம்போனபடி நடந்து கொள்வதற்கு அது தாராளமாக இடம் கொடுத்துவிட்டது.

பெரிய நிலச்சுவான்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் பிரச்சினை ஒருபுறம் இருக்க, பெரிய ஜமீந்தாரிகளை ஒழித்துவிட்டால் தரகர்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்று ஐயம் தோன்றி யுள்ளது. இந்தியாவில் நிலச்சீர்த்திருத்தத்தின் முக்கிய நோக்கம் அரசாங்கத்திற்கும் விவசாயிக்கும் இடையிலுள்ள தரகர்களை அகற்றி விடுவதுதான் என்றால், இந்த நோக்கம் சென்னையில் பாழாக்கப்பட்டு வருகிறது. ஏனெனின், அங்கு ஹரிஜனங்களுக்கு இப்போதுள்ள விவசாய உரிமையை மீறிச் சென்னை அரசாங்கம், முன்பு சிறை சென்ற அரசியல்வாதிகளுக்கு நிலங்களை அளித்து, ஒரு புதிய

குத்தகை பெறும் வர்க்கத்தை உண்டாக்கியுள்ளது. முன்பிருந்த ஜமீந்தாரிகளுக்குப் பதில் புதிய நிலக்கிழார்கள் தோன்றியுள்ளனர். மேலும், ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டம், சில ஜமீந்தார்கள் ஏரைக் கையால்கூடத் தொடாதவர்களாயிருந்தும் அவர்களுடைய சொந்த விவசாயத்தில் இருந்ததாகக் கருதப்பட்ட 'சிர்' (Sir) குத்காஷ்டு (Khudkasht) நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ள அனுமதித்துள்ளது. உத்தரப் பிரதேசத்திலும் 20 இலட்சம் ஜமீந்தார்கள் இந்த ஏற்பாட்டினுல் நன்மையடைந்தார்கள்.

ரயத்துவாரிப் பகுதிகளில் உள்ள மனித மரியாதையற்ற நிலவரி நிருவாகமும், குறைந்த நிலவரியும், இலாபத்திற்காகவே குத்தகைக்கு விடும் நோக்கத்தோடு நிலத்தை வாங்குவதில் பணத்தை முதலீடு செய்பவர்களைக் கவர்ந்துள்ளன. லேவாதேவிக்காரர்களும், யுத்தத்தில் கொள்ளை இலாபம் அடித்தவர்களும், கள்ளச் சந்தையில் வியாபாரம் செய்பவர்களும் தங்களுக்குப் பாதுகாப்பையும், அதிக வருமானத்தையும் தரக்கூடியதும், வருமான வரியிலிருந்து தப்புவதற்கு வழியாக உள்ளதுமான நிலத்தில் தங்கள் உபரி சாதனங்களை முதலீடு செய்திருக்கிருர்கள் என்று கூறப்படுகிறது. திட்டக் குழு தனது நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளில் இந்த அமிசத்தை மறந்துவிட்டதாகத் தெரிகிறது.[1]

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சீர்திருத்த முன்னேற்றம்:

(அ) தரகர்களை ஒழித்தல்

1951-க்கு முன்பே பல இராச்சியங்கள் ஜமீந்தார்களையும், மற்றத் தரகர்களையும் ஒழிக்கும் வேலையை மேற்கொண்டன. முதல்

[1] நாட்டில் நிலச்சீர்திருத்தம் செய்வதில் உள்ள தடைகளை இந்திய அரசாங்கம் முற்றிலும் அறியாமல் இல்லை. நிலச்சீர்திருத்தம்பற்றிய பொருளாதார, சமூகக் குழு வெளியிட்ட கேள்விப் பட்டியலுக்குப் பதிலளிக்கும் போது, இந்திய அரசாங்கம் நிலச் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருப்பவற்றுள் சில கீழ் வருபவை என்று கூறுகிறது: (1) விவசாய அமைப்பின் வெவ்வேறு அமிசங்கள்பற்றிப் புள்ளிவிவரம் இன்மை; (2) சரியான நிருவாக அமைப்பை ஏற்பாடு செய்வதில் உள்ள சிரமம்; (3) நஷ்டஈடு கொடுப்பதனுல் அரசாங்கத்திற்கு உண்டாகும் நிதிப்பொறுப்பு; (4) உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாரக்குடிகள் பணம் செலுத்தச் சக்தியில்லாதிருத்தல்; (5) நிலங்களை ஒருங்கிணைத்தல், கூட்டுறவுப் பண்ணை அபிவிருத்தி ஆகியவை முன்னேறுவதற்குத் தடையாக உள்ள உழவர்களின் வழக்கமான சுதந்திர மனப்பான்மையும் நிலத்தின்மேல் உள்ள பற்றுதலும்; (6) நிலத்தின்மீது மக்கள் நெருக்கடியும், வேறு வேலைகள் கிடைக்காமையும்; (7) ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை நடத்துவதற்குத் தடையாக அடிக்கடிப் பல இராச்சியங்களில் நிலக்கிழார்கள் இச்சட்டம் செல்லத்தக்கதல்ல என்று சட்டபூர்வமான தடைகளை எழுப்பியது.' ('நிலச்சீர்திருத்தத்தில் முன்னேற்றம்', ஐ. நா. பொருளாதார விவகாரத்துறை, 1954, பக்கம் 59).

ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அநேகமாக எல்லா இராச்சியங்களிலும் தரகர்கள் ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். ஒருசில இடங்களில் மட்டும்தான் இன்னும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. தரகர்களுக்கு அளிக்கப்படவேண்டிய நஷ்டஈடு ரூ. 615 கோடி என்று திட்டக் குழு மதிப்பிட்டிருககிறது. இதில் ரூ. 379 கோடி நஷ்டஈடும், ரூ. 86 கோடி புனர்வாழ்வு மானியங்களும், ரூ. 150 கோடி வட்டித் தொகையும் ஆகும். அன்றியும், மதநிலையங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் நிலங்களையும் அரசாங்க நிருவாகத்தில் எடுத்துக்கொள்வதால், அவைகளுக்கும் வருடந்தோறும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான் ஆகியவைகளுக்கு மட்டும் ரூ. 513 கோடி வேண்டும். இது மொத்த நஷ்டஈட்டுத் தொகையில் 83 சதவீதமாகிறது.

நஷ்டஈட்டுத் தொகையில் பெரும்பகுதி சிறிய நிலக்கிழார்களுக்குக் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. நஷ்டஈடு ரொக்கமாகவோ, பத்திரங்களாகவோ கொடுக்கப்படும். மிக அதிகத் தொகை கொடுக்கப்படவேண்டியிருந்த நான்கு இராச்சியங்களில் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இப் பத்திரங்களை பீகாரிலும், உத்தரப் பிரதேசத்திலும் 40 வருடங்களிலும், மேற்கு வங்காளத்தில் 20 வருடங்களிலும், ராஜஸ்தானில் 15 வருடங்களிலும் சம தவணைத் தொகைகளாக மீட்கலாம். மேற்கு வங்காளத்தில் இப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை யல்ல. நஷ்டஈட்டை நிர்ணயிப்பது மிகச் சிக்கலான நீண்டகால வேலையாக இருந்தது. அன்றுவரையிலுள்ள தஸ்தாவேஜுகளும், தேவையான நிலவரி நிருவாக அமைப்பும் இன்மையால், கடந்த காலத்தில் சாசுவத செட்டில்மென்டு இருந்த இராச்சியங்களில் இவ்வேலை மிகவும் கடினமாக இருந்தது. இதுவரை கொடுக்கப்பட்ட மொத்த நஷ்டஈட்டுத் தொகை ரூ. 67 கோடி. இதில் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் ரூ. 44 கோடி கொடுக்கப்பட்டது. ஆயினும், அநேகமாக மற்ற எல்லா இராச்சியங்களும் இடைக்காலத் தொகை அல்லது முன்பணம் கொடுப்பதாக வாக்குறுதி தந்துள்ளன.[1]

1. 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மறு பரிசீலனை' திட்டக் குழு, மே 1957, பக்கம் 314–316. நிலச்சீர்திருத்தம் பற்றிய விமர்சனத்திற்கு மேற்கூறிய டேனியல் தார்னர் எழுதிய நூலைப் பார்க்க. நிலச்சீர்திருத்தத்தின் பெயராலும், ஜமீந்தார்களால் கொடுமைப்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தல் என்ற சாக்கிட்டும் நம் இந்திய அரசாங்கம் ஜமீந்தார்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பை இந்த விவசாயிகள்மீதே போட்டிருப்பது விநோதமாக இருக்கிறது. ஏனெனின், வாரக் குடிகளான விவசாயிகள் ரொக்கமாகவோ, மீட்கக்கூடிய பத்திரங்களாகவோ நிலத்தை வாங்குவதற்குக் கொடுக்கும் பணத்திலிருந்தே நஷ்டஈட்டுத் தொகையை அளிக்கவேண்டியிருக்கிறது.

(ஆ) நிலச் சொந்தக்காரர்களுக்கும் வாரக்குடிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை ஒழுங்குபடுத்துதல்: குடிவாரச் சட்டம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிலச்சீர்திருத்தத்தில் நிலக்கிழார்களுக்கும் வாரக்குடிகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை ஒழுங்குபடுத்துவதுதான் முக்கிய இடம் பெற்றது. அதனுடைய முக்கியச் சிபாரிசுகளாவன: (1) குத்தகையைக் குறைத்தல்; (2) நிலவுரிமைப் பாதுகாப்பு; (3) நிலக்கிழாருக்கு அதிக நிலம் இருக்கும் இடங்களில், வாரக்குடிகள் தம் நிலத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளும் உரிமையை அங்கீகரித்தல். திட்டம் தொடங்குவதற்கு முன் மொத்த விளைச்சலில் 50 சதவீதத்தை, அல்லது சில இடங்களில் 75 சதவீதத்தை வாரக்குடி குத்தகையாகக் கொடுக்கவேண்டியிருந்தது. குத்தகையானது சாதாரணமாக மொத்த விளைச்சலில் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{5}$-க்கு மேல் போகக்கூடாது என்று திட்டம் சிபாரிசு செய்துள்ளது. ஆகவே, பல இராச்சியங்கள் குத்தகையைக் குறைப்பதற்கு ஒழுங்கு முறைகளை நிறைவேற்றியுள்ளன. 'எனினும், பல இராச்சியங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதங்கள், நிதரிசனமான பொருளாதார, சமூக நிலைகளுக்கு ஒவ்வாத முறையில் அதிகமாக இருக்கின்றன.'[2] என்ன முறைகளைக் கையாண்டாலும், நிலத்தைப் பங்கீடு செய்யும் திட்டத்தில் பெரும்பகுதிக்குப் புதிதாக வந்த சொந்தக்காரர்கள் பணம் கொடுப்பதாயின் புதிய சொந்தக்காரர்களுக்குத் தம் வருவாயிலிருந்து பணம் கொடுக்கக்கூடிய சக்தியைப் பொறுத்துத்தான் நஷ்டஈடு நிர்ணயிக்கப்படவேண்டும்.

பம்பாயில் பயிரில் பங்கு பெறுவோரின் குத்தகை, விளைச்சலில் 1/6 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னையில் முதலில் மொத்த விளைச்சலில் 60 சதவீதம் என்று நிர்ணயிக்கப்பட்டுப் பிறகு, $33\frac{1}{3}$ சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடையில் இருக்கவேண்டுமென்று குறைக்கப்பட்டது. ஆந்திரத்தில் இது 50 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனினும், இந்த விதிகளைக் கட்டாயமாக நிறைவேற்றுவது கடினமாக இருக்கிறது. ஆகையால் பம்பாய், ஹைதராபாத் போன்ற சில இராச்சியங்களில், நிலவரியைப்போல் சில மடங்குகள் அதிகபட்ச குத்தகை கொடுக்கப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[1] வெவ்வேறு குடிவாரச் சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களுக்கு, 'இந்தியாவில் விவசாயச் சட்டம்' தொகுதி VI, உணவு, விவசாய அமைச்சு, 1955-ஐப் பார்க்க.

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மறுபரிசீலனை' மேற்கூறியது, பக்கம் 320.

வேலைக் காலத்தில் பாதுகாப்பு இல்லாமல் குத்தகைக் கட்டுப்பாடு செய்வது பலன் தராது என்பது தெளிவு. திட்ட காலத்தில் பல இராச்சியங்கள் வாரக்குடிகளைப் பாதுகாப்பதற்கு, (1) வாரக்குடிகளை வெளியேற்றுமல் தாற்காலிகமாகப் பாதுகாப்பது, (2) வேலைக் காலத்திற்கு ஒரு குறைந்தபட்ச எல்லை, (3) விதிக்கப்பட்ட காரணங்களுக்காக மட்டும் (உதாரணமாகச் சொந்த விவசாயத்திற்காக ஒரு சிறிய பகுதியை எடுத்துக்கொள்வது) வெளியேற்றும் உரிமையுடன் வேலைக்காலத்தை நிர்ணயிப்பது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சென்னையில் குறைந்தபட்சக் குத்தகைக் காலம் 5 வருடங்கள் என்றும், பம்பாயில் 10 வருடங்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் சில ஆண்டுகள் ஒருவன் குத்தகை நிலத்தைத் தொடர்ச்சியாக வைத்துக்கொண்டிருந்தால், அவனுக்கு அதில் அனுபோக பாத்தியதை (occupancy rights) கொடுக்கப்பட்டுள்ளது. ஆனல், நிலச் சொந்தக்காரர் தம் சொந்த விவசாயத்திற்காக நிலத்தை எடுத்துக்கொள்ள உரிமை உண்டு. எனினும், வாரக்குடி தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு குறைந்தபட்ச அளவுள்ள நிலத்தை வைத்துக்கொள்ள அனுமதிக்கும் விதியும் இருக்கிறது.

பல இராச்சியங்கள், நிலவுடைமை உரிமையை யளிக்கும் சட்டங்களைச் செய்துள்ளன. உத்தரப் பிரதேசத்திலும் டில்லியிலும் எல்லா வாரக்குடிகளும் கீழ்வாரக் குடிகளும் இராச்சியத்தோடு நேரடித் தொடர்புடையவர்களாகச் செய்யப்பட்டுள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் பூமிதாரி உரிமைகளைப் பெறுவதற்கு, அதனல் நன்மையடையும் வாரக்குடிகள் அளிக்கும் குத்தகையிலிருந்து அரசாங்கம் நிலக்கிழார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனல், மற்ற இராச்சியங்களில் வாரக்குடி தான் விரும்பிய போது நிலத்தை வாங்கிக்கொள்ளும் உரிமை அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பம்பாயும் மத்திய பாரதமும் இதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்துள்ளன. வாரக்குடிகள் நிலவுடைமை உரிமையைப் பெறுவதற்குக் கொடுக்கவேண்டிய நஷ்டஈடு, பொதுவாகக் குத்தகை அல்லது நிலவரியின் சில மடங்குகளாக இருக்கும். பஞ்சாபில்மட்டும் இவ்வாறன்றிச் சராசரி மார்க்கெட் மதிப்பில் 3/4 பங்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய மடங்குகள் குத்தகையைப்போல 2 முதல் 15 மடங்கு வரையிலும், வரி விதிப்பைப்போல 20 முதல் 200 மடங்கு வரையிலும் இருக்கும். நஷ்டஈடு தவணைகளாக 5 முதல் 15 வருடங்கள்வரையில் கொடுக்கப்படவேண்டும்.

1955ஆம் ஆண்டின் பம்பாய் குடிவாரச் சட்டம், 1956 மே முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இது 'நிலம் உழு பவனுக்கே' என்ற கொள்கையை நிறைவேற்றக் கருதுகிறது. ஆனால், 1957 மார்ச் 31-க்குள் நிலக்கிழார்கள் தம் சொந்த விவசாயத் திற்காக நிலத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். இச் சட்டம், '1957 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சட்டத்தில் அளிக்கப் படும் பாதுகாப்புகளுக்கும் பொறுப்புகளுக்கும் உட்பட்டு, வாரக் குடிகள் நிலத்தை அனுபவிப்பவர்களாகக் கருதப்படுவார்கள். சில வருடங்கள் கழித்து அனுபவிப்பவர்கள் என்ற முழு அந்தஸ்த்தை உண்மையாகப் பெறுவார்கள். அனுபோக பாத்தியத்தை பெறுவது கட்டாயமாக்கப்படும். ஏனெனின், அதைப் பெற விருப்பமின்மையோ, சக்தியின்மையோ இருப்பின், 'வெளியேற்றப்படுவது தவிர வேறு வழியில்லை' என்று வற்புறுத்துவதால் 'ஒரு புரட்சிகரமான மாறுதலைச் செய்துவிட்டது.'[1]

முடிப்புரை

இந்த எண்ணற்ற சட்டங்களால் அராங்கத்திற்கும், நிலத்தைப் பயிரிட்டு அனுபவிப்பவர்களுக்கும் இடையில் நாம் நெருங்கிய தொடர்பை உண்டாக்கிவிட முடிந்ததா என்று நாம் கேட்கிறோம். இன்று விதிக்கப்பட்ட வரியைப் பெறுவதில்மட்டும் அக்கறை கொண்டுள்ள நிறுவனமாக அரசாங்கம் கருதப்படுகிறது. நிலவரி இன்றும் இராச்சியத்தின் வருமானத்தில் பெரும்பகுதி கிடைக்கும் வழியாக இருக்கிறது. ஆனால், அண்மைக் காலத்தில் விற்பனை வரியும் இதேபோலப் பலனளிக்கக்கூடிய வழியாக உள்ளது. சட்டத்தை நிறைவேற்றுவது ஒருபுறமிருக்க, ஜனநாயக முறைகள் என்பவற்றால் சட்டம் இயற்றுவதற்கே அதிகத் தாமதமாகியுள்ளது. 1946 ஆகஸ்டிலேயே உத்தரப் பிரதேச சட்டசபை ஜமீந்தாரி முறையை ஒழிக்கும் கொள்கையை ஆதரித்தது. பிறகு 1948-ல் ஒரு குழு அறிக்கை அளிக்க, 1950-ல் சட்டம் இயற்றப்பட்டது. முதல் தீர்மானத்திற்கும், அதைச் சட்டமாக்குவதற்கும் இடையில் $4\frac{1}{2}$ ஆண்டுகள் கழிந்தன. பீகாரில், 'ஜமீந்தாரி ஒழிப்புக் கொள்கையை

[1] பம்பாய் அரசாங்கத்தின், நிலவரித் துறைச் செயலாளர் சங்கர், 1956 ஜூலை 31-ம் தேதி ஒலிபரப்பில் கூறியது. பம்பாய் அரசாங்கம் வெளியிட்ட புதிய குடிவாரச் சட்டம்பற்றிய அறிக்கை, 1956, பக்கம் 20 பார்க்க.

பீகார் சட்டசபை ஒப்புக்கொண்டு எட்டு வருடங்கள் கழிந்த பிறகும் பீகாரில் இருந்த ஜமீந்தார்களில் பெரும்பாலோர் தங்கள் நிலத்தைச் சட்டப்படி வைத்துக்கொண்டே இருந்தார்கள்.'[1] 'பேனுவின் ஒரே வீச்சினுல்' ஜமீந்தாரியும் ஜாகீர்தாரியும் ஒழிக்கப்பட்ட இராச்சியங்களில், அதை நிறைவேற்றுவதற்கு அதிகக் காலமாயிற்று. எடுத்துக் காட்டாகச் சென்னையில், 1948-ல் சட்டம் செய்யப்பட்டாலும், 1954-ன் பிற்பகுதியில்கூட அது முழுவதும் நிறைவேற்றப் படவில்லை. ராஜஸ்தானில் இப்போதுள்ள போக்கில், 1952-ல் இயற்றப்பட்ட ஜாகீர்தாரி ஒழிப்புச் சட்டம் 1960-க்குள் முழுவதும் நிறைவேற்றப்படும் என்று சொல்வதற்கில்லை.[2]

மேலும், பல சட்டங்களில் வாரக்குடிகள் சொந்த உரிமை பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், வாரக்குடிகள் வாங்கியுள்ள நிலத்தின் அளவும், சொந்த உரிமை பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவான பலனே கிடைத்துள்ளது என்பதைக் காட்டுகின்றன. திட்டக் குழு கூறுவதுபோலப் 'பொருளாதார நோக்குடன் பார்க்கும்போது, வாரக்குடிகள் அரசாங்கத்துடன் நேரடித் தொடர்புகொண்டு நிலவுடைமை உரிமை பெறுவதற்காக தவணைகளில் பணம் கட்டவேண்டுமா அல்லது சொந்த உரிமை கொண்டு இப்போதுபோல வருடந்தோறும் ஒரு சிறிய குத்தகைத் தொகையைச் செலுத்திக்கொண்டே இருக்கவேண்டுமா என்பது கருத்து வேற்றுமைக்கிடமான, விவாதிக்கவேண்டிய பிரச்சினையாகும்.'[3]

கடன் நெருக்கடி அதிகரித்துக்கொண்டும், நிலங்களின் அளவு மேலும் மேலும் சிக்கனமற்றதாக மாறிக்கொண்டும், வாழ்க்கைச் செலவு அதிகரித்துக்கொண்டும், சொந்த விவசாயத்திற்கென்று சாக்கிட்டு நிலத்தை எடுத்துக்கொள்வதாகக் கூறி வாரக்குடிகளை அதிகமாக வெளியேற்றிக்கொண்டும், சட்டத்தின் முக்கிய அமிசங்களை நிறைவேற்றமல் இருந்துகொண்டும் இருப்பதால், சுதந்திரம் கிடைத்துங்கூட, அரசாங்கத்தைக் கண்டு மனமுடைந்

[1] மேற்கூறிய தார்னர் எழுதிய நூல், பக்கம் 16.

[2] மேலே கூறியது.

[3] 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மறு பரிசீலனை', பக்கம் 323.

திருப்பதுடன் பகைமையுணர்ச்சியுங்கூட உண்டாயிருப்பதில் வியப்பொன்றுமில்லை.[1]

சீர்திருத்தம் செய்யப்பட்ட பிறகு பீகாரில் நிலச்சொந்தக்காரர்களுக்கு 'சிர்', 'குத்காஷ்ட்' ஆகிய நிலங்களை வைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டிருப்பதால், 500, 700, 1000 ஏக்கர் உள்ள பெரிய எஸ்டேட்டுகள் இன்னும் உள்ளன.[2] ஆதலால், மீண்டும் 'சொந்த விவசாயம்' என்ற தொடருக்குச் சரியான விளக்கம் கூறப்படாமையால், வாரக்குடியை வெளியேற்றுவதற்கு நிலக்கிழார்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையால், அவர்கள் நிலத்தை வாரக்குடிகளிடமிருந்து எடுத்துக்கொண்டு கூலிக்கு உழைப்பவர்களின் உதவியால் பயிர் செய்கின்றனர். நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளப்போவதாகப் பயமுறுத்தி, நிலச்சுவான்தார் வாரக்குடிகளிடமிருந்து பணத்தைக்கூட வற்புறுத்தி வாங்க முடியும். 'திரும்ப எடுத்துக்கொள்ளக்கூடாத நிலங்களைக் குறிப்பிடாமையால், வாரக்குடி ஏதாவதொரு துண்டு நிலத்தை விலைக்கு வாங்கவேண்டுமென்ற தன் உரிமையை நிலைநாட்ட முயன்ருல், நிலக்கிழார் அந்த நிலத்தைத் தம் சொந்த விவசாயத்திற்கு எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூறி, அவனுடைய எண்ணம் நிறைவேருமல் செய்துவிடக்கூடும்.' பல இராச்சியங்களில் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் மிகச் சிக்கலாக இருப்பதால் விவசாயிகளில் பெரும்பாலோர் அவற்றைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. சட்டத்தின்படி

[1] ஆந்திரத்தில் வாரக்குடிகளுக்கு இன்னும் வேலைக்கான பாதுகாப்பு இல்லை. சென்னையில் சில பகுதிகளில் தவிரக் குடிவாரம் ஒழுங்குபடுத்தப்படவில்லை. திருவாங்கூர்—கொச்சியில், பயிரில் பங்குபெறும் விவசாயிகள் இன்னும் வாரக்குடிகளாக எண்ணப்படவில்லை. சிலர் இன்னும் விளைச்சலில் பாதிக்கு மேல் அதிகக் குத்தகை கொடுத்துவருகிருர்கள். ஒரிசாவில் வழக்கமான குத்தகையை 1/4 பாகமாகச் சட்டத்தினல் குறைக்கப்பட்டும் மொத்த விளைச்சலில் 1/2 ஆகவே இன்னும் இருக்கிறது. வெளியேற்றுவதைத் தடுக்க நீதிமன்றத் தடை உத்தரவு இருந்தும், பல இராச்சியங்களில் வாரக்குடிகளை நிலத்திலிருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கின்றனர். பம்பாயில் 1948-க்கும் 1951-க்கும் இடையில் 'பாதுகாக்கப்பட்ட வாரக் குடிகள்' 17 இலட்சத்திலிருந்து 13·6 இலட்சமாகக் குறைந்தனர். அதாவது 20 சதவீதம் குறைந்தனர். அவர்கள் வைத்திருந்த நிலம் 18 சதவீதம் குறைந்தது. ஹைதராபாத்தில் 1951—55-ல் வாரக்குடிகள் பெருவாரியாக வெளியேற்றப்பட்டனர். பாதுகாக்கப்பட்ட வாரக்குடிகள் 57 சதவீதமும் அவர்களிடமிருந்த நிலம் 59 சதவீதமும் குறைந்தன. (திட்டக் குழுவின் குடிவாரச் சீர்திருத்தம், நிலச்சீர்திருத்தம்பற்றிய உட்குழுக்களின் அறிக்கை, மார்ச் 1956, பக்கம் 30). பம்பாயில், சொந்த விவசாயத்தில் இருந்த நிலம் 1952—53-ல் 77 சதவீதமாக இருந்து 1954-ல் 86·3 சதவீதமாக உயர்ந்தது. இதற்குக் காரணம், 1948-ன் குடிவாரச் சட்டத்தில் சொந்த விவசாயத்திற்கு நிலத்தை எடுத்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டிருந்ததுதான். 1957, மார்ச் 31 வரை இந்த உரிமை நீடிக்கப்பட்டிருப்பதால், சொந்த விவசாயத்தில் உள்ள நிலம் இன்னும் அதிகரிக்கும் (G. D. படேல், 'மாற்றியமைக்கப்பட்ட பம்பாய் இராச்சியத்தில் நிலப்பிரச்சினை', 1957, பக்கம் 414).

[2] தார்னர், மேலே கூறியதில் பக்கம் 34.

வாரக்குடிகளுக்குள்ள உரிமையை அவர்களுக்கு எடுத்துக் கூறவும், அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவும் எந்த விதமான ஒழுங்கான முயற்சியும் செய்யப்படவில்லை. இதைவிட மோசமானது என்னவென்ருல், வாரக்குடிகளின் வறுமையும், அவர்களின் சமூக நிலையும் தங்கள் உரிமையை வற்புறுத்துவதற்குத் தடையாக உள்ளன.[1] பேராசிரியர் தந்த்வாலா (Dantwala) கூறியதுபோல், 'ஐந்தாண்டுத் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள குடிவாரச் சட்டத்திற்கு அதிக எதிர்ப்பு இருக்கிறது. ஏனென்ருல், ரயத்துவாரிப் பகுதிகளில் தங்கள் நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து அதிக வருமானம் பெற்று, நாட்டில் சமூகத்திலும் அரசியலிலும் செல்வாக்குள்ள சில நிலக்கிழார்களின் சுயநலத்திற்கு இச்சட்டம் பாதகமாக இருக்கிறது.[2]

சில இராச்சியங்களில் நிலமுடைய வகுப்பாருக்குச் சாதகமாகவே சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் வைத்திருக்கக்கூடிய நிலத்திற்கு உச்சவரம்பு விதிப்பதுபற்றிய விவாதம் இன்னும் ஓயவில்லை. சில இராச்சியங்கள் இனி நிலம் வாங்குவோருக்கு உச்சவரம்பு விதித்துள்ளன. இது பம்பாயில் 'மூன்று சிக்கனமான நிலங்கள்' முதல் மத்திய பாரதத்தில் 50 ஏக்கர் வரை உள்ளது. ஜம்மு – காஷ்மீரம், ஹைதராபாத், இமாசலப் பிரதேசம் ஆகிய சில இராச்சியங்களில் இப்போதுள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற இராச்சியங்களும் இப்படிச் செய்யக்கூடும். ஆனல், இப்பொழுதே உச்சவரம்புச் சட்டம் வந்துவிடும் என்று எதிர்பார்த்து நிலச் சொந்தக்காரர்கள் தம் நிலங்களைக் குடும்ப உறுப்பினர்களுக்குப் பிரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.[3] நிலச்சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில் காஷ்மீரமும் ஆந்திரமும் மட்டும் 'கிராம அளவில் அதிக மாறுதலைச் செய்துள்ளன.' பம்பாய், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகியவை 'தெரியக்கூடிய

[1] நிலச்சீர்திருத்தம்பற்றிய குழு, மேலே கூறியதில், பக்கம் 34.

[2] டோக்கியோவில் 1957 ஏப்ரலில் நடந்த 'பொருளாதார வளர்ச்சிபற்றிய பிரச்சினைகள்' மாநாட்டில் வாசிக்கப்பட்ட, 'இந்தியாவில் விவசாய உற்பத்தியும் நிலச்சீர்திருத்தமும்' என்ற கட்டுரை, பக்கம் 8, குடிவாரச் சட்டத்தின் விளைவுகள்பற்றிய பொதுச் சுருக்கக் குறிப்பிலிருந்து மேற்கோள் காட்டுவதற்கு நாம் மிகவும் ஆசைப்படுகிருேம். 'சில இராச்சியங்களில் மட்டும்தான் நிலக்கொள்கை நன்ருக நிறைவேற்றப்பட்டுள்ளது. சில இராச்சியங்களில் அது நடைமுறைக்கு வரவில்லை. அதை நிறைவேற்ற முயற்சி செய்யப்பட்ட மற்ற இராச்சியங்களில் சட்டமானது நினைத்த பரிகாரத்தை அளிக்கத் தவறிவிட்டது' (பக்கம் 33). 'வாரக்குடிக்கும் நிலக்கிழாருக்கும் உள்ள தொடர்பைக் கட்டுப்படுத்தும் முயற்சி பொதுவாகத் தோற்றுவிட்டது' (பக்கம் 35).

[3] மேலே கூறியதில் பக்கம் 9.

அளவு மாறுதலைச்' செய்துள்ளன. மற்ற இராச்சியங்களில் மாறுதலே இல்லை.[1]

இந்தியாவில் நிலச் சீர்திருத்தம்பற்றி ஆராய்ந்த அமெரிக்கர் ஒருவர் தம் கருத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுகிறார்: 'உரிமை குறைந்தவர்களுக்காகவென்று வெளிப்படையாகச் சொல்லிச் செய்யப்படும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இந்தியாவின் கிராம அமைப்பை அடிப்படையில் மாற்றவில்லை. சிறுபான்மையோராகிய செல்வர்கள், இந்தச் சட்டங்களிலிருந்து தப்புவதற்குரிய அறிவும் சாதனங்களும் பெற்றுள்ளனர். இச் சட்டங்களில் விடுதல்கள் அதிகமாக இருந்ததால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்தி அதிகச் சூழ்ச்சிகள் செய்கின்றனர். சட்டப்படி அல்லது சட்ட விரோதமாகத் தங்களை உழவர்கள் என்றும், விவசாயிகள் என்றும் கூறிக்கொண்டு அவர்கள் இந்தியக் கிராம வாழ்க்கையைத் தம் பிடிப்புக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.'[2] இதற்கு மாறாகப் பேராசிரியர் தந்த்வாலா கருதுவதாவது: 'ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தில் சில அமிசங்கள் குறைகூறத் தக்கவையாய் இருந்தாலும், பொதுவாக, அதனால் உண்டாக்கப்பட்ட மாறுதல் உண்மையில் புரட்சிகரமானவை என்று கருதலாம். முன்பு ஜமீந்தாரிப் பகுதிகளாக இருந்த இடங்களில் நிலவுரிமை முறை, நிலமானிய முறையின் மோசமான சில அமிசங்களினின்று விடுபட்டு அதிக நியாயமாக அமைந்துள்ளது என்று தயங்காமல் கூறலாம்.'[3] எனினும், அவர், சீர்திருத்தங்கள் தனித்தனியாக விட்டுவிட்டு உண்டாக்கப்படுவதாலும், கருத்துகளை வெளியிடுவதற்கும் சட்டத்தை இயற்றுவதற்கும்

[1] விரிவான விளக்கத்திற்கு, 'இந்தியாவில் விவசாயத்தின் எதிர்காலம்', மேலே கூறியது, அதிகாரம்-III.

[2] மேலே கூறியது, பக்கம் 78 - 79.

[3] மேலே கூறியது, பக்கம் 8. ஒப்பிடுக: எனினும், 'மற்றோர் இந்திய நிபுணருக்கு ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டங்கள்' அரைகுறை மனத்தோடு விவசாயத் தொடர்புகளை மாற்றியமைப்பதற்கான முயற்சி, ஒரே சீரானதாக இல்லை. இவை அவசரமான, அலங்கோலமான, தாற்காலிகமான, சுயநலம் கூடக் கலந்த நடவடிக்கைகள். இவை, விவசாயிகளிடம் வளர்ந்துவரும் அதிருப்தியால், உண்டாகும் சீர்கெட்ட நிலையின் சில அமிசங்களைச் சமாளிப்பதற்காகவே செய்யப்பட்டவை. உண்மையில் ஜமீந்தாரி ஒழிப்பு நடவடிக்கைகள் மிகவும் பலன் தராதவை. அவை, 'இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உண்டாக்கப்பட்டிருந்த சில சட்டப்படியான நில உரிமைகளை அதிக நஷ்டஈடு கொடுத்து ஒழிக்கப் பார்க்கின்றன. அவை விவசாயப் புனரமைப்புக்கு ஓர் உருப்படியான திட்டத்தையும் கூறவில்லை. நிலத்தில் உழைப்பவர்களுக்கு, மேலான சமூகப் பொருளாதார நிலையை அளிக்கும் நோக்கம் அவற்றிற்கு இல்லை' (Dr. K. முகர்ஜி, மேலே கூறியது பக்கம் 125). பீகாரில், ஜமீந்தாரி முறை ஒழிக்கப்பட்டும், பூதான இயக்கம் பரவியும் பெரிய நிலச் சொந்தக்காரர்களின் பிடிப்பும், சொத்துரிமையில் படிப்படியான மேலதிகாரமும் உள்ள பழைய கிராம அமைப்பு இன்னும் உள்ளது. கீழ்க்குத்தகைக்கு விடுதலும் வெளியேற்றுதலும் சாதாரணமாக உள்ளன.

இடையில் அதிகக் கால இடைவெளி இருப்பதாலும், ஊன்றிய நலமிகள் விளைவிக்கும் சட்ட ரீதியான பூசலும் (இதில் அவர்களுக்குச் சில சமயங்களில் வெற்றியும் கிடைக்கும்), ஓர் அடிப்படையான சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தத்தை நடத்திவைப்பதற்குப் போதிய திறமையும் தகுதியும் இல்லாத நிருவாக அமைப்பும் காரணமாகச் சட்டமாக்கப்பட்ட நிலச்சீர்திருத்தத்தின் உண்மையான விளைவுகள் சிறிதும் திருப்தியளிக்கக்கூடியவையாய் இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறார்.[1]

வாரக்குடிக்கும் நிலக்கிழாருக்கும் இடையிலுள்ள தொடர்பை ஒழுங்குபடுத்தும் முயற்சி தோற்றுவிட்டதென்று கூறலாமா? குழு (Panel) அறிக்கை கூறுவதாவது: 'வாரக்குடியின் நிலைமை பாதுகாக்கப்படவேண்டுமானால் வாரக்குடிக்கும் நிலக்கிழாருக்கும் உள்ள தொடர்பை ஒழிப்பதற்கு அரசாங்கம் இவ்விருவருக்கும் இடையில் நுழைவதைவிட வேறு வழியில்லை என்று கூறலாம்.' நிலப் பிரபுத்துவத்தை ஒழிக்கவேண்டுமென்ற விருப்பத்தை ஒப்புக்கொள்வது வெறும் பேச்சாக இருக்கலாம். ஆனால், இது நிலச் சீர்திருத்தத்தை எதிர்நோக்கியுள்ள சங்கடமான நிலையைக் காட்டுகிறது. அதாவது, விவசாயியை இருந்த நிலையிலேயே விட்டு வைக்கும்படி பெரிய நிலக்கிழார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதா அல்லது, 'நிலம் உழுபவனுக்கே' என்ற கொள்கையை ஒப்புக் கொண்டு கண்டிப்பாகப் பறிமுதல் செய்வதா என்பதே.

விவசாயிகள் இன்று ஒருபுறம் கொடுமையான வரிகளும், மற்றொருபுறம் அதிகரித்துக்கொண்டேபோகும் கடன் சுமைகளும் ஆகிய இடுக்கியின் பிடிப்பில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொழில் துறையில் நிதி முதலாளித்துவமும், தொழில்களை இயக்கும் சக்தியும், கட்டுப்படுத்தும் சக்தியும் ஒருசிலருடைய கையில் குவிந்திருப்பதால், தொழிலிலும் விவசாயத்திலும் உழைப்பாளிகள் கூட்டம் ஒருங்கே உண்டாகிறது என்பதை நாம் பிறகு காண்போம். வறியவர்களின் பெருங்கூட்டம் வளர்வதும், விரைவாக உயர்ந்து

[1] அடிப்படையான சீர்திருத்தத்தைச் செய்யாமலிருப்பதற்குக் கூறப்பட்ட இந்தச் சமாதானம் மற்ற நாடுகளில் பெறப்பட்ட அனுபவத்தால் பொய்யாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு பகட்டான குடிவாரச் சீர்திருத்தம் வாரக்குடிகளுக்கு நிலத்தை மாற்றுவது, ஜப்பானில் வெற்றியுடன் நடத்தப்பட்டுள்ளது. அங்கு யுத்தத்திற்குப் பிறகு குடிவாரத்திற்குட்பட்டிருந்த பரப்பு 47 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஜப்பானிய உழவர்களில் 8 சதவீதம்தான் வாரக்குடிகள். நிலத்தைப் பங்கிடுவதில் உழவர்களுக்கு முக்கியமான பங்கு அளிக்கப்பட்டதால் இத்திட்டம் வெற்றிபெற்றது. '**கிராம அளவில் பங்கு கொள்ளும் முறையின்** அடிப்படையில் திட்டம் முழுவதும் நிலக் குழுக்களால் மேற்பார்வை செய்யப்பட்டது.' (F.A.O. Report on the Centre on Land Problems in Asia and the Far East, Bangkok, 1955, p. 20.—தடித்த எழுத்து நம்முடையது).

வரும் ஜனத்தொகையும், சமூகப்பொருளாதார நிலைபேற்றுக்குப் பெரிய ஆபத்தைக் காட்டும் அறிகுறியாகும். இது எந்த நேரத்திலும் ஒரு புரட்சியாக மாறிவிடக்கூடும்.

நிலத்திலிருந்து அகற்றப்பட்ட இந்திய விவசாயி, சட்டப்படி தன் நிலத்தைத் தனக்கு மீண்டும் அளிக்கும்படி கேட்கலாம். ஆனால், நிலம் படைத்த சுயநலவாதிகள், அது புரட்சிகரமானது என்று எதிர்ப்பார்கள். ரயத்து, நஷ்டஈடின்றி நிலத்திலிருந்து அகற்றப் பட்டு, நிலக்கிழாரின் தயவிலும் லேவாதேவிக்காரன் தயவிலும் வாழும்படி விடப்பட்டான்; அவன் நிலத்தில் ஒரு அடிமையாகச் சிறிதும் போதாத கூலிக்கு வேலை செய்தான். 1793-ல் சாசுவத செட்டில்மென்டு புகுத்தப்பட்டதைவிட, ஜமீந்தார்களை வெளியேற்றி, ரயத்துகளுக்கு அவர்களுடைய பழைய நிலையை அளிப்பது அவ்வளவு புரட்சிகரமான மாறுதல் அன்று. இது ஒரு நல்ல மாறுதலே.

ஐந்தாண்டுத் திட்டங்களில் நம் நோக்கம் நிறைவேற, நாம் நிலச்சீர்திருத்தப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து, பாதுகாப்புள்ள செழிப்பான விவசாய ஏற்பாட்டிற்கு அடிப்படை இடவேண்டும். இப்போதுள்ள தாமதமும் தயக்கமும் கைவிடப்பட்டு, ஊன்றிய நலமிகள் அப்புறப்படுத்தப்படவேண்டும். ஒன்றும் செய்யாமல் வாளா இருக்கும் நிலையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. குழு அறிக்கை, 'குடிவாரச் சட்டத்தில் வரப்போகும் உரிமை இழப்புக்கு அஞ்சி நிலக்கிழார்கள் தங்கள் நிலங்களை வாரக்குடிகளிடமிருந்து ஒரு வில்லங்கமும் இல்லாமல் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்வது இயற்கையே' என்று கூறுகிறது.[1] இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏன் தக்க சமயத்தில் போதிய முன்னேற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதை நாம் அறிய விரும்புகிறோம்.

நிலத்தின் மேல் பற்றுள்ளவர்களும், தங்கள் சக்தியை உறிஞ்சக் கூடிய, நிச்சயமற்ற மழை, சீதோஷ்ண நிலை ஆகியவற்றோடு போராடுபவர்களும் கணக்கைப் படிக்கவோ, பற்றுச் சீட்டை (receipt) எழுதவோ தெரியாதவர்களும் ஆகிய விவசாயிகள், 1929-ல் தொடங்கியது போன்ற ஒரு மந்த நிலையில் அகப்பட்டு, அரசியல் கட்சிகள், கிளர்ச்சிக்காரர்கள் ஆகியவர்களுடைய வாக்குறுதிகளால் தூண்டப்பட்டு, பிழைப்புக்குப் போதாத விளைச்சலையுடைய துண்டு நிலங்களைப் பயிரிட்டுக்கொண்டு இருக்கும் நிலையில், பகைமை மனப்பான்மை உண்டாகுமாறு கோபமூட்டப்பட்டால், நிலக்கிழார்களுக்கு எதிராக ஒரு வெளிப்படையான புரட்சியையே உண்டாக்கி

[1] மேலே கூறியது, பக்கம் 35.

விடுவார்கள். அத்தகைய புரட்சியை அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு பலாத்காரமாக அடக்கிவிடலாம். சட்டமியற்றுவது, இதற்கு ஒரு தாற்காலிகமான நிவாரணமாகத்தான் இருக்க முடியும். சுதந்திரம் கிடைத்த பிறகு தொடங்கப்பட்ட நிலச்சீர்திருத்த இயக்கம், நஷ்டஈட்டுக் கொள்கையால் உண்டாகும் பெரிய பொறுப்புகளால் ஒரு நீண்ட கால வேலையாகும். அதற்குள் கிராம மக்களிடையே அதிக அதிருப்தி வளர்ந்துவிடும். இந்தியாவில் விவசாயச் செழிப்புத்தான் மக்கள் எல்லோருடைய செழிப்புக்கும் அடிப்படை என்பதைத்தான் நாம் வற்புறுத்த விரும்புகிறோம். வெள்ளமும், பஞ்சமும், விலை வீழ்ச்சியும், நிலக்கிழார்கள் கொடுமைப்படுத்தி வரி வாங்குவதும், வறுமையும், கடன்சுமையும் இந்திய விவசாயத்தின் கடந்த நூறாண்டுச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கவை. மனநிறைவுள்ள மகிழ்ச்சியான கிராம சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கு எத்தகைய சீர்திருத்தம் மிக அடிப்படையானதென்றோ, எந்த நடவடிக்கை மிகப் புரட்சிகரமானதென்றோ, எத்திட்டம் மிகச் செலவுள்ளதென்றோ கூற முடியாது.

ஒவ்வொரு சமூகப் பொருளாதார நடவடிக்கைத் துறையிலும் தாங்கள் கூறும் மாதிரியான பரிகாரத்தைச் செய்தால் விரும்பிய பலன் கிடைக்கும் என்று நம்பும் ஆர்வமிக்கவர்கள் உண்டு. இவ்வாறே விவசாயத் துறையில் ஆர்வமிக்கவர்கள், நிலத்தை மாற்றிப் பங்கிட்டுப் பெரிய எஸ்டேட்டுகளை ஒழித்துவிட்டால் தானாக விவசாயச் செழிப்பு உண்டாகிவிடும் என்று நம்புகிறார்கள். இதே போலத் தொழில் நுண்ணியல் முறைகளைப் பயன்படுத்தினால், விவசாய உற்பத்திப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பும் ஆர்வமிக்கவர்கள் இருக்கிறார்கள். ‘ நிலம் உழுபவனுக்கே ’ என்பது ஐயமின்றி ஒரு நல்ல நோக்கம்தான். ஆனால், இந்த நோக்கம் தேசீய ஒற்றுமையில் ஒரு இணைபிரியாத பகுதியாகவும், இறுதியாகச் சர்வதேச வாழ்க்கையில் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டாலொழிய, இது மட்டும் தனித்திருந்தால் மனமுறிவு ஏற்பட்டுவிடும் என்பதை இந்த நோக்கத்தின்மேல் சத்தியம் செய்பவர்கள் உணருவார்கள். சட்டத்தினால் நாம் பெரிய எஸ்டேட்டுகளை நஷ்டஈடு கொடுத்தோ, கொடுக்காமலோ ஒழித்துவிடலாம்; நிலமில்லாதவர்களுக்கு விவசாயத்திற்காக ஒரு துண்டு நிலத்தைக் கொடுக்கலாம். நாம் அவர்களுக்கு விதைகள், மாடுகள், உரங்கள் முதலியவற்றைக் கொடுத்து உதவலாம். ஆனால், புதிதாக உரிமை பெற்றவர்கள் தங்களுடைய சமூகப் பொறுப்புகளை உணராமல் இருந்தால், முன்பு அவர்கள் செய்ததுபோல இனப்பெருக்கம் செய்து ஜனத்தொகையை அதிகரித்துக்கொண்டே போனால், இப்போதிருப்பதைவிட விவசாயத்தின் நிலைமை மேலும் சீர்கேடடையக்கூடும்.

நம்முடைய குறைகளால் தோன்றக்கூடிய வரையறைகளும், நம்முடைய பொருளாதார அல்லது சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்களின் குறைகளும், வாழ்க்கையில் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய மிகக் கடினமான செய்திகளாகும். சீர்திருத்தம் செய்பவன், சமூக, பொருளாதார அல்லது அரசியல் ஆகிய எத்துறையில் ஆர்வமிக்கவனுயிருந்தாலும், மிக அவசரக்காரனுகவும் உடனே பலன்களை எதிர்பார்ப்பவனுகவும் இருப்பான். ஆனுல், அவன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது தடையாக இருக்கக்கூடாது. அவன், தான் தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடாமல் முயற்சி செய்யவேண்டும். நிலச்சீர்திருத்தம் வெற்றியளிக்கலாம், அல்லது தோல்வியடையலாம். அது வெற்றி பெற்ருல் பெருமையெல்லாம் நமக்கே; தோற்ருல், இத்துறையில் மற்றப் பரிசோதனைகளுக்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கும் அனுபவத்தினுல் நாம் நன்மையடையலாம்.

16. விவசாய உழைப்பாளர்கள்

1951 கணிப்பின்படி இந்தியாவின் மொத்த ஜனத்தொகையாகிய 35·68 கோடியில் 24·91 கோடி விவசாய மக்களாவர். ஆக, ஜனத் தொகையில் 70 சதவீதத்தினர் விவசாயத்திஞல் தம் பிழைப்பை நடத்திவருகின்றனர். ஆனுல், விவசாயத் தொழிலமைப்பு கோபுர அமைப்பு போன்றது. இதில் உச்சியில் மிகச் சில ஜமீந்தார்கள், மிக அதிகமான நிலங்களுக்கு உரியவர்களாயும், சில இடங்களில் கிராமங்கள் முழுவதுக்கும் உரியவர்கள் – அடியில் சிறுசிறு நிலங் களுக்குரிய, கொடுமையான வரிகளுக்குள்ளாகும் பர்காதார்களும் (Bargadars), நிலமற்ற உழைப்பாளிகளும் (இவர்களுள் பலர் ஒப்பந்த அடிமைகள்) ஆகிய உழவர்கள் இருக்கிருர்கள். இந் நாட்டில் அடிக்கடி கணிப்பு அறிக்கைகளில் உண்டாக்கப்படும் மாறுதல்களும், பழைய இந்திய மன்னர்களின் இராச்சியங்களே இணைத்ததனுலும், பிரிவினையினுலும் ஏற்பட்ட சிக்கல்களும், மறைவாக உள்ள வேலையின்மையைப் பற்றிய விவரங்களேச் சரியாக அறிந்துகொள்ள முடியாமல் செய்துவிட்டன. ஆனுல், நம் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்தடையாயுள்ள வற்றுள், மிக இழிவான வறுமையில் ஆழ்ந்துள்ள இந்த உபரி விவசாய ஜனத்தொகை ஒன்ருக உள்ளது.

பிரிட்டன் ஆட்சிக்கு முற்பட்ட இந்தியாவில் இத்தகைய ஒரு வகுப்பு இருந்ததென்பதற்கு ஒரு சான்றுமில்லே.[1] 1880ஆம் வருடத்திய பஞ்சக் குழு, நிலத்தின்மீது உபரி ஜனத்தொகை வளர்ந்து வருவதுபற்றி ஒரு எச்சரிக்கையை முதல் முதலில்

[1] ராதாகமல் முகர்ஜி 'பண்டை இந்தியாவில் தல ஆட்சி,' பக்கம் 37—41; 70—74. 'கிராம மனித சக்தியும் தொழில் அமைப்பும்' என்ற கட்டுரை, 'அகில இந்திய விவசாய உழைப்பாளர் விசாரணே' 1954, என்ற நூலில் பக்கம் 39. வரலாற்றுப் பின்னணியை அறிய சுரேந்திரா J. படேல் எழுதிய 'நவீன இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் விவசாய உழைப்பாளிகள்' என்ற நூலேப் (1952) பார்க்க.

விடுத்தது. இவர்கள் கிராமங்களில் அரைப் பட்டினியுடன், நிலமற்ற உழைப்பாளிகளாய் வருடத்தில் சில மாதங்களுக்கு வேலை பெற்றோ, சில சமயங்களில் அதுவும் இன்றியோ வாழ்கிறார்கள். இவ் வகுப்பார் வளர்ந்துவருவதற்குக் காரணங்கள், நிலவுரிமை முறைகளும், தலத்திலில்லா நிலக்கிழார்கள் அதிகரித்து வருவதும், நிலம் உழுபவர்கள் கையிலிருந்து கடன் கொடுத்தவர்கள் கைக்கு மாறு வதும், மனிதர்களுக்கும் நிலத்திற்கும் உள்ள விகிதம் குறைந்து வருவதும், இயந்திர உற்பத்திப் பொருள்களை பயன்படுத்துவதால் கிராமச் சிறு தொழில்களும் கைத்தொழில்களும் மறைந்துவருவதும், பழைய கிராமப் பொருளாதார வழக்கத்தையும் பொருளாகக் கொடுக்கும் முறையையும் அடிப்படையாகக் கொண்ட கிராமப் பொருளாதாரம் சிறிது சிறிதாக மாறி, ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்த விலைப் பொருளாதாரம் தோன்றியதும் ஆகும். ராதாகமல் முகர்ஜி கூறுவது போலச் சிறிய நிலங்களை வைத்திருப்பவர்களின் நிலை பலவீனமடைவதற்குக் காரணமான ஒவ்வொரு நிகழ்ச்சியும், விவசாய உழைப்பாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்நிகழ்ச்சிகள் எவை எனின், 'கிராமப் பொருளாதாரத் தில் பொதுவுரிமை மறைந்ததும், கூட்டு நடவடிக்கை இல்லாமற் போனதும், நிலங்களைத் துண்டுபடுத்தியதும், குத்தகை வாங்குபவர் களின் தொகை அதிகரித்ததும், நிலத்தைத் தாராளமாக அடமானம் வைப்பதும், பிறருக்கு மாற்றிவிடுவதும், குடிசைக் கைத்தொழில்கள் குன்றியதும் ஆகும்.'[1] நிலத்தைச் சிறுசிறு துண்டுகளாக்குவதால் விவசாயி தன் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்குப் பிறருடைய பண்ணைகளில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. பஞ்சமும் கொள்ளை நோய்களும் இல்லாத சாதாரணமான பத்தாண்டுக் காலத்தில் மற்றக் கிராம மக்களைவிட நிலமற்ற உழைப்பாளிகளின் தொகை வேகமாக அதிகரித்திருக்கிறது.

சென்னையில் விவசாய மக்கள் ஆயிரம் பேர்களில் பயிர்த்தொழில் செய்யாதவர்கள் 1921-ல் 77 பேர் இருந்தனர். 1901-ல் 20 பேர்கள் தான் இருந்தனர். சென்னையில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள 1,000 பேர்களுக்கு தலத்திலில்லா நிலக்கிழார்களின் எண்ணிக்கையும் உழைப்பாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதைப் பக்கம் 504-ல் உள்ள அட்டவணை காட்டுகிறது.[2]

[1] மேலே கூறியதில் பக்கம் 215.

[2] P. P. பிள்ளை எழுதிய 'இந்தியாவில் பொருளாதார நிலைமைகள்' 1925, பக்கம் 114. (1901 முதல் 1921 வரையில் உள்ள எண்கள் மட்டும்); சென்னைக் கணிப்பு அறிக்கை, 1931, பக்கம் 198.

	1901	1911	1921	1931
வேலை செய்யாத நிலக்கிழார்கள் ...	19	23	49	34
வேலை செய்யாத வாரக் குடிகள் ...	1	4	28	16
வேலை செய்யும் நிலக்கிழார்கள் ...	484	426	381	390
வேலை செய்யும் வாரக் குடிகள் ...	151	207	225	120
உழைப்பாளிகள் ...	345	340	317	429

வங்காளக் கணிப்பு அறிக்கையிலிருந்து கீழ்க்கண்ட பதிவுகள் கிடைத்துள்ளன.

	1921	1931	சதவீத உயர்வு அல்லது குறைவு
பயிர்த்தொழில் செய்யாத நிலக் கிழார்கள் அல்லது குத்தகை பெறுபவர்கள் ...	390	634	+62
பயிர் செய்யும் சொந்தக்காரர் களும் வாரக்குடிகளும்	9,275	6,041	—35
உழைப்பாளிகள் ...	1,805	2,719	+50

விவசாய உழைப்பாளிகளின் வளர்ச்சியைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.[1]

	1911	1921	1931
		(ஆயிரங்களில்)	
நிலக்கிழார்கள் ...	2,845	3,727	3,257
விவசாயிகள் ...	71,096	74,665	61,180
விவசாய உழைப்பாளிகள் ...	25,879	21,678[2]	31,480
மற்றவர்கள் (சந்தைத் தோட்டக் காரர்கள், மாடுகளை வளர்ப்ப வர்கள், காடுகளில் வேலை செய் வோர் முதலியவர்கள்) ...	5,196	4,608	6,536

1921-31 ஆகிய பத்தாண்டுகளில் விவசாய உழைப்பாளி களுக்கும் விவசாயிகளுக்கும் உள்ள விகிதம் வேகமாக அதிகரித்தது. இதைப் பக்கம் 505-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.[3]

[1] பிரிட்டிஷ் இந்தியாவின் புள்ளிவிவரச் சுருக்கம், 1915 முதல்; அட்டவணைச் சுருக்கம், 1911 கணிப்பு.

[2] 1911-க்கும் 1921-க்கும் இடையில் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் இன்புளுவென்சாவும் மற்றக் கொள்ளை நோய்களும்.

[3] கணிப்பு அறிக்கை, தொகுதி I, பகுதி I, 1931, பக்கம் 288.

முக்கியத் தொழில்

	வேலை செய்வோர் - பண்ணைகளிலும், வயல்களிலும் உழைப்போர்	சாதாரண விவசாயிகள்	விவசாய உழைப்பாளிகள்	உண்மையாக வேலை செய்வோர்; சொந்தக்காரர்களும் வாரக்குடிகளும் ஆகிய விவசாயிகள்
	1921		1931	
மொத்த எண்ணிக்கை	2,16,76,107	7,46,64,886	2,49,25,357	6,11,80,004
விகிதம் ...	291	1,000	407	1,000

1931 கணிப்பில், வகையீட்டில் மாறுதலைச் செய்துங்கூட (இக்கணிப்பு ஜனத்தொகையில் குறைவைக் காட்டுகிறது) இந்த எண்கள், நிலமற்ற மக்களின் எண்ணிக்கை அதிகமாகும் போக்கைக் காட்டுகின்றன. டாக்டர் ராதா குமுத் முகர்ஜி, புளௌட் குழு அறிக்கைக்கு எழுதிய குறிப்பில் பின்வருமாறு கூறுகிறார்: "வங்காளத்தின் மொத்த ஜனத்தொகை 5 கோடிக்குமேல் சிறிது உள்ளது. இதில் 137 இலட்சம்தான் 'முக்கியமாகச் சம்பாதிப்பவர்கள்' என்று பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களை 'நம்பியிருக்கும் வேலை செய்வோர்' 7 இலட்சம் பேர்....'வேலை செய்யாமல் நம்பியிருப்போர்' 357 இலட்சம் பேர். இதிலிருந்து, வங்காளத்தின் மொத்த ஜனத்தொகையில் 71 சதவீதம் சம்பாதிப்பதில்லை என்றும் அவர்கள் வேலையற்றவர்கள் என்றும் தெரிகிறது."[1] அநேகமாக எல்லா மாகாணங்களிலும் விவசாயம் செய்யும் நிலச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. பஞ்சாபில் கூடப் பெரிய நிலச்சுவான்தார்கள் கையில் அதிக நிலங்கள் இருப்பதோடன்றி, விவசாயம் செய்யும் வாரக்குடிகளும் நிலக்கிழாரின் விருப்பத்திற்குட்பட்டு வேலை செய்யும் வாரக்குடிகளும் அதிகரித்துள்ளனர். நிலத்தை விற்பதால் அதிக நிலங்கள் கைமாறி, நிலமற்ற உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. 1905-6ல் கைமாறிய நிலங்களின் எண்ணிக்கை 40,000-லிருந்து, 1938-9ல் 1,15,000 ஆக உயர்ந்தது. 1929-க்குப் பிறகு விலைகள் குறைந்ததால், கடன்சுமை அதிகரித்து அரசாங்க வரியைச் செலுத்துவதற்கு சிறிய நிலக்கிழார்கள் தங்கள் நிலத்தை விற்கவேண்டியதாயிற்று. சுவாதீன அடமான நிலங்களின் எண்ணிக்கையிலிருந்தும் இந்தப் போக்குத் தெரிகிறது. இந்த அடமானங்கள் 1922-3ல் பயிர் செய்யப்பட்ட

[1] புளௌட் குழு அறிக்கை, தொகுதி I, பக்கம் 318.

மொத்த நிலத்தில் 10 சதவீதமாக இருந்து, 1936-37ல் 13 சதவீதமாயின. இவற்றின் பரப்பு 40 இலட்சம் ஏக்கராகும்.[1] ஜனத்தொகை வளர்ச்சியினுல், சிறிய நிலங்களில் பயிர் செய்யும் சொந்தக்காரர்கள், தம் நில வருமானத்தை அதிகரிப்பதற்கு, வெளியில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

இவ்வாறு, நம் கிராமப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அம்சம் விவசாய உழைப்பாளிகளின் பெருக்கம் என்பதை நாம் காணலாம். 1882-ல் விவசாயத்தில் 'நிலமற்ற அற்றைக்கூலி உழைப்பாளிகள்' 75 இலட்சம் பேர் என்ற கணிப்பு அறிக்கை தெரிவித்தது. இந்த எண்ணிக்கை 1921-ல் 215 இலட்சமாகவும், 1931-ல் 330 இலட்சமாகவும் பெருகியது. 1951 கணிப்பின்படி இந்திய யூனியனில் 448 இலட்சம் விவசாய உழைப்பாளிகள் இருந்தனர். இது விவசாய ஜனத்தொகையில் 20 சதவீதமாகும். ஆனல், விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு, 1951 கணிப்பைவிட, விவசாய உழைப்பாளிகளைப்பற்றி மேலும் உண்மையான விளக்கத்தைக் கருத்தில் கொண்டு, கிராமக் குடும்பங்களில் 30·4 சதவீதம் விவசாய உழைப்பாளிகள் என்றும், இவர்களில் 50 சதவீதம் நிலமற்றவர்கள் என்றும் தெரிவித்தது. நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி ஐ. நா. அறிக்கையில் வெளியிடப்பட்ட இந்திய அரசாங்கத்தின் மதிப்பீடு ஒன்றில், விவசாய உழைப்பாளிகளில் 4 சதவீதம் குத்தகை பெறுவோர் என்றும், மூன்றில் ஒரு பங்குக்குச் சிறிது குறைந்த தொகையினர் சொந்தக்கார விவசாயிகள் என்றும், மற்றும் மூன்றில் ஒரு பங்கு விவசாய உழைப்பாளிகள் என்றும் கூறப்படுகிறது.[2] பல கிராமங்களில் விசாரித்ததில், இவ்வெண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று ஐயத்திற்கிடமின்றித் தெரிகிறது. வட பீகாரில் சிர்ஹார் என்ற கிராமத்தில் விவசாய உழைப்பாளிகள் 72 சதவீதம் உள்ளனர்; அங்குள்ள மொத்தக் குடும்பங்கள் 1,167; மொத்த மக்கள் 7,003 என்று திரு. சர்க்கார் கூறுகிருர்.[3] தென்னிந்தியாவில் மறு பரிசீலனையிலிருந்து, நிலமற்ற உழவர்களின் எண்ணிக்கை வளர்ந்து வருவது பெரும் பிரச்சினையாக உள்ளது என்றும், நிலப்பிரபுத்துவம் அதிகரித்து வருவதாலும், இந்த உழவர்கள் தங்களுடைய சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் அவசியத்தைப்பற்றி அதிகமாக உணர்ந்து வருவதாலும், இப் பிரச்சினை மேலும் ஆபத்தான நிலையடைந்து வருகிறது என்றும் தெரிகிறது.[4] சென்ற

[1] T. ஜெயின் மேலே எழுதியது.

[2] 'நிலச் சீர்திருத்தம்—பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய அமைப்பில் உள்ள குறைகள்', ஐ. நா. 1951, பக்கம் 53.

[3] இந்தியப் பொருளாதார சஞ்சிகை, ஜூலை, 1937, பக்கங்கள் 94—96.

[4] மேலே கூறியது, பக்கம் 347 முதல்.

20 ஆண்டுகளில் உழவர்களைப் பெருவாரியாக நிலத்திலிருந்து வெளியேற்றுவது, இப் பிரச்சினை மோசமடைந்து வருவதைக் காட்டுகிறது. உத்தரப் பிரதேச ஜமீந்தாரி ஒழிப்புக் குழு அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட அட்டவணை, விவசாயச் செழிப்பு நிலை இருப்பதாகக் கூறப்படினும், நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் உழவர்களின் எண்ணிக்கையைக் காணும்போது, ஒரு முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

	வெளியேறும்படி உத்தரவிடப்பட்டவர்கள்	குத்தகைப் பாக்கி உள்ளவர்கள்	விட்டுச் சென்றவர்கள்	விவசாயிகள் வெளியேற்றப்பட்ட மொத்த நிலம் (ஏக்கரில்)
1926-27 முதல் 1928-29 வரை	21,960	7,66,303	76,972	3,47,421
1929-30 முதல் 1932-33 வரை	3,62,159	13,18,002	2,09,893	8,80,810
1933-34 முதல் 1936-37 வரை	3,98,036	13,10,155	1,10,914	9,11,655
1937-38 முதல் 1938-39 வரை	1,25,405	6,18,022	26,769	2,10,474
1939-40 முதல் 1943-44 வரை	4,52,333	12,09,184	72,846	கிடைக்கவில்லை

மந்த நிலையுள்ள வருடங்களில் குத்தகைப் பாக்கி அதிகமாயிற்று. ஆனால், போர்க் காலத்தில் விவசாயச் செழிப்பு இருந்ததாகக் கூறப்பட்டு விவசாயிகளுக்குக் குத்தகை கொடுக்கும் சக்தி அதிகமிருந்ததென்றாலும், நிலைமை சீர்திருந்தவில்லை. கடைசிப் பத்தியில், வெளியேற்ற உத்தரவினால் பாதிக்கப்பட்ட நிலத்தின் அளவு கவனிக்கத்தக்கது. ஏனெனின், நிலம் விவசாயிகள் கையிலிருந்து கடன் கொடுத்தவர்கள் கைக்கு மாறியதால் ஏற்பட்ட உற்பத்திக் குறைவுக்கு அது சான்றாகும். வெளியேற்றப்பட்டதோடு, விவசாயிகளின் துன்பம் முடிந்துவிடவில்லை. 1939 வரையில் வெளியேற்றப்பட்டபிறகுங்கூட, வாரக்குடியின் மற்றச் சொத்துக்களிலிருந்து குத்தகைப் பாக்கிகளைப் பெறுவதற்கு நீதிமன்ற உத்தரவிருந்தது. வாரக்குடிகளின் வீட்டுச் சாமான்கள், கதவு நிலைகள், கூரைகள் முதலியவை ஜப்தி செய்யப்பட்டுக் குத்தகைப் பாக்கிகள் பெறப்பட்டன. 1939ஆம் ஆண்டின் உத்தரப் பிரதேச குடிவாரச் சட்டம், வாரக்குடியை நிலத்திலிருந்து வெளியேற்றிய பிறகு, அவனுடைய

குத்தகைப் பாக்கிகளை யெல்லாம் நஷ்டக் கணக்கில் எழுதிவிட வேண்டுமென்று கூறியது.[1]

1950-ல் கிழக்குப் பஞ்சாபில் பெரோஸ்பூர் மாவட்டத்தில் மட்டும் 2,000 தாற்காலிக வாரக்குடிகள்மீது வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என்று ரங்னேகர் கூறுகிறார். இவர்கள் பிரிவினைக்கு முன்பு குத்தகைக்காரர்களாக இருந்தவர்கள்.[2] பம்பாய் இராச்சியத்தில், கொங்கிணிப் பகுதியில் சில மாதிரிக் கிராமங்களை டாக்டர் டொண்டே (Donde) அண்மையில் ஆராய்ந்ததில், நிலத்தைச் சொந்தமாக விவசாயம் செய்பவர்களின் சதவீதம் அடுத்தடுத்து வந்த தலைமுறைகளில் 57-லிருந்து 41-க்கும், பிறகு 30-க்கும் இறங்கிவிட்டது என்று தெரிகிறது. குஜராத்தில் (பம்பாய் இராச்சியம்) 268 குடும்பங்களை மேலும் ஆராய்ந்ததில், ஒரே தலைமுறையில் சொந்த விவசாயம் செய்பவர்களின் சதவீதம் 46·5 லிருந்து 31 ஆகக் குறைந்ததென்று தெரிகிறது.[3]

தலத்திலில்லா நிலப்பிரபுத்துவம் அதிகரித்துவருவதையும், விவசாயம் செய்யாத முதலீட்டாளர்களும், பணம் கடன் கொடுப்போரும் விவசாயிகளின் நிலத்தைப் பறிப்பது அதிகரித்து வருவதையும்பற்றி நாம் முன்னே ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

நிலமில்லாத உழைப்பாளியின் தொகை பெருகி வருவதற்கு ஒரு காரணம், இந்தியாவின் குற்றப் பரம்பரையினர் பொருளாதாரத் துறை மாறிக்கொண்டிருக்கும் இடைக்காலத்தில் இருப்பதுதான். இவர்களுள் பலர் காடுகளிலும், மலையடிவாரங்களிலும் ஒதுங்கியிருந்தனர். பெரும்பாலான பழங்குடிகள் வாழும் பகுதிகளில் கிராமத் தலைவனும் ரயத்துவாரி முறையும்தான் அக்குடியமைப்பு முறையாக இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலவரிக் கொள்கைப்படி, ஒரு சிலர் மட்டும் நிலத்தில் சொந்த உரிமை அளிக்கப்பட்டனர். இப் பழங்குடிகளின் அறியாமையையும் சிக்கனமற்ற தன்மையையும், பயன்படுத்திக்கொண்டு பணம் கடன் கொடுப்போரும், வணிகர்களும் சிறிது சிறிதாக இவ்வுரிமையைப் பறித்துவிட்டார்கள். இவர்களுள் பலர் வாரக்குடிகளாயிருந்து நிலமற்ற குடிகளாக மாற்றப்பட்டனர். மத்திய மாகாணத்தில் கோண்டுகள் (Gonds), மத்திய இந்தியாவில் பில்கள் (Bhils), உத்தரப் பிரதேசத்தில் கொறவர்கள் (Korwas),

[1] பக்கம் 348—49.

[2] மேற்கூறியதில் பக்கம் 94.

[3] M. L. தந்த்வாலா, International Labour Review-வில் (Nov.—Dec. 1952) 'இந்தியாவில் நிலச் சீர்திருத்தம்' என்னும் கட்டுரையில் மேற்கோளாகக் காட்டியது, பக்கம் 427—28.

சோட்டா நாகபுரியில் முண்டர்கள் (Mundas) ஆகியோர் இவ்வாறு மாற்றப்பட்டார்கள்.[1]

பிரிவினைக்குப் பிறகு, விவசாயச் சீர்திருத்தக் குழு நிலமற்ற விவசாய உழைப்பாளிகளின் எண்ணிக்கையை $3\frac{1}{2}$ கோடியாகவும், அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் 10 கோடி என்றும் மதிப்பிட்டிருக்கிறது. டாக்டர் A. H. லொரென்சோ, இவ்வெண்ணிக்கை சரியல்ல என்பதைப் பின்வரும் கூற்றில் விளக்குகிறார்: 'ஜூலையிலும், நவம்பரிலும் அல்லது மார்ச்சில் கணிப்பு எடுக்கப்பட்டால், பல மக்கள் விவசாய உழைப்பாளிகள் என்று காட்டப்படலாம்; மே, ஜூன் மாதங்களில் எடுக்கப்பட்டால், குறிப்பிடப்படாத வகுப்பாரின் தொகை அதிகரித்து, விவசாய உழைப்பாளிகளின் தொகை அதற்கேற்பக் குறையும்.[2] கிராம வங்கித் தொழில் விசாரணைக் குழு, விவசாயிகளில் 20 சதவீதத்தினர் பம்பாயில் 67·7 சதவீத நிலத்திற்கும், பஞ்சாபில் 74·7 சதவீத நிலத்திற்கும், உத்தரப் பிரதேசத்தில் 35·1 சதவீத நிலத்திற்கும் சொந்தக்காரர்கள் என்று மதிப்பிடுகிறது. கிராமக் கடன் ஆராய்ச்சிக் குழு, 75 மாவட்டங்களில் ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 600 கிராமங்களில் பயிர் செய்யப்பட்ட எல்லா நிலங்களுக்கும் உரிய விவசாயிகளை அவர்கள் நிலத்தின் அளவுக்கேற்ப வரிசைப்படுத்தியுள்ளது. இதிலிருந்து, முதல் 30 சதவீத மக்கள் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் சேர்ந்து 50 சதவீத நிலத்தையும், 48 மாவட்டங்களில் 60 சதவீத நிலத்தையும் வைத்திருந்தார்கள் என்று தெரிகிறது.[3]

தேசீய மாதிரி ஆராய்ச்சி (8-வது தடவை) நிலவுரிமையில் உள்ள அதிக ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளது. கிராமக் குடும்பங்களில் 22 சதவீதத்தினர் நிலமற்றவர்கள். தலா 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் பெற்றுள்ள 53 சதவீதக் குடும்பங்கள் மொத்த நிலத்தில் 10 சதவீதத்திற்கு உரியவர்கள். ஆனால், தலா 5 ஏக்கருக்கும் 50 ஏக்கருக்கும் இடையில் நிலத்தைப் பெற்றுள்ள குடும்பங்களில் 24 சதவீதத்தினர் 68 சதவீத நிலத்திற்கு உரியவர்கள். குடும்பங்களில் ஒரு சதவீதத்தினர்தான் 50 ஏக்கருக்குமேல் பெற்று, மொத்தப் பரப்பில் 16 சதவீதத்திற்கு உரியவர்களாய்

[1] 'நவீன இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினைகள்' தொகுதி-I, மேற்கூறியது, பக்கம் 42.

[2] விவசாயச் சீர்திருத்தக் குழு அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டது. பக்கம் 114.

[3] விவசாயப் பொருளாதார நிபுணர்கள் சங்கத்தின் 15-வது மாநாட்டில் (1954) பேராசிரியர் D. R. காட்கில் தமது தலைமைப் பேருரையில் கூறியது. 'பொருளாதாரக் கொள்கையும் முன்னேற்றமும்' 1955, பக்கம் 242 பார்க்க,

உள்ளனர். விவசாய முறையைப் பார்த்தால் 34 சதவீதமுள்ள குடும்பத்தினர் தலா ஓர் ஏக்கருக்குக் குறைவாகவும், 64 சதவீதத்தினர் தலா 5 ஏக்கருக்குக் குறைவாகவும் ஒரு சதவீதத்தினர் மட்டும் தலா 50 ஏக்கருக்கு மேலும் பயிர் செய்கின்றனர்.[1]

நிலத்தில் உழைப்பவர்களில் இரண்டுவிதமான போக்குக் காணப்படுகிறது. பல மாகாணங்களில் சாதாரண விவசாயிகள் மிக அதிகமாகப் பெருகிக்கொண்டுவர, பண்ணையிலும், வயல்களிலும் கூலி வேலை செய்பவர்கள் குறைந்துகொண்டே வருகின்றனர். சொந்த விவசாயம் செய்பவர்கள் தம் நிலத்தை, விவசாயம் செய்யாத லேவாதேவிக்காரனுக்குக் கொடுத்துவிடுகின்றனர். பிறகு அவர்கள் அதை அவனிடமிருந்து மீண்டும் குத்தகைக்குப் பெறுகிறார்கள். வங்காளத்தில் 1891-க்கும், 1921-க்கும் இடையில் சாதாரண விவசாயிகளும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களும் 297 இலட்சத்திலிருந்து 305 இலட்சமாகப் பெருகியிருக்க, பண்ணையிலும் வயல்களிலும் கூலி வேலை செய்பவர்கள் 36 இலட்சத்திலிருந்து 18 இலட்சமாகக் குறைந்துவிட்டனர். மத்திய மாகாணத்தில் இதே காலத்தில், குத்தகை பெறுவோர் 52 சதவீதம் அதிகரித்தனர். விவசாயம் விஸ்தரிக்கப்பட்டு ஜனத்தொகையும் பெருகியதால் நிலத்தின் அளவு சிக்கனமற்றதாக மாற்றப்பட்டுவிட்டது. நிலத்தில் கூலிக்கு வேலை செய்பவர்கள் வேலையிழந்து குயவர்களாகவும், சாலையைப் பழுது பார்ப்பவர்களாகவும், மற்ற வேலைக்காரர்களாகவும் மாறவேண்டியிருந்தது. இறுதியாக அவர்கள் லேவாதேவிக்காரன் கையிலகப்பட்டு ஒரு துண்டு நிலத்தை வாங்க வேண்டியதாயிற்று.[2] இந்தப் பொருளாதாரப் போக்குத்தான் கணிப்பு அறிக்கைகளில் குறிப்பிட்ட வேலையில்லாத மக்கள் தொகை அதிகரித்திருப்பதற்கும் காரணமாகும்.

விவசாய உழைப்பாளிகளின் வகைகள்

விவசாய உழைப்பாளிகளை வயலில் வேலை செய்வோர், சாதாரண உழைப்பாளிகள், திறமை பெற்ற உழைப்பாளிகள் என்று காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு மூன்று வகையாகப் பிரித்திருக்கிறது. வயலில் வேலை செய்வோருள் உழுபவர்களும், அறுவடை செய்பவர்களும், விதைப்பவர்களும், நாற்று நடுபவர்களும் அடங்குவர். இவர்களுள் பெரும்பாலோர் குறிப்பிட்ட பருவங்களில்

[1] 'இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்துகள்' 1936, என்பதில் பக்கம் 705-706-ல் H. D. மாளவியா மேற்கோள் காட்டியது.

[2] 'இந்தியாவில் நிலப்பிரச்சினை' மேலே கூறியது, பக்கம் 217 முதல்.

வேலை செய்பவர்கள்; ஆனால், சிலர் ஆண்டு முழுவதும் வேலை செய்பவர்கள். சாதாரண வேலையாட்கள் வரப்புகள் கட்டுதல், குழிகளை வெட்டுதல், தூர் எடுத்தல் முதலிய வேலைகளைச் செய்வதில் ஈடுபடுகிறார்கள். திறமைபெற்ற உழைப்பாளிகள் என்போர் தச்சர்கள், கொத்தர்கள், கொல்லர்கள் முதலியோர். இவர்களை விவசாயிகள், விவசாய உழைப்பாளிகளைப் போலவே கூலிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். இந்த உழைப்பாளியின் வகைகளில் பெண்களும் குழந்தைகளும் அதிகம் உண்டு. எல்லா வேலைகளையும் சேர்த்துப் பார்த்தால் 1,000 ஆண்களுக்கு 465 பெண்கள் வீதம் இருப்பார்கள். களை பிடுங்குதல், குற்றுதல், அறுவடை செய்தல் போன்ற அதிகத் திறமை வேண்டாத வேலைகளில் பெண்கள் அமர்த்தப்படுகிறார்கள். விவசாயத்தில் குழந்தைகளையும் வேலை செய்யவிடுவது சாதாரண நிகழ்ச்சியாகும். குழந்தைகளைக் களை பிடுங்குதல், குற்றுதல், பயிர்களைக் காவல்காத்தல் முதலிய வேலைகளில் ஏவுவார்கள். இத்தகைய குழந்தைகளின் வயது 10 முதல் 15 வரை இருக்கும். இவர்கள் காலை 6 முதல் மாலையில் இருட்டும் வரையில் வேலை செய்வார்கள்.[1]

பெரிய நிலச்சுவான்தார்கள் அநேகமாக நிலையாக வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கும் 'சார்ந்த' வேலையாட்கள் என்பவர்களுக்கும், விவசாய உழைப்பாளிகளில் பெரும்பான்மையோராக இருக்கும் 'அற்றைக் கூலி' ஆட்களுக்கும் உள்ள வேற்றுமையை விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு தன் அறிக்கையில் எடுத்துக் காட்டுகிறது. இவர்களுக்கிடையில் 'பருவ வேலையாட்கள்' என்னும் ஒரு வகை உழைப்பாளிகள் உண்டு. இவர்களை 'அற்றைக் கூலி' ஆட்களினின்றும் வேறாகப் பிரிப்பது கடினம். 'நிலையான' வேலையாட்களுக்கு நிலத்தில் வசிக்க இடம் கொடுத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலை தரப்படும். அவர்களுக்கு வழக்கப்படி சம்பளம் கொடுக்கப்படும்.

சில இராச்சியங்களில் உள்ள 'சார்ந்த' வேலையாட்களுக்கும், 'அற்றைக் கூலி' ஆட்களுக்கும் உள்ள விகிதத்தை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை காட்டுகிறது.[2]

[1] அறிக்கை, பக்கம் 114-15.

[2] விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு அறிக்கை, தொகுதி-I, 1952, பக்கம் 31.

		மொத்த வேலையாட்களில் அற்றைக்கூலியாட்களின் சதவீதம்	சார்ந்த வேலை யாட்களின் சதவீதம்
A பகுதி			
மேற்கு வங்காளம்	...	94·3	5·7
அசாம்	...	93·8	6·2
பம்பாய்	...	85·7	14·3
சென்னை	...	92.4	7·6
பஞ்சாப்	...	76·5	23·5
B பகுதி			
திருவாங்கூர்-கொச்சி	...	99·9	0·1
ஹைதராபாத்	...	87·2	12·8
பெப்சு	...	26·1	73·9
C பகுதி			
கட்சு	...	100·0	...
குடகு	...	95·3	4·7
பிலாங்பூர்	...	60·0	40·0

விவசாய உழைப்பாளிகளின் பொருளாதார நிலை

விவசாய உழைப்பாளிகளுக்குப் பெரும்பாலும் சம்பளம் தானிய மாகத்தான் கொடுக்கப்படும். அவர்கள் பயிரில் ஒரு பங்கையும், மற்ற வழக்கமான பாக்கிகளையும் பெறுவார்கள். உத்தரப் பிரதேசத்தில் விவசாய உழைப்பாளிகளில் பெரும்பாலோரான சமார்கள் (Chamars) பார்லி விளைச்சலில் 1/13 பாகமும், கோதுமை விளைச்சலில் 1/16 பாக மும் பெறுகிறார்கள். வங்காளத்தில் அறுவடை செய்பவர்கள் தாங்கள் அறுக்கும் 10 சுமைகளுக்கு 1 சுமை வீதம் கூலி பெறுகிறார்கள். வங்காளத்தில் உள்ள 'சார்ந்த' வேலையாட்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் தலைவர்களிடம் கடன் பட்டவர்கள். கடன் வாங்குபவன் அல்லது அவனுடைய குடும்பத்தில் எவனாவது ஒருவன் கடன் கொடுப்பவனுக்கு விவசாய வேலையிலோ பெரும்பாலும் வீட்டு வேலையிலோ உதவுவதற்கு அவனைச் சார்ந்தே இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் கடன் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு மஹிந்தார்கள், கிரிசான்கள் என்று பெயர்கள் உண்டு.[1] இவர் களுக்குக் கூலி ரொக்கமாகவோ, வருடத்திற்கு ரூ. 100 மதிப்புள்ள

[1] மேலே கூறியதில் பக்கம் 182-183,

நெல்லோ கொடுக்கப்படும். ஒவ்வொருவருக்கும் இரண்டு வேளை சாப்பாடும், இரண்டு வேட்டிகளும், இரண்டு துண்டுகளும் கொடுக்கப் படும். 'அற்றைக் கூலி' ஆட்களுக்குத் தினந்தோறும் ரொக்க மாகவோ பொருளாகவோ கூலி கொடுக்கப்படும்.

பம்பாயில் 990 கிராமங்களில் விசாரித்ததில், 233 கிராமங்களில் வெறும் ரொக்கக் கூலியும், 376 கிராமங்களில் தானியக் கூலியும் கொடுப்பது வழக்கம் என்று தெரிந்தது. பொருளாகக் கூலி கொடுத்தால் 5 சேர் (seers) கம்பும், ரொக்கமாகக் கொடுத்தால் நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 அணாவும் செழிப்பான கிராமங்களில் கொடுக்கப் படும்.[1] சென்னையில் அற்றைக் கூலியாட்களுக்கு ரொக்கமோ, பொருளோ நாள் ஒன்றுக்கு 8 அணா முதல் ஒரு ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டது.[2] சார்ந்த வேலையாட்கள் தங்கள் தலைவர் களுக்கன்றி வேறு யாருக்கும் வேலை செய்யக்கூடாது. பீகாரில், சார்ந்த வேலையாள் ஒவ்வொருவனுக்கும் வருட ஆரம்பத்தில் ரூ. 50 முதல் ரூ. 100 வரை முன் பணமாகக் கொடுப்பது வழக்கம். அவன் அத் தொகையைத் திருப்பித் தரும் வரையில் தன் ஆண்டானை விட்டுச் செல்ல முடியாது. வேலை இல்லாவிட்டாலுங்கூடத் தலைவன் கூப்பிடும்போது அவன் பண்ணையில் வந்து இருக்கவேண்டும். இப்போது வேலையில் உள்ள சிலருடைய மூதாதைகள், தங்கள் தலைவர்களிடமிருந்து கொடையாக நிலங்களைப் பெற்றார்கள். எனினும், அந்தத் தலைவர்களோ, அவர்களின் வாரிசுகளோ அவற்றைக் கொடையாக ஒப்புக்கொள்ளாமல் அவர்கள் 'சார்ந்த' வேலையாட்களாக வேலை செய்யாமல் இருந்தால் வெளியேற்றி விடுவதாகப் பயமுறுத்தினர்.[3]

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறளவு வேலை பரவி யிருந்தது. சராசரி ஒரு வருடத்தில் 218 நாட்களும், இதில் விவசாய வேலை 189 நாட்களும், விவசாயமல்லாத வேலை 29 நாட் களும் இருந்தன. ஆக, வேலையாட்கள் சம்பளத்துடன் ஏழு மாதம் பெற்று, 2 மாதம் தாமாக ஏதோ வேலை தேடிக்கொண்டு, மீதி மாதங் களில் வேலையில்லாமல் இருந்தனர். சார்ந்த வேலையாட்கள் தங்கள் தலைவர்களுக்காக 326 நாட்கள் வேலை செய்தனர். அற்றைக் கூலியாட்கள் 200 நாட்களுக்கு மட்டும் வேலை பெற்றனர்.

[1] காங்கிரஸ் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 116.

[2] விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு அறிக்கை, தொகுதி-I, மேலே கூறியது, பக்கம் 114 முதல்.

[3] மேலே கூறியது, பக்கம் 68.

விவசாய உழைப்பாளிகளில் 16 சதவீதத்தினருக்குக் கூலி வேலையே கிடைக்கவில்லை.[1]

சார்ந்த வேலையாட்களின் வேலை நிபந்தனைகளும் சம்பள முறைகளும் இராச்சியத்திற்கு இராச்சியம் வேறுபட்டிருந்தன. நிலையான வேலையாட்கள் பெரும்பாலும் ஆண்கள்; அவர்களுக்கு ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு பெயர் உண்டு. வெவ்வேறு A பகுதி இராச்சியங்களிலும் நிலையான வேலையாட்கள் செய்யும் வெவ்வேறு விவசாய வேலைகளுக்கும் ஏற்ற வருடச் சம்பளம்பற்றிய விரிவான பட்டியல்களை விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு தந்திருக்கிறது. இச் சம்பளங்கள் 6 அணு உதவி வருமானம் உட்பட நாளொன்றுக்கு ரூ. 2—14—0 வரையில் உள்ளன. B பகுதி, C பகுதி இராச்சியங்களுக்கு, சார்ந்த வேலையாட்களின் கூலி வித்தியாசங்கள் மாதம் ரூ. 60-க்கும், ரூ. 15-க்கும் இடையில் உள்ளன.

1940-ல் பம்பாய் இராச்சியத்தில் கோகாக் தாலுக்காவில் 24 கிராமங்களில் 1,592 குடும்பங்களைப்பற்றி நுட்பமாக டாக்டர் M. N. தேசாய் ஆராய்ந்ததில், நீர்ப்பாசனமில்லாத நிலத்தில் வேலை செய்யும் உழைப்பாளிகள் தலா வருடத்திற்கு ரூ. 25-ம், நீர்ப்பாசனம் உள்ள நிலங்களில் ரூ. 31-ம் பெற்றார்கள் என்று தெரிகிறது. இந்த 24 கிராமங்களில், நிலமில்லாத உழைப்பாளிகளில் பெரும்பான்மையோராக உள்ள ஹரிஜனங்கள் சராசரி தலா ரூ. 29 பெற்றார்கள், 'இவர்கள் உலகத்தில் உயிர் வாழ்கிறார்கள் என்பதைவிட மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்பதுதான் பொருந்தும்.[2]

பீரார் கிராமம் ஒன்றில்[3] திரு. J. V. பாவே செய்த ஆராய்ச்சி ஒன்றில் அக்கிராமத்தில் இருந்த 377 குடும்பங்களில், 43·7 சதவீதம் நிலக்கிழார்கள்; 30·7 சதவீதம் விவசாய உழைப்பாளிகள்; 11·6 சதவீதம் வாரக்குடிகள் என்று காட்டுகிறார். நிலையான உழைப்பாளிகள் ஒரு வருட ஒப்பந்தத்தில், மாதம் ரூ. 3 முதல் ரூ. 8 வரையில் கூலிக்கு அமர்த்தப்பட்டனர். 318 வேலையாட்களில் 30 பேர் மட்டும் நிலையான வேலையாட்களாக இருந்தனர். மற்றவர்களுக்கு வேலை

[1] விவசாய உழைப்பாளிக் குடும்பங்களின் பொருளாதார நிலைபற்றி அகில இந்திய ரீதியில் அறிவதற்கு டாக்டர் இராமமூர்த்தியின் 'விவசாய உழைப்பாளிகளும் அவர்கள் எப்படி வேலை செய்து பிழைக்கிறார்கள் என்பதும்' என்ற நூலைப் (தொழிலாளர் அமைச்சுத்துறை, 1954) பார்க்க. மேல் விவரங்களுக்கு விவசாய உழைப்பாளர்கள் விசாரணைக் குழு அறிக்கைகளைக் காண்க.

[2] 'கர்நாடகக் கிராமத்தில் வாழ்க்கையும் வாழ்வும்' 1945.

[3] 'A Survey of Landless Agricultural Labour in Shindurijana Bazar,' in Indian Journal of Social Work, March, 1943.

கிடைப்பது சிறிதும் உறுதியில்லை. இங்கும், பெரும்பாலான உழைப்பாளிகள் தீண்டத்தகாதவர்களாய் இருந்ததால், விவசாய உழைப்பாளியின் பிரச்சினை தீண்டாமையோடு பிணைக்கப்பட்டிருந்தது.

கூலிக்கும் விலைகளுக்கும் உள்ள வித்தியாசம்

வங்காளத்தில் 80 வருடங்களில் கூலிக்கும் அரிசியின் விலைக்கும் உள்ள சம்பந்தம்பற்றி டாக்டர் முகர்ஜி கீழ்க்கண்ட அட்டவணையைத் தருகிறார்:[1]

	1842	1852	1862	1872	1911	1922
சாப்பாடு இல்லாமல் வயலில் வேலை செய்வோர். (அணுக்களில்) ...	1	$1\frac{1}{2}$	2	3	4	4 முதல் 6
அரிசியின் விலை (ரூபாய்க்கு சேர்கள்.) ...	40	30	27·1	22·7	15	5

இந்தக் காலத்தில் பணமாகக் கொடுக்கப்பட்ட கூலி 4 முதல் 6 மடங்கு உயர்ந்தது; அரிசியின் விலை 8 மடங்கு உயர்ந்தது. சுருங்கக் கூறின், உண்மையான கூலி 20 முதல் 50 சதவீதம் வரையில் குறைந்தது. உத்தரப் பிரதேசத்தில் ஐந்தாண்டுக்கொரு முறை கூலி ஆராய்ச்சி அறிக்கையின்படி (1934) சராசரி கூலி நாளுக்கு 3 அணு. 326 கிராமங்களில் கூலி $1\frac{1}{2}$ அணுவாகத்தான் இருந்தது.

கூலிபற்றிய விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழுவின் முடிவுகள் யுத்தப் பிற்கால நிலைமைக்குரியவை. 1926-ல் தென்னிந்தியக் கிராமங்களில் பேராசிரியர் N. G. ரங்கா நடத்திய ஆராய்ச்சியிலிருந்து பஞ்சமர்களில் 9 குடும்பங்களில் 5 போதிய அளவு தானிய உணவு உட்கொள்ளவில்லை என்று தெரிந்தது.[2] தென்னிந்தியக் கிராமங்களில் தாமசும், இராமகிருஷ்ணனும் ஆராய்ந்ததில், நிலமில்லாத உழைப்பாளிகள் தங்கள் பிழைப்புக்கு வேண்டிய வருவாயில் மூன்றில் இரண்டு பங்கைத்தான் சம்பாதித்தார்கள் என்று தெரிந்தது. இரண்டாம் உலகப் போரினால் விவசாய உழைப்பாளிகளின் சம்பளம் மிகவும் உயர்ந்தது. ஆனால், 1939-45-ல் சென்னையில் கூலி 100

[1] மேலே கூறியதில் பக்கம் 222.

[2] காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை, பக்கம் 117.

முதல் 300 சதவீதம் வரை உயர்ந்ததும், நிலமற்ற விவசாயிகளும் பண்ணை வேலையாட்களும் முன்னைவிட அதிகக் கடன்பட்டார்கள்.[1] பேராசிரியர் ஸ்ரீதர் மிஸ்ராவும், பேராசிரியர் வீர் பகதூர் சிங்கும் தனித் தனியாக நடத்திய இரண்டு ஆராய்ச்சிகளின் அடிப்படையில் கிடைத்த எண்களைக் காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழு மேற்கோள் காட்டுவதிலிருந்து, 1939-47-ல் விவசாயக் கூலி 260 முதல் 360 சதவீதம் வரை (1939 = 100), விவசாய நிலத்திற்கேற்ப உயர்ந்தது என்று தெரிகிறது. ஆனால், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்க்கைச் செலவு 356 முதல் 764% வரை உயர்ந்ததால் இதனால் பயனில்லாமல் போயிற்று. சில சமயங்களில் கூலியானது, விலைகளுக்கும் செலவுகளுக்கும் 276% ஆக மிகவும் வித்தியாசப் பட்டிருந்தது.[2]

வங்காளப் பஞ்ச விசாரணைக் குழுவின் கேள்விப் பட்டியலுக்குப் பல மாகாண அரசாங்கங்கள் அளித்த விடையில், யுத்தத்திற்குப் பிறகு கூலி விகிதங்கள் குறைந்துவிட்டதற்குக் காரணம், படைக் கலைப்பும் யுத்த காலத் தொழில்களில் கூலியாட்களுக்குக் கிராக்கி குறைந்துவிட்டதும் ஆகும் என்று கூறப்பட்டது. இது இறுதியாக விவசாய உழைப்பாளிகளையும் பாதித்திருக்கக்கூடும். விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழு ஒவ்வோர் இராச்சியத்திலும் கூலியைப் பற்றி விரிவாக நடத்திய ஆராய்ச்சியால், விலை உயர்வுக்குப் பின் கூலிகள் குறையாமலிருக்கும் இடங்களில் அவை வீதாச்சாரப்படி உயரவில்லை என்று தெரிகிறது. அக்குழு முடிவில் பின்வருமாறு கூறுகிறது: ‘சில இராச்சியங்களில், யுத்தத்திற்கு முன்பு விவசாயக் கூலி மிகவும் குறைவாக இருந்ததால், 1949-50-ல் யுத்தத்திற்கு முன்பு இருந்த விகிதங்களைவிடக் கூலி உயர்வு அதிகமாயிருந்தும் கூலி அப்படி ஒன்றும் அதிகமாகிவிடவில்லை. பீகார், ஒரிசா, மத்தியப் பிரதேசம் முதலிய இராச்சியங்களில் இவ்வாறுதான் இருந்தது. மேற்கூறிய வரையறைகளுக்குட்பட்டு அசாம், பீகார், பம்பாய், ஒரிசா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றில் 1938-39-க்கும், 1949-50-க்கும் இடையில் சில முக்கியமான பொருள்களின் விலை உயர்வுக்கேற்பக் கூலியும் பொதுவாக உயர்ந்தது என்று தெரிகிறது. ஆனால், மத்தியப் பிரதேசம், சென்னை, மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் விவசாயக் கூலி விகிதங்கள் விலைகளைவிட மிகக் குறைவாயிருந்தன.[3]

[1] நாராயணசாமி நாயுடு, மேலே கூறியது, பக்கம் 62.

[2] அறிக்கை, பக்கங்கள் 118-19.

[3] அறிக்கை, தொகுதி-I, மேற்கூறியதில் பக்கம் 43.

இந்தியாவில் நில அடிமை முறை

இந்தியாவில் விவசாய அமைப்பின் கீழ்க்கோடியில் அடிமைகளைவிட அதிக வித்தியாசமில்லாத நிலையில் உள்ள உழைப்பாளிகள் உள்ளனர். இந்தியாவில் கீழ் வகுப்பாரும் ஒடுக்கப்பட்டவர்களும் அதிகமாக உள்ள இடங்களில் விவசாயத் துறையில் அடிமை முறை அதிகம் இருக்கிறது. பம்பாய், சென்னை, மலபார், கொச்சி, மத்தியப் பிரதேசம், மத்திய இந்தியா, சோட்டா நாகபுரி ஆகிய இடங்களில் பழங்குடிகள் அதிகம் இருக்கின்றனர். இவ்விடங்களில் எல்லாம், விவசாய உழைப்பாளி அநேகமாக அடிமை போலவே இருக்கிறான். அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்று அடிமை உழைப்பைப் பின்வருமாறு வருணிக்கிறது: 'கஷ்ட காலத்தில் சாதாரண விவசாய உழைப்பாளி, தன் சொந்த சுதந்திரத்தை இழக்கவேண்டியிருக்கிறது. அக்காலத்தில் அவன் தனக்கு வேண்டிய ஒரு சிறிய தொகைக்காகத் தனக்குக் கடன் கொடுத்தவனுக்கு அவன் உழைக்கச் சம்மதிக்கிறான். பணம் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை; அல்லது அதைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணமும் இல்லை. ஆனால், கடன் வாங்கியவன் தனக்குக் கடன் கொடுத்தவனுக்கு வாழ்க்கை முழுவதும் அடிமையாக இருந்துவிடுகிறான். அவன், தான் செய்யும் வேலைக்கு அரை வயிறு சோறு பெறுகிறான்; எண்ணத்தினாலும் செயலாலும் அவன் இடைக் காலத்தில் வாழ்ந்த நில அடிமை போலவே இருக்கிறான்.'[1] இந்த விவசாய அடிமை முறை சில இடங்களில் மிக ஒழுங்காக அமைந்திருப்பதால் அதற்குத் தனிப்பெயர் உண்டாயிருக்கிறது. உதாரணமாக, குஜராத்தில் ஹாலி, தென்பீகாரில் கைமுதி, வடபீகாரில் ஜனௌரி, ஒரிசாவில் கோதி, தமிழ்நாட்டில் பண்ணையாள் பத்திரம், ஆந்திராவில் காசி-குள்ளு, ஹைதராபாத்தில் பாகேலா, அயோத்தியில் சன்வாக், மத்திய இந்தியாவில் ஹாரவா, கருனாடகத்தில் ஜீதா, மத்தியப் பிரதேசத்தில் பரசாலியா என்று இதற்குப் பெயர்கள் வழங்குகின்றன.[2]

பம்பாய் இராச்சியத்தில் டுப்ளாக்கள், சோளிகள் என்போர் பல தலைமுறைகளாகத் தங்கள் தலைவர்கள் வீட்டில் அடிமைகளாக உழைத்துவருகிறார்கள். அவர்கள் தங்களுடைய திருமணச் செலவுக்காகக் கடன் வாங்கி, கடன் தீரும் வரையில் அவர்கள்

[1] டிங்கர் தேசாய் 'இந்தியாவில் விவசாயத்தில் அடிமை முறை' (Indian Sociologist, July, 1942) என்ற கட்டுரையில் காண்க.

[2] மேலே கூறியது: இவ்வகை வேலையாட்கள் பெயர்களை விரிவாக அறிய, விவசாய உழைப்பாளர் விசாரணைக் குழு அறிக்கை, தொகுதி-I, மேற் கூறியது, பக்கம் 32 பார்க்க.

ஊழியம் செய்வதாக ஒப்புக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்களுடைய எஜமானர்கள் அவர்களுக்கு உணவும் உடையும் அளிப்பார்கள். இது போலவே, சென்னை மாகாணத்தின் கிழக்குக் கரையில் உள்ள விவசாய உழைப்பாளிகளுள் பறையர்கள் படியாட்கள் எனப்படுவர். படியாள் என்பவன் பரம்பரையாக ஒரு நிலக்கிழாருக்குக் கடன்பட்டு, அவரைச் சார்ந்திருப்பவன். தன் கலியாணத்திற்கோ அல்லது தன் பிள்ளை, பெண் ஆகியவர்களின் கலியாணத்திற்கோ அவன் கடன் வாங்கியிருப்பான். கடன் தீரும் வரையில் கடன்பட்டவன் கடன் கொடுத்தவனுக்கு உழைப்பதாக ஒப்புக்கொண்டிருப்பான். ஆனால், இக் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. இதற்குப் பதில் படியாட்கள் நிலத்தோடு பிரியாதவர்களாய், அதை விற்றுவிட்ட பிறகும் அல்லது நிலத்துக்குரியவன் இறந்துவிட்ட பிறகும் அதனோடு சேர்ந்து செல்வார்கள். சென்னையில் படியாட்களுக்கு ரூ. 3—12—0 மதிப்புள்ள பண்டம் மாதக் கூலியாகக் கொடுக்கப்படும். ஒரிசாவில் மூன்று வகையான கூலியாட்கள் இருக்கிறார்கள்: (1) சாகர் (Chaker) அல்லது பரமசியா (Baramasiya) உழைப்பாளி; இவனுக்கு 12 மாதங்களுக்கு வேலையும், உணவு, தங்குவதற்கு இடம் ஆகியவையும் ரொக்கமாக ரூ. 24-ம் கொடுக்கப்படும். இவனுடைய தலைவனிடமிருந்து இவனுடைய மூதாதை பணம் கடன் வாங்கியிருப்பான். (2) நாக முலியா என்பவன்; இவனும் வருடம் முழுவதும் வேலை செய்து, உணவுக்கும் உறையுளுக்கும் பதிலாக 4 சேர் நெல்லும், குத்தகை கொடுக்காமல் உழுவதற்கு ஒரு துண்டு நிலமும் பெறுவான். (3) தண்ட முலியா என்பவன்; இவன் ஒருசிறிய காலத்திற்குக் குறிப்பிட்ட கூலிக்கு வேலை செய்பவன். பீகாரில் கமியாக்கள் அல்லது ஒப்பந்த அடிமைகள் எனப்படுவோர், பணத்தைக் கடன் வாங்கித் தலைவர்கள் சொல்லும் எந்த இழிவான வேலையையும் செய்ய ஒப்புக்கொள்வார்கள். இந்த ஒடுக்கப்பட்ட சாதியாருக்கு நிலமோ பாதுகாப்போ இல்லை. இவர்கள் தங்களுக்குக் கடன் தேவையானபோது, அதற்கு ஈடாகத் தங்கள் உழைப்பை அளிப்பதாக ஒப்புக்கொள்வார்கள். அதுமட்டுமன்றி, இவர்களுடைய மனைவிமாரும் இவர்களைச் சார்ந்தவர்களுங்கூட உழைப்பதாக ஒப்புக்கொள்வார்கள்.[1]

1929-ல் திரு. முக்தியார் தென் குஜராத்தில் அட்கம் கிராமத்தில் நடத்திய பொருளாதார ஆராய்ச்சியினால் டுப்ளா சாதியைச் சேர்ந்த ஹாலிகள் எனப்படும் நிலையான உழைப்பாளிகள், தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தங்கள் வாழ்நாள் முழுவதும் கடன்காரர்களுக்கு ஊழியம் செய்கிறார்கள் என்று

[1] R. முகர்ஜி, மேலே கூறியது, பக்கம் 227 முதல்.

தெரிகிறது. ஹாலிகள் பண்டமாகவோ, சில இடங்களில் ரொக்க மாகவோ கூலி பெறுகிருர்கள். அவர்களுடைய மனைவிமார்கள், அவர்கள் எஜமானர்கள் வீட்டில் வேலை செய்வார்கள்; அவர்களுடைய ஆண் பிள்ளைகள் ஆடு மாடுகளை மேய்ப்பவர்களாக வேலை செய்வார்கள். ஒரு ஹாலிக் குடும்பம் பெறும் கூலியின் பண மதிப்பு நாளுக்கு $6\frac{1}{2}$ அணு ஆகிறது. ஒரு ஹாலி ஒரு நாளில் செய்யும் வேலையானது, சுதந்திரமான உழைப்பாளி செய்யும் வேலையைவிடக் குறைவு; ஆனுல், அவன் பெறும் கூலி அதிகம்.[1] ஹாலி முறை சிக்கனமற்றதும் திறமையற்றதும் ஆகும். ஆனுல், சுதந்திரமான உழைப்பாளிகள் பெரிய ஊர்களுக்கும் நகரங்களுக்கும் சென்று விடுவதால், பெரிய பண்ணையாட்கள் ஹாலிகளையே வேலைக்கு வைத்துக்கொள்கிருர்கள். இவ்வாறே திரு. ஜே. பி. சுக்லா, குஜராத்தில் எல்பாட் தாலுக்காவில் 14 கிராமங்களை ஆராய்ந்து, அங்கும் இந்த முறை இருப்பதைக் காட்டுகிருர். இந்த ஹாலிகள் தங்கள் கடன்காரர்களுக்குத் தங்கள் வாழ்நாளில் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் ஒவ்வொரு வருடமும் உழைத்துக்கொண்டே வருகிருர்கள். ஹாலியை ஒப்பந்த அடிமை என்பார்கள். இவன் சட்டப்படிச் சுதந்திரமானவன். ஆனுல், காரியத்தில் அடிமை.[2] இவன் சூரத் ஜில்லாவில் கிராமப் பொருளாதார முறையின் முதுகெலும்பு போன்றவன். 1921-ல் பம்பாய் மாகாணத்தில் உள்ள 84,000 ஹாலிகளில், 57,000 பேர் அல்லது 67 சதவீதம் சூரத் ஜில்லாவிலேயே இருந்தார்கள்.[3] சுமந்த் மேத்தா கூறியுள்ளபடி, குஜராத்தில் தபதி நதிப் பகுதியில் அரை இலட்சம் அடிமைகள் இருக்கிருர்கள். 'ஹாலிகள் ஒவ்வொரு வருடமும் உழைத்துக் கொண்டே இருக்கிருர்கள். அவர்கள் இந்த அடிமைத்தனத்திலிருந்து தப்பவேண்டுமானுல், சாவது ஒரு வழி; அல்லது எங்காவது தொலைவிலுள்ள இடத்திற்கு ஓடிவிடுவது மற்ருெரு

[1] மேலே கூறியதில் பக்கம் 161 முதல் ஒப்பிடுக: இவர்கள் தங்கள் சௌகரியம் போல வேலையில் இருக்க முடியாது. ஆனுல், நிலையான எஸ்டேட் வேலையாட்களாக, பரம்பரையாகப் பெரிய நிலக்கிழார்களால் வைத்துக்கொள்ளப்பட்டு, வீடும் உணவும் அளிக்கப்படுவார்கள். இவர்கள் தம் வேலையை விட்டுவிட்டு வேறு வேலையைத் தேடிக்கொள்ள முடியாது. இந்த ஹாலிகளின் நிலைக்கும், அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு முன்பு அங்குத் தோட்டங்களில் வேலை செய்த அடிமைகளின் நிலைக்கும் அநேகமாக வேற்றுமை இல்லை. ஆனுல், நீதிமன்றங்கள் மட்டும் ஆண்டானுக்கு அடிமை மீதும், அவன் ஊழியத்தின்மீதும் உள்ள உரிமையை ஒப்புக்கொள்வதில்லை. ஆனுல், இந்த நாட்டில் – மற்ற நாடுகளைவிட அதிகமாக – நீதிமன்றங்களில் பணக்காரர்களுக்கு வாய்ப்பிருப்பதால், இந்த வித்தியாசம் அதிக முக்கிய மன்று. இந்த ஹாலிகள் சட்டப்படிச் சுதந்திரமானவர்கள். ஆனுல், காரியத்தில் அடிமைகள்' (கணிப்பு அறிக்கை, பம்பாய் மாகாணம், 1921, பகுதி I, பக்கங்கள் 219—23.

[2] முற்கூறியதில் பக்கம் 117 முதல்.

[3] பம்பாய் கணிப்பு அறிக்கை, 1921, பகுதி I, பக்கம் 20,

வழி'.[1] டாக்டர் பகத், தாணு மாவட்டத்தில் பிவாந்தி தாலுக்காவில் சில கிராமங்களை ஆராய்ந்து இதே கதையைக் கூறுகிறார். அவர், வார்லி, கட்காரி சமூகத்தினர் கலியாணத்திற்காகக் கடன் வாங்கி, வருடத்திற்குப் பத்து ரூபாய் வீதம் மதிப்புள்ள வேலை செய்வதாகத் தங்கள் தலைவர்களிடம் ஒப்புக்கொள்கிறார்கள்.[2]

கட்டாய ஊழியம்

வட இந்தியாவில் விவசாய உழைப்பாளிகளைப்பற்றி ஆராய்ந்த டாக்டர் லொரென்சோ, அங்குப் பல இராச்சியங்களில் உள்ள பேகார் எனப்படும் கட்டாய ஊழிய முறையின் பல வகைகளை விவரிக்கிறார். இவற்றுள் சாதாரண வகைகள்: (அ) உழுவதற்கு ஹல்பேத்; (ஆ) களை பிடுங்குவதற்கும் நீர் பாய்ச்சுவதற்கும் கோடல்பேத்; (இ) தானிய அறுவடைக்கு தான்பேத்; (ஈ) போரடிப்பதற்கு மிசேனிபேத்; (உ) நிலக்கிழாரின் நிலத்தில் ஒரு குடிசையில் வாழ்வதற்காக இரண்டு மூன்று நாட்கள் ஊழியம் செய்யும் சக்ரன் பேகார் என்பவை. பேராசிரியர் ஸ்ரீதர் மிஸ்ரா காங்கிரஸ் விவசாயச் சீர்திருத்தக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கும்போது, 'நிலக்கிழார் தம் நிலத்தில் எங்களை வசிக்க அனுமதிக்கிறார்; அதற்காக நாங்கள் அவருக்கு உழைக்க வேண்டும்' என்று சாதாரணமாகக் கூறப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

நாடு முழுவதிலும் கட்டாய ஊழியம் இருப்பதாகத் தெரிகிறது. தாணு ஜில்லாவில் உள்ள பழங்குடிகளைப்பற்றி ஓர் அதிகாரி பின் வருமாறு கூறுகிறார்: "காட்டுப் பகுதிகளில் 'கத்' (khad) முறையில் விவசாயம் செய்யும் வாரக்குடிகள் எல்லோரும் (அதாவது பயிரில் பங்கு கொடுக்காமல் பண்டமாக ஒரு குறிப்பிட்ட குத்தகையைக் கொடுப்பவர்கள்), தங்கள் நிலக்கிழார்களுக்கு உழைப்பதற்காகக் கட்டுப்பட்டவர்கள்......அவர்கள் மறுத்தாலோ, தாமதம் செய்தாலோ, தாக்கவோ அடிக்கவோ படுவர்......மக்களைத் தூண்களில் கட்டிப்போட்டுச் சவுக்கினால் அடிப்பதுண்டு என்று நம்பத் தகுந்த தகவல் கிடைத்தது. இப்படி நடந்ததற்கு நான் சான்று கூற முடியும். முற்காலத்தில் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்னும்

[1] J. B. சுக்லா, மேற்கூறியதில் பக்கம் 118. M. L. தந்த்வாலா தலைமையில் சில வருடங்களுக்கு முன்பு பம்பாய் அரசாங்கத்தால் ஒரு குழு அமைக்கப் பட்டு, ஹாலி முறைபற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அது இன்னும் வெளிவரவில்லை.

[2] மேலே கூறியது, பக்கம் 212.

வதந்தியும் உண்டு.''[1] அநேகமாக எல்லா இராச்சியங்களிலும் இவ்வாறு கட்டாய ஊழியத்தை விவசாயம் செய்யும் வாரக்குடிகளிடமிருந்து பெறும் வழக்கம் இருக்கிறது.

பேகார் பிரச்சினையை விவசாய உழைப்பாளிகள் விசாரணைக் குழு விளக்கி, அதை 'விருப்பமில்லாமல் செய்யும் ஊழியம்' (involuntary labour) என்றும், அது நம் விவசாயப் பொருளாதாரத்தில் உள்ள ஒரு தனி அமிசம் என்றும் கூறுகிறது. சார்ந்த வேலையாட்கள் உள்ள இடங்களில் பொதுவாக இது இருக்கிறது. சார்ந்த வேலையாட்கள் நீண்ட காலம் வேலையில் இருக்க வேண்டும் என்பதற்காக நிலக்கிழார்கள் வட்டியில்லாமல் கடன் கொடுப்பது அல்லது குத்தகையில்லாமல் நிலத்தையளிப்பது வழக்கமாக இருக்கிறது. 'கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத வேலையாட்களின் நிலையைப் பயன்படுத்தி, அவர்களிடம் சிறிதளவு கூலிக்கோ, கூலியே இல்லாமலோ கட்டாயமாக வேலை வாங்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு சில இராச்சியங்களில் ஒருவிதமான ஒப்பந்த அடிமை முறை இருந்து வருகிறது.'[2]

பேகார் அல்லது வேத் (veth — கட்டாய ஊழியம்) அன்றி, அப்வாப்கள் அல்லது சட்ட விரோதமான தொகைகளை வற்புறுத்திப் பெறுதல் வங்காளத்திலும் பீகாரிலும் இருக்கிறது. சில சமயங்களில் இது திருமண வரியாகவும், சமூகக் குற்றங்களுக்கு அபராதமாகவும், சில தொழில்களைச் செய்வதற்கு வரிகளாகவும் வாங்கப்படுகிறது. விவசாயிகளின் மிகக் குறைவான வருவாயில் பெரும்பகுதி இவற்றிற்காகப் போய்விடுகிறது. அப்வாப் என்பது பணத்தைப் பறிப்பதற்கு மட்டுமன்றி, உடலை வருத்துவதற்கும் உபயோகிக்கப்படுகிறது. ஒரு செட்டில்மென்டு அறிக்கையில், 'ராஜ்சாஹியில் நிலக்கிழார்களுக்கு நீதி வழங்கவும் வரிகள் விதிக்கவும் பூரண அதிகாரம் இருக்கிறது' என்று கூறப்படுகிறது. மற்றோர் அறிக்கையில் 'பாப்னாவின் ஒதுக்குப் புறங்களில் ஜமீந்தார்கள் இன்னும் அபராதம் விதிக்கவும், சில சமயங்களில் தம்மால் தண்டிக்கப்பட்டவர்களைச் சிறை செய்யவும், நீதிபதிகள் போல

[1] மேலே கூறிய 'இந்தியாவில் விவசாயத்தில் அடிமை முறை' என்பதில் திரு. தேசாய் மேற்கோள் காட்டியது. ஒப்பிடுக: 'தனியாமாக்களின் (எஜமானர்கள்) ஒற்றுமையினால், ஒரு தனியாமாவை விட்டுப்பிரிந்த ஹாலியை மற்றொரு தனியாமா ஏற்றுக்கொள்ளமாட்டார். தஞ்சாவூரில் பண்ணையாட்களைப்பற்றி விசாரித்தபோது, அங்கும் இதேபோல எஜமானர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையினால், பண்ணையாட்கள் ஒரு தலைவனை விட்டு மற்றொரு தலைவனிடம் செல்ல முடியாது' (காங்கிரஸ் சீர்திருத்தக் குழு அறிக்கை, பக்கம் 129).

[2] அறிக்கை, தொகுதி I, பக்கம் 45.

அதிகாரம் பெருமலேயே வேலை செய்து வருகிருர்கள்.' இவை போதாவென்று கடன் கொடுப்பவர்கள் விவசாயிகளைச் சிறிது சிறிதாக நிலத்தைவிட்டு அகற்றும் வழக்கமும் இருக்கிறது. இதனுல், பழங்குடிகள் அடிமைக் குடிகளாக மாறி, கட்டாய ஊழியம் செய்து, சட்ட விரோதமான தொகைகளைக் கட்டாயமாகச் செலுத்த வேண்டியவர்களாகிருர்கள். இவ்வாறு இந்தியாவில் விவசாயத்தில் அடிமை முறை சாகாமல் குற்றுயிரோடு இருந்துவருகிறது. இது வரலாற்று இடைக்காலத்தின் பழஞ்சின்னமாகும். அன்றியும், இக்கால இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையில் உள்ள ஒரு பெரிய மாசும் ஆகும்.

இந்திய அரசியல் சட்டத்தில் கட்டாய ஊழியத்திற் கெதிராகச் சட்டப்படிப் பாதுகாப்பளிக்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கிறது. 23 (1) ஆம் பிரிவு கட்டாய ஊழியம் கூடாதென்று தடை விதிக்கிறது; அப்படிச் செய்தால் இந்தியக் குற்றச் சட்டத் தின்படி அது குற்றமாகும். விவசாய உழைப்பாளிகள் விசாரணைக் குழு, இந்த உத்தரவாதம் ஓரளவு பயனற்றது என்பதை ஒத்துக் கொள்கிறது. இக்குழு பல இராச்சியங்களில் 74 மாதிரிக் கிராமங் களில், ஏதாவதொருவிதமான கட்டாய ஊழியம் இருப்பதாக அறிவித்தது.[1]

குறைந்தபட்சக் கூலி

வேலையாட்களுக்குச் சமூகப் பாதுகாப்பாக ஒரு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பது விரும்பத்தக்கதா என்று 1943-ல் நடந்த முக்கூட்டுத் தொழில் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. இம் மாநாடு செய்த சிபாரிசின்படி, இந்திய அரசாங்கம் விவசாய வேலை யாட்களின் நிலைபற்றி ஆராயத் தொடங்கியது. 1948-ல் ஒரு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது 'பட்டியலின் பகுதி II-ல் குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு மூன்று வருடங்கள் முடிவதற்குள்ளும், மற்ற வேலைகளுக்கு இரண்டு வருடங்களுக்குள்ளும், பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள வேலைகளில் அமர்த்தப்படும் எல்லோருக்கும் அந்தந்த அரசாங்கம் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்க வேண்டும்' என்று ஏற்பாடு செய்தது. பட்டியல் II, விவசாயம் அல்லது எந்தவிதமான பயிர்தொழிலையும் (நிலத்தை உழுவது, மாட்டுப் பண்ணை, மாடுகளை வளர்த்தல் முதலியவை உட்பட) குறிப்பிடுகிறது. இதற்கு முதல் காரியமாக, இந்திய அரசாங்கம் 1949-ல், 1948 ஆண்டின் குறைந்தபட்சக்

[1] அறிக்கை, தொகுதி-I, பக்கம் 47.

கூலிச் சட்டத்தின்படி கூலியை நிர்ணயிக்க நடவடிக்கைகளை எடுப்பதற்காக, விவசாய வேலையாட்களின் நிலையை இந்தியா முழுவதும் ஆராயத் தொடங்கியது. சட்டத்தில் குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள்ளாக இவ்வாராய்ச்சி முடிவடையாததால், சட்டத்தைத் திருத்தி 1953 முடிவு வரையிலும், பிறகு 1954 முடிவு வரையிலும் காலம் நீடிக்கப்பட்டது. இப்போது காலக்கெடுவே நீக்கப்பட்டுச் சட்டப்படி எப்பொழுது வேண்டுமானாலும் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கலாம். மேற்கூறிய அறிக்கையின்படி, பஞ்சாப், டில்லி, பீகார், உத்தரப் பிரதேசம் உட்பட ஒன்பது இராச்சியங்களில் இதுவரையில் குறைந்தபட்சக் கூலி வரையறுக்கப்பட்டுள்ளது. அங்கங்குள்ள நிலைமைகளைப் பொறுத்தும், வேலையைப் பொறுத்தும் ரூ. 2 முதல் அணு 12 வரை ஒவ்வோர் இராச்சியத்திலும் ஒவ்வொரு விதமாகக் கூலி வேறுபடுகிறது. விவசாயத்தில் குறைந்தபட்சக் கூலி விதியைக் கடைப்பிடிப்பதில் உள்ள சங்கடங்கள் யாவரும் அறிந்தவையே. தன் சொந்த நிலத்தில் வேலை செய்யும் ஒரு சிறிய விவசாயிக்கும், விவசாய உழைப்பாளிக்கும் உள்ள வித்தியாசம் அதிகம் இல்லை. ஒரே வேலையாள் வெவ்வேறு வேலை செய்து வெவ்வேறளவு கூலி பெறுகிறான். தொழில்களைவிட விவசாயத்தில் வேலை செய்யும் ஆட்கள் மிக அதிகம். இவர்கள் நாடு முழுவதிலும் நாம் எளிதில் செல்லக்கூடிய இடங்களிலும், செல்ல முடியாத இடங்களிலும் சிதறிக் கிடக்கிறார்கள். இவர்களைத் தொழிற் சங்கங்களில் ஒன்றாகத் திரட்டுவதும் சிரமம். சட்டத்தை மீறுபவர்களைக் கண்டு பிடிப்பதற்குத் திறமையாக மேற்பார்வை செய்வதும் கடினம். கட்டுக்கோப்பாக இல்லாத விவசாயப் பொருளாதாரத்தில், நமக்குத் தெரிந்த கணக்கு முறைகள்படி செலவுகளைக் கணக்கிடுவதும் கடினம். உழைப்புச் செலவை அதிகரிப்பதால் விவசாயத்தில் திறமை குறையக்கூடும். இறுதியாக, நாட்டில் ஒரு பகுதியில் அதிகக் கூலி கிடைக்கும்போது, உழைப்பாளிகள் அங்குச் செல்வதால், மற்றப் பகுதிகளில் உழைப்பாளிகள் கிடைக்காமல் போகலாம்.

முதல் திட்டத்தில் விவசாய உழைப்பாளர்

நிலையான வேலையின்றி அடிக்கடி சமூக சம்பந்தமான இடையூறுகளால் துன்புற்றுக்கொண்டிருக்கும் மிகுதியான விவசாய உழைப்பாளிகள் இருப்பது, விவசாய முறைக்கு ஒரு பெருங்குறை என்றும், நிலைபேறற்ற தன்மையை யளிக்கிறதென்றும் திட்டக் குழு கருதியது. விவசாய அபிவிருத்தியும் நிலச் சீர்திருத்தமும் இவர்களுக்கு அதிக வேலை கிடைக்கும்படி செய்யும் என்று அக்குழு நம்பியது.

பெரிய பண்ணைகளில் குறைந்த கூலி உள்ள இடங்களில் விவசாய உழைப்பாளிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை விதிப்பதும், தீவிர அபிவிருத்திக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்சக் கூலியை விதிப்பதும், அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு மிக அவசியம் என்றும், அதற்கு அதிக முதன்மை யளிக்க வேண்டுமென்றும் அக்குழு கூறியது.[1] விவசாய உழைப்பாளிகளைப் புதிதாக மீட்கப்பட்ட நிலங்களிலும், பயிர் செய்யத்தக்க தரிசு நிலங்களிலும் கூட்டுறவு முறையில் குடியேற்றுவதற்கு ரூ. 2 கோடி அளிக்கப்பட்டது. பிறகு இத்தொகை ரூ. 1·5 கோடியாகக் குறைக்கப்பட்டது. ஆனால், உண்மையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1 கோடிதான். இதில் மூன்றில் இரண்டு பங்கு உத்தரப் பிரதேசத்தில் 10 ஜில்லாக்களிலும், ஒரு பகுதி போபாலில் உள்ள மத்திய இயந்திரப் பண்ணையிலும் செலவிடப்பட்டது. குடியேற்றம் எதிர்பார்த்த அளவு நிறைவேறவில்லை என்பதை அக்குழு ஒத்துக்கொண்டது.[2] எல்லா இராச்சியங்களிலும் முதல் திட்டக் காலத்தில் குறைந்த பட்சக்கூலி வரையறுக்கப்பட்டது; இரண்டாம் திட்டம் எல்லா இராச்சியங்களிலும் இதை நடத்தவேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது.

நிலங்களுக்குக் கீழ் வரம்பும் உச்ச வரம்பும்

பேராசிரியர் காட்கில், நிலத்திற்கு உச்ச வரம்பு விதிப்பதற்கு மிகத் திறமையாகக் காரணங்களைச் சுருக்கித் தருகிறார்: 'எல்லாச் சாதனங்களையும்விட மிகவும் குறைந்தது நிலம்தான். ஆனால், அதைப் பெற உரிமை கோருவோர் மிக அதிகம். மிக முக்கியமான காரணங்கள் இருந்தாலொழியத் தனிப்பட்ட சிலர் கையில் நிலத்தை விட்டுவைப்பது மிகவும் அநீதியாகும். மேலும், நிலம், தொழிலாளர், மூலதனம் ஆகியவை உள்ள நிலையைக் கருதிப் பெரிய நிலங்களுக்கு மட்டும் விசேஷ நன்மை இருக்கும்படியாக முதலாளித்துவ முறையில் அதிக உற்பத்தி செய்ய ஆதரவளிப்பது விரும்பத்தகாதது. அதிக மூலதனத்தை உபயோகிக்காமல், மிகப் பெரிய தனிப்பட்ட நிலங்களைக் கூலியாட்களைக் கொண்டு பயிர் செய்வது விசேஷமாகப் பயன் தராது. மேலும், பேரளவு நிருவாகத்தின் பொருளாதார நன்மை எப்படி இருப்பினும், நம் நாட்டுப் புறங்களில் ஜனநெருக்கமுள்ள நிலையில், அந்நிலங்கள் தனிப்பட்ட குடும்பத்தையன்றி விவசாயம் செய்யும் கூட்டுறவு அல்லது சமூகச் சங்கங்களைச் சார்ந்

[1] விவரங்களை 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' அத். XIII-ல் பார்க்க.

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மறு பரிசீலனை' மேலே கூறியது, பக்கம் 330.

திருக்க வேண்டும்.' 'நிலத்தின் பரப்பைச் சமூகக் கொள்கையின்படி உடனே மாற்றிப் பங்கிட வேண்டுமானால், ஓரளவு உச்ச வரம்பு விதிப்பது இறுதியாக அவசியமாகும்.'[1] நிலத்தின் அளவு குறைந்து விடாமல் இருக்கக் கீழ்வரம்பு விதிப்பதும் அவசியம். ஆனால், கீழ்வரம்பு மேல்வரம்புகள் கண்டிப்பாக இருக்கும்படி நிர்ணயிக்கப்பட முடியாது. ஏனெனின், இவை ஒவ்வொரு பிரதேசத்திற்கும் நிலத்தின் தரத்தையும், பயிரின் தன்மையைப் பொறுத்தும், நிலம் அமைந்துள்ள இடத்தைப் பொறுத்தும் வித்தியாசப்படும். நிலமற்ற உழவர்கள் பலர் இருக்கும்போது, நிலத்தை மாற்றிப் பங்கிடவேண்டுமென்று மக்கள் கிளர்ச்சி செய்வதில் வியப்பொன்றுமில்லை. இக்கோரிக்கை இப்பொழுது பூதான இயக்கம் பரவி வருவதால் மேலும் வளர்ந்து வருகிறது.

திட்டக் குழுவும் தேசீய அபிவிருத்திக் குழுவும் உச்ச வரம்பு விதிக்கும் கொள்கையை ஒப்புக்கொண்டிருப்பினும், இராச்சியங்கள் இதைப்பற்றி அவ்வளவு உற்சாகமாக இல்லை. நிலச் சீர்திருத்தக் குழுவினால் அமைக்கப்பட்ட நிலங்களின் அளவு பற்றிய குழு, மூன்று குடும்பங்களின் நிலங்களுக்குச் சமமான உச்ச வரம்பைச் சிபாரிசு செய்துள்ளது. ஒரு குடும்ப நிலம் என்பது வருடத்திற்கு மொத்த வருமானம் ரூ. 1,600 அல்லது (குடும்பத்தில் உள்ளவர்கள் செய்யும் வேலைக்கு அளிக்கப்படும் ஊதியம் உட்பட) வருட நிகர வருமானம் ரூ. 1,200 தரும் அளவுள்ள நிலம் என்று விளக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு மேல் உள்ள நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, இடம் பெயர்ந்த வாரக்குடிகள், நிலமற்ற உழவர்கள், சிக்கனமற்ற உழவு செய்வோர் ஆகியவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.[2] தோட்டங்கள் (plantations) இவ்விதிக்கு விலக்காகும். இக்குழு, கீழ் வரம்புபற்றி ஒருமுகமான முடிவுக்கு வர முடியவில்லை. சில உறுப்பினர்கள், 'கீழ் வரம்புக்குக் குறைந்த நிலங்களைத் தனிப்பட்டவர்கள் பயிர் செய்யக் கூடாதென்று பொதுவாகத் தடை விதித்தால், அது ஏற்கெனவே நிலத்தைப் பெறுவதற்குள்ள குறைந்த வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துவதாகும். நிலமற்ற பெரும்பாலோரை நிலத்திற்குரியவர்களாகச் செய்யாமல் தடுத்துவிடும்.[3] மேலும், கீழ்வரம்புக்குக் குறைந்த நிலங்களையெல்லாம் ஒன்றாக இணைத்துக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முடியுமானால், கீழ்வரம்பு விதிப்பதில் பொருள் உண்டு.

[1] மேலே கூறியதில் பக்கங்கள் 241–2.

[2] 1956, ஜனவரி அறிக்கை, பக்கங்கள் 3—10.

[3] மேலே கூறியது, பக்கம் 13.

எனினும், நமக்குள்ள குறைந்த சாதனங்களைக்கொண்டு, விரைவாக வளர்ந்துவரும் நம் ஜனத்தொகைக்கேற்ப, விவசாய உழைப்பாளிகள் பிரச்சினையையும், நிலத்திற்குள்ள கிராக்கியையும் தீர்க்க முடியுமா என்பது ஐயமே.

பூதான இயக்கம்

விவசாய உழைப்பாளிகள் நிலைபை உயர்த்துவதற்குச் சட்டம் செய்யும் வழி இல்லாவிட்டால் மற்றொரு வழி, ஆசாரிய விநோபாபாவே கடந்த சில ஆண்டுகளாக நடத்திவரும் பூதான இயக்கம்தான்.[1] இது நிலம் உடையவர்கள் தாமாக விரும்பித் தம் நிலத்தை மாற்றிப் பங்கிட்டு, இப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தையுடையது. பெரிய நிலச்சுவான்தார்களுடைய உயர்ந்த தரும சிந்தனையைத் தூண்டி, அவர்களிடம் நிலத்தைத் தானமாகப் பெறுவதுதான் விநோபாவின் நோக்கம். இந்தியாவில் உள்ள நிலமற்ற உழவர்களின் தொகையை 5 கோடி என்றுகொண்டு, ஒவ்வொரு நிலமற்ற உழவனுக்கும் ஓர் ஏக்கர் வீதம் கொடுப்பதற்கு, மொத்தம் 5 கோடி ஏக்கர் நிலத்தைப் பெறுவதை அவர் தம் குறிக்கோளாக வைத்துக் கொண்டார். விநோபா 1951-ல் தெலுங்கானாவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது (இந்தப் பகுதியில் பெரிய நிலச்சுவான்தார்களுக்கு எதிராகக் கம்யூனிஸ்டுகள் தொல்லை விளைவித்துக் கொண்டிருந்தனர்) அவருக்கு ஊக்கம் பிறந்தது. 1952க்கும் 1954-க்கும் இடையில் பூதானமாக 30 இலட்சம் ஏக்கருக்கு மேல் கிடைத்தது. இதில் பெரும்பகுதி பீகாரில் கிடைத்தது. இவ்வியக்கம் திட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1954 முதல் பல இராச்சியங்கள் இத்தகைய நிலங்களை ஒதுக்குவதற்கும், தான நிலங்களை நிருவகிப்பதற்கும் சட்டங்களைச் செய்தன, அல்லது செய்ய எண்ணியுள்ளன. 15 இலட்சம் ஏக்கர் நிலம் இவ்வியக்கத்திற்குக் கிடைத்துள்ளது. இது மட்டுமன்றி, அண்மையில் முழுக் கிராமங்களே தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1957 முடிவுக்குள் 354 கிராமங்கள் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன.

பூதான இயக்கத்தைத் தூண்டிய இலட்சியத்தை நாம் உணரத் தவறினால் நமக்கு விசுவாசம் இல்லையென்று பொருளாகும். இந்த இலட்சியம் தம்மைச் சார்ந்துள்ள திக்கற்ற உழைப்பாளிகளை இரக்க

[1] பேராசிரியர் காட்கில் கூறுவதை ஒப்பிடுக: 'இந்த நிலையில் பூதான இயக்கம் முற்றிலும் நியாயமானது மட்டுமன்றி, அரசாங்கத்தின் அலட்சிய மனப்பான்மையையும் சக்தியற்ற தன்மையையும் நோக்கினால் நாம் விரும்பும் சமூக மாறுதலை உண்டாக்குவதற்கு இது ஒன்றுதான் தக்க கருவியாக உள்ளது' (மேலே கூறியது, பக்கம் 237).

மற்ற நிலச்சுவான்தார்கள் முறையாகச் சுரண்டுவதை உணர்ந்த தனுல் தோன்றியது. விஞேபாவின் வேண்டுகோளுக்குக் கிடைத்த பலன் எவ்வளவு குறைந்ததாயினும், முழுக் கிராமங்கள் தானமாக அளிக்கப்பட்டதால், சிறிய துண்டு நிலங்களை வைத்துக்கொண்டு இருக்கும் விவசாயிகள் தங்கள் கூட்டு உழைப்பினுல் இவ்வியக்கத் தின் தன்னலமற்ற தலைவர்களின் உதவியைக்கொண்டு, கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முயல்வதற்கு வழிகோலப்பட்டுள்ளது

'உள்ளவர்கள்' 'இல்லாதவர்'களுக்குக் கொடுக்கும் பொருட்டு அவர்கள் மனத்தை மாற்ற முடியும் என்ற கருத்தின்மீது இவ் வியக்கம் தோன்றியது. வரலாறும், மக்களியல்பைப் பற்றிய அறிவும் இந்த நம்பிக்கை பயனற்றது என்பதைக் காட்டும். பலாத்காரத் தினுல் தம் நிலங்கள் பறிபோய்விடும் என்ற அச்சத்தினுலும் அவை தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். இவ்வியக்கத்தின் ஆன்மீக மதிப்பை நாம் ஒத்துக்கொண்டாலும், இந்த உயர்ந்த இலட்சிய முள்ள வேண்டுகோள் நடைமுறையில் வெற்றியை யளிக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டாகவில்லை. பீகாரில் பூதானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தில் பெரும்பகுதி (இது தரும குணத்தைக் காட்டுவதற்கு ஒரு சௌகரியமான வழியாகும்) பாறையாகவும், விளையாத நிலமாகவும் அல்லது விவசாயத்திற்கு அவ்வளவு ஏற்றதாக இல்லாத நிலமாகவும், சில சமயங்களில் வழக்குகளில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நிலமாகவும் இருந்தது. விஞேபாவின் இலட்சியத்திற்கு மிகவும் குறைவான நிலமே இதுவரையில் கிடைத் துள்ளது. ஐந்து வருடம் விடாமல் முயன்று தியாகம் செய்ததால் இச்சிறிதளவு நிலமாவது கிடைத்திருக்கிறது. பல அரசியல் கட்சி களும் பூதானத்தோடு தொடர்புடையவர்களாயிருக்கிருர்ளென்ருல், அவர்களுள் பலர் பொது மக்கள்மீது தங்கள் பிடிப்பை உறுதிப் படுத்திக் கொள்ளவே அப்படிச் செய்கிருர்கள்.

பயிர் செய்யப்படும் நிலங்கள் மிகச் சிறியவையாய் இருப்பது நமது விவசாய அமைப்பில் ஓர் அடிப்படையான குறை. ஆனுல், விஞேபாவின் மாற்றிப் பங்கிடும் திட்டம் இக்குறையை நீக்க ஒன்றும் செய்யவில்லை. ஏனெனின், இரண்டு மூன்று தலைமுறைகளில் இந்த ஓர் ஏக்கர் நிலம் மீண்டும் சிறு பிரிவுகளாகச் செய்யப்படக்கூடும். இந்த 'பலாத்காரமற்ற புரட்சியால்' (பூதான இயக்கத்தை இவ்வாறு கூறுகிருர்கள்) நிலமில்லாதவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முயல்வது, வியாபார மயமாக்கப்பட்டுள்ள இக்காலச் சமூகத்தின் நிலையில் மிகவும் சூட்சமமான முறையாகத் தோன்றுகிறது. இந்தி யாவில் உள்ள ஊன்றிய நலமிகள் உலகத்தின் மற்றப் பகுதிகளில் உள்ள ஊன்றிய நலமிகளைவிட எவ்விதத்திலும் மாறுபட்டவர்

களல்லர். ஆதலால், நிலச்சுவான் தார்களிடையே போதிய அளவு மன மாறுதல் ஏற்படவில்லையென்பதைக் கண்டு இந்த அமைதியான இயக்கத்தின் தலைவர்களுக்குப் பொறுமை போய்விட்டது என்றால் அதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனின், இத்தலைவர்கள் தம் நோக்கத்தையடைவதற்குச் சத்தியாக்கிரகம் தொடங்கப் போவதாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய பிரச்சினையைத் தரும குணத்தினால் தீர்க்க முடியாது.[1]

இறுதிக் குறிப்புகள்

லின்லித்கோ பிரபுவைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட விவசாயக் குழுவிலிருந்த நிபுணர்கள் தங்கள் விரிவான அறிக்கையில், நம் விவசாய உழைப்பாளர் பிரச்சினையைப் புறக்கணித்துவிட்டதாகத் தெரிகிறது. இப்பிரச்சினை தொழிலாளர் குழுவின் ஆராய்ச்சிக்குட் படவில்லை. ஆதலால், பஞ்சகால விதிகளில் கூறப்பட்டிருப்பது போலப் பஞ்சம் வரும்போது வேலையளித்து நிவாரணம் தருவதைத் தவிர, நமது இந்தப் பெரிய ஜனத்தொகைக்குப் பாதுகாப்பாக வேறெந்த எளிய முறையைக்கூட நினைக்க முடியவில்லை. இம் மக்களில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள். இவர்கள் இந்திய மக்களில் மிகவும் அறிவில்லாதவர்களும் திக்கற்றவர்களும் ஆவர். இவர்களிலிருந்துதான் 'நகரத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப் படுகிறார்கள்.' நம் நாட்டில் இப்பிரச்சினை, தொழில்களில் வேலை செய்வோரையும் விவசாய உழைப்பாளிகளையும் ஒருங்கே கைதூக்கி விடும் இரண்டு அமிசப் பிரச்சினையாக உள்ளது.

'நிலமற்ற உழைப்பாளிகள் பெருகிவருவது இந்தியாவில் விவசாய மக்களின் அமைதியின்மைக்கு அறிகுறியாகும். இதுதான் சிறுசிறு களவுகளுக்கும் கடைகள் சூறையாடப்படுவதற்கும் காரணம்.'[2] இந்த நிலமற்ற வகுப்பார் நாட்டுப்புறங்களில் வாழ்ந்து விவசாயத்தில் ஏற்கெனவே உள்ள திறமையின்மையை அதிகரித்து, சீர்திருந்திய விவசாய முறைகளைப் புகுத்துவதற்கும், விவசாயக் கருவிகளைச் சீர்திருத்துவதற்கும் நிலையான தடையாக உள்ளனர். இந்த வகுப்பார் தாம், பட்டினியால் நகரங்களுக்குள் புகுந்து, நகரத் தொழிலாளர்களின் கூலிகளைக் குறைத்து, விரைவாகத் தொழிற் சங்கங்கள் வளருவதையும், வீட்டு வசதி பெருகுவதையும், நகர வசதிகள் அதிகமாவதையும் தடுக்கிறார்கள். இரண்டாவது விவசாய

[1] பூதான இயக்கத்தின் நிதர்சனமான விளக்கத்தைப்பற்றிப் பேராசிரியர் காட்கில் எழுதிய மேற்கூறிய நூலைக் (பக்கங்கள் 230-40) காண்க.

[2] பாவே மேற்கூறியது.

ஊழியர்களின் மாநாட்டில் பேசும்போது, டாக்டர் பி. சீதாராமையா பின்வருமாறு குறிப்பிட்டார்: 'சேற்றிலும் மண்ணிலும் நாள் முழுவதையும் கழித்து, ஒருநாள் பட்டினியும், ஒருநாள் அரைவயிறும் உண்டு, மழையிலும் வெயிலிலும் ஓய்வில்லாமல், தனக்குச் சொந்த வீடு என்று ஒன்றும் இல்லாமல் உழைக்கும் விவசாயிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வரிசையாகப் பல தரகர்கள் உண்டாகி விட்டனர். அவன் நமக்கு நெல்லை விளைவித்துத் தருகிறான்; ஆனால், பட்டினி கிடக்கிறான். அவன் நம் கறவை மாடுகளை வளர்க்கிறான்; ஆனால், கஞ்சியையும் தண்ணீரையும் தவிர வேறொன்றையும் அறியான். அவன் நம் களஞ்சியங்களை நிரப்புகிறான்; ஆனால், வருடம் முழுவதும் ஒவ்வொரு நாளுக்கும் வேண்டிய உணவைப் பிச்சையாகப் பெறுகிறான். அவன் நமக்குக் கிணறு வெட்டுகிறான்; ஆனால், அதிலிருந்து தண்ணீரைத் தனக்கு எடுத்துக்கொள்ள முடியாது. நம் குளங்களை அவன் சுத்தப்படுத்துகிறான்; ஆனால், அவை நிரம்பியிருக்கும்போது அவன் தூர இருக்க வேண்டும். அவனது உழைப்பினால் கொழுத்து, அவனை எலும்புக் கூடாக்கிச் செல்வத்தையும் செழிப்பையும் பெறுபவர்களுக்கு அவன் எப்பொழுதும் கடினமான குற்றேவல் புரிபவனாக இருக்கிறான்.'[1]

டாக்டர் சீதாராமையா அதே மாநாட்டில் தம் தலைமை உரையில், ஹரிஜனங்களையும் நிலமற்ற மக்களையும் குடியேற்றுவதற்கான திட்டத்திற்கு விவரங்களைச் சேகரிக்கும்படி கூறினார். இத்திட்டத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்து உற்பத்தி செய்வதற்கான கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு அவர் யோசனையைத் தெரிவித்தார். இச் சங்கங்கள் பணத்தைக் கடன் வாங்கி நிலங்களை 12 வருடக் குத்தகைக்கு விடும். அதன் பிறகு நிலங்கள் நல்ல பலனையளித்து இலாபம் தரும். 'நிலம் கார குணமுள்ளதாயும், ஏற்றத்தாழ்வாகவும், புதர்களும் முட்களும் முளைத்தும், அதன் பக்கத்தில் நீர்ப்பாசனத்திற்கும் நீரை வடிப்பதற்கும் வாய்க்கால்கள் இல்லாமலும், அதில் உரமிடப்படாமலும் இருந்தால், இயந்திரக் கலப்பைகூட அதைச் செழிப்பாக்க முடியாது. இவற்றையெல்லாம் உண்டாக்கிவிட்டால், விமானத்திலிருந்து விதைகளை விதைக்க வேண்டியதில்லை, பம்புகளைக்கொண்டு வயல்களுக்குத் தண்ணீர் இறைக்கவேண்டியதில்லை, இயந்திரங்கள் மண்ணைப் புரட்டவேண்டியதில்லை. சீனாவுக்கு அடுத்தபடியாக உலகத்தில் மிக அதிகமான மனித சக்தி உள்ளவர்கள் நாம்தான்.'[2]

[1]'கிராம இந்தியா' (Rural India) வின் தலைமைப் பேருரை, மே, 1940.

[2]மேலே கூறியது.

இத்தகைய விரிவான திட்டம் இல்லாமல் இருந்தால், நம் சமூக, பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையையே தகர்க்கக்கூடிய புரட்சி நிலமற்ற உழைப்பாளிகளால் உண்டாக்கப்படக்கூடும். 4·5 கோடி விவசாய உழைப்பாளிகளிடையே விவசாயத் துறையில் அதிருப்தியும் குற்றங்களும் உண்டாவது ஒரு புரட்சிக்கான, முன்னெச்சரிக்கையான அறிகுறியாகும். இவர்கள் 'நீண்ட காலமாகத் துன்புறும் அடிமைகள்' இவர்கள்தாம் நோய், கொள்ளை நோய், பஞ்சம் ஆகியவற்றிற்கு முதலில் இரையாகுபவர்கள். மிகவும் சக்தி குறைந்தவர்களாய், பிழைப்புக்குப் போதாத வருமானமுடையவர்களாய், எதிர்காலத்தில் நம்பிக்கையற்று, இப்போதுள்ள பொருளாதார முறையின் அநீதியையும் தீமைகளையும் வரவர நன்குணர்ந்துள்ள இவர்கள் அரசியல் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஏற்ற கைப்பொம்மைகள் ஆவார்கள். நாம் ஒரு சங்கடமான நிலையில் இருக்கிறோம். அது என்னவென்றால், எல்லோருக்கும் நல்வாழ்க்கையளிப்பதற்கு உத்தரவாதமான ஒரு கிராமத் திட்டத்தை உண்டாக்குவதா அல்லது கைகட்டிக்கொண்டு எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று வாளா இருந்துவிடுவதா என்பதே. நாம் வாளா இருந்தால், மேகங்கள் திரண்டு மழை பொழிந்து ஏற்கெனவே அடிப்படை கரைந்துபோயுள்ள நம் கட்டடம் அழிக்கப்பட்டுவிடும்.[1]

டாக்டர் சீதாராமையா குடியேற்றத் திட்டத்தைப்பற்றிக் காணும் கனவு, நிலங்களை ஒருங்கிணைக்கவும், உச்சவரம்பு கட்டவும் சட்டம் இயற்றுவதனால் கிடைப்பதைவிட மிக அதிகமான நிலம் கிடைப்பதைப் பொறுத்து நிறைவேறக்கூடும். மேலும், கூட்டுப் பண்ணைகளை வெற்றிபெற நடத்த வேண்டுமாயின், கீழே உள்ள மக்கள் உற்சாகத்துடன் இருக்கவேண்டுமேயன்றி, மேலே உள்ள அதிகாரிகளை நிறுவுவதால் ஒன்றும் முடியாது. நிலமற்றவர்கள் கல்வியற்றும், அறிவற்றும், மேலே உள்ளவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கும் வழக்கமுடையவர்களாயும் இருப்பதால் கூட்டுறவு விவசாயம் வெற்றிபெறும் என்று நம்புவதற்கு இடமில்லை.

நெடுங்காலமாக இந்திய விவசாயம் தன்னிறைவுள்ளதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. மிகவும் தொழில் மயமான நாடுகளின் மக்களடர்த்தியைப் போலுள்ள அதிக அடர்த்தியுள்ள ஜனத்தொகையை அது ஆதரித்துவருகிறது. நிலத்தைப் பயன்படுத்திப்

[1] திட்டக்குழு இப்பிரச்சினையின் கடுமையை உணர்ந்திருப்பினும், விவசாய உழைப்பாளிகளைப் பற்றிய அதிகாரத்தில் இவர்களின் நிலை உயர்வதற்கான நம்பிக்கை தரும் செய்தி ஒன்றும் காணப்படவில்லை. நம் அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்படக்கூடிய உடன் விளைவுகளால் ஏதேனும் நன்மை ஏற்பட்டால் உண்டு. திட்டக்குழு செயலற்றுப் பூதான, கிராமதான இயக்கங்களால் இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பிக்கொண்டிருக்கிறது

பெறும் விளைவு, உழைப்பினுல் அன்றி மூலதனத்தினுல் கிடைப்பதல்ல. இவ்விவசாயத்தை இயந்திர உதவி தேவையுள்ள மற்ற இடங்களுக்கு விஸ்தரித்தால் நிருவாகத்திலுள்ளவர்களுக்கும் சட்டமியற்றுபவர்களுக்கும் அதிகத் தொல்லை உண்டாகலாம். நிலத்தின் கீழ்வரம்பையும் மேல்வரம்பையும் நிர்ணயிக்கச் - சட்டமியற்றினுல் சமூக அமைப்பை அது தீங்காரப் பாதிக்கும்; வாழ்க்கைத் தரம் உயராது. அவசரமாகச் சட்டம் செய்து ஏற்கெனவே வறுமையுற்றிருக்கும் மக்களை மேலும் சிரமப்படுத்தும் முறையில் செலவு செய்து, செலவுக்கும் முயற்சிக்கும் ஏற்பப் பயன் கிடைக்காமல் போவதைவிட, மாற்று வழியாகக், குறைந்த அளவுள்ள நிலையான வாழ்க்கைத் தரத்தையுடையதும், ஆனுல், தரத்தையன்றி அளவைக் கருதிச் சிறிதளவு விளைச்சலைப் பெற்று அச்சமின்றி இருக்கும் அடர்த்தியான மக்கள் தொகை இருப்பதே நல்லது.

17. நீண்டகால விவசாய சாத்தியக் கூறுகள்

இதுவரையில் நாம் இந்தியாவின் விவசாயப் பிரச்சினைபற்றிய எல்லா அமிசங்களையும் ஆராய்ந்தோம். யுத்தத்தினால் உண்டான விசேஷ நிலைமைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால், இந்தியாவின் இன்றைய விவசாய நிலை, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப்பட்ட முயற்சிகளும் பெறப்பட்ட வெற்றிகளும் இருப்பினும், மிகுந்த அச்சத்திற்கு இடமளிக்கிறது. ஜனத்தொகை வளர்வதால், நிலங்கள் துண்டுபடுவதும் பிரிக்கப்படுவதும் அதிகமாகி வருவதையும், பட்டினியிலிருந்து தப்புவதற்காக அச்சிறு துண்டுகளை அவர்கள் பயிர் செய்யவேண்டுமென்று கிளர்ச்சி செய்வதையும் கண்டோம். அநேகமாக ஒவ்வோர் இராச்சியத்திலும் இலட்சக் கணக்கான விவசாயிகள் சிக்கனமற்ற நிலங்களைப் பயிர் செய்து, கடனைத் தீர்க்கும் சக்தி இல்லாமலேயே கடன் வாங்கிக்கொண்டு, மழை பெய்வது நிச்சயமின்மையால் பட்டினிப் பயத்துடன் எப்பொழுதும் இருக்கிறார்கள். அன்றியும், நிலத்தின்மீது மக்கள் நெருக்கடி அதிகரித்து வருவதால், அதன் செழிப்புப் பாதிக்கப்பட்டுச் சில இடங்களில் செழிப்பான நிலம் சதுப்பு நிலமாகவும் காடாகவும் மாறிவிடுவதையும் பார்த்தோம்.

எனினும், மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் அண்மையில் நம் விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அதிகமாகப் பாடுபட்டு வருவதையும், முதல் திட்டத்தின்கீழ் உண்டான முன்னேற்றத்தையும் நாம் மறந்துவிடலாகாது. இம் முயற்சிகள் பயிர்களின் விளைச்சலை அதிகப்படுத்தவும், விலை மதிப்புள்ள பணப்பயிர்களை அதிகமாகப் பயிரிடவும் மேற்கொள்ளப் பட்டன. விலங்கு விவசாயத்தின் முக்கியத்துவம் அதிகமாக உணரப் பட்டு வருகிறது. காடுகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றியும் உணரப்பட்டிருக்கிறது. துணைத் தொழில்களாகப்

பழங்களைப் பயிரிடுதல், பறவைப் பண்ணை நடத்தல், தேனீ வளர்த்தல் போன்றவற்றிலும் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்வதிலும் கவனம் திரும்பியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாகக் கடன் வசதி யளித்தலும் அதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், இம் முயற்சிகள் முழுமனத்துடனும் நல்லெண்ணத் துடனும் செய்யப்படுகின்றன என்பதை நாம் உணர்ந்தாலும், விவசாயத்தைப் பாதிக்கக்கூடிய சில பெரிய உண்மைகளை நாம் கவனிக்கவேண்டியுள்ளது. விவசாய மக்களின் வறுமையைப் பார்த்தால், பிரிட்டிஷ் ஆட்சியில் உண்டாக்கப்பட்ட பொருளாதார மாறுதல்களை அதிகம் வற்புறுத்திக் காட்டவேண்டி யிருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் பிரிட்டன் தொழில் பாது காப்புக் கொள்கையைக் கடைப்பிடித்ததும், அந்நாட்டிற்கு மிகவும் ஏற்றதான தடையிலா வாணிபக் கொள்கையை மேற்கொண்டதும், இந்தியாவில் தடையிலா வாணிபக் கொள்கையை கைக் கொண்டதும், இயந்திர உற்பத்திப் பொருள்களை இங்குக் கொண்டு வந்து குவித்ததும், கைத்தொழில் பொருளாதாரத்தை அழிவுக்குள் ளாக்கின. கிராமத் தொழில்கள் மறைந்த பிறகு உண்டான தொழில் சமநிலை இழப்பு, நாட்டைத் தொழில் மயமாக்காமல் வேண்டுமென்றே தடுத்ததால் மேலும் கடுமையாயிற்று. பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய பின் உண்டான அமைதியால் ஜனத்தொகை அதிகரித்து, அதன் விளைவான பட்டினி, நோய் முதலிய மால் தூசியத் தடைகள் உண்டாயின. அதிகரித்துவரும் ஜனத் தொகையின் உழைப்பை அதிக உற்பத்திக்குப் பயன்படுத்துவதற் கான நடவடிக்கைகள் போதிய அளவு எடுக்கப்பட்டதாக அறிகுறிகள் ஒன்றும் இல்லை. வறுமையால் வாடும் மக்களால் தாங்க முடியாத அளவு நிருவாக அமைப்பிற்குமேல் செலவு உண்டாகிறது. இவற்றோடு, நிலக்கிழார்களும், தரகர்களும், இரக்க மற்ற கிராமச் சௌகார்களும் உழைக்கும் விவசாயிகளைச் சுரண்டு கின்றனர். ஜமீந்தாரிகளை ஒழித்த பிறகும், கிராமக் கடன் சட்டங்களை இயற்றிய பிறகும், மற்ற நிலச் சீர்திருத்தங்களைச் செய்த பிறகுங்கூட நிலைமை அப்படியே இருக்கிறது. உலகத்தின் மற்றப் பகுதிகள் எல்லாம் விரைவாக மாறிக்கொண்டிருக்கும்போது இந்தியாமட்டும் நிதானமாக மாறிக்கொண்டிருக்க முடியுமா? நம் நாடு உலக நிகழ்ச்சிகளாகிய ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. நம் நாட்டில் உள்ள பல குறைகளுக்கும், குறிப்பாக அது விவசாயத் துறையில் பின்னிட்டிருப்பதற்கும் காரணம், அந்நிய அரசாங்கம் செய்த காரியங்களோ, செய்யத் தவறிய காரியங்களோ அல்ல; நம் விவசாய முறைகளின் மாற்றம்

இல்லாத தன்மையும் அல்ல; சமூக, மத சம்பந்தமான வழக்கங்களும் அல்ல. கடந்த நூற்றாண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையில் காணப்பட்ட முக்கியமான மாறுதல் களுக்குக் காரணம், வழக்கத்தையும் தன்னிறைவுள்ள கிராமப் பகுதியையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பை நம் நாடு பன்னாட்டுச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலைகளை அடிப்படையாகக் கொண்ட போட்டிப் பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப மாற்றியமைக்கும் பிரச்சினையைத் திடீரென்று சமாளிக்க வேண்டியிருந்ததுதான். கடந்த காலத்தில் இந்திய விவசாயம் மழையை எதிர்பார்த்திருந்த ஒரு சூதாட்டமாக இருந்தது. ஆனால், இன்று அது உலக விலைகளுக்கு இலக்கான ஒரு சூதாட்டமாக இருக்கிறது. கிராமப் பொருளாதாரத்திற்கு ஏற்ப அமைந்திருந்த உற்பத்தி முறைகள், போட்டிப் பொருளாதாரத்தில் வெற்றி பெற உதவமாட்டா. ஒரு நூற்றாண்டுக் காலமாக தலையிடாக் கொள்கையில் ஊறிப்போயிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம், பழைய விவசாய முறையிலிருந்து மாறுவதற்கு ஒரு புதிய முறையை நன்கு திட்டமிட்டுச் செய்யும் என்று நியாயமாக எதிர்பார்ப்பதற்கில்லை. இந்த அடிப்படை உண்மையை உணராமல் நம் விவசாயப் பிரச்சினையை மேலெழுந்தவாரியாகத் தீண்டுவது சிறிதளவு வெற்றியையும் தராது.[1]

நம் பொருளாதார வரலாற்றில், விவசாயிகளின் நிலங்களைப் பறித்து அவர்களை வெளியேற்றும் நிகழ்ச்சியால், மேனாடுகளில் நடந்ததுபோல முதலாளித்துவ விவசாய முறை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விவசாயத்தில் மூலதனம் வந்து சேருவது உற்பத்தியைப் பெருக்காமல், விவசாயிகளின் உழைப்பின் மீது கொழுக்கும் செயலில் முடிகிறது. அது பேரளவு விவசாயத் திற்கு உதவவில்லை. கிராமப் பொருளாதாரத்திலிருந்து திடீரென்று பன்னாட்டு விலைப் பொருளாதாரத்திற்கு மாறியதால், நம் நாட்டில் விவசாயத்தில் மூலதனத்தை முதலீடு செய்வது இலாபகரமாக

[1] T. N. இராமசாமி, 'இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினை' (1942) யில் இந்தியாவின் விவசாயப் பிரச்சினைபற்றிய இந்த அமிசத்தைக் குறிப்பாக வற்புறுத்தியிருக்கிறார். டாக்டர் வெரா ஆண்ட்சே (Vera Antsey) யும் இந்த அமிசத்தைப்பற்றிச் சமாதானமாகக் கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்; 'வணிகப் பயிர்களைச் சிறப்பாக உற்பத்தி செய்யும் முறை மிகவும் அதிகமாகியிருக்கிறது; தன்னிறைவு குறைந்துவிட்டது. இந்தியாவானது உலக விலைகளின் வட்டாரத்திற்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. இவற்றால் அங்கங்கு விலை ஏற்ற இறக்கமும், பருவத்திற்கேற்ப விலை ஏற்ற இறக்கமும் மிகவும் குறைந்துவிட்டன. ஆனால், இது உலக விலைகளின் போக்கையும், வியாபாரச் சுழற்சியையும் அதிகம் நம்பியிருப்பதனால் உண்டாயிருக்கிறது (முற்கூறிய 'நவீன இந்தியாவும் மேனாடுகளும்' பக்கம் 290). நம் காலத்தில் திட்டமிட்ட பொருளாதாரத்தில்கூட விவசாயப் பொருள்களின் விலைப் பிரச்சினை மிகவும் முக்கியமாக இருக்கிறது.

இல்லை. பம்பாய்த் தொழிலதிபர்களின் திட்டத்தில் அதிக மூலதன முதலீட்டினால் விவசாய முன்னேற்றம் உண்டாவதுபற்றி உற்சாக மாக ஒன்றும் கூறப்படாதது இயல்புதான்.[1]

எனினும், திட்டக் குழு தன் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியில் விவசாயச் சீரமைப்புக்கும் சீர்திருத்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. 'நாட்டின் பொருளாதாரத்தின் பல பகுதிகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் போது, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலத்தையும் உழைப்பாளி களையும் மிக நல்ல முறையில் பயன்படுத்துவதைப் பொறுத்து, முக்கியமாக இந்த முழுத் திட்டத்தின் வெற்றியும் இருக்கிறது' என்று அது கூறுகிறது.[2] ஆகவே, சாதனங்களை ஒதுக்குவதில் இக் குழு விவசாயத்திற்கும் நீர்ப்பாசனத்திற்கும் மிகவும் முதன்மை யளித்திருக்கிறது.[3]

விவசாய நிலையையும் முறைகளையும் விட்டு, விவசாயக் கொள்கையாகிய பெரிய பிரச்சினையைக் கவனித்தால், இரண்டு அடிப்படையான விஷயங்களை மனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, நம் கொள்கையின் பின்னால் அமைந் துள்ள நோக்கத்தை நன்கு உணரவேண்டும். இரண்டாவதாக, புரட்சிகரமான மாறுதலை உட்கொண்ட எந்த நீண்ட காலக் கொள்கையும் திட்டமும் இப்போதுள்ள சமூக அமைப்பின் மதிப்புள்ள அமிசங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளவேண்டும்.

பழங்காலம் முதல் அதிகரித்து வரும் ஜனத்தொகைக்கு உணவு முக்கியமானது என்ற காரணத்திற்காக மட்டுமன்றித் தொழில்களை அமைப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்களை நிலம்தான் அளிக்க முடியும் என்ற சிறப்பினாலும், தேசியக் கொள்கைகளில் விவசாயம் அதிக இடம் பெற்றிருக்கிறது. முற்காலத்தில் விவசாயத்தை நாட்டின் பெரிய பலம் என்று கருதிப் பேணிய நாடுகளும் இருந்தன. மற்றும் சில நாடுகள் உணவையும் மூலப்பொருள் களையும் இறக்குமதி செய்து விவசாயத்தை முழுவதும் புறக்கணித்தும்

[1] ஒப்பிடுக: 'முதலாளித்துவத்தின் தன்மை மாறாமலிருக்கும் வரையில், ஒரு நாட்டில் பாமர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உபரி மூலதனம் பயன்படுத்தப்படமாட்டாது. ஏனெனின், இது முதலாளி களின் இலாபத்தைக் குறைக்கும்' (லெனினுடைய தேர்ந்தெடுக்கப் பட்ட நூல்கள், தொகுதி V, பக்கம் 57).

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 153.

[3] முன் பக்கங்களில் விவசாயத் துறையின் பல அமிசங்களிலும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடைந்த முன்னேற்றத்தைப்பற்றி விளக்கி யிருக்கிறோம்.

உள்ளன. மேலும் சில நாடுகள், தங்கள் தேவைகளைமட்டும் திருப்தி செய்துகொள்ளக் கருதி விவசாயத்தில் தன்னிறைவோடு இருந்தன. இவை தங்கள் விவசாய உபரிப் பொருள்களை ஏற்றுமதி செய்து அதிக வருமபடி பெற விரும்பவில்லை.

உலகம் பொருளாதாரப் பரிணமம் அடைந்துள்ள இன்றைய நிலையில், விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவினால் மிகத் தீவிரமான பொருளாதாரச் சிறப்புப் பெறக்கூடிய இக் காலத்தில், சிறிய நாடுகள் ஏதேனும் ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் மிகத் தீவிரமாக விருத்தியடைந்து, அதிகப் பரப்பையும் மிகுந்த சாதனங்களையும் உடைய நாடுகள் உயர்ந்த நிலையில் தன்னிறைவு பெற வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்கலாம் என்று நாம் எதிர்பார்க்கக்கூடும். சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்து தொழில்மயமாகித் தனக்கு வேண்டிய பெரும் பகுதி உணவுக்குக் கடல் கடந்த நாடுகளை நம்பி, வலிமை வாய்ந்த கடற்படையைக் கொண்டு அச்சமின்றி இருந்தது. 1914-18 யுத்தமானது இந்த அச்சமற்ற நிலையைச் சிதற அடித்தது. இதனால் விவசாயத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும், வாழ்க்கைக்கு வேண்டிய முக்கியப் பொருள்களையேனும் பெற்று, இங்கிலாந்து தன்னிறைவு அடையவேண்டுமென்றும் சிலர் மிகத் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தனர். ஆனால், போர் நடந்துகொண்டிருக்கும்போது, பிரிட்டன், கடல் மூழ்கிக் கப்பல் போரினால் பஞ்ச நிலை ஏற்படக்கூடும் என்று அஞ்சித் தன் விவசாயத் தொழிலைப் புதுப்பிப்பதில் முற்றிலும் வெற்றிபெறவில்லை. அது தன் உற்பத்திப் பொருள்களையும், சாம்ராச்சிய உறுப்பு நாடுகளின் விவசாய உற்பத்திப் பொருள்களையும் தனக்குச் சாதகமான முறையில் பரிவர்த்தனை செய்துகொள்ள முயன்றது. இரண்டாவது உலகப் போர் நடக்கும்போது, அது தன் விவசாயத்தைப் புதுப்பிக்க மீண்டும் முயன்றது. அதிக நிலத்தைப் பயிரிட்டு, தீவிரமான வழிகளில் உற்பத்தியைப் பெருக்கும் கொள்கையை அது வகுத்தது. யுத்தம் தொடங்கிய பிறகு 45 சதவீதம் அதிக நிலம் பயிர் செய்யப்பட்டது. 1940-41 உடன் ஒப்பிடும்போது தானிய உற்பத்தி 50 சதவீதம் அதிகமாயிற்று. விவசாயத்தை விருத்தி செய்வதற்கு நேராக உதவித்தொகை அளிப்பது வரையில் எல்லாவிதமான ஊக்கமும் அளிக்கப்பட்டது. பிரிட்டனில் இன்று விவசாயம் யுத்தத்திற்கு முன்பு இருந்ததைவிட 56 சதவீதம் அதிக உணவு உற்பத்தி செய்கிறது. இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்தி, அதிக மூலதனத்தை முதலீடு செய்து, அதிக உற்பத்தி உண்டாக்கப்பட்டது.

இது போலவே ரஷ்யாவிலும் நீண்டகாலக் கொள்கை, பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறுவதற்காக இயந்திர உற்பத்தி

தொழில்களை அபிவிருத்தி செய்வதாயினும், உடனடியான தேவை விவசாய அபிவிருத்திதான். ஏனெனின், அங்கிருந்த மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தில்தான் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இதனால் விவசாய உற்பத்தியை இடைவிடாமல் தூண்டிக் கொண்டிருக்கும் கொள்கை அவசியமாயிற்று. ரஷ்யாவின் விவசாயக் கொள்கையால் நாம் தெளிவாக அறியும் உண்மை என்னவென்றால், உணவு உற்பத்தியில் நன்கு திட்டமிடப்பட்ட பொதுவுடைமையாக்கும் கொள்கை, அரசாங்க நிருவாகத்தினாலும் கட்டுப்பாட்டினாலும் நடத்தப்பட்டாலும் சரி, சமூகப் பண்ணைகள் அல்லது கூட்டுறவுப் பண்ணைகளால் நடத்தப்பட்டாலும் சரி, அது பொருளாதார வாழ்க்கையின் மற்ற அமிசங்களோடு இணைக்கப்பட்டு, நாட்டின் சமூகக் கலாசார வாழ்க்கையின் அமைப்போடும் பொதுவாக இணைக்கப்பட்டால்தான் வெற்றிபெற முடியும் என்பதே.

யுத்தகாலத்திலும் யுத்தத்திற்குப் பிறகும் உணவுப் பிரச்சினையின் முக்கியத்துவம் எல்லா நாடுகளாலும் கட்டாயமாக உணரப்பட்டிருக்கிறது. 1942 ல் 'இயற்கை' (Nature) என்னும் பத்திரிகையில் ஒரு தலையங்கம் கூறியதாவது: 'சர்வதேச சங்கத்தின் நுட்பத் தொழில் குழு கூறியுள்ள குறைந்தபட்ச உணவுத் தரத்தைப் பெறாத இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பெரிய மக்கள் தொகுதிகள் உள்ளன. ஆசியாவின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கை விடச் சிறிது அதிக ஜனத்தொகையுள்ள ஐரோப்பா இன்னும் அதிக தானியங்களையும், ஆறு பங்கு அதிக கோதுமையையும் உட்கொள்கிறது. இவ்வளவு பெரிய ஏற்றத் தாழ்வுகளையுடைய உலகம் மாறாமலிருக்க முடியாது.'[1] நம் நாட்டைப் பொறுத்த வரையிலுங்கூட, முன்னால் நாம் நம் விவசாயப் பிரச்சினையைப்பற்றி விளக்கிக் கூறியதிலிருந்து, முக்கியமாகப் புறக்கணிப்பினாலும் கவனிப் பின்மையாலும் நம் விவசாயச் சாதனங்கள் அதிகமாக வீணாகிவிட்டன என்பது விளங்கும். நம் உள்நாட்டுச் சாதனங்களைச் சரிவர அபிவிருத்தி செய்தால், நம் நாட்டிலேயே மலிவாக உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள்களை நாம் பிற நாடுகளிலிருந்து வாங்குகிறோம். உள்நாட்டிலேயே சம சத்துள்ள அல்லது அதிகச் சத்துள்ள உணவு வகைகள் இருக்கும்போது வெளி நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்கிறோம். பல உணவுப் பொருள்களுக்கு நாம் மற்ற நாடுகளை நம்பியிருக்கிறோம். 1938-39-ல் நாம் மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பலசரக்குச் சாமான்களையும் எண்ணெய்

[1] ஒப்பிடுக: 'வறுமை எங்கிருப்பினும், எல்லா இடங்களிலும் உள்ள செழிப்புக்கு அது ஆபத்தாகும்' பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் 26 ஆவது கூட்டத்தில் செய்யப்பட்ட அறிவிப்பு.

களையும் (பாலாடைக் கட்டி, இறுகிய பால், ஜாம், பழங்கள், மீன், மாவுப் பண்டங்கள் உட்பட) இறக்குமதி செய்துகொண்டிருந்தோம். 1955–56-ல் இப் பொருள்கள் மாதம் சராசரி ஒரு கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டன. இப் பொருள்களில் எதுவும் நம் சொந்தச் சாதனங்களைக் கொண்டு இதே விலையில் இங்கு உற்பத்தி செய்ய முடியாமல் இல்லை.

1941-லிருந்து நமது அயல்நாட்டு வாணிபம் அதிக மாறுதல்களை யடைந்துள்ளது. நம்முடைய ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் குறைப்பதற்குக் கப்பல் வசதியின்மை, பகை நாடுகளுடன் வியாபாரத்தை நிறுத்தி வைத்தது, செலாவணிக் கட்டுப்பாடு எல்லாம் சேர்ந்தன. இக் குறைவினுல் நம் உறக்கம் நீங்கி நாம் உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி இருந்தால் நன்ருயிருந்திருக்கும். அரசாங்கம் விவசாயத்தில் அதிக அக்கறை கொண்டது என்பதில் ஐயமில்லை. ஆனுல், உணவைப் பெருக்கும் இயக்கம் நடைபெற்றும் நம் உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்படவில்லை.

போர் தொடங்கியதால் நம் பொருளாதார நிலை சீர்குலைந்தது. யுத்தத்திற்குப் பிறகு நாடு பிரிக்கப்பட்டு, நம் விவசாயம் பொருளாதாரத்தில் அதிக மாறுதல் ஏற்பட்டது. திடீரென்று நம் நாடு உணவில் மட்டுமன்றி, பருத்தி, சணல் ஆகியவற்றில் பற்ருக்குறை நாடாயிற்று. உணவு இறக்குமதியினுல் நம் அயல்நாட்டுச் செலாவணி மிகுதியும் பாதிக்கப்பட்டது. இல்லாவிட்டால் அதைக் கொண்டு நாம் நம் தொழில்களை விருத்தி செய்திருக்கலாம். பாகிஸ்தானில் இணைக்கப்பட்ட பகுதிகள் அந்நியச் சந்தைகளாகி விட்டன. இரு நாடுகளுக்கிடையே தாராளமாகப் பொருள்கள் செல்வதில் அரசியல் சிக்கல் பல சங்கடங்களை உண்டாக்கியிருக்கிறது. மேலும், தொடர்ந்துள்ள சிக்கலும் கெடுபிடி யுத்தமும் (cold war) பன்னுட்டு ஆதிக்க அரசியல் குழுக்களால் நம் நாட்டின் தலைவாசலுக்கே கொண்டுவிடப்பட்டதால், அதிக இராணுவச் செலவைக் கட்டாயமாக ஏற்கவேண்டியதாயுள்ளது. இதனுல், நமது சொற்ப நிதிவசதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினுலும் நாட்டின் பிரிவினையாலும் உண்டான சங்கடங்களால், வழக்கமான தலையிடாக் கொள்கையை நம் தலைவர்கள் கைவிடவேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். சுதந்திரம் கிடைத்த பிறகு உணவுப் பிரச்சினையானது நிருவாகிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மட்டும் ஒரு பிரச்சினையாக இருப்பது மட்டுமன்றி, அது ஒரு சமூகப் பொறுப்பாகவும் இருக்கிறதென்பதை

அதிகமாக உணரத் தொடங்கினர்கள். தேசீயத் திட்டக் குழுவின் அறிக்கைகள் இந்த உணர்ச்சி உண்டாயிருப்பதற்குச் சான்ருகும். பயிர்களைத் திட்டமிட்டு உற்பத்தி செய்யும் குழு, 'இந் நாட்டின் தேசீயப் பொருளாதாரத்தை விஞ்ஞான முறையில் திட்டமிடுவதில் ஒரு முக்கிய அமிசமும், வேலையளிப்பதற்கு மிகப் பெரிய வாய்ப்பாக உள்ளதும், உழைப்பையும் மூலதனத்தையும் பயன்படுத்துவதற்குப் பெரிய துறையாக உள்ளதும் ஆகிய ஒன்றின் உரிய துணைக்குழு தக்க கருத்தைச் செலுத்தவில்லை.'[1]

1947-ல் இந்திய தேசீயக் காங்கிரசினல் ஜமீந்தாரிகளையும் பெரிய எஸ்டேட்டுகளையும் ஒழிப்பதனல் செய்யப்படவேண்டிய சீர் திருத்தங்களைப்பற்றி அறிவிக்கும்படி ஒரு விவசாயச் சீர்திருத்தக் குழு நியமிக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத்திற்கு மிகவும் முதலிடம் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கான இணைப்பான திட்டமாகும். இது ஒரு பெரிய தேசீய முயற்சி. நாட்டை உணவில் தன்னிறைவுடையதாக்குவதற்காக உற்பத்தியைப் பெருக்கும் யோசனையில் திட்டக்குழு இரண்டு தெளிவான நோக்கங் களைக் கொண்டுள்ளது. அவை, விவசாயப் பொருளாதாரத்தை மிக அதிகத் திறமையுடையதாகச் செய்வதற்கு அதைப் பல துறை களாகப் பிரித்து உற்பத்தியைப் பெருக்குவதும், தரகர்களுடைய சுரண்டலை ஒழித்து, விவசாயிகளுக்குத் தங்கள் நிலங்களில் பாது காப்பளித்தும், செல்வத்திலும் வருமானத்திலும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துச் சமூக நீதியை உறுதியாக ஏற்படுத்துவதும் ஆகும். பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தை வாங்கி மறுபடியும் பங்கிடுவதால், நிலமற்றவர்கள் பிரச்சினையும் சிக்கனமற்ற நிலங் களின் பிரச்சினையும் தீர்ந்துவிடாது என்று திட்டக்குழு உணர்ந் துள்ளது; நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வெவ்வேறு நிலைமைகளைப்பற்றி அது அறிந்திருக்கிறது. சிறிய நிலங்களையும் நடுத்தர நிலங்களையும் உடையவர்களுடைய நலன்களைப்பற்றியும், வாரக்குடிக்கும் நிலமற்ற உழைப்பாளிகளுக்கும் நன்மை எது என்பது பற்றியும் அதற்குத் தெரியும். ஆகவே, அது ஒரே மாதிரியான ஏற்பாடு எதையும் கூறவில்லை. 'தேசீயத் திட்ட' அமைப்பின் அடிப்படையாகச் சக்தியும், முன்னேற்றமும், சுய ஆட்சியும் உடைய கிராமங்கள் உண்டாவதற்குக் கூட்டுறவு முறையில் கிராம நிருவாகம் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகளைப்பற்றி அது ஏதோ மேற் போக்காகக் கூறியிருக்கிறது.[2]

[1] 'பயிர்களைத் திட்டமிடுதலும் உற்பத்தியும்', தேசீயத் திட்டக்குழு, 1948, பக்கம் 17.

[2] 'முதல் ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம் 197.

நமக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வாங்குவதற்கு வேண்டிய அளவு ஏற்றுமதி செய்வதற்கான உபரியோடு கூடிய பொருளாதாரத் தன்னிறைவுதான் விவசாயத்தில் நம் குறிக்கோள் என்றால், இந்த நோக்கத்தை அடைவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது அடுத்த கேள்வியாகும். விவசாயக் கடன்சுமையின் அளவும், அது வேகமாக வளர்ந்து வருவதும், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் நிலத்தைத் துண்டு படுத்தலும், உட்பிரிவாக்குதலும், ஜனத்தொகை விரைவாக அதிகரித்தலும், நீண்டகாலமாக விவசாயிகள் பயன்படுத்திவரும் எளிய கருவிகளும் முறைகளும், ஒரு புறம் இடைக்கால நிலப்பிரபுக் களும், மற்றொரு புறம் கொடுமையான வரிக்குள்ளாகி வறுமையால் வாடும் விவசாயிகளும் உள்ள இந்த நாட்டைப் பாலும் தேனும் பெருகி ஓடும் நாடாக மாற்ற முடியாது என்பதைக் காட்டுகின்றன. இந்த நாட்டில் புதிய விவசாயக் கொள்கையைத் தொடங்குவது செயல் முறையானதோ அல்லது எளியதோ என்று இந்நூலாசிரி யர்கள் கருதவில்லை. நம் தலைவர்களும் திட்டக் குழுவும் கொண்டிருக் கும் எளிய நம்பிக்கையும் அவர்களுக்கில்லை. வெற்றிகரமான சமூகப் புரட்சியால்கூட, நூற்றாண்டுக் கணக்காக உள்ள வழக்கங்களையும் முறைகளையும் ஒழித்துவிட முடியாது. நிருவாகத்தின் நிலையான முறைகளையும் மாற்ற முடியாது; மாற்றினால் உண்டாகும் விளைவுகள் எப்படியிருக்கும் என்று கூற முடியாது. கூட்டு வாழ்க்கையின் முறை களைப் புறக்கணித்தால் அவை பழிவாங்கிவிடும்.[1]

1917-ல் ரஷ்யாவில் புரட்சி உண்டாவதற்கு முன்பு அங்கிருந்த விவசாயக் கொள்கையை ஆராய்ந்தால், அது இந்தியாவில் இருந்த விவசாயக் கொள்கையின் வரலாறு போலவே இருக்கிறது. விவ சாயத்தை விருத்தி செய்வதற்கு ஜார் (Czar) செய்த பரிசோதனை கள், இந்தியாவில் செய்யப்பட்டதைவிட மிகவும் ஊக்கமாகவும் பெரிய அளவிலும் இருந்தன. ரஷ்யாவிப் முக்கியப் பிரச்சினை விவசாயி களின் வறுமையும், நிலமற்ற உழைப்பாளிகளின் அதிக எண்ணிக்கை யும்தான். 1908-க்கும் 1912 க்கும் இடையில் ரஷ்யாவில் செயற்கை

[1] ஒப்பிடுக: 'மனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்த முடியும் என்று கருதப் படக்கூடாது. இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தால் அவன் ஒருவாறு தன் சூழ்நிலையை மாற்றிக்கொள்ள முடியும். ஆனால், இயற்கையின் முறைகளைத் திடீரென்று மாற்ற முயன்றால், சக்தியுள்ளவர்கள்தான் வாழ முடியும் என்ற அதன் விதியில் குறுக்கிட்டால், அது பழிக்குப்பழி வாங்கிவிடும்' (எடின்பரோ கோமகனர் ஆராய்ச்சி மாநாட்டில், சர் ஹாரால்டு ஹார்ட்லி வாசித்த கட்டுரை, தொகுதி I, 1957, பக்கம் 159). 'ஆற்றைத் திருப்பித் தண்ணீரை விவசாயத்திற்குப் பாய்ச்சலாம்; ஆனால், வேறோரிடத்தில், செழிப்பான நிலத்தின்மீது உப்புப்படிந்துவிடும். மேலான பயிர்களை விளைவிக்கலாம். ஆனால், ஒரே பயிரை அதிகமாகப் பயிரிட்டால் காளான் நோய்கள் முதலியவை உண்டாகும். இதற்கு ஒரே பரிகாரம், நீண்ட காலம் பயிரிடாமல் விட்டுவிடுவதுதான்' (லாரென்ஸ் தாம்சன், மேலே கூறியது, பக்கங்கள் 21-22).

உர உபயோகம் 400 சதவீதம் அதிகமாயிற்று. அதே காலத்தில் விவசாய இயந்திர உற்பத்தியும் மிக அதிகமாக முன்னேறியது. நிலத்தில் விளைச்சலும் அதிகமாயிற்று. எனினும், முக்கியப் பிரச்சினை தீரவில்லை. கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை; அதற்கு மாருகக் குறைந்தது. ஜனத்தொகை அதிகரித்ததால், தொடர்ந்து நிலங்கள் உட்பிரிவாக்கப்பட்டு வந்தன. 30 வருட காலத்தில் மொத்த நிலங்கள் 90 இலட்சத்திலிருந்து 120 இலட்ச மாகப் பெருகின. பணக்காரர்களாகிய குலக்குகள் (kulɔks) தவிர மற்ற விவசாயிகள் தொடர்ந்து பூர்வீக முறையிலேயே பயிர் செய்து வந்தனர். ஃஸார் காலத்து ரஷ்யாவின் கிராமப் பொருளாதாரம், இந்தியக் கிராமப் பொருளாதாரத்திற்கு நிகரான அமிசங்களையுடையது. அவை சிக்கனமற்ற நிலங்கள், தொடர்ந்து உட்பிரிவாக்குதல், மூலதனம் சிறிதும் இல்லாதவர்களால் துண்டு நிலங்கள் பயிரிடப் படுதல், விஞ்ஞான முறையின் முன்னேற்றங்களால் நன்மையடையா திருத்தல் ஆகியவையே.[1] ரஷ்யா செய்ததுபோல் நாம் நம் நாட்டில் பரிசோதனைகள் செய்தாலும் செய்யாவிட்டாலும், நம் கோடிக் கணக்கான மக்களுக்குச் சௌகரியமான வாழ்க்கையை நாம் அளிக்க வேண்டுமானல், இக்காலத்திலுள்ள சிக்கனமற்ற விவசாயத்தை அதற்கேற்பச் செழிப்புள்ள விவசாயமாக மாற்றவேண்டுமானல், நம் கொள்கையில் அடிப்படையான மாறுதலைச் செய்து, முன்பு செய்தது போலச் சிறிது சிறிதாக இங்குமங்கும் பரிசோதனைகள் செய்வதைக் கைவிடவேண்டும்.

நம் தேசீய அரசாங்கம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நுட்பமான விஷயங்களைத் தீண்டாமல் குறிப்பிட்ட நோக்கங் களோடு பெரிய விரிவான திட்டமொன்றை நிறைவேற்ற எண்ணியதென்பது பெருமைப்படத் தக்கதாகும். இதன் முக்கிய நோக்கம், பாமர மக்கள் பெற்றிருந்த வருந்தத்தக்க வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நாட்டின் உற்பத்தியை முழுவதும் உயர்த்துவதுதான். இது 'எதிர் காலத்தில் திட்ட மிடுவதற்குத் தக்க சூழ்நிலையை உண்டாக்குவதற்கான பூர்வாங்க முயற்சியே' என்று அழைக்கப்பட்டது.[2] ஆனல், இத்திட்டம் சில

[1] சீனவும் இந்தியாவைப் போன்ற பிரச்சினையை உடையது. 'சீனவில் கிராம மக்களின் அடர்த்தி பலவிடங்களில் மிக அதிகமாக உள்ளது. 12 மாகாணங் களில் 17,000 கிராமங்களில் ஆராய்ந்ததில், சதுர மைலுக்கு 1,500 விவசாய மக்கள் இருப்பது தெரிந்தது. இது பண்ணையில் உள்ள ஒவ் வொருவனுக்கும் அரை ஏக்கர் விதம் ஆகிறது. ஆக, இந்தியாவைப்போல இரண்டு பங்கு அடர்த்தி இப்பகுதிகளில் உள்ளது. ஆனல், சராசரிப் பயிர்விளைச்சலும், இரண்டு பங்கு அதிகமாக இருக்கிறது' (ஜ. நா. 'நிலச் சீர்திருத்தம்,' 1951, பக்கம் 7).

[2] திருமலை மேலே கூறியது, பக்கம் 258.

தெளிவான குறைகளையுடையதாயிருந்தது. திட்டக் குழுவே ஒத்துக்கொண்டிருப்பது போல, இத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த புள்ளி விவரங்கள் பெரும்பாலும் அரைகுறையானவையும் உத்தேசமானவையும் ஆகும். செல்வத்திலும் வருமானத்திலும் ஏற்றத் தாழ்வுள்ள முதலாளித்துவ அமைப்பின் கீழேயே அது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக் கருதியது.

இத்திட்டத்தை மதிப்பிடுவதிலும், அதன் உற்பத்தி இலக்குகளை மதிப்பிடுவதிலும் மற்றொரு விஷயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு விலைக் கட்டுப்பாடும், இணைப்பான விலைக் கொள்கையும், விலையை நிலைபெறுக்குதலும் வேண்டும். விவசாயத்தையும் தொழில்களையும் தனியார் துறையில் விட்டுவிட்டதால், அதிக உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளும் தொழிலதிபர்களும் அதிக விலையைப் பெறும் நோக்கத்துடன் இருப்பார்கள். ஆனால், அதிக உற்பத்தியினால் பொருள்கள் குவிந்து விலைகள் இறங்கினால், அது முக்கியமாக விவசாயிகளைப் பாதிக்கும்.[1] மேலும், சிறிய நிலங்களில் பெரும் பகுதி பயிரிடப்பட்டாலும், உணவுப் பொருள்களின் விலையிலும் வாணிபப் பயிர்களின் விலையிலும் வித்தியாசம் இருப்பதால், பயிர்கள் விளைவிக்கப்படுவதில் அடிக்கடி மாறுதல் உண்டாகிறது.

சில முக்கியமான, மிகத் தேவையான பண்டங்களுக்காவது குறைந்தபட்ச, அதிகபட்ச விலை நிர்ணயம் செய்வதாயிருந்தாலும், சேமித்து வைப்பதற்கு வசதிகளும் உதவித் தொகை அளிப்பும் செய்யவேண்டி யிருக்கும். இது அரசாங்கத்தின் சக்திக்கு மிஞ்சிய

[1] குறைந்தபட்ச விலையும் அதிகபட்ச விலையும் கொண்ட விலை நிலைபேறு கொள்கையின் அவசியத்தைத் திட்டக்குழு உணர்ந்திருந்தது. ஆனால், திட்டகாலத்தில், விலைகளின் போக்கு ஏற்ற இறக்கங்களுக்குட்பட்டிருந்ததால், அச்சம் உண்டாகித் தாற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதிக உணவு உற்பத்தியால் விலைகள் வீழ்ந்தன. ஆனால், பிறகு உற்பத்தியும் குறைந்து, பதுக்கலும் ஹேஷ்ய வியாபாரமும் உண்டாயின. அதனால் விற்பனைக்குரிய உபரி குறைந்தது. 1955 தொடக்கத்தில் விலைகள் கீழ்நோக்கும் நிலை மாறியது. 1955-ன் பிற்பகுதியில் விலை ஏறியது பரிகாரமாகக் கருதப்பட்டது. ஆனால், 1956-ல் இப்போக்கு தொடர்ந்து இருந்ததால் அச்சம் உண்டாயிற்று. அரசாங்கம் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு, ஹேஷ்யமாக வியாபாரம் செய்வதற்காகப் பதுக்கி வைப்பதைத் தடுக்கும் பொருட்டுப் பாங்கு கடன் வசதியைக் கட்டுப்படுத்தி, அதிகத் தானிய இறக்குமதிக்கு ஏற்பாடு செய்து, தானியங்களை விற்பனைசெய்ய நியாய விலைக் கடைகளைத் திறந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் கூறுவதாவது: 'உணவுத் தானியங்களில் போதிய இருப்புகளை வைத்திருப்பதற்கும், பாதகமான விலைப்போக்குகளைத் தடுப்பதற்குக் கட்டுப்பாடற்ற சந்தையில் வியாபாரம் செய்வதற்கும் முதன்மையளிக்கப்பட்டிருக்கிறது' (பக்கம் 40). ஒரு சரியான விலை இணைப்புக் கொள்கை இனிமேல்தான் உருவாக்கப்படவேண்டும். இப்போதுள்ள நம்து பொருளாதார அமைப்பில் இதை நிறைவேற்றுவதும் சிரமம். ஆகவே, அரசாங்க வியாபாரம் இன்றியமையாதது. இப்போது அது ஒரு அரசாங்க நடவடிக்கையாகிவிட்டது.

செலவை ஏற்படுத்தும். முதலாளித்துவ முறையைக் கைவிட்டுத் தனியாருக்கு இடமில்லாத பொருளாதாரத்தையும், எல்லா வற்றையும் தழுவிய அரசாங்கக் கட்டுப்பாட்டையும் உண்டாக்கினுல் தான் இது முடியும். சீதோஷ்ணம், காலநிலை ஆகியவற்றின் நிச்சயமற்ற நிலையைப் பொறுத்து விவசாய உற்பத்தி அமைந்துள்ள நாட்டில், இச் சங்கடங்கள் வெல்ல முடியாதவையென்றே தோன்றும். உற்பத்தியைத் தூண்டுவதற்கு அதிக விலைகளும், ஊட்டத்தின் தரத்தை விருத்தி செய்வதற்காக வாழ்க்கைச் செலவை ஏறவிடாமல் தடுப்பதும் ஒன்றுக்கொன்று முரணானவை.[1] அன்றியும், நிலங்களை ஒருங்கிணைப்பதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும், இயந்திர முறைகளால் விவசாயம் செய்வதும் விவசாயத்தில் வேலையின்மையை அல்லது போதிய அளவு வேலையின்மையை உண்டாக்கக்கூடும். ஜமீந்தார்களுக்குரிய நிலங்களை மாற்றிப் பங்கிடுவது இப் பிரச்சினையை மேற்போக்காகத்தான் தீண்டவல்லது. விவசாய அபிவிருத்திக்கு இரசாயன உரங்களை உபயோகிப்பதென்றால் விவசாயிகளின் வறுமை அதற்குத் தடையாக இருக்கிறது. முதல் திட்டத்திலேயே கட்டப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறார்கள். ஆனுல், விவசாயி அத் தண்ணீருக்குக் கொடுக்க வேண்டிய விலை, அவனுல் கொடுக்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. கிடைக்கும் தண்ணீரை முழுவதும் உபயோகிக்க முடியவில்லை.

இறுதியாக, கடந்த முப்பதாண்டுகளாகக் காணப்படும் வேகமான ஜனத்தொகை உயர்வானது, உணவு உற்பத்தி உயர்வை மிஞ்சிவிடும். இந்த நிலையை எதிர்பார்த்தே திட்டக் குழுவும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை ஓரளவு வற்புறுத்தி யிருக்கிறது.

எனினும், விவசாயக் கொள்கையினுல் மட்டும் விவசாயப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. எந்த நாட்டிலும் பொருளாதார வாழ்க்கை என்பது ஒரு முழுமையான அமைப்புடையது. ஆகவே, விவசாய மல்லாத மற்ற எல்லாத் தொழில்களின் வளர்ச்சியோடும் இணைக்கப்பட்டாலொழிய விவசாயத்தைப் பேரளவில் நன்கு அபிவிருத்தி செய்ய முடியாது. இவை இரண்டும் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட வங்கி முறை, செலாவணி முறை,

[1] K. T. மெர்ச்சன்ட் எழுதிய 'விவசாயத்தில் விலைகளும் உற்பத்திப் போக்குகளும்' மாநாட்டு வெளியீடு, இந்திய விவசாயப் பொருளாதாரச் சஞ்சிகை, மார்ச், 1955- காண்க. விவசாய விலைக் கொள்கையின் பல அமிசங்கள் விளக்கப்பட்டிருப்பதை விலை உட்குழுவின் அறிக்கையில் (கிருஷ்ணமாச்சாரி அறிக்கை, 1947) காண்க. இந்திய விவசாயப் பொருளாதாரச் சஞ்சிகையின் மாநாட்டு வெளியீடு (மார்ச், 1951). பக்கங்கள் 148—89-ஐயும், மேற்படி மார்ச், 1955-ஐயும் பார்க்க.

திறமையுள்ள கடத்துமுறை (transport), தொடர்பு வசதிகள் ஆகியவற்றைப் பொறுத்தே உள்ளன. சரியான நோக்கைப் பெறுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதார வாழ்க்கை முழுவதும், புதுப்பிக்கப்பட்ட சமூகக் கலாசார நிலையங்களோடும் வாழ்கையில் புதிய மனப்பான்மையோடும் இணைக்கப்பட வேண்டும்.

விவசாயக் கடன் சுமைப் பிரச்சினையைத் தீர்த்து இந்திய விவசாயிக்குப் புதிதாக வாழ்க்கையைத் தொடங்கச் சந்தர்ப்பம் அளித்தாலொழிய, இந்தியாவில் எந்த விவசாயச் சீர்திருத்தமும் வெற்றிபெற வாய்ப்பில்லை.

கடன்சுமைப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது? விவசாயிகளின் நன்மையைக் கருதி எல்லாக் கடன்களையும் முழுவதும் ஒப்புக்கொள்ள மறுத்தாலும் அல்லது ரத்து செய்துவிட்டாலும் (இக்கொள்கையைப் பண்டைய கிரேக்கர்களும் ரோமர்களும் கடைப்பிடித்ததும், நல்லது என்று நியாயமாகக் கருதப்படுவதும் ஆகும்) தாங்கள் கொடுத்த கடன் திரும்பி வராது என்ற கருத்தினுல் தங்கள் கடனைப் பத்திரப்படுத்தியுள்ள, மிகவும் பழிக்காளான சிறிய லேவாதேவிக் கூட்டத்தாருக்கு இது அதிகத் துன்பத்தைத் தராது. நமது அரசியல் சட்டம் தனியார் சொத்தைப் புனிதமானது என்று கருதி உத்தரவாதம் அளித்திருப்பதால், நம் தேசீய அரசாங்கம் இதை மிகவும் கடுமையான நடவடிக்கை என்று கருதி இதற்கு இணங்காது. ஆதலால், விவசாயக் கடனைத் தீர்ப்பதற்கு வேறு வழிகள் கூறப்படுகின்றன. பல இராச்சியங்களில் கடன் சமரசக் குழுக்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. இவை இரு தரப்பாரின் சம்மதத்தினுலும் அசல் தொகையில் 50 முதல் 30 சதவீதம் வரையில் குறைத்துவிட்டன. இன்று பெயரளவில் ரூ. 900 கோடியாக உள்ள விவசாயக் கடனை 25 சதவீதம் குறைத்துவிட்டால், அமைதியான சமூகத்தில் புரட்சி உண்டாகக்கூடிய அளவுக்குக் கடன் கொடுப்போரிடையே அதிருப்தி ஏற்பட்டுவிடாது.[1] இக் கடுமையான

[1] மக்கள் திட்டம் இப்போதுள்ள கடனை 25 சதவீதமாகக் குறைப்பதற்கும், அரசாங்கமே இக்கடனைத் திருப்பித் தருவதற்காக 40 வருடங்களில் தானுகத் தீர்ந்துபோகக்கூடிய 3% வட்டிக்குப் பத்திரங்களை வெளியிட வேண்டுமென்றும் யோசனையைக் கூறியது. இதற்கு மாருகப் பம்பாய்த் திட்டம் கடன் பிரச்சினையைப் பெரிதாகக் கருதாமல், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிக்கு உதவ வேண்டும் என்று கூறியது. திட்டக்குழு இப்பிரச்சினை இருப்பதாகவே கருதாமல் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. ஒரு பிரச்சினையைப் புறக்கணிப்பதுதான் அதைத் தீர்க்கும் நல்ல வழி என்று அவர்கள் கருதியதாக நாம் எண்ணவில்லை. விரிவான கிராமக் கடன் ஆராய்ச்சி அறிக்கைகூட இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை, விலைகள். அதிகமாக உள்ள இன்றைய நிலையில் இது ஒரு பிரச்சினையன்று என்று அது தவருகக் கருதியிருக்கக்கூடும். ஆனுல், விவசாயச் சீர்திருத்தத்திற்கு எப்பெழுதும் உள்ளதும், அதிகரித்துக்கொண்டே வருவதும் ஆகிய விவசாயக் கடன் சுமை ஒரு பெருந் தடையாக இருக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறேம்.

நடவடிக்கைக்கு எதிராகக் கூறப்படும் ஒரு தடை என்னவென்றால், விவசாயிக்குக் கடன் வசதி கிடைக்காமல் போய்விடும் என்பது, 'தொழில் துணிவு உள்ளவர்கள் மூலதனம் பெற்றுத் தங்கள் நிலத்தை அபிவிருத்தி செய்வதைக் கடினமாக்கித் திறமையற்றவர்களை நிலத்தை விடாமல் பயிர் செய்துகொண்டிருக்கும்படி விட்டு, ஒருவன் தருமத்திற்குக் கட்டுப்பட்டுத் தன் பாக்கிகளைக் கொடுத்தும் கடனைத் திருப்பித் தந்தும் வாழும் தன்மையை அழித்துவிடுகிறது' என்பது ஆகும்.[1] இத்தடைகள் எல்லாம் தலையிடாக் கொள்கைமீது முதலாளித்துவத்தை நிலைபெறச் செய்வதற்கான வழிகளே ஆகும். இந்த அமைப்பே இருப்பினும், கடன்களைக் குறைத்துவிடுவதால் விவசாயிகளின் வழக்கமான அடிப்படைப் பண்பு மாறித் தலைமுறை தலைமுறையாக இருக்கும் ஒப்பந்தத்தின் புனிதத்தன்மையை அவர்கள் கடைப்பிடிக்காமல் போய்விடுவார்கள் என்று நாம் நினைக்கவில்லை.

கடன்களை இப்படிக் குறைத்த பிறகு நில அடமான வங்கிகள் மூலமாகத் தீர்க்கப்பட்டு, இறுதியாக ரிசர்வ் பாங்கு அதற்கு நிதி வசதி செய்யலாம். இதைப் பிறகு விவசாயிகள் பல சிறிய தவணைகளாகப் பல வருடங்களில் திருப்பிக் கொடுக்கலாம். இப்படிக் கிடைத்த கடன் தொகை ரூ. 200 கோடி முதல் ரூ. 250 கோடியாக இருப்பின், அது இந்திய ரிசர்வ் பாங்கின் கடன் சாதனத்திற்குட் பட்டதே. ரிசர்வ் பாங்கு தேசிய மயமாக்கப்பட்டதால் இதில் ஒரு தடையும் இருக்கிறது. ஆனால், இந்தச் சுமையை முற்றிலும் ரிசர்வ் பாங்கு மீதே போடவேண்டியதில்லை. கடன் சமரசக் குழுக்களால் கடன்கள் குறைக்கப்பட்ட பிறகு, விவசாயிகளின் கடன்களை நில அடமான வங்கிகள் ஏற்றுக்கொண்டு, அவற்றைக் கடனாளிகளிட மிருந்து பல வருடங்களில் தவணைகளாகத் திரும்பப் பெறலாம்.

ஆனால், இது நம் பொறுப்புள்ள அரசாங்கத் தலைவர்களை எதிர் நோக்கியுள்ள ஒரு பெரிய வேலையின் ஆரம்பமாகும். இயந்திர முறைகளாலும் விஞ்ஞானக் கருவிகளாலும் விவசாய உற்பத்தி செய்வதற்கு நம் நாடு தொடங்கினால், அரசாங்கமே விதைகளையும், கருவிகளையும், உரங்களையும் அளிக்க வேண்டும். விவசாயிகளுக்குப் புதிய முறைகளையும் புதிய கருவிகளையும் அறிமுகப்படுத்துவதற்குப் பிரசாரத்தையும் கல்வியையும் ஏற்பாடு செய்யவேண்டும். மிகச் சிறிய நிலங்களும் சொத்துக்களும், சாதனங்களையும், கருவிகளையும் பயனுள்ள முறையில் திரட்டுவதற்காகக் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்க்க வேண்டும். நிலவரியை இப்போது கண்டிப்பாக வசூலிக்கும் முறைக்குப் பதில், விவசாயிகளோடு அன்றாடம் நெருங்கிப் பழகி,

[1] சர் M. L. டார்லிங்கின் தலைமைப் பேருரை. முதல் மாநாட்டு நடவடிக்கைகள், இந்திய விவசாயப் பொருளாதாரச் சங்கம், 1940, பக்கம் 12.

அவர்கள் உற்பத்தி செய்துள்ளதில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைக்கு நியாயமாக வேண்டிய அளவை விட்டுவைக்க வேண்டும். இப்போது நாம் கூறும் கூட்டுறவு விவசாய முறை முற்றிலும் புதியதன்று. இந்தியாவில் கிராம சமூகம் முன்பே ஒரு பொருளாதார அலகாக இருந்து தன்னிறைவான வாழ்க்கையையும், கூட்டுறவையும், கூட்டு வாழ்க்கையையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டிருந்தது. தனியார் தொழில் துணிவில் உள்ள குறைகளை ஈடுசெய்வதற்கு அரசாங்கக் கடன் பெற்று, இப் பழைய பொருளாதார நிறுவனங்களின்மேல் கூட்டுறவுப் பண்ணைக் கொள்கைகளை நிலைபெறச் செய்ய முடியும்.

1917 புரட்சியின்போது ரஷ்யா இதுபோலவே சிறிய உழவர்களின் நாடாக இருந்தது. அவ் உழவர்கள் அதிக வறுமையில் ஆழ்ந்து மிகவும் கடன்பட்டிருந்தார்கள். அவர்கள் நிலத்தில் உழைக்கும் அடிமைகள் போலவே இருந்தனர். 15 முதல் 20 வருடங்களுக்குள் நாட்டின் விவசாய மனப்பான்மை முழுவதும் மாறிவிட்டது. விவசாயிகள் தங்கள் நிலத்தையும், மாடுகளையும், கருவிகளையும் ஒன்றாகத் திரட்டும்படி தூண்டப்பட்டார்கள். சோவியத் யூனியனில் உள்ள விவசாயக் குடும்பங்களில் பாதிக்குமேல் வற்புறுத்தலாலும், பிரசாரத்தினாலும், பொருளாதாரத் தூண்டுதல்களினாலும் சமூகப் பண்ணைகளில் (Collective farms) சேர்க்கப்பட்டார்கள். பயிர் செய்யப்பட்ட மொத்த நிலத்தில் 70 சதவீதத்திற்குமேல் அரசாங்கத்தின் கீழோ, கூட்டுப் பண்ணைகளின் கீழோ வந்தன. இந்தியாவைப் போன்றே கல்வியற்று ஒடுக்கப்பட்டிருந்த இலட்சக்கணக்கான விவசாயிகளைக் கொண்டிருந்த ரஷ்யாவில் இது முடியுமானால் (இவ்வாறு செய்யப்பட்டதாக நாம் அறிகிறோம்), அதே போலப் பண்டை முறைகளைக் கைவிட்டுக் கூட்டுறவு முறையில் திட்டமிட்டு நவீன விஞ்ஞானரீதியாக விவசாயம் செய்வதற்கு அரசாங்க உதவியும் கட்டுப்பாடும் பெற்று நம் விவசாயத்தை மாற்றியமைத்தல் முடியாத காரியமன்று. இவ்வாறு நம் விவசாயத்தை அடியோடு மாற்றியமைப்பதற்குப் புல்லுருவிகள் போன்ற நிலப் பிரபுத்துவத்தை முற்றிலும் ஒழித்து நிலத்தை மாற்றிப் பங்கிடவேண்டும்.

அன்றியும், சமூக அமைப்பின் உச்சியில் உள்ள ஜமீந்தார்களிடம் உள்ள நிலம் முழுவதுங்கூட, கீழே உள்ள சிறிய விவசாயிகள், நிலமற்ற உழைப்பாளிகள் ஆகியவர்களின் தேவைக்குப் போதாது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலும், நிலவுரிமையை மாற்றிப் பங்கிடுவது மட்டும் பயிர் செய்யப்படும் அலகைப் பெரிதாக்கி, நம் விவசாய அமைப்பில் உள்ள ஒரு பெருங் குறையை நீக்கிவிடாது. நிலமற்ற உழைப்பாளிகளில் பெரும்

பாலோருக்கு அது நிலத்தையோ, அதிக வேலையையோ அளிக்காது. நம் நாட்டில் மக்களுக்கும் நிலத்திற்கும் உள்ள பாதகமான விகிதத்தை இத்தகைய சீர்திருத்தத்தினுல் மாற்றிவிட முடியாது.[1] நிலச்சீர்திருத்தம் நில உரிமை முறையை மாற்றுவதோடு முடிவடையாது. இது தொடர்ந்து நிகழும் ஒரு வேலே. இப் பிரச்சினை கல்வி பற்றியதே அன்றி அவ்வளவாகப் பொருளாதாரத்தையும் நுட்பத் தொழிலேயும் பற்றியதன்று. கல்வியானது மக்களேச் சீர்திருத்திப் பிறகு நிலத்தைச் சீர்திருத்தவேண்டும். 'அது மனிதனேத் தன்னுடைய எண்ணம் நிறைந்த தனிமையிலிருந்து விடுவித்து, தனது நிலத்தை மற்ற விவசாயிகளோடு சேர்ந்து கூட்டு நடவடிக்கையாக விவசாயம் செய்யும் அளவுக்கு உயர்த்த வேண்டும். இது இயல்பானதும், இதன் இயற்கையான விளேவு விவசாயக் கூட்டுறவே என்பதையும் அவன் உணர வேண்டும்.'[2]

தனியார் முனேப்பினுலும் முயற்சியாலும், வழக்கமான தலேயிடாக் கொள்கை முறையில் அலட்சியமாக வேலே செய்வதாலும் விவசாயப் பிரச்சினேகளேத் தீர்க்க முடியாது என்பது நமது துணிவு. இப் பிரச்சினேகள், பல தலேமுறைகளாகத் தவறுகளும் அலட்சியமும் செய்ததன் விளேவாகத் திரண்டுள்ள பளிங்கு போன்ற பொருள்களே. இவற்றுள் சில, நிறுவனங்களின் விளேவுகள். கடந்த காலத் தளேகளிலிருந்து நம் விவசாயத்தை விடுவிப்பதற்கு மக்களின் முழு அறிவும் சாதனங்களும் வேண்டும்; சமூக அமைதியே அசைந்துவிட்டாலும், விடாமல் உறுதியாக நம் நோக்கத்தை அடைய வேண்டும்.

புதிதாகத் தொடங்கி, மக்கள், பொருள்கள் ஆகிய நாட்டின் மொத்தச் சாதனங்களேக்கொண்டு, திட்டமிட்டுப் பொருளாதார அபிவிருத்தியடைய முடியும் என்று நாம் இதுவரையில் எண்ணினேம். இப் பிரச்சினேயை நாம் மிகவும் எளிதாக்கி, இதற்குள்ள நோயின் தன்மையையும் எளிதென்று கருதினேம். நமது இன்றைய விவசாய அமைப்பின் அடிப்படையில், கடந்த காலத்தில் நமது அந்நிய ஆட்சியாளர்களின் புறக்கணிப்பும், நம் விவசாயிகளின் பிற்போக்கும், சிக்கனமற்ற தன்மையும் ஆகிய குறைகள் உள்ளன என்றும், ஆனுல், இன்னும் ஆழமான, பரந்த காரணங்களும் இருக்கக்கூடும் என்றும் நாம் முன்பே கூறினேம். சுருங்கக் கூறின், இதுகாறும் பிழைப்புக் கருதி விவசாயம் செய்துவந்த நம் விவசாயிகள், ஒரு நூற்ருண்டில்

[1] ஒப்பிடுக: 'எவ்வளவு சிறப்பாக முயன்ருலும், இன்னும் சில வருடங்கள் வரையில் விவசாயத்தில் உழைப்பாளிகளின் தொகை அதிகரிப்பதை நாம் தடுக்க முடியாது' (இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், பக்கம் 14).

[2] 'விவசாயச் சீர்திருத்தத்திற்கும், விவசாய அபிவிருத்திக்கும் இடையில் உள்ள தொடர்', F. A. O. Rome, 1953, பக்கம் 44.

பெரிய பரிவர்த்தனை எல்லைக்குள் கட்டாயமாகப் புகுத்தப் பட்டுவிட்டனர் பொருளாதார மாறுதல்களால் அவர்கள் தம் நிலத்தின் சக்தியையும் தகுதியையும் கருதாமல், அதில் உணவுப் பயிர்களையோ, உணவு அல்லாத பயிர்களையோ பயிர் செய்ய வேண்டிய தாயிற்று. பிழைப்புக் கருதி நடத்தப்படும் விவசாயத்தைத் தனியார் தொழில் துணிவு முறையில் உடனே மாற்றியமைத்து, அமெரிக் காவிலும் கனடாவிலும் இருப்பது போன்ற உயர்ந்த திறமையும் சிறப்பும் கொண்ட விவசாய உற்பத்தி முறையாகச் செய்ய முடியாது. இந்தப் பிழைப்புக் கருதிய விவசாயம்தான் பிரிட்டிஷ் ஆட்சியில் பன்னாட்டுச் சந்தைக்கு இழுக்கப்பட்டு, பருத்தி, சணல், சிறுசணல் விதை, நிலக்கடலை ஆகியவற்றைப் பயிர் செய்து, இறக்குமதி செய்யப் பட்ட மலிவான உற்பத்திப் பொருள்களுக்கும் பணிகளுக்கும் ஈடாக ஏற்றுமதி உபரியை உண்டாக்கும்படி செய்யப்பட்டது.

பிழைப்புக் கருதிய உற்பத்தியை உலகச் சந்தையில் உள்ள போட்டியோடு ஈடுகொடுக்கும்படி செய்வதுதான் இந்தியாவை எதிர் நோக்கியுள்ள பிரச்சினை என்றாலும், திட்டக் குழு கொண்டிருக்கும் சாமானிய நம்பிக்கையால் அதிகப் பயன் இல்லை. உற்பத்தி இலக்குகளை விதித்து அவற்றை யடைந்து, அரைப் பட்டினியிருக்கும் மக்கள் சிக்கனம் செய்து மேலும் பட்டினி கிடந்து பொருளை மிச்சப் படுத்தி, பொதுமக்களின் உற்சாகத்தைத் தூண்டி, தொழிலதிபர்களை மக்களின் தன்னலமற்ற ஊழியர்களாக மாற்றிவிட்டால் அக்குழு தன் இலட்சியத்தை நோக்கிச் செல்ல முடியும் என்று கருதியது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்தின் முன்னேற்றம் அவர் களுடைய நம்பிக்கையை நிறைவேற்றவில்லை.[1] கடந்த இரண்டு வருடங்களில் ஜனத்தொகை உயர்வுக்கேற்ப இல்லாமல் உணவுத் தானிய உற்பத்தியானது, வெள்ளத்தாலும் காலநிலை மாறுபாடு களாலும் குறைந்திருப்பது—இக் குறைவைப் புள்ளிவிவரங்கள் மறுக் கின்றன—திட்ட இலக்குகள் விவசாயத்துறையில், குறிப்பாக உணவுத் தானியங்களில் அதிகமாகவே நிறைவேறிவிட்டன என்பதனால் உண்டான நம்பிக்கையைக் குறைத்துவிட்டது. இரண்டாம் திட்டத் தில், இந்தியாவின் நீண்ட காலத் துன்பங்களாகிய வறுமை, வேலை யின்மை முதலியவற்றை விரைவாகத் தொழில் மயமாக்காவிட்டால் போக்க முடியாதென்று கருதியதனால், தொழில் மயமாக்குவதை வற்புறுத்தியிருப்பினும், முதல் திட்டத்தைவிட இத் திட்டத்தில் விவசாய உற்பத்திக்கான மொத்த இலக்குகளும் செலவுகளும் அதிக

[1] ஒப்பிடுக: 'முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்தி பெருகியிருப்பதற்கு அறிகுறிகள் உள்ளன. அனுகூலமான பருவங்கள் உதவி செய்துள்ளன. எனினும், நிலைபேறில்லாத தன்மை காணப்படுகிறது.' (முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆராய்ச்சி, பக்கங்கள் 100-01).

மாகவே உள்ளன. 'இண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், விவசாயத்தில் அதிக உற்பத்தி, விவசாயப் பொருளாதாரத்தைப் பல துறைகளாகப் பிரித்தல், விவசாய உற்பத்திக்காகத் திறமையும் முன்னேற்றமும் உள்ள முறையை அமைப்பது ஆகியவையே மிக அவசரமாகச் செய்யவேண்டிய வேலைகள்' என்று திட்டக் குழு கூறுகிறது.[1]

இப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்க்கும் வழிகளைவிட்டுப் பேரளவு அடிப்படைத் திட்டத்தினுல் என்ன சாதிக்க முடியும் என்பதைப் பார்ப்போம். விவசாயக் குழுக்கூட ஒரு சமயத்தில் கீழ் வருமாறு யோசனை கூறத் துணிவு பெற்றது: 'பல நூற்றுண்டுகளாக உள்ள சோம்பலை ஒழிக்கவேண்டுமானுல், அரசாங்கத்தின் எல்லாச் சாதனங்களையும் கிராம முன்னேற்றத்திற்காகப் பயன் படுத்த வேண்டும்.' இந்தியாவில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவது, ஒரு நுட்பத் தொழில் பிரச்சினை மட்டுமன்று. அது முதன்மையான ஒரு சமூக, பொருளாதாரப் பிரச்சினை. நமது சமூக, பொருளாதார அமைப்பைத் திட்டமிட்டு மாற்றியமைப்பதன் மூலம் தான் இப்போதுள்ள நிலைமையில், நுட்பத்தொழில் சாத்தியக் கூறுகளைச் செயல்முறைப்படுத்த முடியும். டாக்டர் பர்ன், தம் அறிக்கையில் இதை உணர்ந்து கூறுகிறுர்: 'இப்போது உற்பத்தி அலகுகள் பெரியவையாய் இருந்தால்தான் நவீன நுட்பத்தொழில் முறைகளைப் பயன்படுத்த முடியும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலுங்கூட, அலகுகளை ஒன்ருகச் சேர்த்துக் கூட்டாக வேலை செய்யாவிட்டால், நுட்பத்தொழில் அபிவிருத்திகள் நடைபெருஎன்பதையாவது ஒப்புக்கொள்ள வேண்டும்.'[2]

மக்களின் முன்னேற்றத்திற்கு இவ்வாறு திட்டமிட்ட விவசாய அபிவிருத்தி வேண்டும் என்பதை ஒப்புக்கொள்வது ஒருபுறமிருக்க, விவசாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தனியார் தொழில் துணிவு தவறிவிட்டது என்பதற்குச் சரித்திரம் நீண்டகாலமாகச் சான்று பகர்ந்திருக்கிறது. இங்கிலாந்தில், விவசாயி உற்பத்தி செய்யும் பாலும் உருளைக்கிழங்கும் வரையறுக்கப்பட்டுவிட்டன. அவன் கோதுமையையும் சர்க்கரைக் கிழங்கையும் (sugar beet) உற்பத்தி செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிருன். அமெரிக்காவில், உதவித் தொகை அளிக்க மறுப்பதாகப் பயமுறுத்தி, அவன் கோதுமையை உற்பத்தி செய்யும்படி தூண்டப்படுகிருன். 1954-ல் கோதுமை விளையும் பரப்பு 20% குறைக்கப்பட்டது. இறுதிநிலை நிலத்தைப் (marginal land) பயிரிடாமல், மற்ற நிலங்களை அதிகமாகப் பயிரிடும் போக்கை

[1] 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்', பக்கம் 178.

[2] அறிக்கை, பக்கம் 120.

மாற்றுவதற்கு ஒவ்வொரு விவசாயியும் விற்கக்கூடிய கோதுமையின் அளவு ஏக்கருக்கு இவ்வளவு என்று வரையறுக்கப்பட வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது.[1] கட்டுப்பாடு இல்லாதபோதும், விவசாயி தனக்குச் சிறந்தது என்று கருதும் பயிரை விளைவிக்க முடியாது. அமெரிக்காவில் கடன் வாங்கி விவசாயம் செய்யும் சிறிய விவசாயி, தன் கடன்காரர்கள் ஒப்புக்கொள்ளும் பயிர்களைத்தான் பயிரிட வேண்டும். ஸ்தல பாங்கு நிருவாகி, விற்பனையாகக் கூடியதாக அப் பயிர் இருக்கவேண்டுமென்று விரும்புவான். விவசாயியே உட் கொள்ளக்கூடிய உணவை விளைவிக்கக் கடைக்காரன் ஒப்புக்கொள்ள மாட்டான். கட்டுப்பாட்டிற்கும் கட்டுப்பாடின்மைக்கும் இடையில் நம் விருப்பம் ஒன்றுமில்லை. முழுச் சமூகத்தின் நன்மையைக் கருதி ஒரு மத்தியக் குழு கட்டுப்பாடு செய்வது அல்லது குறுகிய மாறு பட்ட நன்மைகளைக் கருதிய பல சிறிய குழுக்கள் கட்டுப்பாடு செய்வது ஆகிய இரண்டுக்கும் இடையில்தான் நம் விருப்பம் உள்ளது.

விவசாயத் திட்டமிடுவதற்கு முதலில் சமன்செய்யப் பட்ட உணவின் அடிப்படையில் நம் ஜனத்தொகைக்கு வேண்டிய உணவுத் தேவைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அடுத்த 10 அல்லது 20 வருடங்களில் அதிகமாகும் ஜனத்தொகைக் கேற்ப, அதிகமாக வேண்டிய உணவின் அளவையும் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். இரண்டாவதாக, நிலத்தின் தன்மைக்கும் அமைப்புக்கும் ஏற்ப உணவுப் பயிர்களைப் பிராந்தியவாரியாக ஒதுக்க வேண்டும். இத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானுல், அகில இந்திய அடிப்படையில் அமைய வேண்டும். அதில் நாட்டின் மக்கள் தொகை முழுவதன் நன்மையில் குறுக்கிடும்படியாக இராச்சியங் களின் சுய ஆட்சியோ, இராச்சியங்களுக்கிடையே உள்ள பிணக்கு களோ வரக்கூடாது. கடந்த சில ஆண்டுகளில் நாம் பெற்ற அனுபவத்திலிருந்து இது மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும். இராச்சியங்களில் சுதந்திரமான பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவதால், அகில இந்திய அடிப் படையில் அன்றி உணவுப் பிரச்சினை தீர வழியில்லை. மூன்ருவதாக, ஒவ்வொரு கிராமத்திலும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவற்றின் மூலம் விவசாயி தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பயிர்களுக் குரிய விதைகளையும், உரங்களையும், கருவிகளையும் பெறவேண்டும்.[2] விவசாயிக்கு உழவு முறைகளையும் நுட்பத்தொழிலையும் பற்றிய செய்திகளை அளித்து, உற்பத்தியைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை

[1] The Economist, June 12, 1954, பக்கம் 910.

[2] விதைகளையும் உரங்களையும் விலையில்லாமலோ, மிகக் குறைந்த விலைக்கோ கொடுத்தாலொழிய, விவசாயிகளின் வறுமை அவற்ருல் அவன் நன்மை யடைவதற்குத் தடையாக உள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

உயர்த்துவதற்கு விவசாய விஸ்தரிப்பு அல்லது ஆலோசனை கூறும் பணி அவசியம்.[1]

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதோடு நின்றுவிடாமல், கூட்டுறவு உற்பத்திக்கும், அரசாங் கத்தினுல் அளிக்கப்படும் பொதுச் சாதனங்களை உதவியாகப் பெற்றுப் பேரளவில் விவசாயம் செய்வதற்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டம், விவசாயிகள் தாமாக விரும்பிக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களை அமைப்பதற்கு ஊக்கமும் உதவியும் அளிப்பதற்கான பல யோசனைகளைக் கூறியது. இன்று நம் நாட்டில் இத்தகைய சங்கங்கள் 1,000 உள்ளன. ஆனுல், இவற்றில் சிலதாம் வெற்றி பெற்றுள்ளன. பல ஊக்கமாகத் தொடங்கப்பட்டுத் தோல்வியடைந்து கைவிடப்பட்டன.[2] கூட்டுறவு விவசாயத்தில் கண்ட நிதரிசனமான பலன் ஊக்கம் தரக்கூடியதாய் இல்லை யாயினும், சுமார் அடுத்த பத்தாண்டுகளில் விவசாய நிலங்களில் பெரும் பகுதியைக் கூட்டுறவு விவசாயத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று திட்டக் குழு சிபாரிசு செய்துள்ளது. ‘கூட்டுறவுத் துறையைப் பெரிதாக்கிக் கிராமத்தில் உள்ள நிலம் முழுவதையும் சமூகத்தின் கூட்டான பொறுப்பாகும்படி செய்வது’ நீண்டகாலக் கொள்கையாகும். (‘இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்’, பக்கம் 206). இதற்கு மாருக, அக்குழு, ‘விவசாயிகளுக்குச் சொந்த உரிமை அளிக்கும் நோக்கத்தோடு நிலச்சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்’ என்றும், ‘விவசாயிக்குச் சொந்த உரிமை என்ற முக்கிய அடிப்படை மீது விவசாயப் பொருளாதாரத்தை நிறுவுவதற்கு இவை

[1] பார்க்க : ‘ஐரோப்பிய நாடுகளில் விவசாய விஸ்தரிப்புப் பணியின் விளைவு’ F. A. O., 1954. ஒப்பிடுக : ‘அதிக உற்பத்தியையும், கிராம வாழ்க்கைத் தரத்தையும் உயர்ததுவதற்கும், விஸ்தரிப்புப் பணியை ஏற்படுத்தியிருப்பது ஒரு புதிய முனைப்பாகும். இது கிராம மக்கள் தங்கள் பிரச்சினைகளை உணரு வதற்கும், அவர்கள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் என்னவென்பதைக் காட்டுவதற்கும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இது கிராம மக்களுக்குத் தங்கள் பிரச்சினைகளைத் தீர்மானித்துக் கொள்ளவும் அவற்றைத் தீர்க்கவும் வழி காட்டுவதோடன்றி, இப்படிச் செய்வதற்கு அவர்களே முன் வரும்படி ஊக்க மளிக்கும்.’ (முதல் ஐந்தாண்டுத் திட்டம், பக்கம் 232.)

[2] பம்பாயில் கூட்டுறவு விவசாய டிபுடி ரிஜிஸ்டிராராக இருந்த கஸ்பேகர் கூட்டுறவு விவசாயத்தைப்பற்றி ஒரு குறிப்பிடததக்க விமரிசனத்தை அளித் திருக்கிருர் : ‘நம் விவசாயிகளில் பலருக்கு ஒரே முக்கியச் சொத்து அவர் களுடைய சிறிய நிலம்தான். தனக்குத் தெரியாத ஒரு புதிய வாழ்க்கை யினுல் அடையப்போகும் நன்மையைக் கருதி, அவன் தன் நிலததைச் சமூகத்தோடு சேர்ப்பதற்காகக் கொடுத்துவிடுவது பெரிய தியாகமாகும். பரிசோதனைகளுக்கு மக்களை இரையாக்க வேண்டுமானுல், அரசாங்கம் அவர்களை அதில் ஈடுபடும்படி கேட்பதற்கு முன்னுல், அப் பரிசோதனை தோல்வியடையாது என்ற காப்புறுதியை அவர்களுக்கு முழுவதும் அளிக்க வேண்டும். இது அரசாங்கம் செயயவேண்டிய குறைந்தபட்சச் செயல்’ [‘கூட்டு விவசாயம் - சில ஆராய்ச்சிக் கருத்துகள்’ ராஜ்கிருஷ்ணு, L. C. ஜெயின், G. கிருஷ்ணு எழுதியதிலிருந்து (1956) மேற்கோள் காட்டப்பட்டது. பக்கம் 30.]

நடவடிக்கைகளாகும்' என்றும் கூறுகிறது (மேற்படி, பக்கம் 179). 'நிலம் உழுபவனுக்கே' என்ற கோஷத்தை நிறைவேற்றுவதற்கு, இக்குழு, விவசாயிக்குச் சொந்த உரிமை வேண்டுமா, அல்லது வேறு ஏதாவதொரு விவசாய அமைப்பு வேண்டுமா என்பதைப்பற்றித் தன் மனத்தில் தெளிவாக்கிக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. உண்மையில் உழுபவனுக்கு நிலவுரிமை யளித்துவிட்டால் அவன் கூட்டுப் பண்ணையில் சேர விரும்பமாட்டான். ரஷ்யா கூட்டுப் பண்ணைகளை அதிகமாக அமைத்தபோது, ஒரு வீட்டில் உள்ள கூட்டு விவசாயிகளின் தனி உரிமையை ஒப்புக்கொள்வது உசிதம் என்று கருதியதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இவர்களுக்குத் தங்கள் சொந்த விவசாயத்திற்காக ஒரு துண்டு நிலமும், பால்பண்ணைப் பொருள்களுக்காகப் பிராணிகளை வளர்ப்பதற்கு ஒரு நிலமும் ஒதுக்கப்பட்டன.

அண்மைக் காலத்தில் கூட்டுறவுத் துறையில் சீனாவின் வெற்றி நம் கருத்தைக் கவர்ந்துள்ளது. சீனாவைப் பின்பற்றும்படி நமக்கு அறிவுரை கூறுகிறார்கள். 'கூட்டுப் பண்ணைகளை அமைத்ததால், நாட்டுப்புறங்களில் உள்ள மனித சாதனத்தையும் இயற்கைச் சாதனங்களையும் திரட்ட முடிந்தது. இவ்வளவு பயனுள்ளதாக வேறெந்த வழியாலும் இப்படிச் செய்திருக்க முடியாது' என்று கூறப்பட்டுள்ளது.[1] சீனாவுக்குச் சென்ற இரண்டு தூதுக் குழுக்களின் அறிக்கையிலும் கூட்டுறவுப் பண்ணையை மேற்கொள்ளும்படி வன்மையாகச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. 'கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய அபிவிருத்திக்குப் பல வழிகளில் உதவும். நாட்டின் பல பகுதிகளில் நிலமற்ற உழைப்பாளிகளின் பிரச்சினை கூட்டுறவுக் கிராம நிருவாகத்தினாலன்றி வேறுவிதமாக விரைவில் தீர்க்கப்பட முடியாது என்று நாம் நினைத்தால், விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது மேலும் அவசரமாகிறது.'[2]

விவசாயக் கூட்டுறவுபற்றிய நமது சீன தூதுக் குழுவின் பெரும்பாலோருடைய அறிக்கையும் கூட்டுறவுப் பண்ணையின் வெற்றிபற்றி உற்சாகமாகக் கூறுகிறது: 'மூலதன சாதனங்களை மேலும் அதிகமாகப் பயன்படுத்தவும், செலவுகளைக் குறைக்கவும், சேமிப்புகளைத் திரட்டவும், மூலதனத்தைத் திரட்டவும் கூட்டுறவு விவசாயம் உதவும்.'[3] கூட்டுறவு விவசாயத்தைக் காந்தியடிகள்

[1] 'விவசாயத் திட்டம் நுட்பத்தொழில் பற்றிய சீன தூதுக்குழுவின் அறிக்கை', 1956, பக்கம் 191.

[2] மேற்படி, பக்கம் 193.

[3] அறிக்கை, 1957, பக்கம் 182.

ஆதரித்திருப்பதாக அவ்வறிக்கை 1942, பிப்ரவரி 15-ல் 'ஹரிஜன்' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளது.[1]

நிலச் சீர்திருத்தத்திலும் கூட்டுறவு விவசாயத்திலும், சீனு, ரஷ்யா, மெக்ஸிகோ அல்லது இஸ்ரேலியன் அனுபவத்திலிருந்து நன்மையடையக் கூடும். ஆனுல், நாம் அவர்களுடைய கூட்டுறவு விவசாய முறையைப் பின்பற்ற வேண்டும் என்று கூறும்போது, நம் சூழ்நிலேயின் தன்மைகளே நாம் முற்றிலும் மறந்துவிடக்கூடாது. இதற்கு மாருக, இந்தியக் கூட்டுறவு யூனியன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில்; நாம் கூட்டுறவு விவசாயத்தை மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.[2] சிறிய சிக்கன மற்ற நிலங்களேப் பயிர் செய்வதில் உள்ள துன்பங்களேப் போக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கூட்டுறவு விவசாயம் ஒரு வழி யாயினும், பெரிய பரப்பையும் மிகவும் வேறுபட்ட வட்டாரங்களேயும் உடைய நம் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான விவசாய அமைப்பு இருக்க முடியாது. ஆங்காங்குள்ள நிலேமைகளுக்கும் நோக்கங்களில் உள்ள வேறுபாடுகளுக்கும் ஏற்ப, அதன் மாதிரியை மாற்றிக்கொள்ள வேண்டும்.[3] கிராமதான இயக்கத்தில் நாம் அண்மையில் பெற்ற அனுபவத்தினுல், கிராம மக்கள் கூட்டுறவு விவசாயத்தை நடத்த விரும்பவில்லே என்றும், தங்கள் நிலத்தைத் தனியாகவே பயிர் செய்ய விரும்புகிருர்கள் என்றும் தெரிகிறது. இறுதியாகப் பார்த்தால், 'கூட்டுறவு விவசாயம் மக்களேப் பொறுத் துள்ளதே அன்றி, அதற்குள்ள வசதிகளேப் பொறுத்து அவ்வளவாக

[1] மேற்படி பக்கம் 184.

[2] ராஜ்கிருஷ்ணு, L. C. ஜெயின், G. கிருஷ்ணு எழுதிய மேற்கூறிய நூல்.

[3] டாக்டர் ஆட்டோஷீலரால் 'கூட்டுறவு முறையில் தனியாள் விவசாயம்' என்பதில் ஒரு புதிய யோசனே கூறப்பட்டிருக்கிறது (அவர் எழுதிய 'கூட்டுறவு முறையில் கூட்டு விவசாயமும் தனியாள் விவசாயமும்' என் பதைப் பார்க்க. அகில இந்தியக் கூட்டுறவு யூனியன், டில்லி, 1957). மேலும் ஒப்பிடுக : 'விவசாயத் தொழில் நுணுக்கங்கள், மாடு மேய்ப்பதற்கும் விவசாயத்திற்கும் நிலத்தைக் கூட்டாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவை யல்ல...கூட்டுறவு உற்பத்தியை ஏற்படுத்துவதும் வெற்றியுடன் நடத்து வதும் மிகவும் கடினம். (இது கூட்டுறவு மார்க்கெட்டிங், கூட்டுறவுக் கடன் ஆகியவற்றைவிட மிகவும் கடினமானது)...பிழைப்புக் கருதிய பொருளா தாரத்தில் நிலவுரிமை முறையை மாற்றுவது மிகவும் கடினம். ஏனெனின், அத்தகைய பொருளாதாரத்தில் நிலம் முக்கிய உற்பத்திச் சாதனமாக இருப்பதோடு, மக்களின் வறுமைக் கெதிரான முக்கியப் பாதுகாப்பும் ஆகும். பிழைப்புக் கருதிய பொருளாதாரத்தில் நிலத்திற்குரிய முக்கிய இடம், தொழில் கருதிய பொருளாதாரத்தில் சிறப்பற்ற, வியாபார மயமான தன்மையுடையதாக மாற்றப்படுவதற்கு, மனப்பான்மையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட வேண்டும்' (பேராசிரியர் W. ஆர்தர் லூவிஸ். எடின், பரோ கோமகனுர் ஆராய்ச்சி மாநாட்டில் வாசித்த ஒரு கட்டுரை, தொகுதி-I 1957, பக்கம் 90).

இல்லே.'[1] வறுமையின் காரணமாகவும், ஜனத்தொகை வளர்ச்சி காரணமாகவும் அவசரமாக அதிக உற்பத்தி வேண்டிய நாட்டில் ஐயத்திற்கிடமான பரிசோதனைகளில் நம் சக்திகளை வீணாக்கி உற்பத்தியைக் குறைக்கக்கூடாது.

எனினும், அண்மையில் நாகபுரியில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் குழு, உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கூட்டுறவு விவசாயம்தான் ஒரே வழி என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இது நாகபுரி தீர்மானம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், கூட்டுறவு விவசாயம் கட்டாயமாக அன்றி, விவசாயிகள் அஃதை ஏற்றுக்கொள்வதற்கு நாடு முழுவதிலும் பிரசாரம் செய்யப்படும். கூட்டுறவு சேவா நிலையங்கள் (Service Co-operations) முதலில் நிறுவப்படும்.

விவசாயத்தையே முழுவதும் நம்பியிருக்கும் மக்கள் தொகையைக் குறைப்பதற்கு, விவசாயத் திட்டமானது கிராமத் தொழில்களோடும் கைத்தொழில்களோடும் இணைக்கப்படவேண்டும் என்பதை மீண்டும் கூற விரும்புகிறோம். ஏனெனின், நிலத்திற்கும் மக்களுக்கும் உள்ள பாதகமான விகிதத்தைப் பார்க்கும்போது, விவசாயச் சீர்திருத்த நடவடிக்கைகள் எல்லாம், விவசாயப் பிரச்சினையை இறுதியாகத் தீர்க்காமல் தாற்காலிகமாகவே தீர்க்கும் தன்மையுடையன.

இந்தியாவில் விவசாயப் பிரச்சினே மற்ற நாடுகளில் போலவே தனித்து நிற்க முடியாது. நாம் கருதியிருக்கும் திட்டம், ஒரு பெரிய திட்டத்தின் இணைபிரியாத பகுதியாக அன்றித் தனியாகத் தீர்க்கப்பட முடியாது. இப் பெரிய திட்டம் நமது பொருளாதார வாழ்க்கையை மட்டுமன்றி, நமது சமூக வாழ்க்கையையும் கலாசார இலட்சியங்களையும் தழுவி, எல்லா அமிசங்களிலும் பரவியதாக இருக்க வேண்டும். விவசாய உற்பத்தித் திட்டம் தொழில் உற்பத்தித் திட்டத்தோடு இணைக்கப்படவேண்டும். இவை இரண்டும் திட்டமிட்ட செலாவணி அமைப்பையும் கடன் நிறுவனத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். உற்பத்தியைப் பங்கீட்டோடு இணைக்க வேண்டும். சௌகரியமான வாழ்க்கைக்கு வேண்டிய நிலையை எல்லோரும் அடைவதற்காக, நாட்டின் மக்களுக்கிடையே உள்ள பெரிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து, உற்பத்திச் சாதனங்களைப் பரப்ப வேண்டும்.

கடைசியாக, நமது விவசாயப் பிரச்சினே, நிலத்திற்கேற்றவாறு அன்றி, ஜனத்தொகை அதிகரித்து வரும் பிரச்சினையாகும். இப்

[1] Henrik F. Infield, 'Utopia and Experiment', 1957, p. 2.

பிரச்சினையைத் தீர்ப்பதில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் எல்லாம் நமக்குப் பல சங்கடங்களும் முரண்பாடுகளும் தோன்று கின்றன. அமித ஜனத்தொகையுள்ள பகுதிகளைக் கொண்ட நம் நாட்டில், வேலை வாய்ப்புகள் வேறு இன்மையாலும், நிலத்தில் உள்ள மக்களில் 80 சதவீதம் உபரியாக இருப்பதாகக் கருதப்படுவதாலும், நிலத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இயந்திரங்களைப் புகுத்தினல் வேலையின்மை அதிகரிக்கும். இதனல், முன்னைவிட அதிக நிலை பேறற்ற தன்மையும் அமைதியின்மையும் உண்டாகும். ஆனல், இதற்கு மாற்று வழியாகச் சமூக நீதியை உண்டாக்கும் பொருட்டு உச்ச வரம்பை விதித்து நிலத்தை மாற்றிப் பங்கிட்டால், பெரிய நிலங்கள் சிறுசிறு துண்டுகளாகி நம் விவசாய உற்பத்தி குறைந்து விடும். 'அரசியல் நிலையாலும் பிரசாரத்தினலும் முக்கியமாகக் கருதிச் செய்யப்படும் சீர்திருத்த நடவடிக்கைகள் தாற்காலிகமாகச் சமூக நிலையைப் பொதுவாக உயர்த்தினலும், விவசாய உற்பத்தியை நிலையாக உயர்த்தமாட்டா.'[1] 'மிகக் குறைவான நிலத்திலிருந்து மிக அதிகமான மக்கள் பிழைப்பு நடத்த முயலுவதால், எவ்வித விவசாயச் சீர்திருத்தமும் பரிகாரமும் அளிக்காது.'[2] அதிக உற்பத்தியையும் சமூக நீதியையும் உண்டாக்கக் கருதிய திட்டக்குழு, இந்த இரண்டு நோக்கங்களும் ஒத்தியங்கக் கூடியவை என்ற கருத்தினல், உற்பத்திக்காக விரிவான இலக்குகளை (இவை அடைவதற்கு முடியாதவையல்ல) வகுத்திருக்கிறது. இது போலவே, மேய்ச்சல் நிலத்தையோ இதுவரையில் பயிர் செய்யப்படாத நிலத்தையோ பயிர் செய்யும் நிலமாக மாற்றினல், மேய்ச்சல் நிலம் குறைந்து, நில அரிப்பை விரைவாக்கி, நிலத்தின் செழிப்பைப் பாதுகாப்பதற்கு மிக அவசரமாக வேண்டிய அங்கக உரங்களை நிலத்திற்குக் கிடைக்காமல் செய்துவிடும். ஏற்கெனவே, வறிதாகியுள்ள மேய்ச்சல் நிலங்களின் மீது குற்றுயிராகி உள்ள, பலமற்ற, உதவாக்கரையான எண்ணற்ற மாடுகள் நிலத்திற்கு மேலும் ஒரு சுமையாக உள்ளன. தன்னை நம்பியிருக்கும் மக்களுக்கே அந்த நிலமானது போதிய உணவை அளிக்க முடியாத நிலையில் உள்ளது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ளது போன்ற, ஒரு சமன் செய்யப்பட்ட விவசாய முறையை இந்தியா போன்ற நாட்டில் உண்டாக்குவது கடினமே. ஏனெனின், இங்கு வயதான, உதவாக்கரையான மாடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்று சமூகப் பழக்கங்களும் சமயச் சார்பான தடைகளும் உள்ளன. ஆகவே, நாம்

[1]மேலே கூறிய 'விவசாயச் சீர்திருத்தத்திற்கும் விவசாய அபிவிருத்திக்கும் இடையே உள்ள தொடர்பு, பக்கம் 34.

[2]மேற்படி, பக்கம் 35.

மிகவும் பரவியுள்ள தனி விவசாயத்தைக் (monoculture) கொண்டே திருப்தியடையவேண்டி யிருக்கிறது. இந்தியாவில் விவசாயம் என்பது செடிகளை உண்டாக்குவது என்ற அளவில்தான் உள்ளது. நிலத்தின் செழிப்புக் குறைந்து வருகிறது. தொழு உரம் பற்றாக் குறையாக உள்ளது. அருவியாகப் பொழியும் மழை நிலத்தை அரித்துவிடுகிறது. செழிப்பான நிலத்தின் மேற்படிவத்தைக் காற்று அப்பால் கொண்டு சென்று விடுகிறது. நீர்ப்பாசனம் செய்வதற்கு வெள்ளத்தை வாய்க்கால்களில் செலுத்தினால், பணக்காரர்களாகிய சிலர் தவிர, மற்ற விவசாயிகளுக்கு அளிக்கப்படும் தண்ணீருக்கு அவர்கள் விலை கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர். நீர்ப்பாசனம் செய்தால், உரங்களை உபயோகிக்க வேண்டும். இவற்றை ஏழை உழவர்கள் வாங்க முடியாது. நம் திட்டங்கள் கிணறு, ஏரி ஆகிய பாசனங்களில் கருத்தைச் செலுத்துவதை விடுத்து, பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களை வகுக்கின்றன.[1] ஆகவே, அதிகத் தீமை செய்யாமல் நன்மை செய்யவேண்டுமானால், ஊர்ந்து செல்லும் இந்திய விவசாயி, தன் மரக் கலப்பைகளை இழுத்துக்கொண்டு, தூங்கிக்கொண்டு செல்லும் மாடுகளை மெதுவாக ஓட்டி உழவேண்டி யிருக்கிறது.

மேனாட்டு நாகரிகத்திற்கு உண்டாகியிருக்கும் ஆபத்தான நிலையே இன்று இந்திய விவசாயத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மனிதன் தன் முன்னேற்றத்திற்காகக் கருவிகளின் சக்தியை அதிகப்படுத்தும் போதெல்லாம், தன் செயல்களால் உண்டாகும் அறக் கொள்கைகளின் விளைவுகளை அவன் பெரிதாக்குகிறான். விவசாய முறைகளையும் உற்பத்தியையும் பெருக்குவதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள், தங்களுக்குள்ளும், தாங்கள் யாருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்புகிறார்களோ அவர்களுக்குள்ளும் குறைந்த அளவு நல்ல பண்புகளையாவது உயர்த்துவது மிகவும் முக்கியம் என்பதை உணர்ந் திருக்கிறார்களா ?

பிற்சேர்க்கை

அரசும் வேளாண்மையும்

கிழக்கு இந்திய நிறுவனக் (East India Company) காலத் திலேயே இந்திய வேளாண்மையின் வளர்ச்சிக்குரிய வகைகளி லெல்லாம் மிகுந்த ஆர்வம் செலுத்தப்பட்டது. வங்கி, நாணயச் செலாவணி ஆகிய துறைகளைப் போன்று வேளாண்மைத் துறையிலும்,

[1] சீனாவில் நீர்ப்பாசனத்தில் 80 சதவீதம் சிறிய திட்டங்களிலிருந்தே கிடைக் கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

கிரேட் பிரிட்டனில் வெற்றிக்குத் துணையான முறைகளே இந்தியாவிற்கும் ஏற்றது எனக் கருதப்பட்டது. எனவே, 1839-ல் கிழக்கு இந்திய நிறுவனம், இந்தியாவில் பருத்தி வளர்ச்சிக்கான வழிகளைக் கண்டறியுமாறு பன்னிரு அமெரிக்கப் பருத்தி உற்பத்தியாளர்களைப் பணித்தது. நிலத்தை எவ்வாறு பண்படுத்துவது என்பதை இந்தியப் பயிரீட்டாளருக்குக் கற்றுக் கொடுப்பதற்காக 1854ல் சென்னை அரசினர் தேவையான கருவிகளை இறக்குமதி செய்தனர். 1866-ல் வங்க, ஒரிசா பஞ்சக் குழுவின் (Bengal and Orissa Famine Commission) கருத்துக் கிணங்கி, வேளாண்மைக்கு என ஒரு தனித் துறை (special department) உருவாக்கி, அதன் வளர்ச்சிபற்றி ஆராயத் தொடங்கியது. ஆயினும், வேளாண்மைக்குரிய மூலப் பொருள்களின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் தடுப்பவை எவை என ஆராய்ந்து, அவைகளை ஒழிப்பதற்காக முதல் வேளாண்மைத் துறை 1871-க்குப் பின்னரே ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் பருத்தி முன்னேற்றத்தில் சிறப்பான முறையில் தொடர்பு கொண்டுள்ள மாஞ்செஸ்டர் பருத்தி அளிப்புக் கழகத்தின் (Manchester Cotton Supply Association) ஆர்வத்தாலேயே ஒவ்வொரு மாநிலத்திலும் வேளாண்மைக்கு என ஒரு தனித் துறை அமைக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. இதன் சிறப்பினை வேளாண்மைக்குரிய ராயல் குழுவும் (Royal Commission on Agriculture) குறிப்பிட்டுள்ளது.

இந்திய அரசின் வணிக வேளாண்மை வருவாய்த் துறை 1871-ல் பணியாற்றத் தொடங்கி, 1879-ல் உள்நாட்டுத் துறையுடன் இணைக்கும்வரை தொடர்ந்து செயலாற்றியது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு இயக்குநரின் (Director) கீழ் வேளாண்மைத் துறை அமைக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை 1880-ல் பஞ்சக் குழு வலியுறுத்தியது. வேளாண்மைபற்றிய செய்திகளைத் தொகுத்தல், பஞ்சத்திற்கான காரணங்களைக் கண்டறிதல், பஞ்சம் வராமலே தடுக்க வழி காணல், பஞ்ச நிவாரணம் அளித்தல் போன்றவற்றைப் புதுத் துறை செய்தல் வேண்டுமென வரையறுக்கப்பட்டது. இம் முறையில் 1882-ல் மாநில வேளாண்மைத் துறைகள் (Provincial Departments of Agriculture) நிறுவப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள வேளாண்மைபற்றிய உண்மைகளை அறிந்து தொகுக்கவும் ஒப்பிட்டு நோக்கவும் நில ஆவண வேளாண்மைத் துறைகள் ஏற்படுத்தப்பட்டன. சர் எட்வர்டு பக் (Sir Edward Buck) என்பாரைச் செயலாளராகக் கொண்டு வேளாண்மைக்காக இம்பீரியல் துறை (Imperial Department of Agriculture) நிறுவப்பட்டது. இவை யாவும் வேளாண்மைக் கொள்கைபற்றிய தொடக்கமேயாகும். இக் காலத்தில் இங்கிலாந்தில் வேளாண்மை அறிவியல் மிகப்

பிற்பட்ட நிலையிலிருந்தது. அறிவியல் துறையில் வேளாண்மை வேதியியலே (Agricultural Chemistry) ஓரளவு வளர்ச்சியுற்றிருந்தது. வேளாண்மை வேதியியல் பற்றிய அறிஞர்களே பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்திய வேளாண்மையில், வேளாண்மை வேதியியலைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்துவதற்கு 1899-ல் டாக்டர் வோல்கெர் (Dr. Voelcker) அனுப்பப்பட்டார். இந்தியா முழுமையும் சுற்றிப் பார்த்த அவர், தமது அறிக்கையை 'இந்திய வேளாண்மையின் வளர்ச்சி' என்ற தலைப்பில் வெளியிட்டார். இந்திய வேளாண்மை முற்பட்ட காலத்ததாகவும் பிற்பட்ட நிலைக்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பதாக அவர் கருதினர். சில பகுதிகளில் முன்னேற்றத்திற்கு ஒன்றுமே இல்லை என்றும் எண்ணினர். சில பகுதிகளில் வேளாண்மை சிறப்பாக இல்லாமைக்குக் காரணம் போதிய வசதிகள் இல்லாமையே அன்றித் தவருன பயிரிடும் முறை அல்ல எனக் கூறினர். ஒழுங்காகப் பயிரிடும் முறைகளையும் கல்வியையும் பரப்ப வேண்டுமென அவர் பரிந்துரைத்தார். ஒல்லும் வகையெல்லாம் வேளாண்மையின் வளர்ச்சிக்கானவற்றை வெளியிட்டார். டாக்டர் வோல்கெரின் அறிக்கை வெளிவந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்திய வேளாண்மைபற்றி மாணவர்களுக்கு அதுவே சிறந்த நூல் என வேளாண்மைக்குரிய ராயல் குழு கண்டறிந்தது.

இதற்கிடையில் சென்னையில் கரும்பு பயிரீட்டாளர்களுக்குப் பெருநஷ்டம் உண்டாயிற்று. 1898-ல் சென்னைக்கு வந்த டாக்டர் பார்பெர் (Dr. Barber) கரும்பு நோய்க் கிருமிகளைப் போக்குவதற்கு உரிய வகைகளைக் கண்டறிந்து குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெற்ருர். வேளாண்மையின் வளர்ச்சிக்காக அறிவியல் முறைகளைப் பின்பற்றிச் செய்யும் வல்லுநர்களை (experts) ஒவ்வொரு மாநில வேளாண்மைத் துறையிலும் வேலைக்கமர்த்த வேண்டுமென்று 1901-ல் அமைக்கப்பட்ட பஞ்சக் குழு பரிந்துரைத்தது. இம்பீரியல் காளான் ஆய்வாளர், புழுப் பூச்சியியல் ஆய்வாளர் (Imperial Mycologist and Entomologist) போன்ருேரும் வேலைக்கமர்த்தப்பட வேண்டுமென அக் குழு வலியுறுத்தியது. 1905-ல் கர்சான் காலத்தில் வேளாண்மைத் துறை திருத்தி அமைக்கப்பட்டது. வேளாண்மைப் பண்ணை ஒன்றும், வேளாண்மைக் கல்லூரி ஒன்றும் கொண்ட மத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்று பூசா (Pusa)வில் நிறுவப்பட்டது. மாநில ஆராய்ச்சி நிலையங்களும் ஆய்வுப் பண்ணைகளும் தேவையான இடங்களிலெல்லாம் அமைக்கப்பட்டன.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு [Imperial (now Indian) Council of Agricultural Research]

வேளாண்மையின் வளர்ச்சிக்கு மாநில வேளாண்மைத் துறைகளே பொறுப்பு என்றும், ஆராய்ச்சி செய்யவும், விலங்கு, தாவரம் பற்றிய நோய்களை அறியவும் மத்திய அரசுக்கு உரிமை உண்டு என்றும் 1919-ல் ஏற்பட்ட இந்திய அரசின் சட்டம் வழிகோலிற்று. சிகாகோவைச் சார்ந்த ஹென்ரி பிப்சு (Mr. Henry Phipps of Chicago) அளித்த 30,000 பவுன்களைக் கர்சான் மூலமாகப் பூசாவில் நிறுவப்பட்டுள்ள இம்பீரியல் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் பெற்றது. இவற்றுடன் கால்நடைபற்றிய வேலைகளும் சில நிலையங்களால் மேற்கொள்ளப்பட்டன (Livestock work was carried on by the Imperial Institute of Animal Husbandry and Dairying, the Imperial Cattle Breeding Farm at Karnal, and the Creamery at Anand). இம்பீரியல் கரும்பு இனப்பெருக்கு நிலையம் ஒன்று பூசா நிலையத்தின் கிளை நிலையமாகக் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இறுதியாக, 1893-ல் நவீன வசதிகளுடன் முக்தேஸ்வரில் (Mukteshwar) இம்பீரியல் கால்நடை ஆராய்ச்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டது. இந் நிலையம் தற்காப்பு மருந்துகளை உற்பத்தி செய்தது. 1928-ல் ராயல் குழு தனது அறிக்கையை வெளியிட்டுச் சில பரிந்துரைகள் கூறியது. இதனடிப்படையில், வேளாண்மைத் துறை வேலைகளில் தலையிடாத நிலையில் தேவையானபோது வழிகாட்டவும் ஒத்துழைக்கவும் இம்பீரியல் வேளாண்மை ஆராய்ச்சிக் குழு தோன்றியது. இக் குழு அனுமதி பெற்ற ஆராய்ச்சி நிலையங்களுக்கு நன்கொடை (grant) அளித்தது. இக் குழுவின் வேலைகள் வல்லுநர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்பெற்றன. மதிப்பீடு செய்த முதல்வர் சர் ஜான் ரஸ்ஸல் (Sir John Russell). 1937-ல் அவர் தமது அறிக்கையை வெளியிட்டார். 1946-ல் டாக்டர் ஸ்டீவர்ட் (Dr. Stewart) இக் குழுவின் வேலைகள் சிலவற்றை ஆய்ந்து அறிக்கை அளித்தார்.

இம்பீரியல் குழுவின் மத்திய அமைப்பு இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று ஆட்சி உறுப்பு, பிறிதொன்று அறிவுறுத்தும் உறுப்பு. முன்னது குழுவின் நிதி நிலை, அலுவல் ஆகியவற்றை மேற்பார்வையிட்டது. பின்னது, அறிவுரைகளையும் கருத்துரைகளையும் ஆய்ந்து, தனது முடிவினை ஆட்சி உறுப்புக்குக் கூறியது.

1929-ல் ஏற்பட்ட பெரு மந்த நிலையில் (Great Depression of 1929) பிற நாடுகளைப் போலன்றி, இந்திய அரசு வேளாண்மை விலைக் குறைவால் பாதிக்கப்பட்ட சாகுபடியாளர்க்கு எவ்வித

உதவியும் செய்யவில்லை. வழக்கமாக தனது தலையிடாக் கொள்கையை (laissez-faire) அரசு பின்பற்றியது. உலக மந்த நிலையைப் போக்கத் தங்களால் இயலாது என அரசினர் வாதிட்டனர்.

குழுவின் வேலைகளை மதிப்பீடு செய்த சர் ஜான் ரஸ்ஸல் சில பரிந்துரைகளைக் கூறினர். ஆய்வுச் செயல்களைப் பல்கலைக் கழகத் திடம் ஒப்புவித்து இச் செயலை மேற்கொள்வதனுல் அவற்றிற்கு நன்கொடை அளித்துவரல் வேண்டுமென அவர் கருத்து வெளி யிட்டார். பயனுன கண்டுபிடிப்புகளைச் செய்யவும், ஆக்கம் அளிக்கும் வேலைகளில் ஊக்கம் ஊட்டவும் குழு முயல வேண்டு மென்ருர். உணவுப் பயிர்களை உருவாக்க உயர்ந்த வல்லுநர்களைத் தோற்று விக்க வேண்டு மென்ருர். பல்வேறு மாநிலங்களின் உணவுப் பெருக்கத்தை அளவிட்டுத் தேவையை நிறைவு செய்யத் தேவை யானவற்றைக் கணக்கிட்டறிய வேண்டு மென்ருர்.

வழிகாட்டியாக அமைந்து, ஒத்துழைப்பதில் இக் குழு குறிப்பிடத் தக்க அளவில் பெரும்பணி புரிந்துள்ளது. 1921-க்கும் 1949-க்கும் இடைப்பட்ட காலத்தில் பருத்தி, சணல், தேயிலை, கரும்பு ஆகிய வற்றிற்காக எண்ணற்ற பண்டக் குழுக்கள் (Commodity Committees) ஏற்பட்டன. சில பண்டக் குழுக்கள் நன்முறையில் பணியாற்றின. தனிப்பட்ட ஒரு பயிருக்காக ஆக்கம் செய்யும்போது ஏனையவை புறக்கணிக்கப்பட்டன. தனிப்பட்ட பயிர் ஆராய்ச்சியை டாக்டர் ஸ்டீவர்ட் போற்றவில்லை. பயிர் விளைச்சலுக்குப் பின்னரே பண்டக் குழுக்கள் பணியாற்ற வேண்டுமென அவர் கருத்துத் தெரிவித்தார். வேளாண்மைத் துறை பற்றிய அனைத்து வளர்ச்சி யிலும் வேளாண்மை ஆராய்ச்சி பயன்பட வேண்டுமென்று விரும்பினர். மண் ஆராய்ச்சியில் தொடங்கி, அதில் விளையும் அனைத்துப் பயிர்களையும் ஆராய வேண்டும். குறிப்பிட்ட பயிருக்காக ஒதுக்கப்பட்ட நிதி அதன் தேவையை நிறைவு செய்யும் வகையில் இல்லாமை, பண்டக் குழுவின் பணிகளிலுள்ள குறைகளில் ஒன்று. மிகவும் தேவையான அரிசி, கோதுமை, தினை போன்றவற்றைத் தவிர ஏனையவற்றைப் பண்டக் குழுக்கள் கண்காணித்தன. மிகுதியும் பணம் தரக்கூடிய பயிர்களிலேயே பண்டக் குழுவின் நோக்கம் சென்றது. பிற்காலத்தில், அனைத்து இந்திய அரிசி ஆராய்ச்சி நிலையமும், உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையமும் முறையே கட்டாக் கிலும் பாட்னுவிலும் (Cuttack and Patna) அமைக்கப்பட்டன.

மற்ற மத்திய ஆராய்ச்சி நிலையங்களுள், டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் குறிப்பிடத்தக்க ஒன்று அஃது அடிப்படை ஆராய்ச்சிகளை நடத்தியது.

விடுதலைக்குப் பின்னர், இக் குழு 'இந்தியன் வேளாண்மை ஆராய்ச்சிக் குழு' எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1951-ல் முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டது. ஆட்சிப் பிரிவில் மாநில வேளாண்மை அமைச்சர்களும், சட்டமன்றச் சார்பாளர்களும், வணிகத் துறை ஆர்வலர்களும் இடம்பெற்றுள்ளனர். சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆராய்ச்சிக் கழகம் (Board of Research) ஒன்று அதற்குத் துணை புரிகின்றது.

முந்நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை இக் குழு தொடங்கியுள்ளது. புதிய திட்டங்களுக்காகவும், 1952-53-ல் திட்டமிடப்பட்டவற்றுள் சிலவற்றிற்காகவும் ரூபாய் நாற்பது இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத் திட்டங்களுள் பம்பாய் மாநிலத்தில் வெற்றி பெற்றுள்ள ஜப்பானிய அரிசிச் சாகுபடி முறை குறிப்பிடத்தக்க ஒன்று. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள அரசுப் பண்ணைகளில் ஒழுங்கான ஆய்வுகளை நடத்தவும் இக் குழு தீர்மானித்தது. இவ் ஆய்வின் மூலம் இந் நாட்டில் தொன்றுதொட்டு வழக்கிலிருந்த பழக்கமும் புதிய முறையும், ஒன்றிற்கொன்று இணைந்து செயல்பட முடியுமென இக் குழு எண்ணியது. வேளாண்மைக் கல்வியில் நிலவும் குறைபாடுகளை நீக்க விழைந்த இக் குழு 'இந்திய வேளாண்மைக் கல்விக் குழு' (Indian Council of Agricultural Education) என்ற ஒன்றை ஏற்படுத்தியது.

இவைகள் நன்முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், கிராமப் புறங்களில் அறிவியல் வேளாண்மை முறை செயல்படுவதற்கு வேளாண்மைத் துறைகள் எளிதில் துணை புரிகின்றன. வேளாண்மைக் கல்லூரிகளும், ஆராய்ச்சி நிலையங்களும் ஒரு பகுதியில் பெருகியுள்ளன. நல் விதைகள், நன்முறைகள், உயர்ந்த கருவிகள், சிறந்த உரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட பகுதிகளில் பயன்படுத்தி விளைவுகளை ஆய்தலும் நடைபெறுகின்றன. மேலும், ஆய்வுப் பண்ணைகளும், விதைப் பண்ணைகளும், விதைக் களஞ்சியங்களும் உள்ளன.

இரண்டாம் உலகப் போரின் தாக்குதலினால் வேளாண்மைத் துறையில், குறிப்பாக உணவு உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்ட வேண்டிய கட்டாய நிலை அரசுக்கு ஏற்பட்டது எனவே, அரசு பல்வேறு கட்டுப்பாடுகளையும் திட்டமிடப்பட்ட வரையறுத்த கொள்கைகளையும் செயற்படுத்தியது. 1943-ல் 'உணவை அதிகம் பெருக்கு' என்ற எழுச்சி ஏற்பட்டது. முதல் நான்கு ஆண்டுகளில் உணவு உற்பத்திக்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு நன்கொடைகளும் கடன்களும் கொடுத்துதவியது. வேளாண்மையின்

பல்வேறு பகுதிகளை ஆராயவும், அறிக்கை வெளியிடவும் வேண்டி அரசு பல உட்குழுக்களை நியமித்தது. 1947 ஆகஸ்டில் விடுதலை பெற்ற பின்னர் இந்திய அரசு தனது கொள்கையில் சில மாற்றங்கள் செய்தது. இவைபற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிவுரை கூற லார்டு பாயிட் ஓர் (Lord Boyd Orr) போன்ற வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டனர். அகன்ற ஆராய்ச்சியினும் ஆழ்ந்த ஆராய்ச்சியே சிறப்பெனு அறிந்து 1951-52-ல் 'உணவை அதிகம் பெருக்கு' என்ற அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசினர் தொடக்கிவைத்த ஆற்றுப் பாசனத் திட்டங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண்மை ஆராய்ச்சிக்காக 14·15 கோடி ரூபாய், மத்திய பண்டக் குழு மூலமாக 4·65 கோடி ரூபாய், உணவு வேளாண்மை அமைச்சுத் துறைத் திட்ட மூலமாக 9·50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டன.

1952 ஜனவரியில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்குமிடையே ஒரு தொழில் நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம் (A Technical Co-operation Agreement) கையெழுத்தாயிற்று. அமெரிக்க அரசின் உதவிகளை நன்கு பயன்படுத்திப் பொருளியல் முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளிக்கும் முறையில் இந்திய மத்தியக் குழு (Indian Central Committee) தோன்ற இந்த ஒப்பந்தம் வழி செய்தது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறந்த இயக்குநரின் (Director) கீழ், அமெரிக்க அறிஞர்களின் துணையுடன் திட்டக் குழு மத்தியக் குழுவாக இயங்கி வருகின்றது. 1952-ல் 50 மில்லியன் டாலர்களைப் பெற இவ்வொப்பந்தம் (தொ. கூ. ஒ.) வழி செய்தது. இத் தொகையுடன் ரூபாய் 41 கோடி சேர்த்து இந்திய அரசு பதினொரு திட்டங்களை உருவாக்கியது. இவற்றுள் மத்தியத் திட்டம் சமூக வளர்ச்சிபற்றிச் செயலாற்றியது.

சமூகத் திட்டம்பற்றிச் சுருக்கமாகக் கீழே கூறுகிறோம்:

சமூகத் திட்டங்களும் தேசிய விரிவுப் பணிகளும் (Community Projects and National Extension Services)

அண்மையில் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட திட்டங்களில், கிராம மக்களின் சமூகப் பொருளியல் வாழ்விற்காக 1952-ல் மத்திய அரசு அமைத்த சமூகத் திட்டங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவை. ஒவ்வொரு தொகுதியும் 60,000 முதல் 70,000 வரையான மக்கள் தொகையும், 100 கிராமங்களும் கொண்டமைய, ஒரு சமூகத் திட்டம் மூன்று தொகுதிகளைக் (Blocks) கொண்டு விளங்கியது. இவ் வளர்ச்சித் தொகுதிகள் (Development Blocks)

ஒவ்வொன்றும் 5 கிராமங்களைக் கொண்ட தனிப் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு தனிப் பிரிவும் கிராமப் பணியாள் ஒருவரின் மேற்பார்வையில் செயலாற்றியது. தொடக்கத்தில் 17 மில்லியன் மக்கள் தொகையும், 27,000 கிராமங்களும் கொண்ட 55 திட்டங்கள் தீட்டப்பெற்றன. இவற்றுள் ஏழு ஒதுக்கப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்டன. வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலைகள், கல்வி, உடல் நலம், வீடமைப்பு, சமூக நலப் பயிற்சி ஆகிய இன்னோரன்னவற்றில் சமூகத் திட்டம் ஆர்வம் செலுத்திச் செயல் புரிந்தது. இத்திட்டத்திற்காக மத்திய அரசியல் சமூகத் திட்ட ஆட்சித் தலைவர் ஒருவரும், மாநிலங்களில் வளர்ச்சிக் குழுக்களும், அவற்றிற்குச் செயலாளராக ஆணையரும், மாவட்டங்களில் வளர்ச்சித் துறை அலுவலரும், கிராமங்களில் 125 கிராமப் பணியாளர்களுக்கு ஒரு நிருவாக அலுவலரும் ஏற்படுத்தப்பட்டனர். பாரத் சேவா சமாஜம் (Bharat Sevak Samaj) தனது தொண்டர்கள் மூலமாக மக்களிடையே சமூகத் திட்டம்பற்றி எடுத்துரைத்து உதவி புரிந்தது. சிற்றூர்களுக்கான சமூகத் திட்டத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு ரூபாய் 65 இலட்சம் கணக்கிடப்பட்டது. ஆனால், மத்தியக் குழு இதனை 45 இலட்சமாகக் குறைத்தது. செலவுத் தொகையை மத்திய அரசும் மாநில அரசுகளும் குறிப்பிட்ட விகிதத்தில் பங்கிட்டுக்கொண்டன. மூன்றாவதாண்டு முடிவிலாகும் முழுச் செலவிற்கும் மாநிலங்களே பொறுப்பாகும். சமூகத் திட்டங்களுக்காகவும், சிற்றூர் வளர்ச்சிக்காகவும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. கிராம மக்களின் சமூகப் பொருளியல் வாழ்வினைச் செம்மைப்படுத்தச் சமூகத்தில் வளர்ச்சித் திட்டம் ஒரு வழியாகவும், தேசீய விரிவுத் திட்டம் தூண்டுகோலாகவும் கருதப்பட்டன.

முதன் முதலாகச் செயல் புரிந்த சமூகத் திட்டப் பலன்களும், அவற்றால் மக்களுக்குண்டான மன ஊக்கமும் நாட்டின் பல பகுதிகளுக்கும் இவற்றை விரிவுபடுத்த ஊக்கமளித்தன. நிதிப் பற்றாக் குறையால் சமூகத் திட்டத்திலும் சிறிது தாழ்வுற்ற தேசீய விரிவுப் பணி என்ற ஓரமைப்பு ஏற்படுத்தபட்டது.

ஃபோர்டு நிறுவனம் (Ford Foundation) விரிவுப் பணிகளுக்காகவும், வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் 2·30 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியது. அளவால் சுருங்கிய விரிவுப்பணி 1,20,000 கிராமங்களில் நடைபெற்றது. இவற்றுள் 70,000 செறிந்த வளர்ச்சியும் (Intensive development), 50,000 பரந்த வளர்ச்சியும் (Extensive development) பெற்றன. வளர்ச்சித்துறை அலுவலர்கள், வேளாண்மைப் பட்டதாரிகள், பல்துறை கிராமப் பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், கூட்டுறவுத் தணிக்கையாளர்கள், பள்ளி

ஆசிரியர்கள், மருத்துவர்கள், மருந்து கொடுப்பவர்கள், மகப்பேறு காப்பாளர்கள், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப வேலையாளர்கள் என்னும் 85,000 பேர் தேசீய விரிவுப் பணியின்கீழ் பணி புரிந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் 34 பயிற்சி நிலையங்கள் பல்துறை கிராமப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தன. வேளாண்மைப் புத்தாக்கத்திற்குச் சிறந்த தலைவர்களை உருவாக்கு வதே இத்திட்டத்தின் தலையாய நெறி.

முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் சமூகத் திட்டங்களும், தேசீய விரிவுப் பணித் திட்டங்களும் 1,40,000 கிராமங்களுக்குப் பேருதவி புரிந்தன. முதல் திட்டத்தின் முதற் பகுதியாக 11·3 மில்லியன் மக்களைக் கொண்ட 1,72,000 கிராமங்களை உள்ளடக்கிய 172 தொகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. திட்டத்தில் ஒதுக்கப் பட்ட நூறு கோடி ரூபாய்க்கு மாறாக இவற்றிற்கு 46 கோடியே மொத்தம் செலவாயிற்று. திட்ட கால முடிவில் இப் பணியில் 80,000 ஆட்கள் ஈடுபட்டனர். வளர்ச்சித் துறையில் பங்குகொண்ட மக்களின் அளவைக் கணக்கிடுவது எளிதன்று. ஆனால், மக்கள் அளித்த நன்கொடைமூலம் அவர்களது ஆர்வத்தைக் கணக்கிடலாம். ஆயிரவர்க்கு அரசு செலவிடும் தொகை 5,938 ரூபாய். அவற்றுள் மக்கள் அளிப்பு 3,484 ரூபாய்.

சமூகப் பணிகளை மதிப்பீடு செய்யவேண்டி திட்டக் குழு 'நிகழ்ச்சி மதிப்பீட்டமைப்பு' (Programme Evaluation Organisation) என்ற தனி நிலையத்தை உருவாக்கவே அஃது ஆண்டிற்கு நான்கு முறை அறிக்கைகளை வெளியிட்டது. சமூகத் திட்டத்திற்கும் தேசீய விரிவுப் பணிக்கும் இடையே நெருங்கிய இணைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவ்வமைப்பு வலியுறுத்தியது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசீய விரிவுப் பணி யின் கீழ் 3,800 வளர்ச்சித் தொகுதிகள் அடக்கப்பட்டன. இவற்றுள் 1,120 சமூக வளர்ச்சித் தொகுதியின்கீழ் கொணரப்பட்டன. இவற்றிற்காக இருநூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

சமூக வளர்ச்சித் திட்டம் இரு குறைபாடுகளைக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வட்டார நிலைகளை அறிந்து, அந்த அடிப்படையில் இருந்து தோற்றுவிக்கப்படும் இயக்கங்களைப் போலல்லாது, புதிய முறைகளைப் பின்பற்றி மேல் நிலையிலிருந்து இத்திட்டம் செயலாற்றத் தொடங்கியுள்ளமை ஒரு குறை எனலாம். வட்டார நிலைகளை நன்கறிந்த, பயிற்சி மிகுந்த, திறன் செறிந்த பணியாள்களைப் பெறுமை பிறிதொரு குறை எனலாம்.

ஆட்சித் துறையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்த கிராமப் பஞ்சாயத்துகள் பிரிட்டிஷ் ஆட்சியின்போது மறைந்தன. 1909-ல் ஆட்சி பரவலாக்கல் குழு (Decentralisation Commission) சிற்றூர் தன்னாட்சி முறை வெற்றி பெருமைக்குக் காரணம், மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து இணைந்து செயற்படும்படியாக அடிப்படையை அமைக்காததமைதான் எனக் கண்டறிந்தது. இக்குழு கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவுமாறு பரிந்துரைத்தது. விடுதலை பெற்ற பின்னர் மாநில நேர்முறை விதிகளின்படி, மாநிலமே கிராமப் புஞ்சாயத்துகளை அமைத்து, அவைகளைத் தன்னாட்சியின் உறுப்புகளாகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. எல்லா மாநிலங்களும் பஞ்சாயத்துகளை அமைக்கச் சட்டமியற்றின. மூன்று முதல் பதினைந்திற்குட்பட்ட உறுப்பினர்களைத் தேர்தல் மூலமோ, நியமன மூலமோ ஏற்படுத்திப் பஞ்சாயத்துகளைச் சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களில் அமைத்தனர். பொது நிலையங்களைப் பார்வையிடல், கல்வி, பொழுதுபோக்கு, சமூக அறநெறி, நலன் ஆகியவற்றைப் பஞ்சாய்த்துகள் பேணிவந்தன. பொருளியல் கோணத்தில், நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துதல், கால்நடைப் பண்ணைகளை வளர்த்தல், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்தல் ஆகியவற்றை இவைகள் கண்காணித்தன. கிராமச் சந்தைகளை ஒழுங்குபடுத்தல், எடைகளையும் அளவுகளையும் ஆய்தல், களஞ்சியங்களை அமைத்தல், விதைப் பண்ணைகளையும் வேளாண்மைக் கருவிகளையும் தேக்கி வைத்தல், புள்ளியியல்களைத் திரட்டல் ஆகிய பல்வேறு பணிகளையும் பஞ்சாயத்துகள் புரிந்து வந்தன. இவைகளுக்காகத் தொழில்வரி, கடைவரி போன்றவை மூலம் வருவாய் பெறப் பஞ்சாயத்துகள் உரிமை பெற்றிருந்தன. பம்பாயில் நில வருவாயில் குறிப்பிட்ட சதவிகிதம் கிராமப் பஞ்சாயத்துகள் பெற்றன.

முதல் ஐத்தாண்டுத் திட்டத்தில் 11,000 கிராமப் பஞ்சாயத்துகளும், 25,000 தனிக் குழுக்களும் (Ad-hoc bodies) அமைக்கப்பட்டன. 'தேசீய விரிவுப் பணிகளும், சமூக அமைப்புகளும், மக்களாட்சித் திட்டங்களின் வெற்றிக்குத் தேவை' என்றும், 'கிராமப் புறங்களின் பொருளியல் முன்னேற்றத்திற்குத் துணைபுரிவன கூட்டுறவு முறைகள்' என்றும் திட்டக்குழு உணர்ந்தது. ஆனால், அந்தோ! போகூழ் காரணமாக இவை நன்முறையில் போற்றப்படவில்லை.

'சிற்றூர் மக்கள், திட்டங்களால் அரசு தங்களுக்குத் துணை புரிவதாக எண்ணத் தொடங்கினர்' எனவும், 'அரசிடமிருந்து உதவி எதிர்பார்க்கும்' மன நிலை உருவாயிற்று' என்றும் நான்காவது மதிப்பீட்டறிக்கை அறிவித்தது. ஆனால், மக்களிடையே

ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மன நிலையும், கூட்டுறவு உணர்வும், தொழில் ஆக்க உணர்வும் அரும்பவில்லை என்றும் அது குறிப்பிட்டது. கொள்கைகளை நன்முறையில் அறிதல், பஞ்சாயத்து உறுப்பினராகப் பொறுப்புடன் நடத்தல், திட்டங்களில் ஈடுபட்டு வளர்ச்சிக்காகப் பாடுபடுதல் ஆகியவை குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெறவில்லை.

ஆனால், நான்காண்டு அனுபவம்கொண்டு திட்டம் வெற்றி பெறவில்லை என்றால், அஃது ஆராயாமல் செய்த முடிவாகும். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகப் பழக்கத்தில் ஊறிக்கிடக்கும் கிராம மக்களை ஒரே இரவில் மாற்றிவிட இயலாது. சமூகத் திட்டங்கள் எளிதில் பலன் தரா ; குறிப்பிட்ட காலத்தில் இவற்றின் பலனைக் காண முடியாது.

வளர்ச்சிக்கெனச் சொல்லப்பட்ட யாவும் செயல்படுத்தப்பட்ட பின்னரும், நம்முடைய நாட்டில் உருவாகும் உயர்ந்த தலைவர்களைப் பொறுத்தே சமூகத் திட்டங்கள் வெற்றி பெற முடியும். மக்களிடையே தோன்றும் இத்தலைவர்கள் தன்னம்பிக்கையில் தளரா உறுதியுடையவர்களாய் மாறி, அமையும் சமுதாய நிலைக்கு ஏற்பத் தேவைகளை நிறைவு செய்ய வழி காண்பவர்களாக இருந்தால் மட்டுமே திட்டம் வெற்றிபெற முடியும்.

கலைச்சொல் அகராதி

ஆங்கிலம்—தமிழ்

A

Absentee land lord	தலத்திலில்லா நிலக்கிழார்
Accumulation of capital	முதல் திரட்சி
Agrarian revolution	விவசாயப் புரட்சி
Agricultural depression	விவசாயத் தொழில் மந்தம்
Agricultural produce	விவசாய விளையுள்
Agricultural labourers	விவசாயத் தொழிலாளிகள்
Allocation of resources	சாதனப் பங்கீடு
Analysis	பகுத்தாய்வு
Annuities	ஆண்டுத் தொகை
Arable land	சாகுபடி நிலம்
Artisan	கைவினைஞன், கைத்தொழிலாளி
Assets	சொத்துகள்
Audit	தணிக்கை
Authorised capital	அனுமதித்த மூலதனம்

B

Balance of trade	வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, favourable	சாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, unfavourable	பாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of payments	அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை
Bank	பாங்கு, வங்கி
Banking	பாங்குத் தொழில்
Budget	பட்ஜெட், வரவு செலவுத் திட்டம்
Budget, family	குடும்ப வரவு செலவுத் திட்டம்
Business	வியாபாரம், தொழில்
Business firm	தொழில் நிறுவனம்
Birth rate	பிறப்பு வீதம்

C

Capital	முதல், மூலதனம், அசல்
Capital formation	முதல் ஆக்கம்
Capital levy	முதல்மேல் வரி
Capital market	மூலதன மார்க்கெட்டு
Capitalism	முதலாளித்துவம்
Capitalistic	முதலாளித்துவ
Capitalist	முதலாளி
Capital goods	முதற் கருவிப் பொருள்கள்
Capital assets	முதலினச் சொத்துகள்
Capital, circulating	புரளும் முதல்

Capital, fixed	நிலை முதற் பொருள்கள்
Capitalistic method of production	முதல்மய உற்பத்தி முறைகள்
Capitalisation	மூலதன ஆக்கம்
Capital, trade	வர்த்தக மூலதனம்
Cartel	கார்ட்டெல்
Central Bank	மைய பாங்கு
Cess	வரி, செஸ், பிரதேச வரி
Census	குடிக்கணக்கு, மக்கட் கணிப்பு
Circulation of money	பணப் புழக்கம்
Classical economists	தொன்மைப் பொருளாதாரத் துறையினர்
Colonies	குடியேற்ற நாடுகள்
Colonial expansion	குடியேற்றப் பெருக்கம்
Colonisation	குடியேற்றம்
Collective bargaining	கூட்டுப் பேரம்
Collectivism	கலெக்டிவிசம்
Commerce	வாணிபம், வணிகம், வர்த்தகம்
Communication	தொடர்பு வசதிகள்
Communism	கம்யூனிசம்
Commercial enterprise	வாணிபத்துணிவு, வாணிப நிறுவனம்
Commercial rivalry	வாணிபப் போட்டி
Commodities	பண்டங்கள்
Competition	போட்டி
Competition, perfect	நிறைவுப் போட்டி
Consolidation	ஒருங்கிணைப்பு
Consolidation of holdings	நில உடைமை ஒருங்கிணைப்பு
Consumer	துய்ப்போர், நுகர்வோர்
Consumption	நுகர்வு, துய்ப்பு
Concentration of industry	தொழில் குவிவு
Contraction of demand	தேவைச் சுருக்கம்
Consumers' goods	துய்ப்புக்குரிய பொருள்கள்
Consumers' surplus	துய்ப்போர் (பயன்பாட்டு) உபரி
Constant returns, law of	மாறா விளைவு விதி
Co-operation	கூட்டுறவு
Co-operative credit society	கூட்டுறவுக் கடன் சங்கம்
Corporation	கார்ப்பொரேஷன்
Cost of living	வாழ்க்கைச் செலவு
Cost of living index number	வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்
Costs, marginal	இறுதி நிலைச் செலவுகள்
Costs, fixed	மாறாச் செலவுகள்
Costs, variable	மாறுஞ் செலவுகள்
Cost of production	ஆக்கச் செலவு
Cottage industry	குடிசைத் தொழில்
Credit creation	பாங்குச் செலாவணிச் சிருட்டி
Credit expansion	பாங்குச் செலாவணிப் பெருக்கம்

Credit contraction	பாங்குச் செலாவணிச் சுருக்கம்
Credit	நாணயம்
Creditor	கடன் ஈவோன்
Credit, Bank	பாங்குச் செலாவணி
Currency	செலாவணி
Current account	நடப்புக் கணக்கு
Current market price	அங்காடி நடப்பு விலை
Customs duty	சுங்கத் தீர்வை
Customer	வாடிக்கைக்காரர்
Cycle trade	வியாபாரச் சகடம், வாணிபச்சுழல்

D

Data	எடுகோள், விவரங்கள்
Death duty	மரண வரி
Death rate	மரண வீதம், இறப்பு வீதம்
Debit	பற்று
Debentures	கடன் பத்திரங்கள்
Debt, public	அரசாங்கக் கடன்
Debt, National	நாட்டுக் கடன்
Debt Relief Act	கடன் நிவாரணச் சட்டம்
Decentralisation of Industries	தொழில் பரவலாக்கல்
Decreasing cost	குறைந்துசெல் செலவு
Deficit	பற்றுக்குறை
Deficit financing	பற்றுக்குறை நிதியாக்கம்
Deflation	பண வாட்டம், பணச் சுருக்கம்
Demand	தேவை
Demand elasticity	தேவை நெகிழ்ச்சி
Demand, laws of	தேவை விதிகள்
Deposit	வைப்பு, டிபாசிட்டு
Depreciation fund	தேய்மான ஈடு நிதி
Depression	மந்தம்
Determinants of demand	தேவைத் தீர்மானிகள்
Diminishing returns, law of	குறைந்துசெல் விளைவு விதி
Diminishing utility, law of	குறைந்துசெல் பயன்பாட்டு விதி
Diseconomies	சிக்கன இழப்புகள்
Disinflation	பண வீக்கக் குறைப்பு
Distribution of income	வருமானப் பங்கீடு
Dispute, industrial	தொழிலாளர் தகராறு
Discriminating protection	தேர்ந்தளிக்கும் தொழிற்காப்பு
Dividend	இலாப ஈவு, பகுபடு தொகை
Division of labour	வேலைப் பிரிப்பு, தொழில்முறைப் பகுப்பு
Dry farming	புஞ்செய்ப் பண்ணை

E

Earnings	ஈட்டம், சம்பாத்தியம்
Economics	பொருளாதாரம்

Economics, practical	நடைமுறைப் பொருளாதாரம்
Economic principles	பொருளாதாரத் தத்துவங்கள்
Economic development	பொருளாதார வளர்ச்சி
Economy	பொருளாதார அமைப்பு, பொருளாதாரம், சிக்கனம்
Economy, mixed	கலப்புப் பொருளாதார அமைப்பு
Economies	சிக்கன நலன்கள்
Economic goods	செல்வப் பண்டங்கள்
Economic inequality	பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்
Economic equality	பொருளாதாரச் சமத்துவம்
Economic resources	பொருளாதாரச் சாதனங்கள்
Economy, Domestic	குடும்பச் சிக்கனம், உள்நாட்டுப் பொருளாதாரம்
Economy, International	உலகப் பொருளாதாரம், பன்னாட்டுப் பொருளாதாரம்
Elasticity	நெகிழ்ச்சி
Emigration	குடியேற்றம்
Empirical	அனுபவ வழி, புலவழி
Employer	வேலையளிப்போன்
Employee	வேலையாள், பணியாள்
Employment	வேலை
Employment exchange	வேலைத்தகவல் நிலையம்
Entrepreneur	தொழில் முயல்வோன், தொழில் துணிவோன்
Enterprise	தொழில் துணிவு
Equilibrium	சமநிலை
Equity shares	சதாரணப் பங்குகள்
Exchange	நாணயமாற்று, பரிவர்த்தனை
Exchange, Foreign	அயல் நாட்டுச் செலாவணி
Expenditure, capital	முதலீட்டுச் செலவு
Fxploitation	சுரண்டல்
Extension of demand	தேவை நீட்சி

F

Factory system	தொழிற்சாலை முறை, ஆலை முறை
Farm output	பண்ணை உற்பத்தி
Farming, mixed	கலப்புப் பண்ணை
Famine relief	பஞ்ச நிவாரணம்
Feudalism	படைமான்யம்
Feudal system	படைமான்யத் திட்டம்
Finance	நிதி
Finance Bill	நிதி மசோதா
Firm	(கூட்டு) நிறுவனம்
Fluctuations	ஏற்ற இறக்கங்கள்
Foreign trade	வெளிநாட்டு வாணிபம்
Foreign investment	வெளிநாட்டு முதலீடு
Free competition	தடையிலாப் போட்டி

Free hold	வில்லங்கமில்லாத புலன், முற்றுரிமைப் புலன்
Full employment	வேலை நிறைவு

G

Gold reserves	பொன் காப்புநிதி
Gold standard	பொன் (நாணயத்) திட்டம்
Goods	பொருள்கள்
Graded goods	தரம் தேர்ந்த பண்டங்கள்
Government undertaking	அரசாங்கத் தொழில்

H

Handicraft	கைவினைத் தொழில்
Hard currency	கடினச்செலாவணி, அருமைச் செலாவணி

I

Immigration	குடியிறக்கம்
Immobility	இடம்பெயராமை
Imperial preference	ஏகாதிபத்தியச் சலுகை
Import duties	இறக்குமதி வரிகள்
Import quotas	இறக்குமதிப் (கோட்டாக்கள்) பங்களவுகள்
Income tax	வருமான வரி
Income, national	நாட்டு வருமானம்
Increasing returns	வளர்ந்துசெல் விளைவு
Increasing cost	வளர்ந்துசெல் செலவு
Incidence of taxation	வரி நிலைப்பாடு
Index numbers	குறியீட்டெண்கள்
Indirect tax	மறைமுக வரி
Individualism	தனியார் சுவாதீனக் கொள்கை
Industry	தொழில், கைத்தொழில்
Industry, localisation of	ஓரிடத் தொழிற்செறிவு
Industry, concentration of	தொழிற் குவிவு
Industrial finance	தொழில் நிதியம்
Industrial monopolies	தொழில் சர்வாதீனங்கள்
Industrial revolution	தொழிற் புரட்சி
Industrialisation	தொழில் மயமாக்கல்
Industry, large scale	பேரளவுத் தொழில்
Industry, small scale	சிற்றளவுத் தொழில்
Industry, heavy	கனவினைத் தொழில்
Inflation	பணவீக்கம்
Infant mortality	சிசு மரிப்பு, குழவிச் சாக்காடு
Initiative	முனைப்பு, முந்துத்துணிவு
Insurance	(ஈட்டுறுதி, காப்புறுதி) இன்சூரன்சு
International trade	பன்னாட்டு வாணிபம்

Internal economies	அகச் சிக்கனங்கள்
International Monetary Fund	பன்னாட்டுச் செலாவணி நிதி
Investment	முதலீடு
Invention	புத்தமைப்பு, புத்தாக்கம்
J	
Joint Stock Companies	ஜாயின்ட்ஸ்டாக் கம்பெனிகள், கூட்டுப் பங்குக் கம்பெனிகள்
Joint costs	கூட்டுச் செலவு
K	
Key Industry	ஆதாரத் தொழில்
L	
Labourer	தொழிலாளி, பாட்டாளி
Labour	பாடு, உழைப்பு, தொழிலாளர்
Labour force	பாட்டாளிப் படை
Labour movement	தொழிலாளர் இயக்கம்
Lag	பின் தங்கல், பின்னடைவு
Laissez-faire	தலையிடாமை
Land tenure	நில உரிமை முறை
Large scale production	பெருவாரி உற்பத்தி, பேரளவு உற்பத்தி
Land Mortgage Bank	நில அடமான பாங்கு
Land lord	நிலக்கிழார்
Land revenue	நில வருவாய்
Law of diminishing utility	குறைந்துசெல் பயன்பாட்டு விதி
Liability	பொறுப்பு, கடன்
Lease	குத்தகை
Lease holder	குத்தகைக்காரன்
Levy	வரி, வரி விதிப்பு
Limited liability	வரையிட்ட பொறுப்பு
Liquidation	முடிப்பு, கலைப்பு
Loans	கடன்கள்
Local taxation	தல வரி விதிப்பு
Luxuries	போகப் பொருள்கள்
M	
Machinery	இயந்திரம், பொறி
Management	நிருவாகம்
Managing agency	நிருவாகப் பதிலாளி (ஏஜன்சி) முறை
Manorial system	மேனர் பண்ணை முறை
Manufactured goods	பொறிசெய் பொருள்கள்
Manufacture	பொறி வழியாக்கம்
Manufacturing industries	பொறி வழித் தொழில்கள்
Manure	உரம், எரு

Margin	இறுதி நிலை
Marginal return	இறுதிநிலை விளைவு
Marginal utility	இறுதிநிலைப் பயன்பாடு
Marginal profits	இறுதிநிலை இலாபம்
Marketing	விற்பனை
Market rate	அங்காடி (வட்டி) வீதம்
Market, perfect	செம்மையான மார்க்கெட்டு
Mass production	பேருற்பத்தி
Material goods	சடப்பொருள்கள்
Maximum	உச்ச, உயர்ந்த பட்ச
Means of production	உற்பத்தி சாதனங்கள்
Mercantalism	மெர்க்கன்டலிசம்
Middlemen	நடுவர், த்ரகர்
Migration	நாடு பெயர்வு
Mobility of labour	தொழிலாளி இடப் பெயர்ச்சி
Money	பணம்
Money market	பணச் சந்தை, பண மார்க்கெட்டு
Monetary policy	பணவாக்கக் கைக்கோள்
Monopoly	விற்பனைச் சர்வாதீனம், விற்பனை முற்றுரிமை

N

Nationalisation	நாட்டு உடைமையாக்கல்
Natural resources	இயற்கை வளங்கள்
Negotiable instruments	செலாவணிக் கருவிகள்
Net value	நிகர மதிப்பு
Norm	மீக்கோள் தரம்
Nutrition	ஊட்டம்

O

Occupancy right	இருப்புரிமை, அனுபோக உரிமை
Operation, open market	வெளிச்சந்தை நடவடிக்கை
Opportunity	வாய்ப்பு
Optimum population	உத்தம மக்கள் தொகை
Organised market	கட்டமைந்த சந்தை
Output	உற்பத்தி, வெளிப்பாடு
Overhead cost	பொதுச் செலவு

P

Payments	செல்லுகள், செலுத்தினங்கள், செலுத்துவன
Peasant proprietor	உரிமைக் குடியானவன்
Per capita income	தலா வருமானம்
Plantation crops	தோட்டப் பயிர்கள்
Population	மக்கள் தொகை, ஜனத் தொகை
Population growth	மக்கள் தொகை வளர்ச்சி
Preferred shares	முன்னுரிமைப் பங்குகள்

Prices, falling	விழும் விலைகள்
Premium	வட்டம், கட்டணம்
Price, current	நடப்பு விலை
Price control	விலைக் கட்டுப்பாடு
Private enterprise	தனியார் துறை
Private investment	தனியார் முதலீடு
Private sector	தனியார் துறை
Producers' surplus	உற்பத்தியாளர் உபரி
Progressive taxation	வளர்வீத வரி
Protection	தொழிற் காப்பு
Proportional	வீதாசாரமான
Problem	சிக்கல், பிரச்சினை
Product	விளைவு, உற்பத்தி, ஆக்கம்
Produce	விளைச்சல்
Production	ஆக்கம், உற்பத்தி, தயாரிப்பு
Public debt	நாட்டுக் கடன், அரசாங்கக் கடன்
Public revenue	அரசாங்க வருவாய்
Public expenditure	அரசாங்கச் செலவு
Public investment	அரசாங்க முதலீடு
Public utility	பொது வசதி
Public enterprise	பொதுத்துறைத் தொழில்
Public companies	பொதுக் கம்பெனிகள்
Purchasing power	வாங்கும் திறன்
Purchasing power of money	பணத்தின் வாங்கும் திறன்

Q

Quota	பங்களவு

R

Rating	தரமிடல்
Rationalisation	(தொழிற்) சீரமைப்பு
Raw materials	கச்சாப் பொருள்கள்
Reactionary	பிற்போக்கான
Rebate	கழிவு, தள்ளுபடி, ரிபேட்டு
Reconstruction	புனரமைப்பு
Receipts	வரவு
Redistribution of income	வருமான மறு பகிர்வு
Regulation of trade	வாணிப ஒழுங்குப்பாடு
Report	அறிக்கை
Rent, economic	பொருளாதார வாரம்
Rental value	வாடகை ஈட்ட மதிப்பு
Reorganisation	திருத்தியமைத்தல்
Reserve fund	ஒதுக்க நிதி, காப்பு நிதி
Resources	வளப் பொருள்கள், சாதனங்கள்
Return	விளைவு
Revenue	வருவாய்
Revenue settlement	நிலவரித் திட்டம்

Right tenancy	குடிவார உரிமை
Rotation of crops	மாற்றுப் பயிர்முறை

S

Salesmanship	விற்பனைத் திறம்
Saving	சேமிப்பு
Schedule	அட்டவணை
Sea borne trade	கடல் வாணிபம்
Securities	பத்திரங்கள், ஆவணங்கள்
Semi skilled labour	குறைதிறத் தொழிலாளி
Shares	பங்குச் சீட்டுகள், பங்குகள்
Share capital	பங்கு (மூலதனம்) முதல்
Sinking fund	கடன் கழிவு நிதி
Slump	மந்தம்
Socialism	சோஷலிசம், பொது உடைமை
Socialist	பொதுவுடைமை வாதி
Social security	பொதுநலப் பாதுகாப்புத் திட்டம்
Social insurance	பொதுநல ஈட்டுறுதி, பொதுநல இன்சூரன்சு
Social welfare	சமூக நலன்
Speculation	ஊக வாணிபம்
Specialisation	சிறப்புத் தேர்ச்சி, சிறப்புப் பயிற்சி
Stabilisation	நிலைபேறுக்கம்
Stabilisation of price	விலைவாசி நிலைபேறுக்கம்
Stagnation	தேக்கம்
State enterprise	அரசாங்கத் தொழில்
State ownership	அரசாங்க உடைமை
State trading	அரசாங்க வாணிபம்
Statistics	புள்ளி இயல்
Standardisation	தரப்படுத்தல்
Stock exchange	பங்குமாற்றுச் சந்தை
Subsistence	பிழைப்பு
Subsidy	உதவிக் கொடை
Subsidency	துணை
Super tax	மேல்வரி
Supply	அளிப்பு
Surplus	மீதம், உபரி
Synthesis	தொகுப்பு

T

Target	இலக்கு
Tariffs	சுங்க வரிகள்
Taxation	வரி விதிப்பு
Taxable income	வரிக்குரிய வருமானம்
Tax excess profits	மிகை இலாப வரி
Technology	தொழில் நுண்ணியல்
Technical	தொழில் நுட்பமான

Technique	நுட்பவினை முறை
Technician	நுட்பத் தொழில் வல்லான்
Technical skill	நுட்பத் திறமை
Technological development	நுட்பத் தொழில் விருத்தி
Tenant	வாரக்குடி, குத்தகைக்குடி
Tenancy	குடிவாரம்
Tenancy Act	குடிவாரச் சட்டம்
Tenure (land)	(நில) உரிமை முறை
Theory	கோட்பாடு, கருதுகோள்
Trade unions	தொழிலாளர் சங்கங்கள்
Trade	வர்த்தகம், வாணிபம், வணிகம்
Trade-mark	வணிகர் குறி
Traffic	போக்கு வரத்து
Transport	ஊர்தி, வண்டி, கடத்து
Transportation	இடம் பெயர்தல்
Turnover	விற்பனைப் புரள்வு

U

Undertaking	பொறுப்பு, தொழிலீடுபாடு
Unearned income	உழைப்பிலா வருமானம்
Under population	மக்கள் குறைவு
Under employments	வேலைக் குறைவு
Under developed	வளர்ச்சி குறைந்த
Undeveloped	வளர்ச்சியில்லாத
Unemployment	வேலையின்மை
Uniform	ஒருபடித்தான
Unit	அலகு, துண்டு, பகுதி
Unskilled labour	திறம்பெறுத் தொழிலாளி
Utilitarianism	பயன்பாட்டுக் கொள்கை

V

Value	மதிப்பு
Vested interests	ஊன்றிய நலமிகள்
Vital statistics	பிறப்பு இறப்புப் புள்ளிகள்

W

Wage	கூலி
Ware house	கிடங்கு
Waste land	தரிசு நிலம்
Wealth tax	செல்வ வரி
World depression	உலக வியாபார மந்தம்
Working classes	பாட்டாளி வகுப்பினர்கள்
Worker	பாட்டாளி, உழைப்பாளி
Working capital	நடைமுறை முதல்
Workshop	பட்டறை

பொருள் அட்டவணை

அட்லாண்டிக் சாசனம், 12, 141
அமெரிக்காவில் நீக்கிரோக்கள், 111
அமெரிக்காவில் புது ஏற்பாடு, (New Deal) 4
அரசாங்கத் தலையீட்டின் அதிகரிப்பு, 21
அரசாங்கக் கட்டுப்பாடும் பொருளாதார நடவடிக்கைகளும், 5

இந்தியா

அகில இந்திய கிஸான் சபை, 480
அடிமைத்தனம், 517 - 22
அணுத் தாதுக்கள், 96 - 99
அதிக உணவு பயிரிடும் இயக்கம், 247 - 337
அதிகாரபூர்வமான புள்ளி விபரங்கள் போதாமை, 294
அதிகாரபூர்வமான விவரங்களில் திருப்தியின்மை, 163
அமித (அதிக) மக்கள் தொகை, 224
அமித மக்கள் தொகை சான்றுகள், 149
அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மை, 488
அரசியல் பிரிவுகள், 70 - 71
அரசும் வேளாண்மையும், 556 - 66
அரிசி, ஏகரா அளவும், உற்பத்தியும், 259 - 62
அனுபோக உரிமைகள்—உழவர்களின், 492 - 93

ஆண் பெண் விகிதம்—நகரங்களில், 195 - 96
ஆரியர்கள்—இந்தியாவில், 126-27
ஆரே பால் திட்டம், 347 - 48
ஆல்கலீஸ், (காரங்கள்) 100 - 101
ஆல்கலீஸ் இறக்குமதிகள், 100-101

இடப் பெயர்ச்சி—நகரங்களுக்கு—புள்ளி விவரம், 187 - 88
இந்தியப் பொருளாதாரம், 13 - 41
இந்துக்களின் வாழ்க்கை நோக்கம், 129
இந்து சமயக் கடவுள்கள், 128
இந்து வாரிசுரிமைச் சட்டம், 125
இயற்கைச் சாதனங்கள்—அத்தியாயம், 3
இரசாயன உரங்கள், 317 - 21
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், 30 - 60
இருதார மணம், 126
இரும்பு, 91 - 92
இல்மெனைட், 96
இனப்பெருக்கப் பண்பு வீதம், 171 - 72
இனவிருத்தி வீதம், 178 - 80
இனம் குடியிருப்புக்கள், 467

உப நிஷத்துக்கள், 127
உணவுத் தானியங்கள்—பயிரிடப்படும் நிலப் பரப்பு, 255 - 57
உயிர் வாழ்க்கை (ஜீவிய கால அளவு) எதிர்பார்க்கப்படும் அளவு, 200 - 201
உரம், 309 - 317
உழு கருவிகள், 335

எந்திரமும் விவசாயமும், 336
எண்ணெய் வித்துக்களும், பிண்ணாக்குகளும்—உரமாக, 317
எலும்பும் மீனும்—உரமாக, 315

கடன் சட்ட ஆக்கம்—செயல்முறை, 406 - 408
கடன்பட்டவர்களுக்கு நிவாரணம்—முறைகள், 403 - 404
கட்டாய ஊழியம், 520 - 22
கந்தகம், 91
கரும்பு—ஏகரா அளவும், உற்பத்தியும், 272 - 73
கருத்தடையும் திட்டக் குழுவும், 239
கருமவினை, 127

கருமவினைச் சட்டம், 109
கலாச்சாரங்களின் மோதல், 131 - 32

காடுகள், 77 - 80
காடுகளின் நிருவாகம், 342
காடுகளின் பகுப்பு முறை, 78
காடு வளர்ப்புப் பற்றிய கொள்கை, 251 - 53
காடுகள்—நிலப் பகுதி, 251
காடுகள்பற்றிய இந்திய அரசாங்கத் தீர்மானம் (1894) 252
காடுகள்பற்றிய சென்னை அரசாங்கத் தீர்மானம், 252
காடுகள்பற்றிய கொள்கைத் தீர்மானம், (1952) 77, 254
காடுகள் ஒதுக்கப்பட்டவையும் பாதுகாக்கப்பட்டவையும், 78
காடுகளின் விளைச்சல், 79
காந்தியடிகளும் கிராமப் புனரமைப்பும், 460
காந்தியடிகளும் தீண்டாமையும், 122
காந்தியடிகளும் நஷ்ட ஈடும், 487
காப்பி உற்பத்தி, 279
கால்நடைத் தொகை, 340
கால்நடையும் மேய்ச்சலும், 341-42

கிடங்குகளும், சிறிய கிடங்குகளும், (Warehouse and Godowns), 453 - 54
கிடங்குகள் - லைசென்சு பெற்றவை, 434
கிராமக் கடன் ஆராய்ச்சி (சர்வே) அறிக்கை—சிபாரிசுகள், 395, 428-30, 453
கிராமதான இயக்கம், 461 - 553
கிராம நிருவனம், 108
கிராமப் புனரமைப்பு. 458 - 60
கிராம மயமாக்கல், 364
கிராம வாழ்க்கையில் மாறுதல்கள், 115 - 18
கிராமக் கடன்—எந்த காரியங்களுக்காக வாங்கப்படுகிறது, 399 - 402
கிராமக் கடன் அளவுகள், 382 - 86
கிராமக் கடன்—ஆக்கத் திறமற்ற தன்மை, 382
கிராமக் கடனும் கடன் சட்ட ஆக்கமும்—அத்தியாயம், XII
கிராமக் கடன் ஆராய்ச்சி, 425 - 26
கிராமக் கடன் குறைப்பு, 514
கிராமக் கடன் சுமை—1939-க்குப் பின், 387 - 89
கிராம வங்கித் தொழில்—விசாரணைக் குழு, 509

கீழ்க் குத்தகைக்கு விடுதல், 480

குடிவாரச் சட்ட ஆக்கம், 491 - 93
குடியேற்றம், 226 - 27
குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகம், 239
குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் ஜனத்தொகை கணக்கெடுப்பும், 238 - 239
குறைந்தபட்சக் கூலிச் சட்டம், 522 - 23
குழந்தைத் திருமணச் சட்டம், 167

கூட்டுக் குடும்பம்—கலைப்பிற்குரிய காரணங்கள், 124 - 25
கூட்டுறவுப் பண்ணைகள்—ருஷ்யாவில், 545
கூட்டுறவு இயக்கம்—தொடக்கமும் வளர்ச்சியும், 413 - 16
கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு, 420 - 21
கூட்டுறவு இயக்கமும் அதன் எதிர்காலமும், 460 - 62
கூட்டுறவு இயக்கமும் யுத்தமும், 418 - 19
கூட்டுறவுச் சங்கங்கள்பற்றி—ரிசர்வு பாங்கின் பரிசீலனை, 421-23
கூட்டுறவுக் கிராம (நிருவாகம்)-376
கூட்டுறவு நோக்கங்களின் அடிப்படைகள், 414 - 15
கூட்டுறவுப் பாங்குகள் - மத்திய 420
கூட்டுறவுப் பண்ணைகள், 376
கூட்டுறவு விவசாயம்—சீனாவில், 552

கொழும்புத் திட்டம், 30

சணல்—ஏகராப் பரப்பளவும்—விளைச்சலும், 266
சணல்—நாட்டுப் பிரிவால் ஏற்பட்ட விளைவுகள், 267
சமயத்துறை, பண்பாட்டுத்துறை—மரபுரிமை, 126 - 27
சமுதாயச் சீர்திருத்தமும் பிறப்பு வீதமும், 170 - 71
சமுதாயச் சேமநலம், 68
சமுதாயநலத் திட்டங்கள், 460
சமுதாயநலத் திட்டங்களும், தேசிய விஸ்தரிப்பும், 49, 562-63
சமுதாய நிறுவனங்கள்—சீர்குலையக் காரணங்கள், 119 - 22
சமுதாய நிறுவனங்கள்—இந்து—அவற்றின் இயக்கக் கூறுகள், 112

சாலைகளும், சாலை அபிவிருத்தியும், 454 - 55

சிசு மரணம், 164, 168, 200 - 01
சிசு மரணமும் ஊட்டக் குறைவும், 176
சிசு மரண வீதங்கள்—பல நாடுகளில், 200 - 01
சிசு வதை, 194
சிறு சணல் விதை—ஏகரா அளவும் விளைச்சலும், 281

சுகாதார வசதிகள், 169
சுகாதாரத் திட்டச் செயல்முறைகளும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமும், 169

செயற்கை உரமிடலும் தண்ணீரும், 320

சேரிகள்—பம்பாயில், 188

சைமன் கமிஷன், 471 - 480

தக்காவி, 412 - 13
தண்ட முலியா, 518
தண்ணீரும் நீர்ப்பாசனமும், 48, 80 - 84, 304 - 05
தண்ணீர் சக்தி, 84 - 86
தரகர்கள்—நிலத்தில், 478 - 82
தரகர்களை அகற்றுவதற்குரிய அவசியம், 443
தரிசு நிலம்—நடப்பில், 254 - 55
தலத்தில் இல்லா நிலக்கிழார்முறை (absenteelandlordism), 483 - 84

தாதுவளக் கொள்கை, 105

திட்டமிட்ட மக்கள் தொகைக் கொள்கை, 226
திருமணம்—இந்துமத இலட்சியம், 133
திருமணம்—என்ற அமைப்பு, 113 - 14
திருமணம்—சாஸ்திர பூர்வமான, 166

துறைமுகமும் கப்பல் தளங்களும், 61
துப்பாக்கள் கோளிகள், 517

தேசியத் திட்டக் கமிட்டி, 27
தேசிய உணர்வு—வளர்ச்சி, 132
தேசிய மாதிரி ஆராய்ச்சி (சர்வே), 509
தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும், 276 - 79

தொற்று நோய்களினால் இறப்பு, 153 - 56
தொழில்கள்—பெரிய தொழில்களுக்குரிய இரண்டாம் திட்ட கால இலக்குகள், 56 - 57
தொழில் மயமாக்கல், 233
தொழிலும் முதல் உலகப்போரும், 9 - 10

நகரங்களில் ஜன நெருக்கமும், சேரி வாழ்க்கையும், 188
நகரங்களின் வளர்ச்சி, 187

நாட்டுப் பிரிவினையும் விவசாய உற்பத்தியும், 258

நிகர இனவிருத்தி வீதம், 179

நிலக்கடலை—ஏகராவும், விளைச்சலும், 283-84
நிலக்கரி, 89-90
நில அடமான பாங்குகள், 9-10
நில உட்பகுப்புகளும் பிரிவுகளும்—காரணங்கள், 362-65
நில உடைமை ஒருங்கிணைப்பு, 368-69
நில உடைமையில் உட்பிரிவும் துண்டுபடுத்தலும்—பம்பாய் ராஜ்யத்தில், 352-53
நிலச் சீர்திருத்தம்—ஐ. நா. குழுவிற்கு இந்திய அரசாங்கத்தின் கருத்துக்கள், 489
நிலச் சீர்திருத்தமும் முதல் திட்டமும், 488
நிலச் சீர்திருத்தம் சுதந்திரத்திற்குப் பின், 484-93
நில ஒருங்கிணைப்புச் சட்டம் இயற்றுதல், 368-70
நிலப் பங்கீடு, 250-54
நிலப் பயன்பாடும் மண் வளத்தைப் பேணுதலும்; 249
நில உடைமைக்குக் கீழ்வரம்பும் உச்சவரம்பும் கட்டுதல், 524-25
நில மீட்பு, 337
நிலம்—உணவுத் தானியம் பயிரிடுவதை மேய்ச்சல் நிலமாக்கல், 257
நிலம்—உணவுத் தானியம் பயிரிடுவதை, வணிகப் பயிர் செய்ய மாற்றுதல், 257
நிலமற்ற உழவர்கள், 530
நிலமற்ற உழவர்கள்—மிகுதிக்குக் காரணம், 505-506
நிலமற்ற உழவர்கள் வெவ்வேறு ராஜ்யங்களில் உள்ள சதவீதம், 504
'நிலம் உழுபவனுக்கே', 499
நில உரிமை முறை, 464-65
நில உரிமை முறைகளும் நிலவரியும்—அத்தியாயம் 15
நிலம்—வேளாண்மையில் உள்ளவை—பகிர்வு, 255-57
நில நஷ்ட ஈடு—வீதம், 485-87
நிலம்—பிரிவும் உட்பிரிவும் அத்தியாயம், 16
நிலவரிக் கொள்கை—தீர்மானம், 475
நிலவரிக் கமிஷன்—வங்காளம்,
நிலவரிப் பாதிப்பு, 475-77
நிலவரி வசூல்—473-74
நிலவரி வசூல்—கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழ், 464
நிரந்தர (சாஸ்வத) நில அமைப்பு, 468-69
நிறைகளையும் எடைகளையும் தரப்படுத்தல், 452

நெய், 349

நேரு—ஜவஹர்லால்—ஜமீன் ஒழிப்புபற்றி, 485

பஞ்சக் குழு—(1880), 82, 502
பஞ்சக் குழு (1901) 152, 474
பஞ்சங்கள், 151-52
பசுஞ் சாணம், 310-12
பசுந்தாள் உரம், 313-15
படித்தோர் தொகை, 219-20
பட்டினியின் தரம், 222
பணக்கடன் அளிப்புச் சட்டம் இயற்றுதல், 403-04
பண்டங்களைத் தரப்படுத்தல், 457
பண்பாடு—காடுகள், மலைகளால் பாதிக்கப்படுதல், 126
பம்பாய் குடிவாரச் சட்டம். 482
'பம்பாய்த் திட்டம்', 514
பயிரிடு முறைகள், 320-31
பருத்தி ஏகரா அளவும், விளைச்சலும் 268-70
பருத்தி ஆலைகளின் நுகர்வு, 270
பர்தோலி சத்தியாக்கிரகம், 478
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், 439-40
பழங்களும் காய்கறிகளும், 285-86
பஸ்—சமுதாயச் சலசலப்பில் (ferment) ஒரு காரணி, 116

பாக்ஸைட்டு, 95-96
பாசனம் பெற்ற பகுதிகள், 83
பாசனம்—கிணற்றாலும் குளங்களாலும், 83
பாசனத் திட்டங்கள், 323-24
பாசனத் திட்டச் செலவுகள், 324

பாசனத்தின் பயன், 306
பாசனமும் விவசாயமும், 556
பால் கொடுக்கும் அளவு—ஒரு பசு, 345
பால் பண்ணைத் தொழில், 345 - 50
பால் மொத்த உற்பத்தி, 345
பாஸ் பேட்டுகள், 100

பிரிக்கப்படாத குடும்பம், 113
பிரிவினையற்ற குடும்ப முறை, 113-14
பிளேக், மலேரியா இவற்றால் ஏற்பட்ட சாவுகள், 153
பிழைப்புக் கருதிய விவசாயமும் சர்வதேசச் சந்தையும், 547 - 48
பிழைப்புக்குப் போதாத விவசாய நிலை, 396
பிறப்பு இறப்பு வீதங்கள்—ஒப்பு நோக்கும் எண்கள், 160 - 62
பிறப்பு இறப்பு வீதப் போக்குகள், 161
பிறப்பு வீதங்கள்—வேறுபாடு, 172 - 73
பிறப்பு வீதத்தை நிர்ணயிக்கும் காரணங்கள், 165 - 66
பிறப்பு வீதமும் வறுமையும், 165

பீடி சுருட்டுத் தொழிற்சாலைகள், 275

புகையிலை, ஏகரா அளவும், உற்பத்தியும், 273 - 76

பூச்சிகளும், நோய்களும்—பயிர் கட்கு, 328 - 30

பெட்ரோலியம், 88 - 89
பெண்கள்—எண்ணிக்கைக் குறைவுக்குக் காரணங்கள், 204 - 05

பொருளாதார அமைப்பு—ஒரு புதிய, 136 - 37
பொருளாதாரக் கொள்கை—பிரிட்டிஷ் ஆட்சியில், 7 - 8
பொருளாதாரத் திட்டக் கழகம், 12
பொருளாதாரத் திட்டமிடுதல்—அத்தியாயம், II
பொருளாதாரச் சந்தர்ப்பவாதம், 15 - 16

ஃபோர்டு நிறுவனம் (ஸ்தாபனம்), 563

மகல்வாரி முறை, 467
மக்கள் அடர்த்தி, 157 - 59
மக்களின் திட்டம், 514
மண் அரிப்பு, 325 - 28
மண் அரிப்பிற்குக் காரணங்கள், 326
மண் வளம் குறைந்து வருதல், 289 - 94
மண் வளம் பகுப்பு, 73
மண் வளப் பாதுகாப்பு, 230, 249
மதுவிலக்கு, 68
மழைப் பெய்வு அளவு, 76
மங்கனீஸ், 92 - 93

மால்தூஸியக் கோட்பாடும் இந்தியாவும், 148 - 49
மால்தூஸியத் தடைகள், 150 - 56
மார்க்கெடிங் — ஒழுங்குபடுத்தப் பட்டவை, 457 - 58
மார்க்கெடிங் நிலையும் முறையும், 449 - 50
மார்க்கெடிங் அமைப்பு, 455 - 56
மாற்றுப் பயிர்முறை, 334 - 35

மேலைநாட்டுச் செல்வாக்கின் விளைவுகள், 132
மேலைநாட்டுப் பண்பாட்டின் செல்வாக்கு, 132

மைக்கா, 94
மைக்கா ஏற்றுமதிகள், 94 - 95

மொழிவழி ராஜ்ஜியங்கள், 136

யுத்த பிற்காலத் திட்டம், 11 - 12

ரய்ஃபீசன், 415
ரப்பர், 280 - 81

ரிசர்வு பாங்க் ஆப் இந்தியா—சட்ட ரீதியான அதிகாரங்களின் திருத்தம், 443 - 44

வரிக் குழு, 9
வரி விதிப்பு விசாரணைக் குழு, 478
வறுமையும் நம்பிக்கையிழந்த தன்மையும், 225
வறுமையும் வாழ்க்கையில் உணர்ச்சியின்மையும், 221 - 22

வாரக்குடிகளை வெளியேற்றுதல், 507 - 08
வாரிசுச் சட்டம், 363 - 64
வார்லி, கட்காரி சமூகத்தினர், 520

விதவை மறுமணமும் ஜனத் தொகையும், 168
விதைகள் மேலானவை, 332
விலைக் கொள்கையும் அரசாங்கமும், 542 - 43
விலைக் கொள்கை—ஒருமைப் படுத்தும் கோட்பாட்டின் அவசியம், 542 - 43
விவசாய அபிவிருத்திக்கு அரசாங்க முயற்சிகள், 532 - 33
'விவசாய உற்பத்தித் திறனும், இந்தியாவில் நிலச் சீர்திருத்தங்களும்'—தந்த் வாலா, 497
விவசாய கடனுக்குக் காரணங்கள், 393 - 98
விவசாயக் கடன் நீக்கம், 408
விவசாயிகள் கடன் காரணங்களை ஆராய்தல், 400 - 01
விவசாயக் கருவிகள், 335 - 36
விவசாய போர்டு—பயிர் மண்வளப் பகுதி—8ஆவது கூட்டம், 291 - 92, 302, 304, 314, 319, 320
விவசாய உழைப்பாளர்—பகுக்கப் படல், 510 - 11
விவசாய உழைப்பாளர்களின் பொருளாதார நிலை, 512 - 13
விவசாய உழைப்பாளர் வளர்ச்சி, 504
விவசாயத்தில் மூலதன முதலீடு, 534
விவசாய நில அளவு—ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேண்டிய குறைந்தபட்ச அளவு, 149
விவசாய உழைப்பாளர்கள் (Proletariat) அத்தியாயம் 16
விவசாயப்பிரச்சினைகள்—வரலாறு, 531 - 35
விவசாயப் பொருள்களை விற்றல் (marketing) 448
விவசாயமும் தலையிடாக் கொள்கையும், 534 - 547
விவசாயமும் திட்டக் குழுவும், 535, 555
விவசாயமும் மாநில வேறுபாடுகளும், 550
விவசாயம்—இயந்திர மயமாக்கப் பட்டமை, 536
விவசாயம்—இந்தியாவில் இயந்திரமாக்கப்படுவதன் விளைவுகள் 546
விவசாயம்—சமுதாயப் பொறுப் பாக, 538
விவசாயம்—தொழில்-இடையே சம நிலை, 380
விவசாயம்—விலைகளில் ஒரு சூதாட்டமாக, 534
விவசாய விற்பனைச் சங்கங்கள் 431 - 32

வீட்டு வசதி நிலை, 66, 178
வீட்டு வசதி—பம்பாயில், 188

ஹரிஜனங்களுக்குக் குடியேற்றத் திட்டங்கள், 529 - 30
ஹாலிகள், 518 - 19

ஜனத்தொகை—உத்தம அளவுக் கொள்கை, 140
ஜனத்தொகைக் கணிப்பு—இந்தியாவில் (1931), 120, 193 - 94, 197, 202, 206, 238, 504
ஜனத்தொகைக் கணிப்பு—இந்தியாவில் (1941), 219
ஜனத்தொகைக்கணிப்பு—இந்தியாவின்—தாள் 3, (1949) 181
ஜனத்தொகைக் கணிப்பு—இந்தியாவின்—தாள் 1, (1951) காடே 196
ஜனத்தொகைக் கணிப்பு—இந்தியாவின்—தாள் 2, (of 1954) 202 - 204
ஜனத்தொகைக் கணிப்பு—இந்தியாவின்—தாள் 5, (of 1954) 220

ஜனத்தொகைக்—கணக்கெடுப்பு — திருப்தியின்மை, 206
ஜனத்தொகை பற்றிய ஹேஷ்யம், 181, 183
ஜனத்தொகை வளர்ச்சியும் அடர்த்தியும், 144 - 50
ஜனத்தொகைப் பெருக்கமும் சாதனங்களும், 170
ஜனத்தொகை—நகரப் பகுதி, கிராமப் பகுதிகளிடையே பங்கீடு, 184 - 87
ஜனத்தொகை—தொழிற்சாலைகளில் அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை, 213 - 14
ஜனத்தொகை—வயதமைப்பு, 196, 201
ஜனத்தொகை விவசாய வேலையுடைமையில் மாறுதல்கள், 208
ஜனத்தொகை—வேலையின் பங்கீடு, 205 - 20
ஜனத்தொகை—விளை நிலத்தின் மீது நெருக்கம், 209
ஜனத்தொகை—வேலை பார்ப்போர் பிறரைச் சார்ந்திருப்போர், 205
ஜனத்தொகையின் தன்மை, 217, 218
ஜனத்தொகையும் உற்பத்தித் திறனும், 231
ஜனத்தொகையும் சேமநல அரசும், 163
ஜனத்தொகையும் தொழில்மயமாக்குதலும், 233
ஜனத்தொகையும் நாட்டுப் பிரிவினையும், 147

உணவுக் குறை நோய்கள், 218
உயிரோடிருக்கும் வீதம்—பல நாடுகளில், 177
உலோகாயதவாதம்—மேலைநாட்டு விஞ்ஞானங்களில், 133

எப். ஏ. ஓ. (F. A. O.) தலா உணவுப் பங்கீடு பற்றிய, 143

ஏகாதிபத்தியச் சலுகை, 5

ஒட்டாவா மகாநாடு, 5

கத்தோலிக்க மதமும் கருத்தடையும், 236
கருத்தடை—எண்ணிக்கை கட்டுப்பாடு, 234 - 41
கருத்தடை, அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும், 236
கல்விப்பயன் சட்டம் (1930), 125
கலாச்சாரக் கலப்பினால் நம்பிக்கை, 134

காந்தியடிகளும் கருத்தடையும், 237, 241
காந்தியடிகளும், ஹரிஜனங்களும், 122 - 23

கிழக்குக் குழு மாநாடு, 246 - 47
கிழக்கும் மேற்கும், 132 - 33

கூட்டுறவு இயக்கம்—டென்மார்க்கில், 447

கொழும்புத் திட்டம், 18
கொழும்புத் திட்டமும், கொழும்பு மாநாடும் (1950), 30

சக்தி உற்பத்தி—தண்ணீரால், 84
சமுதாய நிகழ்ச்சிகளும் அவற்றை முன்கூட்டிக் கூற முடியாமையும், 244

சுண்ட்பார்க்க—மக்கள் தொகை வகையீடு, 196

சோவியத் யூனியன், 17

ட்ருமனின் சொற்பொழிவு (1949) நான்கு அம்சம் பற்றிய, 18
ட்ருமனின் வேலைத் திட்டம்—நான்கு அம்ச, 18

தடையிலா வணிகக் கொள்கை, 47
தலையிடாமையின் தோல்வி, 2

‘திட்டமிடுதல்’—விளக்கம், 1
திட்டமிடுதல்—சார்பு முறையும் அமைப்பு முறையும், 18 - 19
திட்டமிடுதல்—பொருளாதாரத்துடன் தொடர்பு, 20

தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு—14

பன்னாட்டுக் காங்கிரஸ்—ஜனத் தொகையும் உலக சாதனங் களும், 240
பசுந்தாள் உரமிடுதல், 313
படைமானிய முறை, 111
பயிரில் பங்கு பெறுவோர், 479, 491
பாசிசம், 3

பிறப்பு வீதமும், வாழ்க்கைத் தரமும், 155, 174

பொருளாதார விளக்கம்—வரலாறு பற்றிய, 107-08

மனிதனும் அவனது சுற்றுப் புறமும், 138

மிகை மக்கள் (அதிக ஜனத்) தொகையும், குறைப்பும், 139-40

முதலாளித்துவம், 20-22

விவசாயமும் ருஷ்யாவும், 536, 540-41

ஜனத்தொகையும் உணவும், 142

ஜனத்தொகை—உத்தம அளவுக் கொள்கை, 140

ஜனத்தொகை உயர்வும் போரும், 141

ஜனத்தொகையின் உலக வளர்ச்சி, 145

ஜனத்தொகைக் கொள்கைகள், 138-43

ஜனத்தொகை—வெள்ளையரும் மற்ற நிறத்தவரும்—வளர்ச்சி வீதம், 146

க்ஷயரோகம், 156